மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : 1967, இந்திய முத்திரைத் தாள் (தமிழ்நாடு திருத்த) சட்டத்தால் கொண்டுவரப்பட்ட 47 (அ) பிரிவின் விதித்துறைகளின்படி, சொத்து விற்பனைப் பத்திரங்கள், தான பத்திரங்கள், பரிவர்த்தனை பத்திரங்கள் ஆகியவற்றிற்கான முத்திரைத் தாள் தீர்வைக்கு சொத்துக்களின் நிலவர மதிப்பை இறுதியாக முடிவு செய்யும் அதிகாரி "கோட்டாட்சித் தலைவர்" ஆவார். உதவிப் பதிவாளரின் பணி, பத்திரத்தில் சொத்தின் உண்மையான நிலவரி சரியாகக் குறிப்பிட்டு இருகின்றதா என்பதை முடிவு செய்வதும், மதிப்பு மாறுபட்டால் அதை கோட்டாட்சித் தலைவருக்கு மேற்கொண்டு நடவடிக்கை எடுப்பதற்காக அனுப்புவதுமாகும். உதவிப் பதிவாளர்கள், இது குறித்து நியாயமான முடிவு எடுக்க இயலும்பொருட்டு வருவாய்ப் பொறுப்புத் தலைமை அதிகாரமுடைய வருவாய் வாரியம், வருவாய்த் துறைச் சார்நிலைப் பணியாளர்களை ஒவ்வொரு கிராமத்திலுள்ள தனித்தனி சொத்துக்களின் மதிப்பு பற்றிய தேவையான விவரங்களை உதவிப் பதிவாளர்களுக்கு அளிக்குமாறு கூறியுள்ளது. அதற்கு இணங்க, வருவாய்த்துறை அதிகாரி புள்ளிவிவரங்களைத் தொகுத்து புத்தக வடிவத்தில் உதவிப் பதிவாளர்களுக்கு அளித்துள்ளார். இவைகள் வழிகாட்டி முறைகள் எனப்படும். உதவிப் பதிவாளர் பத்திரங்களிலுள்ள மதிப்பையும் வழிகாட்டி முறைகளிலுள்ள மதிப்பையும் ஒப்பிட்டுப் பார்ப்பார். பத்திரங்களில் குறிப்பிட்டுள்ள மதிப்பு குறைவாக இருந்தால், அப் பத்திரங்கள் கோட்டாட்சித் தலைவருக்கு அனுப்பப்படுகிறது. கோட்டாட்சித் தலைவர் முத்திரைத் தாள் சட்டத்தின் 47 (அ) பிரிவின்கீழ் தமக்களிக்கப்பட்ட அலுவல் களைச் செய்யும் வரையில் தாமாகவே மதிப்பு கணிக்கிறார். இது தவிர பதிவு செய்வதற்காகக் கொடுக்கப்படுகிற பத்திரங்களில் கண்ட சொத்துக்களின் மதிப்பை முடிவு செய்யும் பொறுப்பு பத்திரப் பதிவுத் துறைக்கு அளிக்கப்படவில்லை.



21st July 1971]

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, நில விலை வீதங்கள் ஒரு ஏக்கருக்கு இவ்வளவு என்று ஒவ்வொரு மாவட்டத்திற்கும் வேறுபட்டதாக இருக்கின்றனவா ? எல்லா மாவட்டத்திற்கும் ஒன்றாக இருக்கிறதா ? குறிப்பாக, ஒரு ஏக்கர் விலை இராமநாதபுரம் மாவட்டத்தில் பஞ்சப் பிரதேசமான ஸ்ரீவில்லிப்புத்தூர் பகுதியில் ரூ. 400 என்றிருந்தாலும் கூட அதற்குத் தஞ்சையில் ஒரு ஏக்கருக்கு உள்ள ரூ. 4,000 என்ற மதிப்பு போட்டு ரூ. 400 வீதம் கட்ட வேண்டுமென்று சொல்வது எவ்வளவு தூரம் நியாயமானது ? மேலும் சப்-ரிஜிஸ்ட்ராருக்கு மேலாக எதற்காக ரெவின்யூ அதிகாரிகளுக்கு இது போக வேண்டும்? டிஸ்ட்ரிக்ட் ரிஜிஸ்ட்ராரிடம் இதை ஒப்புவித்தால் நல்லதல்லவா என்ற முறையீடு அரசாங்கத்திற்கு வந்திருக்கிறதா ? ரெவின்யூ அதிகாரிகளுக்கு மேல் விசாரணைக்கு அனுப்பினால் ஆண்டுக்கணக்கில் எந்தவிதமான முகாந்திரமும் இல்லாமல் காலம் தாழ்த்தப்படுவது அரசாங்கத்திற்குத் தெரியுமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, ஐந்து கேள்விகளைச் சேர்த்து ஒன்றாகக் கேட்டிருக்கிறார்கள். மாவட்டத்திற்கு மாவட்டம் விலைகள் மாறுபடும், நிலத்தின் மதிப்பு மாறுபடும். இராமநாதபுரம் மாவட்டத்தில் . . .

" The Inspector-General of Registration has reported that a few representations have been received from certain districts like Ramanathapuram that values mentioned in respect of properties were high However, the Board of Revenue and the Collector have reported that they have received no such representation ".

இராமநாதபுரம் மாவட்டத்திலிருந்து அப்படிப்பட்ட புகார் அரசாங்கத்திற்கு வரவில்லை. ரிஜிஸ்ட்ராரிடம் என் கொடுக்கக் கூடாது என்று கேட்டார்கள். வருவாய்த் துறைதான் தயாரிக்கும் படி கொடுத்திருக்கிறோம். கோட்ட ஆட்சித் தலைவர்தான் மறுபடியும் புனராலோசனை செய்யவேண்டியிருக்கிறது. இப்போதிருக்கிற மதிப்பு சரியாக இல்லை என்ற பொதுவான புகார், குற்றச்சாட்டு இருப்பதால், அதை வைத்துக்கொண்டு அரசாங்கம் பிப்ரவரி மாதமே முதல் முறையாக சென்னை, தஞ்சாவூர், கோயமுத்தூர் ஆகிய மூன்று மாவட்டங்களில் கொடுக்கப்பட்டிருக்கிற "கைடு லைன்ஸ்" படி புனராலோசனை செய்வதற்கு அதிகாரிகள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். மேற்கொண்டு தேவைப்பட்டால், மற்ற மாவட்டங்களுக்கு நியமிக்கப்படும்.

THIRU A. R. DAMODARAN : Would it be possible for the Collectors of various districts to notify in the District Gazette, the valuation of lands in various villages, so that public objections may

be invited, because in some places, very exorbitant values have been fixed? When no sale has taken place in a particular village, the so called Revenue authority which happens to be Village Karnam, at the village level fixes highly arbitrary value. Therefore, in some cases it is exceedingly unfair. Would it be possible that public objections are invited, Sir?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, பொது மக்களிடத்திலிருந்து புகார் வந்தால், அதைப் பரிசீலிக்கலாமே தவிர, தயாரிப்பதற்கு முன்பு அதைப் பொதுமக்களிடத்தில் வைத்து ஆட்சேபணை கேட்டால் எல்லா கிராமங்களிலிருந்தும் விலை அதிகமாக இருப்பதாகத்தான் புகார் வரும். விசாரிப்பது மிகவும் சங்கடமாகும். இப்போது கூட அப்படி அதிகாரிகள் அதிக மாகக் கேட்கிறார்கள் என்றால், கோட்ட ஆட்சித் தலைவருக்கு விண்ணப்பிக்க அதிகாரம் இருக்கிறது. கோட்ட ஆட்சித் தலைவர் முடிவு இறுதி முடிவு என்று சொல்லியிருக்கிறோம்.

திரு. சா. கணேசன்: பல விஷயங்களில் சரியாக நடந்திருக் கலாம். சில விஷயங்களில் கோர்ட் மூலமாகப் பகிரங்க ஏலத்தில் விற்ற விலையைக் கூட அடுத்த நிலத்திற்கு ஒப்புக்கொள்ள பல பதிவு ஆவணக் களறிகளில் மறுப்பதால் விற்பவர்கள், வாங்குகிற வர்கள் பலவிதமான சிக்கலுக்கு ஆளாகவேண்டியிருக்கிறது. ஆகையால் பக்கத்து நிலம் கோர்ட்டில் என்ன விலைக்குப் போயிருக் கிறதோ அதையொட்டி உள்ள மதிப்பை ஏற்றுக்கொள்வதற்கு உடனடியாக அவர்கள் சம்மதிக்க வேண்டுமென்ற முறையில் ஆக்ஞை பிறப்பிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, நீதி மன்றத்தில் என்ன விலைக்குப் போகிறதோ அதைப் பக்கத்திலுள்ள நிலத்திற்கு மதிப்புப்போட வேண்டுமென்று சொல்கிறார்கள். அதை ஒப்புக்கொள்வதற்கில்லை. நிலத்தின் மதிப்பை அவ்வப்பொழுது மாற்றியமைக்க தனிக்குழு அமைத்திருக்கிறார்கள். எல்லா மாவட்டத்திலும் அதைப் போடுவதற்கு இருக்கிறோம். முதலா வதாக தஞ்சை, கோயமுத்தூர், சென்னை ஆகிய இடங்களில் தனி அதிகாரியை நியமித்து ஏற்கனவே கொடுக்கப்பட்ட "கைடு லைன்ஸ்" சரியாக இருக்கின்றனவா என்று பார்க்கச் சொல்லியிருக் கிறார்கள். நீதிமன்றத்தில் எடுக்கப்பட்ட நிலங்கள் பல காரணங் களால் விலை குறைவாக இருக்கலாம். பக்கத்தில் உள்ள நிலங்கள் பற்றி குறிப்பிட்ட புகார் வந்தால் விசாரிக்கலாம். நீதி மன்றத்தில் கொடுக்கப்பட்டதை 'கைடு லைன்' ஆக வைத்துக்கொள்ள முடியாது.

திரு. எஸ். ஜெயராம செட்டியார்: தலைவர் அவர்களே, இந்தக் கஷ்டமெல்லாம் நகர்ப்புறங்களில்தான் அதிகமாக வருகின்றது. வீடுகள் கட்டிவருவதால் சில பகுதிகள் "டெவலப்" ஆகிவிடு கின்றன. அதிக விலை கொடுத்து அங்கே வாங்குகிறார்கள். ஆனால் அதுவும் ஒரு கட்டத்தில் நின்றுவிடுகிறது. பக்கத்தில் விவசாய



நிலம் இருந்தால், அதற்கும் அதிக விலை போடுவதால் கஷ்டம் வரு கிறது. அந்த மாதிரி இடங்களில் உள்ள கஷ்டத்தைப் போக்க அரசு வழி வகுக்குமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: இப்போது துவக்கத்தில் மூன்று மாவட்டங்களில் இதைப் பரிசீலிக்கச் செய்திருக்கிறோம். தேவைப்பட்டால், மற்ற மாவட்டங்களுக்கும் விஸ்தரிக்கலாம்.

திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு: சங்கரன்கோவில் தாலுகா, காரிசாத்தான் என்ற கிராமத்தில் 7 ஏக்கர் நிலம் வாங்கி இணை வெட்டியிருக்கிறார்கள். சென்ற வாரம் அந்தப் பகுதியிலுள்ள ஒருவரோடு பேசிக்கொண்டிருந்தேன். நிலத்தின் கிரயம் இன்னது, அதற்கு சப்-ரிஜிஸ்ட்ரார் விதித்த மதிப்பு இவ்வளவு என்று பார்க்கும்போது, அந்தக் கிரய மதிப்புக்கு ஸ்டாம்பு வாங்கும் செலவையும் சேர்த்து நிலத்தின் கிரயம் ரூ. 1,200 என்றால், மொத்தம் ரூ. 3,500 ஆகிறது. ஸ்டாம்பு செலவை பாதி நிலக்கார னிடமே சுமத்துகிறார்கள். விலைக்கு வாங்குகிறவர்களிடமிருந்து ரூ. 1,300 தான் விற்பவர் கைக்குப் போகிறது என்று சொல்கிறார் கள். அப்படி ஏழைகள் நிலத்தைப் பொறுமான விலைக்கு விற்க முடியாமல் விற்ற விலையும் கைக்குக் கிடைக்காத நிலைமை ஏற்படு கிறது. இதைத் தவிர்க்க அரசாங்கம் உள்ளூரிலேயே தாலுக்கா விற்குள்ளே உண்மையான மதிப்பிடுவதற்குப் பரிகாரம் தேடும் வகையில் சுலபமாக வழி காண முயற்சிப்பார்களா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: விற்கிறவர்கள் ஸ்டாம்புக்கு கொடுப்பதில்லை. வாங்குகிறவர்கள்தான் கொடுப்பார்கள். யாரா வது ஏழாளிகளாக இருந்தால், அதற்கு அரசு பொறுப்பல்ல. குறிப்பிட்ட இடங்களிலிருந்து புகார் வந்தால் விசாரிக்கலாம். பொதுவாக இருக்கிற "கைடு லைன்" சரியாக இல்லை என்ற குற்றச் சாட்டிருப்பதால், மறு பரிசீலனைக்கு ஆணையிட்டிருக்கிறோம்.

திரு. டி. கே. சுப்பையா: நிலம் வாங்குவதும் விற்பதும் அவசர நிமித்தமாக நெருக்கடியின் காரணமாக ஏற்படுவது உண்டு. அப்படி ஸ்டாம்பு மதிப்பில் குறைவு ஏற்பட்டால், ரிஜிஸ்டர் செய்வதைக் காலங்கடத்தி தடுக்காமல் அதைச் செய்துவிட்டு பிறகு ஆர்.டி.ஓ. விசாரணை முடிந்து வந்தபிறகு குறைவாக இருப்பதாகத் தெரிந் தால், அதை வசூலிக்க ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: பதிவு செய்ததற்குப் பிறகு எப்படி வசூலிப்பது என்று புரியவில்லை. அதற்குச் சட்டத்தில் இட மில்லை.

*Construction of Government buildings*

*161 Q.—THIRU V. ISVARMURTI: Will the Hon. the Minister for Public Works be pleased to state:

(a) whether the Public Works Department is following the standard prescribed by the Indian Standards Institution for the construction of Government buildings; and

(b) if so, the details thereof?

[21st July 1971

### அரசுக் கட்டிடங்கள் கட்டுதல்

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இந்தியத் தர நிறுவனம் வரையறுத்துள்ள தரத்தினை அரசுக் கட்டிடங்கள் கட்டுவதில் பொதுப் பணித் துறை பின்பற்று கிறதா?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை?

THE HON. THIRU S. J. SADIQ PASHA: (a) Yes.

(b) The codes of practice prescribed by the Indian Standards Institution for the structural safety of the buildings and methods of design are followed by the Public Works Department. However for the use of various structural materials such as bricks, cement, concrete, timber, steel, etc. in building works and for the methods of construction both the Indian Standard Specification and Madras Detailed Standard Specifications are followed.

### *Junior Engineers*

*162 Q.—THIRU V. ISVARMURTI: Will the Hon. the Minister for Public Works be pleased to state:

(a) whether the posts of Junior Engineers in the Public Works Department and in the Highways Department have been made Gazetted; and

(b) if so, the details thereof?

### இளநிலைப் பொறியாளர் பதவிகள்

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) பொதுப் பணித் துறையிலும் நெடுஞ்சாலைத் துறையிலும் உள்ள இளநிலைப் பொறியாளர் பதவிகள் அரசிதழ்ப் பதிவு பெற்ற பதவிகளாக மாற்றப் பட்டுள்ளனவா?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) ஆம்.

(இ) இளநிலைப் பொறியாளர் பதவியை அரசிதழ் பதிவு பெற்ற பதவியாக்கித் தமிழ்நாடு பொறியியல் பணியில் மிகக் கீழ்ப் பிரிவில் வைக்க தமிழ்நாடு இரண்டாவது சம்பள ஆணைக் குழு பரிந்துரைத்தது. இப் பரிந்துரையை அரசு ஏற்றுக்கொண்டு பொதுப் பணித்துறை, நெடுஞ்சாலை, கிராமப் பணித்துறை ஆகிய வற்றில் இளநிலைப் பொறியாளர்களை ஊதிய உயர்வு இல்லாமல் அரசிதழ் பதிவு பெற்ற தகுதி அளித்து பொதுப் பணித்துறை 17—2—1971 நாளிட்ட 496-ம் எண் ஆணையில் அரசு உத்தரவு பிறப் பித்துள்ளது.



21st July 1971]

திரு. வி. தங்கபாண்டியன்: தலைவர் அவர்களே, இந்த இளநிலை பொறியாளர்கள் கெஜட்டட் பதவி பெற்ற காரணத்தால், மாநாட்சி ஒன்றியங்களில் ஜூனியர் இன்சினியர் பதவி வகிக்கக் கூடாது என்று ஏதேனும் அரசாங்கம் உத்தரவு பிறப்பித்திருக்கிறதா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: அப்படி உத்தரவு பிறப்பித்ததாக என்னிடத்தில் தகவல் இல்லை.

திரு. எம். ராஜா அய்யர். அவர்கள் கெஜட்டட் ஆபீசர் என்று சொல்வதால் அவர்களுக்கு என்ன அனுகூலம் கிடைக்கிறது? சம்பள விதிதம் ஒன்றாக இருக்கிறது. என்.ஜி.ஓ. என்று சொல் வதை மாற்றி கெஜட்டட் ஆபீசர் என்று சொல்கிறோம். அதனால் அனுகூலம் இருக்கிறதா அல்லது குறை ஏற்படுகிறதா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: முக்கியமான அனுகூலம் என்ன வென்றால் மத்திய அரசாங்கம் இதுபோன்ற இன்சினியர்கள் பதவிக்கு வைக்கும்போது கெஜட்டட் ஆக நான் காண்டுகள் பதவி வகித்திருந்தால்தான், அவர்களுக்கு பிரமோசன்ஸ் கொடுக்கிறார்கள். மற்றொன்று கெஜட்டட் ஆபீசர் பதவி என்ற பெருமையும் அவர்களுக்குக் கிடைக்கிறது.

### *Palar Basin Certificates.*

*163 Q.—THIRU G. SWAMINATHAN: Will the Hon. the Minister for Public Works be pleased to state yhether there is any proposals to relax the rule for the issue of Palar Basin Certificates to Agriculturists of Chingleput and North Arcot Districts for installation of Electric Pumpsets?

### பாலாறு வடிநிலச் சான்றிதழ்கள்

திரு. ஜி. சுவாமிநாதன்: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டு கிறேன்—

பின்சார வினையேற்றங்களை நிறுவுவதற்காக செங்கற்பட்டு, வடஆற்காடு மாவட்டங்களில் உள்ள உழவர்களுக்கு பாலாறு வடி நிலச் சான்றிதழ்கள் (Palar Basin Certificates) வழங்குதற்குரிய விதியைத் தளர்த்தும் செயற்குறிப்பு ஏதேனுமுள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: செங்கல்பட்டு மற்றும் வடஆற்காடு மாவட்டங்களில் பாலார் பேசின் விவசாயிகள் பின்சார நீர் இறைப்புப் பொறிகள் பொறுத்துவதற்காக சான்று அளிக்கும் விதிகளைத் தளர்த்துவதற்கான எண்ணம் அரசினரிடம் தற்போது இல்லை.

திரு. ஜி. சுவாமிநாதன்: தலைவர் அவர்களே, அங்குள்ள விவ சாயிகள் கிட்டத்தட்ட 6,000, 7,000 ரூபாய் அளவில் செலவிட்டு கிணறுகள் வெட்டி சாகுபடி செய்துவிட்டு மோட்டார் கிசன்சு பெறுவதற்கு செவின்யூ டிபார்ட்மெண்டுக்குச் சென்றால், பல

மாதங்கள் கிசன்சு பெற முடியாமல் தவிக்கிறார்கள். அதை உடனடியாக வழங்குவதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா ? முடியா விட்டால் அதற்கு என்ன காரணம் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு உறுப் பினர் சொல்வதைப் போல, பல மாதங்கள் காலதாமதம் ஏற்படு வதில்லை. அதைப் போன்ற புகார் இதுவரையிலும் வரவில்லை. இந்தப் " பாலாறு பேசின் சர்டிபிகேட் " ஏற்படுத்தியதன் காரணம் என்னவென்றால், இணைகள் ஒன்றுக்கொன்று குறுக்கிடாமலி ருக்கும் வகையிலும் ஊற்று நீர்மட்டம் குறையாமலிருக்கும் வகை யிலும் சில விதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இவ்விதிகள் பாலாற் றால் பயனடையும் விவசாயிகளின் நலனுக்காகவே ஏற்படுத்தப் பட்டிருக்கின்றன.

தமிழ்நாட்டின், நில நீர் ஆய்வுபற்றி ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் தயாரிக்கப்பட்ட அறிக்கை பெறப் பட்டது. தற்போதுள்ள பாலார் படுகை விதிகளை மறு பரிசீலனை செய்யும்போது, மாறுபட்ட பொருளாதார நிலைமையைக் கருத்தில் கொண்டு பாசனத்திற்கு பருவ காலங்களில் மட்டும் குறைந்த அளவில் நில நீரைப் பயன்படுத்துவதைவிட ஆண்டு முழுவதும் வீட்டுத் தேவைகட்கும், தொழிற்சாலைத் தேவைகட்கும் பயன் படுமாறு இருக்க வேண்டுமென்றும் இம்மாதிரியான விதிகளைச் செயல்படுத்துவதற்கு முறையான விதிமுறைகள் இருக்க வேண்டு மென்றும் பரிந்துரைக்கப்பட்டிருக்கிறது. மேற்கண்ட பரிந்துரை களினால் 1963-ல் ஒப்புதல் அளிக்கப்பட்ட பாலார் படுகை விதிகள் இன்னும் ஐந்து ஆண்டுகளுக்கு நீடிக்கப்படலாம்.

திரு. சி. வி. ராஜகோபால் : தலைவர் அவர்களே, இதற்கு முன்னால் பாலாறு என்று இருந்தது இப்போது பாழாறாக ஆகி விட்டிருக்கிறது. அங்கே ஊற்று இப்போது இல்லாமல் இருப்பதால் பாலார் சர்டிபிகேட் மிகவும் அவசியம்தானா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு உறுப் பினர் அவர்கள் பாலாறு இப்போது பாழாறாக இருப்பதாகச் சொன்னார்கள். இன்னும் பாழாறாகக் கூடாது என்றுதான் இப் போது இந்த விதிமுறைகள் வகுக்கப்பட்டிருக்கின்றன.

திரு. எஸ். ஜெயராம செட்டியார் : சில வருஷங்களுக்கு முன்பு அமராவதி, காவிரி நதிகளுக்குப் பக்கத்தில் இதே மாதிரிக் கிணறுகள் வெட்டக்கூடாது என்று ஏற்கெனவே முயற்சி செய்து ஆற்றில் போகிற தண்ணீர் வரண்டு போகாமலிருப்பதற்காக ஆட் சேபித்து, அதற்கு ஒரு இயக்கமே ஏற்படுத்தி, அந்த ஆறுகளி லிருந்து இத்தனை கெஜதூரம் வரையில் கிணறுகள் வெட்டக் கூடாது என்று விதி ஏற்படுத்தியிருக்கிறார்கள் என்பது சர்க்காருக்குத் தெரியுமா ? அப்படியிருந்தால், அதே முறையில் இந்த ஸ்கீமைக் கொண்டுவர முயற்சிக்கப்படுமா ?



மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அமராவதி, பரம்பிக்குளம் பகுதியில் குறிப்பிட்ட எல்லைக்குள் கிணறு வெட்டக் கூடாது என்று இருப்பதைப் போல, பாலாற்றின் குறிப்பிட்ட எல்லைக்குள் கிணறுகள் வெட்டக்கூடாது என்று இப்போது இருக் கிறது. அதற்கு அப்பால் கிணறு வெட்டுவதில் கஷ்டமில்லை. பக்கம் பக்கமாகக் கிணறுகளை வெட்டி, தண்ணீர் கிடைக்காமல் கஷ்டப்படுவதைத் தடுக்கவும் நீர் வளத்தை விணைக்காமல் இருக்கவும் தான் இந்த விதி முறை போடப்பட்டிருக்கிறது.

### *Tractors.*

• 164 Q.—THIRU P. THIRUGNANASAMBANDAM : Will the Hon. the Minister for Agriculture be pleased to state :

(a) the number of applications received by the Tamil Nadu Government for the supply of tractors on loan basis in 1967-70 from Ramanathapuram District; and

(b) the number of applications which were disposed of?

### எந்திரக் கலப்பைகள்.

திரு. பி. திருஞானசம்பந்தம் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதி லளிக்க வேண்டுகிறேன்—

(அ) இராமநாதபுரம் மாவட்டத்தில் 1967-70-வரை எந்திரக் கலப்பைகள் கடனாக வழங்கக் கோரி எத்தனை விண்ணப்பங்கள் தமிழக அரசினால் பெறப்பட்டன ?

(இ) எத்தனை விண்ணப்பங்கள் மேல், முடிவு எடுக்கப் பட்டுள்ளன ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : (அ) 47.

(இ) 47.

திரு. எஸ். முத்துசாமி : தலைவர் அவர்களே, வேளாண்மைப் பெரியவர்களுக்கு இயந்திரக் கலப்பை வழங்குவதில் உள்ள தடைகளை நீக்கி உடனுக்குடன் வழங்க வழிவகை செய்யப்படுமா? தாராளமாகக் கடன் வழங்கப்படுமா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : 47 மனுக்கள் வந்தன. அந்த 47-க்கும் வழங்கப்பட்டிருக்கிறது. எனவே தாராளமாக வழங்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### *Pilot Project on Multiple Cropping*

• 165 Q.—THIRU V. ISVARMURTI : Will the Hon. the Minister for Agriculture be pleased to state :

(a) whether the Government of India have sanctioned a Pilot Project on Multiple Cropping for this State, as a Centrally Sponsored Scheme; and

(b) if so, the details thereof?

[21st July 1971

**பல பயிர் முன்னேடித் திட்டம்.**

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டமாக இம்மாநிலத்தில் பல பயிர் முன்னேடித் திட்டத்திற்கு இந்திய அரசு அனுமதி வழங்கியுள்ளதா?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: (அ) ஆம்.

(இ) தேர்ந்தெடுக்கப்பட்ட பகுதிகளில் பன்முறை சாகுபடித் திட்டத்தை விரைவாக மேம்படுத்துவதே இத்திட்டத்தின் நோக்கம். பயிர்வள ஆராய்ச்சி குறித்து ஒருங்கிணைந்த செயல் திட்டம் அமைத்தல், அறிவியல் செயல்முறை விளக்கங்கள், நன்கு மைந்த வளர்ச்சி நடவடிக்கைகள், சீரான அளவில் பயிரிடுதல் தேவைப் பொருட்கள், கடன் வசதிகள், முறையாக ஏற்படுத்தப் பட்ட விற்பனை வசதிகள், மேற்கண்டவற்றிற்குத் துணையாக உள்ள இதர நடவடிக்கைகள் ஆகியவற்றின் மூலமாக முன்னேடி பன்முறை சாகுபடித் திட்டத்தின் நோக்கம் எய்தப்படும். தஞ்சாவூர் மாவட்டத்தில் பட்டுக்கோட்டை, திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் முசிரி, தென்னார்க்காடு மாவட்டத்தில் கடலூர் ஆகிய ஒவ்வொரு பகுதியிலும் 1 லட்சம் ஏக்கர்களில் 1971–72-ம் ஆண்டு முதல் மூன்று வருடங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்படும். இதற்காகும் செலவு முழுவதும் மத்திய அரசினால் ஏற்கப்படும்.

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி: மத்திய அரசிடமிருந்து எவ்வளவு ரூபாய் உதவி பெறப்படும்?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: தலைவர் அவர்களே, மொத்தமாக அலுவலர்களுக்கு ஒரு ஆண்டிற்கு ரூ. 2,53,000, அதே போல பயிர்கள் ஆராய்ச்சி ஒரு வருடத்திற்கு ஒரு வட்டாரத்திற்கு 20 ஆராய்ச்சியாளர்களுக்கு ரூ. 500 வீதம் ரூ. 30,000, செய்முறை விளக்கங்கள் ஒரு வருடத்திற்கு ரூ. 30,000 வீதம் ரூ. 90,000, போக்குவரத்து ரூ. 11,000, பயிற்சி, ஒலிப்பட உபகரணங்கள் ரூ. 9,000 என்று ஒரு ஆண்டுக்கு மொத்தமாக ரூ. 3,93,000 அளவில் மூன்றாண்டுகளுக்கு ரூ. 12 லட்சத்திற்குத் திட்டமிடப்பட்டிருக்கிறது.

திரு. எம். சங்கரலிங்கம் பிள்ளை: இந்த முன்னேடித் திட்டம் எல்லா மாவட்டத்திற்கும் விஸ்தரிக்கப்படுமா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: இந்தத் திட்டம் நல்ல முறையில் செயல்பட்டால், மத்திய அரசு உதவி பெற்று மற்ற மாவட்டத்திற்கும் செயல்படுத்தச் சிபாரிசு செய்யப்படும்.

திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு: இரண்டு லட்சம் ஏக்கராவுக்கு அதிகமாக இந்தத் திட்டத்தை மூன்று ஜில்லாக்களில் செயல் படுத்தி, ஒவ்வொரு ஜில்லாவிலும் ஒரு வட்டாரத்தைத் தேர்ந்தெடுத்து, எல்லா ஜில்லாக்களிலும் இந்தத் திட்டம் நல்லமுறையில் நடைபெறுகிறதா என்று பரிட்சார்த்தமாகச் செய்ய முடியாதா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: இந்தத் திட்டத்தை இப்போதுதான் செயல்படுத்தத் திட்டமிட்டிருக்கிறோம். மத்திய அரசுக்குச் சிபாரிசு செய்தபடி முன்னேடித் திட்டமாக மூன்று இடங்கள் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கின்றன.



21st July 1971]

MR. CHAIRMAN: Questions are over.

(*Note.*—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member).

## III. ANNOUNCEMENTS.

### (1) MESSAGES FROM THE GOVERNOR.

MR. CHAIRMAN: I have received messages from the Governor of Tamil Nadu recommending to the Legislative Council the consideration of the Tamil Nadu Abkari (Amendment) Blil, 1971 and the Tamil Nadu Urban Land Tax (Amendment) Bill, 1971.

### (2) MESSAGES FROM THE ASSEMBLY.

MR. CHAIRMAN: I have also received messages from the Hon. Speaker, Legislative Assembly transmitting copies of the following Bills, as passed by the Assembly, and signed by him for the recommendation of the Council and certifying that the Bills are Money Bills within the meaning of Article 199 of the Constitution of India: 4-40 p.m.

(1) The Tamil Nadu Abkari (Amendment) Bill, 1971 (L.A. Bill No. 20 of 1971).

(2) The Tamil Nadu Urban Land Tax (Amendment) Bill, 1971 (L.A. Bill No. 18 of 1971).

I have further received messages from the Hon. Speaker, Legislative Assembly, transmitting copies of the following Bills, as passed by the Assembly and signed by him for the concurrence of the Council:

(1) The Madras City Civil Court (Amendment) Bill, 1971 (L.A. Bill No. 13 of 1971).

(2) The Motor Vehicles (Tamil Nadu Second Amendment) Bill, 1971 (L.A. Bill No. 21 of 1971).

(3) The Tamil Nadu Industrial Establishments (National and Festival Holidays) Amendment Bill, 1971 (L.A. Bill No. 14 of 1971)

(4) The Holidays (Stay of Execution Proceedings) (Tamil Nadu Amendment) Bill, 1971 (L.A. Bill No. 12 of 1971).

(5) The Tamil Nadu Land Reforms (Fixation of Ceiling on Land) Amendment Bill, 1971 (L.A. Bill No. 16 of 1971).

## IV.—CALLING ATTENTION TO THE THREATS CAUSED BY NAXALITIES IN THANJAVUR DISTRICT AND CONSEQUENT DISTRESS TO THE PEOPLE

MR. CHAIRMAN : The Call Attention Notice given by Thiru G. Swaminathan is postponed.

## V.—GOVERNMENT MOTIONS

### (1) ELECTION OF ONE MEMBER TO THE TAMIL NADU LAND IMPROVEMENT BOARD

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்:** மாண்புமிகு அவைத் தலைவரவர்களே, " 1959-ம் ஆண்டு தமிழ்நாடு நில மேம்பாட்டுத் திட்டங்கள் குறித்த சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 31/1959) 8-வது பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவின் (எப்) பகுதியின் கீழ், வேளாண்மைத் துறையில் 1968 பிப்ரவரி, 21-ம் நாளன்று வெளியிட்ட 438-ஆம் எண் ஆணையில் கண்டுள்ளபடி அரசினர் அமைத்த தமிழ்நாடு நில மேம்பாட்டு வாரியத்தின் உறுப்பினராக திரு. எஸ். டி. ஆதித்தன், எம்.எல்.சி. சட்ட மன்றத்தில் தேர்ந்தெடுக்கப்பட்டு, மேற்சொன்ன பிரிவின் (2) உட்பிரிவைச் சேர்ந்த (எப்) பகுதியில் குறிப்பிட்டுள்ளபடி மேற்சொன்ன உறுப்பினரின் பதவிக்காலம், மேற்படி பிரிவின் (5) உட்பிரிவைச் சேர்ந்த (எ) பகுதியின் படி 1971 பிப்ரவரி 20-ஆம் தேதியன்று முடிவடைந்த தால் 1959-ம் ஆண்டு தமிழ்நாடு நில மேம்பாட்டு திட்டங்கள் குறித்த சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 31/1959) 8-வது பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவின் (எப்) பகுதியை ஒட்டி மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர் நிர்ணயிக்கும் ஒரு நாளன்று மேற்கண்ட வாரியத்தின் உறுப்பினராக இருக்கும்படி சட்ட மன்றத்தின் உறுப்பினர் ஒருவரை இம்மன்றம் தேர்ந்தெடுக்க முற்படுமாக " என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

MR. CHAIRMAN : The question is—

" Whereas Thiru S. T. Adityan, M.L.C. was elected by the Legislative Council under clause (f) of sub-section (2) of section 8 of the Tamil Nadu Land Improvement Schemes Act, 1959 (Tamil Nadu Act 31 of 1959) as member of the Tamil Nadu Land Improvement Board reconstituted by the Government in their Order Ms. No. 438, Agriculture, dated 21st February 1968;

And whereas the term of office of the member referred to in clause (f) of sub-section (2) of the said section expired on the 20th February 1971 by efflux of time under clause (a) of sub-section (5) of the said section;

Now, therefore, in pursuance of clause (f) of sub-section (2) of section 8 of the Tamil Nadu Land Improvement Schemes Act, 1959 (Tamil Nadu Act 31 of 1959), this House do proceed on a date to be fixed by the Hon. Chairman to elect one member of the Legislative Council to be the member of the said Board. "

The motion was put and carried.



21st July 1971]

MR. CHAIRMAN : With reference to the motion moved by the Hon. the Minister for Agriculture for the election of one Member of the Legislative Council to the Tamil Nadu Land Improvement Board, I fix the following programme :

Time and date for the receipt of nominations—4-30 p.m., on 24th July 1971.

Time and date for the scrutiny of nominations—5.00 p.m., on 24th July 1971.

Time and date for the withdrawal of candidature—4.00 p.m., on 26th July 1971.

Nomination forms can be had from the Secretary. There will be an election, if the number of candidates nominated exceeds one and the election will be by the ordinary method and not in accordance with the principle of proportional representation by means of the single transferable vote. The date and time of the poll, if any, will be intimated later.

### (2) CHANGE IN THE ORDER OF BUSINESS

THE HON. THIRU S. MADHAVAN : Mr. Chairman, Sir, I move—

" That under rule 21 (3) of the Tamil Nadu Legislative Council Rules, item No. (3) under 'Government Bills' in the Agenda, namely, the Tamil Nadu Abkari (Amendment) Bill, 1971 (L.A. Bill No. 20 of 1971) be taken up before item No (1) ".

MR. CHAIRMAN : The question is—

" That under rule 21 (3) of the Tamil Nadu Legislative Council Rules, item No. (3) under 'Government Bills' in the Agenda, namely, the Tamil Nadu Abkari (Amendment) Bill, 1971 (L.A. Bill No. 20 of 1971) be taken up before item No (1) ".

The motion was put and carried.

## VI.—GOVERNMENT BILLS

### (1) THE TAMIL NADU (ABKARI AMENDMENTS BILL) 1971. (L.A. BILL NO 20 OF 1971.)

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, சட்டப்பேரவையால் நிறைவேற்றப்பட்ட, (தமிழ்நாடு 1971-ம் ஆண்டு அப்காரி (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 20/1971) பரிந்துரைகள் செய்வ தற்காக ஆலோசனைக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டுமென்று கோருகிறேன்.

மதுவிலக்கைத் தேசியக் கொள்கையாக ஏற்றுக்கொண்டு அதை நாடு முழுவதும் செயல்படுத்த மத்திய அரசு முன்வருமாறு இம்மாநிலத்தில் மதுவிலக்குச் சட்டம் செயற்படுவதை 1971-ம்

@ Printed as Appendix I on pages 69–73.

[திரு. செ. மாதவன்] [21st July 1971

ஆண்டு ஆகஸ்டு 30-ம் நாள் தொடங்கி நிறுத்திவைக்க அரசு முடிவு செய்துள்ளதை இம்மன்றம் அறியும். மதுவிலக்குச் சட்டம் திருத்தி வைக்கப்பட்டதன் விளைவாக, தமிழ்நாடு 1896-ம் ஆண்டு அப்காரி சட்டம் இம்மாநிலத்தில் மீண்டும் செயலுக்குக் கொண்டு வரப்படும். இச் சட்டம் ஏறத்தாழ நூறுண்டுகளுக்கு முன் இயற்றப் பட்டது. அண்டை மாநிலங்களான ஆந்திரப் பிரதேசம், மைசூர், கேரளம், புதுச்சேரி ஆகிய மாநிலங்களில் நிலவி வரும் நிலைமையை அறிந்துகொண்ட பிறகு, இது குறித்து அடங்கல் சட்டம் ஒன்றை நாளடைவில் கொண்டுவர அரசு திட்ட மிட்டுள்ளது. இதற்கிடையில் தமிழ்நாடு 1896-ம் ஆண்டு அப்காரி சட்டத்தை மேலும் செவ்வையான முறையில் செயற் படுத்துவதற்காக, அச் சட்டத்தின் சில பிரிவுகளைத் திருத்துவது அவசியமெனக் கருதப்படுகிறது.

கருப்பஞ்சாற்றுக் கசண்டு தயாரிப்பு முதலியவற்றைக் கட்டுப் படுத்துவதற்காகவும், முறைப்படுத்துவதற்காகவும், மேற்படி சட்டத்தின் 16 (ஏ) என்ற புதிய பிரிவைச் சேர்த்துக்கொள்ள இம் மசோதாவின் 5-வது பகுதி வகை செய்கிறது.

அந்நிய நாட்டு மதுவகைகளின் மீது விற்பனை வரி விதிப் பதற்கு தமிழ்நாடு 1937-ம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் 21-ஏ பிரிவு வகை செய்கிறது. தமிழ்நாடு 1896-ம் ஆண்டு அப்காரி சட்டத்தில் இத்தகைய வரி விதிப்பிற்கு எந்தவிதமான விதித் துறையும் இல்லை. அத்தகைய மதுவகைகளின் விலையில் அரசு அவ்வப்போது அறிவிக்கும் வகையில் ரூபாய்க்கு 75 காசுக்கு மேற் படாத வீதத்தில் அந்நிய மதுவகை விற்பனை விலை மீது விற்பனை வரி விதிக்க இம் மசோதாவின் 7-வது பகுதி வகை செய்கிறது.

மதுவகைகளை அருந்துவதற்கான நேரங்கள், இடங்கள் ஆகிய வற்றை முறைப்படுத்தவும், குறிப்பிட்ட வரையறைகளை நிறைவு செய்யும் கட்டிடங்களில் மட்டும் மது வகைகள் விற்கப்பட வேண்டு மென்று நிர்ணயிக்கவும் அத்தகைய கட்டிடங்களில் ஏற்படுத்தப் பட வேண்டிய வசதிகளைக் குறிப்பிட்டும், விதிகள் செய்ய அரசுக்கு அதிகாரம் அளிக்க மேற்படி சட்டத்தின் 29-வது பிரிவில் திட்ட வட்டமான விதித்துறை இயற்றக் கருதியுள்ளது. விற்பனை செய்யப் படும் மதுவகைகள் அல்லது வெறியூட்டும் மருந்து வகைகள் தரம், அவற்றில் உள்ள சாராயத்தின் சதவீதம் ஆகியவற்றைப் பரிசீலனை செய்யவும் அவ்விதிகள் வகை செய்யலாம். உரிமம் பெற்றவர் சாராயம் அல்லது வெறியூட்டும் மருந்தை இருபத்தோரு வயதுக்குட்பட்டவராகத் தெரிகிற எவருக்கேனும் விற்றால் அல்லது கொடுத்தால், அதனைக் குற்றமாகக் கருதி நடவடிக்கை எடுக்க மேற்படி சட்டத்தின் 55-வது பிரிவைத் திருத்தக் கருதப் பட்டுள்ளது.

தமிழ்நாடு அப்காரி சட்டத்தின் விதித் துறைகளை 1971-ம் ஆண்டு ஆகஸ்டு 30-ம் நாள் முதற்கொண்டு செயற்படுத்த அரசு செய்துள்ள முடிவைச் செயலுக்குக் கொண்டுவரும் நோக்கத்துடன்



21st July 1971] [திரு. செ. மாதவன்]

1971 ஆகஸ்டு 30-ம் நாளுக்கு முன்னர் செய்யப்பட்ட செயல்கள் அனைத்தையும் செல்லுபடியுள்ளவையாக்க 12-வது பகுதி வகை செய்கிறது. இம் மசோதாவை ஆலோசனைக்கு எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(DEPUTY CHAIRMAN IN THE CHAIR.)

DEPUTY CHAIRMAN: Motion moved—

"That the Tamil Nadu Abkari (Amendment) Bill, 1971 (L.A. Bill No. 20 of 1971), as passed by the Assembly, be taken into consideration for making recommendations".

The motion is before the House for discussion.

THIRU G. VASANTHA PAI: Mr. Deputy Chairman, Sir, I thank the Chair for giving me this opportunity to speak on the Abkari Bill. But I do not know whether I would be in order, without giving notice of an amendment, if I suggest to the Hon. Minister that it should be "twenty-five years of age" instead of "twenty-one years of age" in clause (dd) of section 56, though I said originally during the Budget discussion that persons less than 21 years of age should not be served liquor. I brought to the Hon. Minister's kind attention the fact that hostels, college hostels should not be used for this purpose and that they should not be made the venue for drinking liquor in any form and then I suggested that it should be "21 years" I am happy that the Hon. Minister has accepted my suggestion by making a provision in clause (dd) of section 56. But, I would only request the Hon. Minister—though I have not formally moved any amendment to that clause—that the age should be "twenty-five", so that all kinds of students in any College or Institution, wherever situated, should be precluded from drinking while undergoing studies. Except for this suggestion, I have nothing more to say on this Bill. It would have been appropriate for me to have tabled an amendment to clause (dd) which has come in. But I am only requesting the Hon. Minister to consider my suggestion.

*திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு: நண்பர்களே, 1896-ம் ஆண்டில் அந்நியருடைய ஆட்சியின் கீழ் இருந்தபோது இந்த அப்காரி சட்டம் செய்யப்பட்டது என்று தெரிகிறது. அதற்கு 40 ஆண்டுகளுக்குப் பின்னால் இந்தச் சட்டத்திற்கு ஒரு முடிவு ஏற்பட்டது. இது இந்த நாட்டிற்கு ஏற்காதது என்று பல ஆண்டுகள் சொல்லிக்கொண்டு வந்திருந்தும் கூட இந்த நாடு சுதந்திரம் அடைந்ததற்குப் பின்னால் தான் இதற்கு ஒரு விமோசனம் ஏற்பட்டது. அதற்காக நம் நாடு பட்ட கஷ்டங்கள் கொஞ்ச நஞ்சமல்ல. சாராயக் குடித்துவிட்டு அல்லது மதுபானம் அருந்தி விட்டு கொலைக் குற்றம் செய்தவர்கள் தண்டிக்கப் பட்டார்கள், தூக்கிலிடப்பட்டார்கள் என்றால், தூக்கிலிடப்பட வேண்டியது அரசாங்கமே தவிர அவர்களல்ல என்று நான் ஒரு கோர்ட்டில் பேசியதற்காக எனக்கு 1920-ம் வருஷத்திலே ஒரு வருஷ தண்டனை கிடைத்தது. அப்போது என்னை தண்டித்தவர் அப்போது ரிஜிஸ்ட்ரார் ஸ்பெஷல் மெஜிஸ்ட்ரேட்டாக இருந்து—பின்னால் ஹைகோர்ட்டு ஜட்ஜாக இருந்த—பி. என். ராமசாமி அய்யர்

அவர்கள்தான். இது ஒரு குற்றமாகக் கருதப்பட்டது. இவ்வாறு பல கஷ்டங்கள் இதனால் நமக்கு நேர்ந்திருக்கின்றன. இந்தத் திட்டம் சரிவர நிறைவேற்றப்படவில்லை பொது மக்கள் அனுஷ்டானத்திற்குக் கொண்டு வரவில்லை, அலட்சியம் செய்யப்படுகிறது, கட்டுப்பாடு இல்லாமல் போய்விட்டது, சுற்றுப்புறச் சூழ்நிலைகள் நன்றாக இல்லை என்றெல்லாம் காரணங்கள் சொல்லப்படுகின்றனவே தவிர, இதிலுள்ள நியாயத்தை அறிந்து அதற்காக ஆவன செய்ய வேண்டுமென்ற உணர்வு ஆட்சியாளர்களிடத்தில் தோன்றவில்லையே என்றுதான் வருந்த வேண்டியிருக்கிறது. அண்ணா அவர்களின் மறைவிற்குப் பின்னாலே, என் அதற்கு முன்னாலேயே, இந்தச் சட்டம் இனி நிலைக்கப்போவதில்லை, மது விலக்குச் சட்டத்தை ரத்து செய்ய வேண்டுமென்ற உள் நோக்கம் அரசுக்கு இருந்திருக்கிறது. எவ் வளவோ மதுவிலக்குச் சட்டத்தை மீறிய செயல்கள் இருந்தும் கட்டுப்பாடு அற்ற நிலையில் அரசாங்கம் இருந்தது என்று தைரிய மாகச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். பல சந்தர்ப்பங்களில் நாம் இதைப் பேசியிருக்கிறோம், எடுத்துக் காட்டியிருக்கிறோம். பல இடங்களில் இப்படி நடந்துகொண்டிருக்கின்றன, இதைப் பார்க்க வேண்டுமென்று கேட்டிருக்கிறோம். இப்படி அதிகமாகக் குற்றங்கள் நடைபெற்றிருக்கின்றன என்று சொல்லும்போது, சரி தானே, அப்படித் தானே எங்கும் இருக்கிறது என்று தோன்றும் படியான ஒரு நிலைமையை இந்த அரசு உண்டுபண்ணியது என்று நான் கருதுகிறேன். இந்த நிலையில் விட்டுக் கொண்டே வந்திருக் கிறார்கள். என்னுடைய உணர்விலே இப்படித் தோன்றுகிறது. பல காரணங்களைச் சொல்லி இதை ரத்து செய்ய வேண்டுமென்று அரசாங்கம் சொல்வதில் நியாயமில்லை. அரசாங்கம் ஒத்தி வைக் கிறோம் என்று சொன்னாலும், ஒத்தி வைப்பது என்பதற்கு வேறு அர்த்தம் இல்லை. ரத்து செய்வது என்று தான் ஆகும். இப் போதும் ஒன்றும் மோசம் போய்விடாது. இப்போதும் கூட செய்யலாம் என்று அவரிடத்தில் பணிவாகக் கேட்டுக்கொள் கிறேன்.

5-50 p.m.

கடந்த இத்தனை வருஷங்களாக தாழ்த்தப்பட்ட சமுதாயத் தினர், மிகவும் பிற்பட்ட மக்கள், அவர்களுடைய குடும்பங்கள் ஓரளவிற்குச் சுபிட்சம் அடைந்திருக்கின்றனர். நானெல்லாம் கிராமத்தில் வாழ்கிறவன். இந்த மதுவிலக்குச் சட்டம் வந்ததற்குப் பிறகு அவர்கள் வீடுகளில் மாடுகளை வைத்து பால் உற்பத்திச் சங்கங்களை நடத்தி வருகின்றனர். அவர்கள் அந்தத் தொழிலைச் செய்கிறார்கள். 25, 20 வயதுக்குட்பட்ட இளம் சிறார்கள் கல்வியும், மதுபானத்தையும் அருந்தியவர்களாக இல்லை. பெரியவர்கள் அதற்கு முன்னால் அப்படி மது அருந்தியவர்களாக இருந்திருக் கலாம். அருந்தாத பகுதிகளாகப் பல கிராமங்கள் இருக்கின்றன. இங்கிருந்து கொண்டு நான் சொல்வதைக் கேட்டுச் சிரிக்க வேண்டிய அவசியமில்லை. என் பின்னாலே வாருங்கள். சில கிராமங் களைத் தவிர நூற்றுக்கணக்கான கிராமங்களில் மது வாசனை அறியாத தாழ்த்தப்பட்ட பெருங்குடி மக்களை என்னால் காட்ட





முடியும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். அப்படிப்பட்ட கிராமங் கள் இருக்கின்றன. அவர்கள் பிள்ளைகள் பள்ளிக்குச் செல்கிறார்கள் இப்படி அவர்கள் கொஞ்சங் கொஞ்சமாக முன்னேறிக்கொண்டு வருகிறார்கள். அவர்கள் பிள்ளைகள், இந்த மதுவிலக்குச் சட்டம் அமுலுக்கு வந்ததற்குப் பிறகு, எத்தனை பேர் டாக்டர்களாக வந்திருக்கிறார்கள், என்ஜினியர்களாக வந்திருக்கிறார்கள், பட்டம் பதவி பெற்று கெஜட் பதிவுள்ள அதிகாரிகளாக வந்திருக்கிறார்கள். அத்தனை டாக்டர்களை, என்ஜினியர்களைப் பார்க்கிறேன். அவர்கள் அந்தப் படிப்பைப் படிப்பதற்கு வீட்டில் அதற்கான சூழ்நிலை இருந்தது. அவர்களுக்கு, நாமும் பிற சமுதாயத்தினரோடு, மற்ற இனத்தவரோடு முன்னேற முடியும், முன்னேறுவதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன என்ற நம்பிக்கை இருந்தது. இப்போது இந்த மதுவிலக்குச் சட்டத்தை ரத்து செய்வதனால் இந்தத் தன்னம்பிக்கை போய்விடும். பல இடங்களில் மிராசுதார் களும், மற்றவர்களும் இந்தச் சட்டம் வருவது நல்லதொரு வாய்ப்பு என்று பேசுகிறார்கள். இப்படிக் கருதக் கூடியவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் வாழ்க்கையிலே குடி போதை ஏற்பட்டு, அதன் காரணமாக வேலையின்மை ஏற்பட்டு, ஏதோ சாப்பிட்டு விட்டு பட்டினி கிடப்பார்கள், அவர்கள் வாழ்க்கையில் வறுமை தாண்டவமாடும். சொன்னபடி கேட்பார்கள். அப்படிப் பட்ட நிலையில் அந்த ஏழை மக்களை வைத்துக் கொள்ள முடியும் என்று எண்ணும் வஞ்சகர்கள் இதை வரவேற்கிறார்கள். இப்படி வாவேண்டுமென்று நினைக்கிறவர்கள் பல பேர் இருக்கிறார்கள் என்பதை நான் பாவலாகக் காண்கிறேன். அப்படிப்பட்டவர்கள் முகத்தில் சந்தோஷம் தாண்டவமாடுவதைப் பார்த்தேன். நீங்கள் வேண்டுமானால் யோசித்துப் பாருங்கள், இந்தச் சட்டம் வந்த தற்குப் பின்னால் அவர்கள் வீடுகளிலிருந்து சிறுவர்களோ. சிறுமி களோ இன்றைய தினம் எப்படி பள்ளிக்குச் செல்கிறார்களோ அப்படிச் செல்வார்களா என்று யோசித்துப் பாருங்கள். பிற சமுதாயத்தினரோடு ஒப்பு நோக்கும் வகையில் முன்னேற வேண்டுமென்ற எண்ணத்தில் அவர்கள் பெற்றோர்கள் அவர்களைப் பள்ளிகளுக்கு அனுப்பிக்கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட நிலை இந்தச் சட்டம் வந்ததற்குப் பின்னால் இருக்குமா என்று யோசித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இந்தச் சட்டம் அவர்கள் எதிர்காலத்தில் முன்னேறுவதற்கு வழி வகை இல்லாத ஒரு நிலையை ஏற்படுத்தியிருக்கிறது. நம்முடைய குடும்பங்களிலேயிருந்தும் ஸ்கூல்களிலே படிக்கின்றார்கள், கல்லூரிகளிலே படிக்கின்றார்கள். அவர்களுடைய குடும்பங்களிலே யிருந்தும் ஸ்கூல்களிலே படிக்கின்றார்கள், கல்லூரிகளிலே படிக்கின்றார்கள். அவர்களுக்கு ஸ்காலர்ஷிப் கொடுக்கின்றோம். அவர்களுடைய பிள்ளைகள் ஹாஸ்டல்களிலே இருக்கின்றார்கள். பதவி பெற்று அதிகாரத்திலே இருக்கின்றார்கள். மதுவிலக்கு இல்லையென்றால், தங்கள் பிள்ளைகள் என்ன செய்கிறார்கள் என்பதைக் கண்காணிக்கும் சக்திகூட இருக்காது என்பதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். மதுவிலக்கை எடுத்துவிடுவதால் 20

கோடி அல்ல, 40 அல்லது 60 கோடி ரூபாய் வருமானம வருவதாக வைத்துக்கொண்டாலும், பல லட்சக் கணக்கான குடும்பங்களின் வாழ்வு இதனால் சீரழிகிறது, பாழாகிறது என்பதை உணர வேண்டும். எதிர்காலத்திலே அவர்கள் முன்னேறுவதற்கே வாய்ப்பு சிறிதும் இல்லாது செய்யக்கூடிய திட்டத்தை, இந்த மதுவிலக்கு ரத்தை, கொண்டு வருவது நல்லதல்ல. கல்விக்காக நம்முடைய வருமானத்தில் கால் பங்கு, 73 கோடி, 83 கோடி ரூபாய் என்று செலவு செய்யப்படுகிறது. அது நாளைக்கு எந்த முறையில் பயன் படப் போகிறது, யார் கல்வி வசதியைப் பெற முடியும் என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். அப்படிப்பட்ட கஷ்டங்கள் எல்லாம் நம்மை எதிர்நோக்கி இருக்கின்றன.

5-00 p.m. அடுத்து நாம் நிறைய கள் கிடைக்கும் என்று எதிர்பார்க் கிறோம். ஆனால் முன்பு இருந்த அளவு பனைமரங்கள் இப்பொழுது இல்லை. புதிய பனைமரங்கள் வைத்து உண்டாக்கப்படவில்லை. மூன்பு குத்தகைக்கு விடும்போது அரசாங்கத்திலேயே ஒரு திட்டம் இருந்தது. பனைமரங்கள் பட்டுப் போகக்கூடிய காலத்திலே அதற்கு அதிகமான மரங்கள் நட்டாக வேண்டும் என்று சொல்லப் பட்டது. ரெவின்யூ டிபார்ட்மென்டைக் கேட்டால் தெரியும். ஆக 20, 25 ஆண்டுகளாக புதிதாகப் பனைமரங்கள் உற்பத்தி செய்யப் படவில்லை. எத்தனையோ பனைமரங்கள் மழையின்மை காரண மாகப் பட்டுப்போய்விட்டன. எங்கள் ஜில்லாவிலே ஒவ்வொரு வருடமும் நிறைய மரங்கள் காய்ந்துபோய்விட்டன. எனவே கள் போதிய அளவு கிடைக்காது. விலை அதிகமாகும். நீங்கள் நினைக்கிறபடி கள் சுலபமாகக் கிடைக்காது.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவரவர்களே, மதிப்புக் குரிய திரு. கிருஷ்ணசாமி நாயுடு அவர்கள் இவ்வளவு நேரம் பேசிக்கொண்டிருந்தார்கள். இப்பொழுது கள் கிடைக்கவில்லையே என்று வருத்தப்படுகிறார்கள். கள் கிடைக்காவிட்டால் போகிறது. இருப்பதைக் கொண்டு பார்த்துக்கொள்கிறார்கள். அவர்கள் கள் அதிகம் வேண்டும் என்று விரும்புகிறார்களா ?

**திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு :** நீங்கள் மனப்பால் குடித்துக் கொண்டிருக்கிறீர்கள், நல்ல கள் கிடைக்கும் என்று. அதைச் சொல்வதற்காகத்தான் வருகின்றேன். இன்றைக்கு ஒரு கொத்த ருக்கு 7 ரூபாய் சம்பளம். நான் 1942-லே 12 அணா கொடுத்தேன். ஒரு பேக்டரி கட்டும்போது. இப்பொழுது விலைவாசி அப்படியிருக் கிறது. முன் இருந்த நிலையிலேயே கள் இறக்க ஆட்கள் வரப் போவதில்லை. மெட்ராசிலே இதற்கு ஆகாயப்பால் என்று பெயர். அதை இறக்குவதற்கு ஆள் அதிகமாக வரமாட்டார்கள். குறை வாகத்தான் வரப் போகிறார்கள். விலை அதிகமாகப் போகிறது. கலகம் செய்யப் போகிறார்கள். பிரண்டை, காரைமுள் போன்ற சமித்துகள் எல்லாம் சேர்த்து, முறப்பு ஏறுவதற்கும் போதை ஏறுவதற்கும், காரங்காய் என்ற காயையும் மலையடிவாரத்திலே யிருந்து கொண்டுவந்து சேர்த்து போதை உண்டாகச் செய்கிறார் களாம். நுரையையும் வெள்ளை நிறத்தையும் கொடுப்பதற்கு





பச்சை அரிசியையும், இன்னும் பலவிதமான பொருள்களையும் சேர்த்து கள் என்று பெயரிலே வரப்போகிறது. அப்படித்தான் சேர்திய அளவு கிடைப்பதற்கான வழிவகை செய்ய முடியும்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவர் அவர்களே, இவை களைச் சொல்லி கள்ளச் சாராயம் காய்ச்சுவதற்கு யாராவது ஆளாகிவிடக்கூடாது என்பதற்காகச் சொல்கிறேன். இவற்றை யெல்லாம் சொல்ல வேண்டாம்.

**திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு :** நான் சொல்வதற்கு முன்னு லேயே இன்றே கிராமம் கிராமமாகக் கிடைக்கிறது. பதனீர் என்ற பெயரிலேகூட அல்ல, கள் என்று சொல்லியே கிராமங்களிலே விற்கப்படுகிறது.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** எவ்வளவு நாளாக விற்கி றார்கள் ?

**திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு :** முன்பும் கொஞ்சம் இருந்தது. இன்று பகிரங்கமாகச் செய்ய துணிவு வந்துவிட்டது. அந்தத் துணிவு பிறக்கும்படி ஆட்சியாளர்கள் செய்தார்கள் என்றுதான் சொல்கிறேன். நான் ஆரம்பத்திலேயிருந்தே அதைத்தான் சொல்லி வருகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவர் அவர்களே, மாண்பு மிகு உறுப்பினர் அவர்கள் அடிக்கடி சொல்கிறார்கள். ஆட்சி யாளர்களே குடிப்பதற்குத் தூண்டுவது போல் கள்ளச் சாராயம் காய்ச்சுவதற்கு தூண்டிவிடுகிறார்கள் என்று குற்றம் சாட்டுகி றார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு :** கோட்டையூர் என்ற ஊருக்குப் போயிருந்தேன். தேர்தல் நேரம். சாயந்தரம் 4 மணி. போலீசாரும் இருக்கிறார்கள். ஊர் பெரிய ஊர்தான். 2,000 பேர் இருக்கிறார்கள். சாராயம் காய்ச்சி எடுத்துக்கொண்டு வெளி யூரிலேயிருந்து வருகிறார்களாம். போலீசாருக்கும் கொடுக்கிறார்கள். இன்னின்ன ஊருக்கு இன்னின்னார் என்று சொல்லுகிறார்கள். மகாராஜபுரத்திற்கு இன்னார், கரிசக்குளத்திற்கு இன்னார் என்றார்கள். தினமும் பார்த்துக்கொண்டிருக்கிறேன் இந்தக் கூத்தை. இதை என் கிளப்புகிறீர்கள் ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவர் அவர்களே, போலீசார் ஏதோ உடந்தை என்று சொல்கிறார். ஆளுங்கட்சியாக இருக்கிற திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட கடந்த 4½ ஆண்டுக் காலத்திலேதான் கள்ளச் சாராயம் காய்ச்ச ஊக்கம் கொடுத்து அதனால் மதுவிலக்கை ரத்து செய்துவிடலாம் என்பதற்காக திட்டமிட்டதைப்போல் செய்த தாகச் சொல்கிறார்கள். இதற்கு என்ன ஆதாரம் இருக்கிறது ? யாராவது கள்ளச் சாராயம் காய்ச்சினால், கள்ளச் சாராயம் காய்ச் சுபவர்களை விட்டுவிடுங்கள் என்று சொன்னோமா ? இந்த ஆட்சிப் பொறுப்பேற்றுக்கொண்டதற்குப் பிறகுதான் ஆயிரக்கணக் கானவர்கள் மதுவிலக்குச் சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டிருக்

[திரு. ப. உ. சண்முகம்] [21st July 1971

கின்றார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். பல காங்கிரஸ் காரர்கள் பெயரைக் கூடச் சொல்லத் தயாராக இருக்கின்றேன். எனவே கழகத்தின்மீது குற்றம் சுமத்திக்கொண்டிருப்பது சரியல்ல, முறையல்ல. இப்பொழுது நடைபெறுவது ஒரு பில்லைப்பற்றிய, ஒரு சட்டத்தைப் பற்றிய விவாதம். மாறு என்னவென்றால், இந்தச் சட்டத்தைப்பற்றிதான் பேச வேண்டும். சட்டத்தில் தவறு இருந்தால், அதைப்பற்றிப் பேசலாம். ஆனால் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் இந்தச் சட்டத்திற்கும் சம்பந்தம் இல்லாத ஒன்றைப் பேசுவது சரியல்ல என்று அனுபவம் பெற்ற அவர்களுக்குத் தெரிந்திருக்க வேண்டும். தெரியாமலிருப்பதற்காக நான் வருந்துகிறேன்.

திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு : கழகம் என்ற வார்த்தை என் வாயிலே வரவில்லை. ஆட்சியாளர்கள் என்றுதான் சொல்ல முடியும். வேறு என்ன சொல்வது ? அதைத் தவிர வேறு வார்த்தையைப் போடுவது பொருத்தமாக இருக்கிறதா என்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். ஆகையினாலே நான் பொருத்தமான வார்த்தையைத்தான் அந்த இடத்திலே சொல்லியிருக்கிறேன். நம்முடைய வாதம், ஏதோ தலைவிதி, இப்படி எதிர்காலத்திலே இருக்குமே என்று நொந்துகொண்டு பேசுவதே தவிர, நாமே ஒருவருக்கொருவர் ஏசிக் கொள்ளவேண்டாம். கட்சியைப்பற்றிப் பாகுபாடுகள் வேண்டாம் என்றுதான் நான் பேசிக்கொண்டு போகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, பொதுவாகப் பேசினால் அவரோடு நாங்களும் அனுதாபப்படத் தயாராக இருக்கிறோம். முதலமைச்சர் அவர்கள் படிக்கிறபோதுகூட வருத்தப்பட்டே படித்தார்கள் என்பதை இந்தச் சபையிலே இருப்பவர்கள் அறிந்திருப்பார்கள். உண்மை இப்படி இருக்கும்போது, வெளியிலே தவறுன செய்தி பரவுவதுபோல் பேசவேண்டாம். எல்லோருக்கும் மனதிலே வருத்தம் இருந்தாலும், வேறு வழியில்லாத காரணத்தால்தான், இந்த முடிவுக்கு வந்தோம் என்பதை ஞாபகப்படுத்துகிறேன்.

திரு. பி. நாராயணசாமி : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இப்படியெல்லாம் கள்ளச்சாராயம் காய்ச்சுவதை தான் பார்த்ததாகச் சொல்கிறார்களே. அவர்கள் அதற்காகப் போலீசுக்கோ, மந்திரிகளுக்கோ இப்படி அசம்பாவிதம் நடக்கிறது என்று தன் கைப்பட எழுதி இதுவரை ஏதாவது நடவடிக்கை எடுத்திருக்கிறார்களா ?

திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு : நானே கையாலே எழுதியது இல்லை. அமைச்சர்களிடம் சொல்லியிருக்கிறேன். எங்கள் ஊருக்கு வந்த எங்கள் ஜில்லா அமைச்சரிடமே சொல்லி ஒரு கூரல் அழுதிருக்கிறேன். ஒரு ஊரிலே வேறு யார் சாட்சி வேண்டும் ? அதற்காக அவர்கள் பேரிலே குறை சொல்லவில்லை. நிலைமை இப்படி இருக்கிறது என்பதற்காகச் சொல்கிறேன். வேறு



21st July 1971] [திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு]

வழியில்லை என்று அமைச்சர் அவர்கள் சொல்லுகிறார்கள். மனம் இருந்தால் வழி இருக்கிறது. நன்றாக நம்மால் செய்ய முடியும். வழியில்லை என்று அல்ல. முன்பு எல்லாம் விற்பனை வரியிலே எவ்வளவு வருமானம் வந்தது, இப்பொழுது எவ்வளவு வருகின்றது என்று பாருங்கள். 1967-க்கு முன்னாலே இருந்ததைவிட 30 கோடி ரூபாய் உயர்த்தியிருக்கிறது. வருஷத்திற்கு 10 கோடி ரூபாய் உயர்ந்துகொண்டே போகிறது. இப்பொழுது 93 கோடி ரூபாய் ஆகியிருக்கிறது. மதுவிலக்கை ஒத்திவைப்பதைவிட, சுபிட்சத்திற்காகச் செய்ய வேண்டிய வேலைகள் இருந்தாலும் அதை ஒத்தி வைத்து விட்டுப் பொறுத்துக் கொண்டிருக்கலாம். ஆகவே இந்த நஷ்டத்தை ஈடு கட்டுவதற்காக, எதிர்காலத்திலே நம்முடைய வாழ்க்கையைப் பாழாக்கிவிடக் கூடிய பழக்கவழக்கங்களைக் கொண்டுவந்து விடக்கூடிய காரியத்தைச் செய்ய வேண்டாம். மதுவிலக்கை ரத்து செய்தால், எதிர்காலத்திலே எப்படி வாழ்வார்கள், சமுதாயம் என்ன ஆகும் என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன். கல்வி கெடும். இன்னும் எவ்வளவோ கேடுகள் வரும். ஒரு ஆசிரியர் என்னிடத்திலே சொன்னார், அந்த ஆசிரியருடைய பெயரைச் சொல்ல வேண்டுமா, ஊரைச் சொல்ல வேண்டுமா? நார்சாகிபுரம், ஐந்தாவது வகுப்பு வரை உள்ள பள்ளி. ஏதோ புதிதாகக் கள் கிடைக்கிறது என்ற காரணத்தாலே, தகப்பனும் தாயும் சாப்பிட்டுவிட்டு குழந்தைகள் இரண்டு பேருக்கும் கொடுத்து பள்ளிக்கூடத்திற்கு அனுப்பியிருக்கிறார்கள்.

[An hon. Member rose. . . .]

DEPUTY CHAIRMAN : The Hon. Member does not yield.

திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு : மூன்று வாரங்களுக்கு முன்பு ஒரு பையனைக் கூப்பிட்டுக் கேட்டேன். 'என் உளருகிறாய் என்று கேட்டால், எங்களுடைய அம்மா ஒரு மடக்கு சாப்பிடு என்று சொன்னார்கள். கள் சாப்பிட்டேன் என்றான்' என்றார் ஆசிரியர். இப்படிப்பட்ட நிலை வளருகிறது. அது ஒரு பாஷனை மாறப் போகிறது என்று சொல்கிறார்கள். நான் நகர்ப்புறத்துக் காரன் அல்ல. கிராமப்புறங்களில் இப்படி நடந்துகொண்டிருக்கிறது. பல கிராமங்களிலே இன்றைக்குக் குடிப்பழக்கம் ஏற்பட்டு வருகிறது. இப்போது குடிப்பவர்கள் கொஞ்சம் போராகத் தோன்றலாம். மதுவிலக்கு அமுலில் இருந்தும் பல இடங்களில் மதுவருந்த ஆரம்பித்து விட்டார்கள். எதிர்காலத்திலே எத்தகைய சமுதாயம் வரும் என்பதை யார் கண்டார்கள் ? அப்படிப்பட்ட சூழ்நிலை உருவாகிக்கொண்டிருக்கிறது. மதுவிலக்குச் சட்டத்தை அமுல் செய்வது சாத்தியமில்லை, அதனால் அதை ஒத்தி வைக்கிறோம் என்று சொல்வது பரிகாரமாகாது. நியாயமாக இருக்காது. அரசு நினைத்தால், ஒரு சில மாதங்களுக்குள் துணிகரமாக மதுவிலக்குச் சட்டத்தை அமுல் செய்ய முடியும். ஆனால் இதைச் செய்யாமல் அரசு மதுவிலக்கைச் சரிவர அமுல் செய்ய முடியவில்லை என்று ஏதோ காரணத்தைச் சொல்கிறது. அரசு நினைத்தால், மதுவிலக்கை மீறினால் கடும் தண்டனை என்று சொல்

5.10 p.m.

[திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு] [21st July 1971

லட்டும், சட்டத்தை மீறுகிறவர்களை அரசு தீவிரமாகக் கண்காணித்துக் கடுமையான தண்டனை அளிக்கக் காத்திருக்கிறது என்ற அச்சம் அவர்கள் மனதில் ஏற்படும்படியாக அரசு நடந்துகொண்டால் இந்தச் சட்டத்தை எப்படி தைரியமாக மீறுவார்கள்? பல வகைகளிலும் இது மனித இயல்புக்கு, மனித வாழ்க்கைக்கு மாறுனது. தமிழ்நாட்டை மற்ற மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்க்க வேண்டாம். ஒவ்வொரு மாநிலமும் ஒரு மனித இயல்பு, பண்பாடு, பழக்க வழக்கங்களைக் கொண்டிருக்கிறது. ஒவ்வொரு நாட்டுக்கும் வெவ்வேறு விதமான பண்பாடு இருக்கிறது. எனவே தமிழ்நாட்டோடு அவைகளை ஒப்பிட்டுப் பார்க்கக் கூடாது. 1930-36-லே எங்களுடைய ஊரிலே ஒரு நிகழ்ச்சி நடந்தது. அதை நான் கூற விரும்புகிறேன். என் சகோதரர் ஒருவர் இருந்தார். அவருக்கு இரண்டு மனைவியர். அவர் பெயர் குமாரண்ட ராமன். அவருக்கு பலக் கஷ்டம். குடும்பக் கவலை. அதை மறக்கக் கருதி அவர் மகன் புல்லயன் என்பவனைக் கூப்பிட்டு இவன் கள்ளுக்கடைக்குச் சென்று நன் வாங்கி வா என்று சொல்லியிருக்கிறார். இது மனைவிகளுக்குத் தெரிந்து விட்டது. தன்னுடைய தாயார் என்னை அழைப்பதாக வந்து சொன்னன். இந்தப் பெண்கள் இருவரும் தலை மயிரை விரித்துப் போட்டுக்கொண்டு குய்யோ முறையோ என்று கூப்பாடு போட்டுக்கொண்டிருந்தார்கள். என்னிடத்திலே வந்து அந்தப் பையன் விஷயத்தைச் சொன்னன். நான் அவன் கள்ளுக்கடையிலிருந்து வரட்டும் என்று வழியிலே நின்று கொண்டிருந்தேன். இவனுக்கு நான் இருப்பது தெரியாது. கள்ளுக்கடைக்குச் சென்று கள் வாங்கி வந்தவன் தூரத்திலிருந்தே என்னைப் பார்த்ததும் மிரண்டு வேறு வழியில் விட்டான். நான் பேசாமல் திரும்பி விட்டேன். அவனை எதிர்பார்த்திருந்த என் சகோதரர் என் பின்னாலேயே அழுது கொண்டே வந்தார். இப்படிப்பட்ட நிலைமைகள் ஏற்படும். எனவே மது விலக்கை ரத்து செய்வதானாலும், ஒத்தி வைப்பதானாலும் அதை மறுபரிசீலனை செய்து பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நமது பண்பாட்டைக் கெடுக்கும், ஒழுக்கத்தைக் கெடுக்கும் கள் நமக்கு வேண்டாம். மதுவிலக்கை நன்முக அமுல் நடத்த முடியும். அதை அமுல் நடத்துவதற்கு வேண்டிய ஒத்துழைப்பை நாங்கள் தரத் தயாராக இருக்கிறோம். எங்களை பலியிடுங்கள். எங்களை பலியிடுவதன்மூலம் இதை நல்ல முறையிலே செயல்படுத்துங்கள். அதற்கு பலியாவதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம். இப்படி ஒரு நல்ல காரியம் செய்வதிலே முனைந்து நின்று இதை ரத்துச் செய்யும் எண்ணத்தை கைவிடும்படி கேட்டுக்கொள்கிறேன். இந்தச் சட்டத்தைத் திரும்பப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்று உங்களுடைய உள்ளங்களுக்கு, உங்களுடைய இருதயங்களுக்கு என் மனப்பூர்வமான பணிவான விண்ணப்பத்தை நான் தெரிவித்துக்கொண்டு, இந்தச் சட்டத்தைக் கொண்டுவர வேண்டாமென்று கேட்டுக் கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

* திரு. டி. கே. ஷண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஆப்காரி மசோதாவின் மீது பேசுவதற்கு வாய்ப்பு அளித்



21st July 1971] [திரு. டி. கே. ஷண்முகம்]

தமைக்கு நான் நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். நான் இதன் மீது ஒன்றும் அதிகமாகப் பேசப் போவதில்லை. மிக, மிகச் சுருக்கமாகவே என் உரையை முடித்துக்கொள்வேன். இந்த மசோதாவின் பிரதி எனக்குத் தரப்பட்டிருக்கிறது என்றாலும், ஆங்கிலத்திலே தரப்பட்டிருக்கிறது. நான் ஆங்கிலம் அறியாதவன். முன்பு ஒரு முறை இங்கே வேளாண்மை பல்கலைக் கழக மசோதாவின் மீது விவாதம் நடந்தபொழுது, அந்த மசோதாவின் நகல் தமிழிலே தரப்படவில்லை என்று நான் குறைப்பட்டுக் கொண்டேன். மாண்புமிகு தலைவரவர்கள் இனி மசோதாக்களின் நகல் தமிழிலேயும் தரப்படுமென்றார்கள். ஆனால் அவர்கள் குறிப்பிட்டபடி இன்றுவரையிலே தமிழிலே தரப்படவில்லை. இந்த மசோதாவைப்பற்றிப் பத்திரிகைகளிலே வந்த குறிப்புரைகளை வைத்துக் கொண்டு தான் நான் பேச வேண்டியவனாக இருக்கிறேனே தவிர, நேரிடையாக இந்த மசோதாவின் விவரங்கள் என்ன என்பதைத் தெரிந்துகொண்டு பேசுவதற்கு வாய்ப்பு இல்லை என்பதை முதலிலேயே தெரிவித்துக் கொள்கிறேன்.

21 வயதிற்குக் குறைந்தவர்களுக்கு மது விற்பனை செய்யக் கூடாது என்று இந்தச் சட்டத்திலே இருப்பதாகப் பத்திரிகைகளிலேயிருந்து அறிந்து கொண்டேன். இதை எப்படி அமுல் நடத்தப் போகிறார்கள் என்பது எனக்குத் தெரியவில்லை. சாதாரணமாகத் திரைப்படங்களிலே "பெரியவர்களுக்கு மட்டும்" என்று சொல்லக்கூடிய சில படங்களை நான் போய்ப் பார்த்திருக்கிறேன். ஏராளமான மாணவர்கள், இளைஞர்கள், 16, 17 வயதிற்குட்பட்டவர்கள் இந்தப் படங்களைப் பார்ப்பதற்காக ஆர்வத்தோடு 'கியூ' வரிசையில் நிற்பதைப் பார்த்திருக்கிறேன். இவர்களில் யாருக்கும் டிக்கட் கொடுக்க முடியாது என்று தடை செய்யப்படுவது கிடையாது. அதற்கு எவ்வளவு மரியாதை உண்டோ அதே மரியாதைதான் இந்த 21 வயதிற்குக் குறைந்தவர்களுக்கு மது வகைகள் கொடுக்கக் கூடாது என்ற சட்டத்திற்கும் கிடைக்குமென்று நம்புகிறேன். மாணவர்களிடத்தில் பல பழக்கங்கள் சிகரத்தில் பிரபலமாகிவிடுகின்றன. ஒரு கல்லூரியில் ஒரு வகுப்பில் இரண்டொரு மாணவர்களுக்குத் தீய பழக்கம் இருந்தாலும், அது வெகு சீக்கிரத்தில் பல மாணவர்களுக்கும் பரவி விடுகிறது. இனி ஓட்டல்களிலெல்லாம் மது விற்பனையும் தடையின்றி வந்துவிடும். சாதாரணமாக ஓட்டலிலே காப்பி சாப்பிடுவதைப் போல, மது அருந்தும் பழக்கமும் பரவி விடும். ஒரு கல்லூரியில் இரண்டொரு மாணவர்களுக்கு சிகரெட் பிடிக்கும் பழக்கம் இருந்தாலும், அது வெகு விரைவில் மற்றவர்களுக்கும் பரவி விடுவதைப் பார்க்கிறோம். என்னுடைய புதல்வர்கள் கோவையிலே படித்துக்கொண்டிருக்கிறார்கள். நான் அங்கே போய் அடிக்கடி அவர்களைப் பார்த்துக் கொண்டு வருவது வழக்கம். இரண்டு நாட்களுக்கு முன்பு கூட நான் போயிருந்தேன் என்னுடைய மகனுடைய அறைக்குச் சென்று பார்த்தேன் அங்கே பல மாணவர்கள் புகைத்த அடையாளங்கள் இருந்தன. "என்னப்பா நீயும் கற்றுக்கொண்டாயா?" என்று கேட்டேன் "இல்லை அப்பா, நான் கற்றுக் கொள்ளவில்லை", என்று சொன்னன். "இந்த அறையிலே உள்ள 3

[திரு. டி. கே. ஷண்முகம்] [21st July 1971

மாணவர்களுக்கும் சிகரெட் பிடிக்கும் வழக்கமில்லையே, வெளியிலே இருந்து வந்தவர்கள் பிடித்துப் போட்டதுதான் இது" என்று சிரித்துக்கொண்டே சொன்னார். எதற்காகக் குறிப்பிடுகிறேன் என்று சொன்னால், இப்படி 21 வயதிற்குக் குறைந்தவர்களுக்கு மது கொடுக்கக் கூடாது என்று விதி இருந்தாலும், அது கட்டுப் பாட்டுக்குள் இருக்குமா என்பதைச் சிந்தித்துப் பார்க்கும்படி நான் மிகப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

ஏற்கெனவே சட்டதைச் சரியாக அமுல் செய்ய இயலவில்லை யென்ற காரணத்திற்காகத் தான் இந்த மதுவிலக்குச் சட்டத்தை எடுக்கும் முடிவிற்கு வந்திருக்கிறார்கள். அந்தச் சட்டத்தையே அமுல்படுத்த முடியவில்லை என்றால் இந்தச் சட்டத்தை எப்படி அமுல்படுத்த முடியும் என்பது எனக்கு வியப்பாக இருக்கிறது. இறுதியாக ஒன்றே ஒன்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். நம்முடைய திராவிட முன்னேற்றக் கழக அரசு இன்னும் எத்தனையோ ஆண்டுகளுக்கு இருந்து தமிழ் மொழிக்கும் தமிழ் மக்களுக்கும் சேவை செய்ய வேண்டுமென்று மனப்பூர்வமாக நான் கருதுகிறவன். அதன் காரணமாகத்தான் சொல்கிறேன். இந்தச் சின்னத் தவறினால் இந்த அரசின் எதிர்காலம் பாழாகிவிடக் கூடாதே என்ற கவலையோடு என்னுடைய கருத்தைத் தெரிவித்துக் கொண்டு முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

**திரு. கே. எஸ். அப்துல் வகாப்:** மதிப்பிற்குரிய துணைத் தலைவர் அவர்களே, இந்த மன்றத்தில் பல நல்ல திட்டங்களை, சட்டங்களை, மக்களுக்கு நன்மை செய்யக் கூடியவைகளை நிறை வேற்றிய பெருமை நமக்கு உண்டு. ஆனால் இன்றைக்கு நாம் பேசுவதற்கு எடுத்துக்கொண்டுள்ள அப்காரி திருத்த மசோதா மக்களுக்கு நன்மை செய்வதற்குப் பதிலாக தீமை பயக்கக் கூடியது என்ற அடிப்படையிலே அமைவதன் காரணமாக, இது துரதிருஷ்ட வசமானது என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இந்த மசோதாவிற்கு முஸ்லீம் லீக் கட்சியின் சார்பில் நான் பலத்த எதிர்ப்பைத் தெரிவித்துக் கொள்கிறேன். நமது மதிப்பிற்குரிய கலைஞர் முதல்வராக ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் வெளியிட்ட முதல் அறிக்கையிலேயே அவரிடம் மதுவிலக்கைப் பற்றிக் கேட்ட போது சந்தேகத்திற்கு இடம் கொடுக்கக் கூடிய வகையில் அவர்
5.20 p.m. பதில் சொன்னார்கள். அவர் மதுவிலக்கை இப்போதைக்கு எடுக்க மாட்டோம் என்று சொன்னார்கள். அதைத் தொடர்ந்து மேலவையில் நான் பேசியபோது, முதல்வர் அவர்கள் இப்போதைக்கு எடுக்கமாட்டேன் என்கிறார்கள், அப்படியென்றால் விரைவில் எடுத்துவிடுவார்கள் என்ற பொருள் தொக்கி நிற்கிறது, எப்போதைக்கும் எடுக்க மாட்டேன் என்று அவர் உறுதி சொல்ல வேண்டுமென்று நான் கேட்டேன். அதற்கு வேடிக்கையாகப் பதில் சொல்லி அதைத் தட்டிக் கழித்தார்கள். இப்போதைக்கு என்பதை இப் "போதை"க்கு என்று மாற்றிக் கொள்ளுங்கள் என்று சொன்னார்கள். ஆக, தொடர்ந்து, அவருடைய ஒவ்வொரு அறிக்கையிலேயும் மதுவிலக்கை ரத்து செய்து விடுவோம் என்பது தொனித்துக்கொண்டு தான் இருந்தது. இது மக்களுக்குப்



21st July 1971] [திரு. கே. எஸ். அப்துல் வகாப்]

பெரும் பாதகம் செய்யக் கூடிய ஒரு திட்டமாக இருப்பதன் காரணமாக, இதை மறு பரிசீலனை செய்ய வேண்டுமென்று நான் பணிவாகக் கேட்டுக்கொண்டு என் உரையை நிறைவு செய் கிறேன். வணக்கம்.

***திரு. கே. ராஜாராம்:** தலைவரவர்களே, மிக வருத்தத்துடன் இந்த விவாதத்தில் கலந்துகொள்ள வேண்டியிருக்கிறது. 1938 லிருந்து செயலற்றுப் போயிருந்த ஆப்காரிச சட்டம் இன்று புதுப் பிக்கப்படுகிறது. 1947-ல் நாடு சுதந்திரம் அடைந்து, நம் நாட்டு அரசாங்கம் மக்களுடைய நன்மைக்காக நடைபெறும் அரசாங்க மாக மாறியது. அதற்கு முன் அந்நிய அரசு, ஒரு போலீஸ் அரசாக இருந்து ஆட்சியை நடத்திக்கொண்டு வந்தது. இப்போது "வெல்பேர் கவர்ன்மெண்டு" என்று சொல்கிறோம். படிப்படியாக வளர்ச்சியடைந்து இன்றைய தினம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் பிரேரேபிக்கப்பட்ட வரவு செலவுத் திட்டத்தில் கிட்டத்தட்ட 400 கோடி ரூபாய் நமது மாநிலத்திற்கு வரவு இனம் என்று கணக்கிடப்பட்டிருப்பதைக் கண்டு உண்மையில் மகிழ்ச்சி யடைகிறோம். இவ்வளவு நல்ல நிலைமைக்கு வந்த இந்த மாநிலம் 400 கோடி ரூபாயை மக்களின் நன்மைக்காகப் பல்வேறு துறை களில் செலவிட்டுக் கொண்டிருக்கக்கூடிய அரசாங்கம், 20 கோடி ரூபாய் வருமானம் வரும் என்பதற்காக நம்முடைய ஒழுக்கம், நம்முடைய மரியாதை இத்தனையையும் விட்டுவிடக் கூடிய நிலைமையில் மது விலக்குச் சட்டத்தை ரத்து செய்வது, அல்லது ஒத்தி வைப்பது என்று சொல்லி விட்டு, அடியோடு புதைக்கப்பட்டிருந்த அப்காரி சட்டத்திற்கு உயிர் கொடுத்து முன்னுக்கு கொண்டுவந்திருக்கிறோம். பொதுவாக என் போன்றவர்களுக்கு தர்க்க ரீதியாக பேசுவதைக் காட்டிலும், முதன் முதலில் செண்டிமெண்டலாகவே ஒரு உணர்ச்சி, வேகம் முன்னால் வந்து நிற்கிறது. நான் அரசிய லில் புகுந்ததற்குக் காரணமே இது தான். நான் சிறியவனாக இருந்தபோது, ஒரு நாள் பெரியவர்களோடு சேர்ந்து கள்ளுக் கடை ஏல மறியலில் போய்ச் சேர்ந்து, அதற்காக மைனராக இருந் ததற்காக, ஒரு நாள் பூராவும் பிடித்து வைத்திருந்தார்கள். இது தான் என் அரசியல் ஆரம்பம். இதையெல்லாம் நினைக்கும் போது, எங்களையறியாமலே உணர்ச்சி வசப்பட்டுப் பேசிவிடு கிறோம். எனக்கு முன் பேசிய திரு. கிருஷ்ணசாமி நாயுடு அவர்கள் ரத்தத்தில் இது ஊறிப்போயிருக்கிறது. ஆகையினால் அவர் உணர்ச்சி வசப்பட்டுப் பேசியிருந்தாலும், அமைச்சரவர்கள் தவறுக எண்ணினிட வேண்டிய அவசியமில்லை. அது யாரையும் தாக்கிப் பேசிய பேச்சு அல்ல. ஆகையினால் "வெல்பேர் கவர்ன் மெண்டு" என்று சொல்லிக்கொண்டு 400 கோடி ரூபாய் செலவழிக் கிறவர்கள் ஒரு 10 கோடி, 20 கோடி ரூபாயை முன்னிட்டு இவ்வளவு நல்ல ஒழுக்கத்தை, வழக்கமாகவே நமக்கு முந்தியவர்கள் நமக்கு விட்டுச் சென்ற ஒரு பொக்கிஷத்தை உதாசீனம் பண்ணி அதைப் போக்கி விடுவது நல்லதா என்று சிந்திக்க வேண்டும். இந்த 20 கோடி ரூபாய் நமக்குப் பெரிதா ? 400 கோடி ரூபாயை மக்களுக்குத்

[திரு. கே. ராஜாராம்] [21st July 1971

தானே செலவழிக்கிறோம். அதில் லாபம் என்ன இருக்கிறது ? மக்களிடம் வசூல் செய்து மக்களுக்காகவே செலவழிக்கிறோம். நல்ல காரியங்களுக்காகச் செலவழிக்கும்போது, ஒரு கெட்ட காரியத்தைக் கொண்டுவந்து புகுத்துவது நல்லதா ? மதுவிலக்குச் சட்டத்தை ரத்து செய்து கள்ளு, சாராயக் கடைகளை வைப்பது நல்லதா என்று சொல்லுங்கள். யாராவது முன்னின்று எழுந்து, எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் கள் குடிப்பது நல்லது, சாராயம் குடிப்பது நல்லது, ஓயின் குடிப்பது நல்லது என்று சொல்ல முடியுமா ? கெட்ட காரியம், ஆகாத ஒரு காரியம் இது. எந்தக் கும்பத்தையும் நாசமாக்கி விடும். 20 கோடி ரூபாய் வருமானம் வந்துவிடும் என்பதற்காக இதைச் செய்யலாமா என்பதைச் சிந்திக்க வேண்டுமென்றுதான் மிகவும் பணிவோடு நாங்கள் அரசாங்கத்தை வேண்டுகிறோம். இதற்காக சிறைக்கெல்லாம் சென்றோம், கஷ்டப்பட்டோம். ஏதோ, முதல் காரியமாக மதுவிலக்கை அமுலுக்குக் கொண்டு வந்தோம். இப்போது திடீரென்று மதுவிலக்குச் சட்டத்தை ரத்துச் செய்வதென்றால், அல்லது ஒத்தி வைப்பது என்ற பெயரால் ரத்து செய்வதென்றால், அது மனதிற்குக் கவலையைக் கொடுக்கிறது. மக்களுக்கு நாம் நன்மை செய்கிறோமா என்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். தவிர, பொருளாதாரத் துறையில் 20 கோடி ரூபாய் வருமானம் வருமா என்பதற்கு வேறு ஒரு கணக்கும் பார்க்க வேண்டியதில்லை. ஒருவன் ஒரு ரூபாய்க்குக் குடித்தால் 1 அணா தான் அரசாங்கத்திற்கு வரும். அல்லது பத்தில் ஒரு பங்கு அரசாங்கத்திற்கு வரும். அரசாங்கத்தின் உத்தேச மதிப்பீட்டின்படி 20 கோடி ரூபாய் வருஷத்திற்கு வரும் என்று எதிர்பார்க்கிறார்கள். நடப்பு வருஷத்தில் 10 கோடி வரும். வருஷத்திற்கு 20 கோடி வரலாம் என்று எதிர்பார்க்கிறார்கள். ஆகவே 200 கோடி ரூபாய்க்குக் குடிப்பவர்கள் குடித்தால் தான் 20 கோடி ரூபாய் அரசாங்கத்திற்கு வரும். அந்த 200 கோடி ரூபாய் பொருளாதாரத் துறையில் ஏழை எளிய மக்களுடைய குடும்பத்தில் கல்விக்காக, நல்ல காரியத்திற்காகச் செலவழிக்க வேண்டிய பணம் கள்ளு, சாராயக் கடைகளுக்குப் போனால், தமிழ் நாட்டு மக்களின் நன்மைக்கு உகந்ததா ? மக்கள் சமுதாயத்திற்குச் செய்யும் நன்மை இதுதானா என்று பார்க்க வேண்டும். அதிகமான பேர் குடிக்கிறார்கள். கள்ளச் சாராயம் குடிக்கிறார்கள், எங்கு பார்த்தாலும் குடிக்கிறார்கள், இந்த நிலைமையில் நாம் இந்த மதுவிலக்குச் சட்டத்தை வைத்துக் கொண்டிருப்பது சரியா என்று ஒரு வாதம் செய்யப்படுகிறது. இந்த வாதத்தை வேறு யார் சொன்னாலும் பரவாயில்லை, நமது முதலமைச்சர் இந்த வாதத்தைச் சொல்வது ஒன்றும் சரியல்ல. தைரியமாக மது விலக்குச் சட்டத்தை அமுல் படுத்துவேன் என்று மட்டும் அவர் துணிந்திருப்பாராஞல், கள்ளச் சாராயம் காய்ச்சுவதும் அல்லது திருட்டுத்தனமாகக் குடிப்பதும் இந்த மாநிலத்தைப் பொறுத்த வரையில் கண்டிப்பாக ஒழிக்கப்பட்டிருக்கும் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு. அதனால் அல்வாலேயே இரண்டு மூன்று தடவை அவருடைய மனது எப்படியோ தில்லை. முதலமைச்சர் பதவியேற்றுக் கொண்ட கொஞ்ச காலத்தி



21st July 1971] [திரு. கே. ராஜாராம்]

வேறு பக்கம் திருப்பி விடப்பட்டது. மதுவிலக்குச் சட்டம் அமுலில் நீடித்துக்கொண்டிருப்பது கேள்விக் குறி என்று பேச ஆரம்பித்து விட்டார்.

**துணைமுமிரு திரு. என். வி. நடராசன்:** தலைவரவர்களே, நமது முதலமைச்சர் அவர்களுடைய எண்ணத்தை, கருத்தை யாரும் வேறுதிசைக்குத் திருப்பவில்லை. அவர் திரும்பவேண்டிய நிர்பந்தத்தை உண்டாக்கியவர்கள் எதிர்க் கட்சித் தலைவர் போன்ற காங்கிரசில் உள்ளவர்கள் தான் என்பதை மிக வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன். 3 ஆண்டுகளுக்கு முன்னதாக அறிஞர் அண்ணு அவர்கள் ராஜாஜி மண்டபத்தில் திருமதி கமலா நேயார் உள்ளிட்ட திரு. காமராஜர் உள்ளிட்ட தலைவர்களை வைத்துக்கொண்டு மதுவிலக்கு மாநாட்டில் பேரறிஞர் அண்ணு அவர்கள் பேசியபோது சொன்னார்கள். இந்தப் பிரச்னையை எல்லோரும் பொதுப் பிரச்னையாகக் கருதி தமிழ் நாட்டிற்கு ஏற்படும் நஷ்டத்தை ஈடு செய்ய முன்வர வேண்டும். அதற்கு இயலவில்லையென்றால். இந்தக் கொள்கையை நாங்கள் கடைபிடித்து வருவது சிரமமாயிருக்கும் என்று சொன்னார்கள். எனவே எங்களுக்கு மட்டும் இது ரத்தத்தோடு கலந்த கொள்கையில்லை என்று யாரும் எண்ண வேண்டாம். அறிஞர் அண்ணு அவர்கள் எதிர்க் கட்சித் தலைவராக இருந்தபோது கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் அவர்களைக் கொண்டு "நல்ல தம்பி" என்ற திரைப்படத்தை தயாரித்து மது விலக்குப் பிரச்சாரத்தை நிறைவேற்படுத்த அண்ணு அவர்கள் சிறந்த தொண்டாற்றியிருக்கிறார்கள். நாங்கள் அந்தப் பரம்பரையில் வந்தவர்கள். எங்களுக்கும் அது ரத்தத்தில் ஊறிப்போன கொள்கைதான். கடந்த 3 ஆண்டுகளாக எதிர்க் கட்சித் தலைவர் போன்ற காங்கிரஸ் தலைவர்களும் மற்றவர்களும் அண்ணு அவர்கள் விடுத்த வேண்டுகோளை ஏற்று, மாநிலத்திற்கு ஏற்படும் நஷ்டத்தை எப்படிப் போக்குவது, இதிலே உள்ள தவறுகளை எப்படிக் களைந்தெறிவது என்ற நிலையில் என்ன யோசனைகளைச் சொன்னார்கள், என்ன நடவடிக்கைகளை மேற்கொண்டார்கள் என்று கேட்கிறேன்? இத்தனை ஆண்டுகளாக காங்கிரஸ் தலைவர்கள் சும்மாயிருந்து விட்டு, இப்போது திசை திருப்புகிறார்கள் என்று சொல்வது வருந்தத் தக்கது என்பதை எதிர்க் கட்சித் தலைவர் அவர்களுக்கு நினைவூட்டுகிறேன்.

**திரு. கே. ராஜாராம்:** இந்த வாதம் சரியல்ல. மதுவிலக்குச் சட்டத்தை அமுலுக்குக் கொண்டுவரும்போது மத்திய அரசிலிருந்து நஷ்ட ஈடு வாங்க வேண்டுமென்று யாரும் கருதவில்லை. மத்திய அரசு நஷ்ட ஈடு கொடுக்க வேண்டுமென்று இன்று சொல்வது சரியல்ல. இன்று வாதத்திற்காக அவர்கள் சொல்கிறார்கள். மதுவிலக்குச் சட்டத்தை அமுலுக்குக் கொண்டு வந்தால், நஷ்ட ஈடு கொடுக்கிறோம் என்று மத்திய நிதியமைச்சர் சொன்னார் என்பதற்காக நாம் கேட்கிறோம். அப்படிக் கேட்கும்போது அவர் பதில் சொன்னார்கள். ஏற்கெனவே, மதுவிலக்குச் சட்டத்தை அமுலுக்குக் கொண்டு வந்ததன் மூலம் புதிய வரிகளைப் போட்டு

5-30 p.m.

[திரு. கே. ராஜாராம்] [21st July 1971

அதற்கு நீங்கள் ஈடு செய்து விட்டீர்கள். புதிதாக மதுவிலக்குச் சட்டத்தைக் கொண்டு வருபவர்களுக்குக் கொடுப்போம் என்று சொன்னபோது, மாண்புமிகு திரு. என். வி. நடராசன் அவர்கள் இன்றுள்ள முதலமைச்சர் என்றார்கள், அல்ல, அண்ணு அவர்கள் ....

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : தலைவரவர்களே, நான் அண்ணு என்றுதான் குறிப்பிட்டேன்.

திரு. கே. ராஜாராம் : திருத்திக்கொள்கிறேன். அண்ணு அவர்கள் இதைத் தெளிவாகச் சொன்னார்கள், "மத்திய அமைச்சர் சொன்ன சொல்லிலிருந்து நான் நீங்கிக்கிறேன். இந்த செப்டம்பர் மாதத்தில் மதுவிலக்கை ரத்து செய்து விட்டு அக்டோபர் மாதத்தில் மீண்டும் மதுவிலக்கை அமுலுக்குக் கொண்டுவந்தால், அப்போது புதிதாக மதுவிலக்குச் சட்டத்தைக கொண்டு வந்தவர்களாக ஆவோம். எனக்கு நஷ்ட ஈடு கொடுக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும். ஆனால் அந்த இரண்டு மாதங்களுக்குக்கூட நான் இந்தப் பாபத்தைச் செய்யத் தயாராயில்லை", என்று அண்ணு அவர்கள் சொன்னார்கள். அவ்வளவு உணர்ச்சி வசப்பட்டு அவர் அன்று பேசினார். அவருடைய வாரிசாக வந்திருக்கும் இந்த அரசாங்கம் அதைக் கொஞ்சமும் பொருட்படுத்தாமல் 20 கோடி ரூபாய்க்காக, மத்திய அரசு கொடுக்க வில்லையென்ற காரணத்திற்காகச் செய்யும் இந்தக் காரியம் நல்ல காரியமா என்று சிந்திக்க வேண்டுகிறேன். இதற்கு முன் எதிர்பார்த்தோமா? மத்திய அரசை எதிர்பார்த்தா விற்பனை வரியைப் போடோம்? விற்பனை வரி மூலம் 93 கோடி ரூபாய் வரும் என்று முதலமைச்சர் அவர்கள் வரவு செலவுத் திட்டத்தில் கூறியிருக்கிறார்கள். இந்த நிலைமைக்கு விற்பனை வரியைப் பெருக்கியிருக்கிறோம். நாம் 20 கோடி ரூபாய்க்காக வேண்டி மதுவிலக்கை ரத்து செய்வது நல்லதா? மாண்புமிகு திரு. என். வி. நடராசன் அவர்கள் கூறியது போல யாரும், முழுக்கக் குடிக்கும் குடிகாரன் கூட குடிப்பது நல்லது என்று ஒப்புக்கொள்ளமாட்டான். அவன்கூட தன் மகன் குடியாமல் இருக்க வேண்டும், நான்தான் குடித்துக் கெட்டுப் போனேன் என்று சொல்வான். அந்த நிலைமையில் தமிழ் நாட்டின் பண்பும் பழக்க வழக்கங்களும் இருக்கின்றன. அப்படி இருக்கும் போது, குடிப்பது கெடுதல், மது விலக்கு நல்லது என்று சொல்லக் கூடிய ஒரு கட்சி, வேறு காரணங்களுக்காக மதுவிலக்கை விட்டு விடுகிறோம் என்று சொல்வது சரியா என்பதை மீண்டும் சிந்தியுங்கள் என்றுதான் வேண்டிக் கொள்கிறோமே தவிர, நாங்கள் சட்டப்பூர்வமாக வற்புறுத்தவில்லை. இதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். 1939-ல் ராஜாஜி விற்பனை வரியை அமுலுக்கு கொண்டு வந்தார்கள் அப்படி விற்பனை வரியைக் கொண்டு வரும்போது. அதைக் கொண்டுவரக் கூடாது என்று இரண்டொருவர் நிர்பந்தித்தாகள் அவர்கள் அப்படி விற்பனை வரியை ஆட்சேபிக்கும்போது, அவர் 'morally you are bound to vote for this taxation measure,' என்று சொன்னார்கள். ஏனென்றால், எப்போது மதுவிலக்குச் சட்டத்தை ஒத்துக்கொண்டு விட்டீர்களோ, அப்போது விற்பனை



21st July 1971] [திரு. கே. ராஜாராம்]

வரிச் சட்டத்திற்கும் ஓட்டுச் செய்ய வேண்டுமென்று சட்டசபையில் பேசும்போது, 1939-இல் ராஜாஜி அவர்கள் சொன்னார்கள். நீங்கள் மதுவிலக்குச் சட்டத்திற்கு ஓட்டுச் செய்யும்போது விற்பனை வரிச் சட்டத்திற்கும் அவசியம் ஓட்டுச் செய்ய வேண்டுமென்று வற்புறுத்தி ஓட்டை வாங்கினார்கள். அந்தத் தோரணையில் இப்போது நமக்கு 93 கோடி ரூபாய் வந்துகொண்டிருக்கும்போது, நாம் பணத்திற்காக வேண்டி கைவிடுகிறோம் என்று சொல்வது சரியல்ல. தமிழ் நாட்டில் மதுவிலக்குச் சட்டம் அநேகமாக சரியான படி அமுல் நடத்தப்பட முடியவில்லை, தளர்ந்து விட்டது, எங்கு பார்த்தாலும் கள்ளச் சாராயம் காய்ச்சுதல் வந்து விட்டது. அதற்காகக் கைவிடுகிறோம் என்று சொல்வது அரசு நடத்துவதற்கு அழகா என்று கேட்கிறேன். இரும்புக் கை கொண்டு இதை அடக்குங்கள். இரும்புக்கை கொண்டு மதுவிலக்கு மீறப்படுவதை அடக்குங்கள், அதற்கு முழு ஒத்துழைப்பைக் கொடுக்கிறோம் என்று தமிழ் நாட்டிலுள்ள எல்லா அரசியல் மாற்றுக் கட்சிக்காரர்கள் சார்பாக சொல்லிக்கொள்கிறேன். இதை விட்டு விட்டு, 20 கோடி ரூபாய்க்காக, அல்லது மத்திய அரசு கொடுக்க வில்லையென்பதற்காக, இந்தக் காரணங்களைச் சொல்லி நாம் மதுவிலக்கைக் கைவிடுகிறோம் என்பது சரியல்ல, அழகல்ல என்று சொல்லி, இந்த ஆப்காரி சட்டம் அநேகமாக மாண்டு போன சட்டம், அதற்கு மீண்டும் உயிர் கொடுப்பதை ஒத்துக்கொள்ளவோ அதற்கு ஒரு கட்சியாக இங்கிருந்து ஆப்காரி சட்டத்திற்கு ஒப்புதல் அளிக்கவோ தயாராயில்லை. இதை நிறைவேற்ற வேண்டாம் என்று மீண்டும் முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொண்டு அமைகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, ஆப்காரிச் சட்டத்திற்கு மீண்டும் உயிர் கொடுக்கும்போது, அதிலே சில திருத்தங்களோடு வந்தால் முறையாகச் செயல்படுத்த முடியும் என்ற எண்ணங்களின் அடிப்படையிலே இந்த மசோதா இன்றைக்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறது. இதிலே மதுவிலக்கைப் பற்றி மீண்டும் கருத்துக்கள் பரிமாறப்பட்டன. மதுவிலக்குக் கொள்கைக்கும் இந்தச் சட்டத்திற்கும் சம்பந்தமில்லையென்றும், மதுவிலக்குக் கொள்கையின் அடிப்படையில் இந்த மசோதா வருகிறது என்ற காரணத்தினால் இதுபற்றிப் பேசப்பட்டது என்று நான் நினைக்கிறேன். நான் முன்னாலே இந்த மன்றத்தில் மதுவிலக்குக் கொள்கையைப்பற்றி விரிவாக விவாதம் நடத்தியபோது அதற்கேற்ற பதில் சொல்லப்பட்டிருக்கிறது என்பதை நான் நினைவுபடுத்த ஆசைப்படுகிறேன். இங்கே பேசியவர்கள் ஒத்துக் கொண்டதுபோல, மது குடிக்க வேண்டுமென்று யாரும் விரும்பவில்லை. எந்தக் கட்சியும் அதைச் சொல்லவில்லை. இந்த அரசாங்கம் இந்தக் கொள்கையை ஏற்றுக்கொள்ள வில்லையென்பதை எதிர்க் கட்சித் தலைவர் ஒப்புக்கொண்டதற்காக மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொள்கிறேன். தமிழ் நாட்டைப் பொறுத்த வரையிற்கு இது ஒரு உணர்ச்சி வயப்பட்ட கொள்கை என்ற அடிப்படையிலே, மது குடிக்கக் கூடாது என்ற நல்லொழுக்கத்தைப் பின்பற்றி

[திரு. செ. மாதவன்] [21st July 1971

வருவது என்ற அடிப்படையிலே, நாமெல்லாம் கொஞ்சங்கூட கருத்து வேறுபாடு கொள்ளவில்லை. யாரோ மது குடிக்கிறார்கள் சட்டத்தின் மூலமாக என்று நாம் நினைத்துக்கொண்டு உணர்ச்சி வயப்படக் கூடாது என்பது தெரிந்த ஒன்றுதான். ஆக, மதுவிலக்குக் கொள்கையைப்பற்றி இந்த அரசாங்கம் தெளிவான முறையிலே அறிவித்திருப்பதை நான் இந்த மன்றத்தின் கவனத்திற்குக் கொண்டுவர ஆசைப்படுகிறேன். மதுவிலக்கு வேண்டும் என்பதிலேயோ, மது குடிக்கக் கூடாது என்ற ஒழுக்க நெறியைக் கற்பிப்பதிலேயோ இந்த அரசுக்குக் கருத்து வேறுபாடில்லை என்பதை நான் இந்த சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். இப்படிப் பேசும்போது, இந்த அரசாங்கத்திற்காக நாங்கள் பலியாடுகளாக அமைவதற்குத் தயாராக இருக்கிறோம். இந்தக் கொள்கையை அமுல்படுத்துவதில் இந்த அரசாங்கம்தான் முழுத் தீவிரமாக இந்த மதுவிலக்குச் சட்டத்தை அமுல் நடத்தியது என்பதை உணருவார்களானால், வேறு ஒருவர் எங்களுக்காக பலி கொடுக்கவேண்டிய அவசியமில்லையென்பதை அவர்களே புரிந்து கொள்வார்கள் என்று நம்புகிறேன். அவர் பேசியபோது, இந்த அரசாங்கம் தவறே செய்யவில்லை என்று சொல்வது போலத் தோன்றியது. அப்படிச் சொல்லவில்லையென்று கருதுகிறேன். அப்படி தொனித்தது அந்தக் கருத்து. அவருடைய பேச்சிலே இந்தச் சட்டம் அமுல் நடத்தப்பட முடியாத சூழ்நிலை உருவாகியிருக்கிறது, எங்கு பார்த்தாலும் குடிப்பதைப் பார்க்கிறேன், ஆங்காங்கே கிராமங்களில் பார்த்தேன், ஒரு அமைச்சரிடத்திலே கூட சொன்னேன் என்று கற்பித்துச் சொல்கிற நிலையை நான் இங்கே பார்த்தேன். ஆக, நிச்சயமாக மது விலக்குக் கொள்கையிலே உள்ள சங்கடங்களையெல்லாம் எல்லோரும் உணருகிறோம் என்று எடுத்துக்காட்ட அப்படிச் சொன்னார் என்று கருதுகிறேன். எதில் சட்டம் அமுலாக்கப்படவில்லை என்ற புள்ளிவிவரத்தை நமக்கு அவர்கள் சொல்லவில்லை. ஆண்டுதோறும் போடப்பட்ட வழக்குகள், எடுக்கப்பட்ட நடவடிக்கைகள், அன்றாடம் சிறைச் சாலைகளிலே நாம் காண்கின்ற கைதிகளின் எண்ணிக்கை மது விலக்கு சட்டம் எவ்வளவு வேகமாக இந்த அரசு போறுப்பேற்ற தற்குப் பின்னாலே நிறைவேற்றப்படுகிறது என்பதை எடுத்துக் காட்டும். இது அறிஞர் அண்ணா அவர்கள் காலமா, அதற்குப் பின்னாலேயா என்ற சர்ச்சையைக் கிளப்பினால், திராவிட முன்னேற்றக் கழகத்திலே ஏதாவது சலசலப்பு ஏற்படுமா என்ற எண்ணத்திலே சொல்லப்பட்டிருக்குமானால்—அப்படிச் சொல்லப் பட்டிருக்காது—அது பொய்ப்பிக்கப்படும் என்பதையும் நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். இன்றைக்குக்கூட சிறைக் கூடங்களிலே ஏராளமான கைதிகள், மதுவிலக்குக் குற்றச் சாட்டிலே கைதுசெய்யப்பட்டு தண்டிக்கப்பட்டவர்கள், இருக்கின்றார்கள் என்பதைச் சொல்ல முடியும். இந்த அரசு வந்ததற்குப் பின்னாலேயும், நமது முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்றதற்குப் பின்னாலேயும், இன்று வரை உள்ள சூழ்நிலையைக் கணக்கிட்டாலும் இந்தச் சட்டம் மிகுந்த கருத்து எடுத்துக்கொண்டு நிறைவேற்றப் படுகின்றது என்பதை நான் இந்த சந்தர்ப்பத்திலே கூட்டிக்காட்ட

4.50 p.m.



21st July 1971] [திரு. செ. மாதவன்]

ஆசைப்படுகின்றேன். எதோ வருமானத்தின் அடிப்படையிலே இந்தக் கொள்கை மாற்றப்பட்டது என்ற கருத்து கூறப்பட்டது. அதை நான் ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை. வருமானத்தின் அடிப்படையிலே இதைக் கொண்டுவந்திருப்போமானால், வெளிப் படையாக மதுவிலக்குச் சட்டம் ரத்துசெய்யப்படுகிறது என்று சொல்லியிருப்போம். (The Act will be Repealed) என்று சொல்லியிருப்போம். இன்றைக்கு நாம் அதைச் செய்யவில்லை. அதற்கு மாறாக இந்தச் சட்டம் அப்படியே இருக்கும் சட்டப் புத்தகத்திலே, ஆனால் அமுல் நடத்துவதைக் கொஞ்ச காலம் நிறுத்தி வைக்கின்றோம். இதிலிருந்தே இந்த அரசாங்கம் தாய உள்ளத்தோடு இந்தக் கொள்கையைப் பற்றிச் சிந்தித்து முடிவெடுத்திருக்கிறது என்பதை உணரலாம் என்று கருதுகின்றேன். நாங்கள் தான் இப்படிப்பட்ட நிலைமைக்கு வந்தோமா என்பதைப்பற்றியும் சிந்திக்கலாம். 1938-லேயே இந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டது. காங்கிரஸ் கட்சி ஆட்சிப்பொறுப்பிலே இருந்தபோது கொண்டு வரப்பட்டது. உலக உத்தமர் காந்தியடிகள் நம்மோடு இருந்தார்கள். அந்தக் கொள்கைக்காகப் போராடிய கட்சி ஆட்சி பீடத்திலே அமர்ந்திருந்த காலம். அந்தக் கொள்கையை உருவாக்கித்தந்த காந்தியடிகள் நம்மோடு இருந்த காலத்திலேயே, இந்தச் சட்டத்தைக் கொண்டுவந்தவர்களுக்கு இந்தச் சட்டத்திலே சந்தேகம் ஏற்பட்டிருக்கிறது. நான் அதை எதிர்க்கவில்லை. இந்தச் சட்டத்தைக் கொண்டுவந்த காங்கிரஸ் ஆட்சியாளர்களே, அன்றைக்கு இந்தச் சட்டத்தைக் கொண்டுவந்தபோது இப்படி ஒரு காலம் வரலாம் என்று சந்தேகப்பட்டு, இந்தச் சட்டத்திலேயே ஒரு பிராவிசோ போட்டு, எதிர்காலத்திலே இந்தக் காலம் வந்தால் சட்டத்தைக் கொஞ்ச காலம் ஒத்திவைக்கலாம் என்று முடிவெடுத்து சட்டத்திலேயே வழிவகை செய்திருக்கிறார்கள் என்பதை நினைவுபடுத்த ஆசைப்படுகிறேன். இதற்காக அவர்களைக் குறை கூறவில்லை. அவர்கள் கொண்டுவந்த காரணத்தாலே நாங்கள் கொண்டு வருகிறோம் என்று நான் சொல்லவில்லை. நியாய உள்ளத்தோடு அந்தச் சட்டத்திலே இப்படி ஒரு வழி வைத்தார்கள். இன்றைக்கு நியாயவான்கள் ஆட்சிக்கு வந்ததாலே, அதைப் பின்பற்றிப் பயன் படுத்த விரும்புகிறோம். இதைத் தவிர வேறு அல்ல என்பதைக் கூறிக்கொள்கிறேன். வருமானம் குறைகின்றது, ஆகவே சட்டத்தை மாற்றுகிறோம் என்று வாதாடவில்லை. எல்லா மாநிலங்களிலேயும் இதைப் பின்பற்றுகின்ற சூழ்நிலை இருக்கிறது. மத்திய அரசினுடைய கடமையாக அரசியல் அமைப்புச் சட்டத்திலேயே—டைரக்டிவ் பிரின்சிபிள்சிலே கூறப்பட்டிருந்தும், அதைத் தொடர்ந்து வலியுறுத்தியும், ஆளுங்கட்சியின் பல மாநாடுகளிலே பேசியிருந்தும், தீர்மானம் போட்டிருந்தும், அதை அகில இந்திய அடிப்படையிலே அவர்களாலே கொண்டுவர முடியவில்லை. நான் குறை கூறமாட்டேன். அவர்களாலே முடியவில்லை. பாவம், அவர்களுடைய கட்சிக் காரர்களே அதை ஏற்றுக் கொள்ளவில்லை. இந்த இக்கட்டான சூழ் நிலையில் அவர்கள் முழுமையாக மதுவிலக்கைக் கொண்டுவராத அளவிலே நாம் எப்படி இதை நிறைவேற்றுவது என்ற சங்கடமான சூழ்நிலையைத்தான் எடுத்துக்காட்டினோம். அதற்காகத்தான்

[திரு. செ. மாதவன்] [1971 ஜூலை 21

இப்படிப்பட்ட திருத்தத்தைத் கொண்டு வருகிறோம். ஆனால் உணர்ச்சி வயப்படுகின்ற அனைவருமே நாம் எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களானாலும், சேர்ந்து மத்திய அரசை வற்புறுத்தலாம். அகில இந்தியக் கட்சிகளையெல்லாம் பயன்படுத்திக்கொள்ளலாம். நாடாளுமன்றத்திலே இப்படிப்பட்ட தீர்மானத்தைக் கொண்டு வரலாம். அப்படிக் கொண்டுவந்தால், நாங்கள் முழுக்க முழுக்க ஆதரிக்கின்றோம். தமிழ் நாட்டைப் பொறுத்த அளவில், எதிர்க் கட்சித் தலைவர் அவர்களின் உணர்ச்சியிலே பங்குகொள்ளக்கூடிய மிகப் பெருந்தலைவர்கள் எல்லாம் இன்றைக்கு நாடாளுமன்றத்திலே இருக்கின்றார்கள். அவர்கள் தனி ஆளாக இருந்தாலும் திராவிட முன்னேற்றக் கழகம் பூராவும் அவர்களுக்குப் பின்னாலே இருப்பதற்குத் தயாராக இருக்கின்றது. அவர்கள் பயன்படுத்திக்கலாம். இந்தச் சட்டத்தை அகில இந்திய அடிப்படையிலே கொண்டுவரட்டும். எல்லா மாநிலங்களுக்கும் கொண்டுவரட்டும். தமிழ்நாட்டின் தலைவர் தனி ஆளாக நாடாளுமன்றத்திலே பேசினால் கவலை இல்லை. நாங்களெல்லாம் பின்னாலே சென்று வாதாடத் தயாராக இருக்கின்றோம். அதற்கு வாக்களிக்கத் தயாராக இருக்கிறோம். இந்தப் புனிதமான கொள்கையை, இந்திய நாடு முழுதும் நிறைவேற்றுவதற்கு எங்களுடைய முழு ஒத்துழைப்பை, ஆதரவைத் தருவதற்குத் தயாராக இருக்கிறோம். அதைச் செய்யாது விட்டுவிட்டு, ஏதோ இக்கட்டான சூழ்நிலையில் இந்த ஆட்சி இருக்கிறது என்று எங்களை மட்டும் குறைகூறுவதிலே பயனில்லை என்பதை மட்டும் மிகப் பணிவாகக் கூறிக்கொள்கிறேன். ஆகவே இந்தச் சட்டத்தைப் பற்றிப் பேசும்போது, நஷ்ட ஈடு என்றே, நமக்கு வருகின்ற வருமானம் போய்விட்டது என்றே அரசு சொல்கின்ற கொள்கை, இந்திய நாடு முழுதும் நிறைவேற்ற முன்வரவேண்டும் என்ற கருத்தில் பேசுவதுதான் பொருத்தமாக அமையும் என்று நான் கருதுகின்றேன். மது குடிப்பதாலே பல கேடுகள் இருக்கின்றன என்பதை யாரும் மறுக்கமாட்டார்கள். ஒவ்வொரு குடும்பத்திலேயும் இதைப்பற்றி உணர்த்தப்படுகின்றது என்பதிலேயும் யாருக்கும் சந்தேகம் இருக்க முடியாது. நாம் எல்லோரும் சேர்ந்து இந்த அரசின் ஒத்துழைப்போடு தமிழ் நாட்டைப் பொறுத்த அளவுக்கு மது குடிக்காத சூழ்நிலையை உருவாக்குவதிலே வெற்றி பெறுவோமானால், அதை இந்த அரசு பூரணமாக வரவேற்கிறது என்பதையும் இந்தச் சந்தர்ப்பத்திலே கூறிக்கொள்கிறேன். ஆக இந்தச் சட்டத்தை அமுல் நடத்துவதைவிட, இந்தக் கொள்கையை ஒழுக்க நெறியை அற நெறியை வளர்த்துக்கொள்வதிலே இந்த அரசு கொஞ்சங்கூடத் தயக்கம் காட்டாது என்பதைத் நான் இந்த சந்தர்ப்பத்திலே கூறிக்கொள்ள ஆசைப்படுகின்றேன். ஆக அற நெறி, ஒழுக்க நெறி என்றெல்லாம் சொல்லிவிட்டு, சட்டத்தைப் பின்பற்றாத ஒரு சூழ்நிலை இந்த நாட்டிலே இருப்பதை நான் மீண்டும் சொல்கிறேன். இது செயல்படுவதிலே பல குற்றங்கள் ஏற்படுவதைத் தான் காண முடியும் என்பதை நாம் எல்லாம் உணர்ந்தாக வேண்டும். ஆகவேதான் சட்டத்தைக் கொண்டு ஒழுக்கத்தை நிலைநாட்டுவதைவிட, ஒழுக்க நெறிகளை நாமெல்லாம் சேர்ந்து நிறைவேற்றுவோம் என்ற உறுதியை இந்த சந்தர்ப்



[21st July 1971 [திரு. செ. மாதவன்]

பத்திலே எடுத்துக்கொள்வது பொருத்தமாக இருக்கும் என்று நான் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

தமிழ்நாட்டு மக்களுடைய நல்வாழ்வுக்காக நாமெல்லாம் பாடுபட வேண்டும், அதற்கு இந்த அரசு உறுதுணையாக இருக்க வேண்டும் என்ற நல்லெண்ணத்தை நான் முழு மனதோடு வரவேற்கிறேன். அதிலே எங்களுக்குக் கொஞ்சங்கூட கருத்து வேறுபாடு கிடையாது. இந்த நாட்டிலேயுள்ள அத்தனை தலைவர்களும் உணர்ச்சி பூர்வமாக இதைப்பற்றி எண்ணுகின்றார்கள். எங்களிடத்திலே எடுத்துச் சொல்கிறார்கள். அத்தனை பேருடைய கொள்கையிலும் எங்களுக்கு ஒருமித்த கருத்து உண்டு. கொஞ்சங்கூட கருத்து வேறுபாடு கிடையாது என்பதை வலியுறுத்திக் கூறிக் கொள்கிறேன். ஆனால் நாட்டிலேயுள்ள சூழ்நிலை என்ன என்பதை அவர்களே சொன்னார்கள். இன்றைக்குத்தான் அறிவோம் என்று அல்ல பல ஆண்டுகளுக்கு முன்னாலேயே இந்தச் சட்டம் எவ்வளவு சீர்குலைந்திருக்கிறது என்பதை இங்கே எதிர்க் கட்சித் தலைவர் அவர்களே எடுத்துச் சொன்னார்கள். நான் மனப்பூர்வமாக அதைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அது உண்மை. இந்த உண்மை நிலையை உணராது பேசுவோமானால் அது பொருத்தமில்லாத சூழ்நிலையை உருவாக்கும் என்பதை ஏற்றுக்கொண்டதிலே எனக்கு மகிழ்ச்சி உண்டு. அப்படிப்பட்ட நிலையைத் தொடர்ந்து வைத்துக்கொள்ள வேண்டாம். அதற்கு முழுவை கட்டுவோம். இந்தச் சட்டம் வேண்டாம். சட்டத்திற்கு அப்பாற்பட்ட ஒரு நிலையை வளர்க்க நாம் எல்லாம் தயாராக இருக்கிறோம் என்ற உறுதியை இந்த அரசாங்கத்தின் சார்பிலே சொல்கிறேன். அப்படியெல்லாம் இந்த உறுதியை ஏற்று இந்தக் கொள்கையை நிறைவேற்றித் தருவோம். தமிழ்நாட்டுக்கும் இந்திய நாட்டுக்கும் பெருமையைத் தேடித்தர வேண்டும் என்று கேட்டுக்கொண்டு இதை ஆதரிக்க வேண்டும் என்று கூறி முடிக்கின்றேன்.

**திரு. கே. ராஜாராம்:** அமைச்சர் அவர்கள் கூறியதில் இரண்டொரு விளக்கங்களை அறிந்துகொள்ள விரும்புகிறேன். தமிழ் நாடு காங்கிரஸ் தலைவராக இருக்கும் திரு. காமராஜ் அவர்கள் பார்லிமெண்டில் அங்கத்தினராக இருக்கிறார்கள், அவர்கள் அதற்கு முயற்சி செய்யட்டும், நாங்களெல்லாம் ஒத்துழைக்கிறோம் என்று சொன்னார்கள். அதுதான் சொன்னதற்கு அர்த்தம் என்று நினைக்கிறேன். கையில் இருக்கும் வெண்ணையை விட்டுவிட்டு எங்கேயோ நெய்க்காகப் போய் அலைகின்ற மாதிரி நம் கையிலே மதுவிலக்குச் சட்டத்தை வைத்துக்கொண்டு, இந்தச் சட்டத்தை வேண்டாமென்று ஒத்திவைத்துவிட்டு, இனிமேல் புதிதாக மதுவிலக்குச் சட்டம் பார்லிமெண்ட் மூலமாகப் போட வேண்டும் என்று சொல்வதன் அர்த்தம் என்ன? இரண்டாவதாக, அமைச்சர் அவர்கள் பேசும்போது, எங்களால் மதுவிலக்குச் சட்டத்தை சரியானபடி அமுல் செய்ய முடியவில்லை என்று ஒப்புக்கொண்டதுபோல் பேசியிருக்கிறார்கள். அதை ஒப்புக்கொள்கிறார்களா என்று ஸ்பஷ்டமாகச் சொல்ல வேண்டும்.

[திரு. செ. மாதவன்] [21st July 1971

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : இந்தச் சட்டத்தைச் சரியாக அமுல் நடத்த போலிசாலே முடியவில்லே என்பதை முதலமைச்சர் அவர்களே இங்கே பகிரங்கமாக ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். தோல்வி அடைந்துவிட்டது என்றுகூட சொன்னார்கள். நான் எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் எழுந்திருந்தவுடன், "எங்கள் கட்சித் தலைவர் அவர்கள் அப்படிப்பட்ட சட்டத்தை முன் மொழியப் போகிறார்கள், நீங்களெல்லாம் பின்னாலே வாருங்கள் என்று சொல்லப்போகிறாரோ" என்று எண்ணினேன். அப்படிச் சொல்லியிருந்தால், அவர் கட்சியைச் சேர்ந்த மற்ற மாநிலக்காரர் களே கைவிட்டிருப்பார்கள். ஆகவேதான் சொல்லவில்லே. வெண்ணெயைப் பற்றிச் சொன்னார்கள். என்ன செய்வது? வெண்ணெய் இருக்கிறது. பக்கத்திலே இருக்கிற மாநிலங்களில் எல்லாம் பயங்கரமான வெப்பம் இருக்கிறது. உருகிப் போகிறது.

* திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு : முன்பு இருந்ததை விட அதிகமாகக் கள்ளுக்கடைகள் வர இருக்கின்றன. மது விலக்கை ஒத்தி வைத்தமட்டில் அரசு நின்றுவிடவில்லையே. குடியை விரும்பு கிற அவர்களுக்கு மேலும் அதிக வசதிகள் செய்து தரப்பட இருக் கின்றன. முன்பு இருந்ததை விட அதிக வசதிகள் இந்தச் சட்டத் தின் மூலம் கொடுக்கப்பட இருக்கின்றன. இதற்கெல்லாம் நாங்கள் ஒத்துக்கொண்டு ஒத்துழைக்க வேண்டுமென்று அமைச்சரவர்கள் விரும்புகிறார்கள். இந்த மாதிரி ஜனங்கள் குடித்துக் கெட்டுப் போக வேண்டுமென்று சொல்வது வருத்தமாக இருக்கிறது. இந்தச் சட்டத்தை நாங்கள் ஒப்புக்கொள்வதற்கில்லே. நாங்கள் மதுவிலக்கு முற்றிலும் வெற்றிகரமாக அமுலாக வேண்டும் என்று சொல்கிறோம். மதுவிலக்குச் சட்டத்தை ஒத்தி வைக்கிறது என்று சொல்வதை விட மதுவிலக்குச் சட்டத்தை ரத்துச் செய்கிறோம், அதற்கு ஏற்ற முறையிலே இந்தச் சட்டத்தைக் கொண்டு வரு கிறோம் என்று சொல்லுங்கள். அந்தக் கருத்தோடு தான் இந்தச் சட்டத்திற்கு வகை செய்யப்படுகிறது. மதுவிலக்கை ரத்து செய்ய அரசு மனமாற விரும்பவில்லையென்று சொல்லிக்கொண்டு மதுவைத் தயாரிக்கவும், குடிப்பவர்களுக்கு அதை விற்கவும், வசதிகள் செய்து கொடுப்பதும் ஒன்றுக்கொன்று முரண்பட்ட கருத்தாக இல்லையா ?

5-50 p.m.

THIRU G. VASANTHA PAI : I want to know from the Hon. Minister whether he will consider my suggestion to raise the age from 21 years to 25 years in clause (dd) in section 56 of the amended Act.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தலைவரவர்களே, இங்கே கூறப் பட்ட கருத்துக்களே நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம். பல கருத்துக் களே வலியுறுத்திச் சொன்னார்கள். நண்பர் திரு. வசந்த பாய் அவர்கள் வயதை 25 ஆக உயர்த்த வேண்டுமென்று கூறினர்கள். அதற்கு அவசியமில்லே. கல்லூரி விடுதிகளிலே மது நுழையாமல் கண்காணிக்க வேண்டும் என்றார்கள். இந்த விஷயத்திலே நாங்கள் கண்டிப்பாக இருப்போம். நமக்கு அதற்கு அதிகாரம் இருக் கிறது.



21st July 1971]

MR. CHAIRMAN : The question is—

"That the Tamil Nadu Abkari (Amendment) Bill, 1971 (L.A. Bill No. 20 of 1971), as passed by the Assembly, be taken into consideration for making recommendations."

The motion was put and carried and the Bill was taken up for making recommendations.

MR. CHAIRMAN : As there are no recommendations, the Bill will be returned to the Assembly without any recommendations.

## (2) THE MADRAS CITY CIVIL COURT (AMENDMENT) BILL, 1971 (L. A. BILL NO. 13 OF 1971)

மாண்புமிகு திரு. செ. மாதவன் : சட்டப் போவையால் நிறைவேற்றப்பட்டுள்ள 1971-ஆம் ஆண்டு சென்னே மாநகர சிவில் நீதிமன்ற (திருத்த) மசோதா* (சட்ட மன்றப் போவை மசோதா எண் 13/1971) பரிசீலனேக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டு மென்று நான் முன்மொழிகிறேன்.

மாநகர சிவில் நீதிமன்றத்தின் மேல் முறையீட்டு அதிகார வரம்பில் நிதிவரம்பை ஐயாயிரம் ரூபாயிலிருந்து பத்தாயிரம் ரூபாய்க்கு உயர்த்துவதே இம் மசோதாவின் நோக்கம் என்பதை மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் அறிவர். சென்னே மாநகர நீதி மன்றத்தின் அதிகார வரம்பு முதற்கண் ரூ. 10,000 ஆக இருந்தது. 1892-ம் ஆண்டு சென்னே மாநகர சிவில் நீதிமன்றச் சட்டத்தைத் திருத்தியதன் மூலம் இந்த வரம்பு 1955-இல் ரூ. 50,000 ஆக உயர்த் தப்பட்டது. சட்ட ஆணேக்குழுவின் பரிந்துரையையொட்டி 1964 மே 1-ஆம் நாள் முதல் இந்த வரம்பு ரூ. 20,000 ஆகக் குறைக்கப் பட்டது. அது முதற்கொண்டு உயர்நீதி மன்றத்தில் அசல் வழக்கு கள் பிரிவில் ( Original side ) பணி அதிகாரத்தின் விளேவாக விசாரணேயிலுள்ள வழக்குகளின் எண்ணிக்கை அதி கரித்தது. எனவே உயர்நீதி மன்றத்தின் பரிந்துரைகளின் பேரில், அசல் வழக்குகள் குறித்து மாநகர சிவில் நீதிமன்றத்தின் அதிகார வரம்பு 1967 ஜூலே 1-ஆம் நாள் முதல் ரூ. 50,000 ஆக உயர்த்தப் பட்டது. 1892-ஆம் ஆண்டு சென்னே மாநகர சிவில் நீதிமன்றச் சட்டத்தின் 15 (2) பிரிவின் கீழ், மாநகர சிவில் நீதிமன்றத்தின் மேல் முறையீட்டு அதிகார வரம்பு ஐயாயிரம் ரூபாய் மட்டுமே யாகும்.

அசல் வழக்குகள் குறித்து மாநகர சிவில் நீதிமன்றத்தின் அதிகார வரம்பு பத்தாயிரம் ரூபாயிலிருந்து ஐம்பதாயிரம் ரூபாய்க்கு உயர்த்தப்பட்டிருந்தாலும் கூட, மாநகர சிவில் நீதி மன்றத்தின் மேல் முறையீட்டு அதிகார வரம்பு இதுவரை உயர்த் தப்பட வில்லே. மாவட்ட நீதி மன்றத்தின் மேல் முறையீட்டு அதிகார வரம்பு தொடர்ந்து ஐயாயிரமாகவே இருந்து வருகிறது.

எனவே, உயர்நீதிமன்றத்தில் ஏற்பட்டுள்ள பணிச்சுமையைக் குறைக்கும் நோக்கத்துடன் மாவட்ட நீதிமன்றத்திற்கு உள்ள

* Printed as Appendix II on pages 72-74.

[திரு. செ. மாதவன்] [21st July 1971

போலவே மாநகர சிவில் நீதிமன்றத்தின் மேல் முறையீட்டு அதிகார வரம்பும் பத்தாயிரம் ரூபாய்க்கு உயர்த்தப்பட்டுள்ளது.

இம்மசோதாவை ஏற்று நிறைவேற்றித்தருமாறு இம்மாமன்றத்தைக் கேட்டுக்கொள்கிறேன்.

MR. CHAIRMAN : The question is—

" That the Madras City Civil Court (Amendment) Bill, 1971 (L.A. Bill No. 13 of 1971), as passed by the Assembly, be taken into consideration. "

The motion was put and carried and the Bill was taken into consideration.

Clauses 2 and 1, the Long Title and the Enacting Formula were put and carried.

THE HON. THIRU S. MADHAVAN : I move—

That the Madras Civil Court (Amendment) Bill, 1971 (L.A. Bill No. 13 of 1971), as passed by the Assembly, be passed. "

MR. CHAIRMAN : The question is—

" That the Madras City Civil Court (Amendment) Bill, 1971 (L.A. Bill No. 13 of 1971), as passed by the Assembly, be pleased."

The motion was put and carried and the Bill was passed.

**(3) THE MOTOR VEHICLES (TAMIL NADU SECOND AMENDMENT) CIVIL COURT BILL, 1971 (L. A. BILL No. 21 OF 1971)**

6-00 p.m.

THE HON. THIRU S. RAMACHANDRAN : Mr. Chairman, Sir, I beg to move—

" That the Motor Vehicles (Tamil Nadu Second Amendment) Bill, 1971 (L.A. Bill No. 21 of 1971), as passed by the Assembly, be taken into consideration. "

Sir, I have brought forward this Bill to replace the Motor Vehicles (Tamil Nadu Second Amendment) Ordinance, 1971 (Tamil Nadu Ordinance 6 of 1971) which was promulgated by the Governor of Tamil Nadu on the 18th June 1971. This Ordinance amended the Motor Vehicles Act, 1939, in its application to this State. The purpose for which this Bill has been brought has been clearly explained in the Statement of Objects and Reasons. I, therefore, trust that this House will accept this Bill.

MR. CHAIRMAN : Motion moved—

" That the Motor Vehicles (Tamil Nadu Second Amendment) Bill, 1971 (L.A. Bill No. 21 of 1971), as passed by the Assembly, be taken into consideration. "

THIRU G. SWAMINATHAN : Sir, I want to mention only one point. We have been pleading in this House and also in the Lower House that exemption from ceiling should be given to Transport

* Printed as Appendix III on pages 74-77.



21st July 1971] [Thiru G. Swaminathan]

operations conducted by the Co-operative Societies. I read in the papers that the Hon. the Minister for Transport has stated in the Assembly as follows :—

' The Transport Minister, the Hon. Thiru S. Ramachandran who piloted the Bill rejected the demand and said that it would amount to making invidious distinction. The Hon. Minister has stated that he could not make any kind of distinction between co-operative and private undertakings.' Sir, The Hon. the Minister for Co-operation being here, Sir, I would like to state that the Policy of the Central Government and the State Government, which is clear from the documents of the First Five-Year Plan and also from the proceedings of the conferences of the various Ministers for Co-operation is that distinction should be made and also advantages be conferred on Co-operative Societies. I wish to know whether the opinion given by the Hon. the Minister for Transport in the Assembly is his own opinion or the opinion of the Government. Sir, I wish to point out in this connection the various concessions which are being given to Co-operative Societies, while no income-tax concession is being shown to private Banks, exemption is being given to Co-operative Banks. The Reserve Band of India advances at 1½ per cent lesser interest to Co-operative Banks. Regarding the supply of milk to State Government institutions, the Co-operative Societies are allowed to quote 5 per cent above the market rate. We have given exemption from Stamp duty in respect of documents executed by Co-operative Societies. Also we have given sales tax exemption to whole-sale stores for their sales to retail stores. While it has been stated that to further the co-operative movement in this country and in this State, this kind of distinction should be made in the interest of the public, I want to know how the Hon. Minister has mentioned that distinction cannot be made. If it is the accepted policy of the Central Government and the State Government that this kind of advantages should be conferred on the Co-operative Societies, I would plead that the similar advantages may also be extended to co-operative transport undertakings especially those which are being run by Ex-Servicemen's Societies. I understand, Sir, that many permits had been given to them on concessions. They have been able to run the transport operations mainly because of these concessions. I plead that the limit may be raised from 10 to 20 permits in the case of co-operative transport undertakings. Thank you, Sir.

THIRU G. VASANTHA PAI : Mr. Chairman, Sir, I thank you for the opportunity given me again to speak on this measure. On the last occasion in my Budget speech, I quoted the same sentiments that were expressed by Thiru G. Swaminathan to-day that Co-operative Societies should be treated on a better footing.

Sir, I would like to invite the attention of the House to an unrepealed provision which the Government have been not considered in their Amending Bill. I am referring to section 47(1), second proviso namely,

[Thiru G. Vasantha Pai] [21st July 1971

" provided that other conditions being equal, an application for a stage carriage permit from a co-operative society, registered or deemed to have been registered under any enactment in force for the time being shall, as far as may be, be given preference over applications from individual owners. "

Sir, the Motor Vehicles Act makes a distinction between a Co-operative Society and individual owners. I find that the Statement of Objects and Reasons given by the Hon. Minister while introducing this Bill clearly shows that in order to prevent monopoly in respect of stage carriage permits, the Government of Tamil Nadu have been considering the question of imposing a ceiling on the number of such permits which a private operator can hold. I am sure the Hon. Minister as well as the Cabinet who considered this measure as necessary, were intending to direct it against private and monopolistic enterprises rather than co-operative societies which have a task to perform as an industrial undertaking or industrial co-operative. We have envisaged in Article 43 of the Constitution that the Centre and the State will try to advance the interests of co-operatives and formation of co-operative enterprises.

Sir, my submission to you and to the Hon. Minister is that while encouraging co-operatives, they must also bear in mind the economics of the co-operatives as pointed out by Mr. Ryan. When he was the Registrar of Co-operative Societies, he brought out a Co-operative Manual in which he has clearly shown that it is impossible for the Co-operatives to run transport services with less than a minimum of 25 buses while it may be possible for an individual to run buses and make a profit with 10 or even 5 buses. It is not possible for the Co-operatives to do so because they have to invest a large capital, they have to employ a large number of people and they have to declare dividents to a large number of shareholders. The co-operative form a distinct set by themselves and they cannot be compared to individual private owners. Sir, even the Act, which I find has not been touched by the Amending L.A. Bill 21 of 1971, shows clearly that the Hon. Ministers are not inclined to take away the preference given under section 47 (1), second proviso, i.e., " other conditions being equal, to give benefit to a Co-operative society ". I, therefore, request the Hon. Ministers to kindly preserve the distinction between the co-operative and the private enterprises and give the benefit of larger number of permits to the Co-operatives than to private individual owners.

Sir, I purposefully request the Hon. Ministers to especially consider the cases of Ex-Servicemen who have done so much in the interest of our country and fought in the front, who have to retire prematurely at the age of 48 years and who have formed Co-operatives in the State of Tamil Nadu and elsewhere, as cases of national concern and see that their efforts are not nullified by this measure. I believe that though this Bill has come passed from the Assembly, the Hon. Minister and the Cabinet will collectively consider the question of giving special exemption in favour of Co-



21st July 1971] [Thiru G. Vasantha Pai]

operatives and return the Bill for the acceptance of the Lower House with the exemption marked in favour of Co-operatives. I request that the recommendation made by this House in this behalf may be forwarded to the Lower House and their acceptance obtained for this measure. I wholeheartedly support the request made by Thiru G. Swaminathan and request the Hon. Ministers to consider this in the view that Ex-Servicemen have been performing great national service. This would be an adequate compensation for their past service to the country.

திரு. எஸ். ஜெயராம செட்டியார் : தலைவரவர்களே, இந்த மோட்டார் வாகனச் சட்டத்தின் மீது ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். பினாமியாக வைத்திருப்பவர்கள் மாற்றக் கூடாது என்று சொல்லி சட்டத்திலே குறிப்பிட்டிருப்பது சரி தான். ஆனல் 10 பஸ்கள் வைத்திருப்பவர்கள், அண்ணன் தம்பிகள் ஒன்றுகச் சேர்ந்து ஒரே கம்பெனியின் பேரால் வைத்திருந் தால், அவர்கள் பிரித்துக் கொள்வதில் அவர்கள் ஒவ்வொரு வருக்கும் 10 இல்லாவிட்டாலும் அதற்குக் குறைந்து பிரித்துக் கொள்வதற்கு வழி இருக்க வேண்டும். எனக்குத் தெரிந்த ஒரு கம்பெனியின் அனுபவத்தைச் சொல்ல விரும்புகிறேன். முன்பு இரண்டு பஸ்களாக வைத்திருந்தவர்கள் அது கட்டுப்படியாக வில்லை என்பதால் 10 பஸ்களை ஒன்றுக வைத்து, ஒரு கம்பெனியாக சட்ட ரீதியாக ஆக்கி வைத்துக் கொண்டார்கள். இன்றைக்கு அவர்கள் பிரித்துக்கொள்ளக் கூடாது என்று சொல்வது அவ்வளவு சரியானதாக இருக்காது.

திரு. கே. ராஜாராம் : தலைவரவர்களே, பஸ்கள் வைத்திருப் பவர்கள் 10 பஸ்களுக்கு மேல் வைத்துக்கொள்ளக் கூடாது என்று வந்திருக்கும் இந்த மசோதாவை நான் வரவேற்கிறேன். ஆனல் கூட்டு அவிபக்த குடும்பங்கள் " அன்டிவைடெட் ஹிந்து பாமலி " யாக உள்ளவர்கள் 20 பஸ்கள் வைத்திருந்தால், அவர்கள் பிரித்துக் கொள்வதற்கு ஆளுக்கு இரண்டு மூன்று என்று பிரித்துக்கொள் வதற்குத் தடையாக இந்தச் சட்டம் இல்லை என்று என்னுகிறேன். ஆனல் நிர்வாக உத்தரவு மூலம் இப்படிப் பிரித்துக்கொள்வது தடை செய்யப்பட்டிருக்கிறது என்று கேள்விப் படுகிறேன். அது எந்த அளவிற்கு உண்மையென்று தெரியவில்லை. தந்தையின் சொத்தை மகன் பிரித்துக்கொள்வதற்கு எந்தவிதமான தடையும் இல்லை. அது " பண்டமென்டல் லைட் ". எனவே இப்படிப் பிரித்துக் கொள்வதற்கு அரசாங்கம் எந்த விதமான உத்தரவும் போட்டுத் தடுத்திருந்தாலும், அது நியாயமா என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன் இல்லையென்றால், அதைப் பற்றி ஆட்சேபணை கிடையாது.

அடுத்தபடியாக, 10 பஸ்களுக்கு மேல் வைத்திருப்பவர்களை 5 பஸ்கள் வைத்துக்கொள்ள அனுமதிப்பது நியாயமாகுமா ?

[திரு. கே. ராஜாராம்] [21st July 1971

அடுத்தபடியாக, 62-பி திருத்தம்

"Where the number of stage carriage permits held by any person on the 18th June 1971 is not less than ten, such person may, at any time within a period of one month from the said date, surrender one or more of such permits which are in excess of ten to the Regional Transport Authority which granted the permit."

6-10 p.m.

என்று இருக்கிறது. அதிலும் இப்படி ஒரு நாளைக் குறிப்பிட்டு 18-ம் நாள் ஜூன் என்று போடப்பட்டிருக்கிறது. இன்று தேதி 21, இன்னும் இது சட்டமாகவில்லை. இன்னும் மசோதா நிலையிலேயே இருக்கிறது. இது நிறைவேற்றப்பட்டு கவர்னரின் அங்கீகாரம் பெற்று ஜனாதிபதியின் கையெழுத்திற்குப் போக வேண்டும். எனவே காலம் கடந்து யாராவது செய்திருந்தாலும், அவர்களுக்குத் தொந்தரவு ஏற்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

அடுத்தபடியாக, கோவாப்பரேடிவ் சொசைடி பற்றி நம் முடைய நண்பர் திரு. சாமிநாதன் அவர்கள் குறிப்பிட்டார்கள். திரு. வசந்த பாய் அவர்களும் குறிப்பிட்டார்கள். உச்சவரம்புச் சட்டத்தில் கோவாப்பரேடிவ் சொசைடிகளுக்கு விதிவிலக்கு அளித்திருப்பதுபோல, இதிலும் செய்யப்பட வேண்டும். எக்சர் விஸ்மென் கோவாப்பரேடிவ் சொசைடிகள் என்று நடைபெற்றுக் கொண்டு வருகின்றன. யுத்த களத்தில், போர்க்களத்தில் இந்த நாட்டுக்காகத் தியாகம் செய்தவர்கள். இவர்கள் கோவாப்ப ரேடிவ் சொசைடி வைத்து நடத்திக்கொண்டிருக்கிறார்கள். அவர் களுக்குச் சகல வசதியும் செய்து கொடுக்க வேண்டும். இரண்டு மூன்று பஸ் வைத்திருந்த தனிப்பட்டவர்கள், அரசாங்கம் ஒரு உத்தரவு போட்டதால். இவர்கள் ஒன்று சேர்ந்து ஒரு "லயபல் யூனிட்டாக" வைத்துக்கொள்ள வேண்டுமென்றதால், ஒன்றுகச் சேர்ந்து ஒரு கம்பெனியாக வைத்து நடத்திக்கொண்டு வருகிறார் கள். கே.எம்.யூ. கோடைக்கானல் மோட்டார் யூனியன்—இரண்டு மூன்று பஸ் வைத்திருந்த 6, 7 பேர் ஒன்றுகச் சேர்ந்து ஒரு கம் பெனியை வைத்துக்கொண்டு நடத்தி வந்தார்கள்.

அடுத்தபடியாக 1958-ல் இன்னொரு உத்தரவு போட்டார்கள். பல பேர் ஒன்று சேர்ந்து பஸ் ஓட்டுபவர்கள் ஒரு லிமிட்டட் கம்பெனியாக மாற்றிக்கொண்டால், அவர்களுக்கு ஒரு சலுகை அளிக்க வேண்டும், ஒரு மார்க் அதிகமாகக் கொடுக்க வேண்டும் என்று அன்றைக்கு இருந்த அரசாங்கம் ஒரு உத்தரவு போட்டது. அப்படியெல்லாம் ஒன்றுகச் சேருங்கள், அதிகப்படியாக பஸ்களை வைத்துக் கொள்ளுங்கள் என்று அரசாங்கமே தூண்டிவிட்டு இன்றைக்கு 50 பஸ்களுக்கு மேல் இருக்கிறது. ஆகவே அரசாங்கமே எடுத்துக் கொள்கிறது என்றால்—எடுத்துக்கொள்ளும் சட்டத்தை ஆட்சேபிக்கவில்லை—அவர்களுக்கும் மற்றவர்களைப் போல், 15 பஸ் வைத்துக் கொண்டிருப்பவர்களை எப்படி 10 பஸ் வைத்துக் கொள்ளலாம் என்று அனுமதிக்கின்றோமோ, அதுபோல், அவர்களும் 10 பஸ் வைத்துக்கொள்ளலாம் என்பதைச் செய்ய



21st July 1971] [திரு. கே. ராஜாராம்]

வேண்டும். ஜெனரேஷன் அரசாங்கத்தை ஏமாற்றும் எண்ணம் இல்லாமல் ஒரு கூட்டணியாக இருப்பவர்களானால், அவர்கள் பிரிந்து போவதற்கு நாம் சம்மதிப்பதில் என்ன தடையிருக்க முடியும் என்று அரசாங்கத்தைச் சிந்திக்கும்படியாகக் கேட்டுக் கொள்கிறேன். யாராவது வேண்டுமென்றே அரசாங்கத்தின் நோக் கத்தைத் தோற்கடிக்க அந்த முயற்சி எடுத்தால், கண்டிப்பாக அதற்கு இடம் கொடுக்கக்கூடாது. ஆனால் உண்மையிலேயே சிலர் அரசாங்கத்தின் தூண்டுதலால் ஒன்று சேர்ந்து லிமிட்டட் கம்பெனியாக ஆக்கியிருக்கிறார்கள். ஒரு வயபிள் யூனிட்டாக இருக்க 10 பஸ்ஸுக்குக் குறையாமல் இருக்க வேண்டும், ஆகவே ஒன்றுசேர வேண்டும் என்று அரசாங்கமே சொன்னதற்காக, மூன்று நான்கு பேர் சேர்ந்து 10, 15 பஸ்கள் என்று வைத்துக் கொண்டவர்களுக்கு திடீரென ஒன்றுமில்லை என்று சொல்வது அதிர்ச்சியாக இருக்கும். எனவே அவர்கள் பிரிந்துபோக அனுமதிக்க வேண்டும். உண்மையில் கூடியவர்கள் பிரிந்துபோக அனுமதிக்க வேண்டும். சகோதரர்களோ அல்லது மக்களோ பாகப் பிரிவினை செய்துகொள்வதில் தடை ஏதும் இருக்கக் கூடாது என்று தெளிவித்துக்கொண்டு பொதுவாக மறுபடியை ரத்து செய்யும் முறையில் கொண்டுவந்திருக்கும் இந்த மசோதாவை நான் ஆதரிக்கின்றேன்.

*மாண்புமிகு திரு. எஸ். ராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் இந்த மசோதாவைப் பொதுவாக வர வேற்றிருக்கின்றார்கள். ஆனால் கூட்டுறவு முறையில் பஸ் போக்கு வரத்து நடத்தும் நிறுவனங்களுக்கு விதிவிலக்கு அளிக்க வேண்டு மென்று எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப் பினர் திரு. வசந்தபாய் அவர்கள் அந்தக் கேசையே படித்துக் காட்டினார்கள். செக்ஷன் 47 (1)-ல் other things being equal, preference must be given to co operative society. என்றிருக்கிறது. எல்லாம் சமமாக இருக்கின்றபோது கூட்டுறவுத்துறையிலே நடத்துகின்ற நிறுவனங்களுக்கு நாம் சலுகை அளிக்க வேண்டுமென்று அதிலே குறிப்பிடப் பட்டிருக்கிறது. ஆனால் எந்த அடிப்படையிலே இது வந்தது என்பதை நாம் சிந்தித்தாக வேண்டும். இந்தச் சட்டம் செயல்படுகின்ற விதமானாலும் சரி, இல்லை மற்றக் காரியங்களானாலும் சரி, பப்ளிக் இன்டரஸ்ட், மக்கள் நலன் எப்படி இருக்கிறது என்பதை நாம் பார்க்க வேண்டும். ஒரு உதாரணத்திற்கு 'other things being equal' என்று கூட ஏன் போட்டார்கள் என்று கருது கிறேன் என்றால். ஒர்க்ஷாப்களே இல்லாமல் கோவாபரேடிவ் சொசைடிகாரர்கள் ரூட் கேட்கிறார்கள் என்றால், அவர்களுக்குச் சலுகை அளிக்கப்படலாம். ஆனால் அப்படி நடத்துவதாலே மக்களுக்குச் சவுகரியங்கள் ஏற்படாது. அவர்கள் சட்டத்திலேயே மிகத் தெளிவாக 'அதர் திங்ஸ் பீயிங் ஈக்வல்' என்று சொன்னதன் காரணம், அதிலே பாசன்ஜர்ஸ் இன்டரஸ்ட், பப்ளிக் இன்ட ரஸ்ட்டை முதலாவதாக வைத்து, செக்ஷனல் இன்டரஸ்ட்டுக்கு

[திரு. எஸ். ராமச்சந்திரன்] [21st July 1971

இரண்டாவது இடம் தந்திருக்கிறார்கள் என்பதனை நாம் மறந்து விடுவதற்கில்லை. ஆனால் இந்தச் சட்டத்தினுடைய நோக்கம் மனுபவியைத் தவிர்ப்பது மட்டுமல்ல. ஆப்பரேஷனல் எஃபிஷியன்சி, ஃபேர் காம்ப்படிஷன், பப்ளிக் இன்ட்ரஸ்ட் என்றெல்லாம் அதிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது என்பதனையும் எடுத்துச் சொல்ல விரும்புகின்றேன். பெரிய மனுபலியை வைத்துக் கொண்டு நடத்துவதாலே என்ன கெடுதல் என்று பார்க்க வேண்டும். ஸ்மால் செக்டார்—சிறிய அளவிலே வைத்துக்கொள்வது நல்லதா, பிக் செக்டார்—பெரிய அளவிலே வைத்துக் கொள்வது நல்லதா என்று பார்க்கும்போது, பெரிய அளவிலே உள்ள நிறுவனங்களை அவர்கள் மிஸ்மேனேஜ்மென்ட் செய்து சரியாக நடத்தமாட்டார்கள். மக்களைப்பற்றிக் கவலைப்படமாட்டார்கள். அது மட்டுமல்லாமல், அந்த வழியிலே தங்களுடைய பேருந்துகள் செல்கின்றன என்றால், ஒன்று ரிப்பேர் ஆனாலும் அடித்தது நமது பேருந்துதானே என்று எண்ணி மக்களின் நலனைப் புறக்கணிப்பார்கள். அதேபோல் மக்கள் ரூட்டுகள் தேவை என்று கேட்கும்போது அங்கு விட முன் வரமாட்டார்கள். ஆகையினாலே ஒரு நல்ல ஆரோக்யமான போட்டியை உருவாக்கவும், அதே நேரத்திலே "பர்சனல் சூப்பர் விஷன்" செய்து எங்கே தாங்கள் சரியாக ஓட்டவில்லையென்றால் மற்றவர்கள் எடுத்துக் கொள்வார்களோ என்ற அச்சத்தால் நன்றாக நடத்துவார்கள் என்ற தன்மை ஏற்படவும், மக்களின் நலனை மேலாகக் கருதி அந்த பஸ் உரிமையாளர்கள் நல்ல முறையிலே மக்களுக்குச் சவுகரியங்கள் செய்து தரவும் வழிவகுக்கும் என்ற அடிப்படையிலேதான் இந்த மசோதா கொண்டுவரப் பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. வசந்த பாய் குறிப்பிட்டார்கள், 25 பஸ்களுக்குக் குறையாமல் இருந்தால்தான் நல்ல முறையிலே லாபம் தரத்தக்க முறையிலே இருக்கும் என்ற கருத்து இருப்பதாகக் கூறினார்கள். 1965-ஆம் ஆண்டு இந்தியப் போரசு ஒரு கமிட்டியை நிறுவி, இதைப்பற்றிப் பரிசீலனை செய்யச் சொல்லி, 1968-ஆம் ஆண்டில் அந்தக் கமிட்டியினர் சில பரிந்துரைகளையெல்லாம் கொடுத்திருக்கின்றார்கள். அந்தப் பரிந்துரைகளிலே பரிந்துரை-51

"We recommend that the road transport industry should be re-organised on a rational basis. To obtain the maximum advantages, we consider that the viable unit should consist at least 10 vehicles in goods transport and 5 stage carriages with a spare bus in the case of passenger transport."

ஆகவே வயபில் யூனிட்டுக்கு "மேக்சிமம் அட்வான்டேஜ்" பெற ஐந்தே போதும் என்று எடுத்துச் சொல்லியிருக்கின்றார்கள். ஆனால் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்டதைப் போல, 1954-ம் ஆண்டில் 10 பஸ் வைத்துக் கொள்ளுங்கள், 10 பஸ்களுக்கு மேலே போகிறவர்களுக்குச் சலுகை தர வேண்டும் என்ற முறையிலே முயற்சி மேற்கொள்ளப் பட்டது. ஆனால் அது ஆறே மாதத்திலே கைவிடப்பட்டது என்பதையும் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன். அந்த மனுபலி—ஏகபோகத்தை உருவாக்கியதை அனுபவப்பூர்வ



21st July 1971] [திரு. எஸ். ராமச்சந்திரன்]

மாகக் கண்டு, அதனுடைய பிரதிகூலத்தை அனுபவித்ததன் காரணமாக அதை ரத்து செய்திருப்பார்கள் என்றுதான் நான் கருதுகின்றேன். ஏனென்றால் 10 பஸ்கள் வைத்துக்கொள்ளவேண்டுமென்று 1954 நவம்பரிலே உத்தரவு போட்டு 1955 ஜூன் மாதத்தில் அதை ரத்து செய்துவிட்டார்கள். இதைப்பற்றி சுப்ரீம் கோர்ட்டில் ராமன் அண்டு ராமன் வர்சஸ் ஸ்டேட் ஆஃப் மெட்ராஸ் என்ற வழக்கிலேகூட தீர்ப்பில் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். இம்மாதிரி 10 பஸ்களுக்குமேல் இருக்க வேண்டுமென்று ஊக்குவித்து ஆறு மாதத்திலேயே அந்த உத்தரவை ரத்து செய்ததன் மூலம் மனுப்பலியை உருவாக்கக்கூடாது என்று சர்க்காரே அனுபவப்பூர்வமாக உணர்ந்திருக்கிறது போலும் என்று சுப்ரீம் கோர்ட்டிலே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். இன்னொரு ஜி.ஓ.-வைச் சொன்னார்கள்; அந்த ஜி.ஓ. கோர்ட்டுக்குப் போய் ரத்தாகிவிட்டது என்பதையும் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஆகவே எந்த அளவுக்கு பல்கலை நிறுவனங்களிலே வைத்துக்கொண்டால் மக்களுக்கு நன்மை கிடைக்கும் என்ற அடிப்படையிலே பார்க்கும் போது, கோவாபரேடிவ் சொசைடிகளுக்கு நாம் கொடுப்பதன் மூலம் மக்களின் நலன் பாதிக்கப்படுமா, பாதிக்கப்படாதா என்பதைப்பற்றியும் சிந்திக்கவேண்டிய கட்டத்திலே இருக்கிறோம். இரண்டே இரண்டு கூட்டுறவு நிறுவனங்கள்தான் என்று எடுத்துச் சொன்னார்கள். அதேபோல் பங்குதாரர்களுக்குத் தரவேண்டுமென்றும் எடுத்துச் சொன்னார்கள். இப்படி ஒவ்வொருவருக்கும் நாம் "எக்செம்ப்ஷன்" கொடுத்துக்கொண்டே போவோமானால், இந்தச் சட்டம் உச்சவரம்புச் சட்டம் என்ற நிலையிலேயிருந்து மாறி மிச்ச வரம்புச் சட்டம் என்ற நிலைக்கு வந்துவிடும் என்ற காரணத்தால்தான் இதை இப்போது ஏற்றுக்கொள்ள முடியாத நிலையிலே அரசாங்கம் இருக்கிறது என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். இந்த ' ' preference to Co-operative society ' என்பதைப்பற்றி சுப்ரீம் கோர்ட்டிலேகூட ஒரு தீர்ப்பிலே சொல்லியிருக்கிறார்கள். 6-02 p.m.

"The Co-operative Society will be entitled to preference under this proviso only if other things are equal. If the rival claimants are more qualified the question of preference will not arise."

(Private Motor Workers' Industrial Co-operatives vs. S.T.A.T.)

என்று சொல்லியிருக்கிறார்கள். அதை வைத்துத்தான் நமக்கு மக்களின் நலன் பாதிக்கப்படாமல் 10 பஸ்கள் போதும், ஒரு வயபிள் யூனிட்டுக்கு 5 பஸ்கள் போதும் என்று எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். கோவாப்பரேடிவ் சொசைடிகளுக்கு 'Other things being equal, preference' உண்டு என்று சட்டத்திலேயே இருக்கிறது. எனவே உரிமங்களைக் கொடுக்கின்றபோது, அது 'இன்விடியஸ் டிஸ்டிங்ஷன்' ஆகாதா என்பதையும் பரிசீலிக்க வேண்டியிருக்கிறது. இந்த வகையிலேதான் அவர்களுக்கு விதிவிலக்கு அளிக்க முடியாத நிலையிலே இருக்கிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

[திரு. எஸ். ராமச்சந்திரன்] [21st July 1971

ஒரு மாதத் தவணை போதாது சரண்டர் ஆஃப் பர்மிட்டுக்கு என்று சொன்னார்கள். அந்த உரிமங்களைத் திருப்பித் தருவதற்கு ஏற்கனவே "ஆர்டினன்ஸ்" இருக்கிறது. ஆகவே சட்டம் ஆகிற வரையில் அவர்கள் காத்துக் கொண்டிருக்க வேண்டும் என்ற நிலை இல்லை. ஏற்கெனவே அவசரச் சட்டம் இருக்கிறது. ஆகையினாலே அது தேவையில்லை என்று நான் கருதுகிறேன்.

50 பஸ்களுக்கு மேல் உள்ளவர்களுக்கு 10 பஸ் தர வேண்டுமென்று கேட்டார்கள். நாட்டுடமை ஆக்கும் சட்டம் வருகின்றபோது அவர்கள் அந்தக் கருத்தைத் தெரிவிக்கலாம். ஆகவே இந்தக் கூட்டுறவு நிறுவனங்களுக்கு நாம் "எக்செம்ப்ஷன்" தர வேண்டுமென்று வற்புறுத்தவேண்டிய அவசியமில்லை என்று மாண்புமிகு எதிர்க் கட்சி உறுப்பினர்களைக் கேட்டுக்கொண்டு அமர்கிறேன்.

MR. CHAIRMAN : The question is—

"That the Motor Vehicles (Tamil Nadu Second Amendment) Bill, 1971 (L.A. Bill No. 21 of 1971), as passed by the Assembly, be taken into consideration."

The motion was put and carried and the Bill was taken into consideration.

Clauses 2 to 5 were put and carried.

*Clause* 6.

MR. CHAIRMAN : The question is—

"That clause 6 do stand part of the Bill".

THIRU V. THANGAPANDIAN : I move—

"In clause 6, for the expression "section 62-D' substitute the expression 'sections 62-D and 62-E'."

பேரவைத் தலைவரவர்களே, என்னுடைய பேரிலே கொடுக்கப்பட்டுள்ள இந்தத் திருத்தத் தீர்மானத்தை நான் வலியுறுத்திச் சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். ஏற்கனவே இங்கு பேசிய உறுப்பினர்கள் இந்த மசோதாவை வரவேற்றுப் பேசியிருக்கிறார்கள். நம்முடைய மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் இந்த மசோதாவை ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். இந்தச் சட்டத்தை முழுமையாக்கும் நோக்கத்தோடு தான் என்னுடைய இந்தத் திருத்தப் பிரேரணையைக் கொடுத்திருக்கிறேன். பேருந்துகளுக்கு உச்ச வரம்பு கொண்டு வரப்படும்போது, தனிப்பட்டவர்களுக்கு உள்ள உரிமங்கள் அப்படியே . . . .

MR. CHAIRMAN : The hon. Member's amendment must be seconded by another Member.



21st July 1971]

**திரு. எம். சங்காலிங்கம் பிள்ளை :** நான் இந்தத் திருத்தத்தை வழிமொழிகிறேன்.

திரு. ஜி. சுவாமிநாதன்: தலைவரவர்களே, பாக்டீரியலஜிஸ்ட் துறையிலும், சோஷலிஸ்ட் பதவிகள் கடந்த பத்து ஆண்டுகளாகவே நிரப்பப்படாமலிருப்பது அமைச்சரவர்களுக்குத் தெரியுமா என்பதை அறிய விரும்புகிறேன். அதற்கான காரணங்கள் என்ன என்பதை அமைச்சரவர்கள் விளக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

@ Printed as Appendix I on pages 73-75.





மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, இதுபற்றி அவையில் வைக்கப்பட்டுள்ள விவர அறிக்கையைத் தவிர, மற்றபடி வேறு விவரங்கள் ஏதும் என்னிடமில்லை. இப்படி நிரப்பப்படாமலிருக்கின்ற பதவிகள்கூட புரொபசர்ஸ், அஸிஸ்டெண்ட் புரொபசர்ஸ் என்பவைகள்தான். அஸிஸ்டெண்ட் சர்ஜவகளில் 14-ல் 7 நிரப்பப்பட்டுள்ளன என்ற இந்த விவரத்தைத்தான் இப்போது தெரிவிக்க முடியும்.

திரு. ஜி. சுவாமிநாதன்: இந்த விவர அறிக்கையைப் பார்த்தால், கிட்டத்தட்ட ஒவ்வொரு துறையிலும் சரி பாதி காலியாகவே இருக்கிறது என்பது தெரிய வரும். அனடமி என்ற பிரிவில் 6-ல் 3 பேர் இருக்கிறார்கள் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதே போல பாக்டீரியலஜிஸ்ட் டியூட்டர்களில் தான்கில் மூன்று இல்லை என்று தெரியவருகிறது. இன்னும் பாதாலஜியில் 10-ல் மூன்று பேர் இல்லை என்று விவர அறிக்கை சொல்கிறது. இப்படி ஒவ்வொரு துறையிலும் கிட்டத்தட்ட பாதியளவு நிரப்பப்படாமல் அதுவும் பல ஆண்டுகளாக நிரப்பப்படாமல் இருப்பதற்குக் காரணம் என்ன? இதை அரசு உடனடியாகக் கவனித்து ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, 'Clinical side' நேரிடையாக மருத்துவம் செய்கிற துறை. இந்தத் துறையைச் சேர்ந்த பகுதிகளில் ஆசிரியர்களும், துணை ஆசிரியர்களும், டியூட்டர்களும் மிகுதியாக இடம் பெறுகிறார்கள். வெறும் ஆராய்ச்சிப் பகுதியான மனையியல், நுண்ணுயிரியல், உயிர் வேதியியல், உடலமைப்பியல் போன்ற பகுதிகளில் பொதுவாக அதிக ஆர்வத்தோடு முன்வருவதில்லை. இப்படி ஆர்வத்தோடு முன்வராத காரணத்தினால் பல பதவிகள் நிரப்பப்படாமல் இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. ஜி. சுவாமிநாதன்: ஆப்ட்டிரிக்ஸ், ஜினேகாலஜி பிரிவில் பல இடங்கள் நிரப்பப்படாமல் இருக்கின்றன. இந்த விவர அறிக்கையைப் பார்த்தால், இந்தப் பகுதியில் டியூட்டர்கள் மூன்று பேரில் ஒருவர் கூட நியமிக்கப்படாமல் இந்த மூன்று பதவிகளும் பல ஆண்டு காலமாக நிரப்பப்படாமலேயே இருந்து வருகின்றன. இதற்கான காரணங்கள் என்ன? புரோபசர்கள் மூன்று பேர் சாங்ஷன் செய்யப்பட்டிருக்கிறார்கள். இதில் இரண்டு பேர் வசமலேயே இருந்தார்கள். இப்படி இரண்டு பேர் கிடைக்காமலிருப்பதற்கான காரணம் என்ன? இது மிகவும் முக்கியமான பகுதி.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: இந்தக் கேள்வி விரிவாகக் கேட்கப்பட்டதன் நோக்கம் புலனாகிறது. வேண்டுமென்றே இப்படிக் காலியிடங்களை நிரப்பாமல் வைத்திருப்பது போலக் குறிப்பிட்டார்கள். இப்படிக் காலியாக இருப்பதற்குக் காரணம் சில மருத்துவர்கள், தகைமை நிலையத்தில் மிகச் சிறந்த பதவி வகிப்பவர்கள், பெரும்பாலும் ஒரு ஊரிலேயிருந்து மாற்றலில் போவதை காரணம் காட்டி அந்த மாறுதலை பெரும்பாலும் ஒப்புக்

கொள்ளவில்லை. விடுமுறை போட்டு விடுகிறார்கள். இப்போதுகூட நான் மாற்றிய சிலர் விடுமுறை போட்டிருக்கிறார்கள். அவர்கள் விடுமுறை கழித்து நாங்கள் நினைக்கிற இடங்களுக்குப் போட்டு விடுங்கள் என்று கேட்கிறார்கள். இதனால் பல சங்கடங்கள் ஏற்படுகின்றன. இந்தச் சங்கடத்திலிருந்து அரசு விடுதலை பெறுமென எதிர்பார்க்கிறேன்.

*Government Raja Mirasdar Hospital, Thanjavur*

*180 Q.—THIRU G. SWAMINATHAN: Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(a) whether it is a fact that the post of two Assistant Surgeons and a Family Planning Officer are kept vacant in the Obstetrics and Gynaecology Department at Government Raja Mirasdar Hospital, Thanjavur; and

(b) if so, the period for which they are kept unfilled?

*தஞ்சாவூர் அரசினர் இராஜா மிராசுதார் மருத்துவமனை*

திரு. ஜி. சுவாமிநாதன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தஞ்சாவூரிலுள்ள அரசினர் இராஜா மிராசுதார் மருத்துவமனையில் மகப்பேறு மருத்துவம்—பெண் நோய் மருத்துவத் துறையில், உதவி அறுவை மருத்துவர் பதவி இரண்டும், குடும்ப நலத்திட்ட அதிகாரி பதவி ஒன்றும் காலியாக இருப்பது உண்மையா?

(இ) ஆமெனில், எவ்வளவு காலமாக அவைகள் நிரப்பப் படாமல் உள்ளன?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) இல்லை.

(இ) எழாது.

திரு. ஜி. சுவாமிநாதன்: தஞ்சாவூரிலுள்ள அரசினர் இராஜா மிராசுதார் மருத்துவ மனையில் நான் முன்னாலே சொன்னது போல இரண்டு சிவில் சர்ஜன் பதவியும் 2½ ஆண்டுக் காலமாகக் காலியாக இருக்கிறது. குடும்பக்கட்டுப்பாடு பிரிவில் மருத்துவர் பதவி 9 மாதக் காலமாகக் காலியாக வைக்கப்பட்டுள்ளது. அவருக்குப் பதிலாக வேறு யாரையோ போட்டிருக்கிறார்கள். அவர் வந்து சேரவில்லை. அதனால் மூன்று மாதக் காலமாக இந்தப் பகுதி சரியான முறையிலே நடைபெறவில்லை என்பது அரசிற்குத் தெரியுமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: இதைப்பற்றி ஆங்கிலத்திலே இருப்பதைப் படித்தால் தெளிவுபடும் என்பதால் அதனைப் படிக்கிறேன்.

It is not a fact that the posts of two Assistant Surgeons and a Family Planning Officer are kept vacant in the Obstetrics and Gynaecology Department at Government Raja Mirasdar Hospital, Thanjavur. At present, there is only one vacant post of Assistant Surgeon in the Raja Mirasdar Hospital, Thanjavur, in the general line and not in a particular line with effect from 1st March 1971, consequent on the transfer of an Assistant Surgeon to Stanley Hospital, Madras. Necessary orders have already been issued on 29th May 1971 and the Assistant Surgeon is expected to join duty shortly.





THIRU G. SWAMINATHAN: Sir, I am definite that a post of Civil Surgeon is vacant in Thanjavur Hospital during the last one and a half years. One person was appointed from Tirunelveli and she has gone to America and the post is kept vacant for the past one year. Another lady who was posted there has been transferred and most probably she may not be joining. That being the case, I do not know how the Hon. Minister for Health is saying that there is no post of Civil Surgeon vacant there for the past one and a half years.

THE HON. THIRU K. ANBAZHAGAN: The hon. Member is mixing up two questions. This question pretains to whether it is a fact that the post of Family Planing Officer is kept vacant. Therefore, the answer also pertains only to Assistant Surgeon's post. In the last question, the hon. Member mentioned about the vacancies in the category of Professors in the Gynaecology Department. There I accepted that there were two vacancies. One of such vacancies was filled up recently.

*Land Grab Movement*

*166 Q.—THIRU P. THIRUGNANASAMBANDAM: Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether Government servants in Madurai district took part in the Land Grab Movement launched by the Right-Communist Party during 1970; and

(b) if so, the action taken on them?

*நிலப் பறி இயக்கம்*

திரு. பி. திருஞானசம்பந்தம்: மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1970-ம் ஆண்டு வலது கம்யூனிஸ்ட் கட்சி நடத்திய நிலப் பறி இயக்கத்தில் மதுரை மாவட்டத்தில் அரசு ஊழியர்கள் கலந்து கொண்டார்களா?

(இ) ஆம் எனில், அவர்கள் மீது எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: (அ) ஆம்.

(இ) 1970-ல் மதுரையில் நடந்த நிலப்பறி இயக்கத்தில் ஒரு அரசு ஊழியர் பங்கு கொண்டார். அவர் தற்காலிகமாக வேலையிலிருந்து நிறுத்தப்பட்டு அவர்மீது துறை அளவில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

திரு. பி. திருஞானசம்பந்தம் : அரசாங்க ஊழியர்கள் இம் மாதிரி கம்யூனிஸ்ட் இயக்கங்களில் பங்கு கொள்ளும்போது அவர்மீது சாதாரண இலாகா நடவடிக்கை மட்டும் எடுத்தால் போதாது. மீண்டும் இது போன்ற முயற்சிகளில் ஈடுபடாமலிருப் பதற்கு அரசு கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: பொதுவாக நிலப்பறி இயக்கத்தில் ஈடுபட்டவர்கள்மீது போடப்பட்ட வழக்குகள் கைவிடப்பட்ட பிறகு அவர்கள் விடுதலை செய்யப்பட்டிருக்கிறார் கள். ஆகவே இவர்கள் மீது இலாகா பூர்வமான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

திரு. ஜி. சுவாமிநாதன்: அரசு ஊழியர்கள் இத்தகைய இயக் கங்களில் பங்கு கொண்டால், அவர்கள் மீது இலாகா பூர்வமான நடவடிக்கை எடுக்கப்பட்டு அவர்கள் வேலையிலிருந்து வெளி யேற்றப்படுவார்களா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: இப்போது அவர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. விசாரணைக்குப் பிறகு தான் அவர்கள் மீது என்ன நடவடிக்கை எடுக்க முடியும் என்பதைக் கூற முடியும்.

*Voting rights to the Primary School Teachers*

*167 Q.—THIRU G. SWAMINATHAN: Will the Hon. the Chief Minister be pleased to state the steps taken by the State Government to give voting rights to the Primary School Teachers to elect representatives to the State Legislative Council?

**ஆரம்பப் பள்ளி ஆசிரியர்களுக்கு வாக்குரிமை**

திரு. ஜி. சுவாமிநாதன்: மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

சட்ட மன்ற மேலவைக்கு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க ஆரம்பப் பள்ளி ஆசிரியர்களுக்கு வாக்குரிமை அளிப்பதற்கு, மாநில அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: சட்ட மன்ற மேலவையின் ஆசிரியர்கள் தொகுதிக்கு வாக்களிப்பு உரிமைகளை தொடக்க அல்லது ஆரம்பப் பள்ளிகளிலுள்ள ஆசிரியர்களுக்கு நீட்டிக்கும் செயற்குறிப்பு இந்திய அரசிற்கு அனுப்பப்பட்டது. இது அந்த அரசின் பரிசீலனையிலுள்ளது.

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி: அதே நேரத்தில் தமிழில் புலவர் பட்டம் பெற்றவர்களுக்கும் இந்த உரிமை வழங்கப்பட வேண்டு மென்ற கோரிக்கை இருந்து வருகிறதே. இதற்கும் அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறதா?





மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: இப்போது கேட்கப்பட்ட கேள்வி சட்ட மன்ற மேலவைக்கு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க ஆரம்பப் பள்ளி ஆசிரியர்களுக்கு வாக்குரிமை அளிப்பதற்கு, மாநில அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை என்பது. அதற்கு நான் அளித்துள்ள பதிலில் தொடக்க அல்லது ஆரம்பப் பள்ளிகளிலுள்ள ஆசிரியர்களுக்கு வாக்களிப்பு உரிமைகளை நீட்டிக்கும் செயற் குறிப்பு இந்திய அரசிற்கு அனுப்பப்பட்டது, அது பரிசீலனையில் இருந்து வருகிறது என்று குறிப்பிட்டேன். இதைப்பற்றி விளக்கம் வேண்டுமென்றால், தனியாகக் கேள்வி போட வேண்டும்.

திரு எஸ். முத்துசாமி: தலைவரவர்களே, இது பரிசீலனையில் இருந்து வருவதாக முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். இந்தப் பரிசீலனையை விரைவுபடுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். தமிழ்நாட்டில் 1½ லட்சம் தொடக்கப்பள்ளி ஆசிரியர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு வாக்குரிமை வழங்கத்தக்க முயற்சியை இந்த அரசு விரைவுபடுத்த நடவடிக்கை எடுத்துக்கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு மு. கருணாநிதி: தொடக்கப்பள்ளி ஆசிரியர் களுக்கும் வாக்குரிமை தர வேண்டுமென்று மத்திய அரசிற்கு எழுதியிருக்கிறோம். ஆசிரியர்கள் தொகுதியே இருக்க வேண்டுமா என்று மத்திய அரசு யோசித்துக்கொண்டிருக்கிறது. இத்தகைய நிலைமையில் மத்திய அரசு சிந்தித்துக்கொண்டிருக்கிறது.

திரு எஸ். ஜெயராம செட்டியார்: தொடக்கப்பள்ளி ஆசிரியர் களுக்கு வாக்குரிமை அளித்தால், எத்தனை ஓட்டர்கள் அதிகமா வார்கள் என்பதைத் தெரிவிக்க முடியுமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: இது விவரம் என்னிட மில்லை. இவர்களுக்கு வாக்குரிமை அளிக்கப்பட வேண்டு மென்பதை ஒப்புக்கொள்கிறேன்.

திரு. எஸ். முத்துசாமி: ஆசிரியர்கள் தொகுதி இருக்கும் வரையில், தொடக்கப்பள்ளி ஆசிரியர்களுக்கும் வாக்குரிமை அளிக்கும் முயற்சியில் இந்த அரசு ஈடுபடுமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: ஆசிரியர்கள் தொகுதி இருக்கும் வரையில், இந்த வாக்குரிமையை ஆரம்பப் பள்ளி ஆசிரியர்களுக்கும் அளிக்க வேண்டுமென்று தமிழக அரசு மத்திய அரசை வலியுறுத்திக் கொண்டு வருகிறது.

திரு. எம். ராஜா அய்யர்: தமிழகத்தில் ஆரம்பப் பள்ளிகளில் 1 முதல் 5 வகுப்புகள் உள்ள பள்ளிகள் தொடக்கப்பள்ளிகள் என்றும், அதற்கு மேலே 6, 7, 8, வகுப்புகள் உள்ள பள்ளிகள் நடுத்தரப் பள்ளிகள், மிடில் ஸ்கூல் என்றும் அமைக்கப்பட் டுள்ளன. இப்படி மிடில் ஸ்கூல் ஆசிரியர்களாகப் பணியாற்றுகிற ஆசிரியர்கள் வாக்குரிமை பெறுகின்றார்கள். 1972-லே நடக்கும் ஆசிரியர்கள் தொகுதி தேர்தலில் ஆரம்பப் பள்ளி ஆசிரியராக இருந்தாலும், மிடில் ஸ்கூல் பள்ளி ஆசிரியர்களாக ஓட்டுரிமை பெறுவார்களா?

[22nd July 1971

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: இப்போது மிடில் ஸ்கூல் ஆசிரியர்களுக்குக் கொடுக்கப்பட்டு வருகிறது என்று கருதுகிறேன்; எலிமெண்டரி ஸ்கூல் டீச்சர்களுக்கும் கொடுக்க வேண்டுமென்பது தான் அரசாங்கத்தின் கருத்து.

திரு. சி. வி. ராஜகோபால்: ஆசிரியர்களுக்கு மேல்சபையில் அதிகப் பிரதிநிதித்துவம் இருக்கிறது என்ற காரணத்தினால், அந்தத் தொகுதியைக் குறைப்பதற்கு முயற்சி செய்கிறார்கள் என்று நினைக்கிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: இவர்கள் அதிகமாக வருகிறார்களா அல்லது குறைவாக வருகிறார்களா என்பது அல்ல பிரச்னை. ஆரம்பப்பள்ளி ஆசிரியர்களுக்கும் வாக்குரிமை வேண்டும் என்பது தான் இப்போது விவாதத்திலிருக்கிற பிரச்னை.

### *Slums in Madras City*

*168 Q.—THIRU V. ISVARMURTI: Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether the number of slums in Madras City is on the increase in recent years; and

(b) if so, the steps taken by the Government to meet the situation?

### சென்னை மாநகரில் குடிசைகள்

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி: மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சமீப ஆண்டுகளில் சென்னை மாநகரில் குடிசைகளின் எண்ணிக்கை பெருகிக் கொண்டு வருகிறதா?

(இ) ஆமெனில், அந்த நிலைமையைச் சமாளிக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: (அ) ஆம்.

(இ) தமிழக அரசு 1970-ம் ஆண்டு செப்டம்பர் திங்களில் குடிசை மாற்று வாரியம் ஒன்றை ஏற்படுத்தியது. திட்டங்களை செயல்படுத்துவதற்கான அதிகாரங்களை வாரியத்திற்கு அளிப்பதற்கென்று ஒரு தனிச்சட்டத்தையும் அரசு ஏற்படுத்தியுள்ளது.

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி: எவ்வளவுதான் குடிசை வாரியம் அமைத்து நடவடிக்கை எடுத்தாலும் கூட, குடிசைகள் வளர்ந்து கொண்டிருப்பதற்குக் காரணம் வீடுகளில் வேலை செய்யக்கூடிய பலர், தாங்கள் வேலை செய்யும் வீடுகளுக்குப் பக்கத்திலேயே இருக்க வேண்டுமென்ற காரணத்தினால், குடிசைகளை அமைத்துக் கொண்டு வருகிறார்கள். அதனால் வீடு கட்டுகிறவர்கள் இனிமேல் தங்கள் வீட்டில் வேலை செய்கிறவர்களுக்கும் குடியிருப்புகள் "சர்வேண்ட்ஸ் குவார்ட்டர்ஸ்" கட்ட வேண்டுமென்று ஒரு சட்டத்தை இந்த அரசு கொண்டு வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.



22nd July 1971]

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: வீடுகளில் வேலை செய்கிறவர்கள் தாங்கள் வேலை செய்யும் வீடுகளுக்குப் பக்கத்திலேயே இருக்க வேண்டுமென்பதற்காக இப்படிக் குடிசைகள் வருகின்றன என்று கூறப்பட்ட கருத்து முழுமையாக ஒப்புக்கொள்ளக் கூடிய கருத்து அல்ல. வேறு பல தொழிற்சாலைகளில் வேலை செய்வதற்காக, கிராமப்புறங்களிலிருந்து ஏராளமான மக்கள் சென்னை நோக்கி வந்து கொண்டிருக்கிறார்கள். சென்னை மாநகரத்தில் 1947-ல் 200 குடிசைப் பகுதிகள் இருந்தன. 1954-ல் 306 குடிசை அமைப்புகள், 1961-ல் 548, இப்போது 650 என்ற அளவிற்கு வளர்ந்துள்ளன. இதைக் கூடுமான வரையில் தடுத்து நிறுத்துவதற்கு இப்போது வகுத்துள்ள இந்த 7 ஆண்டுகாலத் திட்டம் இனிமேல் புதிய குடிசைகள் தோன்றுத அளவிற்கு தடுக்கக் கூடும்.

திரு. ஜி. சுவாமிநாதன்: குடிசை மாற்று வாரியம் மத்தியதர ஊதியக்காரர்களுக்கு வீடுகள் கட்டிக்கொடுக்கப் போவதாகக் கேள்விப்படுகிறேன். வீட்டு வசதி வாரியம் இதைச் செய்து கொண்டிருக்கையில், குடிசை மாற்று வாரியமும் இப்படிப்பட்ட பணியில் ஈடுபட வேண்டிய அவசியம் என்ன என்பதை முதலமைச்சர் அவர்கள் விளக்குவார்களா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: குடிசை மாற்று வாரியம் இப்படிப்பட்ட செயலில் ஈடுபடப் போவதில்லை.

திரு. வி. தங்கபாண்டியன்: 1967-க்கு முன்பு இருந்த குடிசைப் பகுதிகள் எவ்வளவு? 1967-ல் கழகம் ஆட்சிப் பொறுப்புக்கு வந்த பிறகு ஏற்பட்ட குடிசைப் பகுதிகள் எவ்வளவு என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: 1956-லிருந்து 1967 வரை போடப்பட்ட குடியிருப்புகள் நாலாயிரத்து இருபத்து மூன்று. 1961-ல் 3,070, 1962-ல் 3,082, 1967 வரையில் 4,213.

திரு. சி. வி. ராஜகோபால்: கிராமப்புறங்களிலிருந்து ஏராளமானவர்கள் வந்து குடிசைகளைக் கட்டுகிறார்கள். நாள் ஒன்றுக்கு நூற்றுக்கணக்கானவர்கள் இப்படி சென்னை நகரத்தை நோக்கி வந்துகொண்டிருக்கிறார்கள். இப்படிக் கிராமங்களிலிருந்து வருகிறவர்களை அங்கேயே தடுத்து நிறுத்தி அவர்களுக்கு வேண்டிய வசதிகளை அளிப்பதற்கு, குடிசை வாரியம் போன்ற அமைப்பை ஏற்படுத்தி, அவர்களுக்கு வேண்டிய வசதிகளைச் செய்வதற்கு ஆட்சியாளர்கள் நடவடிக்கை எடுத்துக்கொள்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: கிராமப்புறங்களில் இருக்கும் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்குவதற்காகதான் கிராமப்புற மக்களுடைய நலனை முன்னிட்டு, மத்திய அரசு ஒரு திட்டத்தை அறிமுகப்படுத்தி, அந்தத் திட்டத்தை மாநில அரசும் ஏற்று அதைச் சிறப்பாக நடைபெறச் செய்ய வேண்டுமென்ற முறையிலே நடவடிக்கைகளை மேற்கொண்டு

வருகிறது. இதற்கென்று மத்திய அரசு நிதி ஒதுக்கியிருக்கிறது, மாநில அரசும் நிதி ஒதுக்கி இந்தப் பணி தீவிரமாக நடைபெற்றுக்கொண்டு வருகிறது.

### *Linguistic minorities*

* 169 Q.—THIRU V. ISVARMURTI : Will the Hon. the Chief Minister be pleased to state the steps taken by the Government to safeguard the interests of the Linguistic minorities in the State?

### சிறுபான்மை மொழி பேசுபவர்கள்

**திரு. வி. ஈஸ்வரமூர்த்தி :** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

இம்மாநிலத்திலுள்ள சிறுபான்மை மொழி பேசுபவர்களின் நலனைக் காப்பதற்காக அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** அவைமுன் விவர அறிக்கை@ ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

**திரு. வி. ஈஸ்வரமூர்த்தி :** தெலுங்கு பேசக்கூடிய மக்களுக்கு உயர்நிலைப் பள்ளிகளில், குறிப்பாக தர்மபுரி மாவட்டத்திலே பல பள்ளிகளில், தெலுங்கு மொழி ஆசிரியர்களோ, பாடப் புத்தகங்களோ இல்லாதிருக்கிற நிலை இந்த அரசிற்குத் தெரியுமா? இப்படிப்பட்ட பிரதேசத்தில் தெலுங்கு மொழியிலே உயர் கல்வி அளிப்பதற்கு அரசு என்ன வசதிகளைச் செய்து கொடுத்திருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** தர்மபுரி மாவட்டத்தில் பாடப் புத்தகங்கள் கிடைப்பதில் சிரமம் இருப்பதாக அரசிற்குத் தகவல் வரவில்லை. மாண்புமிகு உறுப்பினர் கூறியதுபோல, ஏதாவது தொல்லைகள் இருக்குமானால், உடனடியாக அவற்றைப் போக்குவதற்குத் தக்க நடவடிக்கை எடுக்கப்படும். உறுப்பினர் அவர்கள் கொடுத்த தகவல்களை வைத்துக்கொண்டு, இதைப்பற்றி விசாரிக்கப்படும். வேண்டிய நடவடிக்கைகள் எடுத்து அவர்களுக்கு வசதி செய்து கொடுக்கப்படும்.

**திரு. எஸ். முத்துசாமி :** சிறுபான்மையினரின் நலன்களைப் பாதுகாத்து, பெரும்பான்மையினரின் உரிமைகளையும் காப்பதற்கு அரசு முற்படுமா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** சிறுபான்மையோர் நலனைக் காக்கும் விஷயத்தில் இந்த அரசு நிரம்ப அக்கறை கொண்டிருக்கிறது.

THIRU G. VASANTHA PAI : Will the Hon. the Chief Minister be pleased to state whether the Madras-Kerala Samaj has made representation to the Government that the interests of the Malayalees in the field of education are suffering and is there not a likelihood of the Kerala Government, which is giving great encouragement to the study of Tamil in Kerala, taking action countering such moves on the part of the Government?

*Printed as Appendix II on pages....



**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** சிறுபான்மையோருக்கு எல்லா வசதிகளும் செய்யப்பட்டு வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்ட மகஜர் அரசிற்கு வந்ததாகத் தெரியவில்லை.

**திரு. எம். ராஜா அய்யர் :** சௌராஷ்டிரா சமூகத்திற்கு அரசாங்கம் ஏதாவது சலுகைகள் அளிக்கவிருக்கிறதா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** சௌராஷ்டிரர்களுக்கு என்று சில பரிந்துரைகள் தமிழக அரசின் முன் வந்துள்ளன. அவை பரிசீலனையில் இருந்து வருகின்றன. அது முடிவுற்று ஏற்ற முறையில் அவர்களுக்கு நலன்கள் செய்து கொடுக்கப்படும்.

### *Exhumation of three bodies*

* 170 Q.—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Chief Minister be pleased to state :

(*a*) whether it is a fact that three bodies were exhumed from a Cane Field in Soundarasolapuram near Pennadam on 22nd March 1970;

(*b*) if so, the results of the investigation made so far; and

(*c*) the action taken to prevent such incidents in future?

### மூன்று சடலங்கள் தோண்டியெடுக்கப்பட்ட நிகழ்ச்சி

**திரு. ஜி. சுவாமிநாதன் :** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) பெண்ணாடத்திற்கருகே, சௌந்தரசோழபுரத்தில், 22-3-1970 அன்று கரும்புத் தோட்டத்திலிருந்து மூன்று சடலங்கள் தோண்டியெடுக்கப்பட்டன என்பது உண்மையா?

(இ) ஆம் எனில், இதுவரை செய்யப்பட்டுள்ள புலனாய்வுகளின் முடிவுகள் யாவை?

(உ) அத்தகைய நிகழ்ச்சிகள் வருங்காலத்தில் நிகழாவண்ணம் தடுக்க எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** (அ) ஆம்.

(இ) பெண்ணாடம் காவல் நிலையத்தில், பன்னிரண்டு பேர்களுக்கு எதிராக இ.பி.கோ. 304, 120-பி, 201 ஆகிய பிரிவுகளின் கீழும், இந்திய வெடி மருந்துகள் சட்டத்தின் 4, 5-ஆவது பிரிவுகளின் கீழும் ஒரு வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது. அவர்கள் அனைவரும் கைது செய்யப்பட்டுள்ளனர். விருத்தாசலம் சப் மாஜிஸ்திரேட் நீதி மன்றத்தில் தொடக்கநிலைக் குற்றச்சாட்டுதான் காலில் செய்யப்பட்டுள்ளது.

(உ) தீவிரவாதிகளின் நடவடிக்கைகளைக் காவல்துறையினர் கவனிப்புடன் கண்காணித்து வருகின்றனர். தேவைப்படுமிடங்களில் எல்லாம் நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

திரு. ஜி. சுவாமிதாதன் : அதிலே ஈடுபட்டவர்கள் நக்சலைட்டு இயக்கத்தைச் சேர்ந்தவர்களா ? அந்த இயக்கத்தைத் தடை செய்ய ஒரு சட்டம் கொண்டு வர வேண்டுமென்று அகில இந்திய அரசிற்கு மாநில அரசு பரிந்துரை செய்துள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இதில் சம்பந்தப்பட்டவர்கள் நக்சலைட்டு இயக்கத்தைச் சேர்ந்தவர்கள்தான். இந்த இயக்கம் தடை செய்யப்பட வேண்டுமென்று மாநில அரசின் சார்பில் மத்திய அரசிற்கு எந்தப் பரிந்துரையும் இதுவரையில் செய்யப்படவில்லை.

திரு. டி. கே. சுப்பையர் : தலைவரவர்களே, இந்தக் குற்றச் சாட்டிலே ஈடுபட்ட 12 நபர்களின் பெயர்கள் என்னென்ன ? அவர்கள் விடுதலை செய்யப்பட்டு ஜாமீனில் இருக்கிறார்களா ? முன்னாள் சட்டமன்ற உறுப்பினருடைய மனைவி ஒருவரும் இதிலே ஈடுபட்டிருந்தார்கள். அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இதிலே ஈடுபட்ட 12 பேர்களின் பெயர்கள் என்ன என்ற விவரம் என்னிடம் இல்லை. அதிலே முக்கியமான தலைவன் என்று சொல்லப்பட்ட கலியபெருமாள் என்பவர் 20-5-1971-ல் காவல்துறையினரால் கைது செய்யப்பட்டிருக்கிறார்.

திரு. எஸ். ஜெயராம செட்டியார் : தலைவரவர்களே, சமீபத்தில் கன்னியாகுமரி மாவட்டத்தில் தங்கசாமி நாடார் என்ற லட்சாதிபதியைக் கொலை செய்வதில் ஈடுபட்டதாகக் கண்டுபிடிக்கப்பட்டவர்களில் எம்.ஏ., பி.ஏ. பட்டதாரிகளும் இருப்பதாகச் செய்தி பார்த்தேன். இந்த மாதிரி நக்சலைட் காரியங்களில் அதிகம் படித்தவர்களும் ஈடுபட்டிருக்கின்றார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இந்த வழக்கில் சில படித்தவர்களும் ஈடுபட்டிருக்கின்றார்கள். குறிப்பாக நாடு வேகமாக ஒரு புதிய மாற்றம் காண வேண்டுமென்றும், சமுதாயத்தில் தலைகீழ் மாற்றம் காண வேண்டுமென்றும், தங்களை அதற்காக அவர்கள் அர்ப்பணித்துக்கொண்டு இப்படியெல்லாம் காரியங்களில் ஈடுபடுகிறார்கள். நாட்டின் எதிர்காலம் நல்ல வகையில் அமைதியான முறையில் மாற வேண்டுமென்பவர்களுடைய கருத்துத்தான் இன்றைக்கு மேலோங்கியிருக்கிறது. அந்தக் கருத்தைத்தான் நான் சபையில் பேசுகிற நேரத்தில் தீவிரவாதிகளுக்கு ஒரு வேண்டுகோளாக விடுத்தேன். அவர்களுடைய உணர்வுகள் பாராட்டத் தக்கவை என்றாலும் இதை நிறைவேற்றுவதற்கான செயல் முறைகள் அருவருக்கத்தக்கவை. அது நாட்டைக் கொலை வெறிக்கு ஊக்குவித்து, நாட்டைக் கொலைக்காடாக ஆக்கிவிடும். ஆகவே அந்த முறையைக் கைவிட்டுவிட்டு, நல்ல அரசிற்கு நாட்டு மக்கள் தங்களின் வாழ்வும் நல்ல முறையில் அமைதியான முறையில் மலர்வதற்கு இந்த அரசிற்கு ஒத்துழைப்பைக் கொடுக்க வேண்டும்.



என்னவே தீவிரவாதிகள் தங்களை இப்படித் தவறான வழிகளில் ஈடுபடுத்திக் கொண்டு பலியிட்டுக்கொள்ளத் தேவையில்லை. மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய இடங்களுக்குச் செல்கின்ற நேரத்தில் இந்தக் கருத்துக்களை மக்களுக்கு வெளிப்படுத்த வேண்டும். இந்தக் கருத்து நாட்டு மக்கள் மத்தியில் பரவுமானால், இப்படிக் கொலை வெறியின் மூலம் நாட்டின் முன்னேற்றத்தை ஏற்படுத்தி விடலாம் என்ற கருத்துக்கு, நாட்டில் மதிப்பு இல்லாமல் போய்விடும்.

திரு. சா. கணேசன் : இந்த நக்சலைட்டுகள் மீது எந்தவித நடவடிக்கையும் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று மைய அரசிற்குப் பரிந்துரை செய்து அனுப்பவில்லை என்று முதலமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அப்படியானால் நமது மாநில அரசே தக்க நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டு இந்தவிதமான கேடுகள் ஏற்படாமல் தடுப்பதற்கு முன்வந்துள்ளதா, என்னென்ன நடவடிக்கைகள் எடுத்துக்கொண்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : மாநில அரசு இப்படிப்பட்ட தீவிரவாதிகளுடைய நடவடிக்கைகளைக் கண்காணிப்பதற்கு, அவைகளைத் தடுத்து நிறுத்துவதற்கு என்று ஒரு தனிப் பிரிவை ஏற்படுத்திச் செயல்பட்டுக்கொண்டு வருகிறது.

திரு. சா. கணேசன் : மாண்புமிகு முதலமைச்சரவர்களின் விடையில் இவர்களின் உணர்ச்சி அல்லது நோக்கம் பாராட்டத் தக்கது என்று பொருள் தருமாறு கூறினார்கள். இந்த நக்சலைட்டுகள் என்பவர்கள் ஏதோ சமுதாயத்திலே மறுமலர்ச்சி அல்லது வளர்ச்சி ஏற்படவேண்டும் என்பதற்காகக் காரியம் செய்வதில்லை. அவர்கள் செய்கிற கொலைக்குப் பக்கத்திலே, அந்த இடங்களுக்குப் பக்கத்திலே மாவோவின் சீனப் பிரசுரங்கள், படங்கள், கோஷங்கள் போடப்பட்டுள்ளன. அரசு இவற்றைக் கவனத்தில் கொண்டு, இவை உண்மையிலே சீன உளவாளிகளால் இந்த நாட்டில் செய்யப்படுகிற தேசத் துரோகச் செயல்கள் என்பதால் தக்க நடவடிக்கைகள் எடுத்து இவற்றைத் தடுப்பதற்கு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அந்த அடிப்படையிலே ஆங்காங்கு காரியங்கள் செய்தாலும், அவர்கள் நம் நாட்டில் மறுமலர்ச்சியை ஏற்படுத்துவதற்கு மாவோவின் சிந்தனையைத் தேடிப் போக வேண்டியதில்லை. மகாத்மாவின் சிந்தனைகளே போதுமென்று சொன்னேன்.

*Madurai Labour Welfare Junior Basic School*

*171 Q.—THIRU M. RAJAH IYER: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state :

(a) whether any teacher serving in the Madurai Labour Welfare Junior Basic School who was wrongfully ousted by the Management on 16th November 1967 has not yet been reinstated in service; and

[MR. RAJAH IYER.] [22nd July 1971

(b) if so, the action the Government propose to take to ensure compliance by the Management with the orders of the Department in this regard?

**மதுரை தொழிலாளர் நல இளநிலை ஆதாரப் பள்ளி**

**திரு. எம். ராஜா அய்யர்:** மாண்புமிகு கல்வி—உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மதுரை தொழிலாளர் நல இளநிலை ஆதாரப் பள்ளியில் (Junior Basic School) பணியாற்றும் ஆசிரியர் யாரேனும், அப்பள்ளி நிர்வாகிகளால் தவருக 16—11—1967-ஆம் நாளன்று பணியிலிருந்து எடுக்கப்பட்டு, இதுவரையில் பணியில் திரும்பவும் சேர்த்துக் கொள்ளப்படாமல் இருக்கிறாரா ?

(இ) ஆமெனில், இது குறித்துத் துறையின் ஆணைகளை நிர்வாகிகள் பின்பற்றுவதை உறுதி செய்ய அரசு எடுக்கத் கருதியுள்ள நடவடிக்கை யாது?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** (அ) ஆம்.

(இ) கல்வித்துறை அதிகாரிகளின் உத்தாவுக்கிணங்க, அவ்வாசிரியரை பள்ளி நிர்வாகத்தினர் மீண்டும் வேலைக்குச் சேர்த்துக் கொள்ளவில்லையாதலால் அப்பள்ளிக்குக் கொடுக்க வேண்டிய 1967, 1968, 1969, மற்றும் 1970-ஆம் ஆண்டுகளுக்கான நிர்வாக மானியத் தொகை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. வேலையிலிருந்து நீக்கப்பட்ட ஆசிரியரின் இடத்தில் நியமிக்கப்பட்ட ஆசிரியருக்கும், அப்பள்ளியில் புதிதாகச் செய்யப்பட்ட சில நியமனங்களுக்கான சம்பள மானியமும் நிறுத்தி வைக்கப் பட்டுள்ளது.

**திரு. எம். ராஜா அய்யர்:** நான்கு ஆண்டுகளாக அந்தப் பள்ளிக்குச் சேர வேண்டிய கிராண்ட் நிறுத்தப்பட்டிருக்கிறது. என்றாலும் அந்தப் பள்ளி நடந்துகொண்டு வருகின்றது. அந்த ஆசிரியருக்குப் பதில் வேறு ஆசிரியர் நியமிக்கப்பட்டிருக்கிறார். இந்தப் பள்ளி நிர்வாகத்தின் மீது நடவடிக்கை எடுக்க அரசாங்கம் ஏன் தயங்குகிறது என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தலைவரவர்களே, நடவடிக்கை எடுக்கத் தயக்கமில்லை. இன்றுள்ள சட்டப்படி அந்தப் பள்ளிக்குக் கொடுக்கப்படுகிற அங்கீகாரத்தை நிறுத்தலாம் அல்லது மானியத்தை நிறுத்தலாம். அந்தப் பள்ளியின் பராமரிப்புச் செலவு 4 ஆண்டுக் காலமாக நிறுத்தி வைக்கப்பட்டு, அந்த ஆசிரியருக்குப் பதிலாகச் சேர்த்துக் கொள்ளப்பட்ட வேறு ஆசிரியரின் சம்பள மானியமும் கொடுக்கப் படாமல் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. இந்த நிலைமையில் எந்த விதமான முடிவும் ஏற்படாமல் நீடித்துக்கொண்டிருக்கிறது. இதற்கு மேல் என்ன நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும் என்பதைச் சட்டப்படி அரசு ஆராய்ந்துகொண்டிருக்கிறது.



22nd July 1971]

**திரு. எஸ். முத்துசாமி:** தலைவரவர்களே, அரசு உத்தரவிட்டும் ஏற்காத பள்ளிகளை அரசே உடனடியாக எடுத்துக்கொள்ள வேண்டும். இதற்கான அவசரச் சட்டத்தை அரசு பிறப்பிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** இப்படிப்பட்ட தவறுகளைச் செய்து வரும் பள்ளிகளை அரசாங்கமே ஏற்று நடத்த வேண்டுமென்று ஒரு பரிந்துரையை அரசாங்கம் அமைத்த கல்விக் குழு தெரிவித்துள்ளது. இது அரசின் பரிசீலனையில் இருந்து வருகிறது. அந்தப் பரிந்துரைகளை ஏற்று எந்த அளவிற்கு ஒரு சட்டம் இயற்ற வேண்டுமென்பதை முடிவு செய்து வேண்டிய நடவடிக்கை எடுத்துக்கொள்ளலாம். அந்தச் சட்டத்தை இயற்றும் முயற்சியில் அரசாங்கம் ஈடுபட்டிருப்பதால், அவசரச் சட்டத்திற்குத் தேவையில்லை. முழுச் சட்டமாகவே கொண்டு வருவதற்கான முயற்சியிலே அரசாங்கம் ஈடுபட்டிருக்கிறது.

**திரு. எஸ். முத்துசாமி:** அதற்குள் இடைக்காலத்தில் என்ன நடவடிக்கையை எடுத்துக்கொள்ள அரசாங்கம் முயற்சிக்கிறது?

MR. CHAIRMAN : The hon. Member should not repeat the question once again. He should understand the reply of the Hon. the Minister for Education. The Hon. Member has repeated the same question once again without understanding the reply.

*President of the Suramangalam Town Panchayat*

*172 Q.—THIRU R. KRISHNASWAMY NAIDU : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state :

(a) whether the President of the Suramangalam Town Panchayat, Salem District, was removed from service for default in the payment of tax;

(b) whether judgment was given confirming his removal from Presidentship, even though he pursued the matter up to the Supreme Court;

(c) whether he continues in the President's post without convening any Panchayat meeting by virtue of temporary stay order issued in the lower court, in spite of the above mentioned orders against him; and

(d) if so, the action taken thereon by the Government?

**சூரமங்கலம் நகரப் பஞ்சாயத்துத் தலைவர்**

**திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு:** மாண்புமிகு கல்வி—உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்.—

(அ) சேலம் மாவட்ட சூரமங்கலம் நகரப் பஞ்சாயத்துத் தலைவர் வரி செலுத்தத் தவறிய காரணத்தால் பதவியிலிருந்து நீக்கப்பட்டாரா ?

[திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு] [22nd July 1971

(இ) ஆமெனில், அவ்வுத்திரவை எதிர்த்து சுப்ரீம் கோர்ட் வரை அவர் எதிர் வழக்காடியும், அவர் பதவி நீக்கம் சரியானதே என உறுதி செய்து தீர்ப்புகள் வழங்கப்பட்டனவா?

(உ) இத்தனை உத்திரவுகள் இருந்தும் முதலில் அவர் தாற்காலிக கீழ் கோர்ட்டின் அமுல் நிறுத்தத் தடையுத்தரவின் மூலம் பதவியிலிருந்த நிலையிலேயே பஞ்சாயத்தின் கூட்டத்தையும் கூட்டாமல், தலைவர் பதவியில் நீடித்து வருகிறாரா?

(எ) அப்படியானால், இதன் பேரில் அரசு எடுத்துக்கொண்ட நடவடிக்கைகள் என்ன?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** (அ) ஆம்.

(இ) ஆம்.

(உ) நீதி மன்றங்களில் தீர்மானம் ஆகும்வரை பதவியில் நீடித்திருந்தார்.

(எ) அடுத்து அடுத்து நீதி மன்றங்களில் வழக்கு நடந்து கொண்டு இருந்ததால் அரசு நடவடிக்கை எடுத்துக்கொள்ள சந்தர்ப்பம் ஏற்படவில்லை.

**திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு:** தலைவர் அவர்களே, சூரமங்கலம் பஞ்சாயத்துத் தலைவர் வரி செலுத்தத் தவறினார் என்ற காரணத்தால், சட்டப்படி சேலம் முன்சீப் கோர்ட்டில் அவர் அங்கத்தினராக இருப்பதற்கு உரியவரல்ல என்ற வழக்கு போட்டு, அங்கே அவர் அங்கத்தினராவதற்கு உரியவர் என்று தீர்ப்பு அளிக்கப்பட்டது. அதன்பேரில் ஐகோர்ட்டுக்கு வந்தார்கள். கீழ்க்கோர்ட்டுத் தீர்ப்பே சரி என்று அங்கே சொன்னார்கள். அதன்மீது சீஃப் ஜஸ்டிஸ்க்கு ரிட் அப்பீல் ஒன்று தாக்கல் செய்யப்பட்டது. அவரும் அது சரியான தீர்ப்பு என்று சொன்னார். சுப்ரீம் கோர்ட்டுக்குப் போய் அங்கேயும் அதே மாதிரி ஆயிற்று. கடைசியாக அதை அமுல்நடத்தாமல் மறுபடியும் சேலம் முனீசீப் கோர்ட்டில் "இன்ஜங்ஷன் ஆர்ட்டர்" வாங்கினார்கள். அதுவும் தள்ளுபடி செய்யப்பட்டது. இது வரையிலும் அந்தப் பஞ்சாயத்து நிர்வாக அதிகாரி துணைத் தலைவர் பதவியில் இல்லாத காலத்தில் நிர்வாகத்தை நடத்துவதற்கும் அனுமதிக்கவில்லை. ஒரு ஆண்டுக்காலம் இப்படியே கழிந்திருக்கிறது. இதுபற்றி அரசு என்ன நடவடிக்கை எடுத்துக்கொண்டது. ஜில்லா அதிகாரி என்ற வகையில் கலெக்டரைப் பார்த்து நிலைமையைச் சொல்லிநியாயமான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள்? அதற்குப் பிறகு நிலைமை என்ன ஆயிற்று? நிர்வாக அதிகாரியின் பேரில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது? சென்ற பஞ்சாயத்துத் தேர்தலில் யார் தலைவராக வந்தார்கள் என்று தெரியாது. அதுபற்றியும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, நான் சொல்ல வேண்டிய வரலாற்றின் பகுதியை மாண்புமிகு உறுப்பினர் தெளிவாக விளக்கினார்கள். தொழில் வரி செலுத்தவில்லை என்ற காரணத்தின் அடிப்படையில், சட்ட அடிப்படையில்



22nd July 1971] [மாண்புமிகு திரு இரா. நெடுஞ்செழியன்]

முன்சீப் கோர்ட்டில் வழக்கு தொடரப்பட்டது. அதன் அடிப்படையில் அவர் அந்தப் பதவியில் இருப்பதற்கு உரியவரல்லர் என்ற நிலைமை ஏற்பட்டது. அதற்கு மேல் கோர்ட்டுக்குப் போகும்போது, தடை உத்தரவு வாங்கி, பதவியில் இருந்தார்கள். கடைசியில் சுப்ரீம் கோர்ட் தீர்ப்பிற்குப் பிறகு அவர் பதவியில் இருப்பதற்கில்லை. சுப்ரீம் கோர்ட் 12-2-1970-ல் அவருடைய அப்பீலைத் தள்ளியது. அதற்குப் பிறகு கடைசியாக அவர் தலைமை தாங்கி 15—6—1970, 3—7—1970-ல் பஞ்சாயத்துக் கூட்டத்தை நடத்தினார். அதற்குள்ளாக பஞ்சாயத்துத் தலைவர்களே நேரடியாகத் தேர்ந்தெடுக்கும் முறை வந்துவிட்டது.

**திரு. கே. ராஜாராம்:** அதற்குத் தலைவர் தேர்ந்தெடுக்கப்பட்டாரா அல்லது தலைவர் இல்லாமலே நிர்வாக அதிகாரி நடத்துகிறாரா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** அதைப்பற்றிய குறிப்பில்லை. புதிய முறைப்படி தலைவர் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட வேண்டியிருப்பதால் அது வரையில் துணைத் தலைவர் இருப்பதாகக் கூறப்பட்டிருக்கிறது. தலைவர் தேர்ந்தெடுக்கப்பட்டதற்கான குறிப்பில்லை.

**திரு. கே. ராஜாராம்:** நிர்வாக அதிகாரி தலைவருக்கு உடந்தையாக இருந்து உப-தலைவரையும் நிர்வாகம் நடத்த முடியாமல் செய்துகொண்டிருக்கிறார். அதன் பேரில் தற்போது ஐகோர்ட்டில் கேஸ் போட்டிருக்கிறார்கள். அப்படிச் செய்துவரும் நிர்வாக அதிகாரி மீது சட்டரீதியான முறை மூலமாக விசாரணை செய்து, இம்மாதிரிக் குற்றச்சாட்டுகளின் பேரில் வேண்டிய நடவடிக்கை எடுக்க அரசாங்கம் முன்வருமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, அங்குள்ளவர் மறுபடியும் முனிசீப் கோர்ட்டில் தொழில் வரி தன் மீது விதிக்கலாமா என்று வழக்கு ஆரம்பித்திருக்கிறார்கள். முதலில் பதவியிலிருந்து நீக்கியது தவறு என்று சுப்ரீம் கோர்ட் வரையில் போனார். ஆகையால் அவர் மீண்டும் பதவிக்கு வரவில்லை. எதிர்க்கட்சித் தலைவர் குறிப்பிட்டதைப் போல நிர்வாக அதிகாரி உடந்தையாக இருந்தாரா இல்லையா என்று தெரியவில்லை. உடந்தையாக இருக்கும் சூழ்நிலை இருந்தால், அதற்கான நடவடிக்கை எடுப்பதற்கு முயற்சிக்கலாம்.

**திரு. கே. ராஜாராம்:** அது சம்பந்தமாக தற்போது கேஸ் போட்டிருக்கிறார்கள். அதன் நகலை அமைச்சர் அவர்களிடம் கொடுக்கிறேன். அதை விசாரித்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு:** ஒரு கோர்ட்டில் "ஸ்டே" உத்தரவு வாங்கி அமல் நடத்தாமல் அதை நிறுத்தி வைக்கும்போது அந்தத் தலைவர் பதவி வகிக்க அருகதையுடையவராக ஆகவில்லை. உப-தலைவர் தடை உத்தரவு வாங்கும் வரையில்

[திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு] [22nd July 1971

இருக்கிற காலத்தில் உப-தலைவர் அந்தப் பதவியை வகிக்கவோ பஞ்சாயத்து நடவடிக்கைகளை நடத்தவோ அனுமதிக்கப்பட்டிருக்கிறாரா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, இந்த வழக்கைப் படிக்கும்போது, எனக்கே விசித்திரமாக இருந்தது. சுப்ரீம் கோர்ட் தீர்ப்பு வந்த பிறகு, தலைவர் பதவியிலிருந்து நீக்கப்பட்டார் என்றும் துணைத் தலைவர் பதவியேற்றுக்கொண்டிருக்கிறார் என்றும் குறிப்பிருக்கிறது. சாதாரணமாக இந்த விஷயத்தை அங்குள்ள மாவட்ட ஆட்சித் தலைவரே கவனித்து அதற்கான நடவடிக்கையை எடுத்திருக்கலாம். நிர்வாக அதிகாரி உடந்தையாக இருந்திருப்பாராஞல், அதைக் கண்டறிந்து மாவட்ட ஆட்சித் தலைவரே விசாரித்திருக்கலாம். தெரியவில்லை. சுப்ரீம் கோர்ட் தீர்ப்புக்குப் பிறகு பதவியிழந்திருக்கும் தலைவருக்குப் பிறகு துணைத் தலைவர் பதவியை ஏற்றுக்கொண்டு நடத்தினர் என்ற குறிப்பு மட்டும் இருக்கிறது.

*Alagappa Chettiar Engineering College, Karaikudi.*

*173 Q.—THIRU M. SANKARALINGAM PILLAI: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state:

(a) whether there is any proposal with the Government to take over the management of the Alagappa Chettiar Engineering College at Karaikudi; and

(b) if so, the present stage of the proposal?

**காரைக்குடி அழகப்பச் செட்டியார் பொறியியல் கல்லூரி**

திரு. எம். சங்கரலிங்கம் பிள்ளை: மாண்புமிகு கல்வி உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) காரைக்குடி அழகப்பச் செட்டியார் பொறியியல் கல்லூரியை அரசே ஏற்று நடத்தும் செயற்குறிப்பு ஏதேனும் உண்டா?

(இ) ஆம் எனில், அது எந்நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:

(அ) ஆம்.

(இ) டாக்டர் அழகப்பச் செட்டியார் கல்விக் கட்டளை தனது சொத்துக்களை அரிசனருக்கு மாற்றுவதற்காக செய்திருந்த மனுவின் மீது சென்னை உயர்நீதிமன்றம் அரசின் சார்பாக தீர்ப்பளித்துள்ளது.



22nd July 1971]

***High Schools***

*174 Q. THIRU V. THANGAPANDIAN: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state:

(a) the number of private High Schools, for the opening of which sanction has been accorded by the Government during the academic year 1970–71;

(b) among them, the number of places where sanction was accorded for the opening of new private high schools, while Government High Schools were already functioning there:

(c) the basis on which sanction has been accorded for the opening of new private High Schools in places where Government High Schools are functioning; and

(d) whether the sections in Government Schools have been reduced due to the opening of private schools in the same place?

**உயர்நிலைப் பள்ளிகள்**

திரு. வி. தங்கபாண்டியன்: மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) 1970–71-ஆம் கல்வி ஆண்டில் எத்தனை தனியார் உயர்நிலைப் பள்ளிகளைத் துவக்க அரசாங்கம் அனுமதி அளித்துள்ளது?

(இ) அதில் ஏற்கனவே அரசாங்க உயர்நிலைப் பள்ளிகள் நடந்து கொண்டிருப்பதில் எத்தனை இடங்களில் தனியார் உயர்நிலைப் பள்ளிகள் துவங்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது?

(உ) அரசாங்க உயர்நிலைப் பள்ளிகள் நடைபெறும் ஊர்களில் புதிய தனியார் பள்ளிக்கூடங்கள் துவங்க எந்த அடிப்படையில் அனுமதி வழங்கப்பட்டுள்ளது?

(ஏ) ஒரே இடத்தில் தனியார் பள்ளிகள் துவங்கியதால், அரசாங்கப் பள்ளிகளில் வகுப்புகளின் பிரிவுகள் (section) குறைக்கப்பட்டுள்ளனவா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: (அ) 13.

(இ) 4.

(உ) அந்த இடத்தின் தேவையைக் கருத்தில் கொண்டு அனுமதி வழங்கப்படுகின்றது.

(ஏ) முத்துப்பேட்டை அரசினர் உயர்நிலைப் பள்ளியில் 6, 7, 8 வகுப்புகளில் ஒவ்வொரு பிரிவு குறைக்கப்பட்டுள்ளது. இதர இடங்களில் இப்பிரச்னை எழவில்லை.

V211.32 N71
N71-7053



**திரு. வி. தங்கபாண்டியன்:** தலைவர் அவர்களே, இந்தப் புதிய தனியார் பள்ளிக்கு உத்தரவிடும்போது, அங்குள்ள அரசாங்கப் பள்ளியின் மாணவர்களின் எண்ணிக்கையைக் கவனத்தில் கொண்டு அனுமதி தந்தார்களா? அங்கே ஒரு பள்ளி இருக்கும்போது, மற்றொரு உயர்நிலைப் பள்ளி வருவதால், "டியூப்ளிகேஷன் ஆஃப் ஸ்டாஃப்" ஏற்படும் என்பதை அரசு ஆராய்ந்ததா? இவற்றினைக் கருத்தில் கொண்டு தனியார் பள்ளிக்குத் தரும் அனுமதியைத் தடை செய்ய அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, நான் முதலில் கூறியபடி, பள்ளி ஆரம்பிப்பதற்கான அவசியத்தையும் பள்ளி மாணவர்களின் எண்ணிக்கை முதலியவைகளையும் கண்டறிந்ததால் மற்றொரு பள்ளிக்கு அனுமதி வழங்கப்படுகிறது. அதைத் தடுத்து நிறுத்த இயலாது. அப்படி அந்தப் புதுப்பள்ளி வருவதால், பாதகம் ஏற்படும் என்பது நடைமுறையில் தெரிந்தால், அதற்குப் பிறகு தக்க நடவடிக்கை எடுக்கலாம்.

**திரு. வி. தங்கபாண்டியன்:** இராமநாதபுரம் மாவட்டத்தில் மல்லாங்கிணறு என்ற ஊரில் ஏற்கனவே அரசாங்கப் பள்ளி 300 மாணவர்களைக் கொண்டு நடந்து வருகிறது. புதிதாகத் தனியார் பள்ளி அங்கே தொடங்கியிருப்பதாகவும் அங்குள்ள பொதுமக்கள் எதிர்ப்புத் தெரிவித்திருக்கிறார்கள். அடுத்த ஆண்டு புதுப்பள்ளி வருவதால் இருக்கின்ற அரசுப் பள்ளியில் உள்ள வகுப்புகள் குறையும் என்ற சூழ்நிலை இருப்பதால், அதைக் கவனத்தில் கொண்டு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** பாதிக்கப்படுமானால் அதற்குத் தக்க நடவடிக்கை எடுக்கும் முயற்சியை அரசு மேற் கொள்ளலாம்.

**திரு. எஸ். முத்துசாமி:** கோத்தாரி கல்விக் கமிஷன் அறிக்கையில், பெரும்பாலான தனியார் பள்ளிகள் வியாபார நோக்கத்தில் நடைபெறுகின்றன என்பதைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதன்படி தனியார் பள்ளிகள் எவ்வளவு வருமானம் பெறுகிறார்கள் என்ற விவரத்தை அரசு அறிவிக்க முடியுமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** எல்லாப் பள்ளிகளுமே வியாபார நோக்கத்தில் நடைபெறுவதாகக் கூறுவதற்கில்லை. சில பள்ளிகள் அப்படி நடக்கலாம். தனியார் நடத்தும் பள்ளிகளின் வரவு செலவுகளைக் கணக்கிட்டு அதற்குத் தக்கபடிதான் அரசாங்கம் மானியம் அளிக்கிறது. எவ்வளவு நன்கொடை வாங்குகிறார்கள், மற்ற வகைகளில் எப்படிச் செலவு செய்கிறார்கள் என்ற விவரம் அரசிற்கு வருவதில்லை. மற்றபடி முறையாக விதிக்கப்பட்ட செலவினங்கள், வரவுகள் விவரம் வருகின்றது. அதைக் கணக்கிட்டு அதற்கேற்ப மானியம் வழங்குகிறோம்.

**திரு. எஸ். ஜெயராம செட்டியார்:** தலைவர் அவர்களே, சர்க்கார் பள்ளிகள் இருக்கிற இடங்களில் தனியார் பள்ளிகளுக்கு அனுமதி கொடுப்பதால், அநேகமாக தனியார் நிர்வாகத்தில் நடக்கும்



பள்ளிகள் விசேஷமாக இருக்கின்றன என்ற நினைப்பில் அங்கே மக்கள் செல்கிறார்கள். அதனால் அரசாங்கப் பள்ளிகளில் கூட்டம் குறைகிறது. அதைத் தடுத்து தனியார் பள்ளிக்கு அனுமதி கொடுத்து வாபஸ் வாங்கப்படுமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, தனியார் பள்ளிகளில் முதலில் சொல்லியவாறு அவை தவறு செய்தால், சரியாக நடக்கவில்லை என்றால் மானியத்தைக் குறைக்கலாம், நிறுத்தலாம். அவற்றின் அங்கீகாரத்தையும் ரத்து செய்யலாம்.

**திரு. எம். சங்கரலிங்கம் பிள்ளை:** ஒரே ஊரில் அண்மையில் இரண்டு பள்ளிகளில் ஒன்று அரசினர் பள்ளியாகவும், ஒன்று தனியார் பள்ளியாகவும் இருந்தால், அவற்றின் மாணவர்கள் எண்ணிக்கை குறையுமானால், அவற்றில் ஒன்றை ஆண்கள் பள்ளியாகவும் ஒன்றைப் பெண்கள் பள்ளியாகவும் மாற்றியமைக்கலாம். அப்படி அமைக்கும்போது, அரசினர் பள்ளியைப் பெண்களுக்காக ஏற்படுத்தலாம். அதனால் ஆசிரியர்கள் வேலை இழக்கும் வாய்ப்பு ஏற்படாத வகையில், அரசுப் பள்ளிகள் பரவலாக எங்கும் இருப்பதால், அங்கே வேலை அளிக்கக்கூடிய நிலைமை ஏற்படும். இதைக் கருத்தில் கொண்டு அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** சில இடங்களில் அப்படியும் முயற்சி செய்யப்பட்டிருக்கிறது. கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள மணவாளக்குறிச்சி என்ற இடத்தில் இரண்டு பள்ளிகள் ஏற்பட்டு, அவற்றிடையே நகராறு வந்ததால், ஒன்று பெண்களுக்காகவும், ஒன்று ஆண்களுக்காகவும் மாற்றியமைக்கப் பட்டது. அப்படி சேவையான இடங்களில் அரசு தயங்காது.

## *Panchayat Union Engineer*

* 175 Q.—THIRU V. THANGAPANDIAN: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state whether there is any proposal under the consideration of the Government that works at an estimated cost of Rs. 5,000 in Panchayat Unions might be sanctioned by the Engineer of the Panchayat Union himself?

ஊராட்சி ஒன்றியப் பொறியாளர்

**திரு. வி. தங்கபாண்டியன்:** மாண்புமிகு [illegible] திர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வி[illegible]த்துப் பதிலளிக்க கேண்டுகிறேன்—

ஊராட்சி ஒன்றியத்தில் ரூ. 5,000 மதிப்[illegible]த் தொகையுள்ள வேலைக்கு ஒன்றியப் பொறியாளரே அ[illegible] வழங்கலாம் என அரசாங்கத்திடம் செயற்குறிப்பு ஏதேனும் [illegible]கா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** [illegible]

6303

[22nd July 1971

### *House site pattas*

* 176 Q. PULAVAR O. ARIVUDAI NAMBI : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(a) whether the Government will issue free house site pattas and grant loan assistance to the retired teachers for constructing houses under the Co-operative fold; and

(b) whether there is any proposal with the Government to allot 5 cents of land to each teacher who does not possess any land in the villages where he or she desires to settle permanently?

### இலவச மனைப்பட்டா

புலவர் ஓ. அறிவுடை நம்பி : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு பதிலளிக்க வேண்டுகிறேன் —

(அ) ஓய்வு பெற்ற ஆசிரியர்களுக்கு இலவச மனைப்பட்டா வழங்கி கூட்டுறவு திட்டப்படி வீடு கட்டிக் கொள்ள அரசு கடன் உதவி செய்யுமா?

(இ) ஆசிரியர்கள், நிரந்தரமாக இருக்க விரும்பும் சிற்றூரில் வீட்டுமனை இல்லா ஆசிரியர்களுக்கு '5 செண்டு' நிலம் ஒதுக்க அரசிடம் செயற்குறிப்பு ஏதேனும் உண்டா?

மாண்புமிகு திரு இரா. நெடுஞ்செழியன் : (அ) இலவச மனைப்பட்டா வழங்கும் திட்டம் எதுவும் இல்லை. ஆனாலும் ஓய்வு பெற்ற ஆசிரியர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் அமைத்து அவற்றின் மூலம் மனைகளை வாங்கியிருந்தால், அவர்களுடைய பொருளாதார நிலைமையினை ஆராய்ந்து அந்த அடிப்படையில் வீடு கட்டிக் கொள்ள கடனுதவி அளிக்க, கூட்டுறவுச் சங்கங்களுக்கு அரசு கடனுதவி செய்யும்.

(இ) இல்லை.

### *Attenders*

* 177 Q.—PULAVAR O. ARIVUDAI NAMBI : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state whether there is any proposal with the Government for enabling Attenders working in 'B' class Government High Schools to secure promotion as clerks, after they have put in 5 years of service, as in the case of Panchayat Union Attenders?

### சிற்றெழுத்தர்கள்

புலவர் ஓ. அறிவுடை நம்பி : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் —

அரசு (பி) பிரிவு உயர்நிலைப் பள்ளிகளில் பணிபுரியும் சிற்றெழுத்தர்கள் உள்ளாட்சி ஒன்றிய சிற்றெழுத்தர் (Attenders) போல் 5 ஆண்டுகளுக்குப் பிறகு எழுத்தராக பதவி உயர்வு பெற ஆவன செயற்குறிப்பு ஏதேனும் உண்டா?



22nd July 1971]

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : எழுத்தராக பதவி உயர்வு பெற, அதற்கான தகுதியைப் பெற்றிருந்தால் அரசு (கழக) உயர்நிலைப் பள்ளிகள் பணிபுரியும் சிற்றெழுத்தர்கள் எழுத்தராக பதவி உயர்வு பெற வாய்ப்பு இருக்கிறது.

(தலைவர் அடுத்த கேள்விக்கான அறிவிப்பை அறிவித்தார்)

புலவர் ஓ. அறிவுடை நம்பி : தலைவர் அவர்களே, முன்னர் கேட்கப் பட்ட கேள்வியில் இல்லை என்று அமைச்சர் அவர்கள் பதில் கூறினார்கள். ஆசிரியர்கள் பிரச்சினையில் இனியேனும் கொஞ்சம் அனுதாபம் காட்டி வீட்டு மனைகளை ஒதுக்கி வீடு கட்டிக்கொள்ள அரசு அனுமதி அளிக்குமா?

(பதில் இல்லை. தலைவர் அடுத்த கேள்வியை அறிவித்ததால் அமைச்சர் அடுத்த கேள்விக்கான பதிலைப் படித்தார்.)

### *Kuralagam*

* 181 Q.—THIRU V. ISVARMURTI : Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(a) whether accommodation in "Kuralagam" in Madras City has been rented out to private parties ; and

(b) if so, the reasons therefor and the basis on which the rent was calculated?

### குறளகம்

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி: மாண்புமிகு கூட்டுவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் —

(அ) சென்னை மாநகரில் உள்ள 'குறளகத்தில்' சில இடங்கள் தனியார்களுக்கு வாடகைக்கு விடப்பட்டிருக்கின்றனவா?

(இ) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவை? எந்த அடிப்படையில் வாடகை கணக்கிடப்பட்டது?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : (அ) ஆம்.

(இ) கட்டிடம் கட்டுவதற்குச் செலவான முதலீட்டை மீண்டும் பெறும் பொருட்டு நடைமுறை நிலவரா வாடகைத் தொகைக்கு ஏற்றாற்போல் வாடகைக்கு விடுவதென அரசுடன் கலந்து ஆலோசித்து கதர் வாரியம் முடிவு செய்துள்ளது. முன் பகுதியில், வாடகைக்குக் கொடுக்கப்பட்டுள்ள தொகுதியைப் பொறுத்த வரையில், ஒதுக்கப்பட்டுள்ள இடத்தின் அளவு 465 சதுர மீட்டருக்கு அதிகமாக இருக்குமேயானில் சதுர மீட்டர் ஒன்றுக்கு ரூ. 13.45 என்றும் 465 மீட்டருக்குக் குறைவாக இருப் பின் சதுர மீட்டர் ஒன்றுக்கு ரூ. 16.15 என்றும் வாடகை கணக் கிடப்படுகிறது. பின் பகுதிகளுக்கு சதுர மீட்டர் ஒன்றுக்கு ரூ. 8.60 வாடகையாக வசூலிக்கப் படுகிறது.

[22nd July 1971

**திரு. வி. ஈஸ்வரமூர்த்தி:** அரசாங்கத்திற்குப் போதுமான கட்டிடங்கள் இல்லாத காரணத்தினால், தனியார் கட்டிடங்களில் பல அரசு அலுவலகங்கள் செயல் படுகின்றன. இந்த நிலையில் அரசாங்கச் செலவில் கட்டப்பட்ட கட்டிடத்தைத் தனியாருக்கு வாடகைக்கு விடும் அவசியம் என்ன வந்தது?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** அரசாங்கச் செலவில் கட்டப்பட்ட கட்டிடம் அல்ல அது. இருந்தாலும் அரசாங்க அலுவலகங்கள் பல அங்கே அமைக்கப் பட்டிருக்கின்றன. அவற்றினின்றும் இந்த போர்டு வாடகை பெறுகிறது.

**திரு. வி. ஈஸ்வரமூர்த்தி:** எந்த அடிப்படையில் தனியாரிட மிருந்து வாடகை வசூல் செய்யப்படுகிறது? சிறிது விளக்கமாகச் சொல்ல வேண்டுமென்று விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** தலைவர் அவர்களே, அரசாங்க அலுவலகங்களுக்குத் தேவையான அளவிற்கு முதலிடம் கொடுக்கப்படுகிறது. அரசாங்கம் அங்கே வாடகைக்கு எடுத்துக் கொள்ளாத இடத்தை மட்டும் தனியாரிடம் கொடுத்திருக்கிறார்கள். மாதம் ஒன்றுக்கு சதுர மீட்டருக்கு ரூ. 8.60 முதல் ரூ. 16.15 வரை வாடகை வருகிறது. அரசாங்கத்திற்குக் கொடுக்கப்பட்ட பகுதிக்கு குறைந்த வாடகை கொடுக்கப் படுகிறது.

**திரு. எஸ். ஜெயராம ரெட்டியார்:** அந்தக் கட்டிடத்திற்கு மொத்தம் எவ்வளவு தொகை செலவானது?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** கட்டிடத்திற்கு மொத்தம் செலவானது ரூ. 68 லட்சம்.

## Co-operative Societies.

*182 Q.—THIRU V. ISVARMURTI: Will the Hon. the Minister for Co-operation be pleased to state whether the Government have any proposal to nominate Members of the Legislature who belong to the Opposition Parties as Directors of the various Co-operative Societies in the State?

### கூட்டுறவுச் சங்கங்கள்

**திரு. வி. ஈஸ்வரமூர்த்தி:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

இம்மாநிலத்தில் எதிர்க்கட்சிகளைச் சேர்ந்த சட்ட மன்ற உறுப்பினர்களைப் பல்வேறு கூட்டுறவுச் சங்கங்களில் இயக்குநர் களாக நியமனம் செய்ய அரசிடம் ஏதேனும் செயற்குறிப்பு உள்ளதா?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** அவ்வாறு உறுப்பினர்களை நியமிப்பதற்குத் தடையேதுமில்லை.



22nd July 1971]

**திரு. வி. ஈஸ்வரமூர்த்தி:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சருடைய இத்தப் புதிய கூட்டுறவுச் சீர்திருத்தக் கொள் கையை ஏற்கனவே நான் கேள்விகள் மூலம் கேட்டறிந்திருக்கி றேன். எதிர்க் கட்சியைச் சேர்ந்தவர்களைக் கூட்டுறவு சங்கங் களில் உறுப்பினர்களாக நியமிப்பதற்கு அரசாங்கத்திற்குக் கொள்கை பூர்வமான ஆட்சேபணை இருக்கிறதா?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** தலைவர் அவர்களே, கேட்கப்பட்டிருக்கிற கேள்வி வேறு. அங்கத்தினர்களை அரசாங்கமே நியமிக்கிறார்களா என்று கேட்கிறார்கள். தற்போது ஏறத்தாழ 25,000 கூட்டுறவு அமைப்புகள் இருக்கின்றன. அவை எதிலும் அரசாங்கம் உறுப்பினர்களை நியமிப்பதில்லை.

**திரு. வி. ஈஸ்வரமூர்த்தி:** எதிர்க் கட்சியைச் சேர்ந்த உறுப் பினர்களை நியமிப்பதில் என்ன ஆட்சேபணை இருக்கிறது?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** உறுப்பினர்கள் சம்பந் தப்பட்ட வரையில், எந்தக் கட்சியாக இருந்தாலும், ஆணாக இருந்தாலும், பெண்ணாக இருந்தாலும், யாரையும் அரசாங்கம் நியமிப்பதில்லை.

**திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு:** தலைவர் அவர்களே, நில வள வங்கி ஆரம்பிக்கப்பட்ட நேரத்திலும், நீர்ப்பாசன சங்கம் ஏற்பட்டபோதும் சட்டமன்ற அங்கத்தினர்கள், சிறுபான் மையில் கூட நியமிக்கப்பட்டிருக்கிறார்களா இல்லையா என்று மையில் கூட நியமிக்கப்பட்டிருக்கிறார்களா இல்லையா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் கேட்ட துணைக்கேள்வி உறுப்பினர்களைப் பற்றியது. மெம்பர்கள் சேருவதற்குத் தனியாக விதியிருக்கிறது. 18 வயதுக்கு மேற்பட்டவர்களாக இருக்கவேண்டும் என்பது போன்ற விதிகள் உண்டு. யாரும் உறுப்பினராக, தன்னிச் சையாகச் சேர்ந்துகொள்ளலாம். எந்தத் தடையும் இல்லை. எந்த உறுப்பினரையும் அரசு நியமிப்பதில்லை.

**திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு:** அரசு நியமனம் மூலம் நீர் வாக அங்கத்தினர்களை நியமித்திருக்கிறார்கள் என்று நான் அறிகி றேன்; நான் அறிவது சரியா, சரியில்லையா? நேரடியான பதிலை அமைச்சர் அவர்கள் சொல்வார்களா?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** இவ்வளவு அனுபவம் உள்ள மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு கூட்டுறவுத் துறையில் அல்லது அமைப்பில் உள்ள உறுப்பினர் யார், இயக்குனர் யார் என்ற பாகுபாடு படுத்திக் கேட்டிருந்தால், நான் அதற்கான சரி யான விடையை அளித்திருக்க முடியும். உறுப்பினர்களை நியமிக் கிறார்களா என்று கேட்டார்கள். உறுப்பினராக யாரும் சேரலாம் என்று சொன்னேன். இயக்குனர்களை அரசாங்கம் நியமிக்கிறார் களா என்று கேட்டார்கள். இயக்குனர்கள் நியமிக்கப் படுகிறார்கள்.

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி : கேள்வி தெளிவாக் இருக்கிறது. டைரக்டர்களை நியமிப்பதில் ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களை நியமிக்கிறார்களா ? எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்களை நியமிப்பதில்லை என்பது சரியா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : அவர்கள் சொல்வது சரியல்ல.

திரு. சி. வி. ராஜகோபால் : எதிர்க்கட்சிக்காரர்கள் யாராவது வந்து தங்களுக்கு டைரக்டர் வேலை வேண்டுமென்று கேட்டார்களா ?

திரு. சா. கணேசன் : தலைவர் அவர்களே, ஆங்கிலத்தில் கேள்வி 183-ல் இருப்பது . . .

மிஸ்டர் சேர்மன் : இப்போது 182 தான் நடக்கிறது.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்கு பதில் சொல்லும்போது சரியாகச் சொன்னேன். உறுப்பினர்கள் சேருவதற்கு தடையேதுமில்லை என்று சொன்னேன். துணைக் கேள்வியில் இயக்குனர்களைப்பற்றிக் கேட்டார்கள். அதை அரசு நியமிக்கிறது என்றேன்.

THIRU G. SWAMINATHAN : Are we discussing question 182 or 180, Sir?...

திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு : கேள்வியில் இயக்குனர் என்று தமிழில் இருக்கிறது. ஆங்கிலக் கேள்வியில் டைரக்டர் என்றிருக்கிறது.

THIRU V. THANGAPANDIAN : In question 182 there is one specific mention.

திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு : நிர்வாக அங்கத்தினர்கள், டைரக்டர்கள் அல்லது இயக்குநர்களை நியமிப்பது பற்றிய கேள்வி. சாதாரண மெம்பர்களுக்கும் இயக்குனர்கள் அல்லது போர்டில் இருப்பவர்களுக்கும் வித்தியாசம் தெரியாமல் நாங்கள் கேட்பதாக திசை திருப்பிவிடுகிறார் அமைச்சர். அது சரியா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : கேட்ட கேள்விக்குத் தான் பதில் சொல்ல முடியும். அவர்கள் இயக்குனரைப்பற்றிக் கேட்டால் இயக்குனர் பற்றி பதில் சொல்கிறேன். உறுப்பினர்களைப் பற்றிக் கேட்டால், உறுப்பினர்களைப் பற்றிச் சொல்கிறேன். உறுப்பினர்களைப் பற்றியாகிலும் இயக்குனரைப் பற்றியாகிலும் கேளுங்கள்.

### *State Co-operative Bank and Central Co-operative Banks*

* 183 Q.—THIRU V. ISVARMURTI : Will the Hon. the Minister for Co-operation be pleased to state the number of members nominated to serve on the Boards of Management of the State Co-operative Bank and Central Co-operative Banks prior to



**மாநிலக் கூட்டுறவு வங்கி, மத்திய கூட்டுறவு வங்கி**

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி : மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்கு பதிலளிக்க வேண்டுகிறேன்—

மாநிலக்கூட்டுறவு வங்கி, மத்தியக் கூட்டுறவு வங்கி முதலியவற்றின் நிர்வாக வாரியத்தில் பணிபுரிய 1970-ஆம் ஆண்டு டிசம்பர் 19-ம் நாளுக்கு முன்னரும் அதற்குப் பின்னரும் நியமிக்கப்பட்ட உறுப்பினர்களின் எண்ணிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :

| | | 19-12-70-க்கு முன்பு. | 19-12-1970-க்கு பின்பு. |
|---|---|---|---|
| 1 | தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கி. | 3 இயக்குனர்கள். | 3 |
| 2 | கூட்டுறவு மத்திய வங்கிகள் | 44 இயக்குனர்கள். | 80 |

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி : தலைவர் அவர்களே, 1970 டிசம்பர் 19-க்குப் பிறகு நியமிக்கப்பட்ட இயக்குனர்களில் ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் எத்தனை பேர் ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவர் அவர்களே, மாநிலக் கூட்டுறவு வங்கி சம்பந்தப்பட்ட வரையில், யாரையும் நீங்கள் எந்தக் கட்சி என்று கேட்டுக் கொண்டு நியமிப்பதில்லை. அதே போல, மாவட்டக் கூட்டுறவு வங்கிகளில் நியமனம் செய்யும் போது எந்தக் கட்சி என்று கேட்டுக்கொண்டு நியமனம் செய்யவில்லை. ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் அதில் யாராவது இருக்கிறார்களா என்றால், பலரைச் சொல்ல முடியும்.

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி : நான் குறிப்பாக அறிந்துகொள்ள விரும்புவது ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் எத்தனை பேர் என்பது.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களை நியமிப்பது பாபகரமான செயல் என்று உறுப்பினர் கருதுகிறாரா ?

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி : அது மிகவும் வரவேற்கத்தக்க செயல் என்று பாராட்டுகிறேன். அப்படி எத்தனை பேர் இருக்கிறார்கள் என்று கேட்கிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : பலரும் நியமிக்கப்படுகிறார்கள். அதில் ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களும் இருக்கிறார்கள்.

திரு. கே. ராஜாராம் : எதிர்க் கட்சிக்காரர்களை நியமிப்பது பாபம் செய்யும் காரியமா ? அவர்களை ஏன் நியமிக்கக் கூடாது ? நியமித்தால் அது பாபமாகிவிடுமா ?

[22nd July 1971

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** நியமன விஷயத்தில் பரம்பரையாகச் செய்துவருகிற புண்ணியத்தைத்தான் நாங்கள் பின்பற்றுகிறோம்.

*Procurement of Paddy by Co-operative Societies*

* 184 Q.—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(a) the quantity of paddy procured by the Co-operative Societies in the Thanjavur District during the Samba season, 1970;

(b) the quantity of paddy stocked by them as on 2nd January 1971; and

(c) the action proposed to be taken by the Government to avert loss to these Co-operative Societies by the deterioration of paddy in stock?

கூட்டுறவுச் சங்கங்களால் நெல் கொள்முதல்

**திரு. ஜி. சுவாமிநாதன் :** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1970-ஆம் ஆண்டு சம்பாப் பருவத்தின் போது தஞ்சாவூர் மாவட்ட கூட்டுறவுச் சங்கங்களால் எவ்வளவு நெல் கொள்முதல் செய்யப்பட்டது ?

(இ) 2-1-1970 அன்றுள்ளபடி அவர்களால் எவ்வளவு நெல் சேமித்து வைக்கப்பட்டது ?

(உ) சேமித்து வைக்கப்படும் நெல்லின் தரம் குறைவதால் இந்தக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு ஏற்படும் விரயத்தைப் போக்க அரசு எடுக்கக் கருதியுள்ள நடவடிக்கை என்ன ?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** (அ) 53,495 டன் நெல்.

(இ) 11,807 டன் நெல்.

(உ) திருவாரூரில் உள்ள தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனைச் சங்க ஒன்றியம் 11,807 டன் நெல் இருப்பு வைத்திருந்தது. அரசு கேட்டுக்கொண்டதன் மேல், உணவு வழங்கல் துறை ஆணையாளர் (Commissioner of Civil Supplies) அரசுக்குச் சேர வேண்டிய அளவைக் குறைத்துக் கொண்டு கூட்டமைப்பினுல் இருப்பு நெல்லை ஒப்பந்தப் புள்ளிகள் வரவழைத்து விற்பதற்காக ஏற்பாடுகள் செய்து வருகிறார்.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** தலைவர் அவர்களே, எட்டு மாத காலம் கிட்டத்தட்ட 11 ஆயிரம் டன் நெல் இருப்பு இருக்க வேண்டிய காரணம் எப்படி ஏற்பட்டது ?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** என்ன அவசியம் என்று என்னுல் சொல்வதற்கில்லை. அப்படி இருந்தால் நஷ்டம் எதுவும் ஏற்படவில்லை.



22nd July 1971]

**திரு. ஜி. சுவாமிநாதன் :** நஷ்டம் ஏற்படவில்லை என்று அமைச்சர் எப்படிச் சொல்கிறார் ? என்ன விலைக்கு வாங்கப்பட்டு எந்த விலைக்கு விற்கப்பட்டது ?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** தலைவரவர்களே, இதில் ஒரு பகுதி விற்கப்பட்டது. நெல்லை விற்றதில் நஷ்டமில்லை. வாங்கிய விலையை விட விற்றவிலை அதிகம் என்பதால் அது லாபம்.

**திரு. சா. கணேசன் :** மொத்தத்தில் லாபம் வந்திருக்கிறது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். என்ன விலைக்கு வாங்கி என்ன விலைக்கு விற்றதில் படி ஒன்றுக்கு அல்லது குவிண்டால் ஒன்றுக்கு என்று கணக்கிட்டால், அந்த நெல் கெட்டுப் போயிருந்தும் கூட விலை ஏற்றத்தினால் லாபம் ஏற்பட்டதா அல்லது இயல்பாகவே பாதுகாக்கப்பட்டு சேதம் சொல்லாமல் இருந்ததால் நஷ்டம் ஏற்படாமல் இருந்ததா என்று அறிய முடியும். ஆகவே தரம் கெட்டுப்போன நெல் இயல்பாகவே மார்க்கெட்டில் விலை உயர்ந்ததன் காரணமாக விலையைக் கூட்டி விற்றதினால் லாபம் ஏற்பட்டதா ? இயல்பாகவே நஷ்டம் வராமல் பாதுகாக்கப்பட்டதா ?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** தலைவரவர்களே, வாங்கிய விலையை விட விற்ற விலை அதிகம். இயற்கையாகவே ஏறிவிட்டதா அல்லது நெல் வைத்திருந்த தாம் ஏறிவிட்டதா என்பதை என்னுல் சொல்வதற்கில்லை. ஒன்றை மட்டும் சொல்ல முடியும். கொள்முதல் விலையை விட விற்ற விலை அதிகம். அதனுல் அந்த விற்பனை ஒன்றியத்திற்கு ஏற்கனவே ஏற்பட்டிருந்த மொத்த நஷ்டம் பெருவாரியாகக் குறைந்திருக்கிறது. நெல் விற்றதில் லாபமே தவிர நஷ்டமில்லை.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** விவசாயி விற்றது எவ்வளவு ? இவர்கள் விற்ற விலை எவ்வளவு ?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** என் கையேடம் அதற்கான புள்ளிவிவரம் இல்லை. தனிக் கேள்வி போட்டால் சொல்ல முடியும்.

**திரு. எஸ். ஜெயராம ரெட்டியார் :** சமீபத்தில் நெல் விலை உயர்ந்துகொண்டே போவதைப் பார்க்கிறோம். அந்த மாதிரி ஏற்படாதபடி இந்த மாதிரி நேரங்களில் கையில் விற்காமல் இருக்கிற இருப்பைக் கொடுத்து மக்கள் அதிகமான விலை கொடுத்து வாங்காமலிருக்க சர்க்கார் ஏற்பாடு செய்வார்களா ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவர் அவர்களே, இது உணவுப் பிரச்னையாக இருப்பதால், நானே பதில் சொல்ல விரும்பு கிறேன். நெல் விலை ஏறியிருப்பதாகச் சொன்னார்கள். சில பகுதி களில் ஏறியிருப்பதாக அரசாங்கத்திற்குத் தகவல் வந்திருக்கிறது. "ஃபுட் கார்ப்பரேஷன் ஆஃப் இந்தியா" மூலமாகத் தமிழ்நாட்டில் கொள்முதல் செய்து வைக்கப்பட்ட அரிசியை நமக்குக் கொடுக்க வேண்டுமென்று கேட்டோம். அவர்கள் கொடுப்பதாக ஒத்துக்

[மாண்புமிகு. திரு. ப. உ. சண்முகம்] [22nd July 1971

கொண்டார்கள். நம் கையிலும் 'ஸ்டாக்' இருக்கிறது. எங்கெங்கு விலை அதிகமாக இருக்கிறது என்று குறிப்பிடப்படுகிறதோ அங்கெல்லாம் லாப நஷ்டத்தை உத்தேசிக்காமல் அரசாங்கத்தின் அசல் விலைக்கே கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக விற்க அரசாங்கம் முயற்சி செய்து வருகிறது.

*Advertisement charges*

* 185 Q.—THIRU R. KRISHNASWAMY NAIDU : Will the Hon. the Minister for Co-operation be pleased to state with reference to the answer given to L.C. Question No. 38 on 2nd December 1970—

(a) the newspapers which carried advertisement regarding the inauguration of Irrigation Co-operative Society at Agaram Village;

(b) the advertisement charges given to each such newspaper;

(c) the expenditure incurred for the function organised for the inauguration; and

(d) the names of the members of that Association and the extent of their lands benefited by the irrigation facility through the above Association?

**விளம்பரக் கட்டணம்**

**திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு :** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் 2—12—1970-ம் தேதியன்று 38-ம் எண் வினாவிற்கு அளித்த விடையையொட்டி கீழ்க்கண்ட வினாக்களுக்கு பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) அகரம் கிராமத்தில் நடந்த பாசனக் கூட்டுறவுச் சங்க ஆரம்ப விழாவினைப்பற்றி விளம்பரம் செய்யப்பட்ட பத்திரிகைகள் எவை ?

(இ) அவை ஒவ்வொன்றுக்கும் தரப்பட்ட விளம்பரக் கட்டணம் எவ்வளவு ?

(உ) விழாச் செலவு எவ்வளவு ?

(எ) அந்தச் சங்கத்தின் அங்கத்தினர்களின் பெயர்களும் அவர்கள் ஒவ்வொருவரும் இந்த சங்கத்தின் மூலம் பாசன வசதி பெறும்நிலங்களின் பரப்பளவும் என்ன ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : அறிக்கை@ அவையின் முன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு : தலைவர் அவர்களே, அகரம் கிராமத்தில் நடந்த பாசனக் கூட்டுறவுச் சங்க ஆரம்ப விழாவினைப் பற்றி விளம்பரம் செய்யப்பட்ட விவரம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

Printed as Appendix II on pages 79 to 80.



22nd July 1971] [திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு]

அதற்கு மொத்தம் ரூ. 24,708.80 செலவானது என்றும் அதற்கான விவரத்தில் இந்தியன் எக்ஸ்பிரஸ் ரூ. 7,695.60, இந்து ரூ. 7,603.20, மெயில் ரூ. 1,742.40, சுதேசமித்திரன் ரூ. 1,306.80, தினமணி ரூபாய் 3,964.40, முரசொலி ரூ. 1,346.40, விடுதலை ரூ. 1,050.00 என்றிருக்கிறது. மாலைமுரசு, தினத்தந்தி ஆகியவை விளம்பரத்திற்குப் பணம் வாங்கவில்லை என்று சொல்லப்பட்டது. விளம்பரச் செலவு ரூ. 24 ஆயிரத்திற்கு அதிகமாகவும் விழா நடத்துவதற்கான செலவு ரூ. 19 ஆயிரம் என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இந்த சங்கத்தை அமைக்கும்போது இருந்த அங்கத்தினர்களின் பெயர்களைக் கொடுத்திருக்கிறார்கள். சாதாரணமாக இரண்டு ஏக்கருக்கு மேல் உள்ளவர்கள் அதில் சேர்க்கப்படுவதில்லையென்று சொன்னார்கள். ஆனால் இந்தப் பட்டியலில் சிலர் 6 ஏக்கர் வரையில் நிலமுள்ளவர்களாக இருக்கிறார்கள். அவர்களுக்கு எந்த வகையில் விதிவிலக்கு அளிக்கப்பட்டது ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : நீர்ப்பாசனக் கூட்டுறவு கழகங்களில் யாரும் சேர முடியும். அவர்களில் யாருக்காகிலும் 5 ஏக்கருக்கு மேலிருந்தால், கூட்டுறவுக் கழகங்களில் அவர்கள் சேர்ந்தால் சிறு சாகுபடியாளர் என்ற தகுதிக்கு உரியதாகாது. சிறிய விவசாயிகள்கூடி விவசாய பாசனக் கூட்டுறவுக் கழகங்களை ஏற்படுத்திக் கொண்டால், அதற்குத் தனிச் சலுகைகள் இருக்கின்றன. சிலர் சற்று அதிகமாக வைத்திருந்தாலும் குற்றமில்லை. 5 ஏக்கருக்குக் குறைவாக உள்ளவர்கள்தான் இதில் சேரவேண்டுமென்ற கட்டாயமில்லை.

திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு : பாசனக் கூட்டுறவுச் சங்க விதிகளில் கூட இரண்டு ஏக்கருக்கு அதிகமாக நிலம் வைத்துள்ளவர்கள் அதில் சேர முடியாது என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதற்குத் தடையேதும் இல்லையென்று அமைச்சர் சொல்வதற்குக் காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : நீர்ப்பாசனக் கூட்டுறவு இருவகைப்படும். சிறு விவசாயிகளுக்கான நீர்ப்பாசனக் கூட்டுறவுக் கழகங்களில் இரண்டு ஏக்கருக்குக் குறைவான நிலம் உள்ளவர்கள் ஒன்று சேருகிறார்கள். இன்னொரு வகையில் நிலம் பதினைந்து என்று சீலிங்குக்குட்பட்ட நிலமுள்ள அனைவரும் சேரலாம்.

திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு : தலைவர் அவர்களே, "லிமிட்ட் இர்ரிகேஷன் சொசைடி" அமைப்பதைப்பற்றிச் சொன்னார்கள். அதை அமைப்பது சம்பந்தமாக கூட்டுறவுச் சட்டம் திருத்தப்பட்டது. அகரம் சங்கம் எந்த வகைப்பட்டது ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவர் அவர்களே, சிறு விவசாயிகளுக்காக ஏற்பட்ட கூட்டுறவு நீர்ப்பாசனக் கழகம் ரிஜிஸ்டர் செய்யப்பட்டிருக்கிறது. யாரோ ஒருவருக்கு 5 ஏக்கருக்கு அதிகமாக 7 செண்ட் நிலம் இருந்தாலும், மொத்தத்தில் ஏறக்குறையத்தான் வைத்திருக்கிறார்கள். எழெட்டு செண்டு அதிக

மாகவோ குறைவாகவோ இருந்தால், அவர்கள் அந்தத் தகுதியை இழக்கமாட்டார்கள். சிறு விவசாயிகளுக்குப் பல சலுகைகள் காட்டப்படுகின்றன. கடன் வாங்கும்போது 5% பங்கு எடுக்கத் தேவையில்லை. 2½% எடுத்தால் 40-ல் ஒரு பங்கு முதலீடு இருந்தால், கடன் கொடுக்கப்படுகிறது. பெரிய விவசாயிகளுக்கு 20 மடங்குதான் கொடுக்கப்படுகிறது. குறிப்பாக 5 ஏக்கர் என்று வரையறுத்துச் சொல்லவில்லை. பம்பாயிலுள்ள ரிசர்வ் பாங்கு அனுப்புகிற குறிப்புகளின்படி, நாம் செயல்படுகிறோம். குறிப் பிட்ட அகரத்தில் ரிஜிஸ்டர் செய்யப்பட்டிருக்கிற நீர்ப்பாசனக் கழகம் சிறு விவசாயிகளுக்கு, சிறு சாகுபடியாளர்களுக்கு என்று ரிஜிஸ்டர் செய்யப்பட்டிருக்கிறது.

**மிஸ்டர் சேர்மன்:** வழக்கமாக ஒரு மணி நேரம்தான் கேள்வி நேரமாக அனுமதிப்பது. இப்போது இன்னும் கேள்விகள் பாக்கி யிருப்பதால் பத்து நிமிடம் இந்த நேரத்தை அதிகரிக்கிறேன்.

**திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு:** ஐந்து ஏக்கருக்கு மேல் உள்ளவர்கள் அதில் கூடாது என்று சொல்லவில்லை. அந்த அமைப் பிற்கான விதிகள் வகுக்கும்போது அந்த இடத்திற்கான ஒரு பிளான் தயாரித்து சர்வே நம்பர்களைக் கண்டு அந்த நிலங்கள் சேர்ந்தாற்போல் அமைந்திருக்கின்றனவா, சேர்ந்த நிலங்களில் உள்ளவர்கள்தான் அங்கத்தினர்களாகச் சேர்ந்திருக்கிறார்களா என்று தெரிந்துதான் சங்கம் பதிவு செய்ய வேண்டுமென்று விதி களில் சொல்லப்பட்டிருக்கிறது. அதைப் போல, அகார் சங்கத் திலும் இதுவரையில் அமைக்கப்பட்ட சங்கங்களிலும் மேலே சொன்னபடி அந்த எல்லைக்குள் இருக்கும் சிறு நிலச்சுவான்தார்கள் அங்கத்தினர்களாகச் சேர்க்கப்பட்டிருக்கிறார்களா?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்:** நாட்டிலுள்ள சிறிய விவசாயிகள், அரை, கால், முக்கால் ஏக்கர் என்று வைத்திருக்கிற வர்கள் ஒன்றுசேர்ந்து நீர்ப்பாசன வசதியைப் பெறும் பொருட்டு இந்த ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. 26-ம் தேதி என்னுடைய உரையில் அதைப்பற்றி விரிவாகக் குறிப்பிட இருப்ப தால், இப்போது விரிவான பதில் தேவையில்லை.

**திரு. டி. கே. சண்முகம்:** "சுண்டைக்காய் கால் பணம், சுமை கூலி முக்கால் பணம்" என்று ஒரு பழமொழி உண்டு. அதைப் போல, பாசனக் கூட்டுறவுச் சங்க ஆரம்ப விழாவிற்கு இவ்வளவு பெரும் தொகை விளம்பரத்திற்காகச் செலவிட வேண்டுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்:** தலைவர் அவர்களே, இது தனிப்பட்ட ஒரு சங்கத்திற்கு என்றால் மிக அதிகம். தனித் தனியாக ஒவ்வொரு சங்கத்திற்கும் விழா ஏற்படுத்துவதில்லை. முன்னேடித் திட்டமாக மக்களுக்கு அறிமுகப்படுத்த வேண்டு மென்ற எண்ணத்தின் அடிப்படையில் இது நடந்தது. கூட்டுறவு மூலமாக நிலத்தை வளப்படுத்துவதற்காக மொத்தம் ரூ. 78 கோடி நிதி வசதி செய்யப்பட்டிருக்கிறது. அதற்கு வேண்டிய அமைப்பு



கவும் செய்ய வேண்டுமென்பதைப் பற்றியெல்லாம் அசெம்பிளியில் பேசும்போது விரிவாகச் சொல்லியிருக்கிறேன். ஆகையால் இதை ஒரு சகுனத்திற்காக என்று நினைக்காமல், ஏறத்தாழ மூன்று கோடி ஏக்கர் நிலப்பரப்புள்ள தமிழ்நாட்டின் விவசாயிகளை ஒருங் கிணைக்க வேண்டிய அவசியத்தைத் தெரிவிக்கவும், புணம் தருகிற உலக வங்கி, விவசாயக் கார்ப்பரேஷன் கொடுத்திருக்கிற நிபந்தனை களை நிறைவேற்றவும், இதைச் செய்திருப்பதாக எடுத்துக் கொள்ள வேண்டும். சொல்லப் போனால் ரூ. 78 கோடிக்கான திட்டத்தைத் தொடங்குவதற்கு ஒரு சில ஆயிரம் என்பது அதிகமானதல்ல என்பதைச் சொல்ல விரும்புகிறேன். நாலுயிரம் சேர்ந்து ஒரு லட்சம். அதைப் போல நூறு கொண்டது ஒரு கோடி. அதைப் போல 78 மடங்கு அதிக அளவில் ஆரம்பித்திருக்கும் திட்டத்தில் இந்தத் தொகை மிகவும் குறைவுதான்.

## *Land Development Banks*

* 186 Q.—THIRU V. THANGAPANDIAN: Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(a) the amount of loans given to the farmers through Land Development Banks during 1970–71 in Tamil Nadu; and

(b) the amount of loans sanctioned by the Agricultural Refinance Corporation?

### நிலவள வங்கி

**திரு. வி. தங்கபாண்டியன்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழ் நாட்டில் 1970-71-ம் ஆண்டில் நிலவள வங்கியின் மூலம் விவசாயிகளுக்கு எவ்வளவு தொகை கடன் வழங்கப்பட் டுள்ளது?

(இ) இதில் விவசாய மறுநிதி கழகத்தின் (A.R.C. Scheme) மூலம் எவ்வளவு தொகை வழங்கப்பட்டுள்ளது?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்:** (அ) 1970-71-ம் ஆண்டில் 2,236.06 ஆயிரம் ரூபாய் நிலவள வங்கியின் மூலம் கடன் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

(இ) இதில் 3,29.00 இலட்ச ரூபாய் விவசாய மறுநிதி கழகம் உதவி செய்யும் திட்டங்களின் மூலம் வழங்கப்பட்டுள்ளது.

**திரு. எஸ். ஜெயராம செட்டியார்:** தலைவர் அவர்களே, பெரும் பாலும் நிலவள வங்கியில் கிணறுகள் தோண்டுவதற்கு ரொம்பவும் பணம் கொடுத்து உதவுகிறார்கள். ஆனால் சமீபத்தில் சில இடங் களில் நேரில் பார்த்த அளவில் கிணறு தோண்டுவதற்காகப் பத்தா யிரம் ரூபாய் என்று வாங்கி வெட்டிய பிறகு, அதில் தண்ணீர் வராத காரணத்தால், மேலும் வெளியே வட்டிக்குக் கடன் வாங்கித் தோண்டுகிறார்கள். இந்த மாதிரி கிணறுகள் தோண்டுவதற்குப்

[திரு. எஸ். ஜெயராம ரெட்டியார்] [22nd July 1971

பணம் கொடுப்பதற்கு முன்னால் அந்த இடத்தில் தண்ணீர் இருக்கிறதா என்று ஆராய்ச்சி செய்து, விவசாயிகளுக்கு அறிவித்து உதவி செய்தால் நன்றாக இருக்கும். அதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : அதற்கான திட்டம் பற்றி என்னுடைய உரையில் சொல்வதற்கிருக்கிறேன். கிணறு வெட்டுவதும் அதில் பம்பு செட்டு அமைப்பதும் தனிப்பட்டவர்கள் சொந்தப் பொறுப்பில் செய்துகொள்வது என்றாலும், அக்ரோ சர்வீஸ் சென்டர்கள் என்று மத்திய அரசு ஏறத்தாழ 6,000 இடத்தில் ஏற்படுத்த வேண்டுமென்ற திட்டம் வகுத்து அதன் அடிப்படையில் நமது தமிழகத்திலும் ஏறத்தாழ வட்டாரத்திற்கு ஒன்று என்ற அளவில் அமைத்துக் கொண்டால், அதன் மூலம் தனிப்பட்ட விவசாயிகளுக்குக் கிணறு வெட்டுவதில் எந்தவிதமான நஷ்டமும் இல்லாதவாறு பார்த்துக் கொள்ளலாம்.

திரு. வி. வெங்கா : ஏ.ஆர்.சி. மூலமாகப் புதிய கிணறுகள் தோண்டவும் பம்ப்செட் அமைக்கவும் கடன் வழங்குகிறார்கள். எங்கள் பகுதியில் ஏ.ஆர்.சி. இருக்கிறது. அங்கு ஏற்கனவே கூட்டுறவுத் துறையில் பணம் பெற்று கிணறு வெட்டியிருக்கிறார்கள். மின்சார இணைப்புப் பெறுவதற்கு கடன் வாங்க வழியில்லாமல் கஷ்டப்படுகிறார்கள். அதற்கான கடன் வழங்க ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : உறுப்பினர் சொன்ன யோசனை அரசாங்கத்தின் கவனத்தில் இருந்து வருகிறது.

MR. CHAIRMAN : Questions 187 to 190 are postponed.

*Panchayat Union Elementary School (Thursupatti).*

*3 S.N. Q.—THIRU M. ARUMUGASWAMI : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(a) whether the Panchayat Union Elementary School, Thursupatti in Budalur Block in Thanjavur District, has been closed from this academic year;

(b) whether the recognition of this school has been withdrawn by the District Educational Officer; and

(c) if so, the details thereof?

திருசுப்பட்டி ஊராட்சி ஒன்றியத் தொடக்கப்பள்ளி.

திரு. எம். ஆறுமுகசாமி : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதில் அளிக்க வேண்டுகிறேன்—

(அ) தஞ்சாவூர் மாவட்டம், பூதலூர் வட்டாரத்தில், திருசுப்பட்டியிலுள்ள ஊராட்சி ஒன்றியத் தொடக்கப்பள்ளி இந்தக் கல்வி ஆண்டிலிருந்து மூடப்பட்டுள்ளதா ?



22nd July 1971] [திரு. எம். ஆறுமுகசாமி]

(இ) அப்பள்ளிக்கு வழங்கியுள்ள ஒப்புதல் மாவட்டக் கல்வி அதிகாரியால் ரத்து செய்யப்பட்டுள்ளதா ?

(உ) ஆமெனில், அது குறித்த விவரங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) இல்லை.

(உ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. எம். ஆறுமுகசாமி : தலைவர் அவர்களே, அந்தக் கிராமத்தில் பள்ளிக்குச் செல்லும் சிறுவர்கள் தொகை 200-க்கு மேல் இருந்தும்கூட, கட்டாயக் கல்வி முறை அமுலிலிருக்கும் இந்தக் காலத்தில் இரண்டாண்டுகளாகச் சிறுவர்கள் அந்தப் பள்ளிக்கு வராத காரணத்தைக் கண்டு அரசு எடுத்த நடவடிக்கை என்ன ? தஞ்சை மாவட்டத்தில் அது இருந்தாலும், அந்த ஊர் பின்தங்கிய பகுதியாக இருப்பதால், அவர்களுடைய பொதுநலனை முன்னிட்டு அப்பள்ளியை மூடாமல் தடுத்து நிறுத்த அரசு முயலுமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அந்தப் பள்ளிக்கு 31-5-1970 வரையில் ஒப்பளிப்பு தரப்பட்டிருந்தது. ஆனால் அங்குள்ள மாணவர்கள் எண்ணிக்கை, இருக்கிற உபகரணங்கள் எல்லாம் ஒரு பள்ளிக்கு இருக்கவேண்டிய அளவில் இல்லை. அப்படியிருந்தும் ஓராண்டுக் காலம் சலுகை கொடுத்துப் பார்க்கலாம் என்று இந்த ஆண்டு இறுதி வரையில் அனுமதிக்கப்பட்டது. சென்ற ஆண்டு இறுதியில் அங்கே 19 மாணவர்கள் இருந்தார்கள். பிறகு எட்டு, ஆறு என்று மாணவர்கள் இருந்தார்கள். ஓராண்டுக் காலத்திற்குள்ளாவது அந்த ஊர் மக்கள், ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்தவர்கள் அக்கறை காட்டுவார்கள் என்று எதிர்பார்த்தோம். அது இல்லை. பக்கத்திலுள்ள பள்ளிக்குச் சென்றுதான் மாணவர்கள் படிக்கிறார்கள் என்று இதிலிருந்து தெரிகிறது. போதுமான அளவு மாணவர்கள் வருவார்களானால், இன்றைக்கு வேண்டுமானாலும் அப்பள்ளியைத் திறக்கலாம். ஊராட்சி ஒன்றியம் அதற்கான உறுதியுடன் வந்தால், அதற்கான நடவடிக்கையை அரசாங்கம் மேற்கொள்ளும்.

திரு. ஜி. சுவாமிநாதன் : அந்தப் பள்ளிக்கு மாணவர்கள் போகாமல் மற்றப் பள்ளிகளுக்குப் போகிறார்கள் என்று சொல்லும் போது, அதற்கான காரணத்தை அரசு ஆராய்ந்ததா ? அங்கே உள்ள ஜாதி வித்தியாசப் பூசலினால்தான் அந்த மாதிரிச் சூழ்நிலை அங்கே ஏற்படுகிறது என்பதை அரசு அறியுமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அதைப்பற்றி ஆராயவில்லை. ஒரு ஆண்டு சலுகை தந்தும், அது நடக்கவில்லை என்றால், உறுப்பினர் கூறுவதைப் போன்று ஜாதி மாச்சரியங்கள் இருக்கலாம். அதைப் பொதுமக்கள்தான் போக்க வேண்டும். மிகக் குறைந்த, எட்டு, ஆறு என்று மாணவர்களைக் கொண்டு ஒரு பள்ளியை நடத்துவது சரியல்ல. போதுமான மாணவர்கள் வந்தால், அதைப் பரிசீலிக்கலாம்.

[22nd July 1971

திரு. எம். ஆறுமுகசாமி : தலைவர் அவர்களே, ஏற்கெனவே நான் சொன்னது போல, அந்தக் கிராமத்தில் இருநூறுக்கும் மேற் பட்ட பள்ளி செல்லும் மாணவர்கள் இப்போதும் இருக்கிறார்கள். அந்த ஊருக்கு ஆசிரியர்கள் நியமன விஷயத்தில் அந்த ஊர் 'பனிஷ்மெண்ட்' ஊர் என்று செல்லப்படுவதால், தரமான ஆசிரி யர்களை அங்கே அனுப்பாமல் உபயோகமற்ற ஆசிரியர்களை அங்கே அனுப்புவதன் காரணமாக அந்த நிலை ஏற்பட்டிருக்கலாம். அதனால் அந்த ஊர் பொதுமக்கள் அவர்களை ஏற்றுக்கொள்ளாமல் இருந்திருக்கலாம் என்பதை அரசு கண்டு தக்க நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அப்படிப்பட்ட சூழ்நிலை ஏற்படவேண்டிய அவசியமில்லை. ஊராட்சி ஒன்றியங்கள் தான் ஆசிரியர்களை நியமிக்கிறார்கள். பயன்படுகிற ஆசிரியர்களைப் போவதற்கு வாய்ப்பு இருக்கிறது. அதில் குறை ஏற்பட்டால், ஹரிஜன் கமிஷனர் அதில் தலையிட்டு உதவி செய்யலாம். ஓராண்டு காலம் அதிகமாகச் சலுகை தரப்பட்டது. அப்போதே அதைச் செய்திருக்கலாம். 1970–71 வரையில் அந்த நோக்கம் நிறைவேறுத காரணத்தால், அந்தப் பள்ளியை மூடவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. மீண்டும் மாணவர்கள் வருகிற சூழ்நிலை ஏற்பட்டால், திறப்பதற்கு முயற்சிக்கலாம்.

திரு. கே. எஸ். அப்துல் வகாப் : சில பள்ளிகளில் தாம் குறை வாக இருந்தால், அங்கே மாணவர்கள் தொகை குறைந்து கொண்டே வருகிறது. பல பள்ளிகளில் இந்தக் குறை தென்படு கிறது. ஆகவே மாணவர்கள் தொகை குறைகிற பள்ளிகளில் அதற்கு என்ன காரணம் என்று ஆராய்ந்து நடவடிக்கை எடுத்து நேர் செய்ய அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, தரம் குறைகிறதா இல்லையா என்று கல்வியாளர்கள், உயர்நிலைப்பள்ளி களைப் பொறுத்த அளவில் தெளிவாகத் தெரிந்துகொள்ள முடியும். அவர்கள் ஆராய்கிற நிலைமை ஏற்பட்டாலும், பள்ளிக் கல்வி இயக்குநர், மாவட்டக் கல்வி அதிகாரிகள் இதைக் கவனித்து, பள்ளிகளில் தேறுகிற மாணவர்களின் விழுக்காடு குறைந்து காணப் பட்டால், அதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இப்போது சட்ட விதிகள் இருக்கின்றன. ஓராண்டுத் தேர்வு முடிந்த பிறகு அந்தக் கணக்கு எடுக்கப்படுகிறது.

திரு. எஸ். மூக்கையாத் தேவர் : மாண்புமிகு உறுப்பினர் கூறியபடி, உபயோகமற்ற ஆசிரியர்கள், அமைச்சர் கூறியதைப்போல பயன் படாத ஆசிரியர்கள் என்ற பட்டியல் ஏதும் இருக்கிறதா? நிர்வாகம் சரியாக இல்லாததால் இந்தக் கேள்வி எழுந்தது என்பது அரசுக்குத் தெரியுமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அதற்கான தனிப் பட்டியல் இல்லை. அப்படிப்பட்ட குறைபாடு இல்லை என்றும் சொல்வதற்கில்லை. நிர்வாகக் குறையும் இருக்கலாம். பணியாற்று கின்ற பள்ளிகளுக்குப் புகழ் தேடித் தருகிற ஆசிரியர்களும் இருக்



22nd July 1971] [திரு. இரா. நெடுஞ்செழியன்

கிறார்கள். கொடுத்துள்ள பொறுப்பைச் சரிவரப் பார்க்காமல் தட்டிக் கழிக்கிறவர்களும் பொறுப்பை ஏற்காமல் நடப்பவர்களும் இருக்கிறார்கள் என்பதையும் மறந்து விட முடியாது. அவர்கள் மீதும் நடவடிக்கை எடுக்கப்படுகிறது. நிர்வாகக் கோளாறு இருந் தாலும், அது கண்டறியப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

திரு. சி. வி. ராஜகோபால் : தலைவர் அவர்களே, 200 மாண வர்கள் அந்த ஊரில் இருந்தும் அந்தப் பள்ளிக்கு வராததால் மூடி விட்டோம் என்று சொன்னதும், பிறகு அந்த மாணவர்கள் வரு வார்கள் என்று கருதப்படுவதால், மீண்டும் அந்தப் பள்ளியைத் திறக்க ஆட்சியாளர்கள் முன் வருவார்களா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு உறுப் பினருக்குத் தெரிந்த காரணங்கள் எல்லாம் அரசாங்கத்திற்கும் தெரிந்து ஒரு ஆண்டுக் காலம் சலுகை அளித்த பிறகும் சரியாக நடக்கவில்லை என்பதால் மூடப்பட்டது.

திரு. வி. வெங்கா : ஆசிரியர் கூட்டணி இயங்குவதால் மானேஜ் மெண்ட் பொறுப்பேற்று நடத்திவருகிற ஊராட்சி ஒன்றியங்கள் தகாத ஆசிரியர்கள்மீது நடவடிக்கை எடுக்க முடியாத சூழ்நிலை இருப்பதை அரசு அறியுமா ?

ஆசிரியர்கள் கூட்டணி, டிரேட் யூனியன் முறையில் நடைபெறு கிறது என்பதால் மானேஜ்மெண்ட் பொறுப்பை ஏற்றுக் கொண்டு இருக்கிற ஊராட்சி ஒன்றியங்கள் தனிப்பட்ட வகையில் குற்றம் செய்கிற ஆசிரியர்கள் மீது நடவடிக்கை எடுக்க முடியாமலிருப் பதை அரசு அறியுமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : டிரேடு யூனியன் அடிப்படையில் ஆசிரியர் சங்கம் இயங்கவில்லை. ஆசிரியர் சங்கம் இருப்பதால், எடுக்க வேண்டிய நடவடிக்கையை எடுக்காமலிருக்க எந்த ஊராட்சி ஒன்றியத்திற்கும் இடமில்லை. முறைப்படி குற்றம் செய்தால், நடவடிக்கை எடுக்கலாம். குற்றம் இல்லாத வகையில் நடவடிக்கை எடுக்கும்போதுதான் ஆசிரியர் சங்கம் நடவடிக்கை மேற்கொள்ளும். முறைப்படி நடவடிக்கை எடுக்க எந்தத் தடை யும் இல்லை.

திரு. ஜி. சுவாமிநாதன் : குறிப்பிட்ட பள்ளியைப் பொறுத்த வரையில், அந்த ஊரில் ஒரு ஜாதிக்காரர்கள் இருக்கிறார்கள். வேறு ஜாதியைச் சேர்ந்தவர்கள் ஆசிரியர்களாக நியமிக்கப்பட்டால், தகராறு ஏற்படுகிறது. அதனால் அங்கே மாணவர்கள் யாரும் போகாத நிலைமை ஏற்படுவதால், வேறு ஜாதிக்காரர்களை ஆசிரியர் களாகப் போடுவதால் மாணவர்கள் வர முடியாமல் செய்கிறார்கள் என்பதை அமைச்சர் அறிவார்களா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு உறுப் பினர் அவர்கள் கூறுவது காரணமாக இருந்தால், அங்குள்ள ஊராட்சி ஒன்றியத் தலைவரை இதன் நிலைமையைக் கண்டறிந்து எப்படி நடந்தால் சரியாக இயங்கும் என்று யோசிக்க வேண்டும்.

[திரு. இரா. நெடுஞ்செழியன்] [22nd July 1971

அப்போது அந்தத் தலைவரும் எந்த ஜாதி என்று பார்க்க வேண்டியிருக்கும். அதில் வருகிற கோளாறுகள் கூட இருக்கலாம். ஆகையால் அதை அங்குள்ள மக்கள்தான் தீர்த்துக்கொள்ள முடியும்.

MR. CHAIRMAN: Questions are over.

[*Note*: An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

## II. GOVERNMENT RESOLUTION.

## AMENDMENT TO THE TAMIL NADU COTTON TRANSPORT RULES, 1950.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்:

"தமிழ் நாடு 1950-ம் ஆண்டு பருத்திப் போக்குவரத்து விதிகளைச் சேர்ந்த 1, 3 (i) 10 (ii) விதிகளைத் திருத்தி 1923-ம் ஆண்டு பருத்திப் போக்குவரத்துச் சட்டத்தின் (மத்திய சட்டம் 3/1923) 7-வது பிரிவின் கீழ் மாநில அரசு பிறப்பிக்கவிருக்கும் கீழ்க்காணும் வரைவு விதிகள் மேற்படி சட்டத்தின் 8-வது பிரிவில் கண்டுள்ள வாறு ஏற்பளிக்கப்படுவதாக".

### வரைவு அறிவிப்பு.

1923-ம் ஆண்டு பருத்தி போக்குவரத்துச் சட்டத்தின் 7-வது பிரிவில் வழங்கியுள்ள அதிகாரங்களைக் கொண்டு தமிழ்நாடு 1950-ம் ஆண்டு பருத்திப் போக்குவரத்து விதிகளில் பின்வரும் திருத்தங்களைத் தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் இதனால் செய்கிறார். இத் திருத்தங்களுக்கு, மேற்படி சட்டத்தின் 8-வது பிரிவில் கண்டுள்ள வாறு சட்டமன்ற இரு அவைகளின் தீர்மானம் மூலம் ஏற்பளிக்கப் பட்டுள்ளது.

### திருத்தங்கள்.

மேற்சொன்ன விதிகளில்: (1) 1-வது விதியில் இரண்டாவது வாக்கியத்தில் "மணங்குகள்" என்ற சொல்லுக்குப் பதிலாக "குவிண்டால்கள்" என்ற சொல் அமைத்துக் கொள்ளப்பட வேண்டும்.

(2) 3-வது விதியைச் சேர்ந்த (i) துணை விதியில் (பி) பகுதிக்குப் பின்னர் பின்வரும் பகுதி சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும், அதாவது:

"(சி) பருத்தி விதைகளைப் பிரிந்து எண்ணெய் எடுப்பதற்காக அவற்றைப் பருத்தி விதை எண்ணெய் ஆலைகளுக்கு அனுப்புதல்".

(3) 10-வது விதியைச் சேர்ந்த (ii) துணை விதியில் (ஏ) முதல் (டி) வரையுள்ள இனங்களுக்கும் அவை தொடர்புள்ள எஸ்ஸார்ப் பதிவுகளுக்கும் பதிலாகப் பின்வருவன அமைத்துக்



22nd July 1971] [திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு]

கொள்ளப்படவேண்டும். அதாவது: "(ஏ) பருத்தி விதை (கப்பாஸ்) குவிண்டால் ஒன்றுக்கு அல்லது அதன் ஒரு பகுதிக்கு ரூ. 0.30.

(பி) லின்ட் பருத்தி (உதிரியாக அல்லது அழுத்தப்பட்ட வடிவில்) குவிண்டால் ஒன்றுக்கு அல்லது அதன் பகுதிக்கு ரூ. 0.65

(சி) பருத்தி விதை குவிண்டால் ஒன்றுக்கு அல்லது அதன் ஒரு பகுதிக்கு ரூ. 0.30.

(டி) பஞ்சுக் கழிவு குவிண்டால் ஒன்றுக்கு அல்லது அதன் ஒரு பகுதிக்கு ரூ. 0.65."

DEPUTY CHAIRMAN: Motion moved:—

"That the following draft rules to be issued by the State Government under Section 7 of the Cotton Transport Act, 1923 (Central Act III of 1923), amending rules 1, 3 (i) and 10 (ii) of the Madras Cotton Transport Rules, 1950 be approved as required by Section 8 of the said Act.

### *DRAFT NOTIFICATION.*

In exercise of the powers conferred by section 7 of the Cotton Transport Act, 1923 (Central Act III of 1923), the Governor of Tamil Nadu hereby makes the following amendments to the Madras Cotton Transport Rules, 1950, the same having been approved by Resolutions of both the Houses of the Legislature as required by Section 8 of the said Act.

### AMENDMENTS.

In the said Rules—

"(1) in rule 1, for the word "maunds" in the second sentence the word "quintals" shall be substituted.

(2) in sub-rule (i) of rule 3, after clause (*b*), the following clause shall be added, namely:—

"(c) cotton seeds to cotton seed oil mills for seed crushing."

(3) in sub-rule (ii) of rule 10, for items (*a*) to (*d*) and the entries relating thereto, the following shall be substituted, namely:

(*a*) Seed cotton (kapas)—Rs. 0.30 P. per quintal or part thereof.

(*b*) Lint (loose or pressed)—Rs. 0.65 P. per quintal or part thereof.

(*c*) Cotton seed—Rs. 0.30 P. per quintal or part thereof.

(*d*) Cotton waste—0.65 P. per quintal or part thereof."

திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு: தலைவர் அவர்களே, இந்தத் தீர்மானத்தை ஏற்றுக் கொள்வதற்கு முன்பாக ஒன்று சொல்கிறேன். ஏற்கெனவே உள்ள பருத்தி, பருத்தி விதை போக்கு

வரத்துக் கட்டுப்பாடு சம்பந்தமாக உள்ள அசல் விதிகள் இப்படி இருக்கின்றன, அவை இவ்வாறு திருத்தப்படுகின்றன என்று விளக்கங்கள் கொடுத்திருந்தால், நன்றாக இருந்திருக்கும். பருத்தி, பஞ்சு, பருத்திவிதை முதலியவற்றில் சற்று அனுபவம் உள்ள என் போன்றவர்க்குக்கூட இதன் மூலம் ஒன்றும் அறிந்துகொள்ள முடியவில்லை. ஒருக்கால் அமைச்சர் அவர்களிடத்திலே இதற்கான விளக்கங்கள் இருக்கலாம். அந்த விளக்கங்கள் இல்லாத காரணத்தால் நாங்கள் யோசனை சொல்லக்கூடிய நிலையிலே இல்லை. பல விவரங்கள் தெரிந்துகொள்ள வேண்டியிருக்கிறது.

இரண்டாவது பக்கத்திலே பருத்தி விதை என்று சொல்லிவிட்டு, பிராக்கட்டுக்குள்ளே "(கப்பாஸ்)" என்று போட்டிருக்கிறது. 5.20 p.m. கப்பாஸ் என்றால் பருத்தி விதை என்றுதான் நினைத்துக் கொண்டிருந்தேன். பருத்தி விதை என்று போட்டு விட்டு அடைப்புக் குள்ளே கப்பாஸ் என்று ஏன் போட வேண்டும் என்று தெரியவில்லை.

லின்ட் பருத்தி என்று சொல்லப்பட்டிருக்கிறது. லின்ட் என்றால் பஞ்சு. லின்ட் பருத்தி என்று ஏன் வைக்க வேண்டும்? விதை நீக்கப்படாத, பஞ்சும் பருத்தி விதையும் ஒன்றாக இணைந்து வந்த நிலையிலே கொட்டை நீக்கப்படாத அந்தப் பொருளுக்குப் பருத்தி என்று பெயர். லின்ட் பருத்தி என்று சொல்லப்படுகிறது. பருத்தி என்றால் கொட்டையும் சேர்ந்து விடுகிறது. குவிண்டால் ஒன்றுக்கு அல்லது அதன் பகுதிக்கு 65 பைசா என்று போட்டிருக்கிறது. பருத்தி விதைக்கு குவிண்டால் ஒன்றுக்கு அல்லது அதன் பகுதிக்கு 30 பைசா என்று சொல்லப்பட்டிருக்கிறது. எனக்கு அது விளங்காமல் இருக்கிறது. பஞ்சு குவிண்டால் ஒன்றுக்கு 65 பைசா. அது ஒரு கண்டிக்கு 3,000, 2,000 ரூபாய்வரை விற்கிறது. பருத்தி விதை குவிண்டாலுக்கு 50 அல்லது 60-க்குள்ளே விற்கிறது. அதற்கு 30 பைசா. ஆகவே இதைப்பற்றிச் சற்றுக் குழப்பமான நிலையில் என் நிலை இருக்கிறது. அதற்கான அசல் விதிகளையும் திருத்தங்களையும் எங்களுக்குக் கொடுத்து இன்னொரு நாளைக்கு இதை வைத்துக் கொள்ளலாம், 5 நிமிஷத்திலே முடிந்து விடும் என்று கருதுகிறேன். அமைச்சர் அவர்கள் இதைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : "காட்டன் சீட்" என்பதற்கு பருத்தி விதை என்றும், சீட் காட்டன் என்பதற்கு விதைப் பருத்தி என்றும் பஞ்சோடு கூடிய விதைக்குப் பருத்தி என்றும் பெயர்.

திரு. எஸ். ஜெயராம செட்டியார் : தலைவர் அவர்களே, இப்போது கொண்டு வந்திருக்கும் திருத்தத்தின் மூலமாக அரசுக்கு எவ்வளவு அதிகமான வருமானம் வரும் என்று ஏதாவது எஸ்டிமேட் போடப்பட்டிருக்கிறதா என்று அமைச்சர் அவர்கள் சொல்ல வேண்டும்.



மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. கிருஷ்ணசாமி நாயுடு அவர்களே 'அனுபவம் உள்ள என் போன்றவர்களுக்கு' என்று சொல்லி விட்டதால், அவர்களுடைய அனுபவம் இதற்கு நல்ல முறையிலே பயன்படும். அவர்களுக்கு இது நன்றாகத் தெரிந்திருக்கும். ஆகையினாலே இதை இன்னொரு நாள் விவாதிக்க வேண்டிய அவசியமில்லை. விதைப் பருத்தி முன்பு 35 கிலோகிராமுக்கு 10 காசு என்று இருந்தது. இப்போது 100 கிலோகிராமுக்கு என்று வருகிறபோது 100-க்குப் பதிலாக 30 காசு என்று போடப்பட்டிருக்கிறது. அவ்வளவுதான் வித்தியாசம்.

ஏற்கெனவே லின்ட் பருத்தி விதைக்கு 40 கிலோகிராமுக்கு 25 காசு என்று இருந்தது. இப்பொழுது 100 கிலோகிராமுக்கு 60 காசாக ஆக்கப்பட்டிருக்கிறது.

அதேபோல் பருத்தி விதை ஏற்கனவே 35 கிலோகிராமுக்கு 10 காசு என்று இருந்தது. இப்பொழுது 100 கிலோகிராமுக்கு 30 காசு என்று போடப்பட்டிருக்கிறது. இவைதான் வித்தியாசமே தவிர வேறு எந்த மாற்றமும் இல்லை. குவிண்டால் என்று மாற்றப்பட்டிருக்கிற காரணத்தால், குவிண்டாலுக்கு ஏற்ற அளவுக்கு விலை நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது.

DEPUTY CHAIRMAN : The question is—

" That the following draft rules to be issued by the State Government under Section 7 of the Cotton Transport Act, 1923 (Central Act III of 1923), amending rules 1, 3 (i) and 10 (ii) of the Madras Cotton Transport Rules, 1950 be approved as required by section 8 of the said Act.

*DRAFT NOTIFICATION.*

In exercise of the powers conferred by section 7 of the Cotton Transport Act, 1923 (Central Act III of 1923), the Governor of Tamil Nadu hereby makes the following amendments to the Madras Cotton Transport Rules, 1950, the same having been approved by Resolutions of both the Houses of the Legislature as required by section 8 of the said Act.

AMENDMENTS.

In the said Rules—

" (i) in rule 1, for the word " maunds " in the second sentence the word " Quintals " shall be substituted.

(2) in sub-rule (i) of rule 3, after clause (b) the following clause shall be added, namely :—

(c) of cotton seeds to cotton seed oil mills for seed crushing "

[22nd July 1971

(3) in sub-rule (ii) of rule 10, for items (*a*) to (*d*) and the entries relating thereto, the following shall be substituted, namely :

" (*a*) Seed cotton (kapas—Rs. 0.30 P. per quintal or part thereof.

(*b*) Lint (loose or pressed)—Rs. 0.65 P. per quintal or part thereof.

(*c*) Cotton seed—Rs 0.30 P. per quintal or part thereof?

(*d*) Cotton waste—Rs. 0.65 P. per quintal or part thereof.

The motion was put and carried.

## III. Government Bills.

## THE TAMIL NADU URBAN LAND TAX (AMENDMENT) BILL, 1971.

(L.A. BILL No. 18 OF 1971).

THE HON. THIRU P. U. SHANMUGAM : Mr. Deputy Chairman, Sir, I beg to move—

" That the Tamil Nadu Urban Land Tax (Amendment) Bill of 1971 (L.A. Bill No. 18 of 1971), as passed by the Assembly, be taken into consideration for making recommendations."

The Tamil Nadu Urban Land Tax Act, 1966 (Tamil Nadu Act 12 of 1966), is in force at present in the City of Madras from 1st July 1963. All urban lands are liable to the levy of tax under the Act. The Government considered whether the revenue under the said Act could be increased and at the same time, give some relief to the small urban land holders. These twin objects are proposed to be achieved by exempting all urban lands not exceeding one ground from the levy of tax and by introducing a graded system of levy of tax on urban lands exceeding one ground and by extension of the said Act to the City of Madurai and the Municipal towns of Salem, Coimbatore and Tiruchirappalli. The extension of the said Act to the City of Madurai and the three municipal towns of Salem, Coimbatore and Tiruchirappalli is proposed to be done by issue of a notification under section 1 (2) (*b*) of the Act for which the approval of the Assembly will be obtained separately under scetion 1 (4) of the Act. The grant of exemption up to and inclusive one ground and the graded system of levy of tax are embodied in the Bill now moved. The Bill was passed by the Assembly with the amendment of new section 40-A proposed to be inserted by clause 11 of the Bill reducing the penalty to be imposed on the assessees for non-submission of return or the submission of incomplete or incorrect return regarding the urban lands owned by them from twice the amount of urban land tax to one-half the amount of the urban land tax due in respect of the urban land concerned.

@ Printed as Appendix III on pages 80–84.



22nd July 1971] [Thiru P. U. Shanmugam]

Sir, I request the House to accept the motion.

DEPUTY CHAIRMAN : Motion moved—

" That the Tamil Nadu Urban Land Tax (Amendment) Bill, 1971 (L.A. Bill No. 18 of 1971), as passed by the Assembly, be taken into consideration for making recommendations."

* THIRU A. R. DAMODARAN : Sir, I am very sorry to oppose this measure, because, even in 1966, when Thiru Bhaktavatsalam as Chief Minister of the former Government moved the Urban Land Tax Bill after the Supreme Court's decision invalidating certain provisions of the 1963 Act, I pointed out that a great deal of hardship would be caused to the residents of this Corporation as well as of other urban areas which might later on be notified by the Government. I am sorry to say that all the fears that I expressed on that occasion have been amply justified and proved by the measure that has been brought forth before this House today.

Sir, I realised that in this year of Grace 1971, if anybody were to criticise a measure of this nature, it would attract the counter-criticism that we are anti-socialists in our objectives and that is one easy form of disarming all opposition to such measures. I can understand, Sir, a measure such as the Income-tax Act whereby because of progressive income increases, the Government seek to raise the slab for of income-tax,, so that a larger proportion of the income is taken into Government resources. I can understand a Bill such as the Capital Gains Tax Act whereby a person who may have purchased 5 grounds 15 years ago at Rs. 3,000 and who sells the same 5 grounds at Rs. 15,000 per ground in the year 1970 is asked to pay a Capital Gains tax amounting to 20 or 30 per cent which the Central Government have already introduced last year and which has been raised this year. But, when it comes to taxing a national form of wealth such as urban land, I must take this opportunity to point out to the Government the various difficulties which the house-owners not only in Madras Corporation area but also in the other four Municipal areas are likely to face, especially because the Government have now sought, as they should have, in the first instance, to easily notify these four Municipal areas and to keep the rate of urban land tax as it were at 0.4 per cent. But the mischief has been done in that not only has this Act been extended to the four Municipal areas mentioned by the Hon. Minister but also, what is far more important, a very steep gradation in the urban land tax rate is contemplated by this Bill.

Sir, when the Urban Land Tax Bill was introduced in 1966, most of us knew the reason why that Bill was being introduced. Popular rumour had it, Sir, that a very influential Member of the Central Cabinet wanted to purchase land in Bangalore City. He was very anxious and when he found that the price of land in

[Thiru A. R Damodaran] [22nd July 1971

Bangalore City had shot up from Rs. 1,500 to Rs. 9,000 per ground, this very influential Cabinet Minister who had the ears of the Prime Minister at that time mentioned that there was unnecessary speculation in urban land and that the Government of India should try to curb this profiteering and speculation in urban land. As a result of that, the Government of India circularised all the State Governments that it was very essential that uch a Bill should be brought to curb the speculative gains on the sale of urban land that was taking place. We have also read in the newspapers about the circulars which the Central Government have recently sent regarding ceiling on urban property, etc. It is as a result of the perpetual goading as it were of the Central Government, that the State Governments have been forced to bring in such measures. I believe, Sir, that a great deal of injustice is likely to be caused, because this Bill does not seek to exempt any particular class of house-owners from the onerous provisions of paying a very much higher rate of urban land tax. When I made my remarks on the Budget, I mentioned that there were two classes of house-owners who should have been given some consideration while this Bill was drafted. I referred to the etired Government servants and widows whose livelihood rested only on the income they would earn from one small house that they might have in Madras City and who might have no other source of income to depend upon; and these two classes of persons are going to be very seriously affected, because this is a tax not on income, not on sales, not on capital gains but on a notional wealth of urban land which is presumed to have risen in value because of the various developmental activities that have taken place in our country during the past 20 years. In Bangalore also there is a similar Act but there a very sensible exemption has been granted in that the vacant land has been subjected to tax and the area that is covered by the house property itself, by the building itself and the '15 feet adjoining area' which is prescribed by the Town Planning authorities as a 'must' when any house is constructed—these two areas—are exempted from the provisions of the Urban Land Tax Act. But, unfortunately, Sir, in this Bill no such exemption has been granted. A great deal of discussion has taken place on the exemption of one ground that has been granted under this new Bill. I welcome this, Sir. But, at the same time, I do not believe it goes far enough and that is why I have suggested an amendment. Many house owners in Madras City, not realising that this graded levy would be increased once in five years, with the same monotony of the Five-Year Plans, without realising these things decided to buy four or five grounds, when the land was cheap and was selling at Rs. 3,000 or Rs. 3,500 per ground. Unfortunately, without realising that there might come a time when there would be progressive increase in taxation—not only Urban Land Tax but also Wealth Tax—, they located their house in the centre of the plot, with the result that they are now not in a position to sell any portion

5-30 p.m.



22nd July 1971] [Thiru A. R. Damodaran]

of the vacant land, because of the impossibility of locating another small building in the area in which they have built their house. Had these things been anticipated 10 or 15 years ago, we might have built our houses as garages in one corner of our plot and kept in reserve the vacant land so that when successive Governments would have come and levied such a tax, we might have been in a position to sell this land away, rather than pay the onerous taxes that are contemplated under such a Bill.

(Mr. Chairman in the Chair)

I have, therefore, suggested an amendment on which I shall speak later. But I would like to broadly explain before the House so that the Members may realise that when I ask for these exemptions, it is not that I wish the richer or the affluent classes alone to benefit by such exemptions but that a large middle class population who are likely to be hard hit by this measure may also obtain the much needed exemptions under such a Bill. I feel that in the classification of urban land that is liable for tax, the portion that is covered by the building should be totally exempt from tax. Not only that; the area of 15 feet around such buildings should also be exempted for the purpose of valuation. I also believe that instead of granting exemption for only one ground or 2,400 square feet, the exemption should be extended to cover an area of a minimum of five grounds, because I would like to quote a parallel provision from the Wealth Tax Act which our Central Government have adopted wherein they have stated that property valued at Rs. one lakh will be exempt from Wealth Tax, if it is owner-occupied. I do not see, Sir, why this Government should not adopt the same healthy provision of exempting one plot of five grounds from the provisions of this Bill.

Sir, in this Bill, I find that the 'urban area' has curiously enough been defined as an area within 16 k.m. of a City or a Municipal town or a township. Sir, it is possible that in Madras City all the agricultural land that surrounds Madras City proper, i.e., the Corporation limits has risen in value because of the location of industries or factories; but in towns like Madurai, Tiruchirappalli, Salem and even Coimbatore the moment you leave the municipal limits, you come across vast acres of dry land which have not been urbanised and which are still being cultivated and used for agricultural purposes. In the original Act, Sir, it has been clearly stated that only wet lands will be exempted from the classification of urban area and the same exemption has not been granted to dry land. I would like the Hon. Minister, when he visits these four Municipal areas the next time, to go round and see for himself the vast extent of dry land that lies within that 16 K.M. belt and to justify the levy which he proposes under this Bill. According to this Bill, if the people of Madurai own a house in Madurai City and unfortunately have another two or three acres of dry land outside the limits, all that land would be

[Thiru A. R. Damodaran] [22nd July 1971

classified as urban land and would be subject to the tax that is proposed under this Bill. I have, therefore, moved another amendment to the effect that the urban area should be defined as the Municipal or the Corporation area alone and not the area within 16 K.M. surrounding the above Municipal or Corporation area. The Central Government while introducing the Capital Gains Tax last year have defined the urban area as land which is situated within 8 K.M. of a Municipal area. The State Government have gone a step further and stated that lands situated within 16 K.M. would be urban area. In this way, with the other 96 Municipalities in our State, well over 60 per cent of the entire area in the State may be covered by the definition of "urban area"; and it is because of this fear and anxiety that I plead that all dry land should also be brought within the classification of exempted land and relief given to such people who may have house property and also dry lands in adjoining areas.

Sir, the other point which I wish to mention is the rate of tax contemplated under this Bill. There has been a very steep gradation. While the former rate of levy was 0.4 per cent irrespective of the extent of land owned, the present Bill seeks to exempt only one ground. But, even here, if a person owns more than one ground, say, if he has four grounds, the exemption is not granted for the first ground but he is taxed for the entire four grounds that he owns. This, Sir, is against all principles of equity and natural justice. In the Income-tax Act, when it is stated that the first Rs. 5,000 is exempt from Income-tax, a person earning Rs. 5 lakhs as income still gets that basic exemption up to Rs. 5,000 and it is only when income goes up, the slab rate is applied at 10 per cent, 20 per cent, 30 per cent, 40 per cent, 72 per cent and 82 per cent. I would have no objection, Sir, if the Government had adopted a similar system in levying Urban Land Tax. I feel that because a man may own 1½ grounds of land to deny him even the basic exemption of one ground is neither fair nor just and I would certainly plead with the Hon. Minister to accept this recommendation, because I feel that it will not run counter to what the Government themselves have in their mind regarding the exemption that should be granted to such persons.

5-40 p.m.

I request, Sir, that for the first five grounds, there should be no tax at all. For lands between five grounds and ten grounds, the rate of tax should be the present 0.4 per cent and for lands above ten grounds, the rate of tax may be increased to 0.5 per cent. There is always a danger, Sir, in raising such taxes because, as I have pointed out, these taxes are on a notional wealth. The land values may increase at any time. It may be Rs. 15,000 per ground today. After some time it may go up to Rs. 30,000, to 40,000 and so on. But not all of us who possess lands or houses in the Madras City or in these four municipal areas retain those lands because we want the pleasure of ownership, but because we had acquired these lands at some distant past. As I pointed out, it may not be easy for us to dispose of these lands at the present time because of the various other taxes imposed on them now.



22nd July 1971] [Thiru A. R. Damodaran]

I therefore plead with the Hon. Minister that the harsh provisions of this Bill should not only be mitigated as far as the Corporation of Madras is concerned, but also in view of the fact that this Act is being made applicable to the four municipal areas for the first time, it is necessary for us to introduce the principle of gradation and to accustom the people to the payment of such taxes. In fact, the penal provisions are so severe and many peopl ein the four municipal areas may not be aware of all the formalities they may have to go through. In Madras City, Sir, I know of many persons who even today, are paying urban land tax which is due from 1963. Because of various legal objections, the time for payment has lapsed and many of them are even today paying tax arrears for the past six, seven or eight years. I therefore plead, Sir, that when a measure of this kind is introduced for the first time in municipal areas, it should be made as light as possible. We must accustom the people to such taxes.

Further, Sir, sales tax was introduced at ¼ per cent in 1937, and today, the Hon. Minister has not only raised it to 3½ per cent but has also introduced a surcharge on sales tax. Therefore, the Hon. Minister will have ample opportunities in the coming years to increase the urban land tax also to a rate which he considers to be reasonable five or six years hence. I would, therefore, plead that in the interests of making the burden as light as possible on a section of the community, which has been singled out for purposeful attacks by the have-nots in the country very unjustifiably, if I may say so, at least this concession should be granted to the urban landowners of the Madras City.

* THIRU G. SWAMINATHAN: Mr. Chairman, Sir, at the outset, I wish to endorse the opinion of my hon. Friend Thiru A. R. Damodaran regarding the basic exemption that has to be given to urban landowners. In all Acts relating to taxes, exemption has been given by way of a basic exemption. As has been rightly said by my hon. Friend, in the Income-tax Act, exemption is allowed for the first Rs. 5,000 not only to persons who earn Rs. 5,000 but also to persons who earn above Rs. 5,000. From he Tamil Nadu Agricultural Income Tax Act (L.A. Bill No. 19 of 1971) a copy of which has been received by me just now it is seen that on the first 7½ standard acres, the rate per standard acre is nil. On the next 2-1/2 standard acres, the rate fixed is Rs. 15 per standard acre. On the next 5 standard acres, the rate is Rs. 30 per standard acre and on the next 5 standard acres, the rate is Rs. 45 per standard acre. I do not know why against all principles of equity, the principle of basic exemption is denied to the urban landowners alone. Even Article 14 of the Constitution assures to every citizen of India equality before law. It clearly states that the State shall not deny to any person equality before the law, or the equal protection of the laws within the territory of India.

Again, Sir, as regards increase in tax rates, as has been mentioned by my hon. Friend Thiru Damodaran while it was 0.4 per cent before for a person who owns more than 2 grounds of

[22nd July 1971

[Thiru G. Swaminathan]

land, now it has risen to 0.7 per cent. I know of a person who owns 2½ grounds of and in Aminjikarai area having a value of Rs. 10,000 per ground. Previously, he had to pay a tax of Rs. 100 only at ¼ per cent per ground. But now, the same individual will be assessed at '7 per cent and he will have to pay a tax of Rs. 175. The increase works out to 75 per cent. I believe that it is not a justifiable increase and I am sure that our Hon. Minister would try to reduce the slab rates as much as possible mainly because now the Urban Land Tax is being extended not only to the Corporation of Madurai, but also to other municipalities.

It has been the cry of the urban landholders in Madras City that if it is extended to the other Municipal areas, the rate of tax should be reduced. As a matter of fact while extending the Urban Land Tax to other areas, the rate of tax has also been increased to 0.5 to 1.0 per cent. Formerly, during 1965-68, according to the figures that I have got, the Tamil Nadu Government realised Rs. 40 lakhs by the levy of this tax. In the Budget Speech the Hon. the Chief Minister has mentioned that about one crore of rupees is expected to be realised out of this tax. By merely increasing the tax, the Government propose to get Rs. 60 lakhs and I hope by extending it to other areas like Madurai and other Municipalities, the amount is sure to go up. I, therefore, hope that the rate of tax would be reduced.

Again, Sir, I wish to stress one more point. In regard to valuation of the lands, under section 6 of the Act, arbitrary powers have been given to the Assistant Commissioners. I know of cases where the Assistant Commissioners, have overvalued the lands. I have got an order of the Assistant Commissioner of urban land tax received by a friend of mine on 28th January 1967, according to which the sale value per ground for the area adjoining his house in 1968 at one time was Rs. 3,892, again in the same year was Rs. 1,480, Rs. 1,760. Rs. 7,000. Rs. 5,599, Rs. 1,600. Rs. 3,380, and Rs. 2,400. But what has happened here was that the Assistant Commissioner of Urban Land Tax had asked my friend to pay on the notional valuation of Rs. 8,000 per ground as we have not fixed any norm regarding valuation of urban land. I understand that there are specific provisions in the Co-operative Land Development and Co-operative House Mortgage Acts for valuation of land. As per these Acts, the land value of a particular area is based on the rate at which the land was sold during the 5 years preceding the valuation and an average rate of the sales made in all these years is being taken. The Land Development Act and the other Act according to which the value of the land is fixed has been appreciated not only by the people of this State but also by those of other States. I wish that the Hon. Minister may incorporate at least in the rules that the average value of the land for the preceding 5 years and be taken for levying the urban land tax.



22nd July 1971] [Thiru G. Swaminathan]

The period of notice given under section 7 is one month and it is a rigorous provision especially because a new section 40 (a) has been added which imposes a penalty. Under this provision only a month's time is given to the assessees for sending their returns. This penal provision was not there in the original Act. Even in the Income-Tax Act 3 months' time is given for submitting returns. The Government should give more time because most of the assessees may be ignorant and thereby they may be attracted by the penal provision under section 40 of the Act.

Again, I wish to point out the irrational classification made in section 29-A, read with section 6 (a). Under this provision a person owning one ground is exempted from the operation of the Act. Some individuals may own one ground in various places. For example, a person may own one ground in four places in Madras City and he may have to pay on the aggregate at the slab rate, as I understand the Act. Some other person may not own 4 grounds in Madras City alone, but he may have one ground in Madurai Corporation area, one ground in Tiruchirappalli, one ground in Madurai, and one ground in Salem or Coimbatore. Even though he owns 4 or 5 grounds, he is exempted from the operation of the very same Act. Thus persons owning one ground in various places are exempted. I think this is an irrational classification in the sense that a man has to pay if he has more than one ground in Madras City and need not if he has one ground each in many places.

In conclusion, I wish to mention one more point. Now exemption has been given to persons owning one ground and less. The Act was passed in 1963 and it was struck down by the High Court of Madras twice. Hence the people in Madras City were not aware that they would have to pay this tax from 1963. Most of the assessees in the City of Madras have not yet paid the Urban Land Tax for the last 7 years. If those who own one ground are asked to pay hundreds of rupees at the present time, it will be a great hardship to them. There may be poor people and widows among them. As one ground is exempted from the Urban Land Tax under the present Bill, I request that the exemption under this Bill may also be extended to the people from 1963 onwards. With these words, I thank you, Sir.

THIRU G. VASANTHA PAI: Mr. Chairman, Sir, on the topic of levy of urban land tax, I would like to bring to the attention of the Hon. Minister, a few of the sentiments which I expressed while talking on the Budget. Sir, the Hon. the Chief Minister said both in the Assembly and here that because he had got 1½ grounds, he did not want the exemption to cover 1½ grounds. He limited it to one ground. On that occasion, I pleaded with the Hon. the Chief Minister to make it 2 grounds, so that several persons who are pensioners, who are either old in age and retired from service or in the unhappy position of being widows, would get

5-50 p.m.

[22nd July 1971

[Thiru G. Vasantha Pai]

the exemption from the onerous levy of tax and would be able to sustain themselves without any levy by way of urban land tax. Sir, I reiterate the sentiments which I expressed then and also I echo the sentiments expressed by Thiruvalargal Damodaran and Swaminathan. I request the Government to exempt at least two grounds from the operation of the Urban Land Tax.

There is one thing which I wish to bring to the notice of the Hon. Ministers and the persons who are draftsmen of this Bill. Sir, under section 7-A, tax is levied on the owner of the urban land in the City of Madras. Similarly, Sir, 'Urban land' has been defined in section 13 of the old Act and the new section 12-A defines 'urban area'. Section 6 (*b*) says that the total extent only fixes the rate. So I take it, Sir, that what is really aimed at for the purpose of assessment is the urban land in the City of Madras, and the total extent of the land owned by a person in the City of Madras, and within 16 kilo metres outside will be taken into consideration for fixation of the rate. So, what is really taxed is one ground to one and a half grounds of land in the City of Madras or in the municipality and not the area which is covered or referred to as urban area. So my Friend Thiru Damodaran is not right when he gives an interpretation that the land outside the City of Madras is liable to tax under this measure. I hope he will not give any such idea to the Government and ask them to extend their tentacles like that of an octopus. I believe Sir, that this measure will do injustice only in one way. If a person has got one ground in the City of Madras and 16 grounds of land outside the City of Madras, he is exempted from the payment of urban land tax. If he has got one ground and one square foot more in the city of Madras, he becomes liable to taxation at the rate of 0.5 per cent. In these circumstances, I would like to mention that it would work great inequity and it will not be in the true spirit of taxation measures to make such inequitous distinction. I therefore request that the Government should clarify this measure as early as possible. Otherwise, it will land Government as well as Courts in a spate of litigation which will have to be encountered and people like me may benefit by collecting fees in such litigation and paying the urban land tax.

Sir, I would request the Government to clarify the position and say that the urban area is only for the specific purpose of fixation of the rate and that only the land in the respective municipalities is liable to tax, so that the fears of Thiru Damodaran may be allayed in this behalf. The dry as well as the wet lands may be completely exempted from the tax.

Regarding the further point which my hon. Friend Thiru Swaminathan referred to, I feel that he has mis-interpreted the Sections of the Act. I need not dwell on the various infirmities of the Act, because I do feel that this measure should go before a Committee so that a more thorough investigation can be made into



22nd July 1971] [Thiru G. Vasantha Pai]

the various sections of the Act. I hope that this House will recommend that the measure be put before a Committee for a better consideration of the same. With these few words, I thank the Chair for the opportunity given to me.

*திரு. கே. ராஜாராம்: கலிவரவர்களே, புதிதாகக் கொண்டு வரப் பட்டிருக்கும் இந்த மசோதா நகர்ப்புற மக்களைக் காட்டிலும் கிராமப்புற மக்களைத்தான் அதிகமாகப் பாதிக்கும் என்று நான் அச்சமுறுகிறேன்.

இதற்கு முன்னால் சென்னை நகரத்திற்குள் மட்டும் இருக்கும் நிலங்களுக்கு அர்பன் நிலம் அல்லது நகர்ப்புற நிலம் என்று வரி போடப்பட்டிருந்தது. இப்போது சென்னை நகரத்தைச் சுற்றிலும் 10 மைல் சுற்றளவுக்குள் அல்லது 16 கிலோ மீட்டர் சுற்றளவுக்குள் உள்ள நிலம் எல்லாம் இந்த வரிக்கு உட்பட்ட நிலமாக ஆக்கப்பட்டிருக்கிறது. அத்துடன் இல்லாமல் தமிழ் நாட்டிலுள்ள எல்லா முனிசிபல் நிலங்களும் அதற்கு 10 மைல் தூரம் உள்ள நிலங்கள் அத்தனையும் நகர்ப்புற நிலமாக ஆக்கப்பட்டு வரிக்கு உட்படுத்தப் படுகிறது.

இதில் விஷயம் என்னவென்றால் நஞ்சை நிலத்திற்கு விதிவிலக்கு அளிக்கப்படுகிறது. புஞ்சை நிலத்திற்கு விதிவிலக்கு அளிக்கப் படவில்லை. எங்கள் மதுரை நகரை எடுத்துக் கொண்டால், மதுரையைச் சுற்றிலும் புஞ்சை நிலங்கள் ஏராளமாக இருக்கின்றன. 10 மைல் என்று சொல்லும்போது, சிறு சிறு கிராமங்களுக்கெல்லாம் இந்த 10 மைலுக்குள் அல்லது 16 கிலோ மீட்டருக்குள் வந்து விடுகின்றன. ஒரு ஏக்கர் 400-500 ரூபாய்க்கு விற்கக்கூடிய நிலத்திற்கு இப்போது வரி மட்டும் நிலத்தின் மதிப்புக்கு மேல் வரும்.

நண்பர் திரு. வசந்த பாய் சொன்னதுபோல் ஏதோ நகர்ப் புறத்திற்கு வரி வரும், சுற்றுப்புறத்திற்கு வராது என்றால், மகிழ்ச்சியடைவேன். அப்படி ஒன்றுமில்லை. 16 கிலோ மீட்டர் சுற்றளவிற்கு விஸ்தரிக்கப்படும்போது, கிராமப்புற மக்கள்தான் பாதிக்கப் படுவார்கள். சற்று கூர்ந்து கவனித்தால், முனிசிபல் நிலங்கள், டவுன்ஷிப்புகள், மதுரை, சென்னை ஆகிய இரண்டு கார்ப்பொரேஷன்களும் சேர்ந்து எத்தனை சதுர மைல் ஆகின்றனவோ, அதைக் காட்டிலும் சுற்றுப்புற விஸ்தீர்ணம்தான் அதிகமாக ஆகிறது. ஆகையால்தான் இந்தச் சட்டத்தின் பெயரை மாற்ற வேண்டுமென்று சொல்லுகிறேன். அதிகமான கிராமப்புற சொத்துக்களுக்குத்தான் வரி விதிக்கப்பட வருகிறது. இது எவ்வளவு தூரம் பாதிக்கும் என்பதை ஆளும் கட்சியே யோசிக்க வேண்டும். நகர்ப்புறத்தில் வீடு கட்டியிருப்பவர்களுக்கு மட்டுமல்ல, கிராமப் புறத்தில் புஞ்சை நிலம் வைத்துக்கொண்டு மழையை எதிர் பார்த்துக்கொண்டு, சோளம் போன்ற பயிர் செய்யும் விவசாயிகூட ஒரு கிரவுண்டுக்கு அதன் மதிப்பு எவ்வளவு நிர்ணயிக்கிறார்களோ அதில் 100 ரூபாய்க்கு 2½ பைசா வீதம் வரி செலுத்தும் நிர்ப்பந்தத்திற்கு ஆளாவான். அமைச்சரவர்கள் இதைப் புனராலோசனை செய்யவேண்டும். இது ஒரு 'மிஸ் நோமர்' ஆகிவிட்டது.

[22nd July 1971

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** எதிர்க் கட்சித் தலைவர் சொல்லுகிறார்கள் ரூபாய்க்கு 5 பைசா என்று. அதற்கு ஒரு புள்ளியிருக்கிறது. அதை மறந்து விட்டு . . .

**திரு. கே. ராஜாராம் :** ஒரு ரூபாய் என்பதை மூன்று ரூபாய் என்று . . . . 5 பைசா என்றால் ரூபாய் 100-க்கு 50 பைசா.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** ரூபாய்க்கு 5 பைசா என்றும் மற்றொரு முறை ரூ. 100-க்கு 5 பைசா என்றும் . . .

**திரு. கே. ராஜாராம் :** மேல் நாட்டில் படித்தால் ½ என்பதற்கும் .5 என்பதற்கும் வித்தியாசம் என்ன என்று தெரியவில்லை.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** 5 பைசா இல்லை . . .

**திரு. கே. ராஜாராம் :** அதைத்தான் நான் திருத்திக் கொண்டேனே. ஆகவே இதைப்பற்றிப் பிறகு பேசிக்கொள்ளலாம். ஆனால் இந்தச் சட்டத்தின் பெயரே கிராமப்புற நிலங்களுக்கு போடக்கூடிய வரி. பெரும்பாலாக கிராமப் புற நிலங்கள்தான் பாதிக்கப்பட இருக்கின்றன.

அடுத்தபடியாக, கெஜட்டில் பிரசுரம் செய்து விட்டால், அப்படிச் செய்த தேதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் இந்த வரிக்கு உள்ளாகி அவனுடைய நிலம், விஸ்தீரணம் முதலியவற்றின் விவரம் அடங்கிய ஒரு மூனவை அரசாங்கத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும். அது சென்னை போன்ற நகரத்திற்குப் பொருத்தமாக இருக்கலாம். ஆனால் பெரும்பாலும் கிராம வாசிகளாக இருப்பவர்களுக்கு கெஜட்டில் பிரசுரமான ஒரு மாதத்திற்குள் அனுப்பவேண்டுமென்றால், அது புரியாது. ஆகையால்தான் ஒரு திருத்தம் கொடுத்திருக்கிறேன். அவர்கள் ஒவ்வொருவருக்கும் நோட்டீஸ் கொடுத்து விட வேண்டும். அந்த நோட்டீசைப் பெற்றுக்கொண்ட தேதியிலிருந்து ஒரு மாதமோ, 3 மாதத்திற்குள்ளாகவோ அந்த ரிட்டர்ன் அனுப்ப வேண்டுமென்றால் நியாயமாக இருக்கும். இது இப்போது மட்டுமில்லை. வருமான வரி முதல் முதலிலே அமலுக்கு வந்ததிலிருந்து அம்மாதிரித்தான் இருந்தது. வருமான வரி 'அஸெஸி' அவர்கள் வீட்டுக்கு வந்து வருமான வரி இலாக்காக்காரர்கள் ஒரு நோட்டீசும் ஒரு ரிட்டர்ன் பாரமும் கூட கொடுத்து விடுவார்கள். அப்போது அவர்கள் அதைப் பூர்த்தி செய்து ஆபீசுக்கு அனுப்பி வைப்பார்கள். இது புதிதானது அல்ல. ஒரு 10 ஆண்டுக்கு அம்மாதிரிச் செய்தால் அவர்களைப் பழக்கப்படுத்தி விடலாம். இல்லையென்றால் பெரும்பாலானோர் இந்தத் தண்ட தீர்வை (penalty) கட்ட வேண்டி வரும். ½ பங்கு என்று அசெம்பிளியில் திருத்தியிருக்கிறார்கள். ஒன்றுக்கு இரண்டாகத் தண்டம் என்பது இப்போது ½ பங்காகத் திருத்தப்பட்டிருக்கிறது.

ஆகவே, அருள் கூர்ந்து ஒரு 10 ஆண்டுகளுக்காவது நோட்டீஸ் ஒவ்வொரு அசெஸிக்கும் கொடுத்தால் நல்லது. அல்லது கதவிலாவது ஒட்டவேண்டும். அப்படியிருந்தால்தான் அவர்களுக்குத்



22nd July 1971]

[திரு. கே. ராஜாராம்]

தெரியும். அவர்கள் ரிட்டர்ன் அனுப்புவதற்கு வசதியாக இருக்கும். இந்த இரண்டு விஷயங்களையும் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். யோசித்து கிராமப்புறங்களுக்கு விஸ்தரிப்பதைக் குறைக்க முடியுமா, சுருக்க முடியுமா என்றும் பாருங்கள். இதை அர்பன் லாண்டு டாக்ஸ் பில் என்று சொல்வதைக் காட்டிலும், கண்ட்ரி லாண்டு டாக்ஸ் பில் என்று சொன்னால் பொருத்தமாக இருக்கும் என்று சொல்லி முடித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவரவர்களே, இந்த நகர்ப்புற வரி மசோதாவின்மீது அங்கத்தினர்கள் கருத்துக்களைத் தெரிவித்தார்கள். பொதுவாக எல்லோரும் வரி விலக்களிப்பதைப் பற்றிக் கூறினார்கள். ஏற்கெனவே இருக்கிற சட்டத்திலே எதற்கும் வரி விலக்கில்லை. இப்போது ஒரு கிரவுண்டு வரை வரி விலக்களிப்பதற்கு அரசு முடிவு செய்திருக்கிறது என்று துவக்கத்திலேயே நான் சொல்லிவிட விரும்புகிறேன். இந்த அரசைப் பொறுத்தவரையிலும், இது சோஷலிசக் கொள்கையை ஏற்றுக்கொண்டிருக்கிற அரசாகும். நாட்டில் தெரிந்தோ, தெரியாமலோ, யாரும் விரும்பியோ, விரும்பாமலோ பணக்கார சமுதாயத்திற்கும் ஏழை சமுதாயத்திற்கும் இடையில் ஒரு நீண்ட இடைவெளி ஏற்பட்டு விட்டது. ஏற்பட்டிருக்கிற இடைவெளிக்கு யார் காரணம் என்று ஒருவரையொருவர் குற்றம் சாட்டிக் கொள்வதைவிட, இடைவெளியைச் சுருக்குவதற்கு நாம் முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டுமென்று இந்த அரசு கருதுகிறது. அப்படிக் கருதுகிற நேரத்திலே, ஏழைகளுக்கு ஒரு கிரவுண்டு வரை வரி விலக்களிக்க வேண்டும், அதே நேரத்தில் பணக்காரர்களுக்கு வரி விதிக்க வேண்டுமென்ற கருத்தை நாம் வைத்திருக்கிறோம். ஒரு கிரவுண்டு மீறி அதிக நிலம் வைத்திருக்கிறவர்களுக்கு அதிக பட்சம் வரி விதிக்கவேண்டுமென்ற சோஷலிசத் தத்துவத்தின் அடிப்படையில் இந்த வரி போடப்பட்டிருக்கிறதே தவிர, பணத்தை மட்டும் குறிக்கோளாக வைத்துப் போடப்படவில்லை. பணமும் குறிக்கோள் இல்லையா என்று கேட்கலாம். ஏற்கெனவே சொன்னேன், இரண்டு கொள்கைகளை நிறைவேற்றுவதற்காக இந்த வரி வந்திருக்கிறது என்று சொன்னேன். ஒன்று, சோஷலிசக் கொள்கையை நிறைவேற்ற வேண்டும். அதே நேரத்திலே அரசாங்கத்திற்கு வருவாயைப் பார்க்க வேண்டும். ஆக, இந்த இரண்டு கொள்கைகளுக்காக இந்தச் சட்டம் வருகிறது என்று துவக்கத்திலேயே படிக்கும்போது இதைக் குறிப்பிட்டேன். இந்த அரசை ஏற்றுக்கொண்டதற்குப் பிறகு, இப்போது ஒரு கிரவுண்டு வைத்திருக்கிறவர்களுக்கு வரி விலக்கு அளித்திருக்கிறோம். ஏற்கெனவே இருந்த சட்டத்தில் வரி விலக்கேயில்லை. இப்போது அளித்திருக்கிறோம். நண்பர்கள் பேசும் போது இரண்டு கிரவுண்டு வரையில் விலக்களிக்க வேண்டுமென்று ஒருவரும், 5 கிரவுண்டு வரை விலக்களிக்க வேண்டுமென்று வேறொருவரும், கட்டியிருக்கிற கட்டிடத்தைச் சுற்றி 15 அடி வரையிலும் அதற்கெல்லாம் விலக்களிக்க வேண்டுமென்று திரு.

[22nd July 1971

[திரு. ப. உ. சண்முகம்]

தாமோதரன் அவர்களும் குறிப்பிட்டார்கள். இந்தச் சட்டம் வந்தபோது, வரி விலக்கேயில்லாதபோது யாரும் வாதிடவேயில்லை. இந்த அரசாங்கம் ஒரு கிரவுண்டு வரை விலக்களித்திருப்பதை உறுப்பினர்கள் வரவேற்றிருப்பார்கள் என்று எதிர்பார்த்தேன். எதிர்க் கட்சித் தலைவர் கூட வரவேற்கவில்லை. ஏழைகளுக்கென்று இருக்கிற ஒரு கிரவுண்டு வரை நாங்கள் வரி விலக்களித்ததற்காகப் பாராட்டுதலைப் பெற்றிருக்க வேண்டும். உறுப்பினர் திரு. வசந்த பாய் அவர்கள் பேசும்போது, முதலமைச்சர் அவர்கள் 1½ கிரவுண்டு நிலம் வைத்திருக்கிற காரணத்தினால் வரி விலக்கு கூடாது என்று எல்லோருக்கும் போட்டு விட்டார்கள், இரண்டு கிரவுண்டு வரை வரி விலக்களிக்க வேண்டுமென்று கேட்டார்கள். முதலமைச்சர் அவர்கள் பேரவையிலே பேசும்போது ஒரு அங்கத்தினர் கேட்டதற்கு, "1½ கிரவுண்டு வரை விலக்களிக்க வேண்டுமென்றால் எனக்கு 1½ கிரவுண்டு இருக்கிறது. எனக்கு வரி விலக்கு செய்து கொள்ள வேண்டுமென்பதற்காக அப்படிச் செய்தேன் என்று பிறகு பிரச்சாரம் கூடச் செய்வார்கள். அது வேண்டாம் என்றுதான் ஒரு கிரவுண்டு வரை வரி விலக்களித்தோம்", என்று பதில் சொன்னார்கள். இதை வேடிக்கையாகவும் சொன்னார்கள், உண்மையான அர்த்தத்தோடும் சொன்னார்கள். ஒரு கிரவுண்டுக்கு மேல் வரி விலக்களித்தால், அது சோஷலிசக் கொள்கைக்கு ஒத்து வராது என்று அரசு கருதுகிறது. எனவே, இதற்குமேல் நீட்டுவதற்கில்லையென்று தெரிவித்துக் கொள்கிறேன். அடுத்து ஒன்று சொன்னேன், நகர்ப்புறத்தைச் சுற்றியிருக்கிற 16 கிலோ மீட்டர் வரையிலுள்ள எல்லைகளெல்லாம் இந்த வரி விதிப்புக்குள் அடங்கும் என்று கொண்டு வந்திருக்கிறோம். ஆனால் நோடிபிகேஷன் போடுகிற தேதியிலிருந்து தான் வரும். இப்போது கொண்டு வருவதற்கு அரசுக்கு உத்தேசமில்லையென்று துவக்கத்திலேயே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். சந்தேகம் வேண்டாம். கிராமம் பாதிக்கப்படும் என்று எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் சொன்னார்கள். அப்படி நோடிபிகேஷன் போடுகிற நேரத்திலே நிச்சயமாக, அப்படிப் போடுகிற அவசியம் வருகிறபோது, பரிசீலனை செய்யலாம் என்ற உத்திரவாதத்தை அளிக்கிறேன் என்று இந்த நேரத்தில் உறுதி கூறுகிறேன். எனவே, எதற்கும் அச்சப்பட வேண்டிய அவசியமில்லை. அர்பன் ஏரியா, அர்பன் லாண்டு என்று இரு வகையாகப் பிரித்து வைத்திருக்கிறோம். அர்பன் ஏரியா என்று சொன்னால், சென்னைக்கு மட்டும் இருந்தால் அர்பன் ஏரியா என்று வைத்து அதை ஒரு யூனிட்டாகப் போட்டிருக்கிறோம். சென்னையில் நிலம் இருக்கிறவருக்குக் கோவையில் நிலம் இருக்கலாம். இரண்டையும் தனித்தனியாக வைக்க வேண்டுமென்பதற்காக தனித்தனி யூனிட்டாக்க வேண்டுமென்பதற்காகத்தான் அர்பன் ஏரியா, அர்பன் லாண்டு என்று பிரித்திருக்கிறோம். இதிலே தவறில்லை, செய்ததில் சிக்கலில்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன். திரு. தாமோதரன் அவர்கள் பேசும்போது, நிடையான ஆபீசர்களுக்கும், விதவைகளாக இருக்கிறவர்களுக்கும் இந்த

6-10 p.m.



22nd July 1971]

[திரு. ப. உ. சண்முகம்]

வரியிலிருந்து விலக்களிக்க வேண்டுமென்று சொன்னார்கள். ஒவ்வொரு வீட்டிலேயும் யாராவது ஒருவர் விடையராகியிருப்பார், விதவையாக யாராவது இருக்கக்கூடும். அப்படியிருக்கிற நேரத்திலே, இதை அடிப்படையாக வைத்து விலக்களிக்க வேண்டுமென்று சொல்வது நியாயத்திற்குப் புறம்பாக இருக்காதா? இதனால் இந்தச் சட்டத்திற்கே பயன் இல்லாமல் போய்விடும். அதனால் ஏற்றுக் கொள்வதற்கில்லை. அடுத்து ஒன்று சொன்னார்கள். ஒருவருக்கு வேறு சொத்து இருக்காது, அந்த ஒரு சொத்துதான் வைத்திருப்பார், அதற்கு விலக்களிக்க வேண்டுமென்று சொன்னார்கள். சொத்து நிறைய வைத்திருக்கிறவர்களுக்கும், குறைவாக வைத்திருக்கிறவர்களுக்கும் இடையிலுள்ள இடைவெளியைக் குறைக்க வேண்டுமென்பதுதான் அரசாங்கத்தின் கொள்கை. சிறுகச் சிறுக சட்டத்தின் மூலம் செய்ய வேண்டுமென்று கருதியிருக்கிறோமே தவிர, வேறு நோக்கமில்லை என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தச் சட்டத்தின் மூலம், இந்த வரியின் மூலம் பெரிய பாதகம் ஏற்படும் என்று எல்லோரும் சொல்கிறார்கள். ஆனால் ஒன்றைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஏற்கெனவே, வரி 0.4 ஆக இருந்தது. அப்போது எதிர்ப்பே விலக்கில்லை. எல்லோருக்கும் ஃபிளாட் ரேட்டாக இருந்தது. அதைப் படிப்படியாக உயர்த்தியிருக்கிறோம். முதல் இரண்டு கிரவுண்டுக்கு 0.5 என்று இப்படி படிப்படியாக கிரேடு போட்டிருக்கிறோம். வசதி படைத்தவர்களுக்கு வரி போடுவதில் தவறில்லை. வரி போடத்தான் வேண்டும், வேறு வழியில்லை. திரு. தாமோதரன் அவர்கள் வேடிக்கையாகச் சொன்னார்கள், இந்த அரசாங்கம் வந்து இப்படி வரி கொண்டு வரப்போகிறது என்று முன்கூட்டித் தெரிந்திருந்தால், கட்டிடத்தின் ஓரத்திலே சின்ன கார் ஷெட்டு போல கட்டிக் கொண்டு வாழ்ந்திருப்போம், இப்படி வரியைக் கொண்டு வருகிற நேரத்திலே சொத்தை விற்று ஓடிப் போயிருப்போம் என்று வருத்தத்தோடு சொன்னார்கள். அப்படி விற்று விட்டுப் போகவேண்டிய அவசியம் ஏற்படாது. அந்த அளவிற்குப் பாதகம் ஏற்படாது. பயப்படவேண்டிய அவசியமில்லை. பினாமியைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். எதிர்க்கட்சித் தலைவரவர்கள் சொன்னார்கள்.

**திரு. எஸ். ஜெயராம செட்டியார்:** தலைவரவர்களே, ஒரு கிரவுண்டு வரை வரி விலக்களித்திருப்பதாகச் சொல்லப்படுகிறது. ஒரு கிரவுண்டுக்கு மேல் 5 கிரவுண்டு வைத்திருந்தால், 5 கிரவுண்டுக்கும் வரி வசூலிக்கப்படுகிறதா, அல்லது ஒரு கிரவுண்டு தள்ளி 4 கிரவுண்டுக்கு வரி வசூலிக்கப்படுகிறதா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** ஒரு கிரவுண்டுக்குத்தான் வரி விலக்களித்திருக்கிறோம். அதற்கு மேல் எவ்வளவு நிலம் வைத்திருந்தாலும், ஒரு கிரவுண்டுக்கு விலக்கு என்றில்லை, முழுவதற்கும் வரி போட்டுத் தீர வேண்டும் என்பதுதான் போடப்பட்டிருக்கிற இந்த வரியின் நோக்கமாகும். எதிர்க்கட்சித் தலைவரவர்கள் சொன்னார்கள். வரி போடுவதற்கு நோட்டீஸ் கொடுக்க வேண்டுமென்று

[திரு ப. உ. சண்முகம்] [22nd July 1971

சொன்னார்கள். சென்னையில் மட்டும் 1¼ லட்சம் அசெசிக்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் நோட்டீஸ் கொடுப்ப தென்று சொன்னால், தனித்தனியாகக் கொடுப்பதென்று சொன்னால், அது இயலாத காரியம். சென்னையில் எறக்குறைய 5 அதிகாரிகள் இருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். சைதாப்பேட்டையில் ஒருவருக்கு நிலம் இருக்கலாம், இன்னொரு பக்கம் ராயபுரத்தில் நிலம் இருக்கலாம். அவருக்கு இந்த இரண்டும் இருக்கிறது என்று கண்டுபிடிப்பது எளிதான காரியமல்ல. சிரமப்பட வேண்டியிருக்கும். அதற்காகத்தான் நிலம் வைத்திருக்கிறவர்கள் தாங்களாகவே, அவர்களுக்கு எந்த இடத்தில் சொத்திருக்கிறது என்ற முழு விவரத்தையும், கெஜட்டில் அறிக்கை வெளியானதிலிருந்து ஒரு மாதத்திற்குள் தர வேண்டுமென்று சொன்னேம். எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் சொன்னார்கள். கெஜட்டில் போட்டு விட்டால், ஏழைகளுக்குப் புரியாது என்று சொன்னார்கள். நான் ஒரு உத்திரவாதம் அளிக்கிறேன். இந்த அரசு தமிழ் நாட்டிலிருக்கிற எல்லாத் துறையைச் சார்ந்த பத்திரிகைகளிலெல்லாம் அறிக்கையின் மூலம் இதை வெளியிடுவதற்கு, எல்லோருக்கும் தெரிவிப்பதற்கு அரசு பொறுப்பு ஏற்றுக்கொண்டிருக்கிறது. இப்படி அறிக்கையின் மூலம் தெரிவிக்கலாம். தனித் தனியாகத் தெரிவிக்க இயலாவிட்டாலும், பத்திரிகைகள் மூலமாகத் தெரிவிக்கச் சொல்லலாம். இன்னும் கொஞ்சம் அதிகமாகச் செய்ய வேண்டுமென்று சொன்னால், வானெலியிலே சொல்லச் சொல்லலாம். தவறில்லையென்று கருதுகிறேன். அதையும் செய்யலாம். எல்லோருக்கும் தண்டத் தீர்வை விதிக்க வேண்டுமென்ற நோக்கம் அரசுக் கில்லை. ஏன் போட்டோம் என்று கேட்டால், ஒருவருக்கு சைதாப் பேட்டையில் நிலமும் ராயபுரத்தில் நிலமும் இருந்து கொடுக்காமல் மறைத்து விட்டால், கண்டு பிடிக்க முடியாமல் போய்விடும். இப்படி "பீனல் கிளாஸ்" இருந்தால்தான், அவர்களுக்கு அக்கரை இருக்கும். அதனால்தான் இரண்டு மடங்காக விதித்தோம். போரையிலே முதலமைச்சர் அவர்கள் குறுக்கிட்டுச் சொன்னார்கள். இரண்டு பங்கு என்று இருப்பது வேண்டாம், அரை பங்காகக் குறையுங்கள் என்று சொன்னார்கள். அப்படியே குறைத்து அப் போதே சொல்லிவிட்டேன் என்ற விவரத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். பாதியாகக் குறைக்கப்பட்டிருக்கிறது. "பீனல் கிளாஸ்" இருப்பதனால் பாதகம் ஏற்படும் என்று கருதவேண்டிய தில்லை. பொதுவாக இந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டதற்குக் காரணம் நகர்ப்புறச் சொத்துக்களுக்கு வரி போட்டு, ஏழைகளுக்கு வரி விலக்களித்து வசதி படைத்தவர்களிடமிருந்து வரி வாங்க வேண்டுமென்பதுதான். வேறு நோக்கமல்ல. மதுரை மாநகராட்சிக்கும் பாக்கியிருக்கிற மூன்று நகராட்சிகளுக்கும் நோடிபிகேஷன் மூலம் விஸ்தரிக்கப்படும். நோடிபிகேஷன் என்று சொன்னால், இந்த அவையில் தீர்மானம் கொண்டுவந்து நிறைவேற்றவேண்டியிருக்கும். அப்படி வரும்போது, எந்த நேரத்தில் அது வரும் என்பதை நான் சொல்கிறேன் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.



22nd July 1971]

[திரு. ப. உ. சண்முகம்]

இதனால் பாதகம் இல்லையென்று தெரிவித்துக்கொண்டு மற்ற முனிசிபாலிடிகளுக்கு விரிவாக்கும் நோக்கம் அரசுக்கு இல்லை, சட்டத்தில் எடுத்துக் கொள்ளவும் இல்லை. 4 எல்லைகளை எடுத்துக் கொண்டிருக்கிறோம். அதற்கும் தீர்மானம் வந்து அவையில் நிறைவேற்ற வேண்டியிருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். கிராமப் புறங்களிலிருக்கிற ஏழை விவசாயிகளை பாதிக்குமாறு கண்ட்ரி டாக்ஸாக இதைப் போடவில்லை என்பதை அங்கத்தினர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். நாங்கள் இந்தச் சட்டத்தை இப்படி வைத்திருக்கிறோமே தவிர, இதை விஸ்தரிப்பதாக இல்லை. விஸ்தரிப்பதான நோக்கமே தற்சமயம் இல்லையென்பதைத் தெரிவித்துக் கொண்டு இந்த மசோதாவை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று அங்கத்தினர்களை நான் கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. சி. வி. ராஜகோபால்:** தலைவர் அவர்களே, இந்த லேண்டு அர்பன் டாக்ஸ் (சிரிப்பு) இந்த அர்பன் லேண்டு டாக்ஸ் சட்டத்திலே 100 ரூபாய்க்கு 50 பைசா என்று சொல்லப்படுகிறது. ஆனால் சில இடங்களிலே ஒரு கிரவுண்டு இரண்டாயிரம் ரூபாய் என்கிறார்கள். மவுண்ட்ரோடிலே ஒரு கிரவுண்டு 40,000 ரூபாய் என்கிறார்கள். பிராட்வேயிலே ஒரு கிரவுண்டு 55,000 ரூபாய் என்கிறார்கள். சைதாப்பேட்டையிலே ஒரு கிரவுண்டு 3,000 ரூபாய் என்கிறார்கள். இப்படிப்பட்ட விலைகள்தான் நிலவுகின்றன. ஆனால் போடுகிற வரி இருக்கிறதே 50 பைசா "ஃபார் ஹன்ரட் ரூபீஸ்" என்று இருக்கிறதே, அந்த மாதிரி வித்தியாசம் இருக்கிற இடங்களுக்கு வித்தியாசம் இல்லாமல் ஃப்ளாட் ரேட்டாகப் போடுகிறார்களே, இதை விலையின் அளவுக்குப் போடுவார்களா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவர் அவர்களே, மார்க்கட் வேல்யூ என்பதிலேதான் வரி போடப்படும் என்று சொல்லியிருக்கிறோம். எந்த எந்தப் பகுதியிலே மார்க்கட் வேல்யூபடி வரி போடப்படும் என்று நண்பர் திரு. சுவாமிநாதன் அவர்கள் பேசும்போது சொன்னார்கள். அதிகாரிகளுக்கு அதிக அதிகாரம் கொடுத்தால், தொந்தரவு என்று சொல்லுகிறார்கள். நான் மறந்து விட்டேன். அதிகாரிகளுக்கு அதிக அதிகாரம் கொடுத்து, அவர்கள் இஷ்டப்படி போட விட்டுவிடுவீர்களா என்கிறார்கள். அப்படி விட்டு விடமாட்டோம். பத்திரப்பதிவிலே இருக்கிற கைட் லைன்சை ஒத்துக் கொள்ளலாமே என்றால், ரேட் பாதகமாக அமையும். வரி கட்டுபவர்களுக்கு இப்போது போட்டிருப்பதைவிட கைட் லைன்சிலே அதிகமான ரேட்டுகள் இருக்கக் கூடும் என்ற காரணத்தால், தேவையில்லை என்று கருதுகிறோம். எங்கேயாவது சங்கடங்கள் இருந்தாலும், அதிகாரிகள் தொந்தரவு இருந்தாலும் சொல்லலாம்.

**திரு. ஜி. சுவாமிநாதன்:** தலைவர் அவர்களே, திரு. ராஜகோபால் அவர்கள் சொல்லவந்த சந்தேகம், மவுண்ட்ரோடிலே இருக்கிற ஒரு கிரவுண்டு 40,000 ரூபாய், சைதாப்பேட்டையிலே இருக்கிற கிரவுண்டு 4,000 அல்லது 3,000 ரூபாய் இருக்கலாம்.

[22nd July 1971

[திரு. ஜி. சுவாமிநாதன்]

ஆனால் ஒரு கிரவுண்டு என்பதற்காகவே அந்த 40,000 ரூபாய் உள்ள வருக்கு வரி இல்லாமல் போய்விடலாம். ஆனால் 10 கிரவுண்டும் சேர்ந்து ரூபாய் 40,000 இல்லாமல் இருந்தாலும் அவர்கள் அதற்கான வரி கட்டும் நிலைமை வரும். இப்படிப்பட்ட தவறு இதில் உள்ளது அரசாங்கத்திற்குத் தெரியுமா ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** திரு. ராஜகோபால் அவர்கள் குறிப்பிட்டார்களோ இல்லியோ, திரு. ராஜகோபால் வாயிலாக நண்பர் திரு. சுவாமிநாதன் அவர்கள் கேட்டார்கள். எந்த இடத்தில் ஒரு கிரவுண்டு என்று வைத்தாலும் டிஸ்டிங்ஷன் வந்துவிடும். சட்டமே இல்லாமல் போய்விடும். இந்த இடத்திலே இருந்தால் வரிவிலக்கு உண்டு. இந்த இடத்திலே இருந்தால் வரிவிலக்கு இல்லை என்று மார்க்கட் வேல்யுவின் மீது வைக்கவில்லை. ஒரு கிரவுண்டு என்று வைத்திருக்கிறோம். மார்க்கெட் ரேட் என்று வைத்திருந்தால் தவறுகள் நடப்பதற்குக்கூட ஸ்கோப்மென்ட்டுக்குக்கூட இடமிருக்கக்கூடும். ஆனால் மார்க்கட் ரேட்டின்மீது 10,000 ரூபாய் என்று இருக்கிற கிரவுண்டுக்கு வரிவிலக்கு என்றால் 10,000 ரூபாய் என்று சொல்கிற அதிகாரி 11,000 ரூபாய் என்று சொல்லிவிட்டால் வரி வந்துவிடும். ஆகவேதான் ஒரு கிரவுண்டுக்கு என்று போட்டிருக்கிறோம். அதிர்ஷ்டசாலியின் மனைப்போடியிலே இருந்தால் என்ன, சைதாப்பேட்டையிலே இருந்தால் என்ன ?

* **திரு. கே. ராஜாராம் :** மற்றொரு விளக்கத்தைக் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். எடுத்துக்காட்டாக சிலே ஏரியாவில் ஆக்ட்டிலே வெட் லேண்டாக இருந்தால், விதிவிலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. பக்கத்திலே டிரை லேண்டும் இருக்கிறது. உண்மையிலேயே விவசாயம் செய்கின்றார்கள். முனிசிபல் லிமிட்டுக்குள்ளே, நகரத்திற்குள்ளே இல்லையென்றாலும், முனிசிபல் லிமிட்டிலிருந்து ஒரு மைலில் இருக்கிறது. அப்படிப்பட்ட இடங்களிலே டிரை லேண்டிலே கிணறு வெட்டி புஞ்சை விவசாயம் செய்கின்றார்கள். அந்த நிலங்களுக்கு 'அர்பன் லேண்டு டாக்ஸ்' விதிக்கப்படுமா ? அதிக விலையுள்ள நஞ்சை நிலத்திற்கே விதிவிலக்கு அளிக்கும்போது, விவசாயம் செய்யக்கூடிய புஞ்சை நிலத்திற்கு என் விதிவிலக்கு அளிக்கக் கூடாது என்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** நான் பதில் சொல்ல விரும்பியிருந்தேன். மறந்து விட்டேன். நண்பர் திரு. தாமோதரன் அவர்கள்தான் இளைப்பினர்கள் என்று நினைக்கிறேன். இப்பொழுது நஞ்சைக்கு விதிவிலக்கு இருக்கிறது. நஞ்சை என்று குறிப்பிட்டு, நஞ்சைப் பயிர் வைக்கின்ற நிலங்களுக்குத்தான் வரி விலக்கு அளிக்கின்றோமே தவிர நஞ்சைப் பயிர் வைக்காமல் இருப்பார்களேயானால் வரி விலக்கு கிடையாது என்று தெளிவாகப் போட்டிருக்கிறோம். புஞ்சைக்கு வரி விலக்கு அளிக்கக்கூடாதா என்று கேட்கிறார்கள். எங்கேயாவது ஒரு இடத்



22nd July 1971]

[திரு. ப. உ. சண்முகம்]

மிருந்து அதிலே இரண்டு மாஞ்செடியோ பூஞ்செடியோ நட்டுவிட்டு புஞ்சை என்றால் முழு நிலமும் அதற்குள் வந்துவிடும். விவசாயம் செய்யக்கூடிய நிலம் நகர எல்லைக்குள்ளே இல்லை என்று நினைக்கிறேன். புஞ்சைக்கு வரிவிலக்கு கொடுப்பது என்றால், புஞ்சைப் பயிர் என்ற பெயரில் சிறு தானியத்தை ஒரு மூலையிலே விதைத்துவிட்டு வரிவிலக்கு கேட்கக்கூடும். அப்படியென்றால் இந்த வரிவிலக்குச் சட்டத்திற்கே அர்த்தமில்லாமல் போய்விடும். நஞ்சைப் பயிர் வைக்கிறவர்களுக்குத்தான் வரிவிலக்கே தவிர, வேறு பயிருக்கு வரிவிலக்கு இல்லை. இப்பொழுது அதைத்தான் வைத்திருக்கிறோம். புஞ்சையையும் சேர்த்துக் கொள்வதற்கில்லை. அப்படிச் செய்தால், சட்டத்திற்கே பலனில்லாமல் போய்விடும் என்று தெரிவித்துக்கொண்டு, பொதுவாக இந்தச் சட்டம் ஏற்கனவே சொல்லியிருப்பதைப்போல், ஒரு சமதர்ம சமுதாயத்தை அமைக்க உதவியாக இருக்கும். எனவே இதை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**MR. CHAIRMAN** : The question is—

"That the Tamil Nadu Urban Land Tax (Amendment) Bill, 1971 (L.A. Bill No. 18 of 1971), as passed by the Assembly, be taken into consideration for making recommendations".

The motion was put and carried and the Bill was taken up for making recommendations.

*Clause 2.*

**THIRU A. R. DAMODARAN** : I move—

"This House recommends to the Assembly that in clause 2 of the Tamil Nadu Urban Land Tax ( Amendment) Bill 1971, after sub-clause (*c*) add the following sub-clause (*d*) :

(*d*) for clause (13), the following clause shall be substituted—

' (13) "urban land" means any land which is used or is capable of being used as building site and includes garden or grounds, if any, appurtenant to a building but does not include any land which is registered as wet or dry or cultivable land in revenue accounts of the Government and used for the cultivation of wet or dry crops or used for other horticultural purposes '. "

**THIRU G. SWAMINATHAN** : I second the recommendation.

* **THIRU A. R. DAMODARAN** : The Hon. Minister has just now stated that if we exempt this dry land, people may have a couple of mango trees or coconut trees and claim it as dry land and claim exemption from tax. The Government had a scheme under which a number of prizes were also distributed by Hon. Ministers for the best kept gardens in Madras City and in view of the Hon. Minister's statement, I want to ask : what about these people who are devoting their time, attention, energy and resources to the cultivation of vegetables to relieve the vegetable shortage in this City ? The

[Thiru A. R. Damodaran] [22nd July 1971

Government seek to remove with one hand what they give with the other. If we have acted like a fool and purchased 15 years ago four acres of land for about Rs. 5,000 an acre and now when we find that because of the Wealth Tax and Urban Land Tax and Corporation Taxes, we should pay more taxes and therefore we should put our lands to the most economic and profitable use, and if we convert 3 acres of land—it is not possible for us to take to paddy cultivation—for growing groundnut, gingelly, we may be exempted from this tax. I have seen many Ministers are growing gingery and other crops in heir compounds. We may also be given the benefit of exemption, when we put the land to such profitable use as growing vegetables, etc. The Government can tax the man who has a vast green lawn or who grows merely flowers and that may fit in with the socialist theme. But, what about the person who grows vegetables or other dry crops ? I believe, Sir, that nothing will be lost by the Government accepting the recommendation. The Hon. Minister has himself stated that this is not a revenue measure only. This is a measure which will prove the *bona fides* of the Government in that it seeks to implement the socialist theme that any person who owns more than one ground is a capitalist. Sir, this is a new definition of socialism. According to this Government, any person who owns more than one ground is a capitalist. Even the Central Government have not dared to say that. In the Wealth Tax Act, they have stated that all those who own wealth below one lakh of rupees are exempt. Probably because many of our Cabinet Ministers.....

THE HON. THIRU P. U. SHANMUGAM : Sir, I have never said that a person owning more than one ground is a capitalist. My hon. Friend is trying to twist facts. I have categorically stated that this Government have brought forward this Act as one in the socialist pattern. Persons who are holding less than one ground should be considered poor and persons who are having more than one ground are in a better position to pay tax. The Government have not fixed a flat rate of tax but only a graded levy. The rate of levy was originally 0.4 per cent and we are asking them to pay an increased rate at 0.5 per cent. I have never said that the persons holding more than one ground are capitalists. I fear the hon. Member might not have understood what I had stated.

THIRU A. R. DAMODARAN : We are using different words to denote the same person. If the Hon. Minister does not like the word ' capitalist ', I would say that every person owning more than one ground is a very rich person, according to this Government.

THE HON. THIRU P. U. SHANMUGAM : My hon. Friend is again confusing the question. I have never said that a person owning more than one ground is a very rich person. I simply said that he is in a better position to pay the tax than the other person owning less than one ground.



22nd July 1971]

THIRU G. SWAMINATHAN : Sir, I want one clarification. The person owning one ground is said to be poor, while a person owning 1.1 ground is called rich. In reality, it may not be so.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, இப் பொழுது இரண்டு கிரவுண்டு என்று வைத்தாலும், 2-1 கிரவுண்டு வைத்திருக்கிறவர்களுக்கும், இதே தகராறுதான் வரும் அதைத் தவிர்க்க முடியாது, அவர்களுக்கெல்லாம் விலக்களிக்க வேண்டா மென்று சட்டத்திலே இடமளிக்க முடியாது.

THIRU A. R. DAMODARAN : He is considered to be a rich person. Sir, my recommendation is that if he had any income, he should certainly pay tax. If I sold a ground for Rs. 10,000 having purchased the same for Rs. 2,000, I would willingly pay Rs. 4,000 or Rs. 5,000. On the other hand, if I had purchased the lands at Rs. 2,000 per ground 15 years ago and now the same is valued at Rs. 20,000 because of the development in Madras City, because the value of the rupee has gone down and because the prices have gone up, I have to pay tax on something which I do not earn. I am not allowed to grow gingelly or vegetables and exemption is not given to me from liability to tax. I have to keep the land idle and pay the tax. That is why I recommend that in cases where the land is put to profitable use, it should be exempted. We do not want to corner land in urban areas with the intention of speculation. If there was an intention of speculation, it should be curbed and I quite agree with all that. But the distinction is so hazy between one ground, one and a half grounds and two grounds. We are thinking in very small terms. Of course in a place like New York, one ground is very valuable, because they are 40 to 50 flights up into the sky. We have not yet reached that state. If we had buildings like the Life Insurance Corporation building, I would readily accept the Hon. Minister's contention that one ground is more than sufficient to live in. But, we have always prided ourselves on the fact that Madras City is a beautiful Garden City, and that it has enough lung space. We are now talking about air pollution, etc., and, therefore, I would plead with the Hon. Minister that some consideration may be shown to this recommendation.

(An hon. Member rose.)

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : ஒரு அங்கத்தினரை இன்னொரு அங்கத்தினர் விளக்கம் கேட்க அனுமதிக்க முடியாது.

தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்களுடைய திருத்தத்தை ஒத்துக்கொள்ள முடியாது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். ஏனென்றால் அவர்கள் பேசும்போது சொன்னார்கள், "Lands used for profitable purpose" என்று. அதைத் தவறிச் சொல்லிவிட்டார்களோ என்று புரியவில்லை. புஞ்சைப் பயிர் லாபம் என்று ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆகையால் ஏதேனும் காய்கறிகள், எண்ணெய் போன்ற வித்துக்கள்

[திரு. ப. உ. சண்முகம்] 22nd July 1971]

விளைவிப்பவர்களுக்கு வரி போடுவதில் தவறில்லை. ஒரு கிரவுண்டு, இரண்டு கிரவுண்டு உள்ள விவசாயிகளை ஏழை, பணக்காரர்கள் என்று சொன்னார்கள். சோஷலிசம் பேசும் மத்திய அரசாங்கத்திற்கே அம்மாதிரி வரி போடும் துணிச்சல் இல்லை, பாதில அரசாங்கத்திற்கு மட்டும் இருக்கிறது என்று சொல்லாவிட்டாலும், அதுமாதிரிப் பேசினார்கள். நான் பேசிய பேச்சில் ஒரு கிரவுண்டுக்குக் கீழ் உள்ளவர்கள் ஏழை என்றே, ஒரு கிரவுண்டுக்கு மேல் உள்ளவர்கள் பணக்காரர்கள் என்றே சொல்லவில்லை. ஒரு கிரவுண்டுக்கு மேல் உள்ளவர்கள் வரி கொடுக்க வசதி படைத்தவர்கள் என்றுதான் சொல்கிறேன். 80 கிரவுண்டுக்கு மேல் உள்ளவர்கள் இப்பொழுது கொடுப்பது 80 ரூபாயாக இருந்தால், இனி 100 ரூபாய் கொடுக்க வேண்டும். எனவே 20 ரூபாய்தான் அதிகமாகப் போடவேண்டி வருகிறது. இதனால் பெரிய பாதகம் ஏற்படாது. சமுதாயத்தில் கோளாறும் ஏற்படவில்லை. வசதி படைத்தவர்கள் வரி கொடுக்க வேண்டும். ஒரு கிரவுண்டு உள்ளவர்களை மட்டும் ஏழை என்று சொன்னால், என் ஐந்து கிரவுண்டு உள்ளவர்களையும் ஏழை என்று சொல்லக்கூடாது என்று கேட்கலாம். மூன்று கிரவுண்டுகளாகவாவது குறைத்திருக்கலாம் என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி. சுவாமிநாதன் அவர்கள் சொன்னார்கள். இப்போது அவ்வாறு வைத்திருந்தும் இலக்கணம் ஒரு கிரவுண்டுக்கு வரி வேண்டாம் என்பது. அதற்குமேல் வைத்து இருப்பவர்கள் வசதி படைத்தவர்கள், வரி கொடுக்க முடியும் என்று வரி போடுகிறோமே தவிர, வேறு ஒன்றும் இல்லை. அதில் தவறில்லை என்று கருதுகிறேன். இப்படி புரிந்துகொண்டு விளக்கினால், எங்கேயோ ஒரு மூலையில் சிறு இடத்தில் கடலையைப் போட்டுவிட்டு, அதற்கு வரி விலக்கு கேட்பார்கள். பிறகு வரி போடுவதற்கே அர்த்தமில்லாமல் போய்விடும். சட்டத்தில் ஓட்டைகள் இருக்கக்கூடாது என்பதற்காக அரசாங்கம் இப்படித் தடுத்திருக்கிறது. எனவே இந்தத் தீர்மானத்தை ஏற்றுக் கொள்வதற்கில்லை என்று வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

The recommendation was, by leave, withdrawn.

*Clause 5.*

THIRU A. R. DAMODARAN : I move—

This House recommends to the Legislative Assembly that in clause 5 of the Tamil Nadu Urban Land Tax (Amendment) Bill, 1971, in the proposed new section 5-A, *for* the words " 1st day of July 1971 ", *substitute* the words ' 1st day of July 1972 ",

THIRU G. SWAMINATHAN : Sir, I second the recommendation.

THIRU A. R. DAMODARAN : Sir, this is a very simple amendment. It relates to change of date. The only reason, Sir, why I propose this amendment is to give time to people who have excess



22nd July 1971]

[Thiru A. R. Damodaran]

of property, to dispose of their land to the more fortunate sections. There are many people who do not know the cumulative effects of this tax as well as the Wealth Tax if the value of urban property exceeds Rs. 5 lakhs. Sir, if you have 15 grounds or 20 grounds in Madras City which is about 1 acre and one house, the valuation of that property exceeds Rs. 5 lakhs. The rate of Wealth Tax is so prohibitive that it would be definitely advisable to sell all the surrounding areas to various other people and to retain only the house property when a road is connecting you to the highway. Many people have started selling lands in Poonamalle High Road. Late Raja Sir Ramaswamy Mudaliar's family which has three or four acres of land in Poonamalle High Road, the valuation of which exceeds Rs. 10 lakhs has started selling the lands because they do not yield the income to pay these taxes. Therefore, with the best intention of furthering the Government's own objective to prevent concentration of wealth on urban land, I say, Sir, that if time is given, say, nine months, the people will take steps to dispose of their excessive lands in their possession. Sir, this is a new tax. The cumbersome nature of this amendment lies in the fact that you will have to levy tax from 1st July 1971 whereas the Bill is passed only on 22nd July 1971. We do not have time to think over and adjust. If the amendment is accepted, I am sure that it would be of help to the people. After all, it is not a matter of revenue, but it is a matter of something else also. I am sure, Sir, that the Government would have no objection to accepting this amendment.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தீர்மானத்தை ஏற்றுக் கொள்வதற்கு இல்லை என்று வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன். ஏற்கெனவே சொன்னது போல், இந்த மசோதாவை இரண்டு கொள்கைகளுக்காகக் கொண்டு வந்தோம். ஒன்று, வருவாய். மற்றொன்று ஏழைகளுக்கு வசதி அளிக்கவேண்டுமென்பது. வருவாயை ஒரு ஆண்டுக்குத் தள்ளிப்போடுவது இயலாத காரியம். இப்போது காலம் போதாது என்று சொன்னார்கள். ஒரு மாத காலம் வைத்திருக்கிறோம். வேண்டுமென்றால் வாக்கெடுப்பில் நிடார்ன்ஸ் கொடுக்க வேண்டுமென்று சொல்லலாம். காலதாமதம் செய்வதில் ஒன்றும் அர்த்தமில்லை. ஒரு வருஷம் தள்ளிப்போட்டால், அரசாங்க வருமானத்தைப் பாதிக்கும். வேறு ஒன்றுமில்லை. எங்கள் சொத்தையாவது விற்று விட்டுப் போவோமே என்று சொல்லுகிறார்கள். அதை நாங்கள் எப்போதும் தடுக்கவில்லை. அப்படி விற்பதற்கு முன்பு ரூ. 80 அரசாங்கத்திற்கு வரியாகக் கட்டி வந்தவர்கள் ரூ. 100 கட்டினால் தவறு ஏற்பட்டு விடாது. எனவே, திருத்தத்தை ஏற்றுக்கொள்வதற்கில்லை.

MR. CHAIRMAN : Is the hon. Member pressing the recommendation ?

THIRU A. R. DAMODARAN : I am not pressing it.

The recommendation was, by leave, withdrawn.

[22nd July 1971

*Clause* 6.

THIRU A. R. DAMODARAN : I move—

' This House recommends to the Legislative Assembly that in clause 6 of the Tamil Nadu Urban Land Tax (Amendment) Bill, 1971 in sub-clause (*a*) of the proposed new section 6-A, *delete* the words " and the area within sixteen kilometres of such City ". '

This House recommends to the Legislative Assembly that in clause 6 of the Tamil Nadu Urban Land Tax (Amendment) Bill, 1971 in sub-clause (*b*) of the proposed new section 6-A, *delete* the words " and the area within sixteen kilometres of such municipal town ".

This House recommends to the Legislative Assembly that in clause 6 of the Tamil Nadu Urban Land Tax (Amendment) Bill, 1971 in sub-clause (*c*) of the proposed new section 6-A, *delete* the words " and the area within sixteen kilometres of such township ".

This House recommends to the Legislative Assembly that in clause 6 of the Tamil Nadu Urban Land Tax (Amendment) Bill, 1971 in the proposed new section 6-A, *add* the following new sub-clause (*d*) :—

" (*d*) urban area shall not include and dry land classified as dry according to revenue records and on which land revenue was formerly payable ".

THIRU G. SWAMINATHAN : I second it, Sir.

THIRU A. R. DAMODARAN : Sir, I have already spoken about this area within 16 K.M. of such City or such town or the intention of the Government now to notify these areas as urban land. But I am worried because on 1966 when the Hon. Minister brought the Bill, the rate of tax was only 0.4 per cent, but now it is going up to 1 per cent. Similarly 3 or 4 years later, a notification may come classifying areas within 16 K.M. of the city also as urban area. Therefore I feel that it is totally unnecessary to bring forward this amendment at this stage. Instead of giving the power of notifying to the Government, which is a very dangerous power, the amendment to the Act can be brought forward when it is found necessary. In that case, we may have also time to consider the same and make suggestions. So many notifications escape our notice and by the time we come to know of the notification 6 or 8 months later, we find the mischief has already been done. Since the Hon. Minister has stated that it is not the intention of the Government now to bring the new areas within the purview of the Act, I would strongly urge him to accept this recommendation and bring forward an amendment to the Bill itself later on.



22nd July 1971]

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, துவக்கத்திலேயே நான் சொன்னபடி, 16 கிலோ மீட்டருக்கு உட்படுத்தும் அதிகாரத்தை எடுத்துக்கொள்கிறேமே தவிர, இப்போது இதை விஸ்தரிக்கப்போவதில்லை. அவர்கள் சொன்ன விவரங்கள் அரசாங்கத்தின் சுவனத்தில் இருக்கின்றன. நான் சொன்னது போல், இந்த அரசாங்கம் நடித்தர மக்களிடத்திலே சொம்ப அக்கரை எடுத்துக்கொண்டிருக்கிறது. அவர்களை பாதிக்கும் அளவுக்கு இந்த அரசாங்கம் எதுவும் செய்யாது. இந்த அதிகாரத்தை எடுப்பதற்கு அரசாங்கம் முற்பட்டிருக்கிறது என்றாலும், இதை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அப்படி விஸ்தரிக்கிற நேரத்தில் அங்கத்தினர்களின் கருத்துக்களை அரசாங்கம் பரிசீலிக்கும் என்று சொல்லிக் கொள்கிறேன். இனி அங்கத்தினர் பரிந்துரையை மேலும் வற்புறுத்த வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன்.

MR. CHAIRMAN : Is the hon. Member pressing his recommendation ?

THIRU A. R. DAMODARAN : This recommendation stands, Sir. This is a very important recommendation.

MR. CHAIRMAN : The question is—

' This House recommends to the Legislative Assembly that in clause 6 of the Tamil Nadu Urban Land Tax (Amendment) Bill, 1971 in sub-clause (*a*) of the proposed new section 6-A, *delete* the words " and the area within sixteen kilometres of such City ".

This House recommends to the Legislative Assmebly that in clause 6 of the Tamil Nadu Urban Land Tax (Amendment) Bill, 1971 in sub-clause (*b*) of the proposed new section 6-A, *delete* the words " and the area within sixteen kilometres of such municipal town ".

This House recommends to the Legislative Assembly that in clause 6 of the Tamil Nadu Urban Land Tax (Amendment) Bill, 1971 in sub-clause (*c*) of the proposed new section 6-A, *delete* the words " and the area within sixteen kilometres of such township ".

This House recommends to the Legislative Assembly that in clause 6 of the Tamil Nadu Urban Land Tax (Amendment) Bill, 1971 in the proposed new section 6-A, *add* the following new sub-clause (*d*) :—

(*d*) urban area shall not include any dry land classified as dry according to revenue records and on which land revenue was formerly payable".'

The recommendation was put and lost.

THIRU K. RAJARAM : I think the ' Ayes ' have it.

MR. CHAIRMAN : The result has already been declared.

[22nd July 1971

*Clause 8-A.*

THIRU K. RAJARAM: I move—

'This House recommends to the Legislative Assembly that the following new clause 8-A be added to the Tamil Nadu Urban Land Tax (Amendment) Bill, 1971 :—

'8-A. Insertion of new section in Tamil Nadu Act 12 of 1966—In the principal Act, after section 7-A, the following section shall be inserted, namely :—

7-B. Notwithstanding anything contained in sections 7 and 7-A, every owner of urban land liable to pay urban land tax shall be served with a notice calling upon him to furnish particulars specifying the time within which he should furnish to the Assistant Commissioner having jurisdiction to receive the return ".'

THIRU R. KRISHNASWAMY NAIDU: Sir, I second the recommendation.

* திரு. கே. ராஜாராம் : தலைவரவர்களே, இதைப்பற்றி முதலிலே பேசியிருக்கிறேன். படியாதவர்கள் ஏராளமாக இருக்கிறார்கள். படியாதவர்கள் என்றால் படிக்காதவர்கள்தான். அமைச்சரவர்கள் சொன்னது போல, சர்க்கார் உத்தரவு சர்க்கார் கெஜட்டில் வரும் என்று வைத்துக் கொண்டால், அவர்கள் படிக்காத ஒரு நிலையில் இப்போது இருக்கும்போது சட்டத்திற்குக் கீழ்படியாத நிலை அதனால் ஏற்படக்கூடும். அதிலிருந்து அவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்க வேண்டுமென்று தான் இந்தச் சிபார்சை நான் செய்கிறேன். அவர்கள் ஒவ்வொருவருக்கும் தெரியும்படியாகச் செய்ய வேண்டும். இப்படி ஒரு புதிய வரி வந்திருக்கிறது என்று அவர்கள் உணரும்படி வைக்க வேண்டும். அமைச்சர் அவர்கள் சொன்னார்கள், வானொலி மூலம் சொல்கிறோம் என்று. அது போதாது. ஏதாவது கிராமச் சாவடியிலே அல்லது முனிசிபல் வார்டிலே நோட்டீஸ் போர்டிலே அறிக்கையைப் போட்டால் கூட போதும். நோட்டீஸ் போர்டிலே இன்னின்னருக்கு இன்னின்ன வரி போடப்பட்டிருக்கிறது, ஒரு மாதத்திற்குள்ளாக "ரிடர்ன்ஸ்" சமர்ப்பிக்க வேண்டுமென்றாவது போட்டால் அந்த நோட்டீசைப் பார்ப்பவர்கள் படிக்கத்தெரிந்தவர்களுக்குப் போய்ச் சொல்லி விடுவார்கள். நான் சொல்கிற மாதிரி, சென்னையில் மட்டும் 2 லட்சம் பேர்களுக்கு நோட்டீஸ் கொடுக்க வேண்டியிருக்கும், சிரமம் ஏற்பட்டுவிடும் என்று அமைச்சரவர்கள் சொல்வது உண்மைதான். ஆனால் அவ்வளவு அதிகமான வரியை நாம் வசூல் செய்யும்போது, இது சிரமமெனக் கூறி நாம் பின்வாங்கக் கூடாது. மத்திய சர்க்கார் வருமான வரியை வசூல் செய்ய, தனித்தனியாக ஒவ்வொரு வீட்டிற்கும் சென்று தான் முன்காலத்தில் நோட்டீஸ் சார்வு செய்து வந்தார்கள். இப்போது தான் 15 ஆண்டுகளாக பேப்பரிலே விளம்பரத்தைப் பார்த்து "ரிடர்ன்கள்" அனுப்பி இருக்கிறார்கள். அதே மாதிரி நமது அரசாங்கமும் ஒரு 10 ஆண்டுகளுக்கு



22nd July 1971] [திரு. கே. ராஜாராம்]

அவர்கள் புரிந்து கொள்ளும்படியும், தெரிந்துகொள்ளும்படியும் செய்யவேண்டுமென்று சொல்லிக்கொள்கிறேனே தவிர, இது சோஷலிசத்திற்கு விரோதம் என்றோ வருமானத்தைக் குறைக்கவோ சொல்லவில்லை. சாதாரணமான ஏழை ஜனங்களுக்கு, படிக்காத ஜனங்களுக்குச் செய்யக்கூடிய கைமாறு, உதவியாக இந்தத் திருத்தத்தை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று அமைச்சரைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, இந்தத் திருத்தத்தை ஏற்றுக்கொள்வதற்கில்லையென்று நான் வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன். எதிர்க் கட்சித் தலைவர் சொன்னது போல, எல்லா வரி செலுத்துபவர்களுக்கும் நோட்டீஸ் கொடுக்க வேண்டுமென்றால், சென்னையில் மட்டும் 1¼ லட்சம் பேர் இப்போது அசெசீயாக இருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் நோட்டீஸ் கொடுக்க வேண்டியிருக்கும். அது முடியாத காரியமாகும்.

திரு. கே. ராஜாராம் : என்னுடைய பரிந்துரையைத் திரும்பப் பெற ஒத்துக்கொள்கிறேன். ஆனால் சென்னை நகரைத் தவிர இதர இடங்களுக்கு நேரில் விளம்பரப்படுத்துவது என்று இருந்தால் ஒப்புக்கொள்ளத் தயாராக இருக்கிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இப்போது சென்னையில் இருக்கிறது. சென்னையைப் பொறுத்த மட்டிலும் 1¼ லட்சம் பேர் இருக்கிறார்கள். பாக்கியிருக்கிற இடங்களுக்குப் புதிதாகச் சட்டம் கொண்டு வரப்போகிறோம். யாருக்கு எவ்வளவு இருக்கிறது என்று அவர்களே விவரம் கொடுக்க வேண்டுமே தவிர, யாரிடம் இருக்கிறது என்று வீட்டுக்கு வீடு போய் "பிட் நோட்டீஸ்" கொடுப்பது போல கொடுத்துக்கொண்டிருக்க முடியாது. ஏற்கெனவே வரி கொடுத்துக்கொண்டிருக்கிறவர்கள் சென்னையில் இருக்கிறவர்கள். சென்னையில் வரி கொடுக்கிறவர்கள் 1¼ லட்சம் பேர்கள் இருக்கிறார்கள். அவ்வளவு பேருக்கும் கொடுக்கவேண்டியிருக்கும். அது சாத்தியமாக இருக்காது. தலைக்கத்திலேயே சொன்னபடி வானொலியிலே சொல்லலாம். சென்னை மாநகராட்சியே விளம்பரப்படுத்தினால் போதும் என்றால் விளம்பரப்படுத்தலாம். அதில் தவறு இல்லை. இந்த அரசு யாரையும் கொடுமைப்படுத்த விரும்பவில்லை. சென்னை மாநகராட்சிக்கு அனுப்பி அந்தந்த வார்டுகளில் அலுவலகங்கள் இருந்தால், அவற்றில் ஒட்ட வேண்டும், நோட்டீஸ் போர்டில் ஒட்ட வேண்டும் என்று சொல்வது நியாயம், ஒத்துக்கொள்கிறேன். ஆகவே பரிந்துரையை வலியுறுத்த வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

MR. CHAIRMAN: Is the hon. the Leader of the Opposition pressing his recommendation ?

THIRU K. RAJARAM: I am not withdrawing the recommendation.

[22nd July 1971

MR. CHAIRMAN : The question is—

This House recommends to the Legislative Assembly that the following new clause 8-A be added to the Tamil Nadu Urban Land Tax (Amendment) Bill, 1971 :—

'8-A. *Insertion of new section in Tamil Nadu Act* 12 *of* 1966.—In the principal Act, after section 7-A, the following section shall be inserted, namely :—

" 7-B. Notwithstanding anything contained in sections 7 and 7-A, every owner of urban land liable to pay urban land tax shall be served with a notice calling upon him to furnish particulars specifying the time within which he should furnish to the Assistant Commissioner having jurisdiction to receive the return". '

The recommendation was put and lost.

*Clause* 10.

THIRU A. R. DAMODARAN : I move—

This House recommends to the Legislative Assembly that in clause 10 of the Tamil Nadu Urban Land Tax (Amendment) Bill, 1971 in the proposed new section 29-A for the words "one ground" wherever they occur substitute the words "five grounds".

This House recommends to the Legislative Assembly that in clause 10 of the Tamil Nadu Urban Land Tax (Amendment) Bill, 1971 in the proposed new Section 29-A after the proviso add the following proviso :—

" Provided further that in determining the extent of urban land on which tax would be payable the built up area and the area comprised of fifteen feet around such building shall be excluded for the purposes of calculation of urban land tax."

THIRU G. SWAMINATHAN : I second it.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் .—தலைவர் அவர்களே, முதலில் ஆயிரக்கணக்கானவர்கள் வேலை பார்க்கும் போது நூற்றுக்கணக்கானவர்கள் விலகுவது என்பது அவ்வளவு வியப்புக்குரியதல்ல. இரண்டாவது, டாக்டர்கள் தாமாக அந்தத் துறையில் ஈடுபட்டு பணி செய்து நல்ல வருமானம் பெற விரும்புகிறவர்கள் ஏதேனும் காரணங்களைக் காட்டிவிட்டு விலகிக்கொள்வதாக இருக்கலாம். மருத்துவக் கல்வித் துறையில் உள்ளவர்கள் மேல் நாடுகளில் படிக்கச் செல்லும்போது, இங்கே அவர்களுடைய சர்வீஸ் நிரந்தரமாக்கப்பட்டால் தவிர, மற்றப்படி விலகிக் கொள்ள வேண்டியிருக்கிறது. இப்படிப் பல்வேறு காரணங்கள் இருக் கின்றன. குறிப்பிட்ட காரணங்கள் வேண்டுமென்று கேட்டால் சொல் வதற்கு இசைகிறேன்.

திரு. ஜி. சுவாமிநாதன் : அரசுத் துறையில் பணி புரிகிற மருத்துவர்கள் சிலர் எப்போதும் நல்ல இடங்களுக்குப் போடப்படுகிறார்கள் என்றும், சிலரைச் சரியற்ற இடங்களிலேயே போடுகிற நிர்ப்பந்தம் இருக்கிறது என்றும், அந்தக் காரணத்தால் பலர் விலகவேண்டிய அவசியம் ஏற்படுகிறது என்றும் அறிகிறேன். எந்த இடங்கள் நல்ல இடங்கள், எந்த இடங்கள் சரியற்ற இடங்கள் என்பதற்கான குறிப்புகள் அரசிடம் உண்டா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : அரசாங்கத்தில் அப்படிப்பட்ட குறிப்பில்லை. பலருக்கு அவரவர் இருக்கிற இடம் பொல்லாத இடம்.

*Filariasis.*

* 199 Q.—THIRU G. SWAMINATHAN :Will the Hon. the Minister for Public Health be pleased to state :—

(*a*) whether it is a fact that endemic filariasis is plaguing Thiruvithancode and Eraniel of Kanyakumari District; and

(*b*) if so, the action proposed to be taken thereon ?

யானைக்கால் நோய்.

திரு. ஜி. சுவாமிநாதன் :—மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்.

(அ) கன்னியாகுமரி மாவட்டம் திருவிதாங்கோடு, இரணியல் ஆகிய இடங்களில் குறிப்பிட்ட காலங்களில் வாலாயமாகத் தோன்றுகின்ற யானைக்கால் நோய் பரவியுள்ளதென்பது உண்மையா ?

(இ) ஆமெனில், இதுகுறித்து எடுக்கக் கருதியுள்ள நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் :—தலைவர் அவர்களே, திருவிதாங்கோடு, இரணியல் ஆகிய பகுதிகளில் யானைக்கால் நோய் பரவலாக இருப்பது குறித்து ஆராயப்பட்டது. ஆராயப்பட்ட பிறகு இரணியலில் உள்ள ஊராட்சி மன்றத்தின் மூலமாக யானைக்கால் நோய் தடுப்பிற்கான நடவடிக்கைகளை நிறைவேற்றும் திட்டத்தை அரசாங்கமே எற்றுக் கொண்டு ஏற்கெனவே ஆணை பிறப்பித்தது. அந்தத் தீவிரத் திட்டத்தில் மூன்றில் ஒரு பங்கு செலவைத்தான் அரசு ஏற்றுக்கொள்ளும். அதுவும் தீவிரத் திட்டம் என்பதால். அப்படி ஒப்புக்கொண்டும் கூட அந்தப் பஞ்சாயத்துக்குப் போதிய அளவு நிதி வசதி இல்லாத காரணத்தால், பஞ்சாயத்து ஒன்றியத்தின் மூலமாக பக்கத்திலுள்ள சிற்றூரையும் சேர்த்து அந்தத் திட்டத்தை நிறைவேற்றும்படி கருத்து தெரிவிக்கப் பட்டிருக்கிறது. அதற்குப் பிறகும் கூட அந்தப் பஞ்சாயத்து யூனியனிலிருந்து அதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டு வந்துசேரவில்லை. அந்தத் திட்டம் அந்த யூனியனில் நிறைவேற்றப்பட்டதற்குப் பின்னர் இரணியல் பகுதியில் இந்தத் திட்டம் நிறைவேறும். அதேபோல திருவிதாங்கோடு பகுதியிலுள்ள யானைக்கால் நோய் பரவலாக இருப்பதைத் தடுப்பதற்கு திருவிதாங்கோடு கோவில் மடம் ஆகிய வட்டாரத்தில் ஆய்வு நடத்துவதற்கு தஞ்சாவூர் மண்டல மலேரியா ஒழிப்பு அலுவலரிடம் திட்டம் உள்ளது. அரசின் ஒப்பளிப்பு பெற்று அதைச் செயல்படுத்து மாறு குடும்பநலத் துறை இயக்குநர் கேட்கப்பட்டிருக்கிறார்.

திரு. ஜி. சுவாமிநாதன் : இந்தப் பகுதியில் தேசிய மலேரியா ஒழிப்பு இயக்கம் நிறுத்தப்பட்டதால், கொசு பெருகி அதன் மூலமாக யானைக்கால் நோய் பலருக்கு வந்துள்ளதாகக் கூறப்படுவது அரசாங்கத் திற்குத் தெரியுமா? அகில இந்திய அடிப்படையில் யானைக்கால் நோய் பெருமளவில் பரவி வருவதாக மத்திய அரசு ஆய்வுக்குழு கொண்டிருக்கிற கருத்தையொட்டி தமிழகம் முழுவதும் அந்த நோய் விரைவில் பரவி வருவதால், அதைப் பரிசீலிக்க ஆய்வுக்குழு ஒன்றை அரசு ஏற்படுத்துமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் :—கேள்வியில் endemic என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்தத் திட்டத்திற்கும் இந்தச் செயல் திட்டத்திற்கும் நேரடியான தொடர்பில்லை. அது தனியான திட்டம்



அதற்கு வேறு வகையான உதவிகள், அவசியங்கள் இருக்கின்றன. இந்தத் திட்டம் ஏறத்தாழ எழெட்டு வட்டாரத் திட்டங்களாகப் பிரிக்கப் பட்டுச் செயல்படுகிறது. இந்தத் திட்டத்தில் பெரும்பகுதியை ஊராட்சி மன்றமோ, ஒன்றியமோ ஏற்றுக்கொள்ள வேண்டும். யானைக்கால் நோய் வேகமாகப் பரவிவருவதைப் பற்றி ஆராய்ச்சி நடந்திருக்கிறதா என்று கேட்டார்கள். இருபது ஆண்டுகளில் அது கூடக் குறைந்து தான் வந்திருக்கிறது.

திரு. சா. கணேசன் : யானைக்கால் நோய் ஃபைலேரியல் மஸ்கிடோ வினால் ஏற்படுகிறது. மலேரியா காய்ச்சலும் அந்த வகையான கொசு வினால்தான். ஆகவே மலேரியா ஒழிப்புத் திட்டம் செயல்படும்போது அந்தக் கொசு மட்டும் சாவதில்லை. இந்தக் கொசுவும் சேர்ந்து சாவதினால் தஞ்சாவூர் மலேரியா ஒழிப்புத்துறையை அரசு அணுகி இந்தத் திட்டத்தை மேற்கொள்ளும்படி கேட்டிருக்கிறது. தீங்கு வருவது ஃபைலேரியல் கொசுவாலா, மலேரியா கொசுவாலா என்று பிரித்துப் பார்க்கவேண்டிய அவசியமில்லை.

ஆகவே இரண்டையுமே கருத்தில் கொண்டு மலேரியா ஒழிப்புத் திட்டத்தோடு இணைத்துச் செய்தால், யானைக்கால் நோயை முற்றிலும் தவிர்க்க அல்லது கணிசமான அளவு குறைக்க முடியும் என்பதை அரசு கவனத்தில் கொண்டு செயல்படுமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் ; தலைவர் அவர்களே, இந்த ஆராய்ச்சிதான் மலேரியா ஒழிப்புப் பகுதியைச் சேர்ந்த நிபுணர்கள் மூலமாக நடத்தப்பட்டிருக்கிறது. செயல் திட்டத்தில் அதற்காகக் கிடைக்கிற கிராண்டு, திட்டத்தை ஏற்றுக்கொள்கிற பொறுப்பு இவை காரணமாக தனித்தனி அமைப்பாக இயங்குகிறது. ஒன்றால் இன்னொன்றுக்கு நன்மை கிடைப்பதால் அது மகிழ்ச்சிக்குரியது. எந்தத் திட்டத்தையும் ஓரளவுக்குத்தான் நிறைவேற்ற முடியும் என்ற வரம்பு இருக்கிறது.

திரு. எஸ். ஜெயராம ரெட்டியார் ;—சாதாரணமாக காவிரி டெல்டா பகுதியில் தண்ணீர் வளமாக இருப்பதால், அப்பகுதிகளில் யானைக்கால் நோய் வருவதாக நினைக்கிறேன். வறண்ட எங்கள் பகுதியில் அந்த நோய் அவ்வளவாக இல்லை. ஆகையால் இந்த நோய் தண்ணீர் மூலமாக வருகிறதா என்று ஆராய்ச்சி நடத்தப்படுமா ?

மிஸ்டர் சேர்மன் :—காவிரியில் தண்ணீர் வரவேண்டுமென்று சொல் கிறார்கள். உறுப்பினர் அவர்கள் ஃபைலேரியா வருகிறது என்று சொல்கிறார்களா ? (சிரிப்பு).

மாண்புமிகு திரு. க. அன்பழகன் :—எந்த அளவுக்கு மக்கள் நெருக்கமாக வாழ்கிறார்களோ, எந்த அளவுக்கு சுகாதாரக் குறைவோடு சுற்றுப்புறம் அமைகிறதோ, எந்த அளவு அசுத்த நீர் தேங்குகிறதோ அந்த அளவுக்குக் கொசு பெருகுகிறது. அதன் விளைவு இது.

திரு எம். சங்கரலிங்கம் பிள்ளை : இரணியல், திருவிதாங்கோடு பகுதியில் யானைக்கால் நோய் மிக நீண்ட காலமாகவே இருந்து வருகிறது. தற்போது அதனுடைய எண்ணிக்கை குறைவு என்று கூடச் சொல்லலாம். அங்கே அது பரவுவதற்குக் காரணம் அந்தப் பகுதிகளில் என்றும் வற்ற மல் குளங்களில் தண்ணீர் தேங்கியிருக்கும் சூழ்நிலையிருப்பதால் கொசுக் கள் பெருகுகின்றன. அந்தக் குளங்களை ஆண்டுக்கொரு முறை நீர் வற்றச் செய்து சுத்தப்படுத்தினால், அங்கே கொசுக்கள் பெருகுவது குறை யும். அதனால் ஏற்படுகிற நோயும் குறையும் என்பதால் அதற்கான விசேஷத் திட்டத்தை ஏற்படுத்தி நிபுணர்களை அரசு அனுப்ப ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, யானைக்கால் வியாதி வந்தால், அந்த மனிதனுக்கு முதல் தொல்லை. மற்றவர் களுக்கு அருவருப்பு. அதைப்போல எந்தப் பகுதியில் பரவியிருக்கிறதோ, அந்தப் பகுதியில் உள்ள பஞ்சாயத்து அல்லது ஒன்றியம் எடுக்கிற நட வடிக்கையைப் பொறுத்துத்தான், இதில் முழு வெற்றிபெற முடியும். அரசாங்கம் முழு ஒத்துழைப்புத் தரலாம். செயல்படுத்த வேண்டியது அப்பகுதி மக்கள்தான்.

திரு. சி. வி. ராஜகோபால் : இவ்வளவு சுகாதாரமின்மை காரணமாகத் தான் இந்த யானைக்கால் நோய், ஹைட்ரஸல் நோய் வருவதாகக் கண்டு பிடித்திருக்கிறார்கள். ஆகையால் அப்படி சுகாதாரக் குறைவு இல்லாத வகையில் ஆட்சியாளர்கள் " பிரிவெண்டிவ் மெஷர் " என்ற முறையில் தடுப்பு நடவடிக்கையை எடுக்க அதிக நிதியை ஒதுக்கி சுகாதாரம் இல்லாத இடங்களில் சுகாதாரத்தைப் பெருக்க நடவடிக்கை எடுப்பார்களா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, அவர்கள் கேட்ட கேள்விக்குச் சரியான விடை பொது மக்களுடைய அறிவும், திறனும், பண்பும், செயலும் எந்த அளவு சுகாதாரத்திற்கு ஏற்றவாறு வளருகிறதோ, அந்த அளவுதான் அரசாங்கத் திட்டமும் வெற்றி பெற முடியும். யானைக்கால் நோய் உள்ள இடங்களில் அரசாங்கம் அதை ஒழிக்கும் முயற்சியில் ஆகும் செலவில் 4-ல் ஒரு பங்கை ஏற்றுக் கொள் வதற்குப் பதிலாக மூன்றில் ஒரு பங்கை ஏற்றுக்கொண்டு செயல்படு வதற்கு ஊக்கமளிக்கிறது. பஞ்சாயத்து அல்லது பஞ்சாயத்து யூனியன் மூலமாக நிறைவேற்ற ஒத்துக்கொள்கிறோம். மேலும் அவசியமான நெருக்கடிகள் ஏற்பட்டால், அரசாங்கம் மறுபரிசீலனை செய்ய முயற்சிக்கும்.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, ஹைட்ரஸல் நோய் சுகாதாரமின்மையால் வருகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு க. அன்பழகன் : தலைவர் அவர்களே, அது உடலுக்குள் இருக்கக்கூடிய சுகாதாரக் குறைவினால் ஏற்படுவது.

திரு. சி. வி. ராஜகோபால் : தலைவர் அவர்களே, எங்கெங்கு சாக்கடை கள் இல்லையோ அங்கெல்லாம் இந்த வியாதி அதிகமாக வருவதாகச் சொல்கிறார்கள். ஆகையால் எல்லா இடங்களிலும் பாதாள சாக்கடை கட்டித் தர ஆட்சியாளர்கள் முன்வருவார்களா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : பாதாள சாக்கடைத் திட்டம் என்பது மக்கள் தொகை பெருகியுள்ள பெரு நகரங்களிலும் அடுத்த நிலையிலுள்ள நகரங்களிலும் வரிசையாகக் கொண்டு வரப்படும். எல்லா கிராமங்களுக்கும் பாதாள சாக்கடை வராது.

### *House Surgeons.*

*200 **Q.—Thiru M. RAJAH IYER: Will the Hon. the Minister for Public Health be pleased to state :—**

**(a) the rate of allowance paid to House Surgeons in the State; and**

**(b) whether such allowances are payable to the holders of M.B.B.S. degree from Universities other than those in Tamil Nadu ?**



பயிற்சி மருத்துவர்கள்.

திரு. எம். ராஜா அய்யர் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன்:—

(அ) இம்மாநிலத்தில் பயிற்சி மருத்துவர்களுக்கு (House Surgeons) வழங்கப்படுகிற படியின் விதமென்ன ?

(இ) தமிழ்நாடு பல்கலைக் கழகம் அல்லாத பிற பல்கலைக் கழகங்களி லிருந்து எம்.பி.பி.எஸ். பட்டம் பெற்றவர்கள் இத்தகைய படிகளைப் பெறத் தகுதியுடையவர்களா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) இம்மாநிலத்திலுள்ள கட்டாய " சுழல்முறைப் " பயிற்சி மருத்துவர் (Rotatory House Surgeons) ஒவ்வொருவருக்கும் 1—4—1970 முதல் மாதம் ஒன்றுக்கு ரூ. 175 சம்பளம் வழங்கப்படுகிறது. அகவிலைப்படி வழங்கப்படுவதில்லை. ஆனால் அவர் தங்குவதற்கு வாடகையின்றி இருக்கை வசதி அளிக்கப் படுகிறது. இருக்கை வசதி அளிக்கப்படாதபோது அனுமதி பெற்ற வீதங் களில் வீட்டு வாடகைப்படி வழங்கப்படுகிறது.

(இ) இல்லை.

**Thiru M. RAJAH IYER: Mr. Chairman, Sir, may I know whether the Government have received any representation from holders of M.B.B.S.degrees from other Universities like Mysore and Andhra and who have been serving here as House Surgeons, praying for sanction of such house rent allowance? Inasmuch as they serve in our hospitals, this small concession may be extended to them. May I know the number of hospitals where the Medical Department is giving allowance of Rs. 175 also?**

**The Hon. Thiru K. ANBAZHAGAN : Sir, the Rotatory House Surgeoncy is part and parcel of the total medical education for any person to qualify himself for the Graduate degree and as such, it is a part of the course itself.**

**The students who are qualifying themselves from other Universities and from other Colleges in other States are not entitled to get this stipend but they are given the opportunity to have the Rotatory House Surgeoncy.**

### *Board of Revenue.*

***201. Q—Thiru G. SWAMINATHAN: Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state the stage at which the proposal of abolition of Board of Revenue now stands ?**

வருவாய்த் துறை வாரியம்.

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு உணவு-வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப பதிலளிக்க வேண்டுகிறேன்—

வருவாய்த் துறை வாரியத்தை ரத்து செய்யும் செயற்குறிப்பு தற் போது எந்த நிலையில் உள்ளது ?

மாண்புமிகு திரு ப. உ. சண்முகம் : இது அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, இதைப்பற்றி முரண்பாடான கருத்துக்கள் அடிக்கடி வெளியிடப்படுகின்றன. ஒரு சமயம் ரத்து செய்யப்படும், என்றும் மற்றொரு சமயத்தில் அல்லது நிதிநிலை அறிக்கையிலோ தனிப்பட்ட முறையிலோ ரத்து செய்யப்படுவதில்லை என்றும் சொல்கிறார்கள். இப்படி முன்னுக்குப் பின் முரணாகச் சொல்கிற நிலைமை அரசிற்கு ஏற்படக் காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : கருத்தில் முரண்பாடில்லை. ரெவின்யூ போர்டு எடுக்கப்பட வேண்டுமென்பதில் எந்தவிதமான கருத்து முரண்பாடும் இல்லை. அது நிர்மானிக்கப்பட்ட விஷயம். அரசாங்கத்தின் கொள்கையில் மாற்றமில்லை. ஆனால் அதை மாற்றும்போது எந்த நிறுவனத்தைக் கொண்டு வந்து மாற்றுக வைப்பது என்பதுதான் அரசின் பரிசீலனையில் இருக்கிறது. மீண்டும் ரெவின்யூ போர்டு வைத்திருக்க வேண்டுமென்ற எண்ணமில்லை. அதைச் சட்ட பூர்வமாக மாற்ற வேண்டும். சட்டச் சிக்கல் இல்லாமல் மாற்ற அரசு யோசித்துக் கொண்டிருக்கிறது. இதற்கு எ.ஆர்.சி.க்குக் கூட ரெஃபர் செய்வதாக இருக்கிறோம்.

### *Retrenchment.*

*202. **Q—THIRU V. ISVARMURTI: Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state :**

**(a) whether a number of Non-Gazetted Government Officers working in the Revenue Department at Tiruchirappalli have been retrenched from service during the year 1970 ;**

**(b) if so, the details thereof ;**

**(c) the reasons therefor ; and**

**(d) the steps taken to reinstate them in service ?**

ஆட் குறைப்பு.

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி : மாண்புமிகு உணவு-வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) திருச்சிராப்பள்ளி, வருவாய்த் துறையில் பணிபுரியும் அரசிதழ் பதிவு பெறுத பணியாளர்கள் பலர் பணியிலிருந்து 1970-ஆம் ஆண்டில் ஆட் குறைப்பு செய்யப்பட்டுள்ளனரா ?

(இ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை ?

(உ) அதற்கான காரணங்கள் யாவை ?

(எ) அவர்களை மீண்டும் வேலையிலமர்த்த எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) இல்லை.

(இ) to (எ) இக்கேள்விகளுக்கு இடமில்லை.

### *Urban Land Tax.*

*203. **Q—THIRU. G. SWAMINATHAN: Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state :**



**(a) whether the Government are aware of the fact that the revenue authorities are collecting the entire arrears relating to the urban land tax for nine faslis in the City of Madras without giving sufficient time to the assessees to pay the arrears in instalments ; and**

**(b) if so, whether there is any proposal with the Government to issue instructions to the revenue authorities to give time for the assessees to pay the arrears in instalments at one fasli for every quarter ?**

நகர்ப்புற நிலவரி.

திரு. ஜி. சுவாமிநாதன் ; மாண்புமிகு உணவு-வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்.—

(அ) நிலுவைகளைத் தவணைகளில் செலுத்துவதற்குப் போதுமான காலம் அளிக்காமலேயே, சென்னை மாநகரில் 9 பசலிகளுக்குரிய நகர்ப்புற நிலவரி நிலுவைகள் முழுவதையும் வருவாய்த் துறை அதிகாரிகள் வசூல் செய்து கொண்டிருக்கிறார்கள் என்னும் உண்மையை அரசு அறியுமா ?

(இ) ஆம் எனில், ஒவ்வொரு காலாண்டிலும் ஒரு பசலி வீதம் தவணைகளில் நிலுவைகளைச் செலுத்த, வரி செலுத்துவோருக்குக் காலம் அளிக்குமாறு வருவாய்த் துறை அதிகாரிகளுக்கு உத்தரவு பிறப்பிக்கும் செயற்குறிப்பு எதுவும் அரசிடம் உள்ளதா ?

**THE HON. THIRU P. U. SHANMUGAM :(a) and(b) The arrears of urban land tax are due for eight faslis from Fasli 1373 to Fasli 1380. The tax for Fasli 1381 (1st July 1971 to 30th June 1972) is due for collection only after 1st July 1971 and before 30th June 1972.**

**In G.O. Ms. No. 1759, Revenue,dated 18th June 1971, orders have been issued for the collection of the arrears of urban land tax in easy instalments as shown below :—**

| | |
|---|---|
| **Arrears relating to Faslis 1373, 1374 and 1375** | **Before 31st March 1972.** |
| **Arrears relating to Fasli 1376 .. ..** | **Before 30th June 1972.** |
| **Arrears relating to Fasli 1377 .. ..** | **Before 30th September 1972** |
| **Arrears relating to Faslis 1378 1379,and 1380.** | **Before 31st December 1972.** |

### *Misappropriation of Government Funds.*

*204. **Q—THIRU G. SWAMINATHAN: Will the Hon.the Minister for Food and Revenue be pleased to state :**

**(a) whether it is a fact that a representation was made to the Government during August 1970, by the Panchayat President and others of Thanjavur Taluk No. 37, Chitrakudi Circle, against the alleged misappropriation of Government Funds by the Village Headman Thiru K. Sundararaju ; and**

**(b) If so, the action taken thereon ?**

அரசு நிதிக் கையாடல்.

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு உணவு— வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :—

(அ) 1970-ஆம் ஆண்டு ஆகஸ்ட் அளவில் தஞ்சாவூர் வட்டம் எண் 37. சித்திரக்குடி சர்க்கிளைச் சேர்ந்த ஊராட்சித் தலைவர் மற்றும் ஏனையோர் கிராமத் தலைவர் திரு. கே. சுந்தரராஜு அரசு நிதியைக் கையாடல் செய்ததாகக் குற்றம் சாட்டி அரசிடம் முறையீடு செய்து கொண்டது உண்மையா ?

(இ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது ?

THE HON. THIRU P. U. SHANMUGAM: (*a*) A petition was received by Government in September 1970 purporting to be from the President and Members of the Panchayat Board, Chitrakudi, and others and signed by one A. Ganesan making certain allegations against Thiru K.Sundararaja Sundayar, Village Headman of Chitrakudi Village, Thanjavur District.

(*b*) On enquiry both the President of the Panchayat Board, Chitrakudi, and Thiru A. Ganesan denied any knowledge of the petition. Even before the receipt of the above petition, the Revenue Divisional Officer, Thanjavur, had enquired into certain charges of misappropriation against the Village Headman and removed him from service. On appeal, the District Revenue Officer, Thanjavur modified the punishment as one of suspension for one year.

THIRU G. SWAMINATHAN: After suspension, he has been reinstated, Sir.

THE HON. THIRU P. U. SHANMUGAM: Sir, he might have been reinstated.

THIRU G. SWAMINATHAN: May I know, Sir, what kind of misappropriation it was and whether it was a continuing offence ?

THE HON. THIRU P. U. SHANMUGAM: I don't have any particulars, Sir. Notice please.

*Fire Accident.*

*205. *Q*—THIRU M. SANKARALINGAM PILLAI: Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state:

(*a*) the number of Harijan tenements destroyed as a result of the fire accident in February 1971 in Senbaharamanpudur, Thovalai taluk, Kanyakumari District; and

(*b*) the nature of relief given to them ?

தீ விபத்து.

திரு. எம். சங்கரலிங்கம் பிள்ளை: மாண்புமிகு உணவு-வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :—

(அ) கன்னியாகுமரி மாவட்டம் தோவாளை தாலூகா, செண்பகராமன் புதூரில் 1971 பிப்ரவரி மாதம் தீ விபத்தால் பாதிக்கப்பட்ட அரிசன குடியிருப்பு வீடுகள் எத்தனை ?

(இ) அவர்களுக்கு எத்தகைய நிவாரணம் அளிக்கப்பட்டது ?



மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) 53 வீடுகள் பாதிக்கப்பட்டன.

(இ) தீ விபத்தில் இழந்த வீடுகளை மீண்டும் கட்டிக்கொள்ள மான்ய மாக ரூ. 3,180-ம், இழந்த ஆடைகள் முதலியன வாங்கிக்கொள்ள மானியமாக ரூ. 900-ம் துயருற்ற நபர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. மேலும் முழுமையாக வீடுகளை இழந்த 49 நபர்களுக்கு மீண்டும் வீடுகள் கட்டிக்கொள்ள மான்ய வழங்க கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியாளர் சிபாரிசு செய்துள்ளார். இது வருவாய் வாரியத்தின் ஆய்வினிலுள்ளது.

**MR. CHAIRMAN: Questions 206 to 210 are postponed. Questions are over.**

(*Note.*—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.)

## II. CALLING ATTENTION TO THE PLIGHT OF GRADUATE TEACHERS DUE TO NON-ABSORPTION OF 15 PER CENT OF GRADUATE TEACHERS IN SELECTION GRADE.

THIRU. V. ISVARMURTI: Mr. Chairman, Sir, I wish to call the attention of the Hon. the Minister for Education to a matter of urgent public importance, namely, the plight of about 1,200 Graduate-teachers in the State due to the non-implementation of the Government decision to absorb 15 per cent of the erstwhile District Board Graduate-Teachers in the selection grade.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, 1970-ம் வருடம் மே மாதம் முதல் மாவட்டக் கழகப் பள்ளிகளில் உள்ள ஆசிரியர்களை அரசுப் பணியில் சேர்க்க அரசு ஆணையிட்டது. அவர்களுக்கெல்லாம் தனியாக தமிழ்நாடு கல்வி சார்நிலைப்பணி (பி) என்ற ஒரு தனிப்பதவித் தரம் அமைக்கப்படும். கல்வி சார்நிலைப்பணி (எ) என்ற பதவித்தரத்தில் உள்ளதைப் போன்ற கல்வி சார்நிலைப்பணி (பி) என்ற பதவித் தரத்தில் பி.டி. ஆசிரியர்களுக்குக்கென்று தேர்வு நிலைப் பதவிகளை அதே சம்பளத்தில் ஏற்படுத்த வேண்டுமென்று அவர்கள் மனு செய்தனர். அம்மனுவை அரசு பள்ளிக் கல்வி இயக்குநருடன் கலந்து பரிசீலனைசெய்தது. அரசு (கழக) உயர்நிலைப் பள்ளிகளில் 8,000 பி.டி. ஆசிரியர்கள் உள்ளனர். அதில் 15 சதவிகிதம், அதாவது 1,200 பதவிகள் தேர்வுநிலைப் பதவிகளாக கல்வி சார்நிலைப்பணி (பி) பிரிவில் "எ" பிரிவில் உள்ள சம்பள விகிதத்துடன் உயர்த்தப்பட வேண்டுமென்று அரசால் 1971-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் ஒப்பளிக்கப்பட்டது. அப்பதவிகள் பல்வேறு மாவட்டங்களுக்கு அங்குள்ள பள்ளிகளில் உள்ள பி.டி. ஆசிரியர்களின் எண்ணிக்கையைக் கணக்கில் கொண்டு பள்ளிக் கல்வி இயக்குநரால் ஒதுக்கப்படும். மாவட்ட முதன்மை வரிசை தகுதி அடிப்படையில் அப்பதவிகள் நிறைவு செய்யப்படும். மாவட்ட (கழக) பள்ளிகளில் தேர்வு நிலைப்பதவிகளை நிறைவு செய்யப் பள்ளிக் கல்வி இயக்குநரிடமிருந்து வந்த வரைவு விதிகளுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு உத்தரவுகள் இன்று வெளியிடப்பட்டன. ஒப்புதல் அளிக்கப்பட்ட முறைப்படி அப்பதவிகளைப் பூர்த்தி செய்ய பள்ளிக் கல்வி இயக்குநரால் தேவையான மேல் நடவடிக்கைகள் எடுக்கப்படும். 4-30 P.M.

திரு. எஸ். முத்துசாமி: தலைவர் அவர்களே, இந்தச் சபையின் முன்னால் போலீஸ் கமிஷன் ரிப்போர்ட், பிற்பட்டோர் நலக் குழு அறிக்கை போன்ற பல்வேறு அறிக்கைகள் வைக்கப்பட்டிருக்கின்றன. அதே போல "பே கமிஷன்" ரிப்போர்ட்டையும் வைக்க அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அதைத் தனியாகப் பரிசீலிக்க வேண்டும்.

## DISCUSSION ON THE NOTE ON PROGRESS OF EDUCATION.

மிஸ்டர் சேர்மன் : 15 உறுப்பினர்கள் பேசுவதற்காக தங்களுடைய பெயர்களைக் கொடுத்திருக்கிறார்கள். இன்றே இது முடியவேண்டியிருப்பதால், உறுப்பினர்கள் 5 நிமிடத்திற்குமேல் பேசினால், 15 பேர்களுக்கும் வாய்ப்பு இருக்கும் என்று நான் எண்ணவில்லை. ஆகையினாலே மற்றவர்களுடைய நேரத்தை முன் பேசுகின்றவர்கள் ஆக்கிரமித்துக் கொள்ளாமல், 5 நிமிடத்திற்கு மேல் பேசாமலிருக்கும்படி கேட்டுக்கொண்டு கல்வி அமைச்சர் அவர்களை கல்வி முன்னேற்றத்தின் குறிப்புகளை வைக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இந்தச் சட்ட மன்றத்தின் முன் வைக்கப்பட்டுள்ள கல்வி முன்னேற்றத்தின் குறிப்பை* பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

MR. CHAIRMAN.—Motion moved—"That the Note on Progress of Education laid on the table of the House be taken into consideration.

*THIRU A. R. DAMODARAN: Mr. Chairman, Sir, there are so many points on which I would like to speak. But in view of your caution to the House to restrict our speeches to five minutes, I have necessarily to be brief and if I do not embellish my remarks with congratulatory remarks, it may not be mistaken that I do not approve or that I do not wish to express my admiration for the great record of our Education Department, of the phenomenal expenditure that has taken place in our State in Primary, Secondary, University and Technical Education.

I would like to refer to one or two important points. The first point is with reference to the Pay Commission Report which has been recently released and which is of epoch-making significance so far as teachers are concerned. While generally, Sir, the increases have been welcomed, I must confess thatso far as graduateteachers are concerned, they have real ground for feeling that they have been needlessly discriminated against in the matter of increase in the pay that has been suggested by the Pay Commission. They have rightly pointed out that whereas in all other cadres such as in Primary and Secondary Grades the increments, that have been suggested by the Second Pay Commission, have been fairly substantial, in so far as B.A., B.T. (graduate) teachers are concerned—those in High Schools are concerned—the pay increase has only been Rs. 25 because they were formerly drawing a pay of Rs. 140—5—180—10—250, whereas the starting pay according to the Second Pay Commission is Rs. 275—10—375—15—450. Therefore, their point would bear some consideration at the hands of the Government for the simple reason which they themselves pointed out in the numerous memoranda presented to the Government that the Tutors and Demonstrators in Colleges with only one degree B.A. or B.Sc. are started on a higher scale of pay. I think, Sir, the graduate teachers are entitled to a fair deal because when we consider qualitative improvements in education, it

* Printed as Appendix on pages 65–156.



is really in 9th, 10th and 11th classes that the boys should be properly coached and I think we should encourage the best talent to teach in these institutions. There ore, I would like to plead with the Hon. the Minister for Education to kindly come to an urgent decision on this matter as further delay will needlessly cause a great deal of bitterness and frustration among them. Because certain meetings were convened by them just prior to the Election, this unfortunate class of teachers has been mistaken as having political motivations in their demands. I am sure many sections of our community were trying to gain some advantage especially during election time. A grudge should not be borne against this important class of teachers because of certain alleged political motivations. Knowing them as I do a vast majority of such teachers is not having any such motives. They were over-anxious and over-eager to represent their cases before the representatives of the people. I am sure the Hon. the Education Minister who has been somewhat generous in regard to other matters would also bear this in mind. Another long standing demand of their which, I believe, has now been refused, is that after 10 years of service they should be taken into the Selection grade. I think this also should receive some consideration when we take into account the fact that former District Board Schools have been converted into a separate unit for each district and the chances of promotion for the graduate teachers are, therefore, limited and it is because of this reason they have requested that they should be taken into the Selection Grade because many of them may have to retire as graduate assistants and may not have chances to become Headmasters on a higher scale of pay.

Sir, in view of the short time, I would pass on to what I consider to be the most important matter concerning the students and I must confess with a great deal of sorrow that I am extremely disappointed at the manner in which the Government have sought to implement the recommendation regarding the opening of English medium sections in Colleges. Sir, it is a horrifying experience for us because even to-day in Cuddalore the students were coming to me saying thatwhereas new degree courses have been started—B.A. (History) and B.Sc., (Botany), the college authorities have not received permission from the University of Madras for starting new English Medium sections in their colleges. I think, Sir, the University of Madras is not to blame in this regard. It is the lack of planning in the Department of Higher Education that is solely responsible for this state of affairs. In this modern age, when we think of new degree courses, when we think of new Colleges, the authorities in the Department of Higher Education should think in the month of October of each year and start the planning and start making application for affiliation to the University before the end of December each year. Why does the Department of Higher Education think of such new degree Course in the month of April or May and why does it seek affiliation from the University of Madras at such a very late stage. In all these Colleges, it is now contemplated that the strength of the college should be divided into two sections—one for the English medium boys and the other for the Tamil medium boys. Nobody takes into account the fact that accommodation is not available in all these colleges for both the media. This is perhaps why the Madras University is hesitating about granting affiliation to the numerous Government colleges whenever they apply for affiliatinion to both sections. As a result of this, thousands of students are not able to get admission. Everybody knows that several

4-40 p.m.

newspaper reports have come on the Nilgiris Arts College, Kumbakonam Arts College, Chingleput Arts College and Cuddalore Arts College. These are the representative samples of the terrible bungling that has gone on in this matter and our boys are not able to know even on the 22nd July whether English medium sections is to be opened or not in a college. If it is your son or my son, Sir, we can realise the mental agony and frustration that parents have to undergo when we find that our boys do not know whether they will have a chance of getting admission into the English medium section in a particular College. I am afraid the Government have been unsympathetic in this matter. I do not know whether this is due to lack of sympathy or because they have not realised the magnitude of the problem or whether it is due to other reasons. Whatever it be, the fact remains that to-day there is a great deal of bitterness and frustration among the students which may vent itself in a sense of open campus revolt. I am afraid conditions are being created whereby this bitterness may explode into an agitation of monumental dimensions. I would request the Education Department, the Director of Higher Education to tackle this problem urgently. I tabled a Call Attention Notice on the 29th June. The Call Attention Notice was simple and it was with reference to starting of English medium sections in the Government Colleges. I am sorry to say that till to-day, 22nd July 1971, the information is not available with the Director of Higher Education. He should have such information at his finger tips. Why is it, Sir, it has been so difficult for me to call the attention of the on. the Minister for Education to a very simple matter ? It is a simple matter, nonetheless a most important matter as far as students are concerned.

One other point I would like to refer to is in regard to the method of admission that is adopted in Government Colleges. Sir, a very peculiar method has been adopted in that students have been asked to indicate the particular medium they want—English medium or Tamil medium—and selection is made by the Principals of these colleges on the basis of certain marks. This system is very carefully followed. I must congratulate the Hon. the Education Minister at least on this point. In South Arcot, four colleges have been taken as one unit as an experiment and therd is a panel to make the selection. But the point is that the selection is made strictly on the basis of the application whether the boy wants Tamil or English medium. It so happens, Sir, that because of lack of applications for the Tamil medium a boy with 325 marks gets admission in Tamil medium whereas a boy who gets 400 marks is not able to get admission either in the English medium or Tamil medium, because the range of marks for English medium is much higher. This is unfortunate because a boy who gets 400 marks is not able to know why he is excluded from the particular College. I have made this point even during the discussion on the Budget and I would take this opportunity of reiterating now that we should make admissions to these colleges strictly on the basis of whatever principles the Government have in mind, whether it is on the basis of merit or communal reservations. Nobody has any objection to such reservations and such principles of admission being laid down. I certainly believe that admission should first take place and only after the admission has taken place, the boy should be asked to give his preference as to which medium he wants in that College. Surely there can be no objection to this, Sir. In the present system of admission, grave injustice is being done to the students not only by delay in the opening of course but also in the method of selection.





One more point and I have done, Sir. It is in regard to new courses that have been opened in our Government Colleges. It is a matter of shocking surprise to me that we should have only 9 Degree Courses in 9 Government Colleges opened newly during the year 1970-71. It is also a matter of shocking surprise to me that only in two Government Colleges post-graduate degree courses have been opened. When students are starving for higher education and when they want B.A. (Statistics), B.A. (Philosophy), B.A. (Psychology), the Hon. Minister comes and opens B.Sc. (Botany) and B.A. (History). The arts subjects are not popular now-a-days and the boys are going in for Science courses. In 4 Government Colleges in South Arcot District, after seven years of existence in Cuddalore, we still do not have a single Bachelor course in Physics or Chemistry. Only Botany Section has been opened this year. My only grievance is that adequate planning is not made by the Department of Higher Education and I am representing this because we have not been given any opportunity to represent this in the Consultative Committee, which is a dead body as far as we are concerned and it is because of this we come to open platform and mention these details. I would request the Hon. the Minister for Education that in matters pertaining to Collegiate Education—opening of new courses and new Colleges—adequate planning should be made well in advance before the end of the academic year and the Department of Higher Education should plan even at this stage what new courses should be opened during 1972-73.

Thank you, Sir.

*திரு. வி. தங்கபாண்டியன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்தக் கல்விக் கொள்கையின் மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்வதில் நான் பெருமகிழ்ச்சியடைகிறேன். திராவிட முன்னேற்றக் கழகம் பொறுப்பேற்ற பின்பு கல்வித் துறைக்கு இந்த அரசாங்கம் ஏறக்குறைய 82 கோடி ரூபாய்க்கு மேல் ஒதுக்கீடு செய்திருப்பது கல்வியினுடைய வளர்ச்சியிலே தமிழகத்து அரசாங்கம் கொண்டிருக்கிற முனைப்பைக் காட்டும். தமிழ்நாடு அரசு கல்வித் துறையிலே பல்வேறு சீர்திருத்தங்களை உருவாக்கி, அதன் மூலம் இந்தியத் துணைக்கண்டத்திற்கு ஒரு எடுத்துக்காட்டாக விளங்குகிறது என்ற ஒரு நல்ல சிறப்பை நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். தமிழ் நாட்டிற்கு என்று பல தனிச் சிறப்புக்கள் உண்டு. தமிழ் நாட்டிலே உள்ள பல்வேறு துறைகளில் கல்வித் துறையை மற்ற மாநிலங்கள் எல்லாம் போற்றிப் புகழ்ந்திருக்கின்றன. தமிழ் நாட்டிலிருந்து கடல் கடந்து செல்பவர்கள், தமிழ் நாட்டின் பெயரையும் புகழையும் எடுத்துச் செல்பவர்கள் ஏராளமாக உண்டு. எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர் மதிப்பிற்குரிய திரு. வ.ஆர். தாமோதரன் குடும்பமே நமது மதிப்பிற்கும் மரியாதைக்கும் உரிய கல்விக் குடும்பம்தான். அவர்களுடைய பெயரையும் புகழையும் இந்தியத் துணைக்கண்டமே கல்வித் துறையிலே போற்றிப் புகழும் அளவிற்குப் போயிருக்கிறது. ஆனால் இந்த நேரத்தில் நான் மிகப் பணிவன்புடன் சொல்லிக்கொள்ள விரும்புவது தமிழ் நாட்டில் தமிழ் நாட்டு உணர்வு, தமிழ் மொழி உணர்வு, தமிழ் இன உணர்வு இருப்பது ஒரு பாவமான காரியமல்ல. தமிழ் நாட்டு அரசாங்கம் கல்லூரி பயிற்றுமொழிக் கொள்கையில் உணர்ச்சிவயப்பட்டு ஒரு முடிவுக்கு வரக் கூடாது என்பதற்காகத்தான் டாக்டர் லட்சுமணசாமி முதலியார் குழுவின் அறிக்கையை ஏற்றுக்கொண்டு, அந்த முறையை ஏற்றுக்கொண்டு, அரசாங்கமும் அதற்கு ஒரு மரியாதை கொடுத்து சட்ட பூர்வமான காரியத்தைச் செய்வதற்கு முன்வந்திருக்கிறது. அதை நாம் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். ஆனால் ஆரம்பப் பள்ளிகளிலேமிருந்து உயர்நிலைப் பள்ளிகள் வரை ஆங்கிலமே போதனை மொழியாக இருக்க வேண்டும் என்ற புதிய குரலைச் செயற்கையாக உருவாக்குவதற்கு உயர்ந்த பீடத்திலே இருப்பவர்கள், கல்வியிலே தங்களுக்குத்தான் சிறப்பு இருக்கிறது என்று பாத்ய

தையை வைத்துக்கொண்டு சில தனிப்பட்ட கல்லூரி முதல்வர்களும், தனிப்பட்டோர் நடத்தும் உயர்நிலைப்பள்ளித் தலைமை ஆசிரியர்களும் தூண்டிவிடுகிற சூழ்நிலை இருக்கிறது. தமிழ் நாட்டு உயர்நிலைப் பள்ளிகளில்கூட ஆட்சி மொழி தமிழுக்கு வாழ்வு கொடுக்காவிட்டால் எந்தக் காலத்தில் தமிழ் மொழிக்கு நாம் எற்றம் கொடுக்கப் போகிறோம் என்ற நிலைக்கு நாம் ஆளாக வேண்டிவரும். இந்த நிலையில் தமிழ் நாட்டு அரசு உறுதியாக இருக்க வேண்டும், கண்ணுங்கருத்துமாக இருக்க வேண்டும். தனியார் பள்ளிக்கூடங்களை நடத்திக்கொண்டிருக்கிற சில குடும்பங்கள், தனியார் பள்ளிகளிலே இருக்கிற தலைமை ஆசிரியர்கள், வியாபார நோக்கத்தின் அடிப்படையிலே தனியார் கல்லூரியை நடத்துபவர்களை மாணவர்களை புரட்சி போராட்டம் என்று தெரிந்தித் தூண்டிவிடுகிற துணிவுக்கு வருகிறார்கள் என்பதை நம் அரசாங்கம் மெத்த கவனத்தில் வைத்துக்கொள்வது சாலச் சிறந்ததாகும். இந்த நிலைமையில் தனியார் கல்லூரிகளுக்கு உரிமை வழங்குவதை இனிமேல் அரசாங்கம் அனுமதிப்பதா என்பது மிகத் தீவிரமாக சிந்திக்க வேண்டிய காரியம். தனியார் உயர்நிலைப் பள்ளிகளும், தனியார் கல்லூரிகளும் நிச்சயமாகத் தேசியமயமாக்கப்பட வேண்டும். அந்த காலகட்டம் வெகு தூரத்தில் இருக்கக் கூடாது. நிறைவேற்றுகிற காரியங்களைத் துணிந்து செயல்படுவதற்கு தனியார்களுக்கு அதிகாரம் வழங்கிவிட்டு, பிறகு சட்டத்தின் விதிமுறைகள் இடம் தரவில்லை என்று சொல்லக் கூடாது. அரசாங்கம் தனிப்பட்டவர்களுக்கு உரிமையை வழங்கிவிட்டு நீ இப்படியாகத்தான் நடக்க வேண்டும் என்று கெஞ்சிக் கொண்டிருக்கக்கூடிய நிலை சுதந்திரம் பெற்று இத்தனை ஆண்டுகளுக்குப் பின்னரும் இருக்க வேண்டிய அவசியமில்லை.

4.50 p.m. நாம் எற்றிருக்கிற மொழி தமிழனின் உயர்விற்கு எற்ற மொழி. நாம் அதற்கு மதிப்புத் தர வேண்டும். கல்லூரிகளிலும் தமிழ் போதனு மொழியாக வேண்டும் என்று கூறி வருகிறோம். தனியார் பள்ளிகள், கல்லூரிகள் தமிழ் மொழி போதனு மொழியாவதற்குத் தடையாக இருக்கிறார்கள். எனவே தனியார் கல்லூரிகளையும், பள்ளிகளையும் தேசிய மயமாக்க வேண்டும். இதில் நாம் உறுதியாக இருக்க வேண்டும். உதாரணத்திற்கு ஒன்று சொல்லுகிறேன். இராமநாதபுரம் மாவட்டத்தில் மறைந்த தலைவர் திரு. முத்துராமலிங்கத் தேவர் அவர்களுக்கு மரியாதை தருகின்ற முறையிலே தனியார் கல்லூரி ஒன்று எற்படுவதற்கு அனுமதி வழங்கப்பட்டது. இப்போது அது எந்த நிலைமையில் இருக்கிறது என்று பார்த்தால், மிகவும் பரிதாபகரமான நிலையில் இருக்கிறது. அந்தக் கல்லூரி மானேஜ்மெண்டார் அந்தக் கல்லூரியைச் சரிவர நடத்த முடியாமல், தோன்றிய காலத்திலிருந்து அங்கு போராட்டம் நடந்துகொண்டு வருவதுடன், நீண்டகாலமாக பிரின்சிபாலே இல்லாத நிலையில் அந்தக் கல்லூரி நடத்த முடியாத நிலை எற்பட்டு, இப்போது அதை அரசாங்கமே எற்று நடத்த வேண்டுமென்ற கோரிக்கையை எழுப்பியிருக்கிறார்கள். ஆனால் நம்முடைய அரசாங்கம் அவருக்கு மரியாதை தருகின்ற முறையிலே ரூ. 1½ லட்சம், ரூ. 2 லட்சம் மதிப்புள்ள உயர்நிலைப் பள்ளிக் கட்டடத்தை கொடுத்திருக்கிறது. இருந்தும் தனியார் கல்லூரி நிறுவனம் சரிவர இயங்க முடியவில்லை. அரசாங்கப் பள்ளிகளுக்குச் சரியான கட்டடம் பல இடங்களிலும் இல்லை. இங்கு படிக்கிற மாணவர்களுக்குப் போக்குவரத்து வசதிகள் சரிவரச் செய்து கொடுக்கப்படவில்லை. அங்கு படிக்கிற மாணவர்களுக்கு விஞ்ஞானக் கூடங்கள் அமைத்துக் கொடுக்கப்படவில்லை. தனியார் பள்ளிக்கூடங்களுக்கு அனுமதி கொடுத்து, அவர்களுக்கு மானியம் கொடுத்து, கட்டடம் கட்ட மானியம் கொடுத்து, இன்னும் பல்வேறு சலுகைகளையும் கொடுத்து வருகிறோம். ஆனால் அந்தப் பள்ளிகளில் ஆசிரியர்களை நியமனம் செய்கிற விஷயத்தில் அந்த அந்தச் சமுதாயத்தைச் சேர்ந்தவர்களுக்குத் தான் முதலிடம் கொடுக்கிறார்கள். வேறு ஜாதிக்காரர்களுக்கு அங்கு இடமில்லை. நாடார் சமூகத்தால் நடத்தப்படுகிற பள்ளிகளில் நாடார் சமூகத்தைச் சேர்ந்தவர்களுக்குத் தான் முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. மற்ற சமூகத்தார்களுக்கு அங்கு இடமில்லை. அது போல தேவர் சமூகத்தைச் சேர்ந்தவர்களால் நடத்தப்படுகிற பள்ளி





களிலும், கல்லூரிகளிலும் தேவர் சமூகத்தைச் சேர்ந்தவர்களுக்குத் தான் இடம். பிராமணர்கள் நடத்துகிற கல்லூரிகளில் பிராமண சமூகத்தைச் சேர்ந்தவர்களுக்கு மட்டும் இடம் கொடுக்கப்படுகிறது. எந்தச் சமூகத்தினர் கல்லூரி நடத்துகிறார்களோ அந்தச் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் தான் 100-க்கு 90 பேர் எடுத்துக் கொள்ளப்படுகிறார்கள். தனியார் பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் இதுதான் இன்றுள்ள நிலையை இப்படிப்பட்ட நிலைமைகளை ஒழிப்பதற்கு நிச்சயமாக கல்லூரிகளும் பள்ளிகளும் தேசியமயமாக்கப்பட வேண்டும்.

இன்றைய தினம் பலர் சொல்லுகிறார்கள் தமிழ்நாட்டில் குவாலிடி உயரவில்லை, குவாண்டிடி தான் உயர்ந்து கொண்டிருக்கிறது என்று. குவாலிடி இல்லை என்று சொல்வது பொருத்தமில்லை. இராமநாதபுரம் மாவட்டத்தில் பல அரசாங்கப் பள்ளிகளுக்குக் கட்டடங்கள் இல்லாமல், ஷிப்ட் ஒன்றியப் பள்ளிகள், ஆரம்பப் பள்ளிகள் மாட்டுக் கொட்டகைகளில், மாட்டுத் தொழுவங்களில் இருந்து கொண்டு வருகின்றன. ஷிப்ட் ஒன்றியங்கள் உயர்நிலைப் பள்ளிகளையும், ஆரம்பப் பள்ளிகளையும் கட்டாயமாக நல்ல கட்டடங்களில் வைப்பதற்கு அரசு உத்தரவிட வேண்டும். நேற்றைய தினம் கேள்வி நேரத்தின்போது ஒன்றைக் கல்வியமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவந்தேன். மல்லாங்கிணர் பஞ்சாயத்தில் 2,901 பேருக்காக தனியார் பள்ளிக்கூடத்திற்கு அனுமதிவழங்கப்பட்டிருக்கிறது. இதைப் பெண்கள் பள்ளிக்கூடமாகக் கொடுத்திருக்கலாம். இப்படி இருப்பதால் "டிப்ளிகேஷன் ஆப் ஸ்டாப்" ஆகிறது. இரண்டு பள்ளிகளிலும் இரண்டு துறைகள் எற்படுகின்றன. இப்படி எற்படுவதைத் தடுத்திருக்க வேண்டும். உயர்நிலைப் பள்ளிகளிலே கல்வியின் தரம் உயர்வாக இருந்தால்தான், கல்லூரிகளில் தரம் உயர்வாக இருக்கும். பி. டி. டிகிரியினிங்கில் சேர்த்துக்கொள்வதற்கு "பஸ்ட் கிளாஸ்", "செகண்ட் கிளாஸ்" அல்லது 300 மார்க்குகளுக்கு மேல் வாங்கியிருக்க வேண்டுமென்று (Secondary Grade Training) வைத்திருக்கிறார்கள். இதனால் எம்.பி.பி. எஸ் ஸீக்கு இடம் கிடைப்பதில் எவ்வளவு கஷ்டம் இருக்கிறதோ அவ்வளவு கஷ்டம் எற்படும். எம்.பி.பி.எஸ்.ஸீக்கு எப்படி மாநில அளவில் ஒரு தேர்வுக் கமிட்டி இருக்கிறதோ, அதே போல ஒரு கமிட்டி நியமிக்கப்பட்டு தேர்வு நடத்தப்பட வேண்டும் என்பதைக் கூறிக்கொள்கிறேன். தனியார் கல்லூரிகளில் பி.டி. கருத் தேர்வு செய்வதில் ஆயிரம், 500 ரூபாய் என்று வசூலிக்கப்படுகிறது. இதைத் தடுப்பதற்கு அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இன்னொன்றையும் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். இந்த ஆண்டு எஸ்.எஸ்.எல்.லியில் தேர்வு பெற்றவர்கள் இரண்டு லட்சம்பேராவார்கள். இவர்களில் பாதிப்பேர் ஸ்காலர்ஷிப் பெறுகிறவர்கள் ஆவர், பரிட்சைக் கட்டணம் கட்டாமல் பரிட்சை எழுதியவர்கள். மிச்சமுள்ள பாதிப்பேர் தலைக்கு 15 ரூபாய் என்று கட்டணம் கட்டியவர்கள். இவர்கள் சுமார் ஒரு லட்சம் பேராவார்கள். எனவே இவர்களுக்கும் அரசாங்கம் பரிட்சைக் கட்டணத்திலிருந்து விதி விலக்கு அளிக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்கிறேன். இது இன்றைக்குக் கேரள மாநிலத்திலே இருக்கிறது. எனவே தமிழ்நாடு அரசும் இந்த முறையைப் பின்பற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு இருக்கிற குற்றச்சாட்டெலாம் தரம் கெட்டு விட்டது, தரம் கெட்டு விட்டது என்பது தான். தரத்தைக் காப்பாற்றுவதற்கு ஆங்கில மொழி தேவை என்று கூறுகிறார்கள். லட்சுமணசாமி முதலியார், இராமசாமி முதலியார், சி.பி. இராமசாமி அய்யர் போன்றவர்கள் எல்லாம் ஆரம்பப் பள்ளிகளில் தாய் மொழி மூலம் படித்தவர்கள். அவர்கள் எல்லாம் திறலமையானவர்களாக இருந்திருக்கிறார்கள் என்றால், அற்குத் தாய்மொழியின் மூலம் உயர்நிலைப் பள்ளிகளில் கல்வி கற்றதுதான் காரணம். கல்லூரிகளில் போதனு மொழி ஆங்கிலத்திலும் இருக்கலாம் என்று நிபுணர் குழு தெரிவித்திருக்கிறார்கள். இதை நாம் எற்றுக் கொண்டிருக்கிறோம். தனியார் கல்லூரிகளிலும் தமிழ் போதனு

[திரு. எம். தங்கபாண்டியன்] [23rd July 1971

மொழி வகுப்புகள் இருக்க வேண்டுமென்று நிபுணர் குழு தெரிவித்து இருக்கிறது. இதற்கு அரசாங்கம் வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கூறி அமருகிறேன். வணக்கம்.

THIRU M. RAJAH IYER: Mr. Chairman, Sir, in deference to your command. I shall make the briefest speech ever made on the floor of this House. My task has been considerably lightened, Sir. For one thing, a very explanatory note prepared by the Education Department has been placed before the House and for the first time, the performance budgets, which are so impressive, from the various departments of education, School, Collegiate and Technical, have been placed before the House, explaining the targets set before the Department and the achievements made. I should endorse every word of what our hon. Friend Thiru Damodaran said and convey to the Departments our very great appreciation of the great work done by them to see that these achievements are brought nearer and that the amount set apart is properly utilised and efficiency in utilisation is assured.

I should also endorse the plea that my hon. Friend Thiru Damodaran made about the salary scales of B.T. Assistants. Since yesterday I have beenflooded with telegrams and even after entering the Chamber, I have received three telegrams asking us to take up that issue in the Assembly. In a few telegrams, it reads "Rake up this issue". I do not know whether it was the mistake of the Telegraph Department or whether the mistake emanated at the other end. So many telegrams from Associations of B.T. Assistants are overwhelming us that I am afraid that if I got any other telegram, I may put it by thinking that it is another telegram from B.T. Assistants. Such is the importance which the B.T. Assistants attach to the discussion this evening on the floor of this House. All the B.T. Assistants are eager and hopeful that something would come out of it; some welcome announcement would be made implementing the assurance that the Hon. the Chief Minister was graciously pleased to make, saying that their salaries would be upgraded. My hon. Friend Thiru Damodaran pointed out the reason why they should be raised. I would like to point out just one anomaly in salaries in educational institutions. There are Engineering Instructors who are handling Engineering subjects. They have got a Diploma in Electrical Engineering or Mechanical Engineering, by undergoing a three-year course, in a polytechnic after passing the S.S.L.C. and after an Oriental course, an apology for training for 8 weeks they get themselves trained as teachers for handling Engineering subjects. These Engineering Diplomates get Rs. 325 to Rs. 550, Rs. 50 more at the starting and Rs. 100 more at the other end, whereas the double-degree Graduates get Rs. 275 to Rs. 450. The work done by the Degree Graduate teachers does not stand any comparison to the work done by the Engineering Diplomates who have to take only about 10 to12 periods a week whereas the whole brunt of the school work has to be borne by the B.T. Assistants who are the linchpin of secondary education and the quality of secondary education depends upon their devotion and satisfaction. So their demand is not without reason. On this account, I do not want the Government to downgrade the salary of the Diplomates which has been appropriately fixed as Rs. 325 to Rs. 550. I very much appeal to the Government to take a quick decision in the matter and see that this arge section of teachers whose enthusiasm and devotion make such I mighty difference in the quality of school education are satisfied.

5-00 p.m.

I am extremely happy that so many pages of teacher-welfare measures have been printed here and handed over to us. I thank the Government and the Department for all that they have done. But, there are certain



23rd July 1971] [Thiru M. Rajah Iyer]

anomalies to be brought to the attention of the Department, like the retired teachers and their grievances. I may just point out two categories of these teachers who have still a grievance. One major category is the Graduate Assistants and the other is the retired teachers. There are teachers who retired prior to 1st June 1960, there are teachers who retired prior to 1st June 1970 and there are teachers who were superannuated after 1st June 1970. The teachers who retired after 1st June 1970 are still quite well-taken care of and the other teachers also require some consideration, as far as our financial conditions would allow and I am sure, Sir, that this problem would be set right.

I congratulate the Government on the bold step they took to upgrade the salaries of qualified Grade I Tamil Pandits and by reason of that, Grade II Tamil Pandits who are serving in Middle Schools and handling Standards VI to VIII, if they are qualified for I Grade, are given I Grade salary. I congratulate the Government most warmly, not because Tamil Pandits have got I Grade salary, but because I see in this the recognition of a very salutary and basic principle that the teachers should be paid according to their qualifications and not according to the classes that they handle. Doctors are not paid according to the ages of the patients they deal with. All people are paid according to the qualifications they possess and the Government of Tamil Nadu have implemented this principle in that the Tamil Pandit whether he teaches the 11th Standard or the 6th standard, whether he is here or there, if he is qualified to be a I Grade Pandit, gets the salary according to the qualifications and not according to the standards he teaches. I am very happy that theGovernment have set right another anomaly. A secondary grade teacher can now become a I Grade Pandit by getting a Vidwan Title, or if he obtains B.A. Degree or M.A. Degree in Tamil. There was a discrimination till now, most unjust and unfair, in that the secondary grade teacher, if he got a degree in Tamil, was not eligible to be I Grade Tamil Pandit. If he had the oriental Pulavar title, he could be I Grade Pandit. I am happy that the Government have accepted the recommendation saying that a Degree is not inferior to a diploma or oriental title; and a secondary-grade trained teacher, with a degree in Tamil, is today considered qualified to be a First Grade Tamil Pandit. I want the same principle to be extended to the other categories of teachers also. There may be B.T. Assistants handling Standards VI to VIII. They would not have been Degree holders when they entered service. These teachers have become qualified in the hard way and got a degree and have undergone the shortened B.T. course and they are full-fledged B. T. Assistants. The Second Grade Tamil Pandits, if they possess I Grade qualifications, are given the I Grade salary, Likewise, the Secondary Grade Teachers, if they possess B.T. qualification, but teaching Standards VI toVIII of the Middle schools, as they are called now, should be given the salary of B.T. Assistants. I am sure that the Government would extend the same concession to others also. We are so proud and our achievements in regard to enrolment and other things and our appreciation is due to the Department for thepro-mpt implementation of the various policies.

We have made Education free up to P.U.C. stage. I do not know why it should stop at that stage. Even though the Constitutional responsibility may be only to give compulsory and free education to our school children, we have gone a step further and have made education free up to P.U.C. stage. Why not take it to the next stage? I do not want the Government to make education free for all stu-

dents at the degree level. Let us take the first step by making it free to the children of the N.G.G.Os. and teachers, as the Government made it free in the school stage. They did not introduce free education in schools over-night. Firstly the Government made school education free for teachers' children and N.G.G.Os.' children and then slowly and gradually as our finances permitted us, we extended it by stages. I am sure we can do like that for the degree courses now.

All the money spent depends for its usefulness upon the administrative efficiency and I have seen nothing but enthusiasm on the part of the administrative personnel in implementing the policies of the Government. But we have to consider whether at the administrative inspectorate level, the junior deputy inspector would fit in. There are 126 of them and their qualification is only Secondary-grade training. I would like them to be sent to schools as teachers, so that the Inspectorate is manned only by degree-holders—Graduate Teachers.

I am very happy that we are setting apart a sizable amount for libraries ; but I think the grant of Rs. 30 to a primary school and Rs. 60 to middle school for libraries is an absurdity. What sort of library could be there for a sum of Rs. 60. At least a thousand rupees for a library is understandable. We are providing for the equipment of libraries in a hundred High Schools during 1971-72. But I am sorry to find that only 100 Government and Government (Board) High Schools—I hope all the aided Schools have been exhausted in the previous years—are to be provided with libraries and I find that a sum of Rs. 1,000 is provided for a High School. In the same way, a sum of Rs. 750 for a Middle School and Rs. 500 for a Primary School could be provided for. The library will not be useful unless we have an attender there. What is the use of stocking the books in the library to be eaten up by white-ants ? Unless there is an attender, the Library would not serve the purpose. In schools having 5,000 books or 10,000 books or whatever may be that figure, in the school libraries, it is reasonble that there should be the services of an attender. Otherwise the library would be only a museum and not a library.

I am grateful to the Government for having introduced the posts of Gazetted Headmasters in Government (Board) Schools. About 80 of them are introduced. I want to point out one thing. The principal difficulty that may arise in the introduction of the Gazetted Headmasters is that the posts are not equitably distributed and they cannot be equitably distributed among all the districts in the State. Now about 12 or 14 of them are in one district, say, Salem. I cannot conceive that so many of them could be from one and the same district. Some will come to Salem from other districts. When those Gazetted Headmasters come from other districts to man those schools, the Headmasters who have been manning those schools—say, about 10 of them—in Salem district would have to be ousted. Those Headmasters should not be ousted and this imbalance must somehow or other be set right by allowing those Headmasters to continue as Assistant Headmasters on a par with the Headmasters in those big schools. Otherwise, it would lead to chaotic conditions where people who have worked as Headmasters of District Board Schools for quite a long time have got to be ousted.



I find that there are only 42 pre-primary schools in our State. I would plead for more pre-primary schools being started under the aegis of the Government or Municipalities or Panchayat Unions. My hon. Friend Thiru Thangapandian made a pointed reference to the Panchayat Unions' responsibility for education. Even here, even though our constitutional responsibility is to give education only to children above the age of six, we can go a step further and start pre-primary schools. We have got some sort of Balwadis conducted by Panchayat Unions but they do not serve the purpose. Mushroom nursery schools are springing up and the rates they levy are something exorbitant. My own grandchild in Virugambakkam cannot be sent to a nursery school, because they demand Rs. 50 for admission and a high monthly fee, and it is far beyond the means of the lower middle class families to have the luxury of paying Rs. 50 per month. But, then, education at that stage is necessary.

(The Chairman sounded the gong ).

A couple of minutes more Sir.

5-10 P.M.

MR. CHAIRMAN : The hon. Member has already taken fifteen minutes.

THIRU M. RAJAH IYER : Just 120 seconds' duration more Sir.

Yesterday, Sir, during question time, I could not make a point quite clear. Out of 31,881 elementary schools, 5,944 schools are middle schools. Now that we have designated them as middle schools, why should not the teachers in these schools have the same privilege as teachers in VI, VII and VIII Standards in High Schools in the matter of exercising their franchise ? The middle school teachers including the teachers in schools that were formerly called higher elementary schools or Senior Basic Schools can be enfranchised by us.

In the opening of new schools, my hon. Friend Thiru Thangapandian referred to a point that aided Schools should not be permitted to be started where there was a Government School. I would like to point out that where there is one Government High School, we start another Government High School nearby and this unfortunate frittering away of our resources is quite unjustifiable. An aided school would have to find a sum of Rupees one lakh by way of endowment and it is not as if an aided school can be started for a song, as it was made to appear. For building and equipment they have to find matching grants and, therefore the restrictions in their case are strict and we have been increasing them to such a large extent that efficiency cannot suffer by the starting of an aided school. I, therefore, feel that there should be some restrictions on the starting of Government Schools.

The Panchayat Union teachers have not been paid their salaries for months. If all Panchayat Union employees have not been paid, it is a different matter. Unfortunately, in very many Panchayat Unions, the other employees get paid and the Panchayat Union teachers alone have not been paid for a number of months. I find there was a Commission whose report is under the active consi-

[Thiru M. Rajah Iyer] [23rd July 1971

deration of the Government. I hope the Government will take a very quick decision in the matter and see to it that Panchayat Union teachers are paid on the first of every month. A teacher has got to be satisfied, if he has to perform his duty quite normally and getting the salary paid on the first day of the month is not too much to pray for and I hope this sort of discrepancy between one section of employees and another section of employees in the payment of salary will be set right.

One word more and I have done. We are grateful to the Government for having reduced the rigour behind the Apprentice Teacher Scheme. The conditions laid down there are very sound, very reasonable, and just. There are three preferences laid down to which people cannot possibly take exception. Trained teachers are provided for under the un-employment relief scheme on a lower salary and when a vacancy arises, it is but just and fair that these teachers are given preference in the matter of appointment in regular vacancies. There is a small restriction about appointing qualified teachers who completed their training in or before 1970. I would like that restriction to be removed, so that a fully qualified teacher, whatever may be the year in which he got the training, may be appointed in such vacancies. Otherwise, very brilliant men who came out of the training colleges in 1971 will have to wait till the last mediocrity who had been trained in 1966 or 1965 gets appointed. I know a number of cases where there are exceptionally excellent material that has just come out of the colleges waiting to be appointed and this restriction of 1970 as the latest year in which they must have attained the qualifications is a very rigid restriction. If this rigidity is removed, we would all be grateful to the Government, Sir.

திரு. டி. கே. சுப்பையா : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கல்வியின் தரம் மேலும் முன்னேறுவதற்கு என்னுடைய கருத்தைச் சொல்ல ஆசைப்படுகிறேன். குறிப்பாக இப்படிப்பட்ட அறிக்கையினைத்தயாரிக்கும்போது, புள்ளி விவரங்களை ஆராயும்போது அவை எந்த அளவிற்கு அக்கறையோடு ஊன்றி கணக்கிடப்படுகின்றன என்பதையொட்டிப் பார்ப்பது வசதியாக இருக்கிறது. அப்படிப் பார்ப்போமானால், 1959–60-ல் கல்விக்குச்செலவு செய்யப்பட்டது ரூ. 15·15 கோடி. 1971–72-ல் கல்விக்காகச் செலவு செய்யப்படுவது ரூ. 81·84 கோடியாகும். எறத்தாழ இதைப் பார்த்தவுடனே ஒரு பெரிய எழுச்சி எழும்பக் கூடும். ஆனால் அதே நேரத்தில் 1959–60-ல் இந்த மாநிலத்தினுடைய வருவாய் என்ன, 1971–72-ல் வருவாய் என்ன என்று ஒப்பிட்டு கணக்கிட்டுப் பார்த்தால், எந்த விகிதாசாரத்தில் இந்தத்தொகை ஒதுக்கப்படுகிறது என்ற விவரங்களை நாம் அறிய முடியும். பள்ளிக்கூடங்களின் எண்ணிக்கையைக் குறிப்பிடும்போது, அறிக்கையிலே 1966–67-லிருந்து கணக்கிடப்படுகிறது. ஒப்பிடும்போது 1959–60-லிருந்து ஆரம்பிக்கப்பட்டிருக்க வேண்டும் அல்லது நாடு விடுதலை அடைந்த காலத்திலிருந்து தயார் செய்யப்பட்டிருக்க வேண்டும். அல்லது 1952-லிருந்து, நாட்டில் முதல் பொதுத் தேர்தல் நடைபெற்று அரசாங்கம் எற்பட்ட காலத்திலிருந்து, தொடங்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால் அப்படிக் கொடுக்காமல் ஒரு கணக்கைக் கொடுத்திருப்பது என் என்று அறிய விரும்புகிறேன். 1966–67-க்கு முன்னிருந்த நிலையைக் கணக்கிடாமல் இப்போது உள்ள நிலைமையை மட்டும் கணக்கிட்டுப்பார்த்தால், முன்னேற்றம் அடைந்து விட்டது என்று சொல்ல முடியுமா ? பல்தொழில் பயிற்சிப் பள்ளிகள் 1966–67-ல் 35. 1970–71-ல் அதே 35 தான். பொறியியல் கல்லூரிகள் 12 ஆக இருந்தது அதே 12. தொழில் நுட்ப உயர்நிலைப் பள்ளிகள் 15 ஆக இருந்தது ஒன்று குறைந்து 14 ஆக ஆகியிருக்கிறது. இந்த நிலையை



23rd July 1971] [திரு. டி.கே. சுப்பையா]

ஒப்பிட்டுப் பார்க்கும்போது எதோ ரூபாய் அணு பைசாக் கணக்கில் அதிகமாகச் செலவு செய்வதாக ஒப்பிடக்கூடாது. கல்வித் தரத்தில் நாம் எவ்விதம் உயர்ந்திருக்கிறோம் என்பதை ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும். உயர்நிலைப் பள்ளிகள் எத்தனை அமைத்திருக்கிறோம், அவைகளில் தரம் எப்படி இருக்கிறது என்று ஒப்பிட்டுக் காட்டினால் தான், நாம் எப்படி முன்னேறியிருக்கிறோம் என்று சொல்ல முடியும். பள்ளிக் கூட அபிவிருத்தி எந்த அளவிற்கு அடைந்திருக்கிறோம் என்பதைக் கணக்கிடும்போது, ஆரம்பப் பள்ளிகளிலும், உயர்நிலைப்பள்ளிகளிலும் தரத்தில் கவனம் செலுத்த வேண்டுமென்று வலியுறுத்திச் சொல்ல ஆசைப்படுகிறேன். குறிப்பாக என்னைப் பொறுத்த வரையிலே, கலவியின் தரம் உயர்வதற்கு, பள்ளிக்கூடங்களின் நிலைமைகள் உயர வேண்டும். கட்டிடங்கள் கட்டுவதற்கு அரசாங்கம் எற்பாடு செய்ய வேண்டும்.

(Deputy Chairman in the chair.)

எலிமெண்டரி பள்ளிக்கூடம், தொடக்கப் பள்ளிக் கட்டடம் கட்டுவதற்கு ஊராட்சி ஒன்றியம் 1970–71-ல் ரூ. 10 லட்சமும், தற்போது ரூ. 15·8 லட்சமும், ஊராட்சி ஒன்றியப் பகுதிக்கு 1970–71-ல் ரூ. 27 லட்சமும், அது இப்போது உயர்த்தப்பட்டிருப்பது 34·30 லட்சமும், கிராமப் பகுதிக்கு 10 லட்சமாக இருந்தது ரூ. 18·80 லட்சமாக, 1½ பங்கு அதிகரித்திருக்கிறது. ஆனால் இந்தக் கிராமப் பகுதிக்கு விகிதாசாரத்தைப் பார்த்தால், 27-ம் 13-ம் சேர்த்து ரூ. 40 லட்சமாக எறியிருக்க வேண்டும். ஆனால் இப்போது கொடுக்கப்பட்டிருப்பது ரூ. 7·30 லட்சம் தான் கூடியிருக்கிறது. ஆனால் பின்னால் பள்ளிக்கூடக் கட்டட அமைப்பில் பார்க்கிறபோது, சமுதாய நிலையில் பின்னால் உருவாக்கப்பட்டிருக்கிறது. இந்த நிலையைப் பார்க்கும்போது, இந்தப் பள்ளிக்கூடத்தைக் கிராமப் பகுதியில் கட்டும்போது, சமுதாயப் பகுதி வந்தாலும் கூட, ஒரு பகுதி கிராமத் தாரும், பஞ்சாயத்தாரும் கொடுத்தால்தான் முடியும். அந்த அளவு இப்போது மிகவும் குறைந்திருக்கிறது. எதற்குப் பார்த்தாலும் மக்களே ஒரு பகுதி கொடுக்கவேண்டியிருக்கிறபோது, மிகவும் கஷ்டமான நிலை எற்படுகிறது. எத்தனை உயர்நிலைப் பள்ளிகள், கல்லூரிகள் திறந்தாலும், இந்த ஆரம்பப் பள்ளிகளில் விசேஷமான கவனம் செலுத்த வேண்டும். அதைப் பெருமையோடு சொல்லிக்கொள்கிறேன். 300 பேர் ஜனத்தொகையுள்ள ஊர்களுக்கெல்லாம் பள்ளிக்கூடம் எற்படுத்தி விட்டோம். ஆனால் ஓராசிரியர் பள்ளிக்கூடம் ஆரம்பிக்கிறபோது, யாரோ ஒருவர் கொடுத்த இடத்தில் அதைத் திறந்து விட்டோம் அவசரம் காரணமாக. ஆனால் அந்தக் கட்டடங்கள் பூர்த்தியாவதற்கு எந்தவிதமான முடிவும் எற்படவில்லை. அதற்குத் தகுந்த பரிகாரம் காணவேண்டும். இன்னமும் அந்தப் பள்ளி ஆசிரியர்களுக்குப் பல வேலைகளைக் கொடுத்துவருகிறோம். மதிய உணவு வேலையையும் அவர்கள் கையில் கொடுத்திருப்பது நல்ல தல்ல. அதை ஆசிரியர்களும் விரும்பவில்லை. பொது மக்களும் விரும்பவில்லை. திட்டம் நன்றாக இருந்தாலும் கூட, வெற்றிகரமாக நடக்கவில்லை. நம்மை நாமே எமாற்றிக்கொள்ளத்தான் இருக்கிறது. அதற்கு நேர்மாறாக 10 பைசா கொடுத்தால் தான் முடியும் என்று இருக்கிறபோது, அரசாங்கம் 6 பைசா கொடுக்கிறது. இன்னும் 4 பைசா தேவை. அதை ஊராட்சி மன்றம் கொடுக்க வேண்டும். இரண்டு பைசா பிள்ளைகள் கொடுக்க வேண்டும் என்ற நிலை இருக்கிறபோது, அது அவர்களால் முடியவில்லை. ஆசிரியர்கள் இந்த 6 பைசாவைச் சரிக்கட்ட, தவறான கணக்குக் கொடுக்கிறார்கள். 6 பைசா கொடுக்கக்கூடிய அரசே இன்னும் ஒரு 4 பைசா கொடுத்து ஹரிஜன வெல்பேர் டிபார்ட்மெண்டால் நடக்கும் பள்ளிகளில் எப்படி கண்டிராக்டர் மூலம் கொடுத்து, அவர்களே அந்தப பணத்தை வசூல் செய்துகொள்ளுகிறார்களோ அதைப் போன்று கையாண்டால்தான் பள்ளி ஆசிரியர்களுக்கு விடுதலை. பள்ளி வேலைகளை விடுத்து பொது வேலைக்குத் தூண்டுவது நல்லதல்ல.

அடுத்தபடியாக, நமக்கு இருக்கக்கூடிய பொருளாதார நிலையிலே வகுப்பில் மாணவர்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்த வேண்டிய நிலை இருக்கிறது. அதை நான் ஒப்புக்கொள்கிறேன். இருந்தாலும்

[திரு. டி. கே. சுப்பையர்] [23rd July 1971

கூட, ஒராசிரியர் ஆரம்பப் பள்ளியிலே ஒவ்வொரு ஆசிரியர்களுக்கும் 15 மாணவர்கள் இருந்தால் நல்லது அல்லது 20 பிள்ளைகளாவது இருக்க வேண்டும். சிறு பிள்ளைகள் போர்டையே பார்த்துக் கொண்டிருக்க முடியாது. ஒரு பிள்ளை இன்னொரு பிள்ளையின் புத்தகத்தைக் கிழிக்கும். இன்னொரு பிள்ளை ஏதாவது செய்யும். அந்த ஆசிரியர் கண்காணிக்க வேண்டுமென்றால், மேலே சொன்ன மாதிரி இருக்க வேண்டும். ஒன்று முதல் மூன்றாவது வகுப்பு வரையில் பெண் ஆசிரியரையே நியமனம் செய்துவிட்டால் மிகவும் நல்லது. இந்தச் சிறிய கருத்தைக் கொண்டு, கல்வி வளர்ச்சியை மேலும் உறுதிணையாக்க ஆவனசெய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, பள்ளிகளில் எதற்கெடுத்தாலும் நிதி வசூல் செய்வதை ஆசிரியர்களிடமும், மாணவர்களிடமும் ஒப்புவிப்பது நல்லதல்ல. பிச்சைக்காரர் மறுவாழ்வு நிதிக்குக் கூட அந்தக் கார்டுகளெல்லாம் அந்தப் பிள்ளைகளிடம் கொடுத்து வசூல் செய்கிறார்கள். ஆசிரியர்கள் பிள்ளைகளை நிர்பந்திக்கிறார்கள். பிள்ளைகள் பெற்றோர்களை நிர்பந்திக்கிறார்கள். நாம் எல்லாம் சேர்ந்தாலே இதை வசூல் செய்து விட முடியும் என்று சொல்லி முடித்துக்கொள்கிறேன்.

* திரு. எம். சங்கரலிங்கம் பிள்ளை : தலைவரவர்களே, இந்தக் கல்வி மானிய விவாதத்தில் நான் முதலில் நமது அரசு கல்விக்காக மொத்த ரெவினியூவில் ரூ. 81 கோடி ஒதுக்கியிருப்பதைப் பாராட்டுகிறேன். முதலில் நிதிநிலை அறிக்கை மீது பேசியபோது கன்னியாகுமரி மாவட்டத்தில் ஆசிரியர்களுக்கு ஏற்பட்டிருந்த சிக்கலை அகற்றியதற்கு, இந்த அரசு எடுத்துக்கொண்ட நடவடிக்கைக்கு நன்றி தெரிவித்தேன். அதை இப்போதும் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். காலம் இல்லாததால் ஒரு வார்த்தையில் குறிப்பிட்டு விடுகிறேன்.

உண்மையில் நமது கல்வி மானியக் கோரிக்கை அகில இந்திய கல்வி வரலாற்றிலேயே ஒரு புதுமையையும், புரட்சியையும் ஏற்படுத்தியிருக்கிறது என்பதை ஒப்புக்கொண்டாக வேண்டும். காரணம் கல்வி என்றாலே ஆசிரியர்களை மதித்து ஆசிரியர்களால் கல்வி நடைபெறுகிறது என்ற கொள்கையை இந்த அறிக்கை ஒப்புக் கொண்டிருக்கிறது. இதுவரையில் இல்லாத நிலையில் எல்லா ஆசிரியர்களுக்கும் தேர்வு நிலை அளித்திருக்கிறோம். ஆரம்ப ஆசிரியர்களுக்கும் தேர்வு நிலை கொடுத்திருக்கிறோம். நடுத்தரப் பள்ளி ஆசிரியர்களுக்கும் கொடுத்திருக்கிறோம். பட்டதாரி ஆசிரியர்களுக்கும் பர்ஸ்ட் கிரேட், செலக்ஷன் கிரேட், கெஜட் ரேங்க் கொடுத்திருக்கிறோம். அதுபோலவே தமிழாசிரியர்களுக்கும் மொழி யாசிரியர்களுக்கும் எல்லோருக்கும் ஒரு சதவிகிதத்திற்கு செலக்ஷன் கிரேடு கொடுத்திருக்கிறோம். இது உண்மையில் நமது மாநில அரசு செய்த கல்விப் புரட்சியாகும். குறிப்பாக நமது கல்வியமைச்சரவர்கள் கல்வித் துறையிலே மேதையாக விளங்குகிறார். கல்வியில் நிபுணராக இருக்கிற அவர் இன்றைய நிலையில் இந்திய மாநிலங்களுக்கு வழிகாட்டியாக இருக்கிறார். இந்த மாமன்றத்தில் பலமுறை பேசுகிறபோது, திருவாங்கூர்-கொச்சியில் இருக்கிற தமிழாசிரியர்களுக்கு "செலக்ஷன் கிரேட்" கொடுத்திருக்கிறார்கள், அதை இங்கேயும் கொடுக்க வேண்டுமென்று சொன்னேன். இன்று அதைக் கொடுத்ததற்குப் பாராட்டுத் தெரிவிக்கும் நிலை ஏற்பட்டிருக்கிறது என்று சொல்லிக்கொண்டு அடுத்தபடியாக கல்வித் துறையில் இன்னும் சிறந்த பயிற்சியைத் தருவதற்கு அரசு மிகத் துணிவாக முன்வர வேண்டுமென்று ஒரு வேண்டுகோளை விடுகிறேன். ஜாதியின் பெயரால், சமுதாயத்தின் பெயரால் இனிமேல் கல்விக் கூடங்கள் தோன்றக் கூடாது என்று நாம் உறுதி கொள்ள வேண்டும். இந்த நிலையில் கூட பல கல்லூரிகள் ஜாதியின் பெயரால் தொடங்கப்பட்டிருக்கின்றன. அதைப் பற்றிக் கேட்டால், ஜாதியைச் சொன்னால் தான் பணம் கிடைக்கிறது என்று சொல்கிறார்கள். ஜாதியின் பெயரைச் சொல்லி இளம் உள்ளங்களில் ஜாதி சமுதாயப் பூசல்களை விதைத்து விட்டால், என்னவாகும் என்பதைச் சிந்திக்க வேண்டும்.



23rd July 1971] [திரு. எம். சங்கரலிங்கம் பிள்ளை]

நண்பர் திரு. ஆறுமுகசாமி நேற்று நடந்த விவாதத்தில், தஞ்சையில் ஒரு பள்ளியில் ஜாதி அடிப்படையில் ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டிருப்பதால், உயர்ந்த ஜாதி என்று சொல்லுகிறவர்கள் தங்கள் மாணவர்களை அந்தப் பள்ளிக்கு அனுப்ப தயாராகவில்லை என்று சொன்னார்கள். அது ஒரு "பனிஷ்மெண்ட் ஏரியா" என்று சொன்னார்கள். என்ன காரணத்தினால் என்று தெரியவில்லை. ஜாதியின் பெயரால் இந்த நாட்டில் நடக்கிற கொடுமைகளைக் களைய வேண்டும்.

இதனை ஒழிக்க ஒரே ஒரு வழி கல்விப் பொறுப்பை அரசு முழு அளவில் தன் கையில் எடுத்துக் கொள்ளவேண்டும். கல்வியைத் தேசிய மயமாக்க வேண்டும். இல்லாது மற்றத் துறைகளைத் தேசிய மயமாக்கும் நேரத்தில் நாட்டை, வருங்கால சமூகத்தை உருவாக்கும் கல்வித் துறையைச் சேர்ந்த அத்துணைப் பள்ளிகளையும் அரசுப் பள்ளிகளாக ஆக்க வேண்டும். யார் எப்படி, எப்போது ஆரம்பித்திருந்தாலும பரவாயில்லை. நான் சொல்கிறேன், நான் சென்ற ஆண்டு ஆரம்பித்த கல்லூரி 5 பட்ட வகுப்புகளைக் கொண்ட கல்லூரியாக மாறபெறுகிறது. அந்தக் கல்லூரியிலே 5 லட்ச ரூபாய் எண்டோமெண்டாகவும் 3 லட்ச ரூபாய் எக்விப் மெண்டிற்காகவும், இன்னும் வேண்டுமானால் இரண்டு மூன்று ஆண்டுகள் பல லட்ச ரூபாய் செலவழித்த பிறகு, இந்த நாட்டிலுள்ள எல்லாக் கல்லூரிகளும் அரசுக கல்லூரிகளாக ஆக்கப்படுமானால், முதலில் நான் என் கல்லூரியை அரசுக்கு விட்டுத் தரத் தயாராயிருக்கிறேன். நாட்டில் நடக்கிற அத்தனை கல்லூரிகளுக்கும், பள்ளிகளுக்கும் அரசே மானியம் வழங்குகிறது. அப்படி வழங்குகிறபோது, பல பள்ளிகளைப் பஞ்சாயத்து யூனியன்களும், நகர மன்றங்களும் நடத்துகிறார்கள். பல நகர மன்றங்கள் பள்ளிகள் தங்களிடம் வேண்டாமென்று சொல்கிறார்கள். ஆனால் பஞ்சாயத்து யூனியன்கள் வேண்டாமென்று சொல்லவில்லை. பஞ்சாயத்து யூனியன் தலைவராக உள்ள திரு. தங்கபாண்டியனை அவர்கள் அவருடைய யூனியனில் மாத்திரம் பள்ளிகளே வேண்டாமென்று சொல்வதற்காக நான் பாராட்டைத் தெரிவித்துக்கொள்கிறேன். பல பஞ்சாயத்து யூனியன்களில் ஆசிரியர்கள் எல்லாம் அவர்கள் பிள்ளைகள் இருக்க வேண்டுமென்று நினைக்கிறார்கள். அவர்களைக் கண்டு பயப்பட வேண்டுமென்று நினைக்கின்ற சூழ்நிலை இருக்கின்றது. அதனால் அவர்கள் பள்ளிகள் வேண்டாமென்று சொல்லவில்லை.

இந்த கல்வித் துறையிலே நாம் பல முன்னேற்றங்களைக் கண்டிருக்கிறோம். என்னுடைய கல்லூரியிலிருந்த ஒரு ஆசிரியர், ஆங்கிலத் துறையில் பணியாற்றிக் கொண்டிருக்கிற ஆசிரியர் இந்தப் புதிய சம்பள விகிதத்தில் 530 ரூபாய் சம்பளம் வாங்குகிற அவர் கேரளாவைச் சேர்ந்தவர் என்ற காரணத்தினால் கேரளாவில் டியூடராக ஆவதற்கு கேரள பப்ளிக் சர்வீஸ் கமிஷனுக்குப் போகிறார். அவருக்கு வந்த ஆர்டரில் 190 ரூபாய் சம்பளம் பிளஸ் அலவன்ஸ் என்ற விகிதத்தில் கொடுத்திருக்கிறார்கள். தமிழக அரசு எவ்வளவு புரட்சிகரமான மாறுதலைச் செய்திருக்கிறது என்பதற்காக இதைச் சொல்கிறேன். தமிழகத்தில் வேலை பார்க்கிற ஒரு ஆங்கில விரிவுரையாளருக்கு 530 ரூபாய் சம்பளம். ஆனால் அங்கே பார்க்கிற போது 190 ரூபாய் பிளஸ் அலவன்ஸ். அவர் சொந்த ஊரில் உள்ள கல்லூரி என்பதற்காகவும், சொந்த அரசுக் கல்லூரி என்பதற்காகவும் அங்கே போகிறார். அந்த அளவிற்கு ஆசிரியர்களுக்கு வாரி வழங்கி, தரங்களையெல்லாம் உயர்த்தி முன்னேறச் செய்திருக்கிற நாம் இன்னும் பெரிய முன்னேற்றங்களைச் செய்வதற்குத் துணிய வேண்டுமென்று அரசைக் கேட்டுக்கொள்கிறேன். இதிலே பெரிய எதிர்ப்பு வரலாம். உண்மையில் பலர் பள்ளிகளை வைத்துத் தான் வாழ்கிறார்கள் பல நிர்வாகிகள் பள்ளிகளையே தங்களுடைய வாழ்வுக்குரிய இடமாக ஆக்கிக்கொண்டார்கள். அப்படிப்பட்ட பலரின் பேரைச் சொல்லிச் சொல்ல முடியும். ஆனால் நேரமில்லை. சில ஆரம்பப் பள்ளிகளில் ஒரு ஆசிரியர் நிர்வாகியாக இருந்து கொண்டு ஆசிரியர்கள் சம்பளத்தில் 20 ரூபாய், 30 ரூபாய் என்று பிடித்துக்கொள்கிறார்கள். அவர்கள் அந்த ஆசிரியர்களிடம் ரெசிக்னேஷன் லெட்டர்களை முன்கூட்டியே வாங்கி வைத்திருக்

5-30 p.m.

இருக்கிறார்கள். இந்த மாதிரி நிலைகளையும் வழிகளையும் ஆய்வுக் குழுவில் நாம் ஆராய்ந்து, பரிசீலனை செய்து, சிபார்சு செய்திருக்கிறோம். என் நண்பர் ஒருவர் எல்லாக் குழுக்களின் அறிக்கையும் புத்தக வடிவில் வந்திருக்கிற மாதிரி ஆசிரியர் பதவி பாதுகாப்புக் குழு அறிக்கை எப்போது வரும் என்று கேட்டார். அவைகளெல்லாம் அறிக்கைகளாக புத்தக வடிவில் வந்திருக்கின்றன. ஆனால் இந்தக் குழுவின் அறிக்கை சட்டம் மாதிரி வரும் என்று சொன்னேன். சட்டமாக வந்து விடும் போலிருக்கிறது, சட்டமாக வரக் காத்திருக்கிறது என்று சொன்னேன். உண்மையில் அதைக் கல்விச் சட்டமாக, ஸ்டேச்சுட்டரி ஆக்டாக ஆக்க வேண்டும். ஒவ்வொரு பள்ளியையும் அரசுப் பள்ளியாக ஆக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சர். சி. பி. ராமசாமி அய்யர் 1947-இல் சென்னைக்கு வந்துவிட்டார். 1947-க்கு முன்னால் திருவாங்கூர் ராஜ்ய சுதேச மன்னருடைய அமைச்சராக இருந்தபோது, தென் மாவட்டத்திலுள்ள மூன்று மாவட்டங்களிலுமுள்ள அத்தனை ஆரம்பப் பள்ளிகளையும் அரசு எடுத்துக்கொள்கிறது என்று சொன்னார். அதற்குப் பெரிய எதிர்ப்புக் கிளம்பியது. பிஷப்புகள் எதிர்த்தார்கள். நவமணி என்ற பாதிரியார் அதை எதிர்த்தார். அவருக்குச் சென்னையில் பல பாராட்டுக் கூட்டங்கள் நடந்திருக்கின்றன. அவைகளில் நானும் கலந்துகொண்டிருக்கிறேன். அப்போது அவர் அழகாபுரத்திலிருந்த பள்ளியில் கைது செய்யப்பட்டு சிறைச்சாலையில் மூன்று நாட்கள் வைக்கப்பட்டார். அப்படி வைக்கப்பட்ட பிறகு, அத்தனை கத்தோலிக்க சாமியார்களும் பள்ளிகளை விட்டு விட்டார்கள். தனியார் பள்ளிகள் அரசுப் பள்ளிகளாக ஆகிவிட்டன. ஒரு பள்ளி ஒரு சமயத்தைப் போதிப்பது, இன்னொரு பள்ளி இன்னொரு சமயத்தைப் போதிப்பது, ஒரு பள்ளி ஒரு ஜாதியைப்பற்றிச் சொல்வது என்ற இந்த நிலையில்லாமல், கல்வி இளம் சிறார்களுடைய உள்ளத்தில் விதைக்கப்படுகிறபோது அது இந்த நாடு வருங்காலத்தில் எவ்வாறு இருக்க வேண்டுமென்று நாட்டினர் கருதுகிறார்களோ, பெரும் தலைவர்கள் கருதுகிறார்களோ அந்த நிலையில் கல்வியை உருவாக்க, அதை சிறார்கள் உள்ளத்தில் பதிய வைக்க வேண்டும். இதைத் தவிர வேறு வழி கிடையாது. ஆனால் இதைத் தமிழகம் நாட்டிற்கு வழிகாட்டியாக முதலில் செய்ய வேண்டும். இதற்கு எதிர்ப்பு இருக்குமானால், ஆசிரியர் சமூகம் அரசுக்குப் பின்னால் உறு துணையாக நின்று வரும் எதிர்ப்பிற்கு ஈடு கொடுக்கும் என்று ஆசிரியர் சார்பில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்தாற்போல, உயர் கல்வியைப் பொறுத்த அளவிலே, இப்போது பல கல்லூரிகளை மிகுதியாகப் பெருக்கியிருக்கிறோம். நாம் கல்வியில் கண்டிருக்கிற பெரும் வளர்ச்சி கழிந்த 3, 4 ஆண்டுகளில் எவ்வளவு என்று வரையறுத்துச் சொல்ல முடியாது. அத்தகைய அளவு வளர்ச்சி பெற்றிருக்கிறோம். 4 ஆண்டுகளுக்குள்ளாக கன்னியாகுமரி மாவட்டத்தில் 13 கல்லூரிகளைத் தொடங்கியிருக்கிறோம். அதில் நாம் தொடங்கிய கல்லூரிகள் இரண்டு. எதற்காக இவ்வாறு செய்யப்பட்டது என்று சொன்னால், ஒரு ப்ரி யூனிவர்சிடி மாணவனுக்கு 300 ரூபாய் கொடுத்தால் தான், அட்மிஷன் கிடைக்குமென்ற நிலை இருந்தது. இந்த 13 கல்லூரிகள் திறந்த பிறகு தான், இப்போது ப்ரி யூனிவர்சிடி மாணவனிடம் நிர்வாகிகள் கையேந்தவில்லை. இன்னும் பி.எஸ்.வி. மாணவர்களிடத்தில் கையேந்திக்கொண்டிருக்கிறார்கள். இந்த நிலை அகன்று விடுமென்று நம்புகிறேன். உயர் கல்விக்காக அரசு மானியம் வழங்குகிறது. இதை நிறுத்திவிட்டு, ஆசிரியர்களுக்கு நேரடியாகச் சம்பளம் கொடுக்க வேண்டுமென்று வேண்டிக்கொள்கிறேன். நான் கல்லூரியை நடத்திலும் கூட, இதைச் சொல்கிறேன். எங்களுக்கு மானியம் தருவது எங்களுக்கு நன்மைதான். பழைய கல்லூரிகளுக்கு அரசு ப்ரி யூனிவர்சிடி மாணவனுக்கு 80 ரூபாய் ஒரு டர்முக்கு, அதாவது ஒரு வருஷத்திற்கு 240 ரூபாய் கொடுக்கிறது. புதிய கல்லூரிகளுக்கு 150 ரூபாய் கொடுக்கிறது. அதை 80 ரூபாய் ஆக்க வேண்டும். என்னுடைய வேண்டுகோள் பழைய கல்லூரிகளுக்கு இருப்பது போல புதிய கல்லூரிகளுக்கும் 80 ரூபாய் தான் கொடுக்க வேண்டும். ஆனால் என்னுடைய வேண்டுகோள் இந்த மானியத்தை நிரந்தரமாக வழங்கவேண்டிய தேவையில்லை. அரசே நேரடியாக ஆசிரியர்களுக்குச் சம்பளம் கொடுக்கட்டும். மானியம் வழங்க வேண்டியதில்லை. அரசு 240 ரூபாய் ஒரு ஆண்டுக்குத் தந்து விட்டு, நஷ்ட ஈடாக எங்களுடைய வரவுக் கணக்கில் 90 ரூபாய் தான் வரவு வைத்துக்கொள்கிறார்கள். பற்றுக்குறையில் மூன்றில் இரண்டு பங்கை அரசு மானியமாகத் தருகிறது. இதைப் பார்க்கிற போது, 240 ரூபாய் தந்து விட்டு, 90 ரூபாய் ஸ்டேண்டார்டு ரேட்டாக வைத்துக்கொண்டு, அப்படி தருகிற இந்தக் கணக்கையெல்லாம் நீங்கள் பார்த்தீர்கள் என்றால், தனியார் கல்லூரிகளுக்கு அரசு கொடுக்கிற இந்த மானியத் தொகையை வைத்துக்கொண்டு அரசே நேரடியாகச் சம்பளம் கொடுத்தாலும் பெரும் பணச் செலவு வராது என்று நம்புகிறேன். தனியார்கள் கல்லூரிகளை எங்கெல்லாம் ஆரம்பிக்கிறார்களோ, அங்கெல்லாம் அவர்களே கட்டிடங்களைக் கட்டட்டும், எக்விப்மெண்ட்ஸ் வாங்கட்டும், எண்டவுமெண்டு கொடுக்கட்டும். கொஞ்ச நாட்கள் பொறுத்து எல்லாக் கல்லூரிகளையும் அரசு எடுக்கலாம். கல்லூரிகளைக் கொஞ்ச நாட்கள் விட்டாலும், ஆரம்பப் பள்ளிகளை உடனடியாகத் தேசிய மயமாக்க வேண்டும். கல்லூரிகளில் தனியார் பணம் அதிக அளவிலே விழுகிற அளவிற்கு இருக்கச் செய்து, பொதுமக்கள் பணம் என்று வந்த பிறகு, அரசு எடுத்துக்கொண்டால், பொதுமக்கள் பணத்தை, உரிமையை நிர்வகிக்க, பாதுகாக்க அரசு எடுத்துக் கொள்கிறது, பொதுமக்கள் எடுத்துக் கொள்கிறார்கள் என்று பொருள். அதனால் தனியார் கல்லூரிகளை அரசு எடுத்துக்கொள்கிறது என்றவுடனே, பொதுமக்கள் எடுத்துக்கொள்கிறார்கள் என்ற கருத்தே தவிர, வேறு அல்ல என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் வலியுறுத்திக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

இன்னும் இரண்டொரு நிமிடங்களில் முடித்துவிடுகிறேன். தலைவர்கள் மணியைப் பார்க்கிறபோது, பயமாக இருக்கிறது. காலையிலிருந்து இந்த மானியக் கோரிக்கையை இரண்டு நாட்கள் வைத்துக் கொள்ள வேண்டும்; மற்ற மருத்துவம் போன்றவற்றைப் பற்றிப் பேசுவதற்கு இவ்வளவு பேர் இருக்க மாட்டார்கள்; ஆசிரியர்கள் சார்பில், பட்டதாரிகள் சார்பில் 10 பேர் கட்டாயம் பேச வேண்டும்; மற்றவர்களும் அனுபவ ரீதியாகப் பேச வேண்டியிருக்கிறதென்று எதிர்க் கட்சித் தலைவரிடத்தும், மன்ற தலைவரிடத்திலும் சொன்னோம். அதற்குப் பலன் இருக்கிறதோ இல்லையோ தெரியவில்லை. எனக்கு ஒரு 5 நிமிடம் கொடுத்தால் துரிதமாக முடித்துக்கொள்கிறேன் என்று வேண்டிக்கொள்கிறேன்.

கல்லூரிகளைப் பொறுத்த வரையிலே, நம்முடைய அரசு இப்போது கல்வியைப் பரவலாகப் பெருக்குவதற்கு திட்டமிட்டு நடத்துவதை நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம். நேற்று கேள்வி நேரத்திலேகூட, நக்ஸல்பாரிகள் கன்னியாகுமரி மாவட்டத்தில் கல்லூரி ஆசிரியர்கள் அளவில் உண்டா என்று உறுப்பினர்கள் கேட்டார்கள். உண்மை. இரண்டு ஆசிரியர்கள் நக்ஸலைட்டுகள் என்று கைது செய்யப்பட்டிருக்கிறார்கள் என்ற பதில் வந்தது. அவர்கள் என்னுடைய நண்பர்கள், ஆசிரியர்கள் என்ற முறையில்; நக்சலைட்டுகள் என்ற முறையில் அல்ல. அதனால் என்னைக் கண்டு திரு. சாமிநாதன் போன்றவர்கள் பயப்படவேண்டிய தில்லை. என் அவர்கள் அந்த நிலைக்கு வந்தார்கள் என்று தனி நிபுணர்களை வைத்து, அல்லது சி.ஐ.டி. இலாகாவை வைத்துப் பரிசீலனை செய்ய வேண்டும். அந்தக் கல்லூரி நிர்வாகிகள் இன்று அரசு வைத்திருக்கிற எந்த விதமான சட்டத்தையும் மதிக்காமல் 3, 4 ஆண்டுகளுக்குப் பிறகு அவர்களை வெளியேற்றியதன் காரணமாக இந்த நிலை ஏற்பட்டது. ஒரு ஆசிரியரை இரண்டு ஆண்டுகள் கழிந்த பிறகு மூன்றாவது ஆண்டாவது பதவியில் உறுதி செய்ய வேண்டுமென்று சட்டம் இருக்கிறது. பல்கலைக் கழகம் சட்டம் வைத்திருக்கிறது. அதை அமல்படுத்திக் கொண்டிருக்கிறோம். அதிகாரிகள் தாக்கீது கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் இந்த ஆசிரியர்களை மூன்றாண்டுகள் முடிந்த பிறகு வெளியே அனுப்புகிறார்கள்.

*திரு. ஜி. சுவாமிநாதன்: தலைவர் அவர்களே, கும்பகோணம் அரசினர் கல்லூரியிலே ஒரு பேராசிரியர் நக்சலைட்டாக இருந்து அண்மையிலே மதுரை வழக்கிலே அவரும் விசாரணை செய்யப்பட்டார் என்று அறியும்

போது, நக்சலைட்டுகள் தனியார் கல்லூரிகளிலே மட்டுமல்ல, அரசினர் கல்லூரிகளிலேயும் இருக்கிறார்கள் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எம். சங்கரலிங்கம் பிள்ளை : அங்கேயும் 10 (எ) (1) அதிகமாக இருப்பார்கள் என்று நினைக்கிறேன். அது வெள்ளைக்காரன் காலத்திலே சரியான கல்வித் தகுதி இல்லாதவரை நியமிக்க இருந்த சட்டம். இப் பொழுது முழுக் கல்வித் தகுதியும் உள்ளவர்கள் கிடைத்தும் 10 (எ) (1)-ல் நியமனம் செய்து வேலையில் நிரந்தரமாக்கப்படாமல் பல ஆண்டுகளாக இருக்கிறார்கள். இந்த ஆண்டு கூட பலர் இவ்வாறு இருக்கிறார்கள் என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்து, இந்த அரசு போடுகின்ற சட்டங்களையெல்லாம் பள்ளி நிர்வாகி கள் நிறைவேற்றவில்லை என்றால், அதை உடனடியாக அரசு எடுத்துக் கொள்வதற்கு ஒரு சட்டத்தை ஏற்படுத்தியாக வேண்டும். ஒரு நிகழ்ச் சியை மாத்திரம் சொல்கிறேன். சட்டப் பேரவை எதிர்க் கட்சித் தலைவர் திரு. பொன்னப்ப நாடார் அவர்களுடைய கோ பிரதர்-ஷட்டகர் கந்தசாமி எனபவர் ஒரப்பனூர் என்ற ஊரில் ஒரு பள்ளிக்கூடத்தில், அதுவும் அவர் களுடைய கட்சிக்காரரே நடத்தும் பள்ளிதான், இரண்டாயிரம் ரூபாய் கொடுத்து, மூன்று ஆண்டுகள் வேலை செய்த பிறகு வேலையைவிட்டு நீக்கிவிட்டார்கள். நீக்கி மூன்று ஆண்டுகள் ஆகிவிட்டன. கல்வி இலாகா இயக்குநர் எடுத்துக்கொள்ள வேண்டும் என்று மூன்று தடவை உத்தரவு போட்டும், பலனில்லை. இதுவரை அவர் எடுத்துக்கொள்ளப்படவில்லை. ரூபாயும் திருப்பிக் கிடைக்கவில்லை. இத்தலைய பள்ளிகளை உடனடியாக எடுப்பதற்கு நமது அரசாங்கம் ஒரு அவசரச் சட்டத்தையேனும் பிறப்பிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, நான் இன்னும் பலவற்றைக் கல்வித் துறையிலே பேச விரும்பினாலும், நேரம் இல்லாத காரணத்தால், இந்தப் பெரும் புரட்சியைக் கல்வித் துறையிலே ஏற்படுத்தினால் வருங்கால சமூகத்திற்கு நல்ல நன்மைகள் கிடைக்கும் என்று சொல்லி அமைகின் றேன்.

THIRU G. VASANTHA PAI : Mr. Deputy Chairman, Sir, now I have got only a few minutes. I will confine myself to three main points, namely (1) choice of medium ; (2) rights of linguistic minorities ; and (3) advanced centres of research in our universities.

5-40 p.m. Sir, I find on page 42, of the report on 'Progress of Education in Tamil Nadu', the extract from the report of Dr. A. L. Mudaliar Committee and the recommendation of the Government that 'opportunity to choose the medium of instruction should be available to students'. This, which appears so boldly in the document which has been circulated to us, is kept more in the breach than in the observance. Sir, I echo the sentiments expressed by the hon. Member Thiru A. R. Damodaran here. Several instances have come to my notice where principals of colleges try to persuade students who have obtained high marks to choose Tamil medium. I know there were sometimes scuffles with the Principals on this ground. Sir, I feel that if you put something on a paper, it should not be kept in the breach, but it should be observed. The Principal or the Vice-Chancellor should have no authority to transgress what the Government have asked them to do. I believe that the Government will not say one thing and ask them to do another thing. This Government which has established a reputation for itself will, I hope, not do so.

Sir, this report on the 'Progress of Education' itself on page 43 say that there ought to be some incentive to students to choose the Tamil medium. This incentive is given in the form of a stipend of Rs. 180 per year for three years irrespective of community or income considerations. It is awarded in respect of students who choose Tamil Medium in colleges. It is awarded not only to students in Government Colleges but



also to students who study in the Tamil Medium sections in private colleges. So, the Government have to give incentive to students to choose the medium of instruction. Virtually, it is offering of a bribe, because the Government know that students do not want to choose the Tamil medium. Sir, many of our Hon. Ministers who are ingrained in their minds to follow the policy of fostering Tamil alone are unable to persuade their children and grand-children to take to Tamil medium. I know of several instances, Sir. Has not even the Hon. the Minister for Education persuaded his own son to take to Tamil medium ? Why ? Because, I feel . ....

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, என்னுடைய மகன் கார்ப்பரேஷன் பள்ளிக் கூடத்திலேதான் தமிழிலே தான் படித்தான். கடைசிவரையில் தமிழில்தான் படித்தான். தமிழ் மீடியத்தில் படிக்கும் முயற்சியிலேதான் இருந்துவந்தான் என்பதையும் ஆங்கிலத்திலே ஈடுபடுத்த வேண்டும் என்ற முயற்சியிலே இல்லை என்பதை யும் தெரிவித்துக் கொள்கிறேன்.

THIRU G. VASANTHA PAI ; Is he not studying in the B.Sc. class in English medium in the Loyola College ?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : லயோலா கல்லூரியிலே தமிழ் மீடியத்திற்குத் தான் முதலிலே இடம் வைத்திருந்தார்கள். அதற் குத்தான் விண்ணப்பித்திருந்தான். மாணவர்கள் ஏராளமாகச் சேராத தன் காரணமாக அதை எடுத்துவிட்டார்கள். ஆகவே ஆங்கிலத்தில் படிக்க வேண்டிய அவசியம் வந்தது.

THIRU G. VASANTHA PAI : Is not Hon. the Food Minister's child studying in St. Patrick Convent in English Medium ?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, ஆங்கிலமே படிக்கக் கூடாது, ஆங்கிலத்திற்கு இடம் கொடுக்கக்கூடாது என்ற கொள்கையை அரசு வைத்துக் கொள்ளவில்லை என்பதைத் தெளி வாகத் தெரியப்படுத்திக் கொள்ள விரும்புகிறேன். தமிழுக்கும் வாய்ப்பு அளிக்க வேண்டும் என்ற காரணத்தாலே, தமிழுக்கு 19,000 இடங்கள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் ஆங்கிலத்திற்கு 52,000 இடங்கள். எப்படி தமிழைத் தினிக்கக் கூடாது என்று சொல்கிறோமோ, அதுபோல ஆங்கிலத்தையும் தினிக்கக் கூடாது என்ற வகையிலே தான் ஆங்கிலத் திற்கு 52,000 இடங்கள், தமிழுக்கு 19,000 இடங்கள் ஒதுக்கப்பட்டிருக் கின்றன.

THIRU G. VASANTHA PAI: Sir, I am only pressing my point that even the children of Hon. Ministers are taking English medium. I am not blaming them because they are on my side. If the Ministers do not agree to my contention, I would have to appeal to the Hon. Ministers to do their duty by me. That is what I am trying to do through this House. I am really having instances of Ministers to show....

திரு. எஸ். முத்துசாமி ; தலைவரவர்களே, மத்திய அரசிலே இந்தி மொழியைக் கொண்டு வருவதற்கு 10 கோடி, 100 கோடி ரூபாய் என்று செலவழிக்கும்போது, தமிழ் நாட்டிலே தாய்மொழிக்காகத் தனிச் சலுகை வழங்கப்படுவதை 'bribe' என்று சொல்வது சரிதானா எனறு அறிய விரும்புகிறேன்.

THIRU G. VASANTHA PAI : Sir, I now go a step further to say that if the Hon. Ministers' children and grand- children cannot be persuaded by them or for any reason cannot be allowed to take Tamil medium, that is a point in my favour. The choice of medium of instru-

tion should be left only to the students and not to anybody else and, if the Government accept the A.L. Mudaliar Committee's report as they profess to do on page 42 of the report on the 'Progress of Education', which is of the opinion that opportunity to choose medium of instruction should be made available to students, then first,the students must be admitted to classes, and thereafter they must be given an opportunity to choose the medium of instruction as the hon. Member Thiru Damodaran stated before this House.

Sir, I am now coming to the next point regarding linguistic minorities. When I asked the question yesterday specifically in a supplementary whether representation was made by the Madras-Kerala Samaj that facilities for Malayalees to study Malayalam in Government Colleges were being lessened in the University of Madras and in the Colleges as hitherto mentioned, the Hon. the Chief Minister told me that he had not received any representation in that behalf. Sir, I was told that the Madras-Kerala Samaj through its Educational Adviser Thiru S. K. Nair sent a memorial to the Government and that the memorial was acknowledged on 17th June 1971 by the Personal Assistant to the Chief Minister who wrote : 'I am directed to acknowledge the receipt of your communication, dated 9th June 1971 to the Chief Minister. Your petition has been sent to the Education Minister'. Sir, this is one thing which I wish to bring to the notice of this House.

Sir, the Madras-Kerala Samaj has also made a request to the Chief Minister that facilities, which were afforded by the old composite Madras Province for the study of Malayalam under Part II in the Government Colleges, might be restored. In 1951, the M.A. Degree course in Malayalam was started at the Presidency College. With the re-organisation of States in 1956, the M.A. Degree course in Malayalam was abolished. Malayalam department of Q.M.C. was also axed soon after. These steps were taken not because students for these courses were not forthcoming in sufficient numbers, but for other reasons Government schools for boys in Tamil Nadu now offer Malayalam as the first language and for girls there is only one school i.e., the Presidency Girls High School, which offers this facility. The Malayalam-speaking students have been deprived of the educational opportunities which they had before. A representation on this was sent to the Chief Minister. The Personal Assistant to the Chief Minister has told Thiru S.K. Nair that the representation has been forwarded to the Hon. the Minister for Education. When I asked the question yesterday, the Hon. the Chief Minister said that no such representation had been received. I am only referring to this to show that there is a feeling that the interests of linguistic minorities are not protected. Unless there is a department or section for English medium and unless the students are given the liberty to opt for English medium, they cannot choose their mother-tongue as second language. So, for that reason, Sir, I would request the Government to reconsider the issue. This matter is before the Government pending with the Education Department from 17th June 1971.

Sir, the next thing which I wish to refer to is about the advanced research in Universities. In Chapter I of the report on 'Progress of Education in Tamil Nadu', in 'Introductory', it says that the Government of Tamil Nadu have been fully alive to this and have consistently given top priority for the development of education, both qualitative and quantitative, at all levels. In this connection, in my Budget speech, I referred to a project which had been put in by one



department, i.e., the Department of Geo-Physics which has been shelved by the Vice-Chancellor of the Madras University. I immediately brought it to the notice of this House, not in the personal interest of that particular individual but in the interest of advancement of science, and in the interest of the country. The discovery was that protein could be produced from cellulose. It would have been a very creditable discovery for the Madras University, Tamil Nadu and even for the Government of India because it was only in March 1971 that the University of Lousiana in the United States of America made the discovery, two years after our Professor had handed over the project to the Vice-Chancellor of the Madras University with a request to forward it to the University Grants Commission. It is stated that this gentleman left of his own accord. I am not concerned with it but with why this was not forwarded to the University Grants Commission by the Vice-Chancellor. Why should not the Hon. the Minister for Education have taken it up with the Vice-Chancellor and found out why it was shelved? Is it his duty as Vice-Chancellor to simply put an advanced research project into the waste paper basket, especially when our Professors conduct research and discover that protein can be produced from cellulose or food can be produced from waste farm produce? I suggest that the Vice-Chancellors are playing politics. Persons who are Government servants should not be made Vice-Chancellors, because they must think independently of the Government. If once politics is divorced from the University, it would be better. Section 10 of the University Act should be amended by which the right to choose the Vice-Chancellor should be conferred on the Syndicate members and Senate members alone. Sir, I feel that the discovery made by this gentleman would have had far-reaching effects. I know that this gentleman resigned his job because of his disappointment that his project was not forwarded to the University Grants Commission by the Vice-Chancellor. But when the University Grants Commission unequivocally approved it in a seminar, this gentleman has now come back to India and has taken up a job in the Bangalore Institute of Science. I am told that as an ambassador of goodwill to foreign countries, and by dint of his ability, he has been able to secure for the Bangalore Institute of Science, 3,00,000 dollars for research work under some new grant. We are losing a man of talent because of the short-sighted act of the Vice-Chancellor. I request the Hon. the Minister for Education to see that these Vice-Chancellors are called to order and they are not made merely persons to appoint Examiners and to pay them remuneration but that they do the work for the benefit of our country and the well-being of the community. I know Education is a vast field, but I hope the Government would consider the points that I have made.

THE HON. THIRU V. R. NEDUNCHEZHIYAN: Does the hon. Member wish that the University should be under the control of the Government or left independent ?

THIRU G. VASANTHA PAI: The Professors in the Centres of Advanced Research should have direct dealings with the University Grants Commission and their work should not be hampered by obstructions made by the Vice-Chancellor.

THIRU V. THANGAPANDIAN: On a point of order, Sir, பல்கலைக் கழகத்தின் துணை வேந்தரை, ஒரு தனி நபரைப் பற்றி, இந்த சட்டமன்றத்தில் அவர் இல்லாதபோது, Shortsighted—குறுகிய நோக்கு என்றெல்லாம் பேசலாமா என்று தங்களுடைய ரூலிங்கை எதிர்பார்த்து இருக்கிறேன்.

[23rd July 1971

THIRU G. VASANTHA PAI: It is perfectly in order for me to criticise on a Policy Note on Education the weakness of the persons who are implementing this Policy Note.

திரு. ஜி. சுவாமிநாதன்: தலைவர் அவர்களே, முக்கியமான ஒரு பிரச்சினையைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகிறார்கள். செல்லுலோசிலிருந்து புரொடீன் எடுப்பது என்பது அரிய கண்டுபிடிப்பு. அப்படிப்பட்ட கண்டுபிடிப்பைப்பற்றி ஒரு திவீஸ் எழுதி, அதைப் பல்கலைக் கழகத் துணை வேந்தருக்கு அனுப்பி, அவர் அவரைப் பார்க்க வேண்டும் என்று கேட்ட போது, அவரைப் பார்ப்பதற்கு இன்டர்வியூ கூட கொடுக்க மாட்டேன் என்று ஒரு பல்கலைக் கழகத் துணைவேந்தர் சொல்லியிருப்பாரானால், அந்த விஷயத்தை இந்த சபையிலே சொல்லாமல், வேறு எங்கே சொல்வது? அப்படிப்பட்டவர்கள் இனிமேல் நிகழாமலிருப்பதற்கு நமது அரசு நடவடிக்கைகள் எடுக்க வேண்டாமா? அதற்காகவாவது பேசுவதை அனுமதிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

5·50 p.m.

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய குறிப்புகளோடு, இதைப்பற்றித் துணைவேந்தர் அவர்கள் என்ன கூறுகிறார் என்பதையும் பார்த்தால்தான் தீர்ப்பு வழங்க முடியும். ஒருவர் சொல்வதை வைத்து ஒன்றும் சொல்ல முடியாது.

திரு. ஜி. சுவாமிநாதன்: அந்தக் கருத்தைச் சொல்வதற்கு அவர் கருக்கு உரிமை உண்டு என்பதைத் தான் சொல்கின்றேன்.

THIRU C. V. RAJAGOPAL: Sir, I want to know whether the hon. Member said in the Council that the control of the University should be under the Government or that it should be left independent?

THIRU G. VASANTHA PAI: I want that the Universities should be in between.

THIRU C. V. RAJAGOPAL: Universities should be under the control of the Government? (Interruptions).

*புலவர் ஒ. அறிவுடை நம்பி: மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, தமிழகத்தில் கல்வித் துறையில் முன்னேற்றம் என்ற அறிக்கையை வரவேற்று இந்த மன்றத்தில் சில பல கருத்துக்களை நான் எடுத்து வைக்க விரும்புகிறேன். வரலாற்றேடும், இலக்கியத்தோடும் பின்னிப் பிணைந்திருக்கிற இந்தக் கல்வித் துறையைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் பல்வேறு கருத்துக்களை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். குறிப்பாக பயிற்றுமொழி குறித்து இங்கே எனக்கு முன்னாலே பேசிய நண்பர்கள் சொல்லிய கருத்துக்கள் பல வேதனை தரத்தக்கன. தமிழகத்தில் இருக்கும் கல்விக்கூடங்கள் ஆங்கிலத்தில் கல்வி கற்றுத் தர வேண்டுமென்பதில் மிகுந்த அளவு அக்கறை காட்டக்கூடியவர்கள் இந்த மன்றத்தில் ஒரு சிலர் தமிழ்த் துறையே இருக்கக் கூடாது என்ற நோக்கத்தோடு பேசிக் கொண்டிருப்பது வருந்தத் தக்கதாக இருக்கிறது. குறிப்பாக இந்தப் பயிற்று மொழி என்ற தலைப்பின் மேம் இங்கே தரப்பட்டிருக்கிற அறிக்கையில் கண்டுள்ள கொள்கையின்படி, பயிற்று மொழியைத் தேர்ந்தெடுக்கிற உரிமை மாணவர்களுக்குத் தரப்பட்டிருக்கிறது. டாக்டர் லட்சுமணசுவாமி முதலியார் குழு தந்திருக்கிற அறிக்கையில் தமிழகம் முழுவதும் இருக்கிற அரசினர் கல்லூரிகளில் ஆங்கிலத்தில் பயில விரும்புகிற மாணவர்களுக்கு அரசு வசதிகள் செய்து கொடுக்க வேண்டும் என்று வற்புறுத்தியிருக்கிறது. ஆனால் தமிழ் பயிற்று மொழியாக இல்லாத தனியார் கல்லூரிகளில் தமிழ்ப் பயிற்று மொழித் தேவையிருப்பின் அதற்கான வசதிகள் செய்வதைப் பற்றிய ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு நிர்வாகத்தினர் கேட்டுக்கொள்ளப்படலாம் என "அபசுரம்" தொனிக்க குழுவினர்



23rd July 1971] [புலவர் ஒ. அறிவுடைநம்பி]

தந்திருக்கும் குறிப்பு வருத்தத்தைத் தருகிறது. தனியார் கல்லூரிகளிலும் வற்புறுத்தப் பெற வேண்டும்—இல்லையேல் மானியம் இல்லை என அறிவிக்க வேண்டும்.

சென்னை நந்தனம் கலைக் கல்லூரியில் கடந்த ஆண்டு புகுமுக வகுப்பில் மாணவர்கள் தேர்வில் ஈட்டியிருக்கும் வெற்றியை இங்கே சுட்டிக் காட்ட விரும்புகின்றேன். கணக்குத் துறையிலே தமிழில் தேர்ச்சிபெற்றவர்கள் 69-க்கு 22 பேர். இது 32 விழுக்காடு. ஆனால் அதே நேரத்தில் ஆங்கிலத்தில் 89-க்கு 50 பேர் வெற்றி பெற்றிருக்கிறார்கள். இது 56 விழுக்காடு. பிசிக்ஸில் தமிழ்த் துறையில் 241 பேர் இருந்தும் 85 பேர் தான் வெற்றி பெற்றிருக்கிறார்கள். அது 35 விழுக்காடு. ஆனால் ஆங்கிலத்தில் 180 பேர் சென்று 122 பேர் வெற்றி பெற்றிருக்கிறார்கள். இது 68 விழுக்காடாகும். கெமிஸ்ட்ரியை எடுத்துக் கொண்டால், தமிழில் 241 பேரில் 120 பேர் வெற்றி பெற்றிருக்கிறார்கள். இது 50 விழுக்காடு. ஆங்கிலத் துறையில் 180 பேரில் 151 வெற்றிபெறறிருக்கிறார்கள். இது 84 விழுக்காடு. நேசுரல் சயன்சில் தமிழ்த் துறையைப் பொறுத்தவரையில், 172 பேரில் 53 பேர் வெற்றி பெற்றிருக்கிறார்கள். இது 31 சதமாகும். ஆங்கிலத்தைப் பொறுத்த மட்டில், 91 பேரில் 41 பேர் வெற்றி பெற்று, 41 விழுக்காடு அடைந்திருக்கிறார்கள். ஆக இவைகளிலெல்லாம் ஆங்கிலம் முதலில் வருகிறது என்பதைச் சுட்டிக் காட்ட விரும்பினாலும் கூட, வரலாற்றுத் துறையில் தமிழில் 97 பேர் சென்று 65 பேர் வெற்றி பெற்றிருக்கிறார்கள். இது 67 விழுக்காடு. ஆங்கிலத்தில் 92 பேரில் 22 பேரே வெற்றி பெற்றுள்ளனர். இது 43 விழுக்காடு. 97 பேர் சென்று 65 பேர் வெற்றி பெற அங்கு ஈட்டிய விழுக்காடு 67 சதவிகிதமாகும். ஆங்கிலத்தில் 92 பேரில் 22 பேரே வெற்றி பெற 24 சதவிகிதமே ஆங்கிலத்திற்குக் கிடைத்துள்ளது. அதே போல காமர்ஸில் தமிழ்த்துறையில் 194 பேரில் 138 பேர்; ஆக 70 விழுக்காடு வெற்றி பெற்றிருக்கிறார்கள். இங்கே ஒன்றை நாம் உணருதல் வேண்டும். வரலாறு ஆயினும், பொருளியல் ஆயினும் இப்படிக் கலைத் துறையைச் சேர்ந்த வகையில் தமிழ்த் துறையில் நல்ல ஆர்வம் கொண்டு அதனைச் செயல்படுத்த வேண்டுமென்ற நோக்கம் படைத்தவர்கள் பேராசிரியப் பெருமக்களாக இருக்கிறார்கள். அந்த விதத்தில் விஞ்ஞானத் துறையிலேயும் ஆர்வம் காட்டுவார்களானால் நிச்சயமாகத் தமிழ் மொழி மூலம் அத்தனையும் முடியும் என்பதை எல்லோரும் உணர்வதற்காகத் தான் இதனை இங்கே காட்ட விரும்பினேன். மிக முக்கியமான ஒன்றை நான் உங்கள் நினைவுக்குக் கொண்டு வருகிறேன். இந்த ஆண்டு அங்கே விருப்பப் பாடமாக பார்ட் 3 பகுதியில் ஆங்கிலத்தில் சேர்ந்தவர்கள் ஆங்கிலம் கடினமாக இருக்கிறது என்று சொல்லி, 7 பேர் எங்களுக்கும் தமிழ்ப் பயிற்சி மொழியாக இருக்க வேண்டும் என்று கேட்டுப் பெற்றிருக்கிறார்கள். இங்கே நான் நந்தனம் கலைக் கல்லூரியை மட்டிலும் சுட்டிக் காட்டினாலும், இப்படிப் பல கல்லூரிகளிலும் மாணவர் கேட்கின்ற நிலை உருவாகியிருக்கிறது.

இருந்தாலும் அவர்கள் ஆங்கிலம் வேண்டும், தமிழ் வேண்டாம் என்று மாணவர்கள் சொல்வதாக ஒரு குற்றச்சாட்டைச் சொன்னார்கள் எதிர்த் தரப்பிலுள்ளோர். அவர்கள் சொல்கிற குற்றச்சாட்டிலே உண்மையில்லை என்பதைச் சுட்டிக்காட்டுவதற்காகத் தான் இவ்வளவையும் சொன்னேன். மாணவர்களில் ஆங்கிலம் வேண்டாம், தமிழ் மட்டுமே பயிற்சி மொழியாக இருக்க வேண்டும் என்று கேட்கிறவர்கள் பல்லை வருடின்றார்கள். தமிழால் எல்லாம் முடியும். பண்டைய இலக்கிய செப்பேடுகளை, கல்வெட்டுக்களைக் கொஞ்சம் நினைவு கூற வேண்டுகின்றேன். இச்செப்பேடுகளைக் காணும் காலை தமிழ் நாட்டில் தமிழ் எல்லாத் துறையிலும் வெற்றிபெற முடியுமென்பதைப் பார்க்க முடியும். குறிப்பாக 11-ம் நூற்றாண்டில் தஞ்சைத் தரணியை ஆண்ட ராஜேந்திரச் சோழன் தென்னற்காடு மாவட்டத்தில் எண்ணாயிரம் என்ற இடத்தில் கல்லூரி ஒன்றுக்கு 300 எக்கரா நிலம் தந்து 340 மாணவர்களுக்கு இலவசமாக உணவும், உறையுளும் தந்து கல்வி பயில வசதி செய்து கொடுத்திருந்தார். அங்கே ஆசிரியர்கள் 15 பேர் இருந்தார்கள். இவ்வாறு கல்

வெட்டுக்கள் கூறுகின்றன. தஞ்சை மாவட்டத்தில் புன்னிவயல் என்ற இடத்தில் 500 மாணவர்கள் இலக்கணம் படிப்பதற்கு ஒரு கல்லூரி இருந்ததாகக் கல்வெட்டுக்களிலிருந்து அறிய வருகிறது. திருவாவடுதுறையில் மருத்துவக் கல்லூரி ஒன்று இருந்ததாகக் கல்வெட்டுக்கள் எடுத்துச் சொல்கின்றன. இத்தனையும் தமிழால் எல்லாத் துறைகளிலும், மருத்துவத் துறையிலும் கூட நாம் வெற்றி பெற முடியும் என்பதை நமக்குச் சுட்டிக் காட்டப் பயன்படுகின்றன. இனி கல்விக் கூடங்களுக்குக் கட்டடங்கள் கட்டுவதற்காக நாம் சில கொள்கைகள் வகுத்துக் கொண்டு செயல்பட வேண்டும். எதிர்க் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் திரு. சுப்பையா அவர்கள் இங்கே சொல்கிறபோது.....

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் மகன் மெட்ரிக் இங்கிலீஷ் மீடியத்தில் படித்துக் கொண்டிருக்கிறான் ?

புலவர் ஒ. அறிவுடை நம்பி : ஆமாம், படித்துக் கொண்டிருக்கிறான். நம்முடைய பெருமதிப்பிற்குரிய மாண்புமிகு நாவலர் அவர்கள் குறிப்பிட்டுச் சொன்னது போல, ஆங்கிலம் படிக்கக் கூடாது என்பதல்ல எங்கள் கொள்கை. ஆங்கிலம் தேவை, ஆனால் ஆங்கிலம் மட்டுமே தேவை என்கிற பெயரில் வெறி பிடித்த உணர்வு இருக்கக் கூடாது. ஆங்கிலத்தின் மூலம் தான் எல்லாம் கிட்டும் என்கிற மனப்பான்மை தகர்க்கப்பட வேண்டியது என்பதைச் சுட்டிக் காட்டுவேன். ஆங்கிலம் தேவையில்லாத ஒன்று என்று எந்த நிலையிலேயும் கருதிக் கொண்டிருக்கவில்லை. இதை மாண்புமிகு உறுப்பினருக்கு எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். குறிப்பாகத் தென்னார்க்காடு மாவட்டத்தில் இன்றையதினம் 250 தொடக்கப் பள்ளிக் கூடங்களுக்குக் கட்டடங்கள் கட்டுவதற்கு அரிய திட்டம் ஒன்று உருவாக்கியிருக்கிறார்கள்.

[Mr. Chairman the in Chair.]

லோகல் செஸ் சர்சார்ஜ் 25 காசு, 50 காசு என்று வசூலிக்கப்பட்டுக் கொண்டிருப்பதை மாற்றி, ஒரு ரூபாய் என்று வசூலிக்கப்பட்டு, அதன் மூலம் எறத்தாழ 25 லட்ச ரூபாய் தொகுக்கப்பெற மேலும் 25
6-00 p.m. லட்ச ரூபாய் அரசு மானியமாகத் தர இந்த ஆண்டு 250 தொடக்கப் பள்ளிக் கூடங்களுக்குக் கட்டடங்கள் எழும்பிக் கொண்டிருக்கின்றன எழில் மிகு இல்லங்களாக. மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் இந்நிலையை உண்டாக்கியிருக்கிறார்கள் என்பதை எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். பிற மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களும் இவ்வழி செயல்பட்டால் தொடக்கப் பள்ளிக்கூடக் கட்டடத் தொல்லை ஒழியும்.

ஐந்தாண்டுத் திட்டம் என்ற பெயரால் ஒரு திட்டத்தை மாவட்ட அளவில் உருவாக்கி முதல் நிலையில் இருக்கக் கூடிய சில மாவட்டங்களை ஒதுக்கி விட்டு, பின் தள்ளப்பட்டுள்ள மாவட்டங்களில் அறிவியல் கூடங்களுக்கான கட்டட வசதிகள் செய்து தர வேண்டுமென்று ஆசைப்படுகிறேன். பாக்வோர்ட் இளான்ஸ் என்ற பெயரிலே பின் தங்கிய வகுப்பினராக உள்ளவர்களின் வளர்ச்சிக்காகவும், தாழ்த்தப்பட்ட இனத்தவர்களுக்குமாகவும் உணவுக்கும், இருப்பிடத்திற்கும் வேண்டிய வசதிகளை நடுத்தரப் பள்ளிகளைப் பொறுத்த வரையில், செய்து கொடுத்திருக்கிறோம். ஆனால் கல்லூரி மட்டத்தில் இந்த வசதிகள் இல்லை. எனவே இந்த ஆண்டில் இவற்றை அவர்களுக்குச் செய்து தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

புதிய புதிய பள்ளிகளை இனி திறப்பதைக் காட்டிலும், அதை விட்டு விட்டு, இருக்கின்ற பள்ளிக்கூடங்களைக் காப்பாற்றுகின்ற முயற்சியிலே ஈடுபட வேண்டுமென்று கேட்டுக்கொள்வேன். தென்னற்காடு மாவட்டத்தில் சிறு கிராமம் என்ற ஊரிலே ஒரு பள்ளிக்கூடம் இருக்கிறது. அதற்குப் பக்கத்தில் உள்ள வீரப்பார் என்ற ஊரில் ஒரு புதிய பள்ளிக்கூடத்தைத் திறந்திருக்கிறார்கள். அதனால் சிறு கிராமத்திலிருந்து 100 பிள்ளைகள் தனியாகப் பிரிந்து வீரப்பாரில் திறக்கப்பட்ட புதிய பள்ளிக்கூடத்திற்குச் சென்று விட்டார்கள். இப்படி 150 பிள்ளைகளுக்காக ஒரு பள்ளிக்கூடம், 100 பிள்ளைகளுக்காக ஒரு பள்ளிக்கூடம் என்று 250 பிள்ளைகள் பிரிக்கப் பட்டிருக்கிறார்கள். இதனால் செலவு இரட்டிப்பாகிறது அது மட்டுமல்ல;





இப்படி பல பள்ளிகளைத் திறப்பதன் மூலம் அறிவியல் கூடங்கள் நூலகங்கள் ஆகிய பல வசதிகளைச் செய்து கொடுப்பதால் செலவை இரட்டிப்பாகப் பெருக்கிக் கொண்டு போகிறோம். நிர்வாகச் செலவும் இரட்டிப்பாகிறது. இதனால் வேறு வசதிகளைச் செய்து கொடுக்க முடியவில்லை.

அடுத்து, கல்விக் கூடங்களுக்குக் கட்டடங்கள் கட்டுவதைப் பொறுத்த வரையில், அரசாங்கத்திலிருந்து மானியம் ஒதுக்கப்பட்டு பி. ப்ளூ.டி.-யிடம் இந்த வேலை விடப்படுகிறது. இதற்கென்று தனியாக அலுவலர்கள் இல்லாததால் இந்த மானியம் முற்றிலும் செலவழிக்கப்படாமல் கட்டடங்கள் குறிப்பிட்ட காலத்தில் முடியாமல் இருக்கின்றன. இந்தக் குறையைப் போக்க ஒரு தனிப்பிரிவைப் பொது மராமத்துத் துறையிலே ஏற்படுத்த வேண்டுமென்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அறிவியல் மேம்பாட்டுக்கும், கல்வியின் மேம்பாட்டிற்கும் உயர்நிலைப் பள்ளிகளுக்கு அரசு மானியமாக உதவி செய்கிறது. ஆயிரக்கணக்கான ரூபாயில் அறிவியல் கருவிகள் வழங்கப்பட்டும் இவற்றைக் கண்காணிப்பதற்கு அங்கே அட்டெண்டர்கள் இல்லாத காரணத்தினால் அக்கருவிகள் பாழ்படுகின்றன. இதையெல்லாம் திட்டமிட்டுக் காப்பாற்றுவதற்கு லேபரடரி அட்டெண்டர் ஒருவரை நியமிக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

1970 ஏப்ரல் 1-ம் தேதி முதலாகத் திறக்கப்பட்ட பள்ளிகளில் 50 சதவிகிதம் "பி" பிரிவுக்கும் ஒதுக்கித் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

எட்டாவது வகுப்புகளுக்குப் பொது வினாத்தாள்கள் தயாரிக்கப்படுகின்றன. ஆனால் அவை அத்தனையும் திருத்தப்படுவது அந்தந்தப் பள்ளிகளிலே தான். அதனை மாற்றி, விடைகள் திருத்தப்படுவது பொது நிலையில் வைக்கப்பட வேண்டும் என்று சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன். ஆசிரியர்களுக்கான வசதிகளையும், சலுகைகளையும் பெருக்க வேண்டும். பி.எ. ஆனர்ஸ் பட்டதாரிகளுக்கு ஊக்க ஊதியம் வழங்கப்படவில்லை. தென்னற்காட்டில் இனியேனும் வழங்கப்பட வேண்டும் என்றும் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கடைசியாகச் சுட்டிக்காட்ட விரும்புவது சம்பள விகிதத்தை மாற்றி அமைத்துத் தர வேண்டும் என்று. எனக்கு முன்பு பேசிய பல உறுப்பினர்கள், மாண்புமிகு உறுப்பினர் திரு. ராஜா அய்யர் கூடச் சொன்னார்கள், பி.டி. ஆசிரியர்களைப் பொறுத்த வரையில், இன்றைய நிலம் வருந்தத் தக்க சூழ்நிலை இருந்து கொண்டிருக்கிறது. பி.டி. ஆசிரியர்களின் கோரிக்கை நியாயமானது என்பதனை மீண்டும் எடுத்துச் சொல்வது அவசியம் என்று கருதுகிறேன். எல்லாச் சம்பளக் குழுவும் செகண்டரி கிரேடு ஆசிரியரின் முடிவுச் சம்பளம், பி.டி. ஆசிரியரின் ஆரம்பச் சம்பளமாக அறிவித்திருந்தது. ஆனால் இந்தச் சம்பளக் குழுவோ இடைநிலை ஆசிரியரின் இறுதிச் சம்பளத்தை பி.டி. ஆசிரியரின் தொடக்கச் சம்பளமாக அறிவிக்கவில்லை. செகண்டரி கிரேடு ஆசிரியர்களின் முடிவுச் சம்பளம் ரூ. 325. ஆனால் பி.டி. ஆசிரியரின் ஆரம்பச் சம்பளம் ரூ. 275 தான். அது மட்டுமல்ல. எஞ்சினியரிங் இன்ஸ்ட்ரக்டர் என்பவர் எல்.எம்.இ. என்று 3 வருடம் டிப்ளமா படித்தவர்கள், அவர்கள் பி.டி. ஆசிரியர்களின் சம்பளத்தை விட அதிகமாக ஆரம்பச் சம்பளமாக ரூ. 325 பெற்றுக்கொண்டிருக்கிறார்கள். அது மட்டுமல்ல. 30 ரூபாய் ஸ்பெஷல் பேயாக கூடப் பெறுகிறார்கள். ஆனால் பி.டி. ஆசிரியர்களுக்குச் சம்பளம் ரூபாய் 275. அதிலும் அவர்கள் இரண்டு பட்டம் பெற்றவர்கள். டியூட்டர்களைப் பொறுத்த வரையில், ஒரு பட்டம் தான். போஸ்ட் கிரேஜுவேட் ஆகக் கூட இருக்கலாம். இருந்தாலும் சம்பளம் ரூ. 325. பி.டி.-க்கு ரூ. 275 தான். டிரில்லிங் மெக்கானிக்கு முன்பு எல்லாம் 125 ரூபாய் தான் பெற்றுக் கொண்டிருந்தார். இப்போது ரூ. 275 பெற்றுக் கொண்டிருக்கிறார். பி.டி. ஆசிரியர்களுக்கு முன்பு ரூ. 140, இப்போது ரூ. 275 பெற்றுக்கொண்டிருக்கிறார்கள். எச்.ஆர்.சி. இன்ஸ்பெக்டர்கள் முன்பு ரூ. 125, இப்போது ரூ. 300 பெறுகிறார்கள். பி.டி. ஆசிரியர்கள் ரூ. 275தான்

[புலவர் ஏ. அறிவுடைநம்பி] [23rd July 1971

பெறுகிறார்கள். இவ்வளவையும் சுட்டிக்காட்டி பி.டி. ஆசிரியர்கள் சம்பளத்தை உயர்த்த வேண்டிய அவசியத்தை வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். இதே நோத்தில் உதவிபெறும் உயர்நிலைப்பள்ளிகளிலே அலுவலர்களாக இருந்து பணியாற்றக் கூடியவர்களுக்கு இந்த அரசு வீட்டு வாடகை தந்திருக்கிறது. இரண்டாவது ஊதியக் குழு சம்பள ஆணை கிடைத்திருக்கிறது. மருத்துவ வசதியும் தந்திருக்கிறது. இதற்கெல்லாம் அவர்கள் நன்றி தெரிவிக்கிறார்கள். ஆனால் ஓய்வு கால ஊதியமோ விடுப்பு வசதியோ தரப்படாமல் இருக்கின்றது. சேமிப்பு நிதியில் அரசின் பங்கு இல்லை. அதைத் தந்தால் அவர்கள் மகிழ்ச்சியடைவார்கள். அதனையும் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டு எனக்கு இந்த வாய்ப்பு அளித்ததற்கு நன்றி சொல்லி அமைகிறேன். வணக்கம்.

*திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்பு மிக்க தலைவரவர்களே, மாண்பு மிக்க உறுப்பினர் திரு. சங்கரலிங்கம் அவர்கள் தனிப்பட்டவர்கள் பள்ளிகளையும் கல்லூரிகளையும் அரசாங்கம் எடுத்து நடத்த வேண்டுமென்ற கோரிக்கைகளை மிகத் திறமையாக அவருக்கே உரித்த பாணியில் எடுத்துச் சொன்னார்கள். அவர்கள் பேசுவதைக் கேட்டுக் கொண்டிருந்த எனக்கு அப்படிச் செய்தால் கூட நல்லது என்ற எண்ணம் ஏற்படுகிற அளவுக்குப் பேசினார்கள்.

ஆனால் அண்மையில் ஒரு அரசாங்கக் கல்லூரிக்குச் செல்ல வேண்டிய, ஒரு துர்பாக்கியம் என்றுகூடச் சொல்லலாம், நிலை எனக்கு ஏற்பட்டது. அங்கே ஒரு திறப்பு விழாவிற்கு என்னைப் பேசுவதற்கு அழைத்திருந்தார்கள். அந்தக் கல்லூரிக்குப் பேசுவதற்குச் சென்றபோது "பேண்டிமோனியம்" என்று ஆங்கிலத்திலும் தமிழில் குழப்பம் என்றும் சொல்லுவார்கள், அது அங்கே நடந்து கொண்டிருந்தது. பேசுகிறபோது மாணவர்கள் செய்கிற குழப்பத்தைப் பார்த்து, சாதாரணமான பேச்சாளனை எனக்குப் பேசலாமா அல்லது பேசாமல் திரும்பி வந்துவிடலாமா என்ற நினைவு ஏற்பட்டது. பேச ஆரம்பித்து 10 நிமிஷம் சென்றும் கூட மாணவர்கள் குழப்பம் செய்து கொண்டுதான் இருந்தார்கள். எனக்கு முன்னால் ஒரு பேராசிரியர் பேசப்பட்ட பாட்டைப் பார்த்தபோது, எனக்கு மட்டுமல்ல அந்த கதி அவருக்கும் தான் என்பதை அறிந்தேன். பிறகு 10 நிமிஷத்தில் மாணவிகள் எல்லாம் வந்து அமர்ந்தனர். முன்னால் இருந்த நாற்காலியில் அந்தக் கல்லூரி முதல்வர் அமர்ந்திருந்தார். ஆசிரியர்களும் அமர்ந்திருந்தார்கள். கல்லூரி முதல்வருக்கு வழுக்கைத் தலை. வழுக்கைத் தலையர்கள் போட்டியில் அவருக்கு முதல் பரிசு கொடுக்கலாம். மாணவிகளும் வந்து அமர்ந்தவுடன் குழப்பத்தை அதிகமாக ஆக்கினர். மாணவர்கள் அவ்வாறு அமர்ந்தவுடன்—"பேப்பர் ப்ளேன்" என்பதற்கு தலைவர் திரு. சா. கணேசன் அவர்களைத் தமிழ் கேட்டேன்; அதற்கு அவர் தாள் கணைகள் என்று குறிப்பிடலாம் என்றார். அந்தத் தாள் கணைகளைக் குறி பார்த்து மாணவிகள் மீது எறிந்து கொண்டிருந்தார்கள். ஒரு மாணவி கூச்சல் போட்டு ஓட மற்ற மாணவிகளும் சேர்ந்து ஓடினார்கள். நான் ஆச்சரியப்பட்டுக் கேட்டபோது, அது வெறும் தாள்கள் மட்டுமல்ல, அதிலே குண்டுசியையும் பொறுத்தி எரிந்தார்கள் என்றும் அதனால் வலியேற்பட்டு மாணவிகள் ஓடினார்கள் என்றும் சொன்னார்கள். அதோடு நின்றிருந்தால் பரவாயில்லை. அவர்கள் எல்லாம் அப்படி ஓடியபோதும் கூட அந்த முதல்வர் திரும்பிப் பார்க்கவில்லை. அங்கே இருக்கிற பேராசிரியர்களும் மாணவர்களைத் திரும்பிப் பார்க்கவில்லை. பின்னால் நான் இந்த மாதிரி நிலையில் முதல்வர் அமைதியை நிலைநிறுத்தக்கூடாதா என்று கேட்டபோது பேராசிரியர்கள் சொன்னார்கள், "இப்போது உள்ள முதல்வர் அரசாங்க உத்தியோகஸ்தர் ஆகிவிட்டார். காலையில் 10 மணிக்குக் கல்லூரிக்கு வரும்போது தலைகுனிந்து கொண்டே உள்ளே நுழைந்து, நேராக அவர் அறைக்குப் போய் அமர்வார். அந்தக் கல்லூரியில் என்ன நடக்கிறது என்பதைக் கூட காதில் வாங்கிக் கொள்வதில்லை. அரசாங்கக் கல்லூரியாக ஆன பிறகு 8, 9 மாதம் ஆங்கில ஆசிரியர் தன் வகுப்புக்குக் சென்று பாடம் நடத்தியதில்லை. தன் உதவி ஆசிரியரைக் கொண்டு பாடம் நடத்துகிறார்" என்று சொன்னார்கள். இது முதல்வருக்கு தெரியாதா

61.0
P.M.



23rd July 1971] [திரு. ஜி. சுவாமிநாதன்]

என்று கேட்டேன். அரசாங்கத்தில் முதல்வராக இருந்து பழக்கப்பட்டதால், மாணவருக்கு என்ன ஆனாலும் சரி, வேறு என்ன நடந்தாலும் சரி, தனக்குச் சம்பளம் வருகிறதா என்று பார்த்துக்கொள்ளும் புத்திசாலித் தனமுள்ளவர் என்று சொன்னார்கள். இதையெல்லாம் கண்டுகொண்டிருந்தால், நீண்ட நேரம் வீணாகிப் போய்விடும் என்று அந்த முதல்வர் நினைப்பதாகச் சொன்னார்கள். கல்லூரிகளை அரசாங்கம் எடுத்துக்கொள்வதில் தவறு இல்லை. ஆனால் அதை எடுத்துக் கொண்ட பிறகு.....

திரு. வி. தங்கபாண்டியன் : எந்தக் கல்லூரி என்று சொல்ல வேண்டும்.

திரு. ஜி. சுவாமிநாதன் : அதைப் பற்றிப் பேசுவது நல்லதல்ல. சபையில் இல்லாத ஒருவரைப் பற்றிப் பேசுவது அவர் மனம் புண்படலாம் என்ற காரணத்தால், அவரைப்பற்றிச் சொல்ல வேண்டுமென்றால், அமைச்சரிடத்திலே தெரிவிக்கிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இவ்வளவும் சொல்லி விட்ட பிறகு அதைச் சொல்லுவதுதான் நல்லது.

திரு. ஜி. சுவாமிநாதன் : அது தஞ்சையிலுள்ள கல்லூரி. இது வரையில் தனியாரால் நடத்தப்பட்டது. அரசாங்கம் எடுத்துக் கொண்ட பிறகு கல்லூரியினுடைய தரம் குறையாதபடி பார்த்துக் கொள்ளவேண்டும். பேருந்துகளை அரசு எடுத்து நடத்தி மக்களுக்கு நன்மையாக இருந்தால் ஆட்சேபணை இல்லை. அரசாங்கம் எடுத்துக் கொள்ள வேண்டும் என்ற கட்டாயத்தின் பேரால் அதை எடுத்து அதன் தரம் குறைந்து போகக் கூடாது என்றே முன்னர் ஒரு நாள் பேசும்போது குறிப்பிட்டேன். தனியார் நடத்தும் கல்லூரிகளில் எவ்வளவோ காரியங்கள் நடந்து வருவதால், மாணவர்கள் அங்கு விரும்பிச் செல்லுகிறார்கள். நம் அரசும் கல்லூரிகளை நன்முறை நிர்வாகிக்குமானால், அவைகளை எடுத்து நடத்தலாம். அப்படி இல்லாத நிலைமையில் அது தவறானது.

அடுத்தபடியாக, கல்வி பற்றிய அறிக்கையில் சேர்ந்துள்ள இன்னொரு விஷயமாகிய ஆர்க்கியாலஜி என்று சொல்லப்படுகிற தொல் இயல் இலாகா பற்றி ஒரிரு வார்த்தைகளைச் சொல்ல விரும்புகிறேன். தஞ்சையில் அரசினர் கலைக் கூடம், அதாவது கவர்ன்மெண்டு ஆர்ட் காலரி, என்று இருக்கிறது. அண்மையில், 3 தினங்களுக்கு முன்னால் என்று நினைக்கிறேன், ஒரு கோஷ்டி கேட்டேன். இந்த அரசினர் கலைக் கூடத்தில் எவ்வளவு விலை மதிப்புள்ள விக்கிரகங்கள், சிலைகள் இருக்கின்றன என்ற கேள்விக்கு அமைச்சர் அவர்கள் ஒரு கோடி ரூபாய் அளவிலே விக்கிரகங்களும் மற்றவைகளும் இருப்பதாகக் குறிப்பிட்டார்கள். அவற்றைப் பாதுகாப்பதற்கு எந்த விதமான காவல் போடப்படுமென்று கேட்டதற்கு, தகுதியான காவல் போடப்படுவதற்கான செயற்குறிப்பு அனுப்பப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். கிட்டத்தட்ட ஒரு ஆண்டுக் காலத்திற்குள்ளாக கலைக்கூடத்திலுள்ள பொருள்களைத் திருடி வெளி நாடுகளுக்கு அனுப்பி விற்பதற்கு இரண்டு தடவைகள் முயற்சிகள் நடைபெற்றிருக்கின்றன. இவ்வளவு விலையுயர்ந்த விக்கிரகங்கள் இருக்கிற இடத்தில் சரியான முறையில் காவல் போட வேண்டுமென்று சொன்னேன். அதற்குப் பின்னால் இரண்டு போலீஸ்காரர்களைக் காவல் காப்பதற்கு ஏற்பாடு செய்திருப்பதாக அறிந்தேன். நான் 5 நாட்களுக்கு முன்னால் அங்கு சென்று விசாரித்ததில் இம்மாதம் 8-ம் தேதி வந்தவர்கள் பிறகு 19-ம் தேதி வரை வரவில்லையென்று சொன்னார்கள். இப்படிப்பட்ட நிலைமை நீடிக்குமானால், நிச்சயமாக அங்கேயுள்ள பொருள்கள் களவாடப்பட்டு விடுமென்று சொல்ல விரும்புகிறேன். தஞ்சை கலைக் கூடத்தில் உலகத்தில் உள்ள மிகச் சிறந்த கலைப் பொருள்கள் காட்சியாக வைக்கப்பட்டிருக்கின்றன. அந்த இடத்தில் இவ்வளவு விலை மதிப்புள்ள பொருள்கள் இருக்கிறபோது, ஆயுதம் தாங்கிய போலீஸ்காரர்களைப் போடுவதில் தயக்கம் என், கஷ்டம் என்ன என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

[திரு. ஜி. சுவாமிநாதன்] [23rd July 1971

இன்னொன்று சொல்ல விரும்புகிறேன், தஞ்சை மாவட்டத்தில் தான் தொல் பொருளாயிய விக்கிரகங்கள், சோழர் காலத்து விக்கிரகங்கள், 9-ம் நூற்றாண்டு, 12-ம் நூற்றாண்டு காலத்தில் விக்கிரகங்கள், நாயக்கர் காலத்து விக்கிரகங்கள் தோண்டியெடுக்கப்படுகின்றன. இந்த விக்கிரகங்களெல்லாம் அந்தந்த மாவட்டங்களில் வைக்கப்பட வேண்டுமென்று அரசு உத்திரவுப் படி சொல்லப்படுகிறது. 1954-ம் ஆண்டில் திருவெண்காட்டில் தோண்டி யெடுக்கப்பட்ட விக்கிரகங்கள் அமெரிக்க [illegible] பிறகு நடந்த ஒரு கண் காட்சிக்கு அனுப்பப்பட்டு அவைகள் [illegible] ரூபாய் பெறுமான விக்கிரகங்கள் என்று மதிப்பிடப்பட்டன. திருவெண்காடு விக்கிரகங்களைத் தான் 1954-இலிருந்து 1963 வரை தஞ்சை மாவட்டத்தில் தோண்டி யெடுக்கப்பட்ட அவ்வளவு விக்கிரகங்களையும் சென்னையில் உள்ள மியூசியத் திற்கு அனுப்பி வைத்தார்கள். தஞ்சையில் வைக்கவில்லை. என் என்றும் தெரியவில்லை. 1963-இலிருந்து இன்று வரையில் கூட ஒரிரு சந்தர்ப்பங்களில் கிடைத்த விக்கிரகங்கள், சென்னைக்குக் கொண்டு வரப்பட் டிருக்கின்றன. அவைகளைச் சென்னையில் நல்ல முறையில் வைத்திருந் தாலும் ஆட்சேபணையில்லை. அவ்வளவு விக்கிரகங்களையும்—சுமார் இரண் டாயிரம் விக்கிரகங்கள் வரை இருக்குமென்று நம்புகிறேன்—கோல்ட் ஸ்டோரேஜில் வைத்திருக்கிறார்கள். வெளியில் கண்காட்சிக்கு வைத்திருந் தால் கூடப் பரவாயில்லை. அப்படி வைக்கப்படாமல் இருக்கின்றன. இப்படி இருக்கத் தஞ்சை கலைக் கூடத்தில் வைக்க ஏன் அரசு ஆதரவு தரக் கூடாது. இந்த நான் குறிப்பிட்ட திருவெண்காடு விக்கிரகங்கள் நம்முடைய முன்னாள் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. பழனியப்பன் காலத்தில் திரு. சா. கணேசன் துணையோடு அங்கு வைக்கப்பட்ட அற்புதமான விக்கிரகங்களாகும். அண்மையில் இந்த ஆண்டில் தஞ்சாவூரிலுள்ள திருவெண்காடு விக்கிரகங்களையும் சென்னை மியூசியத்திற்கு எடுத்து வர வேண்டுமென்று நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக அறிகிறேன். உண்மையாக இருக்குமானால், அது தஞ்சைக்குச் செய்யப்படுகிற மாபெரும் அநீதி என்று சொல்லிக்கொண்டு இது போன்ற காரியங்களைச் செய்ய வேண்டாமென்று அரசை கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, நான் குறிப்பிட விரும்புவது, அதிகரிக்கப்பட்ட ஒய்வு ஊதியம் 58 வயதாகி 2–10–1970-க்குப் பிறகு ஒய்வு பெற்ற ஆசிரியர் களுக்குக் கொடுக்கப்பட்டது. மற்றவர்களெல்லாம் அரசாங்கத்திற்கு விண் ணப்பித்ததற்குப் பிறகு 1–6–1970-க்குப் பிறகு ஒய்வு பெற்று ஆசிரியர் களாகப் பணி புரிபவர்களுக்கு அந்த ஒய்வு ஊதியம் கொடுப்பதாக அர சாங்கம் சொல்லியிருக்கிறது. ஆனால் உள்ள நிலவரம் என்னவென்றால் 1–6–1970-க்கு முன்னாலே ஒய்வு பெற்று தனியார் பள்ளிகளிலே பணி புரிந்துகொண்டிருக்கிற ஆசிரியர்கள் பலர் இருக்கிறார்கள். அவர்களில் சிலர் 1–6–1970-க்கு முன்பு இரண்டு நாட்கள், நான்கு நாட்கள் முன்பு ஒய்வு பெற்றவர்கள். அவர்களெல்லாம் தங்களுக்கு அதிகரிக்கப்பட்ட ஒய்வு ஊதியம் கிடைக்கவில்லையேயென்று மன வருத்தத்தோடு இருக்கிறார்கள். வித்தியாசம் 10 ரூ. 15 ரூபாயாக இருந்தால் கூட கவலைப் படமாட் டார்கள். அதிகரிக்கப்பட்ட ஒய்வு ஊதியத்தில் 80 ரூபாய் வரை அதிகம் வருவதால் அவர்கள் வருத்தப்படுகிறார்கள். 1–6–1970-க்கு முன்னால் பதவியிலிருந்து ஒய்வு பெற்று அதற்குப் பின்னால் ஆசிரியர்களாகப் பணி புரிகிறவர்களுக்கும் இந்த அதிகரிக்கப்பட்ட ஒய்வு ஊதியம் கொடுக்க வேண்டுமென்று வேண்டிக் கொள்கிறேன்.

முடிவாக நான் சொல்ல விரும்பவது, என்னுடைய பட்டதாரி ஆசிரியர்கள் தொகுதியைப் பற்றியதாகும். எனக்கு முன்னால் பேசிய திரு. தாமோதரன் அவர்களும் புலவர் அறிவுடைநம்பி அவர்களும் இதைப் பற்றி எடுத்துச் சொன்னார்கள். பட்டதாரி ஆசிரியர்களுடைய நிலைமை அரசின் கவனத்திற்குரியது என்று சொல்ல விரும்புகிறேன். கல்லூரியில் இருக்கிற டியூட்டர்கள், டெமான்ஸ்ட்ரேட்டர்கள் ஆகிய ஒரு பட்டம் பெற்றவர்களுக்குக் கொடுக்கக்கூடிய சம்பளத்தை விட இரண்டு பட்டம் பெற்ற ஆசிரியர்களுக்கு 50 ரூபாய் குறைத்துக் கொடுப்பது சரியல்ல. உண்மையில் தான் இந்தக் கல்லூரிகளில் இருக்கிற டியூட்டர்கள், டெமான் ஸ்ட்ரேட்டர்கள் மேல் பட்டப் படிப்பு படித்தவர்களாக, போஸ்ட் கிராஜுவேட் படித்தவர்களாக இருக்க வேண்டுமென்று, உத்தரவு போட்டிருக்கிறார்கள்.



23rd July 1971] [திரு. ஜி. சுவாமிநாதன்]

ஆனால் அவர்களுக்கு 400 ரூபாய் அளவில் தனியாகச் சம்பளம் வைக் கப்பட்டிருக்கிறது, இதைப் பார்க்கிறபோது பட்டதாரி ஆசிரியர்களின் ஊதியத்தை 350 ரூபாயாகவாவது உயர்த்தித் தர வேண்டுமென்று அரசைக் கேட்டுக்கொண்டு அமைகிறேன். வணக்கம்.

* THIRU V. ISVARMURTI: Mr Chairman, Sir, as the hon. Members have all spoken with great emotion on the problems of Graduate teachers, I do not like to speak anything further except to request the Government to take an early decision so that the frustration and dejection that is building up among the B.T. teachers may be lessened. In this connection, I would like to make some suggestions to the Government. Why is this feeling of frustration and dejection building up among the teaching community? It is because many decisions, policy decisions—that were announced by the Government have been either withdrawn or given up owing to much resistance. When I read this note on "Progress of Education in Tamil Nadu", I am depressed to find out that many decisions have been withdrawn or given up—for example, the Teachers' Apprentice Scheme, the policy on medium of instruction in two languages, and the inordinate delay on the part of the Government to announce the Selection Grade for B.T. Teachers. The patience of the teachers has reached the breaking point. After I tabled a Call-attention Notice, the Government passed orders creating these posts. Once the Government announce that they would give Selection Grade to all with 10 years' service and the Government have now reduced it to 15 per cent. It is for the following reasons that we are not able to find proper solutions to these problems. For example, the Government had several agencies or machinery to solve this problem outside the Legislature. There was the Education Consultative Committee of which the Hon. the Chief Minister was the President. This Committee has not met for several years. There is a State Advisory Board of Education of which also the Chief Minister is the Chairman. This has also not met for several years. There is the Board of Secondary Education of which the Director of Secondary Education is the Chairman. It has not met for several years. If they had met and solved the problems relating to education, these frustrations and dejections could have been avoided. Except reiterating these things again and again and thus wasting our legislature's time..... p.m. 6.00

THIRU G. SWAMINATHAN : How can the hon. Member say that we are wasting our legislature's time? We are discussing so many important things. How can the Members say that attack on individuals in important positions who are doing disservice is wasting the legislature's time?

THE HON. THIRU P. U. SHANMUGAM : The hon. Member ought not to have said that we are wasting the legislature's time without realising the responsiblity.

THIRU V. ISVARMURTI: I referred to myself that I need not waste my legislature time. I request the Hon. the Minister for Education to revive them on a regular basis, to give ample opportunity to tackle the problems that are coming up, and thus enable the hon. Members to get proper answers. In this connection, I would like to make a special reference to the problem of medium of instruction. I stand for the medium of instruction in Tamil. Why are the Government not able to enforce this Scheme? It is because they have not had wider consultation with all the sections from where the resistance comes.

[Thiru V. Isvarmurti] [23rd July 1971

For example, resistance may come from parients. They feel that their chidren by studying in English medium may have better opportunity in life, and probably they may not be a ware of the advantages of studying in Tamil. They must enlighten the parents by having representatives from various Associations. The Department is anxious to implement the decisions of the Government. In this, they have to safeguard the interests of several linguistic minorities. Yesterday, the Hon. the Chief Minister assured us that their interest would be safeguarded. I fear that in this case also in the face of opposition, the resistance may come from the Government themselves and they may withdraw it. This has happened to the Teachers' Apprentice Scheme. Even last year we were not able to absorb 4,000 teachers under this scheme. We have withdrawn it simply because there was resistance from all quarters. I would like to make a special request to the Hon. the Minister for Education to revive these bodies.

Then, I would like to refer to secondary education. This is a wider subject. I would make an earnest appeal to the Hon. Minister to constitute a Committee to study what are the recommendations of the Kothari Commission, except financial recommendations, that can be incorporated in our Secondary Education System. The Report which has been placed here is not only a Report on the Progress Education, but it also a Report on the Stagnation of Educati8n in our State. I find that no special, substantial suggestion to improve the content of education, except marginal adjustments here and there, has been made in the Report. That is why we are not able to improve the quality of secondary education. I would like to refer to the dearth of trained personnel. There is no proper scheme to train the personnel. I am talking about major reforms in the field of education. When we spend Rs. 82 crores in respect of education, I am sorry to say that there is no singie Ph.D., scholar in the field of education in charge of any of the programmes of qualitative reforms. We are having good Professors in Telugu, Kannada and Malayalam. For example, for Madurai University, we could not get a Professor in Malayalam and somebody who had the minimum qualification has been selected and posted. Priorities should be given to education and the first priority should be given to the setting up of an Institute at the University level and three should be a Research—Applied Research Wing in that Institute in order to tackle all the problems on an objective basis. Even problem of the medium of instruction can be referred to scholars and their suggestions may be implemented. After a peaiad of one or two years, we can make necessary adjustments. We have made some provisions for University education and no attempt has been made to improve the quality of education at the College level. We are going on opening new colleges. Now the attention on the educational system has been shifted from High Schools to Colleges. We have created a lot of sub-standard high schools and we are now concentrating on opening sub-standard colleges.

மாண்புமிகு திரு. ப. உ) சண்முகம் . தலைவர்களே, புதிய கல்லூரிகளையும் புதிய உயர்தர ஆசிரியர்களையும் "சப்-ஸ்டாண்டர்டு" என்று சொல்கிறார்கள். எப்படி என்று புரியவில்லை. புதிய கல்லூரிகளைத் திறப்பதும் புதிய ஆசிரியர்களை நியமிப்பதும் கூடாது. நிறுத்திவிட வேண்டுமென்று கருதுகிறார்களா ? அதைக் காங்கிரஸ் ஆட்சியினால், உபயோகமாக இருக்கும்.



23rd July 1971]

THIRU V. ISVARMURTI : I think there is no conflict between opening new colleges and running them on a higher level. I feel that these colleges should be manned by.....

THE HON. THIRU P. U. SHANMUGAM : I request the hon. Member not to cast aspersions on the Principals.

THIRU V. ISVARMURTI : My suggestion is this. The Government may select some of the old colleges which are 100 years old and declare them as autonomous colleges. This is again a suggestion made by the Kothari Commission and I do not find there will be any difficulty for the Government to implement this reform. They may be declared as independent colleges and they can concentrate on advanced teaching in post-graduate level. Our Professors in the Universities have been.....

THE HON. THIRU P. U. SHANMUGAM : May I request the hon. Member to enlighten us on what is an autonomous college ?

THIRU V. ISWARAMURTI : That is why I requested the Hon. Minister to revive the Consultative Committees and Advisory Boards.

THE HON. THIRU P. U. SHANMUGAM : It is a better forum to know that. I want to know from the hon. Member whether he has got any scheme with regard to autonomous college. Let the hon. Members have the benefit of knowing it.

THIRU V. ISVARMURTI : I can explain. For example, we can give freedom to some of these colleges—selected colleges—to introduce revised syllabus in special fields on apar with International Universities. For example, Home Science is a good subject. We can develop the College. The students can pursue research for M.Sc., and Ph.D., in some subjects. The control of the Government or the University is not necessary.

THE HON. THIRU P. U. SHANMUGAM: Am I to understand that control of the University is not necessary for our Colleges !

THIRU V. ISVARMURTI: I would like to request the Government to consider whether it would be possible to make some Professors in our Universities to teach post-graduate students. The Professor of Philosophy, who is the authority in the field of Philosophy, may be asked to teach the students in such a College. If the student wants to study Philosophy, he can go to that particular College instead of going to other Colleges where the standard may not be high. In education, we must lay stress on quality. I would request the Government to consider this suggestion and declare some Institutions as independent. 6-33 p.m.

THE HON. THIRU P. U. SHANMUGAM : The hon. Member has said that independence should be given to the colleges. I request the hon. Member to explain further what he means by autonomous college. I have heard of autonomous universities but I have not heard of autonomous colleges.

MR CHAIRMAN : The hon. Member's time is up.

[23rd July 1971

**THIRU V. ISVARMURTI:** Another suggestion is this. The University may give affiliation to this Institute or it may be started at the University level itself, so that some qualified Professors may teach students who are pursuing research for higher studies in such Institutes. Now training to the teachers in service are given. They are asked to prepare a revised syllabus without clear thinking. We cannot say that our high schools are on a par with the high schools in the Delhi University area. If we want to improve the quality of secondary education, first we must improve the quality of University education. We should have competent Institutes to take up this problem and make studies and give suitable suggestions.

(The Hon. Chairman sounded the gong.)

Sir, I would like to add one suggestion to improve the quality of secondary education. The studies in secondary schools may be divided into 3 or 4 streams. In France, Switzerland and other places, the high school are divided into several streams. If anybody goes to a school, he can see a Literary stream, a Science stream, a Technical stream and a Vocational stream. At the 8th standard, if a boy is able to prove himself good in anyone of the subjects he will pursue the same subject and thus choose his career. Now what happens here is this. Everybody passes S.S.L.C. and wants II Group with a view to getting admission in a Medical College. In order to get a seat in a Medical College, they adopt all sorts of things. This creates frustration in the minds of students because we do not prepare the students mentally for a vocation. Therefore, I request the Government to consider the possibility of having several streams in High School Education. We can also club P.U.C with the high schools so that at the end of higher education, the students may be able to go in for technical careers. This, I think, is a practicable suggestion which can be implemented on a pilot project basis in some of the high schools and it can be extended on a large scale afterwards.

In conclusion, I would like to point out that we cannot go on opening new colleges every year. Now the opening of engineering colleges has been stopped. The opening of Training Colleges has been stopped. These are all quite good because there is an opportunity to concentrate on improving the quality of such institutions. I would like to request the Government to concentrate on improving the quality of general education rather than opening of new colleges and schools.

With these remarks, I conclude, Sir. Thank you, Sir.

திரு. எஸ். ஜெயராம ரெட்டியார்: தலைவரவர்களே, கல்வித் துறையிலே முக்கிய சடுபாடு கொண்ட பல பேர்கள் இங்கே தங்களுடைய அனுபவத்தைச் சொல்லியிருக்கிறார்கள். நான் சாதாரணமாக கிராமத் திலிருந்து வந்தவன். நெடு நாளைக்கு முன் கல்வி நிர்வாகம் எப்படி நடக்கிறது என்று தெரிந்துகொள்வதற்கு 1940-க்கு முன் ஜில்லா போர்டு தலைவராக இருந்தபோது வாய்ப்பு இருந்தது. அப்போதிருந்த நிலை மையையும் இப்போதுள்ள நிலைமையையும் பார்த்தால், இப்போது ஏராள மான கல்வி ஸ்தாபனங்கள் ஏற்பட்டிருக்கின்றன. என் ஊரில்கூட என்னுடைய முயற்சியினாலே ஒரு ஹைஸ்கூல் ஏற்பட்டிருக்கிறது. அதற்கு 30 ஆயிரம் ரூபாய் வரையிலும் என் கையிலிருந்து கொடுத்திருக்கிறேன். அப்படியிருந்தும்கூட சமீபத்தில் 5 எக்கர் நிலம் வேண்டு மென்று கேட்டார்கள். பக்கத்திலிருக்கிறவர் நிலத்தைக் கேட்டால் என் நிலத்தைக் கேட்கிறீர்களே, முதலாளி என்று சொல்கிறார். அதிலே இப்படி சிக்கல்கள் இருக்கின்றன. அவ்விஷயம் செய்துகொள்ளுங்கள்



23rd July 1971] [திரு. எஸ். ஜெயராம ரெட்டியார்]

என்று ஏற்பாடாகியிருக்கிறது. அப்படிப்பட்ட நிலைமை இருக்கிறது. இந்த மாதிரி இல்லாதபடி இருக்கிற ஸ்தாபனங்கள் நல்லமுறையில் நடத்து வதற்கு என்ன செய்ய வேண்டுமோ அதைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மொழிப் பிரச்னையைக் குறிப்பிட்டுப் பேசும்போது, தமிழில் இத்தனை பேர் சேர்ந்திருக்கிறார்கள், ஆங்கிலத்தில் இத்தனை பேர் சேர்ந்திருக்கிறார்கள் என்றெல்லாம் பேசினார்கள். தாய்மொழி மீது ஆசை எனக்கும் இருக்கிறது. இருந்தாலும் நம் மாணவர்கள் ஆங்கில மொழியையும் பயின்று அகில இந்தியப் போட்டியில் அதிகமாக வர வேண்டும். அதிலே நம் ஆட்கள் குறைந்து விடக் கூடாது என்பது என்னுடைய ஆசை. 15 வருடங்களுக்கு முன்னாலே டில்லியில் ஒரு மில் லேபர் கமிட்டி போயிருந்தேன். அங்கு தமிழ்நாட்டிலிருந்து சென்றவர்கள் இருந்தாலும், சிக்கிரமாக அலுவல் எடுத்து வர முடிந்தது. இப்போது ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். லிஸ்டு வருகிறபோது தமிழ் பேர்கள் எவ்வளவு என்று பார்த்தேன். என் வீட்டிலிருந்து யாரும் போகவில்லை. அதிகம் பேர்கள் வருவதில்லை. எத்தனை பெரிய மந்திரிகள் இருந்தாலும் கூட உத்தியோகஸ்தர்கள் எத்தனை பேர்கள் இருக்கிறார்கள் என்பதுதான் முக்கியம். அவர்கள் அதனைப் பொறுத்துத்தான் தமிழ் நாட்டின் வளம் பெருகுவது இருக்கிறது. இதைச் செய்ய வேண்டும்.

நகராட்சி துறையில் நடக்கும் நிறுவனங்களைப்பற்றிச் சில வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன். சாதாரணமாக ஒரு சென்ட் நிலம் புறம்போக்கு நிலம் 200 ரூபாய் வாங்கிக்கொண்டிருந்தார்கள். இப்போது 500 ரூபாய் கொடுங்கள் என்று கேள்விப்படுகிறேன். அரசுத் துறையில் நடக்கிற ஸ்தாபனங்களை விட நகராட்சி ஸ்தாபனங்கள் நன்முறை நடக் கின்றன. ஆனாலும் சில இடங்களில் குறைந்த மார்க் வாங்கியவர்களுக்கு ஒரு ஜாதியின் பேரில் இடம் கொடுத்து விட்டு, நிறைய மார்க் வாங் கியவர்களை மற்றவர்கள் இருந்தாலும் அந்த ஜாதிக்குப் போக மிச்சமுள்ள இடங்களைத் தருகிறார்கள். இன்னும் கேள்ஸ், ப்ரைமரி ஸ்கூல்களில் இடம் கிடைப்பது மிக கஷ்டமாக இருக்கிறது.

அந்த மாதிரி இருக்கிறபோது, நகராட்சி நிர்வாகத்திலே இருக்கின்ற காலேஜ்களிலே எந்தவிதமாக அப்ளிகேஷன்கள் வருகின்றன, அதில் எப்படி எடுக்கிறார்கள் என்பதைச் சீர் தூக்கிப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மதிய உணவைப்பற்றி ஒன்று சொல்ல விரும்புகிறேன். ஆறு டைசா கொடுத்தால் 4 டைசா வாங்க வேண்டும். எங்கள் ஊரிலே வாங்குவதில்லை. எங்கள் ஊர் கொஞ்சம் செழுமையான ஊர். அதிலேகூட ஒருத்தருக்கும் கொடுக்கமாட்டேன் என்கிறார்கள். ஆகவே கணக்கு எப்படி எழுதுகிறார்களோ தெரியவில்லை. ஆனால் நடந்துகொண்டிருக்கிறது. எப்படியோ நடத்துகிறார்கள். பொதுவாக நான் அதிகமாகப் பேச விரும்பவில்லை. கல்வித் துறையிலே ஏராளமாகச் செலவிட்டு நன்முறை நடத்த வேண்டும் என்ற ஆர்வத்தைக் கொண்டிருக்கிறது இந்த அரசு. அதே நேரத்திலே படித்த பட்டதாரிகள் வேலையில்லாமல் கஷ்டப் படுகின்றனர். அவர்கள் நக்சல்பாரிகளாக மாறிவிடக்கூடாதே என்ற எண்ணத்தினாலேதான் சொல்கிறேன். அதனாலேதான் முந்தாநாள் கேள்வி நேரத்திலேகூட சொன்னேன். அந்த மாதிரி இல்லாதபடி பார்த்துக்கொள்ள வேண்டும். மந்திரிக்கு அழகு வரும்பொருள் உரைத் தல் என்ற மாதிரி, நாம் வருங்காலத்திலே வருகிற படித்தவர்களுக்கு, மாணவர்களுக்கு எல்லாம் அவர்களுடைய எண்ணங்கள் தவருன வழி யிலே போகாமல், வேலைக்கு வாய்ப்பு அளிக்கும் முறையிலே, நம்முடைய சமுதாயத்திலே நல்லவர்களாக இருக்கும்படியான ஒரு சூழ்நிலையை ஏற்படுத்துவதற்கு இந்த அரசாங்கம் வழி செய்ய வேண்டும் என்ற கருத் தினை மட்டும் இந்த இடத்தில் சொல்லிக்கொண்டு என் பேச்சை முடித் துக் கொள்கிறேன்.

[23rd July 1971

திரு. எம். அய்யாசாமி : தலைவர் அவர்களே, இந்தக் கல்வி சம்பந்தப் பட்ட அறிக்கையின் மீது மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் பல கருத்துக்களைத் தெளிவாக எடுத்துக் கூறியிருக்கிறார்கள். நான் குறிப்பாக ஒன்றிரண்டு விஷயங்களை மட்டும் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர வேண்டும் என்பதற்காகவே இங்கே சிறிசில வார்த்தைகளைச் சொல்ல விரும்புகிறேன்.

6-40 p.m.

அமைச்சர் அவர்கள் இன்றைய தினம் ஒரு கேள்விக்குப் பதிலளிக் கும்போது சொன்னார்கள், தனியார் பள்ளிகளின் நிர்வாகிகள் மீது சர்க்கார் நடவடிக்கை எடுப்பதற்கு சட்டத்தில் எந்தவிதமான வசதியும் இல்லை என்று. தனியார் பள்ளிகளுக்கு ஏற்படக்கூடிய எல்லாச் செலவுகளுக்கும், ஆசிரியர்களுக்குச் சம்பளம் உட்பட அரசாங்கமே பொறுப்பேற்றுக்கொண்டு, மதிய உணவு போன்றவைகளுக்குகூட மேனேஜ்மெண்ட் பெயரில் எராள மான பணத்தை அள்ளிக்கொடுத்துக்கொண்டிருக்கிற நேரத்தில், அந்த நிர்வாகிகள் சரிவர நடத்துவதில்லை என்ற புகார்கள் வருகிறபோது, அந்த நிர்வாகிகள் மீது நடவடிக்கை எடுக்க, சட்டத்தில் இடமில்லை என்ற நிலை என்றால், எப்படி பள்ளிக்கூடங்களிலே ஒழுங்கான நிர்வாகத்தை எதிர்பார்க்க முடியும் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எண் ணிப்பார்த்து, அதற்கு ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள் கிறேன். இதுபோன்ற சம்பவங்கள் நாடெங்கும் ஏற்பட்டுக்கொண்டிருக் கின்றன. மதுரையிலே ஒரு நடுநிலைப்பள்ளி 3 வருடங்களாக அங்கே நடைபெறுகிற நிர்வாக ஊழல் இன்ன அளவு என்று சொல்ல முடியாது. சென்ற ஆண்டிலேயே நமது மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலே இதுபற்றிய ஒரு புகார் கொடுத்தேன். அங்கே ஆசிரியர்களுக்குச் சம்பளம் கொடுபடாத நிலையை மாற்றி, உடனடியாகச் சம்பளம் கொடுக்க உத்தரவு போடப்பட்டது. அதற்குப் பின்னாலும்கூட இன்றுவரை அதே நிலையில்தான் அந்தப் பள்ளி இருந்துகொண்டிருக்கிறது. அது மாத் திரமல்ல. கல்வி இலாகா அதிகாரிகள் அந்த நிர்வாகிகள் செய்வது தவறு என்று பல முறை தீர்ப்பளித்திருக்கிறார்கள். அந்த ஆசிரியர்கள் பழிவாங்கப்பட்டது தவறு என்று பலமுறை தீர்ப்பளித்திருக்கிறார்கள். நீதிமன்றத்திலேகூட அந்த நிர்வாகிகள் செய்வது தவறு என்று தீர்ப் பளிக்கப்பட்டிருக்கிறது. ஆனாலும் அந்த நிர்வாகி அந்தப் பள்ளிக் கூடத்திலே வேலை பார்க்கக்கூடிய ஆரம்ப ஆசிரியர்களுக்குச் செய்யக் கூடிய கொடுமை, அந்த ஆரம்ப ஆசிரியர்களுடைய வாழ்க்கையிலே விளையாடுகின்ற நிலையைப் பார்த்தால் இப்படியும் ஒரு பள்ளிக்கூடம், சர்க்கார் உதவி பெறும் பள்ளிக்கூடம் இருக்கலாமா ? இதுபோன்ற நிலைமைகளையெல்லாம் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நல்லவிதமாகத் திருத்துவதற்கு ஒரு சரியான ஏற்பாட்டைச் சட்டபூர்வமாகச் செய்வதற்கு முயற்சிக்க வேண்டும் என்று மிகப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். இன்னும் கல்லூரிகளைப் பொறுத்த வரையிலேகூட இந்த அட்மிஷன் நேரங்களிலே நடக்கின்ற விரும்பத்தகாத நிகழ்ச்சிகள் பல நான் கேள்விப் படுகிறேன். பல இடங்களிலே அட்மிஷனுக்காக என்று மாணவர்கள் சென்று அலைந்து பலர் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். அது மட்டு மல்ல. சென்னையை அடுத்த குன்றத்தூருக்கு அருகில் உள்ள சிறுகளத்தூர் என்ற ஊரில் அந்தக் கல்லூரியின் முகவரியே கொடுக் காமல் சென்னை-52 என்று நம்பரைக் குறிப்பிட்டு அங்கே கல்லூரி இருக்கிறது, மாணவர்கள் சென்று படியுங்கள் என்று திருவல்லிக்கேணி விலாசத்தைக் கொடுத்து, அந்த விலாசத்திலிருந்து ஏராளமான மாண வர்களைச் சேர்த்து, அவர்களிடத்தில் பணத்தை வாங்கிக்கொண்டு, அவர்களைச் சேர்த்துக்கொள்கிறார்கள். அந்த மாணவர்கள் அங்கே சென்றுபார்த்தால், அங்கே கல்லூரி இல்லை, ஒரு குடிசை தான் இருக்கிறது. அங்கே மாணவர்கள் படிக்க வசதி இல்லை. போதுமான ஆசிரி யர்களாவது வைத்திருக்கிறார்களா என்றால், ஒரிருவரைத்தான் பெயருக்கு வைத்திருக்கிறார்கள். ஆகவே அது கல்லூரியாகவே இல்லை என்று சேர்ந்த மாணவர்கள் பெரும்பான்மையோர் திரும்பிவந்திருக்கிறார்கள். வந்த மாணவர்களெல்லாம் வேறு கல்லூரிகளில் இடம் தேடிக்கொண் டிருக்கிறார்கள். சென்ற ஆண்டிலேயும் அதே கல்லூரியில் இதைப் போலவே நிகழ்ச்சி ஏற்பட்டு அங்கே சேர்க்கப்பட்டவர்களுக்கு எல்லாம் வேறு



23rd July 1971] [திரு. எம். அய்யாசாமி]

கல்லூரிகளில் இடமளிக்க வேண்டும் என்று அரசு உத்தரவு அளிக் தாகக் கேள்விப்பட்டேன். அதே நிலையில் இந்த ஆண்டும் அங்கே நடந்திருக்கிறது என்றால், அந்தக் கல்லூரியின் மீது தகுந்த நடவடிக்கை எடுக்காமல் இருக்கலாமா ? உடனடியாக அதற்கு வேண்டிய பரிகாரம் காண அரசு ஆவன செய்ய வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

இன்னும் பெரும்பாலான மாணவர்கள், குறைந்த மார்க் வாங்கிய பின்தங்கிய நிலையிலே உள்ளவர்கள் கல்லூரிகளிலே இடம் கிடைக்காமல் கஷ்டப்படுகிறார்கள். இன்னும் சொன்னால், எங்களைப் போன்ற சாதாரண நிலையிலே உள்ள மாணவர்கள், நல்ல மார்க் வாங்கியிருப்பவர்களுக்குக் கூட இடம் கிடைக்கவில்லை. ஒரு மாணவர் முதல் வகுப்பிலே தேறியவர் பி.யு.சி.யிலே லயோலா கல்லூரிக்கும், பச்சையப்பன் கல்லூரிக்கும் மனுப் போட்டார். லயோலா கல்லூரியிலேயிருந்து "ரிஜக்ட்" என்று வந்து விட்டது. பச்சையப்பன் கல்லூரியிலேயிருந்து இன்ட்டர்வியூ வரவில்லை. ஆகவே அந்த மாணவர் வேறு கல்லூரிகளுக்கும் விண்ணப்பம் போடாத காரணத்தால், சேர வாய்ப்பில்லாமல் இருக்கிறது. இது போன்ற நிலைமை கள் நாட்டிலே இருக்கின்றன என்பதை நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவந்து, எல்லா மாணவர்களுக்கும் இடம் கிடைக்கும் ஏற்பாட்டைக் காலம் தாழ்ந்தபோதும் ஏற்பாடு செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

சாதாரணமாக ஏழை எளியவர்கள், குறைந்த வருமானம் உடை யவர்கள், மிகச் சாதாரணமான நிலையிலே உள்ள வீட்டு மாணவர்கள் எல்லாம் கல்லூரிகளிலே சென்று படிக்க வேண்டும் என்று ஆசைப்படு கிறார்கள். அப்படி ஆசைப்படுகிறவர்களுக்கு இன்றைய சூழ்நிலையிலே கல்லூரிகளிலே இடம் கிடைப்பது மிகக் கஷ்டமாக இருக்கிறது. ஆகவே கல்லூரிகளிலே படிக்க விரும்புகிற மாணவர்களுக்கெல்லாம் எந்தக் கல் லூரியிலேயாவது இடம் கிடைக்கும் நிலையை உருவாக்கித் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அது மாத்திரமல்ல, கல்லூரிகளிலே மாணவர்களைத் தேர்ந்தெடுக்கும் முறையிலேகூட அரசாங்கம் பொறுப் பேற்றுக்கொண்டால், மிகவும் நன்றாக இருக்கும். அந்தந்த மாவட் டங்களிலே இருக்கக்கூடிய கல்லூரிகளுக்கு ஒரே இடத்துக்குத்தான் விண் ணப்பத்தாள் அனுப்புவது, அவர்கள் எந்த எந்தப் பகுதியிலே இருக் கிறார்களோ அந்த அந்தப் பகுதியிலே சேர்வதற்கு உத்தரவு போடுவது என்ற முறை வந்தால், இந்தக் கல்லூரிகளில் இட நெருக்கடி இல்லாமல் போய்விடும். பெரும்பாலான மாணவர்கள் 10, 20 கல்லூரிகளில் அப்ளிகேஷன்களை அனுப்பிவிடுகிற காரணத்தால், ஆயிரக் கணக்கான விண்ணப்பங்கள் இருக்கின்றன. ஒரே விண்ணப்பந்தான் என்றால், பத்தில் ஒன்றுதான் வரும். ஆகவே இதனால் கூடுமானவரை சிரமம் இல்லாமலிருக்கும் என்று நான் கருதுகிறேன். ஆகவே இந்த நிலைமை களை முன்னிட்டு விண்ணப்ப பாரங்கள் பெற்று தேர்ந்தெடுக்கிற பொறுப் பையே அரசாங்கம் எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள் கிறேன். முதலிலே ஆரம்பப் பள்ளிக்கூடங்களிலே நடக்கிற அக்கிரமங் களையெல்லாம் சொன்னேன். அது போன்ற நிலைமைகள் எல்லாம் இன்னும் நடக்காமலிருப்பதற்கு உடனடியாக ஆவன செய்ய வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொண்டு, ஆசிரியர்கள் அத்தனைபேரும் கையெழுத்துப் போட்டு ஒரு மகஜரையே கொடுத்திருக் கிறார்கள். அதை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலே கொடுக் கிறேன். அவர்கள் இதன்மீது தகுந்த நடவடிக்கை எடுக்க ஆவன செய்ய வேண்டும், அந்த ஆசிரியர்களுக்கு நல்லதொரு வாழ்வை உண் டாக்க வேண்டும் என்று மிகப் பணிவோடு கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

திரு. எஸ். முத்துசாமி : தலைவரவர்களே, இந்த அவையின் முன் வைக்கப்பட்டுள்ள கல்வி முன்னேற்ற அறிக்கையின் மீது பேசுவதற்குக் காலம் குறுகியதாக இருந்தாலும், தமிழ்நாடு ஆசிரியர்களின் பிரதிநிதி

[திரு. எஸ். முத்துசாமி] [23rd July 1971

6-50 p.m. என்ற முறையிலே, உயர்நிலைப்பள்ளி ஆசிரியர்கள் பிரதிநிதி என்ற காரணத்தினால், தலைவரவர்கள் அதிகமாகப் பேசுவதற்கு வாய்ப்புக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மிஸ்டர் சேர்மன் : ஆசிரியர்களின் பிரதிநிதிகள் பலர் பேசி விட்டார்கள். ஆகையால் உறுப்பினர் அவர்கள் சுருக்கமாக முடித்துக் கொள்ள வேண்டும்.

திரு. எஸ். முத்துசாமி : தலைவர் அவர்களே, மிகக் குறுகிய காலமே அளித்திருப்பதால் சுருக்கமாகவே பேசி முடித்துக் கொள்கிறேன். இந்த அறிக்கையை பார்க்கும்போது, கடந்த காலத்திலே எப்படி இருந்தாலும் ஊதியக்குழுவின் சிபாரிசுப்படி. பல சலுகைகள் இன்றைக்கு அளிக்கப்பட்டு வருகின்றன. இன்றைய காலேயிலே ஒரு அறிக்கையை வெளியிட்டிருப்பதாகக் கல்வியமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். இவ்வளவு நாட்களாக வெளியிடாமல் இன்றைக்காவது இப்படிப்பட்ட அறிக்கையை வெளியிட்டதற்காக இந்த அரசை நான் பாராட்டி என்னுடைய மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்கிறேன். கல்லூரியிலிருந்து தொடக்கப்பள்ளி வரையில் பணியாற்றுகிற ஆசிரியர்கள் அனைவருக்கும் 10 ஆண்டுக்கால் பணி புரிந்த ஆசிரியர்கள் அனைவருக்கும் இந்தச் சலுகையை அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஊதியக் குழுவின் பரிந்துரையின்படி, தொடக்கப் பள்ளிகளில் பணி புரியும் தலைமையாசிரியர்களுக்கு அரசு நிர்ணயித்திருக்கும் சம்பள விகிதம் இன்னும் கொடுக்கப்படாமல் இருந்து வருகிறது. இதை உடனடியாக அமுல்படுத்துவதற்கு அரசு உத்திரவு பிறப்பிக்கவிருப்பதற்காக வருந்துகிறேன். இதற்காகப் பலமுறை எடுத்துச் சொல்லியும் இதுவரையில் அதற்கான உத்திரவுகள் வெளியிடப்படாமல் இருப்பது கண்டு நான் மிக்க வேதனைப் படுகிறேன். ஊதியக் குழுவின் பரிந்துரைப்படி, செகண்டரி கிரேட் ஆசிரியர்களுக்கு ரூ. 210-325 கொடுக்கப்படுகிறது. இதற்கு அதிகமாகக் கொடுக்கவேண்டுமென்றும், நிதிப் பற்றாக்குறை எனக்கிறார்கள். 21 கோடி ரூபாய் அதிகமாக ஊதியம் கொடுக்க இந்த அரசு நடவடிக்கை எடுத்திருப்பதை வரவேற்கிறேன். ஆனால் எங்களுக்குக் கொடுத்திருப்பதாக விளம்பரம் செய்யப்படுகிறது. எயிடட் பள்ளி ஆசிரியர்களுக்கு கொடுக்கப்பட்ட உயர்வு 13 சதவீதம். ஆனால் இந்த எயிடெட் பள்ளி மானேஜ்மெண்டுக்கு மெயின்டனென்ஸ் கிராண்ட் நிர்வாக மானியமாகக் கொடுக்கப்பட்டிருப்பது 230 சதவீதம். இது யாருக்கும் வெளியில் தெரிவது இடையாது. அக்டோபர் 1-ம் தேதிக்கு முன்பு இந்த எயிடட் பள்ளி மானேஜ்மெண்டிற்கு மெயின் டெனென்ஸ் கிராண்டாக 12 சதவீதம் கொடுக்கப்பட்டு வந்தது. ஊதியக் குழுவின் சிபாரிசின் படி அவைகள் மெர்ஜ் செய்யப்பட்டு சம்பள விகிதங்கள் நிர்ணயிக்கப்பட்ட காரணத்தினால், இந்த மெயின்டனென்ஸ் கிராண்ட் 230 சதவீதம் உயர்த்தப்பட்டிருக்கிறது. இதில் எதுவும் நியாயம் இருக்க முடியாது. இந்த மெயின்டெனன்ஸ் கிராண்ட் முன்பு 75 லட்சத்திற்குக் குறைவாக இருந்தது. இப்போது ஒரு கோடி ரூபாய்க்கு மேல் ஆகிறது. அக்டோபர் 1-ம் தேதி, இரண்டாம் தேதி எவ்வளவு இருந்ததோ அதை மட்டும் கொடுத்து விட்டு மீதமுள்ள நிதியை ஆசிரியர்களுக்கு ஊதிய உயர்வு அளிக்கப் பயனபடுத்த வேண்டுமென்று இந்த நேரத்திலே கல்வியமைச்சரைப் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, தனியார் கல்வி நிலையங்களில் பணிபுரிகின்ற ஆசிரியர்களின் நிலை மிகவும் பரிதாபத்திற்குரியதாக இருக்கிறது. திரு. சங்கரலிங்கம் அவர்கள் பேசுகிற போது, இதைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். திரு சுவாமிநாதன் அவர்கள் பேசும்போதும், எயிடெட் பள்ளிகளில் எப்படி ஆசிரியர்கள் அடிமைகளைப் போல நடத்தப்படுகிறார்கள் என்று குறிப்பிட்டார்கள். ஒரு சட்டமன்ற உறுப்பினர் கரெஸ்பாண்டெண்டாக உள்ள ஒரு பள்ளிக்கு ஒரு ஆசிரியரின் விஷயமாகச் சென்றிருந்தேன். எனினை மதித்துப் பேசக்கூட அவர் தயாராக இல்லை. இந்த ஜனநாயக நாட்டில் இப்படி அடிமை வாழ்வு நீடிக்க வேண்டுமென்றால், அதைப்



23rd July 1971] [திரு. எஸ். முத்துசாமி]

பொறுத்துக்கொள்ள முடியாது. எனவே இப்படிப்பட்ட தனியார் பள்ளிகளையெல்லாம் அரசாங்கமே எடுத்துக் கொள்ள வேண்டுமென்று இந்த நேரத்திலே வலியுறுத்திச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, மதுரையில் நடைபெற்ற ஒரு மாநாட்டிலே தொடக்கப்பள்ளி ஆசிரியர் கூட்டணி மாநாட்டிலே கலந்துக் கொண்ட கல்வியமைச்சர் அவர்கள் இரண்டு உறுதிமொழிகளைத் தந்தார்கள். தமிழ்நாடு தொடக்கப் பள்ளி ஆசிரியர்கள் கூட்டணி அலுவலகத்திற்குக் கட்டடம் கட்டுவதற்கு இந்த அரசு எஸ். ஜி. ஒ.க்களுக்குக் கொடுக்கப்பட்டிருப்பது போல இடம் கொடுப்பதாகத் தெரிவித்தார்கள். அதோடு மூன்று லட்ச ரூபாயும் நிதி ஒதுக்கியிருப்பதாகத் தெரிவித்தார்கள். அதை விரைவாக நடவடிக்கை எடுத்து முடித்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, செகண்டரி கிரேட் இடத்தில் பணி செய்யக்கூடிய ஜூனியர் கிரேட் ஆசிரியர்கள் எல்லோருக்கும் அதிக ஊதியம் கொடுப்பதற்கு அரசு உத்திரவிட்டிருந்தாலும், கல்வி இயக்குனரால் எடுக்கப்பட்ட புள்ளி விவரங்களின்படி, 5,000 பேர்கள்தான் இப்படிப் பணியாற்றுகிறார்கள் என்று தெரிகிறது. எண்ணிக்கையில் சுட்டிக்காட்டுகிறபடி 5,000 பேர்களுக்கு மேல் இருக்கலாம். ஆனால் அவர்களின் எண்ணிக்கை இருக்கிறது. இப்படிக் கல்வி இயக்குனரால் கொடுக்கப்படும் புள்ளி விவரங்கள் சரியாக இல்லாத நிலையில், ஆசிரியர்களுக்கு என்னென்ன முடியுமோ அதை எதிர் காலத்தில் திருத்துவதற்கு அரசு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள வேண்டும்.

அடுத்து, பட்டதாரி ஆசிரியர்களுடைய வகுப்பை முழுவதுமாக மாற்றி ஒரு அறிவிப்பைத் தெரிவிப்பார் என்று நம்புகிறேன். அவர்களுடைய மாநாட்டிலே அவர்களுடைய கோரிக்கை நியாயமானது என்று ஒப்புக்கொள்ளப்பட்டது. அரசு அதைப்பற்றி தீவிரமாக பரிசீலித்து ஒரு முடிவு தெரிவிக்கும் வகையில், அவர்கள் சிறு விடுப்பில் செல்ல வேண்டுமென்று முதலமைச்சரவர்கள் கேட்டுக் கொண்டார்கள். ஆசிரியர்களும் இந்த வேண்டுகோளுக்கு இணங்கித் தங்களுடைய நடவடிக்கையை நிறுத்தி வைத்திருக்கிறார்கள்.

அடுத்து, உயர்நிலைப் பள்ளிகளில் பணியாற்றி வருகிற இந்தி ஆசிரியர்கள் அந்தப் பதவிகளிலிருந்து மாற்றப்பட்டு நேரத்தில் எஸ்.எஸ்.எல்.சி. எழுதுபவர்களுக்கு இன்ஸ்பெக்டர் மூலமாக பெற்று செகண்டரி கிரேட் ஆசிரியர்களாகப் பணிபுரிந்து வருகிறார்கள். அவர்களுக்கு எஸ்.எஸ்.எல்.சி. பரீட்சை எழுதுவதற்கு ஐந்தாண்டுகள் கொடுக்கப்பட்டது. பல பேர் எஸ்.எஸ்.எல்.சி. பரீட்சை எழுதுவதற்கு உரிமை கேட்டிருக்கிறார்கள். அந்த உரிமையை அவர்களுக்குக் காலந் தாழ்ந்தாமல் அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து உயர்நிலைப் பள்ளிகளில் கைவண்ணம் பயிற்றுவிப்பவர்கள் 7.00 களாகப் பணியாற்றும் "அக்கிலெஸ்சல் இன்ஸ்ட்ரக்டர்ஸ்" தேர்வுநிலை p.m. சம்பளம் நிர்ணயம் செய்யப்படாமல் ரூ. 250-ல் நிறுத்தி வைக்கப் பட்டிருக்கிறார்கள். அவர்கள் விடுப்பட்டிருக்கிறார்கள். அவர்களுடைய கோரிக்கையை அரசு கவனிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஆங்கிலோ இந்தியன் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு ஊதியக் குழுவின் சிபாரிசின்படி ஊதியம் உயர்த்திக் கொடுக்கப்படவில்லை. பி. இடி. க்களுக்கும் புதிய சம்பளம் நிர்ணயம் அமுல்படுத்தாமல் விடப்பட்டிருக்கிறது. அவர்கள் இதைப்பற்றி அரசாங்கத்திலே கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். இந்தப் பிரச்சனையை உடனடியாகக் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆசிரியர்கள் பிரச்னையில் எந்தப் புள்ளி விவரமாக இருந்தாலும் அவை நல்ல முறையிலே சரியாக இருக்கவேண்டுமென்று, அப்படிப் பட்ட முயற்சிகளிலே ஈடுபட வேண்டுமென்று நான் மீண்டும் கேட்டுக்கொள்கிறேன். ஊதியக் குழுவின் சிபாரிசுகளின்படி ஊதிய உயர்வு அளிக்கப்பட்டிருக்கிறது.

[திரு. எஸ். முத்துசாமி] [23rd July 1971

மதிய உணவுத்திட்டத்தைப் பற்றி எடுத்துச் சொல்லின்றபோது, புள்ளிவிவரப்படி 6 பைசா அரசாங்கத்திடமிருந்து பெறக்கூடியது எனறும் மீதி மக்களிடமிருந்தும் என்றும் சொல்லப்படுகிறது. 1967 மே மாதம் ஊட்டியில் நடந்த ஒரு மாநாட்டில் நான் பிரதிநிதியாகப் போயிருந்தேன். அப்போது எடுத்துச் சொன்னது ஒரு மாற்றுத் திட்டம். அந்த மாற்றுத் திட்டம் இன்னும் வரவில்லை. 4 பைசா வசூல் செய்வது இப்போது இல்லாத ஒன்று. இல்லாத ஒன்றை ஆசிரியர்கள் கணக்கில் எழுதிக் கொண்டிருப்பதை தள்ளிவைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, எல்லா ஆசிரியர்களுக்கும் ஒரேயொரு வழியப்பட்டியல் (சர்வீஸ் ரெஜிஸ்டர்) வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஒரு நிர்வாகத்திலிருந்து இன்னொரு நிர்வாகத்திற்கு மாற்றப்பட்டவர்கள், வேலையிலிருந்து நீக்கப்பட்டவர்கள், தொழிலாளர்களுக்கும் மற்றவர் களுக்கும் இருக்கக்கூடிய கார்டுகளைப் போல பட்டியலை வைக்க அரசு முடிவுபடும் என்று மாநாட்டில் அப்போது முடிவெடுத்திருக்கிறார்கள். அந்த விஷயத்தைக் கல்வியமைச்சர் அவர்கள் தங்கள் காலத்திலேயே விரைவாக நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். உயர்நிலைப்பள்ளி ஆசிரியர்கள், தலைமை ஆசிரியர்கள், சூபரான்யுவேஷன் பீரியடிற்கு அதாவது 58 வயதுக்குப் பிறகும் பணியாற்றுகிறார்கள். 60 வயதில் ரிடையராகும் நிலைக்கு மேனேஜ்மெண்டு அனுமதியளிக்கிறது. 60 வயது வரையில் சம்பளம் முழுமையாக பெறும் வகையில் இருக்கிறார்கள். இந்தப் பென்ஷன் சலுகை 1970-71 கலவியாண்டில் அக்டோபர் 2-ம் தேதிக்கு முன இருப்பவர்களுக்கும் (Implement) செய்வது போல் இருக்க வேண்டும். அப்படி உள்ளவர்கள் 100 லிருந்து 200 வரை தான் இருப்பார்கள். அதைச் செய்து தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

* திரு. கே. ராமகிருஷ்ண ஆச்சாரி: மாண்புமிக்க கலைவரவர்களே, தமிழ்நாட்டில் கல்வி முன்னேற்றம் பற்றிய இந்த விவாதத்தில் கலந்து கொள்வதற்கு எனக்கு வாய்ப்பளித்தற்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். நமது மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் ஆலங்காய் மொழி அண்ணா கல்லூரிக் கட்டிடக் காண்கோல விழாவிற்கு சென்ற எப்ரலில் விஜயம் செய்திருந்தார்கள். அந்த சந்தர்ப்பத்தில் அவர்கள் அமெரிக்கா, மற்றும் பல இடங்களுக்குச் சென்று அவர்கள் பார்த்ததையும் கேட்டதையும் ஒட்டி, ஒரு விரிவான உரையைக் கேட்க நாங்களெல்லாம் மகிழ்ச்சியடைந்து எதிர் காலத்தில் நம் கல்வி வளர்ச்சி நன்றாக அமையுமென்று எதிர்பார்க்கிறோம். அது சம்பந்தமாகப் பல உறுப்பினர் கள் பேசியிருக்கிறார்கள். ஆனால் முக்கியமாக இந்த சந்தர்ப்பத்தில் அதற்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். நமது அண்ணா கல்லூரி முதல்வர் மாண்புமிகு திரு. சங்காலிங்கம் அவர்கள் ஆளும் கட்சித் தரப்பிலிருந்து ஒரு சவால் விட்டார்கள். அதற்கும் நன்றி. அவர்கள் காலத்தில் இரண்டு கல்லூரிகளை ஸ்தாபித்து ஒரு கல்லூரியை விட்டு விட்டு இப்போது ஒரு கல்லூரியில் பருப்பாடு பட்டு வருகிறார். மாணவர்கள் யார் யார் சினிமாவிற்குப் போகிறார்கள், எவனெவனை தப்புச் செய்கிறார்கள் என்ற குறிப்புகள் அவர் இங்கு இருந்தால் கல்லூரி சென்றதும் அவருக்கு வந்து விடும். அவர் அவர்கள் மீது நடவடிக்கையும் எடுப்பார். அதனால் மாணவர்கள் ஒழுக்க முறையில் குறைவின்றி நடந்து வருகிறார்கள். அதற்கும் நன்றி சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன். இருந்தாலும் திரு. ஜி. சுவாமிநாதன் அவர்கள் ஒரு சந்தேகத்தைக் கிளப்பிவிட்டார்கள். அதிலிருந்து அரசுக் கல்லூரி அமைய வேண்டுமா, வேண்டாமா என்ற சந்தேகம் நிறைந்திருக்கிறது. நான் என் நண்பரிடத்திலே சென்று எஸ். எஸ். எல். சியில் பெண்கள் அதிகமாகத் தேறியிருக்கிறார்கள், ஆகவே அவர் சென்ற வருஷம் ஆரம்பித்த கல்லூரியில் அவர்களுக்குத் தனியாக ஒரு கிளாஸ் வைக்கவேண்டுமென்று கொம்பக் கேட்டுக்கொண்டேன். ஒரு மணி நேரத்திற்கு அவர் சொன்ன பதிலானது, இந்த நிர்வாகத்தை நடத்த நான் பெரும்பாடு பட்டிருக்கிறேன். அதிலே பெண்களுடைய கிளாஸ் வைக்க வேண்டு மென்றால் இருக்கிற மரியாதையும் கெட்டுப் போகக்கூடாது, மேலும்



23rd July 1971] [திரு. கே. ராமகிருஷ்ண ஆச்சாரி]

அதற்கான காரியங்கள் செய்ய இடம் வசதியிருந்தால், பின்னால் பார்த்துக்கொள்ளலாமென்று பதில் கூறினார். அதிலிருந்து திரு. சுவாமிநாதன் அவர்கள் சொன்னது போல, அரசாங்கக் கல்லூரியில் இந்த மாதிரி அதிகாரிகள் அமைவது மிகவும் கடினமென்று எனக்குத் தோனறி யது. இருந்தபோதிலும், கல்லூரிகளை அரசாங்க உடைமையாக்க வேண்டுமென்று நண்பர் திரு. தங்கபாண்டியன் போன்றவர்கள் கூறுவதில் அர்த்தமிருக்கிறது. அதற்கு முக்கிய காரணம் நமது முதல்வர் அவர்கள் ஒரு கல்லூரியில் இருக்கிற சமயம் அவருடைய சிபாரிசைக் கொண்டு நான் ஒரு மாணவரைச் சேர்க்கச் சென்றிருந் தேன். அதற்கு அவர் முடியாதென்று ஒரேயடியாகப் பதில் சொல்லி விட்டார். அதற்குப் பிறகு நான் அங்கேயுள்ள செக்ரடரி, போர்டு 7.10 மெம்பரையெல்லாம் கண்டு இறுதியாக ஒரு நண்பர் சரியென்று சம்மதிக்க p.m. ரூபாய் 500 கொடுத்து அந்த மாணவனை அந்தக் கல்லூரிக்கு அனுப் பினேன். அதில் வேடிக்கை என்னவென்றால் ஒரு வருஷத்திற்கு அந்தக் கல்லூரியிலே அவன் பெயர் எந்த ரிக்கார்டிலும் இடையாது. ஆனால் அவன் கல்லூரிக்குப் போய்வந்தான். அது இந்தக் கல்லூரி என்று நினைக்கிறேன். இந்த மாதிரி மாணவர்களுக்கென்று தனியாக ஒரு பெஞ்சு இருக்கும். அங்கு டைரக்டர்களெல்லாம் போவார்களானால், அந்த மாணவர்களும் அந்த பெஞ்சும் இருக்காது. இந்த நிலைமையில் அந்தக் கல்லூரி நடந்து கொண்டிருக்கிறது. இப்படிப்பட்ட நிலைமையில் தனியார் கல்லூரி இருப்பதா, அல்லது அரசாங்கக் கல்லூரியை வரவேற்பதா என்ற ஐயப்பாடு இருக்கிறது. எனவே, கல்லூரிகளை அரசாங்கக் கல்லூரி களாக மாற்றுவது சந்தேகத்திற்கு இடமளிக்கிறது. நமது அரசும் நமது அமைச்சரவர்களும் நன்றாக ஆலோசித்துச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, மாணவர்களுடைய உச்ச வரம்பு அதிகமாகப்போய்க் கொண்டிருக்கிறது. சாதாரணமாக, சட்டத்தில் உயர் நிலைப் பள்ளியில் 50 மாணவர்களுக்கு மேலிருந்தால், அடுத்து ஒரு ஆசிரியரை நியமிக்க வேண்டுமென்று இருக்கிறது. அதற்குப் பிறகு ஆரம்பப் பள்ளியில் 35 மாணவர்களுக்கு மேலிருந்தால் அடுத்து ஒரு ஆசிரியரை வைக்க வேண்டு மென்று இருக்கிறது. இப்போது நவராத்திரி விழா சமீபத்தில் வருகிறது. அந்த சந்தர்ப்பத்தில் முதலாவது முறைப்பில் ஒவ்வொரு இடத் திலும் சுமார் 100—200 பிரமுகர்கள் சேரக்கூடிய நிலைமை இருக்கும். அந்த சந்தர்ப்பத்தில் அந்த ஆசிரியர் பிள்ளைகளுக்குப் பாடம் சொல்லிக் கொடுப்பாரா, குழந்தைகளை பேச்சில் போடாமல் பார்ப்பாரா என்று சந்தேகமாக இருக்கிறது. நாங்கள் டி.இ.ஒ. ஆபீசிற்குச் சென்று கேட்டால், சாங்க்ஷன் வரவில்லை என்று சொல்லி, சாதாரணமாக 6 மாதம் கடந்து விடுகிறது. அம்மாதிரி இல்லாதபடிக்கு புதிய மாணவர் கள் சேர்ந்தவுடனே, உடனடி அதற்கான ஆசிரியர்களை நியமிக்க வேண்டு மென்று அமைச்சரவர்களின் கவனத்திற்கு முதலில் கொண்டு வருகிறேன்.

அடுத்தபடியாக, இப்போது நம்முடைய நாடு முன்னேறி வருகிறது. இந்த சந்தர்ப்பத்தில் 20, 30 ஆண்டுகளுக்கு முன்னதாக பிள்ளைகளை 10 வயதானால் கூட பள்ளிக்கூடங்களுக்கு அனுப்பாத நிலை இருந்தது. ஆனால் இப்போது அப்படியில்லை. பிள்ளைகள் இரண்டு மூன்று வயதில் பாலர் பள்ளிகளில் வந்து படிக்கிறார்கள். பல பஞ்சாயத்துக்களில் பாலர் பள்ளிகள் நடக்கின்றன. இதை எதற்குச் சொல்லுகிறேன் என்றால், இதனால் நம் இளம் சந்ததிகளின் கவனங்களெல்லாம் விளையாட்டிலும், தீய பழக்க வழக்கங்களிலும் செல்லாதபடிக்கு நன்றாகப் படிக்க வசதி செய்துகொடுக்கிறது. ஆகவே, இந்த பாலர் பள்ளிகள் மேலும் நல்ல முறையில் நடப்பதற்கு அரசாங்கம் கொஞ்சம் மானியம் கொடுக்க வேண்டும். கல்விக்காக 84·81 கோடி ரூபாய் செலவு செய்கிற இந்த அரசு இதற்கும் கொஞ்சம் செலவு செய்ய வேண்டும். ஸ்தல ஸ்தாபன அமைச்ச ராகவும், கல்வி அமைச்சராகவும் நமது அமைச்சர் இருக்கிற படியால் மானியத்தைப் பஞ்சாயத்து யூனியன் வழியாகவோ அல்லது பாலர் பள்ளிகள் நடத்தும் பஞ்சாயத்துக்களுக்கு நேரடியாகவோ கிராண்டு கொடுக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன். நாம் அந்தப் பள்ளிகளை எப்படி

[திரு. கே. ராமகிருஷ்ண ஆச்சாரி] [23rd July 1971

யாவது நடத்த வேண்டுமென்பதற்காக என்ன செய்கிறோம் என்றால், அட்மிஷனுக்கு 5 ரூபாய், இதர சமயங்களில் மாதம் ஒன்றுக்கு இரண்டு மூன்று ரூபாய் கொடுக்கிறோம். அப்படியிருந்தும் அந்தப் பள்ளிகளைச் சரிவர நடத்த முடியவில்லை. ஆகவே, தயவு கூர்ந்து பாலர் பள்ளிகளுக்காக ஏதாவது தொகையை பஞ்சாயத்து யூனியன் ஆபீஸர்களுக்கு கொடுத்தால் நல்ல முறையில் நடக்கும். ஹரிஜன பள்ளிகள் வளர்ச்சிக்காகவும், கல்வி வளர்ச்சிக்காகவும் நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, மதிய உணவு திட்டத்தைப் பற்றிப் பலர் பேசியிருக்கிறார்கள். மதிய உணவு திட்டம் ஆரம்பமே எல்லா மாணவர்களுக்குமாகக் கொண்டு வரப்பட்டது. மாணவர்களுக்கு மதிய உணவு கொடுத்து, அவர்களிடையே ஆரோக்கியத்தைப் பெருக்குவதற்காக அந்தத் திட்டம் வந்தது. அமெரிக்காவிலிருந்து கோர் மிதானமும் ஏராளமான உணவுப் பொருள்களைக் கொடுக்கிறது. நமது அரசும் பஞ்சாயத்துக்களும் சேர்ந்து 10 பைசா வீதம் கொடுக்கிறார்கள். இதில் நல்ல பாகம் செய்கிற நண்பர்கள் மீது ஏதாவது தவறு இருந்தால், அவர்களுக்கு மேல் இருக்கிற ஆசிரியர்களுக்கு அவர்களைப் போய்க் கேட்பதற்கு வழியில்லை. எனவேதான் கோயிலில் பூஜை செய்கிற நம்பியாருக்கு நாலணாவில் ஒரு பங்கு உண்டு என்று சொன்ன மாதிரி, இந்த நண்பர் அவருடைய பங்கை எடுத்துக் கொள்வார். அவர் சமைத்த பிறகு அவர் தான் சாப்பிடுவதற்காக ஒதுக்கிக் கொள்வார். தலைமை ஆசிரியரால் அவரைக் கண்காணிக்க முடியாது. இந்த பரிதாபகரமான நிலைமையில் மதிய உணவுத் திட்டம் நடந்து கொண்டிருக்கிறது. மாணவர்களுக்குள்ள தொகையை அவர்களின் கார்டியனிடத்தில் கொடுத்தோ அல்லது புதிய முறையைக் கண்டு பிடித்து நல்ல முறையில் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். இந்த மதிய உணவுத் திட்டத்தின் வளர்ச்சி அங்கே பள்ளிகளை நடத்துகிற ஆசிரியர்களுக்கும், சமையல்காரர்களுக்கும் தான் வளர்ச்சியாக நடந்து கொண்டிருக்கிறதே தவிர மாணவர்களுக்கு எந்த விதமான பிரயோசனமும் இல்லை. இப்படி ஒரு பள்ளிக் கூடம் அல்ல. கன்யாகுமரி ஜில்லாவில் மாத்திரமல்ல. பல இடங்களிலும் இந்த நிலைமையைக் கண்டு வருந்தி அமைச்சரவர்களிடத்தில் சொல்லுகிறேன். இதற்கான தனியொரு அதிகாரி போட்டாலும் பரவாயில்லை. இல்லையென்றாலும் மதிய உணவுத் திட்டத்தைக் கண்டிப்பாக நல்ல முறையில் அமுல் படுத்தி, மாணவர்கள் ஆரோக்கியத்தை நல்ல முறையில் பார்த்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்ததாக, இந்த ஆரம்பப் பள்ளி ஆசிரியர்களெல்லாம் பிள்ளைகளிடம் நன்கொடை வாங்குவது எதற்கென்று சொல்ல முடியாது. ஒரு தலைமை ஆசிரியர் குடி தண்ணீருக்கு வழியில்லை, கூரை போட வேண்டுமென்று சொல்லி, குழந்தைகளிடத்தில் அவர்கள் பெற்றோர்களிடத்திலிருந்து பணம் வாங்கி வர வேண்டுமென்று சொன்னார். அந்த வீட்டில் சாப்பிட்டிற்கு வழியில்லாமல் இருந்தால் கூட, எங்களுக்குப் பணம் தந்து தான் ஆக வேண்டுமென்று பிள்ளைகள் கேட்கிற நிலை இருக்கிறது. சின்னக் குழந்தைகள், முரட்டு சுபாவம் பிடிக்கக் கூடிய நிலை இருக்கிறது. இந்த மாதிரி வசூல்கள், லஞ்ச ஊழல்கள் மாதிரி நடந்து கொண்டிருக்கின்றன. இதையும் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

நமது கன்னியாகுமரி ஜில்லாவில் பட்டதாரி ஆசிரியர்களுடைய நிலைமை நீண்ட நாட்களாகப் பரிதாபகரமாக இருந்தது. அதை இந்த அரசு வந்து அவர்களுக்கெல்லாம் முன்னால் கொடுக்கப்படவேண்டிய ப்ரமோஷனைக் கொடுத்து, அவர்களுக்குக் கொடுக்கப்படவேண்டிய ஊதியங்களைக் யெல்லாம் கொடுத்து, இந்தக் காரியங்களைச் செய்ததற்காக நானும் நன்றியைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆக, நன்றி சொல்லிக் கொள்ளுகிறேன். ஆனால் இன்னும் ஒரு பரிதாபமான நிலைமை



23rd July 1971] [திரு. கே. ராமகிருஷ்ண ஆச்சாரி]

அங்கே இன்னும் இருக்கிறது. இந்த நன்றி சொல்லக்கூடிய நிலை பூர்த்தியடையவில்லை. அதற்காக இதைச் சொல்லுகிறேன். அங்கே யுள்ள ஆசிரியர்கள், தமிழ் 7-வது வகுப்பு படித்தவர்கள், டி.எஸ்.எல்.சி., தமிழ் 9-வது வகுப்பு படித்தவர்கள் (T. H. Exam.) அவர்களுக் கெல்லாம் அப்போதுள்ள இங்கிலீஷ் ஸைஸ்கூலில் ஒரு சமயத்தில் " தர்ட் ஃபாரத்தில் " " ∴போர்த் பாரத்தில் " படித்து எஸ்.எஸ்.எல்.சி. தேறின ஆசிரியர்களாக இருக்கிறார்கள். அவர்களெல்லாம் அதிக நாட்கள் வேலை பார்க்க முடியாது. 4, 5 வருஷங்களுக்குள்ளாக பென்ஷன் வாங்கிக் கொண்டு போகப் போகிறவர்கள். அவர்களுடைய சர்வீசுகளையும், பென்ஷனையும் கூட சரியான முறையில் கணக்குப் பார்க்க முடியாத பரிதாபமான நிலைமை இருக்கிறது. அவர்களெல்லாம் என்னிடம் வருத்தப்பட்டு என்னிடம் குறிப்புகள் தந்திருக்கிறார்கள். இதை அவசியமாகக் கவனித்துத் தீர்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். வேறு விசேஷமான முறையில் தகவல்கள் இல்லையென்று நினைக்கிறேன். இந்த 7-வது, 9-வது படித்த ஆசிரியர்களுடைய பிரச்சினையையும், மதிய உணவுத் திட்டத்தில் சொல்லப்பட்டவைகளையும், இந்த பாலர் பள்ளிகளுக்குக் கொடுக்க வேண்டிய அந்த கிராண்டையும் தயவுசெய்து ரொம்ப சீக்கிரமாக, கவனத்தில் கொண்டு அமைச்சரவர்கள் செய்து தரவேண்டுமென்று கேட்டுக் கொண்டு தலைவருக்கு வணக்கத்தைத் தெரிவித்துக்கொண்டு அமர்கிறேன்.

* திரு. எம். ஆறுமுகசாமி : தலைவர் அவர்களே, கல்வித் துறையைப் பற்றி கல்வித் துறையினர் கொடுத்துள்ள இந்த அறிக்கையையும் அத்தோடு கூட சேர்த்து தமிழ் பயிற்சி மொழி பற்றி கல்வி அமைச்சர் அவர்கள் இந்த மன்றத்தில் ஆற்றிய உரையின் சுருக்கத்தையும் சமர்ப்பித்த வெள்ளை அறிக்கையையும் நமக்குக் கொடுத்ததற்காக நான் அவர்களைப் பாராட்டுகிறேன். சொல்ல அதிகமான விஷயங்களை எங்களைப் போன்ற சாதாரண மனிதர்கள் புரிந்துகொள்வதற்கு இந்த அறிக்கைகள் பெரிதும் உதவியாயிருக்கின்றன. இந்த வகையில் என்ன கல்வித் துறை செய்து கொண்டிருக்கிறது என்பதைப் புரிந்து கொள்வதற்கு இந்த அறிக்கையைச் சமர்ப்பித்ததற்காக நான் அவர்களைப் பாராட்டுகிறேன். இந்த அவையிலே இதற்கு முன்னால் பல மாண்புமிகு உறுப்பினர்கள் பேசினார்கள். அவர்களிலே பலர் ஆசிரியர்களும் பட்டதாரிகளும் ஆவார்கள். எனக்கு முன்னால் திரு. ஜெயராம செட்டியார் அவர்கள் சொன்ன கருத்தைத்தான் நானும் சொல்ல ஆசைப்படுகிறேன். சாதாரண பிரஜை என்ற முறையில், நம்முடைய கல்வியைப் பற்றி என்ன செய்ய வேண்டுமோ அதை மட்டும் சொல்லி நிறுத்திக்கொள்ள விரும்புகிறேன். எனது நண்பர் அவர்கள் நான் பிரஜா சோஷலிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவன் என்பதை நினைவுபடுத்துகிறார். அதற்காக நன்றி தெரிவித்துக்கொள்ளுகிறேன். என் இதைச் சொல்லுகிறேன் எனறால், எனக்கு முன்னால் பேசியவர்களுக்கு இந்தத் துறையில் ஈடுபாடு எதாவது ஒரு வகையில் இருக்கிறது. ஆசிரியர்கள் பேசினார்கள். ஒரு தொழிற்சங்க (டிமாண்ட்) கோரிக்கை போலப் படித்தார்கள். அதற்கு முன்னால் பட்டதாரி ஆசிரியர்கள் பேசினார்கள். அவர்களும் கல்லூரிக்கு இன்னின்ன தேவை என்று சொன்னார்கள். பெரும்பாலும் அவர்கள் சொன்னதெல்லாம் இதில் சம்பந்தப்பட்ட ஒரு சிலர் அரசை முதலாளியாகவும் மற்றவர்களைத் தொழிலாளிகளாகவும் கருதிக் கொண்டு எதோ விண்ணப்பம் போடுவதைப் போல இருந்தது. இதை ஒரு குறையாக நான் சொல்லவில்லை. இது அவர்கள் சொல்லவேண்டிய விஷயம். நான் என்ன விண்ணப்பம் போடுவது ? நான் வேறு பல காரியங்களுக்காக விண்ணப்பம் போட வேண்டியதுள்ளது. மாண்புமிகு உறுப்பினர் திரு. சுவாமிநாதன் அவர்கள் ஒரு கருத்தைக் குறிப்பிட்டார்கள். அதைக் குறிப்பிட்டுவிட்டு அவர்களுடைய கட்சிக் கொள்கைக்கு ஏற்ப அதை இழுத்துக்கொண்டு சென்றார்கள். அரசு நிர்வகிக்கும் கல்லூரிகளில் இப்படியெல்லாம் நடக்கிறது என்பதைப் போல படம் பிடித்துக்காட்ட முயற்சித்தார்கள். மற்றப் பள்ளிகளில் அப்படியெல்லாம் நடக்கவில்லையென்று அவர்கள் கருதக் கூடாது. இரண்டு ஆண்

[திரு எம். ஆறுமுகசாமி] [23rd July 1971

களுக்கு முன்னால் இதே நகரத்தில் எழும்பூர் ரயில் நிலையத்திலிருந்து நான் வந்துகொண்டிருந்தபோது, மாணவர்கள் ஊர்வலம் ஒன்று போனது. நண்பர்கள் அது எந்தக் கல்லூரி என்று வெளிப்படையாகச் சொல்ல வேண்டாமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். நானும் அதைக் குறிப்பிட்டுச் சொல்ல விரும்பவில்லை. அந்த மாணவர்கள் ஊர்வலத்தினைக் என் கண்ணால் பார்த்தேன். பீடிக் கம்பெனிக்காரர்கள் எப்படி விளம்பரம் செய்து கொண்டு டப்பாங்குத்து பாடிக்கொண்டு போவார்களோ அப்படிச் சென்றார்கள். நான அதைக் குறையாகச் சொல்லாமல் மனம் நொந்து சொல்லுகிறேன். நாலைந்து பேர்கள் சுற்றி நின்று கொண்டு ஆடினார்கள். மேல் நாட்டு நடன பாணி என்று அதைச் சொல்லுகிறார்கள். வேறு சிலர் அங்குள்ள போலீஸ் வான மீது உட்கார்ந்துகொண்டார்கள். போலீஸ்காரர்கள் அவர்களுக்கு கைலாகு கொடுத்து ஏறி உட்கார்ந்து கொண்டு உடையுங்கள் என்று சொல்லுகிறார்கள். எதோ சில குறைகளை அவர்கள் சொன்னார்கள். அது தனிப்பார் கல்லூரியில நடக்கிற விஷயம் என்றார்கள். எதற்காக நான் இதையெல்லாம் சொல்லுகிறேன் என்றால், மாணவர்கள் எந்த நிலைக்கு வந்திருக்கிறார்கள் என்பதற்காக, ஒரு சமயம் இந்தப் பகுதி மாணவர்களுக்கும் அந்தப் பகுதி மாணவர்களுக்கும் சுயம்வரத்தில் தகராறு நடந்தது சில காலம் முன்பு.

திரு. ஜி. சுவாமிநாதன் : சுயம்வரத்தில் தகராறு என்றால், என்ன என்று அறிய விரும்புகிறேன்.

திரு. எம். ஆறுமுகசாமி : அனேகமாக அது எல்லோருக்குமே தெரிந்த விஷயம். இங்கு எல்லோருமே நகைக்கிறார்கள். ஆகையால் அதை நகைச்சுவையோடு விட்டுவிட வேண்டுமென்று தாழ்மையுடன் கேட்டுக் கொள்ளுகிறேன். ஒரு பெரிய கிளர்ச்சியே நடந்தது அதற்காக. என் இந்தக் கிளர்ச்சி ? என் இப்படித் தரம் குறைந்த நிலையில் நடக்கிறது ?

கல்விக்கு அப்படி பணத்தை வாரி வழங்கியிருக்கிறோம். கல்வித் துறையில் நாம் செலவிடும் பணம் பல கோடி ரூபாயாகும். எந்த மட்டத்தில் இது கெட்டிருக்கிறது என்று புரிந்துகொள்ள வேண்டும். தேசம் பூராவிலும் இன்று ஒழுக்கம் கெட்டிருக்கிறது. எல்லோரும் இதை ஒப்புக்கொள்வார்கள். எல்லா மட்டத்திலும் அது இருக்கிறது. பாலில் தண்ணீரைக் கலப்பதும் ஒழுக்கக் கேடுதான். நெய்யில் கொழுப்பைக் கலப்பதும் " அடல்ட்ரேஷன் " என்று சொல்லும் ஒழுக்கக் கேடுதான். எமாற்றுவதற்கு முயற்சிப்பதெல்லாம் ஒழுக்கக் கேடுதான். பள்ளிகளிலும் கூட எனக்கு முன்னால் பேசிய நண்பர்கள் ஒழுக்கக்கேடு நடப்பதைச் சொன்னார்கள். இப்போது பள்ளிகளைத் தொழிற்சாலை போல பலர் கருதுகிறார்கள். அதில் பணம் போடுவது நல்ல முதலீடாகக் கருதப்படுகிறது. லாபம் வருகிறது என்று சொன்னார்கள். ஒழுக்கக் குறைவு ஏற்பட்டிருக்கிறது என்றால், அதழுகுக் காரணம் இரண்டுதான் என்று நான் குற்றம் சாட்ட விரும்புகிறேன். மாணவுமிகு உறுப்பினர் நண்பர் தொடக்கப்பள்ளி ஆசிரியர் தலைவர் திருவாளர் முத்துசாமி இப்போது இந்த அவையில் இல்லை. தொடக்கப் பள்ளி ஆசிரியர்களும் அரசியல் வாதிகளும்தான் இந்த ஒழுக்கக் கேட்டிற்குக் காரணம் என்பது என்னுடைய பணிவான குற்றச்சாட்டு. தொடக்கப் பள்ளியில்தான் ஒழுக்கம் புகட்டப்பட வேண்டும். பத்தாண்டுகளுக்குள்ளாக, குழந்தைகளுக்கு ஒழுக்கத்தை முறையாகப் புகட்டாவிட்டால், அதற்குப் பின்னர் திருத்துவது கடினம் என்று அறிஞர்கள் சொல்லுகிறார்கள். நான் சாதாரண ஆள். அங்கே இப்போது கெட்டிருப்பதற்குக் காரணம் என்ன ? நேற்று கேள்வி நேரத்தில் ஒரு பள்ளியின் சச்சரவைப்பற்றிக் கேட்டேன். அங்கேயுள்ள சாதிச் சச்சரவை வெளிப்படுத்த வேண்டுமென்று நான் அதைக் கேட்கவில்லை. ஆறு மைலுக்கு அப்பால் ஆசிரியர்கள் தங்களுக்கு இரண்டு எக்கர் நிலத்தை வைத்துக்கொண்டு சாகுபடி செய்யும் வேலையைப் பார்ப்பதும் காலையில் வேலை பார்த்து விட்டு அதற்குப் பிறகு சைக்கிளில் பள்ளிக்கு வருவதுமாக இருக்கிறார்கள். பின் தங்கிய மக்கள் வாழுகிற இடத்தில்



23rd July 1971] [திரு. எம். ஆறுமுகசாமி]

வீட்டில் போய், குழந்தைகளை அழைத்துவர வேண்டுமென்று சொல்லப் படுகிறது. கூட்டாயக் கல்வி இருக்கிறது. பக்கத்திலுள்ள பள்ளிக்குப் போவதாகச் சொன்னார்கள். அப்படியல்ல. அவர்கள் பள்ளிக்கே போவதில்லை. அந்த ஊர் மக்கள் அவ்வளவு மோசமாக இருக்கிறார்கள். அவர்களே வீட்டிற்கு வந்து அழைத்துச் செல்லும் அளவுக்கு தரமுள்ள ஆசிரியர்கள் போடவில்லை என்றுதான் நான் சொல்லுகிறேன். பக்கத்தில் சொந்த விவசாயத்தை வைத்துக்கொண்டு காலையில் அந்த வேலையைப் பார்த்துவிட்டு மீதி நேரத்தில் பள்ளிக்கு வருகிறார்கள். சாயங்காலம் அவர்கள் வேலை பார்த்தார்களா என்று யார் கேட்பது ? அவர்கள் மனசாட்சியைத் தவிர, சாலை போன்ற போக்குவரத்து வசதிகள் இல்லாத இடங்களில் கல்வி வளர்ச்சி என்னவாகும் ? அந்தக் குழந்தைகள் எப்படி வளரும் என்று கேட்க ஆசைப்படுகிறேன். கல்வித் துறை ஊழியர்களுக்கு வாரி வழங்கியிருப்பதற்காகப் பாராட்டுகிறேன்.

மூன்றாண்டுகளுக்கு விலைவாசி எந்த வகையில் பார்த்துக்கொண்டால், நாங்கள் இந்தக் கிளர்ச்சிகள் அதிகமாகச் செய்யமாட்டோம் என்று ஒப்பந்தம் செய்துகொள்வது கூட சிறப்பானதாக இருக்குமென்று சொல்ல ஆசைப்படுகிறேன். ஒரு சோஷலிஸ்ட் சொல்கிறேன். சோஷலிஸ்ட் முற போக்காளர்கள் மீதுதான் இந்தத் தாக்குதல் வருகிறது. எங்கெங்கு ஒழுக்கக் கேடுகள் வருகின்றனவோ, அங்கெல்லாம் உடனே திரு சுவாமி நாதன் அவர்கள் அவைகளை வைத்துக்கொண்டு தாக்குகிறார்கள். அங்கு தான் அவர்கள் பிடிக்கிறார்கள். பொதுத் துறை, அரசு நிர்வகிக்கிற இடத்தில் நம் கண்காணிப்பு கடுமையானதாக, ஜாக்ரதையாக இருக்க வேண்டியிருக்கிறது. ரயில் மக்களுக்குச் சொந்தமானது. ஆனாலும் ரயிலிலுள்ள பல்பைக் கழற்றிக் கொண்டு போகிறோம் என்கிறார்கள். நடுச் சாலையில் நடப்பதற்குக் கூட சுதந்திரம் இருக்கிறது என்று கூறுகிறார்கள். இப்படிப்பட்ட உணர்வுகள் நம் மக்களிடம் இருக்கின்றன. தனியார் நடத்தும் நிர்வாகத்தில்தான் பள்ளிகளில்தான் தவறு நடக்காது என்ற எண்ணம் எற்கனவே நம்மிடம் வளர்ந்திருக்கிறது. இந்த தேசத்தில் உற்பத்தியாகிற சாமான்கள் மட்டம் என்ற எண்ணம் எப்போதும் நம்மிடம் இருக்கிறது. வெளிநாட்டிலிருந்து வருகிற சாமான்கள் உயர்ந்தவை என்ற கருத்தும் கூடுதல் விலை கொடுத்து அதை வாங்கும் செயலும் வளர்ந்திருக்கின்றன. என்றைக்கு இலவசமாகப் பள்ளியை நடத்தத் தொடங்கினோமோ அன்றைக்கே இலவசப் படிப்பு தரம் குறைந்தது என்ற நினைப்பு வந்துவிட்டது. காசு கொடுத்து படிப்பதில்தான் உயர்வு இருப்பதாக நினைக்கிறார்கள். இலவசமாகப் புத்தகம் போட்டால், யாரும் வாங்கிப் படிப்பதில்லை. ஒரு எட்டணை என்று விலை வைத்து விட்டால், அதை உயர்ந்ததாக நினைத்து வாங்கிப் படிக்கிறார்கள். அது போல இலவசப் படிப்பு என்று வைத்த பிறகு சாப்பாடு கொடுத்துப் படிக்காவிட்டால், படித்தது போலவே நினைப்பதில்லை. அதனால் பத்து ரூபாய் கொடுத்து பிள்ளையைப் பள்ளியில் சேர்த்தால்தான் நம்முடைய குழந்தை உயர்ந்த படிப்பு படித்ததாக எண்ணுகிறார்கள். ஆயிரம் ரூபாய் கொடுத்துப் படித்தால், பெரிய பள்ளியில் சேர்க்கப்பட்டிருப்பதான எண்ணம் நமக்கு ஏற்பட்டிருக்கிறது என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, இங்கே பயிற்று மொழியைப்பற்றி அழகான ஒரு அறிக்கை வெளியிடப்பட்டிருக்கிறது. இந்த அறிக்கையில் மேலவையிலே கல்வி அமைச்சர் அவர்கள் பேசிய பேச்சும், மேலவையிலே சமர்ப்பித்த அறிக்கையும் சென்ற ஆண்டு நவம்பர் திங்களிலே நடந்த கூட்டத்திலே கொடுத்த வெள்ளை அறிக்கையும் வெளியிடப்பட்டுள்ளது. இதிலே ஒரு இடத்திலே சொல்லப்பட்டிருக்கிறது. 1968 ஜனவரி 23-ம் தேதியன்று நமது மதிப்புக்குரிய பேரறிஞர் முன்னாள் முதல்வர் அண்ணா அவர்கள் முன்மொழிந்து இங்கே ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. தமிழ் நாட்டில் இந்தாண்டுக் காலத்திற்குள்ளே தமிழை ஆட்சி மொழியாக ஆக்குவது, தமிழை எல்லா இடங்களிலேயும் கல்லூரிகளிலேயும் பயிற்று மொழி ஆக்குவது என்ற அந்தத் தீர்மானம் ஒன்று எற்கனவே இருக்

7.30 p.m.

[திரு. எம். ஆறுமுகசாமி] [23rd July 1971

இறது. அந்தத் தீர்மானம் இருக்கிறபோதே, லட்சுமணசாமி முதலியார் அவர்களுடைய தலைமையிலான கமிட்டியின் முடிவை அந்தத் தீர்மானத்தை மாற்றுது எப்படி ஏற்றுக்கொண்டோம் என்பது எனக்கு விளங்கவில்லே. சட்ட சபையிலே, நிறைவேறிய ஒரு தீர்மானம் இருக் இறது. அந்தத் தீர்மானத்தின் அடிப்படையிலே அறிஞர் அண்ணு அவர் கள் இந்த மன்றத்திலேயேகூட வாக்குறுதி அளித்திருக்கிறார்கள். அந்தத் தீர்மானத்தை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அப்படி இருக்கின்ற போது, அந்தத் தீர்மானத்திற்கு விரோதமான ஒரு கருத்தை, முடிவை, லட்சுமணசாமி முதலியார் கமிட்டி கொடுத்த முடிவை எப்படி இந்த அரசு ஏற்றுக்கொண்டது என்று நமக்குப் புரியவில்லே. இதை ஏற்றுக்கொண் டது, சற்றுக் கடுமையாகச் சொல்ல வேண்டுமானால், தவறு என்று சொல்லு வேன். இன்றையதினம் ஆங்கிலத்தில் படிப்பதால் உள்ள நன்மைகளைப் பற்றியும், ஆங்கிலம் சரியாகப் பள்ளிக்கூடத்திலே கொடுக்கப்படவில்லே என்றும், ஆங்கிலப் பிரிவுக்கு மாணவர்கள் ஒழுங்காகச் சேர்க்கப்படவில்லே என்றும் குற்றம் சாட்டினுர்கள். ஆங்கிலம் படித்தவர்களின் அழகைப் பற்றி சர்வீஸ் கமிஷன் வெளியிட்டிருக்கிறது. அதிலே நமது மாணவர்கள் எவ்வளவு அழகாக ஆங்கிலம் எழுதியிருக்கிறார்கள் என்று சொல்லியிருக் கிறார்கள். 200 வருஷ காலம் இந்த தேசத்தில் ஆங்கிலத்தை வைத்து அதற்கு பலவித இன்சென்டிவ்ஸ்—ஊக்கம் ஊட்டும் காரியங்களைச் செய்த பிறகும், 2 சதவிகிதத்துக்கு மேலே எண்ணிக்கையை எற்ற முடியவில்லே. நாம் ஆங்கிலத்தைப் பயிற்றுமொழியாக வைத்த பிறகு எழுதக்கூடிய ஆங்கிலத்தைப்பற்றி நகைப்புக்கு இடமாகச் சொல்கிறார்கள்.

திரு. ஜி. சுவாமிநாதன் : ஆங்கிலத்தைச் சரியாகப் போதிக்கவில்லே என்றும் நாம் கொள்ளலாம் என்று நினைக்கிறேன்.

திரு. எம் ஆறுமுகசாமி : ஆங்கில மொழியே தவறு அல்லது போதிக் இறது தவருக இருக்கிறதா அல்லது அதைக் கற்றுக்கொள்கிறவர்கள் தவறு என்பதற்குப் போகவில்லே. ஆனல் நாம் கையாண்ட முயற்சியில் நாம் தோல்வியுற்றோம் என்று சொல்வதற்காகச் சொல்கிறேன். ஆகவே தமிழ் பயிற்று மொழியாக இருப்பது என்பதிலிருந்து பின்வாங்குவது மிகப் பெரிய இமாலயத் தவறு என்று நான் சொல்கிறேன். இப்பொழுதும் கூட நீங்கள் இரண்டும்கெட்டான் நிலேயிலேதான் ஆங்கிலத்தை வைத்துக் கொண்டிருக்கிறீர்கள். இன்னும் சொல்லப்போனல் ஆங்கிலந்தான் அதிக மாக இருக்கிறது. தமிழ் மொழிக்கு அங்கே குறைவான இடங்களே இருக்கிறது. இதன் விளைவு என்னவென்றல், இந்த அறைகுறை ஆங் கிலத்தைப் படித்துக்கொண்டு மேல்நாட்டுப் பழக்க வழக்கங்களைக் கற்றுக் கொண்டு, நமது மாணவர்கள் கோரிக்கை எழுப்பும்போதுகூட மேல்நாட்டு முறையிலே நடனங்கள் ஆடும் நிகழ்ச்சியைத்தான் பார்க்கிறோம். விஞ்ஞா னத்திலே ஆங்கிலேயரைக் காட்டிலும் முந்திக்கொண்டு போகிறார்கள் பல நாடுகளிலே. நான் அதைப்பற்றியெல்லாம் பேசிக்கொண்டிருப்பதற்குத் தயாராக இல்லே. கல்வி அமைச்சரின் அறிக்கையிலே மிகத் தெளிவாக இருக்கிறது. தேர்தலிலே இக்கருத்துக்குத்தான் வாக்களித்திருக்கிறார்கள். தமிழ் பயிற்றுமொழியாக இருக்கட்டும் என்று ஏற்றுக்கொண்டுதான் வாக்களித்திருக்கிறார்கள். நான் ஏறகனவேகூட குறிப்பிட்டிருக்கிறேன். அறிஞர்கள், கல்லூரித் தலேவர்கள்தான் எந்த மொழியிலே படிக்க வேண்டும் என்று தீர்மானிக்க வேண்டிய அவசியமில்லே. இந்த தேசத் தின் மக்களுக்கும் அதுபற்றிய ஞானம் இருக்கிறது. தேச மக்கள், குறிப்பாக தமிழ்நாட்டு மக்கள் இந்தத் தேர்தலிலே பயிற்றுமொழித் திட்டத்திற்கு எதிராகக் கூப்பாடு போட்டவர்களுக்கு எதிராக வாக்களித் திருக்கிறார்கள்.

திரு. ஜி. சுவாமிநாதன் : தேர்தலுக்கு முன்னுலேயே இந்த லட்சுமண சாமி முதலியார் கமிட்டியின் அறிக்கை வெளியானது என்பதைத் தெரி வித்துக்கொள்கிறேன். சர்க்காருடைய ஒப்புதலும் தேர்தலுக்கு முன்னே தெரிவிக்கப்பட்டது



23rd July 1971]

திரு. எம். ஆறுமுகசாமி : லட்சுமணசாமி முதலியார் கமிட்டியின் இடைக்கால அறிக்கையை நான் சொல்லவில்லே. மே மாதத்தில்தான் அந்தக் குழு அறிக்கையைக் கொடுத்திருக்கிறது. இடைக்கால அறிக்கையில் என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்பது எனக்கும், மாண்புமிகு உறுப்பினர் களுக்கும் சரிவரத் தெரியாது. சட்டமன்ற மேலவையோ, பேரவையோ கூடவில்லே என்பதற்காகத்தான் சொல்லுகிறேன். சில பத்திரிகைகள் சொல்லுவதன் மூலமாகத்தான் இதுபற்றித் தெரிந்துகொண்டோம். இன்றைக்குக் கூட, சில பத்திரிகைகள் கூறுகின்றன யாரும் தமிழ் படிக்க வரவில்லே என்று. தமிழுக்கு போனஸ் கூட கொடுக்கிறார்கள் என்று எழுதுகின்றன. இது எல்லாம் உண்மையா ? இதிலே எவ்வளவு தூரம் உண்மை இருக்கிறது என்பது நமக்குத் தெரியும். எப்படித் திருத்தி எழுதப்படுகிறது என்பதும் தெரியும். எனவே, இந்தச் செய்தி களே வைத்துக்கொண்டு ஒரு முடிவுக்கு வந்துவிட முடியாது. நாம் இரண்டும் கெட்டான் நிலேயை அனுஷ்டிக்கக்கூடாது. இதற்கு எதிராக பயிற்று மொழியாக தமிழை ஆக்குவது என்ற முடிவை உறுதியோடு கடைப்பிடிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, தலேவரவர்கள் மணி அடித்துவிட்ட காரணத்தினுல் என்னுடைய உரையில் இன்னும் பல கருத்துக்களைச் சொல்ல விருப்பம் இருப்பினும், இத்தோடு முடித்துக் கொள்கிறேன்.

* திரு. சா. கணேசன் : தலேவரவர்களே, பல மாண்புமிகு உறுப்பினர் கள் தங்கள் கருத்துக்களேயெல்லாம் குறிப்பிட்டார்கள். தேவையில்லாமல் கூட கட்சிக் கருத்துக்களே மறுக்க அல்ல, கண்டிக்கவும் தொடங்கினுர்கள். இதிலே நமக்கு இப்பொழுது அந்த விஷயம் தேவையில்லே என்று நான் சொல்ல ஆசைப்படுகிறேன். தனியார் பள்ளி அல்லது அரசுப் பள்ளி அல்லது அரசுக் கல்லூரி அல்லது தனியார் கல்லூரி என்றெல்லாம் பிரித்து, கணக்குப் போட்டுப் பார்த்தோமானுல், மிகச் சமீப காலத்திலே அல்லாமல் மிகப் பழைய காலங்களிலேயே ஏராளமான தனியார்கள் கொடுத்த கொடைமிலேதான் கல்வி வளர்ந்திருக்கிறது என்பதை மறுக்க முடியாது. தவறு தனியார் பள்ளிகளிலும் உண்டு, தனியார் துறையிலும் உண்டு. அரசுப் பள்ளிகளிலும் அரசியல் துறையிலும் உண்டு. அரசியல் துறையில் என்றுல் அரசியலுக்கு வந்திருக்கிறவர்கள் எல்லாம் எங்கேயிருந்தோ குதித்து வந்துவிடவில்லே. ஜன சமுதாயத்தி லிருந்து பொறுக்கப்பட்டவர்கள்தான். ஜன சமுதாயத்தில் எவ்வளவு நன்மையும் தீமையும் உண்டோ அவ்வளவு நன்மையும் தீமையும் ஜனங் களின் பிரதிநிதிகள் இடையிலும் இருக்கத்தான் செய்யும். அரசியல் கலந்த அல்லது அரசு நிர்வகிக்கின்ற பள்ளிகள் முழுதும் தவறு என்றே அல்லது அங்கே நடப்பனவெல்லாம் சரி என்றே அல்லது அதற்கு நேர் மாறுக தனியார்கள் நடத்துகின்ற இடங்களில் நடப்பது எல்லாம் அக்கிரமங் கள் என்றே சொல்லிவிட முடியாது. இந்தமாதிரி ரூபாய் கொடுப்பது வாங்குவது எல்லாம் எப்படி தனியார் கல்லூரிகளிலே அதை நிர்வகிப்பவர் கள் நடத்துகின்றர்களோ, அதைப்போலவே அரசு நிர்வகிக்கின்ற கல்லூரி களிலே பதவி வகிக்கின்றவர்களும் வாங்குகின்ற உண்மையை நாம் மறந்து விடவில்லே. எங்கேயாயினும் சரி, தவறு நடக்காமலிருப்பதற்கு கவன மாக இருந்து சரியான தண்டனே கொடுப்பதன் மூலம் இதைச் சீர்செய்ய வேண்டும். தவறு இரு சார்பிலும் உள்ளது என்பதைப் பிரத்தியட்ச மாக மட்டுமின்றி பிடிபாடுகள், சான்றுகள் மூலமாகக் கூட காட்ட முடியும்.

திரு. எம். சங்கரலிங்கம் பிள்ளே : அரசு கல்லூரிகளிலே நிர்வாகத்தை நடத்துகின்றவர் பணம் வாங்கினுல் லஞ்சக் குற்றத்திலே அகப்பட்டுக் கொள்வார். ஆனல், தனியார் துறையிலே இதற்கு வழி இல்லே.

திரு. சா. கணேசன் : இதற்கு வழி இருக்கிறது. எத்தனே பேரைக் கைது செய்கிறோம் என்பதுதான் கேள்வி.

திரு. எம். சங்கரலிங்கம் பிள்ளே : பல பேரை.

திரு. சா. கணேசன் : அதுபோல் தனியார் துறையிலேயும் இருக்கலாம்.

திரு. கே. அறிவழகன் : தனியார் கல்லூரிகளிலே பிடிக்கப்பட்டவர்கள் எத்தனை பேர் இருக்கிறார்கள் ?

திரு. சா. கணேசன் : அப்படிப் பிடிக்கப்படாவிட்டால் அந்தத் தவறும் அரசைச் சேரும். என் வீட்டிலே யாரோ திருடினால், அந்தத் திருடனைப் பிடிக்கவில்லை என்பது என் தவறல்ல. அது போலீஸின் தவறு. இப்பொழுது, கல்லூரிகளிலே நாம் மிக முக்கியமாகக் கவனிக்க வேண்டியது, அரசு நிரம்ப ஆர்வத்தோடு, அக்கறையோடு செயல்படுகிறது. சுமார் 82 கோடி ரூபாய்கள் செலவு செய்யத் திட்டம் வகுத்திருக்கிறது. அதைப் பாராட்டுகிறேன். அதே காலத்தில் தொகை அளவிலே கூடியிருக்கிறதே தவிர, மொத்த சதமானத்திலோ, தேவையிலோ அல்லது அளவிலோ அது கூடிவிடவில்லை என்பதை நாம் மறந்துவிடப்படாது. மூன்று பேராக இருந்தபொழுது, மூன்று ஆழாக்கு போட்டுச் சமைத்தோம். இப்பொழுது 5 பேராக இருக்கிறபோது, 5 ஆழாக்கு போட்டுச் சமைக்கிறோம். 3 பேர் இருந்தபொழுது 3 ரூபாய் வருமானம், 5 பேர் இருக்கிறபொழுது 5 ரூபாய் வருமானம். இதையும் கவனத்திலே கொள்ள வேண்டும். முக்கியமாக அரசு கவனிக்க வேண்டியது, எத்தனை அளவு கல்லூரிகள் எண்ணிக்கையிலே பெருகியிருக்கின்றன என்பது அல்ல. எத்தனை அளவு மாணாக்கர் பயிற்சி திறமையாக, செம்மையாக வளர்ந்து பயன்பட்டிருக்கிறது என்பதையே கவனிக்க வேண்டும். சமீபத்திலே கல்லூரி ஆசிரியர்கள் தேர்வுக்கு உட்கார்ந்திருந்தேன்.

7-0 p.m. ஆசிரியர்கள் தேர்விற்குச் சுமார் நூற்றுச்சில்லறை பேர்களைத் தேர்வு செய்தோம். பலபேருக்குக் கஷ்டமாக இருக்கும் ; எனக்கும் சொல்வதற்கு வருத்தமாக இருக்கிறது. அவர்கள் பல பேர் பல தவறுகளைச் செய்தார்கள். அவற்றையெல்லாம் சொல்லிக்கொண்டு போவதற்கு நேரமில்லை. நூற்றுக்கு ஒருவர் கூட தேறவில்லை. 6, 7 பேர்கள் பரிசோதித்தோம். அந்தத் துறை நிபுணர்கள் உட்கார்ந்துகொண்டு சோதித்தோம். கல்வியை ஏதோ எக்சாமினேஷனுக்காக படிக்கிறார்கள். பாஸ் செய்வதற்காக மட்டும் படிக்கிறார்கள். பாஸ் செய்து முடித்தவுடனேயே எல்லாவற்றையும் மறந்து பயிற்சி பாழாகிறது. அவர்களுடைய உச்சரிப்பு கேட்பதற்கு பயங்கரமாக இருக்கிறது. தமிழில் எம்.எ. பட்டம் பெற்றவர்கள் கூட ல, ள, ழ, ர, ற ஆகியவற்றைச் சரியாக உச்சரிக்காத நிலை இருக்கிறது. இதையெல்லாம் போக்க முயற்சி செய்ய வேண்டும். அது போக இன்னொன்றையும் கூடச் செய்ய வேண்டும். கல்லூரிகளுக்கு வருகிறவர்களுக்காகச் சண்டை போடுகிறோம். குறைந்த மார்க் வாங்கியவர்களுக்கு இடம் கொடுக்கப்படுகிறது என்றக் குற்றச்சாட்டைச் சொல்கிறோம். தேவையில்லாமல் ஒரு தேர்வு நடத்தப்படுகிறது. நாமே பல சமயங்களில் வேண்டியவர்களுக்காகத் தகுதியில்லாதவர்களுக்குக் கூட சிபாரிசு செய்கிறோம். லஞ்சம் என்பது ஒவ்வொரு இடத்திலே ஒவ்வொரு தினுசாக இருக்கிறது. தகுதியில்லாதவர்களுக்கும் சிபாரிசு செய்கிறோம். இதை யாரும் மறுக்க முடியாது. மூன்றாவது வகுப்பில் 8-வது அட்டெம்டில் பாஸ் செய்தவர்களுக்குக் கூட அப்மிஷன் கிடைத்துவிடுகிறது. இதைத் தடுத்து நிறுத்தாவிட்டால், எதிர்காலத் தலைமுறை பாழாகிவிடும். ஹிஸ்டரி தேர்விற்கு வந்தவர்களில் பஸ்ட் கிளாஸில் பாஸ் செய்தவர்களையும் பார்த்தேன். ஹிஸ்டரியில் மூன்றாவதாகப் பாஸ் செய்து வந்தவர்களையும் பார்த்தேன். அவர் சொன்னது சரியாக இருந்தது. யூனிவர்சிடி என்ன சொல்கிறது ? மூன்றாவது கிரேடில் வந்தவர்களுக்கு லெக்சரர் பதவி கொடுக்கக் கூடாது என்கிறார்கள். இந்த ஹிஸ்டரிக்கு மார்க் போடுகிற மகானுபாவர்கள் மகாக் கஞ்சர்கள். 100-க்கு 20 மார்க்தான் போடுகிறார்கள். மீதம் உள்ள 80-ஐ தங்கள் பாக்கெட்டிலே போட்டுக் கொள்வதாக நினைக்கிறார்கள். மேதமாடிக்ஸ், சான்ஸ்கிரிட், லாஜிக்கில் மார்க் போடுகிற அளவிற்கு இவர்கள் மார்க் போடுவதில்லை. தமிழாசிரியர்களும் கஞ்சப் பிரபுக்களாக இருந்தார்கள். இப்போது கொஞ்சம் திருந்தி வந்தி



ருக்கிறார்கள். அதிலும் ஹிஸ்டரிக்காரர்கள் மார்க்கே போடுவதில்லை. பஸ்ட் கிளாஸ் இப்போது வாங்கினவர்கள் கூட முன்பு செகண்ட் கிளாஸ் வாங்கினவர்களுக்குச் சமமாக இல்லை. எனென்றால் பல யூனிவர்சிடிகளில் மூன்றாவது கிளாஸ் இல்லை. ஆகையால் பஸ்ட் கிளாஸ், செகண்ட்கிளாஸுடன் நின்று விடுகிறது. இதையெல்லாம் கவனிக்க வேண்டும். இதற்கு அரசு உத்திரவு போட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நான் பிரத்யட்சமாகப் போனவாரம் பார்த்ததைச் சொல்கிறேன். வரலாறு படித்த ஒரு பெண்மணிக்கு யூனிவர்சிடியில் அங்கீகாரம் தர மறுக்கிறார்கள். எனென்றால் மார்க் குறைவாக இருக்கிறது என்கிறார்கள். ஜாதி, மதம் அவைகளைப் பற்றி உறுப்பினர்கள் சொன்னார்கள். நான் "சேலன்ஜ்" பண்ணுகிறேன். காரைக்குடியில் செட்டியார்களால் நடத்தப்படுகிற கல்லூரிகள் 6 இருக்கின்றன. செட்டியார்கள் தொடர்பு கொண்டது. 60 ஆசிரியர்களில் மூன்று பேர் செட்டியார்கள் இதுவரையிலே வந்திருக்கிறார்கள். 6 ஆண்டுக் காலம் ஒரு செட்டியார் பிரின்சிபாலாக இருந்தார். இன்னொருவர் மறுபடியும் வரவில்லை. நாங்கள் ஜாதியைப் பார்ப்பதில்லை. கிறிஸ்தவர், முஸ்லீம், பிராமணர், இன்னொரு ஜாதி என்று பார்ப்பதில்லை. யாராக இருந்தாலும் திறமைசாலியானவரா என்று தகுதி ஒன்றுதான் பார்க்கப்படுகிறது. தகுதியுள்ளவரை ஏற்றுக் கொள்கிறோம். ஜாதியைப் பார்க்காமல், எந்த ஜாதிக்காரராக இருந்தாலும், திறமை, தகுதியை மட்டும் பார்த்துத் தேர்ந்தெடுக்க வேண்டும். பின் தங்கியவர்களுக்குச் சலுகை தருவதை நான் ஆட்சேபிக்கவில்லை. அவர்களுக்குச் சலுகை கொடுக்க வேண்டியதுதான். அவர்களுக்கு என்று 50 சத விதம் ஒதுக்கிவிட்டு, மற்றபடி எல்லோருக்கும் ஜாதி, மதம் பார்க்காமல் கொடுத்தால்தான் நாடு முன்னேறும். பொது வாழ்க்கை முன்னேறும். தொழில் முன்னேறும். நம்முடைய வாணிகம் முன்னேறும். இல்லாவிட்டால் நம்முடைய வெளிநாட்டு வாணிகம் பாழாகிவிடும். பவுண்டன் பேனா வாங்குகிறோம். வெளிநாட்டு பவுண்டன் பேனாவைத்தான் அதிகமாக விரும்புகிறார்கள். அதன் தரம் நம்முடைய நாட்டுப் பொருள்களுக்கு இல்லை. நான் சுதேசி ஆர்வம் உடையவன். சுதேசிப் பொருள்களை உபயோகிப்பவன். என்றாலும் நம்முடைய பொருள்கள் தரமாக இல்லை என்பதை ஒப்புக்கொண்டுதானாக வேண்டும். நண்பர்கள் தரமாக இல்லை என்பதை ஒப்புக்கொண்டுதானாக வேண்டும். நண்பர்கள் ஒழுக்கத்தைப்பற்றிச் சொன்னார்கள். பொதுத் துறையில் ஒழுக்கம் இருக்க வேண்டும். இன்று ஒழுக்கம் கெட்டுவிட்டால், திறமையைக் காண முடியாது. நம்முடைய நாட்டு மிளகு வெளிநாடுகளுக்குச் சென்று கொண்டிருந்ததாகச் சங்க கால இலக்கியங்களில் நாம் படிக்கிறோம். ஆனால் இன்றைக்கு நம்முடைய நாட்டு மிளகு வெளிநாடுகளுக்கு அதிகமாக ஏற்றுமதி ஆவதில்லை. காரணம் அவர்கள் பயப்படுகிறார்கள். அந்த அளவிற்கு அதில் கலப்படம் செய்யப்படுகிறது. நம்முடைய மிளகை வெளி நாட்டுக்காரன் வாங்கமாட்டேன் என்கிறான். பப்பாளி விதை, அந்தி மந்தார விதை, போன்றவைகள் எல்லாம் மிளகில் இன்றைக்குக் கலப்படம் செய்யப்படுகின்றன.

திரு. கே. அறிவழகன் : தனியார் துறையில்தான் இவ்வளவும் நடை பெறுகிறது என்று சொல்கிறேன்.

திரு. சா. கணேசன் : தனியார் துறையில் மட்டுமல்ல. அரசாங்கத் துறையிலும் இப்படித்தான் நடந்துகொண்டு வருகிறது. தரக்கட்டுப்பாடு வர வேண்டும்.

அடுத்து, காவிரி நீருக்காகப் போராடுகிறோம். மைசூரோடு இதற்காகப் போராடுகிறோம். இது ரொம்ப நியாயம். இதை இப்போது பேச வேண்டிய அவசியமில்லை. அதனால் இத்தோடு நிறுத்திக்கொள்கிறேன். ஆனால் மைசூரோடு போராட வேண்டிய இன்னொரு முக்கியமான விஷயம் இருக்கிறது. தமிழ் கல்வெட்டுகளுக்காகப் போராட வேண்டும். ஊட்டியில் இந்தப் புஷ்கள் இருந்தன. அந்தத் துறையின் தலைவராக ஒரு மைசூர்க்காரர் இருந்த காரணத்தினால், நம்முடைய மாநிலத்திலிருந்த அந்தச் சுவடிகள் எல்லாம் மாநிலமான மைசூருக்கு எடுத்துச் செல்லப்பட்டு விட்டன, அந்தக் கட்டடம் ஊட்டியில் கட்டிக் கொடுக்காததனால், இவைகள் அடுக்க

மாநிலத்திற்கு அகற்றப்பட்டு விட்டன. அவைகள் ஊட்டியிலிருந்திருந்தாலும் பத்திரமாக இருந்திருக்கும். அந்தக் குழுநிலையில் சீதோஷ்ண ஸ்திதியில் அவை பத்திரமாக இருந்திருக்கும். நூற்றுக்கு 85 சதம் தமிழ் கல்வெட்டுக்கள் ; அவை அங்கிருந்து அகற்றப்பட்டுவிட்டன. மைசூரில் இவை பத்திரமாகப் காப்பாற்றப்பட்டு வருமா என்பதில் எனக்குச் சந்தேகம்தான் வருகிறது. அந்தச் சீதோஷ்ண ஸ்திதி அதற்கு ஏற்றதல்ல. லட்சத்திற்கு மேற்பட்ட கல்வெட்டுகளில் 20 ஆயிரம் சேகரிக்கப்பட்டவை ; சுமார் 6,000-ம் தான் வெளியிடப்பட்டவை. அந்தக் காலத்திலே ஆராய்ச்சி செய்தவர்கள் இவைகளை வெளியிடாமல் இருந்தாலும், பத்திரமாகப் பாதுகாக்கப்பட்டன. மைசூரில் இவைகள் வைக்கப்பட்டிருப்பதால், கரையான், செல் ஆகியவைகளால் அரிக்கப்பட்டுப் பாழாகிவிடலாம். இவைகளைத் தமிழ் நாட்டிற்குக் கொண்டுவர நாம் போராட வேண்டியது அவசியமாகும். அவைகளுக்காகப் போராடுவதோடு எற்கனவே வெளியிடப்படாதவைகளை வெளியிட நாம் முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும். இந்தத் துறைக்கு இவைகளை கொண்டுவந்தால் மட்டும் பயன் இல்லை. தொல் இயல் துறை, ஆர்க்கலாலிகல் டிபார்ட்மெண்ட்டில் பணி செய்கிறவர்கள் பலவிதத் திறமை பெற்றவர்களாக இருக்க வேண்டும். அவர்கள் குறைந்த பட்சம் நமது பல்கலைக் கழகத்தில் எம்.ஏ. வரலாற்றுத் துறையிலே பட்டம் பெற்றவர்களாக இருக்க வேண்டும். அதோடு கல் எழுத்துக்கள், கல் எழுத்தில் பல வகை எழுத்துக்கள், பழங்கால பிராமி எனப்படும் தமிழ் எழுத்துக்கள், தமிழ் எழுத்துக்களில் வட்ட எழுத்துக்கள், பிற்கால தமிழ் எழுத்துக்கள், பல்லவ கிரந்தங்கள், சோழ கிரந்தங்கள், பாண்டிய கிரந்தங்கள் இவ்வளவையும் கற்றுத் தேர்ந்து ஐக்ளோகிராபி என்று சொல்லப்படுகிற படிமக்கலைத் துறையில் தேர்வு பெற்று, கட்டடக் கலைத் துறையில் நிபுணத்துவம் பெற்று வேலைக்கு வர வேண்டியவர்கள். பப்ளிக் சர்வீஸ் கமிஷன் மூலமாக இன்றைக்கு இவர்கள் வேலைக்கு எடுக்கப்படுகிறார்கள். இவர்கள் ஆராய்ச்சி செய்து தருகிற வரலாற்றுச் சான்றுகளை வைத்துக்கொண்டுதான் நம்முடைய ஹிஸ்டரி புரபசர்கள் கல்லூரிகளில் உட்கார்ந்துகொண்டு நமக்கு வரலாற்றைக் கற்றுக் கொடுக்கிறார்கள். இவர்கள் சரிவரத் தங்களுடைய ஆராய்ச்சியைச் செய்யாவிட்டால் எப்படி நம்முடைய வரலாறு சரியாக இருக்க முடியும் ?

இதற்கு அடிப்படையாக வேலை செய்வதற்கு அவர்கள் தங்கள் திறமை முழுவதையும் செலவழித்தாக வேண்டும். அவர்களுடைய உழைப்பு, காலம், நேரம் இவ்வளவையும் செலவிட வேண்டும். இத்துறையில் நல்ல பயிற்சி பெற்றவர்களால்தான் நல்ல முறையிலே ஆராய்ச்சி செய்து உண்மைகளை வெளிக் கொண்டு வர முடியும். ஆனால் அப்படிப்பட்டவர்களுக்கு இன்றையதினம் அந்தப் பதவிக்கு விதிக்கப்பட்டுள்ள சம்பளம் ரூ. 425—15—475—20—575—25—650. பல பேர் இதிலே கஷ்டப்பட்டு வேலை செய்தாலும் கொஞ்ச நாட்களுக்குத்தான் இதில் வேலை செய்கிறார்கள். எதோ " ஸ்டெப்பிங் ஸ்டோன் " போலத்தான் இதைக் கருதுகிறார்கள். 7, 8 வருஷங்கள் கஷ்டப்பட்டு வேலை பார்த்த பிறகும் ரூ. 650 தான் சம்பளம். ஆனால் லெக்சரராகப் போனால் எடுத்த எடுப்பிலேயே ரூ. 650 சம்பளம் என்றால், யார் தான் வெளியே போக மாட்டார்கள். அவளின் டெண்ட் புரொபசர் கிடைத்தாலும் போதும் என்று போய்விடுகிறார்கள். பொன்னுசாமி என்பவர் எனக்குத் தெரிந்தவர். அவரை அங்கே கொண்டு போய் வைத்தேன். அவர் 1 வருஷம் இருந்து எல்லாத் தகுதியும் பெற்றிருந்தபோது, ஒருநாள் சொல்லாமல், போய்விட்டார். விசாரித்தால் ஸ்டேட் பாங்கில் சேர்ந்துவிட்டார் எனத் தெரிகிறது. எனவே இந்த நிலைமைகள் இருக்கலாமா ? இனி அதற்குத் தகுந்த மாதிரியான ஊதிய உயர்வு அளிக்கப்பட வேண்டும். இன்னொன்றையும் குறிப்பிட விரும்புகிறேன். சமீபத்தில் நடந்த கல்வெட்டுப் பயிற்சி வகுப்புக்கு நான் உடல்நிலை காரணமாக வர முடியவில்லை. ஆனால் கனம் கல்வி அமைச்சர் அவர்களின் பேச்சு முழுவதையும் பார்த்தேன். மிக வேகமாக 4, 5 ஆண்டுகளில் கல்வெட்டுக்களைப் பதிவு பார்த்து வெளியிடப்பட்டு விடவேண்டுமென்று பேசியிருக்கிறார்கள். அருமையான காரியம். அதை நன்றியறிதலோடு வரவேற்கிறேன். 10 வருஷங்களுக்கு முன் வாங்கிய ஒட்டை ஜீப் கார் ஒன்றுதான் இத்துறைக்கு உண்டு. டேபிளிலிருந்து வேலை செய்கிற துறையல்ல அது. காடுகளுக்கும் மலைகளுக்கும் ஓடி எங்கே

7 50 p.m.



நடுகல் இருக்கிறது, பாறை இருக்கிறது, எழுத்திருக்கிறது என்று கல் ஆராய்ச்சி செய்ய வேண்டும். மணல், மேடு, காடு முதலிய இடங்களுக்குச் செல்ல வேண்டும். 5 பேர்கள் பணி செய்துகொண்டிருக்கிறார்கள். இவர்களுக்காக ஜீப் என்று ஒன்று இருந்தாலும், அது கிட்டத்தட்ட பாதி நாளைக்குப் பட்டரை வாசமாக இருக்கிறதே தவிர, பணித்துறைக்கு இல்லை, பல நாட்கள் என் காரிலேயே கூட்டிக்கொண்டு போயிருக்கிறேன். எனக்கு எதோ ஒரு வெறி, மடமை என்று கூடச் சொல்லலாம். அந்த ஜீப்பை யார் வேண்டுமென்றாலும் பாருங்கள். அதைத் தள்ளுவதற்கே அவர்கள் இருக்கிறார்கள். ஒரு வேளும் ஒரு நல்ல ஜீப்பும் அதற்கு அவசியம். இந்தத் துறைக்குப் புதுப் பொருள் வரக்கூடாது என்று அந்த ஜீப்பைத் தொல் பொருளாகவே வைத்திருக்கிறார்கள் என்று எண்ணுகிறேன். திரு. சுவாமி நாதன் பேசும்போது, தஞ்சையிலிருந்து தோண்டியெடுக்கப்பட்ட விக்ரகங்களை சென்னை மியூசியத்திற்குக் கொண்டுவருகிறார்கள் என்று பேசினார்கள். மியூசியத்திற்குக் கொண்டுவந்தால் கூட ஆட்சேபணையில்லை. காட்சிக்கு வைக்கப்பட வேண்டும். எல்லாம் பாதுகாக்கப்பட்டுக் கிடக்கின்றன. ஆனால் அது அந்த மாவட்டத்திலேயே இருக்க வேண்டும். இப்படிக் கொண்டு வரப்படும் சிலைகள் எல்லாம் இங்கே ஒரு அறையில் பூட்டி வைக்கப்படுகின்றன. அதற்குக் காரணம் என்ன ? இந்தத் துறையில் பயிற்சி, திறமை, அக்கறை உள்ளவர்கள்தான் ஈடுபடலாம். இந்த மியூசியத்தை இரண்டாகப் பிரித்து தொல்பொருள்களைத் தனியாக அதில் திறமையுள்ளவர் நிர்வாகத்தில் முறைப்படுத்தி வைக்க வேண்டும். உயிர் இயல் வேறாக இருக்க வேண்டும். இப்பொழுது, யானை, காண்டாமிருகம் எல்லாம் இவற்றோடு கலந்து குழம்பிக் கிடக்கிறது. எற்கனவே இந்த அரசியலே அமைச்சர் பெருமக்கள் ஏற்றுக்கொண்டதற்கேற்ப, சிற்ப, படிம பயிற்சிப் பள்ளிகளை டெல்லியில் எஜுகேஷன் மேலே கொண்டு வந்துவிடுவதென்று முடிவு செய்து அதை இப்போது செயற்படுத்த வேண்டும். இதைத் தனியாக வைத்துச் செயல்பட வேண்டும். கல்லூரிகளுக்கு, ஆசிரியர் தகுதி "எம்.ஏ., பி.ஏ. போதும்" என்று சொல்கிறார்கள். கொஞ்சம் சிந்திக்க வேண்டும். பள்ளிகளுக்கு மட்டும் பயிற்சி பெற்றவர்கள் வேண்டுமென்றால் கல்லூரிகளுக்கு வேண்டாமென்று சொல்வதைப் புரிந்து கொள்ள முடியவில்லை. அடுத்து, பிரசிடென்சி காலேஜில் இருந்து ரிடையரான திரு. சூர்யநாராயண அவர்களும், காரைக்குடியில் எங்கள் காலேஜில் இருந்த திரு. ஏ. என். தம்பி அவர்களும் எம்.ஏ. (மெட்ராஸாக) இருந்தாலும் அதை விரும்பாமல் முறையே பி.ஏ. (காண்டாப்) பி.ஏ. (ஆக்ஸன்) என்று போட்டுக் கொண்டார்கள். ஆகையினால் எம்.ஏ பெரிது அல்ல, பெற்ற திறமையான பயிற்சிதான் முக்கியம் என்பதை எற்றுக் கொள்ள வேண்டுமென்று சொல்லி இறுதியாக ஒன்றைப் படித்துக் காட்ட விரும்புகிறேன்.

இரண்டு நாட்களுக்கு முன் ஒரு விளம்பரம் வந்திருக்கிறது. அதை அமைச்சர்கள் கவனிக்க வேண்டும். "தொல்பொருள் ஆராய்ச்சிப் பள்ளி (ஸ்கூல் ஆஃப் ஆர்கியாலஜி), தொல்பொருள் ஆராய்ச்சியில் அல்லது சரித்திரத்தில் அராபிக் அல்லது பர்சியன் அல்லது சமஸ்கிருதம் அல்லது பாலி அல்லது பிராக்ருத் மாஸ்டருக்கு ஆனர்ஸ் டிகிரி பெற்றவர்களுக்கு ஆர்க்கியாலஜிகல் மேல் பயிற்சி போஸ்ட்கிராஜுவேட் பயிற்சி பெறுவதற்கு ஓர் ஆண்டு காலம் கொடுக்கப்படும். அதற்கு டைரக்டர், தொல்பொருள் ஆராய்ச்சி, ஜன்பாத், புது டில்லிக்கு அனுப்ப வேண்டும் என்று இருக்கிறது. சிந்திக்க வேண்டும். அங்கே தமிழுக்கு இடம் இல்லை. அவர்களுக்கு அதைப்பற்றித் தெரியவில்லை. ஆனால் கல் வெட்டு, தொல் பொருள் சிற்பங்கள் நிறைந்தது தமிழில் இருந்த போதிலும், பர்ஷியன், அராபிக், பாலி, பிராகிருத் தெரிந்தவர்கள்தான் மேலே சொன்ன பயிற்சிக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறார்கள். ஆகையால் தமிழர்களின் கதி என்ன ஆகும் ? திறமையும் திறனும் பெற்றவர்கள் வாழ முடியாமல், தமிழக வரலாறு மறைக்கப்பட்டுப் போய்விடக்கூடும். ஆகவே இந்தத் துறையை நாம் மிக விரைவிலேயே துவங்குவதற்கு வகை செய்ய வேண்டும், வழி செய்ய வேண்டும். இன்று பல்லாயிரம் கல்லூரிகளுக்கும் பள்ளிகளுக்கும் வந்ததாலே நம் பாரம்பரியம் என்று சொல்லுகிற பெருமை வளர்ந்து விட முடியாது. அழிந்த பிறகு நிச்சயம் இலக்கியத்தை மட்டும்

7-5 p.m.

1971–72-ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட புள்ளி விவரங்கள் தனித் தனியே கீழே பிரித்துக் காட்டப்பட்டுள்ளன :—

| | வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு (1970–71). | | | திருத்த மதிப்பீடு (1971–72). | | |
|---|---|---|---|---|---|---|
| | இட்டத்தில் சேராத பணிகள். | இட்டப் பணிகள். | மொத்தம். | இட்டத்தில் சேராத பணிகள். | இட்டப் பணிகள். | மொத்தம். |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| | (ரூபாய் லட்சத்தில்.) | | | | | |
| தொடக்கக் கல்வி. | 29,73·63 | 1,23·09 | 30,96·72 | 36,84·35 | 1,05·77 | 37,90·12 |
| இடைநிலைக் கல்வி. | 19,23·48 | 1,80·46 | 21,03·94 | 22,66·05 | 3,00·68 | 25,66·73 |
| பல்கலைக் கழகக் கல்வி. | 4,22·56 | 67·98 | 4,90·54 | 5,47·02. | 77·78 | 6,24·80† |
| சிறப்புக் கல்வி. | 1,12·26 | 5·08 | 1,17·34 | 1,22·63 | 7·17 | 1,29·80 |
| பிற இனங்கள். | 5,00·06 | 26·81 | 5,26·87 | 5,39·58 | 1,49·03 | 6,88·61 |
| தொழில் நுட்பக் கல்வி. | 1,93·63 | 55·08 | 2,48·71 | 2,22·79 | 49·73 | 2,72·52 |
| தொழில் பயிற்சிப் பள்ளிகள். | 97·33 | 1·64 | 98·97 | 1,09·09 | 2·33 | 1,11·42 |
| | 62,22·95 | 4,60·14 | 66,83·09 | 74,91·51 | 6,92·49* | 81,84·00 |

1970–71 திட்ட மதிப்பீட்டைக் காட்டிலும் 1971–72 வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் நிதி ஒதுக்கீட்டில் ஏற்பட்டுள்ள தொகை அதிகரிப்பு ரூ. 15,00·91 லட்சமாகும். 1971–72-ல் தமிழ் நாட்டின் மொத்த ரெவின்யூ செலவினமாகிய ரூ. 358·52 கோடியில் ரெவின்யூ கணக்கில் கல்விச் செலவு மட்டும் ரூ. 81·84 கோடியாகும். இது மொத்தச் செலவில் சுமார் 23 விழுக்காடாகிறது.

* "103. மூலதனச் செலவு", "50. கட்டடப் பணிகள்", கடன்கள் ஆகிய தலைப்புகளின்கீழ் காட்டப்பட்டுள்ள திட்டச் செலவு இதில் அடங்காது.

† "பிற இனங்கள்" என்னும் கணக்கில் சேர்க்கப்பட்டுள்ள கல்லூரிக் கல்விக்கான செலவு ரூ. 34·05 லட்சம் இதில் சேர்க்கப்படவில்லை. எனவே "28.—கல்வி" என்னும் கணக்கில் கல்லூரிக் கல்விக்கான மொத்தச் செலவு ரூ. 658·85 லட்சமாகும்.



23rd July 1971]

4. கல்விக்காக ரூ. 8,184 லட்சம் ஒதுக்கப்பட்டிருப்பது தவிர, மேலே காட்டியுள்ளபடி தேர்வுகள், தொல்பொருள் ஆராய்ச்சி, அரும்பொருட் காட்சிச்சாலைகள் முதலியவற்றிற்கான நிதி ஒதுக்கமும், 1971–72-ஆம் ஆண்டுக்குரிய கல்வி மானியக் கோரிக்கையில் அடங்கும்.

| | | | (ரூபாய் லட்சத்தில்.) |
|---|---|---|---|
| 26. பல்வகைத் துறைகள் (அரசுத் தேர்வுகள்) | | .. | 62·93 |
| 27. அறிவியல் துறைகள்— | | | |
| தொல்பொருள் ஆராய்ச்சி | .. .. | 3·73 | .. |
| அரும்பொருட் காட்சிசாலைகள் | .. .. | 11·55 | |
| | | | 15·28 |
| 28. கல்வி (பொது, தொழில் நுட்பக் கல்வி) | .. | .. | 81,84·00 |
| பிற இனங்கள் | .. .. .. .. | .. | 50·28 |
| மொத்தம்—கோரிக்கை 13—1971–72 திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு | .. .. | | 83,12·49 |

கடந்த ஐந்தாண்டுகளாக "கோரிக்கை 13—கல்வி" எண்பதன்கீழ் படிப்படியாக நிதி ஒதுக்கீடு கூடியிருப்பதைக் கீழ்க்காணும் புள்ளி விவரங்களிலிருந்து அறியலாம் :—

| | (ரூபாய் லட்சத்தில்.) |
|---|---|
| 1966–67 கணக்குகள் .. | 44,27·92 |
| 1967–68 ,, .. | 54,03·81 |
| 1968–69 ,, .. | 58,10·94 |
| 1969–70 ,, .. | 66,56·03 |
| 1970–71 திட்ட மதிப்பீடு .. | 67,73·14 |
| 1971–72 திருத்த திட்ட மதிப்பீடு | 83,12·49 |

5. 1971–72 திட்ட மதிப்பீட்டில் கல்விக்கான ஒதுக்கீட்டாக மேலே 3-ம் பத்தியில் கூறப்பட்டுள்ள ரூ. 8,184 லட்சத்தில், "28—கல்வி" நீங்கலாக வேறு கணக்குத் தலைப்புகளில் பற்று எழுதப்பட்டு, மானியக் கோரிக்கை 13 நீங்கலாக மற்ற மானியக் கோரிக்கைகளில் 1971–72 திட்ட மதிப்பீட்டில் சேர்க்கப்பட்டுள்ள (பொது-தொழில் நுட்ப) கல்வி குறித்த செலவினங்களுக்கு செய்யப்பட்ட மேற்காணும் நிதி ஒதுக்கீடுகள் அடங்கா.

| (1) | பொதுக் கல்வி. திட்டப் பணிகள். (2) | பொதுக் கல்வி. திட்டத்தில் சேராத பணிகள். (3) | தொழில் நுட்பக்கல்வி. திட்டப் பணிகள். (4) | தொழில் நுட்பக்கல்வி. திட்டத்தில் சேராத பணிகள். (5) | மொத்தம். திட்டப் பணிகள். (6) | மொத்தம். திட்டத்தில் சேராத பணிகள். (7) | மொத்தம். மொத்தம். (8) |
|---|---|---|---|---|---|---|---|
| ரெவின்யூ கணக்கில் செலவு— | | | | | | | |
| 50. (a) மூலப்பணிகள்—கட்டிடங்கள் (இச் செலவுக்கு வேண்டிய தொகை நடப்பு வருவாயிலிருந்து பெறப் படுகிறது)—அரசுக் கல்விக் கூடங்களுக்கான கட்டிடச் செலவு. | 0·40 | 1·91 | 13·69 | 1·00 | 14·09 | 2·91 | 17·00 |
| 52. பொதுப் பணிகளுக்கான மூலதனச் செலவு (a)—H | 0·50 | 2·15 | .. | .. | 0·50 | 2·15 | 2·65 |
| 39. பல்வகை .. .. .. .. .. .. | .. | 0·07 | .. | .. | .. | 0·07 | 0·07 |
| ரெவின்யூ கணக்கிற்குப் புறம்பான செலவு— | | | | | | | |
| 103. பொதுப் பணிகள்—கட்டிடங்கள் ஆகியவற்றிற்கான மூலதனச் செலவு (இச் செலவுக்கு வேண்டிய தொகை நடப்பு வருவாய் நீங்கலான பிறவாயில் களிலிருந்து பெறப்படுகிறது)—அரசுக் கல்விக் கூடங்களுக்கான கட்டிடச் செலவு. | 2,37·11 | 4·67 | 22·44 | 1·00 | 2,59·55 | 5·67 | 2,65·22 |
| கடன்கள்— | | | | | | | |
| தேசியக் கடன் படிப்புதவிச் சம்பளங்கள் .. .. | .. | 53·50 | .. | .. | .. | 53·50 | 53·50 |
| தமிழ் நாடு கல்விக் கடன்கள்— | | | | | | | |
| (பொறியியல் கல்லூரி, பல்தொழிற் பயிற்சிப் பள்ளி மாணவர்களுக்காக). | .. | .. | 10·00 | .. | 10·00 | .. | 10·00 |
| மொத்தம் .. | 2,38·01 | 62·30 | 46·13 | 2·00 | 2,84·14 | 64·30 | 3,48·44 |



6. மருத்துவக் கல்வி, வேளாண்மைக் கல்வி, கால்நடை மருத்துவக் கல்வி ஆகியவை குறித்த செலவு, அரிசன நலப் பள்ளிகள், அரிசன நல—பின்தங்கிய வகுப்பினர் படிப்புத்தவிப் பணங்கள் குறித்த செலவு, சமூகநல வளர்ச்சித் திட்டப் பணித்திலிருந்து, ஊராட்சி ஒன்றியத்தொடர்பாகச் செய்யப்படும் செலவு, சிறு கட்டிடங்கள், சமூகக் கல்வி ஆகியவை குறித்துச் செய்யப்படும் செலவு, சிறு திருத்தப் பள்ளிகள், போன்று கல்வி குறித்த வேறு செலவினங்கள் மேற்குறிப்பிடப்பட்ட பத்திகளில் உள்ள பள்ளி விவரங்கள் எதிலும் அடங்கா. கல்வி குறித்த இத்தலைய செலவினங்களும் கருத்தில் கொள்ளப்படு மாயின், மொத்தச் செலவுக்கும், கல்வி குறித்த செலவுக்கும் உள்ள சதவீத வீதாச்சாரம் மேலே மூன்றாவது பாராவில் சொல்லியிருக்கிற 23 விழுக்காட்டைக் காட்டிலும் மிக அதிகமாகவே இருக்கும்.

2. கல்வி வளர்ச்சிக்கான திட்டப் பணிகளின் செலவுப் பொருக்கம்.

7. கடந்த மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களிலும், ஆண்டுத் திட்டங்கள் மூன்றிலும் பொதுக் கல்வியில் பல்வேறு தலைகளில் ஏற்பட்ட திட்டச் செலவையும், நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திற்குரிய நிதி ஒதுக்கீட்டையும் அடுத்த பக்கத்தில் உள்ள அட்டவணை ஒருங்கே காட்டுகிறது :—

| | முதல் திட்டம். | இரண்டாவது திட்டம். | மூன்றாவது திட்டம். (1966-69). | நான்காவது திட்டம். | 1969-70 ஆண்டுக்கு | 1970-71 திட்ட மதிப்பீடு. | 1971-72 திட்ட மதிப்பீடு. |
|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) |
| | | | | (ரூபாய் லட்சத்தில்.) | | | | |
| தொடக்கக் கல்வி .. .. .. | 3,02·00 | 8,29·72 | 20,80·00 | 10,74·61 | 26,60·47 | 1,72·00 | 2,71·72 | 3,92·89 |
| இடைநிலைக் கல்வி .. .. .. | 54·00 | 2,64·04 | 9,20·00 | 6,50·05 | 15,95·25 | 1,39·86 | 1,65·62 | 2,47·73 |
| வேளை கல்வித் திட்டங்கள் .. .. .. | 19·60 | 32·57 | 3,75·00 | 85·33 | 2,11·50 | 37·96<br>+0·17 | 43·05<br>+0·52 | 1,60·43<br>+0·52 |
| பல்கலைக் கழகக் கல்வி .. .. .. | 5·40 | 14·66 | 34·00 | 1,48·39 | 8,50·00 | 99·53<br>+1·00 | 1,54·52 | 2,41·83<br>+6·00 |
| மொத்தம்—பொதுக் கல்வி .. | 3,81·00 | 11,40·99 | 34,09·00 | 19,58·38 | 53,17·22 | 4,49·35<br>+1·17 | 6,34·91<br>+0·52 | 10,42·88<br>+6·52 |

†பற்றொன்றை புள்ளி விவரங்களில், "50. கட்டப் பணிகள், 103. மூலதனச் செலவுகள்—கடன்கள்" எண்ணும் தலைப்புகளில் காட்டப்பட்டுள்ள கல்வி குறித்த திட்டச் செலவு அடங்கும். ..+" எனக் குறியிடப்பட்ட புள்ளி விவரம் மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்களுக்குரிய நிதி ஒதுக்கீட்டினைக் குறிக்கிறது.



8. திட்டப்பணிகளில், தொடக்கக் கல்வி, இடைநிலைக் கல்விக்கு அளிக்கப்படும் முக்கியத்துவம் கல்வித்தரம் உயர்த்தப்படுவதைக் குறித்ததாகும். இப்போது 31,881 தொடக்கப் பள்ளிகளும், 2,635 உயர்நிலைப் பள்ளிகளும் உள்ளன. மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்படுகின்ற சத வீதம் தொடர்ச்சியாகவும் சீராகவும் அதிகரித்து வருகின்றது. 6–11 வயதுத் தொகுதியில் 94·1 சத வீதமும், 11–14 வயதுத் தொகுதியில் 55·1 சத வீதமும், 14–17 வயதுத் தொகுதியில் 35·3 சத வீதமும் பள்ளிகளில் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளனர். நான்காவது திட்டக்கால முடிவிற்குள், 6–11 வயதினரில் 100 சத வீதமும், 11–14 வயதினரில் 80 சத வீதமும், 14–17 வயதினரில் 55 சத வீதமும் சேர்த்துக் கொள்ளப்படும் இலக்கினை அடையக் கூடுமென நம்பப்படுகிறது.

## 3. கல்விக் கூடங்களின் எண்ணிக்கைப் பெருக்கம்.

9. கடந்த சில ஆண்டுகளில், கல்வி வசதிகள் பெருகியுள்ளதை மேற்காணும் புள்ளி விவரங்கள் காட்டுகின்றன :—

| கல்விக்கூடத்தின் இனம். | கல்விக் கூடங்களின் எண்ணிக்கை. | | | | |
|---|---|---|---|---|---|
| | 1966-67. | 1967-68. | 1968-69. | 1969-70. | 1970-71. 1-8-70 அன்று இருந்தபடி. |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| தொடக்கப்பள்ளிகள் .. | 31,157 | 31,429 | 31,712 | 31,823 | 31,881 |
| *உயர்நிலைப் பள்ளிகள் .. | 2,372 | 2,449 | 2,513 | 2,580 | 2,635 |
| பயிற்சிப் பள்ளிகள் .. | 145 | 143 | 142 | 140 | 139† |
| ஊனமுற்றோருக்கான பள்ளிகள். | 22 | 22 | 23 | 24 | 24 |
| கல்லூரிகள் .. .. .. | 105 | 116 | 126 | 140 | 161 |
| பயிற்சிக் கல்லூரிகள் .. .. | 19 | 20 | 23 | 23 | 23 |
| பல் தொழில் பயிற்சிப் பள்ளிகள். | 35 | 35 | 35 | 35 | 35 |
| பொறியியல் கல்லூரிகள் .. | 12 | 12 | 12 | 12 | 12 |
| தொழில்நுட்ப உயர்நிலைப் பள்ளிகள். | 14 | 15 | 15 | 15 | 14 |

*மெட்ரிகுலேஷன், மைய அரசுப் பள்ளிகள் உட்பட.

†ஆங்கிலோ-இந்தியர்களுக்கான பயிற்சிப் பள்ளி ஒன்று சிறார்பள்ளிகளுக்கான பயிற்சிப் பள்ளிகள் இரண்டு உட்பட.

## அத்தியாயம் II.

### பள்ளிக் கல்வி.

பள்ளிக் கல்விக்கான 1971-72-ஆம் ஆண்டு "செயலாற்றல் ஆய்வுக் குறிப்பு" பேரவை முன் தனியாக வைக்கப்பட்டுள்ளது. 1971-72-ம் ஆண்டு பள்ளிக் கல்விக்கு வேண்டிய நிதித்தேவைகளோப்பற்றிய கீழ்க்காணும் விவரங்கள் அதில் அடங்கியுள்ளன :—

I. வேலைத் திட்ட, நடவடிக்கை வகைப்பாடு.

II. செலவின வகைப்பாடு.

III. நிதி ஒதுக்க விவரங்கள்.

புள்ளி விவரங்களை ஒப்பிட்டுப் பார்ப்பதற்கு வசதியாக, பொருத்தமான புள்ளி விவரங்களின் சுருக்கம் கீழே தரப்பட்டுள்ளது :—

| (1) | 1970-71 திருத்த மதிப்பீடு. (2) (ரூபாய் லட்சத்தில்.) | 1971-72 திட்ட மதிப்பீடு. (3) |
|---|---|---|
| **I. வேலைத் திட்ட, நடவடிக்கை வகைப்பாடு—** | | |
| 1 நிர்வாகமும் மேற்பார்வையும் .. | 105·94 | 113·41 |
| 2 தொடக்கக் கல்வி .. .. .. | 31,85·42 | 37,57·20 |
| 3 மதிய உணவுத் திட்டம் .. .. .. | 259·52 | 256·46 |
| 4 பாடநூல்களும் கரும்பலகைகளும் இலவசமாக வழங்குதல். | 12·44 | 13·24 |
| 5 இடைநிலைக் கல்வி .. .. .. | 21,73·82 | 25,67·79 |
| 6 அறிவியல் போதனை வசதிகளைப் பெருக்குதல். | 23·95 | 30·01 |
| 7 தனிப் பள்ளிகள், பயிற்சிப் பள்ளிகள், ஊனமுற்றோருக்கான பள்ளிகள், ஓரியண்டல் பள்ளிகள், சிறார்பள்ளிகள். | 118·59 | 134·23 |
| 8 ஆங்கிலோ-இந்தியப் பள்ளிகள் .. | 6·28 | 7·07 |
| 9 முதியோர் கல்வி .. .. .. | 2·19 | 1·33 |
| 10 குழந்தைகள் இல்லங்கள் .. .. | 45·00 | 50·00 |
| 11 நூலகங்கள் .. .. .. .. | 52·43 | 53·35 |
| 12 உடற்பயிற்சிக் கல்வி .. .. .. | 15·45 | 16·39 |
| 13 தேசிய மாணவர் படை .. .. .. | 59·16 | 65·27 |
| 14 படிப்பு உதவித் தொகைகள் .. .. | 6·08 | 6·05 |
| 15 மாநிலக் கல்வி நிறுவனம் .. .. | 2·02 | 2·79 |
| 16 தமிழ்நாடு ஆங்கிலமொழி பயிற்றுவிக்கும் இயக்கம். | 2·87 | 2·87 |
| 17 புதுமுகத் தொழிற்பயிற்சி நிலையங்கள். | 2·65 | 1·60 |
| 18 சைனிக் பள்ளி .. .. .. .. | 9·60 | 9·45 |
| 19 தொழில் பழகு ஆசிரியர் திட்டம் .. | 32·50 | 97·50 |
| 20 பல்வகை .. .. .. .. | 76·83 | 17·88 |
| மொத்தம் .. | 61,92·74 | 72,03.89 |



| (1) | 1970-71 திருத்த மதிப்பீடு. (2) (ரூபாய் லட்சத்தில்.) | 1971-72. திட்ட மதிப்பீடு. (3) |
|---|---|---|
| **II. செலவின வகைப்பாடு—** | | |
| 1 அலுவலர்/ஊழியம் .. .. .. | 397·67 | 477·50 |
| 2 பயணப்படி .. .. .. .. | 5·69 | 6·39 |
| 3 பிற செலவுகள் .. .. .. .. | 150·97 | 147·52 |
| 4 உதவிபெறும் பள்ளிகளுக்கு மானியம். | 1,387·44 | 1,701·96 |
| 5 ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளுக்கு மானியம். | 2,425·00 | 2,787·70 |
| 6 நகராட்சிகளுக்கும் மாநகராட்சிகளுக்கும் மானிய உதவி. | 209·99 | 272·38 |
| 7 முன்னாள் மாவட்டக் கழக உயர்நிலைப் பள்ளிகளுக்கு மானிய உதவி. | 1,051·46 | 1,214·38 |
| 8 கட்டட வேலைகள் .. .. .. | 152·00 | 148·98 |
| 9 கருவிகள் .. .. .. .. | 44·64 | 57·71 |
| 10 பலவகை .. .. .. .. | 367·88 | 389·37 |
| மொத்தம் .. | 6,192·74 | 7,203·89 |
| **III. நிதி ஒதுக்க விவரம்—** | | |
| 28. கல்வி .. .. .. .. | 6,139·23 | 7,141·20 |
| 50. பொதுப்பணிகள் .. .. .. | 1·40 | 0·40 |
| 52. பொதுப்பணிகள் .. .. .. | .. | 0·50 |
| 103. பொதுப் பணிகளின் மேலான மூலதன முதலீடு. | 52·11 | 61·79 |
| மொத்தம் .. | 6,192·74 | 7,203 89 |

### அ. நிர்வாக அமைப்பு.

பள்ளிக் கல்வி இயக்குநர் பள்ளிக் கல்வித் துறையின் தலைவராவார். இவரே அரசுத் தேர்வு ஆணையாளராகவும் பொது நூல் நிலைய இயக்குநராகவும் உள்ளார். தற்போது வருவாய் மாவட்ட அளவில், 10 தலைமைக் கல்வி அதிகாரிகள் உள்ளனர். இவர்களுக்குக் கீழ் நிலையில் கல்வி மாவட்ட அதிகாரிகள் பணியாற்றுகின்றனர். இந்த அதிகாரிகளின் அதிகார வரம்பு வருவாய் மாவட்டத்தில் 2 அல்லது 3 பட்டங்கள் வரையிலாகும். தற்போது 45 கல்வி மாவட்ட அதிகாரிகள் உள்ளனர். தற்போது ஆறு (பெண்) ஆய்வாளர்கள் இருக்கின்றனர். பெண்கள் உயர்நிலைப் பள்ளிகளிலும், பயிற்சிப் பள்ளிகளிலும் ஆய்வு நடத்தும் பொறுப்பு இவர்களுடையதே.

சரக நிலையில், இப்போது 344 பள்ளித் துணை ஆய்வாளர்களும், 126 இளநிலை பள்ளித் துணை ஆய்வாளர்களும் உள்ளனர். ஆய்வாளர் அலுவலகத்தை விரிவுபடுத்துவதற்காக, 1971-72-ல் பள்ளித் துணை ஆய்வாளர் சரகங்கள் 15-ஐக் கூடுதலாக ஏற்படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது.

மேற்சொல்லியவர்களைத் தவிர, ஆங்கிலோ-இந்தியப் பள்ளிகளை ஆய்ந்து நிர்வகிப்பதற்காக ஆங்கிலோ-இந்தியப் பள்ளி ஆய்வாளர் ஒருவரும் பள்ளிகளில் உடற்பயிற்சிக் கல்வி வளர்ச்சிக்காக உடற்பயிற்சிக் கல்வித் தலைமை ஆய்வாளர் ஒருவரும், உடற்பயிற்சிக் கல்வி வல்லுநர் ஒருவரும் உள்ளனர்.

கல்வியில், குறிப்பாகத் தொடக்கக் கல்வித் தர உயர்வுக்கென ஆசிரியர் பணிக்காலப் பயிற்சித் திட்டங்களுக்கு, மாநிலக் கல்வி நிறுவன இயக்குநர் பொறுப்பு வகிக்கிறார்.

## ஆ. தொடக்கக்கல்வி.

### 1. கூடுதல் மாணவர்களைச் சேர்த்துக் கொள்ளலும் பள்ளியை விரிவாக்கலும்.

பள்ளி செல்லும் வயதுடைய சிறுவர்கள் அனைவரையும் பள்ளிகளில் சேர்ப்பித்துப் போதிய சிறந்த வசதிகளுடைய கட்டிடங்களையும் துணைக் கருவிகளையும் பள்ளிகளுக்குப் படிப்படியாக வழங்குவதே தொடக்கக் கல்வியின் தலையாய நோக்கமாகும். இம்மாநிலத்தில் மக்கள் தொகை 300-க்கு மேலுள்ள எல்லாப் பகுதிகளிலும் தொடக்கப் பள்ளி உள்ளது. 6–11 வயதுள்ள சிறுவர்கள் அனைவருக்கும் இலவசக் கட்டாயக் கல்வி அளிக்கப்படுகிறது. 6–11 வயதினரில் மாணவர் சேர்க்கையின் சத வீதம் மூன்றாவது திட்ட முடிவில் 88 சத வீதமாயிருந்த தற்கு மாறாக 1970–71 முடிவில் 94·1 சத வீதமாக உயர்ந்தது. இந்த வயதுத் தொகுதியினரில் 100 சத வீத மாணவர்களைச் சேர்த்துக் கொள்வதே நான்காவது திட்டத்தின் இலக்காகும். இந்தத் திட்ட இலக்கை அடையும் பொருட்டு நான்காவது திட்டக் காலத்தில் ஒவ்வோர் ஆண்டிலும் 6–11 வயதுள்ள 1·5 லட்சம் சிறார்களை மேற்கொண்டும் சேர்க்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. 1969–70-ல் 6–11 வயதினருக்காக 2,650 ஆசிரியர்கள் மேற்கொண்டு நியமிக்கப்பட்டனர். 1970–71-ல் 2,350 ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இந்த வயதுத் தொகுதியினருக்காக 1971–72-ல் மேலும் 3,000 ஆசிரியர்களை நியமிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

6–11 வயதினர் கூடுதலாகப் பள்ளியில் சேர்ந்ததன் பயனாக, அடுத்த நிலையில் அதாவது 11–14 வயதுள்ள சிறுவர்களைப் பள்ளிகளில் சேர்க்க வேண்டிய அவசியம் அதிகரித்தது. பல தொடக்கப் பள்ளிகள் உயர் தொடக்கப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தப்பட்டன. இதைத் தவிர, புதிய உயர்நிலைப் பள்ளிகளும் தொடங்கப்பட்டன. மூன்றாவது திட்டக் கால முடிவில் இந்த வயதுத் தொகுதி மாணவர்களின் சத வீதம் 47·30 ஆக இருக்கையில் 1970–71 முடிவில் (1970-ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 1-ம் தேதி) சேர்த்துக்கொள்ளப்பட்ட மாணவர்கள் 55·10 சத வீதமாகும். 1969–70-ல் 11–14 வயதுத் தொகுதியினருக்காக 1,300 ஆசிரியர்கள் கூடுதலாக நியமிக்கப்பட்டனர். 1970–71-ல் 1,400 ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டனர். ஆசிரியர், மாணவர் விகிதாச்சாரத்தைச் சீராக்கவும் கல்வித் தரத்தை உயர்த்தவும், 1971–72-ல் மேற்கொண்டும் 11–14 வயதுள்ள 1,20,000 மாணவர்களைச் சேர்த்து 2,000 ஆசிரியர்களை நியமிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

தொடக்கக் கல்வித் துறையில் கடந்த சில ஆண்டுகளில் கண்ட முன்னேற்றத்தைக் கீழே கொடுத்துள்ள அட்டவணை விளக்குகிறது :—

| | 1966-67. | 1967-68. | 1968-69. | 1969-70. | 1970-71. |
|---|---|---|---|---|---|
| இடைநிலைப் பள்ளிகள் (Middle School) உட்பட தொடக்கப் பள்ளிகளின் எண்ணிக்கை .. .. | 31,157 | 31,429 | 31,712 | 31,823 | 31,881 |
| உயர்நிலைப் பள்ளிகளின் இடைநிலைப் பள்ளிப் பிரிவுகளிலுள்ள மாணவர்கள் உட்பட, பெயர்ப் பட்டியலிலுள்ள மாணவர்களின் எண்ணிக்கை (லட்சத்தில்) .. .. | 57·67 | 60·89 | 61·45 | 63·01 | 64·68 |



பள்ளி செல்லும் வயதுடைய பிள்ளைகள் அனைவருக்கும் கட்டாய இலவசக் கல்வி அளிப்பது அரசின் அடிப்படைப் பொறுப்புகளில் ஒன்றாகும். எனவே, கல்விக்கான மொத்த நிதி ஒதுக்கீட்டில் பெரும் பங்கு (ஏறத்தாழ 50 சத வீதம்) தொடக்கக் கல்விக்காகச் செலவிடப்படுகிறது.

தமிழ்நாடு ஊராட்சிச் சட்டத்தின் விதித் துறைகளின்கீழ், ஊராட்சி ஒன்றியப் பகுதி ஒவ்வொன்றிலும் உள்ள தொடக்கப் பள்ளிகளைப் பொறுத்த வரை, தனியார் பள்ளிகளுக்கு மானியம் வழங்குவது உட்பட, தொடக்கப் பள்ளிகளைத் தொடங்குதல், பேணுதல், விரிவுபடுத்துதல், மேம்படுத்தல் ஆகியவை தொடர்பாக, ஊராட்சி ஒன்றியத்தின் தேவைகளை நிறைவேற்றி வைப்பதற்கு நியாயமான அளவு நிதி ஒதுக்கம் செய்வது அந்தந்த ஊராட்சி ஒன்றியக் குழுவின் கடமையாகும். சில ஊராட்சி ஒன்றியக் குழுக்களின் நிதிநிலை முற்றிலும் மன நிறைவளிப்பதாக இல்லை. ஊராட்சி ஒன்றியக் குழுக்களின் நிதிநிலை உறுதிப்பாட்டைச் சீர்படுத்தும் நோக்கத்துடன், ஊராட்சி ஒன்றியப் பகுதியில் தொடக்கக் கல்விக்கு நிதியளித்தல் தொடர்பான அனைத்தையும் குறித்து ஆய்வு செய்யும்பொருட்டு ஊராட்சி நிதி விசாரணைக் குழு அமைக்கப்பட்டது. இக்குழு தனது அறிக்கையை அரசிடம் அளித்துள்ளது. அவ்வறிக்கை கூர்ந்து பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

### 2. பள்ளிகளின் தரத்தை உயர்த்துதல்.

(i) கட்டிடங்கள்.—குறிப்பாக, கிராமப் பகுதிகளில் உள்ள பள்ளிகளின் அடிப்படைத் தேவைகளிலொன்று ஏற்ற கட்டிடங்களுக்கு வகை செய்வதாகும். 1971–72-க்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு, தொடக்கப் பள்ளிக் கட்டிடங்கள் மீதான செலவிற்காகக் கீழ்க்கண்ட நிதி ஒதுக்கங்களைச் செய்கிறது :—

(ரூபாய் லட்சத்தில்.)

| | |
|---|---|
| ஊராட்சி ஒன்றியப் பகுதிகள் அல்லாத பகுதிகளில் தொடக்கப் பள்ளிக் கட்டிடங்கள் கட்டுதல் (புதிய திட்டங்கள்). | 15·80 (1970–71-ல் 10·00.) |
| ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் உள்ள ஊராட்சி ஒன்றியங் பள்ளிகளுக்கும், மானியம் பெறும் பள்ளிகளுக்கும் கட்டிட மானியங்கள். | 34·30 (1970-71-ல் 27·00.) |

மேற்சொன்ன மானியங்களுக்குக் கூடுதலாக, 1971–72-ல் சமுதாய வளர்ச்சிப் பணிகள் வரவு-செலவுத் திட்டத்திலிருந்து ரூ. 18·30 லட்சம் ஊராட்சி ஒன்றியப் பகுதிகளுக்குப் பள்ளி கட்டிட மானியங்களாக வழங்கப் படும். மேலும் 6–11 வயது தொகுதியிலுள்ள பிள்ளைகளைக் கூடுதலாகப் பள்ளியில் சேர்த்துக்கொள்வதற்கான திட்டப் பணிகளின்கீழ் கொட்டகைகள் கட்டுவதற்காக, மேற்கொண்டும் ஓரளவு நிதி ஒதுக்கப்படும்.

பள்ளி நிர்வாகங்கள் பள்ளிக் கட்டிடங்கள் கட்ட இயலும் வகையில், கட்டிட மானியங்களின் வீதம் பின்வருமாறு உயர்த்தப்பட்டுள்ளது :— தொடக்கப் பள்ளிக்குரிய மானியம் ரூ. 4,000-த்திலிருந்து ரூ. 8,000-த்துக்கு உயர்த்தப்பட்டுள்ளது. இதற்கு பள்ளி நிர்வாகத்தின் செலவுப் பங்கு ரூ. 4,000 ஆகும் ; இடைநிலைப் பள்ளிக்குரிய மானியம் ரூ. 7,000-த்திலிருந்து ரூ. 13,000-ஆக உயர்த்தப்பட்டுள்ளது ; இதற்குப் பள்ளி நிர்வாகத்தின் செலவுப் பங்கு ரூ. 6,000 ஆகும்.

தொடக்கப் பள்ளிக் கட்டிடங்களுக்காகப் பரிசு சீட்டுத் திட்டத்தின் வருவாயிலிருந்து ரூ. 50 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. இத் தொகை 1971–72-இல் பயன்படுத்தப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

(ii) கருவிகள்.—தொடக்கப் பள்ளிகளில் அறிவியல் கற்பிப்பதற்கு தேவையான சிறந்த கருவிகளையும் துணைக் கருவிகளையும், அளிப்பதற்காகத் தேர்ந்தேடுக்கப்பட்ட ஆரம்பப் பள்ளிகள் (அல்லது கீழ்நிலைத் தொடக்கப் பள்ளிகள்) ஒவ்வொன்றுக்கும் ரூ. 300 வீதமும், இடைநிலைப் பள்ளிகள் (அல்லது உயர் தொடக்கப் பள்ளிகள்) ஒவ்வொன்றுக்கும் ரூ. 1,000 வீதமும், சாதனங்களை வாங்குவதற்கு ஆகும் செலவு முழுவதையும் கொடுப்பது என்ற அடிப்படையில் அறிவியல் சாதனங்கள் வழங்குவதற்கான திட்டம் தொடர்ந்து செயல்பட்டு வருகின்றது. இத்திட்டத்தின்கீழ் இதுவரை 6,400 ஆரம்பப் பள்ளிகளும், 1,550 இடைநிலைப் பள்ளிகளும் பயன் பெற்றுள்ளன. 1971–72-ல் 2,000 தொடக்கப்பள்ளிகளுக்கும், 650 இடைநிலைப் பள்ளிகளுக்கும் இத்திட்டத்தை விரிவுபடுத்தக் கருதப்பட்டுள்ளது. 1971–72-ஆம் ஆண்டுக்கு இத்திட்டத்திற்காக ரூ. 12·50 லட்சம் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. மேற்சொன்னவற்றுக்குக் கூடுதலாக, 6–11, 11–14 வயதுத் தொகுதியிலுள்ள பிள்ளைகளைக் கூடுதலாகப் பள்ளியில் சேர்க்கும் திட்டத்தின்கீழ் தொடங்கப்படவிருக்கும் கூடுதல் வகுப்புகள் தொடர்பாக சாதனங்கள் வாங்குவதற்காகவும் 1971–72-ல் நிதி ஒதுக்கம் செய்யப்படும்.

(iii) தொடக்கப் பள்ளி நூலகங்கள்.—மாணவர்கள் நூல்கள் படிக்கும் பழக்கத்தை வளர்த்திடச் செய்யும் நோக்கத்துடன் ஒவ்வொரு தொடக்கப் பள்ளியிலும் ஒரு சிறிய நூலகம் நிறுவும் திட்டம் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில், செயல்படுத்தப்பட்டது. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் 13,545 தொடக்கப்பள்ளிகளும், 3,241 இடைநிலைப் பள்ளிகளும் இத்திட்டத்தின்கீழ் கொண்டுவரப்பட்டன. 1966–67-ல், 11,000 தொடக்கப் பள்ளிகளும், 4,000 இடைநிலைப் பள்ளிகளும் இத் திட்டத்தின்கீழ் கொண்டுவரப்பட்டன. இத்திட்டம் 1967–68, 1968–69 ஆண்டுகளில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. 1969–70-இல் 10,000 தொடக்கப் பள்ளிகளும், 2,500 இடைநிலைப் பள்ளிகளும் இத்திட்டத்தின்கீழ் கொண்டுவரப்பட்டன; அந்த ஆண்டில், தேர்ந்தெடுக்கப்பட்ட தொடக்கப் பள்ளிகள், இடைநிலைப் பள்ளிகள் ஒவ்வொன்றுக்கும், ஒரே மாதிரிய அடிப்படையில் முறையே ரூ. 30, ரூ. 60 வீதத்தில் மானியம் வழங்கப்பட்டது. இதற்கு பள்ளி நிர்வாகமும் நிகராக தொகையை அளிக்கவேண்டும்.

(iv) தொடக்க நிலை ஆசிரியர்கள் பதவிகளை இடைநிலை ஆசிரியர்களாக நிலையுயர்த்துதல்.—III-ஆம் வகுப்பு முதலே ஆங்கிலம் கற்பிப்பது உட்பட, தொடக்கப் பள்ளிகளில் கல்வி கற்பிக்கும் தரத்தை மேம்படுத்துவதற்கான நடவடிக்கையாக, தொடக்க நிலை ஆசிரியர் பதவிகளை இடைநிலை ஆசிரியர் பதவிகளாக மாற்றுவதற்கு அரசு அனுமதித்துள்ளது. இவ்வாறு மாற்றம் செய்ததானது தொடக்கநிலை ஆசிரியர் பதவிகளில் பணி புரிந்து வந்த, கடைநிலை ஆசிரியர் பயிற்சிச் சான்றிதழ் பெற்ற ஆசிரியர்கள், இடைநிலை ஆசிரியர் பதவித் தரச் சம்பளம் பெறுதற்கு உதவி புரிந்தது. இதுவரை, தொடக்கநிலை ஆசிரியர் பதவிகளில் பணி புரிந்து வந்த 14,000 இடைநிலை ஆசிரியர்ப் பயிற்சிச் சான்றிதழ் பெற்றவர்கள் இடைநிலை ஆசிரியர் பதவிகளில் சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ளனர்; இவ்வெண்ணிக்கையில், 1970-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 1-ம் தேதியிலிருந்து ஒப்பளிப்பு வழங்கப்பட்ட 3,000 பதவிகளும் அடங்கும். மீண்டும் சம்பள ஆணைக் குழுவின் பரிந்துரைகளின் மேல், 1971-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 1-ம் தேதியிலிருந்து 5,500 தொடக்க நிலை ஆசிரியர் பதவிகளை இடைநிலை ஆசிரியர் பதவிகளாக நிலையுயர்த்த அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது.

(v) ஆசிரியர் குடியிருப்புகள்.—பள்ளிகளில் சேரும் பிள்ளைகளின், குறிப்பாகப் பெண் குழந்தைகளின் எண்ணிக்கையை அதிகரிக்கும் பொருட்டும், கிராமப் பகுதிகளில் ஆசிரியைகள் வசிப்பதை ஊக்குவிக்கும் பொருட்டும், கிராமப் புறங்களில் ஆசிரியைகளுக்கான குடியிருப்புகள் கட்டப்பட்டுள்ளன. இரண்டாவது, மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டக் காலங்களில் மூறையே 164 குடியிருப்புகளும், 726 குடியிருப்புகளும் கட்டப்பட்டன.



கடந்த 4 ஆண்டுகளில், ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் 432 குடியிருப்புகள் கட்டப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் தொடரப்படுகிறது. இதற்காக, 1969–70, 1970–71 ஆண்டு ஒவ்வொன்றிலும் ரூ. 5 லட்சம் தொகை ஒதுக்கப்பட்டது. 1971–72-ல் ரூ. 5 லட்சம் செலவிடக் கருதப்பட்டுள்ளது.

3. நண்பகல் உணவும், நண்பகல் உணவுத்திட்டத்துக்குக் 'கேர்' (Care) நிறுவனத்தின் உதவியும்

தொடக்கப் பள்ளிகளிலும், உயர் தொடக்கப் பள்ளிகளிலும் பயிலும் ஏழை மாணவர்களுக்கு நண்பகல் உணவு வழங்கப்பட்டு வருகிறது. தற்போது இத்திட்டத்தால் ஏறத்தாழ 18 லட்சம் மாணவர்கள் பயனடைகின்றனர். இத்திட்டத்திற்கு 1971–72-இன் வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 198 லட்சம் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது; இதில், திட்டத்தில் சோப்பு பணிகளின்கீழ் ரூ. 162·89 லட்சமும், திட்டப் பணிகளின்கீழ் ரூ. 35·11 லட்சமும் ஒதுக்கப்பட்டுள்ளது. வரும் ஆண்டில் இத்திட்டத்தின்கீழ் மேலும் 67,000 மாணவர்கள் சேர்த்துக் கொள்ளக் கருதப்பட்டுள்ளனர்.

1967–68-இல் "கேர்" நிறுவனத்தின் உதவியுடன் சேக்காட்டில் தொடங்கப்பட்ட மையச் சமையற்கூடத் திட்டம் வெற்றிகரமாகச் செயல்பட்டுள்ளது. 1969–70-ல் 30 மையச் சமையல்கூடங்களைப் புதிதாகத் தொடங்குவதற்கு ஒப்பளிப்பு வழங்கப்பட்டது. அவை, வாயு அடுப்புச் சாதனத்துடன் செயல்பட்டு வருகின்றன. ஒவ்வொரு மையச் சமையல் கூடத்துக்கும் ரூ. 2 லட்சம் வீதம் தொடரா இனச் செலவை "கேர்" நிறுவனம் ஈடு செய்கிறது.

1970–71-ல் கூடுதலாக 30 மையச் சமையல் கூடங்களுக்கு ஒப்பளிப்பு வழங்கப்பட்டது. 1971–72-இல் மேலும் 30 மையச் சமையல் கூடங்களை நிறுவக் கருதப்பட்டுள்ளது.

வழங்கப்படும் உணவின் தரத்தை உயர்த்தி, அளவை அதிகரிக்கும் நோக்கத்துடன் "கேர்" நிர்வாகம் இலவசமாக தானியங்கள், எண்ணெய், புரதச் சத்துள்ள உணவு மூலியவற்றை அளிக்க முன்வந்தது. உணவளிக்கப்படுகின்ற 200 நாட்களில் 100 நாட்களுக்கு "கேர்" நிறுவனம் தானியம் வழங்குகிறது. அந்நிறுவனம் உணவு அளிக்கப்படும் எல்லா நாட்களிலும் எண்ணெய், சோளமாவு (C. S. M.) இவற்றை வழங்கி வருகின்றது.

நண்பகல் உணவுத் திட்டத்தை மேம்படுத்தும் பொருட்டு, இத் திட்டத்தின்கீழ் வழங்கப்படும் உணவு தானியங்களைச் சேமித்து வைக்கத் தமிழ் நாட்டில் 10 வட்டாரச் சேமிப்புக் கிடங்குகள் கட்டித் தரவும், அவற்றின் கட்டுமானச் செலவில் 90 சத வீதத்தைக் கொடுக்கவும், "கேர்" நிறுவனம் தற்போது முன்வந்துள்ளது. மொத்தச் செலவான ரூ. 30 லட்சத்தில், அரசு ரூ. 3 லட்சம் செலவை ஈடுசெய்ய இசைந்து இத்திட்டத்திற்கு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது.

4. புத்தகங்களையும் பலகைகளையும் இலவசமாக வழங்குதல்.

1 முதல் 3 வகுப்புகளில் பயின்று, நண்பகல் உணவு பெறுகின்ற, ஏழை மாணவர்களுக்கு, 1966–67-ஆம் ஆண்டிலிருந்து பாடப் புத்தகங்கள் இலவசமாக வழங்கப்படுகின்றன. 1-ஆம் வகுப்பில் படிக்கும் பிள்ளைகளுக்குப் பலகைகளும் இலவசமாக வழங்கப்படுகின்றன. ஏறத்தாழ 10 லட்சம் மாணவர்களுக்குப் புத்தகங்கள் இலவசமாக வழங்கப்படுகின்றன; ஏறத்தாழ 3·55 லட்சம் பிள்ளைகளுக்கு பலகைகள் இலவசமாக வழங்கப்படுகின்றன. பள்ளியில் சேர்க்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கின்றபொழுது, நண்பகல் உணவையும் புத்தகங்கள் பலகைகளையும் இலவசமாகப் பெறுகின்ற மாணவர்களின் எண்ணிக்கையும்

உயர்கின்றது. 1971–72-இல், I—III-ஆம் வகுப்புகளில், கூடுதலாக 33,000 மாணவர்கள் இத் திட்டத்தின்கீழ் பயன் பெறுவர். கடந்த சில ஆண்டுகளில், வழங்கப்பட்ட புத்தகங்கள், பலகைகளின் எண்ணிக்கை கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

| | வழங்கப்பட்ட பாடப் புத்தகங்களின் எண்ணிக்கை. | | |
|---|---|---|---|
| | 1968–69. | 1969–70. | 1970–71. |
| தமிழ்ப் பாட புத்தகங்கள்— | | | |
| வகுப்பு I .. .. .. | 2,66,300 | 3,28,376 | 3,59,013 |
| வகுப்பு II .. .. .. | 3,21,900 | 3,45,941 | 3,50,843 |
| வகுப்பு III .. .. .. | 2,73,600 | 3,01,750 | 3,09,518 |
| கணக்குப் பாடப் புத்தகங்கள்— | | | |
| வகுப்பு III .. .. | 2,72,600 | 3,01,750 | 3,09,518 |
| பலகைகள்— | | | |
| வகுப்பு I .. .. .. | 3,15,330 | 3,11,760 | 3,54,171 |

(புத்தகங்களும், கற்பலகைகளும் வழங்கப்படுகையில் கையிருப்பும் கணக்கில் கொள்ளப்பட்டது.)

## இ. இடைக் கல்விநிலை.

### 1. கூடுதலாகப் பிள்ளைகளைப் பள்ளிகளில் சேர்த்தலும், விரிவுபடுத்தலும்.

கீழே கொடுத்துள்ள புள்ளி விவரங்கள் கடந்த சில ஆண்டுகளில் இடைநிலைக் கல்வித் துறையில் எய்தியுள்ள முன்னேற்றத்தைக் காட்டும் :—

| | 1966–67. | 1967–68. | 1968–69. | 1969–70. | 1970–71. |
|---|---|---|---|---|---|
| உயர்நிலைப் பள்ளிகளில் எண்ணிக்கை. | 2,372 | 2,449 | 2,513 | 2,580 | 2,635 |
| பட்டியலிலுள்ள மாணவர் எண்ணிக்கை (லட்சத்தில்) (IX—XI வகுப்புகளில்). | 6·08 | 6·26 | 6·37 | 6·69 | 6·97 |

1970–71-ல் தொடங்கப்படுவதற்கு அனுமதியளிக்கப்பட்ட உயர்நிலைப் பள்ளிகளின் எண்ணிக்கை பின்வருமாறு :—

| | |
|---|---|
| அரசுப் பள்ளிகள் .. .. .. | 40+1 |
| மானியம் பெறும் பள்ளிகள் .. | 12+2* |
| நகராட்சி பள்ளி .. .. .. | 1 |
| | 53+3 (ஒரு பள்ளி இந்த ஆண்டில் மூடப்பட்டது.) |

1964–65-ம் ஆண்டிலிருந்து, மாணவர்களின் சாதி, வகுப்பு, அவர்களது பெற்றோர்கள் அல்லது காப்பாளர்களின் வருவாய் என்னவாக இருப்பினும், அவர்களிடமிருந்து கல்விக் கட்டணம் எதுவும் வசூலிக்கப்படுவதில்லை. பள்ளிகளின் எண்ணிக்கையும் அதிகரித்து வருகிறது; பள்ளிகளில் மாணவர்களைச் சேர்த்துக்கொள்ளும் சத வீதமும் உயர்ந்து

*புதிதாகத் தொடங்கப்பட்ட மானியம் பெறும் பள்ளிகள் 14-இல், 2 பள்ளிகள் மத்திய அரசுப் பள்ளிகளாகும்; அவற்றுக்கு புது டில்லியிலுள்ள மத்தியக் கல்வி வாரியத்தால் அனுமதி வழங்கப்பட்டது.



வருகிறது. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டக் கால முடிவில் 14—17 வயது தொகுதியைச் சேர்ந்த பிள்ளைகள் பள்ளியில் சேர்த்துக்கொள்ளும் சத வீதம் 29·65 ஆகும். 1970–71-ல் பள்ளிகளில் சேர்த்துக்கொள்ளப் பட்டவர்களின் சத வீதம் 35·30 ஆகிறது. 1970–71-ஆம் ஆண்டில் 14—17 வயதுத் தொகுதியில் உள்ள பிள்ளைகளில் பள்ளியில் சேர்த்துக்கொண்ட பிள்ளைகளின் எண்ணிக்கை 6·97 லட்சம் ஆகும்.

1969–70-ல், 1,225 பட்டதாரி ஆசிரியர்கள் மேற்கொண்டும் நியமிக்கப் பட்டனர்; 1970–71-ல் 1,257 பட்டதாரி ஆசிரியர்கள் அவ்வாறு நியமிக்கப் பட்டனர். 1971–72-ல் இத் திட்டத்தின்கீழ் மேலும் 1,500 ஆசிரியர்கள் கூடுதலாக நியமிக்கப்படுவர்.

### 2. கல்வித் தரத்தை உயர்த்துதல்.

#### (i) உயர்நிலைப் பள்ளிகளுக்குக் கட்டிடங்கள்.

பள்ளிகளுக்கு, குறிப்பாக அரசினர் (மாவட்ட வாரியப்) பள்ளிகளுக்கு புதிய கட்டிடங்களுக்கு வகை செய்ய வேண்டிய தேவை நீண்ட நாட்களாக இருந்துள்ளது. எனவே, 1970–71-ல் முன் ஆண்டுகளில் ஒப்பளிக்கப்பட்ட கட்டட வேலைகளுக்காக நிதி ஒதுக்கம் செய்ததற்குமேல், புதிய கட்டிடங்கள் கட்டுவதற்காக ரூ. 25 லட்சம் ஒதுக்கப்பட்டது. 1971–72-ஆம் ஆண்டுக்குரிய வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 35 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. முன் ஆண்டுகளில் ஒப்புதலளிக்கப்பட்ட உயர்நிலைப் பள்ளிக் கட்டிடங்களுக்காக 1971–72-ல் செலவிடவிருக்கும் தொகைக்குத் தனியாக பணம் ஒதுக்கப்பட்டுள்ளது.

#### (ii) உயர்நிலைப் பள்ளிகளில் அறிவியல் கல்வியை மேம்படுத்தல்.

அறிவியலையும் அறிவியல் விருப்பப் பாடங்களையும் கற்பிப்பதற்கு இம் மாநிலத்திலுள்ள எல்லா உயர்நிலைப் பள்ளிகளுக்கும் போதுமான சாதனங்களை அளிக்கும் நோக்கத்துடன், உயர்நிலைப் பள்ளிகளுக்கு, அறிவியல் மானியங்கள் வழங்கப்படுகின்றன. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் ஆய்வுக்கூடக் கட்டிடங்கள் கட்டவும் அறிவியல் சாதனங்கள் வாங்கவும், 54 பள்ளிகளுக்கு மானியம் வழங்கப்பட்டது. ஆண்டுத் திட்டக் காலங்கள் மூன்றில் இத் திட்டத்தின்கீழ் 340 பள்ளிகளுக்கு மானியம் வழங்கப்பட்டது. பள்ளிகளின் அடிப்படை வசதிகளுக்கான மானியம் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் 288 பள்ளிகளுக்கும் 1966–67-இல் 60 பள்ளிகளுக்கும் கொடுக்கப்பட்டது. இந்திய அரசு மேற்கொண்ட விரைவுத் திட்டத்தின்கீழ், மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில், 385 பள்ளிகள் பயன் பெற்றன; 1966–67, 1967–68-ம் ஆண்டுகளில் 646 பள்ளிகள் பயன் பெற்றன.

அறிவியல் கல்விக்குரிய வசதிகளை மேம்படுத்துவது பற்றிய திட்டம் நான்காவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் தொடரப்படுகிறது. இத் திட்டத்தின்கீழ் 1969–70-ல் 108 பள்ளிகளும், 1970–71-ல் 66 உயர்நிலைப் பள்ளிகளும் பயன் பெற்றன. 1971–72-ல் ரூ. 30 லட்சம் செலவில் 75 பள்ளிகளை இத் திட்டத்தின்கீழ்க் கொண்டுவரக் கருதப்பட்டுள்ளது.

மாயூரம் கல்வி மாவட்டத்தில், "கேர்" நிறுவனத்தின் உதவியுடன், உயர்நிலைப் பள்ளிகளுக்குத் தேவையான எல்லா அறிவியல் கருவிகளும் கொண்டுள்ள இரண்டு வண்டி இணைக்கப்பட்ட இரண்டு இயல் ஆய்வுக்கூட வண்டிகள் (mobile laboratory vans) முன்னோடித் திட்டமாக இயக்கப்பட்டன. இவ்விரு வண்டிகளும் தற்போது, மாயூரம், பட்டுக்கோட்டை கல்வி மாவட்டங்களில் செயல்பட்டு வருகின்றன. இம் முன்னோடித் திட்டத்தின் விளைவுகளை முழுமையாக மதிப்பிட்டறிந்த பின்னர், இத் திட்டத்தை மேலும் விரிவுபடுத்துதல் பற்றிக் கருதப்படும்.

பள்ளிகளில் அறிவியல் கல்வி முறையின் தரத்தினை உயர்த்தும் நோக்கத்துடன் பயிற்சிக் கல்லூரிகளுக்கும், பள்ளிகளுக்கும் மாநில அறிவியல் கல்வி நிறுவனத்திற்கும் விஞ்ஞானக் கருவிகளை வழங்க யூனிசெஃப் நிறுவனம் முன்வந்துள்ளது. யூனிசெஃப் நிறுவனத்தில் இத் திட்டத்தை சென்னை, செங்கற்பட்டு, நெல் ஆர்க்காடு மாவட்டங்களில் ஒரு முன்னோடித் திட்டமாகக் கொண்டுவரவும், மாநிலக் கல்வி நிறுவனம், எழும்பூர் அரசு ஆசிரியர் பயிற்சிப்பள்ளி, சைதாப்பேட்டை ஆசிரியர் கல்லூரி, கடலூர் அரசு அடிப்படை பயிற்சிப் பள்ளி ஆகிய நான்கு முக்கிய நிறுவனங்களைத் தேர்ந்தெடுப்பதற்கும் அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. இத் திட்டத்திற்கான புதிய அறிவியல்பாடத் திட்டம் தேர்ந்தெடுக்கப்பட்ட பள்ளிகளில் 1-ம் வகுப்பு முதல் மூன்றும் வகுப்பு வரைக்கும் 6-வது வகுப்பிற்கும் 1971 ஜூன் முதல் கொண்டு வரப்படும். தற்போதுள்ள பாடத் திட்டத்தை ஆய்வு செய்யவும் புதிய பாடத் திட்டத்தையும், அரசுப் பாடப் புத்தகங்களையும் தயாரிக்கவும் வல்லுநர் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இத் திட்டத்தின் மூலம் வேலைக்கமர்த்தப்படும் ஆசிரியர்களுக்குப் பணிக்காலப் பயிற்சி (In service training) நடத்துவதற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பட்டதாரி ஆசிரியர்களுக்கு மறு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. யூனிசெஃப் நிறுவனத்தின் இத் திட்டத்தினைச் செயல்படுத்துவதற்காக 50 தொடக்கப் பள்ளி ஆசிரியர்களுக்கும், 30 உயர் தொடக்கப்பள்ளி ஆசிரியர்களுக்கும் பணிக்காலப் பயிற்சி தற்போது நடத்தப்பட்டு வருகின்றது.

### (iii) உயர்நிலைப் பள்ளிகளுக்கு நூலகங்கள்.

நூலக வசதிகளைப் பெருக்கும் நோக்கத்துடன், நூலகங்களுக்குப் புத்தகங்கள் வாங்குவதற்காக மானியம் கொடுக்கப்படுகிறது. மூன்றும் திட்டக் காலத்தில் 508 உயர்நிலைப் பள்ளிகள் இத் திட்டத்தினால் பயனடைந்தன. ஆண்டுத் திட்டக் காலங்கள் மூன்றில் மேலும் 513 பள்ளிகள் பயனடைந்தன. நான்காம் திட்டக் காலத்திலும் இத் திட்டம் தொடர்ந்து நிறைவேற்றப்படுகிறது. 1969-70-ஆம் ஆண்டில் 159 பள்ளிகளில் நூலகங்கள் ஏற்படுத்தப்பட்டன. 1970-71-ஆம் ஆண்டில் இத் திட்டம் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. இத் திட்டத்தினை மறுபடியும் செயல்படுத்தவும் 1971-72-ல் ரூ. 1 லட்சம் செலவில் ஒவ்வொரு உயர்நிலைப் பள்ளிக்கு ரூ. 1,000 வீதம் 100 அரசு உயர்நிலைப் பள்ளிகளிலும் அரசு (கழக) உயர்நிலைப் பள்ளிகளிலும் இத் திட்டத்தினை நிறைவேற்றவும் கருதப்பட்டுள்ளது.

### 3. மாவட்டக்கழக உயர்நிலைப்பள்ளிப் பணியாளர்களை அரசுப்பணியில் எடுத்துக்கொள்ளுதல்.

மாவட்டக் கழக உயர்நிலை பள்ளிகள் 1,476 இருக்கின்றன. இவை அரசு (கழக) உயர்நிலைப் பள்ளிகள் என வழங்கப்பட்டுகின்றன. இப் பள்ளிகளில் பல்வேறு பதவித் தரத்தைச் சேர்ந்த 25,000-க்கு மேற்பட்ட ஆசிரியர்களும் ஆசிரியரல்லாத பிற பணியாளர் சுமார் 6,000 பேரும் பணியாற்றி வருகின்றனர். இப் பணியாளர்கள் அனைவரும் 1970 ஏப்ரல் 1-ஆம் நாள் முதல் அரசுப் பணியில் எடுத்துக்கொள்ளப்பட வேண்டுமென்றும் இவர்கள் தமிழ் நாடு கல்விச் சார்நிலை (B) பணி எனப்படும் தனிப்பட்டதொரு பதவித் தொகுதியில் சேர்க்கப்படலாம் என்றும் அரசு ஆணையிட்டுள்ளது. இப் பதவித்தரம் மாவட்ட அடிப்படையில் அமைக்கப்பட்டு, ஒவ்வொரு வருவாய் மாவட்டமும் ஒரு தனிப் பிரிவாக அமையும். 1970-ஏப்ரல் 1-ஆம் நாளுக்குப் பின்னர் கல்வித் துறை நிர்வாகத்தின்மீது தொடங்கப்பட்ட புதிய பள்ளிகள் அனைத்தும் முறையான அரசுப் பள்ளிகளாகக் கருதப்படுகின்றன. தற்போதுள்ள அரசு (கழக) உயர்நிலைப் பள்ளிகளில் 1970 ஏப்ரல் 1-ம் நாள் அன்று அல்லது அதற்குப் பின்னர் நியமிக்கபட்ட ஆசிரியர் அனைவரும் தமிழ் நாடு கல்விச் சார்நிலை (A) பணியைச் சேர்ந்தவர்களாகக் கருதப்படுகின்றனர்.

அரசு (கழக) உயர்நிலைப் பள்ளிகளிலுள்ள ஆசிரியரல்லாத பிற பணியாளர்களும் ஆசிரியர்களைப் போலவே தனியானதொரு பதவித்தரத்தில் அமர்த்தப்பட்டுள்ளனர்.



ஆயிரம் மாணவர்களும் அதற்கு மேற்பட்டும் உள்ள அரசு (கழக) பள்ளிகளில் அரசிதழ் பதிவு பெற்ற 80 தலைமை ஆசிரியர் பதவிகளுக்கும் அரசு (கழக) பள்ளிகளில் (B) பணியில் உள்ள பி.டி. ஆசிரியர்களுக்காக 1,200 தேர்வுநிலைப் பதவிகளுக்கும் முதல்நிலை தமிழ் வித்துவான்களுக்காக 300 தேர்வு நிலைப் பதவிகளுக்கும் அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது.

அரசுப் பள்ளிகளில் அதாவது (A) பணியில் உள்ள ஆசிரியர்களுக்காக, 4 பிரிவுகள் அதற்கு மேற்பட்ட பிரிவுகள் உள்ள அரசுப்பயிற் பள்ளிகளில் அரசிதழ்ப் பதிவு பெற்ற 25 தலைமை ஆசிரியர் பதவிகளுக்கும், 1,000 மாணவர்களும் அதற்கு மேற்பட்டும் உள்ள அரசு உயர்நிலை பள்ளிகளில் அரசிதழ்ப் பதிவு பெற்ற 15 தலைமை ஆசிரியர் பதவிகளுக்கும் அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. அரசு உயர்நிலைப் பள்ளிகளில் பணிபுரியும் முதல் நிலை தமிழ் வித்துவான்களுக்காக 45 தேர்வு நிலைப் பதவிகளுக்கும் அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது.

### 4. மருத்துவ இயல் ஊர்தி.

உயர்நிலைப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு மருத்துவச் சோதனை செய்து அவர்களுக்குத் தேவையான தொடர் சிகிச்சை அளிக்கும் பொருட்டு, மருத்துவர் ஒருவரும், பிற பணியாளரும் உள்ள மருத்துவ இயல் ஊர்திப் பிரிவு ஒன்றை வட ஆர்க்காடு மாவட்டத் தலைமையாசிரியர்கள் உள்ளூர் மக்களிடமிருந்து பொருளுதவி திரட்டி அதன் மூலம் தொடங்கி வைத்துள்ளனர். இது போன்ற மருத்துவ இயல் ஊர்திகள் கோயம்புத்தூர், மதுரை, திருச்சிராப்பள்ளி, ஈரோடு, நாமக்கல் கல்வி மாவட்டங்களிலும் பணியாற்றத் தொடங்கியுள்ளன. இந்த இயல் ஊர்திகளைச் செயல்படுத்தி வருவதற்கான தொடர் செலவுக்கு வேண்டிய தொகை, மாணவர்களிடமிருந்து வசூலிக்கப்படும் மருத்துவக் கட்டணத்திலிருந்து பெறப்படுகிறது.

### ஈ. தொடக்கக்கல்விக்கும், இடைநிலைக்கல்விக்கும் பொதுவாகவுள்ள சில கூறுகள்.

### (i) சமுதாயத்தினர் பங்கு பெறல் (பள்ளிச் சீரமைப்பு மாநாடுகள்).

நமது மாநிலத்தில் பள்ளிச் சீரமைப்பு மாநாடுகளின்மூலம் சமுதாயத்தினர் கல்வியில் கொள்ளும் பங்கு படிப்படியாகப் பெருகி வருகிறது. நமது பள்ளிச் சீரமைப்பு மாநாடுகளினால் நமது மாநிலம் இந் நாட்டில் பிற மாநிலங்களுக்கு வழிகாட்டியாக அமைந்துள்ளது. இம் மாநிலத்தில் இதுவரை 474 பள்ளிச் சீரமைப்பு மாநாடுகள் நடைபெற்றுள்ளன. இவ் வுதவியின் மூலம் கிடைக்கப் பெற்ற உதவியின் மொத்த மதிப்பு ரூ. 12·51 கோடிக்கு அதிகமாகும். பொதுமக்களிடமிருந்து நன்கொடைகள் பெற்றும் தாங்களாகவே முயன்றும் 1971 பிப்ரவரித் திங்கள் வரை சுமார் 13·53 லட்சம் வறிய மாணவர்களுக்குப் பள்ளிகள் நிகராடைகள் வழங்கியுள்ளன. இலவசமாக வழங்கப்பட்ட இந்த நிகராடைகளுக்கான செலவு ரூ. 88·04 லட்சம் ஆகும். பள்ளிகளில் பெண்கள் ஆர்வத்துடன் சேர்வதற்கு இது பெரிதும் உதவியுள்ளது.

### (ii) பள்ளித் தொகுதி அமைப்பு.

பள்ளித் தொகுதி அமைப்புத் திட்டத்தின் கீழ், உயர்நிலைப் பள்ளியும், தொடக்கப் பள்ளியும் ஒன்றுக்கொன்று பயனுறும் வகையில் இவையிரண்டையும் இணைக்கலாம் எனக் கல்வி ஆணைக் குழு கருத்துத் தெரிவித்தது. இந்த அமைப்புத் திட்டத்தின்கீழ் ஓர் உயர்நிலைப் பள்ளியைச் சுற்றி 10 முதல் 20 தொடக்கப் பள்ளிகளும், 3 முதல் 4 உயர் தொடக்கப் பள்ளிகளும் உள்ள ஒரு தொகுதி, கல்வி சீர்திருத்த வகையில் திட்டமிடுதல், ஆலோசனை நல்குதல், மேம்பாடு செய்தல் ஆகிய வாய்ப்புகளைக் கொண்ட தனித்து இயங்கக் கூடிய ஒரு பிரிவாகக் கருதப்படுகிறது. இம் மாநிலத்தில் இதுவரை 116 பகுதிகளில் இப் பள்ளித் தொகுதி அமைப்புத் திட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

(iii) கல்வி நிறுவனங்களுக்கான திட்டங்கள் தீட்டுதல் (Institutional Planning.)

புது டில்லியில் உள்ள ஆசியக் கல்வி திட்ட-நிர்வாக நிறுவனம், தேசியக் கல்வி ஆராய்ச்சி-பயிற்சி மன்றம் ஆகியவற்றின் ஒத்துழைப்புடன், கல்வி நிறுவனங்களுக்கு திட்டங்கள் தீட்டுதல் குறித்து மாநிலக் கருத்தரங்கு ஒன்று கோயம்புத்தூரில் 1971-ஆம் ஆண்டு மே திங்களில் நடைபெற்றது. கல்வித் துறையைச் சார்ந்த எல்லா அதிகாரிகளும், தேர்ந்தெடுக்கப்பட்ட உயர்நிலை, பயிற்சிப் பள்ளிகளிலுள்ள தலைமை ஆசிரியர்களும் அக் கருத்தரங்கில் கலந்துகொண்டனர்.

ஆசியக் கல்வித் திட்ட நிறுவனத்தின் ஆதரவில் தொடங்கப்பட்ட திட்டத்தின்படி, எனைய மாநிலங்களில் கல்வித் துறையில் நடத்தப்படுகின்ற சோதனைகள் குறித்து ஆய்வு செய்வதற்காக, இத் துறையைச் சேர்ந்த சில அதிகாரிகள் அம் மாநிலங்களுக்கு முகமையில் அனுப்பப்பட்டனர்.

(iv) மாநிலக் கல்வி ஆய்வு நிறுவனம்.

பள்ளி அளவில் கல்வி மேம்பாட்டை ஆய்வு செய்யும் பொறுப்பை இம் மாநிலக் கல்வி ஆய்வு நிறுவனம் ஏற்றுக்கொள்கிறது. இது மாநில அளவிலான ஒரு கல்வி நிறுவனமாகும். இது தேசிய அளவிலான, தேசியக் கல்வி, ஆராய்ச்சி-பயிற்சி நிறுவனத்தைப் போன்றதாகும். கல்வியின் தரத்தை குறிப்பாகத் தொடக்கக் கல்வியின் தரத்தினை உயர்த்துவதற்கான பணிகளையும், இந்தக் கல்வி நிறுவனம் கவனித்து வருகிறது. பணிக்காலத் திட்டங்கள், கருத்தரங்குகள் முதலியவற்றிற்கு ஏற்பாடு செய்தல், ஆராய்ச்சிகள், வெளியீடு வளர்ச்சிப் பணிகள் ஆகியவை இந்தக் கல்வி நிறுவனத்தின் பணிகளாகும். ஏராளமான ஆசிரியர்களுக்குப் பணிக்கால பயிற்சியை நடத்த வகை செய்ய இந்த நிறுவனத்திலுள்ள பணியாளர்களின் எண்ணிக்கையை 1971-72-ல் உயர்த்தக் கருதப்பட்டுள்ளது.

இந்தக் கல்வி நிறுவனம் நடத்திவரும் பணிக்காலப் பயிற்சிகள் பின்வருமாறு :—

இடைநிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்குப் பயிற்சி வகுப்புகள்.

தொடக்கப் பள்ளி ஆசிரியர்களுக்குப் பயிற்சி வகுப்புகள்.

உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்களுக்கு விருப்பப் பாடங்களில் நினைவு கூர் சிறப்புப் பயிற்சி.

உயர்நிலைப் பள்ளி உடற் பயிற்சி ஆசிரியர்களுக்குக் கருத்தரங்குகள்.

பயிற்சிப் பள்ளிகளைச் சேர்ந்த ஆசிரிய வல்லுநர்களுக்குக் கருத்தரங்குகள்.

பள்ளியிறுதித் தேர்வில் மாணவர்கள் அதிகமாக வெற்றி பெற வேண்டி, மேற்படி பள்ளியிறுதி வகுப்புகளை நடத்தும் ஆசிரியர்களுக்கு கருத்தரங்குகள்.

பார்வையிடும் அதிகாரிகளுக்கும், பயிற்சிப் பள்ளி ஆசிரியர்களுக்கும் மறு பயிற்சிக் கருத்தரங்கு.

உயர்நிலைப் பள்ளி, இடைநிலைப் பள்ளி, தொடக்கப் பள்ளி தலைமை ஆசிரியர்களுக்குக் கருத்தரங்குகள்.

விஞ்ஞான பயிற்சி வகுப்புகள்.

தொடக்கக் கல்வி குறித்து மாநில அளவிலான கருத்தரங்கு ஒன்று சென்னையில் 1971 பிப்ரவரித் திங்களில் நடத்தப்பட்டது.





(v) தேசியக் கல்வி ஆராய்ச்சி--பயிற்சிக் கழகத்தின் கருத்தரங்கு உரை.

தேசியக் கல்வி ஆராய்ச்சி-பயிற்சிக் கழகம், பயிற்சிக் கல்லூரிகளுடன் இணைக்கப்பட்டுள்ள வளர்ச்சிப் பணித்துறைகள், மாநிலக் கல்வித்துறை ஆகியவற்றின் ஒத்துழைப்புடன் பேருரை கருத்தரங்குத் திட்டத்தைத் தொடங்கியது. ஆசிரியர்கள் தங்கள் தொழிலிலும் கல்வி பற்றிய சிக்கல்களையும் ஆராய்ந்து அவை குறித்துப் பயனுள்ள வகையில் சிந்திப்பது மூலமாகவும் தாங்கள் அடைந்த அனுபவங்களையும், பெற்ற அறிவினையும், எழுதுவதற்கு அவர்களுக்கு ஊக்கமளிப்பதே இந்த திட்டத்தின் நோக்கமாகும். 1970-71-ம் ஆண்டில் 9-வது அனைத்திந்திய கருத்தரங்கு உரைப் போட்டியில் இம் மாநிலமும் பங்கேற்றது. ஐந்து கட்டுரைகள் தேசியக் கல்வி ஆராய்ச்சி-பயிற்சிக் கழகத்திற்கு அனுப்பப்பட்டன.

(vi) தொழில் பழகு ஆசிரியர் திட்டம்.

நம் முன் உள்ள வேலை வாய்ப்பு நிலைமையைக் கருத்திற் கொண்டு அதற்கேற்ப, பயிற்சிப் பள்ளிகளில் இருக்க வேண்டிய பிரிவுகளின் எண்ணிக்கை ஆண்டுதோறும் முடிவு செய்யப்பட்டாலுங் கூட, பயிற்சி பெற்று வெளிவரும் ஆசிரியர்களின் எண்ணிக்கை, பணியில் எடுத்துக் கொள்ளப்பட வேண்டிய ஆசிரியர்களின் எண்ணிக்கையை விடப் பெரிதும் அதிகமாகவே இருந்தது. பயிற்சி பெற்றும் வேலையற்றிருக்கும் ஆசிரியர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் நோக்கத்துடன், தொழில் பழகு ஆசிரியர் திட்டத்தின் கீழ் 1970-71-ல் 6,500 தொழில் பழகு ஆசிரியர் பதவிகளுக்கு (500 பி.டி. ஆசிரியர் பதவிகள், 5,000 இடைநிலை ஆசிரியர் பதவிகள், 1,000 தொடக்க நிலை ஆசிரியர் பதவிகள்) அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. திங்கள் ஒன்றுக்கு இவர்களது மொத்தச் சம்பளம் முறையே ரூ. 175, ரூ. 125, ரூ. 100 ஆகும். 1970-71-ம் ஆண்டு முடிவடைவதற்கு முன்பே தொழில் பழகும் 3,400 ஆசிரியர் பதவிகள் நிரப்பப்பட்டு விட்டன. 1971-72-ம் ஆண்டிலும் இத் திட்டம் செயலில் இருக்கும். கூடுதலாக ஆசிரியர்களை வேலைக்கமர்த்தும் திட்டங்களின் கீழ் 1971-72-ல் ஒப்பளிப்பு வழங்கப்படும் சாதாரண ஆசிரியர் பதவிகளுக்குக் கூடுதலாக, 1971-72-ல் நிரப்பப்பட வேண்டிய தொழில் பழகு ஆசிரியர் பதவிகள் இருக்கும். 6—11 வயதுத் தொகுதி மாணவர்களுக்குக் கற்பிக்கும் ஆசிரியர்களின் எண்ணிக்கை 3,000 ; 11—14 வயது மாணவர்களுக்குக் கற்பிக்கும் ஆசிரியர்களின் எண்ணிக்கை 2,000 ; 14—17 வயது மாணவர்களுக்குக் கற்பிக்கும் ஆசிரியர்களின் எண்ணிக்கை 1,500—ஆக மொத்தம், சாதாரண ஆசிரியர் பதவிகளின் எண்ணிக்கை 6,500.

மேற்சொன்னவாறு கூடுதல் பதவிகளுக்கு அரசு ஒப்புதல் அளிப்பதால் 1971-72-ம் ஆண்டில் நிரப்பப்பட வேண்டி இருக்கும் 6,500 சாதாரண ஆசிரியர் பதவிகள் போக, சாவு, ஓய்வு பெறுதல், பதவி விலகல் முதலிய காரணங்களினால் 1971-72-ல் காலி விழும் சாதாரண ஆசிரியர் பதவிகளுக்கும் 1971-72-ம் ஆண்டில் நியமனங்கள் செய்யப்பட வேண்டியதிருக்கும். மேற்சொன்ன இரு வகை காலியிடங்களும் சாதாரண ஆசிரியர் பதவிகளாகவே நிரப்பப்படும் ; தொழில் பழகு ஆசிரியர்கள் பதவிகளாக அல்ல. மேற்சொன்ன சாதாரண ஆசிரியர் பதவிகளுக்கு நியமனம் செய்யும்பொழுது ஏற்கெனவே தொழில் பழகு ஆசிரியர்களாக நியமிக்கப்பட்டுள்ளவர்களை முதலில் எடுத்துக்கொள்ள வேண்டும். அவ்வாறு எடுத்துக்கொண்ட பின்னர், மேற்கொண்டு நிரப்ப வேண்டிய சாதாரண ஆசிரியர் பதவிகளை நிரப்ப அந்தந்தப் பள்ளி நிர்வாகத்தினரே 1970-லோ அதற்கு முன்னரோ ஆசிரியர் பயிற்சி தேர்வில் வெற்றி பெற்றவர்களிலிருந்து தங்களுக்கு விருப்பமானவர்களைத் தேர்ந்தெடுத்து நியமித்துக்கொள்ளலாம். ஒவ்வொரு தலைமைக் கல்வி அலுவலரின் கீழும் தற்போது உள்ள தொழில்பயில் ஆசிரியர்கள் அனைவரும் மேற்சொன்ன நடைமுறையின்படி 1971-72-ல் சாதாரண ஆசிரியர் பதவிகளில். நியமனம் பெற்றுவிட்ட பின்னர், 1971-72-ல் இம் மாநிலத்தில் 6,500 தொழில் பழகு ஆசிரியர்களை நியமிக்க அரசு தந்துள்ள

ஒப்பளிப்பின் கீழ் ஒவ்வொரு தலைமைக்கல்வி அலுவலரும் தொழில் பழகு ஆசிரியர் பதவிகளைப் பல்வேறு பள்ளிகளுக்கும் ஒதுக்குவார். இவ்வாறு 1971-72-ல் புதிதாக நிரப்புவதற்காகத் தொழில் பழகு ஆசிரியர் பதவிகளைப் பல்வேறு நிர்வாகத்தினர் பள்ளிகளுக்கும், தலைமைக் கல்வி அலுவலர்கள் பகிர்ந்தளித்த பின் அப் பதவிகளை நிரப்ப 1970-லோ அதற்கு முன்னரோ ஆசிரியர் பயிற்சித் தேர்வில் வெற்றி பெற்றவர்களிலிருந்து தங்களுக்கு விருப்பமானவர்களை அந்தந்தப் பள்ளி நிர்வாகத்தினரே தேர்ந்தெடுத்துக்கொள்ளலாம்.

### (vii) எட்டாம் வகுப்பு இறுதியில் வகுப்பு பொதுவான வினாத் தாள்கள் தயாரித்தல்.

1970-71-ம் ஆண்டு இறுதித் தேர்விலிருந்து, வருவாய் மாவட்டம் ஒன்றிலும் உள்ள தொடக்கப் பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகள் அனைத்திற்கும் எட்டாம் வகுப்பு ஆண்டுத் தேர்வுக்கு வினாத் தாள்கள் பொதுவான அடிப்படையில் தயாரிக்கப்படுகின்றன. எனினும், விடைத் தாள்கள் அந்தந்த மாணவர்கள் படிக்கும் பள்ளிகளிலேயே திருத்தப்படுகின்றன.

### (viii) படிப்பு உதவித் தொகைகள் திட்டம்.

தொழில்நுட்ப புகுமுக வகுப்பு உட்பட கல்லூரியிலும் புகுமுக வகுப்பு வரை இலவசக் கல்வி அளிக்கப்படுவதால் படிப்பு உதவித் தொகைகள் வழங்க வேண்டிய அவசியமில்லை.

எனினும், கல்வித் துறை கீழ்க்காணும் வகுப்பினரைச் சேர்ந்த சிறுர்களுக்குக் கல்விச் சலுகைகளை அளித்து வருகின்றது:—

(1) பர்மா, இலங்கை நாடுகளிலிருந்து வந்த அகதிகள்.

(2) இராணுவப் பணியாளர்.

(3) முன்னாள் இராணுவப் பணியாளர்.

(4) அரிசனங்கள், பழங்குடி மக்கள் (சிறப்புக் கட்டணங்கள் தள்ளுபடி).

(5) தங்கக் கட்டுப்பாடு ஆணையினால் பாதிக்கப்பட்ட பொற்கொல்லர்கள் (படிப்பு உதவித் தொகைகளுக்கு புதிய விண்ணப்பங்கள் எதுவும் பெறப்படுவதில்லை ; ஆனால், வழங்கப்பட்ட படிப்பு உதவித் தொகைகள் மட்டும் 1966-67 முதல் புதுப்பிக்கப்படுகின்றன).

(6) அரசியல் தியாகிகள்.

அரிசனங்கள், பழங் குடியினர், பின்தங்கிய வகுப்பினர் (மிகவும் பின்தங்கிய வகுப்பினர்) உட்பட சேர்ந்த மாணவர்களுக்கு, எல்லாப் படிப்பு நிலைகளிலும் அரிசன நலத் துறையும் பின்தங்கிய வகுப்பினர் நலத் துறையும் தங்களது நிதியிலிருந்து படிப்பு உதவித் தொகைகள் அளித்து வருகின்றன.

### உ. பாட நூல்களை அரசே வெளியிடுதலும், பாடத் திட்டத்தைத் திருத்தியமைத்தலும்.

1956-ஆம் ஆண்டில், கல்வி பற்றிய வெள்ளைத் தாள் அறிக்கை குறித்து சட்டமன்றக் குழுவின் அறிக்கையில் செய்துள்ள பரிவுரைகள் சட்ட மன்றத்தின் இரு அவைகளாலும் ஒருமனதாக ஏற்றுக்கொள்ளப் பட்டன. இப் பரிவுரைகளையொட்டி, 1957-58-ஆம் ஆண்டிலேயே பாட நூல்களை அரசே தயாரித்து வெளியிடுவதென முடிவு செய்யப்பட்டது. இக் கொள்கை படிப்படியான நிலைகளில் செயல்படுத்தப்பட்டது. தொடக்கத்தில் ஐந்தாம் வகுப்பிற்கான ஆங்கிலப் பாட நூல் மட்டும்



1960-61-ஆம் ஆண்டில் அரசினால் தயாரித்து வெளியிடப்பட்டது. 1969-70-ஆம் ஆண்டு இறுதியில் மேற்காணும் பாட நூல்கள் அரசினால் தயாரிக்கப் பட்டு, தமிழ்நாடு அரசு அச்சகத்தில் அச்சிடப் பெற்றன :—

(i) முதலாம் வகுப்பு முதல் எட்டாம் வகுப்பு வரைக்கான தமிழ்ப் பாட நூல்கள்.

(ii) நான்காம் வகுப்பு முதல் எட்டாம் வகுப்பு வரைக்கான ஆங்கிலப் பாட நூல்கள்.

[பள்ளியிறுதி வகுப்புக்கான (பதினோராம் வகுப்பு) ஆங்கிலம், தமிழ் பாட நூல்களைப் பல ஆண்டுகளுக்கு முன்பிருந்தே பல்கலைக் கழகங்கள் வெளியிட்டு வருகின்றன.]

3. அரசு பாட நூல்களை அச்சிட்டு வழங்கும் பணியை மேற்கொள்ளத் தமிழ்நாடு பாட நூல் கழகத்தை அமைப்பதென்று 1970-71-ல் அரசு முடிவு செய்தது. சங்கங்கள் பதிவுச் சட்டத்தின் கீழ் இக் கழகம் 1970-ம் ஆண்டு மார்ச்சு மாதம் 4-ம் தேதியன்று பதிவு செய்யப் பட்டது. 1970-71-ம் ஆண்டு முதல் கீழ்க்காணும் பாட நூல்களை அரசு தயாரித்து வெளியிட்டு வருகிறது :—

(1) ஒன்பதாம், பத்தாம் வகுப்புகளுக்குரிய தமிழ், ஆங்கிலம் பாட நூல்கள்.

(2) தமிழைப் பயிற்று மொழியாகக் கொண்ட மூன்றும் வகுப்பு முதல் பத்தாம் வகுப்பு வரைக்கான கணக்குப் பாட நூல் (தமிழ்).

1970-71-ம் கல்வி ஆண்டு தொடங்குவதற்கு முன்பே இந் நிறுவனம் கீழ்க்காணும் பணிகளை நிறைவேற்ற ஏற்பாடு செய்ய வேண்டியிருந்தது :—

(1) 1970-71-ம் ஆண்டுக்கான தேவையைச் சமாளிப்பதற்காக 1970-71-ம் ஆண்டுக்கு முன்பு வெளியிடப்பட்ட அரசு பாட நூல் படிகளை மீண்டும் அச்சிடுதல் (சுமார் 61.4 லட்சம் படிகள் மீண்டும் அச்சிடப்பட வேண்டியிருந்தது).

(2) 1970-71-ம் ஆண்டில் புதிதாக வெளியிடப்பட்ட அரசுப் பாட நூல் படிகளை அச்சிடுதல் (சுமார் 56 லட்சம் படிகள் அச்சிட வேண்டியிருந்தது). இப் பணி அளவில் பெரிதாகும். இக் கழகத்திற்கு முதல் ஆண்டில் தாள் பற்றுக்குறை, அச்சிடும் பணியில் இடர்ப்பாடு, தேவையான பணியாளர் இல்லாமை முதலியன கடுமையான இடர்ப்பாடுகள் ஏற்பட்டன. இவ் விடர்ப்பாடுகள் இருந்தபோதிலும், 1970-71-ம் ஆண்டிற்குத் தேவைப்படும் பாட நூல்களில் பெரும் பகுதி அவ்வாண்டில் பள்ளிகள் திறக்கப்பட்ட ஓரிரு நாள்களுக்குள் கழகத்தினால் அச்சிட்டு வழங்கப்பட்டன.

முந்திய ஆண்டில் இடைத்த அனுபவத்தின்மேல் காலதாமதம் எதுவுமின்றி 1971-72-ம் ஆண்டிற்கான புத்தகங்களை வெளியிடுவதில் இக் கழகத்திற்கு இடர்ப்பாடு எதுவும் ஏற்படவில்லை. 11-ம் வகுப்புக்கான கணக்கு, அறிவியல், வரலாறு, புவியியல் (தமிழ் பயிற்று மொழியில் உள்ளவை) ஆகியவற்றிற்கான பாடப் புத்தகங்கள் 1971-72-ல் புதிதாக அரசால் வெளியிடப்பட்டன. மொத்தத்தில் 1971-72-ல் பயன்படுத்தப் படுவதற்காக சுமார் 108 லட்சம் புத்தகங்களை இக் கழகம் வெளியிட வேண்டி வந்தது. 1971-72-ல் உரிய காலத்தில் பள்ளிகளுக்கு இவை கிடைப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. சென்னை மாநகரில் புத்தகங்களை கழகமே விநியோகம் செய்கிறது. வெளியூர்களில் ஏற்பளிக்கப்பட்ட விற்பனையாளர்கள் மூலமாக புத்தகங்கள் விற்பனை செய்யப்படுகின்றன.

இதுவரை அரசால் வெளியிடப்படாதுள்ள பாடங்களின் பாடப் புத்தகங்களுக்கு, நடப்பாண்டில் பயன்படுத்துவதற்காக, பாடப் புத்தகக் குழுவால், எற்பளிக்கப்பட்ட பட்டியல்களிலிருந்து 1971-72-ம் ஆண்டிற்கான பாடப் புத்தகங்களைப் பள்ளிகள் தேர்ந்தெடுத்துக்கொள்ள வேண்டும். 1971-72-ம் ஆண்டில் அரசால் வெளியிடப்படாத பாடங்களில் எந்தெந்த புத்தகங்களைப் பயன்படுத்தலாம் என்று வரையறுத்துக் கூறும் பணி, பள்ளிக் கல்வி இயக்குநரின் கீழ் மாநில அளவிலான குழுவால் மேற்கொள்ளப்பட்டது.

திருத்திய பாடத் திட்டம்.

நமது பள்ளிகளில் தற்பொழுது பின்பற்றப்பட்டு வரும் பாடத் திட்டங்கள் 1965-ல் கடைசியாக திருத்தியமைக்கப்பட்டு, 1965-66-ல் 1-வது வகுப்பு முதல் 5-வது வகுப்பு வரையும், 1966-67-ல் 6-வது வகுப்புக்கும், 9-வது வகுப்புக்கும். 7, 8, 10 வகுப்புகளில் 1967-68-லும், 1968-69-லிருந்து 11-வது வகுப்புக்கும் செயலுக்கு வந்தன. நமது பள்ளிகள் பின்பற்றி வரும் பாடத் திட்டத்தில் அடங்கியவற்றைத் தொடர்ந்து திறனாய்வு செய்தலும், பாடத் திட்டத்தில் குறித்த காலத்திற்கு ஒரு முறை ஆய்வு செய்தலும், நமது கல்வி முறையை நற்காலத் தேவைகளுக்கேற்ப கொண்டுவருவதற்கு இன்றியமையாதனவாகும். எனவே, நமது பள்ளிகளில் எல்லாப் பாடங்கள் குறித்தும், பாடத் திட்டங்களை முழுமையாகத் திருத்தியமைக்க அரசு கருதியுள்ளது. இது குறித்து ஆய்வு செய்து, பாடத் திட்டங்களை மாற்றியமைப்பது பற்றி பரிவுரை செய்ய கல்விக் குழுக்கள் (Academic Committee) அமைக்கப்பட்டுள்ளன. இன்னும் சில திங்களில் அவற்றின் பரிவுரைகள் கிடைக்கப் பெறலாமென எதிர்பார்க்கப்படுகிறது.

ஊ. ஆசிரியர்களுக்கான வசதிகள், சலுகைகள்.

(i) அரசுப் பள்ளி அல்லாத பள்ளியிலுள்ள ஆசிரியர்களுக்கு ஓய்வூதியம்.

1. அரசுப் பள்ளிகள் அல்லாத பிற பள்ளிகளில் பணி புரியும் ஆசிரியர்களுக்கு ஓய்வூதியத் திட்டம்—வருங்கால வைப்பு நிதித் திட்டம்—காப்புறுதித் திட்டம் ஆகிய மூன்று பயன்களும் 1955-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1-ம் நாள் முதல் செயலுக்கு வந்தன. 1955-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1-ம் நாளுக்கு முன்பு ஓய்வு பெற்ற ஆசிரியர்களுக்கும் இத் திட்டம் 1968 மார்ச்சு 1-ம் நாள் முதற்கொண்டு நீட்டிக்கப்பட்டது. ஆசிரியர்களுக்குத் திங்கள் ஒன்றுக்கு வழங்கப்படும் ஓய்வூதியத் தொகையின் குறைந்த அளவு, 1970 மார்ச்சு 1-ம் நாள் முதற்கொண்டு ரூ. 20-லிருந்து ரூ. 30-க்கு உயர்த்தப்பட்டது. ஆசிரியர்களுக்கு ஓய்வூதியம் அவர்கள் பணியில் கடைசி 36 திங்கள்களில் பெற்ற ஊதியத்தின் சராசரியைக் கணக்கிட்டு அந்த அடிப்படையில் கொடுக்கப்பட்டது. ஆனால், 1970 மார்ச்சு 1-ம் நாள் முதற்கொண்டு அவரது பணியில் கடைசி 12 திங்களில் பெற்ற ஊதியத்தின் அடிப்படையில் ஓய்வூதியம் அளிக்கப்படுகிறது. குடும்ப ஓய்வூதியத் திட்டத்தின் நன்மைகளைப் பெறுவதற்காக ஆசிரியர் ஒருவர் குறைந்த அளவு இருபது ஆண்டுகளாவது பணிபுரிந்திருக்க வேண்டும் என்ற நிபந்தனை முன்னர் விதிக்கப்பட்டிருந்தது. குறைந்த அளவு பணிக்கால அளவை 5 ஆண்டுகளாகக் குறைத்து நிபந்தனையைத் தளர்த்தி 1969-70-ல் இத் திட்டம் திருத்தியமைக்கப்பட்டது. இந்த ஓய்வூதியத் திட்டம், குடும்ப ஓய்வூதியத் திட்டம் ஆகிய திட்டங்களின் நன்மைகள் தொடக்கப் பள்ளிகளில் பணிபுரியும் உடற் பயிற்சி ஆசிரியர்களுக்கு 1969 ஏப்ரல் திங்கள் முதல் நீட்டிக்கப்பட்டுள்ளன. அரசுப் பள்ளியில்லாத பிற பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்கள் 1970 அக்டோபர் 2-ம் நாள் அன்று அல்லது அதற்குப் பிறகு ஓய்வு பெற்றால் அதே தரத்திலுள்ள அரசுப் பணியாளர்களுக்குப் பொருந்தக் கூடிய ஓய்வூதியத் திட்டம், குடும்ப ஓய்வூதியத்



[23rd July 1971

திட்டம், ஆகிய திட்டங்களின் நன்மைகளைப் பெற அவர்கள் தகுதி யுடையவராவர். மேலும், அரசுப் பணியாளர்களுக்குப் பொருந்தத் தக்க தாராள ஓய்வூதியத் திட்டம் அவர்களுக்கும் பொருந்துமாறு செய்யப்பட்டது.

2. பள்ளிகளிலிருந்து 1970 ஜூலை திங்கள் 1-ஆம் நாள் அன்றோ அதற்குப் பின்னரோ ஓய்வு பெற்று 1970-71-ஆம் கல்வி ஆண்டு முடியும் வரை மீண்டும் பதவியில் நீட்டிக்கப்பட்டுள்ள ஆசிரியர்கள் அனைவருக்கும் இரண்டாவது ஊதியக் குழு பரிந்துரைத்த ஓய்வூதியச் சலுகைகள் அளிக்கப்படுமென அண்மையில் அரசு ஆணை வெளியிட்டுள்ளது. அரசுப் பள்ளிகள், உள்ளாட்சி மன்றப் பள்ளிகள், தனியார் பள்ளிகள், ஆகிய அனைத்துப் பள்ளி ஆசிரியர்களுக்கும் இச் சலுகை உரித்தாகும். 1970 ஜூன் திங்கள் 1-ஆம் நாள் முதல் 1970 அக்டோபர் 1-ஆம் நாள் முடிய வுள்ள காலத்தில் ஓய்வு பெற்ற ஆசிரியர்கள் இரண்டாவது ஊதியக் குழு பரிந்துரைத்த திருத்திய சம்பள விகிதங்களின்படி ஊதியம் பெற மாட்டார்கள். எனினும் அவர்களுக்குத் தரவேண்டிய ஓய்வு ஊதியத் தையும் பிற ஓய்வுச் சலுகைகளையும் கணக்கிடுவதற்கு மட்டும் அவர்கள் புதிய சம்பள விகிதப்படி சம்பளம் பெற்று ஓய்வு பெற்றதாகக் கருதிக் கணக்கிடப்படும். "தாராள ஓய்வூதிய விதிகளின்" படியே அவர்கள் ஓய்வுச் சலுகைகள் கணக்கிடப்படும்.

3. அரசுப் பள்ளிகள் அல்லாத பள்ளிகளிலிருந்து ஓய்வு பெற்று 1970 அக்டோபர் திங்கள் 1-ஆம் நாளன்று ஓய்வு ஊதியம் வாங்கிக்கொண்டிருந்த ஓய்வு பெற்ற ஆசிரியர்களுக்கு அவர்கள் 1970 செப்டம்பர் மாதம் பெற்ற ஓய்வூதியத்திற்குச் சமமான தொகையைப் போனசாகக் கொடுக்க அண்மையில் ஆணையிடப்பட்டுள்ளது. அப்படித் தரப்படும் போனஸ் ரூ. 100-க்கு மிக்க கூடாது. மேலே 2-ஆம் பத்தியில் கூறப்பட்டுள்ள சலுகையைப் பெற்ற ஆசிரியர்களுக்கு அந்த போனஸ் தரப்பட மாட்டாது. மாணியம் பெறும் கல்லூரிகளிலிருந்து 1970 அக்டோபர் திங்கள் 1-ஆம் நாள் அன்றோ அதற்கு முன்னரோ ஓய்வு பெற்ற ஆசிரியர்களுக்கும் அந்த போனஸ் உண்டு.

4. அரசுப் பள்ளிகளில்லாத பள்ளிகளில் இருந்து 1970 அக்டோபர் திங்கள் 2-ஆம் நாள் அன்றோ அதற்குப் பின்னரோ ஓய்வு பெற்ற ஆசிரியர்களுக்கும், மேலே 2-ஆம் பத்தியில் கூறப்பட்டுள்ள ஆசிரியர்களுக்கும் இரண்டாவது சம்பள ஆணைக்குழுவின் பரிந்துரைகளின்படி, ஓய்வுபெற்ற மாநில அரசு ஊழியர்களுக்கு வழங்கப்பட்டுள்ள கீழ்க்காணும் சலுகைகள் வேறு தனி ஆணை இன்றியே பொருந்துவனவாகும் :—

(அ) திங்கள் ஒன்றுக்கு ரூ. 200-க்கு குறைவாக ஓய்வு ஊதியம் பெற்று வருபவர்களுக்கு ஆண்டுக்கு ரூ. 100-க்கு மிகாமல் பண்டிகை முன்பணம் வழங்கல்; (இ) ஓய்வு பெற்ற பொழுது எதாவது மருத்துவச் சலுகைகள் பெற்று வந்தால் ஓய்வு பெற்ற பின்னும் தொடர்ந்து அச் சலுகைகளைப் பெற்று வரலாம். மேற்சொன்ன இரண்டு சலுகைகளையும் கீழ்க்காணும் இரு வகை ஓய்வு பெற்ற ஆசிரியர்களுக்கு நீட்டித்து அரசு அண்மையில் ஆணை வெளியிட்டுள்ளது :—

(1) அரசுப் பள்ளிகளில்லாத பள்ளிகளிலிருந்து 1970 ஜூலை திங்கள் 1-ஆம் நாளுக்கு முன் ஓய்வு பெற்றவர்கள்.

(2) மாணியம் பெறும் கல்லூரிகளிலிருந்து ஓய்வு பெற்ற ஆசிரியர்கள் (1970 அக்டோபர் திங்கள் 2-ஆம் நாளுக்கு முன் ஓய்வு பெற்றவர்களும் 1970 அக்டோபர் திங்கள் 2-ஆம் நாள் அன்றோ அதற்குப் பின்னரோ ஓய்வுபெற்றவர்களும்).

## (ii) ஆசிரியர்கள் நலனுக்கான தேசியக் கழகம்.

ஆசிரியர்கள் நலனுக்கான தேசியக் கழக நிதியிலிருந்து, பணியிலுள்ள ஆசிரியர்களுக்கும், ஓய்வு பெற்ற ஆசிரியர்களுக்கும், உதவியளிக்கப்படுகிறது. தகுதியுள்ள ஆசிரியர்களுக்கும் ஓய்வு பெற்ற ஆசிரியர்களுக்கும், இந்த ஆசிரியர்களை நம்பியிருந்த அவர்தம் குடும்பத்தினருக்கும், இக் கழகத்தின் மாநில செயற்குழு திங்கள்தோறும் குறிப்பிட்ட தொகையையும் மொத்தமாக ஒரு தொகையையும் நிதி ஒதுக்கீட்டிலிருந்து அளிக்கிறது.

ஓய்வு பெற்றபின் வசதியற்று வறிய நிலையிலுள்ள ஆசிரியர்களுக்கும் இறந்த ஆசிரியர்களின் மனைவியருக்கும், அந்த ஆசிரியர்களை நம்பியிருந்த அவர்தம் குடும்பத்தினருக்கும், திங்கள்தோறும் ரூ. 10-லிருந்து ரூ. 100 வரை மாத உதவித் தொகை அளிக்கப்படுகிறது. மருத்துவச் செலவு முதலியவற்றிற்காக, சாதாரணமாக ரூ. 1,000 வரை மொத்த உதவித் தொகை அளிக்கப்படுகிறது. 30 ஆண்டுகளுக்குமேல் போற்றத்தக்க பணி புரிந்து ஓய்வு பெற்ற ஆசிரியர்களுக்கு கருணைக் கொடையாக ரூ. 1,500 வரை ஒரு மொத்தத் தொகையளிக்கப்பட்டது. 388 பேருக்கு மொத்தத் தொகையும், 442 பேர்களுக்கு திங்கள் தோறும் அளிக்கப்படும் உதவித் தொகையும், இதுவரை அளிக்கப்பட்டுள்ளது. இந்த நிதியின் கீழ் இந் நாள் வரை ரூ. 31·35 லட்சம் வசூலாகியுள்ளது. 1970-ம் ஆண்டு ஆசிரியர் நாள் விழா தொடர்பாக வசூலாகியுள்ள ரூ. 5·01 லட்சமும் இதில் அடங்கும்.

## (iii) ஆசிரியர்கள் இல்லம்.

ஆசிரியர்கள் நலனுக்காகவும், கல்வி வளர்ச்சிக்காகவும் வட ஆர்க்காடு மாவட்ட ஆசிரியர்கள் நலச் சங்கம் ஒன்றை, வட ஆர்க்காடு மாவட்ட ஆசிரியர்கள் அமைத்தனர். ஆசிரியர்கள் இல்லத்தை அமைப்பதற்காக அவர்கள் தாங்களே முன்வந்து அளித்த நன்கொடைத் தொகையைக் கொண்டு வேலூரில் ரூ. 95,000 மதிப்புள்ள கட்டிடம் ஒன்றை வாங்கினர். அதில் நூலகம் ஒன்றும், கலை நிலையம் ஒன்றும், கருத்தரங்கு முதலியன நடத்துவதற்கும் அரங்கு ஒன்றும், ஆசிரியர்கள் தங்கி ஓய்வு எடுத்துக் கொள்ளும் வசதியுள்ள அறைகளும், அந்த ஆசிரியரகத்திற்கு இணைப்பாக, ஆசிரியர் கூட்டுறவு அச்சகம் ஒன்றும் உள்ளன. வட ஆர்க்காடு மாவட்ட ஆசிரியர்களால் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளை அரசு பாராட்டி, தற் பொழுதுள்ள கட்டிடத்தை மாற்றியமைக்கவும், நல்ல வசதிகளைச் செய்யவும், கூடுதல் அறைகளைக் கட்டும் பணியை மேற்கொள்ளவும் ரூ. 50,000 தனி மானியம் வழங்கியது. எனைய மாவட்டங்களிலும், இத்தகைய ஆசிரியர்களின் கூட்டுறவு முயற்சி வரவேற்கப்பட்டு, அவர்களுக்கு எல்லா உதவிகளும் இயன்றவரை அளிக்கப்படும்.

## (iv) ஊக்க ஊதிய உயர்வு.

இடைநிலைத் தர ஆசிரியர்கள், பி.டி.. ஆசிரியர்கள், உயர்நிலைப்பள்ளி தலைமையாசிரியர்கள், தமிழாசிரியர்கள், உடற் பயிற்சி ஆசிரியர்கள், எனைய சிறப்பு ஆசிரியர்கள் தாங்கள் பணிபுரியும் பதவிக்கு வேண்டிய தகுதிகளைக் காட்டிலும் உயர்கல்வித் தகுதிகளைப் பெற்றால், அவர்களுக்கு ஊக்க மளிப்பதற்காக, 1968 ஜூலை 1-ம் நாள் முதற்கொண்டு இரு ஊதிய உயர்வுகளை முன் கூட்டி அளிக்க அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. இவ் வாறாக, பி.டி. பட்டம் பெற்ற இடைநிலைத்தர ஆசிரியர் ஒருவர் இடைநிலைத் தர சம்பள வீதத்தில் இரண்டு ஊதிய உயர்வுகளை முன்னதாகப் பெறவும், எம்.ஏ. அல்லது எம்.எட். (M.Ed.) பட்டம் பெற்றுள்ள பி.டி. ஆசிரியர் ஒருவர் பி.டி. சம்பள வீதத்தில் இரண்டு ஊதிய உயர்வை முன்னதாகப் பெறவும் தகுதியுடையவராவர்.



## (v) ஆசிரியர்களுக்கு அரசு விருதுகள்.

கல்வித் துறையில் ஆசிரியர்களால் செய்யப்படும் சிறந்த பணிகளைப் பாராட்டுவதற்காக, தொடக்கப் பள்ளிகளில் சிறந்த ஆசிரியர்களுக்கு அரசு விருதுகள் வழங்கப்படுகின்றன. இத் திட்டத்தின் கீழ், 45 கல்வி மாவட்டங்கள் ஒவ்வொன்றிலிருந்தும் இரண்டு ஆசிரியர்கள் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். அவர்களுக்கு தகுதிச் சான்றிதழ் ஒன்றும், ரூ. 30 மதிப்புள்ள வெள்ளிப் பதக்கமும், ரூ. 200 ரொக்கப் பரிசும் வழங்கப்படுகின்றன. இத் திட்டம் உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்களுக்கும் 1969-70-லிருந்து நீட்டிக்கப்பட்டுள்ளது. 45 கல்வி மாவட்டங்களில் ஒவ்வொன்றிற்கும் இரண்டு விருதுகள் வீதம் ஒவ்வொரு ஆண்டும் உயர்நிலைப்பள்ளி ஆசிரியர்களுக்கு 90 விருதுகள் வழங்கப்படும்.

## (vi) மானியம் பெறும் பள்ளிகள் குறித்த விவரங்கள்.

மானியம் பெறும், தொடக்கப்பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகளின் நிலைமைகள் அனைத்தையும் ஆய்வு செய்வதற்காக, ஆய்வுக்குழு ஒன்றை 1969-ல் அரசு நியமித்தது. 1971 பிப்ரவரியில் அந்தக் குழு தனது அறிக்கையை அரசுக்கு அளித்தது. அந்த அறிக்கை ஆய்வு செய்யப்பட்டு வருகிறது. இதற்கிடையில், அரசுப் பள்ளிகளிலும் உள்ளாட்சி மன்றப் பள்ளிகளிலும் உள்ள ஆசிரியர்களுக்கு நன்கொடை, மானியப் பள்ளி ஆசிரியர்களைக் கொண்டு வரும் வகையில், அவர்களுக்குப் பல நலன்கள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. முன்பே கூறியது போல், 1970 அக்டோபர் 2-ம் நாள் அன்று அல்லது அதற்குப் பின்னர் ஓய்வு பெறும் மானியப் பள்ளி ஆசிரியர்கள், தாராள ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் அரசுப் பணியாளர்களைப் போல் ஓய்வூதியம் பெறத் தகுதியுடையவர்களாவர். மானியம் பெறும் பள்ளி ஆசிரியர்களுக்குக் கீழ்க்கண்ட சலுகைகள் அளிக்கவும் அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது :—

(1) 1970 ஏப்ரல் திங்கள் 1-ஆம் நாள் முதல், மானியம் பெறும் பள்ளி ஆசிரியர்களும் அவர் தம் குடும்பத்தினரும் அரசு மருத்துவ மனைகளிலும், மருந்தகங்களிலும் இலவச மருத்துவ வசதி பெற்று வருகின்றனர். இவ் வசதியைப் பெற்று வரும் ஆசிரியர்கள் எண்ணிக்கை சுமார் 72,000 ஆக இருக்கும். இவ் வசதியை 1971 ஆகஸ்ட் திங்கள் 1-ஆம் நாள் முதல் மானியம் பெறும் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியரல்லாத பிற பணியாளருக்கும் நீட்டித்து அண்மையில் அரசு ஆணை வெளியிட்டுள்ளது. பயன் பெறும் ஆசிரியரல்லாத பிற பணியாளர் எண்ணிக்கை சுமார் 6,350 ஆக இருக்கும்.

(2) உள்ளாட்சி மன்றப் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்குப் பொருந்தும் வீதங்களிலேயே, மானியம் பெறும் பள்ளி ஆசிரியர்களுக்கு 1970 ஏப்ரல் திங்கள் 1-ம் நாள் முதற்கொண்டு வீட்டு வாடகைப்படி வழங்கவும், மானியம் பெறும் பள்ளிகளின் ஆசிரியரல்லாத பிற பணியாளர்களுக்கு 1970 ஆகஸ்டு திங்கள் 1-ம் நாள் முதல் வீட்டு வாடகைப்படி வழங்கவும், ஒப்பளிக்கப்பட்டது.

(3) சென்னையிலும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளிலும், மதுரை யிலும் பணிபுரியும் அரசு ஊழியர்களுக்கு வழங்கப்படும் நகர ஈட்டுப்படி வீதங்களை, மானியம் பெறும் பள்ளி ஆசிரியர்களும் பெறுகின்றனர்.

(4) மானியம் பெறும் பள்ளி ஆசிரியர்களுக்கு கைத்தறித் துணிகள் வாங்குவதற்காக முன்பணமும், பண்டிகை முன்பணமும் அளிக்கப்படுகின்றன. இந்தத் தொகை அவர்களது வருங்கால வைப்பு நிதியில் அவர்கள் கணக்கிலுள்ள தொகையில் 50 சத வீத வரையரைக்குட்பட்டு வழங்கப்படுகிறது.

(5) மானியம் பெறும் பள்ளிகள் அனைத்திலும் உள்ள ஆசிரியர்கள் அனைவருக்கும், ஒருவருக்கு ரூ. 500-க்கு மேற்படாமல் திருமணக் கடன் வழங்கவும் ஒப்பளிக்கப்பட்டுள்ளது. இக் கடன் 60 தவணைகளில் திருப்பித் தரத்தக்கதாகும்.

(6) அறிக்கையிடப்பட்ட மலைப் பகுதிகளில் மானியம் பெறும் தொடக்க உயர் நிலைப் பள்ளியாசிரியர்களுக்கு ஓராண்டில் நான்கு திங்கள் வரை (மழைக்கால திங்கள்கள்) குளிர்காலப் படி வழங்கப்படுகிறது.

(7) மானியம் பெறும் பள்ளி ஆசிரியர்களுக்கு அவர்களின் ஊதியத்தில் 20 சதவீதம் மலை வாழ் இடப்படி மாதம் ஒன்றுக்கு ரூ. 80 என்ற மேல்வரம்பிற்குட்பட்டு 1970 ஆகஸ்ட் 1-ம் நாள் முதல் வழங்கப்படுகிறது.

## (vii) சம்பள வீதத்தை மாற்றியமைத்தல்.

எல்லா வகை நிர்வாகத்தின் கீழுள்ள பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்கள், ஆசிரியரல்லாத பணியாளர்கள் ஆகியோரின் சம்பள வீதங்களை, தமிழ்நாடு இரண்டாவது சம்பள ஆணைக் குழுவின் பரிவுரைகளையொட்டி 1970 அக்டோபர் 2-ம் நாள் முதற்கொண்டு உயர்த்தியது. 1970-71-ல் சிறப்பான ஒரு சாதனையாகும். 1970 அக்டோபர் 2-ம் நாளுக்கு முன்பு வழங்கப்பட்ட அகவிலைப்படியின் பெரும் பகுதி மாற்றியமைக்கப்பட்ட இந்த சம்பள வீதத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. இது, ஒய்வூதிய பலன்கள் குறித்து கணிசமான அளவிற்குக் கூடுதல் நன்மைகளைப் பெறவும், 1970 அக்டோபர் 2-ம் நாள் முதற்கொண்டு அனுமதிக்கப்பட்ட சம்பளம், அகவிலைப்படி, உயர்விற்குக் கூடுதலாக சம்பளத்தின் குறிப்பிட்ட ஒரு சத வீதத்தில் கணக்கிடப்படும். நகர ஈட்டுப்படி, வீட்டு வாடகைப்படி போன்ற படிகளில் உயர்வு பெறுவதற்கும் வகை செய்கிறது. உயர்த்தப்பட்ட சம்பள வீதங்களைச் செயலுக்குக் கொண்டு வந்ததன் விளைவாக, திங்களில் குறைந்த அளவு ஊதிய உயர்வு ஒரு திங்களில் ரூ. 20-லிருந்து ரூ. 100 வரையிருக்கும்.

பள்ளிகளிலுள்ளமுக்கியமான பதவித் தரங்கள் குறித்த பழைய சம்பள வீதங்களும் திருத்தியமைப்பட்ட சம்பள வீதங்களும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| | 1970-ம் ஆண்டு அக்டோபர் 2-ம் தேதிக்கு முன்பு பெற்ற சம்பள வீதமும் சம்பள வீதத்தில் பெற்ற குறைந்த அளவு மொத்த ஊதியமும். | 1970-ம் ஆண்டு அக்டோபர் 2-ம் தேதியிலிருந்து மாற்றியமைக்கப்பட்ட சம்பள வீதமும் சம்பள வீதத்தில் கொடுக்கத் தக்க குறைந்த அளவு மொத்த ஊதியமும். |
|---|---|---|
| 1. ஆரம்ப நிலை (Lower Grade ). | ரூ. 55—1—70 சம்பளம் 55+ அக விலைப்படி ரூ. 71+ சிறப்பு ஈட்டுப் படி ரூ. 10. மொத்தம் ரூ. 136). | ரூ. 140—3—155—4—175—5—210. (சம்பளம் ரூ. 140+ அகவிலைப் படி ரூ. 15. மொத்தம் ரூ. 155). |
| 2. தொடக்க நிலை. (எ) சாதாரண நிலை. | ரூ. 65—1—70—2—90. (சம்பளம் ரூ. 65+ அக விலைப்படி ரூ. 71+ சிறப்பு ஈட்டுப்படி ரூ. 10. மொத்தம் ரூ. 146). | ரூ. 150—4—170—5—225. (சம்பளம் 150—அகவிலைப்படி ரூ. 15. மொத்தம் ரூ. 165). |
| (பி) தேர்வு நிலை. | .... | ரூ. 180—5—260—10—270. |



| | 1970-ம் ஆண்டு அக்டோபர் 2-ம் தேதிக்கு முன்பு பெற்ற சம்பள வீதமும் சம்பள வீதத்தில் பெற்ற குறைந்த அளவு மொத்த ஊதியமும். | 1970-ம் ஆண்டு அக்டோபர் 2-ம் தேதியிலிருந்து மாற்றியமைக்கப்பட்ட சம்பள வீதமும் சம்பள வீதத்தில் கொடுக்கத் தக்க குறைந்த அளவு மொத்த ஊதியமும். |
|---|---|---|
| | ரூ. | ரூ. |
| 3. இடைநிலைத் தரம்— (எ) சாதாரண நிலை. | ரூ. 90—4—110—3—140 (சம்பளம் ரூ. 90+ அக விலைப்படி ரூ. 108. மொத்தம் ரூ. 198). | ரூ. 210—5—245—10—325. (சம்பளம் ரூ. 210 + அகவிலைப்படி ரூ. 15 மொத்தம் ரூ. 225). |
| (பி) தேர்வு நிலை .. | .... | ரூ. 250—10—400. (சம்பளம் ரூ. 250+ அகவிலைப்படி ரூ. 15 மொத்தம் ரூ. 265). |
| 4. பி.டி. ஆசிரியர்கள்— (எ) சாதாரண நிலை .. | ரூ. 140—5—180—10—250. (சம்பளம் 140+ அகவிலைப்படி ரூ. 108. மொத்தம் ரூ. 248). | ரூ. 275—10—375—15—450. (சம்பளம் ரூ. 275 + அகவிலைப்படி ரூ. 15. மொத்தம் ரூ. 290). |
| (பி) தேர்வு நிலை .. | ரூ. 225—10—275—15—350.(சம்பளம் ரூ. 225+ அகவிலைப்படி ரூ. 132). மொத்தம் ரூ. 357. | ரூ. 400—15—475—20——575—25—650. (சம்பளம் 400+ அக விலைப்படி ரூ. 30. மொத்தம் ரூ. 430 அரசு பள்ளிகள் அல்லாத பிற பள்ளிகளில் பி.டி. ஆசிரியர்களைப் பொறுத்த வரையில் தேர்வு நிலை புதியதாகக் கொண்டு வரப்பட்டது.) |
| 5. இடைநிலைப் பள்ளி தலைமையாசிரியர்கள். | (இடைநிலைத்தர சம்பள வீதத்தைப் போன்றதாகும்.) | ரூ. 225—5—250—10—350. (சம்பளம் ரூ. 225—அகவிலைப்படி ரூ. 15. மொத்தம் ரூ. 240). |
| 6. தலைமையாசிரியர்கள்— (எ) 1,000 மாணவர்களுக்குக் குறைவாயுள்ள உயர்நிலைப் பள்ளிகளின் தலைமை ஆசிரியர்கள். | ரூ. 225—5—250—10—300+ சிறப்புச் சம்பளம் ரூ. 20(சம்பளம் ரூ.225 + சிறப்புச் சம்பளம் ரூ. 20+ அகவிலைப்படி ரூ. 132. மொத்தம் ரூ. 377.) | ரூ.450—25—750 (சம்பளம் ரூ. 450 + அகவிலைப்படி ரூ. 30 மொத்தம் ரூ. 480). |
| (பி) 1,000 மாணவர்களுக்கு மேல் உள்ள உயர்நிலைப் பள்ளிகளின் தலைமையாசிரியர்கள். | ரூ. 300—25—800 + சிறப்புச் சம்பளம் ரூ. 30. (சம்பளம் ரூ. 300 + சிறப்புச் சம்பளம் ரூ. 30 + அகவிலைப்படி ரூ. 132. மொத்தம் ரூ. 462). | ரூ. 500—25—625—30—745—35—850. (சம்பளம் ரூ. 500+ அகவிலைப்படி ரூ. 30. மொத்தம் ரூ. 530.) |

[23rd July 1971

அரசுப் பள்ளிகளல்லாத பிற பள்ளிகளில் ஆசிரியர்களுக்கு முதன் முறையாகத் தேர்வு நிலைப் பதவிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. தொடக்க நிலைப் பதவிகள், இடைநிலைப் பதவிகள், பி.டி. ஆசிரியர்கள், I-ம் நிலை, II-ம் நிலை, தமிழ் வித்துவான்கள், பிற மொழி ஆசிரியர்கள் ஆகியவர்களின் பதவிகளில் 10 சதவீதம் தேர்வு நிலைப் பதவிகளாக உயர்த்தப் பட்டுள்ளன. தலைமை ஆசிரியர்கள் உட்பட 4 அல்லது அதற்கு மேற்பட்ட ஆசிரியர்கள் உள்ள தொடக்கப் பள்ளிகளைப் பொறுத்த வரையில் திங்களொன்றுக்கு ரூ. 5 என்ற வீதத்திலும், 300-க்கு மேற்பட்ட மாணவர்களையும், தலைமையாசிரியர் உட்பட 4 ஆசிரியர்களுக்குக் குறையாதவர்களையும் கொண்ட பள்ளிகளைப் பொறுத்த வரையில் திங்களொன்றுக்கு ரூ. 10 என்ற வீதத்திலும் தலைமையாசிரியர்களுக்குப் பணிப்படி (தலைமையாசிரியர் படி) ஒப்பளிக்கப்படுள்ளது. அத்தகைய நேர்வில், தலைமை ஆசிரியர் இடைநிலைத்தர ஆசிரியர் பயிற்சிச் சான்றிதழைப் பெற்றிருக்க வேண்டும். மேலும், இடைநிலைத்தர ஆசிரியர்களுக்குப் பொருந்தத்தக்க தேர்வு நிலைத் தரத்தில் அவர் ஏற்கெனவே பணி புரிபவராய் இருக்கக்கூடாது.

நிலை—I. பண்டிதர் பதவிகளுக்கு நியமிக்கப்பட முழுதும் தகுதி உடைய நிலை II— தமிழ் வித்துவான்களுக்கு நிலை I-க்கான சம்பள வீதப்படி ஊதியம் வழங்கும் நோக்கத்துடன், நிலை II—வித்துவான்களை I-ம் நிலையில் அமர்த்திக் கொள்வதற்காக, இடைநிலைப் பள்ளிகளிலும் உயர் நிலைப் பள்ளியின் இடைநிலைப் பிரிவுகளிலும் பணிபுரியும் 2,000 நிலை II—தமிழ் வித்துவான்கள் பதவிகளை 1970–71 -ம் ஆண்டில் 2,000 நிலை I— தமிழ் வித்துவான் பதவிகளாக மாற்றுவதற்கு அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது.

எ. உடற்பயிற்சிக் கல்வி, போட்டி விளையாட்டுகள், சாரணர் பணிகள்.

தொடக்கப்பள்ளிகளிலும், உயர் நிலைப் பள்ளிகளிலும் உடற்பயிற்சிக் கல்வி கட்டாயப் பாடங்களில் ஒன்றாக உள்ளது. கல்வி நிறுவனங்களில் உடற்பயிற்சிக் கல்வி தலைமை ஆய்வாளரும், உடற்பயிற்சிக் கல்வியில் சிறப்புத் தேர்ச்சிப் பெற்ற பெண் ஒருவரும் இப் பொறுப்பை கவனிக்கின்றனர்.

ஒவ்வோர் ஆண்டும் குடியரசு நாள் பந்தயங்கள், விளையாட்டுப் போட்டிகள், சிறுவர்களுக்காக, மாவட்ட, கோட்ட மாநில அளவிலும் பெண்களுக்காக மாவட்ட, மாநில அளவிலும் நடைபெறுகின்றன. குழந்தைகள் அண்வகுப்புகள் ஆண்டு ஒன்றுக்கு இரண்டு முறை நடத்தப் படுகின்றன. ஒன்று காலஞ்சென்ற தலைமை அமைச்சர் திரு. ஜவர்ஹர்லால் நேரு அவர்களின் பிறந்த நாளைக் கொண்டாடுவதற்காக நவம்பர் திங்கள் 14-ம் நாள் அன்றும், மற்றது குடியரசு நாளைக் கொண்டாடும் விதமாக ஜனவரி 26-ம் நாளன்றும் நடத்தப்படுகிறது.

இந்தியப் பள்ளி விளையாட்டு கூட்டமைப்பு, ஓராண்டில் இரு முறை ஓலியுதிர் காலத்திலும், குளிர் காலத்திலும் ஆகப், பந்தயங்களையும் விளையாட்டுகளையும் நடத்துகிறது. இந்தப் பந்தயங்களிலும், விளையாட்டுகளிலும் எல்லா மாநிலங்களும் பங்கெடுத்துக் கொள்கின்றன. மேலே கூறிய போட்டி நிகழ்ச்சிகளில் இம் மாநிலமும் கலந்து கொள்கிறது. 1970–71-ம் ஆண்டு குளிர் காலத்தில் திருவனந்தபுரத்தில் இந்திய பள்ளி விளையாட்டுகள் கூட்டமைப்பால் நடத்தப்பட்ட விளையாட்டுப் போட்டியில் இம் மாநிலம் பங்கெடுத்துக் கொண்டது.

பொதுமக்களிடையே போட்டிப் பந்தயங்கள், விளையாட்டுகளை ஊக்குவிப்பதற்காக மாநில மாவட்ட அளவிலுள்ள விளையாட்டுக் குழுக்கள் பயனுள்ள பணிகளைச் செய்கின்றன. மாவட்ட, வட்டார, மாநிலஅளவில் ஒவ்வோர் ஆண்டும் பொங்கல் வார விழாவுடன் இணையும் வகையும் முக்கியமாக மாணவர்கள் அல்லாதவர்களுக்காக விளையாட்டுகள் உடற், பயிற்சி போட்டி நடத்துவதற்கு அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது.



23rd July 1971]

விளையாட்டு அரங்கம் கட்டுவதற்காக ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ரூ. 1 லட்சம் மானியமாக வழங்கும் திட்டம் தொடர்ந்து செயல்பட்டு வருகிறது. திருச்சிராப்பள்ளி, வட ஆற்காடு, நீலகிரி, சேலம் ஆகிய மாவட்டங்களுக்கு 1970–71-ம் ஆண்டிற்கு முன்பே மானியங்கள் வழங்கப் பட்டன. திருச்சிராப்பள்ளி, வட ஆர்க்காடு, நீலகிரி ஆகிய இடங்களில் விளையாட்டு அரங்கங்கள் கட்டும் பணி ஏற்கெனவே முடிக்கப்பட்டுள்ளது. மதுரை, தென் ஆர்க்காடு ஆகியவற்றிற்கு 1970–71-ம் ஆண்டில் மானியங்கள் வழங்கப்பட்டன. மேலும் இரண்டு மாவட்டங்களுக்கு இத் திட்டத்தை நீட்டிப்பதற்காக 1971–72-ம் ஆண்டில் ரூ. 2 லட்சம் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

ஏ. சிறப்புப் பள்ளிகள்.

1. சிறுர் பள்ளிகள் (Pre-Primary Schools).—ஐந்து வயதுக்குக்கீழ் உள்ள குழந்தைகளுக்காக சிறுர் பள்ளிகள் நடத்தப் படுகின்றன. இம்மாநிலத்தில் ஏறக்குறைய 42 பள்ளிகள் உள்ளன. அவை பெரும்பாலும் நகர்புறப் பகுதிகளில் அமைந்துள்ளன. ஊராட்சி ஒன்றியங்களால் கிராமப் புறங்களில் குழந்தைகள் காப்பகங்கள் நடத்தப்படுகின்றன.

2. பயிற்சி பள்ளிகள்.—(i) நூலகம், ஆய்வுக்கூட வசதிகள்.—தேர்ந் தெடுக்கப்பட்ட பயிற்சிப் பள்ளிகளில் நூலக-ஆய்வுக்கூட வசதிகள், ஏற்படுத்தித்தர ரூ. 1·80 லட்சம் செலவிடப்பட்டது. பள்ளி ஒன்றுக்கு ஆய்வுக்கூடத்துக்காக ரூ. 2,000 நூலகத்திற்காக ரூ. 1,000 என்ற வீதத்தில் இவ்வாறு செலவிடப்பட்டது. 1971–72-ம் ஆண்டிற்கு ரூ. 1,71,000 நிதி ஒதுக்கம் செய்யக் கருதியுள்ளது.

அறிவியல் கல்விக்கான யூனிசெஃப் திட்டத்தின்கீழ் முன்னெடித் திட்டத்தைத் கொண்டுவருவதற்கு அடிப்படை நிறுவனமாக இரண்டு பயிற்சிப் பள்ளிகள், அதாவது எழும்பூர் அரசினர் பயிற்சிப் பள்ளியும், கடலூர் அரசு அடிப்படைப் பயிற்சிப் பள்ளியும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

(ii) நினைவூட்டுப் பாட முறைகள் முதலியன.—மாவட்ட கல்வி அதிகாரிகளின் ஒத்துழைப்புடன் மாநிலக் கல்விப் பயிற்சி நிறுவனத்தால் ஆசிரியர்களுக்காக நினைவூட்டுப் பாடமுறைகள் நடத்தப்படும்.

(iii) தமிழ் நாடு ஆங்கில மொழி பயிற்றுவிக்கும் இயக்கம்.—1959-ம் ஆண்டில் இம் மாநிலத்தில் தொடக்கப் பள்ளிகள் அனைத்திலும் 5-ம் வகுப்பில் ஆங்கில்க் கல்வி கொண்டுவந்துபோது, பிரிட்டிஷ் கவுன்சிலின் ஒத்துழைப்புடன் 5-ம் வகுப்பு ஆங்கில ஆசிரியர்களுக்குப் பணிக்காலப் பயிற்சிக்கான பெருந் திட்டமொன்றை அரசு வகுத்தது. மூன்று வார தொடக்கப் பாட முறைகளில் 3,750 பட்டதாரி ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது. ஒவ்வொரு தொகுதிக்கும் 5 முதல் 6 திங்கள் கால அளவில் 40 நாட்களில் தினம் 2 மணி நேரம் மாலை வகுப்புகளில் புதிய முறையில் ஆங்கிலம் போதிப்பதற்கு இடை நிலைத்தர தொடக்கப்பள்ளி ஆசிரியர்களுக்கு இந்தப் பட்டதாரி ஆசிரியர்கள் பயிற்சி அளித்தனர். 1959–1964 ஆண்டுகளில் மேற்கூறிய திட்டத்தின்கீழ் ஏறக் குறைய 34,700 ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது. 11 ஆண்டு பள்ளிக் கல்வி முறைக்கு ஏற்பளிக்கப்பட்டபோது, 1963–64-ம் ஆண்டு முதற்கொண்டு 3-ம் வகுப்பிலிருந்து ஆங்கிலம் கற்பிக்கத் தொடங்கப் பட்டது. 3-ம் வகுப்பு முதல் ஆங்கிலம் கற்பிக்கும் ஒரே மாநிலம் தமிழ் நாடு தான் என்று கூறலாம்.

ஐந்தாம் வகுப்புவரை ஆங்கிலத்தைத் தற்கால புது முறைகளில் கற்பிப்பதற்குத் தொடக்கப் பள்ளி ஆசிரியர்களுக்குப் பயிற்சியளிக்கப்பட்டதற்கு மேல் நடவடிக்கையாக, 6-வது முதல் 8-வது வரையுள்ள வகுப்புகளில் ஆங்கிலம் பாடமெடுக்கும் ஆசிரியர்களுக்கு முன்னெடிப் பயிற்சி அளிக்க

அரசு அனுமதித்தது. 50 மாலை நேரப் பயிற்சி வகுப்புகளில் மதுரையிலும், சென்னையிலும் இம் மாநிலத்தின் தேர்ந்தெடுக்கப்பட்ட பிற இடங்களிலும் இப் பயிற்சி நடத்தப்பட்டது. 6, 7, 8 வகுப்புகளில் ஆங்கிலம் கற்பிக்கும் 1,000 ஆசிரியர்களுக்கு இவ்வாறு பயிற்சியளிக்கப்பட்டது. சிறப்பாகக் கிராமப்புற பகுதிகளில் உள்ள பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு மாலை நேரப் பயிற்சி அளிப்பதில் சிரமங்கள் உள்ளன. முறையான 4 வார முழுமுரப் பயிற்சியினைத் தங்கியிருந்து பெறும் வகையில், 6, 7, 8 வகுப்புகளில் ஆங்கிலம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்காக இம் மாநிலத்தில் ஆங்கில மொழிப் பயிற்சி நிலையங்கள் நான்கு தொடங்கப்பட்டன. ஒவ்வொரு நிலையத்திலும் மூன்று நெறிமுறை ஆசிரியர்கள் (Tutors) உள்ளனர். அவர்கள் பெங்களூர் தென் இந்திய வட்டார ஆங்கிலக் கல்வி நிறுவனத்தில் சிறப்புப் பயிற்சி பெற்றவர்களாவர். தலைமையிடத்தில் உள்ள சிறப்பு அதிகாரி ஒருவர் இந்தப் பயிற்சிநிலையங்களுக்கு நிர்வாக, தொழில் நுட்ப ஒத்துழைப்பை அளிக்கிறார். தமிழ் நாடு ஆங்கில மொழி பயிற்றுவிக்கும் நிலையங்களின் பணிகளையும் பங்களூர், தென் இந்திய வட்டார ஆங்கிலக் கல்வி நிறுவனத்தின் பணிகளையும் இவர் ஒருங்கிணைக்கிறார். மேலும் அந்த அதிகாரி பிரிட்டிஷ் கவுன்சில் நிதி உதவித் திட்டத்தின்கீழ் இங்கிலாந்திலுள்ள ரீடிங் பல்கலைக் கழகத்தில் ( University of Reading ) பயிற்சி பெற்றுள்ளார். இந்த, நான்கு நிலையங்களும் (1) அரசு அடிப்படைப் பயிற்சிப் பள்ளி (ஆண்கள்), கடலூர்; (2) அரசு அடிப்படை பயிற்சிப் பள்ளி (ஆண்கள்), தஞ்சாவூர்; (3) நகராட்சி உயர்நிலைப் பள்ளி, ஆர்.எஸ்.புரம், கோயம்புத்தூர்; (4) பிஷப் சார்ஜன்ட் அடிப்படை பயிற்சிப் பள்ளி, பாளையங்கோட்டை, ஆகிய இடங்களில் அமைந்துள்ளன.

இந்த நான்கு நிலையங்களில் பயிற்சி பெற்ற ஆசிரியர்களின் எண்ணிக்கை 1967–68-ல் 764, 1968–69-ல் 1,383, 1969–70-ல் 1,319, 1970–71-ல் 1,511 ஆக மொத்தம் 4,977 ஆகும்.

இந்த நிலையங்களில் அளிக்கப்படும் பயிற்சியைத் தொடர்ந்து செய்ய வேண்டிய வேலைகளைச் செவ்வனே செய்வதற்காகக் கீழ்க்கண்ட நடவடிக்கைகளையும் அரசு எடுத்துள்ளது :—

தென் இந்திய வட்டார ஆங்கிலக் கல்வி நிறுவனத்தில் துணை ஆய்வாளர்களுக்கு மறு பயிற்சி அளித்தல்.

தொடக்க அளவில் கல்வித் தரத்தை உயர்த்துவதில் துணை ஆய்வாளர்கள் முக்கிய பங்கு வகிப்பதால், படிப்படியான திட்டத்தின்கீழ் மூன்று வாரங்களுக்குத் தென் இந்திய வட்டார ஆங்கிலக் கல்வி நிறுவனத்தில் பயிற்சி அளிக்க, துணை ஆய்வாளர்கள் மறுபயிற்சித் திட்டம் ஒன்றிற்கு அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. சுமார் 142 துணை ஆய்வாளர்கள் ஏற்கெனவே மேற்கூறிய பயிற்சி பெற்றுள்ளனர். மீதியுள்ள துணை ஆய்வாளர்களுக்கும் அடுத்துவரும் ஆண்டுகளில் பயிற்சி அளிக்கப்படும். மேற்கூறிய திட்டத்தை நிறைவேற்ற மூன்று அல்லது நான்கு ஆண்டுகள் ஆகும் என்று உணரப்பட்டதால், எல்லாத் துணை ஆய்வாளர்களுக்கும் 1970–71-ல் ஆங்கிலக் கல்வியைப் புதிய முறையில் கற்பிப்பதில் பயிற்சி அளிப்பதற்காக மூன்று நாள் மறுபயிற்சித் திட்டத்தைக் கல்வித்துறை வகுத்தது. மாநிலக் கல்வி நிறுவனம், வட்டார ஆங்கிலக் கல்வி நிறுவன பணியாளர்கள், இயக்கப் பணியாளர்கள் ஆகியோருடைய உதவியுடன் அத்தகைய 10 கருத்தரங்குகளை நடத்தியது. தென்னிந்திய வட்டார ஆங்கிலக் கல்வி நிறுவனத்தில் பயிற்சி பெறுத துணை ஆய்வாளர்களும், இளநிலைத் துணை ஆய்வாளர்களும் மேற்கூறிய விரைவுத் திட்டத்தின் கீழ் பயிற்சி அளிக்கப்பட்டனர்.

கையேடுகள் வெளியிடுதல்.

பல வகுப்புகளுக்கு ஆங்கிலத்தில் ஆசிரியர் கையேடுகள் அச்சடிக்கப்பட்டு, அடக்க விலையில் பள்ளிகளுக்கு வழங்கப்படுகின்றன.



பயிற்சிப்பள்ளிகளில் பணி.

புதிய முறையில் ஆங்கிலம் கற்பிப்பதற்கு பயிற்சி பள்ளிகளின் புதிய தொகுதி மாணவர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்காக, 5 திங்கள் கால அளவு தென் இந்திய வட்டார ஆங்கிலக் கல்வி நிறுவனத்தில் பயிற்சி பெறுவதற்காக பயிற்சிப் பள்ளிகளின் பட்டதாரி ஆசிரியர்களை முகமையில் அனுப்ப அரசு ஒப்பளிப்பு வழங்கியது. மேற்கூறிய பயிற்சியில் இதுவரை பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் 176 பேர் ஆவர். வருங்காலத்தில் மேலும் பலர் இவ்வாறு பயிற்சி பெறுவர்.

சமாதானத்தொண்டர் படையின் பங்கு.

பயிற்சிப் பள்ளிகளில் ஆங்கிலம் கற்பிப்பதற்காக அமெரிக்க சமாதானத் தொண்டர் படையினரின் பணியும் பயன்படுத்தப்பட்டுள்ளது. தொண்டர் படையில் அடுத்தடுத்துப் பல தொகுதியினர் தேர்ந்தெடுக்கப்பட்ட அடிப்படைப் பயிற்சிப் பள்ளிகளில், அடிப்படைப் பயிற்சி பள்ளி ஆசிரியர்களுக்கு ஆங்கிலம் கற்பிக்கும் முறைகளைக் கற்றுத் தரும் பணி புரிந்து வருகின்றனர். 1968-ம் ஆண்டிலிருந்து தொடக்கப் பள்ளி ஆசிரியர்களிடையே வளர்ச்சிப் பணியையும் இவர்கள் செய்துவந்துள்ளனர். இம் மாநிலத்தில் தற்போது தேர்ந்தெடுக்கப்பட்ட பயிற்சிப் பள்ளிகளில் 25 தொண்டர்கள் பணிபுரிகின்றனர்.

உயர்நிலைப்பள்ளி அளவில் பயிற்சி.

உயர்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கும், அரசிதழ்ப் பதிவு பெற்ற ஆய்வு அதிகாரிகளுக்கும் கூட மறுபயிற்சிக் கருத்தரங்குகள் நடத்தப்பட்டுள்ளன. இதுவரை 28 கருத்தரங்குகள் நடத்தப்பட்டுள்ளன. ஏறக்குறைய 1,300 தலைமை ஆசிரியர்களும், அரசிதழ்ப் பதிவுபெற்ற ஆய்வு அதிகாரிகளும் இக்கருத்தரங்குகளுக்கு வந்திருந்தனர்.

வருங்காலத்திற்கான திட்டங்கள்.

3 முதல் 5 வகுப்புகளில் ஆங்கிலம் கற்பிக்கும் ஆசிரியர்கள் கல்வித் துறைக் கையேடுகளை செவ்விய வகையில் பயன்படுத்தச் செய்வதை முக்கிய மாகக்கொண்டு, 1971–72-ம் ஆண்டில் 15 கருத்தரங்குகள்-பயிற்சி வகுப்புகள் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. 1971–72-ம் ஆண்டில் பிற திட்டங்களும் தொடர்ந்து நிறைவேற்றப்படும்.

(iv) எம்.எட். பயிற்சிக்காக பள்ளி ஆசிரியர்களை முகமையில் அனுப்புதல்.

பயிற்சி பள்ளிகளில் கற்பிக்கும் தரத்தை உயர்த்தும் நோக்கத் துடனும், அரசுப் பணியிலுள்ள பள்ளி ஆசிரியர்கள், துணை ஆய்வாளர்கள் ஆகியோர் தங்கள் கல்வித் தகுதிகளை உயர்த்திக்கொள்வதற்கு வாய்ப்பளிக்கும் நோக்கத்துடனும், 1970–71-ம் ஆண்டில் எம். எட். பயிற்சி பெறுவதற்காக 10 பள்ளி ஆசிரியர்களை பள்ளித் துணை ஆய்வாளர்களை அரசு தன் செலவில் முகமையில் அனுப்பியுள்ளது. இத்திட்டம் 1971–72-ஆம் ஆண்டிலும் தொடர்ந்து நடத்தப்படும்.

(v) தொடக்கநிலை பயிற்சியை நீக்குதல்.

ஐந்து சிறுர் பள்ளிகள் ஆங்கில இந்திய பயிற்சிப் பள்ளி ஒன்றைத் தவிர இம் மாநிலத்தில் 133 பயிற்சிப் பள்ளிகள் உள்ளன: இவைகளுள் 75 அரசுப் பயிற்சிப் பள்ளிகளாகும். 58 மானியம் பெறும் பயிற்சிப் பள்ளிகளாகும்.

எட்டாம் வகுப்பு முடித்தவர்களுக்காகக் கொண்டுவரப்பட்ட தொடக்க நிலை/இளை நிலை ஆதார ஆசிரியர் பயிற்சி முறைகள் நீக்கப்பட்டுள்ளன. 1969–70-லிருந்து அவ்வகுப்புகளில் எவரும் சேர்த்துக் கொள்ளப்படுவதில்லை. பயிற்சியும், தகுதியும் பெற்ற ஆசிரியர்களிடையே, வேலை

வாய்ப்பின்மை நிலவுவதன் காரணமாக, பயிற்சிப் பள்ளிகளில் சேர்த்துக் கொள்ளப்படுபவர்களின் எண்ணிக்கை குறைக்கப்பட்டுள்ளது. 1970–71-ம் ஆண்டில் 200 பிரிவுகளே செயல்பட ஒப்பளிக்கப்பட்டுள்ளன. 1971–72-ல் இது 160 பிரிவுகளாகக் குறைக்கப்படும்.

### 3. உடல் ஊனமுற்றோர், கண்பார்வையற்றோர், குறைபாடுற்றோர் ஆகியோர்களுக்கான பள்ளிகள்.

இம் மாநிலத்தில், உடல் ஊனமுற்ற குழந்தைகளுக்காக 24 பள்ளிகள் உள்ளன. கண்பார்வையற்றவர்களுக்காக 8-ம், காதுகேளாதோர்களுக்காக 9-ம், கண்பார்வையற்ற-காது கேட்காத சிறுவர்களுக்காக 2 பள்ளிகளும், இளம் பிள்ளைவாதமுள்ள சிறுவர்களுக்காக ஒரு பள்ளியும் தொழு நோயால் பீடிக்கப்பட்ட குழந்தைகளுக்காக 4 பள்ளிகளும் உள்ளன.

1969–70-ல் கண்பார்வை அற்றவர்களுக்கெனச் சிவகங்கையில் ஒரு பள்ளி தொடங்கப்பட்டது. 1970–71-ல் கண்பார்வை அற்றவர்களுக்கான ஆசிரியர் பயிற்சி வகுப்புகள் பூவிருந்தவல்லியில் உள்ள வட்டாரப் பயிற்சி நிலையத்தில் நடத்தப்பட்டன.

கண்பார்வையற்றவர்களுக்கு தொழில் பிரிவுகளில், வேலை வாய்ப்பு அளிக்கும் பொருட்டு, அவர்களுக்குப் பயிற்சியளிக்கும் சாத்தியக் கூற்றினை ஆய்வு செய்வதற்காக, இண்டி தொழிற்பேட்டையில் சிறு ரக பொறியியல் தொழிற்சாலையொன்று (Light Engineering Project) அமைக்கப்பட்டுள்ளது. இதுவரை கண்பார்வையற்ற 103 பேர் பயிற்சி பெற்றுள்ளனர்.

நான்கு தென் மாநிலங்களின் தேவைகளை நிறைவு செய்யும் பொருட்டு, கண் பார்வையற்றோர் எழுத்துமுறை வட்டார அச்சகம் ஒன்று பூவிருந்தவல்லியில் அமைக்கப்பட்டுள்ளது. இந்த அச்சகம், கண் பார்வையற்றோருக்கான பாட புத்தகங்களை அச்சடிக்கும் பணியை மேற்கொண்டு தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் முதலிய வட்டார மொழிகளில் வெளியிடுகின்றது. இதற்காகும் செலவை இந்திய அரசும், நான்கு தென் மாநிலங்களும் சரிசமமாகப் பகிர்ந்துகொள்கின்றன.

கண்பார்வையற்ற மாணவர்களுக்குப் பாடம் கற்பிப்பதற்கான ஆசிரியர்களுக்குப் பயிற்சியளிப்பதற்காக, நான்கு தென் மாநிலங்களுக்கு உதவி செய்யும் பொருட்டு இந்திய அரசு, தமிழ் நாட்டில் 4-வது வட்டாரப் பயிற்சி நிலையமொன்றை நிறுவ ஒப்பளித்துள்ளது. 1969–70-ல் 7 ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது. தற்போது 7 ஆசிரியர்கள் பயிற்சி பெற்று வருகின்றனர்.

### 4. புகுமுகத்தொழில்பயிற்சி நிலையங்கள்.

தொடக்க நிலைக்குமேல் தொடர்ந்து படிக்காத 11—14 வயதுள்ள சிறுவர்களுக்கு, இந்நிலையங்களில் கல்வி-தொழில் பற்றிய பயிற்சி ஒருங்கிணைந்த முறையில் அளிக்கப்படுகின்றது. இது மத்திய அரசின் ஆதரவு பெற்ற திட்டமாகும். இம்மாநிலத்தில், மேலே குறிப்பிட்டுள்ள இடங்களில் 6 நிலையங்கள் உள்ளன. அவை பலதிறப்பட்ட பாட முறைகளைக் கற்பிக்கின்றன.

1. ஆதாரப் பள்ளிக்கு மேம்பட்ட பள்ளி (Post Basic School), T. கல்லுப்பட்டி.

2. அரசினர் (கழக) உயர்நிலைப் பள்ளி, பூவிருந்தவல்லி.

3. K. V. உயர்நிலைப் பள்ளி, திருநகர்.



4. நகராட்சி உயர்நிலைப் பள்ளி, கோயம்புத்தூர், வட பகுதி.

5. டாக்டர் அழகப்பா மாதிரி உயர்நிலைப் பள்ளி, காரைக்குடி.

6. அரசினர் (கழக) உயர்நிலைப் பள்ளி, பட்டுக்கோட்டை (1970–71-ல் தொடங்கப்பட்டது).

ஒவ்வோரு நிலையத்திலும், ஆண்டொன்றுக்கு பயிற்சிக்காக 45 பேர் சேர்த்துக்கொள்ளப்படுகின்றனர். பயிற்சிக் கால அளவு மூன்றாண்டுகளாகும். 1968–69-ல் 264 பேர்களும், 1969–70-ல் 210 பேர்களும், 1970–71-ல் 270 பேர்களும் பயிற்சிக்காகச் சேர்த்துக் கொள்ளப்பட்டனர்.

### 5. முதியோர் கல்வி நிலையங்கள்.

1961-ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி தமிழ்நாட்டில் எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள் 31·4 சதவீதம் ஆகும். 1971-ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்புப்படி இது 39·39 சதவீதமாகும். (1971-ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்புப்படி எழுதப் படிக்கத் தெரிந்தவர்களில் ஆண்கள் 51·68 சதவீதமென்றும், பெண்கள் 26·83 சதவீதமென்றும் தெரியவருகின்றது.) எழுத்தறிவின்மையைப் போக்குவதற்காக, பல ஆண்டுகளுக்கு முன்னரே, கிராமப்புறங்களில் முதியோர்களுக்கென்று தனியாகப் பள்ளிகள் தொடங்கப்பட்டன. தற்போது, இத்தகைய முதியோர் கல்வி சாதாரண நிலையங்கள் 257 உள்ளன.

முதியோர் கல்விச் சிறப்புத் திட்டத்தின் கீழ், 1969–70-ல் 499 முதியோர் கல்வி நிலையங்களில் 10,000 பேர் சேர்க்கப்பட்டனர். ஒவ்வொரு நிலையத்திலும் வகுப்புகள் 4 மாதங்கள் நடத்தப்பட்டன. கிராமப் புறங்களில், மேலே குறிப்பிடப்பட்டுள்ள குடியானவர் கல்வி மற்றும் தொழில் எழுத்தறிவுத் திட்டம் செயலுக்குக் கொண்டுவரப்பட்டதன் காரணமாக, அச் சிறப்புத் திட்டம் 1969–70-க்குப் பிறகு கைவிடப்பட்டது.

இந்திய அரசு, "யுனெஸ்கோ", "உணவு வேளாண்மை நிறுவனம்" ஆகியவற்றின் உதவியுடன், 1969–70-ல், கோயம்புத்தூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டத்தில் குடியானவர் கல்வி மற்றும் தொழில் எழுத்தறிவுத் திட்டம் செயலுக்குக் கொண்டுவரப்பட்டது. அப் பகுதியில் மிகுபயன் தரும் பயிர் விளைச்சல் திட்டத்தில் பங்குபெறும் குடியானவர்களுக்கு, 60 நிலையங்களில் திட்டத்தின் செயல் முறைகள் கற்பிக்கப்பட்டு வந்தன. இத்தகைய பயிற்சி முறை இதே பகுதியில் 1969 நவம்பர் திங்களில் மீண்டும் நடத்தப்பட்டது. கோயம்புத்தூர் மாவட்டம், பொள்ளாச்சி வட்டத்தில் உள்ள 60 நிலையங்களுக்காக மூன்றாவது பிரிவு வகுப்புகள் 12 மாத கால அளவுக்கு நடத்துவதற்கு ஒப்புதலளிக்கப்பட்டுள்ளது. இத் திட்டம் தஞ்சாவூர், வட ஆற்காடு, திருநெல்வேலி மாவட்டங்களுக்கும் நீட்டிக்கப்பட்டுள்ளது. இந்த மாவட்டங்கள் ஒவ்வொன்றிலும் 60 கல்வி நிலையங்கள் உள்ளன.

### 6. குழந்தைகள் இல்லம் (அனுதை இல்லம்.)

அனுதை இல்லங்களாக இயங்கி, அங்கு தங்கியிருப்பவர்களுக்கு கல்வி கற்பிப்பதற்கு போதிய வசதிகள் செய்துதரும் நிறுவனங்களுக்கு, மாநில நிதிகளிலிருந்து உதவியளிக்கப்படுகின்றது. அந்த அனுதை இல்லத்தில் உள்ளவர்களில் 50 சத வீதத்தினர் இம்மாநிலத்தைச் சேர்ந்த ஆதரவற்றோர் எனச் சான்றளிக்கப்பட்டிருப்பவர்களாகவும், ஏற்பு பெற்ற பள்ளிகளில் படிப்பவர்களாகவும் இருக்க வேண்டும் என்பதே இந்த உதவி பெறுவதற்குள்ள நிபந்தனையாகும். அனுதை இல்லங்களில் தங்கியிருப்பவர்களில் 5—20 வயது வரை உள்ள ஒவ்வொருவருக்கும் மாதத்திற்கு ரூ. 12-க்கு மிகாத தொகை, குன்றுப் பகுதிகளில் உள்ள அனுதை இல்லங்களில் ஒவ்வொருவருக்கும் ரூ. 15-க்கு மிகாத தொகை, அல்லது அனுதை இல்லங்களுக்காகும் மொத்தச் செலவில் முக்கால் பங்கு, இவற்றில் எது குறைவாக உள்ளதோ அத்தொகை என்ற மேல் வரம்புக்குட்பட்டு மானியம் வழங்கப்படும்.

வாழ்க்கைச் செலவு அதிகரித்ததன் காரணமாக, 1969 அக்டோபர் திங்கள் 1-ம் தேதியிலிருந்து அனுதை இல்லங்களுக்கு வழங்கப்படும் உணவு மானியத்தொகை நபர் ஒருவருக்குத் திங்கள் ஒன்றுக்கு ரூ. 10-லிருந்து ரூ. 12 ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது.

## ஐ. நூலகங்கள்.

தமிழ் நாடு 1948 ஆம் ஆண்டு பொது நூலகச் சட்டத்தின் விதித் துறைகள், அதன்கீழ்ச் செய்யப்பட்டுள்ள விதிகள் ஆகியவற்றின்படி நிறுவப்பட்ட மாவட்ட நூலக அதிகார மன்றங்கள், மாவட்டத் தலைமை யிடங்களில், மாவட்ட மத்திய நூலகம் ஒன்றும், 5,000-க்கு மேல் மக்கள் தொகை உள்ள ஒவ்வொரு நகரம் அல்லது பகுதியில் கிளை நூலகம் ஒன்றும், 1,000 முதல் 5,000 வரை மக்கள் தொகையுள்ள ஒவ்வொரு கிராமம் அல்லது பகுதியிலும் அல்லது அடுத்துள்ள மூன்று கிராமங்கள் சேர்ந்த தொகுதிக்கு அதாவது 1,000-க்குக் குறைவாக மக்கள் தொகை உள்ள பகுதிகளிலும் புத்தகம் வழங்கும் நிலையம் ஒன்றும் தொடங்கு வதன் மூலம், பொது மக்களுக்கு இலவச நூலக வசதிகளை அளிக் கின்றன.

மாவட்ட மத்திய நூலகங்கள் 12, கிளை நூலகங்கள் 1,430, புத்தகம் வழங்கும் நிலையங்கள் 2,149 ஆகியவற்றுடன் 12 மாவட்ட நூலக அதிகார மன்றங்கள் தற்போது செயல்பட்டு வருகின்றன. 1,430 கிளை நூலகங்களில், 589 நூலகங்கள், II, III, IV, ஐந்தாண்டுத் திட்டங்களின் கீழ்த் தொடங்கப்பட்டுள்ளன. 841 நூலகங்கள் நூலக வரி நிதியிலிருந்து ஏற்படுத்தப்பட்டுள்ளன.

கிளை நூலகங்களையும், புத்தகம் வழங்கும் நிலையங்களையும் தொடங்குவ தோடுகூட, மாவட்டங்களில் நூலக பணியை விரிவுபடுத்துவதற்காகக் கீழே குறிப்பிடப்பட்டுள்ள சில சிறபபுத் திட்டங்களையும் மாவட்ட நூலக அதிகார மன்றங்கள் கொண்டுவந்துள்ளன :—

1. இயல் நூலகப் பணி.
2. வீட்டிற்குப் புத்தகங்கள் வழங்குதல்.
3. குழந்தைகளுக்கும், மகளிர்க்கும் நூலகப் பணி.
4. சீருலாப் பயணிகளுக்கு நூலகப் பணி.
5. சிறைச்சாலைகளிலுள்ள கைதிகளுக்கு நூலகப் பணி.
6. காவல்துறை அதிகாரிகளுக்கு நூலகப் பணி.
7. மருத்துவ மனைகளில் நூலகப் பணி.

நூலக நிதியின் பெரும்பகுதி, வீட்டுவரி அல்லது சொத்துவரி ஆகியவற்றின்மீது ரூபாய்க்கு மூன்று காசு வீதம் விதிக்கப்படும் மேல் வட்டணத்தின் மூலம் வசூலிக்கப்படுகின்றது. புத்தகங்களைக் குறித்த காலத்தில் திருப்பித்தரத் தவறியவர்களிடமிருந்தும், புத்தகங்களைத் தொலைத்து விட்டவர்களிடமிருந்தும் வசூலிக்கப்படும் அபராதத் தொகையும், பழைய செய்தித்தாள்களையும், எனைய பழைய ஏடுகளையும் விற்றுவரும் தொகையும் இந்நிதியில் சேர்க்கப்படுகின்றன. வசூலிக்கப் பட வரித் தொகைக்கு நிகரான தொகையுள்ள மானியம் ஒன்றை சென்னையில் உள்ள மாவட்ட நூலக அதிகார மன்றம் தவிர்த்து எனைய மாவட்ட நூலக அதிகார மன்றங்களுக்கு அரசு வழங்குகிறது. இதைத் தவிர, திட்டத்தின்கீழ்த் தொடங்கப்பட்ட நூலகங்களுக்கு ஏற்படும் தொடர் செலவுகளுக்கு (நூலகர், எவலாள் ஆகியோர்க்கு ஊதியம், நூலக வாடகை, அஞ்சல் செலவு) அரசு மானியம் வழங்குகின்றது. இந்த நூலகங்கள் புத்தகங்கள் வாங்குவதற்காக அதிக நிதியைச் செலவிட வசதி செய்வது பற்றி அரசு ஆலோசித்து வருகின்றது.



மாவட்ட நூலக அதிகார மன்றங்களால் தொடங்கப்பட்ட நூலகங்களைத் தவிர, ஊராட்சிகள், கிராம சங்கங்கள், தனியார் சங்கங்கள், கூட்டுறவுச் சங்கங்கள், நகராட்சிகள் போன்ற பல்வேறு நிர்வாகங்களின்கீழ்ச் செயல் படும் நூலகங்களும் உள்ளன. நகராட்சி நிர்வாகத்தின் கீழுள்ள நூலகங்களைத் தவிர, எனைய நிர்வாகங்களின் கீழுள்ள நூலகங்களுக்கு, ஒவ்வோராண்டும், மாநில நிதியிலிருந்து மானியம் வழங்கப்படுகின்றது.

### குழந்தை இலக்கிய நூல்களை வெளியிடுதல்.

தமிழ் மொழியில், குழந்தைகளுக்கான நூல்களில் சிறந்த நூலுக்குப் பரிசு வழங்கும் திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படுகின்றது. இத் திட்டத்தின்கீழ் ஒவ்வோராண்டும் ரூ. 500-க்கு மிகாமல் 10 பரிசுகள் வழங்கப்படுகின்றன. இதைத்தவிர, "குழந்தைகள் இலக்கியப் போட்டிகள்" நடத்துவதற்கான திட்டம் ஒன்றை இந்திய அரசு தொடங்கியுள்ளது. தமிழ் மொழியில் சிறந்த நூலுக்கு ரூ. 1,000 ரொக்கப் பரிசு வழங்கப் படுகின்றது.

## ஒ. அரசுத்தேர்வுகள்.

அரசினர் தேர்வுகளுக்கான ஆணையாளரின் செயல் நடவடிக்கைகள்.—

அரசுத் தேர்வுகள் நடத்துவதும், முடிவுகளை வெளியிடுவதும், சான்றிதழ் களை அனுப்பிவைப்பதும் இத் துறையின் முக்கிய செயல் நடவடிக்கை களாகும். ஒவ்வோராண்டும், அரசுத் தேர்வுகள் 22 நடத்தப்படுகின்றன. அவற்றில் சில தேர்வுகள் ஆண்டிற்கு ஒருமுறையும், வேறு சில தேர்வு கள் ஆண்டிற்கு இரு முறையும் நடத்தப்படுகின்றன. இவைகளில், ஒவ்வோராண்டும் மார்ச் திங்களில் நடைபெறும் பள்ளி இறுதி பொதுத் தேர்வில் மட்டும் சுமார் 1,000-க்கும் மேலான தேர்வு நிலையங்களில் 2 லட்சம் மாணவர்கள் கலந்துகொள்கின்றனர்.

ஆசிரியர் பயிற்சிப் பள்ளித் தேர்வுகளிலும், அரசினர் தொழில் நுட்பத் தேர்வுகளிலும் ஆயிரக்கணக்கான மாணவர்கள் கலந்து கொள்கின்றனர்.

1970 எப்ரலில் நடந்த பள்ளி இறுதிப் பொதுத் தேர்வில் கலந்து கொண்ட மாணவர்கள் எண்ணிக்கை 1,91,853 ; தேறியவர்கள் எண்ணிக்கை 1,03,974. 1971 எப்ரலில் பள்ளி இறுதிப் பொதுத் தேர்வில் கலந்து கொண்டோர் எண்ணிக்கை 1,93,059 ; தேறியோர் எண்ணிக்கை 1,11,823 ; 1969–70-ல் 56 ஆகவிருந்த தேறியோர் சத வீதம் 1970–71-ல் 59·2 ஆக உயர்ந்தது.

அத்தியாயம் III.

கல்லூரிக் கல்வி.

## 1971–72 வரவு-செலவுத் திட்டம் (நிதி ஒதுக்கீடு.)

கல்விக்கென 1971–72-ம் ஆண்டில் " 28. கல்வி " என்னும் கணக்கில் மொத்தமாகச் செலவிடப்படும் ரூ. 81·84 லட்சத்தில், கல்லூரிக் கல்விக்கென ரூ. 659 லட்சம் செலவு செய்யப்படும். இம் மாநிலத்தில் கல்விக்கான மொத்தச் செலவில் ஏறத்தாழ பாதித் தொகை தொடக்கக் கல்விக்கும், சுமார் மூன்றில் ஒரு பகுதி இடைநிலைக் கல்விக்கும் செலவிடப்படுகையில் (தொழிற் கல்வி நீங்கலாக) கல்லூரிக் கல்விக்கு ஒதுக்கப் பட்டுள்ள தொகை கல்விக்கான மொத்தச் செலவில் 8 விழுக்காடு ஆகும். " 28. கல்வி " என்ற கணக்கில் அல்லாது பிற கணக்குகளின்கீழ் கல்வி நிலையக் கட்டடங்கள் போன்ற இனங்களுக்காகச் செலவிடப்படும் தொகைகளையும் சேர்த்துக்கொண்டால் கல்லூரிக் கல்விக்கான செலவு சுமார் 10 விழுக்காடு ஆகும்.

1971–72 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் கல்லூரிக் கல்விக்கென ஒதுக்கப்பட்டுள்ள தொகையின் விவரங்களைக் கீழே காணலாம் :—

| | 1970–71, திருத்த மதிப்பீடு. | 1971–72, திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு. |
|---|---|---|
| | (ரூபாய் லட்சத்தில்.) | |
| 28. கல்வி .. .. .. .. .. | 558·95 | 658·85 |
| 50. பொதுப் பணிகள்—(தொழிற் கல்வி நீங்கிய பொதுக் கல்வி). | 0·74 | 0·91 |
| 52. பொதுப் பணிகளின் மேலான மூலதன முதலீடு. | 2·46 | 2·15 |
| 103. மூலதன முதலீடு .. .. .. | 126·38 | 174·86 |
| 47. மாநில அரசுக் கடன் .. .. .. | 47·78 | 53·50 |
| 39. பலவகை .. .. .. .. | 0·07 | 0·07 |
| மொத்தம் .. | 736·38 | 890·34 |

கல்லூரிக் கல்வி இயக்குநர் அலுவலகத்தில் பல்வேறு கல்வித் திட்டங்களுக்காக இத் தொகை எங்ஙனம் செலவிடப்படுகிறது என்னும் முழு விவரங்களைக் கீழ்க்காணும் புள்ளிவிவரங்கள் காட்டும் :—

| | 1970–71, திருத்த மதிப்பீடு. | 1971–72, திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு. |
|---|---|---|
| | (ரூபாய் லட்சத்தில்.) | |
| 1. திரவாகமும், மேற்பார்வையும் .. .. | 4·79 | 5·40 |
| 2. பல்கலைக் கழகங்களுக்கு வழங்கப்படும் மானியங்கள். | 61·58 | 58·66 |
| 3. அரசுக் கல்லூரிகளைப் பேணுதல் .. .. | 299·32 | 397·42 |
| 4. அரசுத் தொழில் கல்லூரிகளைப் பேணுதல் | 35·20 | 34·29 |
| 5. தனியார் கலைக் கல்லூரிகளுக்கு வழங்கப் படும் மானியங்கள். | 247·00 | 302·78 |
| 6. தனியார் தொழில் கல்லூரிகளுக்கு வழங்கப்படும் மானியங்கள். | 8·78 | 9·82 |
| 7. படிப்புதவிச் சம்பளம் .. .. .. | 71·14 | 79·83 |
| 8. பலவகை .. .. .. .. .. | 8·57 | 2·14 |
| மொத்தம் | 736·38 | 890·34 |



### 2. திட்டக் குறிக்கோள் அளவுகள்.

1969–70 கல்வியாண்டு முடிவில், இம் மாநிலத்தில் மொத்தம் 141 கலை-அறிவியல் கல்லூரிகள் (39 அரசுக் கல்லூரிகள், 102 மானியம் பெறும் கல்லூரிகள்) இருந்தன. 1970–71-ஆம் ஆண்டில், திருவாரூர், செங்கற்பட்டு, திருத்தணி, திருநெல்வேலி ஆகிய இடங்களில் நான்கு புதிய அரசுக் கல்லூரிகள் தொடங்கப்பட்டன. இவற்றுடன், 1970–71-ல் தொடங்கப்பட்ட 15 தனியார் கல்லூரிகளுக்கு, அரசு நிதியிலிருந்து மானியம் கொடுக்கப்பட்டது. 1970–71 முடிவில் இம் மாநிலத்திலுள்ள கல்லூரிகளின் மொத்த எண்ணிக்கை (43 அரசுக் கல்லூரிகள், 118 மானியம் பெறும் கல்லூரிகள் சேர்ந்து) 161 ஆக உயர்ந்தது.

இந்நான்கு புதிய அரசுக் கல்லூரிகளைத் தவிர, அரசினர் கல்லூரிகளில் பட்டப் படிப்பையும், பட்ட மேற்படிப்பையும் விரிவுபடுத்துவதற்காகவும், 1970–71-ஆம் ஆண்டில் கூடுதலான தொகை ஒதுக்கப்பட்டது. இவ்வகையில் 1970–71-ல் ஒன்பது அரசுக் கல்லூரிகளில் பட்டப் படிப்பு வகுப்புகள் தொடங்கப்பட்டன. 2 அரசுக் கல்லூரிகளில் பட்ட மேற்படிப்புப் பாட முறைகள் தொடங்கப்பட்டன. பல்வேறு படிப்புத் துறைகளில் மேலும் பல பட்டப் படிப்பு வகுப்புகளையும், பட்ட மேற்படிப்பு வகுப்புகளையும் தொடங்குவதற்கு 1971–72-லும் தொகை ஒதுக்கப்பட்டுள்ளது. கல்லூரிகளில் பயிற்று மொழி குறித்து டாக்டர் எ. எல். முதலியார் குழுவின் பரிந்துரைகளை அரசு ஏற்றுக்கொண்டதன் விளைவாக, ஆங்கிலப் பயிற்று மொழியில் ஏற்படுத்தவிருக்கும் புதிய பிரிவுகளுக்குக் கூடுதலாக இப் புதிய வகுப்புகள் தொடங்கப்படும். இம் மாநிலத்திலே, கலைக் கல்லூரிகளிலும், அறிவியல் கல்லூரிகளிலும், 1969–70-ஆம் ஆண்டில் படித்து வந்த மாணவர்களின் எண்ணிக்கை 1·5 லட்சமாக இருந்தது, 1970–71-ஆம் ஆண்டில் 1·63 லட்சமாக உயர்ந்தது.

1971–72-ல் மூன்று புதிய அரசினர் கல்லூரிகள் திறக்கப்பட்டுள்ளன. மன்னார்குடி, உடுமலைப்பேட்டை, ஆகிய இடங்களில் ஆண்கள் கல்லூரிகளும், திருப்பூரில் பெண்கள் கல்லூரியும் திறக்கப்பட்டுள்ளன. தனியார் நிர்வாகத்தின்கீழ் துவக்கப்படவிருக்கும் 9 புதிய கல்லூரிகளுக்கு அரசு மானிய உதவி அளிக்கவும் வரவு-செலவுத் திட்டத்தில் வகைசெய்யப் பட்டுள்ளது.

இம் மாநிலத்தில் கல்லூரிக் கல்வியை விரிவு படுத்தும் பணியின் ஒரு பகுதியாக, அரசுக் கல்லூரிகளுக்காக மாணவர் விடுதிகள், நிலையான கூடுதல் கட்டிடங்கள், ஆகியவை கட்டுவதற்காக வரவு-செலவுத் திட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளது. மாணவர் விடுதிகளுக்காக நிலையான கட்டிடங்கள் கட்ட வரவு-செலவுத் திட்டத்தில் ரூ. 22 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. கல்லூரிகளுக்காக புதியக் கட்டிடங்கள் அல்லது கூடுதலாக நிலையான கட்டிடங்கள் கட்ட ரூ. 50 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் அரசுக் கல்லூரிக் கட்டிடங்களுக்காக ரூ. 45 லட்சமும், தனியார் கல்லூரிகளின் கட்டிடங்கள் குறித்து உதவி மானியங்கள் வழங்க ரூ. 5 லட்சமும் செலவிடப்படும். மேற்சொன்ன நிதி ஒதுக்கங்கள் அனைத்தும் புதிய கட்டிட வேலைகளுக்காகவே செய்யப்பட்டுள்ளன. முந்திய ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட கட்டட வேலைகளை 1971–72-ல் தொடர்ந்து செய்யத் தனியாக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மொத்தம் 1971–72-ல் அரசுக் கல்லூரிகளின் கட்டட வேலைகளுக்காக ஒதுக்கப் பட்டுள்ள தொகை சுமார் 178 லட்சமாகும்.

இந்தக் கலை-அறிவியல் கல்லூரிகளைத் தவிர, கீழ்த்திசைக் கல்லூரிகள், ஆசிரியர்பயிற்சிக் கல்விக் கல்லூரிகள், கிராமக் கல்வி நிலையங்கள் உட்பட, இம் மாநிலத்தில் உயர் கல்விக்காக 26 சிறப்பு நிலையங்கள் உள்ளன. 1970–71-ஆம் ஆண்டின் இந்த நிலையங்களின் எண்ணிக்கை அதிகப்படவில்லை. 1971–72-ஆம் ஆண்டில் இவ்வகை நிலையங்களைப் புதிதாகத் தொடங்கும் திட்டம் எதுவுமில்லை.

1970–71-ஆம் ஆண்டில் இம் மாநிலத்தில் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளின் எண்ணிக்கையில் மாற்றமேதுமில்லை. தற்போது செயல்பட்டு வரும் 23 பயிற்சிக் கல்லூரிகளும் (அரசுக் கல்லூரிகள் 7; மானியம் பெறும் கல்லூரிகள் 16) தொடர்ந்து செயல்பட்டு வருகின்றன. இந்த நிலையங்களில் 1969–70-ல் 2,792 பேரும், 1970–71-ல் 2,882 பேரும் பயிற்சி பெற்றனர்.

மலையில் உள்ளவர்கள் தங்கள் மலையில் ஏற்றம் பெறுவதற்காகக் கல்லூரிக் கல்வி பயில விரும்பினால், அவர்களின் வசதிக்காக 1965–66-ஆம் ஆண்டில் பல்வேறு கல்லூரிகளில் (அரசுக் கல்லூரிகளிலும் மானியம் பெறும் கல்லூரிகளிலும்) கலை, அறிவியல் பாடமுறைகளில் மாலைக் கல்லூரிகள் தொடங்கப்பட்டன. மாலைக் கல்லூரிகளில் வகை செய்யப்பட்டுள்ள பாடமுறைகளில் மேலும் சேர்ந்ததால், ஆண்டுதோறும் அவற்றில் பல புதிய பாடமுறைகள் தொடங்கப்பட்டன. 1970–71-ஆம் ஆண்டில் மேலும் 7 கல்லூரிகளில் 10 மாலை நேர வகுப்புகள் தொடங்கப்பட்டன. இதனால் 1969–70-ஆம் ஆண்டில் 13 ஆக இருந்த மாலைக் கல்லூரிகளின் எண்ணிக்கை 1970–71-ல் 20 (அரசுக் கல்லூரிகள் 15, மானியம் பெறும் கல்லூரிகள் 5) ஆக உயர்ந்தது. 1970–71-ஆம் ஆண்டில் இந்த 20 கல்லூரிகளிலும் சேர்க்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை 6,240 ஆக உயர்ந்தது. 1969–70-ல் இந்த எண்ணிக்கை 4,631 என்பதுதான் குறிப்பிடத்தக்கது.

1969–70 முதற்கொண்டு அரசினர் மாலை நேரக் கல்லூரிகளில் பட்டப் படிப்பு பாடமுறைக்காக வசூலிக்கப்படும் கல்விக் கட்டணம் முறையான பட்டப்படிப்பு பாடமுறைக் கட்டணத்திற்கேற்ப குறைக்கப்பட்டுள்ளது.

## இலவச புகுமுகக் கல்வித் திட்டம்.

1969–70 முதற்கொண்டு புகுமுக வகுப்புகளில் படிக்கும் மாணவர்களிடமிருந்து கல்விக் கட்டணம் எதுவும் வசூலிக்கப்படுவதில்லை. அவர்கள் பெற்றோர்களின் ஆண்டு வருவாய் எவ்வளவிருப்பினும், அவர்கள் எந்த வகுப்பைச் சேர்ந்தவர்களாயிருப்பினும், அதைக் கருத்தில் கொள்ளாமல், தமிழ்நாட்டைச் சேர்ந்த மாணவர்களுக்கும் தமிழ்நாட்டில் நிலையாகக் குடியேறிய மாணவர்களுக்கும் இச் சலுகை அளிக்கப்படுகிறது. இத்திட்டம் 1970–71-ஆம் ஆண்டில் தொடர்ந்து செயல்பட்டு வந்தது. 1971–72-ஆம் ஆண்டிலும் இது செயலில் இருக்கும்.

## பயிற்று மொழி.

புகுமுக வகுப்பில் (கலைப் பாட முறைகள்) 1966–67 ஆண்டு முதற் கொண்டும், பட்டப்படிப்பு பாடமுறையில் 1967–68 முதற்கொண்டும், புகுமுக வகுப்பு (அறிவியல் பாடமுறையில்) 1968–69 முதற்கொண்டும் மாற்றுப் பயிற்று மொழியாகத் தமிழ் கொண்டுவரப்பட்டது. கல்லூரிகளில் தமிழைப் பயிற்று மொழியாகக் கொண்டு கல்வி கற்பிப்பதற்கான வசதிகள் அரசு படிப்படியாக அதிகரித்து வந்துள்ளது.

1970–71-ல் பல்கலைக் கழக புகுமுக வகுப்புக்கள் கொண்ட 41 அரசினர் கல்லூரிகளுள், 28 கல்லூரிகள் ஆங்கிலம், தமிழ் ஆகிய இரு பயிற்று மொழிகளிலும் வகுப்புகள் நடத்தின. எஞ்சிய 13 கல்லூரிகள் தமிழை மட்டுமே பயிற்றுமொழியாகக் கொண்டு வகுப்புகள் நடத்தின. பி.எ. பட்ட வகுப்புகள் கொண்ட 35 அரசினர் கல்லூரிகளுள், 12 கல்லூரிகள் இரு பயிற்று மொழிகளிலும், தமிழை மட்டும் பயிற்று மொழியாகக் கொண்டு 22 கல்லூரிகளும், ஆங்கிலத்தைப் பயிற்றுமொழியாகக்கொண்டு ஒரு கல்லூரியும் வகுப்புகள் நடத்தின. பி.எஸ்.சி. பட்ட வகுப்புகள் கொண்ட 30 அரசினர் கல்லூரிகளுள், தமிழை மட்டும் பாடமொழியாகக் கொண்டு 22 கல்லூரிகளும், ஆங்கிலம், தமிழ் ஆகிய இரண்டையும் பயிற்றுமொழிகளாகக் கொண்டு 8 கல்லூரிகளும் பயிற்சி அளித்தன.





மாணவர் சமூகத்தினரிடையே ஒருசில பிரிவினருக்குப் பயிற்றுமொழிப் பிரச்சினைப் பற்றி சில ஐயப்பாடுகள் எழுந்ததால், இதிலுள்ள சிக்கல்களை ஆய்ந்து, தக்க ஏற்பாடுகளை மேற்கொள்வதற்கு, டாக்டர் ஏ. லட்சுமணசுவாமி முதலியார் தலைமையில் வல்லுநர் குழு ஒன்றை அமைப்பதென்று அரசு முடிவு செய்தது. இக் குழு, 1971 ஜனவரி 5-ம் நாளன்று ஓர் இடைக்கால அறிக்கையை அளித்துக் கீழ்க்காணும் பரிந்துரைகளைச் செய்தது :—

1. பயிற்று மொழியை தேர்ந்தெடுக்க மாணவர்களுக்கு வாய்ப்பு இருக்கவேண்டும் என்று இக் குழு கருதுகிறது.

2. தமிழை மட்டுமே பயிற்று மொழியாகக் கொண்ட அரசினர் கல்லூரிகளில், ஆங்கிலத்தின் மூலம் பயில விரும்பும் மாணவர்களுக்கு அரசு வசதிகள் செய்துகொடுக்க வேண்டும்.

3. தமிழ் பயிற்று மொழியாக இல்லாத தனியார் கல்லூரிகளில், தமிழ்ப் பயிற்று மொழித் தேவையிருப்பின் அதற்கான வசதிகள் செய்தைப் பற்றிய ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு நிர்வாகத்தினர் கேட்டுக் கொள்ளப்படலாம்.

டாக்டர் ஏ. எல். முதலியார் குழுவின் பரிந்துரைகளை அரசு ஏற்றுக் கொண்டது. இக் குழுவின் இறுதி அறிக்கை 1971 மே திங்களில் பெறப்பட்டது. இப்போது ஆங்கிலம் பயிற்று மொழியாக இல்லாத அரசினர் கல்லூரிகளில் அம்மொழி மூலம் கல்வியளிக்க வசதிகள் செய்யப்பட வேண்டியதன் அவசியத்தை அக் குழு மீண்டும் வலியுறுத்தியது. இக் குழுவின் அடிப்படைப் பரிந்துரைகளிணங்க, தமிழ் மொழி பயிற்று மொழியாகக் கொண்டு இப்போதுள்ள எல்லாப் பாடமுறைகளுக்கும் இணையாக ஆங்கிலப் பயிற்றுமொழிப் பிரிவுகள் தொடங்குவதென்று முடிவு செய்யப்பட்டுள்ளது. அரசுக் கல்லூரிகளில் முறையான வளர்ச்சித் திட்டத்தின் ஒரு பாகமாகப் பல்வேறு துறைகளில் தொடங்கவிருக்கிற புதிய வகுப்புகளுக்கு மேலாக, இத்தகைய கூடுதல் பிரிவுகளும் திறக்கப்படும்.

ஆங்கிலப் பயிற்று மொழிக்குரிய வசதிகள் செய்து கொடுப்பது குறித்த எ. எல். முதலியார் குழுவின் பரிந்துரைகளை அரசு ஏற்கின்ற அதே நேரத்தில், தமிழைப் பயிற்று மொழியாகக் கொண்டு கல்வி பயில விரும்பும் மாணவர்களுக்குக் கல்லூரிகளில் வசதிகளை அளிப்பது அரசின் கொள்கையாகத் தொடர்ந்து இருந்துவரும். பி.எ., பி.எஸ்.சி. பட்ட வகுப்புகளில் தமிழ்ப் பயிற்று மொழியைத் தேர்ந்தெடுக்கும் மாணவர்களைப் பொறுத்த மட்டில், அவர்கள் எந்த வகுப்பினராயினும் அல்லது என்ன வருமான முடையவராயினும், அனைவருக்கும் மூன்று ஆண்டு படிப்புக்கும் ஆண்டு தோறும் மாணவர் ஒவ்வொருவருக்கும் ரூ. 180 படிப்பு உதவிப் பணம் அளிக்கப்படும். உதவிப் பணம் அரசுக் கல்லூரி மாணவர்களுக்கு மட்டு மல்லாமல் எவ்வித தனியார் கல்லூரிகளில் தமிழைப் பயிற்று மொழியாகக் கொண்டு படிக்கும் மாணவர்களுக்கும் அளிக்கப்படும்.

1971–72-ஆம் ஆண்டு முதல், அரசினர் கல்லூரிகளிலும் தனியார் கல்லூரிகளிலும் தமிழ்ப் பயிற்று மொழியைத் தேர்ந்தெடுக்கும் புகுமுக வகுப்பு மாணவர்களுக்குத் தமிழ்ப் பாடநூல்கள் வாங்குவதற்காக, ஆண்டொன்றுக்கு ரூ. 50 புத்தகப்படி வழங்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. நமது மாநில மாணவர்கள் தங்கள் விருப்பப் பாடங்களில் மட்டுமன்றி, தமிழிலும் ஆங்கிலத்திலும் நல்ல தேர்ச்சி பெற்றவர்களாகச் செய்து அரசு அலுவலகங்களில் மட்டுமன்றித் தனியார் துறைகளிலும் வேலை வாய்ப்புகளைப் பெறுவதற்குத் தகுதிபெறச் செய்யவேண்டும், என்பதே அரசின் கொள்கையாகும்.

தமிழில் பாட நூல்களைப் பெருமளவில் வெளியிடுவதற்கான மும்முரத் திட்டம் ஒன்றை அரசு தற்போது மேற்கொண்டுள்ளது. இப்பாட நூல்கள் பல துறைகளுக்காகவும் அவற்றிற் காணும் பல்வேறு சிறப்புப் பிரிவு

களுக்காகவும் வெளியிடப்படும். ஏற்கனவே தமிழில் ஏறத்தாழ 250 நூல்கள் வெளிவந்துள்ளன. தமிழ் நாடு பாடநூல் நிறுவனம், கல்லூரிகளில் தமிழ் பயிற்று மொழி மூலம் கல்வி பயிலும் மாணவர்களின் பயனுக்கென ஏறத்தாழ 300 நூல்களை வெளியிடக் கருதியுள்ளது.

கல்லூரி அளவில் பி. எஸ்சி. படிப்புகளில் ஆசிரியர்கள் அறிவியல் பாடங்களை தமிழில் கற்பிப்பதற்கென சென்னைப் பல்கலைக் கழகத்தின் ஆதரவில், 1970-ல் சென்னையில் மறுபயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டன. இந்த மறுபயிற்சி வகுப்பில் 262 ஆசிரியர்கள் பங்கு பெற்றனர். வரும் கல்வியாண்டிலும் இத்தகைய மறுபயிற்சி வகுப்புகள் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

## கல்லூரி ஆசிரியர்களின் சம்பள வீதங்களும் பணி நிலைகளும்.

இரண்டாவது சம்பள ஆணைக்குழுவின் பரிந்துரைகளின்மேல் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ள அரசுக் கல்லூரி ஆசிரியர்களுக்கான திருத்தச் சம்பள வீதங்களை மானியம் பெறும் கல்லூரி ஆசிரியர்களுக்கும் வழங்கவேண்டுமென்று அரசு முடிவு செய்துள்ளது. இதனையடுத்து, இக் கல்வியாண்டு முதல் மானியம் பெறும் கல்லூரிகளுக்கு அளிக்கப்படும் ஆசிரிய மானியம் திருத்தச் சம்பள வீதங்களின் அடிப்படையில் கணக்கிடப்படும். அரசுக் கல்லூரி ஆசிரியர்களுக்குப் பொருந்துகின்ற, எனைய நலன்களான, திருத்த நகர ஈட்டுப்படியும், வீட்டு வாடகைப்படியும், மானியம் பெறும் கல்லூரிகளிலுள்ள ஆசிரியர்களுக்கும் பொருந்துமாறு செய்யப்பட்டுள்ளது.

## 6. எம். ஏ. (ஆங்கிலம்) மாணவர்களுக்கு உதவித் தொகை.

கல்லூரிகளில் ஆங்கிலக் கல்வித் தரத்தை உயர்த்த வேண்டுமென்றால், ஆங்கிலத்தில் முழுத் தகுதி பெற்று, ஆசிரியப் பணிக்குப் பொருத்தமான தகுதியுடைய ஆசிரியர்கள் போதிய அளவிற்குக் கிடைக்க வேண்டும். கல்லூரிகளின் எண்ணிக்கை பெருகிவருகின்றது; ஆங்கிலத் துறை உதவிப் பேராசிரியர் பதவிகளில் நியமிக்கப்படுவதற்கு முழுத் தகுதி பெற்றவர்கள் பொதுவாகத் தேவைப்படும் அளவில் கிடைப்பதில்லை; இவற்றைக் கருத்தில் கொண்டு, 1969–70-ஆம் ஆண்டில் ஒரு புதிய திட்டம் கொண்டுவரப்பட்டது. இத் திட்டத்தின்கீழ் ஆங்கில எம். ஏ. பட்டப் படிப்புப் பயிலும் மாணவர்களில் தகுதி பெற்றோர்க்கு உதவித் தொகை வழங்கப்படுகிறது; உதவித் தொகை பெறும் மாணவர்கள், பட்ட மேற்படிப்புப் பட்டம் பெற்றபின்னர், ஆங்கிலத் துறையில் உதவிப் பேராசிரியர் பதவிகளில், அல்லது அத் துறையில் வேறு பொருத்தமான பதவிகளில் நியமனம் செய்யப்படுவதற்கு வாய்ப்புப் பெறுவார்கள். இத் திட்டத்தின்கீழ், ஆங்கில எம்.ஏ. பட்டப் படிப்பு பயிலத் தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்கள் ஒவ்வொருவருக்கும், அவர் கல்விக் காலத்திற்கு, படிப்புச் சம்பளம், புத்தகச் செலவு முதலியவை தொடர்பான செலவுகளை ஈடு செய்வதற்காகத் திங்களொன்றுக்கு ரூ. 100 உதவித் தொகை அளிக்கப்படுகிறது. இத்தகைய உதவித் தொகை ஒவ்வோராண்டிலும், 40 பேருக்கு வழங்கப்பட்டு வருகின்றது. இத் திட்டம் 1971–72-ல் தொடர்ந்து செயல்படும்.

## படிப்பு உதவித் தொகைகள்.

திறமையுடைய மாணவர்கள் கல்லூரிக் கல்வியில் பயில்வதற்காக, இந்திய அரசின் மூன்று வகை படிப்பு உதவித் தொகைத் திட்டங்கள், தொடர்ந்து செயல்படுத்தப்படுகின்றன. அவையாவன : (1) படிப்பில் உயர் தேர்ச்சி பெற்ற மாணவர்களுக்கு வழங்கப்படும் தேசியப் படிப்பு உதவித் தொகைத் திட்டம், (2) தொடக்க, இடைநிலைப் புள்ளி ஆசிரியர்களின் பிள்ளைகளில் உயர் தேர்ச்சி பெற்ற மாணவர்களுக்கு வழங்கப்படும் தேசியப் படிப்புதவித் தொகை, (3) படிப்புதவித் தேசியக் கடன் தொகை.





1970–71-ஆம் ஆண்டில் மேற்கண்ட மூன்று திட்டங்களின் கீழ் முறையே 577 பேருக்கும், 49 பேருக்கும், 1,439 பேருக்கும் (மொத்தம் 2,065 பேர்) புதிதாகப் படிப்பு உதவித் தொகைகள் வழங்கப்பட்டன. இது தவிர, கடந்த ஆண்டில் படிப்பு உதவித் தொகை வழங்கப்பட்டவர்களில் 7,600 மாணவர்களுக்கு இந்த உதவித் தொகை 1970–71-ல் மீண்டும் புதுப்பிக்கப்பட்டது. எனவே, இம் மூன்று திட்டங்களில் ஒன்றிலோ பிறிதொன்றிலோ 9,665 மாணவர்கள் நிதி உதவி பெற்று வருகின்றனர்.

## ஆசிரியர்களின் கல்வித் தகுதிகளை உயர்த்துவதற்கான நடவடிக்கை.

கல்லூரிகளில் தற்போது நெறிமுறை ஆசிரியர் (Tutor), விளக்குநர் (Demonstrator) ஆகிய பதவிகளுக்குப் பட்டதாரிகள் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். கல்லூரிகளில் கல்வியின் தரத்தை உயர்த்தும் சிறப்பு முயற்சியாக, அத்தகைய நெறிமுறை ஆசிரியர், விளக்குநர் ஆகியோரின் கல்வித் தகுதியைப் பட்டப்படிப்பு நிலையிலிருந்து பட்டமேற்படிப்பு நிலைக்கு உயர்த்துவது என்று அரசு முடிவு செய்துள்ளது.

## பல்கலைக் கழகங்களுக்கு மானியங்கள்.

அஞ்சல் மூலம் கல்வி பயின்று பி.ஏ. பட்டம் பெறுவதற்கு வழி செய்யும் பாடமுறைகளை 1971–72 கல்வியாண்டு முதல் தமிழிலும், ஆங்கிலத்திலும் தொடங்கி நடத்திவர மதுரைப் பல்கலைக்கழகம் கருதியுள்ளது. இப்பயிற்சித் திட்டத்தில் சுமார் 1,000 மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவர். இப்பயிற்சித் திட்டத்துக்கான கட்டிடம் கட்டுவதற்கு மானியமாக ரூ. 1·50 லட்சம் கொடுக்க மாநில அரசு இசைந்துள்ளது. இத் திட்டத்தை நடத்துவதினால் பல்கலைக் கழகத்திற்கு ஏற்படும் நிகரப் பற்றுக் குறையை ஈடுசெய்வதற்கான மானியத்தையும் கொடுக்க இவ்வரசு இசைந்து உள்ளது. இவ்வாறு பற்றுக்குறையை ஈடு செய்வதற்காகக் கொடுக்கவிருக்கும் மானியம் நான்காண்டுகளுக்கு ரூ. 3·5 லட்சத்துக்கு மிகுதல் கூடாது என்னும் வரம்புக்கு உட்பட்டதாகும். இப்பாட முறைகளுக்கு ஆகும் செலவை ஈடு கட்டமைய அரசின் பல்கலைக் கழக மானிய ஆணைக் குழு கொடுக்கவிருக்கும் மானியங்களுக்கு மாநில அரசு தரும் இணை மானியமாக மேற்சொன்ன மானிய உதவிகள் கருதப்படும்.

புகுமுக வகுப்பு, பட்டப்படிப்பு இவற்றுக்குரிய பாடத் திட்டத்தை உயர்த்தும் நோக்கத்துடன், சென்னைப் பல்கலைக் கழகம் இவற்றிற்காக வரையறுக்கப்பட்டுள்ள பாடத் திட்டத்தின மாற்றியமைக்க நடவடிக்கை எடுத்துள்ளது. புதிய பாடத் திட்டங்களை அறிவியல் ஆசிரியர்களுக்கு அறிமுகப்படுத்த அவர்களுக்கு மறு பயிற்சி வகுப்புகள் நடத்துவதற்காகப் பல்கலைக் கழகத்திற்கு அரசு ரூ. 1 லட்சம் சிறப்பு மானியம் அளித்துள்ளது.

அரசு ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளில் பயிற்சிக் கல்வியின் தரத்தை உயர்த்தும் நோக்கத்துடன், கல்லூரிகளில் பணியாற்றும் உதவிப் பேராசிரியர் நிலை 1971–72-ல் எம். லிட். பயிற்சி பெற முகமையில் அனுப்பக் கருதப்பட்டுள்ளது. இதற்காக வரவு-செலவுத் திட்டத்தில் ரூ. 16,000 ஒதுக்கப்பட்டுள்ளது.

## ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளில் வளர்ச்சிப் பணி நிலையங்கள்.

மாநிலத்தில் ஏழு ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளில் தற்போது வளர்ச்சிப் பணி நிலையங்கள் ஏழு செயல்பட்டு வருகின்றன. இவற்றில் 6 நிலையங்கள் தனியார் பயிற்சிக் கல்லூரிகளிலும், ஒன்று சைதாப்பேட்டை ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியிலும் இருக்கின்றன. இந்த ஏழு நிலையங்களுக்கும் தேவையான புத்தகங்களையும், ஒலி, ஒளி அமைப்புக் கருவிகளையும் இடைநிலைக் கல்விக்கான அனைத்திந்தியக் குழு வழங்கியுள்ளது. கல்வி கற்பிப்பதில் புதிய முறைகளில் ஆசிரியர்களுக்குப் பயிற்சியளிப்பதே இந் நிலையங்களின் நோக்கமாகும். இத் திட்டத்திற்கு 5 ஆண்டுக்கால அளவிற்கு

நிதியுதவி அளித்து இந்திய அரசு இந் நிலையங்களுக்கு நிதியுதவி அளிக்கும் பொறுப்பினை மேற்கொள்ளுமாறு மாநில அரசைக் கேட்டுள்ளது. அரசு மானியம் பெறும் கல்லூரிகளில் உள்ள வளர்ச்சிப்பணி நிலையங்களைப் பொறுத்த வரையில், 1971-72-ம் ஆண்டில், இந் நிலையங்களுக்காகும் செலவையேற்க அரசு ஒப்புக் கொண்டுள்ளது. இதனால் 1971-72-ல் அரசுக்கு ஏற்படும் செலவு ரூ. 2 லட்சமாகும்.

## தேசிய மாணவர் படை.

தமிழ் நாட்டில் தற்போது தேசிய மாணவர் படையில், அதிகாரிகள் பயிற்சிப் பிரிவு ஒன்று உட்பட, 48 முதுநிலைப்பிரிவுகளும், தேசிய மாணவர் படைக் குழுத் தலைமையிடங்கள் ஐந்தும் இயங்குகின்றன. தமிழ் நாட்டில் கல்வி நிலையங்களிலுள்ள மாணவர்களுக்குப் பயிற்சியளிப்பதே இதன் நோக்கமாகும். இவையனைத்திற்கும் தேசிய மாணவர் படை கட்டுப்பாட்டு அதிகார மன்றமாக, சென்னையிலுள்ள தேசிய மாணவர்படை இயக்குநர் அலுவலகம் இயங்கிவருகிறது. இம் மாநிலத்தில் 1970-71-ல் தேசிய மாணவர் படை முதுநிலைப் பிரிவில் 31,875 பேர் இருந்தனர்; இளநிலைப் பிரிவில் 73,000 பேர் இருந்தனர். தேசிய மாணவர் படைக்காகும் செலவில் மாநில அரசின் பங்கு ஆண்டொன்றுக்கு ரூ. 60 லட்சம் முதல் ரூ. 70 லட்சம் ஆகும்.





அத்தியாயம் IV.

## தொழில் நுட்பக் கல்வி.

### 1. 1971-72 வரவு-செலவுத் திட்டம். (நிதி ஒதுக்கீடு).

1971-72-ஆம் ஆண்டில் கல்விக்காகச் செலவழிக்கத் திட்டமிட்டுள்ள ரூ. 8,184 லட்சத்தில், "28. கல்வி" எனும் பகுப்பில் தொழில் நுட்பக் கல்விக்காக (தொழிற்பயிற்சி நிலையங்களுக்கும் சேர்த்து) ரூ. 384 லட்சம் செலவிடப்படும். இது, கல்விக்காகச் செலவிடப்படும் மொத்தச் செலவில் சுமார் 5 விழுக்காடாகும்.

1971-72 திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் தொழில் நுட்பக் கல்விக்கு ஒதுக்கியுள்ள தொகை விவரங்களைக் கீழே காணலாம் :—

| | தொகை (ரூபாய் இலட்சத்தில்). |
|---|---|
| **28. கல்வி—E. தொழில் நுட்பக் கல்வி—2. வளர்ச்சித் திட்டங்கள்.** | **2,72·52*** |
| **103. மூலதன முதலீடு—E. தொழில் நுட்பக் கல்வி** .. | **23·44** |
| **50. பொதுப்பணிகள்—திட்ட வேலைகளும் திட்டத்தில் சேராத வேலைகளும்.** | **14·69** |
| மாணவர்களுக்கு வழங்கப்படும் கடன்கள் .. .. .. | 10·00 |
| மொத்தம் .. | 320·65 |

*(தொழிற்பயிற்சி நிலையங்களுக்கான ரூ. 1,11·42 லட்சம் இதில் சேர்க்கப் படவில்லை.)

தொழில் நுட்பக் கல்வி இயக்குநர் அலுவலகத்தில் பல்வேறு கல்வி நடவடிக்கைகளுக்காக இத்தொகை எவ்வாறு செலவிடப்படுகிறது என்னும் முழு விவரங்களைக் கீழ்க்காணும் புள்ளி விவரங்கள் காட்டும் :—

| | 1970-71 திருத்த மதிப்பீடு. | 1971-72 திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு. |
|---|---|---|
| | (ரூ. இலட்சத்தில்.) | |
| **1. நிர்வாகமும் மேற்பார்வையும்** .. .. | **13·81** | **14·91** |
| **2. அரசுப் பொறியியல் கல்லூரிகள்** .. .. | **94·43** | **93·46** |
| **3. அரசுப் பல்தொழில் பயிற்சிப் பள்ளிகள்** .. | **80·99** | **1,01·76** |
| **4. தொழில் நுட்ப உயர்நிலைப்பள்ளிகள்** .. | **11·31** | **16·71** |
| **5. வட்டாரப் பொறியியல் கல்லூரி** .. .. | **16·72** | **11·65** |
| **6. தனியார் நிறுவனங்களுக்கு மானியமும் படிப்பு உதவிச் சம்பளமும்.** | **1,01·80** | **81·17** |
| **7. நிலங்களைக் கையகப்படுத்துதல்** .. .. | **3·78** | .. |
| **8. சிறு பணிகள்** .. .. .. .. | **1·00** | **1·00** |
| **மொத்தம்** .. | **3,23·84** | **3,20·66** |

## 2. திட்டக் குறிக்கோள் அளவுகள்.

முதல் ஐந்தாண்டுத் திட்டத் தொடக்கத்தின்போது இம்மாநிலத்தில் 5 பொறியியல் கல்லூரிகளும் 6 பல்தொழில் பயிற்சிப் பள்ளிகளும் மட்டுமே இருந்தன. அடுத்தடுத்த ஐந்தாண்டுத் திட்டங்களில் மேற்கொண்ட பயற்சியின் விளைவாக இத்தகைய கல்லூரிகளும் பள்ளிகளும் மேலும் பல ஏற்படுத்தப்பட்டன. இதனால், இப்போது இம்மாநிலத்தில் தொழில் நுட்பக் கல்வி இயக்குநரின் ஆளுகையின் கீழுள்ள (3 அரசுக் கல்லூரிகள், 4 மாணவர் பெறும் கல்லூரிகள் ஆக) 7 பொறியியல் கல்லூரிகளும் உட்பட 12 பொறியியல் கல்லூரிகளும் 35 பல்தொழில் பயிற்சிப் பள்ளிகளும் (17 அரசுப் பள்ளிகள், 18 மாணவர் பெறும் பள்ளிகள்), 14 தொழில் நுட்ப உயர்நிலைப் பள்ளிகளும் (11 அரசுப் பள்ளிகள், 3 மாணவர் பெறும் பள்ளிகள்) இருக்கின்றன. முன் ஆண்டுகளில் புதிதாக ஏற்படுத்தப் பட்ட பல் தொழில் பயிற்சிப் பள்ளிகளில் மகளிர்க்காக 3 தொழில் பயிற்சிப் பள்ளிகளும், சிறப்புப்பாட முறைகளுக்கெனத் தொடங்கப்பட்ட கீழ்க்காணும் பட்டயப்படிப்பு நிறுவனங்களும் அடங்கும் :—

(1) இரசாயனத் தொழில் நுட்ப நிறுவனம்.
(2) திரைப்படத் தொழில் நுட்ப நிறுவனம்.
(3) வணிக நடைமுறை நிறுவனம்.
(4) பஞ்சாலைத் தொழில் நுட்ப நிறுவனம்.
(5) உணவு-உபசரிப்பியல் நிறுவனம்.

1970–71-ஆம் ஆண்டில் தொழில் நுட்பக் கல்வி இயக்குநரின் ஆளுகையின் கீழுள்ள 7 பொறியியல் கல்லூரிகளிலும் 961 மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்பெற்றனர். 1971–72-ஆம் ஆண்டில் முதலாண்டுப் படிப்பில் 1,180 மாணவர்களைப் புதிதாகச் சேர்த்துக் கொள்ள இடவசதி இருக்கும். 1970–71-ஆம் ஆண்டில் பல்தொழில் பயிற்சிப்பள்ளிகளில் 3, 692 மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப் பெற்றனர். 1971–72-ஆம் ஆண்டில் 4,515 மாணவர்களைச் சேர்த்துக்கொள்ள இட வசதி இருக்கும்.

மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் இம்மாநிலத்தில், தொழில் நுட்பக் கல்வித் துறையில் சேர்த்துக்கொள்ளப்படும் மாணவர்களின் எண் ணிக்கையைப் பெருக்குவதிலேயே முக்கிய கவனம் செலுத்தப்பட்டது. ஆனால், கடந்த மூன்றாண்டுகளில், நிலவும் வேலைவாய்ப்பு நிலைமையைக் கருதிப் பார்க்கும்போது, மேலும் மேலும் மாணவர்களைப் புதிதாகச் சேர்த்துக்கொண்டே போவதைவிட, இருக்கின்ற கல்வி நிலையங்களை நிலைப் படுத்தவும், சிறப்பான பாடமுறைகளையும் பலதிறப்பட்ட பாடமுறைகளையும் புதிதாக ஏற்படுத்தவும், முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டுமெனக் கருதப்படுகிறது. இந்த அடிப்படையில், இண்டி பொறியியல் கல்லூரியில், பட்ட மேற்படிப்புப் பாடமுறைகள் பல கூடுதலாக ஏற்படுத்தப்பட்டுள்ளன. 1970–71-ஆம் ஆண்டில் பல்தொழில் பயிற்சிப் பள்ளிகளில், பணியிடைப் பயிற்சி முறையிலான வேலை முனைப்பு சிறப்புப் பாட முறைகள் பல ஏற்படுத்தப்பட்டுள்ளன. கட்டிடக் கலையில் உதவியாளர் படிப்பு, சர்க்கரைத் தொழிலியல் பட்டயப்படிப்பு, கருவிகள் நுட்பப் படிப்பு (Instrument Technology) ஆகியவை இவற்றுள் அடங்கும். பற்றவைப்புத் தொழில் நுட்பப் படிப்பு, உற்பத்தி தொழில் நுட்பப் படிப்பு, தொழில் பொறியியல், மின் அணுவியல், மருத்துவ மனைத் தொழில் நுட்பப் படிப்பு, பிளாஸ்டிக் தொழில் நுட்பப் படிப்பு உட்பட, புதிய பாட முறைகள் பல 1971–72-ஆம் ஆண்டிலும் பல் தொழில் பயிற்சிப் பள்ளிகளில் ஏற்படுத்தப்படும். இதற்காக வரவு-செலவுத் திட்டத்தில் ரூ. 4·4 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

பணியிடைப் பயிற்சி முறையிலான பட்டப்படிப்பு முறையைக் கொண்டு வருவது, தொழில் நுட்ப வினைஞர்களைச் செயலறிவு உள்ளவர்களாகவும் வேலை முனைப்புள்ளவர்களாகவும் செய்வதில் செம்மையான நடவடிக்கை



ஆகுமெனக் கருதப்பட்டுள்ளது. பட்டயப் படிப்பு நிலையிலும் பட்டப்படிப்பு நிலையிலும் பணியிடைப் பயிற்சி முறையைக் கொண்டு வருவதில் பொது வான செயல் திட்டமொன்றைப் பரிவுரை செய்வதற்காக, இந்திய அரசின் கல்வித் துறை, செயற்குழு ஒன்றை ஏற்படுத்தியுள்ளது. இந்தக் குழு ஆய்வுப் பணியைச் செய்து முடித்துச் சில பரிவுரைகளை வழங்கியுள்ளது. தமிழ் நாட்டிலுள்ள பொறியியல் கல்லூரிகளில் இத் திட்டத்தை நடை முறையில் நிறைவேற்றுவதற்காக, இப் படிப்பு முறைகள் கொண்டுவரக் கூடிய கல்வி நிறுவனங்கள் செயல்படுவதை ஆராயும் பொருட்டு, இந்த அரசு குழு ஒன்றை நியமித்துள்ளது. பல்தொழில் பயிற்சிப் பள்ளிகளில் ஏற்கெனவேயுள்ள பணியிடைப் பயிற்சி வேலைத் திட்டங்களும் அந்த ஏற்பாட்டினை மேலும் செம்மையாக்குவதற்காக மாற்றியமைக்கப் பட்டுள்ளன.

## 3. தனிப்பட்ட நிறுவனங்களுக்கு நிதி உதவி.

இம் மாநிலத்தில் உள்ள நான்கு தனியார் பொறியியல் கல்லூரி களுக்கும், 18 தனியார் பல் தொழிற் பயிற்சிப் பள்ளிகளுக்கும் 1970–71 ஆண்டு வரை, அரசு உதவி மானியங்கள் வழங்கி வந்தது. இந்த நிறுவனங்களுக்கு ஆண்டுதோறும் ஏற்படும் நிகரப் பற்றுக்குறையில் 75 சதவீத அடிப்படையில் கணக்கிடப்பட்டு இந்த உதவி மானியம் வழங்கப் படுகிறது. இந்த உதவித் தொகையை, நிகரப் பற்றுக்குறையின் 75 சத வீதத்திலிருந்து 80 சத வீதமாக உயர்த்துவதென இப்போது முடிவு செய்யப்பட்டுள்ளது.

## 4. தொழில் நுட்ப நிறுவனங்களில் பணிபுரியும் ஆசிரியர்களின் சம்பள வீதங்கள், பணி நிலைமைகள்.

இரண்டாவது சம்பள ஆணைக்குழுவின் பரிவுரைகளின்மேல், அரசு தொழில் நுட்ப நிறுவனங்களில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு அனுமதிக்கப் பட்டுள்ள திருத்தச் சம்பள வீதங்கள், மானியம் பெறும் தொழிற் கல்வி நிறுவனங்களுக்கும் விரிவாக்கப்பட வேண்டுமென்று அரசு முடிவு செய் துள்ளது. மானியம் பெறும் தொழில் நுட்ப நிறுவனங்களுக்கான ஆசிரிய மானியம் திருத்தச் சம்பள வீதங்களின் அடிப்படையில் வரும் கல்வி ஆண்டிலிருந்து கணக்கிடப்படும்.

## 5. பொறியாளர்களுக்கு வேலை வாய்ப்புகள்.

பணியில் உள்ளவர்களுக்குத் தொடர்ந்து கல்வி அளிப்பது என்பது முற்போக்கான கல்வி முறையின் அம்சமாக உலகெங்கும் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. குறிப்பாக, தொழில் நுட்ப வல்லுநர்கள், பொறி யாளர்கள் ஆகியோர் தங்கள் பணியில் ஏற்றம் காணவேண்டுமாயின், அவர்கள் தங்களது கல்வித் தகுதியை மேம்படுத்திக் கொள்ள வேண்டும். எனவே இக் கல்வி முறை இவர்களுக்கு மிகவும் தகுதியுடைத்தாகும். 1971–72-ஆம் ஆண்டிலிருந்து அரசுப் பொறியியல் கல்லூரிகளிலும் தனி யார் பொறியியல் கல்லூரிகளிலும் தொழிற்கல்விப் பட்டயம் பெற்றவர் களுக்காகப் பகுதி நேரப் பட்டப்படிப்பு பாட முறைகள் தொடங்க அரசு முடிவு செய்துள்ளது. கிண்டியிலுள்ள அரசுப் பொறியியல் கல்லூரியில் இப் பாடமுறைக்காக 60 இடங்கள் ஒதுக்கப்படும். தொழில் நுட்பக் கல்வி இயக்குநரின் ஆளுகையில் கீழ் உள்ள எனைய அரசுக் கல்லூரிகள், மானியம் பெறும் கல்லூரிகள் ஆகியவை ஒவ்வொன்றிலும் 30 இடங்கள் ஒதுக்கப்படும். இவ்வாறாக கட்டுமான (சிவில்), இயந்திர, மின்சாரப் பொறி யியல் ஆகிய மூன்று பாடமுறைகளுக்கும் சேர்த்து மேற்சொன்ன ஏழு கல் லூரிகளிலும் சேர்த்து மொத்தம் 270 இடங்கள் ஒதுக்கப்படும். பொறி யியலின் இப்பிரிவுகளில் பட்டயம் பெற்று மூன்று ஆண்டுகள் பணி யில் தொழில் அனுபவம் பெற்று இருப்பவர்கள் இப்பாடமுறையில் சேர்வதற்குத் தகுதியுடையவர்களாவர். இப் பாடமுறையைக் கொண்டு வந்ததன் காரணமாக, பொறியியல் படிப்புத் துறைகளில், பட்டயம் பெற்ற வர்களின் நீண்டநாள் தேவைகளில் ஒன்று நிறைவு செய்யப்பட்டுள்ளது.

பொறியியல் பட்டயம் பெற்றவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்க ஊக்கமளிப்பதற்கான திட்டம் ஒன்று மதுரையில் உள்ள தமிழ் நாடு பல்தொழிற் பயிற்சி பள்ளியில் முதல் முதலாக மாநில அரசினால் செயலுக்கு கொண்டு வரப்பட்டது. இத் திட்டம் இப்பொழுது பிற நிறுவனங்களுக்கும் விரிவாக்கப்பட்டுள்ளது. இத் திட்டத்தின் கீழ் பட்டயம் பெற்றோர் உள்ளூர் தொழிற்சாலைகளிலிருந்து பணியாள் கேட்டு பெற்று, பல் தொழிற் பயிற்சிப் பள்ளிகளில் உள்ள கருவிகளையும் பொறிகளையும் பயன்படுத்திப் பணிகளை நிறைவேற்றலாம். பொறிகளைப் பயன்படுத்துவதற்காக அவர்களிடமிருந்து சிறு தொகை வாடகையாக வசூலிக்கப்படுகிறது. இத்திட்டப் பொறியியல் பாடமுறையின் இறுதி ஆண்டில் பயிலும் மாணவர்களுக்காக இதுபோன்றதொரு திட்டம் திருச்சி, நாத்துங்குடியில் உள்ள அரசுப் பல்தொழிற் பயிற்சிப் பள்ளிகளில் செயலுக்குக் கொண்டு வரப் பட்டுள்ளது.

6. ஆசிரியர்களின் தகுதிகளை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகள்.

அரசுத் தொழில் நுட்பக் கல்வி நிலையங்களில் பணி புரியும் ஆசிரியர்கள் தங்கள் கல்வித் தகுதியை மேம்படுத்திக் கொள்வதற்காக, ஆசிரியர்கள் ஆராய்ச்சிப் பட்டம் பெறும்பொருட்டு, அரசு அவர்களை இந்தியத் தொழில் நுட்ப நிலையம், பெங்களூரில் உள்ள இந்திய அறிவியல் நிலையம், வெளி நாடுகளில் உள்ள சில பல்கலைக் கழகங்கள் ஆகியவற்றிற்கு முகமையில் அனுப்ப முடிவு செய்துள்ளது. இத் திட்டம் மூன்று ஆண்டுகள் செயலில் இருக்கும். இக் கால அளவில் இந்திய அரசு ஆசிரியர்களுக்குத் தங்கள் ஒன்றுக்கு ரூ. 500 படிப்பு உதவித் தொகை வழங்கும். மாநில அரசு இப் படிப்புக் கால அளவை, முகமைக் கால அளவாகக் கருதி, முகமைக் கால அளவில் அவர்களது சம்பளம், படிகள் குறித்த செலவை ஏற்கும். 1971–72-ஆம் ஆண்டில் ஐந்து ஆசிரியர்களை முகமையில் அனுப்பக் கருதப்பட்டுள்ளது.

7. தொழில் நுட்ப நிறுவனங்களில் பயிலும் மாணவர்களுக்குக் கடன்கள்.

அரசிதழ் பதிவு பெறு அலுவலர்கள், இம் மாநிலத்தில் உள்ள ஏற்புபெற்ற பள்ளிகளின் ஆசிரியர்கள், ரூ. 1,500-க்குக் குறைவான ஆண்டு வருவாய் உள்ளவர், ஆகியோரின் பிள்ளைகளுக்கு வட்டியில்லாக் கடன் வழங்கும் திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத் திட்டத்தின் கீழ், முழுப் படிப்புக் கட்டணங்கள், பிற கட்டணங்கள், ஆகிய வற்றிற்கு நிகரான கடன் தொகை, பட்டப்படிப்புப் பாடமுறைகளுக்கான பாடப் புத்தகங்களை வாங்குவதற்காக ரூ. 1,000 பட்டயப் பாடமுறைப் புத்தகங்களை வாங்குவதற்காக ரூ. 500, திங்கள் ஒன்றுக்கு ரூ. 50 வீதம் 10 மாதங்களுக்கு பேணுதற்படி, ஆகியவை கொடுக்கப்படுகின்றன. 1970–71-ஆம் ஆண்டில், 1,123 மாணவர்களுக்கு இத் திட்டத்தின்கீழ் கடன்கள் வழங்கப்பட்டன. 1970–71-ல் மொத்தம் ரூ. 10·37 லட்சம் கடனாக வழங்கப்பட்டது.





அதிகாரம். V.

இசையும் கலைகளும்.

அரும் பொருட்காட்சிசாலை.

1971–72-ல் அரும் பொருட்காட்சிசாலைகள் அமைக்கத்துக்கு நவீனமேடை ஒளி அமைப்புச் சாதனம் நிறுவுதல், கலை அரங்கத்துக்குக் குளிர்நிலை வசதி செய்தல் ஆகிய மேம்பாடுகளைச் செய்யக் கருதப்பட்டுள்ளது. சென்னையிலுள்ள அரசினர் அரும் பொருட்காட்சிசாலையின், விலங்கியல் பிரிவுக்கும், புகைப்படப் பிரிவுக்கும், 1971–72-ஆம் ஆண்டில் புதிய கட்டிடங்கள் கட்டவும் கருதப்பட்டுள்ளது. 1971–72-ல், இப் புதிய கட்டிடங்களுக்கு மொத்தம் ரூ. 1,15,000 செலவாகும்.

தமிழ் நாடு சங்கீத நாடக சங்கம்.

தமிழ் நாடு சங்கீத நாடக சங்கம், திரைப்படம், நுண்கலை, இசை, நாடகம் ஆகியவற்றைப் பேணி வளர்க்கும் பணிகளையும், அவற்றின் மூலம் தமிழ்நாட்டில் பண்பாட்டுப் பணிகளை மேம்படுத்தும் செயல்களையும் தொடர்ந்து ஆற்றியது.

சங்கம் திறமையுள்ள இளம் கலைஞர்களை ஊக்குவிக்கின்றது; தனது ஆதரவின் கீழ் நிகழ்ச்சிகளை நடத்த அவர்களுக்கு வாய்ப்புகள் அளிக்கின்றது. இசை, நாட்டியநாடகம், திரைப்படம் ஆகிய துறைகளில் சிறந்த திறமையுடைய கலைஞர்களுக்கு இச் சங்கம் பரிசுகளும் பாராட்டிதழ்களும் வழங்குகிறது.

1970–71-ல், இச்சங்கம் தனது பணிகளுக்காக, ரூ. 1·66 லட்சம் மானியம் பெற்றது. 1971–72-ம் ஆண்டில் இச் சங்கத்துக்கு மானியம் அளிக்க ரூ. 2,40,000 ஒதுக்கப்பட்டுள்ளது.

மாநில அரசு இந்திய அரசுடன் கூட்டாக நிதி உதவி அளிக்கும் ஒரு திட்டத்தின் கீழ் சுமார் 300 சிறந்த கலைஞர்களுக்கு (இசைக் கலைஞர்கள், நடிகர்கள், எழுத்தாளர்கள் ஆகியவர்களுக்கு) தற்போது திங்களொன்றுக்கு ரூ. 50 முதல் ரூ. 150 வரை, ஓய்வூதியம் அளிக்கப்பட்டுவருகின்றது. தத்தம் துறைகளிற் சிறந்து விளங்கிய கலைஞர்கள், அத் துறைகளில் முறையாகப் பங்கு பெறுவதிலிருந்து ஓய்வு பெற்ற பின்னர், வறிய நிலையில் வாழ்ந்து வருகின்ற சிறந்த கலைஞர்களுக்கு உதவி அளிப்பதற்காக இத் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. இந்திய அரசு, ஏற்கெனவே ஒப்பளித்த ஓய்வூதியங்கள் தொடர்பாகத் தங்கள் பங்கினைத் தொடர்ந்து அளித்து வருகின்றது. ஆனால் 1970–71-லிருந்து இந்திய அரசு புதிய ஓய்வூதியங்கள் எதற்கும் ஒப்பளிப்பு வழங்குவதற்குத் தங்களால் இயலாதென்று, மாநில அரசிடம் தெரிவித்துள்ளது. தங்கள் நிலையை மறு ஆய்வு செய்யுமாறு மத்திய அரசை இவ்வரசு வற்புறுத்தி வந்துள்ள போதிலும், இதுவரை இதற்கு எவ்விதப் பயனும் கிட்டவில்லை. எனவே, தகுதி வாய்ந்த இசை வல்லுநர்கள், கலைஞர்கள், கலை வல்லார்கள், நடிகர்கள் ஆகியோர் தங்களது முதுமைக் காலத்தில் தங்களைப் பாதுகாத்துக்கொள்ள இயலாதபோது, அவர்களுடைய சிறந்த தகுதிகளைக் கருதி அவர்களுக்கு நிதி உதவி அளிக்கும் பொருட்டு, இதற்காகும் செலவைப் பங்கிட்டுக்கொள்ள மாநில அரசு, இந்திய அரசின் இசைவை எதிர்பார்த்து மாநில அரசு இதற்காகும் செலவு முழுவதையும் ஏற்பதென முடிவு செய்துள்ளதோடு இதற்காக 1971–72-ம் ஆண்டில் ஆகும் செலவிற்கென ரூ. 2 லட்சம் வழங்க ஒப்பளிப்பும் வழங்கியுள்ளது. 1971–72-ல் சுமார் 200 பேருக்கு ஓய்வூதியம் வழங்கக் கருதப்பட்டுள்ளது.

### கர்நாடக இசை மத்தியக் கல்லூரி.

கர்நாடக இசையில் மாணவர்களுக்குப் பயிற்சியளிப்பதற்கான கர்நாடக இசை மத்தியக் கல்லூரி (அரசுக் கல்லூரி) தொடர்ந்து செயல்பட்டு வருகிறது. சங்கீத வித்வான் பட்டம் பெறுவதற்கான இரண்டாண்டுப் பயிற்சி இக்கல்லூரியில் அளிக்கப்படுகிறது. இக்கல்லூரியில் இசை ஆசிரியர் பயிற்சிப் பாடமுறையும் நடத்தப்படுகிறது. ரூ. 3 லட்சம் செலவில் இக் கல்லூரி மாணவர்களுக்கு மாணவர் இல்லம் கட்டுவதற்கான விரிவான திட்டங்களுக்கும் மதிப்பீடுகளுக்கும் 1969–70-ல் ஏற்பளிக்கப்பட்டுள்ளது. இக்கட்டிடம் முற்றுப்பெறும் தறுவாயில் உள்ளது.

### தொல்பொருள் துறை.

தொல்பொருள் முக்கியத்துவம் வாய்ந்த நினைவுச் சின்னங்களைப் பாதுகாப்பதற்காக மேலும் சில பணிகளை மாநிலத் தொல்பொருள் துறை 1971–72-ல் மேற்கொள்ளக் கருதியுள்ளது. மதுரையிலுள்ள திருமலை நாயக்கர் மகால் படிப்படியாகப் பல நிலைகளில் செப்பனிடப்படும்.

தமிழ்நாட்டில் உள்ள கோயில்கள், தொல்பொருள் சின்னங்கள் ஆகியவற்றில் தமிழிலும் பிற மொழிகளிலும் எழுதப்பட்டுள்ள தொன்மையான கல்வெட்டுக்களைப் படி எடுக்கும் வேலையை 1966-ம் ஆண்டு வரை மைசூரிலுள்ள இந்திய அரசின் தலைமைக் கல்வெட்டாய்வாளர் மட்டுமே கவனித்து வந்தார். 1966-ல் தமிழ்நாட்டிலுள்ள தொன்மையான வையும் வரலாற்றுத் தொடர்பானவையுமான சின்னங்கள் குறித்த இம் மாநிலச் சட்டம் இயற்றப்பட்டபின் மேற்சொன்ன வேலையை மாநில தொல்பொருள் ஆய்வுத்துறை மூலமாக மாநில அரசும் மேற்கொள்ள லாமென முடிவு செய்யப்பட்டது. ஏற்கனவே தலைமைக் கல்வெட்டு ஆய்வாளரால் படி எடுக்கப்பட்டு வைக்கப்பட்டுள்ள இம் மாநிலக் கல்வெட்டுக்களின் படிகளை அவரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாமென்றும் இதுவரை அவரால் படி எடுக்கப்படாத கல்வெட்டுக்களை அவை செதுக் கப்பட்டுள்ள இடங்களுக்குச் சென்று படி எடுத்துக்கொள்ளலாமென்றும் முதலில் கருதப்பட்டுள்ளது. மைசூரிலுள்ள தலைமைக் கல்வெட்டாய்வாள ரிடம் இருந்து கல்வெட்டுக்களின் படிகளைப் பெறுவது குறித்து இந்திய அரசு சில தடங்கல்களை எழுப்பியுள்ளது. இதுகுறித்து நெடுநாள் மைய அரசின் ஒப்புதல் கிட்டாமலிருப்பதால் இம்மாநில அரசுத் தொல்பொருள் ஆய்வுத்துறையிலிருந்து கல் வெட்டாய்வாளர் ஒருவரை மைசூருக்கு அனுப்பி அங்குள்ள தலைமைக் கல்வெட்டாய்வாளரிடமிருந்து படிகளைப் பெற்றுவர ஏற்பாடு செய்யக் கருதப்பட்டுள்ளது. இதுவரை இந்திய அரசுத் தலைமைக் கல் வெட்டாய்வாளராலோ அன்றி மாநிலத் தொல்பொருள் ஆய்வுத் துறையாலோ படியெடுக்கப்படாமல் உள்ள கல்வெட்டுக்கள் பல. அவற்றைப் படி எடுக்கத் திட்டம் வகுத்து மாவட்ட வாரியாக இவ் வேலை யைச் செய்து இன்னும் சில ஆண்டுகளுக்குள் நிறைவேற்ற மாநிலத் தொல்பொருளாய்வுத்துறை கருதியுள்ளது. இத்திட்டத்தின்கீழ் 1966-ம் ஆண்டு முதல் 1,220 கல்வெட்டுக்கள் படி எடுக்கப்பட்டுள்ளன.



### அதிகாரம் VI.

### தமிழ் வளர்ச்சி.

தொல்காணும் அமைப்புக்களின் பணியைத் தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் கவனித்து வருகிறார்; இவர் இப்போது கல்வித் துறையின்கீழ் பணியாற்றி வருகிறார்.

(1) ஆட்சிமொழிக் குழு.

(2) தமிழ் வளர்ச்சி-ஆராய்ச்சி மன்றம்.

தமிழ் வளர்ச்சி இயக்குநர் அலுவலகம் சீரிய வகையில் சீரமைக்கப் பட்டு, அது மேலும் திறமையாக இயங்கும் வண்ணம் திருத்தி அமைக்கப் பட்டுள்ளது.

ஆட்சிமொழிக் குழு 1957-ஆம் ஆண்டிலிருந்தே, ஆட்சிமொழிச் சட்டத்தின் விதித்துறைகளை நிறைவேற்றும் பொறுப்பை ஏற்றுள்ளது. 1957-லிருந்து 1963 வரையிலான காலத்தில் மாவட்ட நிலை அலு வலகங்களில் தமிழில் கடிதப் போக்குவரத்து முதலில் தொடங்கி வைக்கப்பட்டது. 1963-ல் தமிழ்த் திட்டம் அரசு கடிதப் போக்குவரத் திலும் செயல்படுத்தப்பட்டது. 1966 மேயிலிருந்து (சட்ட, நிதித் துறைகள் நீங்கலாக) தலைமைச் செயலகத் துறைகளில் இது கொண்டுவரப்பட்டது. நிதி, சட்டத் துறைகளிலும் கூட, 1970 ஏப்ரல் 1-ம் நாள் முதற்கொண்டு, தமிழை நடைமுறைக்குக் கொண்டுவருவதில் ஒரு தொடக்க முயற்சியும் மேற்கொள்ளப்பட்டது.

இச் சட்டத்தைத் தகுந்தவாறு செயல்படுத்துவதில் அரசுக்கு ஆலோசனை நல்குவதோடு, இந்த ஆட்சிமொழிக் குழு, விதிமுறைக் கோவைகள், நடை முறை நூல்கள் முதலியவற்றை மொழிபெயர்க்கும் பணியையும் கவனித்து வருகிறது. இத் திட்டம் நிறைவேறுவதில் ஏற்படும் முன்னேற்றத்தைக் கண்காணித்து, ஆங்காங்கே தக்கவாறு ஆலோசனைகள் நல்கி, துறைத் தலைமை அலுவலகங்கள், மாவட்ட நிலை அலுவலகங்கள், மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அலுவலகங்கள் ஆகியவற்றை ஆய்வு செய்யும் அதிகாரியாகத் தமிழ் வளர்ச்சித்துறை இயக்குநர் பணியாற்றி வருகிறார். தனி (ஆய்வு) அலுவலர் எனைய அலுவலகங்களை ஆய்வு செய்யும் பணியைக் கவனித்து வருகிறார். இச் சட்டத்தை விரைந்து செயல்படுத்து வதற்காக, மாவட்ட நிலையில் மேலும் ஒன்பது தனி (ஆய்வு) அலு வலர்களை நியமிக்கும் கருத்துள்ளது. சட்டமுறை விதிக் கோவைகள் முதலியவற்றை விரைவாக மொழிபெயர்த்துக் கொடுக்க மேலும் மொழி பெயர்ப்பு அலுவலர்கள் இருவரையும், படி திருத்துபவர்களையும் நியமிக்கும் செயற்குறிப்பும் உள்ளது.

தமிழ் வளர்ச்சி-ஆராய்ச்சி மன்றம் 1959-ல் அமைக்கப்பட்டது. தமிழ் எழுத்துக்களுக்கு இணையான ரோமன் எழுத்துக்கள், தமிழ்நாட்டின் பண்டைய சிறப்பு வரலாறு ஆய்வு போன்ற தமிழ்மொழி வளர்ச்சி குறித்தவற்றில் நாட்டஞ் செலுத்தி, இந்திய அரசின் தொல்பொருள் ஆராய்ச்சித்துறை நடவடிக்கைகளுடன் இப்பணியை ஒருங்கிணைத்துச் செயல் படுகிறது. தமிழக வரலாற்றை ஆதாரங்களுடன் வரைவதற்குக் குழு ஒன்று அமைக்கப்படலாம் என்று அண்மையில் நடைபெற்ற கூட்டத்தில் தமிழ் வளர்ச்சி மன்றம் தீர்மானம் கொண்டுவந்தது. டாக்டர் மு. வரதராசன் தலைமையில் இக்குழுவை அமைத்து அரசு 1971 ஜூனில் ஆணை பிறப்பித் துள்ளது. இப் பணிக்காக ஐந்து ஆண்டுக் காலத்தில் செலவிடுவதற்கு ரூ. 7 லட்சத்திற்கு அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது.

தமிழில் சிறந்த நூல்கள் வெளிவருவதற்கு ஆக்கம் தரும் வகையில் ஆண்டுதோறும் தமிழில் வெளியாகும் சிறந்த நூல்களுக்குப் பரிசுகள் அளிக்கும் திட்டம் தொடங்கி வைக்கப்பட்டது. வெவ்வேறு வகையான 20 பொருள்களில் சிறந்த நூல்களுக்கு 1970–71 வரை ரூ. 1,000 பரிசுத்

தொகை அளிக்கப்பட்டு வந்திருக்கிறது. 1971–72-லிருந்து, ரூ. 2,000, ரூ. 1,000 என இரு பரிசுத்தொகைகள் மேற்சொன்ன 20 பொருள்கள் ஒவ்வொன்றிலும் எழுதப்படும் சிறந்த நூலுக்குப் பரிசு வழங்குவதென்று அரசு முடிவு செய்துள்ளது. தமிழ் நூலாசிரியர்களை ஊக்குவிக்கும் வகையில், 1,000 நூல்களை அச்சிடும் செலவில் பாதியை அரசு ஏற்று நிதி உதவியும் அளிக்கப்பட்டு வருகிறது.

தமிழக் கலைக் களஞ்சியமும், சிறுவர் கலைக் களஞ்சியமும் வெளியிடும் பணியில் சென்னைத் தமிழ் வளர்ச்சிக் கழகம் ஈடுபட்டுள்ளது. இம் முயற்சியில் மத்திய, மாநில அரசுகள் இக் கழகத்திற்குப் பெரிதும் உதவி வருகின்றன.

தென் மொழிகள் நூல் கழகம், தமிழில் "யூனெஸ்கோ-கூரியர்" என்னும் இதழை வெளியிட்டு வருகிறது. இதற்காக, 1967–68-லிருந்தே மாநில அரசு ஆண்டுதோறும் மானியமாக ரூ. 24,500 அளித்து வருகிறது. இக் கழகம் தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஆகிய மொழிகளில் நூல்கள் வெளியிடுவதுடன், தமிழில் பயனுள்ள நூல்களையும் வெளியிடுகிறது. இதற்காக, இவ்வரசு ஆண்டுதோறும் மானியமாக ரூ. 12,000 அளித்து வருகிறது.

## CHAPTER I.

### INTRODUCTORY.

***Educational expenditure and the State Budget.***— It is acknowledged that Educational advancement is a pre-requisite for rather than a concomitant of economic progress. Investment in education is truly the most abiding investment in progress and prosperity. The Government of Tamil Nadu have been fully alive to this and have consistently given top-priority for the development of education, both quantitative and qualitative, at all levels. In a bid to take educational opportunities even to the under-privileged sections of society, free education has been introduced at the school level and at the college level upto the Pre-University including the pre-Technical Course. The expenditure on Education from the Revenue Account has risen from Rs.15·15 crores in the year 1959–60 to Rs. 81·84 crores in the Revised Budget Estimate for 1971–72. The Education Budget for 1971–72 makes provision for the maintenance of the services already built up and for further expansion and improvements.

2. The Government are also aware that a great deal can be done by private initiative and enlightened public support. Mobilisation of community resources, through School Improvement Conferences, matching grant schemes, etc., has greatly helped in our progress towards achieving the objectives in the field of education.

3. The Budget for 1971–72 provides under '28. Education' a total expenditure (Plan and Non-Plan together) of Rs. 81·84 lakhs as against Rs. 66,83·09 lakhs in 1970–71. The break-up figures of the Budget Estimate for 1971–72 are shown below:—

| | *Budget Estimate, 1970–71.* | | |
|---|---|---|---|
| | *Non-Plan.* | *Plan.* | *Total.* |
| (1) | (2) | (3) | (4) |
| | (RUPEES IN LA | | |
| Primary Education .. .. | 29,73·63 | 1,23·09 | 30,96·72 |
| Secondary Education .. .. | 19,23·48 | 1,80·46 | 21,03·94 |
| University Education .. .. | 4,22·56 | 67·98 | 4,90·54 |
| Special Education .. .. | 1,12·26 | 5·08 | 1,17·34 |
| Other items .. .. .. | 5,00·06 | 26·81 | 5,26·87 |
| Technical Education .. .. | 1,93·63 | 55·08 | 2,48·71 |
| Industrial Training Institutes. | 97·33 | 1·64 | 98·97 |
| | 62,22·95 | 4,60·14 | 66,83·09 |

| | *Budget Estimate*, 1971–72. | | |
|---|---|---|---|
| | *Non-Plan.* | *Plan.* | *Total.* |
| | (5) | (6) | (7) |
| | (RUPEES IN LAKHS). | | |
| Primary Education .. .. | 36,84·35 | 1,05·77 | 37,90·12 |
| Secondary Education .. .. | 22,66·05 | 3,00·68 | 25,66·73 |
| University Education .. .. | 5,47·02 | 77·78 | † 6,24·80 |
| Special Education .. .. | 1,22·63 | 7·17 | 1,29·80 |
| Other items .. .. .. | 5,39·58 | 1,49·03 | 6,88·61 |
| Technical Education .. .. | 2,22·79 | 49·73 | 2,72·52 |
| Industrial Training Institutes. | 1,09·09 | 2·33 | 1,11·42 |
| | 74,91·51 | * 6,92·49 | 81,84·00 |

* Excludes Plan expenditure booked to "103. Capital outlay" "50 Civil Works," and Loans.

† Excludes Rs. 84·05 lakhs relating to Collegiate Education booked under "Other items". The total outlay on Collegiate Education under "28. Education" is therefore Rs. 6,58·85 lakhs.

The increase in the Budget Estimate for 1971–72 over the provision made in the Budget Estimate, 1970–71 is of the order of Rs. 15,00·91 lakhs. The expenditure from the Revenue Account on Education, viz., Rs. 81·84 crores to the total Revenue expenditure of Tamil Nadu during 1971–72 (viz. 358·52 crores) works out to nearly 23 per cent during 1971–72.

4. Apart from the provision of Rs. 8,184 lakhs for Education, the Demand XIII for 1971–72 includes provision for Examinations Archaeology and Museums, etc., also as shown below :

| | (RUPEES IN LAKHS). | |
|---|---|---|
The Official Language Committee has been in-charge of implementing the provisions of the Official Language Act since 1957. The introduction of Tamil in official correspondence was first initiated at the District level Offices between the years 1957 and 1963. In 1963 the Tamil scheme was implemented in the offices of Heads of Departments. The first stage of using Tamil in Official Correspondence was introduced in the Departments of the Secretariat also (excepting Law and Finance) from May 1966. A beginning in adopting Tamil has been made in the Finance and Law Departments also with effect from 1st April 1970.

Besides advising the Government on the proper implementation of the Act, the Official Language Committee has been attending to the work of translation of Codes, Manuals, etc. The Director of Tamil Development has been inspecting offices of Heads of Departments, District Level Offices and Collectors' Offices and the Special Officer (Inspection) has been attending to the inspection of the other offices in order to watch the progress of the implementation of the scheme and also to advise suitably wherever necessary. To quicken the pace of the implementation of the Act, it is proposed to appoint 9 more Special Officers (Inspection) at the district level. It is also proposed to appoint 2 more Special Officers (Translation) and proof readers for effecting quick translation of codes, etc.

The Tamil Development and Research Council was constituted in 1959. This Council attends to the problems relating to development of the Tamil language, such as Roman equivalents for the Tamil alphabet, study of the antiquities and history of Tamil Nadu and of coordinating this work with the activities of the Archaeological Department of the Government of India.

The Tamil Development Council in a recent meeting resolved that a Committee may be constituted to write an authentic history of Tamil Nadu and in June 1971, Government have issued orders constituting the Committee under the Chairmanship of Dr. M. Varadarajan. Sanction has been accorded for an expenditure of Rs. 7 lakhs to be spent over 5 years for this scheme.

In order to encourage the publication of good books in Tamil, a scheme for the award of prizes for the best books published in Tamil every year has been instituted. Up to 1970–71, prizes of Rs. 1,000 each were being given for the best books in 20 different subjects. From 1971–72 onwards, Government have decided to award two prizes for each of the 20 subjects of the value of Rs. 2,000 and Rs. 1,000. Financial assistance is also being given to authors of books in Tamil, in the form of 50 per cent of the cost of printing of 1,000 books,

The Tamil Academy, Madras is engaged in the publication of a Tamil Encyclopedia and a Children's Encyclopedia. Both the Central and State Governments are assisting the Academy in this venture.

The Southern Language Book Trust publishes the 'UNESCO-COURIER' in Tamil. For this purpose, from 1967-68, the State Government are sanctioning a grant of Rs. 24,500 per year. In addition to publishing books in Telugu, Kannada and Malayalam this Trust also publishes useful books in Tamil. For this purpose the Government have been sanctioning a sum of Rs. 12,000 per year.

# THE TAMIL NADU LEGISLATIVE COUNCIL.

*Saturday, the 24th July 1971.*

The House met in the Council Chamber, *Fort St. George*, at four of the clock, MR. CHAIRMAN (THE HON. THIRU C. P. CHITRARASU) in the Chair.

## I. QUESTIONS AND ANSWERS.

### *Starred Questions.*

MR. CHAIRMAN : Questions Nos. 211 to 217 are postponed.

### *Nutritious food*

* 218. *Q.*—THIRU V. ISVARMURTI : Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state—

(*a*) whether there is any Special Programme to supply nutritious food to the children and expectant mothers in the slum areas in Madras City; and

(*b*) if so, the details thereof?

**சத்துணவு**

**திரு. வி. ஈஸ்வரமூர்த்தி:** மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்கு பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) சென்னை மாநகரின் குடிசைப் பகுதியில் உள்ள குழந்தைகளுக்கும் கர்ப்பிணிகளுக்கும் சத்துணவு வழங்குவதற்கான சிறப்புத் திட்டம் ஏதேனும் உள்ளதா ?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை ?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து:** (அ) சத்துணவு (அதாவது) சத்து நிறைந்த இனிப்பான பால் சொட்டி சென்னை மாநகர் மற்றும் சில நகரங்களிலுள்ள சேரிப் பகுதிகளில் 6 மாதங்கள் முதல் 3 ஆண்டுகள் வரையுள்ள குழந்தைகளுக்கு வழங்கப்படுகின்றது. ஆனால் பேறுகாலத் தாய்மார்களுக்கு சொட்டி வழங்கப்படுவதில்லை.

(இ) இந்திய அரசின் முழு நிதியுடன் அமுல் நடத்தப்படுகின்ற சத்துணவு வழங்கும் திட்டம் சென்னை மாநகரிலுள்ள நகர்ப்புற சேரிப் பகுதிகள், சென்னை மாநகரைச் சுற்றியுள்ள சேரிப் பகுதிகள், மற்றும் ஒரு இலட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் தொகையுடைய 18 நகராட்சிகளிலுள்ள நகர்ப்புற சேரிப் பகுதிகளிலும் சேலம் மாவட்டத்தில் கொல்லிமலை, ஏற்காடு பழங்குடி மக்கள் வட்டார வளர்ச்சிப் பகுதிகளிலும் அமுல் நடத்தப் படுகின்றது. இத்திட்டத்தின் கீழ் சென்னையிலுள்ள மாடர்ன் பேக்கரீஸ் (இந்தியா) லிமிடெட் நிறுவனத்தினால் விநியோகிக்கப்படுகின்ற சத்து நிறைந்த இனிப்பான பால் சொட்டியினால் குழந்தைகள் போஷிக்கப் படுகிறார்கள். அடையாள அட்டைகள் கொண்டுவரும் ஒவ்வொரு

குழந்தைக்கும் மூன்று சொட்டித் துண்டுகள், மொத்தத்தில் 75 கிராம் நிறையுள்ளவை வழங்கப் படுகின்றன. இவ்வளவு வழங்குதல் ஒரு வாரத்தில் 5 நாட்களுக்கும் ஒரு ஆண்டுக்கு 250 நாட்களுக்கும் நடைபெறும். ஒவ்வொரு குழந்தைக்கும் ஒவ்வொரு நாளும் வழங்கப்படுகின்ற இச்சத்துணவின் விலை 18 பைசாக்களெனவும் போக்கு வரத்து மற்றும் நிர்வாகச் செலவுகளுக்கு 5.5 காசு களெனவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. நகர்ப்புற சேரிப்பகுதிகளில் வாழும் 6 மாதங்கள் முதல் 3 ஆண்டுகள் வரையுள்ள சுமார் 1,45,000 குழந்தைகள் இத் திட்டத்தினால் பயன்பெறுகின்றனர்.

**திரு. வி. ஈஸ்வரமூர்த்தி:** தலைவரவர்களே, சத்துணவு வழங்குவதை எந்த அதிகாரிகள் செய்கிறார்கள்?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து:** இது இப்போது சமூக நலத் துறை மூலமாக நிர்வகிக்கப்படுகின்றது. "மில்க் ஆஃப் சர்வீஸ்", குழந்தை கள் நல கவுன்சில், ரோட்டரி கிளப், லியன்ஸ் கிளப், ரவுண்ட் டேபிள் வணிகர் நிலைய மன்றம், சிரனி முதலியவற்றின் மூலமாக வழங்கப்படுகிறது.

**திரு. டி. சந்தோஷம்:** நகர்ப்புறச் சேரிகளில் இந்தத் திட்டம் செயல் படுவது நல்லதுதான். மகிழ்ச்சிக்குரியது. ஆனால் இந்தத் திட்டத்தைக் கிராமப் பகுதிகளுக்கு விஸ்தரிக்கும் நோக்கம் சமீபத்தில் அரசிற்கு உண்டா?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து:** முதலிலே சென்னை மாநகரத் திற்கு வழங்குவது, பிறகு, திருச்சி, கோவை, மதுரை நகரங்களுக்கு விஸ்தரிக் கலாம் என்றிருக்கிறது. ஒரு லட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் தொகை உள்ள நகராட்சிகளுக்கு விஸ்தரிக்கலாம். பிறகு கிராமங்களுக்குச் செல்லலாம். மத்திய அரசாங்கத்தின் ஒப்புதல் மீதுதான் கிராமப் புறங்களுக்குச் செல்ல முடியும்.

**திரு. எஸ். ஜெயராமரெட்டியார்:** தலைவர் அவர்களே, மத்திய திட்ட அமைச்சர் திரு. சுப்பிரமணியம் அவர்கள் அமைச்சராவதற்கு முன்பு சத் துணவு உலக மகாநாட்டிற்குத் திட்டம் தயாரிக்கும் முறையில் போயிருந் தார்கள். அதன் பேரில் விவாதம் நடத்தி முடிவு செய்யப்பட்டதை ஒட்டி கருத்துக்கள் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருக்கின்ற னவா?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து:** பாரிஸ் மாநகரத்தில் "யுனி செஃப்" நிறுவனம் ஏற்கனவே பலமுறை இந்திய அரசாங்கத்தை இந்தத் திட்டத்தை அமுல் நடத்துமாறு கேட்டிருக்கிறார்கள். நான்கூட 1968-ல் பாரிஸ் சென்றபோது "யுனிசெஃப்" நிறுவனத்தினர் என்னிடம் சொன்னார் கள். மத்திய அரசாங்கம் அதற்கான ஏற்பாடுகளைச் செய்தால், மாநில அளவில் அதை நடத்துகிறோம் என்று நான் கூட உறுதி கொடுத்துவிட்டு வந்தேன். அந்த அடிப்படையில்தான் இந்தத் திட்டம் இப்போது நிறைவேற்றப்பட்டு வருகிறது.

**திரு. கே. ராஜாராம்:** இந்தத் திட்டத்தை நகர்ப்புறங்களில் மட்டும்தான் அமுல் நடத்துவார்களா? கிராமப்புறங்களுக்கு வேண்டாமென்று மத்திய அரசு கூறியிருக்கிறதா? பின்னால் கிராமங்களுக்கு விஸ்தரிக்க வேண்டுமென்று சொல்லப்படுகிறதா?



**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து:** முதலில் 'அர்பன் ஏரியா' என்று சொல்கிற நகர்ப்புற மக்களுக்குத் திட்டம் துவக்கப்பட்டது. இந்தியா விலேயே நமது மாநிலத்தில்தான் அதிகப்படியான நகர்ப்புறக் குழந்தை களுக்கு இத்திட்டத்தின் மூலம் சொட்டிகள் கொடுத்திருக்கிறோம். நாம் அதி கப்படியாக 25 சத விகித குழந்தைகளைச் சேர்த்துக்கொள்ளலாம் என்று ஒப்புதல் கொடுத்து, இப்போது 1 லட்சத்து 40 ஆயிரம் குழந்தைகளுக்குக் கொடுத்துவருகிறோம். இதுவரையில் நகர்ப்புறக் குழந்தைகளுக்குக் கொடுக்கப் படுகிறது. இனி மத்திய அரசைக் கிராம மக்களுக்குக் கொடுக்க ஒப்புதல் கேட்டு நீடிக்கலாம். இது நல்ல திட்டம் என்று அனைவரும் ஒத்துக்கொண்டி ருக்கிறார்கள்.

**திரு. சா. கணேசன்:** தலைவர் அவர்களே, குடிசை வாழ் பகுதி மக்க ளுக்கு பால், சொட்டி போன்றவற்றை வழங்குவதற்குப் பதிலாக இதனிலும் விலை மிக மலிவானதும், சத்து மிக்கதாகவும் உள்ள தானியங்கள், பயறு வகை கள் ஆகியவற்றை முளை கட்டி அந்த முளை மாவை அல்லது முளைத் தானியங் களை ('மால்டட் ஃபூட்' என்று சொல்வதை) வினியோகிக்க அரசு கருது கிறதா? அதுபற்றி ஏதாவது செயல்முறை அரசிடம் உண்டா?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து:** இதுவரையில் சொட்டி தயாரித் துக் கொடுப்பதுதான் கலபமானது என்று மத்திய அரசாங்கம் இதற்கு ஏற்பாடு செய்தார்கள். இதை மாடர்ன் பேக்கரி மூலமாக தயார் செய் கிறார்கள். பாலுடன் சேர்ந்த சொட்டி இது. பாலின் சத்து சொட்டியில் சேர்க்கப்பட்டு பால் தனியாக, சொட்டி தனியாகக் கொடுக்க முடியாது என்ப தால் இரண்டையும் சேர்த்துத் தரப்படுகிறது.

**திரு. டி. கே. அப்பையா:** தலைவர் அவர்களே, மத்திய சர்க்கார் கொடுக்கக் கூடிய சத்துணவு, பொருள்களாகக் கொடுக்கப்படுகிறதா, பணமாகக் கொடுக் கப் படுகிறதா? பணமாகக் கொடுத்தால், மொத்தம் எவ்வளவு ஆண்டுதோறும் தருகிறார்கள்? அதை ஏற்றுவதற்கும் குறைப்பதற்கும் அவர்களுக்கு அதிகா ரம் இருக்கிறதா? நாம் கேட்கும் அளவிற்குக் கொடுப்பார்களா?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து:** அவர்களாகவே தயாரித்துக் கொடுத்த திட்டம்தான் இது. இந்த ஆண்டு வரையில் ரூ. 22.08 லட்சம் கொடுத்திருக்கிறார்கள். நாம் இத்திட்டத்தை அதிகமாக நீட்டிக்க நீட்டிக்க, மத்திய அரசாங்கம் நமக்கு உதவி செய்யும் என்ற நம்பிக்கை இருப்பதற்குக் காரணம், இங்கே இதில் அக்கறையோடு செயல்படுவது. இதை எல்லோரும் பாராட்டுகிறார்கள். சமீபத்தில் நடைபெற்ற மகாநாட்டில் கூட எல்லா மாநிலங் களையும் விட தமிழகம் செம்மையான முறையில் நடக்கிறது என்று பாராட்டி னார்கள். நாம் கேட்டால் கொடுப்பார்கள் என்ற நம்பிக்கை இருக்கிறது.

**திரு. எம். ராமநாதன்:** தலைவர் அவர்களே, தற்போது கொடுக்கப்படுகிற சொட்டியானது ஏற்கனவே கொடுக்கப்பட்ட சொட்டியை விட தரத்தில் குறை வாக இருப்பதால், அதைப்பற்றிய புகார் அரசிற்கு வந்திருக்கிறதா? அதைப் பற்றிய விளக்கம் மன்றத்தில் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து:** இப்போது கொடுக்கப்படுகிற சொட்டியைப்பற்றிப் புகார் வரவில்லை. தற்போது மாண்புமிகு உறுப்பினர் கூறியதைத் தவிர. மாடர்ன் பேக்கரி என்ற அந்த நிறுவனத்தில்தான்

எப்போதும் தாயர் செய்து கொடுக்கிறார்கள். நாம் ஒரே தரமாக இருப்பதாகத் தான் நாம் கருதுகிறோம். குறைபாடு எங்கேனும் இருந்தால், மாண்புமிகு உறுப்பினர் அரசாங்கத்திற்குத் தெரிவித்தால் தகுந்த நடவடிக்கை எடுக்கப் படும்.

THIRUMATHI S. MANJUBHASHINI : Now that this scheme has been implemented for some time, will the Hon. Minister tell us if there has been any good effect, any improvement of the health and other good aspects of the children, after the implementation of this scheme?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : இது கடந்த ஆண்டுதான் துவக்கப்பட்ட திட்டம். மக்கள் காட்டுகிற வரவேற்பிலிருந்து இது நல்ல பலனைத் தருகிறது என்று தான் நாம் எடுத்துக்கொள்ள முடியும். சொட்டியும் பாலும் ஓரளவுக்கு குழந்தைகளுக்கு சத்தைத் தரும். ஏராளமான குழந்தை கள் சத்துணவு இல்லாத காரணத்தால், போதுமான வளர்ச்சி இல்லாமல் இருக்கிறார்கள். மிக ஏழ்மை நிலையில் இருக்கிற குடிசை வாழ் பகுதி மக்களின் குழந்தைகளுக்கு இச்சத்துணவைத் தருகிறோம். எனவே இது அவர்களுக்கு ஒரு வரப்பிரசாதம்.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, குடிசை வாழ் பகுதி மக்க ளின் குழந்தைகளுக்கு வருகிற பெரும்பான்மையான வியாதிகள் உணவுப் பற்றாக்குறை என்றும் குறிப்பாக அந்த உணவில் புரட்டீன் சத்து குறைவாக இருப்பதாகவும் சொல்கிறார்கள். ஆகையால் பால் சொட்டியோடு புரட்டீன் சத்தையும் சேர்த்துக் கொடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : பாலில் புரட்டீன் சத்து நிறைய இருக்கிறது. இப்போது அது போதும்.

திரு. கே. எல். அப்துல் வகாப் : சத்துணவுத் திட்டத்தை அமுல்படுத்தி எத்தனை காலமாயிற்று? அதன் மூலமாக இது வரையில் பலன் பெற்ற தாயர் களின் எண்ணிக்கை உத்தேசமாக எவ்வளவு இருக்கும்? அதற்கு இதுவரை யில் செலவிடப்பட்ட தொகை எவ்வளவு?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : கடந்த ஆண்டு துவங்கினோம். ஒரு லட்சத்து நாற்பத்தி ஐயாயிரம் குழந்தைகள் பயன் பெற்றுர்கள். அதற்கு ரூ. 22.08 லட்சம் செலவழிக்கப்பட்டிருக்கிறது.

திரு. எம். சங்கரலிங்கம் பிள்ளை : தலைவர் அவர்களே, இந்தச் சத்துணவுத் திட்டத்தின் மூலம் நகர்ப்புற கர்ப்பிணிகளுக்குச் சத்துணவு கொடுக்கப்படு கிறது. கிராமத்தில் இல்லை. கிராமப்புற கர்ப்பிணிகளைவிட நகர்ப்புற கர்ப்பி ணிகள் சத்து குறைவாக இருக்கிறார்கள் என்ற அடிப்படையில், அப்படிக் கொடுக்கப்படுகிறதா? அல்லது கொடுப்பதற்கு நகர்ப்புறங்களில் எளிதாக இருக்குமென்ற நோக்கத்தில் நகர்ப்புறத்தைத் தேர்ந்தெடுத்தார்களா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : இந்தத் திட்டத்தின் அடிப்படை யில் குடிசைவாழ் பகுதியில் இருக்கிற குழந்தைகளுக்குப் பால் கலந்த சொட் டியைக் கொடுக்கிறோம். நலத் துறையின் மூலமாகவும் மகளிர் நல இலாகா



மூலமாகவும், தாழ்த்தப்பட்டோர் நல இலாகா மூலமாகவும் ஏழை அரிஜன தாய்மார்களுக்கு, கர்ப்பிணிகளுக்குப் பால் மாத்திரம் கொடுக்கிறோம். அது இந்தத் திட்டத்தில் சேர்க்கப்படவில்லை. தனியான திட்டம் அது. கர்ப்பிணித் தாய்மார்களுக்குப் பால் கொடுக்கிறார்களா என்று கேட்டதற்கு, கர்ப்பிணி களுக்கும் பால் கொடுக்கிறோம் என்று சொல்லப்பட்டது. அதற்கு வேறு இலாகாவின் மூலமாக வேறு நிதி ஒதுக்கீட்டில் வழங்கப்படுகிறது.

*Fire accidents in Mylapore area*

* 219. Q.— THIRU V. ISVARMURTI : Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state—

(a) whether any financial assistance was rendered to the victims of the fire accidents in Mylapore area in Madras City about 10th May 1971; and

(b) if so, the details thereof?

மயிலையில் நடைபெற்ற தீ விபத்துக்கள்

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி : மாண்புமிகு உணவு-வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) 1971 மே 10-ஆம் நாளன்று சென்னை மயிலையில் நடைபெற்ற தீ விபத்தில் பாதிக்கப்பட்டோருக்கு நிதி உதவி வழங்கப்பட்டதா?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) 10—5—1971 அன்று சென்னை மயிலை பகுதியில் தீ விபத்து ஏதும் ஏற்படவில்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

* 220. Q.—THIRU M. ARUMUGASWAMI : Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state the steps taken by the Government to avoid bogus claims during the disbursement of financial help to the victims of the fire accidents in Mylapore area in Madras city about 10th May 1971?

திரு. எம். ஆறுமுகசாமி : மாண்புமிகு உணவு-வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

1971 மே 10-ஆம் நாள் அளவில் சென்னை மயிலையில் ஏற்பட்ட தீ விபத்தில் பாதிக்கப்பட்டோருக்கு நிதி உதவி வழங்கியதில் நிதி வேண்டிப் போலி விண்ணப்பங்கள் செய்து கொள்ளப்படுவதைத் தடுக்க அரசு எடுத்துள்ள நட வடிக்கை யாவை?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : சென்னை மைலாப்பூர் வட்டாரத்தில் 10—5—1971 அன்று தீ விபத்து ஏற்படவில்லை.

* 221. Q.—THIRU M. ARUMUGASWAMI: Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state—

(a) whether there was any fire accident about 9th May 1971 in Mylapore; and

(b) if so, the details thereof?

திரு. எம். ஆறுமுகசாமி: மாண்புமிகு உணவு-வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்கவேண்டுகிறேன்:

(அ) 1971 மே 9-ஆம் நாள் அளவில் மயிலையில் தீ விபத்து ஏற்பட்டதா?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) ஆம்.

(இ) 323 குடிசைகள் தீ விபத்தில் அழிந்தன. 737 குடும்பங்கள் பாதிக்கப்பட்டன. இழந்த பொருட்களின் சேதம் சுமார் 1 லட்சம் என மதிப்பிடப்படுகிறது. இவ்விபத்தில் உயிர்ச்சேதமோ அல்லது கால்நடை சேதமோ ஏற்படவில்லை. மொத்தமாக ரூ. 33,680 பாதிக்கப்பட்டவர்களின் துயர் துடைப்பதற்காக மான்யமாக வழங்கப்பட்டுள்ளது.

திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு: தலைவர் அவர்களே, தீ விபத்தினால் பாதிக்கப்பட்ட ஏழை மக்களுக்கு உதவி வழங்குவதைப் போல பெரும் காற்று, சூறாவளிக் காற்றினால், அரிஜன மக்கள் குடியிருப்புகளில் ஓட்டு வில்லைகள் முழுவதும் தூக்கியெறியப்பட்டு கூரையில்லாமல் கஷ்டப்படுகின்ற நிலையில் உள்ளவர்களுக்கு, இதேபோன்ற உதவி செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மூலக் கேள்விக்கும் இதற்கும் தொடர்பில்லை.

*Toll Gate, Kallipet village.*

* 222. Q.—THIRU G. SWAMINATHAN: Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(a) the total amount collected at the Toll Gate, Kallipet Village, South Arcot District, till 31st May 1970;

(b) the purpose for which the amount has been collected; and

(c) the period for which the amount will be collected?

**கள்ளிப்பட்டு சோம சுங்கச் சாவடி.**

திரு. ஜி. சுவாமிநாதன்: மாண்புமிகு பொதுப் பணி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) தென் ஆற்காடு மாவட்டம் விழுப்புரம் தாலுக்கா கள்ளிப்பட்டு சோம சுங்கச் சாவடியில் 31—5—1970 முடிய வசூலிக்கப்பட்ட கட்டணம் எவ்வளவு?

(இ) எதற்காக இக்கட்டணம் வசூலிக்கப்படுகிறது?

(உ) இன்னும் எவ்வளவு காலத்திற்கு வசூலிக்கப்படும்?



மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாஷா: (அ) 1970 மே திங்கள் முடிய வசூலிக்கப்பட்ட சுங்கவரியின் மொத்தத் தொகை ரூ. 2,45,661.05 ஆகும்.

(இ) விக்கிரவாண்டி மேம் அணைக்கட்டுச் சாலையில் பொன்னியாற்றின் குறுக்கே பாலம் ஒன்றைக் கட்டியதில் ஏற்பட்ட மூலதனச் செலவு ஈடு செய்வதற்காக.

(உ) மூலதனச் செலவு ஈடு செய்யப்படும்வரை சுங்கவரி வசூலிக்கப்படும்.

திரு. ஜி. சுவாமிநாதன்: செலவு எவ்வளவு என்பதையும் எவ்வளவு காலத்திற்கு வசூலிக்க வேண்டியிருக்கும் என்பதையும் அமைச்சர் தெரிவிப்பாரா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாஷா: அதற்கான செலவு ரூ. 14.88 லட்சமாகும். அந்தத் தொகை வசூலிக்கப்படுகிற வரையில் சுங்க வரி வசூலிக்கப்படும்.

திரு. டி. கே. சுப்பையா: தலைவர் அவர்களே, இந்தச் சுங்க வரியானது மாநில அரசினுல் கட்டப்பட்ட பாலத்திற்கு மட்டும்தானு வசூலிக்கப்படுகிறது? மத்திய அரசினுல் கொடுக்கப்பட்ட நிதியிலிருந்து கட்டப்பட்ட பாலத்தில் சுங்க வரி வசூலிக்கப்படுகிறதா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாஷா: மாநில அரசினுல் கட்டப்படும் பாலத்திற்குச் சுங்க வரி விதிக்கப்படுகிறது. தேசிய நெடுஞ்சாலைக்கு விலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது.

THIRU A. R. DAMODARAN: Sir, may I know if it is the intention of the Government to collect tolls for new causeways that are built? Am I to understand that that policy has been given up now, Sir?

THE HON. THIRU S. J. SADIQ PASHA: Sir, the policy was in force till 1st April 1965 and the same has been revised since then. Only in case of bridges costing over Rs. 10 lakhs, toll is collected. Toll on ghat roads has been abolished from 1st April 1965 and National Highways have been exempted.

*Ponnani River Project.*

* 223. Q.—THIRU T. K. SUBBIAH: Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(a) whether there is any proposal regarding the Ponnani River Project in Tiruchi District;

(b) the regions and the extent of lands block-wise which will be benefited by irrigation; and

(c) the estimated cost of the project?

### பொன்னேரி ஆறு திட்டம்

திரு. டி. கே. கப்பையா : மாண்புமிகு பொதுப் பணி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) திருச்சி மாவட்டத்தில் பொன்னேரி ஆறு திட்டம் பற்றிய செயற் வரிப்பு ஏதேனும் உள்ளதா ?

(இ) எந்தெந்த வட்டாரத்தில் எவ்வளவு ஏக்கர் பாசன வசதி பெறும் ?

(உ) மதிப்பீடு தொகை எவ்வளவு ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாஷா : (அ) ஆம்.

(இ) 1830 ஏக்கர் புதிய நிலங்களும் 271 ஏக்கர் பழைய நிலங்களும் இத் திட்டத்தினால் பயன் அடையும். பாசன வசதி பெறும் நிலங்கள் முகவனூர், மணப்பாறை வட்டம் எல்லையிலேயே அமைந்துள்ளன.

(உ) திட்டத்திற்கான மதிப்பீடு ரூ. 50.75 லட்சம்.

திரு. டி. கே. கப்பையா : தலைவர் அவர்களே, திட்டம் துவக்கப்பட்டு விட்டதா ? இல்லையென்றால், எப்போது துவங்கப்படும் ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாஷா : துவக்க வேலைகள் நடைபெற்று வருகின்றன. இந்தத் திட்டத்திற்கு அனுமதி ஏற்கனவே அரசாங்கம் அளித் திருக்கிறது. டெக்னிகல் சாங்ஷன், அட்மினிஸ்ட்ரேட்டிவ் சாங்ஷன் கொடுக்கப் பட்டன. ஆயத்த வேலைகள் நடைபெற்று வருகின்றன.

### *Subway*

* 224. Q.—THIRU M. ARUMUGASWAMI : Will the Hon. the Minister for Public Works be pleased to state the steps taken by the Government to prevent the water getting flooded during rainy seasons in the subway at Round Tana in mount Road?

### சுரங்கப் பாதை

திரு. எம். ஆறுமுகசாமி : மாண்புமிகு பொதுப் பணி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

மழைக் காலத்தில் அண்ணா சாலை, ரவுண்டானாவிலுள்ள (Round Tana) சுரங்கப் பாதையில் வெள்ளப் பெருக்கைத் தடுத்திட அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாஷா : இயல்பான காலங்களில் மழை நீர் புகாத வகையில் ரவுண்டானா சுரங்கப்பாதை கட்டப்பட்டுள்ளது.

### *Kambikkudi Channel Scheme*

* 225. Q.—THIRU V. THANGAPANDIAN : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(a) the action taken by the Government regarding the Kambikkudi Channel Scheme in Aruppukkottai taluk, Ramanathapuram District; and

(b) whether the Government have received any petition from the people of that area to execute this scheme?



### கம்பிக்குடி கால்வாய்த் திட்டம்

திரு. வி. தங்கபாண்டியன் : மாண்புமிகு பொதுப் பணி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) இராமநாதபுரம் மாவட்டம், அருப்புக்கோட்டை தாலுக்காவில் கம்பிக்குடி கால்வாய்த் திட்டம் பற்றி அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத் துள்ளது ?

(இ) இந்தத் திட்டத்தை நிறைவேற்றும்படி அந்தப் பகுதி மக்களின் கோரிக்கை மனு அரசாங்கத்திற்கு வந்துள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : (அ) & (இ) :இராமநாதபுரம் மாவட்டம், அருப்புக்கோட்டை தாலுக்காவில் கம்பிக்குடி கால்வாய் என்பது முன்பே உள்ளது. 1969 நவம்பரில் ரூ. 63,000 செலவில் இந்தக் கால்வாய் பழுது பார்க்கப்பட்டது. சென்ற நிதி ஆண்டில் ரூ. 20,000-க்கு பஞ்ச நிவாரண வேலையின் கீழ் மேற்கூறிய கால்வாய் திட்டத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது. எல்லா வேலைகளும் முடிவுறப்பட்டன. கம்பிக்குடி கண்மாயை விசேஷமாக பழுது பார்ப்பதற்கு ரூ. 1,00,000-க்கு ஒரு மதிப்பீட்டிற்கு ஒப்புதல் அளிக்கப் பட்டு வேலைகள் துவக்கப்பட்டுவிட்டன.

திரு. வி. தங்கபாண்டியன் : தலைவர் அவர்களே, அருப்புக்கோட்டைப் பகுதி யில் சுமார் 1,800 ஏக்கருக்கு மேல் பாசன வசதி பெறுகிற இந்தக் கம்பிக்குடி கால்வாய்த் திட்டத்தை மதுரை வைகைத் திட்டத்தோடு இணைப்பதற்கு அரசாங்கத்திடம் ஏதேனும் செயல்குறிப்பு இருக்கிறதா ? இல்லாவிட்டால் அதைப் பற்றி ஆலோசிக்குமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாஷா : மூலக்கேள்விக்கும் இதற்கும் தொடர்பில்லை. ராமநாதபுரம் மாவட்டப் பிரச்னை கவனிக்கப்படும்.

### *Instant Employment*

* 226. Q.—THIRU D. SANTOSHAM : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(a) whether the Central Government has proposed a scheme for providing "Instant Employment" by constructing a large number of over and under bridges across Railway lines and invited the co-operation of State Governments by bearing half the cost of the constructions;

(b) if so, whether the State Government extended its co-operation; and

(c) if so, the details thereof?

### "உடனடி வேலை வாய்ப்பு"

திரு. டி. சந்தோஷம் : மாண்புமிகு பொதுப் பணி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) இரயில் பாதைகளுக்குக் குறுக்கே மேம் பாலங்களையும், சுரங்கப் பாதைகளையும் பெருமளவில் கட்டுவதன் மூலம் "உடனடி வேலை வாய்ப்பு" அளிக்கும் திட்டமொன்றைத் தயாரித்து, அந்தக் கட்டுமானங்களில் பாதிச் செலவை ஏற்றுக் கொள்ளுமாறு மாநில அரசுகளை கேட்கவும் மத்திய அரசு கருதியுள்ளதா ?

(இ) ஆமெனில், மாநில அரசு தனது ஒத்துழைப்பை அளித்துள்ளதா?

(உ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாஷா: (அ) இல்லை.

(இ) & (உ): இக் கேள்விக்கு இடமில்லை.

THIRU D. SANTOSHAM : Mr. Chairman, Sir, in view of such an announcement by the Hon. the Minister for Railways in his Budget speech in the Parliament, will the Government at least try to find out the information whether there is any such scheme and whether such a scheme could be made use of for the benefit of the unemployed in our State?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாஷா: அப்படியொரு திட்டம் மத்திய அரசினிடம் இருக்குமானால், நாம் மன மகிழ்ச்சியோடு அதை வரவேற்போம். நிலைமை என்னவென்றால், முன்னர் இன்ஜினியர்களை அமைத்துக்கொள்ள உதவி செய்வதாகச் சொல்லி, பிறகு அங்கிருந்து உதவி வரவில்லை. பிறகு மாநில அரசு அந்தச் செலவையும் ஏற்றுக்கொண்டு வேலை வாய்ப்பு கொடுக்க நடவடிக்கை எடுத்தோம். அதன்படி 200 இன்ஜினியர்களுக்கு வேலை அளிக்கப் பட்டது.

## *Foreshore Estate.*

*227. Q.— THIRU V. THANGAPANDIAN (on behalf of THIRU P. THIRUGNANASAMBANDAM) : Will the Hon. the Minister for Backward Classes be pleased to state—

(a) the number of complaints lodged in complaints Register about the defects found in AR, AS, AT, AU, AV and AW Blocks of Foreshore Estate, Madras during the period from 1st September, 1970 to 5th April, 1971 by the residents of those Blocks; and

(b) among them, the number of complaint that remain unattended, as on 5th April, 1971?

பட்டினப்பாக்கம்

திரு. வி. தங்கபாண்டியன் (திரு. பி. திருஞானசம்பந்தம் சார்பில்): மாண்புமிகு பிற்பட்ட வகுப்பினர் நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சென்னை, பட்டினப்பாக்கம், AR, AS, AT, AU, AV, AW கட்டிடத் தொகுதிகளில் காணப்படும் குறைகள் குறித்து அந்தப் பிரிவுகளில் வாழும் மக்கள் 1970 செப்டம்பர் 1-ஆம் நாளிலிருந்து 1971 ஏப்ரல் 5-ஆம் நாள் வரை புகார்ப் பதிவேட்டில் பதிவு செய்துள்ள புகார்களின் எண்ணிக்கை எவ்வளவு?

(இ) அவற்றுள், 1971 ஏப்ரல் 5-ம் நாள் அன்றுள்ளபடி கவனிக்கப் படாத புகார்களின் எண்ணிக்கை எவ்வளவு?

மாண்புமிகு திரு. க. ராசாராம்: (அ) பதினொன்று.

(இ) ஒன்று.

## *Houses for Low and Middle Income Groups*

*228. Q.—THIRU V. THANGAPANDIAN : Will the Hon. the Minister for Backward Classes be pleased to state—

(a) whether there is any proposal with the Government to provide housing facilities for Low and Middle Income Groups; and



24th July 1971]

(b) if so, whether financial assistance from the Centre has been obtained for this scheme, during the financial year 1971-72?

குறைந்த, நடுத்தர வருவாயுள்ளவர்களுக்கு வீடு

திரு. வி. தங்கபாண்டியன்: மாண்புமிகு பிற்பட்ட வகுப்பினர் நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) குறைந்த, நடுத்தர வருமானமுள்ளவர்களுக்கு வீடு கட்டித் தருவதற்கு அரசாங்கத்திடம் செயற்குறிப்பு உள்ளதா?

(இ) ஆம் எனில், இந்தத் திட்டத்திற்கு மத்திய அரசாங்கத்தின் நிதி உதவி 1971-72-ஆம் நிதி ஆண்டிற்குக் கிடைத்துள்ளதா?

மாண்புமிகு திரு. க. ராசாராம்: (அ) தமிழ்நாட்டு வீட்டு வசதி வாரியம் 1971-72-ஆம் ஆண்டில் குறைந்த வருவாயுள்ளோருக்கு 1,560 வீடுகளும், நடுத்தர வருவாயுள்ளோருக்கு 700 வீடுகளும் கட்ட திட்டமிட்டிருக்கிறது. இதற்கு வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் முறையே ரூ. 30 லட்சமும், ரூ. 55 லட்சமும் கடனுக கொடுக்க ஒதுக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் கூட்டுறவுப் பிரிவு குறைந்த வருவாயுள்ளோர்க்கான வீட்டு வசதித் திட்டத்தின் கீழ் 350 வீடுகளும் நடுத்தர வருவாயுள்ளோர் வீட்டு வசதித் திட்டத்தின் கீழ் 50 வீடுகளும் கட்டுவதற்கு கடன் கொடுக்க திட்டமிட்டிருக் கிறது. இதற்கு வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் முறையே ரூ. 30 லட்சமும், ரூ. 10 லட்சமும் ஒதுக்கப்பட்டுள்ளது. மிகுதி செலவு வாரியமே ஏற்றுக் கொள்ளும்.

(இ) மத்திய உதவி பெற்ற எல்லா மாநில திட்டங்களுக்கும் சேர்ந்து மொத்த கடனுகவும் மொத்த நிதி உதவியாகவும்தான் இந்திய அரசால் கொடுக்கப்படுகிறது.

திரு. வி. தங்கபாண்டியன்: குறைந்த நடுத்தர வருமானமுள்ளவர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கும் திட்டத்தைத் தமிழ்நாட்டில் எல்லா மாவட்டங் களுக்கும் விரிவுபடுத்தி, அதன் மூலமாக ஏற்கனவே மத்திய அரசாங்கம் அரிஜனங்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கிற திட்டத்தை இப்போது மாநில அரசாங்கமும் சேர்த்து மாவட்டங்களில் உள்ள எல்லாப் பகுதிகளுக்கும் விஸ்த ரிக்க அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவர் அவர்களே, அரிஜனங்களுக்கு வீடு கட்டித் தருவது வேறு வகையான திட்டமாகும். இது வீட்டு வசதி வாரி யத்தின் மூலமாகக் கட்டித் தருகிற திட்டம். இதன் மூலமாக மாவட்டத் தோறும் வீடு கட்டித் தருவதற்கு, திட்டம் அரசின் ஆய்வில் உள்ளது.

THIRU A. R. DAMODARAN : Sir, the Government of India had announced that funds would be given in rotation to the States for building such houses. May I know the amount of Revolving Fund for House Construction that we will get from the Government of India?

மாண்புமிகு திரு. க. ராசாராம்: மேலவைத் தலைவர் அவர்களே, அதற்கான குறிப்புகள் என்னிடமில்லை. தனிக்கேள்வி போடவேண்டும்.

[24th July 1971

*Son-et-Lumiere*

* 229. Q.—THIRU D. SANTOSHAM and THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Backward Classes be pleased to state—

(a) whether the Son-et-Lumiere will not be located in the Sree Meenakshi Amman Temple at Madurai as originally proposed; and

(b) whether the State Government will press for its location in the Tirumal Naik's Mahal at Madurai in the alternative ?

**ஒளி-ஒலிக் காட்சி**

**திரு. டி. சந்தோஷம் & திரு. ஜி. சுவாமிநாதன் :** மாண்புமிகு பிற்பட்ட வகுப்பினர் நல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) மதுரை, ஸ்ரீமீனுட்சி அம்மன் கோயிலில் முதற்கண் கருத்து தெரிவித்தபடி ஒளி-ஒலிக் காட்சி (Son et Lumiere) அமைக்கப்படமாட்டாதா ?

(இ) அதற்குப் பதிலாக, இதனைத் திருமலைநாயக்கர் மகாலில் அமைக்கும் படி மாநில அரசு வலியுறுத்துமா ?

**மாண்புமிகு திரு. க. ராசாராம் :** (அ) இந்திய அரசுடன் இப்பொருள்பற்றி கடிதப்போக்குவரத்து நடந்து வருகிறது.

(ஆ) தற்போது எழவில்லை.

THIRU G. VASANTHA PAI : Sir, am I to understand from the Hon. Minister that there is no proposal to institute Son-et-Lumiere?

**மாண்புமிகு திரு. க. ராசாராம் :** மேலவைத் தலைவர் அவர்களே, இந்த ஒளி-ஒலி ஏற்பாட்டைப் பொறுத்த வரையில், மதுரை மீனுட்சி கோயிலில் வைப்பதாக இருந்தது. பிறகு சேலத்தில் கூடிய இந்து கோயில் பாதுகாப்பு மகா நாட்டுக்காரர்கள் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றினர்கள், அத்தோடு 100 பேர் உண்ணாவிரதம் கூட இருந்தார்கள். இந்த ஒளி-ஒலி ஏற்பாட்டை அந்தக் கோயிலில் செய்யக்கூடாது என்று அதைச் செய்தார்கள். அப்போது இங்கே வந்திருந்த மத்திய அமைச்சர் டாக்டர் கரன் சிங் அவர்கள் இதைக் கண்டுவிட்டு ஒளி-ஒலி ஏற்பாட்டை மதுரை கோயிலில் வைப்பதற்குப் பதிலாக மகாபலி புரத்திற்கு மாற்றலாமா என்ற எண்ணத்தைத் தெரிவித்துப் போயிருக்கிறார்கள். அதைப்பற்றிக் கடிதப் போக்குவரத்து நடத்து வருகிறது; முடிவெடுக்கப்படவில்லை.

THIRU D. SANTOSHAM : Mr. Chairman, Sir, on a previous occasion, if I remember correct, the Hon. Minister assured us that in the opinion of this Government, the opening of Son-et-Lumiere in Madurai was the correct thing, since it is the most appropriate place, and that this Government would press on the Government of India for the installation of this Son-et-Lumiere at Madurai and not at Mahabalipuram. Will the Government continue to press like that and even if the Asthikas want that this should not be placed inside Meenakshi Amman Temple, will the Government locate this in some other place in Madurai, particularly in Pudu Mandapam which is the most appropriate place intended for cultural shows?



24th July 1971]

**மாண்புமிகு திரு. க. ராசாராம் :** மேலவைத் தலைவர் அவர்களே, இந்த ஒளி-ஒலி ஏற்பாட்டை சிற்பங்கள் அடங்கிய இடத்தில் வைப்பதுதான் நல்லது. மதுரை நாயக்கன் மகாலில் வைக்க வேண்டுமென்று சிலர் எழுதியிருக்கிறார்கள். அங்கே வைத்து வரலாற்றுச் சிறப்பை எடுத்துச் சொல்வது என்பது சிரமமான காரியம். மதுரை மீனுட்சி கோயில் மேல் பக்கம் பார்த்தால் 27 கோபுரங்கள் இருப்பதாகக் கணக்கிடப்பட்டிருக்கிறது. அதில் எல்லா வகையான சிற்பங்களும் இருக்கின்றன. திருவள்ளுவர் காலத்தியவைகளும், கடைச் சங்க காலப் பெருமைகளும் அங்கே காணப்படுகின்றன. அங்கே ஒளி-ஒலி ஏற்பாட்டை வைத்தால் தமிழர் பண்பாடு, கலாச்சாரம் எல்லாவற்றையும் இணைக்கும் வகையில் அமைக்க முடியும். ஆகவேதான் மதுரையில் வைக்கும் எண்ணம் இருக்கிறது. அது யாருடைய மனதையும் புண்படுத்தவோ மீனுட்சி அம்மனின் மகிமையைக் குறைக்கவோ செய்யப்படுவதல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

THIRU G. VASANTHA PAI : In view of the raging controversy among the archaeologists that the location of Son-et-Lumiere is harmful to the monuments themselves, will the Government kindly consider whether it is at all necessary to locate this Son-et-Lumiere near the arcaeological monuments, before entering into a programme for locating it?

**மாண்புமிகு திரு. க. ராசாராம் :** மேலவைத் தலைவர் அவர்களே, பழங்காலச் சிற்பங்களுக்குப் பக்கத்தில் ஒளி-ஒலி அமைத்தால், பழங்காலச் சிற்பங்கள் எந்த வகையிலும் பாதிக்கப்படுவதில்லை. இந்த நிகழ்ச்சி மாலை 7 மணிமுதல் 9 மணி வரையில் நடக்கப்போவதால், எந்தச் சிற்பமும் அதனால் பாதிக்கப்படாது. மாறாக நல்ல அளவுக்குப் பாதுகாக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கே. ராசாராம் :** தலைவர் அவர்களே, இந்த ஒளி-ஒலி ஏற்பாடு சம்பந்தமான பொருட்காட்சியை மதுரை மீனுட்சி அம்மன் கோவிலில் வைக்கக்கூடாது என்று அந்தக் கோயில் தேவஸ்தானம் ஏதேனும் ஆட்சேபனை தெரிவித்ததா ? மதுரை நகர மக்கள் ஆட்சேபனை தெரிவித்தார்களா ? சேலத்தில் கூடிய மகா நாட்டில் ஆஸ்திகர்கள் என்ற பெயரில் யாரோ ஆட்சேபனை தெரிவித்ததை வைத்துக்கொண்டு இதை மாற்ற முயற்சிக்கலாமா ? இம்மாதிரியான பெரும் பொருட்காட்சியை மக்கள் மிகுதியாக உள்ள பெரும் நகரங்களில் வைத்தால், அதைக் கண்டு பயன்பெறும் மக்கள் அதிகமாக இருப்பார்கள். மகாபலிபுரம் போன்ற இடங்களில் வைத்தால், அங்கே எப்போதாவது வருகிற வெளிநாட்டார் மட்டும்தான் காணக்கூடிய நிலைமை இருக்கும். ஆகவே மதுரையில் வைக்க மத்திய அரசிடம் நம் அரசு வற்புறுத்துமா ? இதே ஆயிரம் கால் மண்டபத்தில் திரு. பக்தவத்சலம் அவர்கள் முதலமைச்சராக இருந்த காலத்தில் பெரிய பொருட்காட்சியை நடத்தினோம். ஏராளமான மக்கள் பார்த்துப் பயன்பெற்றார்கள். ஆகவே மதுரையில் வைப்பதில் ஆட்சேபனையில்லை என்பதை மத்திய அரசுக்கு வற்புறுத்தப்படுமா ?

**மாண்புமிகு திரு. க. ராசாராம் :** எதிர்க் கட்சித் தலைவர் அவர்களின் ஆதரவுக்கு நன்றி தெரிவித்துக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன். சேலத்தில் கூடிய மாநாட்டில் தீர்மானம் போட்டுச் சொல்லியிருக்கிறார்கள்."

**"The present temple authorities are band-maids of the Government which have taken over the administration of temples as a department."**

அதில் உள்ளவர்களைக் குறிப்பிட்டு குற்றம் சாட்டிச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் மதுரையில் உள்ளவர்கள் யாரும் எதிர்ப்பதாக எந்தவிதமான தகவலும் இல்லை. சேலத்தில் கூடிய மதவாதிகள் எதிர்த்திருக்கிறார்கள். எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் ஆதரவும் மற்றவர்கள் ஆதரவும் இருந்தால், அரசு இதை மதுரையில் வைக்க வற்புறுத்தத் தவறுது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கே. எஸ். அப்துல் வகாப் : இந்த ஒளி-ஒலிக் காட்சியைப் பற்றிய விளக்கம் அறிய விரும்புகிறேன். தமிழகத்தில் எங்காவது அது இருக்கிறதா?

மாண்புமிகு திரு. க. ராசாராம் : மேலவைத் தலைவர் அவர்களே, இந்த ஒளி-ஒலி ஏற்பாடு டில்லியிலே இருக்கிற செங்கோட்டையிலே தான் இது வரையில் வைக்கப்பட்டிருக்கிறது. மதுரையில் வைக்கலாமா என்று யோசித்துவருகிற இந்தக் காட்சிக்கு ஆகும் செலவு ரூ. 18 லட்சமாகும். அந்தத் தொகையை மத்திய அரசு ஏற்றுக்கொள்வது என்றும் இருக்கிறது. தமிழகத்தில் அது எங்கும் இல்லை. ஒளி-ஒலி காட்சி எப்படியென்றால், அங்கே உள்ள சிற்பங்களுக்குப் பக்கத்தில் நல்ல வண்ண வண்ண விளக்குகளைப் பொருத்துவார்கள். அதற்குப் பக்கத்தில் ஒலி பெருக்கி மறைவாக அமைக்கப்பட்டிருக்கும். யாராவது தூரத்தில் இருந்துகொண்டு வர்ணனை செய்வார்கள். பாண்டியன் காலத்தைப்பற்றிக் கூறும்போது, அந்த அரசன் வருவதையும் இருப்பதையும் காட்சிகளாகக் காட்டி அதற்கான ஒலியை ஒலிபரப்புவார்கள். வள்ளுவர் காலத்தைக் காட்டுவதற்கு அந்தச் சிற்பத்தின் மீது ஒலியைப் பாய்ச்சி, அவர் குறளை சங்கம் ஏற்றதையும் ஏற்க மறுத்ததையும் வர்ணிப்பார்கள். நக்கீரன் போன்ற புலவர்கள் வருவதையும் காட்சியாக அமைத்துக் காட்டுவார்கள். அவற்றிற்கான தகுந்த வர்ணனையும் ஒலியும் அமைக்கப்படும் போது, அக்காலத்திலேயே நாம் இருப்பதைப்போன்ற உணர்வு ஏற்படும். இதுதான் ஒளி-ஒலி ஏற்பாடு என்பது.

THIRU A. R. DAMODARAN : Sir. I have seen this 'Song and Light' show at Red Fort, Delhi. Generally this Son-et-Lumiere show is located in monuments and historical places and not in places of religious worship. Even in the Capital City of Italy, Rome, where there are so many beautiful Cathedrals, there is no Son-et-Lumiere in a place where regular religious worship is carried on. May I know, Sir, in view of this fact, whether the Government would not consider it more desirable to locate this in Mahabalipuram where there are ample opportunities, because it is really bringing back to life from the dead all those heroes who have died in the past and the songs that have been sung, as the people who have visited the Delhi show will know ? May I know, Sir, whether it would not be desirable to locate it in Mahabalipuram, since I feel that there may be some real basis for objection to the location of the same in a Hindu temple, because no mosque, no church is chosen and it would be wrong to choose a temple for this sort of show?

மாண்புமிகு திரு. க. ராசாராம் : மேலவைத் தலைவர் அவர்களே, இந்தக் கருத்தை அந்த மதவாதி நண்பர்களும் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். மகாபலிபுரத்தில் வைத்தால், எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் கூறியதுபோல, வெளிநாட்டுக்காரர்கள் பார்க்கப் பயன்படுமே தவிர, மற்றவர்கள் பார்க்க இயலாது. மதுரையில் வைத்தால், உள்நாட்டுச் சுற்றுலாப் பயணிகள் வந்து பார்த்துப் பயன்பெறும் அளவுக்கு நம்முடைய கலாச்சாரத்தைப் புரிந்துகொள்



ளும் வகையில் பயன்படும் என்ற எண்ணம் பரவலாக இருக்கிறது. இரண்டையும் சீர் தூக்கிப் பார்த்து அரசு எடைபோட்டு நடத்தும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

THIRU D. SANTOSHAM : Hon. Chairman, Sir, a part of my question put already has not been answered. In the light of what my hon. Friend Thiru Damodaran and the hon. the Leader of the Opposition have stated, will the Government kindly examine the feasibility and desirability of locating this Son-et-Lumiere in the Pudu Mandapam which is an appropriate place with good archaeological monuments and sculptures and which is intended to be a cultural place for those who go there to worship in Meenakshi temple, Madurai?

மாண்புமிகு திரு. க. ராசாராம் : மேலவைத் தலைவர் அவர்களே, புது மண்டபத்தைப் பற்றிய ஆராய்ச்சி இன்னும் நடத்தப்படவில்லை. மதுரை திருமலை நாயக்கன் மகாலைப்பற்றி ஆராய்ந்திருக்கிறார்கள். அதேபோல மீனாட்சி கோயிலைப் பற்றியும் ஆராய்ந்தார்கள். கோயிலிலே வைப்பது சரியாதவறு என்பதைப்பற்றி ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். ஆறு கால பூஜையை இது எந்த வகையிலும் பாதிக்காது. மாலை 7 மணியிலிருந்து 9 மணி வரையில் நடக்கும் காரியம் இது. மதவாதிகளின் மனம் எந்த வகையிலும் புண்படாது. மதத்திற்கு எந்த வகையிலும் புறம்பானதல்ல இது.

திரு. கே. அறிவழகன் : தலைவர் அவர்களே, மதுரையில் அமைக்கப்படாமல், டாக்டர் கரன் சிங் அவர்கள் சொன்னதையொட்டி அது மகாபலிபுரத்தில் அமைக்கப்படுமா? சேலத்தில் கூடிய ஆஸ்திகர்கள் மகாநாட்டில் கூறியதன் காரணத்தால், அதை மாற்றும் எண்ணம் இருக்கிறதா? இதைப் பற்றி மத்திய அரசிடமிருந்து மாநில அரசு அனுமதி வாங்கும் அவசியம் இருக்கிறதா?

மாண்புமிகு திரு. க. ராசாராம் : மேலவைத் தலைவர் அவர்களே, இது மத்திய அரசு ஏற்பாடு செய்கிற ஒரு காரியம். ஆகவே மத்திய அரசினுடைய எண்ணத்தையும் தெரிந்து நடக்கவேண்டியிருக்கிறது. மற்றவர்கள் நேரடியாக மத்திய அரசோடு தொடர்புகொண்டு பல கருத்துக்களைச் சொல்லிய காரணத்தால், டாக்டர் கரன்சிங் இங்கே வந்தபோது, அந்தக் கருத்தைச் சொல்லிப்போயிருக்கிறார்கள். அது குறித்த கடிதப்போக்குவரத்து நடந்து வருகிறது. இறுதியான பதில் நேரடியாகக் கிடைக்கவில்லை. கிடைத்ததும் சபைக்கு அதைத் தெரிவிக்கிறேன்.

திரு. சா. கணேசன் : தலைவர் அவர்களே, பல அன்பர்கள் கூறியது போல எல்லாக் கணக்கையும் வைத்துக்கொண்டு பார்த்தால், புது மண்டபம் எல்லா வகையிலும் பொருத்தமானது. அங்குள்ள சிற்பங்கள், மண்டபக் கட்டுமானம், முதலியவற்றிலும் அம்மண்டபம் மிகச் சிறப்பாக அமைந்த ஒன்று. திருமலை நாயக்கன் மகால் என்பது வெறும் சுண்ணாம்புக் காரைக் கட்டிடம்தான். வேறு சிற்பங்கள் கிடையாது. இது கோயிலுக்குப் பக்கத்திலும் சிற்பங்கள் நிறைந்ததாகவும் வளமான இடவசதியுள்ளதாகவும் இருக்கிறது. எனவே இங்கு வைத்துக்கொள்ளலாம். அடுத்து, இந்த ஒளி-ஒலிக் காட்சி என்று போட்டிருப்பது தவறு. ஒலியைக் காண முடியாது. ஆகையால் ஒளி-ஒலி அமைப்பு என்று இருக்க வேண்டும்.

திரு. எஸ். டி. ஆதித்தன் : 'கட்செவி' என்பதிலிருந்து காட்சி வந்தது.

திரு. சா. கணேசன் : அது தவறு. அது இங்கே பொருந்தவில்லே. புது மண்டபத்தில் வைப்பது எல்லா வகையிலும் பொருத்தமானதாக இருக்கு மென்று கருதி, அதற்கான நடவடிக்கையை அரசு எடுக்குமா? இல்லை விட்டால் சமய, கலே, வரலாறு ஆகியவை தொடர்பான ஒரு சிறு குழுவை நியமித்து, அதன் மூலமாக ஒரு முடிவு எடுக்க முயற்சிப்பார்களா?

மாண்புமிகு திரு. க. ராசாராம் : மேலவைத் தலேவர் அவர்களே, அங்கத் தினர் அவர்களுடைய ஆலோசனையை அரசு ஆலோசிக்கும் என்று தெரிவித் துக்கொள்கிறேன்.

THIRU A. R. DAMODARAN : Sir, in case this Son-et-Lumiere is located in Meenakshi Temple, Madurai, where does the Hon. Minister propose to provide sitting accommodation for the visitors? Is it inside the temple or outside the temple?

மாண்புமிகு திரு க. ராசாராம் : தலேவர் அவர்களே, அந்த மண்டபத்திற்கு மேலே ஆயிரக்கணக்கான பேர்கள் உட்காருவதற்கான அருமையான இடம் இருக்கிறது. அதைப் பார்த்த பிறகு தான் அந்த எண்ணமே வந்தது.

திரு. எம். ஆறுமுகசாமி : தலேவர் அவர்களே, மதுரையிலே அமைப்பதா அல்லது மாமல்லபுரத்திலே அமைப்பதா என்று இரு பக்கத்திலும் கோரிக்கை இருப்பதால், இந்தக் காட்சியைத் தஞ்சாவூர் பிரகதீஸ்வரர் கோயிலிலே வைப்ப தற்கு ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. க. ராசாராம் : தலேவர் அவர்களே, மதுரையிலிருந்து மாமல்லபுரம் வரையில் வந்த இந்தப் பிரச்னையைத் தஞ்சாவூருக்கு மாற்ற தற் போது விரும்பவில்லே.

திரு. எஸ். டி. ஆதித்தன் : தலேவர் அவர்களே, கோயிலுக்குள்ளே வைப்ப தால் எத்தனே ஆஸ்திகர்கள் மனம் புண்படுமோ அதைவிட கோயிலுக்குள் வைக்காமல் விட்டால், அதிகமான ஆஸ்திகர்களின் மனம் புண்படும் என்பதை அரசு அறியுமா?

மாண்புமிகு திரு. க. ராசாராம் : தலேவர் அவர்களே, இப்போது மதுரை யிலுள்ள "சேம்பர் ஆஃப் காமர்ஸ்", மற்றவர்கள் இதைப்பற்றிக் கடிதம் எழுதி யிருக்கிறார்கள். தாங்கள் இதில் ஆர்வம் காட்டுவதாகவும் மதுரையிலிருந்து மாற்றக் கூடாது என்றும் மத்திய அரசிற்கும் மாநில அரசிற்கும் கருத்து தெரி வித்திருக்கிறார்கள். அது அரசின் கவனத்தில் இருக்கிறது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

### *Forester's quarters*

* 230. Q.—THIRU V. ISVARMURTI : Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(*a*) whether the Forest Department has taken up the work of construction of single Forester's quarters at Amaravathi in Coimbatore District; and

(*b*) if so, the details thereof?



**வனப் பணியாளர்களுக்காக ஒற்றைக் குடியிருப்புகள்**

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி : மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர் கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், அமராவதியில் வனப் பணியாளர்களுக் காக ஒற்றைக் குடியிருப்புகள் கட்டும் பணியை வனத்துறை மேற்கொண்டுள் ளதா?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன் : (அ) & (இ) கோயம்புத்தூர் மாவட் டம் அமராவதியில், வனப்பணியாளர்களுக்கு ஒற்றைக் குடியிருப்பு (Single Forester's Quarters) கட்டிக்கொடுக்கும் பணியை வனத்துறையே மேற்கொண்டது. ரூபாய் 14,100 மதிப்பீட்டுச் செலவில் கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

### *Trustees*

*231. Q.—THIRU G. SWAMINATHAN : Will the Hon the Minister for Religious Endowments be pleased to state—

(*a*) whether it is a fact that trustees have not been appointed for Haraspa Vimochana Perumal Temple, Kandiyur, Thanjavur district during the last 8 months; and

(*b*) if so, the reason therefor?

**அறங்காவலர்கள்**

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு அறநிலேய அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தஞ்சாவூர் மாவட்டம், கண்டியூரிலுள்ள ஹரசப்ப விமோசன பெருமாள் கோயிலுக்குக் கடந்த 6 மாதங்களாக அறங்காவலர்கள் நியமிக்கப் படவில்லே என்பது உண்மையா?

(இ) ஆம் எனில், அதன் காரணம் யாது?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : (அ) 31—7—1970 முதல் 15—5—1971 வரை எந்த அறங்காவலரும் நியமனம் செய்யப்படவில்லே.

(இ) இந்த ஆலயம் 31—1—1970-ல் தமிழ்நாடு இந்து சமய அறநிலேய சட்டம் 46-ம் பிரிவின்கீழ் பட்டியலில் சேர்க்கப்பட்டது. சட்டப்படி இக்கோ யிலுக்கு ஆணேயர் அறங்காவலர் குழு அமைக்க வேண்டியிருந்தது. ஆணே ஆணேயரிடமிருந்து கருத்து பெற்று, அவ்வாலேயத்தின் திட்டத்தின் விதிகளின் படி உள்ளதா என ஆய்ந்த பின்னர், முடிவாக 15—5—1971-ல் அறங்காவலர்கள் நியமிக்கப்பட்டனர்.

### *Temple Honours*

* 232. Q.—THIRU M. ARUMUGASWAMI : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state whether there is any proposal under the consideration of the Government to abolish the system of Temple Honours?

[24th July 1971

**கோயில் மரியாதை முறை**

**திரு. எம். ஆறுமுகசாமி :** மாண்புமிகு அறநிலைய அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

கோயில் மரியாதைகள் அளிக்கும் முறையை நீக்கிவிடும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : இல்லை.**

THIRU A. R. DAMODARAN : Sir, may I know what exactly is meant by the term ' temple honours'?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** முக்கியமான நபர்கள் என்று கருதப்படுகிறவர்களுக்கு ஆலயங்களில் வரவேற்பு அளிக்கப்படுகிறது. பிரசாதம் தருவது, பரிவட்டம் கட்டுவது, தீர்த்தம் வழங்குவது போன்ற காரியங்களை மரியாதை என்று நாம் கொள்கிறோம்.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** தலைவர் அவர்களே, விபூதி, குங்குமம் போன்ற பிரசாதம் வழங்குவதைக்கூட மரியாதையாகக் கருதுகிறார்களா ? அப்படியானால், வேறு மதத்தைச் சேர்ந்தவர்களுக்கு இந்தப் பிரசாதம் வழங்குவது சரியானதா ?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** வேறு மதத்தினருக்கு வழங்குவதைப் பற்றிய குறிப்புகள் ஏதும் இல்லை. ஆனால் மரியாதை என்பது முக்கியமான ஜனாதிபதி, கவர்னர், மத்திய மாநில அமைச்சர்கள் போன்றவர்களுக்கு அவர்கள் ஆலயங்களுக்கு வரும்போது செய்யப்படுவதாகும். பரிவட்டம் கட்டுவது, தீர்த்தம் வழங்குவது, விபூதி போன்ற பிரசாதம் கொடுப்பதும் நடக்கின்றன.

**திரு. எம். ஆறுமுகசாமி :** மரியாதையைப் பெறுவதற்கு உரிய தகுதியைப் பற்றி அமைச்சர் அவர்கள் விவரம் கொடுப்பார்களா ?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** இந்தியக் குடியரசுத் தலைவர், ஆளுநர், மாநில மத்திய அமைச்சர்கள் போன்ற தகுதியுடையவர்களுக்கு இந்த மரியாதை அளிக்கப்படுகிறது.

**திரு. டி. கே. சண்முகம் :** பிரபல கலைஞர்களுக்கும் இந்தப் பரிவட்ட மரியாதை வழங்கப்படுவதை நான் அறிவேன். அரசு அறியுமா ?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** பதிலிலேயே குறிப்பிட்டேன், தகுதியுடையவர் அத்தனை பேருக்கும் மரியாதை அளிக்கப்படுகிறது.

THIRU G. VASANTHA PAI : Sir, is it in consonance with the socialist objectives of the Government that the temples should continue to make this distinction between man and man?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** அப்படிப்பட்ட உத்தேசமில்லை.

**திரு. வி. தங்கபாண்டியன் :** மரியாதைக்குரியவர்களின் பட்டியலில் சட்ட மன்ற மேலவைத் தலைவர், மேலவைத் தலைவர் பெயர்கள் இடம் பெறவில்லையே. அவர்களும் சேர்த்துக்கொள்ளப்படுவார்களா ?

**மிஸ்டர் சேர்மன் :** நான் கோயிலுக்குப் போவதில்லை.

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** மாண்புமிகு மேலவைத் தலைவர் ஆலயத்திற்கு வந்தால், நிச்சயமாக சிறப்பான வரவேற்பு அளிக்கப்படும்.

**மிஸ்டர் சேர்மன் :** நான் வரமாட்டேன்.



24th July 1971]

*Archanas in Tamil*

* 233. Q.—THIRU V. THANGAPANDIAN : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state the number of temples in Tamil Nadu where facilities have been made for performing Archanas in Tamil?

**தமிழில் அர்ச்சனை**

**திரு. வி. தங்கபாண்டியன் :** மாண்புமிகு அறநிலைய அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

தமிழ் நாட்டில் எத்தனை கோயில்களில் தமிழில் அர்ச்சனை நடைபெற வசதிகள் செய்யப்பட்டுள்ளன ?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** தற்சமயம் 112 ஆலயங்களில் தமிழ் அர்ச்சனை தவக்கப்பட்டுள்ளது.

**திரு. எம். ராமனாதன் :** தலைவர் அவர்களே, இந்திய நாடு முழுவதும் இருக்கிற ஆலயங்களில் சமஸ்கிருதத்தில்தான் அர்ச்சனை நடைபெற்று வந்திருக்கிறது. தமிழ் நாட்டில் நம்முடைய அரசானது தமிழில் அர்ச்சனை செய்ய ஆணையிட்டிருப்பது என்பது இந்திய நாட்டிலுள்ள சமஸ்கிருத அர்ச்சனைக்கு முரண்பட்டதாக இருப்பதாக ஒரு கருத்து இருக்கிறது வெளிநாட்டிலிருந்து தமிழ் நாட்டிற்கு வருகை தந்து கோயில்களுக்குப் பலர் போகிறார்கள். அவர்களுக்கு ஏற்ற வகையில் சமஸ்கிருதம், தமிழ் இல்லாமல், வெளிநாட்டவர்களுக்கு வேறு ஏதேனும் அவர்கள் மொழியில் அர்ச்சனை செய்யும் உத்தேசம் அரசிற்கு இருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** தலைவர் அவர்களே, இந்திய நாட்டில் மற்ற மாநிலங்களிலிருந்து வருகிறவர்களுக்கு சமஸ்கிருதத்தில் அர்ச்சனை செய்யப்படுவதாகச் சொன்னார்கள். தமிழ் நாட்டிலும் சமஸ்கிருதத்தில்தான் அர்ச்சனை செய்யப்படுகிறது. இப்போதும் சமஸ்கிருதத்தில் அர்ச்சனை செய்வதைத் தடை செய்யவில்லை. தமிழிலும் அர்ச்சனை செய்யப்படும். விரும்பினால் சமஸ்கிருதத்திலும் செய்யச் சொல்லலாம். மாண்புமிகு உறுப்பினர் வெளி நாட்டவர்க்கு ஏற்ற வகையில் வேறு மொழியில் அர்ச்சனை செய்யப்படுமா என்று கேட்டார்கள். ஆங்கிலேயர்கள் வந்தால் ஆங்கிலத்திலும், ஜெர்மானியர் வந்தால் ஜெர்மனியிலும் அர்ச்சனை செய்வதென்றால், தமிழ் நாட்டில் உள்ளவர்களுக்கு அது இயலாத காரியம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. எஸ். எஸ். தென்னரசு :** தமிழில் அர்ச்சனை செய்வதைப் போல, தீபாராதனையையும் மின்சாரத்தில் காண்பிக்க அரசு முயற்சிக்குமா ?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** மின்சாரத்தில் தீபாராதனை காட்ட முடியுமா என்று தெரியவில்லை. இங்கெல்லாம் கற்பூரத்தில்தான் தீபாராதனை காட்டுவதை விரும்புவார்கள். அப்படித்தான் ஆலயங்களில் நடைபெறுகிறது.

**திரு. பி. நாராயணசாமி :** நம் கடவுள்களுக்குத் தமிழில் அர்ச்சனை செய்தால், பிடிக்காது என்று சொல்கிறார்கள். ஆங்கிலத்தில் மற்ற மொழிகளில் செய்தால் நம் ஆண்டவன் அதை ஏற்றுக்கொள்வாரா ?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** தமிழில் அர்ச்சனை செய்தால், நிச்சயமாக ஆண்டவனுக்குப் பிடிக்கும் என்பதில் சந்தேகமில்லை. ஆண்டவனுக்கும் மக்களுக்கும் இடையில் இருக்கிற சிலர்தான் தமிழ் அர்ச்சனையை எதிர்க்கிறார்கள் என்பதை அறிகிறோம்.

திரு. டி. கே. சுப்பையா : தலைவர் அவர்களே, இப்போதுள்ள எற்பாட்டின் படி தமிழில் அர்ச்சனை செய்யும்போது 'போற்றி போற்றி' எவ்வு சொல்லப் படுகிறது. அது வைஷ்ணவ நூலாகிய திருப்பாவையில் வருகிறது. ஆகை யால் சைவ மதத்தவருக்காக வேறு அர்ச்சனைச் சொற்கள் கையாளப்படுகின் றனவா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : அங்கத்தினருக்கு விருப்பம் இருந்தால், தமிழில் அர்ச்சனை செய்யும்போது, ஏதாவது கோயிலுக்குச் சென்று பரிட்சை பார்த்துக்கொள்ளலாம்.

திரு. டி. கே. சண்முகம் : தலைவர் அவர்களே, சைவ சமயத்தில் மாணிக்க வாசகப் பெருமான் அவர்கள் "ஈசனடி போற்றி, எந்தையடி போற்றி, தேச னடி போற்றி, சிவன் சேவடி போற்றி, நேயத்தே நின்ற நிமலனடி போற்றி, மாயப் பிறப்பறுக்கும் மன்னனடி போற்றி, சோர் பெருந்துறை நம் தேவனடி போற்றி", என்று பல பாடல்களில் போற்றி போற்றி எனப் பாடியிருக் கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதனை அரசு அறியுமா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, அரசு அறிவது மட்டுமல்ல, தமிழர் உலகம் அத்தனையும் அறிந்திருக்கிறது. மதிப்பிற்குரிய திரு. சுப்பையா அவர்கள் கேட்டார்கள். திருநாவுக்கரசு சுவாமிகள் அருளிய தேவாரத்தில் இதுபோன்ற அருமையான வாசகங்கள் இருக்கின்றன. அவற்றைத் தனியாகப் புத்தகமாக வெளியிட்டு ஒவ்வொரு ஆலயத்திற்கும் கொடுத்திருக்கிறோம். பல மடங்களின் சார்பாகவும் வெளியிட்டிருக்கிறார்கள். அவைகள் மூலமாகத்தான் தமிழ் அர்ச்சனை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

## *Temple lands*

* 234. Q.—THIRU V. THANGAPANDIAN : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(a) the extent of lands in the possession of private parties out of the lands belonging to the Temples under the control of Hindu Religious and Charitable Endowments Department; and

(b) the steps taken by the Government to make them as temple properties?

### கோயில்களின் நிலம்

திரு. வி. தங்கபாண்டியன் : மாண்புமிகு அறநிலைய அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இந்து அறநிலையப் பாதுகாப்புத் துறைக்குக் கட்டுப்பட்டுள்ள கோயில்களின் நிலத்தில் எவ்வளவு ஏக்கர் நிலங்கள் தனியார் உடமையில் உள்ளது ?

(இ) அதைக் கோயில் உடமையாக்குவதற்கு அரசாங்கம் எடுத்துக் கொண்டுள்ள நடவடிக்கைகள் என்ன ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : (அ) & (இ) இந்து சமய அறக் கட்டளைத்துறையின் கீழ் உள்ள அறநிலையங்களுக்குச் சொந்தமானவையும் தனியார் அனுபோகத்தில் உள்ளவையுமான 10,109.29 ஏக்கர் நிலங்கள்



இதுவரை இதற்கென நியமிக்கப்பட்ட சிறப்புப் பணியாளர்களால் கணக் கிற்குக் கொண்டு வரப்பட்டுள்ளன. தொடர்புள்ள கோயில்களுக்கு இவை மீண்டும் சேருவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. வி. தங்கபாண்டியன் : தலைவர் அவர்களே, தமிழ் நாட்டிலுள்ள கோயில்களுக்குச் சொந்தமான நிலங்களைத் தனிப்பட்டவர்கள் இன்னும் ஆக்கிரமித்துக்கொண்டு அனுபவித்து வருகிறார்கள். கோயிலுக்குச் சொந்த மான நிலங்களிலிருந்து கிடைக்கிற வருமானங்கள் அந்தந்தக் கோயில் களுக்கும் மற்ற அறப்பணிகளுக்கும் பயன்படும் வகையில் ஒரு குழுவை அமைத்து, அது சொல்கிற பரிந்துரைகளை அரசாங்கம் ஏற்று நடத்த முன்வருமா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, உறுப்பினருடைய யோசனையை அரசாங்கம் பரிசீலனை செய்யும். ஆனால் இப்போதே தனியாக அதற்கு ஒரு சிறப்பு அதிகாரியை நியமித்து, அவருக்குக் கீழே துணை ஆட்சித் தலைவர் அந்தஸ்தில் நான்கு அதிகாரிகள் நியமிக்கப்பட்டு, தமிழ் நாடு பூராவு முள்ள கோயில்களுக்குச் சொந்தமாக இருந்து தனியார் அனுபவித்து வருகின்ற நிலங்களைக் கணக்கெடுத்து வருகிறார்கள். அந்த நிலங்களைக் கண்டு அவைகளை அந்தந்த ஆலயங்களுக்குச் சொந்தமாக்குவதற்கான நடவடிக்கை எடுக்கும் வகையில் அரசு பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது.

திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு : தலைவர் அவர்களே, ஆலயங்களுடைய நிலங்களைப் பிறர் அபகரிக்க முடியாதபடி செய்வதற்கு சிறப்பு அதிகாரிகளை நியமித்து, சில மாதங்களாக அந்தப் பணிகள் நடைபெற்று வருகின்றன. அனால் அந்த அதிகாரியோடு அவர்களுக்கு போதிய வசதிகளை இன்னும் சில சிப்பந்திகளைக் கொடுத்து, சீக்கிரம் அந்தப் பரிசீலனை முடிவதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ? இப்போது அந்த அதிகாரிகளுக்கு வாகன வசதியில்லை. அசில்டெண்ட் கமிஷனர் முதலானோருடைய வாகனங்களை எதிர்பார்க்கவேண்டி யிருக்கிறது. ஏற்கனவே கோயில் நிர்வாகத்தோடு தொடர்பு கொண்டவர்கள் இத்தகைய சீர்திருத்தம் செய்கிறவர்களை விரும்பாதவர்களாக இருக்கிறார்கள். ஆகையால் அவர்களுக்கு தனி அதிகாரங்களையும் போதிய வாகன வசதிகளையும் கொடுத்து ஒருசில மாதங்களில் அந்த வேலை முடியும் வகையில் அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, சிறப்பு அதிகாரி களுடைய காலம் ஓராண்டுதான். அதற்கு என்று தனியாக அந்தப் பதவி ஏற்படுத்தப்பட்டது. ஆனால் பொறுப்பேற்றிருக்கிற வேலை முடியாத காரணத் தால், மீண்டும் அந்தப் பதவி நீடிக்கப்பட்டது. வாகன வசதிபற்றிக் குறிப் பிட்டார்கள். சென்ற மாதத்தில் தான் அவர்களுக்குத் தனியாக வாகனங்கள் வேண்டுமென்ற கோரிக்கையை அரசாங்கம் ஏற்றுக்கொண்டு அதற்கான காரியங்களை இன்றைய தினம் செய்திருக்கிறது.

திரு. சா. கணேசன் : தமிழகத்திலுள்ள ஏராளமான கோயில்களுக்குப் பல ஆயிரக்கணக்கான வேலி நிலங்கள் உடைமையாக இருந்தமையை பல கோயில் களின் கல்வெட்டுகள் புலப்படுத்திக்கொண்டிருக்கின்றன. அந்தக் கல்வெட்டு களில் கண்டுள்ள நிலங்கள் இன்றும் அதே நிலையில் கிட்டத்தட்ட அதே பெயரில் இருக்கின்றன. ஆனால் அந்நிலங்களை அனுபவிக்கிறவர்கள், உரிமை கொண்டாடுகிறவர்கள் வேறாக இருக்கிறார்கள். இவற்றையும் அந்த அதிகாரிகள்

கவனித்து அந்த நிலங்களை ஒப்படைப்புச் செய்து கோயில்களுக்கு உடைமை பாக்க முயற்சிப்பார்களா? அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்வார்களா? அல்லது இதுவரையில் இல்லாவிட்டால், அதைச் செய்ய அரசு இனியாவது முயலுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவர் அவர்களே, இந்தச் சிறப்புப் பொறுப்பாளர்கள் சமய நிறுவனங்கள், அற நிலையங்களைக் குறித்த குறிப்புகளைச் சேகரிக்கும் பணியை முதலில் தொடங்கினர். கணக்குப் புத்தகங்களிலிருந்து விவரங்களைச் சேகரிப்பதோடு திருமங்களைக் குறித்த பட்டியலும் தயாரித்தனர். அதை யொட்டி ஒவ்வொரு வட்டாரத்திலும் இந்தத் துறையின் கட்டுப்பாட்டிலுள்ள கோயில்களின் பட்டியலையும் தயாரித்தனர். கிடைக்கிற விவரங்களை வைத்து ஒவ்வொரு கோயிலுக்கும் சொந்தமான நிலங்களை இன்றைய தினம் தேடிக் கண்டுபிடிக்கும் நிலையில் ஈடுபட்டிருக்கிறார்கள். உறுப்பினர் சொல்லியபடி கல்வெட்டுகளின் மூலமாகத் தகவல் கிடைத்தால், அதன் படியும் நடவடிக்கை எடுக்கலாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எம். ஆறுமுகசாமி: அப்படிக் கண்டுபிடித்து எடுக்கப்படும் நிலங்கள் ஆயிரக்கணக்கான வேலியாக இருக்கும். அவற்றைக் கோயில் நிர்வாகத்தில் விடாமல், அரசே நேரிடையாக எடுத்துக் கொள்ளுமா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தனியார் பல ஆண்டுகளாக அனுபவித்து வருகிற கோயில் நிலங்களை எந்தெந்த அடிப்படையில் மீட்க வேண்டுமென்று அரசு யோசித்து வருகிறது. அவை கண்டுபிடிக்கப்பட்டு மீட்கப்பட்டால், அந்த நிலங்கள் ஆலயத்திற்குத்தான் ஒப்படைக்கப்படுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

## *Temple funds*

* 235. Q.—THIRU V. ISVARMURTI : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(*a*) whether the East Thanjavur District Development Council has suggested the use of temple funds for improving sanitary conditions of the public;

(*b*) if so, the details thereof; and

(*c*) the action taken thereon?

### கோயில் நிதி

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி: மாண்புமிகு அறநிலைய அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) பொது மக்கள் சுகாதார மேம்பாட்டிற்குக் கோயில் நிதிகளைப் பயன்படுத்துவது குறித்து கிழக்குத் தஞ்சாவூர் மாவட்ட வளர்ச்சி மன்றம் கருத்துத் தெரிவித்துள்ளதா?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை?

(உ) அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: (அ) இல்லை.

(இ) & (உ) இவ்வினா எழவில்லை.



24th July 1971]

MR. CHAIRMAN : Questions are over.

[*Note.*—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the member.]

## II. FELICITATIONS TO THE CHIEF MINISTER ON THE CONFERMENT OF THE DOCTORATE DEGREE ON HIM BY THE ANNAMALAI UNIVERSITY.

மிஸ்டர் சேர்மன்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் டாக்டர் பட்டம் பெற்றமைக்காக இந்த மாமன்றம் தன்னுடைய மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்கிறது.

மாண்புமிகு முதல்வர் கலைஞர் மு. கருணாநிதி அவர்களுக்கு 23—7—1971-ல் அண்ணாமலை பல்கலைக் கழகத்தில் கௌரவ டாக்டர் பட்டம் அளித்தமைக் குறித்து இம் மாமன்றம் தனது மட்டற்ற மகிழ்ச்சியை முதற்கண் தெரிவித்துக் கொள்கிறது.

தகைவுடையார் தக்காருமிக்காரு மில்லாதார், உலகக் கண்கள் ஒரு சேர நோட்டமிடும் நெறியுடையார் அறிவியல், அரசியல், விஞ்ஞான வித்தகர்கள், மடமையை ஒழித்து உலகுக்கு நல்வழி காட்டிய உத்தமர்கள், பிரிருத்த செம்மல்கள் பலர் உய்ய, தான் மடிந்த தகைமையாளர்கள் அனைவருமே அவர்கள் வாழ்நாளில் சிறப்பு எய்துவதில்லை. ஆனால் ஒரு சிலரே தம்மை இகழ்வாரையும், புகழ்வாரையும் காண்கின்றனர்.

கல்லாலும் சொல்லாலும் வில்லாலும் அடித்தவர்கள் இறுதியில் பல்லக்கில் சுமந்து சென்ற காட்சியை வரலாறு சொல்லாத ஒன்றல்ல.

அறிவுலகம் கடல் போன்ற மக்கள் வெள்ளத்தில் தன் பாதுகாவலனைப் ஒரு வரையே தேர்ந்தெடுக்கிறது. அவருக்கு வந்த நோய் தன் நோயாக, அவர் பட்டபாடு தனக்காகவென்றும், அவர் அழுதால் தாம் அழுதும், அவர் சிரித்தால் தாம் சிரித்தும் மகிழக் காண்கிறோம்.

உலக ஒளி ஒரு ஞாயிறையே நம்பியிருப்பதைப் போல், மா கடல் மேகத்தை நம்பியிருப்பதைப் போல், பைங்கூழ்கள் மழையை நம்பியிருப்பதைப் போல் ஒருவரிடம் தன் உரிமையை ஒப்படைத்து விடுகிறது. நலன்களை ஒப்படைத்து விடுகிறது. அப்படி தன்னிடம் ஒப்படைக்கப்பட்ட நலன்களை, உரிமைகளை எவன் தன் சலியாத உழைப்பால் ஒன்றுக்குப் பத்தாகத் திருப்பித் தருகிறானே, மக்கள் சிந்தும் கடலளவு கண்ணீரை கடுகளவு ஆக்கிவிடுகிறானே, இறுதியில் தன் பேராற்றலால் அந்தக் கண்ணீரையும் வெறும் உப்புக் கோடுகளாக மாற்றி விடுகிறானே அவன் அடியொட்டி நடக்கிறது இந்த வையம். Footprints on the sands of time என்பது போல் காலமெனும் மணற் பரப்பில் ஒரு சிலருடைய அடிச் சுவடுகளே தெரிகின்றன. அந்தச் சுவடுகளில் கலைஞர் சுவடும் தெரிகின்றது.

அத்தகு மேதை கலைஞர் அவர்களுக்கு அளிக்கப்பட்ட பட்டத்திற்கு முழுதும் தகுதியுடையவர் என்பதால் அவரை இந்த மாமன்றம் பாராட்டி சிறப்பெய்துகிறது.

III. ADJOURNMENT MOTION *RE* POLICE LATHI CHARGE ON STUDENTS OF ANNAMALAI UNIVERSITY ON 23rd JULY 1971.

MR. CHAIRMAN : I have received notice of a motion from Thiru T. K. Subbiah, M.L.C., for the adjournment of the business of the House to discuss a definite matter of urgent public importance, namely :—

"1971-ம் வருடம் ஜூலைத் திங்கள் 23-ம் நாள் அன்று சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் போலீசாரின் தடியடிப் பிரயோகத்தால், மாணவர்கள் காயமுற்று ஆஸ்பத்திரியில் இருப்பதாலும், அந்தப் பகுதியில் பதட்ட நிலைமை நீடிப்பதாலும் என்பது குறித்து."

I want to know from the hon. Member how the matter falls within the scope of the rules, governing adjournment motions.

4-50 p.m. மாண்புமிகு திரு. இரா. தெடுஞ்செழியன் : கலைவரவர்களே, இது பற்றிய முழுத் தகவலும் தெரியவேண்டியிருக்கிற காரணத்தினாலும், முதலமைச்சர் தற்போது இல்லாத காரணத்தினாலும், முதலமைச்சர் இருப்பது பொருத்தமாக இருக்கும் என்ற காரணத்தினால் இதை நாளை மறு நாள் திங்கட்கிழமை வரை ஒத்திவைத்து இந்தத் தீர்மானத்தை எடுத்துக்கொள்ளலாம் என்பதும், அதற்கிடையில் சட்டமன்றப் பேரவையில் நான் 82-வது விதியின்படி அறிவித்த அறிவிப்பை மேலவையின் 82-வது விதியின்படி ஒரு அறிவிப்பாகத் தர விரும்புகிறேன். 23—7—71 அன்று அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் நடைபெற்ற சில அசம்பாவிதமான நிகழ்ச்சிகளைக் குறித்து விசாரிப்பதற்காக உயர்நீதி மன்ற நீதிபதி ஒருவரை நியமித்துள்ளது என்ற செய்தியை அறிவிக்கிறேன்.

MR. CHAIRMAN : As the Hon. the Minister for Education has stated that the Government have to get particulars from the concerned authorities, the matter will be taken up on Monday, the 26th July 1971.

IV CALLING ATTENTION TO HEALTH HAZARD TO THE PUBLIC ON ACCOUNT OF POLLUTION OF WATERS IN THE CAUVERY DUE TO THE CONFLUENCE OF RESIDUM OF DISTILLERIES.

திரு. எம். ஆறுமுகசாமி : தலைவரவர்களே, கீழ்க்கண்ட அவசர பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

வடிசாலைகளிலிருந்து வெளிப்படும் கழிவு நீர் யாவும் ஆற்றில் கலப்பதன் காரணமாக காவிரி கழிவாய்ப் பகுதியில் நீரின் தூய்மை கெட்டு விட்டது என்பதும், காவிரி ஆற்று நீரைப் பயன்படுத்தும் பொது மக்களுக்கு இதனால் சுகாதார கேடுகள் ஏற்படும் என்பதை குறித்தும் அவர்களுடைய கவனத்திற்கு நான் இதைக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, திருச்சிராப்பள்ளி யிலுள்ள திருச்சி டிஸ்டில்லரீஸ் கெமிகல்ஸ் லிமிடெட், உய்ய கொண்டான் கால வாய் கரையில் அமைத்துள்ளது. இந்த ஆலையிலிருந்து வெளியாகும் கழிவுநீர் முதற்கண் இக்கம்பெனியாரால் கால்வாயில் விடப்பட்டது. இது அரசினரின்



நாட்டத்திற்குக் கொண்டுவரப்பட்டபோது, கழிவு நீரைச் சரியர தூய்மைப படுத்தாமல் வாய்க்காலில் விடக்கூடாதென்றும் கம்பெனி வளாகத்துக் குள்ளேயே, அதாவது கம்பெனியினுடைய சுற்றுப்புற இடத்திற்குள்ளேயே தக்க முறையில் இக்கழிவு நீரை விடுவதற்கு ஏற்பாடு செய்துகொள்ள வேண்டு மென்றும் கம்பெனி அதிகாரிகள் கட்டளையிடப்பட்டனர். கழிவு நீரைத் தூய்மைப்படுத்தி இக்கால்வாயில் விடுவதற்கான மாற்று முறைகள் தண்ணீர் கழிவுநீர் தூய்மைப்படுத்தும் குழுவினராலும், கம்பெனி அதிகாரிகளாலும் பரிசீலிக்கப்பட்டன. கால்வாயில் கழிவுநீர் விடப்படுவதற்கு முன்பு கழிவு நீரைத் தூய்மைப்படுத்துவதற்கு முன்னேடி யந்திரச்சாலை அமைப்பதென்று இறுதியில் முடிவு செய்யப்பட்டது. நாள் ஒன்றுக்கு 30,000 காலன் நீரைத் தூய்மைப்படுத்தும் முன்னேடி யந்திரச்சாலை அமைக்கப்பட்டது. இது ஒரு ஆண்டு காலமாக இயங்கிவருகிறது. முன்னேடி யந்திரச்சாலை இயங்கியதை ஆய்வு செய்து கண்ட முடிவுகளின் அடிப்படையில் கம்பெனி அதிகாரிகளுடன் தமிழ் நாடு அரசுத் தலைமைச் செயலாளர் மேற்கொண்டு பேச்சுகள் நடத்தினார். மற்ற அலுவலர்களுடன், தமிழ் நாடு அரசுத் தலைமைச் செயலாளர் 5—7—71 அன்று அந்த இடத்தைப் பார்வையிட்டார். கழிவு நீர் முழுவதையும் தூய்மைப்படுத்துவதற்குக் கூடுதல் யந்திரச்சாலைகளை அமைக்கலாம் என்று கருத்து தெரிவிக்கப்பட்டது.

தூய்மைப்படுத்தும் பணியில் பின்வருபவை அடங்கும் :—

1 கழிவு நீரை குளிரவைக்கும் குட்டையில் விட்டு குளிரவைத்தல்.

2 உயிர்வளி (ஆக்ஸிஜன்) அற்ற வகையில் உயிர் வாழும் நுண்ணுயிர் களைக் கொண்ட குட்டையில் 60 நாட்களுக்குக் கழிவு நீரை விட்டு வைத்துத் தூய்மைப்படுத்துதல்.

3 உயிர்வளியற்ற வகையில் உயிர் வாழும் நுண்ணுயிர்களைக் கொண்ட இரண்டாம்நிலைக் குட்டையில் மேற்கொண்டும் 30 நாட்களுக்கு கழிவுநீரை விட்டுவைத்துத் தூய்மைப்படுத்தல்.

4 உயிர்வளியைக் கொண்டு வாழும் நுண்ணுயிர்கள் கொண்ட குட்டை தூய்மைப்படுத்தல்.

5 கடைசியில் கழிவுநீர் திங்கு ஏற்படுத்தாத முறையில் சிறிது சிறிதாக கால்வாயில் விடப்படும். முடிவாக வெளிப்படும் கழிவு நீரினால் கால்வாய் நீரின் தூய்மை கெடாது. எனவே, பொதுமக்கள் நலனும் கெடாது.

இந்தக் கருத்துரைகள் செயல்முறையில் நிறைவேற்றப்பட்டதும், இந்தத் தொல்லை தவிர்க்கப்படும் என்று நம்பப்படுகிறது.

திரு. எம். ஆறுமுகசாமி : தலைவரவர்களே, அமைச்சரவர்கள், உய்ய கொண்டான் கால்வாயில் நேரடியாக வந்து விழுகிற திருச்சி டிஸ்டில்லரீஸ் கெமிகல்ஸ் தொழிற்சாலையிலிருந்து வரும் கழிவு நீர் பற்றி அது எப்படி தூய்மை செய்யப் படுகிறது என்று சொன்னார்கள். மேட்டூரிலே காவிரி நீர்த் தேக்கத்திலேயே கெம்ப் போஸ்ட், மேட்டூர் கெமிகல்ஸ் போன்ற தொழில் நிறு வனங்கள் கழிவு நீரை விட்டு விடுகிறார்கள். தலைப்பிலேயே தண்ணீர் கெட்டு வருவதற்கான நிலை இருக்கிறது. அங்கே அந்த கெம்ப்ளாஸ்ட் போன்ற

## CALLING ATTENTION TO HEALTH HAZARD TO THE PUBLIC ON ACCOUNT OF POLLUTION OF WATERS IN THE CAUVERY DUE TO THE CONFLUENCE OF RESIDUM OF DISTILLERIES

*[திரு. எம். ஆறுமுகசாமி]* [24th July 1971

தொழிற்சாலைகளின் கழிவுநீரை ஆற்றில் விடாது தடுப்பதற்கும், அந்தக் கழிவு நீரை அங்கே தாய்மைப்படுத்துவது போல அங்கேயே தூய்மைப்படுத்துவதற்கும் அரசு ஏதாவது ஒரு திட்டம் மேற்கொள்ளுமாவென்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** இந்த வகையாக பொது நல வாழ்வு கேடுறுவதைத் தடுப்பதற்கு முயற்சிகளை இந்த அரசு தொடர்ந்து எடுத்துக் கொள்ளும்.

## V. GOVERNMENT MOTIONS

### (1) SUSPENSION OF RULE 23 (1) OF THE COUNCIL RULES (TRANSACTION OF GOVERNMENT BUSINESS ON A NON OFFICIAL DAY).

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தலைவர்களே, சட்டமன்ற விதியின் 23 (1) விதி நீக்கி வைக்கப்பட்டு இந்த அவை இந்த ஒருநாள் மட்டும் 24-ம் நாள் சனிக்கிழமையன்று அரசு அலுவல்களை மேற்கொண்டு நடத்தத் தீர்மானிக்கிறது.

MR. CHAIRMAN : The question is—

"That rule 23 (1) of the Tamil Nadu Legislative Council Rules be suspended and this House do resolve to transact Government Business on Saturday, the 24th July 1971."

The motion was put and carried.

### (2) DISCUSSION ON THE NOTE ON PROGRESS OF EDUCATION—*cont.*

* **திரு. கே. ராஜாராம்:** மாண்புமிக்க தலைவர்களே, கல்வி சம்பந்தமான அரசின் கொள்கைபற்றி நமது சட்ட மேலவையில் நேற்றையதினம் அங்கத்தினர்கள் காண்பித்த அக்கறையும், உற்சாகமும் பொதுவாக நாட்டுக்கு மன நிறைவைக் கொடுக்கின்றன. இரவு 8 மணிவரை பேசியும்கூட விவாதம் முடிக்கப்பட முடியவில்லை. இன்றும் தொடர்ந்து நடக்கும்படியான நிலைமை ஏற்பட்டது. பாடசாலை இல்லாத ஊர் ஒன்றுகூட தமிழ்நாட்டில் இல்லை என்று சொல்லக்கூடிய அளவிற்கு கல்வி மிகவும் விரிவடைந்திருக்கிறது. மாநில வரவு-செலவுத் திட்டத்திலும் கிட்டத்தட்ட 83 கோடி ரூபாய் இவ்வருஷம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. கடந்த 4, 5 ஆண்டுகளில் தொகை மேன்மேலும் அதிகமாக ஒதுக்கப்பட்டு 1966-67-இல் ரூ. 44 கோடியாக இருந்த கல்வி வரவு-செலவுத் திட்டம் இன்று ரூ. 83 கோடியாக, இரண்டு மடங்கு அதிகமாகியிருக்கிறது என்று சொல்லப் பட்டிருக்கிறது. இவ்வளவு ஆகியும், இதற்குத் தகுந்தபடி கல்வி ஸ்தாபனங்களின் வளர்ச்சியோ அல்லது மாணவர்களின் எண்ணிக்கையோ அந்த விகிதாசாரத்தில் வளர்ச்சியடைந்திருக்கிறதாவென்று பார்த்தால், அதுதான் இல்லை. ரூ. 44 கோடி 1966-67-இல் ஒதுக்கப்பட்டிருந்தது. இது 23 சதவீதம். இன்று ரூ. 358 கோடியில் ரூ. 83 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதுவும் 23 சதம்தான் வருகிறது. ஆயினும் தொகை இரட்டிப்பு ஆகியிருக்கிறது. இந்த அளவு தொடக்கப்பள்ளிகளோ, உயர்நிலைப்பள்ளிகளோ, கல்லூரிகளோ, பயிற்சிப் பள்ளிகளோ, அல்லது பல்கலைப் பயிற்சிப் பள்ளிகளோ



24th July 1971] *[திரு. கே. ராஜாராம்]*

இரட்டிப்பு ஆகியதாகச் சொல்ல முடியாது. செலவு அளவுக்கு மீறிப் போய் கொண்டிருக்கிறது. தாம் அந்த அளவுக்கு முன்னேறியிருக்கிறதா என்று பார்த்தால், அதிலும் நாம் மன நிறைவைக்கொள்வதற்கு இடமில்லை. கல்விக் கூடங்களின் எண்ணிக்கை தொடக்கப்பள்ளியில் 1966-67-ல் 31,157-ஆக இருந்தது. 1970-71-ல் நடப்பு வருஷத்தின் முன் வருஷத்தில் 31,351-தான் இருக்கின்றன. 200 பாடசாலைகள்தான் அதிகமாகியிருக்கின்றன. உயர்நிலைப் பள்ளிகள் கடந்த ஐந்தாண்டுகளில் 260-தான் அதிகமாகியிருக்கின்றன. பயிற்சிப் பள்ளிகளில் ஏற்கெனவே 145 இருந்ததற்கு இப்போது 139 ஆகிவிட்டது; 6 குறைந்துவிட்டன. 105 ஆக இருந்தது இன்று 161 ஆகியிருக்கிறது. பயிற்சிக் கல்லூரிகள் 4 அதிகமாக இருக்கின்றன. மற்ற பயிற்சி, பல்கலைப் பயிற்சிக் கல்லூரிகள் அப்படியே இருக்கின்றன. பொறியியல் அப்படியே இருக்கின்றன. தொழில் நுட்ப உயர்நிலைப்பள்ளிகளும் 14 அப்படியே இருக்கின்றன. ஆகவே, மாணவர் எண்ணிக்கை அதிகமாக ஆகியிருக்கும் என்று சொல்லலாம். அப்படிச் சொல்வதற்கான நிலைமை இருக்கும்போது, 44 கோடி ரூபாய் 83 கோடி ரூபாயாகப் பெருகிய போதிலும், அந்த அளவுக்கு மாணவர் எண்ணிக்கை கூடிப்போகவில்லை. 1966-67-ல், 6.8 லட்சமாக இருந்தது, ஆனால் 1970-71-ல் 6.97 லட்சம்தான் நாம் கூடுதலாகச் செலவழிக்கும் தொகைக்குத் தகுந்தபடி அல்லது பாதி அளவுக்காவது அதிகமான மாணவர்களின் தொகைகூடியதாகச் சொல்ல முடியாது. 5-00 p.m.

இது ஒருபுறமிருக்க தரத்தைப்பற்றி மாநிலத்தில் உண்மையில் சென்னையில் ஹைஸ்கூல்களில் தலைமை ஆசிரியர்கள் கூடி அரசுக்குப் பல யோசனைகளைக் கூறியிருக்கிறார்கள். அதை ஓரளவாவது நாம் நிறைவேற்ற முற்பட்டால், கல்வியின் தரத்தை அதிகரிக்க முடியும் என்று எண்ணுகிறேன். ஆங்கிலத்தில் பயில விருப்பத்துடன் வருபவர் அத்தனை பேருக்கும் வகுப்புகளை விஸ்தரித்து இடம் கொடுக்க முயற்சிக்க வேண்டும். இது உயர்நிலைப்பள்ளிகளுக்கு மட்டுமில்லாமல், கல்லூரிகளுக்கும் பொருந்தும். அண்மையில் நடந்த பொதுத் தேர்தலுக்கு முன்பு திரு. லட்சுமணசாமி முதலியார் தலைமையில் அமைக்கப்பட்ட கமிட்டி இடைக்கால சிபார்சு என்று தேர்தலுக்கு முன்பாகவே அவசரமாக வெளியிட்டதை அரசு ஏற்றுக்கொண்டதற்கு, முதலில் எனது பாராட்டுதலையும் நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன். நல்ல ஒரு முடிவைச் செய்தார்கள். ஆனால் அதைக் கடைப்பிடிக்க வேண்டும்: கடைப்பிடித்து செயல் படுவதாக, முழு மனதுடன் செயல் படுத்துவதாக என்னால் சொல்ல முடியாது. இப்போது கல்லூரிகளிலும் பள்ளிகளிலும் ஆங்கில வகுப்புகளில் சேர விரும்பும் பிள்ளைகளுக்கு இடம் கிடைக்கவில்லையென்ற புகார் பரவலாக எல்லா இடங்களிலிருந்தும் வந்துகொண்டிருக்கிறது. என்னைப் பொறுத்த வரையில், தமிழைப் பயிற்சி மொழியாகக்கொண்டு படிக்க விரும்புபவர்களுக்கு எல்லா விதத உதவியும் உற்சாகமும் ஆக்கமும் கொடுப்பதை நான் வரவேற்கிறேன். அது மட்டுமல்ல, தமிழைப் பயிற்சிமொழியாகக் கொண்டு படிக்கும் மாணவர்களுக்கு, ஒரு தாழ்வு மனப்பான்மை ஏற்பட விடாமல், எத்தனை விதமான ஊக்கம் கொடுக்க வேண்டுமோ, அத்தனையும் கொடுப்பதில் எந்த விதமான ஆட்சேபனையும் கிடையாது. ஆனால் அதே சமயத்தில் ஆங்கில மொழி இன்று ஆளும் கட்சி ஏற்றுக் கொண்ட மொழி; இரு மொழி கொள்கை என்று ஏற்றுக் கொண்டார்கள். இதற்குப் பின்னால் லட்சுமணசுவாமி முதலியார் கமிட்டி சிபார்சையும் ஏற்றுக்கொண்டார்கள். அப்படி இருக்கும் போது ஏராளமாக ஆங்கிலம் படிக்கும் மாணவர்கள் அவர்களுடைய இஷ்டப்படி ஆங்கி

[திரு. கே. ராஜாராம்] [24th July 1971

லத்தையே பயிற்சி மொழியாகக் கொண்டு படிக்க வகுப்புகளில் இடம் கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டியது அரசின் கடமை என்பதைத் தெரிவித்துக்கொள் கிறேன். தங்கள் எதிர்கால வாழ்வுக்காக அவர்கள் கல்வி பயில்கிறார்கள். அறிவை விருத்தி செய்வதற்கு மட்டுமென்றால், தாய் மொழியில் மட்டும் படித் தால், போதும் என்று இருக்கலாம். ஆனால் கல்வி பயின்று குடும்பத்திற்கு 4 ரூபாய் சம்பாதித்துப் போட வேண்டும், என் மகன், பிள்ளை படித்து சம் பாதித்துப் போட வேண்டும் என்று பெற்றோர்கள் எண்ணுகிறார்கள். அவன் ஆங்கிலத்தில் படித்தால் தான் இங்கு வேலை கிடைக்கலில்லை என்றும், அரசாங்க உத்தியோகம் கிடைக்கவில்லை என்றும், வேறு வகையிலாவது உத்தியோகம் தேடிக்கொள்ள முடியும். வெளி மாநிலங்களுக்குச் சென்று விட்டுக் காலேஜுபடித்திருந்து சம்பாதித்துக் கொடுக்க முடியும் என்ற எண்ணத் துடன் ஆங்கிலத்தைப் பயிற்சி மொழியாகக்கொள்ள எண்ணினால், அரசு குறுக்கே இருக்கக் கூடாது என்றுதான் நான் சொல்லுவது, வேறென்றுமில்லை.

அடுத்தபடியாக, எஸ்.எஸ்.எல்.சி. வரை படிக்கும் மாணவர் இப்போது படிக் கும் படிப்பு போல இல்லாமல், 11-ம் வகுப்பு அல்லது எஸ்.எஸ்.எல்.சி.-யை விட்டு விலகினால், எதேனும் தொழில் கற்று வாழ்க்கை நடத்தக்கூடிய நிலையில் கல்வித் திட்டத்தையே மாற்றியமைக்க வேண்டுமென்று நமது கல்வித்துறை வல்லுனர்களையும், அரசாங்கத்தையும் கேட்டுக் கொள்கிறேன். அம்மாதிரி நாம் செய்வோமானால், கல்லூரிக்கு இவ்வளவு கிராக்கி இராது. இப்போது எங்கு பார்த்தாலும் எஸ்.எஸ்.எல்.சி. என்றால் பதில் என்ன வரு கிறது—"எஸ்.எஸ்.எல்.சி.-க்கு எங்கே ஐயா வேலை"? என்று சொல்லுகிறார்கள். எஸ்.எஸ்.எல்.சி. படித்தால் ஏதோ தொழில் செய்து வாழ்க்கை நடத்த முடியும் என்றும் மேல் படிப்புக்குபோகவேண்டும் என்ற எண்ணத்தை அறவே விட்டு விடும்படியும் செய்ய வேண்டும். அதற்குத் தகுந்தபடி மாற்றியமைக்க வேண்டும். ஆனால் 11-ம் வகுப்போடு விலகினால், தொழில் செய்து பிழைத்துக் கொள்ள முடியும் என்ற எண்ணத்தை மாணவர்களுக்கும் மக்களுக்கும் நாம் உண்டு பண்ணும்படி நாம் கல்வித் திட்டத்தை மாற்றியமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழைப் பயிற்சி மொழியாகக் கொண்டு படிக்கும் மாணவர்களுக்குக்கூட, நான் ஏற்கனவே குறிப்பிட்ட படி, எந்தக் காரணத்தை முன்னிட்டும் தாழ்வு மனப்பான்மை ஏற்பட்டுவிடக்கூடாது. அவர்களை ஊக்கப்படுத்துவதாகக்கூட, ஆங்கிலத்தில் துணைப்பாடப் புத்தகங்கள் நான்-டீடெய்ல்டு போன்றவைகள் கொடுத்து நன்றாக ஆங்கிலத்தையும் அவர்கள் பயிலும்படியாகச் செய்ய வேண்டும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அரசு வெளியிட்டிருக்கும் ஆங்கிலப் பாடப்புத்தகங்கள் போதிய தரம் உடையனவாகவில்லையென்று சென்னையிலேயுள்ள ஆசிரியர்கள் கூறியிருக்கி றார்கள். அரசு இதைக் கவனிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கல்வியைப் பொறுத்த வரையில், நமது மாநிலத்தின் தரம் எந்த வகையி லும் பிற மாநிலங்களுக்குக் குறைந்ததாக இல்லை என்று அரசுப் பதவி வகிப் பவர்களோ, அல்லது மற்றவர்களோ சொல்லிக்கொண்டு வாளாவிருப்பதில் பிரயோஜனமில்லை. இந்தியாவிலேயே ஐ.ஏ.எஸ்ஸோ அல்லது ஒரு பி.ஏ. பி.எஸ்ஸியோ படித்தவர்கள்கூட தமிழ்நாட்டுக்காரர்களாக இருந்தால், அவர்



24th July 1971] [திரு. கே. ராஜாராம்]

களை மதித்து வந்தார்கள். ஆனால் அந்த நிலைமை மாறிவிட்டது. அப்படி மாறாமல் பழைய நிலைமைக்குக் கொண்டுவர முயற்சிக்க வேண்டும் என்பது தான் என்போன்றவர்களுக்குக் கவலையே தவிர, வேறு ஒன்றுமில்லை. அண் மையிலே நடந்த ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., ஐ.எஃப். எஸ். போன்ற பரிட்சையில் தமிழ்நாட்டில் ஏதோ ஒரிருவர்தான் தேர்ச்சியடைந்திருக்கிறார்கள். எனவே இதில் அரசு கவனம் செலுத்தி, இன்னும் பல்கலைக் கழகத்துக்கும் எழுதி அந்தந்தப் பகுதிகளில் அகில இந்தியப் பரிட்சைகளுக்குச் சேர்பவர்களுக்கு கோச்சிங் கொடுக்கும்படியாகச் செய்ய வேண்டும். மற்ற மாநிலங்களில் இதைச் செய்கிறார்கள் என்று நான் அறிகின்றேன். ஆகவே நமது மாநிலத்தி லும் இதைச் செய்ய வேண்டும். அகில இந்திய ரீதியில நமக்குள்ள நல்ல ஸ்தானத்தை இழந்துவிட்டதற்காக உண்மையில் நாம் மிகவும் வருத்தப்பட வேண்டிய நிலையில் இருக்கின்றோம்.

பட்டம் பெற்றவர்களும், எஸ்.எஸ்.எல்.சி. தேறியவர்களும் பப்ளிக் சர்விஸ் கமிஷன் தேர்வுக்காகச் சென்றவர்கள் கேட்ட கேள்விகளுக்கு அளித்திருக்கும் பதில்கள் என்ன என்று பப்ளிக் சர்விஸ் கமிஷன் ரிப்போர்ட்டைப் பார்க்கும் போது நாமெல்லாம் கவலைப்படாமலிருக்க முடியவில்லை. தமிழ்நாட்டில் தற் போதுள்ள தரம் எவ்வளவு தூரம் குறைந்துள்ளது என்பதற்கு அதுவே போதுமான அத்தாட்சி. ஆகவே அரசை ஒன்று நான் வேண்டிக்கொள்ள விரும்புகிறேன். ஹைஸ்கூல்களைப் பொறுத்த வரையிலே, அடிப்படை சாதனங் கள் மிகவும் குறைவாக இருக்கின்றன. லெபாரடரி பல உயர்நிலைப் பள்ளி களுக்குக் கிடையாது. சயன்ஸ் கிளாஸ் இருக்கிறது, ஆனால் லெபாரடரி கிடையாது. அம்மாதிரி ஏராளமான உயர்நிலைப் பள்ளிகள் இருக்கின்றன. ஆகவே இனிமேல் அதை விஸ்தரிப்பதை தயவுசெய்து ஒரிரு வருஷங்களுக்கு நிறுத்தி வைத்து தரத்தை உயர்த்த அடிப்படை சாதனங்கள் ஏராளமாக அவர்களுக்குக் கிடைக்கும்படியாகச் செய்து நல்ல தரம் உடைய உயர்நிலைப் பள்ளிகளாக ஆக்கிவிட்டு, அதற்குப் பிறகு விஸ்தரிப்பதைப் பற்றி யோசிக்க லாம். அகல உழுவதைவிட ஆழ உழுவது நலம் என்று கிராமத்திலே சொல் வார்கள். அதைப்போல ஆழ உழுது தரத்தை உயர்த்த வேண்டும். அதற் கான முயற்சிகளைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். பாட சாலைகளிலும், கல்லூரி அளவிலும் என்னைப் போன்ற பெற்றோர்களுக்கு இப் பொழுது இருக்கும் நிலைமை மகிழ்ச்சி தரும் நிலைமையாக இல்லை. "டிசிப்ளின்" இருக்க வேண்டும். அந்த "டிசிப்ளின்" இருப்பதற்கு அரசு என்ன யோசிக் கிறது, எப்படி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று என்னுகிறார்கள் என்று எனக்குத் தெரியவில்லை. டிசிப்ளின் என்று சொல்லும்போது தண்டித்து விட்டால் மட்டும் டிசிப்ளின் வந்துவிடாது. அதனால் டிசிப்ளினை நாம் உண்டு பண்ணிவிட முடியாது. அதனால் டிசிப்ளினை நாம் மெயின்டெய்ன் பண்ணிவிட முடியாது. கல்வி சீர்திருத்தத்திலேயே பிள்ளைகள் டிசிப்ளினோடு இருந்தால் தான், தங்களுடைய கல்வி கோர்சை முடிக்க முடியும் என்ற அளவிற்கு ஏதாவதொரு சீர்திருத்தத்தைச் செய்ய வேண்டும். கல்வி அமைச்சரும், மாநிலக் கல்வித் துறையினரும், இயக்குனரும், துணை இயக்குனரும் மற்றவர் களும்—அவர்கள் பேரில் எனக்குப் பூரண நம்பிக்கை உண்டு, அவர்கள் நினைத் தால் இதற்கு ஆவன செய்யலாம்—பள்ளிக்கூடத்தில் ஆசிரியர்களுக்கும் மாண வர்களுக்கும் நெருங்கிய ஒற்றுமை இருப்பதற்கான நிலையையும், ஒரு கட்டுப் பாட்டுடன் அவர்கள் நடக்கும்படியாகவும் செய்துவிட்டால், அதுவே நமக்கு ஒரு பெரிய வரப்பிரசாதமாகும். இன்று அது இல்லை என்று எல்லோரும்

[திரு. கே. ராஜாராம்] [24th July 1971

சொல்வார்கள். அதை மாற்றியமைப்பதற்கு தனிப்பட கல்வி அமைச்சருடன் பல நாள் இந்த ஒரு குறிப்பிட்ட விஷயத்தைப்பற்றிப் பேசியிருக்கிறேன். அவர்கள் மனதில் இருக்கும் எண்ணத்தைத் திடீரென்று அவர்கள் வெளியிடுவதற்கு அரசியல் காரணங்களால் முடியவில்லே. அரசியலில் அதற்குப் பலவித அர்த்தங்களைக் கற்பித்துவிடுவார்கள் என்றுகூட எண்ணிக்கொண்டிருக்கிறார்கள். இதைப்பற்றி பல கட்சிக்காரர்களுடனும் கலந்துபேசி நல்லதொரு கட்டுப்பாடு கல்வி ஸ்தாபனங்களில் இருக்கச் செய்ய வேண்டும். ஆசிரியர்களுக்கு அடங்கியிருந்தால் போதும், ஆசிரியர்களுடன் தோழமை உணர்ச்சியுடன் கல்வி பயின்றால் போதும். அதற்கு வேண்டிய முயற்சிகளைச் செய்வதற்கு அரசு முயலவேண்டும். அதற்கு எல்லோரையும் கலந்து, இதற்கு அரசியல் கலர் எதுவும் கொடுத்துவிடாது, உண்மையில் நமது எதிர்கால சந்ததியினரின் முன்னேற்றத்திற்காக நல்லதொரு திட்டத்தை வகுத்து மாணவர்கள் பண்பாட்டுடன் கல்விபயின்று வருவதற்கு வேண்டிய திட்டத்தை வகுத்துக்கொடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். பாஜகேஷன் கன்சல்டேடிவ் கவுன்சில் என்று வைத்திருக்கிறார்கள். இது கூடவேதை இல்லே. வருஷத்திற்கு 3 தரம் அல்லது 4 தரமாவது கூடி மற்றவர்களின் அபிப்பிராயத்தை அறிந்து கொள்வது நலம் என்று தெரிவித்துக்கொள்கிறேன். நேற்று ஒரு சர்ச்சை. தனியார் பள்ளிகள், கல்லூரிகள், அரசுப் பள்ளிகள், கல்லூரிகள் என்ற வாதத்தில் நாம் இறங்கிவிட்டோம். அது தேவையில்லே குறை என்பது எல்லா இடத்திலேயும் இருக்கிறது. நல்லது எல்லா இடத்திலேயும் இருக்கிறது. ஆகவே எந்த ஒரு கல்லூரிலேயும் எந்த ஒரு பாடசாலேயிலும் குறையில்லாமல் பார்த்துக் கொள்ளவேண்டும். தவறு நடக்காமல் கவனித்துக் கொள்ள வேண்டும். நண்பர் திரு. சங்கரலிங்கம் அவர்கள் சொன்னதுபோல, பணம் வாங்கிக் கொண்டுதான் பள்ளிக்கூடத்தில் சேர்ப்பது என்று சொன்னால், அதையெல்லாம் மிகவும் கண்டிப்பாக அரசாங்கம் கவனித்து நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். சேர்த்துக்கொண்ட பிற்பாடு கட்டடம் கட்ட வேண்டுமென்று பெற்றோர்களிடம், மூன்று நான்கு மாதங்களுக்குப் பிறகு நன்கொடை-டொனேஷன்—வசூல் செய்வதைப்பற்றி யாரும் குறை சொல்லவில்லே. பணம் கொடுத்தால் தான் சேர்ப்போம் என்று சொன்னால், பெற்றோர்களின் நிலேமை என்ன ஆவது? அப்படிப்பட்ட நிலேமையை நாம் நீடிக்கவிடக்கூடாது. ஆகவே தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, செட்டிநாடு பாலிடெக்னிக் இப்போது நிறுத்தப்பட்டு விட்டது. அமைச்சர் அவர்களின் உரையில் அரசாங்கமே அதை எடுத்துக் கொள்ளலாமா என்று யோசித்துக்கொண்டிருக்கிறோம் என்று சொல்லப் பட்டது. இதை எடுத்துக்கொள்வதற்கு முன்பாக மும்முறை யோசிக்க வேண்டும். கட்டிடம் இருக்கிறதே என்பதற்காக வருஷத்திற்கு இரண்டு லட்சம் ரூபாய் செலவழித்துக்கொண்டிருப்பது என்பது சரியல்ல. அந்த இடம் பாலிடெக்னிக் வைத்து நடத்துவதற்கான இடமா என்பதை யோசிக்க வேண்டும். பக்கத்திலே ஊர் கிடையாது. வெகு சமீபத்தில் காரைக்குடியிலே எல்லாவிதமான வசதிகளும் இருக்கின்றன. அதை விட்டுவிட்டு, இந்த செட்டி நாட்டில் ரயில்வே ஸ்டேஷனுக்கு அருகே கட்டப்பட்டிருக்கும் பாலிடெக்னிக்கில் மாணவர்களே வருவதில்லே. ஐந்தாறு மாணவர்களே வைத்துக்கொண்டு அதை எப்படி நடத்துவது?



24th July 1971]

திரு. கே. ராஜாராம்: காரைக்குடியில் இன்ஜினியரிங் காலேஜ் மட்டுமல்ல, பாலிடெக்னிக்கும் இருக்கிறது. நகரத்திலே எல்லா வசதிகளும் இருக்கின்றன. அப்படி இருக்கும்போது இங்கே யார் வந்து சேருவார்கள்? எந்த மாணவன் வந்து சேருவான்? ஆகையால் இதை அரசாங்கம் எடுத்துக் கொள்வது என்பது நல்லதல்ல. அடுத்தபடியாக . . . . 5-50 p.m.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: கலேவரவர்களே, அந்தக் கல்லூரியை பலதொழில் பயிற்சிக்காக நடத்துகிறார்கள். இதை அரசாங்கமே எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கடந்த மூன்று ஆண்டுகளாக வற்புறுத்திக் கொண்டு வருகிறார்கள். தங்களாலே நடத்த முடியவில்லே, மூட வேண்டியிருக்கிறது, அதனால் அரசாங்கமே எடுத்துக்கொள்ள வேண்டுமென்று வற்புறுத்தி வருகிறார்கள். அதை எந்த அளவிலே எடுத்துக்கொள்வது என்பதையும் எப்படிப் பயன்படுத்துவது என்பதைப்பற்றியும் அரசாங்கம் முடிவு செய்ய முயன்றுகொண்டு வருகிறது.

திரு. சா. கணேசன்: இந்தக் கல்லூரியை ஆட்சியாளர்கள் எடுத்துக் கொள்ள வேண்டும். எடுத்துக் கொண்டு, பாலிடெக்னிக்கை மாற்றிவிட்டு சுற்றியுள்ள நிலங்களையும் சேர்த்து விவசாயக் கல்லூரியாக ஆக்குவது பல னுடையதாகும். அரசாங்கக் கால் நடைப் பண்ணையும் அருகில் இருக்கிறது. ஆகவே விவசாயக் கல்லூரி அமைக்கலாம் என்பது என்னுடைய ஆலோசனே. அதற்கு அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: கலேவரவர்களே, செட்டி நாட்டில் இருக்கும் இந்த பலதொழில் பயிற்சி நிலேயத்தையும், காரைக்குடியில் இருக்கும் பாலிடெக்னிக்கையும் ஒன்றாக ஆக்கி, இங்கே இருக்கிற இயந்திரங்களையும் மற்றவைகளையும் பயன்படுத்தி எந்த வகையிலே பயன்படுத்தலாம் என்பதைப் பற்றிக் கல்வி இயக்குநரை ஆராய்ச்சி செய்யும்படி கேட்டுக் கொண்டிருக்கிறோம்.

திரு. கே. ராஜாராம்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சா. கணேசன் அவர்கள் சொன்னது போல, நானும் செல்வதற்கு இருந்தேன். அந்த இடத்திலே மாட்டுப் பண்ணே இருக்கிறது. பெரிய பண்ணே. நானும் பார்த்திருக்கிறேன். ஆகையால் இந்த பாலிடெக்னிக்கை மூடி விட்டு அங்கு அரசாங்கத்தின் "டெய்ரி பார்ம்" அமைத்துப் பயன்படுத்திக்கொள்ளலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இந்தி பண்டிதர்கள் 2,500 பேர்கள் நமது மாநிலத்தில் இருந்தார்கள். மாண்புமிகு மறைந்த முதலமைச்சர் அண்ணு அவர்கள் அத்தனே பேருக்கும் ஏதேனும் பிழைப்புக் கொடுப்பதற்காக வழி செய்வதாகச் சொன்னார்கள். அவர்கள் சொன்னபடி 2,000 பேருக்கு மேல் இப்போது வேலே கொடுக்கப்பட்டு விட்டது. பல பேர் டிரெயினிங் படித்து விட்டு ஆசிரியர்களாக வந்து விட்டார்கள். இன்னும் 500 பேர்கள் ஒரு வேலேயும் கிடைக்காமல் கஷ்டப்பட்டுக்கொண்டிருப்பதாக என்னிடத்திலே மகஜர் கொடுத்திருக்கிறார்கள். அதை அரசாங்கம் கவனித்து இந்த 500 பேருக்கு ஏதேனும் வேலே கொடுத்தால், நலமாக இருக்கும். தங்களுக்குப் பியூன் வேலே கொடுத்தால் கூடப்போதும், எப்படியாவது பிழைத்துக் கொள்வோம் என்கிறார்கள். அவர்கள் மீது கொஞ்சம் தயவு தாட்சண்யம் காண்பித்து அவர்கள் குடும்பம் பிழைப்பதற்கு ஏதாவது வழி செய்ய வேண்டும் என்று அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, மதிய உணவு விஷயத்தில் இந்த ஆசிரியர்கள் கஷ்டப் பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அந்தக் கஷ்டத்திலிருந்து அவர்களுக்கு விடுதலே கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். பூந்தமல்லியில், செங்கற்பட்டு மாவட்டத்தில் முதலில் ஆரம்பித்து மதிய உணவுத் திட்டம் நடைபெற்று வருகிறது. ஒரே இடத்தில் உணவைத் தயாரித்து அதை எல்லா இடங்களுக்கும் கொண்டு சென்று பரிமாறும் திட்டம் நல்ல திட்டம். அதை மாநிலம் பூராவிற்கும் விஸ்தரிக்க வேண்டும். அப்படிச் செய்தால், ஆசிரியர்களின் சிரமங்கள் குறைந்து, அவர்கள் படிப்பைக் கவனிக்க முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். முதலில் இந்தத் திட்டம் வெற்றி காரமாக நடைபெற்றது. மதிய உணவுத் திட்டம் இருப்பதால், மாணவர்களின் படிப்பைக் கவனிக்காமல் போய்விடுமோ என்கிற அச்சம் ஏற்பட்டது. பயம் ஏற்பட்டது. ஒரே இடத்தில் சமையல் செய்து அதை மற்ற இடங்களுக்கும் கொண்டு சென்று கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும். ஒரு பிளாக்கில் ஒரு இடத்தில் சமையல் செய்து அதை வான் மூலம் எடுத்துச் சென்று கொடுக்கும் முறையைக் கொண்டு வர வேண்டும். அன்னிய உதவி பெற்று, மத்திய அரசின் உதவி பெற்று இந்தத் திட்டம் இப்பொழுது செயல் பட்டுக்கொண்டு வருகிறது. இதை மாநில முழுவதற்கும் விஸ்தரிக்க வேண்டும். இந்தத் திட்டத்தை எல்லா இடங்களுக்கும் விரிவுபடுத்த வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, பி.டி. அசிஸ்டெண்ட்களிடமிருந்து எனக்கு இரண்டு, மூன்று தினங்களாகத் தந்திகள் வந்து குவித்துக்கொண்டிருக்கின்றன. இன்று தேரிடையாகவே சில பேர் என்னைச் சந்தித்துப் பேசினார்கள். அவர்கள் சொல்வது மிக, மிக நியாயமாகும். அவர்கள் பி.ஏ. படித்து பி.டி. படித்து இரண்டு டிகிரி வாங்கியிருக்கிறார்கள். அவர்களுக்கு இப்பொழுது உள்ள சம்பளம் ரூ. 275. ஆனால் பி.ஏ., பி.எஸ்.ஸி. படித்து விட்டு டியூட்டர்களாக இருப்பவர்களுக்கு ரூ. 325 ஆரம்பச் சம்பளம். இது ரூ. 525 வரை போகிறது. இது பரவாயில்லை. எஸ்.எஸ்.எல்.சி. படித்து விட்டு டிப்ளமோ கோர்சில் பாலி டெக்னிக்கில் எல்.இ.இ., எல்.எம்.இ., எல்.சி.இ. படித்து டிப்ளமோ பட்டம் பெற்றவர்கள் ஹைஸ்கூல்களில் இன்ஜினியரிங் இன்ஸ்ட்ரக்டர்களாக இருக்கி றார்கள். அவர்களுக்கு ஆரம்பச் சம்பளம் ரூ. 325 லிருந்து ரூ. 650 வரை போகிறது. இதைக் கவனிக்கும்படி அமைச்சரவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். அமைச்சர்கள் ஆசிரியர்களைத் தனியாகச் சந்திக்கும் போது அனுதாபத்துடன் கேட்கிறார்கள். இதில் உள்ள நியாயத்தையும் ஒப்புக் கொள்கிறார்கள். ஆனால் அவர்களுக்கு உள்ள இந்தச் சங்கடம் போக்கப்படவில்லை. ஆசிரியர்கள் தங்களுடைய பணியை நிம்மதியாகச் செய்ய விட வேண்டும். இது முக்கிய மான விஷயம். இம்மாதிரி நம்முடைய சிப்பந்திகளில் ஒரு சாரார் வயிற்றெரிச் சலோடு உட்கார்ந்துக்கொண்டு கல்வி பயிற்றுவித்துக்கொண்டிருப்பது என்பது நடக்காத காரியம். எனவே அவர்களுடைய குறைகளைப் போக்குவதற்கு முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும். ஆகவே பொதுவாக நம்முடைய மாநில வரவு செலவுத் திட்டத்தின் மிகப் பெரிய ஒரு இனமாக கல்வி இனம் மாறு வதில் நாம் மகிழ்ச்சியுறுமல் இருக்க முடியாது. நல்ல பல யோசனைகளைப் பல அங்கத்தினர்கள் கூறியிருக்கிறார்கள். அரசாங்கம் இவைகளைப் பரிசீலனை செய்து கல்வித் தரம் உயர்வதற்கு வழி செய்ய வேண்டும். கல்வியை விரிவு படுத்துவதால் மட்டும் பயனில்லை, தரத்தை உயர்த்துவதில் முயற்சி எடுக்க வேண்டும் என்பதைக் கூறி அமைகிறேன். வணக்கம்.





[Deputy Chairman in the Chair]

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** துணைத் தலைவரவர்களே, கல்விக் கொள்கையைப்பற்றி இந்தப் பேரவையில் வைத்த அறிக்கையின் மீது மாண்பு மிகு உறுப்பினர்கள் தங்கள் கருத்துக்களை எடுத்துத் தெரிவித்ததற்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

**திரு. டி. கே. சண்முகம்:** கல்விக் கொள்கை மீது தான் பேச வேண்டு மென்று தலைவரவர்களிடம் பெயர் கொடுத்திருந்தேன். அவர்களும் அனுமதி வழங்கியிருந்தார்கள். என்ன காரணத்தினால் என்னைப் பேச அழைக்கவில்லை எல்று தெரியவில்லை. எப்பொழுது பேச அனுமதிக்கப் போகிறார்கள் என்ப தைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். அமைச்சரவர்கள் பேசியதற்குப் பிறகு எனக்குப் பேச வாய்ப்புக் கிடைக்காது என்ற முறையிலே என்னை இப்போது பேச அனுமதிக்க முடியுமா என்பதைத் தெரிந்து கொள்ளவிரும்பு கிறேன்.

**டெபுடி சேர்மன்:** சுகாதாரக் கொள்கையின் மீது பேசுவதற்குத்தான் உறுப்பினர் அவர்கள் தன் பெயரைக் கொடுத்திருக்கிறார்கள். அதிலேயும் கல்விக் கொள்கை வருகிறது. எனவே அதன் மீது அவர்கள் பேசுவதற்கு வாய்ப்பு இருக்கிறது.

*** திரு. டி. கே. சண்முகம்:** கல்விக்கொள்கை தமிழரசுக் கழகத்தின் உயிர்க் கொள்கை. அதை சுகாதாரக் கொள்கை மீது பேசுவது பொருத்தமற்றதாகும். ஆகையால் தமிழரசுக் கழகத்தின் பிரதிநிதியாக இந்தக் கல்விக் கொள்கைப் பற்றி நான் பேசுவதற்கு அனுமதிக்க வேண்டுமென்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** துணைத் தலைவரவர்களே, நேற்று கல்விக் கொள்கைபற்றிப் பேசுவதற்காகக் குறிப்பிடப்பட்டிருந்தது. ஏழு மணிக்கே முடிய வேண்டியது மரபு. நேற்று மாலையிலே 3 மணி வரை அவை நீட்டிக்கப்பட்டது. எதிர்க் கட்சித் தலைவர் பேசுவதற்குப் பிறகு பதில் அளிப்பது மரபு. அதன்பிறகு உறுப்பினர்கள் பேசமுடியாது. எதிர்க் கட்சித் தலைவர் பேசுவது, அதன் பிறகு அரசாங்கத்தின் சார்பில் நான் பேசுவது என்று முடிவெடுக்கப்பட்டு, அந்த வகையிலே இன்று எதிர்க் கட்சித் தலைவர் பேசி முடித்து விட்டார். அதன் பிறகு நான் பேசுகிறேன். எதிர்க் கட்சித் தலைவர் பேசி முடித்ததும் ஆளுங்கட்சித் தலைவர் பேசுவது மரபு. அப்படி யிருப்பதால், மாண்புமிகு உறுப்பினர் பேசுவதற்கு வாய்ப்பு இல்லாத சூழ்நிலை ஏற்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

Deputy Chairman : The Hon. Minister will continue.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** கல்வியின் தரம் உயர வேண்டும் என்பதைப்பற்றி வலியுறுத்திச் சொன்னார்கள். கல்வி ஆண்டுக்காண்டு வளர்ந்து கொண்டு வந்திருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர்கள் சில ஐயப்பாடு களைத் தெரிவித்தார்கள். பணம் அதிகமாகச் செலவழிக்கப்பட்டாலும், கல்வியின் அளவு வளரவில்லை என்கிற கருத்தை எடுத்துச் சொன்னார்கள். ஆனால் இதில் விகிதாசாரத்தைப் போட்டுப் பார்க்கக் கூடாது. விகிதாசாரம் சரியான முறையிலே வராது. செலவழிக்கும் பணத்திற்கு விகிதாசாரத்தைப் போட்டுப் பார்த்தாலும் 72 சதவிகிதம் வருகிறது. 1938-39-ல் ரூ. 268 லட்சம்

என்ற அளவிற்கு இருக்கிறது. 1966-67-ல் ரூ. 44 கோடியே 28 லட்சம். இப் பொழுது ரூ. 82 கோடி. இந்த அளவிற்குக் கல்வி விரிவடைந்து கொண்டு வருகிறது. மேல் நாடுகளிலும் கல்வியின் அளவு இவ்வளவு விரிவடையவில்லை. கல்வி விரிவடைவதற்காக பல நடவடிக்கைகள் எடுத்து வருகிறோம். தொடக்கப் பள்ளிகளை நிறைய ஆரம்பிக்கிறோம். தொடக்கப்பள்ளிகளிலிருந்து வருகிறவர்களுக்கு உயர்நிலைப் பள்ளிகளை ஆரம்பிக்கிறோம். உயர்நிலைப் பள்ளியிலிருந்து கல்லூரிக்கு வருகிறவர்களுக்கு இடம் வேண்டுமென்பதற்காக அதிக அளவில் கல்லூரிகளைத் தொடங்கியிருக்கிறோம். இந்தப் பத்து, பதினைந்தாண்டுகளாகக் கல்வி விரிவடைந்து வருவதால் 88 சதவிகிதம் அளவிற்கு வந்திருக்கிறது. ஆறு வயது முதல் 11 வயது வரை உள்ளவர்களுக்குக் கட்டாயக் கல்வியைக் கொண்டுவந்திருக்கிறோம். மாணவர்களுக்கான கல்வி வசதி, அடிப்படை வசதிகளைச் செய்து கொடுத்து வருகிறோம்.

5-30 p.m.

ஆகவே, கல்வியினுடைய தன்மை ஆண்டுக்காண்டு தேவையான அளவிற்கு வளர்ச்சியடைந்து கொண்டு வருகிறது என்பதை இந்தப் புள்ளி விவரங்கள் மிகத் தெளிவாகக் காட்டும். ஆண்டு ஒன்றுக்கு 1 லட்சத்திலிருந்து 1¼ லட்சம் வரை மாணவர்கள் கல்வி அடித்தளத்தில் புதிதாக வந்துகொண்டிருக்கிறார்கள். இது 94 சதவீதமாக இருக்கிறது. இன்னும் 7, 8 வயதையுடைய பிள்ளைகளில் பலர் பள்ளிக்கூடத்தை அண்டாமல் இருக்கிறார்கள். பெற்றோர்கள் கண்களுக்கு அகப்படாமல் இருக்கிறார்கள். ஆசிரியர்களுடைய கைக்கு அகப்படாமல் எங்கெங்கோ சுற்றிக்கொண்டிருக்கிறார்கள். அவர்களையும் கொண்டு வந்து சேர்க்க முயற்சி எடுக்கப்பட்டு வருகிறது. இப்போது கூட சட்டப்படி பார்த்தால், ஆரம்பக் கல்வியை நாம் கட்டாயப்படுத்தியிருக்கிறோம். பிள்ளைகளை பள்ளிக்கூடத்தில் சேர்க்காத பெற்றோர்களுக்குத் தண்டனையிருக்கிறது. இந்தத்தண்டனையை நடை முறைப்படுத்தாமல், மக்கள் தாங்களாகவே பிள்ளைகளைப் பள்ளிகளில் சேர்க்கவேண்டுமென்ற அடிப்படையில் 94 சதவிதம் பிள்ளைகளைக் கொண்டு வந்து சேர்த்திருக்கிறோம். 4-வது திட்ட ஆண்டு இறுதிக்குள் 11 வயதுக்குட்பட்ட மாணவர்கள் 100-க்கு 100 சேர்க்கப்பட வேண்டுமென்று கருதுகிறோம். ஆரம்பக் கல்வியில் 94 சதவீதம் என்று இருந்தாலும், அடுத்த கட்டத்தில் 54 சதவீதமாக இருக்கிறார்கள். அதற்கு அடுத்த கட்டத்தில், அதாவது உயர் நிலைப் பள்ளி அளவிலே 35 சதவீதமாக இருக்கிறார்கள். 4-வது திட்ட இறுதிக்குள் 11 வயதுக்குட்பட்டவர்கள் 100-க்கு 100 என்ற அளவில் சேர்க்கப்பட வேண்டும். அதற்கு அடுத்த கட்டத்தில் 80 சதவீதமாவது இருக்கக் கூடிய அளவிலேயும், அதற்கு மேல் 55 சதவீதமாக உயர்நிலைப் பள்ளி அளவிலேயும் இருக்க வேண்டுமென்ற முயற்சியில் ஓரளவு வெற்றி கண்டிருக்கிறோம். ஆகவே, இது மட்டுமல்லாமல், ஆசிரியர்கள் சம்பள விகிதங்கள் கூடி எல்லாம் சேர்ந்து பெரும் செலவு ஏற்பட்டதனால், இந்த அளவிற்குத் தான் முடிகிறது. வரவு செலவுத் திட்டத்தில் இவ்வளவுதான் ஒதுக்க முடியும் என்று பார்க்கிறபோது இவ்வளவு செலவழிக்கிறோம் பொதுக் கல்விக்கும், தொழில் நுட்பக் கல்விக்கும், கல்வி என்று பொதுவாகக் கணக்கிட்டால், மருத்துவக் கல்வி, வேளாண்மைக் கல்வி, சமூகக் கல்வி, அரிஜன மாணவர்களுக்கு உதவிச் சம்பளம் ஆகிய அத்தனையையும் சேர்த்து கணக்குப் பார்த்தால், இந்த வரவு செலவுத் திட்டத்தில் 100 கோடியே 77 லட்ச ரூபாய் கல்விக்காக மட்டும் ஆகிறது என்று பொதுவாகச் சொல்லலாம். ஆகவே, இவ்வளவுதான் செலவழிக்க முடியும். சட்டியில் எவ்வளவு இருக்கிறதோ அவ்வளவு தான் அகப்பையில் வரும். ஆகையினால் எவ்வளவு வருகிறதோ அதில்





தான் பங்கிட்டுத் தர முடியும். இந்த நிலையில் தொடக்கப் பள்ளிகள் விருத்தியடைகிற சூழ்நிலை ஓரளவிற்குத் தான் முடியும். மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் கூறியது போல, இன்னும் சில ஆண்டுகளில் ஒரு சாச்சுரேஷன் பாயிண்டு வந்து விடும். 300 பிள்ளைகளுக்கு ஒரு தொடக்கப் பள்ளி என்று அமைந்து விட்டால், தொடக்கப்பள்ளியை உருவாக்கிக் கொண்டு வருவதில் ஒரு "ஸ்டேண்டு ஸ்டில்" நிலைமை வந்துவிடும். மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் குறிப்பிட்டது போன்று, அதற்குப் பிறகு பட்ஜெட்டிலே இவ்வளவு பெரும் தொகை ஒதுக்குவது இப்போதிருக்கிற பள்ளிகளை உறுதிப் படுத்தவும் அதனை ஆழப்படுத்தவும், வசதி வாய்ப்புகளைப் பெருக்கவும் பயன் படுகிற அளவிற்கு ஆகும். இன்னும் 5 மைல், 15 மைல் வட்டாரத்திற்குள்ளே பல இடங்களில் தொடக்கப்பள்ளிகள், உயர்நிலைப்பள்ளிகள் இல்லை என்ற நிலை இருக்கிறது. இன்னும் பல இடங்களில் கல்லூரிகள் அமைய வேண்டிய நிலை இருக்கிறது. ஒரு கல்லூரி அமைவதென்றால், அரசு பொறுப் பேற்றுக்கொள்ள வேண்டுமென்றால், 30 லட்ச ரூபாய் செலவழித்தால்தான், முதல்தரமான கல்லூரியை உருவாக்குவதற்கு முடியும். மக்கள் 5 லட்சம் கொடுத்தாலும் கூட, அரசு 25 லட்சம் ஒதுக்கினால் தான், ஒரு ஆண்டில் ஒதுக்க முடியாவிட்டாலும் 4, 5, 6 ஆண்டுகளில் ஒதுக்கினால் தான், முதல்தரமான கல்லூரி வர முடியும். கல்லூரிகளில் மாணவர்களை அதிக அளவிலே சேர்க்கிற முயற்சியிலே ஈடுபட்டு வருகிறோம். வாய்ப்பு வசதிகளை ஏற்படுத்தி வருகிறோம். உயர்நிலைப் பள்ளிகளைத் தேவையின் அடிப்படையில் தந்துகொண்டு வருகிறோம். அந்த வகையில் கணக்குப் பார்த்தால், 70 பள்ளிகளுக்குத் தேவையான அளவிற்கு மாணவர்கள் இல்லாத நிலையில் நடத்தப்படவேண்டிய அளவிற்கு உயர் நிலைப் பள்ளிகள் இருக்கின்றன. கிட்டத்தட்ட 5 மைல் வட்டாரத்திற்கு ஒரு உயர் நிலைப் பள்ளி என்ற முறையில், பள்ளி இறுதியாண்டு வகுப்பிற்கு 7 மாணவர்கள் 8 மாணவர்கள் என்று இருந்தாலும், 9, 10, 11 வகுப்புகளுக்கும் சேர்த்து மொத்தம் 30 மாணவர்கள் என்ற நிலை இருந்தாலும் பள்ளிகள் இருக்கின்றன. அவைகளை மூடினாலும் தவறு. அவற்றில் மாணவர்களைக் கொண்டுவந்து சேர்ப்பதற்குப் பல கஷ்டங்கள் இருக்கின்றன. அவைகளை எடுத்தால், பிள்ளைகள் பல மைல்கள் போய்ப் படிக்கவேண்டிய சூழ்நிலை இருக்கிறது. இப்படிப் பரவலாக ஆக்குவதன் மூலமாக அவைகளை உறுதிப்படுத்த முடியாமல் இருக்கின்றது. வாய்ப்பு வசதிகளைப் பெருக்க வேண்டிய நிலையில் இருக்கிறோம் என்பதைக் கூறிக் கொள்ள விரும்புகிறேன். கல்லூரிகளில் இருக்கிற நிலைமைகளில் கூட, சாதாரணமாக உயர் நிலைப் பள்ளிப்படிப்பு படிப்பவர்களிலே கிட்டத்தட்ட ஒரு பகுதியினர் தான் கல்லூரிக்கு வருகிற சூழ்நிலை இருக்கிறது. மேலை நாடுகளில் கூட மூன்றில் ஒரு பகுதியினர் தான் கல்லூரிக்கு வருகிற சூழ்நிலை இருக்கிறது. கிழக்கு ஜெர்மனி கல்வியமைச்சர் வந்த போது அவருடன் உரையாடுகிறபோது, உங்கள் நாட்டில் பள்ளியிறுதி வகுப்பு படித்தவர்கள் எவ்வளவு பேர் கலலூரிக்கு வருகிறார்கள் என்று கேட்டதற்கு, நாட்டினுடைய தேவையைக் கணக்கிட்டு மூன்றில் ஒரு பகுதியினர் வரத் தக்க அளவிற்கு ஏற்பாடுகள் நடக்கின்றன என்றார். அமெரிக்க நாட்டில் கூட 44 சதவீதத்தினர் தான் கல்லூரியில் படித்து பட்டம் பெறக் கூடிய அளவிற்கு இருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர்கள் ஒரு சிலர் குறிப்பிட்டார்கள். ஒரு வரையறை செய்து விடுவது நல்லது, பள்ளி இறுதி வரை படித்து கல்லூரியில் புகுபவர்களுக்கு 300 மார்க் வாங்கினால் தான், அல்லது 50 சதவீதம் மார்க் இருந்தால் தான், செல்லலாம் என்கிற மாதிரி வைக்கலாம் என்றார்கள். இப்படிச் செய்வதென்றால், பல சங்கடங்கள் வருகின்றன. பரம்பரை பரம்ப

[திரு. இரா. நெடுஞ்செழியன்] [24th July 1971

யாக வீட்டில் யாருமே படிக்காமல், பள்ளியை எட்டிப் பார்க்காமல் உள்ள குடும்பங்களிலிருந்து வருகிற பிள்ளைகள் இருக்கிறார்கள். அவர்கள் படிப்பதற்கான தாண்டுதல் கிடையாது. அந்த நிலையில் உள்ள பிள்ளைகளின் நிலையைக் கவனிக்கவேண்டியிருக்கிறது. இப்படி 300 மார்க் என்ற நிலையை வைத்தால், இவர்களுக்கு மேலே படிக்கக் கூடிய சூழ்நிலை இல்லாமல் போய்விடும், காரணம் வசதி படைத்த ஒரு தலை முறை, இரண்டு தலை முறை படித்த குடும்பத்திலிருந்து வருகிற பிள்ளைகள் அந்த வாய்ப்பை எளிதில் பெற்றுவிட முடியும். இந்த நிலைமை ஏற்பட்டுவிடுமென்ற காரணத்தினால், வரையறை வைக்காமல் இருந்தோம். அதனால் கல்லூரிகளை எந்த அளவிற்குப் பெருக்க முடியுமோ, அந்த அளவிற்குப் பெருக்கிக்கொண்டு வருகிறோம். மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் குறிப்பிட்டது போல, 105 கல்லூரிகளாக 1966-67-இல் இருந்தது இப்போது 161 கல்லூரிகளாக இருக்கின்றன. இந்த ஆண்டு அரசு சார்பாக 3 கல்லூரிகளும், தனியார் துறையில் 10 கல்லூரிகளும் வரும் என்று எதிர்ப் பார்க்கப்படுகிறது. கிட்டத்தட்ட 13 கல்லூரிகள், இதனையும் சேர்த்தால் 174 கல்லூரிகள் ஆகின்றன. கல்வித் துறையைப் பொறுத்தவரை, தனியார் கல்லூரிகளை அரசு ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று சொன்னார்கள். 200 ஆண்டுகளுக்கு முன்னால் பிரெஞ்சு நாட்டில் பிரபுக்கள் வீட்டுப் பிள்ளைகள்தான், பணக்கார வீட்டுப் பிள்ளைகள்தான் குருமார்களிடம் படிக்க முடிந்தது, ஏழைகள் வீட்டுப் பிள்ளைகள் படிக்க முடியவில்லை. அங்கு புரட்சி ஏற்பட்டு, அதன் விளைவாக அரசு பொறுப்பு ஏற்றுக்கொள்ளவேண்டு மென்று ஏற்பட்டது. ஜூயி பெரி என்பவரால் முயற்சி எடுக்கப்பட்டது. பிறகு பல்வேறு நாடுகளுக்குப் பரவி அரசு ஏற்றுக்கொள்கிற முயற்சிகள் எடுக்கப் பட்டன. இங்கு முழுவதையும் அரசு ஏற்றுக்கொள்ள வேண்டு மென்றால், கஷ்டங்கள் இருக்கின்றன. மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்களும்

5.40 p.m. மாண்புமிகு உறுப்பினர் திரு. சா. கணேசன் அவர்களும் எடுத்துத் தெரிவித்த படி, குறைபாடுகள் என்பது தனியார் கல்லூரிகளிலும், அரசுக் கல்லூரிகளிலும் ஆக, இரு வகையான கல்லூரிகளிடத்தில் தான் இருக்கின்றன என்ற கருத்து தொனிக்கிற அளவிற்கு மாண்புமிகு உறுப்பினர் திரு. சாமிநாதன் அவர்கள் ஒரு நிகழ்ச்சியை மட்டும் எடுத்து வைத்து விட்டு அந்த நிகழ்ச்சி மூலம் அரசாங்கக் கல்லூரிகள் அத்தனையிலும் குறைபாடுகள் இருக்கின்றன என்றார் கள். குறைபாடுகள் இரண்டு வகை கல்லூரிகளிலும் இருக்கின்றன. 161 கல்லூரிகளில், 118 கல்லூரிகள் தனியார் துறையில் நடைபெற்று வருகின்றன. தனியார் துறைக் கல்லூரிகள் பலவற்றிற்கு நிறைய சொத்துக்கள் இருக் கின்றன. கல்வி அறத்தை வளர்க்க வேண்டுமென்று பல பேர்கள் சொத்துக களை எழுதி வைத்து விட்டுப் போயிருக்கிறார்கள். ரூ. 30 லட்சம், ரூ. 40 லட்சம் என்று எழுதிவைத்துவிட்டுச் சென்றவர்கள் இருக்கிறார்கள். காலஞ்சென்ற வழக்கறிஞர் திரு. வி. எல். எத்திராஜ் அவர்கள் 35 லட்ச ரூபாய் எத்திராஜ் கல்லூரிக்காகத் தந்து விட்டுப் போயிருக்கிறார். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திற்கு அப்படிச் சொத்துக்களை விட்டுச் சென்றிருக்கிறார்கள். காரைக் குடி அழகப்ப செட்டியார் கல்லூரிகளுக்கு அழகப்ப செட்டியார் நிறைய சொத்துக்களை விட்டுச் சென்றிருக்கிறார். இப்படிப் பல லட்சக்கணக்கான அளவிற்கு பணம் இருப்பது கல்வி வளரப் பயன்படுகிறது. பல இடங்களில் தனியார் கல்லூரிகள் சிறப்பாக நடைபெறுகின்றன. ஆனாலும் குறைபாடு உடைய கல்லூரிகள் இருக்கின்றன என்பதை மறந்துவிடக் கூடாது. வியாபார நோக்கத்தின் அடிப்படையில் சில கல்லூரிகள் நடைபெறுகின்றன என்பதை மறந்துவிட முடியாது. மாண்புமிகு மதுரை உறுப்பினர் அவர்கள். எடுத்துச்



24th July 1971] [திரு. இரா. நெடுஞ்செழியன்]

சொல்லிய மாதிரி, பக்கத்தில் இருக்கிற குன்றத்தூர் அருகில் உள்ள சிறுகளத் தூர் என்ற ஊரில் ஒரு கல்லூரி, வியாபார நோக்கத்தின் அடிப்படையில் ஆரம்பிக்கப்பட்டது. கட்டிடம், மற்றும் வசதிகள் இல்லாத காரணத்தினால், பல்கலைக்கழகமே அதனுடைய அங்கீகாரத்தை ரத்து செய்கிற அளவிற்கு வந்து ஹைகோர்ட்டில் நிர்வாகிகள் "ஸ்டே" வாங்கி நடத்துகிற அளவிற்கு இருக்கிறது. அந்தக் கல்லூரிக்கு அரசு மானியம் தரவில்லை.

திரு. எம். அய்யாசாமி: இந்த வருஷமும் ஏராளமான பணம் வசூல் பண்ணியிருக்கிறார்கள்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: அரசாங்கம் மானியம் தரவில்லை, அரசு நடவடிக்கைகள் எடுக்க இருக்கிறது. முறை தவறி நடக்கிற கல்லூரி களை எடுக்க அரசிடத்திலும், பல்கலைக்கழகத்தினிடத்திலும் சட்டமில்லை. சட்டம் திருத்தப்பட வேண்டும் என்ற கருத்து தெரிவிக்கப்பட்டிருக்கிறது. கல்லூரிகள் மக்களுக்குப் பயன்படுகிற அளவிற்கு நடக்கவில்லையென்றால், அதை எடுத்துக்கொள்ள வேண்டுமென்பதற்கு சட்டதிட்டங்கள் திருத்தப்பட வேண் டும். இதை அரசு ஆராய்ந்துகொண்டிருக்கிறது. அந்த மாதிரி நடவடிக் கைகள் எடுத்ததற்குப் பிறகு முறைகளை ஏற்படுத்தலாம். தனியார் கல்லூரி களில் மாணவர்கள் சேர்ப்பதைப் பற்றிச் சொன்னார்கள். அரசுக் கல்லூரிகளில் உள்ள நிலைமை எல்லோருக்கும் பதில் சொல்லவேண்டிய நிலைமையில் இருக் கிறது. எல்லா தரப்பிலிருந்து வருகிறவர்களையும் சேர்த்துக்கொள்வதற்கு நியதி வகுத்து அதன் அடிப்படையில் சேர்க்கவேண்டியவர்களாக இருக்கி றோம். தனியார் கல்லூரிகளில் அந்தந்த வகுப்பினரைச் சேர்த்துக்கொள்கிற சூழ்நிலை இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்கரலிங்கம் அதைச் சுட்டிக் காட்டினார்கள். தனியார் கல்லூரி வைக்கிறபோது, ஒரு குறிப்பிட்ட ஜாதியினர் கல்லூரி வைக்கப்படுகிறது என்றவுடனே, ரூ. ஒரு லட்சம் ரூ. ½ லட்சம், ரூ. 30 ஆயிரம் என்று கொடுத்தும், தேவையான கட்டிடங்கள் கொடுத் தும் விடுவதால், அந்த ஜாதியின் பேரில் கல்லூரி வைக்கிறோம், பொதுவாக நடக்கிறோம் என்று சொல்கிறார்கள். ஆனால் மாணவர்களைச் சேர்க்கிற போது அந்த ஜாதி உணர்வு வந்து விடுகிறதென்பதை யாரும் மறுப்பதற்கில்லை. கிருஸ்துவர்கள், இஸ்லாமியர்கள், இந்து, அற நிலையங்களின் பேரில் நடத்துகிற கல்லூரிகளில் இன அடிப்படையில் சேர்க்கிற நிலையை வைத்துக்கொண்டிருக் கிறார்கள். கல்லூரி முதல்வர்களுக்கு முழு உரிமை தரப்பட்டிருக்கிறது. பல் கலைக் கழகம் கூட இவ்வாறு செய்ய வேண்டும், இப்படிச் செய்ய வேண்டும் என்று சொல்ல முடியாது. "எலிஜிபில் ஃபார் காலேஜ் கோர்ஸ்" என்று சொன்னதற்குப் பிறகு அவர்கள் கல்லூரியில் சேரத் தகுதி படைத்தவர்கள் பட்டியலில் வருகிறவர்கள். அவர்கள் கல்லூரியில் சேருவதற்கு உரிமை உண்டு. ஆனால் மாணவர்களைக் கல்லூரியில் சேர்க்கிற நிலையில் மாண்புமிகு உறுப்பினர் கள் சுட்டிக் காட்டிய மாதிரி இரண்டாயிரம், 4 ஆயிரம் என்று வாங்கு கிறார்கள். அதற்குப் பெயர் நன்கொடை என்று வைத்து வாங்குகிறார்கள். என்னிடத்தில் கேட்டு வாங்கினார்கள் என்று யாராவது சொல்லுவும், எழுதித் தாருங்கள் என்று சொல்கிறார்கள். கடைசியில் தங்கள் பெண், பிள்ளை களுக்கு ஆபத்து வந்து விடுமோ என்று நன்கொடை வழங்கினோம் என்று சொல்கிறார்கள். எப்படி இதைத் தடுத்து நிறுத்துவது, எப்படி இது கணக்கில் வருகிறது, கணக்கில் வருவதற்கு வழி வகை என்ன, என்பதை ஆராய சட்ட திட்டங்களைத் திருத்தவேண்டிய முயற்சிகளை அரசு எடுத்து வருகிறது என்று

கூறிக்கொள்ள விரும்புகிறேன். கல்லூரிகளுடைய, பள்ளிகளுடைய தரத்தை உயர்த்த வேண்டுமென்று சொன்னார்கள். இதை எல்லோரும் எடுத்துச் சொல்லி வருகிறார்கள். இதற்கான முயற்சிகளில் அரசு ஈடுபட்டு வருகிறது. தனியார் கல்லூரிக்கும் அரசுக் கல்லூரிக்கும் இருக்கிற தன்மையைப் பார்த்தால், தனியார் கல்லூரிகளில் பொறுக்கியெடுத்தவர்கள் நிரந்தரமாக ஒரே கல்லூரியில் 20, 30 ஆண்டுகள் வேலை செய்கிற நிலையில் தனியார் கல்லூரிகளுக்குச் சிறப்ப எற்பட்டு வருகிறது. ஆனால் அரசுக் கல்லூரிகளில் பல விதி முறைகளை, சீனியாரிடி, மற்றவைகளைப் பார்க்க வேண்டும். சீனியாரிடி அடிப்படையில் தான் மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டார். முதல்வரும் அங்கே முதல்வராக ஆகியிருக்கிறார். இவை பல குறைபாடுகளை நீக்கிவிட்டு திறமையின் அடிப்படையில் வைக்க முடியுமாவென்றால், சட்ட திட்டங்கள் அதற்கு இடம் தரவில்லை. இப்படி விதி முறைகளை அனுசரிக்க வேண்டிய அவசியம் அரசுக் கல்லூரிகளில் ஏற்படுகிறது. பொதுவாக எல்லோருக்கும் சம வாய்ப்பு தருகிற பெரு முயற்சியில் ஈடுபடவேண்டி யிருக்கிறது. அந்த முறைகளில் ஆசிரியர்களை நியமிக்க வேண்டியிருக்கிறது. பல துறைகளில் திறமைசாலிகள் இருக்கிறார்களென்று சொன்னால், அவர்களை ஈர்த்துக் கொள்ளக் கூடிய சூழ்நிலையில்லை. காரணம், இப்போது தருகிற சம்பளத்தை விட அதிகச் சம்பளம் அவர்களுக்குத் தர வேண்டும். அப்படியென்றால் இரண்டு, மூன்று மடங்கு சம்பளத்தைக் கூட்டினால் தான் அவர்கள் வரக் கூடும். இப்போதே 82 கோடி ரூபாய் இந்தத் துறைக்காகச் செலவிடப்படுகிறது. அடுத்து, மருத்துவத் துறை வருகிறது. அந்தத் துறைக்கு 33 கோடி ரூபாய். மற்றத் துறைகள் அதற்குக் கீழே வருகின்றன. இதிலே சம்பளத்தைத் தாக்குவதென்றால் 10 பேர் ஒரு ஜில்லாவிலே இருக்கிறார்களென்றால், தூக்கி விடலாம். சம்பளத்தைத் தாக்கவேண்டுமென்றால், அந்தத் தொகையை வைத்து இரண்டு லட்சத்துச் சில்லரையால் பெருக்கவேண்டியிருக்கிறது. இந்த நிலையில் பெருக்கவேண்டியிருக்கிறது. இப்படிச் செய்தால் கோடிக்கணக்கில் நிற்கிறது. ஆகவே, கூடுமான அளவிற்குச் சூழ்நிலையை யொட்டி உயர்த்திக்கொண்டு வருகிறோம். அப்படிப் பார்க்கிறபோது, கல்வித் துறையில் மிக கெட்டிக்காரர்கள் இருந்தால், அவர்கள் வெளியே போய்விடுகிறார்கள். அவர்கள் அப்படிப் போவதைத் தடுத்து நிறுத்துவதற்கில்லை. வெளியே போகவேண்டுமென்று அனுமதி கேட்கிற போது, போகக் கூடாது என்று மறுத்து விடலாம். ஆனால் அவர் தன்மையைக் குறித்து தடுத்து நிறுத்துவதற்கில்லை. அப்படித் தடுத்து நிறுத்திவிட முடியாது. மாண்புமிகு உறுப்பினர்கள் பாடத் திட்டங்களைப் பற்றிச் சொன்னார்கள். பல்கலைக்கழக அளவிலே பாடத் திட்டத்தைத் திருத்தியமைக்க குழு அமைக்கப்பட்டிருக்கிறது. பள்ளிகளிலே பாடத் திட்டங்களைத் திருத்துவதற்காகத் தனிக் குழு அமைக்கப்பட்டிருக்கிறது. அதுசிறந்த முறையிலும், கடுமையான முறையிலும் வைக்கப்பட வேண்டுமென்று கூறப்பட்டிருக்கிறது. வேறு பல நாடுகளை ஒப்பிட்டுப் பார்க்கிறபோது, அந்த நாட்டில் 6-ம் வகுப்பிற்குச் சொல்லிக் கொடுக்கக்கூடிய பாடங்களை நாம் இங்கே 8-ம், 9-ம் வகுப்புகளில் சொல்லிக் கொடுத்துக்கொண்டு வருகிறோம். மன வளத்தைப் பார்த்தால், நாம் மற்ற நாடுகளோடு ஒப்பிடும் போது, எந்த வகையிலும் குறைந்தவர்கள் அல்ல. வாய்ப்பு வசதிகளைப் பொறுத்த மட்டில், உலக நாடுகளோடு ஒப்பிடுகிறபோது, இங்கு வாய்ப்பு வசதிகள் குறைவாக இருக்கலாமே தவிர, டாலண்ட், இன்டெலிஜென்ஸ் என்று பார்த்தால், உலக மக்களோடு ஒப்பிட்டுப் பார்க்கிற போது, இந்த டாலண்ட், இன்டெலிஜென்ஸ் அதாவது அறிவுத் தன்மையும், ஆற்றல்



தன்மையும் அங்குள்ள சராசரி மனிதனுக்குக் குறைவில்லை. உலக நாடுகளில் உள்ள சராசரி மனிதனோடு ஒப்பிடும்போது, இந்த வாய்ப்பு வசதிகள் குறைவாக இருக்கிற காரணத்தினால், மனவளத் தன்மைகளைப் பெருக்க வசதி ஏற்படாமல் போய் விடுகிறது. பாடத் திட்டங்களைக் கடுமையாக ஆக்காவிட்டாலும், மிக விரிவாகத் தெரிந்துகொள்கிற வாய்ப்பு தமிழகத்தினுடைய மண் வளத்திற்கும் உண்டு என்ற அடிப்படையில் மாற்றியமைக்கும்படி கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறது.

அதிலும் குறிப்பாக, படித்த படிப்பால் முன்னேற்றத்திற்கு வாய்ப்பு ஏற்படுகிறதா, அல்லது தேவையற்ற நிலைமை ஏற்படுகிறதா என்பதை ஆராய்ந்து, இந்தத் திட்டங்களை மாற்றியமைக்க முடியுமா என்று வல்லுநர்கள் கேட்டிருக்கிறார்கள். அறிவு பெறுவது எதற்காக என்றால், சொல்லாற்றலும் செயலாற்றலும், பெறுவதற்கு மட்டுமல்லாமல், மனித சமுதாயத்திற்கு, மனித வாழ்க்கைக்கு ஒத்த அளவில் பயன்படும் வகையில் கல்லூரி மாணவர்களுக்கு எடுத்துச் சொல்ல வேண்டும். அந்த ஆற்றலைச் சொல்லித் தருபவர்களுக்கு அறிவு தரவேண்டும். அதற்குத் தகுந்த பாடத் திட்டத்தை உண்டாக்க வேண்டும். ஆகையால், அந்தத் திட்டங்கள் பல்வேறு வகையில் திருத்தியமைக்கப்பட வேண்டியிருக்கின்றன. டாம்ப்ரின், டெல்ஹவுசி இவர்களின் காலம் என்ன, என்ன செய்தார்கள் என்று சொல்லும் சரித்திரம் இப்போது தேவையற்றது. அவைகளை ஓரளவுக்குத் திருத்தி, அந்தப் பாடத் திட்டங்களின் தரத்தை உயர்த்தலாம் என்று எண்ணிக்கொண்டிருக்கிறோம். 5-50 p.m.

அடுத்ததாக, மொழிப் பயிற்சியைப்பற்றி எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். இந்த அரசும் தன்னுடைய நோக்கம் முழுவதும் என்ன என்பதை பல நேரங்களில் வற்புறுத்திச் சொல்லியிருக்கிறது. மொழிப்பயிற்சி பற்றி என்ன சொன்னார்கள் என்பதை முன்னால் நடைபெற்ற விவாதத்தில் எடுத்து வைத்திருக்கிறேன். மொழிக் கல்வி என்பது அந்தந்தப் பகுதிக்குள்ள மொழியாக இருக்க வேண்டுமென்ற கருத்து உலகம் முழுவதும் ஒப்புக்கொள்ளப்பட்ட கருத்தாகும். அதையும் மாற்ற முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறோம். 1968-ம் ஆண்டு ஜூலைத் திங்கள் 23ம் நாள் சட்ட மன்றப் பேரவையில் மொழித் திட்டம் பற்றி ஒரு தீர்மானம் நிறைவேற்றப் பட்டிருப்பதை மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆறுமுகசுவாமி அவர்கள் குறிப்பிட்டுக் காட்டினார்கள். இரு மொழிக் கொள்கையாக—ஆங்கிலம், தமிழ் இரண்டும் பயிற்சி மொழிகளாக இருக்க வேண்டுமென்று இந்த அரசு கொள்கை வகுத்திருக்கிறது. ஆங்கில அறிவு, உலக அறிவு, தொடர்பு, வணிகத் தொடர்பு இவைகளுக்கு இன்றியமையாத தேவை என்பதை அமைச்சர்களும் மறக்கவில்லை. ஆகவே தான் ஆங்கிலத்தைக் கட்டாயமாகச் சொல்லிக்கொடுப்பதற்காக மூன்றாவது வகுப்பிலிருந்து இறுதி வகுப்பு வரை கட்டாயப் பாடமாக வைத்திருக்கிறோம் வேறு பல மாநிலங்களில் எல்லாம் ஆங்கிலத்தை அறவே வேண்டாம் என்கிற அளவுக்குக் கூட ஒதுக்கிவிட்டு, 8-வது, 9-வது, 10-வது வகுப்பில் மட்டும் போதும் என்று வந்திருக்கின்றன. வேறு பல மாநிலங்களில் ஆங்கிலத்தில் தேர்வு எழுத வேண்டாம் என்றும் சொல்லியிருக்கிறார்கள். ஆங்கிலத்தில் கடிதம் எழுதியதற்காக பீஹாரில் ஒரு அதிகாரி நீக்கப்பட்டார் என்றும் அறிகிறோம். அந்த அளவுக்கு அவர்களுக்குத் தங்கள் மொழி வளர வேண்டுமென்ற உணர்வு இருக்கிறது. உலக நாடு

எனெனில்லும் இந்த உணர்வைப் பார்க்கிறோம். அந்த அளவிலே உலகத் தொடர்ப்பு, கல்வியின் வளர்ச்சி முதலியவற்றை உணர்ந்து தான் ஆங்கிலம் புறக்கணிக்கப்படவில்லை. அதே சமயத்தில் தமிழுக்கு வாய்ப்பளிக்க வேண்டு மென்ற திட்டத்தையும், தேவையையும் உணர்ந்திருக்கிறோம். சில பல ஆண்டு களிலாவது அந்த நோக்கம் நிறைவேறும். இந்தத் தலைமுறையில் அதற்குத் தொடக்கம் தொடங்கினால் தான், சில பல ஆண்டுகளிலாவது அந்த நோக்கம் நிறைவேற முடியும். ஆக, தமிழிலே பாடம் சொல்லிக் கொடுக்க வேண்டுமென் பதை உணர்ந்திருக்கிறோம். தமிழைப் படிப்பது, தமிழிலே படிப்பது, ஆங்கி லம் படிப்பது, ஆங்கிலத்தைப் படிப்பது என்பதை உணர வேண்டும். ஆங்கிலத்தைப் படிப்பதை நான் வரவேற்கிறேன். இன்றைக்கு எல்லா இடங் களிலும் ஆங்கிலம் இருக்க வேண்டுமென்ற கொள்கையை இந்த அரசு ஏற்றுக் கொள்ளவில்லை தமிழைப் படிக்க வேண்டுமென்று இருந்த நிலை மாறி, தமிழி லேயே படிக்க வேண்டும் என்று மெல்ல மெல்ல, ஒரேடியாக இல்லாமல், முயற்சி எடுக்கப்பட வேண்டும். எதேனும் ஒரு கட்டத்தில் தான் முயற்சி எடுக் கப்பட வேண்டுமென்ற முறையில் இந்த அரசு தமிழிலேயே பாடம் சொல்லிக் கொடுக்க வேண்டுமென்று செய்திருக்கிறோம். 1931-32-ம் ஆண்டுக்கு முன் பார்த்தால், 5-வது வகுப்பு வரையில் தான் தாய் மொழியில் பாடங்கள் சொல் லிக்கொடுக்கப்பட்டன. பஸ்ட் பாரத்திலிருந்து தமிழ் மொழிப் பாடம் தவிர, மற்றது எல்லாம் ஆங்கிலத்தில் தான். அப்பொழுது இருந்த பல்கலைக்கழகத் துணை வேந்தர்களும், கல்வி வல்லுநர்களும், மற்றவர்களும் தாய்மொழியி லேயே தான் பாடங்கள் சொல்லிக்கொடுக்க வேண்டுமென்றும் அப்பொழுது தான் அறிவும் ஆற்றலும் பெற முடியும் என்றும் கருதினர். 1933-34-ல் பள்ளி இறுதி வகுப்புவரை மெல்ல மெல்ல ஆண்டுக்கு ஆண்டு தமிழிலேயே—வட்டார மொழியிலேயே கல்வி போதிக்க வேண்டுமென்று கருதப்பட்டது. ஆங்கிலத்தை மொழிப்பாடமாகச் சொல்லிக்கொடுப்பது என்ற நிலை இருந்தது. ஆனால் 63-67 வரையிலேயும் அதற்கு அடுத்த முயற்சி எடுக்கப்படாமலேயே தடை விதிக்கப்பட்டு, பள்ளி இறுதி வகுப்போடு வந்து நின்றது. ஆகவே, மேலே தொடர்ந்து ஆங்கிலத்திலே எல்லாம் சொல்லிக் கொடுக்கப்பட் டது. ஆனால், பள்ளி இறுதி வகுப்பு வரையில் வட்டார மொழியாகிய தமிழ் மொழியிலேயே தான் சொல்லிக்கொடுக்கப்படும் என்ற நிலை இருந்தது. 1938-லே எடுக்கப்பட்ட முயற்சி மெல்ல மெல்ல வளர்ந்து பல்கலைக்கழகங்களுக் கும் கல்லூரிகளுக்கும் வந்திருக்குமானால், ஜப்பான் நாடும் வேறு பல நாடு களும் மொழியில் அடைந்திருக்கும் முன்னேற்றத்திற்கு நாமும் வந்திருக்க முடியும். ஜப்பான் மொழி அறிவியலை இயற்கையாகப் பெற்றிருக்கிறதா என்றால், இல்லை. அங்கே உள்ள அறிவியல் மொழி வளர்ச்சி நமக்கு எப்படி மேல் நாடுகளிலிருந்து வந்ததோ, அதே போன்று ஜப்பான் நாட்டிற்கும் மேல் நாட்டிலிருந்து வந்துசேர்ந்ததே தவிர முதன்முறையாக அங்கே வந்தது என்று சொல்ல முடியாது. ஆங்கிலத்தைப் புரிந்துகொள்ளவும், அறிந்து கொள்ளவும் மட்டுமே பயன்படுத்திக்கொண்டு, ஆனால் பயிற்சி பெறுகிற அளவுக்குச் சிந்திக்கவும், செயலாற்றவும் தங்களுக்கு உள்ள அறிவைப் பெருக்கிக்கொள்ளவும் தாய்மொழி தான் ஏற்றது என்று கருதி, ஒரு 100 ஆண்டுக் காலத்திற்குள்ளே அந்தத் திறமையை ஜப்பான் மொழி பெற்றிருக் கிறது. இப்பொழுதும் அங்கே ஆங்கிலத்தை விரும்புகிறார்கள். நாம் எந்த நோக்கத்தோடு ஆங்கிலம் தவிர புரிய வேண்டுமென்று கருதுகிறோமோ, அது போல், அவர்களும் தவிர புரிய வேண்டுமென்று கருதுகிறார்களே தவிர,





தங்களை ஆளுகின்ற மொழியாக அது இருக்க வேண்டுமென்று கருதவில்லை. அந்த அளவுக்கு அவர்கள் மெல்ல மெல்ல முயற்சி எடுத்ததன் விளைவாக, ஒரு 100 ஆண்டுக் காலத்திற்கு முன்னால் வந்த ஜப்பான் நாட்டு அரசர் மேலை நாடுகளைப்போல் 'ராடிகல் சேஞ்ஜஸ்' என்ற தீவிரமான திட்டத்தைத் தொடங்கியதன் காரணமாக—தாய்லாந்து, மலேசியா, பர்மா, போர்னியோ அந்த அளவுக்கு வர முடியவில்லை—ஜப்பான் மட்டும் ஐரோப்பிய நாடுகளுக்கு இணையாக வர முடிந்தது. ஆகவே தான் தமிழிலே சொல்லிக்கொடுக்க வேண்டும், அதற்கான முயற்சி மெல்ல மெல்ல நடைபெற வேண்டுமென்று எடுத்துக்கொள்ள வேண்டும். இதற்குக் காரணம் தமிழ் வளரவேண்டுமென்பதல்ல. தமிழ் வளரவேண்டுமென்றால், தமிழ் மொழி யின் சொற்களின் வளம் வளர வேண்டும். அதற்கு உரைநடை, கவிதை காவி யம் வளர வேண்டும். அதற்குக் கவிஞர்களும் மற்றவர்களும் தான் ஒரு பொரு ளுக்கு பல சொற்கள், பல சொற்கள் கொண்ட ஒரு பொருள், பல பொருள் கொண்ட ஒரு சொல் என்ற அளவுக்கு மொழி நூல் வல்லுனர்களும், கவிதை களிலும் மற்றவைகளிலும் கொண்டுவர முடியும். பாடங்களை எல்லாம் தமிழில் சொல்லிக் கொடுப்பது தமிழ் வளரும் என்பதற்காக அல்ல, அறிவு வளரும் என் பதற்காகத் தான். அதன் மூலம் அறிவைப் பெற முடியும் என்பதற்காகத் தான். எளிதிலே புரிந்துகொள்ள முடியும், கல்வியைப் பெருக்கிக்கொள்ள முடியும். அதன் மூலம் எல்லா நாடுகளுக்கும் ஈடு இணையாக வரமுடியும். அண்மையிலே, தாய்லாந்திற்குப் போயிருந்தேன், அங்கே தாய்மொழியிலேயே சொல்லிக் கொடுக்கிறார்கள். மலேசியாவிலே போய்ப் பார்த்தால், அங்கேயும் மலேசிய மொழியிலே தான் சொல்லிக்கொடுக்கிறார்கள். சென்ற ஆண்டு அங்கே மருத்துவக் கல்லூரிக்குப் போய்ப் பார்த்தேன். ஒவ்வொரு வகுப்பிலேயும் மலேசிய மொழியிலே போட்டு, பிராக்கட்டிலே ஆங்கிலத்தைப் போட்டிருக்கி றார்கள். மற்றும், ஆங்காங், சைனா, ஜப்பான் முதலிய நாடுகளிலும் இப்படித் தான். ஜப்பான் நாட்டிலே நான்காவது மருத்துவக் கல்லூரி வகுப்பிலே ஒரு அரை மணி நேரம் இருந்தேன். ஜப்பானிய மொழியிலே பாடங்கள் சொல்லிக் கொடுக்கப்படுகின்ற திறமையை அந்த மொழி பெற்றுவிட்டது. அந்த வகை யிலே தான் நாம் திட்டங்களைத் தீட்டிக்கொண்டு வருகிறோமே தவிர, ஆங்கிலம் அறவே இருக்கக்கூடாது என்பதல்ல. தமிழைப் பயிற்சி மொழியாகக் கொண்டு வர இயலும் என்று கொண்டுவந்தோம். சித்திரமும் கைப் பழக்கம், செந் தமிழும் நா பழக்கம் என்று சொல்லி வைத்திருந்தார்கள்; பழக, பழக இதில் பயனும் பெற முடியும். இந்த மொழியும் அதனுடைய சொற்களையும் ஏற்ற முடியும். அந்த வகையிலே தான் நாம் 1968-ஆம் ஆண்டு திட்டம் கொண்டு வந்து, 1968, 1969, 1970-ஆம் ஆண்டுகளில் அரசினர் கலைக் கல்லூரிகளிலே தமிழிலே பயிற்றுவிக்கும் முறையைக் கொண்டு வந்தோம். அப்பொழுதும் ஆங்கிலத்தில் படிக்க வாய்ப்பு அறவே அற்றுவிட்டதா என்றால், இல்லை. ஏற்கனவே, 42,000 பேர் படிக்கிறார்கள் என்று வைத்துக்கொண்டால், அதற்குத் திட்டத்தட்ட 10,000 மாணவர்கள் ஆங்கிலத்திலே படிப்பதற்கு வாய்ப்பு ஏற் படுத்திவிட்டுத் தான் அதற்குப் பக்கத்திலே தமிழுக்கு ஏற்படுத்திக் கொடுத் தோமே தவிர, ஆங்கிலத்திற்காக இருக்கிற வாய்ப்புகளைக் குறைத்து, தமிழுக் குக் கொடுக்கவில்லை. ஆங்கிலத்தில் படிக்கிறவர்களின் எண்ணிக்கையைக் குறைத்துக்கொண்டு வரவில்லை. தமிழுக்கு 10,000 இடங்கள் என்று நிறுத்தி னோம். அந்த நிலைமைகள் வருகிறபொழுது கூட சில பல இடங்களிலே சங்க டங்கள் தெரிவிக்கப்பட்டன. உதாரணமாக ஒரு அரசினர் கல்லூரி மட்டும்

இருந்து, தனியார் கல்லூரிகளே இல்லாத இடங்களில் தமிழ் மட்டுமே பயிற்சி மொழியாக இருக்கிற காரணத்தால், சில பல இடர்ப்பாடுகள் இருக்கின்றன என்று அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது. சென்ற ஆண்டு சில இளர்ச்சிகளும் மற்ற போராட்டங்களும் கூட இருந்தன. கடலூர், விழுப்புரம், விருத்தாசலம், திண்டிவனம், அரியலூர் போன்ற இடங்களை எடுத்துக் கொண்டால், அங்கெல்லாம் அரசினர் கலைக் கல்லூரிகள் மட்டுமே இருக்கின்றன. அங்கே தமிழிலே மட்டுமே பயிற்சி இருப்பதால், சில சங்கடங்கள் இருக்கின்றன. அந்தச் சங்கடங்களை நீக்குவதற்கு என்ன வழிகளைக் கையாளலாம் என்று ஆராய ஒரு குழு அமைத்து, இந்த அரசின் கொள்கைகளைத் திட்ட வட்டமாக அமைத்துக்கொள்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. இது மெல்ல, மெல்ல வளர்ந்து வரவேண்டும், அதற்கு எல்லா முயற்சிகளும் ஆக்க பூர்வமாகத் தந்து கொண்டிருக்க வேண்டுமென்று கருதி, ஜப்பான், ஜெர்மனி, இத்தாலி, போர்ச்சுகல் போன்ற நாடுகளிலே இருப்பதைப் போல் எதேனும் ஒரு நாளைக்கு தாய் மொழியிலே கற்றுத் தரும் தகுதியை, திறமையை தமிழகம் பெறவேண்டும் என்ற திட்டவட்டமான கொள்கையை அரசு வைத்துக்கொண்டிருக்கிறது. அதற்கான முயற்சிகளை அவசரப்பட்டு எடுக்கவில்லை. இரவு நீங்கி பகல் வருவது போன்று முயற்சிகள் செய்கிறோமே தவிர, வேறு அல்ல. "சுவிட்ச் ஆன்" என்று கூட அல்ல, "சுவிட்ச்" போட்டவுடன் இருள் போய் வெளிச்சம் வந்துவிடும். ஆனால், இரவு எப்படிப் போகிறது என்று தெரியாது, பகல் எப்படி வருகிறது என்று தெரியாது. இரவு போய்க் கொண்டேயிருக்கும், பகல் வந்துகொண்டேயிருக்கும். அது போல தமிழ்க் கல்வி வந்து கொண்டிருக்கும் என்ற முறையிலே தான், அதற்கான முயற்சிகளை எடுத்தோம்.

6-00 p.m

ஏ. இலட்சுமணசாமி முதலியார் குழு அறிக்கையின்படி நடப்போம் என்று கூட எடுத்துச் சொன்னோம். அந்த வகையிலே தான் அவர்கள் தமிழ் மொழி மட்டுமே பயிற்றுவிக்கிற இடத்திலே ஆங்கிலத்திற்கும் வாய்ப்பும் வசதியும் அமைத்துக் கொடுக்க வேண்டும் என்று சொன்னார்கள். அந்தக் குழுவின் அறிக்கையை எல்லாம் எடுத்துச் சொன்னார்கள். அந்தக் குழு அறிக்கையில் அரசினர் கல்லூரிகளில் கட்டாயம் ஆங்கிலப் பிரிவுகள் ஏற்படுத்த வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். "should", "shall" "ஷல்" என்று போட்டிருக்கிறார்கள். தனியார் கல்லூரிகளிலே தமிழை வைப்பதுபற்றி மாணவர்கள் விரும்புவார்களேயானால், வாய்ப்பு வசதிகளை ஏற்படுத்த வேண்டுமென்று தனியார் துறை நிருவனத்தார் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள் என்ற அளவுக்குத் தான் அவர்கள் வந்திருக்கிறார்கள். அந்த இடத்திற்கு நாம் போகவில்லை. உறுப்பினர்கள் பல பேரும் சட்ட மன்றப் பேரவையிலும் வற்புறுத்தினார்கள். இங்கே எப்படி வற்புறுத்தப்பட்டதோ அப்படி அங்கேயும் வற்புறுத்தப்பட்டது. அப்படி தமிழிலே பாட மொழி இல்லாவிட்டால், மானியமே தரக் கூடாது என்று திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் இங்கே கல்வி அமைச்சராக இருந்த பொழுதே கொண்டு வந்தார். அது நடைமுறைப் படுத்தப்படாமல் இருந்தது. இப்பொழுது எங்கெங்கே தமிழ் பிரிவு மட்டும் இருந்ததோ, அங்கெல்லாம் ஆங்கிலப் பிரிவும் ஏற்படுத்த வேண்டுமென்ற முயற்சிகளை, அதற்காக கூடுதல் செலவு 10 இலட்சம் ரூபாய் ஆகிறது என்றாலும், எடுத்துக்கொண்டோம். மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்கள் ஒன்று குறிப்பிட்டார்கள்.





முழு அறிக்கையும் மே மாதம் தான் கிடைத்தது. அதற்குப் பிறகு ஒவ்வொரு கல்லூரியிலும் முயற்சிகள் செய்யவேண்டிய நிலைமைகள் ஏற்பட்டன. பல கலைக் கழகம் அதற்கான இட வசதிகள் இருந்தால் தான் அனுமதி தர முடியும் என்ற காரணத்தால், 21—7—1971-ல் அனுமதி தந்தார்கள். இவ்று கல்லூரிகளில் எந்தெந்த இடங்களுக்குக் கேட்டோமோ அந்தந்தப் பிரிவுகளில் ஆங்கிலப் பிரிவுகள் துவங்குவதற்கு 21—7—1971, முந்தா நாள், வரையிலும் அனுமதி தருகின்ற நிலைமைகள் இருந்த காரணத்தால் (சில இடங்களுக்கு முன்பு தந்தார்கள்) இந்த நிலைமை ஏற்பட்டது. இட வசதியைப் பெருக்குகின்ற வகையில் நூலகங்கள் மற்றவைகளை மாற்றிச் சரிக்கட்டிக் கொள்ள வேண்டுமென்றும் கட்டிடங்களை ஒரிரு மாதங்களிலே முடிக்கலாம் என்றும் வைத்துக் கொண்டிருக்கிறோம். அதத முறையிலே தான் தமிழுக்கு உதவித்தொகை தருவது என்ற தன்மை வந்தது. ஏற்கனவே, இந்தக் கொள்கையை தனியார் கல்லூரிகளிலே யாரும் நிறைவேற்ற முன்வரவில்லை. யாருமே என்று அல்ல, பல தனியார் கல்லூரிகளிலே இந்த முயற்சி மேற்கொள்ளப்பட்டது. தென் மாவட்டங்களிலே இன்றைக்குக் கல்லூரிகளிலே எல்லாம் தமிழ் துறை துவக்கப்பட்டு, இன்று அரசினர் கல்லூரிகளிலே எப்படித் தமிழ் பயிற்சி மொழியாக இருக்கிறதோ, அப்படி இருக்கிறது. பல மாவட்டங்களிலேயும் சென்னை போன்ற நகரத்தில் அதிகமாக இல்லை, மற்ற இடங்களில் அந்த வசதி வாய்ப்புகள் இருக்கின்றன. இப்பொழுது கூட மதுரைப் பல்கலைக் கழகப் பகுதியை எடுத்துக் கொண்டால், 64 தனியார் கல்லூரிகள் இருக்கின்றன. 64 கல்லூரிகளிலேயும் புகுமுக வகுப்பிலே அறிவியல் பாடம் எடுத்துக்கொண்டிருப்பவர்கள் 614 பேர். கலைத் துறையில் 4,320 பேர் கட்டாயத்திற்கு ஆளாகாமல் தாமே விரும்பிப் படிக்கின்ற அளவுக்கு இந்த ஆண்டு இருக்கிறார்கள், மதுரைப் பல்கலைக் கழகத்தை வேந்தர் இப்பொழுது கொடுத்திருக்கும் கணக்கு இது. பி.ஏ. கலைத் துறைப் பகுதியில் படிக்கிறவர்கள் 1,296 பேர் தமிழ் எடுத்துப் படிக்கின்றனர். ஆங்கிலத்தில் 4,678 பேர். ஆகவே, தமிழ் படிக்கின்ற சூழ்நிலை தனியார் கல்லூரிகளிலேயும் ஏற்படுகின்றது. அந்த முயற்சியிலேதான் இங்கேயும் ஏற்படுத்த வேண்டுமென்ற முறையில் நாம் துவக்கி அரசினர் கல்லூரிகளிலே தமிழ் பயிற்சி மொழிக்கு ஊக்கம் கொடுக்க வேண்டுமென்று செய்கின்றோம். இப்போது புதிய ஆங்கில வகுப்பைத் துவங்குவது என்ற சூழ்நிலை ஏற்பட்டதன் காரணமாக, இந்த நிலை இருக்கிறது. ஆங்கிலத்தைப் படிக்க வேண்டுமென்று மக்களுக்கு விருப்பம் இருக்கிறது என்பதை மறுக்கவில்லை, மறைக்கவுமில்லை. அதற்கான 'மேனியா' இருக்கிறது என்பதை யாரும் மறுக்கவுமில்லை, மறைக்கவுமில்லை. அது சரியா, தவரு என்பது விவாதத்திற்கு உரிய ஒன்று. அது வேண்டுமா, வேண்டாமா என்பது வேறு ஒன்று. வேலை வாய்ப்பு போன்ற மற்ற வைகளை வைத்துக்கொண்டு ஆங்கிலத்தைப் படிக்க வருகிற சூழ்நிலை இருக்குமானால், அதற்கான வாய்ப்புகளைக் குறைக்கவில்லை. மேலும், புதிய வகுப்புகளை எல்லாம் துவங்குவதன் மூலம், ஆங்கிலத்தில் மட்டும் 6,500 இடங்கள் புதிதாகக் கல்லூரிகளில் துவக்குகின்ற வகையிலே செய்யப்பட்டிருக்கிறது. ஆக, அரசினர் கல்லூரிகளிலே தமிழ் மட்டும் படிக்க வேண்டுமென்ற நிலை இருந்தது மாறி, ஆங்கிலமும் ஏற்படுத்திய பிறகு, தமிழ் படிக்கின்றவர்களுக்கு ஊக்கம் அளிக்க வேண்டுமென்ற நோக்கத்தில் தான் பட்டப் படிப்புக்கு பி.ஏ. பி.எஸ்.சி. படிக்கின்றவர்களுக்கு 180 ரூபாய், புகு முக வகுப்பில் படிக்கின்றவர்களுக்கு 50 ரூபாய் புத்தகங்களுக்காக ஊக்கம் தருவது என்று முடிவு செய்யப்பட்டது. மாண்புமிகு உறுப்பினர் திரு. வசந்த பாய் அவர்கள் மிகக் கடுமையாகச் சொன்

[திரு. இரா. நெடுஞ்செழியன்] [24th July 1971

ஞர்கள், என் அவர்கள் அவ்வளவு கடுமையாகப் பேசினார்கள் என்றே எனக்குத் தெரியவில்லை. ஆனாலும் தமிழுக்கு அவர் ஆதரவாக இருப்பார் என்று எதிர் பார்க்கவில்லை. ஏற்கனவே, இந்த மன்றத்திலே அதுபற்றித் தெரிவித்திருக் கிறார்கள். ஆங்கிலத்திற்கு வசதி, வாய்ப்பு கேட்பதை எற்கிறேன். அதற்காக தமிழுக்குத் தருகின்ற ஒன்றை எதிர்ப்பது சரியில்லை.

THIRU G. VASANTHA PAI : Sir, I am not against Tamil.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அவர் ஊக்கம் கொடுப்பதை லஞ்சம் என்று சொல்லியது யாருடைய நெஞ்சையும் புண்படுத்தும் என்பதை நான் குறிப்பிட்டுச் சொல்லுகிறேன். தமிழ் மொழிக்கு ஊக்கத்தைத் தந்தால், அதை "பிரைப்" என்று குறிப்பிட்டார்கள். சாதாரணமானவர்கள் குறிப்பிட் டிருந்தால் நான் வருந்தியிருக்க மாட்டேன். ஆனால், ஒரு பெரிய வழக்கறிஞர் ஒருவரே "இன்சன்டிவ்வை" 'பிரைப்' என்று சொல்கிற தன்மை வருகிற பொழுது, அது தமிழ் நெஞ்சத்திற்கு வேதனை தருகின்ற ஒன்று. ஆங்கிலத் திற்கு இடம் வேண்டும் என்று வாதாடுவதைப்பற்றிக் குறைப்படவில்லை. எல்லாவற்றையும் உடனே தமிழிலேயே ஆக்க வேண்டுமென்ற எண்ணத்தைக் கொண்டவர்கள் இருக்கிறார்கள். அப்படி அவசரப்பட்டுச் சொல்லுகிறவர்களும் இருக்கிறார்கள். ஆங்கிலத்திற்காக அவர்கள் வாதாடுவதைப்பற்றிக் கவலை யில்லை. ஆனால் ஊக்கத்திற்குத் தருகின்ற ஒன்றை லஞ்சம் என்று சொல்லு வது வேதனைக்குரியது. இப்படி ஊக்கம் தருகின்ற ஒன்றை 'பிரைப்' என்று சொன்னார்கள். ராஜாஜி அவர்களும் இப்படிச் சொன்னார்கள். இப்படி ஒரு அறிக்கையையிட்டிருந்தது மிகவும் வேதனை தரக்கூடிய ஒன்றாகும். ஊக்கம் தரக்கூடிய முறையிலே ஒன்றைக் கொடுத்தால், அது எப்படி 'பிரைப்' ஆகும் என்று தெரியவில்லை. ஆக்ஸ்போர்டு டிக்ஷனரியில் இதற்கான விளக்கம் என்ன என்று பார்த்தேன். அவர்கள் இப்படிச் சொன்னது எனக்கு மிக வேதனை அளிக்கக் கூடிய ஒன்றாக இருந்தது.

6-10 p.m.

"Bribe" : Money offered to procure (often illegal or dishonest) action in favour of the giver.

தமிழைப் பரப்புவதற்காக ஊக்கம் தரக்கூடிய முறையில் 120 ரூபாயும், 80 ரூபாயும் கொடுப்பது எனக்கோ, அமைச்சர்களுக்கோ அல்லது எங்கள் கட்சிக்கோ தனிப்பட்ட முறையிலே என்ன லாபம்? இப்படிப் பணத்தை வாங்கிக்கொண்டு எனக்குச் சகாயம் செய்கிற அளவிற்கு, எந்த அமைச்சருக் குச் சகாயம் செய்கிற அளவிற்கு இது போதுமானது? இது ஒரு இன்சென்டிவ். அவ்வளவுதான்.

'Incentive". Tending to incite to action, to do, to doing).

இன்சென்டிவ் கொடுக்கிறோம். ஸ்காலர்சிப் என்று வைத்திருக்கிறோம். ஸ்காலர்ஷிப் என்றால்

"Scholarship" : Under graduate or boy admitted to foundation usually after competitive examination and receiving education gratis or for reduced fees. A maintenance fee awarded by the educational institution.



24th July 1971] [திரு. இரா. நெடுஞ்செழியன்]

மாணவர்களுக்கு ஊக்கம் கொடுப்பதற்காக ஸ்காலர்ஷிப் கொடுப்பது போல, இதைக் கொடுக்கிறோம். தமிழ் நாட்டில் இருக்கிற மாணவர்கள் தமிழில் கற்றுக் கொள்வதை ஊக்குவிப்பதற்காக சலுகைகள் கொடுப்பது எப்படி லஞ்ச மாகும் என்பது எனக்குப் புரியவில்லை. இதை லஞ்சம் என்று சொன்னால், எல்லாமே லஞ்சமாகும். மதிய உணவு கொடுத்து 5, 6 ஆம் வகுப்புப் பிள்ளை களைப் பள்ளிக்கு வரும்படி செய்கிறோம். அதுவும் லஞ்சம் தான். பின் தங்கி யவர்களுக்குச் சலுகை என்று கொடுத்து, அவர்கள் கல்வி கற்றுக்கொள்வதை ஊக்குவிக்கிறோம். அதுவும் லஞ்சம் தான். தமிழகத்தில் மட்டும் இன் சென்டிவ் கொடுக்கப்படவில்லை. இப்படிப்பட்ட நிலைமைகள் பல மாநிலங்களில் இருக்கின்றன. மாணவர்களை ஊக்குவித்ததன் பலனாக ஆயிரம் பேரைக் கொண்டு வந்து தமிழில் புகுமுக வகுப்பில் கொஞ்சம் புகுத்தியிருக்கிறோம். எம்.ஏ., எம்.எஸ்.சி. இன்னும் ஆங்கிலத்தில் தான் நடை பெறுகிறது. இன்றைய வரையிலே இன்ஜினியரிங் கல்வி, ஆங்கிலத்தில் தான். பாலிடெக்னிக்கில் ஆங்கிலத்தில் தான். அக்ரிகல்சர் ஆங்கிலத்தில் தான் சொல்லிக் கொடுக்கப்படு கிறது. வெட்ரினரி, மெடிகல் கல்வி எல்லாம் ஆங்கிலத்தில்தான். எல்லா இடங்களிலும் ஆங்கிலம் தான் இன்னும் இருந்துகொண்டிருக்கிறது. இப்போது புகுமுக வகுப்பு, பி.ஏ. வகுப்பு, பி.எஸ்.சி.-யில் கொஞ்சம் தமிழைக் கொண்டு வந்திருக்கிறோம். தனியார் கல்லூரிகளுக்கு நாம் இன்னும் போகவில்லை. அரசினர் கல்லூரிகளில் மட்டும் தமிழைப் புகுத்தியிருக்கிறோம். தனியார் கல்லூரிகளில் தமிழில் சொல்லிக் கொடுக்கும் முறையைக்கொண்டுவரவேண்டும். இவ்வளவு நாட்கள் ஆங்கிலம் தொடர்ந்து இருந்து வருகிறது. தமிழில் படிக் காமல் ஆங்கிலத்தில் படித்துவந்தும் இன்றைக்கு ஆங்கிலத்தில் போதிக்கத் தகுந்த ஆசிரியர்கள் கிடைக்காத நிலைமை உருவாகியிருக்கிறது. அசிஸ்டெண்ட் புரோபசர்களாகப் போடுவதற்கு ஆட்கள் கிடைக்கவில்லை. ஆகவே இன்றைக்கு என்ன செய்கிறோம்? மாண்புமிகு உறுப்பினர் திரு. வசந்த பாய் சொன்னது போல, மாதம் ஒன்றுக்கு 100 ரூபாய் லஞ்சம் கொடுத்து ஆங்கிலம் கற்றுத்தருவதற்கு ஆசிரியர்களைப் போட வேண்டியிருக்கிறது.

THIRU G. VASANTHA PAI : That is wrong. We should not do it.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இப்படி லஞ்சம் என்று சாதா ரண ஆட்கள் சொல்லியிருந்தால் கூடப் பரவாயில்லை. திரு. வசந்த பாய் போன்ற சட்டம் படித்தவர். . .

THIRU G. VASANTHA PAI : Sir, I want to make a clarification. If incentive is given for the study of Tamil and doing something good to that language, that is one thing, and if incentive is given just to encourage the students to choose Tamil medium instead of English medium, that part of action is quite a different thing.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலிவராவர்களே, படிக்கிறவர் களுக்கு ஊக்கம் தருகிறோம். இன்னும் சொல்லப்போனால் அன்னியன் இந்த நாட்டில் அழைகிற வரையில் தமிழ் நாட்டில் தமிழில் தான் ஆட்சி நடை

[திரு. இரா. நெடுஞ்செழியன்] [24th July 1971

பெற்றோர் இன்றி வாழும் மழலைகளை மறக்க முடியாது. அன்னியன் வருவதற்கு முன்னாலே தொடர்ந்து ஆங்கிலம் ஆட்சி மொழியாக இல்லை. தமிழில்தான் ஆட்சி நடைபெற்றுக்கொண்டு வந்தது. ஆங்கிலம் இந்த நாட்டிற்கு வந்த போது, அதை விரும்பி ஏற்றுக்கொண்டார்களா? பல வழிகளில் "இன்சென்டிவ்" கொடுத்து ஆங்கிலம் புகுத்தப்பட்டது. வெள்ளைக்கார ஆட்சியிலே ஆங்கிலம் படித்தால் வேலை, ஆங்கிலம் தெரிந்திருந்தால் மதிப்பு, கௌரவம் ஏன்று ஏற்பட்ட காரணத்தினால், ஆங்கிலத்தைக் கற்றுக்கொண்டார்கள். ஆங்கிலம் படித்தவர்களுக்கு, ஆங்கிலத்தில் பேசுகிறவர்களுக்குச் சலுகை என்று வைத்து ஆங்கிலம் புகுத்தப்பட்டது. அப்படித் தமிழ் படிப்பதற்கு "இன்சென்டிவ்" கொடுப்பது எப்படி அநியாயம் என்று விளங்கவில்லை. எனவே இப்படி "இன்சென்டிவ்" கொடுப்பதைப் போய் இழிவாகச் சொல்வது பொருத்தமுடையதா என்று கேட்க விரும்புகிறேன். ஆங்கிலம் கற்றுக் தொடுப்பதற்குத் தேவையான ஆசிரியர்கள் கிடைக்கவில்லை. முழுக்க முழுக்க ஆங்கிலத்திலேயே கற்று ஆங்கிலத்தைக் கற்றுக் கொடுக்கக் கூடிய ஆசிரியர்கள் நமக்குக் கிடைக்கவில்லை. எனவே எக்னமிக்ஸ், பொருளாதாரம் போன்ற பாடம் படித்தவர்களைக் கூப்பிட்டு, உங்களுக்குத் தெரிந்த ஆங்கிலத்தைக் கற்றுக்கொடுங்கள் என்று கேட்டுக்கொண்டிருக்கிறோம். அவர்களுக்கு மாதம் ஒன்றுக்கு 100 ரூபாய் வீதம் ஆண்டு ஒன்றுக்கு ஆயிரம் ரூபாய் கொடுக்கப்படுகிறது. இப்படி ஆங்கிலத்திற்குக் கொடுக்கிறபோது, தமிழிற்காக 180 ரூபாய் கொடுப்பதிலே என்ன தவறு இருக்கிறது? ஆயிரம் ரூபாய் ஆங்கிலத்திற்காக இன்சென்டிவ்வாகக் கொடுக்கும்போது, தமிழ் படிப்பதற்கு 180 ரூபாய் கொடுப்பதிலே என்ன குற்றம் காண முடியும்? மிக மிகத் தாழ்த்தப்பட்டவர்களுக்கு ஊக்கம் தர வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. சமுதாயத் துறையில் பிற்பட்ட மக்களுக்கு ஊக்கம் தரவேண்டி, சமுதாயத் துறையில் வாய்ப்பு வசதி இல்லா பெற்றோர்களைக் கொண்ட குடும்பங்களுக்கு ஊக்கம் தர வேண்டி இப்படிப்பட்ட சலுகைகளை அளிக்கிறோம். இது எந்த விதத்திலே அநியாயம்? இந்த அடிப்படையில் இந்த அரசு இப்படிப்பட்ட ஊக்கத்தை மேலும் மேலும் வளர்க்குமேயொழியக் குறைக்காது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த வகையிலே ஊக்கம் தந்த பிற நாடுகளின் அளவிற்கு இந்த நாட்டைக் கொண்டு செலுத்த வேண்டுமென்று இந்த அரசு முயற்சித்துக்கொண்டு வருகிறது. இந்த ஆண்டு ஆர்வம் படைத்த மாணவர்கள் தமிழில் கற்றுக் கொள்வதற்கு வாய்ப்பில்லை என்ற நிலைமையில்லை. சட்ட மன்றப் பேரவையில் குறிப்பிட்டது போல, புகுமுக வகுப்பில் தமிழில் படிக்க வருகிற மாணவர்களின் எண்ணிக்கை, 12,103 இடங்களுக்கு வந்திருக்கிற விண்ணப்பங்களின் எண்ணிக்கை 15,634. பி.எ. யில் தமிழில் பயிற்சி பெற 4,920 இடங்களுக்கு வந்திருக்கிற விண்ணப்பங்களின் எண்ணிக்கை 9,816. தமிழில் பாடங்களை எடுத்துப் படித்தவர்களைக் கொண்டு இந்த இடங்களை நிரப்புவதற்கு வாய்ப்பு வசதிகள் இருக்கின்றன என்பதைக் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மற்றொரு கருத்தை திரு. காமோதரன் அவர்கள் குறிப்பிட்டார்கள். ஆங்கிலப் பயிற்று மொழி கேட்கிறவர்களுக்கு தமிழ் பயிற்று மொழி கொடுக்கப்படுகிறது, ஆங்கிலத்திற்கு முதலிடம் கொடுக்கப்படுவதில்லை என்றார்கள். ஒவ்வொரு வகுப்பிலும் முதலில் எதை விரும்புகிறார்களோ அதை அவர்களுக்குக் கொடுத்து விட்டு, வேறு ஒன்றை எதிர்பார்த்து விட்டு



24th July 1971] [திரு. இரா. நெடுஞ்செழியன்]

வந்து சேருகிறவர்களுக்கு இருக்கிற இடத்தில் கொடுக்கிறோம். அவர்கள் குறிப்பிட்டது போல, முதலில் மாணவர்களை எடுத்துக் கொண்டு விட்டு பிறகு, எந்தப் பயிற்று மொழியை விரும்புகிறார்கள் என்று கேட்டுக் கொடுத்தாலும், அவர்களுக்கு ஆங்கிலம் கொடுக்கப்படவில்லை, வற்புறுத்தித் தமிழில் சேர்க்கிறார்கள் என்ற கெட்ட பெயர் அரசாங்கத்திற்கு வரும். பிசிக்ஸ், கெமிஸ்டிரி, மெதமாடிக்ஸ், லாஜிக் போன்ற துறைகளுக்கு முதலில் விண்ணப்பிக்கிறவர்களுக்கு அவர்கள் எந்த மொழியில் பயிற்றுவிக்க வேண்டுமென்று கேட்கிறார்களோ அந்த மொழியிலே கொடுக்கிறோம். அதற்குப் பின்னால் வருகிறவர்களுக்கு ஒரு மொழியில் இடமில்லாவிட்டால், வேறு மொழியில் கொடுக்கிறோம். தமிழ் பயிற்சி மொழி இருக்க வேண்டுமென்று கேட்கிறவர்களுக்கு முதலிடம் கொடுப்பதில்லை. ஆங்கிலம் அல்லது தமிழ் என்று கேட்கிறவர்களுக்கு ஆங்கிலத்தில் இடமில்லை என்றால், தமிழில் கொடுக்கப்படுகிறது. சிலர் தமிழ் மட்டும் வேண்டுமென்று குறிப்பிடுகிறார்கள். அவர்களுக்குத் தமிழ் துறை கொடுக்கப்படுகிறது. "பஸ்ட் கம் பஸ்ட் சர்வ்ட்" என்ற அடிப்படையில் என்ன கேட்கிறார்களோ அது முதலில் கொடுக்கப்படுகிறது.

மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் பல்வேறு கருத்துக்களை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. முத்துசாமி ஒரு கருத்தை எடுத்துச் சொன்னார்கள். தொடக்கப்பள்ளிகளுக்கு, தனியார் நடத்துகிற பள்ளிகளுக்கு, சம்பளத்தின் அடிப்படையில் மானியம் கொடுக்கப்படுகிறது. முன்பு 12% ஆக இருந்தது, அது இப்போது அதிகப்படுத்திக் கொடுக்கப்படுகிறது என்றார்கள். இப்போதுள்ள கணக்கின்படி பராமரிப்புக்காக மானியத் தொகை கொடுக்கப்படுகிறது. இதைப்பற்றி ஆராயும்படி கல்வி இலாகாவைக் கேட்டிருக்கிறேன். தனியார் கல்லூரிகளை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று சிலர் குறிப்பிட்டார்கள். அப்படி எடுத்துக்கொள்வதிலே சிரமங்கள் இருக்கின்றன. கல்வி இலாகா இதுபற்றித் தந்திருக்கிற அறிக்கையின் மீது முடிவு எடுக்கப்படும். கல்வி சீர்திருத்தத்தைப் பற்றிக் குழுவின் அறிக்கை வந்திருக்கிறது. விரைவிலே அதுபற்றி முடிவு எடுக்கும்போது சட்ட திட்டங்கள் மாற்றப்படும் என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். இலவசப் படிப்பை மேலும் விஸ்தரிக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். மேலும் இலவசப் படிப்பு தருவதன் மூலம் செலவு விரிவடைந்து விடும்.

பிற்பட்டோருக்கு உதவித்தொகை, தமிழ் பயிற்சி மொழியினருக்கு உதவித் தொகை, இந்த வகையிலே எல்லாம் தருகின்ற காரணத்தால், இலவசப் படிப்பு விஸ்தரிப்புக்கு அவசியம் ஏற்படாது என்பதைக் கூறிக்கொள்கிறேன்.

ஆசிரியர் மாணவர் விகிதம், மற்றவைகளைப் பற்றியெல்லாம் அவ்வப் பொழுது எடுத்துச்சொல்லப் பட்டிருக்கின்றன. தொழில் டிப்ளமா படிப்புகளுக்கெல்லாம் வழிவகைகள் இந்த ஆண்டு செய்யப்பட்டிருக்கின்றன. வேலை வாய்ப்புகள்கூட சென்ற ஆண்டுபோல அல்லாமல், நான்காம் ஐந்தாண்டுத் திட்டத்தை நடைமுறைப்படுத்தப்படுவதன் காரணமாக வேலைவாய்ப்புகள் ஏற்படும் சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. பொறியியல் கல்வி பயின்றவர்களுக்கு இரண்டு ஆண்டு காலத்திற்கு முன்பு இருந்ததைவிட இப்பொழுது ஓரளவுக்கு அந்த வாய்ப்புகள் இருக்கின்றன என்பதைப் புள்ளிவிவரங்கள் காட்டுகின்றன. 6.30 p.m.

படித்தவர்களுக்குக்கூட சாதாரணமாக ஒரு தொகை கொடுத்து அவர்களை அப்சார்ப்டிசாக எடுத்துக்கொள்ளலாம் என்கின்ற அளவுக்கு 600 இடங்கள் ஒதுக்கிப் பார்த்தோம். 236 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். அதில் சேர்ந்தவர்கள் 93 பேர்தான். இதிலிருந்து அவர்கள் வேறு இடத்திற்குச் சென்றுவிட்டார்கள் என்று தெரிகிறது. டிப்ளமா படித்தவர்களுக்கு 1,000 இடம் ஒதுக்கினோம். அதிலே 770 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். அதில் 154 பேர்தான் வந்தார்கள். இதைபோல் டிராப்ட்ஸ்மேனுக்கு 800 இடங்கள் ஒதுக்கினோம். 628 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். 239 பேர்தான் வேலையில் அமர்ந்தார்கள். அவர்களுக்கு ரூ. 60 முதல் 90 வரை கொடுக்கப்பட்டது. இப்படி வேலை வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது. மேலும் பகுதி நேர பி.இ. படியுங்கள், குறைவாகப் படிப்பு உடையவர்கள் பி.இ. படியுங்கள் என்று இந்த ஆண்டு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. பாலிடெக்னிக்குகளிலே ஓய்வு நேரத்தில் அங்கே இருக்கிற மெஷின்களை குறைந்த அளவு வாடகையிலே இரண்டு மூன்று மணி நேரம் பயன்படுத்திக்கொண்டு அதன் மூலம் சம்பாதிக்க மதுரை, சென்னை, திருச்சி ஆகிய இடங்களிலே வசதி செய்து கொடுக்கப்பட்டிருக்கிறது. இதனால் அவர்கள் 150, 200, 250 ரூபாய் சம்பாதிக்கின்ற அளவுக்கு இருக்கிறது. அது மதுரையிலே ஓரளவிற்கு நல்ல முறையிலே நடைபெற்று வருகிறது என்பதையும் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

ஆசிரியர் மாணவர் விகிதத்தைப் பார்ப்போமானால், விகிதம் குறைவாக இருப்பது நல்லதுதான். ஆனால் ஒரு குறிப்பிட்ட அளவுக்கு ஒன்று முதல் 25 அல்லது 20 என்ற வகையில் இருப்பது நல்லதுதான் என்றாலும், நிதி நிலைமைகள் இடம் தரவில்லை. இப்பொழுது பொதுவாக கணக்கிட்டுப் பார்ப்போமானால், 220,000 ஆசிரியர்களுக்கு 71 லட்சம் மாணவர்கள் இருக்கிறார்கள். ஆகவே நிதி வசதிகள் இடம் தரவில்லை என்பதை எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. வசந்த பாய் அவர்கள் பல்கலைக்கழகத் துணைவேந்தர் அவர்களுடைய தன்மையைப்பற்றி எடுத்துச் சொன்னார்கள். அவர்கள் ஏற்கனவே எனக்கு ஒரு கடிதத்தின் மூலம் தெரிவித்திருந்தார்கள். இதைப்பற்றிப் பல்கலைக்கழகத் துணைவேந்தரிடத்திலே கேட்டேன். இப்படி மாண்புமிகு திரு. வசந்த பாய் அவர்கள் கருத்து தெரிவித்திருக்கிறாரே, என்ன நிலைமை என்று. மாண்புமிகு உறுப்பினர் திரு. வசந்த பாய் அவர்களுக்குக் கடித மூலமாக பல்கலைக்கழகத் துணை வேந்தர் அவர்களுடைய கருத்தை இப்படி தெரிவித்திருக்கிறார் என்று தெரிவித்திருந்தேன். டாக்டர் ராமச்சந்திரனைப் பற்றி பல்கலைக்கழகத் துணைவேந்தர் பின்வருமாறு சொல்லியிருக்கிறார்.

'Dr. Ramachandran had been selected as 'Jawaharlal Nehru Fellow' for two years from 1967. During that period he was not working in the Madras University. Dr. Ramachandran has not worked in University after the present Vice-Chancellor took charge. There is, therefore, no basis for this allegation that Dr. Ramachandran's resignation is due to alleged ill-treatment on the part of the Vice-Chancellor.





After the expiry of the tenure of the 'Jawaharlal Nehru Fellow' Dr. Ramachandran should normally have joined his post in Madras University. He however did not do so but applied in April 1970, for permission to resign his post in the University and take up an assignment in the Indian Institute of Sciences at Bangalore. The reason for this is reported to have been that he was offered a much higher salary in Indian Institute of Sciences.

Professor Ramachandran did not even give due notice of his resignation to the University. Resignation of Heads of faculties is not accepted by the Vice-Chancellor in his individual capacity and is placed before the Syndicate of University. In view of Dr. Ramachandran being a senior Professor, the Syndicate did not wish to stand in the way of his personal advancement and therefore agreed, as a special case, to waive the notice and accept the resignation.

After joining the Indian Institute of Sciences at Bangalore, Dr. Ramachandran seems to have gone on deputation to Chicago. As the Professor has resigned from the Madras University purely for reasons of his personal advancement, there is absolutely no basis for the allegation that the present Vice-Chancellor did not treat him properly and that Professor Ramachandran has resigned as a consequence of this.'

இவ்வாறு அவர்கள் தெரிவித்த கருத்தை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்திருந்தேன்.

THIRU G. VASANTHA PAI : Sir, I want to make a clarification. In reply to this letter, I wrote to the Hon. the Minister for Education on the 26th June 1971, in which I have stated that I am not concerned with Professor Ramachandran but I am concerned with the question why the Vice-Chancellor should shelve his project of producing protein from cellulose. This is a matter of national importance. I have also urged this in my Budget speech and yesterday's speech. I am not bothered about Dr. Ramachandran. He can look after himself. Now Dr. Ramachandran is occupying Mr. Fermey's room in the University of Chicago drawing a salary of a Nobel Laureate—4,000 Dollars. We have lost an eminent Scientist. He has now gone to the Indian Institute of Sciences, Bangalore, because he was dissatisfied. I have made enquiries about it. He resigned because the Vice-Chancellor refused to give him an interview when he approached and asked him to send the project to the University Grants Commission after the Seminar had been held. I am asking about that. I am not concerned whether the resignation has been properly worded and whether precautions have been taken to relieve him. I am concerned with a matter of national importance. When food could be made from farm waste product, as envisaged by the Geo-Physics Department of the Madras University, why did the Vice-Chancellor withhold that project from being forwarded to the University Grants Commission? Have the Government enquired into it?

[திரு. இரா. நெடுஞ்செழியன்] [24th July 1971

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இதுபற்றியும் பல்கலைக்கழகத் துணைவேந்தரிடத்திலே கேட்டபோது செல்லுலோசிலிருந்து உணவு தயாரிக்கும் திட்டத்தைத் தயாரிக்க டாக்டர் ராமசந்திரன் அனுமதி கோரினார். அதைப் பரிசிலனை செய்வதற்குள் பல்கலைக்கழகத்திலிருந்து விலகி பெங்களூர் சென்று விட்டதால் முடிவு செய்யவில்லையென்றும் கூறியிருக்கிறார்கள்.

6-30 p.m.

THIRU G. VASANTHA PAI : That is wrong, Sir.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இந்தக் கருத்து தவறு என்றால், அதைக் கேட்பதற்கான இடமே வேறு இருக்கிறது. சிண்டிகேட் உறுப்பினர்கள் மூலமாக இந்தப் பிரச்னையை எழுப்பலாம். அங்கே கேட்டுப் பரிகாரம் தேடலாம். ஏனென்றால் இந்த வகையிலே அரசாங்கம் ஈடுபட வேண்டுமென்று சொல்வதற்கில்லை. மேலும் துணைவேந்தர் கூறுகிறார். டாக்டர் ராமச்சந்திரன் "இண்டர்வ்யூ" கேட்டு தான் அவருக்கு மறுக்கவில்லையென்று. வைஸ்-சேன்ஸலரை நான் கேட்க முடியும். அவர் சொல்வதை நான் இங்கு சொல்ல முடியும். இதற்குப் பிறகு வைஸ்-சேன்ஸலர் தவறு செய்கிறார் என்று கருதப்படுமானால், சிண்டிகேட் அவை தான் அதற்கான முடிவைச் செய்ய முடியும்.

THIRU G. VASANTHA PAI : Sir, I wish to bring to the notice of the Hon. Minister. . . . .

(Thiru V. Thangapandian rose)

MR. CHAIRMAN : Please wait.

THIRU G. VASANTHA PAI : Sir, I wish to bring to the notice of the Hon. Minister that this is a matter for the State of Tamil Nadu to take upon itself—why an important project made by the Geo-Physics Department of Botany and Advance Centre of Madras University was not sent to the University Grants Commission and the Central Government and why it was shelved. It is a matter of State importance because food is a problem concerning the State. It is not concerned with the Syndicate. It should be done only by the State. I want to tell the Hon. Minister that I have made enquiries from several persons and I understand the Vice-Chancellor did not grant a interview to Dr. Ramachandran on this matter.

THE HON. THIRU K. ANBAZHAGAN : Sir, the question that is raised by Mr. Pai is more concerning the University itself, which is an autonomous body in its own sphere. The problem of any Professor or any other subject which is academic in nature can be discussed only in the Syndicate and the Senate and the Senate is the powerful authority. The Government can only recommend. Therefore, such things need not take the time of this Council.

THIRU G. VASANTHA PAI : Dr. Ramachandran is Jawaharlal Nehru Fellow and the Jawaharlal Nehru Fellow has direct connection with the University. As a 'Jawaharlal Nehru Fellow',



24th July 1971] THIRU G. VASANTHA PAI

he was working in the University and had to forward the Project through the University. It was forwarded by the Director of the Institute and it was not for administrative purposes forwarded. He forwarded it as a research worker independently of the University and it was the duty of the Vice-Chancellor to forward it.

THE HON. THIRU K. ANBAZHAGAN : The Government have nothing to do in such matters. The University being an autonomous body, the Vice-Chancellor has every right to decide with the help of the Syndicate or the Senate. The Government cannot interfere in such matters, unless it is a regular act which goes against the interest of the State Government and which is ordered by the Government. The State Government have not come into the picture.

THIRU M. SANKARALINGAM PILLAI : May I know, Sir, whether Dr. Ramachandran represented the matter to the Government?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இந்த விஷயம் பல்கலைக்கழகத்தின் கீழே வருகின்ற ஒன்று. அதைப்பற்றிப் பல்கலைக்கழகம் முடிவு செய்ய வேண்டும். அரசாங்கம் "ரெகமெண்டு" செய்யலாமே தவிர, முடிவு செய்யவேண்டியது பல்கலைக்கழகம்தான். சிண்டிகேட் அளவிலே அதற்கான நடவடிக்கையை எடுக்கலாமென்றும் கூறிக்கொள்கிறேன். மேலும் மாண்புமிகு உறுப்பினர்கள் பல பிரச்னைகளைப்பற்றியெல்லாம் பிடி.. ஆசிரியர்களைப்பற்றியெல்லாம் பேசினார்கள். அவையெல்லாம் நிதித் துறையில் பரிசிலனையில் இருந்து வருகின்றன. அதிலே பல்வேறு சிக்கல்கள் இருக்கிற காரணத்தால், அதைப் பரிசிலித்து முடிவு செய்யவேண்டியிருக்கிறது. மற்றும் பல பிரச்னைகளையெல்லாம் எடுத்துச் சொன்னார்கள். அதிகமான கேள்விகள் கல்வித் துறையிலே கேட்கப்படுகின்ற காரணத்தினாலும் அவைகளுக்கு அவ்வப்போது பதில்கள் சொல்லியிருக்கிற காரணத்தினாலும், எழுப்பப்பட்ட பல்வேறு பரச்னைகளுக்குப் பதில் கூறியதாக இருக்கும். மற்றும் பல பிரச்னைகளை மாண்புமிகு உறுப்பினர்கள் வைத்திருக்கிறார்கள். என்னிடத்திலே குறிப்புகள் ஏராளமாக இருக்கின்றன. இன்னும் 3 மணி நேரம் கிடைக்குமானால், அவைகளுக்கெல்லாம் பதில் சொல்ல முடியும். கல்வித் துறைக்குப் பிறகு உடல் நலத்தைக் கவனிக்கவேண்டியவர்களாக இருக்கிறோம். அதுவும் காத்துக் கொண்டிருக்கிறது. ஆகவே, இந்த பிரச்னைகளைக் குறித்து மாண்புமிகு உறுப்பினர்கள் பல அரிய கருத்துக்களை வழங்கியதற்காக என் மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அவற்றிற்கு பதில் சொல்லாவிட்டாலும், மாண்புமிகு உறுப்பினர்கள் சொல்லியிருக்கிற கருத்துக்களெல்லாம் கல்வித் துறையின் மூலமாகப் பரிசிலிக்கப்பட்டு தக்க முடிவுகளை அவ்வப்போது எடுத்து நல்ல முறையில் கல்வித் துறை வளர வேண்டுமென்று முயற்சிகள் செய்யவேண்டியவர்களாக இருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆறுமுகசாமி அவர்கள் கூட கட்டுப்பாடு வளரவேண்டுமென்றார்கள். பெரியவர்களும் மற்றவர்களும் அரசியல் வாதிகள் உட்பட எல்லோரும் சேர்ந்து இதற்கு முயற்சி செய்வார்களானால், தமிழகத்தைப் பொறுத்த

[திரு. இரா. நெடுஞ்செழியன்] 24th July 1971

வரையில் கட்டுப்பாட்டை வளர்த்துவிட முடியும். இப்போது வைத்திருக்கிற தேர்வு முறையிலே மாற்றம் காண வேண்டுமென்ற விருப்பமிருக்கிறது. அதற்கு எஜுகேஷன் கன்சல்டேடிவ் கமிட்டியைக் கூட்டலாமென்று இருக்கிறேன். இப்போது இருக்கிற தேர்வு முறை எப்படியிருக்கிறதென்றால், மெம்ரி பவரின் மெஷர்மெண்டு தான் இருக்கிறதே ஒழிய டாலண்டின் அலஸ்மெண்டு இல்லை. ஆற்றலை "அலஸ்" செய்கிற அளவிற்கு மாற்றியமைக்க வேண்டும். பள்ளியாண்டு இறுதியிலேமட்டும் தேர்வு நடத்துவதைவிட ஆண்டு முழுவதும் திறமையைக் கண்டு 50 மார்க் ஒதுக்கி பள்ளியாண்டு இறுதியிலே 50 மார்க் என்று வைத்தால், பிறகு காலம் செல்லச் செல்ல அமெரிக்கா மாதிரி அஸெஸ்மெண்டையே கொண்டு வரலாம். எடுத்த எடுப்பிலேயே கொண்டு வருவது சரியாக இருக்காது. அந்தத் திட்டங்களை எல்லாம் கொண்டிருக்கிறோம். கன்சல்டேடிவ் கமிட்டியை விரைவிலேயே கூட்டலாம் என்று இருக்கிறேன். அதனால், இப்படிப்பட்ட பிரச்சினைகளை எல்லாம் எடுத்துரைத்த மாண்புமிகு உறுப்பினர்களின் கருத்துக்களை எல்லாம் ஒன்று திரட்டி அதற்குப் பிறகு முடிவு எடுக்கலாமென்று கருதிக்கொண்டிருக்கின்றேன்.

கல்வெட்டுகளைப் பற்றி அதற்கே உரிய மாண்புமிகு உறுப்பினர் சா. கணேசன் அவர்கள் கருத்துக்களை வழங்கினார்கள். மத்திய அரசாங்கத்திற்கு எழுதியிருக்கிறோம். மைசூருக்குச் சென்ற படிகளையெல்லாம் அவர்களே வைத்திருப்பதால் வைக்கோல் போர் நாய் மாதிரி அவர்களும் பயன்படுத்தாமல் மாட்டுக்கும் பயன்பட்டு விடாமல் இருக்கிற சூழ்நிலை இருக்கிறதை விட பயன்படுத்துகிறவர்களிடத்திலே படிகள் இருக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறோம். டெல்லிக்குச் சென்றபொழுது கல்வி அமைச்சரிடத்திலேயே இதைப் பற்றி வாதாடிக் கேட்டுக்கொண்டிருக்கிறேன். இங்கேயே கல்வெட்டுகள் இருக்கின்றன என்றாலும், திரும்பவும் படிகள் எடுக்க நிறையச் செலவழிக்க வேண்டியிருப்பதால், எடுக்கப்படாத கல்வெட்டுப் படிகளை எடுக்க முயற்சி செய்வதால், அந்தப் படிகளை நமக்குத் தரவேண்டுமென்று கேட்டிருக்கிறோம். அந்தத் துறை வளர வேண்டுமென்ற அக்கறை இருக்கிறது. ஆகையினால் தான் ஓலைவுக்கு வட்ட எழுத்துக்கள் படிக்கின்றவர்களை உருவாக்க தனி பயிற்சிப் பள்ளிக்கூடங்கள் வைக்கப்பட்டிருக்கின்றன. அதற்கான முயற்சியும் எடுத்துக் கொண்டு மேற்கொண்டும் மற்ற உறுப்பினர்கள் பலரும் வழங்கியிருக்கிற கருத்துக்களை எல்லாம் முறைப்படி ஆராய்ந்து தக்க நடவடிக்கைகளை மேற்கொள்வோம் என்று எடுத்துச்சொல்லி என் உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

MR. CHAIRMAN : Discussion on the Policy Note on Education is over.

## 3. DISCUSSION ON THE POLICY NOTES ON MEDICAL AND PUBLIC HEALTH.

THE HON. THIRU K. ANBAZHAGAN : Sir, I move—

"That the Policy notes@ on Medical and Public Health placed on the table of the House be taken into consideration".

@ Printed as Appendix on pages 68–102



24th July 1971]

MR. CHAIRMAN : Motion moved—

"That the Policy Notes on Medical and Public Health placed on the table of the House be taken into consideration".

**மிஸ்டர் சேர்மன்:** 12 உறுப்பினர்கள் பேசுவதாகக் கருத்து தெரிவித்திருக்கிறார்கள். நேற்றைய மாதிரி 8 மணி வரையில் கூடுவதா?

**திரு.சா. கணேசன்:** நாளைக் கூட்ட வேண்டுமே தவிர, நாழிகையைக் கூட்டிக்கொண்டு போனால் மிகச் சிரமங்கள் ஏற்படும். முதலிலே தலைவர் களுக்கே சிரமமாக இருக்கும்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தலைவரவர்களே, சட்ட மன்றக் கூட்டம் 30-ம்ஆம் தேதி வரை நீளுகிறது. ஆகவே, இன்றைக்கு இருக்கிற 'பப்ளிக் ஹெல்த்தை" நாம் 26-ம் தேதி நீட்டிக்கொள்ளலாம்.

**திரு. சா. கணேசன்:** 26-ம் தேதி ஏற்கனவே கவர்னர் பார்ட்டிக்காக மணிக்கே போக வேண்டுமென்று முடிவு செய்திருக்கிறோம்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** 26-ஆம் தேதி ஓளவுக்கு நேரத்தை எடுத்துக்கொண்டால், கவர்னர் பார்ட்டிக்குப் போக வசதியாக இருக்கும். அன்றைக்கு பப்ளிக் ஹெல்த்தை எடுத்துக்கொண்டு 29-ஆம் தேதி கோவாப்பரேஷனை எடுத்துக்கொள்ளலாம். அப்பிரோபிரியேஷன் பில்லை 30-ஆம் தேதிக்கு எடுத்துக்கொள்ளலாம்.

**திரு. ஜி. சுவாமிநாதன்:** 26-ஆம் தேதி காலை பேரவை கூடுகிற போது மேலவையும் கூட்டலாம். அமைச்சர் அவர்கள் மட்டும் வந்தால் பேசுகிறவர்கள் பேசலாம். ஆகவே, இரண்டு சபையுமே கூட்டலாம்.

**திரு. எஸ். ஏ. ராஜமாணிக்கம்:** இந்த சபை காலையிலே கூடுகிற மாதிரிச் செய்துவிட்டால் நன்றாக இருக்கும்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தலைவரவர்களே, 26-ம் தேதி மாலை வைத்துக்கொள்வதற்குப் பதிலாக 26-ஆம் தேதி நல்வாழ்வுத் துறை விவாதம் மட்டும் இருக்க வேண்டிய அவசியம் இருப்பதால், அங்கே கேள்வி நேரம் முடிந்ததற்குப் பிறகு 10½ மணிவிருந்து இந்த அவையை வைத்துக் கொள்ளலாம். காலையிலேயே முடித்துக்கொள்ளலாம்.

**திரு. எஸ். முத்துசாமி:** உடல்நலத்திற்குரிய அறிக்கையை அந்தத் தேதியிலேயே வைத்துக்கொள்ளலாமா?

**மிஸ்டர் சேர்மன்:** இல்லாவிட்டால் ஆஸ்பத்திரியிலே இருக்கிறோம். 26-ஆம் தேதி காலையிலேயே 10½ மணிக்கு வைத்து 1 மணிக்கு முடித்து மாலை 3 மணிக்கு வைத்து 5½ மணிக்கு முடித்துவிடலாம்?

* திரு. கே. ராஜாராம் : கல்வி அமைச்சர் சொன்ன மாதிரி, 26-ம் தேதி கூட்டுறவுத்துறை விவாதம் இல்லாமல் இந்த மருத்துவத்துறை விவாதத்தை வைத்துக்கொண்டு 29-ஆம் தேதி கூட்டுறவுத் துறை விவாதத்தை வைத்துக் கொண்டால், வசதியாக இருக்கும்.

THIRU A. R. DAMODARAN : Sir, in view of the conflicting position, the Business Advisory Committee may meet on Monday and decide what to do

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : முதலிலே சொல்லியதைப் போல 26-ஆம் தேதி கூட்டுறவுத் துறைக்கு பதிலாக நல்வாழ்வுத் துறையை எடுத்துக் கொள்ளலாம். கூட்டுறவுத் துறை விவாதத்தை 29-ஆம் தேதி எடுத்துக் கொள்ளலாம். மூதுக்கடி மசோதாவை 30-ஆம் தேதி எடுத்துக் கொள்ளலாம்.

* THIRU D. SANTOSHAM : Mr. Chairman, Sir, at the outset I wish to offer my felicitations to the Department of Public Health which is one of the Departments which have been functioning with noteworthy efficiency and usefulness for a very long time.

I have no doubt,Sir, that under he dynamic and inspiring leader ship of our new Minister for Public Health, this Department will function even with greater efficiency and effectiveness in future. With this wish and hope, I wish to raise only three points for the consideration and acceptance of the Government.

Sir, the first point I wish to raise is about the recently announced reduction in the number of seats for admission into the Medical Colleges. I know that this matter was raised through a Short Notice Question and a Call Attention Motion and the Hon. Minisster seemed to be rather unrelenting in his replies. But, Sir, I am on optimist. I have very great confidence that our Government is quite responsive and will accept anything that is really in the interest of the people. A few months ago, there was a Conference of College students and College professors with a School of Politics arranged in Madurai. A lady Professor of Politics, when I was called up on to speak on the achievements of the D.M.K. Ministry, asked me :—" What do you consider as the most appreciate point in the administration of the D.M.K. Ministry ?". I immediately replied :—"Responsiveness". The students and the Professors immediately accepted that it was really an appreciable aspect of the D.M.K. Ministery. The lady Professor next asked me :—"What do you consider as the weak point in the administration of the D.M.K. Government?". I also replied :—"Responsiveness". They were all, of course, a bit surprised. I tried to explain to them that the D.M.K. Government carried responsiveness to such an extreme extent of becoming a point of fault.

I respectfully submit, Sir, in restricting admission by reducing the number of seats in the Medical Colleges, the Government have yielded to wrong pressure that has been brought to bear by sectional interests which are well organized and vociferous.



Sir, some four years ago, I was urgently summoned to the house of a friend of mine. When I went, I saw the entire family was in tears. When I made enquiries, I was told that the son in the family who had, for the second time, been denied admission to the Medical College had attempted suicide. That was the reason why they were in tears. This is a very serious matter, because boys and girls of the society who are the cream of our intelligensia are so frantic about admission into the Medical College. If a seat is denied to them, the people feel that everything in life is lost to them. But this public opinion is not organized. The vested interests, if I may call it so, are so well organized and powerfully expressed that they find ready response at the hands of the Government. Sir, the facts stare us in the face. The doctor-population ratio is 1 :4,000. In some of the most advanced States in our country, it is as low as 1 :3,000. In some developed countries in the West, it is 1 :2,000 and even that, they say, is not sufficient. The optimum ratio should be 1 :1,000. Why so? When the need is so great in our country why should we reduce the number of seats? That there is unemployment among doctors is a sheer bogey. There is absolutely no truth in that. This is a profession in which there is a lot of scope for a very paying and profitable employment. Even the compounders, calling themselves Homoeopathic Doctors for purposes of registration under the Medical Practitioners' Act, carry with them a syringe, some ampules of Penicillin and some Sulpha drugs and make money in four digits. There is absolutely no truth in saying that unemployment of Doctors is one of the causes that should be taken into account for reducing the number of seats for admission into the Medical Colleges. On the other hand, it is said that the quality needs to be raised. The standard of education needs to be raised. It is said that Dr. Natarajan Committee has gone into the question and has recommended the reduction in the number of seats in the Medical Colleges, so that the quality can be improved. My respectful submission is that this Committee should not have been asked to deal with this question at all, at least when the House Surgeons who were on strike made this as one of their strike demands. That was not a proper occasion. It was an anti-social act on the part of the House Surgeons to go on a strike and make the demand that till all of them were provided with employment, the number of seats should be reduced. 6-4 pm

Sir, if it is really necessary to improve the standard of education in the Medical Colleges, is it not possible to make an attempt for that on an emergency basis, on a war footing, if I may put it like that? For that, after all, we want equipment, staff and proper and more accommodation. This can be attempted on an emergency basis immediately. If at all, it may take one or two years at the most to yield results. During the two or three years, the Heavens will not fall if the same number of students are admitted into the Medical Colleges. Why should there be reduction in the number of seats for admission of students in the Medical Colleges during

the short period? During that time, we can definitely provide additional accommodation and then see to it that the standard of education is sufficiently improved.

Sir, I would suggest that the need for doctors in the country is so great that there should not only be no such reduction in the number of seats but there should actually be an attempt at increasing the number of Medical Colleges in our State. The target of one Medical College for one district must be achieved within a limited period of time. But I would not say that this should be achieved within 5 or 6 years. No such time limit can be fixed but definitely the need is so great and the desire on the part of our young people is also so great. Actually scope is also there in this field. Therefore, I humbly submit that our Government should definitely increase the number of admissions to the medical colleges and very soon this target of one medical college for every district should be achieved.

Another aspect also, I would like to submit. We have definitely declared our policy as the achievement of socialism and there is no turning back from that declared policy now. If socialism is to be our objective, what about the Health Department? Should not our objective be to nationalise health services, social services and the medical profession? I know nationalised health service will definitely be opposed by the medical profession. When we tried to fix a ceiling on land holding, the landholders agitated. Even so when we try to nationalise health services, definitely the doctors would feel that their freedom, to some extent, would be curbed. When we declared our policy as the establishment of a socialistic society, we cannot but keep this as our target—establishment of nationalised services. While that is so, I feel, Sir, the number of doctors would certainly have to be increased in a short space of time. Without increasing the number of medical personnel and making them adequate to serve the needs of the country, we cannot take drastic steps in nationalising health services. If we are definitely in favour of socialism, we must think of increasing the number of seats in Medical Colleges and certainly not try to reduce it.

The next point that I would like to place for the consideration of the Hon. the Minister for Health is this. That is with regard to starting of a Mental Hospital in Madurai. Sir, we have one of the premier Medical Colleges in Madurai, with post-graduate courses in almost every subject and even recently a post-graduate course in psychiatry has been sanctioned, and will be started from October next. Our hospital attached to the College, namely, the Erskie Hospital is one of the best hospitals in South India and it ranks as close second to the Madras General Hospital. But, Sir, there is no mental hospital in Madurai. There is no mental hospital in any of the southern districts. The unfortunate situation is that for institutional treatment of insanity, patients have to be brought from distant districts like Tirunelveli and Kanyakumari all the way to Madras. Even here, there is a lot of congestion and



many of them have to be kept in the waiting list for long for accommodation and treatment. In the Erskine Hospital, Madurai, only 30 beds are reserved for mental patients and keeping mental patients along with the other patients is not desirable either from the point of view of health or from the point of view of other patients in the hospital. At the present time, a modern hospital with all the facilities of psychological treatment is a crying necessity. It is not only a necessity from the point of view of the residents of the Madurai district, but also a necessity from the point of view of the residents of the southern districts who will be benefitted by this. Our Medical College and the Erskine Hospital can be considered complete only after the establishment of a really modern scientific mental hospital. I hope the Government will very soon start a proper modern mental hospital in Madruai.

The last point that I would like to place before the Government for its consideration is this. This is in regard to honorary physicians and surgeons in Government hospitals. This is already in the form of recommendation of the Estimates Committee. As early as 1966, when I was a Member of the Estimates Committee, it recommended that the system of honorary physicians and surgeons in Government hospitals working in an honorary capacity for a few hours should be given up. Sir, we have come across ever so many instances of pilferage of stores from the Government hospitals. Of course, there is pilferage of stores in the Electricity Department and in the Public Works Department also. There are always theft and wastage in the Government hospitals. They are bound to happen. But that is different and this is different. What happens is this. When you have honorary system in a particular place, this is bound to happen. I think this is a phenomenal quantum when compared with the losses and theft in other departments. How does this happen? This is because, Sir, the honorary physicians and surgeons who go there are tempted to make use of these stores also in the private clinics. Not only that. When we ask the private practitioners to go there and start admitting patients—patients who can also have the treatment in their private clinics, you are practically permitting into the precincts of the hospital a legalised form of corruption. It may not be corruption in the strict sense of the term but nevertheless I have to say that when you allow them to treat patients in the hospitals and also take them away and collect fees in their private clinics, definitely it is a quasi-kind of corruption. I think, Sir, in the interest of purity and integrity inside our hospitals, this system should be re-examined. I won't say that it should be abolished immediately. I suggest that at least it may be modified. When I raised this point during question hour some months ago, it was pointed out by certain hon. Members and the Hon. Minister that it was intended to make the practical knowledge of the experts available for consultation even for poor patients. I agree that this is a point that we should consider. But can it not be done in such a way that there is no chance for these people to bring into the Government hospitals their own private patients? Can it not be

பூவிருந்தவல்லியிலுள்ள மறுபயிற்சி நிலையம் 1954, பிப்ரவரித் திங்களில் தொடங்கப்பட்டது. தங்களுடைய அலுவல்களைச் சிறந்த முறையில் நிறை வேற்றுவதற்காக ஆரம்பச் சுகாதார நிலையத்தில் பணி புரியும் மருத்துவர்கள், துணை சுகாதாரப் பணியாளர்களுக்கு கிராமச் சுகாதாரப் பணிகளில் இந்நிலையம் மறுபயிற்சி அளிக்கிறது. 90-வது பயிற்சித் தொகுதி இப்போது தொடங்கப்பட்டுள்ளது.

ஆராய்ச்சி-செயல் திட்டம், சுகாதார வாழ்க்கை நிலைமைகளைப் பற்றி மக்களின் அறிவு குறித்தும், மனப்பான்மை குறித்தும் ஆய்வு செய்கிறது. பள்ளிகளில் சுகாதாரக் கழிப்பிடங்களுக்கு நீர் வழங்கும் வசதிக்கும் வகை செய்வதற்கான திட்டம், நிறைவேற்றப்படுவதற்கான ஆராய்ச்சி-செயல் திட்டத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

## XIV. ஊட்டச் சத்து ஆய்வுச்சாலை.

28. மக்களிடையேயுள்ள ஊட்டச் சத்துக் குறைவைத் தடுக்கவும், கட்டுப் படுத்தவும் நடைமுறை சாத்தியமான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குத் தேவையான விஞ்ஞான அறிவையும், தகவல்களையும் வழங்கும் நோக்கத்துடன்



இலக்குநர் அலுவலகத்துடன் இணைக்கப்பட்ட ஊட்டச் சத்து ஆய்வுச்சாலை ஆய்வு நடத்துகிறது. 1970 ஆம் ஆண்டில் சென்னை, பட்டினப்பாக்கத்தில் வசிக்கும் அரசுப்பணியாளர்களின் ஊட்டச் சத்துத் தாத்தை அறிவதற்காக சமூக பொருளாதார ஆய்வு நடத்தப்பட்டது. வேளச்சேரி தொடக்கச் சுகாதார நிலையத்தில் சிறார் பள்ளிகளிலும், ஆரம்பப் பள்ளிகளிலும் 3–12 வயது சிறுவர்களின் ஊட்டச் சத்துக் குறைவையும், மாலைக் கண் நோயையும் தவிர்ப் பதற்கென நண்பகல் உணவுடன் கீரைக் கூட்டு வழங்கும் ஒரு திட்டத்தை ஊட்டச் சத்து ஆய்வுச் சாலை மேற்கொண்டுள்ளது. பள்ளிச் சிறுவர்கள் இந்தப் புதிய உணவை மகிழ்ச்சியுடன் வரவேற்றனர். ஆய்வுச் சாலையில் செய்யும் பரப்பாய்வுப் பணிகளைத் தவிர, ஊட்டச் சத்து ஆய்வுச்சாலை பொருட் காட்சிகள், கருத்தரங்குகளில் பங்குகொள்வதில் மிகுந்த ஆர்வம் காட்டுகிறது. 1970 ஆம் ஆண்டில், செஞ்சிலுவைச் சங்கப் பொன் விழா சம்பந்தமாக மங்கள புரத்தில் நடந்த குடிசைப் பகுதி ஊட்டச் சக்திப் பொருட்காட்சியில் ஊட்டச் சக்தி ஆய்வுச் சாலை பங்கெடுத்துக் கொண்டது.

சுகாதாரத் தொண்டு நிறுவனங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு உடல் நல ஆய்வாளர்களுக்குரிய முறை உணவுப் பயிற்சி வகுப்புகள் சத்துணவு ஆய்வுக் கூடம் நடத்துகின்றது. அவர்கள் பணியிருப்புப் பயிற்சியும் பெறுகிறார்கள்.

பல்வேறு இடங்களிலிருந்து சேகரிக்கப்பட்ட உணவுப் பொருள்களைப் பரு படுத்தி ஆய்ந்து உணவுச் செய்முறை குறிப்புகள் தயாரித்தல், பயிற்சி வகுப்புகள் நடத்துதல் ஆகியவற்றின் மூலம் இந்த ஆய்வுக் கூடம் தொடர்ந்து பயனுள்ள பணிகளைச் செய்து வரும்.

## XVII. உணவுப்பொருள் கலப்படத்தைத் தடை செய்தல்.

29. இண்டி, இந் நிறுவன ஆய்வுக் கூடத்தில் பாகுபாட்டாய்வாளர் உதவி புடன் இம் மாநிலத்தில் 300 (சென்னை மாநகரைத் தவிர) உள்ளாட்சி மன்றங்கள் 1954 ஆம் ஆண்டு உணவுப்பொருள் கலப்படத் தடைச் சட்டத் தைச் செயற்படுத்தி வருகின்றன. உணவுப் பொருள் கலப்படத் தடைச் சட்டத்தின்கீழ் போளவில் மாதிரி எடுத்துப் பாகுபாட்டு ஆய்வு நடத்துவதற் கான ஆய்வுக் கூட வசதியைப் பெருக்கும் பொருட்டு, கோயம்புத்தூரில் ஓர் ஆய்வுக் கூடம் 1970 டிசம்பர் திங்கள் 3-ம் நாள் செயல்படத் தொடங்கியது. கோயம்புத்தூர், நீலகிரி, சேலம், தருமபுரி, திருச்சிராப்பள்ளி ஆகிய ஐந்து மாவட்டங்களில் உள்ள அரசினர் மருத்துவ மனையிலிருந்து வருகின்ற பரி மாதிரிகளை இந்த ஆய்வுக் கூடம் இப்போது பகுத்து ஆய்கின்றது. இந்த ஆய்வுக் கூடம் வேறு வகை உணவுகள் பற்றிய ஆய்வுகளையும் நாளடைவில் மேற்கொள்ளும்.

இச் சட்டத்தின்கீழ் 1970-ல் எடுக்கப்பட்ட 18,498 உணவுப் பொருள் மாதிரி களில் 4,351 உணவுப் பொருள் மாதிரிகளில் கலப்படம் செய்யப்பட்டிருந்தது. உணவில் கலப்படம் செய்த குற்றங்களுக்காக 3,695 வழக்குகள் தொடரப் பட்டன. வசூலிக்கப்பட்ட அபராதத் தொகை ரூ. 4,16,793 ஆகும்.

30. நகரங்கள், மாநகரங்கள் சீரான வளர்ச்சிக்கும், அவற்றின் அழகைக் காக்கவும், சமூதாயத்தில் சுகாதாரமான சூழ்நிலையை உருவாக்கவும் நகரமைப்புத் திட்டம் மிகவும் இன்றியமையாதது. 1920 ஆம் ஆண்டு

நகரமைப்புச் சட்டம் தமிழ் நாட்டில் நடைமுறைக்கு வந்து 50 ஆண்டு களாகிறது. தொழில் நுட்பவியல் முன்னேற்றத்திற்கும், நல்வாழ்வுக் குறிக் கோளுக்கும் இணையாக, மக்களின் தற்காலத் தேவைகளுக்கு ஏற்ற வகையில் சட்டத்தைத் திருத்தும் ஓர் ஏற்பாடாக திருத்தியமைக்கப்பட்ட நகர-நாட்டுப் புற அமைப்பு மசோதா மாநிலச் சட்ட மன்றத்தில் கொண்டு வரப்பட்டு இணைப் பொறுக்குக் குழுவிற்கு அனுப்பப்பட்டுள்ளது.

இத் துறையின் தலைவர் நகரமைப்புத் திட்ட இயக்குநர் ஆவார். இவருக்கு உதவியாக, நகரமைப்புத் திட்ட இணை இயக்குநர் உள்ளார், இவர் தொழில் நுட்ப முறையில் தகுதி பெற்ற ஓர் அதிகாரியாவார். இத் துறை நிறமையுடன் பணிபுரிய இம் மாநிலத்தில் வெவ்வேறு இடங்களில் (அதாவது சென்னை, வேலூர், சேலம், கோயம்புத்தூர், திருச்சி, மதுரை, சிவகங்கை, திருநெல்வேலி ஆகிய இடங்களில்) 8 வட்டார அலுவலகங்கள் அமைக்கப்பட்டுள்ளன. வட் டாரத் திட்டங்கள், பெருந் திட்டங்கள், விரிவான வளர்ச்சித் திட்டங்கள், பொதுவான ஆய்வுத் திட்டங்கள் ஆகியவற்றிற்காக 4 அலுவல் வழிக் கோட் டங்களும் நிறுவப்பட்டுள்ளன. இத்துடன், நெடுஞ்சாலைத் துறை ஒத்துழைப் புடன் சென்னை பெருநகர்ப் பகுதிக்கான பயணிகள்-பயணப் பொருட்கள் போக்குவரத்துத் திட்டம் தயாரிப்பதற்காக கூடுதலாக ஒரு கோட்டமும் அமைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு வட்டார அலுவலகமும் நகரமைப்புத் திட்டத் துணை இயக்குநரின் தலைமையில் இயங்குகிறது. ஒவ்வோர் அலுவல் கோட்டமும் (தனி) துணை இயக்குநரின் தலைமையில் இயங்குகிறது.

இத்துடன், நிர்வாகப் பிரிவுகளுக்குத் துணையாக பெரும்பாலான நகராட்சி களில் நகரமைப்புப் பணியாளர்களும் பணிபுரிகின்றனர். பொதுவாக, நகரமைப்புத் துறை ஆலோசனையின்படியும். அது வழி காட்டுகின்ற முறையிலும் தொழில் நுட்ப நகரமைப்புப் பணியாளர்களின் உதவியுடன் நகரமைப்புத் திட்டங்களை நகராட்சிகள் தயாரிக்கின்றன. இத் திட்டங்கள் துறையினால் ஏற்பளிக்கப்பட்டு செயல்படுத்தப்படுவதற்காக, அரசு அனு மதியைப் பெறுகின்றன. தற்போது நகரமைப்புத் துறை, மாநிலம் முழுவது மான 8 வட்டாரங்களுக்கு வட்டாரத் திட்டங்கள் தயாரிக்கும் பணியில் ஈடு பட்டுள்ளது. நகர் மயப் போக்கையும், சோன இராம, நகர்ப்புற வளர்ச்சியின் அவசியத்தையும் நோக்கமாகக்கொண்டு வட்டாரத் திட்டங்கள் தயாரிக்க வேண்டிய அவசியம் நன்கு உணரப்பட்டுள்ளது.

நகராட்சிப் பெருந்திட்டம், வட்டாரத் திட்டம் ஆகியவை உட்பட, இத் துறையின் பொதுவான திட்டங்களின் மீதான செலவிற்காக 1971-72-ல் மொத்தமாக ரூ. 28.87 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

நகரங்கள், மாநகரங்களில் அதிகரித்து வரும் போக்குவரத்து நெருக்கடிப் பிரச்சினைகள் இத் துறையின் நாட்டத்தைப் பெரிதும் ஈர்த்து வந்துள்ளன. இனி வரும் ஆண்டில், மாநிலத்திலுள்ள பல்வேறு மாநகரங்கள், நகரங்களுக் கான பெருந்திட்டங்கள் தயாரிப்பதற்கான திட்டம் ஒன்று திட்டப்பட்டுள்ளது.



இணை பொதுக்குழுவின் பரிசீலனையில் உள்ள தமிழ் நாடு நகர்ப்புற அமைப்பு அடங்கல் மசோதா, சட்டமாக இயற்றப்பட்ட பின்னர், வட்டாரத் திட்டம், பெருந்திட்டம், புதிய நகர் வளர்ச்சித் திட்டம் ஆகியவற்றிற்கு சட்டச் செயல் திறன் வழங்கும். 1970-1971ல் நகரமைப்புத் துறை 8 நகரங்களுக்கான வரைவுப் பெருந் திட்டங்கள் தயாரித்தது. மதுரை, திருச்சிராப்பள்ளி, சேலம் ஆகிய நகரங்களுக்கான வரைவுப் பெருந்திட்ட ஆய்வு, தயாரிப்பு தொடர்பான பணிகளும் நடைபெற்று வருகின்றன.

1971-72-ல் மேலும் 8 நகரங்களுக்கான பெருந் திட்டங்கள் தயாரிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

இம் மாநிலத்தின் பல்வேறு உள்ளாட்சி மன்றங்களில் சுமார் 680 விரிவான நகரமைப்புத் திட்டங்கள் உள்ளன. அவை தயாரிக்கப்பட்டு நிறைவேற்றப் படுகின்ற பல்வேறு நிலைகளில் உள்ளன. விரிவான நகரமைப்புத் திட்டங்களைத் தயாரித்து நிறைவேற்றுவதற்காக உள்ளாட்சி மன்றங்களுக்கு கடன் வழங்கு கிறது. 1971-72-ல் 16 நகரமைப்புத் திட்டங்களை அறிவிக்கவும், 16 நகரமைப் புத் திட்டப் பணிகளுக்குத் திட்டங்கள் தயாரிக்கவும், 8 திட்டங்களை இறுதி ஒப்பளிப்புக்கு அனுப்பவும் இத்துறை திட்டமிட்டுள்ளது. நகரமைப்புத் திட் டங்களுக்காக உள்ளூர் மன்றங்களுக்குக் கடன் வழங்குவதற்காக 1971-72-ல் ரூ. 5 லட்சம் செலவிடத் திட்டமிடப்பட்டுள்ளது.

இயக்குநர் அலுவலகத்தில் 1970-71-ல் ஓர் ஆராய்ச்சிப் பிரிவு அமைக்கப் பட்டது. இக் குழு ஆய்வுத் திட்டங்களை மேற்கொண்டுள்ளது. சென்னை மாநகருக்கான பயணிகள்-பயணப் பொருட்கள் போக்குவரத்து ஆய்வுக் கோட்டம், ஆய்வுப் பணியை மேற்கொண்டு சேகரித்த புள்ளி விவரங்கள் திட்ட ஆணைக்குழுவின் கணக்கிடும் இயந்திரப் பிரிவில் தயாரிக்கப்படுகின்றன. 1971-72-ல் இத் திட்டம் தயாராகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

சென்னை மாநகரின் பெரும் போக்குவரத்துப் பெரு வழிகள் பற்றிய அறிக்கை முடிக்கப்பட்டு அது 1971-72-ல் பெரும் போக்குவரத்து முறையைப் பற்றி இரயில்வே அதிகாரி சாத்தியக் கூறு ஆய்வு மேற்கொள்ள இயலும் வகையில் திட்ட ஆணைக் குழுவைச் சேர்ந்த பெருநகர் குழுவின் மூலமாக இரயில்வே அமைச்சகத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. பயணிகள்—பயணப் பொருள்கள் போக்குவரத்துத் திட்டப் பணிகளுக்காக 1971-72-ல் ரூ. 4.39 லட்சம் செலவிடத் திட்டமிடப்பட்டுள்ளது.

சென்னை மாநகரத்திலிருந்து, போதிய தொலைவிற்குள் அமைந்துள்ள நகரங்களாகிய செங்கற்பட்டு, திருவள்ளூர், கும்முடிப்பூண்டி ஆகிய மூன்று நகரங்களுக்கும் பெருந்திட்டங்கள் தயாரிப்பதற்கான தனித் திட்டமொன்று 1970-71-ல் சென்னை மாநகரின் நெரிசல் குறைய மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த நகரங்களுக்கான பெருந்திட்டங்கள் 1971-72-ல் செயல்படுத்தப்படும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. 1971-72-ல் இத்திட்டங்களுக்கு ரூ. 10 லட்சம் செலவிடத் திட்டமிடப்பட்டுள்ளது.

[1971 ஆம் ஆ

துறை அளவிலும், நகராட்சி அளவிலும், நகரமைப்புத் துறையில் தேர்ச்சி பெற்ற பணியாளர்களின் கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்காக, வல்லுநர்கள் பயிற்சி அளிக்கும் திட்டம் ஒன்றும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. தொழில் நுட்ப நிறுவனங்களில் அளிக்கப்படும் நகரமைப்பு சிறப்புத் தகுதியுடைய பட்ட மேற்படிப்பு, பட்டய மேற்படிப்பு பெற நகரமைப்புத் துறையிலுள்ள பணியாளர்களுக்கு இத் திட்டத்தின்கீழ் நிதியுதவி கிடைக்க வகை செய்யப் பட்டுள்ளது. இத்திட்டத்திற்காக 1971-72-ல் ரூ. 0.5 லட்சம் ஒதுக்கப் பட்டுள்ளது.

நகரமைப்புப் பணியாளர்களின் கோரிக்கையை நிறைவேற்றவும், துறையின் தேவையைச் சரிக்கட்டவும், இயக்குநர் அலுவலகப் பணியாளர்கள் சென்னை, டில்லி ஆகிய இடங்களுக்கு நகரமைப்பில் மேற்படிப்பு பெற முகமையில் அனுப் பப்படுகிறார்கள்.

31.25 லட்ச மக்கள் தொகை கொண்ட இம்மாநகருக்காக நாளொன்றுக் ரூச் சென்னை மாநகராட்சி சுமார் 420 லட்சம் காலன் நீர் மட்டுமே வழங்க முடிகிறது. பொதுச் சுகாதாரத் தரங்களின்படி குறைந்த அளவு தலைக்கு 25 காலன் தண்ணீராவது தேவையாய் இருக்க, தற்போது தண்ணீர் வழங்கப்படும் வீதம் தலைக்கு சுமார் 17 காலன் அளவே ஆகும். மக்களின் தேவையை நிறைவு செய்வதற்குத் தற்போதைய குடிநீர் வழங்கல் முறை போதுமான தாகவே இல்லை. எனவே ரூ. 320 லட்சம் செலவு மதிப்பீட்டில் நீர் வழங்கல் முறையை மண்டல அடிப்படையில் மாற்றியமைப்பதற்கு அடங்கல் திட்டம் ஒன்றை மாநகராட்சி மேற்கொண்டுள்ளது. சுமார் ரூ. 200 லட்சம் மதிப்புடைய பணிகள் இதுவரை முடிக்கப்பட்டுள்ளன. நியாகாயநகரில் ரூ. 78 லட்சம் செலவு மதிப்பீட்டில் தனியே தலைப்புப் பகுதி வேலைகளும் நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

சென்னை மாநகருக்குத் தேவைப்படும் குடிநீர், சோழவரம் ஏரி, புழலேரி, பூண்டியிலுள்ள சத்தியமூர்த்தி சாகரம் ஆகிய இடங்களிலிருந்து பெறப்படு கிறது. இத்தகைய ஏரிகள் அனைத்தின் மொத்தக் கொள்திறன் அளவு 580 கோடி கன அடியாக இருந்தபோதிலும் ஆவியாகப் போவது, கசிவது போகப் பயன்படும் கொள் அளவு இதைவிடக் குறைவாகவே இருக்கிறது. புழலேரி, சோழவரம் ஏரி ஆகியவற்றின் கொள்திறனை உயர்த்துவதற்கு ரூ. 24.59 லட்சம் செலவு மதிப்பீட்டில் இவற்றின் நீர் மட்டங்கள் முறையே 2 அடி, 4 அடி உயர்த் தப்பட்டன. பூண்டி நீர்தேக்கத்திலிருந்து புழலேரிக்குத் தண்ணீர் கொண்டு செல்வதற்கென மூடப்படாத காரைப்பூச்சுக் கால்வாய்கள் ரூ. 83 லட்சம் செல வில் அமைக்கப்பட்டு வருகின்றன.

இப்போது பாசனத்திற்காகவும் பயன்படுத்தப்பட்டு வரும் 35 கோடி கன அடி நீரைக் குடிநீர் காரியங்களுக்காக பாதுகாக்கப்படும் வகையில் புழலேரி, சோழவரம் ஏரிகளின் கீழுள்ள 7,500 ஏக்கர் நன்செய் ஆயக்கட்டு முழுவதை யும் கையகப்படுத்துமாறு அரசு ஆணையிட்டது. நிலத்தை கையகப்படுத்திய பின்னர், நன்செய் நிலத்தின் மதிப்பில் 50 சதவீதம் வருவித்துக்கொண்டு "புன்செய் நிலமாக" மேற்படி நஞ்சை நிலங்களை அதன் மூல ஆயக்கட்டுதாரர் களுக்கே மறுபடி வப்படைக்கவேண்டுமென்றும் ஆணையிடப்பட்டது.



1971 ஆம் ஆ]

33. இம்மாநகரின் தற்போதைய குடிநீர் அகற்றும் ஏற்பாடு அதிகரித்து வரும் நகர மக்களின் தற்போதைய தேவைக்குப் போதுமானதாக இல்லாத தோடு மட்டுமின்றி தற்போதைய தேவைக்கு ஈடுகொடுக்க முடியாத நிலையில் உள்ளது. சென்னை மாநகராட்சியிடம் இதற்கான அடங்கல் வேலைத்திட்டங்கள் உள்ளன. இதன்படி சென்னை மாநகரம் ஐந்து மண்டலங்களாகப் பிரிக்கப் பட்டுள்ளது. ஒவ்வொரு மண்டலத்திலும் நீர் இறைக்கும் நிலையங்கள் கொண்ட தொகுதி அடங்கியுள்ளது. சென்னை மாநகருக்கு வெளியே கழிவு நீரைக் கொண்டு சேர்ப்பதற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட இடங்களுக்கு ஒவ்வொரு பகுதி யிலிருந்தும் இதன் மூலம் கழிவுநீர் அகற்றப்படுகிறது. பணிகள் பல்வேறு நிலைகளில் நடந்தேறி வருகின்றன. இவ்வேலைத் திட்டங்கள் நான்காவது ஐந்தாண்டுத் திட்டக்காலத்தில் முடிக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

33. சென்னை மாநகராட்சி குடிநீர் வழங்கல்-கழிவுநீர் அகற்றல் வேலைத் திட்டங்களுக்கு பாதி கடன்—பாதி மானியம் வழங்கும் அடிப்படையில் உதவி நிதி அளிக்கப்படுகிறது.

# THE TAMIL NADU LEGISLATIVE COUNCIL.

*Monday, the 26th July 1971.*

The House met in the Council Chamber, Fort St. George, at three of the clock, Mr. Chairman (THE HON. THIRU C. P. CHITRARASU) in the Chair.

## I. QUESTIONS AND ANSWERS.

### *Starred Questions.*

### *Mao Literature*

@ 141 *Q.*—THIRU V. ISVARMURTI (on behalf of Thiru G. Swaminathan) : Will the Hon. the Chief Minister be pleased to state whether there is any proposal to prescribe Mao Literature in the State?

**'மா' வின் நூல்கள்**

**திரு. வி. ஈஸ்வரமூர்த்தி (திரு. ஜி. சுவாமிநாதன் சார்பில்):** மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

இம் மாநிலத்தில் 'மா' வின் நூல்களைத் தடை செய்யும் செயற்குறிப்பு எதுவும் உள்ளதா ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** ஆட்சேபகரமானவை எனக் கருதப்படும் மாசேதுங் நூல்கள், அதோடு தொடர்பான வெளியீடுகள் கடல் சுங்கச் சட்டம், இந்திய அஞ்சல் அலுவலகச் சட்டம் ஆகியவற்றின் கீழ் வரும்போது, இவ்வெளியீடுகளைத் தடை செய்வதற்கும், உள்நாட்டில் இவை பரவுவதைத் தடுப்பதற்கும் அவசியமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

**திரு. வி. ஈஸ்வரமூர்த்தி:** தலைவர் அவர்களே, சென்னையிலே மாசேதுங் சிந்தனைக் கிளப் ஒன்று இருப்பதாகவும் அது இப்போது கைவிடப்பட்டதாகவும் போஸ்டர்கள் சென்னை நகரத்தில் அடித்து ஒட்டப்பட்டிருக்கின்றன. அதைப் பற்றிய விவரத்தை அரசு வெளியிடுமா ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** இருப்பதாக உறுப்பினர் அவர்களே சொல்லி, அது இப்போது கைவிடப்பட்டதாகவும் சொல்லியிருக்கிறார்கள். அதுவே நல்ல செய்திதான்.

**திரு. கே. எஸ். அப்துல் வகாப்:** மா-வின் இலக்கியம் என்ற பெயரில் ஏதாவது வெளியிடப்பட்டு அந்த வெளியீடுகளின் பெயரில் அரசு தடை உத்தரவு பிறப்பித்ததா ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** முக்கியமாக மா-வின் நூல்களில், Selected Works (தேர்ந்தெடுக்கப்பட்ட நூல்கள்), Selected Military Writings (தேர்ந்தெடுக்கப்பட்ட ராணுவ நூல்கள்) Quotations from Mao-Tse-Tung. (மா-வின் மேற்கோள்கள்) இதுபோன்ற நூல்கள்

@ Postponed from the list of Questions for 21st July 1971.

வன்முறையையும், வர்க்க வேற்றுமையையும் பரப்பும் வகையில் உள்ளதாலும், கொரில்லாப் போர், புரட்சிகள் வாயிலாக அரசைக் கவிழ்க்கத் தூண்டும் வகையில் அமைந்துள்ளதாலும், இப்படிப்பட்ட நூல்கள் ஆட்சேபகரமானவை எனக் கருதப்படுகின்றன.

திரு. சா. கணேசன் : ஆட்சேபகரமான நூல்கள் என்று கருதப்படுபவை தடை செய்யப்பட்டிருக்கின்றனவா ? வெளிவந்த நூல்களைப் பறிமுதல் செய்ய உத்தரவிடப்பட்டு பறிமுதல் செய்யப்பட்டிருக்கின்றனவா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : ஆட்சேபகரமான நூல்கள், வெளியிடப்படுமானால், அவை பறிமுதல் செய்யப்பட வேண்டுமென்ற ஆணை யிருக்கிறது.

திரு. எஸ். ஜெயராம செட்டியார் : தலைவர் அவர்களே, இந்த இயக்கத்தில் படித்தவர்கள் ஐம்பது பேர் ஈடுபட்டிருக்கிறார்களா ? படியாத மக்கள் ஈடுபட் டிருக்கிறார்களா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : 'படியாதவர்கள்' தான் ஈடுபடுகிறார் கள். அன்பு, அடக்கம், அமைதி ஆகிய இந்தக் கொள்கைகளுக்குக் கீழ்ப் படியாதவர்கள் இதில் ஈடுபடுகிறார்கள். அதில் படித்தவர்களும் படிக்காதவர் களும் இருக்கிறார்கள்.

## *Naxalites*

@ * 142 Q.—THIRU A. R. DAMODARAN : (on behalf of Thiru G. Swaminathan) : Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether it is a fact that some persons residing at Kanyakumari district have received letters from Naxalites during December 1970 threatening their lives; and

(b) if so, the action taken thereon?

### நக்சலைட்டுகள்.

திரு. ஏ. ஆர். தாமோதரன் (திரு. ஜி. சுவாமிநாதன் சார்பில்) : மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன் :

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் வசிக்கும் சிலருக்கு 1970 டிசம்பரில் நக்சலைட்டுகளிடமிருந்து கொலை மிரட்டல் கடிதங்கள் வந்தனவா ?

(இ) ஆம் எனில், அதன் மீது என்ன நடவடிக்கை மேற்கொள்ளப்பட் டது ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : (அ) ஆம்.

(இ) கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள பொதுவுடைமைக் கட்சித் தீவிரவாதிகளில் ஐயத்திற்கிடமானவர்கள் அனைவருடைய செயல்களையும் கண் காணிப்பதற்கென்று தனிக் காவல் துறைப் பணியாளர்கள் நியமிக்கப்பட்

@ Postponed from the list of Questions for 21st July 1971.



டுள்ளனர். கன்னியாகுமரி மாவட்டத்தில் கேரள மாநில எல்லையை ஒட்டி யுள்ள மலைப்பகுதிகளில் இது குறித்து எப்போதும் எதிர்பாராச் சோதனை களும் நடத்தப்படுகின்றன.

@ * 143 Q.—THIRU A. R. DAMODARAN (on behalf of Thiru G. Swaminathan) : Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether it is a fact that Naxalite pamphlets were found near the body of a former Panchayat Union President who was stabbed to death near Gandarvakottai on 29th September 1970; and

(b) if so, the action taken thereon?

திரு. ஏ. ஆர். தாமோதரன் (திரு. ஜி. சுவாமிநாதன் சார்பில்) : மாண்பு மிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) 1970, செப்டம்பர் 29-ஆம் நாளன்று கந்தர்வகோட்டை அருகே குத்திக் கொல்லப்பட்ட முன்னாள் யூனியன் தலைவரது சடலத்தருகே நக்சல்பாரிகளின் துண்டுப் பிரசுரங்கள் காணப்பட்டனவென்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், அதன் விவரமென்ன ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : (அ) ஆம்.

(இ) இவ்வழக்கு 30—4—1971-ல் தொடுக்கப்பட்டது. இது தொடக்க விசாரணை நிலையில் உள்ளது. இந்நிகழ்ச்சியில் சம்பந்தப்பட்ட ஏழு பேர்களில் 4 பேர் கைது செய்யப்பட்டிருக்கின்றனர். பிறரை தேடிக் கண்டுபிடிப்பதற்காக தொடர்ந்து முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

@ 144 Q.—THIRU V. THANGAPANDIAN : Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether a clerk of the Office of the Kanyakumari District Collectorate was arrested on 27th April 1971, for alleged connections with the Naxalite Movement; and

(b) whether there is any information with the Government that some other Government servants were having connections with the Naxalite Movement?

திரு. வி. தங்கபாண்டியன் : மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க் கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) நக்சல்பாரி இயக்கத்தில் தொடர்பு கொண்டுள்ளதாக கன்னியா குமரி மாவட்ட ஆட்சியாளர் அலுவலக குமாஸ்தா 27—4—1971-ல் கைது செய்யப்பட்டாரா ?

@ Postponed from the list of Questions for 21st July 1971.

(இ) வேறு எந்த அரசாங்க ஊழியர்களாவது நக்சல்பாரி இயக்கத்தில் தொடர்பு கொண்டுள்ளதாக அரசாங்கத்திடம் தகவல் உள்ளதா ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** (அ) 27—4—1971-ல் யாரும் கைது செய்யப்படவில்லை. ஆனால் கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தின் உணவுப் பொருள் வழங்கும் துறையில் கணக்குப் பிரிவில் பணியாற்றி வந்த உதவியாளர் ஒருவர் 22—4—1971-ல் கேரள மாநில எல்லைக்குள் கேரள அரசாங்கத்தால் குற்றம் சாட்டப்பட்டுத் தேடப்பட்டு வந்த நக்சலைட் ஒருவருக்குப் புகலிடம் கொடுத்ததற்காக கைது செய்யப்பட்டார். இதன் தொடர்பாக மேலும் இரு அரசு அலுவலர்கள் கைது செய்யப்பட்டு ஜாமீனில் விடப்பட்டுள்ளனர். ஒரு அரசு அலுவலர் இன்னும் தேடப்பட்டு வருகிறார்.

(இ) இல்லை.

@ * 145 Q.—THIRU A. R. DAMODARAN (on behalf of Thiru G. Swaminathan) : Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) the number of persons arrested for suspected Naxalite activities in the State during the period from 1st January to 31st May 1971; and

(b) the state of Naxalite Movement in the State at present?

**திரு. ஏ. ஆர். தாமோதரன் (திரு. ஜி. சுவாமிநாதனுக்காக சார்பில்):** மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்.

(அ) இம்மாநிலத்தில் 1—1—1971 முதல் 31—5—1971-வரையுள்ள கால அளவில் நக்சல்பாரி நடவடிக்கைகளில் ஈடுபட்டதாகச் சந்தேகப்பட்டு எத்தனை பேர் கைது செய்யப்பட்டனர் ?

(இ) இம்மாநிலத்தில் நக்சல்பாரி இயக்கம் இப்போது எந்நிலையிலுள்ளது ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** (அ) 1—1—1971-முதல் 31—5—1971 வரை குறிப்பிட்ட குற்றங்களுக்காக 38 பேர் கைது செய்யப்பட்டனர். ஐயத்திற்கிடமானவர் உட்பட 357 அதி தீவிரவாதிகள் விசாரணை முதலானவற்றிற்காக, மாநிலம் முழுவதிலும் கைது செய்யப்பட்டனர்.

(இ) தமிழ் நாட்டிலே நக்சல்பாரி இயக்கம் முற்றிலுமாகக் கட்டுப்படுத்தி கட்டுக்குள் வைக்கப்பட்டுள்ளது. இவ்வகையில் இம்மாநில அரசு இயலும் எல்லா நடவடிக்கைகளையும் எடுத்துள்ளது. மேலும் எடுத்துக்கொண்டும் வருகிறது.

@ Postponed from the list of Questions for 21st July 1971.



## *C.P.I. (M) extremists*

@ * 146 Q.—THIRU V. THANGAPANDIAN : Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether C.P.I. (M) extremists were arrested in and around Madurai in September 1970;

(b) the number of persons arrested in connection with the pasting of Mao-Tse-Tung posters in Madurai district; and

(c) the action taken by the Government on them?

### தீவிரக் கம்யூனிஸ்டுகள்.

**திரு. வி. தங்கபாண்டியன்:** மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) 1970-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் மதுரையிலும், அதன் சுற்றுப் பகுதிகளிலும் தீவிரக் கம்யூனிஸ்ட்டுகள் கைது செய்யப்பட்டார்களா ?

(இ) மதுரை மாவட்டத்தில் மாசேதுங் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டதின் தொடர்பாக எத்தனை பேர் கைது செய்யப்பட்டார்கள் ?

(உ) அவர்கள் மீது அரசாங்கம் எடுத்த நடவடிக்கை என்ன ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** (அ) & (இ) எவரும் கைது செய்யப்படவில்லை. ஆனால் நக்சலைட்டுகள் போன்ற இயக்கத்தில் ஈடுபட்டிருப்பதாகத் தகவல் கிடைத்ததன் பேரில், மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த காட்டுச் சோளப்பட்டி என்ற கிராமத்தைச் சேர்ந்த நால்வர் வீடுகள் 21—9—1970, 23—9—1970 ஆகிய தேதிகளில் காவல்துறையினரால் சோதனையிடப்பட்டு, 'மாவின் சிந்தனைகள்' உள்ளடக்கிய நூல்கள், வெளியீடுகள், படங்கள் ஆகியவை கைப்பற்றப்பட்டன.

(உ) இ.பி.கோ. 121, 121-ஏ, 122, 124 பிரிவுகளின்படி நான்கு வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, அவை மதுரை இரண்டாவது இணை மாஜிஸ்ட்ரேட்டால் விசாரணைக்கு ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கின்றன.

## *Mariamman Teppakulam at Madurai*

@@ * 187 Q.—THIRU SAW. GANESAN : (on behalf of Thiru D. Santosham) : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(a) whether the Mariamman Teppakulam at Madurai was dried up and in a state of disuse for several months in 1969 and 1970; and

(b) if so, the steps taken to fill it with water and restore its beauty?

@ Postponed from the list of Questions for 21st July 1971.
@@ Postponed from the list of Questions for 22nd July 1971.

29th July 1971]

**மதுரை மாரியம்மன் தெப்பக்குளம்.**

**திரு. சா. கணேசன் (திரு. டி. சந்தோஷம் சார்பில்):** மாண்புமிகு அற நிலைய அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) மதுரை மாரியம்மன் தெப்பக்குளம் 1969, 1970-ல் பல நிங்கள்களாக வறண்ட, பயனற்ற நிலையில், உள்ளதா?

(இ) ஆமெனில், அக்குளத்தில் நீர் நிரப்பி, அதை மீண்டும் அழகுறச் செய்வதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவை?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்:** (அ) 1—8—1969 முதல் 18—10—1969 வரையும் 20—5—1970 முதல் 20—10—1970 வரையும் மாரியம்மன் தெப்பக்குளத்தில் நீரின்றி வாண்டு இருந்தது.

(இ) ரூ. 40,000 செலவில் 10 அங்குல விட்டமுள்ள இரு குழாய்க் கிணறுகள் வெட்டி அக்கிணற்று நீரினை குளத்துக்கு அன்ருடம் பாய்ச்சுதல் மூலம் அக்குளத்தின் எழில் குன்ருது ஆண்டு முழுவதும் காத்திட ஒரு திட்டம் உள்ளது. ஸ்ரீ மீனுட்சி சுந்தரேஸ்வரசுவாமி தேவஸ்தானத்தின் பரிசீலனையில் உள்ளது.

**திரு. சா. கணேசன்:** தலைவர் அவர்களே, ஆழக்கிணறு வெட்டி அதன் மூலமாக நீர் விடுவதோடு வைகை ஆற்றிலிருந்து நீரைக் கொண்டு வந்து அதை நிரப்புவதற்கு வாய்ப்பு உண்டா? அப்படி உண்டாயின் அதன் மீது அரசு என்ன நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்:** தலைவர் அவர்களே, மாரியம்மன் கோவில் தெப்பக்குளத்திற்கு வைகை ஆற்றிலிருந்து நீர் வருவதற்கு வாய்க்கால் இருக்கிறது. வாய்க்கால் நகரின் மத்தியில் வருவதால் ஏராளமான குப்பை கூளங்கள் அதில் சேர்ந்து அந்த நீர் மாரியம்மன் தெப்பக்குளத்தை வந்தடையும்போது கெட்டுவிடுகின்றது. அப்படியும் அந்தத் தண்ணீரைக் குளத்திற்குக் கொண்டுவந்து சேர்ப்பதற்கு ஏராளமான பொருள் செலவாவதால், அப்படிப்பட்ட திட்டத்தை நிறுத்திவைத்து, கிணறு தோண்டி, அதன் மூலமாக நிரப்புகிற திட்டத்தை அரசு பரிசீலனை செய்து வருகிறது.

**திரு. சா. கணேசன்:** தலைவர் அவர்களே, கிணறு தோண்டி அதை பம்பு செய்வதன் மூலம் ஏற்படுகிற செலவைவிட வைகையிலிருந்து ஒரிபூம் டிபூப் போட்டுச் செய்வதன் மூலமாகத் தண்ணீர் கொண்டுவருவது சிக்கனமாகவும் நிரந்தரமான பயன் தருவதாகவும் இருப்பதால், அரசு இதில் கவனம் செலுத்த முன்வருமா?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்:** தலைவர் அவர்களே, கிணறு வெட்டி தண்ணீர் விடுகிற திட்டம் அரசினுடைய பரிசீலனையில் இருப்பதாகக் குறிப்பிட்டேன். இரண்டு திட்டங்களில் எது குறைவான செலவாகிறது, எதில் கொண்டுவருவது மூலம் அதிகப்படியான தண்ணீர் கிடைக்குமோ அதைப் பரிசீலனை செய்து நாம் ஏற்றுக்கொள்வோம்.



26th July 1971]

*Brahadeeswarar Temple, Thanjavur.*

@ * 188 Q.—THIRU A. R. DAMODARAN (on behalf of Thiru G. Swaminathan) : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(a) whether it is a fact that foreign tourists are not allowed to enter into that portion of the Brahadeeswarar Temple, Thanjavur, containing the rare paintings depicting the ancient Chola Art; and

(b) if so, whether there is any proposal before the Government for the removal of the restriction?

**தஞ்சாவூர் பிரகதீசுவரர் கோயில்.**

**திரு. ஏ. ஆர். தாமோதரன் (திரு. ஜி. சுவாமிநாதன் சார்பில்):** மாண்புமிகு அறநிலைய அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

**(அ) தஞ்சாவூர் பிரகதீசுவரர் கோவில் பழங்காலச் சோழர் கலையை புலப்படுத்தும் அரிய ஓவியங்கள் உள்ள பகுதிக்கு வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் அனுமதிக்கப்படுவதில்லை என்பது உண்மையா?**

**(இ) ஆம் எனில், மேற்சொன்ன தடையை நீக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் முன்னர் உள்ளதா?**

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்:** (அ) ஆம்.

(இ) இல்லை.

@ * 189 Q.—THIRU A. R. DAMODARAN (on behalf of Thiru G. Swaminathan) : Will the Hon. the Minister for Religious Ednowments be pleased to state—

(a) whether it is a fact that Mr. Martimar Wheeler, srstwhile Director-General of Archaeology, Government of India and the discoverer of Frescoes in the Brahadeeswarar temple, Thanjavur was not permitted to see the paintings in the temple during November 1969; and

(b) if so, the reason therefor?

**திரு. ஏ. ஆர். தாமோதரன் (திரு. ஜி. சுவாமிநாதன் சார்பில்):** மாண்புமிகு அறநிலை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

**(அ) இந்திய அரசின் முன்னாள் புதைபொருள் ஆராய்ச்சித் தலைமை இயக்குநரும், தஞ்சாவூர் பிரகதீஸ்வரர் கோயிலில் மேல் மண்டப ஓவியக் கண்டு பிடிப்பாளருமான திரு. மார்டிமார் வீலர், 1969 நவம்பர் நிங்களில் அந்தக் கோயிலிலுள்ள வண்ண ஓவியங்களைப் பார்வையிட அனுமதிக்கப்படவில்லை என்பது உண்மையா?**

@ Postponed from the list of Questions for 22nd July 1971.

*(இ) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவை?*

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்:** *(அ) & (இ) 10-11-1969-ஆம் நாள் திரு. மார்டிமார் வீலர் அவர்கள் கோயிலின் பரம்பரை தர்மகர்த்தாவான தஞ்சாவூர் மூத்த இளவரசரால் தக்க முறையில் வரவேற்கப்பட்டு, கோயிலைச் சுற்றி, கோயிலின் பழக்க வழக்கங்களுக்கு மாறு வராத வகையில் அழைத்துச் செல்லப்பட்டார். எனினும் இந்து அல்லாதார் கர்ப்பக்கிரகத்தினுள் நுழைவதை அரசாங்க ஆணை தடை செய்ததால், அவர் கர்ப்பக் கிரகத்தைச் சுற்றியுள்ள வண்ணக் கலைக் கூடத்தில் அழைத்துச் செல்லப்படவில்லை.*

**திரு. கே. ராஜாராம்:** *தலைவர் அவர்களே, இதே மார்டிமார் வீலர் என்பவர்தான் இந்த வண்ணச் சித்திரங்களையெல்லாம் கண்டுபிடித்தவர். அதைப் பற்றி எழுதி உலகத்திற்கு வெளியிட்டவர். ஏற்கனவே கோயிலுக்குப் போயிருந்திருக்கிறார். அப்படியிருக்க இப்போது அவர் அனுமதிக்கப்படாத காரணம் என்ன என்று அரசாங்கத்திற்குத் தெரியுமா?*

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்:** *இந்து அல்லாதாரை கடவுள் இருக்கிற, விக்கிரகம் வைக்கப்பட்டுள்ள கர்ப்பக் கிரகத்தில் நுழைய அனுமதிப்பதில்லை என்று ஏற்கனவே விதி இருப்பதால், இப்போது அவர்கள் உள்ளே செல்வதற்கு அனுமதிக்கப் படவில்லை.*

**திரு. கே. ராஜாராம்:** *அவர் முன்பு அந்தக் கோயிலுக்குள்ளே போன போதும் இந்து அல்லாதவராகத்தானே இருந்தார். அப்போது எப்படி அனுமதிக்கப்பட்டார்?*

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்:** *அவர் அப்போது சென்ற சமயம் யாரும் ஆட்சேபணை கூறவில்லை என்று கருதுகிறேன். இப்போதுள்ள விதிமுறைப்படி உள்ளே அவர் சென்றால், நிச்சயமாக அப்படிப்பட்ட ஆட்சேபணை எழும் என்பதால் தான் இப்போதுள்ள விதிகள் அவரை அனுமதிக்க இடம் கொடுக்கவில்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன்.*

**திரு. சா. கணேசன்:** *தலைவர் அவர்களே, பிரகதீஸ்வரர் கர்ப்பக்கிரகத்தைச் சுற்றி இருக்கிற அந்தராளம் என்று சொல்கிற உட்பிராகாரத்தில் காணப்படுகிற பழங்காலச் சோழர்களின் வண்ணச் சித்திரங்களின் சிறப்பைக் கண்டுபிடித்தவர் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த போராசிரியர் சென்ற திரு. கோவிந்தராஜு என்பதை அரசு அறியுமா? அப்போதும் மார்டிமார் வீலர் உள்ளே செல்லவில்லை என்பதையும் அவர் டைரக்டர் ஆஃப் ஆர்கலாஜிகல் டிபார்ட்மெண்டாக இருந்தாலும், அவர் உள்ளே செல்லவில்லை என்பதையும் உள்ளே சென்று கண்டவர் திரு. கோவிந்தராஜு என்பவர்தான் என்பதையும் அதற்குப் பிறகு உத்தரவு போட்டு அம்மண்டபத்திலுள்ள நாயக்கர் காலத்தில் படிந்திருந்த காரைகளைச் சுரண்டிவிட்டு சோழர் கால ஓவியங்களின் சிறப்பை வெளிப்படுத்தினர் என்பதும் அரசு அறியுமா?*

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** *கேள்வி கேட்பதைப்போல கேட்டு விளக்கம் அளித்ததற்காக நன்றி.*

*திரு. எம். ஆறுமுகசாமி: அதைக் கண்டுபிடித்தவர் கோவிந்தராஜு அல்ல, திரு. எஸ். கோவிந்தசாமி பின்னே அவர்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.*





**புலவர் ஒ. அறிவுடை நம்பி:** *திருச்சிலுவாய் ஆலயம் கடல் அரிப்பால் நீது உண்டாகத்தக்க நிலையில் இருப்பதால் அரசு அதற்கு எடுத்த நடவடிக்கை என்ன?*

**மிஸ்டர் சேர்மன்:** *கடுமையான சொற்களை உபயோகிக்காதீர்கள், கொஞ்சம் புரியும்படி கேளுங்கள்.*

### *Masilanathar Temple*

@ * 190 Q.—THIRU A. R. DAMODARAN: (on behalf of Thiru G. Swaminathan): Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(a) whether it is a fact that the Masilanathar Temple at Tranquebar has sunk and has developed cracks consequent on sea erosion; and

(b) if so, the action taken by the Government to prevent further damage to the temple?

### *மாசிலாநாதர் கோயில்.*

**திரு. எ. ஆர். தாமோதரன் (திரு. ஜி. சுவாமிநாதன் சார்பில்):** *மாண்புமிகு அறநிலை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:*

*(அ) கடல் அரிப்பின் காரணமாக தரங்கம்பாடியில் உள்ள மாசிலாநாதர் கோயில் மூழ்கி, வெடிப்புகள் ஏற்பட்டுள்ளதென்பது உண்மையா?*

*(இ) ஆமெனில், கோயிலுக்கு மேலும் அழிவு ஏற்படுவதைத் தடுக்க அரசால் எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?*

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்:** *(அ) ஆம்.*

*(இ) நில அரிப்பைத் தடுக்க கடலில் பாதுகாப்புச் சுவர் அமைப்பதற்கான செலவு மிக அதிகமாக இருக்கும் என மதிப்பிடப்படுவதால் கோவிலைக் கிராமத்திற்கு மாற்ற உத்தேசமுள்ளது.*

**திரு. சா. கணேசன்:** *தலைவர் அவர்களே, இந்தக் கோயில் மிகவும் பழங்காலச் சிறப்போடு அழகான வரலாற்றுச் சிறப்புடையதாகவும் இருப்பதால், இதை தரங்கம்பாடி கிராமத்திற்கு மாற்றுவதால் அதனுடைய பழமை போய் புதிதாகக் கட்டிய கட்டிடமாக அது ஆகிவிடும் என்பதால், கடல் அரித்தாலும் அதை அப்படியே விட்டுவிடுவது குற்றமில்லை. அதைக் கிராமத்திற்குக் கொண்டுபோய் அங்கே மூர்த்திகளைப் பிரதிஷ்டை செய்வது பலன்தராது. ஆகையால் அரசு அதைத் தற்காலிகமாக அப்படியே விட்டுவிடத் தயாராக இருக்குமா?*

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்:** *அப்படியே விட்டுவிடுவதில் ஆட்சேபணை இல்லை. ஆனால் அந்தக் கோயில் இப்போதே கடல் அரிப்பின் காரணமாகக் கொஞ்சம் தேசமடைந்திருக்கிறது. அங்கேயுள்ள விக்கிரகங்களை அதே கிராமத்திலுள்ள விஷ்ணு ஆலயத்தில் கொண்டுபோய் பிரதிஷ்டை செய்யும்*

@ Postponed from the list of Question for 22nd July 1971.

திட்டமிருக்கிறது. ஆனால் இப்போதிருக்கிற கோயிலைப் புதுப்பித்து கடல் அரிப்பிலிருந்து பாதுகாக்க வேண்டுமென்றால், அதற்கு சுமார் 10 லட்சம் ரூபாய் செலவாகும் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது.

**புலவர் ஒ. அறிவுடை நம்பி:** தலைவர் அவர்களே, திருச்சிரலிவாய் ஆலயத்திற்கும் கடலரிப்பால் தீதுண்டாகி உள்ளது உண்மையா? இதை தீக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்:** திருச்சிரலிவாய் ஆலயத்திற்கும் இதே கடலரிப்பால் தீங்கு ஏதும் நேரவில்லை என்றாலும் கொஞ்ச நாளில் கடலரிப்பின் காரணமாகத் தீங்கு ஏற்படக் கூடும் என்று எதிர்பார்த்துத்தான் கரையில் பெரிய பாறைகளையும் கற்களையும் கொண்டுவந்து போட்டு கடல் அரிப்பைத் தடுக்க ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. அதற்கு சுமார் 11½ லட்சம் செலவாகும் என்று மத்திய பொருளாதார நிபுணர்கள் நிர்ணயம் செய்திருக்கிறார்கள். மத்திய அரசாங்கத்திலிருந்து அதைத் தரவேண்டுமென்று மாநில அரசாங்கத்தின் சார்பில் வலியுறுத்திக் கேட்டிருக்கிறோம். அதற்கான உதவி கிடைக்குமென்று எதிர்பார்க்கிறோம்.

**திரு. சி. வி. ராஜகோபால்:** திருச்செந்தூர் கோயிலில் உள்ள முருகன் கடல் அரிப்பில் தான் தான் இருக்கவேண்டுமென்று விரும்புவதாகச் சொல்லியிருக்கிறாரே; அதை அரசு கவனிக்குமா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** கடல் அரிப்பில் வாழ விரும்பவில்லை, கடல் அலையோடு இருக்க விரும்புவதாகச் சொல்வார்கள்.

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்:** தலைவர் அவர்களே, ஆண்டவன் வந்து மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. வி. ராஜகோபால் அவர்களிடத்தில் அலைகள் அடித்துக் கொண்டிருக்கவேண்டுமென்று சொன்னதாக எனக்குத் தகவல் தெரியாது. (சிரிப்பு)

### *State Transport Buses*

@ * 206 Q.—THIRU V. ISVARMURTI: Will the Hon. the Minister for Transport be pleased to state—

(a) whether the Government are aware of the fact that State Transport buses in the Madras City do not keep to the scheduled timings; and

(b) if so, the steps taken in this regard?

**அரசுப் போக்குவரத்துப் பேருந்துகள்**

**திரு. வி. ஈஸ்வரமூர்த்தி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) சென்னை மாநகரில் அரசுப் போக்குவரத்துப் பேருந்துகள் உரிய கால அட்டவணைப்படி ஓடவில்லையென்பதை அரசு அறியுமா?

(இ) ஆமெனில், இது குறித்து எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவை?

@ Postponed from the list of Question from 23rd July 1971.



26th July 1971]

THE HON. THIRU S. RAMACHANDRAN: (a) In the rush hours, the punctuality of the State Transport buses in the Madras City is affected due to traffic congestion, signals, breakdowns, etc.,

(b) the State Transport Department is taking steps to maintain the buses properly and to operate them punctually.

THIRU A. R. DAMODARAN: May I know, Sir, whether anv steps will be taken to see that the State Transport buses are parked alongside the pavement and not in the centre of the roads? So many of us very nearly had accidents because of the bad practice among the State Transport drivers.

THE HON. THIRU S. RAMACHANDRAN: The drivers are specifically instructed to park the buses alongside the pavement.

### *Students of Anna Arts College*

£ 207 Q.—THIRU V. ISVARMURTI: Will the Hon. the Minister for Transport be pleased to state—

(a) whether the students of Anna Arts College in Thanjavur district detained any Government buses inside their college compound about 12th February 1971; and

(b) if so, the reasons therefor?

**அண்ணா கலைக்கல்லூரி மாணவர்கள்**

**திரு. வி. ஈஸ்வரமூர்த்தி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) 1971 பிப்ரவரி 12-ஆம் நாள் அளவில் தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள அண்ணா கலைக்கல்லூரி மாணவர்கள் அவர்களது கல்லூரி வளாகத்துள் அரசுப் பேருந்துகள் எவற்றையாவது நிறுத்தி வைத்திருந்தனரா?

(இ) ஆமெனில், அதன் காரணங்கள் யாவை?

THE HON. THIRU S. RAMACHANDRAN: (a) No.

(b) Does not arise.

### *Advertisements in State Transport Buses*

£ 208 Q.—THIRU V. ISVARMURTI: Will the Hon. the Minister for Transport be pleased to state—

(a) whether spaces in State Transport buses are rented out to display advertisements;

(b) if so, the details thereof; and

(c) the amount realised therefrom district-wise as on date?

£ Postponed from the list of Questions for 23rd July 1971.

[26th July 1971

**போக்குவரத்துத் துறை பேருந்துகளில் விளம்பரம்**

**திரு. வி. ஈஸ்வரமூர்த்தி :** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) அரசுப் போக்குவரத்துத் துறை பேருந்துகளிலுள்ள இடங்கள் விளம்பரம் கட்டி வைக்கப்படுவதற்காக வாடகைக்கு விடப்படுகின்றனவா ?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை ?

(உ) இன்றைய நாள் வரை மாவட்ட வாரியாக இதிலிருந்து பெறப்பட்ட தொகை எவ்வளவு ?

THE HON. THIRU S. RAMACHANDRAN : (*a*) Yes.

(*b*) The display of advertisements is permitted on panels fitted at the rear and on the top sides of the buses plying on the City and suburban routes and at the rear of the buses plying on mofussil routes. Orders for the display are booked through certain advertising agencies on commission basis.

(*c*) District-wise details of amount realised are not available. But the total amount for 1970–71 realised in Madras and Kanyakumari branches for which accounts are maintained is as follows :—

Madras branch—Rs. 2,71,613.57.

Kanyakumari branch—Rs. 2,567.

Total—Rs. 2,74,180.57.

THIRU A. R. DAMODARAN : May I know, Sir, whether any tender system is utilized for seeking advertisements on State Transport buses?

THE HON. THIRU S. RAMACHANDRAN : The Government are proposing to have auction system for giving these advertisements in future.

*High capacity buses*

£ 209 *Q.*—THIRU M. ARUMUGASWAMI : Will the Hon. the Minister for Transport be pleased to state—

(*a*) whether the Government propose to operate high capacity buses in Madras City; and

(*b*) if so, the details thereof?

**அதிகப் பிரயாணிகளை ஏற்றிச் செல்லும் பேருந்துகள்**

**திரு. எம். ஆறுமுகசாமி :** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) சென்னை மாநகரில் அதிகப் பிரயாணிகளை ஏற்றிச் செல்லும் பேருந்துகளை விடுவதற்கு அரசு உத்தேசித்துள்ளதா ?

£ Postponed from the list of Question for 23rd July 1971.



26th July 1971]

(இ) ஆமெனில், அதன் விவரம் யாது ?

**மாண்புமிகு திரு. எஸ். ராமச்சந்திரன் :** சென்னை மாநகரில் அதிக அளவு பிரயாணிகளை ஏற்றிச்செல்லும் இணைக்கப்பட்ட மாடிப்பேருந்து ஒன்றையும் ஏழு இழுவைத்தொடர் பேருந்துகளையும், நின்றுகொண்டு பயணம் செய்யும் வசதியுடைய 62 பேருந்துகளையும் தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை ஏற்கனவே இயக்கி வருகிறது.

**திரு. எம். ஆறுமுகசாமி :** தலைவர் அவர்களே, அது தேவையைப் பூர்த்தி செய்யாதிருப்பதால் இன்னும் அதுபோன்ற பஸ்கள் விரிவான அளவில் விடுவதற்கு அரசு ஏதாவது நடவடிக்கை மேற்கொள்ளுமா ?

**மாண்புமிகு திரு. எஸ். ராமச்சந்திரன் :** அத்தகைய பஸ்களை அதிகப் படுத்துவதற்கு அரசு நடவடிக்கை எடுக்கும்.

THIRU A. R. DAMODARAN : May I know, Sir, whether the high capacity buses which have been introduced are profitable in their runnings?

THE HON. THIRU S. RAMACHANDRAN : Separate accounts are not maintained to reply to this question.

*Porters*

£ 210 *Q.*—THIRU V. ISVARMURTI : Will the Hon. the Minister for Transport be pleased to state—

(*a*) whether licensed porters are available at the State Transport bus stops in the long distance and Express Bus routes; and

(*b*) if so, the details thereof?

**கூலிகள்**

**திரு. வி. ஈஸ்வரமூர்த்தி :** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) விரைவு பேருந்து வழித் தடங்களிலும், நெடுந்தொலைவுப் பேருந்து வழித்தடங்களிலும் உள்ள அரசுப் போக்குவரத்துப் பேருந்து நிறுத்தங்களில் உரிமை வழங்கப்பட்ட கூலிகள் உள்ளனரா ?

(இ) ஆம் எனில், அதன் விவரமென்ன ?

**மாண்புமிகு திரு. எஸ். ராமச்சந்திரன் :** (அ) ஆம்.

(இ) அரசுப் போக்குவரத்துத் துறையில் உரிமம் பெற்ற கூலிகள் இம் மார்க்கத்தில் இருபத்தி இரண்டு இடங்களில் இருக்கின்றனர்.

£ Postponed from the list of Questions for 23rd July 1971.

[26th July 1971

### *New College, Madras*

* 236 Q.—THIRU A. R. DAMODARAN (on behalf of THIRU G. SWAMINATHAN) : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(a) whether it is a fact that the New College, Madras, is collecting capitation fees from the entrants as well as from the regular students; and

(b) if so, the action taken in the matter?

**சென்னை புதுக்கல்லூரி**

திரு. ஏ. ஆர். தாமோதரன் (திரு. ஜி. சுவாமிநாதன் சார்பில்) : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) புதியதாய் அனுமதிக்கப்படும் மாணவர்களிடமிருந்தும் கல்வி பயின்று வரும் மாணவர்களிடமிருந்தும், சென்னை புதுக்கல்லூரி தலைவர் கட்டணங்கள் capitation fees வசூலிக்கிறது என்பது உண்மைதானு?

(இ) ஆமெனில், இது குறித்து எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : (அ) இது பற்றி அரசுக்குத் தகவல் இல்லை.

(இ) வினாவுக்கு இடமில்லை.

THIRU A. R. DAMODARAN : Sir, the Government also want Rs. 5 lakhs before they are prepared to start a Government College in any district. May I know whether this would also be considered as a form of capitation fee that is collected from the general public?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அரசாங்கத்தின் சார்பாக கல்லூரி வைக்கவேண்டுமென்றால் 40 ஏக்கர் நிலமும் ரூ. 5 லட்சம் நன்கொடையாகவும் தரவேண்டுமென்று ஈட்டு மானிய உறுதித் தொகையின் அடிப்படையில்தான் கேட்கப்படுகிறது. முதல் தரமான கல்லூரி வைக்கவேண்டுமென்றால் அரசுக்கு 30 லட்சம் செலவாகிறது. பொது மக்கள் நன்கொடை கொடுக்கவேண்டுமென்ற அடிப்படையில் ரூ. 5 லட்சம் கேட்கப்படுகிறதே தவிர மாணவர்களிடமிருந்து வசூலிக்கப்படுவதாக ஆகாது. கேட்கப்பட்ட கேள்வி மாணவர்களிடத்தில் வசூலிக்கப்படுகிறதா என்பது. புதிய கல்லூரி நிர்வாகிகளிடத்தில் எழுதிக் கேட்டதற்கு அப்படி ஒன்றும் வசூலிக்கப்படவில்லை என்ற பதில் வந்திருக்கிறது.

### *Bridge across Vasanthi river*

* 237 Q.—THIRU A. R. DAMODARAN (on behalf of THIRU G. SWAMINATHAN) : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(a) whether it is a fact that certain wards of Attoor Town have been cut off from the rest of the town, thereby causing hardship to the public due to delay in the construction of one span of the bridge connecting Attoor town and Mullivadi across Vasanthi river; and

(b) if so, the reasons for the delay and the action proposed to be taken in the matter?



26th July 1971]

**வசந்தி ஆற்றின் குறுக்கே பாலம்**

திரு. ஏ. ஆர். தாமோதரன் (திரு. ஜி. சுவாமிநாதன் சார்பில்) : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) வசந்தி ஆற்றின் குறுக்கே ஆத்தூர் நகரையும் முள்ளிவாடியையும் இணைக்கும் பாலத்தில் ஒரு கண் கட்டப்படுவதில் ஏற்பட்ட தாமதத்தால், ஆத்தூர் நகரின் சில பகுதிகள் நகரின் மீனியப் பகுதிகளிலிருந்து துண்டிக்கப் பட்டு அதன் மூலம் பொதுமக்களுக்கு இடையூறு விளைவிக்கப்பட்டுள்ளது உண்மையா?

(இ) ஆம் எனில், தாமதத்திற்குக் காரணமென்ன? இது குறித்து மேற் கொள்ள உத்தேசித்துள்ள நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) சென்னையில் ஏற்பட்ட செப்புத்தகடுகள் தட்டுப்பாட்டின் காரணமாக 1971-ம் ஆண்டு மார்ச் இறுதி வரையில் கான்ட்ராக்டருக்கு அவைகளை வழங்க முடியவில்லை. வேலை நடைபெறுகிறது. 30-9-71-க்குள் முடிவடைத்து விடும்.

### *Maternity leave*

* 238 Q.—PULAVAR O. ARIVUDAI NAMBI : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state whether the Government have any proposal to modify the present maternity leave period for the women teachers working in the Government Schools?

**மகப்பேறு விடுப்பு.**

புலவர் ஒ. அறிவுடைநம்பி : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

அரசினர் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியைகளுக்குத் தற்போதுள்ள மகப் பேறு விடுப்பு நிலையை மாற்றியமைக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உண்டா?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : இல்லை.

புலவர் ஒ. அறிவுடைநம்பி : தலைவர் அவர்களே, தரப்படுகிற விடுப்பு இரண்டு மாதங்கள் பேறு காலத்திற்கு முன்பு ஒரு மாதமாகவும், பேறு காலத்திற்கு பிறகு ஒரு மாதமாகவும் தருவதற்கு அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : மகப்பேறுக்கு இரண்டு திங்கள் விடுப்பு விடப்படுகிறது. பேறு எப்போது வற்படுகிறது என்று யாருக்குமே தெரியாது. சரியாக ஒரு மாதம் என்று கணக்கிட முடியுமா என்றால் டாக்டர்களுக்கே கணக்கிட முடியவில்லை. கருச்சிதைவு ஏற்பட்டால் அதற்கு ஒன்றரை மாதமாக விடுப்பு அளிக்கப்படுகிறது.

THIRU A. R. DAMODARAN : Sir, is there any proposal to stop maternity leave after the third baby?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அப்படிப் பட்ட கடுமையான தடவடிக்கைக்கு இன்னும் தாம் ஆளாகவில்லை. அப்படிப் பட்ட கருத்தை பலர் சொல்லி வருகிறார்கள்.

THIRU A. R. DAMODARAN : While maternity leave may be granted, is there any proposal with the Government to sanction the leave without salary after the third baby is born, Sir?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அப்படிப் பட்ட செயல் குறிப்பு அரசாங்கத்தில் தற்போதில்லை. ஆனால் அப்படிப்பட்ட கருத்தை சிலர் வலியுறுத்தி வருகிறார்கள். ஆனால் வேறு வகையில் இரண்டு குழந்தைகளோடு நிறுத்திக் கொள்வதற்கான வழியைத் தேட வேண்டுமே தவிர இப்படித் தண்டிக்கக் கூடாது என்றும் சிலர் சொல்கிறார்கள்.

திரு. சி. வி. ராஜகோபால் : பள்ளி ஆசிரியர்கள் இவ்வளவுதான் குழந்தை களைப் பெறவேண்டும், இதற்கு மேல் பெறக் கூடாது என்ற விதியை அரசு ஏற்படுத்துமா ?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : பள்ளி ஆசிரியர்கள் மட்டு மல்ல, மாண்புமிகு உறுப்பினர் உட்பட இரண்டோடு நிறுத்திக் கொண்டால் நல்லது என்ற எண்ணம் இருந்து வருகிறது.

THIRU M. RAJAH IYER : Mr. Chairman, Sir, the Hon. Minister was pleased to say that the maternity leave is for two months after confinement. It is not possible for the Government servants or teachers to go on leave just an hour or two prior to confinement. They have to take leave a week or a fortnight prior to confinement. May I know how the period of leave up to confinement is reckoned? May I know whether they are eligible for any leave before confinement because maternity leave is restricted to two months' period following confinement? May I know what the rules in force are, Sir?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, மகப் பேறு விடுப்பாக இரண்டு திங்கள் எடுக்கலாம் என்றிருக்கிறது. ஈட்டிய விடுப்பு என்கிற எர்ன்டு லீவ் அவர்கள் 11 நாட்கள் என்று மாதத்திற்கு 3 நாட்கள் பெறலாம். அவற்றைச் சேமித்து வைத்து அதை எடுத்துக்கொள்ள லாம். மருத்துவ கால விடுப்பு என்று ஓராண்டு எடுக்கலாம் என்று இருக் கிறது. அப்படி உடல்நலத்தின் காரணமாக லீவை நீடிக்க வேண்டுமானால் மருத்துவ விடுப்பின் கீழ் எடுத்துக்கொள்ளலாம்.



*Law College for Madurai*

* 239 Q.—THIRU SAW. GANESAN (on behalf of Thiru D. SANTOSHAM) : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(a) whether it is a fact that the proposal to start a Law College in Madurai has been dropped; and

(b) if so, the reasons therefor?

மதுரைக்கு சட்டக் கல்லூரி

திரு. சா. கணேசன் (திரு. டி. சந்தோஷம் சார்பில்) : மாண்புமிகு கல்வி உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) மதுரையில் சட்டக் கல்லூரி ஒன்று தொடங்கும் செயற்குறிப்பு கைவிடப்பட்டது உண்மையா?

(இ) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவை?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) இப்போதைய சூழ்நிலையில் இன்னுமொரு சட்டக் கல்லூரி திறப்பது அவசியமில்லை எனக் கருதப்படுகிறது.

*Pavement Vendors*

* 240 Q.—THIRU V. ISVARMURTI : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(a) whether the pavement vendors in Moore Market area were evicted by about 24th May 1971; and

(b) if so, the details thereof?

நடைபாதை வணிகர்கள்

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) மூர் அங்காடிப் பகுதியிலுள்ள நடைபாதை வணிகர்கள் 1971 மே 24-ஆம் நாள் அளவில் வெளியேற்றப்பட்டனரா?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) மூர் அங்காடி தலைக்கட்டிடத்தின் எதிரே மாநகராட்சியின் அனுமதி பின்றி சிறு வணிகர்களால் அமைக்கப்பட்டிருந்த பெட்டிக்கடைகள் மக்களின் போக்குவரத்துக்கும் வாகனங்களின் போக்குவரத்துக்கும் தடையாக இருந்த மையால் 16-5-71 அன்று மாநகராட்சியினரால் அகற்றப்பட்டன.

[26th July 1971

THIRU G. VASANTHA PAI: Will the Government kindly see that the pavement dwellers are removed from the pavements so that they are free for passers-by, pedestrians to use?

**மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, மாநகராட்சி மன்ற ஆணையர் அவர்கள் அதற்கான நடவடிக்கையை இப்போது எடுத்திருக்கிறார்கள். ஆங்காங்கு பல்வேறு பிரச்சினைகள் வருவதன் காரணமாக அவர்களுக்கு நோட்டீஸ் விட்டும் வேறு பல வகைகளிலும் நடைபாதையில் இருக்கிறவர்களை அகற்றும் முயற்சி எடுத்துக்கொள்ளப்பட்டு வருகிறது. இப்போது கூட மூர் மார்க்கெட்டுக்கு வெளியிலே நடைபாதையில் உள்ள கடைகளை அகற்றும் முயற்சியில் ஆணையர் ஈடுபட்டிருக்கிறார்.

THIRU G. VASANTHA PAI: Will the Government also see, Sir, that the pavements are not used as public conveniences by people, especially the pavement opposite the Chief Secretary's bungalow in the Greenways Road and opposite the Cultural Academy—a few doors after the red building? New pavements have been constructed, but people are not able to walk or even go near them.

**மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, நடைபாதை என்று அமைக்கப்படுவதை நடைபாதையாகப் பயன்படுத்த வேண்டும். அதை மீறிய வகையில் பயன்படுத்துவது அகற்றப்பட வேண்டும். அதற்கான நடவடிக்கையைத்தான் எடுக்க வேண்டுமென்று ஆணையர் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார். அவரும் அந்த முயற்சியில் ஈடுபட்டிருக்கிறார். பல்வேறுவகையில் மகஜர்கள் வந்தாலும் கூட மீண்டும் இடம் அங்கே தரக்கூடாது என்றுதான் இப்போது தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

**திரு. எஸ். முத்துசாமி:** தலைவர் அவர்களே, நடைபாதையில் இருக்கிறவர்கள் வேறு வழியில்லாமல்தான் அங்கே இருக்கிறார்கள். ஆகையால் சென்னையில் அதிக நிலங்களை வைத்துக்கொண்டு, ஒரு ஏக்கர், இரண்டு ஏக்கர் என்று பெரிய பெரிய இடங்களில் வீடுகளைக் கட்டிக்கொண்டிருப்பவர்களிடம் அதைப் பெற்று இந்த இடமில்லா ஏழைகளுக்கு வழங்கப்படுமா?

**மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன்:** அது வேறு நடவடிக்கை. இது வேறு. இதையும் அதையும் ஒன்றுகச் சேர்க்க முடியாது. அவர்கள் கடைகள் மற்றவைகளை வைப்பதற்கான வசதியான இடங்களை பிறர் கொடுத்தால் அதை அனுமதிப்பதற்கான சூழ்நிலை இருக்கிறது. அதனால் சென்னை மாநகராட்சி சார்பில் கடைகளைக் கட்டி விடுகிற முயற்சி நடைபெறுகிறது.

**திரு. எஸ். ஜெயராம செட்டியார்:** தலைவர் அவர்களே, மூர் மார்க்கெட் முன்பாக நடைபாதையில் உள்ள கடைகளை எடுத்துவிட வேண்டுமென்று நிறைய உத்தரவு வரும்போது மவுண்ட் ரோடில் காஸ்மாபாலிட்டன் கிளப் அருகில் நடைபாதையில் திடீரென்று ஒரு ஸ்லீப் ஸ்டால் மாதிரி ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அங்கே எப்போதும் கூட்டமாக இருக்கிறது. நடைபாதையில் போவதற்கு சங்கடமாக இருக்கிறது. அப்படிப்பட்ட இடங்களில் கடை வைக்க லைசன்ஸ் கொடுக்காமல் இருக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?



26th July 1971]

**மாண்புமிகு திரு. வி. ஆர். நெஞ்செழியன்:** அடிப்பட்டவர்களை லைசென்ஸ் வாங்கி கடை வைப்பதில்லை. வாங்காமல்தான் வைப்பார்கள். இப்படிப் பட்டவர்களை அகற்றும் நடவடிக்கைகள்தான் இப்போது எடுக்கப்படுகின்றன.

### *Overbridge*

* 241 Q.—THIRU SAW. GANESAN (on behalf of Thiru D. SANTOSHAM): Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether the overbridge on the Madurai–Bodinaickanur Railway line on the Bye-pass road is left unfinished for a very long time; and

(*b*) if so the reasons therefor?

### மேம் பாலம்

**திரு. சா. கணேசன் (திரு. டி. சந்தோஷம் சார்பில்):** மாண்புமிகு பொதுப் பணி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) புறச்சாலையின் மீதுள்ள மதுரை-போடிநாயக்கனூர் இருப்புப் பாதையின் மீதான மேம்பாலம் வெகு காலமாகக் கட்டி முடிக்கப்படாமல் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதற்கான காரணங்கள் யாவை?

THE HON. THIRU S. J. SADIQ PASHA: (*a*) Yes, Sir.

(*b*) The approaches to the overbridge were executed by the State Highways Department and they were completed in 1967. The construction of the bridge proper has to be executed by the Railways. The estimate for the bridge portion underwent revision three times and hence, the delay in execution. The Railways have taken up construction of bridge portion and the work is in progress.

**திரு. எஸ். ஜெயராம செட்டியார்:** இந்தப் பாலத்தைக் கட்டுவதற்கு சுமார் 4 வருஷ காலத்திற்கு முன்பே ஏற்பாடாகியிருந்தது. நடுவில் ஒருவர் அதற்காக இடம் விடவில்லை என்ற காரணத்தால் அந்த வேலைகள் நின்றன என்று சொன்னார்கள். அத்தோடு பாலத்தினைக் கட்டுவதற்கு காண்ட்டிராக்ட் எடுத்தவர் தவறுசெய்ததால் அதன் காரணமாக இந்த டிலே ஏற்பட்டது என்றும் கேள்விப்பட்டேன். இப்போது வேலை நடக்கிறது. சீக்கிரமாக அந்த வேலையை முடித்து அந்தப் பாலத்தை பொதுமக்களுக்குப் பயன்படும்படி சர்க்கார் செய்ய முன்வருமா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** வேலை தொடங்கப்பட்டு விட்டது. முடித்துவிடுமென்று மாண்புமிகு உறுப்பினர் நம்பலாம்.

* 242 Q.—THIRU SAW. GANESAN (on behalf of Thiru D. SANTOSHAM : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(a) whether there is any proposal to construct a bridge over the railway line at Veeraraghavapuram near the Railway Junction at Tirunelveli; and

(b) if so, the details thereof?

திரு. சா. கணேசன் (திரு. டி. சந்தோஷம் சார்பில்): மாண்புமிகு பொதுப் பணி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) திருநெல்வேலி இரயில்வே சந்திப்பு நிலையத்திற்கு அருகில் வீரராகவபுரம் இரயில் பாதை மேம்பாலம் அமைக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) ஆம்.

(இ) திருநெல்வேலி-செங்கோட்டை சாலையின் 1/4-வது மைலில் ஏற்கனவே அமைந்துள்ள இருப்புப்பாதை கடலின் கதவுகள் அடிக்கடி மூடப்படுவதன் விளைவாக ஏற்படுகின்ற கடும் போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்கும் பொருட்டு, அதற்கு பதிலாக அவ்விடத்தில் தலைமைப் பொறியாளரால் பரிந்துரைக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூபாய் 35 லட்சம் செலவில் மேம்பாலம் கட்ட அரசு ஜனவரி 1967-ல் ஆணை பிறப்பித்துள்ளது. இப்பணிக்கான ஒப்பந்தப் புள்ளிகள் தயாரிக்கப்பட்டு வேலையும் நடைபெற்று வருகிறது. 1971 ஏப்ரல் முடிய ரூபாய் 8.79 லட்சம் செலவாகியுள்ளது.

### *List of Backward Classes*

* 243 Q.—THIRU M. SANKARALINGAM PILLAI (on behalf of THIRU P. THIRUGNANASAMBANDAM) : Will the Hon. the Minister for Backward Classes be pleased to state—

(a) whether any representation was received in 1967 or later requesting for inclusion in the list of Scheduled Castes, the backward classes of Kallar, Maravar and Agambadiar living in Ramanathapuram, Madurai and Tirunelveli districts; and

(b) if so, the action taken thereon?

### தாழ்த்தப்பட்டோர் பட்டியல்

திரு. எம். சங்கரலிங்கம் பிள்ளை (திரு. பி. திருஞானசம்பந்தம் சார்பில்) : மாண்புமிகு பிற்பட்ட வகுப்பினர் நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) பின்தங்கிய வகுப்பைச் சார்ந்த இராமநாதபுரம், மதுரை, திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் வாழும் கள்ளர், மறவர், அகம்படியர் வகுப்பைச் சார்ந்தவர்களைத் தாழ்த்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்க 1967-ம் ஆண்டிலோ, அதற்குப் பின்னரோ கோரிக்கை வந்தது உண்டா?



(இ) ஆம் எனில், அதன் மீது எடுத்துக் கொண்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. க. ராசாராம் : (அ) & (இ) எந்த வகுப்பார் தீண்டாமை என்னும் இழுக்கிற்கு ஆளாக்கப்பட்டு உள்ளனரோ அவ்வகுப்பாரை மட்டும் தாழ்த்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்க இயலும். ஆனால் கள்ளர், மறவர், அகம்படியர் ஆகிய வகுப்பினர் இந்த இழுக்கிற்கு ஆளானவர் அல்லர். இது குறித்து கோரிக்கைகள் அரசுக்கு அவ்வப்போது கிடைத்துள்ளன. மேற்கண்ட காரணத்தால் அவற்றின் மீது நடவடிக்கை எதுவும் எடுக்கப் பெறவில்லை.

திரு. எம். ராஜா அய்யர் : தலைவர் அவர்களே, ஷெடியூல்டு காஸ்ட் என்று சொல்லாது போனாலும் கூட குறிப்பாக ராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள மறவர்கள் முன்பு (Denotified Tribe) என்றும் மோஸ்ட் பாக்வார்ட் இளாஸ் என்றும் வைக்கப்பட்டு வந்தனர். மோஸ்ட் பாக்வார்ட் இளாஸ் என்று வைத்து ராமநாதபுரம் மாவட்ட மறவர்களுக்கு ஷெடியூல் காஸ்ட்டுக்கு அளிக்கப்படுகிற சலுகைகள் வழங்கப்பட்டு வந்தன. இப்போதும் அவர்களை மோஸ்ட பாக்வார்ட் இளாசில் தொடர்ந்து வைப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டிருக்கிறதா அல்லது அவர்கள் பாக்வார்ட் இளாஸ் என்று நிர்ணயிக்கப்படுவார்களா ?

மாண்புமிகு திரு. க. ராசாராம் : பாக்வார்ட் இளாஸ், மோஸ்ட் பாக்வார்ட் இளாஸ் என்ற பிரிவு தற்போது தேவையில்லை என்று அரசு முடிவு எடுத்திருக்கிறது. ஆகவே அவர்கள் பாக்வார்ட் இளாசில் வைக்கப்பட்டிருக்கிறார்கள்.

* 244 Q.—PULAVAR O. ARIVUDAI NAMBI (on behalf of THAVATHIRU DEIVASIGAMANI ARUNACHALA DESIKAR) : Will the Hon. the Minister for Backward Classes be pleased to state with reference to answer given to the Legislative Council Question No. 79 on 8th September 1970, the present stage of the proposal to remove the sections of 'Muthuraja', 'Mutharia r' and 'Valayan' from the Backward Class List and declare them as 'Muthuraja' Community?

புலவர் ஒ. அறிவுடைநம்பி (தவத்திரு தெய்வசிகாமணி அருணாசல தேசிகர் சார்பில்) : மாண்புமிகு பிற்பட்ட வகுப்பினர் நல அமைச்சர் அவர்கள் 8-9-1970-ஆம் தேதியன்று 79-ம் எண் வினாவிற்கு அளித்த விடையையொட்டி கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

பின்தங்கியோர் பட்டியலிலுள்ள 'முத்துராஜா', 'முத்தரையர்', 'வலையன்' ஆகிய பிரிவுகளை அகற்றி முத்துராஜா சமூகத்தினரே என்று அறிவிக்கும் செயற்குறிப்பு எந்நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. க. ராசாராம் : இது குறித்து, பிற்பட்டோர் நலக்குழுவின் அறிக்கையில் சொல்லப்பெற்றுள்ள கருத்துக்கள் அரசின் ஆய்வில் உள்ளன.

திரு. எஸ். முத்துசாமி : தலைவர் அவர்களே, பின்தங்கியோர் பட்டியலில் சொல்லுகிற வேளாளர் சமூகம் சேர்க்கப்படுவதற்கு செயல்குறிப்பு ஏதும் உண்டா?

மாண்புமிகு திரு. க. ராசாராம் : தற்போது எதுவும் இல்லை.

[26th July 1971

புலவர் ஒ. அறிவுடை நம்பி : தலைவர் அவர்களே, தென்னார்காடு மாவட்டத் திலுள்ள இசை வேளாளர் வகுப்பைச் சேர்ந்தவர்களை பிற்பட்டோர் வகுப்பில் சேர்க்க செயல் குறிப்பு உண்டா ?

மாண்புமிகு திரு. க. ராசாராம் : அப்படிப்பட்ட குறிப்புகள் ஒன்றும் தற் போது அரசினிடம் இல்லை.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அமைச்சர் குறிப்புகள் இல்லை என்றுச் கள். இசை வேளாளர் வகுப்பு பட்டியலில் ஏற்கனவே இருக்கிறது.

### *Housing Schemes*

* 245 Q.—THIRU A. R. DAMODARAN (on behalf of THIRU G. SWAMINATHAN) : Will the Hon. the Minister for Backward Classes be pleased to state—

(*a*) the amount allotted by the Government of India for Housing Schemes during the financial years 1969–70 and 1970–71; and

(*b*) the amount utilised by the Government during each year?

### வீடு கட்டும் திட்டங்கள்

திரு. ஏ. ஆர். தாமோதரன் (திரு. ஜி. சுவாமிநாதன் சார்பில்) : மாண்புமிகு பிற்பட்ட வகுப்பினர் நல அமைச்சர் அவர்கள் பிறக்கண்ட வினாக்களுக்கு பதி லளிக்க வேண்டுகிறேன் :

(அ) வீடு கட்டும் திட்டங்களுக்காக 1969-70, 1970-71 நிதி ஆண்டுகளில் இந்திய அரசு ஒதுக்கியுள்ள தொகை எவ்வளவு ?

(இ) ஒவ்வோர் ஆண்டிலும் அரசு பயன்படுத்திய தொகை எவ்வளவு?

மாண்புமிகு திரு. க. ராசாராம் : (அ) இந்திய அரசு புழைக்கற் கலைஞர் தொழிற்சாலைக்கு 1969-70 ஆண்டில் ரூ. 200 லட்சமும், 1970-71 ஆண்டில் ரூ. 48 லட்சமும் மாநில திட்டவரம்பிற்குப் புறம்பாக நிதி உதவி அளித்துள்ளது. தோட்டத் தொழிலாளர் வீடு கட்டும் திட்டத்திற்கு 1970-71 ஆண்டில் இந்திய அரசு ரூ. 0.50 லட்சம் நிதி உதவி வழங்கியுள்ளது. ஆயுள் காப்பீட்டுநிதிக் கழகம், நடுத்தர வருவாயுள்ளோர் வீட்டு வசதித் திட்டம், நிலம் கையகப்படுத்துதல் மேம்படுத்துதல் திட்டம், தமிழ்நாடு அரசுப் பணியாளர் வாடகை வீட்டு வசதித் திட்டம் இவற்றிற்கு 1969-70, 1970-71 ஆகிய ஒவ்வொரு ஆண்டிற்கும் ரூ. 150 லட்சம் வழங்கியுள்ளது. மற்ற வீட்டு வசதி திட்டங்களுக்கு, இந்திய அரசு மொத்தக் கடனாகவும், மொத்த மானியமாகவும்தான் மத்திய உதவி பெற்ற எல்லா திட்டங்களுடன் சேர்த்து வழங்குகிறது.

(இ) இந்த விவரங்கள் நிதிநிலைக் குறிப்பிலும், விரிவான வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகளின் தலை வெளியீட்டிலும் காணலாம்.

திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு : மத்திய மாநில அரசினரின் நிதி உதவி யோடு ஆரம்பிக்கப்படும் இந்த வீடு வசதித் திட்டத்தினால் ஏற்படும் பலன்கள் நகர்ப்புறங்களுக்கு மட்டும்தான் அமையுமா ? கிராமப்புறங்களுக்கும் இதில் திட்டம் இருக்கிறதா ?



26th July 1971]

மாண்புமிகு திரு. க. ராசாராம் : இது நகர்ப்புறங்களுக்கு மட்டுமல்ல, எல்லாப் பகுதிகளுக்குமே இப்போது அனேகமாக விஸ்தரித்துக்கொண்டிருக் கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

MR. CHAIRMAN : Short notice Questions 4 and 5 are postponed.

### *Unstarred Questions.*

### *Civil List*

5 Q.—THIRU V. ISVARMURTI : Will the Hon. the Chief Minister be pleased to lay the latest Civil List on the table of the House?

A.—

No.

The latest List of Gazetted Officers of Tamil Nadu available relates to the period upto 1st July 1967. As it is not possible to place sufficient number of copies of the List on the table of the House, only 5 copies have been placed in the Legislature Library for reference by the hon. Members.

### *Idols.*

6 Q.—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether it is a fact that idols belonging to the Vaiyachery Siva Temple near Thanjavur were stolen away during October 1970; and

(*b*) if so, the details of the idols lost, their period and value; and

(*c*) the action that the Government propose to take to avert similar thefts from other Temples, hereafter?

A.—

(*a*) Yes. Five idols made of metal were stolen from the Siva Temple at Vaiyachery. Ayyampettai Police Station limits on 15th October 1970 night.

(*b*) 1. Appar.
2. Sundarar.
3. Manickavasagar.
4. Karaikal Ammaiyar.
5. Sivakamasundari.

They are reported to be of Chola period. Their value is estimated at Rs. 10,000. The culprits have been arrested and all the idols have been recovered. Charge sheet was filed against all the accused on 8th December 1970 and the case is under trial before the Sub-Magistrate, Thiruvaiyaru.

(*c*) Investigation of offences involving idols receives special attention of the Police with the formation of Special squads, whenever necessary. Surveillance of idol thieves, receivers and

racketeers, booking of notorious criminal organisations indulging in idol thefts and periodical review of the problem at the District and State levels to ensure success in prevention and detection, are some of the steps taken to prevent idol thefts.

*Booklets on Tourist Interest.*

7 Q.—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether it is a fact that English Booklets on important places of Tourist interest of South India as printed by the Government of India are not available with the Tourist Information Office at Ooty; and

(b) if so, the reasons therefor?

A.—

(a) Yes.

(b) The Government of India supplies a small quantity of folders on other States. During November 1968 when these were exhausted they were addressed for further supply. The Government of India replied that it was decided that the State Governments have to purchase their requirements of Tourist Literature produced by the Government of India from the India Tourist Development Corporation instead of being given free of cost.

The matter is now under correspondence with Government of India. The Tourist Literature about Ooty and Tamil Nadu are being supplied to the Tourist Information Office.

*Idols.*

8 Q.—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) the number of idols that have been stolen year-wise during the year 1965–70;

(b) the value of these stolen idols year-war;

(c) how was their value determined; and

(d) the steps taken by the Government to prevent such thefts in future?

A.—

(a) (i) 1965-83.
(ii) 1966–82.
(iii) 1967–64.
(iv) 1968–161.
(v) 1969–129.
(vi) 1970–197.

(b) (i) 1965—Rs. 25,860.
(ii) 1966—Rs. 86,209.



(iii) 1967—Rs. 32,286.
(iv) 1968—Rs. 2,04,708.
(v) 1969—Rs. 99,664.
(vi) 1970—Rs. 3,02,065.

(c) The value of the idols was determined by the temple authorities on the basis of their age, architectural value and probable market rate.

(d) Investigation of offences involving idols receives special attention of the Police with formation of special squads whenever necessary

*Pavement Dwellers*

9 Q.—THIRU V. ISVARMURTI : Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether the Government are aware of the emergence of pavement hutments around the City of Madras; and

(b) if so, the action taken by the Government in the matter?

A.—(a) Yes.

(b) The Slum Clearance Board constituted by Government is constructing storeyed tenements in which the slum dwellers will be rehabilitated first. After this is done, the pavement dwellers in important streets in the City will be shifted and rehabilitated gradually in the new tenements constructed by this Board. It is proposd to rehabilitate all the pavement dwellers in the City in a period of seven years.

**திருக்குறள்.**

10. கே.—தவத்திரு தெய்வசிகாமணி அருணாசல தேசிகர் (குன்றக்குடி அடிகளார்) : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கேட்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) தமிழகத்திலுள்ள எல்லா ஆரம்பப்பாடசாலைகள், எல்லா உயர்நிலைப் பள்ளிகள், கல்லூரிகள் ஆகிய அனைத்திலும் எல்லாக் கட்டங்களிலும் திருக்குறள் கற்பிக்கப்பெற்று வருகிறதா ?

(இ) கல்வித் திட்டத்தில் திருக்குறள் கற்பிப்பதை மொழிப்பாடத் திட்டத்தோடு சேர்க்காமல் திருக்குறளை ஒரு தனிப்பாடமாக்க இந்த அரசுக்கு உத்தேசம் இருக்கிறதா?

(உ) அப்படி உத்தேசமிருந்தால் திருக்குறள் பாடத் திட்டத்தை முறைப்படுத்தி மூன்றாம் வகுப்பில் தொடங்கி பட்டப்படிப்பு வரை முறையாக படிவங்களுக்கு ஏற்றவாறு முறைப்படுத்தித் திருக்குறள் முழுவதும் கற்றுத் தர வழி வகை செய்யும் ஆலோசனை உண்டா?

[26th July 1971

*A.*—(*a*) Verses from Tirukkural are included in the Poetry selections under Tamil for all classes from Standard V in schools and in degree courses in colleges.

(*b*) No.

(*c*) Does not arise.

**பட்டா வழங்கல்.**

11. கே.—திரு. பி. திருஞானசம்பந்தம் : மாண்புமிகு உணவு-வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) முகவை மாவட்டம் காரைக்குடி தாலுகா, கல்லல் பிர்க்காவில் உள்ள கிராமங்கள் The Madras Estate land (Reduction of Rent) Act,

1947 சட்டத்தின் கீழ் 1958-ஆம் வருடம் நில அளவை செய்தும் இதுவரை பட்டா வழங்கப்படவில்லை என்பது உண்மையா?

(இ) ஆமெனில், அதற்குரிய காரணங்கள் என்ன?

A.—(*a*) No. Pattas have been issued in respect of all the cases in the villages notified under the Tamil Nadu Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1948.

(*b*) The question does not arise.

*Large Scale Industries*

12 *Q.*—THIRU V. ISVARMURTI : Will the Hon. the Minister for Industries be pleased to state the number of large scale industries newly started that went into production during the years 1968–69, 1969–70 and 1970–71 in Tamil Nadu?

*A.*—

| *Year.* | *Number of large scale industries commenced production.* |
|---|---|
| 1968–69 ... ... ... | 4 |
| 1969–70 ... ... ... | 8 |
| 1970–71 ... ... ... | 2 (Excluding Carry on Business licences.) |

*School of Arts and Crafts.*

13 *Q.*—THIRU V. ISVARMURTI : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether the students of the School of Arts and Crafts went on strike recently; and

(*b*) if so, the reasons therefor?

*A.*—(*a*) & (*b*) : The students of the School of Arts and Crafts. Kumbakonam went on strike from 14th December 1970 to 10th January 1971, pressing for the following demands :

(1) Changing the name of the School as College;

(2) Opening the Post Diploma Course in the School;

(3) Grant of scholarships to all students;

(4) Follow-up programme for employment opportunity after their completion of studies at the school.



26th July 1971]

(5) Recognising the Integrated Certificate course in the School as equivalent to that of higher grade Government Technical Examinations;

(6) Hostel facilities to the students; and

(7) Opening of Lalit Kala Academi.

*Small Scale Industries.*

14 *Q.*—THIRU V. ISVARMURTI : Will the Hon. the Minister for Industries be pleased to state the number of small scale industries started in the State during the years 1968–69 and 1969–70?

*A.*—The number of small scale industries registered with the Directorate of Industries and Commerce is as follows :—

Number registered during 1968–69—3,796.

Number registered during 1969–70—4,435.

Total number registered as on 31st March 1971—22,889

*Annual Survey of Industry.*

15 *Q.*—THIRU V. ISVARMURTI : Will the Hon. the Minister for Industries be pleased to state whether the Government have brought out the Annual Survey of Industry for the years 1967-68, 1968-69, 1969-70 and 1970-71?

*A.*—No, Sir.

*Ceramic Factory*

16 *Q.*—THIRU V. ISVARMURTI : Will the Hon. the Minister for Industries be pleased to state whether any survey has been conducted into the market potential for the goods produced by the Ceramic factory in this State before starting the factory by the Government?

*A.*—No detailed market survey was done.

*Import of Cotton yarn.*

17 *Q.*—THIRU V. ISVARMURTI : Will the Hon. the Minister for Industries be pleased to state —

(*a*) whether the Government have written to the Union Government stressing the need to import cotton yarn during the month of January 1971; and

(*b*) if so, the details thereof?

*A.*—(*a*) & (*b*) : During January 1971 consequent on the rise in cotton and yarn prices, the State Government addressed the Government of India stressing the need for import of more short staple cotton and as a temporary measure for giving immediate relief to import some quantity of yarn in the lower counts to build up buffer stock to arrest the prices.

*கோத்தாரி சர்க்கரை ஆலை.*

18 கே.—திரு. டி .கே சுப்பையா : மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

திருச்சி மாவட்டம் காட்டேரிலுள்ள கோத்தாரி சர்க்கரை ஆலைக்கு எந்தெந்த கிராமங்களிலிருந்து எத்தனை ஏக்கர் கரும்பு வழங்க பதிவு செய்யப்பட்டுள்ளது ?

*A.*—A statement @ is placed on the table of the House.

*New Industries.*

19 *Q.*—THIRU M. ARUMUGASWAMI : Will the Hon. the Minister for Industries be pleased to state the incentives given by the Government to start new industries in this State during the year 1969-70?

*A.*—A statement (b) is placed on the table of the House.

*Financial assistance rendered by the State Industrial Co-operative Bank.*

20 *Q.*—THIRU M. ARUMUGASWAMI : Will the Hon. the Minister for Industries be pleased to state the names of the private sector Industrial Undertakings to which the State Industrial Co-operative Bank has extended financial assistance as on 1st April 1971?

*A.*—A statement @ @ is placed on the table of the House.

*Japanese Economic Mission.*

21 *Q.*—THIRU V. ISVARMURTI : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether the Hon. the Minister for Industries met a team of Japanese businessmen during the month of April 1971;

(*b*) if so, the details thereof; and

(*c*) whether the team is to undertake business ventures in this State?

*A.*—(*a*) Yes, Sir.

(*b*) A top level Economic Mission sponsored by Messrs. Mitsubishi Shoji Kaisha Nakagava of Japan visited India in April 1971. Group 'B' of this Mission led by Mr. N. Kayabuki came to Madras and called on the Minister for Industries on 27th April 1971 and broadly discussed possibilities of Indo-Japanese Joint ventures in India and other countries, particularly with a view to increase exports to Japan and third countries;

(*c*) No specific proposals have been made or considered.

---

@ Printed as Appendix I on pages 71–77.
(b) Printed as Appendix II on pages 77–78.
@ @ Printed as Appendix III on pages 78–79.



*Jurisdiction of Civil and Criminal Courts.*

22 *Q.*—THIRU V. ISVARMURTI : Will the Hon. the Minister for Indurtries be pleased to state—

(*a*) whether any Committee has been appointed to determine the jurisdiction of Civil and Criminal Courts in the State; and

(*b*) if so, the details thereof?

*A.*—(*a*) Yes.

(*b*) The Government have sanctioned the constitution of a Committee for undertaking a comprehensive statewide examination of the jurisdiction of Civil and Criminal Courts in the State. The Committee consists of a Senior I.A.S. Officer and a Senior Judicial Officer of the rank of a District and Sessions Judge. The Committee is assisted by a Gazetted Officer of the rank of an Assistant Secretary to Government, Law Department. He works as Secretary to the Committee. Thiru T. Srinivasan, I.A.S., Director of Treasuries and Accounts and Thiru A. Varadarajan, District and Sessions Judge have been appointed as Members of the Committee. The Committee has started functioning from 11th December 1970.

*Co-operative Tea Factories.*

23 *Q.*—THIRU M. ARUMUGASWAMI : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) the number of Co-operative Tea Factories in the State;

(*b*) the number of Co-operative Tea Factories which are running profitably; and

(*c*) the steps taken to improve them?

*A.*—(*a*) There are eight industrial Co-operative Tea Factories in the State.

(*b*) All the eight factories are running profitably.

(*c*) Steps are taken to improve the working of these factories by way of introduction of modern methods of tea cultivation, marketing of tea in packets through supermarkets and other agencies, preparation of manure mixtures, constructing a warehouse for made tea at Coonoor, sanction of additional staff, etc.

*Acquisition of land for Salem Steel Plant.*

24 *Q.*—THIRU M. ARUMUGASWAMI : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether the land acquisition proceedings of the land in which the Salem Steel Plant is to be located, have been started;

(*b*) if so, the details thereof; and

(*c*) if not, the reasons therefor.

A.—(a) Yes, Sir.

(b) An extent of 4,410 acres of land is proposed to be acquired for Salem Steel Plant. Out of this, an extent of 43.38 acres of land has been acquired already. The remaining extent of about 4,370 acres will be acquired in a phased programme.

(c) Does not arise.

*Nylon Factory.*

25 Q.—THIRU V. ISVARMURTI: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether there is any proposal to open a Nylon Factory in Madurai district ; and

(b) if so, the details thereof?

A.—(a) & (b) : The Tamil Nadu Industrial Development Corporation, a fully State owned company, has made an application to the Government of India for the grant of a licence for setting up a plant to manufacture Nylon Textile Filament to a capacity of 2,000 tonnes per annum in Tamil Nadu at a capital cost of Rs. 5.4 crores. The application is under consideration by the Government of India.

*Powerlooms.*

26 Q.—THIRU V. ISVARMURTI : Will the Hon. the Minister for Industries be pleased to state . . .

(a) whether there is any proposal with the Government to increase the number of powerlooms in the State; and

(b) if so, the details thereof?

A.—(a) & (b) : Yes. There is a proposal with the Government to introduce 12,500 powerlooms, which are allocated to this State by the Government of India in a phased programme among the Co-operative and private sectors.

MR. CHAIRMAN : Questions are over.

[*Note.*—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

## II. Announcement *re* Questions.

MR. CHAIRMAN : I have to announce to the House that answers to twenty-two Starred questions which have been received from the Government have been laid on the table of the House today as Unstarred questions Nos. 5 to 26.





## III. Adjournment motion *re* lathi charge by the Police in Annamalai University on 23rd July 1971.

MR. CHAIRMAN : The House may remember that the adjournment motion regarding Annamalai University incidents was postponed to today. Subsequent to this, I have also received notices of adjournment motions on the same subject from Thiruvalargal Saw Ganesan, M.L.C. and K. Rajaram, Leader of the Opposition.

I would like to know how this matter will warrant the adjournment of the House for discussión.

திரு. சா. கணேசன்: தலைவர் அவர்களே, அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலே மிகவும் மனம் புண்படத்தக்க, விரும்பத்தகாத செயல்கள் நடந்திருக்கின்றன. பத்திரிகைச் செய்தியிலிருந்து யார் என்ன செய்தார்கள், தொடங்கியது எப்படி, எதனால் இந்த வேண்டாத விளைவுகள் ஏற்பட்டன என்பதையெல்லாம் இப்போது கணிக்க முடியவில்லை. பொதுவாக சுமார் 70, 75 மாணக்கர்கள் அடிபட்டார்கள்; ஏதோ மாணக்கரோ அல்லது வேறு யாரோ தெரியவில்லை, ஒரு பிணம் அங்கேயுள்ள ஒரு குண்டத்தில் அல்லது குளத்தில் கிடந்தது என்பனபோன்ற செய்திகள் கிடைத்திருக்கின்றன. போலீசார் வட்டத்துக்குள் நுழைந்து மாணக்கர்களைத் தாக்கியது மட்டுமின்றி, மாணவர் விடுதிகளிலும் பயிற்சிப் பகுதிகளிலும் கூட சென்று அடித்ததாகப் பத்திரிகையிலே செய்திகள் இருக்கின்றன. இன்னும் வேறுவகையான செய்திகள் நமக்குக் கிடைக்கின்றன. இந்த மாதிரி ஒரு சூழ்நிலை ஏற்படுவதற்கு முக்கிய காரணமாக இருந்த நக்சலிட்டுகள் அங்கேயும் இந்த விரும்பத்தகாத நிகழ்ச்சிகளுக்குத் தூண்டுகோலாக இருந்திருக்கிறார்கள் என்ற செய்திகள் கிடைக்கின்றன. எவை எப்படியாக இருந்தாலும், மாணக்கர்களே மாணக்கர்களாக ஆக்கவேண்டிய இடத்திலே இத்தகைய வன்முறைகள் ஏற்படுவதற்கு யாரும் இசையமாட்டார்கள். அமைதியும், கல்வியும், ஒழுக்கமும், நாகரிகமும், பண்பாடும் வளர்க்கப்பட வேண்டிய இடத்திலே இத்தகைய நிலைமைகள் ஏன் ஏற்பட்டன? எந்தத் துறையிலிருந்து ஏற்பட்டிருந்தாலும், அதைத் தடுக்கவும், தவறு செய்தவர்களைத் தண்டிக்க வேண்டிய கடமையும், பொறுப்பும் ஆட்சிக்கு, அரசுக்கு உண்டு. ஆதலினாலே இந்த விஷயத்தைப் பற்றி சாங்கோபாங்கமாக விவாதித்துச் செயல்பட வேண்டும். அரசு சொல்லலாம், இப்போது ஒரு உயர் நீதிமன்ற நீதிபதியின் தலைமையில் நீதி விசாரணை நிறுவியிருக்கிறோம் என்று. அது நடக்கட்டும். அதற்கும் இதற்கும் சம்பந்தமில்லை. நாம் விவாதத்தைத் தொடர்ந்தால், அது அரசிற்கும், அரசு செயல்படவேண்டிய சட்டம், ஒழுங்கை நிலைநாட்டுவதற்கும் உறுதுணையாக இருக்கும் என்பதனால், இதைத் தலைவர் அவர்கள் விவாதத்திற்கு அனுமதித்து அதன் மூலமாக தெளிவான நிலை பிறப்படுவதற்கு உதவி செய்ய வேண்டும். ஆகவே தலைவர் அவர்கள் இதை அனுமதிக்க வேண்டும் என்று இதனுடைய முக்கியத்துவத்தைக் கூறி அமைகிறேன். வணக்கம்.

திரு. கே. ராஜாராம்: தலைவர் அவர்களே, கடந்த 23-ஆம் தேதியன்று அண்ணாமலைப் பல்கலைக் கழக வட்டத்திற்குள் நடந்த சம்பவம் பற்றி இந்த மன்றத்தைச் சேர்ந்தவர்கள் யாரும் வருந்தாமல் இருக்க முடியாது. அந்தச் சம்பவம் நடக்காமல், வன்முறையில் இறங்காமல் தடுத்திருக்க முடியும் என்பதுதான் என்போன்றவர்கள் அபிப்பிராயம். ஆனால் சற்று இதைக்

[திரு. கே. ராஜாராம்]

கவனிக்காமல் விட்டதால்தான், பலாத்காரம் அல்லது வன்முறைச் செயல்களில் ஈடுபடும் நிலைமை ஏற்பட்டிருக்கின்றது என்று எண்ணுகிறேன். மாணவர்கள், எழுச்சியுக்க மாணவர்கள், உற்சாக மேலீட்டால் தங்களுடைய வெறுப்பையோ அல்லது மறுப்பையோ வெளிக்காண்பிக்க கருப்புக்கொடி பிடிப்பதைக் கூடாது என்று சொல்வதற்கில்லை. காலையில் அம்மாதிரி கருப்புக்கொடி பிடிக்க வேண்டும் என்று வந்திருந்தவர்களைத் தனியாக ஒதுக்கி நிறுத்திவிட்டு, எல்லாக் காரியங்களும் அமைதியாக நடைபெற விட்டிருக்கலாம். அப்படியல்லாமல் ஆயிரக் கணக்கான போலீஸ் ஜவான்கள் உள்ளே சென்று அவர்களைத் தடிகொண்டு தாக்கியதனால், முதலில் ஒரு குழப்பமும், கலவரமும் ஏற்பட்டிருக்கிறது. தடியடிப் பிரயோகம் திடீரென்று நடந்துவிடவில்லை. பலபேர் அனுமதிச் சீட்டு வைத்துக்கொண்டிருந்தவர்களை கான்வொகேஷன் அரைக்குள்ளே, பட்டமளிப்பு விழா நடக்கக்கூடிய மண்டபத்திற்குள்ளே அனுமதிக்க மறுத்துவிட்டு, அனுமதிச் சீட்டு இல்லாதவர்கள் பல பேரை உள்ளே போக விட்டிருக்கிறார்கள். அனுமதிச் சீட்டு வைத்திருந்தவர்களை உள்ளே விடாததால் கூச்சல் அதிகமாகியிருக்கிறது. போலீசார் அந்த இடத்தில் தலையிட்டு தடியடிப் பிரயோகம் செய்து கலைத்துவிட்டார்கள். அத்துடன் அமைதி நிலவியிருக்கிறது. முதலமைச்சரும் ஆளுநர் அவர்களும் அங்கே அதன் பின்னால்தான் சென்றிருக்கிறார்கள். எல்லா விஷயங்களும் அமைதியாக நடந்திருக்கின்றன. குழப்பம் அடங்கிவிட்டது. அப்படி அமைதியாக நடந்து முடிந்த பிற்பாடு ஒரு காரணமும் இல்லாமல், மத்தியானத்திற்கு மேல், 2 மணி சுமாருக்கு திடீரென்று போலீஸ்காரர்கள் உள்ளே நுழைந்து, மாணவர்களின் விடுதிக்குள் சென்று, வகுப்பறைகளில் சென்று தனித்தனியாக அறையில் இருந்தவர்களை வெளியே இழுத்து வந்து. . . . (அவையில் ஒரு குரல்: கல்லூரியில் அன்று வகுப்புகள் நடை பெறவில்லை).

கல்லூரியில் வகுப்புகள் நடைபெறவில்லை என்றும், மாணவர்கள் வகுப்பறைகளில் கூடியிருந்திருக்கிறார்கள். அவர்களைத் தனித்தனியாக இழுத்து வந்து ஒவ்வொருவரையும் அடித்து ஆபத்து உண்டுபண்ணக்கூடிய நிலையில் அவர்களை லாரியில் போட்டு சிர்காழி போன்ற அடுத்த ஊர்களுக்குக் கொண்டு போய் விட்டிருக்கின்றார்கள். இன்னும் சில பையன்களைக் காணோம் என்றும், கண்டு பிடிக்க முடியவில்லை என்றும் தகவல் வந்திருக்கிறது. அவர்கள் வைத்திருந்த சைக்கிள்களின் டயர்கள் கத்தியால் கிழிக்கப்பட்டு சேதம் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது. பல பையன்களின் சில்ட் வாட்ச்கள் காணோம் என்று பத்திரிகைச் செய்திகள் மூலம் தெரிகிறது. இந்த மாதிரி நிலைமைகள் ஏற்பட்டிருக்க வேண்டிய அவசியமில்லை. அமைதியைக் குலைக்கும் நிலையை மீண்டும்

3-40 p.m. போலீஸ்காரர்கள் சென்று உண்டுபண்ணியிருக்கிறார்கள் என்று தெரிய வருகிறது. போலீஸ்காரர்களே, மாணவர்கள் விடுதியில் கல்லால் அடித்து ஜன்னல்களை உடைத்திருக்கிறார்கள் என்ற தகவலும் வந்திருக்கின்றது. அந்தக் கற்களைத் திருப்பி மாணவர்கள் விடுதிக்குள்ளிருந்து வெளியே எறிந்திருக்கிறார்கள் என்று சொல்லப்படுகிறது. இந்த நிலைமையில் முதலமைச்சர் அவர்கள் உயர் நீதிமன்ற நீதிபதி ஒருவரின் தலைமையில் நீதி விசாரணை ஏற்படுத்தியிருப்பது சற்று ஆறுதல் தரக்கூடிய விஷயம். ஆனால் அந்த விசாரணை நல்ல முறையில் நடப்பதற்கான சூழ்நிலையை அங்கே உண்டு பண்ண வேண்டும். தமிழ்நாட்டில் எந்த சர்வகலாசாலையிலும் கல்லூரியின் உள்ளே புகுந்து மாணவர்களைத் தாக்குவது என்பது இதுதான் முதல் தடவை. இந்த மாதிரி



[திரு. கே. ராஜாராம்]

யான அத்துமீறிய செயல்கள், சர்வகலாசாலை காம்பவுண்டுக்குள் சென்று மாணவர்களைத் தாக்குகின்ற செயல்கள் நடந்தது கிடையாது. 1965-லே இந்தி எதிர்ப்புச் சச்சரவு நடந்த காலத்தில் துப்பாக்கிப் பிரயோகம் கூட நடந்திருக்கிறது. ஆனால் அது சர்வகலாசாலை காம்பவுண்டுக்கு வெளியே நடந்திருக்கிறது. உள்ளே சென்று நடக்கவில்லை. உள்ளே சென்று நடைபெற்றிருப்பது இதுதான் முதல் தடவை என்று நான் கருதுகிறேன். இந்த மகிழ்ச்சியான சம்பவம் நடைபெற்றிருப்பதால், இதைப்பற்றிச் சற்று விவரமாகவும் விரிவாகவும் கருத்துக்களைத் தெரிவிக்க இந்த சபையின் அங்கத்தினர்கள் விரும்புகிறார்கள். நான் காரணத்தைச் சொல்லிக்கொண்டிருக்கும் போதே, பல் பேர் அவர்களின் உற்சாக மேலீட்டால் குறுக்கிட்டு தாங்களும் விஷயங்களைச் சொல்ல ஆசைப்படுகிறார்கள். ஆகையால் முதலமைச்சர் அவர்கள் சம்மதம் தெரிவித்து, என்றைக்கு வேண்டுமானாலும் ஒரு மணி நேரம் விவாதத்திற்கு ஒதுக்கி மற்ற விஷயங்களை ஒத்திவைத்து, இதை எல்லோரும் விவாதிக்க அனுமதிக்க வேண்டும். அப்படிப்பட்ட முக்கியமான விஷயமாக இது இருக்கிறது. இந்த அசம்பாவிதங்களுக்குக் காரணமான அதிகாரிகளை அங்கே இல்லாமல் வேறு இடத்திற்கு மாற்றிவிட்டால்தான் உயர்நீதிமன்ற நீதிபதியின் விசாரணை உண்மையாகவே நல்ல முறையில் நடக்கக்கூடிய நிலைமை ஏற்படும். ஆகவே அங்கத்தினர்கள் தங்களுடைய கருத்துக்களைத் தெரிவிக்க, மற்ற விஷயங்களை ஒத்திவைத்துவிட்டு இந்த விஷயத்தை விவாதிக்க 1 மணி அல்லது 2 மணி நேரம் ஒதுக்கிக் கொடுக்கும்படியும், விவாதத்தை அனுமதிக்கும்படியும் தலைவர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். வணக்கம்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, இந்த மன்றத்தில் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் மாண்புமிகு சுதந்திராக் கட்சியினுடைய தலைவர் அவர்களும் கொண்டுவந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் குறித்து என்னுடைய கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். கடந்த 23-ம் தேதியன்று சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் விரும்பத்தகாத நிகழ்ச்சிகள் நடைபெற்றன என்று எதிர்க்கட்சித் தலைவர்கள் தங்களுடைய உரையை ஆரம்பித்தார்கள். அங்கு நடைபெற்ற பட்டமளிப்பு விழாவும் அதன் தொடர்பாக எனக்கு அளிக்கப்பட்டுள்ள பட்டமளிப்பும் அங்குள்ள மாணவர்களுக்கு விரும்பத்தகாத நிகழ்ச்சிகளாக இருந்த காரணத்தால், உங்களுக்கல்ல, அங்குள்ள மாணவர்களுக்கு விரும்பத்தகாத நிகழ்ச்சிகளாக இருந்த காரணத்தால், திடீரென்று கறுப்புக்கொடி காட்டப்போகிறோம் அல்லது வெறுப்பைத் தெரிவிக்கப் போகிறோம் என்று எந்த முன்னறிவிப்பும் இல்லாமல் இரவு இரண்டு மணி அறிக்கைகளை வெளியிட்டு, கம்பூனிஸ்டு கட்சியின் மாணவர்கள் பெயரால் ஒரு அறிக்கையையும் காங்கிரஸ் மாணவர்களின் பெயரால் ஒரு அறிக்கையும் வெளியிட்டு, காலையில் திடீரென்று தாமும் மற்றவர்களும் பல்கலைக் கழகத்துக்குச் செல்லுகிற வழியில் அவர்கள் கூட்டமாக் கூடி, ஏறத்தாழ 300 மாணவர்கள் அங்கே நின்றார்கள். அவர்கள் வெளியிட்ட துண்டு அறிக்கையில் எனக்குப் பட்டம் தருவதைக் கண்டித்தும் அதை எதிர்ப்பதற்காகத் தான் கறுப்புக் கொடி காட்டப்போகிறோம் என்றும் காலிஃபி ரீட் பிரச்சினையில் நான் மைசூர் மாநிலத்தின் பக்கம் இருப்பதாகவும் குற்றம் சாட்டி அந்தக் காங்கிரஸ் மாணவர்கள் வெளியிட்ட துண்டுத் தாளில் அறிவித்தார்கள், அதற்காக அவர்கள் கறுப்புக் கொடி காட்டுவதாக அறிவித்தார்கள். இந்திய மாணவர் சங்கம் என்ற பெயரால் வெளியிடப்பட்ட இன்னொரு துண்டு

[டாக்டர் மு. கருணாநிதி]

அறிக்கையில் படித்த குற்றத்திற்காக, வேலை கேட்கும் குற்றத்திற்காக, சுடு காட்டிற்கு அனுப்புவதுதான் உங்கள் கொள்கை என்றால் உங்கள் அரசாங்க அமைப்பையே குழிதோண்டிப் புதைப்பதில் தவறு என்ன, அரசாங்க அமைப்பு களே இருக்கக்கூடாது என்று ஆரம்பித்து அமெரிக்கா போன்ற முதலாளித்துவ நாடுகளில் நிச்சயமாக வேலை கிடைக்காது, சோசலிசத்தில் மாத்திரம் வேலை வாய்ப்புக்களைப் பெறமுடியும், நம் நாட்டைப் போன்ற ஏக போக முதலாளித்துவம் உள்ள இடங்களில் வேலையின்மை மேலும் மேலும் வளரும், இது சரித்திரபூர்வமான யதார்த்தம், என்று இன்னொரு அறிக்கை போட்டு, ஆகவே எனக்கு கறுப்புக் கொடி காட்ட வேண்டுமென்று அவர்கள் வேண்டுகோள் விடுத்திருந்தார்கள். நான் அதில் குறிப்பிட்ட வாசகங்களுக் காக வருத்தவில்லை. ஏனென்றால் நான் இந்தப் பட்டத்திற்குத் தகுதி உடையவனு இல்லையா என்பதுபற்றி இன்று நேற்றல்ல, பொதுவாக ஆட்சி பீடத்தில் இருக்கத் தகுதி உள்ளவர்களா இல்லையா என்பதுபற்றித் தமிழ் நாட்டின் மேடைகளில் பல்லாண்டுகாலமாக எல்லா வகையிலும் பேசப்படு வதை எதையும் தாங்கும் இதயம் கொண்டு நாங்கள் சமாளித்து வருகிறோம். அதற்காக ஒன்றும் கவலைப்பட்டுக் கொள்ளவில்லை. கறுப்புக் கொடி காட்டு வது என்பது ஜனநாயகத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்று தான். அப்படிப் பட்ட கறுப்புக்கொடி நிகழ்ச்சிகள் பலவற்றில் நிராவிட முன்னேற்றக் கழகம் எதிர்க்கட்சியாக இருந்தபோது ஈடுபட்டபோதெல்லாம், யார் தலைமையில் எந்த இடத்தில் எந்த நேரத்தில் கறுப்புக் கொடி காட்டப்போகிறோம் என்று மேலதிகாரிகளுக்கு அறிவித்துவிட்டு, அவர்கள் வரையறுத்துக் கொடுக்கின்ற இடத்திலிருந்து கறுப்புக்கொடி காட்டுவதுதான் நாங்கள் எதிர்க்கட்சியாக இருந்த நேரத்தில் அனுஷ்டிக்கப்பட்ட முறையாக இருந்து வந்திருக்கிறது. அதைப் போலவே சிதம்பரம் கோட்டாட்சித் தலைவர் அவர்களும் கறுப்புக் கொடி காட்டுவதற்கு மாணவர்களுக்குச் சாலையோரம் தனியாக இடம் ஒதுக்கித் தருகிறோம். அங்கிருந்து கறுப்புக் கொடி காட்டலாம் என்று சொன்னபோது, அதை மறுத்து எங்கள் கார்கள் செல்லுகிற வழியில் கறுப்புக் கொடியுடன் நின் றார்கள். அதற்குப் புகைப்படம் இருக்கிறது. அந்த நேரத்தில் போலீசார் அவர்களுக்குக் காவலாக நின்று கொண்டிருந்த காட்சியும் அந்தப்படத்தில் இருக்கிறது. நாங்கள் முதலில் பல்கலைக் கழகத்துக்குச் செல்லுவதற்கு முன்பு மேலவை உறுப்பினர்கள் சிலரும் சட்டமன்ற உறுப்பினர்கள் சிலரும் சிதம்பரம் நகராட்சித் தலைவரும் மற்றவர்களும் தனித்தனியாகக் கார்களில் விழாவில் கலந்து கொள்ளப் போனபோது, அவர்கள் மாணவர் கூட்டத்தாரால் வழி மறிக்கப்பட்டு, அவர்களுடைய கார்கள் கற்களால் தாக்கப்பட்டு, கார்கள் செல்ல முடியாத அளவுக்குத் தடுக்கப்பட்டபோதுதான் காவல் துறையினர் அங்கே குறுக்கிட வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டு, மாணவர்களைப் பிரம்படிகளின் மூலமாக அந்த இடத்திலிருந்து அப்புறப்படுத்தியிருக்கிறார்கள். அதற்குப் பிறகு என்னுடைய கார் பல்கலைக் கழக விழா மண்டபத்திற்குச் சென்றது. செல்லுகிற வழியில் நான் பார்த்த காட்சிகளையெல்லாம் சொன்னால், உள்ள

3-50 p.m. படியே இங்கிருக்கிற அலுவலாற்றுகிற பெண்மணியும் மற்றும் தாய்மார்களும் என்னை மன்னித்துக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். நாங்கள் செல்லுகிற வழியில் மாணவர்கள் என்போர் தங்களுடைய ஆடைகளைக் கழற்றி எனக்கு நேராக நிர்வாண கோலத்தில் நின்று என்னைக் கேவலப் படுத்துகிற முறையில் நடந்து கொண்டார்கள். சில நாய்கள் மீது என்



[டாக்டர் மு. கருணாநிதி]

பெயர் எழுதப்பட்டு அந்த நாய்கள் அந்த மைதானத்தில் ஓட ஓட மாணவர் களால் விரட்டப்பட்டன. அதைப்பற்றிக் கவலைப்படவில்லை, இவைகளைப் பல முறை தாங்கிப் பழக்கப்பட்டவன் என்ற காரணத்தால். ஏதோ என்னுடைய விதிவசம் இந்த நாட்டு மக்கள் இப்படிப்பட்ட ஒரு இடத்தில் உட்கார வைத்தாலும், எனக்குத் தெரிந்தோ தெரியாமலோ, தமிழ் ஆர்வமும் அதன ஆர்வத்தின் காரணமாகக் கிடைத்த சிறமையும், அதன் காரணமாக அண்ணா மலைப் பல்கலைக் கழகத்தில் உள்ளவர்கள் என்னைப் பாராட்ட வேண்டுமென்று அவர்கள் நினைத்ததும், ஒருவேளை எனக்குத் தகுதி இல்லாமல் இருக்கலாம் அந்தப் பட்டத்தை, பாராட்டுகளைப் பெறுவதற்கு. ஆனால் குற்றம் சாட்டப்பட வேண்டியவர்கள் என்னைப் பொருட்டாக மதித்து பட்டம் வழங்க முன் வந்தார் களே அவர்கள் அல்லாமல் நான் அல்ல. இருந்தாலும் இவ்வளவு அசம்பா விதங்களுக்கிடையிலும் பல்கலைக்கழக விழா மண்டபத்தில் பட்டமளிப்பு விழா அமைதியாக நடைபெற்றது. பட்டமளிப்பு விழா அமைதியாக நடைபெற்ற தென்றால், பட்டம் பெற வந்தவர்கள் அனைவரும் அனுமதிக்கப்பட்டு, அனை வரும் அதில் கலந்துகொண்டு பட்டம் மற்ற மாணவர்கள் பெறுகிற நேரத்திலும் எனக்கு அளிக்கப்படுகிற நேரத்திலும் மகிழ்ச்சி ஆரவாரத்தை உள்ளே இருந்த மாணவர்கள் அனைவரும் தெரிவித்தார்கள். நல்லவேளையாக தமிழக அர சு செய்திப் படம் எடுக்கப்பட்டதாலோ, சந்தேகம் இருக்கிற மாண்புமிகு உறுப்பினர்கள் அதைப் பார்க்கலாம். அந்த அளவுக்கு அந்த மாமன்றம் நிறைந்திருந்தது பட்டம் பெற வந்த மாணவர்களால் என்பதை அறியலாம். யாருமே அனுமதிக்கப்படவில்லை. அந்தக் காரணத்தால் இந்தக் குழப்பம் ஏற்பட்டது என்று எதிர்க் கட்சித் தலைவர் சொன்னார்கள். அனுமதிச் சீட்டுகள் பெற்றுக்கொண்டு பல்கலைக் கழகப் பட்டமளிப்பு விழா மண்டபத்துக்கு வருகிற வர்களை அனுமதிக்க வேண்டியவர்கள் போலீசார் அல்ல. போலீசார் அந்த இடத்துக்கு வரவும் இல்லை. அந்த இடத்தில் பல்கலைக்கழக அலுவலர்கள் அங்கிருந்து அனுமதிச் சீட்டுகள் பெற்ற அனைவரையும் உள்ளே அனுப்புகிற அந்தப் பணியில் ஈடுபட்டிருந்தார்கள். யாரும் அனுமதிக்கப்படவில்லை என்று கூறுவது தவறான வாதமாகும். ஏனென்றால் அனுமதிக்கப்பட வேண்டுமென்று கேட்டவர்களே கறுப்புக்கொடி நிகழ்ச்சியில் கலந்து கொண்டவர்களும் அதன் பிறகு கார்களை வழிமறித்தவர்களும் அந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டவர் களும்தான். அவர்கள் உள்ளே வருவதைத்தான் தடுத்திருக்கிறார்கள். நான் காலையில் கூட பேவையில் குறிப்பிட்டேன். சென்ற பட்டமளிப்பு விழாவில் பேருரையாற்றச் சென்றிருந்த டாக்டர் சந்திரசேகர், மத்திய அர சு அமைச்சர், தன் உரையை நிகழ்த்த முடியாத அளவுக்கு, பல முறை கூச்சலும் குழப்பமும் மாணவர்களிடையே கேலிப் புன்னகையும் கிண்டலும் நிறைந்து மிருந்த சங்கடத்திற்கு ஆளானார்கள் என்று கேள்விப்பட்டேன். காரணம் ஜூனியர் ஸ்டேன்ட்ல்—பட்டம் பெறுவதற்கு அப்போது தயாராக இல்லாத மாணவர்கள்—எல்லாம் உள்ளே அனுமதிக்கப்பட்ட காரணத்தால், அவ்வளவு பெரிய குழப்பம் ஏற்பட்டது. 23-ம் தேதி அதைவிடச் சற்றுச் சூடான நிலைமை இருந்தது. அந்த நேரத்திலே அனுமதிக்கப்பட்டிருப்பார்களானால், அதிகக் குழப்பம் ஏற்படும் என்ற காரணத்தினால் ஒருவேளை அனுமதிக்கப் படாமல் இருந்திருக்கலாம். பொதுவாக அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் எதாவது ஒன்று இருந்து அதற்காக என் மீது குற்றம் சுமத்தி, எனக்குக் கறுப் புக்கொடி காட்டியிருப்பார்கள், அண்ணாமலையில் எதாவது சம்பவங்கள் நடை

[டாக்டர் மு. கருணாநிதி]

பெற்று அதற்காக வேண்டி அவர்கள் எனக்குக் கறுப்புக்கொடி காட்டியிருப்பார்கள் என்று கருதினேன். ஆனால் அவர்கள் ஏதோ காரணத்திற்காக இப்படிச் செய்தார்கள். கடந்த 4, 5 மாதங்களுக்கு முன்பு அங்கே வகுப்புக் கலவரம் மாணவர்களிடையே ஏற்பட்டது. எந்த எந்த வகுப்பு என்று பிரித்துப்பேச விரும்பவில்லை. அதற்குப் பின்னால் யார் யார் இருந்தார்கள், யார் இதைத் தூண்டிவிட்டார்கள் என்பதைக் கூற விரும்பவில்லை. காவல்துறை கண் காணித்து வந்தது. அந்த வகுப்புக் கலவரத்திற்குப் பொதுவான காரணம் தாணுப்பிள்ளை என்ற மாணவன் பன்முறை பலமாகத் தாக்கப்பட்டதாக 5 மாணவர்கள் பல்கலைக்கழக நிர்வாகத்தால் பல்கலைக் கழகத்தைவிட்டு வெளியேற்றப்பட்டார்கள். அவர்கள் "சஸ்பெண்ட்" செய்யப்பட்டது தவறு, அப்படிச் செய்ய வேண்டியதில்லை என்று மாணவர்கள் போராடினார்கள். அந்த நேரத்திலே இப்படிப்பட்ட தண்டனை கூடாது என்றும் பல்கலைக்கழகம் அவர்களைத் திரும்பவும் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்றும் கேட்கப்பட்ட நேரத்தில், பல்கலைக் கழக நிர்வாகம் இதற்குச் சம்மதிக்க மறுத்துவிட்டது. அந்த நேரத்திலே நானும், கல்வியமைச்சர் நாவலர் அவர்களும் பெரு முயற்சி எடுத்துக்கொண்டு, அந்த 5 மாணவர்களையும் "சஸ்பென்ஷன்" திரும்ப எடுத்துக்கொண்டு விடுவித்து அவர்களைத் திரும்பவும் கல்லூரியில் சேர்த்துக் கொள்ளச் செய்தோம். கடந்த 6, 7 மாதங்களுக்கு முன்பு அந்த மாணவர்கள் பல்கலைக் கழகத்தில் சேர்க்கப்பட்டு ஒரு அமைதியான நிலைமை ஏற்படுவதற்கு நாங்கள் முயற்சிகளை மேற்கொண்டோம். அதற்கு நன்றியாக அந்த மாணவர்கள் கறுப்புக் கொடி ஆர்ப்பாட்டத்தில் இறங்கியிருக்கலாம். காலையில் அமைதியாக நிகழ்ச்சிகள் நடந்த பிறகு, மாலையில் இப்படிப்பட்ட சம்பவங்கள் நடைபெற்றனவே என்று எதிர்க் கட்சித் தலைவர்கள் கேட்டார்கள். மாலையில் பல்கலைக்கழகத்தில் கவர்னர் பெருமானவர்களுக்கும், எனக்கும், பல்கலைக் கழகத் துணைவேந்தர் அவர்களுக்கும் ஒரு நிகழ்ச்சியிருந்தது. ஆராய்ச்சித் துறை மாணவர்களுக்கென ஒரு கட்டடம் கட்டுவதற்கு, விடுதி கட்டுவதற்கு அடிக்கல் நாட்டு விழா ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. நாங்கள் காலை நிகழ்ச்சிகள் நல்ல முறையிலே நடைபெற்று விட்ட காரணத்தினால் மாலைக்குள் ஏதாவது அசம்பாவிதம் நடைபெற வேண்டுமென்று கருதிய மாணவர்களும், மாணவர்களோடு சேர்ந்துகொண்ட சமூக விரோத சக்திகளும் நாங்கள் செல்கிற பாதையிலே கூடிக்கொண்டு கலகம் விளைவிக்கவும், அமளி ஏற்படுத்தவும் தயாராக இருந்தார்கள். அவர்களைக் கலைந்து போக வேண்டுமென்று காவல் துறையினர் கேட்டுக் கொண்டார்கள். அவர்கள் மறுக்கவே போலீசாருக்கும், மாணவர்களுக்கும் தகராறு ஏற்பட்டு, மாணவர்களால் 40 காவல் துறையினர் தாக்கப்பட்டு, காவல் துறையினர் பிரம்படி செய்ததன் மூலம் 8 மாணவர்கள் காயமுற்று இரண்டு மாணவர்களுக்குக் கையிலும், முழங்காலிலும் கொஞ்சம் அதிக அளவு காயமேற்பட்ட காரணத்தினால், அவர்கள் மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டார்கள். மற்றவர்களெல்லாம் மருத்துப் போட்டு வெளியே அனுப்பப்படுகிற நிலைமைகள் இருந்தன.

பிறகு 24-ம் தேதி பல்கலைக்கழகத்தில் ஒரு குளத்தில் ஒரு பிணம் மிதப்பதாகச் செய்தி வந்தது. மாணவர்கள் கூட்டம் நிரம்பிய ஏற்கனவே நக்சலைட்டுகளாக இருந்துகொண்டிருக்கிற மாணவர்கள் விஷயத்தில் அங்கு எல்லா மாணவர்களையும் கூட்டி அந்தப் பிணத்தைப் போலீசார் தொடக் கூடாது



[டாக்டர் மு. கருணாநிதி]

என்று சொல்லியதோடு, அதே நேரத்தில் துணைவேந்தர் இல்லத்தின் முன்பு அவர்கள் கூடிக்கொண்டு 2, 3 நிபந்தனைகளை விதித்தார்கள். முதலில் அந்தப் பிணத்தைப் பரிசோதிக்கிற நேரத்தில் பல்கலைக் கழக புரோபசர் பக்கத்திலே இருக்க வேண்டும், அத்துடன் பல்கலைக்கழக டாக்டரும் கூட இருக்க வேண்டும், மாணவர்களின் பிரதிநிதியும் கூட இருக்க வேண்டும் என்ற நிபந்தனையை விதித்தார்கள். காவல்துறையினரும் அந்த நிபந்தனையை ஏற்றுக்கொண்டு, அதற்குப் பிறகு பிணத்தைக் குளத்திலிருந்து கரையேற்றிப் பிறகு கட்டாருக்குக் கொண்டு போயிருக்கிறார்கள். அந்த மாணவர்களின் நிபந்தனையின்படி அண்ணாமலைப் பல்கலைக்கழக மருத்துவர், ஒரு புரொபசர், மாணவர்களுடைய பிரதிநிதி ஆகிய மூன்று பேர்களையும் வைத்துக்கொண்டு பிரேத விசாரணை நடைபெற்றிருக்கிறது. இந்தப் பிரேத விசாரணையில் 23-ம் தேதி இரவு 10 மணிக்கு முன்னர் குளத்தில் மிதந்தவர் இறந்திருக்க வேண்டும் என்று ஐயப்படுகிறோம் என்ற கருத்து எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. அதற்குப் பிறகு வயிற்றிலுள்ள சில பொருள்கள் ஆராய்ச்சிக்காக அனுப்பப் பட்டிருக்கின்றன. இதற்கிடையிலே பல்கலைக் கழகத்திலே இருக்கின்ற மாணவர்களும், புரோபசர்கள் அத்தனை பேரும் அந்தப் பிணத்தைப் பார்த்து விட்டு, அந்தப் பிணம் மாணவருடையது அல்ல என்று கூறியிருக்கிறார்கள். இறந்தவர் மாணவர் என்று எவரும் கூறவில்லை, யாருடைய பிணம் என்று அடையாளம் கண்டுபிடிக்க முடியவில்லை. ஆனால் பத்திரிகைகளில் பயங்கரமாகச் செய்திகள் வெளியிடப்பட்டிருக்கின்றன. 200 மாணவர்களுக்குக் காயம், 20 பேர்களுக்குப் படுகாயம், அபாயமான நிலையில் இருக்கிறார்கள் என்றெல்லாம் பரபரப்பான செய்தியை வெளியிட்டு, அதன் காரணமாகத் தமிழகத்தில் மற்ற மாணவர்களிடையே இதைப் போன்ற கிளர்ச்சியை ஏற்படுத்தி, அதன் விளைவை இந்த அரசாங்கம் அனுபவிக்க வேண்டுமென்று கருதினால் உள்ளபடியே அது அமைதி காக்க வேண்டும் என்கிற எண்ணத்தில் செய்யப்படுகின்ற காரியமல்ல. அரசியல் கட்சிகளுக்குள் எவ்வளவோ காழ்ப்புணர்ச்சி இருக்கலாம், எவ்வளவோ கசப்புணர்ச்சியிருக்கலாம், கொள்கை வேறுபாடிருக்கலாம், கருத்து மோதல்கள் இருக்கலாம். ஆனால் அவைகளைத் தீர்த்துக் கொள்வதற்கு இப்படிப்பட்ட முறைகளைக் கையாள்வதும், விரோதிக்கு விரோதி நண்பனுக்கு நண்பன் என்கிற முறையிலே இதிலே ஈடுபட்டிருப்பவர்கள் நக்சலைட்டுகளாக இருந்தாலும் பரவாயில்லை, எப்படியும் இந்த நேரத்திலே திராவிட முன்னேற்றக் கழக அரசாங்கத்திற்குத் தொல்லை கொடுக்கிறார்கள், ஆகவே அவர்களைச் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்று கட்டாருக்கும் சுற்றியிருக்கும் வேறு பல ஊர்களுக்கும் ஆட்களை அனுப்பி யெல்லாம் படை திரட்டுகிற காரியத்தில் பலர் ஈடுபட்டிருக்கிறார்கள். பத்திரிக்கைக்காரர்கள் வேண்டுமென்றே செய்திகளைத் திரித்து வெளியிடுகிறார்கள். நேற்றையதினம் சுதேசமித்திரன் பத்திரிக்கையில் கடலூரில் இன்னொரு மாணவர் இறந்து விட்டார் என்று செய்தி வெளியிட்டார்கள். பிறகு போலீசார் அவர்களிடத்தில் விவரம் கேட்ட பிறகு, இன்றைய காலையில் சுதேசமித்திரன்காரர்கள் தனித்தனிப் பத்திரிக்கையில் திருத்தம் கொடுத்திருக்கிறார்கள். இப்படி அவர்கள் தெரியாமல் இப்படிப்பட்ட செய்திகளைப் போட்டிருப்பார்கள், அல்லது தெரிந்தே வேண்டுமென்றே செய்திகளைப் பரப்பியதற்கும் பத்திரிகைகளில் வெளியிட்டிருப்பார்கள். இன்றைக்கு இதைத் தடுத்த இருக்கிற வழி என்ன அரசாங்கம் இதை மேன்மேலும் எடுத்துச்

செல்வலாம் அல்லது இப்படிப்பட்ட செய்திகளை வெளியிடுகிற பத்திரிக்கை ஆசிரியர்கள், பத்திரிக்கை உரிமையாளர்கள் ஆகியவர்கள் மீது நடவடிக்கை எடுக்கலாம். இவைகள் தான் இன்றைக்கு இருக்கிற வழிகளாகும். ஆகவே தெரிந்தோ, தெரியாமலோ, அறிந்தோ, அறியாமலோ இந்த விதமாகச் செயல் படுகிறார்கள். நக்சலைட்டுகள் இயக்கத்தில் தொடர்பு கொண்ட மாணவர்கள் இன்றைக்கு அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தில் இருக்கிறார்கள். தென்னார்காடு மாவட்டத்தில் நடைபெற்ற வெடிகுண்டுச் சம்பவத்தில் அந்த மாணவர் களுக்குத் தொடர்பு இருக்கிறது என்பது நாடறிந்த உண்மை என்று நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவார்கள். ஆகவே இப்படிப்பட்ட சூழ்நிலையில் யாரும் அழைக்காமலே போலீசார் அங்கே சென்றார்கள் என்று எதிர்க் கட்சித் தலைவர் குறிப்பிட்டார். கான்வொகேஷன் நடைபெறுகிற இடத்தில் அமைதி இருக்க வேண்டும் என்கிற முறையில் பாதுகாப்பாகச் செல்ல வேண்டும் என்று வைஸ்சான்ஸலர் அவர்கள் காவல்துறையினருக்குக் கடிதம் எழுதி எங்களுக்குப் பாதுகாப்பு வேண்டும் என்று கேட்டுக் கொண்டதற்கு இணங்க காவல்துறையினர் முடிவு செய்ததாகும். வைஸ்சான் ஸலர் அவர்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்கத்தான் காவல் துறையினர் பல்கலைக்கழகத்திற்குள் சென்றிருக்கிறார்கள். நான் இன்னும் கேட்கிறேன், அப்படியே வாதத்திற்காக வைத்துக் கொண்டு சொல்கிறேன், யாரும் அழைக்காமலே, வைஸ்சான்ஸலர் கடிதம் எழுதாமலே காவல் துறையினர் அங்கே சென்றது எந்த விதத்தில் தவறாகும்? வாதத்திற்காகச் சொல்கிறேன் க்வர்னர் பெருமான் அவர்களும், ஒரு நாட்டின் முதலமைச்சரவர்களும் ஒரு பல்கலைக்கழகத்திற்குள் சென்று அங்கு விழாவில் பங்குகொள்வதற்கு இருக்கும் நிலையில், காவல் துறையினரின் பாதுகாப்பு இல்லாமல் மாணவர்களால்

4-10 p.m.

தாக்குண்டு திரும்புவது என்பதை இந்த மாமன்றத்தில் உள்ள உறுப்பினர்கள் ஏற்றுக்கொள்வார்கள் என்று நான் கனவிலும் கருதவில்லை. எந்த லட்சியத் திற்காகக் காவல் துறையினர் இருக்கிறார்கள்? காவல் துறையினர் இந்தச் சம்பவங்கள் பற்றி ஆராய்ந்துகொண்டிருக்கிறார்கள். அங்கே என்னென்ன திட்டங்கள் தீட்டப்பட்டன, எவ்வளவு பயங்கரமான திட்டங்கள் தீட்டப் பட்டன என்பதெல்லாம் அவர்களுக்கு நன்கு தெரியும். நீதி விசாரணைக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. என்வே இதோடு இதை நிறுத்திக்கொள் கிறேன். 1965-ல் பச்சையப்பன் கல்லூரியில் புகுந்து போலீசார் மாணவர் களைத் தாக்கிய சம்பவம் எல்லோருக்கும் தெரியும். வெங்கடேஸ்வரா ஹாஸ்டலில் போலீசார் புகுந்து மாணவர்களை இழுத்துப்போட்டு அடித்தனர். அந்தச் சம்பவங்களுக்கெல்லாம் அன்றைய அரசாங்கத்தில் நீதி விசாரணை வைக்கப்படவில்லை. நம்முடைய எதிர்க் கட்சித் தலைவர் அப்போதிருந்த ஆட்சியாளர்களை அதைப்பற்றி ஒரு வார்த்தை நீதி விசாரணை வையுங்கள் என்று கேட்டதாகச் செய்தியில்லை. உள்ளூரக் கேட்டிருக்கலாம். ஆனால் செய்திகள் வரவில்லை. ஆனால் இன்றைக்கு இந்தச் சம்பவத்திற்கு நீதி விசாரணை ஏற்பாடு செய்திருக்கிறோம். மாண்புமிகு சுதந்திராக்கட்சித் தலைவர் நக்சலைட்டுகள் ஊடுபட்டிருக்கிறார்கள், அவர்களை அரசாங்கம் உன்னிப்பாகக் கண்காணித்து வர வேண்டுமென்று எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். நக்ச லைட்டுகளாக இருந்தாலும், யாராக இருந்தாலும், எந்தக் கட்சிக்காரர்களாக இருந்தாலும், அவர்கள் மீது கடுமையான நடவடிக்கையை இந்த அரசு எடுத்துக்கொள்ளத் தயங்காது என்பதை அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்



கிறேன். நீதி விசாரணை இருக்கிற காரணத்தினால் இதைத் தொடர்ந்து பேசிக்கொண்டிருக்க வேண்டியதில்லை, எனவே இந்தச் சம்பவங்களைப் பற்றி விவாதிக்க சபையின் நடவடிக்கைகளை ஒத்திவைக்க வேண்டிய பிரச்னை அல்ல இது என்பதைத் தலைவரவர்கள் மூலம் எடுத்துச் சொல்லி அமருகிறேன்.

*திரு. கே. ராஜாராம்: ஒரு சிறு விளக்கத்தை முதலமைச்சரவர்கள் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நீதி விசாரணை போட்டிருப்பது மன நிறைவைக் கொடுக்கிறது. இந்த நீதி விசாரணை நேர்மையாக நடப்பதற்கு இந்தச் சம்பவங்களில் சம்பந்தப்பட்ட ஒன்றிரண்டு போலீஸ் அதிகாரிகளையும் R. D. O. வையும் வேறிடங்களுக்குத் தற்காலிகமாக மாற்ற வேண்டுமென்று கேட்டிருந்தேன். அதற்கு ஏதும் பதில் சொல்லவில்லை. இதை அரசாங்கம் செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: சட்ட மன்றத்தில் நீதி விசாரணை பற்றி ஒரு முறை கேட்டபோது, பழைய அமைச்சர்கள் சொன்ன பதில், எதற்கெடுத்தாலும் நீதி விசாரணை என்று வைத்தால், பிறகு காவல் துறையினர் தங்கள் கடமையைச் செய்ய மாட்டார்கள் என்று சொன்னார்கள். இப்போது நீதி விசாரணைக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இதற்கு மேலும் நாம் காவல் துறையினரிடம் கடுமையாக நடந்து கொள்ளுவது சரியானதல்ல.

MR. CHAIRMAN: I hold that the matter raised involves nothing more than the ordinary administration of law and order. Further the Government have ordered a judicial enquiry into the matter and hence, there is no need for adjournment of the House to discuss that matter. I withhold my consent to the matter being raised.

## IV. CALLING ATTENTION TO RECEIPT OF THREATENING LETTERS FROM NAXALITES TO LEADING PERSONS OF THANJAVUR DISTRICT.

THIRU G. SWAMINATHAN: Sir, I call the attention of the Hon. the Chief Minister to a matter of urgent public importance, namely, the receipt of threatening letters by many leading persons of Thanjavur district from Naxalites and the consequent distress caused to them.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் செல்வாக்குடைய 4 பேர்களுக்கு 1971-ம் ஆண்டு ஏப்ரல் திங்களில் நக்சலைட்டுகளிடமிருந்து மிரட்டல் கடிதங்கள் வந்தன என்று அறிவிக்கப்படுகின்றது. ஐயத்துக்கு உரிய மார்க்சிய இடதுசாரி கம்யூனிஸ்டு களின் நடவடிக்கைகள் கண்காணிக்கப்பட்டு வருகின்றன. மிரட்டல் கடிதங்களை எழுதியவர்களைக் கண்டுபிடிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மிரட்டல் கடிதங்களைப் பெற்ற அனைவரையும் விழிப்புடன் பாதுகாப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இத்தகைய கண்காணிப்பின் காரணமாக எதிர்பாரா நிகழ்ச்சி எதுவும் இதுவரை ஏற்படவில்லை. இந்நிகழ்ச்சியைக் குறித்து காவல் துறை புலனுய்வு செய்து வருவதால், பொதுநலனைக் கருதி இந்நிலையில் இதற்கு மேல் எத்தகவலையும் அளிப்பது விரும்பத்தக்கதன்று.

**திரு. ஜி. சுவாமிநாதன்:** மிரட்டல் கடிதம் பெறும் குடும்பத்திலருக்கு ஏதாவது பாதுகாப்பு தர ஏற்பாடு செய்ய முடியுமா என்று அறிய விரும்பு கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** காவல் துறையினர் தக்க நடவடிக்கை எடுத்து வருகின்றனர். என்னிடத்தில் பெயர் பட்டியல் கூட இருக்கிறது. பொது நலனைக் கருதி அவைகளை அறிவிக்க விரும்பவில்லை.

## V. DISCUSSION ON THE POLICY NOTES ON MEDICAL AND PUBLIC HEALTH—*cont.*

4-10 p.m.

**மிஸ்டர் சேர்மன்:** மாண்புமிகு உறுப்பினர்களுக்கு ஒன்றை நினைவுபடுத்த விரும்புகிறேன். இன்று 5-30 மணிக்கெல்லாம் சபையை முடிக்க வேண்டும். 10 உறுப்பினர்கள் பேசுவதாக அறிவித்திருக்கிறார்கள். ஒவ்வொரு உறுப் பினரும் இந்தப் பிரச்னைகளில் மிக அக்கறை கொண்டிருக்கிறார்கள் என்பதைப் பார்க்கும்போது மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். நேரம் குறைவாக இருப்பதால் ஒவ்வொரு உறுப்பினரும் 7 நிமிஷத்துக்கு மேல் பேசாமல் மற்றவர்களுக்கு வாய்ப்பு அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

**திரு. ஜி. சுவாமிநாதன்:** தலைவர் அவர்களே, மக்கள் நல் வாழ்வு குடும்ப நலத் துறையில் முதலாவதாக ஒரு பிரச்னையை எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். அதுவும் குறிப்பாக நம்முடைய மாநிலத்திலே மருத்துவக் கல்லூரிகளில் கிட்டத்தட்ட 200 மாணவர்கள் அளவில் குறைப்பதாக நம்முடைய அரசு எடுத்திருக்கின்ற முடிவு என்னைப் போன்றவர்களுக்கு பயத்தை ஏற்படுத்துகிறது.

(Deputy Chairman in the Chair).

சென்னை மாநிலத்தில் மருத்துவர்களின் தொகை ஓரளவுக்கு அதிகமாக இருக்கின்ற காரணத்தாலோ அல்லது அவர்களுக்கு அரசாங்கத்தில் உத்தி யோகம் கிடைக்க வழி இல்லாமல் இருப்பதாலோ அல்லது வேலை இல்லாத திண்டாட்டம் அவர்களிடையேயும் இருக்கின்ற காரணத்தாலோ, அவர்களில் கிட்டத்தட்ட 200 பேரை இந்த ஆண்டு 100 பேரும், வருகிற ஆண்டு அல்லது அதற்கு அடுத்த ஆண்டு இன்னும் 100 பேராக, 200 பேரைக் குறைப்பதாக இந்த அரசு முடிவு செய்து இருக்கிறது.

அகில இந்திய ரீதியில் மக்கள் தொகைக்கும், இருக்கின்ற மருத்துவர் களுக்கும் இடைவெளி மிகவும் அதிகமாக இருக்கிறது என்பது எல்லோருக்கும் தெரியும். அதிலும் நம்முடைய ஆளுநர் அவர்கள் மத்திய சுகாதார அமைச் சராக இருந்தபோது அகில இந்தியாவில் 3,000 பேருக்கு ஒரு மருத்துவர் வேண்டும் என்றும் ஆனால் 4,300 பேருக்கு கூட ஒரு மருத்துவர் இல்லை என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். எனவே நாம் இன்னும் அதிகமான மருத்துவர்களை உற்பத்தி செய்யவேண்டியது அவசியம் என்றும் அவர் சென்ற ஆண்டு ஜூன் மாதம் 7-ம் தேதி டில்லியில் கூறியிருக்கிறார்.

"With the increase in the number of Medical College seats, we hope the strength of doctors would go up from 1.02 lakhs to 1.38 lakhs which would mean one doctor for 4,300 population as against the accepted norm of one for 3,000 population".



அது மட்டுமல்லாமல், இந்திய நாட்டில் மொத்தம் 93 மருத்துவக் கல்லூரிகள் இருக்கின்றன. இதை 103 ஆக உயர்த்தவேண்டும் என்றும் அவர் கூறி இருக் கிறார். இப்படி அகில இந்திய ரீதியிலே மருத்துவர்கள் இன்னும் அதிகமாக வேண்டும் என்ற நிலை இருக்கும்போது, இங்கு 200 இடங்களைக் குறைப் பதற்குக் காரணம் என்ன? இந்தக் குறைப்பு அவசியம்தானா என்று அரசு நன்றாக ஆலோசிக்கவேண்டும்.

அதிலும் குறிப்பாக கிராமப்புறங்களில் மருத்துவ வசதிகள் மிகவும் குறை வாக இருக்கின்றன என்பது எல்லோரும் அறிந்த விஷயம். இது சம்பந்தமாக நம் மாநிலத்தில் ஒரு சர்வே எடுத்தார்கள். அதன்படி 100-க்கு 67 டாக்டர்கள் நகர்ப்புறங்களிலும் பாக்கி உள்ளவர்கள் கிராமங்களிலும் இருக்கிறார்கள் என்று தெரியவந்தது. அதிலும் பெண் டாக்டர்கள் 87 சத வீதம் பேர் நகர்ப்புறங் களில் இருக்கிறார்கள் என்று அந்த சர்வே எடுத்துக்காட்டியது. கிராமப் புறங் களில் மருத்துவ வசதிகள் மிகவும் குறைவு. அங்கே மருத்துவர்களை அதிக மாக நியமிக்கவேண்டும். அப்போதுதான் கிராமங்களில் உள்ளவர்களுக்கு மருத்துவ வசதிகள் ஓரளவுக்குக் கிடைக்கக்கூடும்.

"With the increase in the number of medical college seats, we hope the strength of doctors would go up from 1.02 lakhs to 1.38 lakhs which would mean one doctor for 4,300 population as against the accepted norm of one for 3,000 population."

பல பஞ்சாயத்து யூனியன் ஆஸ்பத்திரிகளில் டாக்டர்கள் இல்லை. தஞ்சை மாவட்டத்தில் திருத்துறைப்பூண்டிக்கு அருகில் 3 மருத்துவமனைகள் கடந்த 6 மாதங்களாக இயங்காமல் இருக்கின்றன. டாக்டர்கள் இல்லாத காரணத்தால் அவற்றில் 2 மருத்துவமனைகள் இயங்க முடியவில்லை. வேலை கிடைக்காத மருத்துவர்களுக்கு அந்த இடங்களில் வேலை கொடுக்கலாம்.

இப்போது மருத்துவர்கள் கிராமங்களுக்குச் செல்ல அஞ்சுகிறார்கள். இல்லையெனில் மருத்துவ மாணவர்கள் தாங்கள் மேலான மாணவர்கள் என்று நினைக்கிறார்கள். அவர்கள் நகரங்களில் நல்ல வாழ்க்கையை நடத்த நினைக் கிறார்கள். அவர்களுக்கு கிராமப்புறங்களுக்கு செல்லும் மன உணர்ச்சி இல்லை. கிராமப்புறங்களில் அவர்களுக்கு வாழ வசதிகள் இல்லை. நல்ல வீடுகள் இல்லை. ரோடுகள் இல்லை. மின்சார வசதிகள் இல்லை. இந்த நிலைகளைப் போக்க வேண்டும்.

அகில இந்திய மெடிகல் கவுன்சில் இங்கே வந்து கல்லூரிகளில் இவ்வளவு மாணவர்கள்தான் இருக்கலாம் என்று சொல்லி இருக்கிறார்கள் என்று அரசு தெரிவித்து இருக்கிறது. அதிகப்படியாக மாணவர்கள் இருப்பதால் நல்ல முறையில் கல்வியைக் கற்றுக்கொடுக்க முடியவில்லை, ஆகவே குறைக்கிறோம் என்று சொன்னார்கள்.

தஞ்சை மருத்துவக் கல்லூரியில் இப்போது 200 பேர் படித்துக் கொண்டி ருக்கிறார்கள். 75 பேருக்காக ஆரம்பிக்கப்பட்ட கல்லூரியில் இன்றைய தினம் 125 பேர் அதிகப்படியாகச் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். இந்த நிலையில் தான் எல்லாக் கல்லூரிகளும் இருக்கின்றன என்று இந்திய மெடிகல் கௌன்சில்

*[திரு. ஜி. சுவாமிநாதன்]*

சொல்லுத் தெரிவித்துள்ளது. இதற்கொப்ப இருக்கிற கல்லூரிகளில் இடங்கள் கூறைக்கப்பட்டால், குறைக்கப்பட்ட இடங்களுக்கொப்ப புது மருத்துவக் கல்லூரிகள் நமது மாநிலத்தில் திறப்பதற்கான வழிவகைகளைக் கண்டாக வேண்டும்.

அடுத்தபடியாக நான் குறிப்பிட விரும்புவது நான் சார்ந்துள்ள துறையைப் பற்றியதாகும். அதாவது மருந்துக் கட்டுப்பாடு பற்றி சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். இப்போது மருந்துக்கட்டுப்பாடுத் துறை என்பது மக்கள் நல்வாழ்வுக் குடும்ப நலத் துறை இயக்குநர் கண் காணிப்பில் இருக்கின்றது. தற்போது இயக்குனராக இருப்பவர் 10 ஆண்டு களுக்கு முன்னால் மருந்துக் கட்டுப்பாடு அதிகாரியாகப் பணியாற்றி நல்ல முறையில் மருந்துக்கட்டுப்பாடு நிர்வாகத்தை நடத்திவந்தவர். அவர்கள் காலத்தில் இதற்கு நல்ல அஸ்திவாரத்தை இட்டார்கள். ஆனால் இப்போது இருக்கின்ற நிலையைப் பார்க்கின்றபோது, கிட்டத்தட்ட 59 பேர் மருந்துக் கட்டுப்பாடு அதிகாரிகளாகவும், 5 பேர் சீனியர் டிரக் இன்ஸ்பெக்டர்களாகவும், ஒருவர் அசிஸ்டெண்டு டிரக் கண்ட்ரோலராகவும் இருந்து வருகிறார்கள். மற்ற மாநிலங்களில் மருந்துக்கட்டுப்பாடு என்பது தனித்துறையாக இயங்கி வருகிறது. நான் பல தடவைகள் இதை எடுத்துச் சொல்லி வந்திருக்கிறேன். அதுவும் மஹாராஷ்டிரா, குஜராத், கேரளா, மைசூர் போன்ற மாநிலங்களில் மருந்துக்கட்டுப்பாடு தனியான இயக்குநரால் நடத்தப்பட்டு வருகிறது. இதற்கு முக்கிய காரணம் நல்லமுறையில் மருந்துக் கட்டுப்பாடு நடக்க வேண்டும் என்பது மட்டுமல்ல. இப்போது அரசு அரசாங்க மருத்துவ மனை களுக்காக மருந்துகளை வாங்கிக்கொண்டிருக்கிறது. தனிப்பட்ட மருந்துக் கடைகளில் கண்காணிப்பு நல்லமுறையில் இருந்தாலும், அரசாங்க மருத்துவ மனைகளில் கண்காணிப்பு மிகவும் மோசமான நிலையிலிருக்கிறது. அதற்கான உதாரணம் ஒன்றைச் சொல்லவிரும்புகிறேன். இ.எஸ்.ஐ. மருத்துவமனை களுக்காக ஒரு ஆண்டுக்கு 1½ கோடி ரூபாய்க்கு மருந்துகள் வாங்குகிறோம். ஆனால் இப்போதிருக்கிற மருந்துக்கட்டுப்பாட்டு அதிகாரிகள் மக்கள் நல்வாழ்வு குடும்ப நலத் துறை இயக்குநர் மேற்பார்வையில் வேலை செய்கின்ற காரணத் தாலும் அந்த இயக்குநரே அரசு மருத்துவ மனைகளுக்கு மேல் அதிகாரியாக இருப்பதாலும் அரசு மருத்துவ மனைகளில் மருந்து சம்பந்தமான திருட்டுகள் ஏற்பட்டால் அதைச் சரிவர கண்காணிக்க முடியாமல் மருந்துக்கட்டுப்பாடு அதிகாரிகள் இருக்கிறார்கள். அதிலும் குறிப்பாக ஒன்றைச் சொல்ல விரும்பு கிறேன். சாதாரணமாக பெரிய மருத்துவ மனைகளில் ஸீரா, வாக்சின் போன்ற வற்றை வைக்க ரெஃபிரிஜிரேட்டர் வேண்டும் என்பது சாதாரண விஷயம். ரெஃபிரிஜிரேட்டர் இருந்தால்தான் மருந்துக் கடைக்கு லீசென்ஸ் கொடுக்கப் படுகிறது. ஆனால் இ.எஸ்.ஐ. மருத்துவ மனையில் பல ஆயிரக்கணக்கான ரூபாய்க்கு ஸீரா, வாக்சின் வாங்கப்பட்டு குளிர்சாதனமற்ற அறையில் வைத்திருக்கிறார்கள். இருக்கிற ஒரு ரெஃபிரிஜிரேட்டரிலும் ஆர். எம். ஓ. சாப்பிடும் பண்டங்கள் வைக்கப்படுகின்றன. இந்த மாதிரி மருந்துகள் ரெஃபிரிஜிரேட்டரில் வைக்கப்படாமல் இருக்கின்றன என்று தெரிந்தும் அதை மருந்துக்கட்டுப்பாடு அதிகாரிகள் சரியான முறையில் கண்காணித்து நடவடிக்கை எடுக்க முடியவில்லை.



*[திரு. ஜி. சுவாமிநாதன்]*

தண்டையார்பேட்டை மருத்துவ மனையிலிருந்து மருந்துகள் திருட்டுப் போய்க்கொண்டிருக்கின்றன. நான் கேள்விப்படும் நிலையில் அரசு மருத்துவ மனைகளிலிருந்து ஆண்டொன்றுக்கு பல லட்சக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள மருந்துகள் திருடு போகின்றன. மருத்துவ மனைகளில் வாங்கும் மருந்துகள் மேல் "ஹாஸ்பிடல் யூஸ்" என்று முத்திரை போடவேண்டும். ஆனால் பல மருந்துகள் அப்படி முத்திரை போடப்படாமலேயே வெளியே கொண்டுவரப் பட்டு விற்பனை செய்யப்படுகின்றன. தண்டையார்பேட்டை மருத்துவ மனையைச்சேர்ந்த 'டெட்ராசைக்கிளின்' என்ற மருந்து ஒரு மருந்துக் கடையில் விற்கப்பட்டது. இதை எடுத்துச்சொல்லியும் 6 மாதமாக எந்த விதமான நடவடிக்கையும் மருந்துக்கட்டுப்பாடு அதிகாரிகளால் எடுக்கப்பட வில்லை. அதே போல் மனநோய் மருத்துவ மனையில் 'குளோர் பிரிமிசின்' 50 மி.கி. சப்ளை செய்யப்படுவதற்குப் பதிலாக 25 மி.கி. சப்ளை செய்யப் பட்டுள்ளது. அதற்கும் மேல்நடவடிக்கை எடுக்கப்படாமல் இருக்கிறது. சதர்ன் ரயில்வே ஆஸ்பத்திரியில் 'கயலின்' என்ற மருந்துக்கு 'இன்டெண்டு' போட்டு அதற்குப் பதிலாக 'கால்சியம் கார்பொனேட்' என்ற தரம் குறைந்த சமபந்தமற்ற மருந்தை தனியார் விற்றிருக்கிறார்கள் இதற்கும் மருந்துக் கட்டுப்பாடு அதிகாரிகளால் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. இப்படி நடவடிக்கை எடுக்கப்படாததற்குக் காரணம், மருத்துவ மனைகளில் எற்படு கின்ற கோளாறுக்கு மருந்துக்கட்டுப்பாட்டு அதிகாரிகள் நடவடிக்கை எடுத்தால் மேலுள்ள அதிகாரிகளின் கோபத்திற்கு ஆளாக வேண்டிவரும் என்ற அச்சம் இருப்பதே காரணம். மருந்துக் கட்டுப்பாட்டுத் துறையைத் தனியான நிர்வாகமாக வைத்தால்தான் அது சரியான முறையில் இயங்க முடியும் என்று அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்பு கிறேன்.

முடிவாக ஒரு விஷயத்தைச் சொல்ல விரும்புகிறேன். அதுவும் குறிப்பாக தஞ்சையிலிருந்து வருகிறவன் என்ற முறையில் அங்கேயுள்ள அரசாங்க மருத்துவ மனைகள் சரியான முறையில் இயங்கவில்லை என்பதை மிகவும வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன். இரண்டு அரசாங்க மருத்துவ மனைகள் இருக்கின்றன. ஒன்று ராஜா மிராசுதார் அரசாங்க மருத்துவமனை, இன்னொன்று மருத்துவக்கல்லூரி மருத்துவமனை. இந்த இரண்டு மருத்துவ மனைகளுக்கும் எந்தவிதமான தொடர்பும் இல்லாமல் இருக்கிறது. இரண்டு மெடிகல் சூப்பிரண்டெண்டுகள் இருக்கிற அந்த இடத்தில் ஒருவர் மருத்துவக் கல்லூரி பிரின்சிபாலாக இருக்கிறார். இம்மூவரும் தனியாக இருப்பதாக நினைத்துக்கொண்டு பணிபுரிவதால், ஒருவருக்கு ஒருவர் தொடர்பு இல்லாமல் இருக்கிறது. ஆகவே அத்தக் கல்லூரிக்கு ஒரு டீன் போடவேண்டும் என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன். இரண்டாவதாக, ராஜா மிராசுதார் மருத்துவ மனை வெளிப்புற நோயாளிப் பகுதிக்கு சிவில் சர்ஜன்கள் வருவதில்லை என்ற நிலைமை இருக்கிறது. காலை 7½ மணிக்கு வரவேண்டியவர்கள், 9 மணி அளவில் கூட வருவதில்லை என்று குறைபாடு சொல்லக்கூடிய நிலைமை இருப்பதை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். மற்றும் அந்த மருத்துவ மனையில் பல மருந்துகள் இல்லை என்பதையும் தனிக் கடிதத்தின் மூலம் தெரிவித்துக்கொண்டிருக்கிறேன்.

**[திரு. ஜி. சுவாமிநாதன்]**

இந்த மருத்துவ மனைகளைப் பொறுத்தவரையில் மற்றொரு விஷயத்தையும் சொல்ல விரும்புகிறேன். ராஜா மிராசுதார் மருத்துவ மனையில் 1,200 படுக்கைகள் இருந்தும் எக்ஸ்டிரா வேண்டுமானலும் போடுகிறார்கள். தரையிலும் படுக்க வைக்கிறார்கள். ஆனால் மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையில் உபரி படுக்கைகள் போடாமல், சீஃப் மெடிகல் ஆபீசர்கள் தனிப்பட்ட முறையில் நடத்தும் நர்சிங் ஹோம் என்று கருதிக்கொண்டு இஷ்டப்பட்டவர்களுக்குத்தான் இடம் கொடுக்கிறார்கள். நோயாளி போய் இடம் கேட்டால், உங்களுக்கு மருத்துவக்கல்லூரி மருத்துவ மனையில் இடம் வேண்டுமா, அதற்கு ஏதாவது பணம் கொடுத்தால் சேர்ப்பார்கள். பணம் கொடுக்காவிட்டால் நரகலோகம் மாதிரி உள்ள ராஜா மிராசுதார் ஆஸ்பத்திரியில் சேர்ப்பார்கள் என்று சொல்லுகின்ற நிலைமை இருக்கிறது. இந்த மாதிரி தஞ்சை மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையை தனிப்பட்டவர் நடத்துகிற நர்சிங்ஹோம் போல் ஆக்கிவிட்டார்கள். இவற்றைச் சீர்திருத்த அமைச்சர் அவர்கள் நல்ல முறையில் கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

மருத்துவக்கல்லூரி மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டுள்ள நோயாளிகளைப் பார்க்க வருகின்றவர்களுக்கு 'வெயிட்டிங் ஷெட்' கிடையாது. கடந்த இரண்டு ஆண்டு காலமாக 'வெயிட்டிங் ஷெட்' கட்டவேண்டும் என்று எடுத்துச்சொல்லி வருகிறேன். ரோட்டரி இளப் சார்பில் கட்டிக்கொடுக்க முடியுமா என்று கேட்டிருந்தார்கள். அவர்கள் முடியாது என்று சொன்னவுடன், இந்த ஆண்டில் வெளியிலிருந்து வருகிறவர்களுக்கு ஒரு ஓய்வு அறை கட்டித்தருவதாக இந்த அரசு வாக்களித்திருக்கிறது. அதை உடனடியாகச் செய்து தருவார்கள் என்று எதிர்பார்க்கிறேன் என்று சொல்லி, நல்லமுறையில் இந்தத் துறையை நமது புதிய அமைச்சர் அவர்கள் நிர்வகித்து வருகிறார்கள், இன்னும் நல்ல முறையில் கண்காணிக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டு என்னுடைய பேச்சை முடித்துக்கொள்ளுகிறேன். வணக்கம்.

* **திரு. எஸ். ஏ. ராஜமாணிக்கம்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மக்கள் நல்வாழ்வு குடும்ப நலத்துறை பொது சுகாதாரம் குறித்த வினக்கக் குறிப்பின் பேரில் என்னுடைய கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன். இந்த அறிக்கையிலே தமிழகத்தில் எல்லா கிராமங்களும் வைத்திய வசதி பெறக்கூடிய அளவுக்கு 374 வளர்ச்சி வட்டாரங்களிலும் 375 ஆரம்ப சுகாதார நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டிருப்பதாகக் குறிப்பிட்டிருப்பதைப் பாராட்டுகிறேன். இந்த ஆரம்ப சுகாதார நிலையங்களில் வேலை செய்கின்ற டாக்டர்களுக்குப் போதிய வசதி இல்லாமல் குடியிருப்பதற்கான இட வசதி இல்லாத காரணத்தால், பெரும்பாலான டாக்டர்கள் கிராமங்களுக்குப் போய் வேலை செய்ய அஞ்சிக் கொண்டிருக்கிறார்கள். ஆரம்ப சுகாதார நிலையங்கள்
4-20 p.m. உள்ள பல கிராமங்களில் டாக்டர்களுக்குச் சாப்பிடுவதற்குக் கூட போதிய அளவு ஓட்டல் வசதிகளோ, மற்ற சாதாரண வசதிகளோ கிடைப்பதில்லை. இந்த நிலையில் 47 வீடுகளைத்தான் இது வரையில் ஆரம்ப சுகாதார நிலையங்களில் பணியாற்றுகிறவர்களுக்காக அரசாங்கம் கட்டியிருக்கிறது என்று இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இந்த வசதிக் குறைவின் காரணமாகத்தான் ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு டாக்டர்கள் போவதில்லை. எனவே தேவையான வசதிகளுடன் நல்ல குடியிருப்புகளை ஆரம்ப சுகாதார நிலையப் பகுதியிலும் கட்டிக் கொடுத்தால்தான், டாக்டர்கள் அங்கே போய்



**[திரு. எஸ். ஏ. ராஜமாணிக்கம்]**

மகிழ்ச்சியோடு வேலை செய்வதற்கு வசதியாக இருக்கும். மாற்றங்கள் வேண்டி வருகின்ற டாக்டர்களில் பெரும்பாலோர் கிராமப் பகுதிகளில் தங்களுக்கு இருக்கின்ற கஷ்டங்களைச் சொல்லித்தான் மாற்றங்கள் வேண்டும் என்று வந்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே இவற்றை அரசாங்கம் உடனடியாகக் கவனிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அதே நேரத்தில் ஆரம்ப சுகாதார நிலையங்களில் டாக்டர்கள், மற்றப் பணியாளர்கள் பணிபுரிவதைக் கண்காணிக்க எந்தவிதமான ஏற்பாடும் இதுவரையில் இல்லை. மாவட்ட மருத்துவ அதிகாரி சென்று அல்லது போது பார்வையிட்டாலொழிய, அங்கேயுள்ள டாக்டர்களோ, மற்றப்பணியாளர்களோ சிறப்பாக வேலை செய்கிறார்களா என்று கவனிக்க முடிவதில்லை. இதைக் கண்காணிக்க ஒவ்வொரு வட்டார வளர்ச்சி ஆரம்ப சுகாதார நிலையத்திற்கும் அந்தந்தப் பகுதியில் உள்ள சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள், ஊராட்சி மன்றத் தலைவர்களைக் கொண்ட ஆலோசனைக் குழு ஏற்படுத்தவேண்டுமென்ற என்னுடைய கருத்தைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, பொது சுகாதாரத் துறையைப் பொறுத்த வரையில், அதில் இணைக்கப்பட்டுள்ள நகரமைப்புத் திட்டங்களைப்பற்றி ஒரு சில வார்த்தைகளைக் குறிப்பிட விரும்புகிறேன். நமது அமைச்சர் அவர்கள் இந்த விளக்கக் குறிப்பில், தமிழ் நாட்டில் சுமார் 680 நகரமைப்புத் திட்டங்கள் கைவசத்தில் இருப்பதாகவும், இது அல்லாமல் 32 திட்டங்களைப் புதிதாகத் தயாரிக்க ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாகவும், அதில் 8 திட்டங்களுக்கு மட்டும்தான் இந்த ஆண்டில் அனுமதி கொடுக்கப்படவிருக்கிறது என்றும் குறிப்பிட்டிருக்கிறார்கள். சுமார் 700 திட்டங்கள் கைவசம் இருக்கின்றபோது, 8 திட்டங்களுக்கு மட்டும் அனுமதி கொடுத்தால், 700 திட்டங்களையும் இன்னும் 50, 60 ஆண்டு காலத்தில் நிறைவேற்றப் போகிறோமா என்று நமக்கு ஐயமாக இருக்கின்றது.

எனவே இந்த நகர அமைப்புத் திட்டங்களை அந்தந்த நகரத்தின் ஜனத்தொகை வளர்ச்சிக்கேற்ப கடந்த 20 ஆண்டுகளில் எந்த அளவில் ஒவ்வொரு நகரத்திலும் ஜனத்தொகை வளர்ந்திருக்கிறது என்பதைக் கண்டறிந்து, அதற்கேற்ற நிலையில் பெரிய நகரங்களுக்கு இரண்டு மூன்று திட்டங்கள் என்ற அளவிலும், சிறிய நகரங்கள் ஒவ்வொன்றுக்கும் ஒரு திட்டம் என்கிற அளவிலும், நிறைவேற்றுவதற்கு அரசாங்கம் அனுமதி வழங்கினால் தான், மற்ற எல்லா நகரங்களிலும் குடியிருப்பதற்கான கஷ்டமான நிலை தீரும் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன். நகர அமைப்புத் திட்டங்களை நிறைவேற்றாமல் வீட்டு வசதி வாரியம், குடிசை சீரமைப்பு வாரியத்தில் வேலைகளை அதிகமாக்கிக்கொண்டே போவதில் எந்தவிதமான அர்த்தமும் இல்லை என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். நகர அமைப்புத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டால், தனிப்பட்டவர்கள் ஐயாயிரம் பத்தாயிரம் என்று சிறு அளவில் தொகை வைத்திருப்பவர்கள் சொந்தமாக வீடு கட்டுவதற்கு வசதியாக இருக்கும். இன்றைய தினம் தமிழகத்தின் பல்வேறு முக்கியமான நகரங்களில் வீடுகள் கட்டுவதற்கான தோதான இடங்கள் இல்லாத காரணத்தால் திட்டங்கள் இருக்கிற பகுதியிலும் குடிசைகள் போட்டு இன்றைய தினம்

[திரு. எஸ். ஏ. ராஜமாணிக்கம்]

சுரியங்களைச் செய்கிறார்கள். இப்படி ஒதுக்கப்பட்டிருக்கிற எட்டு திட்டங்களுக்காவது போதிய பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறதா என்றால், ரூ. 5 லட்சம் இந்த ஆண்டு பட்ஜெட்டில் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஐந்து லட்ச ரூபாய் ஒரு திட்டத்திற்கான ரோடு போடுவதற்குத்தான் பயன்படுமே தவிர, வேறு எதற்கும் பயன்படாது. மற்ற ஏழு திட்டங்களுக்கு அரசாங்கத்திடம் நகரசபைகள் வரவேண்டிய அவசியம் ஏற்படும். ஆகவே வருஷம் ஒன்றுக்கு ரூ. 50 லட்சமோ அல்லது ஒரு கோடியோ நகர அமைப்புத் திட்டங்களுக்கு ஒதுக்கி நகர அமைப்புத் திட்டங்களைத் துரிதமாக நிறைவேற்றினால், வீட்டு வசதி வாரியத்தின் மூலம் வீடுகள் அரசாங்கம் முன் நின்று கட்டிக் கொடுக்கிற பொறுப்பை ஓரளவு குறைத்துக்கொள்ள வசதியாக இருக்கும் என்று கருதுகிறேன். இதை அரசாங்கம் கவனிக்க வேண்டுமென்று நான் பணிவன்புடன் கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்து, குடிநீர்ப்பிரச்னையைப் பொறுத்த வரையில், சென்னை நகரப் பிரச்னை அறிக்கையில் இருக்கிறது. மற்ற நகரங்களில் என்ன ஏற்பாடு என்று இந்த அறிக்கையில் ஒன்றும் காணப்படவில்லை. எப்படி விடுபட்டுப் போய் விட்டது என்று புரியவில்லை. தமிழகத்தின் தலைநகரம்தான் இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. கோவை போன்ற மிகப் பெரிய நகரங்கள் குடிநீர்க் கஷ்டத்தால் கடந்த 20 ஆண்டுக் காலமாக சிரமப்பட்டுக்கொண்டிருக்கின்றன. பாதாள சாக்கடை போன்ற திட்டங்களுக்கு சென்னை நகரத்தை மையமாக வைத்துத்தான் அறிக்கை வந்திருக்கிறது. மற்ற நகரங்களைப்பற்றி என்ன ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறதென்று தெரியவில்லை. தயவு செய்து இனியாவது கொடுக்கிற அறிக்கையில் இன்ன நகரங்களில் இன்ன ஏற்பாடுகள் செய்திருக்கிறோம் என்பதை அறிக்கையில் கொடுப்பது மிகவும் நலமாக இருக்குமென்று கருதுகிறேன். அடுத்து, கோவையைப் பொறுத்த வரையில், இந்த குடிநீர்ப் பிரச்சினை சம்பந்தமாக சென்னை நகரத்தில் அதை எவ்வளவு முக்கியமாக நீங்கள் கருதுகிறீர்களோ அதைப் போன்ற நிலைமை தான் கோவையிலும் இருக்கிறது. ஒரு லட்சம் பேருக்குப் போடப்பட்ட அந்தச் சிறுவாணி குடிநீர் திட்டம் இன்றையதினம் நான்கு லட்சம் பேருக்கு குடிநீர் வழங்க வேண்டிய அவசியத்தில் இருக்கிறது. கேரள அரசாங்கத்தோடு பேச்சு வார்த்தை நடத்தி ஒப்பந்தம் முடிந்து விட்டது என்றாலும்கூட, அவர்கள் இன்னும் அந்தத் திட்டத்தை நடத்துவதற்கு அனுமதி கொடுத்ததாகத் தெரியவில்லை. இப்படிப்பட்ட ஒரு திட்டத்தைக் கைவிட்டு வேறு பகுதியிலிருந்து தண்ணீர் கொண்டுவர அரசாங்கம் ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். நெல்லித் துறைத் திட்டம் கொண்டுவருவதாகப் பேசப்பட்டு வருகிறது. அந்தத் திட்டத்தையாவது உடனடியாக நிறைவேற்ற வேண்டும். தொழிலாளர்கள் மிகுந்த பகுதி கோவை, சிங்காநல்லூர். சிங்காநல்லூர் பகுதியில் மட்டும் இன்றைக்கு ரூ. 20 முதல் ரூ. 25 வரை விலை கொடுத்து ஒரு குடும்பம் குடிநீர் வாங்க வேண்டிய அவசியத்தில் இருக்கிறது. இதைக் கவனித்து கோவை, சிங்காநல்லூர் இரண்டு நகரங்களுக்கும் நெல்லித்துறைத் திட்டத்தையாவது உடனடியாக நிறைவேற்றுவதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இன்று சிங்காநல்லூர் புதிதாக துவங்கப்பட்ட நகரமாக இருந்தாலும், ஒரு மருத்துவ மனையை ஏற்படுத்துவதற்கு அரசாங்கம் முன்வா



26th July 1971]

[திரு. எஸ். ஏ. ராஜமாணிக்கம்]

வேண்டும். இப்போது கோவைக்கும் சிங்காநல்லூருக்கும் சேர்த்து பத்து லட்சம் மக்களுடைய பகுதியில் ஒரே ஒரு மருத்துவ மனைதான் கோவையில் இருக்கிறது. தொழிலாளர்களுக்கு மட்டும் வைத்திய வசதி செய்ய இ.எஸ்.ஐ. மருத்துவ மனை சிங்காநல்லூரில் இருக்கிறது. மற்ற சாதாரண மக்கள், வைத்திய வசதி வேண்டுமென்றால், கோவைக்குப் போகவேண்டிய அவசியம் இருக்கிறது. 1½ லட்சம் மக்களைக் கொண்ட ஒரு நகரத்துக்கு மேலும் ஒரு மருத்துவ மனையை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் உரையை முடிக்கிறேன்.

* THIRU A. R. DAMODARAN : Sir, we are dealing with the department that is spending over Rs. 34 crores this year on medical, health and various other allied activities. I fully agree with, and endorse, what my hon. Friend Thiru Swaminathan said about the improvement of conditions in hospitals. We realise that there is a great deal to be done; but, at the same time, as responsible Members of this Legislature, we also realise that we cannot set up an Utopia within a period of two or three years, especially in view of the fact that a number of buildings have to be constructed, additional beds have to be installed in hospitals, the strength of nurses has to be increased, auxiliary staff will have to be increased and furniture, equipment and all these things will have to be purchased.

(Mr. Chairman in the Chair.)

It is because of this that I particularly welcome one small item which has been mentioned, for which sufficient data have not been given to us to judge its efficacy and that is in regard to the Mobile Units which have been newly started in the department. I believe, Sir, in the present condition of straitened resources which the Hon. Minister has himself pointed out, it is not possible for us to ask for well-equipped beautiful hospitals all over our State, although all of us are anxious for it and I certainly welcome the idea of starting these Mobile Units, so that they may be centred in important towns or Taluk Headquarters and these fully equipped mobile vans, with fully qualified personnel, may have a daily programme, or a weekly programme, of visiting 10 or 15 villages and rendering the much needed medical service to the rural population. My hon. Friend who just spoke before me referred to the fact that Primary Health Centres were not attractive for doctors and that qualified medical personnel were not attracted to these centres. In fact, this has been one of the greatest problems which we have had to face, because many of the doctors who are posted to these areas frequently ask for transfers and it is because of this that the complaint has always been made that doctors are not willing to serve in rural areas. I want to place before the House one special difficulty which the doctors feel in going to the rural centres. Soon after they have completed their Bachelor's Degree in Medicine and after completing the compulsory House Surgeoncy, a doctor does not

[26th July 1971

[Thiru A. R. Damodaran]

like to leave the premier institutions which are located in the urban areas, in the most formative period of his medical career and if in the initial period of five or six years after he obtains his Degree, he is posted to a Family Planning Centre or a Rural Health Centre, he losses all touch with modern developments in medicine and after five years, nobody is going to invite him from these centres again to the urban areas to undergo post-graduate training and to acquire all those degrees that are necessary if he is to make a success of his medical career. That is one of the greatest barriers and to overcome this difficulty, I believe, these mobile units would be of great help, because the graduates fresh from college would not only have the clinical experience that is available in various Headquarters hospitals and various urban centres but they would also have an opportunity of studying the health condition in villages and doing real service and returning always to the urban centres to which they are posted. I would, therefore, request the Hon. the Minister for Health to find out and to judge for himself how successful this experiment is, because a Skippo van in Kodaikanal has been doing very good service, though it is by non-official agency and I am sure if we have the will and determination and if we equip the mobile vans well, doctors would be well prepared to take to rural areas and to provide necessary medical relief in these areas.

Having spoken of this, Sir, I would like to refer to one very important matter which has been mentioned in the demands for Medical Grants. In dealing with Post-graduate Medical Education, Sir, the Goernment have mentioned in this document that the establishment of the Institute of Basic Medical Sciences which was envisaged in Adyar is now sought to be stayed or practically given up, because the aid that was expected from the Government of India has not been forthcoming. Sir, I am well aware of the Institute of Basic Medical Sciences and the various programmes and planning that went into this Institute and I would like to mention to the Hon. Minister that approximately 200 acres of land have already been allotted to the Institute of Basic Medical Sciences at Adyar and already 50 lakhs of rupees has been spent by the University of Madras in developing the Institute of Basic Medical Sciences, that there is no other Institute of Basic Medical Sciences in South India, and that the only two All-India Institutes of Medical Post-Graduate Research exist in Chandigarh and Delhi. I am sure the Hon. Minister would have visited the Institute at Delhi and found the phenomenal progress made in that area; and for his information, Sir, since he has said that the Government of India have refused to give aid for the Madras Institute, I would like to inform him that very recently four crores of rupees has been sanctioned by the Government of India for the development of an All-India Institute of Medical Research and Post-graduate Sciences in Rohtak, Haryana. Sir, I am not; at the present moment, going, to deal with the reasons why the



26th July 1971]

[Thiru A. R. Damodaran]

Government of India have refused such aid to an Institute in Madras. But, I believe, irrespective of whether we are able to get this aid from the Government of India or not, we are in a position to develop the All-India Institute of Basic Medical Sciences at Adyar and I would particularly caution the Hon. Minister against the advice that has been given to him to develop certain Post-graduate Centres in the General Hospital, Madras. The General Hospital is a very ancient and respected institution. It is over 130 years old. It has developed by a process of accretion because there was no other institution of such importance anywhere in South India and I am indeed sorry that time and again we are spending Rs. 50 or 60 lakhs in developing new post-graduate sciences in the General Hospital. The General Hospital has become so over-crowded to-day by the construction for example, of a Cardiology Block or a special unit for therapy on heart patients and is, in my opinion, singularly unhelpful so far as the patients are concerned, because this Hospital is located in one of the busiest centres in Madras and it should not have all these post-graduate sciences attached to it at the present stage. It has a Medical College. It is a big Medical Hospital. The sanctioned strength is 1,200 or so but the number of patients in the hospital is over 1,800. Instead of spending Rs. 65 lakhs, say, on Cardiology Block building and another Rs. 40 lakhs on Neurology Block that has recently been constructed there, I would suggest to the Government of Tamil Nadu that even though they may not get aid from the Government of India, whatever amount the Hon. the Minister for Health intends to spend in 1971–72 and 1972–73 for the development of Post-graduate Research institutions may very well be spent in the excellent campus that is available in the 200 acre plot at Adyar, so that the sum of Rs. 50 lakhs that has already been spent is not wasted. This is a very important matter. I realise that there may be a few vested interests who are particularly interested in seeing that the General Hospital is developed because they themselves are attached to that institution. But, I think, in this case, Sir, the general interests of the public will be served by developing a premier medical research institute which does not exist in South India and I would like the Hon. the Minister for Public Health, before he lays down office in 1976—lays down office in the symbolic sense of term of office for he may very well successfully contest the General Elections and again come as the Minister for Health—to have a five-crore Institute at Adyar, so that we may tell the Government of India " We do not depend on your aid, we have developed this out of our own resources". It is possible and it can be done, if there is the will and determination on the part of the Hon. Minister.

4-30 p.m.

One more remark, Sir, and I have done. It is in reference to one fact that has been mentioned by the Hon. Minister in regard to family planning. My former leader Thiru Krishnamoorthy, when he was on this side of the House, was always speaking against

[Thiru A. R. Damodaran]

family planning measures and he used to question the Minister whether the population had increased at all in our country. I think my hon. Friend Thiru Saw. Ganesan is also of a like frame of mind. But belonging as I do to the younger generation, I certainly feel that family planning measures require a fresh impetus which is so badly required. It requires a great deal of education. I remember, Sir, one of my own employees, a driver earning about Rs. 160 per month, was married at the same time as I was and while I have landed with three children and stopped with the triangle as per the Hon. Minister's advice, my employee has still not stopped and he is having his sixth child and it was after a great deal of persuasion by my wife . . . .

MR. CHAIRMAN : The hon. Member should have advised.

THIRU A. R. DAMODARAN : I am glad to say that that she has had tubectomy performed. But from the record that has been given to us by the Hon. Minister, Sir, I am sorry to note that the number of vasectomy operations has decreased from 97,000 to 64,000. Of course, whether it has actually decreased in point of fact or whether the amount was aver-drawn last year without the operations being performed is a matter on which I cannot give any opinion at all. But I certainly feel, Sir, that we must take this family planning in a more vigorous way to the villages, to the areas where the working class people live, because, in my opinion, the middle class population has already accepted this as a firm concept and it is mostly in the urban areas that it is being practised in a realistic way. I would, therefore, urge upon the Hon. Minister not to spare any efforts but to employ all the trained workers at his command and to see that this programme is left to sincere and dedicated workers and also to seek the help of social welfare agencies which are in a position to give him real assistance in this regard. I hope, Sir, that this programme will be given a fresh impetus not merely by putting up buildings but as I said, by taking the message of family planning to these crowded areas where it is most particularly required. Thank you, Sir.

4-40 p.m.

*திரு. எம். சங்காலிங்கம் பிள்ளை : தலைவர் அவர்களே, மக்கள் நல்வாழ்வு குடும்ப நலத்துறை சார்பில் நடைபெறுகிற மருத்துவத் துறை கொள்கைக் குறிப்பின்மீது ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன். நமது நாட்டில் மக்களுடைய நல்வாழ்வைப் பேணுகிற பொறுப்பினை நமது மாண்புமிகு அமைச்சர் பேராசிரியர் அன்பழகன் மிகத் திறனுடன் நிர்வகித்து அதை ஆற்றலுடனும் நடத்தி வருகிற பெருமையை நாம் அனுபவித்து வருகிறோம். அது மேலும் சிறக்க சில கருத்துக்களைச் சொல்ல நான் விழைகிறேன். பொதுவான கருத்துக்களைச் சொல்வதற்குரிய நேரம் இல்லாததால், குறிப்பாக நான் சார்ந்துள்ள கன்னியாகுமரி மாவட்டத்தில் ஆகவேண்டிய சிலவற்றைக் கூறி அமைந்துவிடலாம் என்று நினைக்கிறேன். கன்னியாகுமரி மாவட்டத்தின் தலைநகர் நாகர்கோவிலில் இருக்கிற தலைமை மருத்துவமனை மற்ற மாவட்டங்களில் இருக்கிற தலைமை மருத்துவ மனைகளைவிட தரத்திலும் படுக்கை





*[திரு. எம். சங்காலிங்கம் பிள்ளை]*

எண்ணிக்கையிலும் குறைவாக இருக்கிறது என்பதை நான் அமைச்சர் அவர்களுக்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். கன்னியாகுமரி மாவட்டம் தமிழகத்துடன் 1956-ல் தான் இணைந்தது. 15 ஆண்டுகள் ஏறக்குறைய கழிந்தன. 15 ஆண்டுகளுக்கு முன் திருவாங்கூர்-கொச்சி சமஸ்தான அரசினால் புறக்கணிக்கப்பட்ட பகுதி அது. காரணம் தமிழகத்தோடு அது இணைய வேண்டுமென்ற குரலைப் பத்து ஆண்டுகளுக்கு முன்னால் கொடுத்ததால், பிரிந்து செல்லப்போகிற இடத்துக்கு நாம் ஏன் தொகை ஒதுக்க வேண்டுமென்று, கேரள அரசினால் ஒதுக்கப்பட்ட அந்தப் பகுதியில், தனியார் மருத்துவர்களுடைய அதிகச் சிபாரிசின் பேரில், போதிய மருத்துவ அபிவிருத்தியே நடைபெறவில்லை என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். தமிழகத்தோடு இணைந்த பிறகு, அந்தத் தலைமை மருத்துவ மனை சிறப்புப் பெற்று, பல அபிவிருத்திகளைப் பெற்று, இன்று உயர்ந்த நிலையில் இருந்தாலும் கூட, மற்ற மாவட்டத் தலைமை மருத்துவ மனைக்கு ஒப்பாக இல்லை என்பது என்னுடைய கருத்து.

*திரு. சா. கணேசன் : மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் திருப்திக்கு ஒன்று சொல்ல விரும்புகிறேன். நாகர்கோவில் தலைமை மருத்துவ மனையைவிட மிக மட்டமாக இருப்பது ராமநாதபுரம் மருத்துவமனை என்பது அவர்களுக்கு ஆறுதலாக இருக்குமென்று நம்புகிறேன்.

*திரு. எம். சங்காலிங்கம் பிள்ளை : ராமநாதபுர மாவட்டத் தலைமை மருத்துவ மனை ஓளவுக்கு மதுரையில் இருப்பதாக நான் கருதுகிறேன். ஆகவே ராமநாதபுரம் மாவட்ட மக்கள் இரண்டிலும் உரிமை பாராட்டலாம். மதுரையில் தலைமை மருத்துவ மனையுடன் மருத்துவக் கல்லூரி மருத்துவ மனை இருக்கிறது. ஆகவே கன்னியாகுமரி மாவட்ட மருத்துவ மனையை அபிவிருத்தி செய்வதற்கு தனித் திட்டம் வகுக்க வேண்டும் என்பது என்னுடைய வேண்டுகோள். 1966-ல் ஒரு மாஸ்டர் பிளான் தயார் செய்து 25 அல்லது 30 ஏக்கர் நிலம் வசப்படுத்தி மருத்துவமனையை மாற்றுவதற்குத் திட்டமிட்டார்கள். தற்போதுள்ள மருத்துவ மனை அதிக நெருக்கடியான இடத்தில் இரண்டு ஏக்கர் மனைக்குள் அமைந்திருக்கிறது. எனவே அந்த மருத்துவ மனையை மகளிர் மகப்பேறு, சிறுவர் மருத்துவ மனையாக மாற்றிவிட்டு, அதிலிருந்து இரண்டு பர்லாங் அப்பால் உள்ள இடத்தில் வசதியான இடத்தில் 20 ஏக்கரைக் கையகப்படுத்தி, ஒரு சிறந்த மருத்துவமனையை, அதிகப்படுக்கை எண்ணிக்கையுடன் கூடிய, ஒன்றை எற்படுத்துவதற்கு ஒரு திட்டம் இருந்தது. ஏதோ காரணத்தால் அமல் நடத்தப்படவில்லை. அதை அமல் நடத்த வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன். அமைச்சரவர்களிடத்திலே கன்னியாகுமரி தலைமை மருத்துவ மனைக்கு எம்.எஸ். எம்.டி., பட்டம் பெற்ற வரை நியமிக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறேன். அப்போது அவர்கள், "நாங்கள் பலரை நியமித்து உத்தரவு போடுகிறோம். ஒருவரும் வருவதில்லை. ஆகவே விரும்புகிறவராகப் பார்த்து ஒருவரை நீங்களே சொல்லுங்கள். நாங்கள் அவரைப் போடுகிறோம்" என்றார்கள். நல்ல தகுதி படைத்த, அனுபவம் மிக்க மருத்துவர்களை நியமிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[26th July 1971

*[திரு. எம். சங்கலிங்கம் பிள்ளை]*

அருமனையிலும் குலசேகரத்தில் உள்ள மருத்துவ மனைக்கட்டடத்தை விஸ்தரிக்க ஒரு திட்டத்தை வகுத்திருப்பதற்காக நான் இந்த அரசாங்கத்தைப் பாராட்டுகிறேன். ஆரல்வாய்மொழி அரசு மருத்துவ மனை, பூதப்பாண்டியில் உள்ள மருத்துவ மனை, தக்கலையில் உள்ள மருத்துவமனை, கொட்டாரம், கன்னியாகுமரி மருத்துவமனைகள் ஆகியவைகளில் போதிய படுக்கை எண்ணிக்கை இல்லை. படுக்கை வசதியில்லாத இடங்களில் படுக்கை வசதி செய்து தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்து, மருத்துவர்களுக்கு இந்த இடங்களில் அந்தந்த ஊர்களிலேயே வீடுகள் கட்டிக் கொடுத்து அவர்கள் அங்கேயே தங்குவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. கே. ராமகிருஷ்ண ஆச்சாரி: ஆரல்வாய்மொழி ஆஸ்பத்திரி பொது மக்களுடைய நன்கொடையால் அமைக்கப்பட்டது.

திரு. எம். சங்கலிங்கம் பிள்ளை: அந்த மருத்துவ மனையை அபிவிருத்தி செய்வதற்கு ஆகிற செலவை ஏற்றுக்கொள்ள பொது மக்கள் தயாராயிருக்கிறார்கள். திருநெல்வேலியில் உள்ள கல்லூரி மருத்துவ மனை எங்களுக்கு அத்தாற்போல இருக்கிற பெரிய மருத்துவ மனை. அதை அபிவிருத்தி செய்வதற்கு 90 லட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறது இந்த அரசு. அதைப் பாராட்டுகிறேன். அதை விரிவுபடுத்த இன்னும் போதுமான பணம் ஒதுக்கித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

குடும்ப நலத் திட்டத்தில் நாம் வெற்றிபெற்றுக் கொண்டிருந்த போதிலும், நம்முடைய நாட்டில் ஏழைகள், பாட்டாளிகள் பலர் இன்னமும் வாழ வழியின்றி பிச்சையேற்று அலைந்துகொண்டிருக்கிறார்கள். நம்முடைய முதலமைச்சரவர்களுடைய பிறந்த நாளைப் பிச்சைக்காரர் ஒழிப்புத் திட்டம் என்ற பெயரில் அறிவித்து அதற்கான நடவடிக்கை எடுத்து வருகிறார்கள். பிச்சைக்காரர்களை ஒழிப்பது வரையாவது நகரத்திலும், கிராமத்திலும் குடும்பக் கட்டுப்பாடு அறுவை சிகிச்சையை கட்டாயமாக அவர்கள் மத்தியில் அமல்படுத்தினால் தான் பிச்சைக்காரனை குழந்தைகள் பிறக்கும் நிலைமை மாறும்.

இந்திய மருத்துவப் படிப்புக்கென்று தனியாக ஒரு இயக்குநரை நியமித்திருக்கிறோம். இந்திய மருத்துவப் படிப்பில் நுழைவதற்கு பி.யூசி. வகுப்பில் விஞ்ஞானம், அதாவது உடலியல் பிரிவினை எடுத்துப் படித்தவர்களைத் தகுதியுடையவர்களாக ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். எம்.பி.பி.எஸ். வகுப்புகளிலேயே முதல் இரண்டு ஆண்டுகள் கற்றுக் கொடுப்பது அவசியம். பின்னர் இந்திய மருத்துவத்திலும் கற்றுக் கொடுப்பதற்கு சிறப்புத் திட்டம் வகுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நேரமில்லாத காரணத்தினால், இத்தோடு முடித்துக்கொள்கிறேன்.

1-50 p.m. MR. CHAIRMAN : Mr. Vasantha Pai. The hon. member may please be brief.

THIRU G. VASANTHA PAI : Mr. Chairman, Sir, I shall be very brief. I would like to dwell only on four points—first on transfers, second on the efficacy of cleanliness in the hospitals, third on the Post-Graduate Department which is sought to be



26th July 1971] [Thiru G. Vasantha Pai]

made a Directorate by virtue of the statement made in the Hon. Minister's Policy Note on 'Public Health and Medical Services-Post Graduate Education", and last on environmental hygiene and mobile units.

Sir, I feel, that of late, there have been so many frequent transfers of medical officers. I do not know the reason. Probably the Hon. Minister thinks that the method of frequent transfers ensures efficiency. This has also adverse effects, for persons who are in one particular place find it difficult to adjust to new environment. The transfers also create a lot of complications not only in the Office of the Director of Medical Education but also in the Office of the Accountant-General.

Secondly, Sir, we ourselves are to blame. A number of politicians—including Members in this House or in the other House—are responsible for the poor environmental cleanliness prevailing in hospitals. I have heard complaints everwhere that politicians have been interfering when the question of environmental cleanliness is taken up. Whenever the persons in charge of the hospitals take up the question of cleanliness with the subordinate staff or menial staff, immediately a complaint comes why this man has been taken to task. This goes up to a higher level and being naturally afraid, the authorities do not want to encounter any fresh troubles with politicians and things are left where they are with the result that cleanliness becomes a difficult thing for them to enforce. I wish that politicians—ourselves—should have a self-denying ordinance and not interfere in day-to-day administration and discipline that is to be maintained in the hospitals.

The third thing, the most important part of my speech which I wish to make is a matter of urgent importance and which I must communicate to the Hon. Minister. Sir, there is an M.D. Course in the Madras Medical College and that Course had been bringing out physiology M. Ds. on a large scale. I understand that the person who is in charge of this Department is himself not an M.A. or PhD. Physiology and he is qualified only in Experimental Medicine.

THE HON. THIRU K. ANBAZHAGAN : I want to explain to the hon. Member one thing. While giving particulars, let him not utter such words as may be refuted afterwards. I know personally that the Physiology Department is upgraded now, that the person who is holding charge of that Department is fully qualified and that his degree is accepted by the University and by the Medical Council.

THIRU G. VASANTHA PAI: May I know the name of the person, so that I could reply to the Hon. Minister ?

THE HON. THIRU K. ANBAZHAGAN : The name of the person who is holding charge is Dr. Padmanabhan who is foreign returned with a degree far better than the degree available in India,

[Thiru G. Vasantha Pai] [26th July 1971

THIRU G. VASANTHA PAI : With great respect to the Hon. Minister, I have to state that I have got the Certificate of Dr. Padmanabhan issued by the University of Montreal. There the certificate reads that Dr. Padmanabhan is a Philosophy Doctor in Medicine and Experimental Medicine, that is, for experimenting on rats and animals and it is not Physiology.

THE HON. THIRU K. ANBAZHAGAN : Let the hon. Member write to me and let him not utter any such words which he may not be able to prove at a later stage. The Degree that is held by that Doctor is an accepted Degree and the Vice-Chancellor is aware of this Degree. I know personally that this Degree is accepted by the Medical Council of India—All India Medical Council. Therefore, I request the hon. Member not to go into the question of academic qualification of a Member of the Medical Department. Let him write to me first and afterwards if he is not satisfied, he can verify the facts and write to me again, if necessary.

THIRU G. VASANTHA PAI : I am talking with a full sense of responsibility.

THE HON. THIRU K. ANBAZHAGAN : This House cannot tolerate such things to be uttered here. The hon. Member comes with a complaint against a person who is not able to defend himself in this House. If at all he wants to find fault with the Department, he can write to the Minister and not make a complaint without any real basis. Especially, I do not want him to use the floor of this House for such things.

THIRU G. VASANTHA PAI : I am not using the floor of this House for any such things.

MR. CHAIRMAN : The hon. Member should not mention the name of a person who is not in a position to come here and defend himself.

THIRU G. VASANTHA PAI : The Hon. Minister himself gave the name. I have not referred to any name.

MR. CHAIRMAN : The hon. Member should not mention the name of a person who has no chance to come here and defend himself. Since the Hon. Minister asked the hon. Member to write to him, he can write to the Hon. Minister.

THIRU G. VASANTHA PAI : I did not drag the name. The Hon. Minister himelf dragged the name.

THE HON. THIRU K. ANBAZHAGAN : The hon. Member referred to the Head of a Department in the Madras Medical College, and, therefore, I also gave the name of the person. Referring to the name of a person is not harmful but making harmful remarks about persons and all that, of course, is not permissible in this House.



26th July 1971]

THIRU G. VASANTHA PAI : I never said anything harmful about that gentleman. I was only saying that he was having a degree in Experimental Medicine and not in Physiology.

THE HON. THIRU K. ANBAZHAGAN : Whatever it is, the hon. Member does not understand what he utters.

THIRU G. VASANTHA PAI : I take exception to these remarks, because I understand what I utter. I have got something to say.

MR. CHAIRMAN : The hon. Member may please talk on the subject.

THE HON. THIRU K. ANBAZHAGAN : I know the hon. Member has no right to utter such things in this House.

THIRU G. VASANTHA PAI : I am speaking about an important subject, namely, about the Department of Post-Graduate Course in the Madras Medical College. In this connection, I was only saying that properly qualified persons should be put in charge of that Department.

MR. CHAIRMAN : When the concerned Hon. Minister has asked the Member to write to him, he may write to him and he need not run into controversial points.

THIRU G. VASANTHA PAI : I am only submitting that when the question of having a Department in the Madras Medical College for Advanced Research and Physiology comes up, the Post-Graduate Institute, about which my hon. Friend Thiru Damodaran spoke, namely, that there are 200 acres of land and 50 lakhs of rupees have been spent in Adyar, should be the prime concern of the Hon. Minister and not upgrading the Department in the Madras Medical College.

(The Hon. Minister rose)

Let me finish. I was referring to this only for this reason, Sir, I have not only made enquiries about this but in the recent M.D. Examination also there were a lot of complaints about the way in which the examination in Post-Graduate Course in medicines was conducted.

THE HON. THIRU K. ANBAZHAGAN : Sir, on a point of order. Such utterances are not proper on the floor of this House. These are matters concerning the Madras University and also the Medical Council—All-India Medical Council. The hon. Member, when referring to such matters here, naturally takes the House to things which it is not proper for the House to discuss.

THIRU G. VASANTHA PAI : I think it is a matter for the Hon. Chairman to rule whether it is proper or not. I am dealing with a Note on Medical Education. The Note on Medical Education speaks of post-Graduate Medical courses in the Madras

[26th July 1971

[Thiru G. Vasantha Pai]

Medical College and Adyar. When I am dealing with this, I am within my limits to say what I think should be followed by the Government.

THE HON. THIRU K. ANBAZHAGAN : We are within our limits when we speak about Courses and also the number of students that are admitted and about the strength of the teachers to teach or train them. But we are not in a position to criticise the way in which the examinations are conducted and also the Degrees that are awarded.

THIRU G. VASANTHA PAI : I am concerned with the fact, with the question of Physiology M.D.'s. It is not a matter for them alone, but it is a matter for the general public, because the general public submit themselves to experimentation with their diseases. All these Officers—I am anxious—should be properly qualified and such people should be chosen to these posts.

MR. CHAIRMAN : They are all qualified persons.

THIRU G. VASANTHA PAI : Sir, I come to the next question of environmental hygiene and mobile units. The Hon. Minister in a statement in his ' Policy Note on Public Health ' has given some details under item 11 on environmental sanitation. I feel, Sir, that this should not be left only to the Corporation, but the Government also should take some personal interest in the matter and see environmental hygiene is properly attended to and streets as well as other conditions such as drainage, sewage and also taking of garbages are looked after as part and parcel of environmental hygiene. The Mobile Units should hold courses on hygiene to the villagers so that they may not use public streets and public places for answering calls of nature. In this the Hon. Minister must take some personal interest and see environmental hygiene is compulsorily enforced through proper courses including mobile units. I only request the Hon. Minister that while considering this matter he may also consult the Corporation Health Department and I hope the Government will work in unison with them so that the two Departments do not work in opposite directions. That is all, Sir.

5-00 p.m.

திரு. கே. எஸ். அப்துல் வகாப் : தலைவரவர்களே, சுகாதார இலாகா முன்பு இருந்ததைவிட எல்லா வழிகளிலும் விரிவடைந்துகொண்டிருப்பதற்காக இந்த இலாகாவை நான் மனமாரப் பாராட்டுகிறேன். இந்தச் சபையில் பேசிய உறுப்பினர்கள் மொபைல் யூனிட்டைப் பற்றிப் பேசினார்கள். மொபைல் யூனிட்டைப் புதிதாக ஆரம்பித்திருப்பதற்காக இந்த அரசாங்கத்தை நான் வரவேற்கிறேன். ஆனாலும் ஒரு கருத்தை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். தமிழகத்தில் எல்லா கிராமங்களுக்கும் மின்சாரத்தை விஸ்தரிக்க வேண்டுமென்ற கொள்கையை நாம் கடைப்பிடித்து நிறைவேற்ற முயற்சித்துக் கொண்டு வருகிறோம். பள்ளிக்கூடங்கள் இல்லாத ஊர்களில் பள்ளிக் கூடங்களை ஏற்படுத்துவதற்கு கொள்கைகளை வகுத்து அதற்கான முயற்சியில்



26th July 1971]

[திரு. கே. எஸ். அப்துல் வகாப்]

ஈடுபட்டிருக்கிறோம். அதே அடிப்படையில் எல்லா கிராமங்களிலும் பெரிய ஆஸ்பத்திரி இல்லாவிட்டாலும், சிறிய அளவில் மருத்துவ மனைகளை நிறுவ வேண்டும் என்பதை நம்முடைய குறிக்கோளாக வைத்து நாம் திட்டங்கள் தீட்ட வேண்டும் என்பதைப் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். நம்முடைய அருமை அமைச்சர் மாண்புமிகு திரு. சாதிக் பாட்சா அவர்கள் முன்பு சுகாதார அமைச்சராக இருந்த சமயம் ஒரு ஜில்லாவிற்கு ஒரு மருத்துவக் கல்லூரி வேண்டும், அதை நாங்கள் நிர்ணயிக்க இருக்கிறோம் என்ற கொள்கையை பிரகடனப்படுத்தியிருந்தார்கள். அவர்கள் சொல்லிப் பல ஆண்டுகள் ஆகின்றன. சொற்கள் செயல் ரூபத்தில் செயலாகவில்லை. அந்தக் கொள்கையைச் செயலாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதை ஏன் அழுத்திப் படித்தவில்லை என்றால், மத்திய அரசு ஐந்தாண்டுத் திட்டத்திலே இதற்கான நிதி ஒதுக்கவில்லை, முதலிடம் தரவில்லை என்று காரணம் சொல்லக் கூடும். ஆனாலும் நான் ஒன்று சொல்வேன். ஒரு மருத்துவக் கல்லூரி துவக்குவதற்கு ஒரு கோடி, 1½ கோடி ரூபாய் தேவைப்படலாம். திருச்சி, சேலம், தென்னற்காடு, இராமநாதபுரம், தர்மபுரி, நீலகிரி ஆகிய 6 மாவட்டங்களில் மருத்துவக் கல்லூரிகள் இல்லை. இந்த 6 மாவட்டங்களில் மத்திய அரசு தொகை ஒதுக்காவிட்டாலும், மாநில அரசு தொகை ஒதுக்கி மருத்துவக் கல்லூரிகளை ஆரம்பிப்பது நமக்கு முடியாத காரியமல்ல. சிரமமான காரியமல்ல. இந்தக் கொள்கையை இந்தச் சர்க்கார் அமல்படுத்துவதற்கு முயற்சிக்க வேண்டும். மருத்துவக் கல்லூரியைத் திருச்சியிலே துவக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, எம்.பி.பி.எஸ். அட்மிஷனைப் பொறுத்து, 8, 10 ஆண்டுகளாக மக்களிடத்திலே அதிருப்தி நிலவுகிறது என்பதெல்லாம் ஒப்புக்கொள்ள வேண்டிய ஒன்றாகும். இதற்குக் காரணம் செலக்ஷன் கமிட்டியினருக்கு 75 மார்க்குகள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. அவர்கள் கேட்கும் கேள்விகள் சிலருக்குச் சுலபமானவையாகவும், சிலருக்கு எளிதானவையாகவும் இருக்கின்றன. அதனால் கூடுதல் மார்க் வாங்கியவர்களை விட குறைந்த மார்க் வாங்கினவர்கள் அட்மிஷன் பெறக்கூடிய நிலையைப் பார்க்கும்போது, பார்ப்பவர்களெல்லாம் இது அநீதி என்று சொல்லக்கூடிய நிலைமை உருவாகிறது. எனவே இந்த அமைப்பையே மாற்ற வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். செலக்ஷன் கமிட்டி 75 மார்க். . . .

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** மாண்புமிகு உறுப்பினர் விவரங்களைச் சரியாகத் தெரிந்து கொள்ளாமல் பல்வேறு கருத்துக்களை வெளியிடுகிறார்கள். இந்த ஆண்டு உயர்நீதி மன்றம், சுப்ரீம் கோர்ட் ஆகியவைகள் பல கருத்துக்களைத் தெரிவித்த காரணத்தினால், அவற்றின் அடிப்படையில் சில கொள்கைகளை வகுத்திருக்கிறோம். இந்த 75 மார்க்கும் தன்னிச்சையாக வழங்குவதல்ல. இந்த 75 மார்க்குகளில் 5 எண்கள் ஸ்போர்ட்ஸுக்கும், விளையாட்டுப் போட்டிகளில் பங்கு கொண்டதற்கும், 5 எண்கள் ஸ்கௌட் பயிற்சிக்கும், 5 எண்கள் என்.சி.சி. பயிற்சிக்கும், 10 எண்கள் சமூகத் தொண்டுகள், சோஷல் சர்விஸுக்கும், 10 ஜெனரல் அப்பியரன்ஸ், பர்சனலிடி, உயரம், அகலம், தோற்றம் ஆகியவைகளுக்கும், 10 எண்கள் மென்டல் அலர்ட்னஸ், 10 ஜெனரல் நாலட்ஜிற்கும், 15 சப்ஜெக்ட் இண்டலிஜென்ஸுக்கும் என்ற அடிப்படையில் போடுகிறார்கள். இப்படி அந்த எண்கள்

பிரிக்கப்பட்டு பலவற்றிற்கும் சான்றுகள் கேட்கப்பட்டு மார்க்குகள் போடுவது முறைப்படுத்தப்பட்டுள்ளது. இப்படித் தான் இந்த 75 மார்க்குகள் போடப் படுகின்றன.

**திரு. கே. எஸ். அப்துல் வகாப்:** மாண்புமிகு அமைச்சர் பிரித்துச் சொன்ன விவரங்களை அறிந்து தான் நான் சொல்லுகிறேன். உடல் அமைப்புக்கு, சமூக சேவைக்கு என்று குறிப்பிட்டதெல்லாம் பொருத்தமாக இருக்கலாம். கேள்விகளுக்கு அளிக்கப்படும் மார்க்குகள் கூடுதல் என்று சொல்ல விரும்பு கிறேன்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** இந்த இந்த வகையில் தான் கேள்விகள் கேட்க வேண்டும் என்று நிர்வாகக் குழுவில் பல வழி முறைகள் கொடுக்கப் பட்டிருக்கின்றன. கேள்வியைத் தான் நான் சொல்லக் கூடாது.

**திரு. கே. எஸ். அப்துல் வகாப்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்ன பதிலிலிருந்து கேட்கக் கூடிய கேள்விகளுக்கு சுமார் 40 மார்க்குகள் ஒதுக்கப் படுகின்றன என்று தெரிகிறது. இது கூடுதல் என்று சொல்ல விரும்புகிறேன். இதற்கு "ரிட்டன் டெஸ்ட்டு" வைத்து விடுங்கள். மற்றப் பிரிவுகளுக்கு 35 மார்க்குகள் கொடுக்கலாம். அதற்கு ஆட்சேபனை இல்லை.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** "ரிட்டன் டெஸ்ட்டு" புதிதாக அதற்குத் தேவையில்லை. "நாட்கால் சயன்ஸ்" ரிட்டன் டெஸ்டாகத்தான் எழுதப் படுகிறது. ரிட்டன் டெஸ்ட்டு போதாது என்று கருதுகிற காரணத்தால் தான், "ஓரல் டெஸ்டு" வைக்கப்படுகிறது.

**மிஸ்டர் சேர்மன்:** எப்போதும் சபையில் விவாதங்கள் முதலில் சூடு பிடித்து பிறகு தணிந்து விடும். ஆனால் இன்றைக்கு முதலில் தணிந்து வர வர சூடு ஏறிக்கொண்டு வருகிறது.

**திரு. கே. எஸ். அப்துல் வகாப்:** நான் "ரிட்டன் டெஸ்டு" என்று சொன்னது கேள்விகளில் மாணவர்களுக்குப் பாரபட்சம் இல்லாமலிருக்க வேண்டும் என்ற கருத்தில்தான். இதை அரசு கவனிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

தமிழகத்திலே ஜில்லா ஹெட்குவார்ட்டர்ஸ் ஆஸ்பத்திரிகளில் ஓளவுக்கு டி.பி., லெப்ரசி போன்ற வியாதிகளுக்குச் சிகிச்சை செய்வதற்கு வசதிகள் இருக்கின்றன. இந்த வியாதியஸ்தர்கள் இப்போது அதிகமாக வருகிறார்கள். ஆகவே இந்த வசதிகளை இன்னும் இரட்டிக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, கான்சர், சிகிச்சையைப்பற்றிக் கூற விரும்புகிறேன். தமிழ கத்திலே ஒரே ஒரு பெரிய "கான்சர் இன்ஸ்டிடியூட்" சென்னையில்தான் இருக்கிறது. அது மாநிலம் பூராவுக்கும் முறையாகச் செயல்படவில்லை என்பதை நாம் காண்கிறோம். ஆகவே திருச்சியிலோ அல்லது மதுரையிலோ இந்த மாதிரி ஒரு "கான்சர் இன்ஸ்டிடியூட்" அரசு மூலமாகத் துவக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்து, நான் சொல்ல விரும்புவது கிராமங்களுக்கு அதிகமாக டாக்டர்களை அனுப்ப வழி வகை செய்ய இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். இப்போது டாக்டர்கள் கிராமங்களுக்குச் செல்ல விரும்புவதில்லை. இதைப்பற்றித் தெளிவாக பல உறுப்பினர்கள் சொன்னார்கள்.







நகரங்களில் வேலை செய்கிறவர்களுக்கு "சிட்டி அலவன்ஸ்" என்று நாம் கூடுதலாகச் சம்பளம் கொடுக்கிறோம். கிராமங்களில் வேலை செய்கிறவர் களுக்குக் கம்மியாகச் சம்பளம் கிடைக்கிறது, சென்னை நகரத்தை ஒப்பிடும் போது. இந்த நிலையை மாற்றி, கிராமங்களில் வேலை செய்கிறவர்களுக்கு 25% அல்லது 50% கூடுதலாகச் சம்பளம் கிடைக்கும்படி செய்தால், டாக்டர்கள் கிராமங்களுக்கு விரும்பிச் செல்லக்கூடிய வாய்ப்பு ஏற்படும். இந்த அடிப் படையில் அரசு கவனம் செலுத்தவேண்டும் என்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்ளுகிறேன்.

THIRU G. SWAMINATHAN: May I know whether there will be reply to the discussion by the Minister today?

MR. CHAIRMAN: Yes. The Hon. Minister will reply to the discussion today.

5.10 p.m

*திரு. கே. ராஜாராம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, நேரம் மிகவும் குறைவாக இருப்பதால், என்னுடைய பேச்சை கூடுமானவரையில் குறைத்துக் கொண்டு, ஒரு சில விஷயங்களை மட்டும் இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

பொதுவாக நமது மாநிலத்தில் கல்விக்கு அதிகமான பணம், அதாவது சுமார் 83 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதற்கு அடுத்தபடியாக மருத்துவ, சுகாதாரத் துறைகளுக்குப் பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. சுவற்றை வைத்துத்தான் சித்திரம் எழுத வேண்டும். ஆகவே, சுகாதாரம், மருத்துவம் ஆகிய இனங்கள் கல்வியைக் காட்டிலும் அதிக முக்கியத்துவம் வாய்ந்த துறைகள்.

மருத்துவ வசதி நமது தேசத்தில் மிகவும் குறைவாக இருக்கிறது என்பது புள்ளி விவரங்களிலிருந்து தெரிகிறது. நம் மாநிலத்தில் கிராமங்களில் மருத்துவ வசதி செய்து கொடுக்க முடியவில்லை. இன்னும் விருத்தி செய்ய வேண்டியிருக்கிறது. இந்த நிலையில் டாக்டர்கள் தேவையாக இருந்தும்கூட டாக்டர்களில் 110 பேரையும், பல் டாக்டர்களில் 10 பேரையும், பி. பார் மசியில் 20 பேரையும் இந்த வருஷத்தில் குறைப்பதாக முடிவு செய்திருக் கிறது இந்த அரசு. இந்த முடிவை இந்த வருஷத்துக்காவது ஒத்திப்போட வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

நமது மருத்துவக் கல்லூரிகள் முன்பு போலில்லாமல், மாணவர்கள் இப்போது படிப்பில் அதிக கவனம் செலுத்தி வருகிறார்கள். இது மிகவும் மகிழ்ச்சியைக் கொடுக்கும் விஷயம். நமக்கு மன நிறைவைக் கொடுக்கிறது.

மருத்துவக் கல்லூரி மாணவர்கள் மற்றக் கல்லூரி மாணவர்களோடு சேராமல், அரசியல் உணர்ச்சிகளைக் குறைத்துக்கொண்டு, தங்களுடைய படிப்பில் கவனம் செலுத்தி வருகிறார்கள்.

ஹெல்த் விசிட்டர்களுக்கு இப்போது நாம் கொடுக்கும் பயிற்சி போதாது. நமது கிராமங்களில் தாய்மார்கள் பலர் இன்னமும் பேறுகால வசதிகள் கிடைக்காமல் இருக்கிறார்கள். இந்த மருத்துவ வசதி மிகவும் முக்கியம். அரசாங்கத்திற்கு இதைக் காட்டிலும் வேறு அதிகமான கடமை இருக்க முடியாது.

[26th July 1971

[திரு. கே. ராஜாராம்]

இந்தியாவிலேயே அதிகமான பிள்ளைகளைப் பெறக் கூடிய மருத்துவ வசதி சென்னையில் தான் இருக்கிறது. கஸ்தூரிபாய் காந்தி மருத்துவ மனை தான் அதிகமான குழந்தைகள் பெறும் ஸ்தாபனமாக இருக்கிறது.

திரு. ஜி. சுவாமிநாதன்: இது மகிழ்ச்சிக்கு உரியதா என்று கேட்க விரும்புகிறேன்.

திரு. கே. ராஜாராம்: குடும்பக் கட்டுப்பாடுபற்றி இரண்டொரு வார்த்தை சொல்ல விரும்புகிறேன். இது மிகவும் நல்லதுதான். ஆனால் இது ஒருதலைப் பட்சமாக இருக்கக் கூடாது. ஒரு மனிதன் ஒரு மனைவியைத்தான் திருமணம் செய்துகொள்ளவேண்டுமென்று சட்டத்தில் இருக்கிறது. ஆனால் அதே நேரத்தில் எவ்வளவு பெண்களை வேண்டுமானாலும் கல்யாணம் செய்து கொள்ளலாம் என்று வேறு சிலரை அனுமதிப்பது சரியல்ல. சட்டம் என்றால் எல்லோருக்கும் ஒரே சட்டமாக இருக்க வேண்டும். குறிப்பாக பலதார தடைச் சட்டம் தமிழ்நாட்டில் உள்ள அனைவருக்கும் பொருந்துவதாக இருக்க வேண்டும். இது குடும்பக் கட்டுப்பாட்டிற்கும் உபயோகமாக இருக்கும் என்று இந்த சந்தர்ப்பத்தில் வலியுறுத்த விரும்புகிறேன்.

காலராவும், அம்மையும் தெய்வ கோபத்தால் ஏற்படுகின்றன என்று சொல்வதுண்டு. சுகாதாரத் துறை நல்ல முறையில் பணியாற்றியிருப்பதால் காலராவும் அம்மையும் மிகவும் குறைவான அளவில் தான் நம் மாநிலத்தில் இருக்கின்றன. அதுவும் இல்லாமல் செய்ய வேண்டுமென்று உத்தியோகஸ் தர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

தமிழ்நாட்டில், அடையாற்றில் உள்ள புற்று நோய் நிலையமும், எக்மோர் ஹாஸ்பிட்டலில் உள்ள குழந்தைகள் மருத்துவ நிலையமும் பொதுமக்களுக்கு நல்ல முறையில் பணியாற்றி வருகின்றன. பணம் செலவாவதைப் பார்க்காமல் இந்த இரண்டையும் விரிவுபடுத்தி செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. அப்துல் வகாப் சொன்னதுபோல, மதுரையிலோ, திருச்சியிலோ ஒரு புற்று நோய் நிலையத்தை ஏற்படுத்த வேண்டும். இப்போது அங்கே புற்றுநோயால் பாதிக்கப்பட்டவர்கள் சென்னைக்குத்தான் வருகிறார்கள்.

புற்று நோய் வராமல் தடுக்க "ரிசர்ச் இன்ஸ்டிடியூட்" காஞ்சிபுரத்தில் ஆரம்பித்திருப்பது மிகவும் நல்லது. அடையாற்றில் உள்ள தனியார் இன்ஸ்டிடியூட்டின் கிளையாக தென் பகுதியில் ஒரு நிலையத்தை ஆரம்பிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, சென்னை நகரில், அதுவும் குறிப்பாக எம்.எல்.ஏ.க்கள் தங்கியிருக்கின்ற ஹாஸ்டலில் கொசு இல்லாமல் செய்ய முடியாதா என்று கேட்கிறேன். கொசு ஒன்று ஈயைப் போல் இருக்கிறது. கூவத்தில் தண்ணீர் இல்லாமல் காய்ந்துவிட்டது. அப்படியிருந்தும் பக்கிங்ஹாம் கால்வாயிலிருந்து கொசுக்கள் உற்பத்தியாகின்றனவோ என்னவோ தெரியவில்லை, ஏராளமாகக் கொசுக்கள் உற்பத்தியாகி உபத்திரவம் பொறுக்க முடியவில்லை. கொசு, ஈ ஒழிப்புக்கு ஒரு வாரம் அல்லது பார்ட்நைட் fortnight என்று வைத்து இந்த மாநிலத்தில் கொசுக்களையும், ஈக்களையும் ஒழிக்க அரசு முன்வருமா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.



26th July 1971] [திரு. கே. ராஜாராம்]

அடுத்தபடியாக, சொந்த விஷயம், திருமங்கலம் ஆஸ்பத்திரிக்காக வேண்டி, அதை விஸ்தரிப்பதற்காக ஆஸ்பத்திரியைச் சுற்றி அரசாங்கத்திற்கு இடமில்லாததால் ஜில்லா முன்சீப் கோர்ட் இருக்கும் இடத்தைக் கொடுத்து விட வேண்டுமென்று கேட்கப்பட்டிருந்தது. ஹைக்கோர்ட்டார் ஜில்லா முன்சீப் கோர்டை வேறு இடத்திற்கு மாற்றிக்கொண்டு இப்போது ஜில்லா முன்சீப் கோர்ட் இருக்கும் இடத்தை ஆஸ்பத்திரி விஸ்தரிப்புக்காகக் கொடுக்க அனுமதித்துவிட்டார்கள். ஜில்லா முன்சீப் கோர்ட்டுக்கு தாலுக்கா கச்சேரி உள்ள இடத்தில் இடம் பார்த்துவிட்டார்கள். சட்ட அமைச்சர் அவர்கள் அங்கு வந்து அந்த இடத்தைப் பார்த்தாகிவிட்டது. ஆகவே ஜில்லா முன்சீப் கோர்ட் கட்டிடத்தை ஆஸ்பத்திரிக்கு எடுத்துக்கொண்டு, மருத்துவருக்கு, மற்றவர்களுக்கு வீடு கட்டிக் கொடுத்து ஆஸ்பத்திரியை விஸ்தரிக்க உடனடியாக ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். ஏற்கனவே அதற்கான திட்டம் இருக்கின்றது. அதைத் தாமதமின்றி நிறைவேற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். கோவைக்கும், மதுரைக்கும் குடி தண்ணீர் வசதி மிகவும் பற்றாக்குறையாக இருந்துகொண்டிருக்கிறது. அதையும் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு அமைகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, மக்கள் நல்வாழ்வு குடும்பநலத் துறை குறித்து மாண்புமிகு அங்கத்தினர்கள் மிக ஆர்வம் காட்டி பல்வேறு சிறந்த கருத்துக்களை எடுத்துச் சொன்னதற்காக என்னுடைய உளமார்ந்த நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். பல சிறந்த கருத்துக்களை இன்னும் விரிவாக எடுத்துச் சொல்ல அவர்களுக்குக் காலம் இடம் தரவில்லை. அதே போல் அவர்கள் சொன்ன கருத்துக்களில் பலவற்றிற்கு நான் நல்ல விளக்கமளிக்கக் காலம் போதுமானதாக இல்லை. என்றாலும் அவர்கள் சொன்ன கருத்துக்கள் முறையாகப் பரிசீலிக்கப்பட்டு முடிந்த அளவிற்கு செயல்படுத்தப்படும் என்ற நம்பிக்கையை நான் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன்.

இந்த மக்கள் நல்வாழ்வுத் துறை ஏறத்தாழ தமிழ் நாட்டில் பல ஆண்டுகளாகத் தொடர்ந்து செயல்பட்டு வந்திருக்கிறது. எடுத்து அதை நடத்துகின்ற கட்சி வேறுக இருந்த காலத்திலும்கூட ஒரு தொடர்பான உணர்ச்சி அந்தத் துறையில் இருந்து செயல்படுத்தப்பட்ட காரணத்தினால், தொடர்ந்து முன்னேற்றம் ஏற்பட்டு, ஏறத்தாழ 20 ஆண்டுகளுக்கு. 30 ஆண்டுகளுக்கு முன்னால் சராசரி வயது (expected age) ஏறத்தாழ 31, 32 ஆக இருந்தது, இந்த ஆண்டு 52 ஆக உயர்ந்திருக்கிறது; 52 ஆண்டு சராசரி வாழ்கின்ற சூழ்நிலை உருவாக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவிக்க விரும்புகிறேன். மேலும் தொடர்ந்து இந்தப் பணி வளர்கின்றபோது 52 ஆண்டு என்பது 60 ஆண்டாகி எல்லோரும் சவுகரியப்தபூர்த்தி செய்துகொள்ளுகின்ற அளவிற்கு வளரும் என்று நிச்சயமாக நம்பலாம். அப்படி நீண்டநாள் வாழ்கிற நல்வாழ்வு நமக்குக் கிடைக்கின்ற நேரத்தில், நீண்டநாள் வாழ்கின்ற காரணத்தால், சமுதாயத்தில் ஏற்படுகின்ற புதிய சுமையை நாம் உணர வேண்டும். ஒரு காலத்தில் வாழ்ந்துகொண்டிருந்த மக்கள் மறைந்து கொண்டிருந்த காரணத்தால், மிச்சம் வாழ்ந்துகொண்டிருக்கின்ற மக்களைக் காப்பாற்ற அரசு ஆற்ற வேண்டிய பொறுப்பு, கடமை ஓரளவாக இருந்தது. இன்றைய தினம் வாழ்கின்ற மக்களின் ஆயுட்கால நீடிப்பின் காரணமாக, ஆயுள்காலம் நீடித்தாலும், உடல் தளர்ச்சியும், பலநோய்களால் காது

5-20 p.m.

5-20 p.m.

கேட்காத நிலை, கண் மங்குகின்ற பக்குவம், இப்படி பலர் மருத்துவ மனையை நாடி வரவேண்டிய சூழ்நிலை, சமுதாயச் சூழ்நிலை பெற்று விடுகின்ற காரணத்தினால், மருத்துவ மனைகள் தேவை அதிகரித்து, நாம் ஏற்படுத்துகின்ற சுகாதாரத் திட்ட வளர்ச்சியும் மிகப் பெரிய அளவிற்கு உயர்ந்துகொண்டிருக்கிறது. 10 ஆண்டுக் காலத்தில் மருத்துவ மனைகளுக்கு வந்து திரும்பிய நோயாளிகளின் புள்ளி விவரத்தை எடுத்துப் பார்த்தால், 10 ஆண்டுக் காலத்தில் அந்த எண்ணிக்கை பெருகியிருப்பது நமக்கு நன்றாகத் தெரியும். அப்படிப் பெருகி வருகின்றபோது, மருத்துவ மனைகளில் உள்ள படுக்கைகளின் எண்ணிக்கை ஆண்டுக்கு 300 படுக்கைகள் என்று உயர்ந்து வந்தாலும் இன்றைய தினம் 23,000 படுக்கைகள் அளவுக்கு இருந்தாலும் கூட, அந்தப் படுக்கைகள் போதுமானவையாக இல்லை. படுக்கை என்று சொல்கிறபோது, Bed-strength in hospital என்ற அடிப்படையில் மட்டும் சொல்லுகிறேன். படுக்கைகளுக்கு இடையே படுத்திருக்கின்ற நோயாளி களைச் சேர்த்துக் குறிப்பிடவில்லை. அவர்களை ஒதுக்கிவிடவும் முடியாது. அவர்களைச் சேர்த்துக் கணக்கில் தாங்கிக்கொள்ளவும் முடியாது. அளவுக்கு மேல் குழந்தைகளைப் பெற்ற தாய் வேதனைப்படுவதைப் போன்று இந்தத் துறை படுகின்ற வேதனை இருக்கிறது என்று தான் நான் குறிப்பிட முடியும். நோய் தடுப்பில் மக்கள் தங்களுக்குள்ள பொறுப்பை உணர்கின்ற சூழ்நிலையை உண்டாக்கினால்தான், ஓரளவிற்கு வசதிகள், நன்மைகள் செய்ய முடியும். உள்ளபடியே இந்த நாட்டு மக்கள் அரசாங்கம் ஜனநாயக அரசாங்கம் என்ற காரணத்தால், தங்கள் குறைகள் எல்லாவற்றையும் அரசாங்கமே போக்க வேண்டும் என்ற தவறான எண்ணத்தை மிக வேகமாக வளர்த்துக்கொள்ளு கிறார்கள். அந்த நோக்கம் தவறான நோக்கம் என்பதை அவர்கள் உணர வேண்டும். சுற்றுப்புற சூழ்நிலையைப் பக்குவப்படுத்துவது அரசாங்கத்தின் பொறுப்பாகும். தனி மனிதன் தன்னுடைய உடல் நலத்தைப் பாதுகாத்துக் கொள்ளுவது பழங்காலத்தில் வழக்கமாக இருந்து வந்திருக்கிறது. மனிதன் தன்னுடைய உணவுப் பழக்கத்திலும், நடையுடை பாவனைகள் ஆகியவற்றிலும், இன்னும் சொல்லப் போனால் அவன் கையாளவேண்டிய உடல் நோய் தடுப்பு முறையிலும் கவனம் செலுத்தி, நோய் வராமலேயே தன்னைப் பாதுகாத்துக் கொள்ளவேண்டும். அப்படிப் பாதுகாத்துக்கொள்ளக்கூடிய சூழ்நிலை வளர்கிறதா என்றால், பழக்க வழக்கங்கள் தடுமாற்றத்தான். அப்படித் தடுமாறும் பழக்க வழக்கங்களால் அவன் தான் நோயடைவது மட்டுமல்ல, அவன் தன்னை நோயிலிருந்து காப்பாற்றிக்கொண்டு நல்ல நிலையில் [illegible] அரசாங்க மருத்துவ மனையைத் தான் பெருமளவிற்கு நம்பியிருக்கிறான். யாரேனும் வசதி பெற்றவர்கள் தனியார் மருத்துவ மனைக்குத் தேவையான செலவைத் தந்து அதன் மூலம் சிகிச்சை செய்துகொள்ளுவார்களே தவிர, பெரும்பாலான மக்கள் அவ்வளவு பேரும் பொது மருத்துவ மனையைப் பயன்படுத்துவதால், அந்தத் தொகையை நிறைவு செய்வது அரசின் கடமையாக இருக்கின்றது. இந்த நேரத்தில் நான் இந்த அவையின் மூலம் பொதுமக்களுக்கு ஒரு வேண்டுகோளை விடுவிக்க விரும்புகின்றேன். எதெதற்கோ செலவழிக்கிறார்கள். சாதாரண உடைக்குச் செலவழிக்கிறார்கள்; பட்டாடைகளுக்கு, பளபளப்பான உடைக்குச் செலவழிக்கிறார்கள், மகிழ்ச்சிகரமான நிகழ்ச்சிகள், திரைப்படம் பார்ப்பது போன்றவற்றிற்குச் செலவழிக்கிறார்கள்; உணவு விடுதியில் மட்டு மின்றி சிற்றுண்டிசாலையிலும் உண்ண செலவழிக்கின்றார்கள். ஆனால் மருத்துவ [illegible] மக்கள் தங்கள் வருமானத்தில் ஒரு சிறு பகுதியை ஒதுக்கிச்



செலவழிக்கின்ற மனப்பக்குவத்தைப் பெறவில்லை. ஒரு வேளை தன்னிடமும் இல்லை; அரசாங்கமும் வசதி செய்யவில்லை என்று இரண்டையும் மோதவிட்டு வேடிக்கை பார்க்க எண்ணுகிறார்களோ என்னவோ. அரசாங்கம் முடிந்த அளவிற்குச் செய்யட்டும் என்கிறார்கள். அந்த எண்ணம் மாற வேண்டும். மேல்நாட்டு மருத்துவ வசதியைப் பார்த்தால், அங்கே மக்கள் அரசாங்க மருத்துவமனையே தங்கள் புகலிடம் என்ற எண்ணத்திலிருந்து விடுபட்டு பெரும்பாலும் பிரைவேட் நர்சிங் ஹோம்களைப் பயன்படுத்துகின்றார்கள். நமக்கு அந்த வசதி, கிடையாது. அது இல்லாததால், பொதுமக்களைப் பார்த்து, தனியார் மருத்துவமனைக்குச் செல்லுங்கள் என்று சொல்ல மாட்டேன். ஆனால் கிராமங்களில் வாழ்கின்ற மக்களாக இருந்தாலும், நகர மக்களாக இருந்தாலும், எல்லாம் அரசாங்க மருத்துவமனை மூலமாக நடை பெற வேண்டும் என்று எதிர்பார்ப்பவர்கள் தங்களுடைய சக்திக்கு ஏற்ற அளவு அரசாங்க மருத்துவமனைகளின் வளர்ச்சிக்காக நிதி வழங்குவதன் மூலம் அல்லது சிறு கட்டணம் செலுத்துவதன் மூலமாக அல்லது தங்களுடைய நலனைப் பாதுகாத்துக்கொள்ள "வாலன்டரி ஹெல்த் சர்வீஸ்" அமைப்புகளை, தாங்கள் இயங்குகின்ற மக்கள் நலனுக்கான இயக்கங்களைத் தோற்றுவிப்பதன் மூலமாக வசதி செய்து கொள்ள முன்வர வேண்டும். இந்த நேரத்தில் ஒன்றைப் பாராட்டிக் குறிப்பிட விரும்புகிறேன். அடையாற்றில் "வாலன்டரி ஹெல்த் சர்வீஸ்" அமைப்பு ஒன்றை நிறுவி, நமது மருத்துவமனையைப் போல வசதியுடையதாக எற்படுத்தி, அங்கேயுள்ள நோயாளிகளை நல்ல முறையில் கவனிக்கக் கூடியதாக சிறு செலவில் பூரண குணம் அடையக் கூடிய அளவிற்கு வாய்ப்பு அளிக்கும்படியாக ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அது அவர்களாகவே பல பேர் சேர்ந்து ஏற்படுத்திய அமைப்பு. அவர்கள் மற்றொரு அமைப்பையும் ஏற்படுத்தியிருக்கிறார்கள் மினி ஹெல்த் சென்டர் என்று, சிறு சிறு சுகாதார நிலையங்கள் என்ற முறையில், கிராமத்திற்கு கிராமம் 1,000, 2,000 குடும்பத்தைச் சேர்த்து 10,000 உறுப்பினர்களைக் கொண்ட ஒரு அமைப்பு ஏற்படுத்தியிருக்கிறார்கள். 100 ரூபாய் வருமானம் உள்ளவர்கள் மாதம் 8 அணா சந்தா செலுத்துகிறார்கள்; 200 ரூபாய் வருமானம் உள்ளவர்கள் மாதம் ஒரு ரூபாய் என்றும், 200 ரூபாய்க்கு மேல் வருமானம் உள்ளவர்கள், ஆண்டு வருமானத்தில் அரை சதவிகிதம் செலுத்துவது என்று வைத்து, கிராமப்புற மக்களுக்குக் கூட நிலையான சுகாதார நல்வாழ்வு அளிக்கத் திட்டமிட்டு, செயலாற்றிக்கொண்டு வந்திருக்கிறார்கள். அரசாங்கமும் அதை ஆதரித்திருக்கிறது. அப்படிப்பட்ட முயற்சிகள் இந்த நாட்டில் வருகிறபோதுதான் பொதுமக்களுக்கு நல்வாழ்வு கிடைக்கும். நமது அரசு இந்தத் துறைக்குச் சென்ற ஆண்டு 26 கோடி ரூபாய் ஒதுக்கியிருந்தது. இந்த ஆண்டு 33 கோடி ரூபாய்க்கு மேல் ஒதுக்கியிருக்கிறது. மேலும் 40 கோடி ரூபாய் என்று ஒதுக்கினாலும்கூட, திட்டங்களை நிறைவேற்ற முடியாது. ஆரம்ப சுகாதார நிலையங்கள் உள்ள 375 இடங்களில், 40 இடங்கள் வாடகைக் கட்டிடத்தில் இருக்கின்றன. ஆண்டுக்கு 10 இடங்கள், 15 இடங்கள் என்று எடுத்து, நிறைவேற்றிக்கொண்டிருக்கிறோம். எல்லா இடங் களுக்கும் கட்டடம் கட்டி முடிக்க இன்னும் மூன்று ஆண்டுகள் ஆகும். அதே போல் தாலுக்கா, வட்ட மருத்துவமனைகள் எல்லாம் ஏறத்தாழ 20 ஆண்டு களுக்கு முன்னால் ஏற்படுத்தப்பட்டு இன்றையதினம் அவைகள் எல்லாம் புதுப்பிக்கப்பட வேண்டியிருக்கிறது. கட்டடங்கள் பழுதுபட்டிருக்கின்றன. இடம் போதவில்லை. பல இடங்களில் எக்ஸ்ரே யூனிட் இல்லை. இன்னும் சில

இடத்தில் டென்டல் யூனிட் இல்லே. இவைகள் எல்லாம் தேவை என்று உணர்கின்ற நேரத்தில், இவற்றை அரசாங்கம் ஒரே நேரத்தில் ஏற்படுத்த இந்த அரசாங்கம் அல்ல, எந்த அரசாங்கத்தாலும் முடியாது.

உலகத்தில் எந்த ஒரு அரசாங்கமும் மருத்துவ வசதிக்காக அந்த அரசாங்கத்தினுடைய மொத்தச் செலவில் ஏறத்தாழ 10 விழுக்காடுக்கு மேல் செலவழிக்கவில்லே. Not more than 10 per cent for health services is spend by any Government in the world. ஒருவேளே சோஷலிச நாடுகளில் எல்லாச் செலவுகளேயும் தேவை அடிப்படையில் பங்கிட்டுக்கொள்ளக் கூடிய நிலே இருந்தாலும் இருக்கக்கூடுமே தவிர, இங்கு அம் மாதிரி சோஷலிசம் வருகின்றகாலம் வரையில் மக்கள் ஒத்துழைப்பு கிடைக்காவிட்டால், இந்தத் திட்டங்களேப் பரிபூரணமாக நிறைவேற்ற முடியாது.

அது மட்டுமல்லாமல், நான் மிகவும் விளக்கமாகச் சொல்லே வேண்டிய ஒரு முக்கியமான கருத்தை மதிப்புக்குரிய அங்கத்தினர்கள் எடுத்துத் தெரிவித் தார்கள். மருத்துவக் கல்லூரியில் இடத்தை ஏதோ தவருன நோக்கத்தால் குறைத்துவிட்டது போலவும் உள்ளபடியே மாணவர்கள் எதிர்கால நன்மையில் அக்கறையில்லாமல் அல்லது நாட்டின் எதிர்கால நன்மையில் அக்கறையில்லாமல் அம் மாதிரியான முடிவுக்கு அரசாங்கம் வந்தது போலவும் தெரிவித்தார்கள். உள்ளபடியே ஏற்கனவே சொன்ன விளக்கங்கள் போதுமானதாக இருக்கு மென்று எதிர்பார்த்தேன். உண்மை என்னவென்றால், கடந்த 6, 7 ஆண்டு களுக்கு முன்னால் 1963-ம் ஆண்டில் எல்லா மருத்துவக் கல்லூரிகளிலும் இடங்கள் அதிகப்படுத்தப்பட்டன. நாட்டினுடைய பாதுகாப்பிற்காக சீனாவின் ஆக்கிரமிப்பு நேரத்தில் மருத்துவர்களேப் போர்க்களத்திற்கு அனுப்புவதை அதிகப்படுத்த வேண்டுமென்று மத்திய அரசு கேட்டுக் கொண்டது. அந்த நெருக்கடியில் ஸ்டான்லி மருத்துவக் கல்லூரியில் 125, 150 ஆக உயர்த்தப் பட்டது. மதுரை மருத்துவக் கல்லூரியில் 150, 200 ஆக உயர்த்தப்பட்டது. தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரியில் 100 இடங்கள் 125 ஆக உயர்த்தப்பட்டன. அதைத் தொடர்ந்து மறுபடியும்கூட அந்த நெருக்கடி நிலே நீடிக்கும் என்ற எண்ணம் இருந்து, மேலும் உயர்த்தப்பட்டு, அது பெரும் எண்ணிக்கையாக உயர்ந்தது. இதைக் குறைக்கச் சொல்லுகின்ற போது, மாணவர்கள் நலனில் அக்கறையில்லாமல் இந்த எண்ணிக்கையைக் குறைக்கிற நோக்கம் இருக்கிறது என்பதை அரசாங்கம் ஏற்றுக்கொள்ள வில்லே. நான் பல நேரங்களில் இந்த அவையில்கூட சொல்லியிருப்பதாக நினேக்கிறேன். வேலே தருவதற்காக மட்டும் கல்வி அளிக்கப்படவில்லே. கல்வி அளிக்கப்படுவது ஒரு மனிதனுடைய தகுதி, திறமையை உயர்த்துவதற்காக; வேலே அளிக்கப்படுவது சமுதாயத்திற்கு நன்மை பயக்க. அந்த நிலேயில் சமுதாயத்திற்குத் தேவையாக இருந்தால், எத்தனே போராக இருந்தாலும், அவர்கள் சேர்க்கப்படுவார்கள். சமுதாயம் தாங்க முடியாவிட்டால், அவர வர்கள் தனித்தனியாக அவர்கள் அறிவுத் திறனேப் பயன்படுத்தி ஒரு தொழிலாளி உழைப்பதைவிட, ஒரு பாட்டாளி பாடுபட்டு வாழ்வதைவிட, ஒரு டாக்டர், ஒரு என்ஜினியர், ஒரு படித்த பட்டதாரி தங்களுடைய அறிவைப் பயன்படுத்தி சமுதாயத்தில் வாழ முடியும். முடியவில்லேயென்றால், கல்வி யளித்தபோது ஏற்படுத்தவேண்டிய தன்னம்பிக்கையை ஏற்படுத்தாததும் நாட்டுக்கு ஒப்படைக்கத்தக்க மனப்பான்மையை வளர்க்காததும்தான்





உண்மையான காரணமாக இருக்க முடியும். மருத்துவக் கல்லூரியில் இடத்தை உயர்த்துகிறபோது, 'On emergency background' அவசியத் தேவை, அவசரத் தேவையென்ற காரணத்தால், இடங்கள் உயர்த்தப்பட்டன. அந்தப் புள்ளி விவரங்களே இன்றைக்கு நீங்கள் எண்ணிப் பார்த்தாலும்கூட, அகில இந்திய மருத்துவ நிபுணத்துவக் குழுவினுல் (All India Medical Council) ஏற்படுத்தப்பட்ட அந்த அமைப்பு விதாச்சாரம் ஏறத்தாழ 100 மாணவர்களுக்கு 700 படுக்கைகள் இருக்க வேண்டும். அந்தப் படுக்கை விகிதம் பல மருத்துவமனேகளில் ஒவ்வொரு அளவு ஒரு வகையில் குறைகிறது. குறைவது மட்டுமல்ல, இப்போது குறைக்கப்பட்ட எண்ணிக்கைக்குத் தேவையான அளவுக்குக்கூட படுக்கை நம்மால் ஏற்படுத்த முடியவில்லே. அத்துடன் மொத்தப் படுக்கையில் மூன்றில் ஒரு பங்கு நிச்சயமாக 'ஜெனரல் மெடிசன்' துறையைச் சார்ந்திருக்க வேண்டும். மூன்றில் மற்றொரு பங்கு 'சர்ஜரி' துறையைச் சார்ந்திருக்க வேண்டும். மிச்சம் உள்ள ஒரு பங்கு 'ஸ்பெஷல் பிராஞ்சஸ்' என்ற அடிப்படையில் பிரிக்கப்பட வேண்டும். 'ஜெனரல் மெடிசின்' 'ஜெனரல் சர்ஜரி' க்கு அவ்வளவு படுக்கைகளே ஒதுக்கிவிட்டால் பல்வேறு சிறப்புத் துறை மூலமாக மக்களுக்கு நன்மை கிடைக்காது என்ற காரணத்தால், படுக்கைகள் பங்கிட்டு முறையில் வேற்றுமை இருக்கிறது. அதற்கு மேல் அதற்குள்ளே சென்றுல் உள்ளபடியே இப்போதிருக்கிற எண்ணிக்கையைக்கூட குறைக்க வேண்டுமென்ற கருத்துக்கு ஆதாரம், வலிவு இருப்பதால் அதற்காக வாதாடுவதாக ஒருவேளே தவருக எண்ணக்கூடும். அப்படி நான் வாதாட விரும்பவில்லே. ஆகவே நிலேமையை உணர்ந்து ஏற்படுத்தியச் சிறு மாற்றம், பெரும் மாற்றம் அல்ல. இன்னும்கூட சொல்லிக்கொள்வேன். 'போஸ்ட் கிராஜுவேட் இன்ஸ்டிடியூஷன்ஸ்', சென்னேயில் இருக்கிற பொது மருத்துவமனேக் கல்லூரிபற்றி நமதுடைய மதிப்புக்குரிய திரு. ஏ. ஆர். தாமோதரன் அவர்கள் குறிப்பிட்டு, "அங்கே உயர்ந்த போஸ்ட்-கிராஜுவேட் பாடத் திட்டங்கள் எல்லாம் புதி தாக ஏற்படுத்தியிருக்கிறார்கள், 'நியூராலஜி' பிளாக் ரூ. 40 லட்சம் செலவில் கட்டி யிருக்கிறார்கள், 'கார்டியாலஜி' பிளாக் இன்னொரு ரூ. 40 லட்சம் செலவு செய்து கட்டுகிறார்கள், மேலும் மேலும் கூட்டம் நிறைந்ததாக ஆக்கப்படுகிறது, அப்படி ஆவது நல்லதல்லவென்று சொன்னார்கள். அவர் கருத்துக்கு மாறு பாடு இல்லே. இன்றைக்கு இருக்கிற நிலேமை புதிதாக 'போஸ்ட்-கிராஜுவேட் மெடிக் சயன்ஸ் ரிசர்ச் இன்ஸ்டிடியூட்' என்ற முறையில் ஏற்பட வேண்டு மென்றுல், அவர்கள் சொன்னது போல், ஏறத்தாழ ரூ. 5 கோடி அல்ல ரூ. 10 கோடி தேவை. உள்ளபடியே அதற்கான கட்டிடங்களேக் கட்டி முடித்து தொடங்க வேண்டுமென்றுல், குறைந்தது மூன்று ஆண்டுகள் அல்லது நான்கு ஆண்டுகளாகும். அவசரத் திட்டமாக நிறைவேற்ற முடியவில்லே. ஆனுல் மருத்துவத் துறையைப் பொறுத்தவரையில், நம் தமிழ் நாட்டில் சமீபத்தில் மருத்துவக் கல்லூரி வளர்ந்து வந்திருக்கிறது. புள்ளி விவரங்களேப் பார்த்தாலும், உயர்தரமான கல்வி ஆராய்ச்சித் துறை இன்னும் சற்று வளர வேண்டியிருக்கிறது. 'ஆல் இண்டியா' அடிப்படையில் டில்லியில் "டில்லி இன்ஸ்டிடீட் ஆப் மெடிக்கல் சயன்ஸ்'-ம் சண்டிகார் நிலேயமும் படுக்கை எண்ணிக்கை எந்த அளவுக்கு இருக்கிறதோ, அதற்கேற்ற மாணவர்களேக் கொண்டு நன்னிய ஆராய்ச்சி நடத்துவதற்கு ஓளவுக்குச் சிறப்பாக வளர்ந்திருப்பது எல்லாக் காலத்திலும் ஏற்பட முடியாது. அப்படிப்பட்ட நிலேயில் 5-30 pm..

அடையாற்றில் 'பேசிக் சயன்ஸ்'க்காக ஏற்படுத்தவேண்டிய உயர்நிலை ஆராய்ச்சிக் கூடத்தைத் தொடங்குவதற்கு முன்பு, அதற்கொரு முன்னேடித் திட்டமாக ஒன்றை ஏற்படுத்துவதற்கு உள்ளபடியே நிதி கொடுக்கிறபோது, மத்திய அரசு ஒத்துக்கொள்ளாவிட்டாலும், வசதி இருக்கும்பொழுது உண்டாக்கலாம் என்ற அடிப்படையில்தான் சென்னைப் பொது மருத்துவமனை, இருப்பதற்குள் சீனியர்மோஸ்ட் காலேஜ்—கல்லூரியில் ஏற்கனவே பல பட்ட மேற்படிப்புத் துறை வகுப்புகள் ஏற்படுத்தப்பட்டிருக்கும்பொழுது, 'பிசியாலஜி, பாக்டிரியாலஜி' என்ற இரண்டு துறைகள் இன்றைய தினம் உயர்த்தப்படுவதற்கு (Upgrading of the Post-Graduate Institute) ஒரு திட்டம் ஏற்படுத்தி, மத்திய அரசு அதற்கான செலவினங்களை ஏற்றுக் கொள்வதால், அந்தச் செலவினங்களை மத்திய சர்க்காரிடமிருந்து பெற்று, அந்த முயற்சி வெற்றிகரமாக நடைபெறுகிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். அதே நேரத்தில் அந்தப் பொது மருத்துவமனை இருக்கிற இடம் 'ஜெனரல் ஹாஸ்பிட்டல்' எப்படி இருக்கிறது? அது நெருக்கடியான இடத்தில் இருப்பதால், நாள் ஒன்றுக்கு 2,000, 3,000 நோயாளிகள், இன்னும் அதிகமான பேர்கள், வந்து திரும்புகிற நிலைமை நல்லதல்லவென்று கூறினார்கள். அதிலும் அவுட் பேஷன்ட்ஸ்—புற நோயாளிகள்—வந்து மருந்து வாங்கிச் செல்பவர்கள், காத்திருந்து திரும்பிச் செல்லவேண்டியிருக்கிறது. சென்னை மாநகராட்சியில் ஜெனரல் ஹாஸ்பிடல், ஸ்டான்லி ஹாஸ்பிடல், கீழ்பாக் ஹாஸ்பிட்டல், ராயப்பேட்டா ஹாஸ்பிடல் அத்தனை மருத்துவ மனைகளுக்கும், 'பெரிபெரல் கிளினிக்ஸ்' தனி மருத்துவநிலையங்கள் ஏற்படுத்த முடியுமா என்பது ஆழ்ந்த பரிசிலனையில் இருக்கிறது. ஆழ்ந்த பரிசிலனையில் செலவுக் கணக்கை எண்ணி ஆழ்கிறோம், திட்டத்தை எண்ணி மகிழ்கிறோம். அப்படிச் செலவுக்குரிய திட்டமாக இருந்தாலும்கூட, அப்படிப் பட்ட திட்டங்கள் ஆராயப்படுகின்றன. 5, 6 இடங்களில் மருத்துவமனைகள் ஏற்படுவதன் மூலமாக, பொது மருத்துவமனையில் கூட்டத்தைக் குறைக்க வழியிருக்கிறது. இன்றைக்குக்கூட தஞ்சாவூரில் உள்ள நிலைமைபற்றி நம் தஞ்சை உறுப்பினர் திரு. சுவாமிநாதன் எடுத்துக் காட்டினார். அந்த முறையில் அங்கு இருக்கிற ஒன்று ராஜா மிராசுதார் மருத்துவமனை, இன்னொன்று மருத்துவக் கல்லூரி மருத்துவமனை. இவை இரண்டும் ஒன்றுக்கொன்று இணைக்கப்பட்டு feeding முறையில்லாமல், ஒட்டுறவு இல்லாமல் பணியாற்றுகிறார்கள் என்று சொன்னார்கள். ஏதோ ஏழைகள் புறக்கணிக்கப்படுகிறார்கள் என்றும் வசதி படைத்தவர்கள் செல்வாக்குள்ளவர்கள் கவனிக்கப்படுகிறார்கள் என்றும் கேள்விப்பட்டு மருத்துவத்துறை இயக்குநரை அனுப்பி விசாரித்து இப்போது நாங்கள் ஒரு முடிவைச் செய்திருக்கிறோம். ராஜா மிராசுதார் மருத்துவ மனை பெரும் பகுதி புற நோயாளிகளுக்கு மட்டும் நடத்தப்படுகிற மருத்துவ மனையாகும். அங்கு மகப்பேறு ஒன்றும், எமர்ஜன்சி கேசஸ், நிஸ்க் கேசஸ், உடனடியாக கவனிக்கப்பட வேண்டிய நோயாளிகள் பிரிவு என்று இரண்டு மூன்று பிரிவுகளை வைத்துவிட்டு, மீதம் உள்ள பகுதிகளை மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையோடு சேர்த்து வைத்து, அதனால் அது தஞ்சாவூர் மக்கள் மட்டுமின்றி தஞ்சை மாவட்ட மக்கள் எல்லோருக்கும் ஓளவு பயன் பெறத்தக்க அளவுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இப்படி இந்த அளவிற்கு நாம் கவனம் செலுத்த வேண்டியிருக்கிறது என்பதை ஒவ்வொரு வருக்கும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். நாம் எவ்வளவுதான் கவனித்துக்



கொண்டு வந்தாலும், இன்னும் எத்தனையோ குறைகள் இருக்கின்றன. இவை களைக் கவனித்து வர வேண்டிய பொறுப்பு மாண்புமிகு உறுப்பினர்களுடையதாகும். எவ்வளவுதான் நான் கவனித்து வந்தாலும், எத்தனையோ பிரச்னைகள் இருந்து கொண்டிருக்கின்றன. Private practice of Doctors in Government Service. இதைமுழுவதுமாகத் தீர்க்கக் கூடியதாக இன்னும் ஆகவில்லை. அதே போல முழு அளவு தீர்க்க வேண்டுமென்றால் வழியில்லை. Drugs control is not completely successful. தவறு இல்லாமல் தடுக்கிற முயற்சி முழு அளவு வெற்றி பெறவில்லை. மருந்தகங்களிலே நிருபிக்கிற ஓளவு நிறுத்தப்பட்டாலும், முழு அளவு நிறுத்தப்படவில்லை. டாக்டர்கள் காலத்தில் பணியாற்ற வராமல் சில பேர் காலங் கடந்து வருகிற முறை கட்டுப்படுத்தப்படாமல், முழு அளவு தடுக்கப்படாமல் இருக்கின்றது. அதே போல, இன்னும் சொல்லப் போனால், மருத்துவ மனைகளில் பணியாற்றுகிறவர் தங்களுடைய பொறுப்பை உணர்ந்து பணியாற்றுவதற்கு வேண்டிய கடமையுணர்ச்சியை அவர்களுடைய மனதிலே தோற்றுவிக்க முடியவில்லை. இவையெல்லாம் மனிதனுடைய குறைகள், மக்களுடைய குறைகள். இவைகள் இப்படிப்பட்ட துறைகளிலே புகுந்துகொண்டிருக்கின்றன. இவைகளை நீக்குவதற்கு, மாற்றுவதற்கு மாண்புமிகு உறுப்பினர்கள் பெருமுயற்சி எடுத்துக் கொள்ள வேண்டும். வெறும் அரசியல் தொண்டு பொதுத் தொண்டாகாது. சமுதாயத்தின் நல்வாழ்விற்கான தொண்டில் எல்லோரும் ஈடுபட வேண்டும். இவைகளைத் திருத்துவதற்கு, மாற்றுவதற்கு, இந்தப் பணியில் ஈடுபடுத்திக் கொள்ள அத்தனை பேரும் பொறுப்பேற்றுக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். டாக்டர்களாக இருப்பவர்கள் ஒரு இடத்தில் சில ஆண்டுகள் வேலை செய்தால், அவர்கள் அங்கேயே இருக்க வேண்டுமென்ற கருத்து ஒரு சாராரிடத்திலே வலுப்பெற்று விடுகிறது. வேறிடத்திற்கு அவர்களை மாற்றினால், அப்படி மாற்றக் கூடாது என்று கேட்கிற மனப் பான்மை இருக்கிறது. அதே போன்று ஓராண்டு, இரண்டாண்டு பணியாற்றிய டாக்டர்களை அவர்கள் இருக்கின்ற ஊர்களை விட்டு வேறு ஊர்களுக்கு மாற்ற வேண்டுமென்று அரசியல் காரணங்களாலும், வேறு தனிப்பட்ட காரணங்களாலும் கேட்கிறார்கள். அரசாங்கத்திடத்திலே கூறுகின்ற காரணங்கள் வேறு; உண்மையான காரணங்கள் வேறு. உண்மையான காரணங்கள் வெளியிடப்படுவதில்லை. அவரவர்கள் மனப்பாங்கிற்குத் தக்கபடி டாக்டர்களை மாற்ற வேண்டுமென்று கோருவது, டாக்டர்களை நிறுத்த வேண்டுமென்று கோருவது போன்ற கோரிக்கைகள் எழுப்பப்படுகின்றன. இவற்றையெல்லாம் மெல்ல, மெல்லக் களைய முடியுமே தவிர, உடனடியாகக் களைய முடியாது, ஒழிக்க முடியாது. சாதாரண முள் காலில் குத்திவிட்டால், இழுத்தால் வந்து விடும். ஆனால் கருவை முள் காலிலே குத்திவிட்டால், அதை இழுத்தால் எளிதில் வந்து விடாது. கருவை முள்ளில் ஒரு வகைவு இருக்கும். இழுத்தால் அது ஒடிந்து உள்ளேயே தங்கிவிடும். அதனால் கருவை முள்ளை எடுப்பதற்கு ஒரு நண்பனை அழைத்து பக்குவமாக, மெல்ல எடுக்கச் சொன்னால் காலும் நோகாமல், முள்ளும் ஒடியாமல் வெளியே எடுக்க முடியும். இல்லாவிட்டால் முள்ளின் மூளை உடைந்து விடும். சுகாதாரத் துறையில் உள்ள கேடுகள் வளைந்த கருவை முள் போன்றவை. அவற்றை எடுக்க எல்லோருடைய ஒத்துழைப்பும் தேவை. எல்லோரும் ஒத்துழைப்பார்களானால், எளிதில்

எடுத்து விடலாம். இது ஒரு சங்கடமான் பணிதான். அது மட்டுமல்ல. இந்த நேரத்திலே ஒன்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அரசாங்கத்தின் நிதி, அரசாங்கத்தின் வருமானம் மட்டுமல்லாமல், "வெல்பேர் பண்ட்" என்ற முறையில், லாட்டரிச் சீட்டில் கிடைக்கிற பணத்திலிருந்து 75 லட்ச ரூபாய் கடந்த ஆண்டில் சுகாதாரத் துறைக்கு ஒதுக்கப்பட்டது. 25 லட்ச ரூபாய் சென்னையில் உள்ள பெரிய மருத்துவ மனையில் சில பிரிவுகளை உயர்த்துவதற்கும், சில கருவிகள் வாங்குவதற்கும், சில பிளாக்குகள் கட்டுவதற்கும் ஒதுக்கப் பட்டது. 50 லட்ச ரூபாய் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் 2, 3 லட்சம் என்று ஒதுக்கப்பட்டு பல திட்டங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கின்றன. தஞ்சையிலே அவுட் பேஷண்ட்டுகளுக்காக ஒரு கட்டடம் கட்டுவதற்கு ஒரு திட்டம் போட்டு, 1971-72-ம் ஆண்டுத் திட்டத்தில் அதற்கான நிதி ஒதுக்கம் செய்யப்பட்டு செகண்ட் பார்ட் என்பதிலே இடம் பெற்றிருக்கிறது. தஞ்சை மாவட்டத்திற்குச் சென்றிருந்தபோது, கலெக்டர் அவர்களைச் சந்தித்தபோது, வெல்பேர் பண்டிலிருந்து எவ்வளவு தொகை ஒதுக்கப்படுகிறதோ அதற்குச் சமமான தொகையை உள்ளூர் மக்களிடத்திலிருந்து வசூலிக்க வேண்டும். இரண்டு நிதியும் இருந்தால்தான் பெருமளவிற்குக் காரியங்கள் செய்ய முடியும். நாங்கள் தருகிற பணத்தை மட்டும் வைத்துக்கொண்டு மருத்துவ மனைகளை 15 ஆண்டுகளானாலும் முழு அளவு கட்ட முடியாது என்று சொன்னேன். நான் சொன்னதைக் கலெக்டர் அவர்கள் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். இதே கருத்தை எல்லா மாவட்டக் கலெக்டர்களிடத்திலும் தெரிவித்திருக்கிறேன். அந்த முறையில் இந்தக் கடமைகளை நிறைவேற்ற வேண்டும்.

5-40 p.m. கிராமப்புறங்களுக்குச் செல்கிற டாக்டர்களுக்கு அதிகச் சம்பளம் தர வேண்டுமென்று சொல்கிறார்கள். அது அவ்வளவு பொருத்தமான காரியமல்ல. ஆனால் கிராமப்புறங்களில் பணியாற்றுகிற டாக்டர்களுக்கு வீடுகள் கட்டித் தருவதற்கு முயற்சிகள் தொடர்ந்து நடைபெறும். இரண்டாண்டுகள் கிராமப் புறங்களில் பணியாற்றி விட்டால், மூன்றாவது ஆண்டு நடக்கிறபோது நகரத்திற்கு அழைத்துக்கொள்ளலாம். பொதுவாக இது விரும்பத்தக்கதல்ல. கிராமப் புறத்தில் அவர்களுக்குப் பயிற்சி அளிக்க முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டும். அந்த முறையிலே தான் மொபைல் யூனிட்டுகள் ஏற்படுத்தப் படுகின்றன. கும்மிடிப்பூண்டியில் மொபைல் யூனிட் ஒன்று ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. இதில் மெடிகல் காலேஜ் ஆஸ்பத்திரி மாணவர்கள், 40 பேர், 50 பேர் கிராமப் பகுதிகளுக்குச் சென்று அந்தப் பகுதியில் உள்ள நோய்களை அறிந்துகொள்வதற்கும், பயிற்சி அளிப்பதற்கும் வகை செய்யப்பட்டிருக்கிறது. பொதுவாக இந்த மொபைல் யூனிட்டுகள் கிராமங்களை விட்டு வேகமாக நகரக் கூடியவைகளாக இல்லை. நடமாடும் மருத்துவ மனையை நகர முடியாதபடி சுற்றிச் சூழ்ந்து விடுகிறார்கள். அதனால் நகரும் மருத்துவ மனை நகராத மருத்துவ மனையாகி விடுகிறது. மூன்று, நான்கு மாதங்கள் ஒரே இடத்தில் இருக்கும் நிலைமைகள் ஏற்பட்டு விடுகின்றன. 10 மைல் சுற்றளவிற்குள் உள்ள கிராமப் புறத்தில் உள்ள மக்களுக்கு வைத்திய உதவிகளை இதன் மூலம் அளிக்க முடிகிறது. சித்தரஞ்சன் மொபைல் ஆஸ்பத்திரி என்ற இந்த நடமாடும் மருத்துவ மனைக்கு மத்திய அரசு 3 லட்ச ரூபாய் "கொண்டு எக்ஸ்பென்டிசர்" க்குக் கொடுக்கிறது. நடைமுறைச் செலவுகளுக்கு ஏறத்தாழ 2 லட்ச ரூபாய்களை மாநில அரசு ஒப்பளித்திருக்கிறது. மத்திய அரசிலிருந்து



டாக்டர் துரைசாமி என்ற அட்வைசர் இங்கு வந்திருந்தபோது, ஒவ்வொரு மெடிகல் காலேஜுக்கும் ஒரு மொபைல் டிஸ்பென்சரி ஏற்படுத்தும் திட்டத்தைத் தருமாறு கேட்டுக்கொண்டார். மத்திய சர்க்கார் அதற்கு நிதி உதவி செய்யும் என்ற நம்பிக்கையைத் தெரிவித்தார். இந்தக் கருத்தை வரவேற்கிறேன். கிராமத்தில் பணியாற்றுகிற, மருத்துவ வசதி வழங்கி வருகிற டாக்டர்களுக்கு நான் ஒன்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அவர்கள் மருத்துவ நிலையங்கள் கட்டிக்கொள்வதற்கு "டமில்நாடு இண்டஸ்ட்ரியல் இன்வெஸ்ட்மெண்ட் கார்ப்பொரேஷன்" என்ற அமைப்பு 20 ஆயிரம் ரூபாயும், கருவிகள் வாங்கிக் கொள்வதற்கு 10 ஆயிரம் ரூபாயும், கடன் தொகை தருவதற்கும் முன்வந்திருக்கிறார்கள்.

டாக்டர் பட்டம் பெற்ற 200 பேர் இன்றைக்கு வேலையில்லாமல் இருக்கிறார்கள். இந்த ஆண்டு 1,787 பேர் படித்துக்கொண்டிருக்கிறார்கள். அத்தனை பேருக்கும் வேலை கொடுப்பதென்றாலும், அரசாங்கத்தில் வேலையில்லை; வைத்தியத் துறையில் போதுமான பெண்கள் இல்லை. எனவே இப்படி வேலையில்லாத டாக்டர்களில் பெண்களில் 30 பேர்களுக்கு வேலை கொடுக்கப்பட்டிருக்கிறது. இப்படி வேலை இல்லாது இருக்கிற டாக்டர்களுக்கு உதவி செய்வதற்காக அசிஸ்டெண்ட் டாக்டர்ஸ் என்ற பதவியைத் தலைமை மருத்துவ மனைகளில், மாவட்ட மருத்துவ மனைகளில் ஏற்படுத்த அரசு அறிவித்திருக்கிறது. இந்த ஆண்டு 100 டாக்டர்கள் இப்படிப் பதவிகளில் அமர்த்தப் படுவார்கள். அதே போல நர்ஸ் துறையில் பயிற்சி பெற்று வேலையில்லாமல் பலர் இருக்கின்ற காரணத்தால், அவர்களும் வேலை வாய்ப்புப் பெறுவதற்கு வசதி செய்து கொடுக்க அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறது. அதன்படி 200 பேர் புதிதாக வேலை பெறுவர்.

இந்தச் சுகாதாரத் துறை உண்மையிலேயே நல்ல முறையில் செயல் பட்டால் தான் மக்களுக்கு நல்வாழ்வு வழங்க முடியும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. எந்த அளவிற்குப் பொது மக்களுக்குப் பணியாற்ற முடியுமோ, அந்த அளவிற்கு இந்தத் துறை உயிரோடு செயல்படும் என்ற நம்பிக்கையைத் தெரிவித்து, ஒரு சிறு விளக்கம் சொல்ல விரும்புகிறேன். இங்கே உயர்திரு கிருஷ்ணசாமி நாயுடு, திரு. ராஜாராம் போன்றவர்கள் வயதிலே பெரியவர்கள். திரு. சா. கணேசன் போன்றவர்கள் வயதிலே பெரியவர்கள் என்று சொல்வதற்குக் காரணம் வயதானவர்கள் குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தை அப்படியே எதிர்க்காமல் அதிலுள்ள நியாயத்தை ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். இளைஞர்கள் மட்டும் தான் குடும்பக் கட்டுப்பாடு செய்துகொள்ள வர வேண்டும் என்பதல்ல. பெரியவர்களும், சமுதாயத்தில் பொறுப்பு மிக்கவர்களும் இதற்கு வழி காட்ட வேண்டும். இந்த மேலவை உறுப்பினர்களில் இளைஞர்களாக இருப்பவர்கள் குடும்பக் கட்டுப்பாடு வெற்றி பெற முன் வந்து ஒத்துழைக்க வேண்டும். இளைஞர்கள் என்று ஏன் சொன்னேன் என்றால், நானும் வயதானவர்கள் கட்டத்தில் இருக்கிறேன். குடும்பக் கட்டுப்பாட்டு முறையை ஏற்றுக்கொண்டு, செயல்படுத்த நாட்டு மக்களுக்கு ஊக்கம் உண்டாக்க வேண்டுமென்றும், அதற்கு நாம் வழிகாட்டி களாக மாறினால்தான் நாடு நல்ல வழி நடக்கும் என்பதையும் கூறி காலம் இடம் தராததால் இத்தோடு என் உரையை முடித்துக்கொள்கிறேன். 5-45 p.m.

வணக்கம்.

MR. CHAIRMAN: The House will now adjourn and meet again at 4 p.m. tomorrow.

The House then adjourned.

[26th July 1971

## VI. PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE

### A. *Statutory Rules and Orders.*

* 170. Notification issued with Roc. No. 23370/70-P1, dated the 2nd March 1970 in regard to exclusion of certain areas from the existing Thadicheri Panchayat in Periyakulam taluk of Madurai District for constitution into a separate panchayat by name Srirengapuram. (Laid on the table of the House under section 179 (4) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958).

* 171. Notification issued with G.O. Ms. No. 1626, Agriculture, dated 28th May 1971, in regard to certain notification issued under section (3) of the Tamil Nadu Agricultural Produce Markets Act relating to regulation of trade in cotton in Dharmapuri District. [Laid on the table of the House under section 29 (4) of the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959 (Tamil Nadu Act 23 of 1959).]

* 172. Notification issued with Roc. No. 98121/70-E5, dated the 25th August 1970, in regard to extension of certain provisions of the Tamil Nadu District Municipalities Act, 1920 to entire area of Pullambadi Town Panchayat in Tiruchirappalli District. [Laid on the table of the House under section 179 (4) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958).]

* 173. Notification issued with G.O. Ms. No. 836, Home, dated the 24th March 1971, in regard to amendments to the Madras Motor Vehicles Rules, 1940. [Laid on the table of the House under section 133 (3) of the Motor Vehicles Act, 1939 (Central Act IV of 1939).]

* 174. Audit Report on the Annual Accounts of the Tamil Nadu Electricity Board for the year 1969-70. [Laid on the table of the House under section 69 (5) of the Electricity Supply Act, 1948 (Central Act 54 of 1948).]

### B. *Reports, Notifications and Other papers.*

*127. Erratum issued with Roc. No.1 81290/69-P1, dated the 6th March 1970, to the notification relating to exclusion of Maliakkadu area for constitution of a separate panchayat.

*128. Report of the Committee on Estimates on Guest House maintained by the Public Department for the year 1971-72 which was presented to the Assembly on 23rd July 1971.

† 129. Policy Note on Dairy Development Department 1971-72. (English and Tamil).

† 130. Policy note on capital outlay on schemes of Government Trading (Food Demand) English and Tamil.

† 131. Policy Note on Welfare of Scheduled Tribes and Castes and other Backward Classes 1971-72 (Tamil).



26th July 1971]

132. Answers to unstarred Questions Nos. 5 to 26.

£ 133. Returns of Assets of the following Members of the Tamil Nadu Legislative Council as on the 31st March 1971 (placed on the table in pursuance of the Resolution passed by the Tamil Nadu Legislature on the 28th August 1969) :—

1. Thiru T. S. Arunuchalam.
2. Thiru V. Isvarmurti.
3. Thiru T. K. Subbiah.
4. Thirumathi S. Manjubhashini.
5. Thiru C. R. Kolappa.
6. Thiru S. A. Rajamanickam.
7. Thavathiru Deivasigamani Arunachala Desikar (Kundrakkudi Adigalar).
8. Thiru K. Ramakrishna Achari.

## APPENDIX 1.

(*Vide* answer to unstarred Question No. 18 on page 28.)
Names of the villages and the area registered are given below :—

| *Serial number.* | *Name of the village.* | *Registered area (in acres).* |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1 | Sirumiangudi | 141·49 |
| 2 | Edangimangalam | 42·21 |
| 3 | Pinnavasal | 10·57 |
| 4 | Mottupatti | 65·34 |
| 5 | Komakudi | 61·92 |
| 6 | Thinniam | 86·84 |
| 7 | Sembari | 109·36 |
| 8 | Mullal | 101·69 |
| 9 | Nethamangudi | 14·00 |
| 10 | Alangudi | 25·07 |
| 11 | T. Kallivikkudi | 13·70 |
| 12 | Manakkal | 37·37 |
| 13 | Jangana Rajapuram | 17·63 |
| 14 | Koppali | 36·54 |
| 15 | Kattur | 6·31 |
| 16 | Kanganalpuram | 12·12 |
| 17 | Govindapuram | 4·32 |
| 18 | Anbil Padugai | 13·63 |
| 19 | Natarajapuram | 2·72 |
| 20 | Konnaikudi | 45·44 |
| 21 | Valuthiyur | 46·77 |
| 22 | Anbil Padugai | 18·15 |
| 23 | Sengariyur | 27·63 |

£ Laid on the table of the House on 23rd July 1971.

| Serial number | Name of the village. | Registered area (in acres.) |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 24 | Kurichi | 26·03 |
| 25 | Vengatachalapuram | 67·68 |
| 26 | Anbil | 79·11 |
| 27 | Nanimangalam | 95·42 |
| 28 | Abishepuram | 47·60 |
| 29 | Paramasivapuram | 9·93 |
| 30 | Sathamangalam | 45·70 |
| 31 | Anathimadu | 57·29 |
| 32 | Seshasamudram | 36·89 |
| 33 | Pudur Uttamanur | 75·87 |
| 34 | Kilmarimangalar | 43·82 |
| 35 | Mahilambadi | 13·41 |
| 36 | Siruthuyur | 180·88 |
| 37 | Vellanore | 41·20 |
| 38 | E. Mangalam | 53·22 |
| 39 | N. Sanganthi | 4·00 |
| 40 | P. Sanganthi | 108·07 |
| 41 | Pullambadi | 149·62 |
| 42 | Vellanore East | 4·43 |
| 43 | Cuddalore | 5·80 |
| 44 | V. Puram | 18·06 |
| 45 | P. Sanganthi | 4·00 |
| 46 | Malvai | 0·60 |
| 47 | Poovalur | 97·35 |
| 48 | Pudukudi | 26.83 |
| 49 | Tharanoor | 27·15 |
| 50 | Agalananallur | 46·43 |
| 51 | Neikkuppai | 178·76 |
| 52 | R. Valavanoor | 15·09 |
| 53 | Irungallur | 8·96 |
| 54 | Porathakudi | 5·98 |
| 55 | Pambaramsuthy | 78·20 |
| 56 | Micalpatty | 41·41 |
| 57 | Nerunchalakudi | 33·82 |
| 58 | Nagar | 88·31 |
| 59 | Pallivail | 3·57 |
| 60 | Thirumanamadu | 68·53 |
| 61 | Kasani Korai | 25·83 |
| 62 | Thandan Korai | 5·82 |
| 63 | Pachampattai | 58·67 |
| 64 | T. Valavanoor | 43·90 |
| 65 | Keelavaladi | 18·67 |
| 66 | Sirumaruthur | 9·35 |
| 67 | Kabilpuram | 14·45 |
| 68 | Veiayathapuram | 11·55 |
| 69 | Melapungavoor | 10·13 |
| 70 | Keelaperungavoor | 6·29 |
| 71 | Veragulur | 1·00 |
| 72 | Kariayamanickam | 53·32 |
| 73 | Edumali | 11·35 |



| Serial number | Name of the village. | Registered area (in acres). |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 74 | Pervalanallur | 197·74 |
| 75 | Kookur | 244·70 |
| 76 | Edathumangalam | 22·11 |
| 77 | Peryavar seeli | 9·44 |
| 78 | Mylrengalam | 7·67 |
| 79 | Pallapuran | 28·48 |
| 80 | Kumulur | 52·06 |
| 81 | T. Kurichi | 23·72 |
| 82 | T. Mettur | 22·38 |
| 83 | Peruvallapur | 7·17 |
| 84 | K. K. Nallur | 6·27 |
| 85 | Kannakudi | 13·09 |
| 86 | Puthanampatti | 2·90 |
| 87 | Thanoor | 2·68 |
| 88 | T. Kalathur | 1·86 |
| 89 | Nackasalem | 13·28 |
| 90 | Siruvailur | 0·88 |
| 91 | Kagalapuram | 1·42 |
| 92 | Maramareddipalayam | 4·15 |
| 93 | Sanamangalam | 1·00 |
| 94 | Thirupattur | 0·65 |
| 95 | Palayur | 19·87 |
| 96 | Kottathur | 15·00 |
| 97 | Pudamma Palayam | 1·77 |
| 98 | Amoor | 7·49 |
| 99 | Chinnakodunthurai | 13·00 |
| 100 | Veeramapatti | 2·00 |
| 101 | Thinnakonam | 2·00 |
| 102 | Thandalai | 2·00 |
| 103 | Santhanapatti | 2·00 |
| 104 | Manaparai | 2·30 |
| 105 | Moovanoor | 0·75 |
| 106 | Kannukulam | 4·80 |
| 107 | Kuruvampatti | 1·75 |
| 108 | Peramangalam | 2·37 |
| 109 | Pulivalam | 3·00 |
| 110 | Muthaiyampalayam | 3·00 |
| 111 | Nalliampalayam | 3·06 |
| 112 | Kunnupatti | 2·00 |
| 113 | Sorathur | 1·04 |
| 114 | Kothampatti | 6·28 |
| 115 | Kannanor | 6·50 |
| 116 | Thirukkavalur | 3·24 |
| 117 | Vedathalampatti | 37·50 |
| 118 | Mahchampatti | 1·00 |
| 119 | Vengaikurichi | 19·52 |
| 120 | Panaiyur | 12·50 |
| 121 | Poigaipatti | 10·75 |
| 122 | Pabbanasari | 2·59 |

| Serial number | Name of the village. | Registered area (in acres). |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 123 | Karayampatti | 3·47 |
| 124 | Periyamamapatti | 2·00 |
| 125 | Alipatti | 10·92 |
| 126 | Edayampatti | 4·75 |
| 127 | K. Udayapatti | 3·50 |
| 128 | Montipatti | 1·00 |
| 129 | Nallampillai Pudur | 3·00 |
| 130 | Poyamani | 14·76 |
| 131 | Ryampatti | 1·00 |
| 132 | Ammayapuram | 7·50 |
| 133 | Nallanpillai | 12·35 |
| 134 | Valamadu | 1·00 |
| 135 | Kottaipatti | 9·35 |
| 136 | Karupur | 16·50 |
| 137 | Naryiampatti | 2·00 |
| 138 | Kuthirikuttipatti | 2·00 |
| 139 | Muthudayanpatti | 8·25 |
| 140 | Ramagoundayapatti | 4·00 |
| 141 | Kovipatti | 7·50 |
| 142 | Somuthiram | 2·50 |
| 143 | Kurichipatti | 2·50 |
| 144 | Kudumpalur | 2·50 |
| 145 | Thirumalaipatti | 10·50 |
| 146 | Pothapatti | 4·00 |
| 147 | Usilampatti | 3·00 |
| 148 | Rajakuri | 7·45 |
| 149 | Poruvai | 1·50 |
| 150 | Rasilipatti | 3·00 |
| 151 | Thavakkarpatti | 4·00 |
| 152 | Vengaikurichipudur | 4·00 |
| 153 | Poigaipatti | 2·34 |
| 154 | Vaiyampatti | 12·95 |
| 155 | Sackampatti | 1·50 |
| 156 | Elangakurichi | 22·50 |
| 157 | Iyenreddiapatti | 4·05 |
| 158 | Kumaravadi | 16·22 |
| 159 | Thattarapatti | 4·00 |
| 160 | Vaiyamalaipalayam | 3·80 |
| 161 | Kurumapatti | 1·50 |
| 162 | Elamanam | 5·75 |
| 163 | Moorampatti | 2·00 |
| 164 | Thoppupatti | 2·00 |
| 165 | Alathur | 1·00 |
| 166 | Chettiyapatti | 4·62 |
| 167 | Myilampadi | 6·00 |
| 168 | Thangamalpatti | 4·00 |
| 169 | Karipackam | 58·47 |
| 170 | Thirumanoor | 39·99 |
| 171 | Keelapalur | 23·88 |



| Serial number. | Name of the village. | Registered area (in acres). |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 172 | Avunimangalam | 4·69 |
| 173 | Sanapatty | 32·66 |
| 174 | Malakarupur | 6·40 |
| 175 | Palayapadi | 13·30 |
| 176 | Malapalur | 1·64 |
| 177 | Aranmanikurichi | 6·41 |
| 178 | Mudikondan | 3·11 |
| 179 | Keelakulithur | 9·02 |
| 180 | Varanavasi | 6·33 |
| 181 | Ammakulam | 4·51 |
| 182 | Mallur | 0·50 |
| 183 | Keelakavattankurichi | 2·04 |
| 184 | Pudur Palayam | 8·30 |
| 185 | Kovandakurichi | 11·49 |
| 186 | Veeragalur | 6·80 |
| 187 | Alamupackam | 8·16 |
| 188 | Thirumalapadi | 44·25 |
| 189 | Kandirathitham | 20·10 |
| 190 | K. Mettutham | 13·20 |
| 191 | Vaithiyanathapuram | 15·06 |
| 192 | Packyanathapuram | 3·13 |
| 193 | Kulamanickam | 5·99 |
| 194 | Sanbiyakudi | 1·50 |
| 195 | Lilanthakudam | 5·04 |
| 196 | Alampadi | 4·34 |
| 197 | Konneripalayam | 10·72 |
| 198 | Perambalur | 36·00 |
| 199 | Karunbaloor | 50·45 |
| 200 | Sengunam | 1·75 |
| 201 | Pudunaduvalur | 1·80 |
| 202 | Pudunaduvalur | 5·87 |
| 203 | K. Palayur | 1·80 |
| 204 | Alambadi | 13·36 |
| 205 | Elambabaloor | 18·25 |
| 206 | Sengari | 2·00 |
| 207 | Pathimapuram | 2·00 |
| 208 | Erayasanthiran | 7·92 |
| 209 | Anukur | 4·00 |
| 210 | Mohamedpattinam | 7·00 |
| 211 | Melapuliyur | 3·32 |
| 212 | Puthukurichi | 4·80 |
| 213 | Thandapady | 4·65 |
| 214 | Vambavoor | 8·20 |
| 215 | Vadukumathevai | 3·80 |
| 216 | Vepanthattai | 2·30 |
| 217 | Siruvachoor | 7·00 |
| 218 | Naranamangalam | 2·66 |
| 219 | Rengunathapuram | 2·00 |
| 220 | Virakudi | 1·09 |

| Serial number. | Name of the village. | Registered area (in acres). |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 221 | Visayagocalapuram | 1·60 |
| 222 | Thiramai | 3·55 |
| 223 | Aranarai | 8·75 |
| 224 | Kalarampatti | 5·80 |
| 225 | Ammapalayam | 1·50 |
| 226 | Vilamuthur | 0·66 |
| 227 | Duraimangalam | 1·50 |
| 228 | Annamangalam | 1·50 |
| 229 | Poolambadi | 41·34 |
| 230 | Thonananrorai | 17·51 |
| 231 | Thalaithalai | 50·69 |
| 232 | Vengalam | 6·26 |
| 233 | Arunbavoor | 78·28 |
| 234 | A. Mattur | 64·31 |
| 235 | Udumbian | 18·10 |
| 236 | W. P. Palayam | 16·74 |
| 237 | Kadampur | 11·15 |
| 238 | P. Pudur | 9·93 |
| 239 | Vijayapuram | 3·00 |
| 240 | Venganoor | 4·00 |
| 241 | Karaiyanaickanur | 5·12 |
| 242 | Kanniyakudi | 5·27 |
| 243 | Keelavangaram | 7·68 |
| 244 | Valyur | 12·36 |
| 245 | Sirugudi | 3·00 |
| 246 | Ayikudi | 5·53 |
| 247 | Thathamangalam | 3·01 |
| 248 | Palayur | 1·80 |
| 249 | Akkaripatti | 4·91 |
| 250 | Dorrimangalam | 1·92 |
| 251 | Malavangiram | 1·00 |
| 252 | Ulutharkudi | 1·03 |
| 253 | Reddimankudi | 13·95 |
| 254 | Thurapancheeli | 15·70 |
| 255 | Vengankudi | 1·26 |
| 256 | Pichandarkovil | 9·80 |
| 257 | Thilampatti | 2·65 |
| 258 | V. Duraiyur | 4·01 |
| 259 | S. Kannanar | 13·72 |
| 260 | Pallivadi | 0·93 |
| 261 | Mannachanallur | 6·00 |
| 262 | Madakudi | 2·00 |
| 263 | Thirumpalayam | 2·97 |
| 264 | Inam Samayapuram | 12·08 |
| 265 | Ponnambalayam | 9·10 |
| 266 | Maruthur | 9·77 |
| 267 | Palur | 0·62 |
| 268 | Alakgiamanavalam | 9·60 |
| 269 | Veerathanallur | 4·31 |



| Serial number. | Name of the village. | Registered area (in acres). |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 270 | Manickapuram | 14·20 |
| 271 | Eanchoor | 2·80 |
| 272 | Enamkalapalayam | 8·00 |
| 273 | Keeranur | 10·52 |
| 274 | Kalanavoor | 4·75 |
| 275 | Nallur | 3·33 |
| 276 | Veerampatti | 1·25 |
| 277 | Mathur | 12·00 |
| 278 | Madampapatty | 2·04 |
| 279 | Visallur | 13·00 |
| 280 | Kelaiyur | 2·60 |
| 281 | Udayalipatti | 2·87 |
| 282 | Muthampatty | 6·89 |
| 283 | Ordukanpatti | 2·00 |
| 284 | Nanchur | 16·00 |
| 285 | Kuluthur | 2·00 |
| 286 | Odukkur | 3·65 |
| 287 | Maruthampatti | 8·05 |
| 288 | Melampatti | 8·50 |
| 289 | Sathyamangalam | 4·00 |
| 290 | Melur | 3·00 |
| 291 | Vellaloor | 4·00 |
| 292 | Annavasal | 5·81 |
| 293 | Mathyanallur | 3·50 |
| 294 | Mullur | 17·00 |
| 295 | Vedevalam | 3·00 |
| 296 | Koppanapatty | 3·49 |
| 297 | Puliyur | 1·50 |
| | Total | 5,394·41 |

## APPENDIX II.

(*Vide* answer to unstarred Question No. 19 on page 28.)

In G.O. (P( No. 1128, Revenue, dated 31st May 1968, orders had been passed exempting the yarn exported outside the State from the payment of sales tax, with a view to reducing the glut in the yarn market and to encourage the movement of yarn outside the State. Though this concession was cancelled recently, orders have since been issued in 1970 re-introducing the concession on Sales Tax for exported yarn.

As an incentive to the Industrialists and to minimise their need for capital in initial stages, Government have extended the following concessions in November 1969 :—

In the case of Developed Plots at Ambattur, the cost per acre has been reduced from Rs. 30,000 to Rs. 20,000.

In the case of Developed Plots at Guindy, the cost of the land is to be paid in six instalments.

As regards the Developed Plots in the mofussil centres, namely Madurai, Tiruchirappalli and Mettur, in addition to the existing procedure of collecting the cost in three instalments, Government have also approved the collection of the cost in six annual instalments. Another new incentive now offered in the case of Mofussil plots is that the lands could be allotted to industrialists on long term lease basis for a period up to 95 years, the annual lease amount being only 6 per cent of the cost of the Developed plots Then lessee can, however, exercise his option within the first ten years of lease period to purchase the plot on outright basis.

The Government in March 1970 have set up an autonomous body called Tamil Nadu Small Industries Development Corporation Ltd. with the following main objectives :—

1. The effective procurement and equitable distribution of essential raw materials required by Small Scale Industrial units.

2. Setting up of a recognised import house as a wing of the Corporation for consolidating the import licences of small scale industries and effecting imports against them ;

3. Offering technical consultancy for new entrepreneurs who desire to set up small industries.

4. To strengthen the capital base of small scale industries by participating in the capital structure ;

5. Assistance in the marketing of the products of the small industries by building up a competent and comprehensive distribution organisation, and exploring the possibilities of organised export.

6. Export promotions.

7. Supply of machinery on hirepurchase.

In September 1969, the Government have granted a reduction of 15 per cent in power tariff for the new industries.

## APPENDIX III.

(*Vide* Answer to unstarred Question No. 20 on page 28.)

## THE TAMIL NADU STATE INDUSTRIAL CO-OPERATIVE BANK LTD.

1. Messrs. Madras Convertors & Industries.
2. Messrs. Vijayam Brothers.
3. Messrs. Madras Paper Converters and Allied Industries.



5. Messrs Selvan Enterprises (Private) Limtied (I).
   Messrs. Selvan Enterprises (Private) Limited (II).
   Messrs. Selvan Enterprises (Private) Limited (III).
   Messrs. Selvan Enterprises (Private) Limited (IV).
6. Messrs. K. P. Swamy Stationery Emporium.
7. Messrs. Free India (Private) Limited.
8. Messrs. Rajasekar Industries.
9. Messrs. Srinivasa Industrial Corporation.
10. Messrs. Best Pulverising Mills.
11. Messrs. Lakshmi Small Spinning Mills.
12. Messrs. Athreya Incorporations (formerly Messrs Seet lakshmi Industries).
13. Messrs N. Balasubramaniam.

### CASH CREDITS.

14. Messrs M. Kannu & Company.
15. Messrs. Hems Photographic Industries.

# THE TAMIL NADU LEGISLATIVE COUNCIL.

---

**Tuesday, the 27th July 1971.**

The House met in the Council Chamber, Fort St. George, at four of the clock, MR. CHAIRMAN (THE HON. THIRU C. P. CHITRARASU) in the chair.

## I—QUESTIONS AND ANSWERS.

## STARRED QUESTIONS.

**MR. CHAIRMAN**: Questions 246 to 249 are **postponed.**

*Taxes for Hotels*

* 250 Q.—THIRU V. ISVARMURTI: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether the Government have received any representations from the Hotel Owners' Association regarding the reduction in taxes for Hotels for promotion of tourism in the State; and

(*b*) if so, the details thereof?

ஓட்டல்கள் மீதான வரி

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி: மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இம்மாநிலத்தில் சிறுலா வசதிகளை அதிகப்படுத்த ஓட்டல்கள் மீதான வரியை குறைப்பது குறித்து ஓட்டல் உரிமையாளர்கள் சங்கத்திடமிருந்து ஏதேனும் கோரிக்கை அரசுக்கு வந்துள்ளதா?

(இ) ஆமெனில், அதன் விவரம் யாது?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்**: (அ) ஆம்.

(இ) அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி: தலைவர் அவர்களே, ஓட்டல் சொந்தக்காரர்கள் இந்த வரிகளைத் தளர்த்துவதைப்பற்றி அரசுக்கு முறையீடு செய்திருக்கிறார்களா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்**: தலைவர் அவர்களே, சில உணவகங்கள், தங்குமிடங்களின் ஆண்டு மதிப்பீடானது பல படிக்கு உயர்த்தப்பட்டுள்ளதென்பதையும், வாடிக்கைக்காரர் அறைக்கு வாடகையாக விடப்படும் அறைகளின் மூலம் கிடைக்கும்

வாடகையிலிருந்து, தங்குமிடங்களை நிர்வகிப்பதற்குரிய பல்வேறு செலவினங்களைக் கருத்திற் கொள்ளாது தன்னிச்சையாக ஆண்டு மதிப்பீடு உயர்த்தப்பட்டுள்ளதென்பதையும் வாடகையாகப் பெறும் தொகையில் வாடகை மட்டுமே அடங்கியிராமல், அதில் வாடிக்கைக்காரர்களுக்கு அளிக்கப்படும் வசதிகளும் பணிகளும் அடங்கியுள்ளனவென்பதையும், இவற்றிற்காகும் செலவானது, ஓர் அறை மூலம் கிடைக்கும் வாடகையில் 60 சதவீதமாகிற தென்பதையும் அரசின் கவனத்திற்குக் கொண்டுவந்திருக்கின்றனர். அரசு அவர்களிடம் அதற்கான புள்ளிவிவரங்களைக் கேட்டது. அவர்கள் தர மறுக்கிறார்கள். அவை சரியாகத் தெரியாத வரையில், ஓரளவு கணக்கிட்டுத்தான் சொல்லவேண்டியிருக்கிறது. இப்போதும் கூட அவர்கள், தங்குமிடங்களில் வந்து தங்குவோரின் எண்ணிக்கை, பணிகளுக்கான செலவுகள் முதலிய வற்றினைத் தெரிவித்தால், லெவி செய்வதற்கான வசதிகளுக்கேற்ப செலவினங்களையும் கணக்கிட்டு நிர்ணயிக்க முடியும். ஆகவே அப்போதுதான் இதை மறுபடியும் பரிசீலிக்க முடியும் என்று அரசு தெரிவித்திருக்கிறது.

திரு. எஸ். முத்துசாமி: தலைவர் அவர்களே, மக்கள் வீடில்லாமல் கஷ்டப்படும்போது, சீருலா பயணிகள் விடுதிகள் என்று பல லட்சக்கணக்கான ரூபாயை மத்திய அரசு செலவழிப் பதும், மாநில அரசு செய்வதும், ஏர்-கண்டிஷன் முதலிய வசதி களோடு இவை நடைபெறுவதும் சரியா? இதை அரசு தடை செய்யுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, ஏழை எளியவர்களுக்கு வீடு வசதி செய்து தருவது என்பது வேறு. உலக நாடுகளிலிருந்து வந்து தங்குகிறவர்களுக்கு வசதி செய்து தருவது என்பது வேறு. இரண்டு பிரச்னைகளையும் ஒன்றுக்க வேண்டிய அவசியமில்லை. அதிலும் நாட்டம் செலுத்த வேண்டும். இதிலும் நாட்டம் செலுத்தவேண்டும்.

### *Technical Diploma Examinations*

* 251 Q.—THIRU G. SWAMINATHAN: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(a) whether it is a fact that the successful candidates of the various Technical Diploma Examinations held in April 1969 were not awarded their diplomas by the Director of Technical Education for over a year; and

(b) if so, the reasons for the delay?

### தொழில்நுட்ப தகுதிப் பட்டயத் தேர்வுகள்

திரு. ஜி. சுவாமிநாதன்: மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1969 ஏப்ரலில் நடைபெற்ற பல்வேறு தொழில்நுட்ப தகுதிப் பட்டயத் தேர்வுகளில் தேர்ச்சி பெற்றவர்களுக்கு



ஓராண்டுக்கு மேலாக தொழில் நுட்பக் கல்வி இயக்குநரால் தகுதிப்பட்டயங்கள் வழங்கப்படவில்லை என்பது உண்மையா?

(இ) ஆமெனில், காலதாமதத்திற்கான காரணங்கள் யாவை?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: (அ) ஆம்.

(இ) மாநில தொழில் நுட்பக் கல்வி மற்றும் பயிற்சி வாரியத் தலைவரின் மாதிரிக் கையெழுத்து, தேர்வு பெற்ற மாணவர் களுக்குக் கொடுக்கும் சான்றிதழ்களில் பொறிக்கப்பட்ட வேண்டி யிருந்தாலும், அந்த மாதிரிக் கையெழுத்து, தயாரிப்பதற்கு சிறிது தாமதம் ஏற்பட்டதாலும், மாணவர்களுக்குச் சான்றிதழ்கள் வழங்குவதில் சிறிது தாமதம் ஏற்பட்டது.

திரு. ஜி. சுவாமிநாதன்: தலைவர் அவர்களே, ஓராண்டு தாமதம் ஏற்பட்டிருக்கிறது. தகுதிப் பட்டயங்கள் இருந்தால்தான் வேலைக்குப் போகிறவர்கள் அதைக் காட்ட முடியும். வேலைக்குப் போகிற இடங்களில் அவற்றைக் கேட்பதால் அதைக் கொடுக்க முடியாத நிலையில் பலர் கஷ்டப்படுகிறார்கள். இம்மாதிரி கையெழுத்து ஸ்டாம்புக்கு ஒரு ஆண்டுகாலம் ஆகவேண்டுமோ என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: சிறு காலத்தாழ்வு ஏற்பட்டதாகச் சொல்கிறார்கள். அவ்வளவு தாமதம் ஏற்பட வேண்டிய அவசியமில்லை. ஆனாலும் வேலை வாய்ப்புகளுக்கு தகராறு ஏற்படாமல் இருப்பதற்காக "புரவிஷனல் சர்டிபிகேட்" தரப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் கூறுவதைப் போல, அவ்வளவு காலத்தாழ்வு ஏற்பட்டிருக்க வேண்டியதில்லை. இனிமேல் அப்படிப்பட்ட காலத்தாழ்வு தவிர்ப்பதற்கான நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப்படும்.

திரு. எஸ். முத்துசாமி: இதுபோன்ற சிவப்பு நாடா முறையை ஒழிக்க அரசு தீவிர நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: சிகப்பு நாடாவை எடுத்துவிட்டால், காகிதங்கள் நிற்காது, கோப்புகளில். நாடா இருந்தால்தான் கட்டி வைக்க முடியும். (சிரிப்பு)

### *School Improvement Conference*

* 252 Q.—THIRU G. SWAMINATHAN: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(a) whether it is a fact that the District Educational Officer, Dindigul has convened a School Improvement Conference during October, 1970; and

(b) whether the District Educational Officer has asked the School Teachers working in her jurisdiction to collect articles and money in connection with the same?

### பள்ளி மேம்பாட்டு மாநாடு

**திரு. ஜி. சுவாமிநாதன்:** மாண்புமிகு கல்வி உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) திண்டுக்கல் மாவட்டக் கல்வி அதிகாரி 1970, அக்டோபரில், பள்ளி மேம்பாட்டு மாநாடு ஒன்றைக் கூட்டினார் என்பது உண்மையா?

(இ) அம்மாவட்டக் கல்வி அதிகாரி, அது தொடர்பாக பொருளும் பணமும் வசூல் செய்யுமாறு தமது அதிகார வரம்பிற்குட்பட்ட பகுதியில் பணியாற்றும் பள்ளி ஆசிரியர்களைக் கேட்டுக் கொண்டாரா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** (அ) அம்மாநாடு 1971-ம் ஆண்டு சனவரித் திங்களில் நடைபெற்றது.

(இ) மாநாடு நடத்துவதற்கு உதவுமாறு ஆசிரியர்கள் வேண்டிக்கொள்ளப்பட்டனர். யாரும் கட்டாயப்படுத்தப் படவில்லை.

THIRU G. SWAMINATHAN: Sir, may I know what the target fixed by the District Educational Officer was, whether he had asked the teachers of the High Schools also to collect, and whether it was found that the target was very heavy for this conference?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, அதற்காக வரையறுக்கப்பட்ட இலக்கு என்று ஒன்றுமில்லை. ஆங்காங்குள்ள தேவை, வசதி, வாய்ப்புகளைப் பொறுத்து அந்தக் கல்விச் சீரமைப்பு மகாநாட்டைச் சிறப்பாக நடத்துவதற்கு உதவி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறார்கள். ஓரளவுக்கு எல்லோரும் உதவி செய்கிற முறை வரும்போது நன்கொடை ஓரளவுக்குக் கிடைக்கிற மாதிரி இருக்கிறது. செங்கற்பட்டு மாவட்டப் பகுதிகளில் ரூ. 80 லட்சம் அளவுக்கு நிலக் கொடையாகவும் கட்டிட கொடையாகவும் பல்வேறு வகையில் பல தரப்பினர் தந்திருக்கிறார்கள். ஆங்காங்குள்ள ஆசிரியர்கள் பள்ளியின் தேவைகளை மக்களிடம் எடுத்துச் சொல்லி, அவற்றைப் பெறவேண்டிய நிலைமையில் இருக்கிறார்கள். இவ்வளவுதான் பெற வேண்டுமென்ற இலக்கில்லை. ஆங்காங்குள்ள தேவையை ஒட்டி முடிவு செய்கிறார்கள்.

**திரு. ஜி. சுவாமிநாதன்:** பணத்தை வசூலிப்பது குறைவல்ல. ஆனால் ரூ. 32 லட்சம் வசூல் செய்யவேண்டுமென்று கல்வி அதிகாரி சொன்னதாகவும், திண்டுக்கல், பழனி, வேடசந்தூர் தாலுக்காக்களில் அவர்கள் அப்படி ரூ. 32 லட்சம் வசூல் செய்ய முடியாத நிலைமையில் கஷ்டப்பட்டதாகவும் புகார் வந்திருக்கிறது என்பதையும் எவ்வளவு தொகை அங்கே வசூல் செய்யப்பட்டிருக்கிறது என்பதையும் அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** இந்தக் குறிப்பிட்ட மாநாட்டில் எவ்வளவு தொகை வசூலாயிற்று என்ற புள்ளிவிவரம் இல்லை. உறுப்பினர் கூறுவதைப் போன்று 3 தாலுக்காக்களுக்கும் 32 லட்சம் என்று விதிப்பது அதிகமான தொகைதான். அதைப் பற்றித் தனியாக விசாரித்துப் பார்த்து, தக்க நடவடிக்கை எடுக்க அரசு முயலும்.

### *Government School for the Deaf, Thanjavur*

* 253. **Q.—THIRU G. SWAMINATHAN:** Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(a) whether it is a fact that no mechanical aids have so far been supplied to the Government School for the Deaf, Thanjavur; and

(b) if so, whether there is any proposal to supply them and from when?

### தஞ்சாவூர், அரசு செவிடர் பள்ளி

**திரு. ஜி. சுவாமிநாதன்:** மாண்புமிகு கல்வி உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தஞ்சாவூர், அரசு செவிடர் பள்ளிக்கு இயற்கை உதவிக் கருவிகள் எதுவும் இதுவரை வழங்கப்படவில்லை என்பது உண்மையா?

(இ) ஆம் எனில், அவற்றை வழங்கும் செயற்குறிப்பு எதுவும் உள்ளதா? எப்போதிருந்து அவை வழங்கப்படும்?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

**திரு ஜி. சுவாமிநாதன்:** தலைவரவர்களே, இந்த அரசு செவிடர் பள்ளிக்குத் தேவையான அதாவது செவிக்கு வேண்டிய இயற்கை உதவிக்காக எழுதியிருந்தார்கள் என்றும், கடந்த ஓராண்டு காலமாக கிடைக்கவில்லை என்றும் சொல்கிறார்கள். இதற்கு நடவடிக்கை விரைவில் எடுக்கப்படுமா? அல்லது தற்போது கொடுக்கப்பட்டுவிட்டதா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, அதற்காக 4—7—1969-ல் ரூ. 10,000 அனுமதிக்கப்பட்டது. சாமான்கள் ரூ. 4,463.08-க்கு வாங்கப்பட்டது. பிலிப்ஸ் (இந்தியா) லிமிடெட் மூலமாக ஆர்டர் கொடுக்கப்பட்டது. இந்தியா டெலிபோன் இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட்டிலிருந்து சாமான்கள் எதிர் பார்க்கப்பட்டன. அவை வருவதற்கு காலத்தாழ்வு ஏற்பட்டு இந்த ஆண்டு மார்ச் மாதம் தான் அவை கிடைத்தன. 28—5—71, 2—6—71 தேதிகளில் அந்தக் கருவிகள் பொருத்தப்பட்டன.

திரு. எஸ். முத்துசாமி : தலைவர் அவர்களே, பணியில் சேர்ந்து இடையில் செவிடர்களாகும் ஆசிரியர்களுக்கு அரசே இயந்திரக் கருவிகளை வாங்கி வழங்கும் செயற்குறிப்பு ஏதேனும் இருக்கிறதா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இப்போது அப்படிப்பட்ட செயற்குறிப்பு எதுவும் இல்லை.

THIRU G. SWAMINATHAN : Sir, are the Government aware that a sum of about Rs. 4,000 was donated by the citizens of Thanjavur Town for the purchase of a pumpset for the use of the inmates of the School and even though the money is available for the last 1½ years, sanction has not been given for the purchase by the Department?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அரசாங்கத்தினுடைய கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டால், அதுபற்றி தக்க நடவடிக்கை மேற்கொள்ளலாம்.

திரு. எம். சங்கரலிங்கம் பிள்ளை : தலைவர் அவர்களே, தஞ்சையில் செவிடர் பள்ளி இருப்பதைப்போல மற்ற மாவட்டங்களில் அரசினர் செவிடர் பள்ளி ஏதும் நடக்கிறதா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போட வேண்டும்.

### *Dr. Mathuram Ground*

*254. Q.—THIRU T. K. SUBBIAH : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(a) whether the Government are aware of the fact that political parties are not allowed to hold meetings in Dr. Mathuram Ground at Tiruchirappalli;

(b) if so, the reasons therefor; and

(c) the date from which the above situation prevails?

### டாக்டர் மதுரம் மைதானம்

திரு. டி. கே. சுப்பையா : மாண்புமிகு கல்வி உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) திருச்சிராப்பள்ளியில் உள்ள டாக்டர் மதுரம் மைதானத்தில் அரசியல் கட்சிகள் பொதுக்கூட்டம் நடத்தி அனுமதிக்கப்படாதது அரசுக்குத் தெரியுமா?

(இ) ஆம் எனில், காரணம் என்ன?

(உ) எப்போது முதல் இந்நிலை ஏற்பட்டது?



மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) கல்வி நிலையங்களுக்குரிய விளையாட்டிடங்கள், திடல்கள், கட்டிடங்கள் இவைகளில் அரசியல் கூட்டங்கள் நடக்க உபயோகிப்பதை தமிழ்நாடு கல்வி விதிகளின் விதி 81 தடை செய்கிறது.

(உ) ஜூலை 1969-லிருந்து.

MR. CHAIRMAN : Questions 255 to 259 are postponed.

### *Town Hall, Tiruchirappalli*

*260. Q.—THIRU T. K. SUBBIAH : Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state—

(a) the names of the Committee members of Town Hall, Tiruchirappalli;

(b) the date from which they are functioning as members;

(c) the persons now in charge of the maintenance of the Town Hall; and

(d) the purpose for which it is utilised?

### திருச்சிராப்பள்ளி நகர மண்டபம்

திரு. டி. கே. சுப்பையா : மாண்புமிகு உணவு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) திருச்சிராப்பள்ளி நகர மண்டப (Town Hall) கமிட்டி உறுப்பினர்கள் யார்?

(இ) எப்பொழுது முதல் இவர்கள் உறுப்பினர்களாக இருந்து வருகிறார்கள்?

(உ) நகரமண்டபம் தற்போது யாருடைய பராமரிப்பில் இருந்து வருகிறது?

(எ) அதன் உபயோகம் என்ன?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மேலவை முன் விவர அறிக்கை @ ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

MR. CHAIRMAN : Question 261 is postponed.

### *Rural Industries*

*262. Q.—THIRU V. ISVARMURTI : Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(a) whether there is any proposal with the Government to help the farmers to set up rural industries utilising the electric motors used by them in the Agriculture farms ; and

(b) if so, the details thereof?

---

* Printed as Appendix I on pages 598–599.

[27th July 1971

### கிராமத் தொழில்

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி: மாண்புமிகு கூட்டுறவு அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்கு பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) வேளாண்மை பண்ணைகளில் உழவர்கள் பயன்படுத்தி வரும் மின்சார மோட்டார்களைப் பயன்படுத்தி கிராமத் தொழில்களை அமைக்க உழவர்களுக்கு உதவும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: (அ) இல்லை.

(இ) வினவுக்கு இடமில்லை.

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி: தலைவர் அவர்களே, இந்த பம்ப் செட்டுகள் பெரும்பாலான நேரங்களில் பயன்படுத்தப்படாமல் இருக்கின்றன. பஞ்சாபில் இம்மாதிரி பம்பு செட்டுக்கு அருகில் தொழிற்சாலைகள் வைத்துக்கொள்வதற்கு ஒரு திட்டம் தயாரிக்கப் பட்டு அது வெற்றிகரமாக நடைபெறுகிறது என்று அறிகிறேன். இதை அரசாங்கம் பரிசீலித்து அதுபோன்ற வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்குமா?

THE HON. THIRU SI. PA. ADITANAR: Obviously the hon. Member has some ideas which, if forwarded to the Government and found useful, will be adopted.

திரு. எஸ். ஜெயராம ரெட்டியார்: ஏராளமான தொகை கிராமங் களில் நில வள வங்கி மூலமாக கிணறுகளை வெட்டவும் பம்பு செட்டு வைக்கவும் கொடுக்கப்படுகின்றது. இம்மாதிரி ஏதாவது ஒரு நிறுவனம் இருந்தால் நன்றாக இருக்கும். இல்லாவிட்டால் திறமையாக நடத்தத் தெரியாத இடத்தில் போய் மோட்டார் களைக் கொடுத்தால், அதைக் கெடுத்துவிடுகிறார்கள். ஆதையால் அதற்கென்று ஒரு நிறுவனம் ஏற்படுத்தப்படுமா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: தலைவர் அவர்களே, வருகின்ற 29-ம் தேதி இதைப்பற்றி விரிவாகப் பேச முடியும். இப்போது அரசினிடம் உள்ள திட்டத்தின்படி எல்லா இடங் களிலும் மூன்று போகம் விளைகிற தன்மை ஏற்படும்போது மோட்டார் சும்மாயிருக்காது. எப்போதும் வேலையிருக்கும். இதே மோட்டாரை போரடிப்பதற்கும் அல்லது கரும்பைப் பிழிவதற்கும் உபயோகிக்க முடியும்.

MR. CHAIRMAN: Questions 263 and 264 are postponed.

### *State Transport Services*

*265. Q.—THIRU M. ARUMUGASWAMI: Will the Hon. the Minister for Transport be pleased to state the impact on the State Transport Services on account of the introduction of fast moving trains from Madras City to Tirupathi?



27th July 1971]

### தமிழ்நாடு அரசு போக்குவரத்து

திரு. எம். ஆறுமுகசுவாமி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

சென்னை மாநகருக்கும் திருப்பதிக்கும் இடையே விரைந்து செல்லும் புகை வண்டிகள் விடப்பட்டதன் விளைவாக அரசு போக்குவரத்துப் பணிகள் எந்த அளவுக்கு பாதிக்கப்பட்டன?

மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன்: சென்னை மாநகருக் கும் திருப்பதிக்கும் இடையே கடுவிசை இரயில் விடப்பட்டதன் காரணமாக அரசுப் போக்குவரத்துப் பணி பாதிக்கப்படவில்லை.

திரு. ஜி. சுவாமிநாதன்: தலைவர் அவர்களே, பாதிக்கப்பட வில்லை என்று எந்த அடிப்படையில் அமைச்சர் அவர்கள் சொல் கிறார்கள்?

மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன்: வருவல் அடிப்படை யில்.

### *Awards to Conductors and Drivers*

*266 Q.—THIRU V. ISVARMURTI and THIRU M. ARUMUGASWAMI: Will the Hon. the Minister for transport be pleased to state:

(a) whether (1) conductors and (2) drivers of the State Transport Services have been permitted to accept awards from non-official associations during 1970–71 for their official performances; and

(b) if so, the details thereof?

### நடத்துனர்கள், வலவர்களுக்கு பரிசு

திரு. வி ஈஸ்வரமூர்த்தி & திரு. எம். ஆறுமுகசுவாமி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க் கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழ்நாடு அரசுப் போக்குவரத்து (1) நடத்துனர்கள் (2) வலவர்கள் ஆகியோர் அவர்களுடைய அலுவலகப் பணி களுக்காக 1970–71-ம் ஆண்டில் அரசுச் சார்பற்ற சங்கங்களிலிருந்து பரிசு பெற அனுமதிக்கப்பட்டுள்ளனரா?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன்: (அ) ஆம்.

(இ) திருவாளர்கள் என். எம். முனுசாமி, வலவர், இ. பாலகுரு, பயணிகள் வழித்துணைவர் இருவருக்கும் முயிலாப்பூர் அகாடமி ' பெரிய பதக்கங்கள் பரிசாக வழங்கியது. சென்னை ரோட்டரி சங்கத்தைச் சேர்ந்த தொழில் பணிக்குழு, வலவர் திரு. கே. நாராயணசாமிக்கு ஒரு பதக்கத்தைப் பரிசாக வழங்கியது.

[27th July 1971

*Fertilisers*

* 263 Q.—THIRU V. ISVARMURTI: Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(a) whether fertilisers are to be supplied at subsidised rates for the farmers; and

(b) if so, the details thereof?

உரங்கள்

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) உழவர்களுக்கு உரங்கள் ஈடுசெய் விலைகளில் (Subsidised rates) விற்கப்படுமா?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: (அ) & (இ) பண மான்யம் வழங்கப்படுவதில்லை. 1969-70 மத்திய வரவு செலவு திட்டத்தில் எல்லா உரங்களின் வகைகள் மீது கலால் வரியை அதிகப்படுத்தியதன் காரணமாக, இந்திய அரசு எல்லா உரங்களின் விலைகளை 1—3—1969-ல் உயர்த்தியது. இருப்பினும் மாநில அரசு, டை அமோனியம் பாஸ்பேட், கால்சியம் அமோனியம் நைட்ரேட், அமோனியம் பாஸ்பேட், அமோனியம் சுலோரைட், சூபர்பாஸ்பேட் ஆப் போட்டாஷ், என். பி. கே. காம்ப்ளெக்ஸ் போன்ற சில உரங்களை கலால் வரி அதிகரிப்பதற்கு முன்பு நிலவிய விலைகளின் படியே விற்று வருகின்றது. இச்சலுகை 31—3—1972 வரை நீடிக்கும்.

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி: இந்தத் திட்டத்தினால் மாநில அரசிற்கு எவ்வளவு ரூபாய் நஷ்டமாகுமென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: தலைவர் அவர்களே, ஏறத்தாழ இரண்டு கோடி ரூபாய் நஷ்டம் ஏற்படுகிறது.

திரு. எஸ். ஜெயராம செட்டியார்: தலைவர் அவர்களே, நான் விருதுநகர் கூட்டுறவு மார்கெட்டிங் சொசைட்டியின் தலைவராக சில ஆண்டுகளாக இருந்துவருகிறேன். எங்கள் பகுதியில் எந்த உரத்தைக் கொடுத்தாலும், எடுத்துக்கொள்கிறார்கள். இந்த என்.பி. காம்ப்ளெக்ஸ் வாங்குவதற்கு விவசாயிகள் மிகவும் தயங்குகிறார்கள். அவற்றை எங்களிடம் கொண்டுவந்து கொடுத்துவிடுகிறார்கள். அதன் மூலமாக வட்டி நஷ்டமே அதிகமாகிறது. நாங்கள் 30, 40 ஆயிரம் ரூபாய் வரையில் செண்ட்ரல் பாங்குக்குக் கொடுத்திருக்கிறோம். என்.பி. காம்ப்ளெக்ஸ் உரத்தை விவசாயிகள் வாங்கு மளவுக்கு அவர்களைத் தயார் செய்யவேண்டியிருக்கிறது. அல்லது அதை சப்ளை செய்வதில் கட்டாயப்படுத்தாமல் இருக்க வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.



27th July 1971]

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: தலைவர் அவர்களே, உரத்தைப் பொறுத்தவரையில் சொல்ல வேண்டுமென்றால், ஒவ்வொரு மாவட்டத்திற்கும், ஒவ்வொரு வட்டாரத்திற்கும் வயல்களுக்கு உரம்போடுவதில் வித்தியாசம் இருந்துவருகிறது. இப்போது தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்த வரையில், இந்த என்.பி. காம்ப்ளக்ஸ் உரத்திற்கு நல்ல கிராக்கியிருக்கிறது. திருச்சி மாவட்டத்திலும் கிராக்கியிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்த மாவட்டத்தில் அவர்களிடம் இருக்கிற இருப்பைத் தெரிவித்தால், அதைப்பற்றி நடவடிக்கை எடுக்க முயற்சிக்கிறேன்.

திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு: தலைவர் அவர்களே, சில மாதங்களுக்கு முன்னால் வரையில், நமது மாநிலக் கூட்டுறவு மார்க்கெட்டிங் பெடரேஷன் மூலமாக வரும் உரங்களின் விலை தனியார் விற்கிற விலையைவிட அதிகமாக இருந்தது. அதற்குக் காரணம் என்னவென்று தெரியவில்லை. பின்னால் அதற்கான ஏற்பாடுகளைச் செய்திருப்பார்கள் என்று நினைக்கிறேன். தனியார் விற்பனை செய்யும் உரத்திற்கான விலையைவிட சகாயமான விலையில் கூட்டுறவு மூலமாகக் கொடுக்க ஏற்பாடுகள் செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: தலைவர் அவர்களே, தனியார் துறையின் மூலமாக வழங்கப்படுகிற உரங்களின் விலை அதிகமாக இருப்பதாகக் குறிப்பிட்டார்கள். நம்முடைய கூட்டுறவுத் துறையிலிருந்து சாக்குகள் கிழிந்துபோய் உரங்கள் சரியான அளவுக்கு விவசாயிகளுக்குக் கிடைக்காத நிலை இருந்தது. அதனால் சாக்கின் கிரயமாக இரண்டு ரூபாய் வைத்து புது சாக்குகளின் மூலமாக அவற்றை மாற்றிக் கொடுக்க வேண்டுமென்பதோடு, அதனால் விவசாயிகள் 50 கிலோகிராமுக்கு பதிலாக 47, 48 என்று குறைந்த நிலையில் எடுத்துப்போவதும் தடுக்கப்பட்டிருக்கிறது. எடை அளவு சரியாக இருக்க வேண்டுமென்று உரம் குறையாமல் வைக்கப்பட்டு புது சாக்குகளில் கொடுக்கப்பட்டதால் விலை ஏற்றமாக இருந்தது. சில்லறையாக ஒரு மூட்டைக்குக் குறைவாகத் தேவைப்படுமானால், அப்போது தேவைக்கேற்ப கொடுக்க கிலோவுக்கு இரண்டு பைசா ஏற்றி வைக்கப்பட்டிருந்தது. அதனால் நஷ்டம் ஏதுமில்லை.

திரு. வி. தங்கபாண்டியன்: தலைவர் அவர்களே, மத்திய அரசின் இந்தக் கட்டுப்பாடினால் ஏற்படுகிற 2 கோடி ரூபாய்களை மத்திய அரசே தருவதற்கு வற்புறுத்தப்படுமா? அப்படி வற்புறுத்தி வருகிறதா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: இது சம்பந்தமாக மத்திய சர்க்காரோடு கடிதப் போக்குவரத்து நடைபெற்று வந்தது மாத்திரமல்லாமல், அப்போது உணவமைச்சராக இருந்த மாண்புமிகு திரு. ஜகஜீவன்ராம் அவர்களிடத்தில் நம்முடைய மாநில அமைச்சர் அவர்கள் எடுத்துச் சொல்லி, எங்களுடைய மாநிலத்தைப் பொறுத்த வரையில் குறைந்த விலைக்குக் கொடுக்க வேண்டுமென்று கேட்டார்கள். அவர்களும் ஆகட்டும் பார்க்

கலாம்" என்று சொல்லிச் சென்றார்கள். பிறகு இறுதியாக முடியாது என்று பதில் வந்ததற்குப் பிறகு, விவசாயிகளிடத்தில் அதை வசூல் செய்வது சரியல்ல என்று தமிழக அரசு அந்த நஷ்டத்தைத் தானே ஏற்றுக்கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. பி. நாராயணசாமி: தலைவர் அவர்களே, கூட்டுறவுச் சங்கங்களின் மூலமாக விற்கப்படும் உர விலை அதிகமாக இருப்பதாகச் சொன்னார்கள். தனியாரிடம் கூட்டுறவுச் சங்கத்திற்காகக் கேட்டால், சில பெரிய கம்பெனிகள் கூட்டுறவுச் சங்கத்தில் சென்னையில் மொத்த விலைக்கு வாங்கி சில்லரை கிராமங்களுக்குச் சென்று அங்கேயும் அந்த விலைக்கே தந்திரமாக விற்பனை செய்கிறார்கள். அதைப்பற்றி சர்க்கார் அதிகாரிகளை வைத்து அந்தக் கம்பெனியாரிடம் பேசி முடிவு செய்திருக்கிறோம். அதைப்பற்றி மேலும் சர்க்கார் நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: இது சம்பந்தமாக மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் தலைவராக ஏற்று நடத்தி வருகிற பாமணி உரத் தொழிற்சாலை வைக்கப்பட்டு சர்க்கார் சகாயமான விலையில் இப்போது உரம் வழங்க இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். நேரிடையாக வழங்குவதில் சில சிக்கல்கள் இருக்கின்றன. பொதுவாக இந்திய அரசு தெரிவித்துள்ளபடி, திருத்த விலையின்படி உள்நாட்டு உற்பத்தியாளர்கள் 1—10—1966 முதற்கொண்டு தங்களின் உற்பத்தியில் 30 சதவிகிதத்தையும், 1—10—1967 முதற்கொண்டு 50 சதவிகிதத்தையும், 1—10—1968 முதற்கொண்டு 70 சதவிகிதத்தையும் வெளிச் சந்தையில் விற்க இந்திய அரசு அனுமதி வழங்கியது. கட்டுப் பாட்டைப் படிப்படியாக நீக்கும் இத்திட்டத்தின் கீழ் அரசு வணிகத் திட்டத்தில் வழங்கப்படும் உரங்களுக்குக் கூடுதலாக குடியானவர்களுக்கு வெளிச்சந்தையில் உரம் எளிதில் கிடைக்க, வகை செய்ய, அதிக அளவில் உள்நாட்டு உரங்கள் கிடைக்க வசதி செய்து, 1—1—1969 முதல் உள்நாட்டு உர உற்பத்தியாளர்கள் தங்கள் உற்பத்தி முழுவதையும் வெளிச்சந்தையில் விற்க இந்திய அரசு அனுமதி வழங்கியது. ஏற்கெனவே இதன் பலனாக விலை குறையலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. ஜி. சுவாமிநாதன்: கூட்டுறவுத் துறையில் விற்கப்படுகிற உரம் சாக்கு கிழிந்துவிடுவதால் அளவு குறைந்த நிலையில் வாங்க வேண்டிய பரிதாபகரமான நிலையில் இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். கூட்டுறவுச் சங்கங்களில் இதுபோன்ற நிலை ஏன் ஏற்பட்டது? எப்படி ஏற்பட்டது?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: துரிதமாக விற்கிற உரங்கள் இருக்கின்றன. மெதுவாக நகருகிற வகைகளும் உண்டு. அதனால் அதிகமாக விற்கப்படாத காரணத்தால், மாண்புமிகு உறுப்பினர் மாவட்டமான தஞ்சையில் அப்படிப்பட்ட தேக்கம் இருந்தது. தஞ்சை மாவட்ட ஆட்சித் தலைவர் அரசிற்கு அதி



குறித்துத் தெரிவித்து உடனடியாக அதில் கவனம் செலுத்தினர். அப்படி தஞ்சை மாவட்டத்தில் மாத்திரமல்லாமல் எந்தெந்த மாவட்டங்களில் இருக்கின்றன என்று கணக்கெடுத்து, எல்லா மாவட்டங்களிலுமுள்ள உரங்களைச் சரியான எடைபோட்டு சரி செய்து, புதுச்சாக்குகளில் போட்டு மாற்றிக் கொடுக்கும் திட்டத்தை அரசு ஏற்று, அதன்படி இப்போது வழங்கப்படுகின்றன.

திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு: தஞ்சை கலெக்டர் இந்தச் செயலில் இறங்கி, அளவுகளை நிறைவு செய்து, சாக்குகளை மாற்றி விற்க ஏற்பாடுகள் செய்தார் என்று நல்ல செய்தியை நான் கேள்விப்பட்டேன். எங்கள் ஸ்ரீவில்லிப்புத்தூர் மார்க்கெட்டிங் சொசைடி. கோடவுனில் இரண்டு மூன்று ஆண்டுகளுக்கு முன்னால் ராமநாதபுரம் சப்ளை அண்ட் மார்க்கெட்டிங் சொசைடி பால் வைக்கப்பட்ட உர வகைகள், வெளியிலிருந்து வருகிறவர்கள் பார்த்தால் இப்படி வைத்திருக்கிறார்களே என்று எங்கள் மீது பழி சுமத்தப்படுமோ எனறு அஞ்சுகிற வகையில் இருக்கின்றன. அதற்கு ஒரு பரிகாரம் இதுவரையில் காணப்பட வில்லை என்பதையும் சொல்லி அதற்குப் பரிகாரம் தேடப்படுமா என்றும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: தலைவர் அவர்களே, மாவட்ட ஆட்சித் தலைவர் கணக்குப்படி, பாதுகாப்புடன் வைக்க அனுமதி வழங்கியிருக்கிறோம். இது வரையில் செய்யப்படவில்லையென்றால், மாண்புமிகு அங்கத்தினர் தெரிவித்திருந்தால், உடனடியாக நடவடிக்கை எடுக்க ஏற்பாடு செய்திருக்கலாம். இல்லாவிட்டால் உடனடியாக ஏற்பாடு செய்ய நானே முயற்சிக்கிறேன்.

திரு. பி. நாராயணசாமி: கூட்டுறவுத் துறையில் சேருகிற விவசாயிகள் எல்லாப் பொருள்களையும் கூட்டுறவுக்கே கொடுக்க வேண்டுமென்ற எண்ணத்தைக் கொண்டிருக்கிறார்கள். சர்க்கார் கூட்டுறவு சங்கம் பொதுவாக இருந்து செய்வதற்கு உரிமை தர வேண்டும். தஞ்சையைப் பொறுத்த வரையில், உர வினியோகம் டி.சி.எம்.எஃப். கூட்டுறவு ஸ்தாபனம் நடத்தி வந்தது. மற்ற மாவட்டங்களுக்கு மட்டும் மாநிலக் கூட்டுறவு ஸ்தாபனங்கள் அதை நடத்தி வருகின்றன. தஞ்சை மாவட்டத்தையும் மாநில நீதியில் ஒன்றாகச் சேர்த்து உர வினியோகம் மற்றும் விவசாயிகளுக்கான எல்லாவற்றையும் பஞ்சாயில் செய்துவருவதைப்போல் செய்வதற்கு உரிமை தந்து செயல்படுத்தும் உத்தேசமுண்டா?

Mr. CHAIRMAN: Supplementary questions should always be short.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: கூட்டுறவுத் துறை மூலமாக உர வினியோகம் செய்வதால் எத்தனைதமான தவறும் இல்லை என்பதை அறிகிறேன். ஆனால் ஒருசில இடங்களில் கூட்டுறவுத் துறையின் மூலமாக வழங்கப்படுவதைவிட தனியாரிடத்தில் வாங்குவதில் விவசாயிகள் ஆர்வம் காட்டு

இருர்கள். கூட்டுறவுத் துறையைச் சேர்ந்தவர்கள்கூட தனியார் நடத்துகிற நிறுவனங்களிலிருந்து கிராம நாணய சங்கங்கள் எல்லாம் வாங்கி, அதனால் தங்களுக்கு லாபம் வருகிறது என்று விற்றுக்கொண்டிருக்கிறார்கள். கூட்டுறவு மூலமாகவும் விற்கப் படுகிறது. பொதுவாக எப்படியெப்படி அந்தத் துறையின் மூலமாக விளியோகம் செய்ய வேண்டுமென்ற நிரந்தரமான விதிமுறைகள் இப்போதில்லை. மாண்புமிகு உறுப்பினர் சொல்லியதைப் போல, அவற்றின் மூலமாகக் கொடுக்க திட்டமிருக்குமானால், விவசாயிகளையும் கலந்து பரிசீலனை செய்வது நலமாக இருக்குமென்று கருதுகிறேன்.

MR. CHAIRMAN : Questions 267 to 270 and Short Notice Question 6 are postponed.

II. ANNOUNCEMENT *re.* ELECTION OF ONE MEMBER TO THE TAMIL NADU LAND IMPROVEMENT BOARD.

MR. CHAIRMAN : I have to announce to the House that Thiru M. Arumugaswami, M.L.C. is the only candidate validly nominated for election to the Tamil Nadu Land Improvement Board. I hereby declare him duly elected to that Board.

III. CALLING ATTENTION TO THE DISTRESS CAUSED TO PEOPLE DUE TO ACUTE SHORTAGE OF COINS OF SMALLER DENOMINATIONS.

MR. CHAIRMAN : The Call Attention Notice is postponed.

IV. DISCUSSION ON THE POLICY NOTES ON COMMUNITY DEVELOPMENT PROJECTS, NATIONAL EXTENSION SERVICE AND LOCAL DEVELOPMENT WORKS AND GRANTS-IN-AID.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, "சமுதாய வளர்ச்சித் திட்டங்கள், தேசிய வளர்ச்சி பணி, உள்ளூர் வளர்ச்சிப் பணிகள், உதவி மானியங்கள் ஆகியவை குறித்த கொள்கை விளக்கக் குறிப்புகள் @ பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்" என்று முன் மொழிகிறேன்.

MR. CHAIRMAN : Motion moved—

"That the Policy Notes on Community Development Projects, National Extension Service and Local Development Works and Grants-in-aid, be taken into consideration."

திரு. என் சுந்தரேசத் தேவர் : தலைவர் அவர்களே, சமுதாய வளர்ச்சித் திட்டத்தின்கீழே அரசாங்க நடைமுறைகளிலே பஞ்சாயத்துக் கூட்டுமன்றங்கள், பஞ்சாயத்து செய்யப்படும் விதிமுறைகளைக் கொஞ்சம் சீர்திருத்தம் செய்ய வேண்டும், அது பற்றிப் பரிசீலனை செய்ய வேண்டும் என்று நீண்ட நெடு நாட்களாகக் கூறிக்கொண்டு வருகிறோம்.

@ Printed as Appendix II on pages 600-651.



[திரு. என். சுந்தரேசத் தேவர்]

27th July 1971]

இன்றைய நிலையிலும் கூட அரசு இதை வலியுறுத்தி வருகிறது. ஆனால் துரிதமாக நடவடிக்கை எடுக்கவில்லை. இந்தச் சீர்திருத்தத்தை உடனடியாக செய்ய வேண்டும் என்று அரசைக் கேட்டுக் கொள்கிறேன்.

பொதுவாக ஒரு இயக்கத்திலே மாற்றம் வேண்டும் என்று நீண்ட நெடு நாட்களாகக் கோரும் போது, அதை அரசு ஏற்றுக் கொண்டபிறகும்கூட, நீண்ட நெடுநாட்களாக நிர்வாகச் சீர் அமைப்பு செய்யப்படாமல், பழைய நிலையிலேயே நீடித்துக் கொண்டு போவதும், ஒவ்வொரு ஆண்டும் நிர்வாகச் சீர்திருத்தம் செய்ய வேண்டும் என்று கோரப்படுவதுமாக இருக்கிறது. இது அரசுக்கு உகந்ததல்ல. ஆகவே அமைச்சர் அவர்கள் பஞ்சாயத்து நிர்வாகச் சீர்திருத்தத்தை வெகு விரைவில் அமுலுக்குக் கொண்டுவந்தால், நலமாக இருக்கும் என்று கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

பொதுவாக, பஞ்சாயத்து ஆட்சி அவ்வளவு சிறப்பாக இல்லை. இதை அரசாங்கம் கவனிக்க வேண்டும். கிராமப்புறங்களிலுள்ள வளர்ச்சித் திட்டங்கள் எல்லாம் பஞ்சாயத்துக் கூட்டு மன்றங்கள், பஞ்சாயத்துக்கள் மூலமாகச் செயல்படக்கூடிய தன்மையைப் பார்க்கிறோம். இன்றைய நிலையில் பஞ்சாயத்து ஆட்சி செம்மையாக இல்லை. மாவட்டக் கலெக்டர்களால் நடத்தப்படுகின்ற மாவட்ட வளர்ச்சிக் கட்டடங்களில் "கோரம்" இல்லாத நிலையையும், அதற்காகக் கூட்டங்களை ஒத்திப் போடுவதையும் பார்க்கிறோம்.

பஞ்சாயத்து வளர்ச்சித் திட்டம் பற்றி எது கூறினாலும், அரசாங்கம் அதில் தீவிரமாகக் கவனம் செலுத்துவதில்லை. ஆகவே பஞ்சாயத்து வளர்ச்சித் திட்டத்தை நாம் நல்லவிதமாக அமல் படுத்தினால், கிராம மக்களுக்கு உதவியாக இருக்கும். கிராமத் திட்டங்களையெல்லாம் பஞ்சாயத்துக்கள் மூலம் அரசு செயல் படுத்தும் போது, அந்தப் பஞ்சாயத்துக் கூட்டு மன்றங்களை நல்ல விதமாக இயங்காமல் விட்டுவிடுவது அரசுக்கு அவ்வளவு உகந்ததல்ல. ஆகவே இதற்கு விரைவில் ஒரு முடிவு காணவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பொதுவாக, நிதி ஒதுக்கீடுபற்றிக் கவனம் செலுத்தும்போது மாநில அரசின் வருவாய் எவ்வளவோ ஏற்றம் உடையதாக இருக்கிறது. ஆனால் பஞ்சாயத்துக்களுக்கு பழைய நிதி வசதிகள் தான் இருக்கின்றன. அதிலே எந்தவித மாறுதலும் காணவில்லை. மூன்று தலைக்கு 40 பைசா கொடுத்தார்கள் என்றால், இன்றைய தினமும் அப்படியே தான் கொடுக்கிறார்கள். அதேபோல் மற்றக் காரியங்களுக்குக் கொடுக்கின்ற மானியங்களையும் உயர்த்தவில்லை என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

[திரு. என. சுந்தரேசத் தேவர்]

[27th July 1971

ரோடுகள் போடுவதற்குக் கொடுக்கின்ற மானியம் தலைக்கு 40 பைசா என்றால், அது போதுமானதாக இல்லை. பஞ்சாயத்தின் நிதி நிலையைப் பார்த்தால், மிகவும் மோசமாக இருக்கிறது. பஞ்சாயத்து நிதி நிலையைப் பெருக்காவிட்டால், பஞ்சாயத்து ராஜ்யம் சிறப்பாக இருக்காது.

பொதுவாக, பஞ்சாயத்துகளைப் பொறுத்த வரையில் சாதாரணமாகத் தெரு விளக்குகளுக்குப் பணம் கட்டுவதற்குக்கூட அவர்களிடத்தில் நிதி வசதியில்லை. ஆகவே தெரு விளக்குகளின் பியூசுகளைப் பிடுங்கிக்கொண்டு போகிறார்கள். சாதாரணமாக பஞ்சாயத்துகளின் வருஷ வருமானம் ரூபாய் 1,000, ரூ. 1,500 தான். பல பஞ்சாயத்துக்களில் இருக்கிற கிளார்க்குக்கூட சம்பளம் கொடுக்க முடியவில்லை. இதை கிராம ராஜ்யம் என்று சொல்வதில் பயனில்லை. ஆகவே பஞ்சாயத்து வருவாயை நாம் பெருக்க வேண்டும். நிலவரியைப் பஞ்சாயத்துகளுக்கு ஒதுக்க வேண்டும். இதை அரசாங்கம் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

4-30

அடுத்தபடியாக, ஈட்டு மானியத்தைப்பற்றி நான் ஒரு சில வார்த்தைகளைச் சொல்ல ஆசைப்படுகிறேன். மூன்று நான்கு மைல்களுள்ள சாலைகளுக்கு ரூ. 20,000 செலவு செய்து கப்பி போட்டாலும், சரியான பராமரிப்பு இல்லையென்றால், அந்தச்சாலை மோசமாகிவிடுகிறது. மண் சாலைகளுக்குக் கப்பி போட்டு பராமரிக்கவில்லையென்றால், அந்தச் சாலைகளில் வண்டிகளும் போக முடியாது. ஆகையினால் இந்தக் கிராமப் பணி மானியத்தின் மூலம் சாலைகளுக்குக் கப்பி போடுவது மட்டுமில்லாமல், அந்தச் சாலைகளைப் பராமரிக்கவும் அரசாங்கம் வகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இணைப்பு சாலை மானியங்கள் அதிகமாகக் கொடுக்க வேண்டும். விவசாய அபிவிருத்திக்கு ஏற்றவாறு சாலைகள் இருந்தால், விவசாய உணவுப் பொருள்களைக் கொண்டுபோய் விற்க முடியும். ஆனால் சாலை இணைப்பு மானியம் பழைய நிலையிலேயே இன்னும் இருந்து கொண்டு வருகிறது.

பஞ்சாயத்துக் கூட்டு மன்றங்கள் சாலை மானியங்களைச் சரியாகப் பயன்படுத்திக்கொள்வதில்லை. இதற்குக் காரணம் அந்த மானியங்களையெல்லாம் மிகவும் காலங் கழித்து, அதாவது மார்ச் மாத முடிவில் கொடுக்கின்ற காரணத்தால், அவைகளைப் பஞ்சாயத்துக்கள் சரியாகப் பயன்படுத்திக்கொள்ள முடிவதில்லை.

நகராட்சிகளுக்குச் சாலை மானியமாக ஏழு லட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். இது போதாது. நகராட்சியில் பல நோய்கள் வருவதற்குக் காரணம் நகராட்சியின் சாலைகளில் புழுதி எழுகிறதேயாகும். ஆகவே சாலைகளுக்கெல்லாம் கப்பி போட வேண்டுமென்று கோருகிறேன். நகராட்சியிலே சாலைகளெல்லாம்



[திரு. என். சுந்தரேசத் தேவர்]

27th July 1971]

சரியாகப் பராமரிக்கப்படவில்லை. சரியாகப் பராமரிக்கப்பட வேண்டுமென்றால், ஏழு லட்சம் ரூபாய் போதாது. நகராட்சி மான்யம் காலம் தாழ்ந்து தான் கிடைக்கிறது. இதனால் அவைகள் இந்த மான்யங்களைச் சரியாக உபயோகப்படுத்திக்கொள்வதில்லை. இதை அமைச்சரவர்கள் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, சாலை அமைப்புத் திட்டங்களுக்கான மான்யங்களை உரிய காலத்தில் கொடுத்து உதவ வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வேளாண்மை மான்யத்தைப் பொறுத்த வரை, ஒரு சீர்திருத்தம் செய்ய வேண்டும். பூச்சி மருந்துகளைப்பற்றிப் பேசுகிறோம். இன்னும் பழைய மாடல் திட்டத்தை நடத்திக்கொண்டு வந்தால், வேளாண்மை சிறப்பாக இருக்காது. இதற்கெல்லாம் மாற்றுத் திட்டங்கள் தேவை. கோழி வாங்கிக் கொடுக்கிறோம், மாடு வாங்கிக் கொடுக்கிறோம். இது போன்ற திட்டங்களெல்லாம் பழைய திட்டங்கள்தான்.

எங்கே பார்த்தாலும், கிராம சேவக்குகளும் விவசாய எக்ஸ்டென்ஷன் அதிகாரிகளும் இருக்கிறார்கள். அவர்கள் பூச்சி மருந்தையும் உரங்களையும் பற்றி இன்னும் பிரசாரங்கள் செய்து கொண்டிருப்பதில் பயனில்லை. ஆகையால் அதில் மாற்று மாதிரித் திட்டங்களை அரசு கொண்டு வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். டிராக்டர் உபயோகப்படுத்துவதில் I.A.D.P. 8 திட்டத்தின் கீழ் 10 ரூபாய் அரசாங்க மான்யம் கொடுக்கப்படுகிறது. கூட்டு மன்ற டிராக்டரை உபயோகப்படுத்தும் போது மான்யம் கொடுப்பதில்லை. ஆகையால் ஒரு ஏக்கர் உழ கூட்டுமன்ற டிராக்டர் வேண்டுமென்றால் 20 ரூபாய் வசூலிக்க வேண்டியிருக்கிறது. கவர்மெண்டு டிராக்டர் உழுவதற்கு வேண்டுமென்றால், 10 ரூபாய்க்குக் கொடுக்கும்போது, கூட்டு மன்ற டிராக்டரை எப்படி உழவர்கள் எடுத்துக் கொள்ளுவார்கள்? கவர்மெண்டில் 10 ரூபாய்க்குக் கொடுக்கிறார்கள். நீங்கள் என் 20 ரூபாய் வாங்குகிறீர்கள் என்று கூட்டுமன்றக் கூட்டங்களில் தகராறு வருகிறது. இந்த நிலையை அரசாங்கம் பரிசீலித்து, கூட்டுமன்ற டிராக்டரை வைத்து உழுகின்ற நேரத்திலும், 10 ரூபாய் கொடுத்தால் சிறப்பாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, கூட்டுமன்றங்களால் நிர்வகிக்கப்படும் ஆரம்பக் கல்வித் திட்டத்தைப் பொறுத்தவரையில், நல்ல விதமாகப் பரிசீலனை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். பஞ்சாயத்து யூனியன்கள் ஆரம்பக் கல்வித் திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்ற சட்டம் இருக்கிறது. சட்டம் இருக்கிறதே தவிர, நடைமுறை எப்படி இருக்கிறது என்றால், வரவர மேல் அதிகாரம் அதிகமாகிவிட்டது. ஒரு ஆசிரியரை மாற்ற வேண்டுமென்றாலும் டெபுடி டிவிஷனல் அதிகாரிதான் மாற்ற வேண்டியிருக்கிறது.

கல்வி அதிகாரி "அலாட்மெண்டு" செய்தால்தான், ஆசிரியர்களைப் போடலாம் என்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அரிசனங்கள் போதுமான அளவுக்கு இருந்தாலும், ஒரு பள்ளியை ஆரம்பிக்கலாம் என்றால், அம்மாதிரி ஆரம்பிக்க பஞ்சாயத்து யூனியனுக்கு அதிகாரம் இல்லை. ஆகவே ஆரம்பக் கல்வித் திட்டத்தைப் பஞ்சாயத்து யூனியன்கள் நிறைவேற்றுவது என்பது ஒரு பொருந்தாத விஷயமாக மாறிவிட்டது. நிர்வாகத்தில் கலைம் செலுத்த முடியாத அளவுக்கு நாளாவட்டத்தில் அரசு உத்திரவுகளைப் போட்டு, அதிகாரத்தைப் பிடுங்கிவிட்டார்கள். கூட்டுமன்றங்கள் ஆரம்பப் பள்ளிகளை நடத்துவது சரியாக இல்லையென்றால், அதில் தவறுகள் இருக்கின்றன என்றால், அவற்றைச் சுட்டிக்காட்டி, இன்னின்ன தவறுகள் செய்வதால் சட்டங்கள் போடுகின்றோம் என்று சொல்லுங்கள். அல்லது அரசாங்கமே ஆரம்பக் கல்வித் திட்டத்தையும் எடுத்து நிறைவேற்றுகிறோம் என்று சொல்லி நிறைவேற்றுங்கள். பொதுவாக கல்வி வளர்ச்சி எப்படியிருக்கிறது என்று பார்த்தால், மாவட்டத்திற்கு ஒரு கல்வி அதிகாரி இருந்த இடத்தில், இப்போது டிவிஷனுக்கு ஒரு கல்வி அதிகாரியைப் போட்டு அவர்களுக்கெல்லாம் ஜூப்பைக் கொடுத்திருக்கிறார்கள். நிர்வாகத்தில் சிக்கனத்தைக் கையாள வேண்டுமென்று அரசாங்கம் ஒரு புறத்தில் சொல்லிக்கொண்டு, மறுபுறத்தில் டிவிஷனுக்கு ஒரு கல்வி அதிகாரியைப் போட்டிருக்கிறார்கள். "டிபுடி இன்ஸ்பெக்டர் ஆப் ஸ்கூல்ஸ்" என்பது தேவையில்லாத போஸ்ட். அதைப் பஞ்சாயத்து யூனியனில் இணைத்துவிடலாம். அவர்கள் என்ன புதிதாகச் செய்கிறார்கள் என்றால், ஒன்றுமில்லை. அவர்களும் ஆசிரியர்களைத்தான் செலுத்துகிறார்கள். பஞ்சாயத்து யூனியன் சேர்மன் வெறும் பொம்மையாக்கப்பட்டு, பல அதிகாரிகள் முன்னால் நிற்கவேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. கல்வி அதிகாரியிடம் ஆசிரியர் "அலாட்மெண்ட்" கேட்டு நிற்கவேண்டியிருக்கிறது. அவர் 6 மாதம் கழித்து "அலாட்மெண்ட்" கொடுக்கிறார். அதில் மோசடி நடக்கிறது. மாவட்டத்திற்குப் பாதியும் "அலாட்மெண்டு" செய்யப்பட்டு மாவட்ட அலாட்மெண்டிலிருந்து டிவிஷனுக்குப் பிரித்துக் கொடுக்கிறார்கள். டிவிஷனிலிருந்து யூனியனுக்குப் பிரித்துக் கொடுக்கிறார்கள். இம்மாதிரிப் பிரித்துக் கொடுப்பதில் சில யூனியன்களுக்குக் குறைவாகக் கிடைக்கிறது. சிலவற்றிற்குக் கூடுதலாகக் கிடைக்கிறது. ஆகவே நிர்வாக சீரமைப்புத் திட்டத்தில் இவைகளையெல்லாம் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். ஆரம்பக் கல்வியைப் பொறுத்த வரையில், அதை நிறைவேற்றுவதை ஒன்று அரசாங்கம் எடுத்துக்கொள்ள வேண்டும், அல்லது பஞ்சாயத்து யூனியன் நடத்த வேண்டுமென்றால், பஞ்சாயத்து யூனியன்களுக்கு வேண்டிய அதிகாரம், வசதிகள் அனைத்தையும் அரசாங்கம் செய்துகொடுக்க வேண்டும். அதற்கேற்ற நிலையை உண்டாக்குவதில் அரசு கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.





குடும்பக் கட்டுப்பாடு, தாய்சேய் நலவிடுதி ஆகியவை கிராமங்களுக்குப் பரவ வேண்டுமென்று கவலையுடன் சொல்லுகின்றோம். கிராம வைத்திய வசதிக்குப் போதுமான தொகை ஒதுக்கப்படவில்லை என்று ஏற்கனவேயே எடுத்துக் கூறியிருக்கிறேன். 10,000 ஜனத்தொகை இருந்தால், ஒரு தாய்சேய் நலவிடுதி என்று போட்டிருக்கிறார்கள். ஆனால் நடைமுறையில் எப்படி இருக்கிறது என்று பார்த்தால், 1 லட்சம் பேர் இருக்கிறார்கள் என்றால், பஞ்சாயத்து கூட்டுமன்றம் அங்கே 2, 3 தாய்சேய் நலவிடுதிகளை நடத்தினால், அதுவே பெரிய காரியமாக இருக்கிறது. தாய்சேய் நலவிடுதிக் கட்டிடம் கட்டுவதற்குக் கிராண்ட் கிடையாது. கூட்டுமன்ற பொது நிதியிலிருந்து கொடுக்கிறேன் என்று நான் தலைவராக உள்ள பஞ்சாயத்து யூனியனிலிருந்து எழுதினேன். அதற்கு டி.ஆர்.டி. "முடியாது" என்று எழுதிக்கொண்டிருக்கிறார். இது பெரிய பிரச்சினையாக இருந்துக்கொண்டிருக்கிறது.

அடுத்தபடி, நர்ஸ்கள் பிரச்சினை பெரிய பிரச்சினையாக இருக்கின்றது. நர்ஸ்கள் கிடைக்கவில்லை. 1, 2 நர்ஸ்கள் கிடைத்து அவர்கள் பிரைமரி ஹெல்த் சென்டரில் நல்ல முறையில் வேலை செய்தால், டி.எம்.ஓ. வந்து பார்க்கும்போது, கவர்ன்மெண்ட் ஆஸ்பத்திரியில் வேலை தருகிறேன், வருகிறீர்களா என்று கேட்டு, அந்த நர்ஸ்களும் வந்த 6 மாதத்திற்குள் கவர்ன்மெண்ட் ஆஸ்பத்திரிக்குப் போய்விடுவார்கள். இந்த நிலையைப் போக்க, நர்ஸ்கள் விஷயத்தில் அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். 4-40 pm.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, 1,200 நர்ஸ்கள் வேலைக்குத் தயாராக இருக்கிறார்கள். அந்தப் பஞ்சாயத்து யூனியனுக்கு எவ்வளவு நர்ஸ்கள் தேவை என்று மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் தெரிவிப்பார்களேயானால், ஒரு வாரத்தில் அனுப்பி வைக்கத் தயாராயிருக்கிறேன்.

திரு. என். சுந்தரேசத் தேவர்: மிக்க நன்றி. எங்கள் பஞ்சாயத்து யூனியனுக்கு 10 நர்ஸ்களை அனுப்பிவைக்க வேண்டுமென்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கின்றேன்.

திரு. வி. தங்கபாண்டியன்: தலைவர் அவர்களே, ஊராட்சி ஒன்றியங்களில் நேரடியாக நர்ஸ்களைப் போட . . .

MR. CHAIRMAN: This is not question-time.

திரு. என். சுந்தரேசத் தேவர்: எங்கள் யூனியனில் 10 பிரைமரி ஹெல்த் சென்டர்கள் இருக்கின்றன. எல்லாவற்றிற்கும் நர்சுகளைப் போட்டுப் பூர்த்தி செய்ய வேண்டுமென்று பாடுபட்டு வருகிறேன். ஒரு பக்கத்தில் "போஸ்டிங்" போட்டால், இன்னொரு பக்கத்தில் போடப்பட்ட நர்ஸ் கவர்ன்மெண்ட் ஆஸ்பிட்டலுக்குச் சென்றுவிடுகிறார்கள். இங்கே பூர்த்தி

செய்தால், அதற்கு முன்னால் போடப்பட்டவர் போய்விடுகிறார். இப்படிப்பட்ட நிலைமை இருந்து வருகிறது. நான் குறை சொல்லுவதற்காகச் சொல்லவில்லை.

அடுத்து, அரசாங்க ஊழியர்களுக்கு உண்டான சலுகைகள் பஞ்சாயத்து யூனியன் ஊழியர்களுக்குக் கிடைக்கவில்லை என்ற குறை இருந்து வருகிறது. அதற்காக மாநாடு போட்டு, அமைச்சர்களை வரவழைத்து, தீர்மானங்கள் போட்டுக் கேட்கிறார்கள். இன்றைய நிர்வாகத்தில் நல்லதொரு பங்கினை ஏற்று நடத்துகின்ற பஞ்சாயத்து யூனியன்களில் உள்ள ஊழியர்களுக்கும், அரசாங்க ஊழியர்களுக்குக் கிடைக்கின்ற சம்பளமும், இதர வசதிகளும் கிடைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பஞ்சாயத்துச் சீரமைப்புத் திட்டத்தைப் பொறுத்தவரையிலும், நிர்வாகச் சீர்திருத்தக் குழு அறிக்கையின் அடிப்படையில் சீக்கிரம் ஒரு முடிவுக்கு வர வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். ரெவின்யூ டிபார்ட்மெண்டின் ஆதிக்கத்தைக் குறைத்து, ஸ்தல ஸ்தபான நிர்வாகம் தனிப்பட்ட முறையில் இருக்கின்ற நிலைமையை ஏற்படுத்தினால், நன்றாக இருக்கும். ஆர். டி. ஒர்க்கு களை எடுத்துக் கொண்டால், டி.இ. போன்றவர்கள் மேற்பார்வை பார்க்கின்றார்கள். அவர்கள் பார்க்க வேண்டியிருப்பதால், தாமதமாகிறது. டிவிஷனுக்கு ஒரு டி.இ. போட்டு ஆர். டி. ஒர்க்குகளைப் பார்க்கின்ற விதத்தில் ஒரு மாறுதல் செய்தால், நன்றாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

பஞ்சாயத்து நிர்வாகச் சீரமைப்பு வருகிறபொழுது, ஒரு நிதிக் கமிஷனைப் போட்டு பஞ்சாயத்துக்களின் நிலைகளை ஆராய்ந்து பரிசீலனை செய்து, அதற்குப் போதுமான நிதி வசதி இருக்கிறதா இல்லையா, அது சரியாக நடைபெறுகிறதா என்று பார்த்து நிதி வசதி செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு என் உரையை முடித்துக்கொள்ளுகிறேன்.

**திரு. எஸ். எஸ். தென்னரசு**: தலைவர் அவர்களே, இன்றைய தினம் நாம் எடுத்துக்கொண்டிருக்கக்கூடிய உள்ளாட்சித் துறை வளர்ச்சிப்பற்றி நாம் ஈடு செய்யவேண்டிய குறைகளை எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். அந்தத் துறையை எடுத்துக் கொண்டிருக்கக்கூடிய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அமைச்சராவதற்கு முன்பாகவே தமிழ் நாட்டில் எல்லா கிராமங்களுக்கும் ஒரு முறை சென்று வந்தவர்கள். ஆகையால் கிராமங்களிலுள்ள குறைபாடுகளை நன்றாகத் தெரிந்துகொண்டு அவைகளை விரைவில் பூர்த்தி செய்வதற்கான முயற்சியில் ஈடுபட வேண்டுமென்று நான் முதலில் கேட்டுக்கொள்கிறேன். இந்த உள்ளாட்சித் துறைக்கு கடந்த 15 ஆண்டுக்காலமாக வகையறுக்கப்பட்ட சட்டம் இல்லை யென்ற குறையை நாம் முதலில் தெரிந்துகொள்ள வேண்டும். சர்க்காரின் உத்தரவுகள் மூலமாக கடந்த 13, 14 ஆண்டுகளாக



இந்தத் துறை நிர்வாகம் செய்து வரப்படுகிறது. இந்தக் குறையின் காரணமாகத்தான், மாண்புமிகு உறுப்பினர் உயர்திரு சுந்தரேசத்தேவர் குறிப்பிட்டபடி, ரெவினியூ ஆதிக்கம் இருக்கிற குறையை நாம் போக்குவதற்கு முறையான சட்டங்களை விரைவில் உருவாக்க வேண்டுமென்று நான் என்னுடைய யோசனையைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். இங்கே இருக்கக்கூடிய குறைபாடுகளில் பெரும்பகுதி இதுதான். பல்வேறு துறைகளிலுள்ள நிர்வாகங்களைப் பஞ்சாயத்து யூனியன்களுக்கு அனுப்பியிருக்கிறோம். கல்வி வளர்ச்சித் துறையானாலும் சரி, சுகாதார வளர்ச்சித் துறையானாலும் சரி, பொறியியல் துறையானாலும் சரி, ஒவ்வொரு தனித் தனித் துறையிலிருந்து ஒவ்வொரு அலுவலரைப் பஞ்சாயத்து யூனியனுக்குப் பழையமுறைப்படி இன்றைக்கு நிர்வாகம் அனுப்பிக் கொண்டு வருகிறது. இருக்கிற துறைகளில் மக்களோடு தொடர்பு கொண்டு மக்களைத் திருப்திப்படுத்தும் துறை இருக்குமானால் அதுதான் சமுதாய வளர்ச்சித் துறை. மற்ற அதிகாரிகளைப் பார்த்து மக்கள் பயப்படக்கூடிய அளவுக்கு சமுதாய வளர்ச்சித் துறையில் மக்களுக்கும் அதிகாரிகளுக்கும் நல்ல உறவு இருக்கிறது. அப்படிப்பட்ட உறவு உள்ள துறையைச் சார்ந்த அலுவலர்களுக்குப் போதுமான பாதுகாப்பு இல்லையென்ற பரவலான குறையை இந்த அரசாங்கம் கவனிக்க வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்ளுகிறேன். முக்கியமாகச் சொல்ல வேண்டுமானால், ஒரு கலெக்டருக்கு நிர்வாகத் துறை நீங்கலாக சமுதாய வளர்ச்சித் துறையைக் கவனிப்பதற்கு இரண்டு உதவியாளர்கள் இருக்கிறார்கள். மொத்தம் இந்தத் தமிழ் நாட்டில் 15 மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு 30 பேர் உதவியாளர்கள் இருக்கின்றனர். ஆனால் பி.டி.ஓக்கள் 450 பேர் உள்ளனர். அவர்களுக்குப் பதவி உயர்வு பெறுவதற்கு 30 ஸ்தானங்கள்தான் இருக்கின்றன. ரெவின்யூ இலாகாவில் தாசில்தார், ஆர்.டி.ஓ. ஆகவும், ஆர்.டி.ஓ., டி.ஆர்.ஓ. ஆகவும் பல்வேறு படிகள் இருக்கின்றன. ஆனால் பி.டி.ஓக்களுக்கு ஒரே புரொமோஷன் பி.ஏ. பி.டி.; அப்படிப்பட்ட பதவிகள் தமிழ் நாட்டில் மொத்தமாக 30 தான் உள்ளன. பி.டி.ஓ.க்கள் 450 பேர்கள் இருக்கிறார்கள்; அவர்களுக்கு 30 பதவிகளைப் பகிர்ந்து கொடுப்பது இயலாத காரியம் என்று நாமெல்லாம் தெரிந்துகொள்ளலாம். சாதாரணமாக ரெவினியூ இன்ஸ்பெக்டர், டி.டி. ஆகவும், தாசில்தாராகவும், ஆர்.டி.ஓ. வாகவும் அதற்கு மேலேயும் பதவி உயர்வுபெறலாம். அவ்வாறு படிப்படியாக முன்னேறுவதற்கான பதவிகள் சமுதாய வளர்ச்சித் துறையில் இல்லை என்பதை நாம் நிச்சயமாக உணர்ந்து கொள்ள வேண்டும். அதற்காக சாதாரணமாக ஒரு தாலுக்காவுக்கு ஒரு பி.டி.ஓ. என்று பதவிகளை உருவாக்கி, ஏறத்தாழ தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில், 100 பதவிகளை உருவாக்க முடியும். 100 பதவிகள் ஏற்படுத்தினால், சாதாரணமாக 450 பி.டி.ஓக்களுக்குப் பகிர்ந்து கொடுக்க ஓரளவு உதவும் என்ற யோசனையை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அப்படிப்பட்ட நிலைமையை நாம் உருவாக்க வேண்டும். அதிகாரிகள் மாற்றங்களைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். சாதாரணமாக கல்வித் துறையில் ஒரு டியுடி இன்ஸ்பெக்டர் ஒரு பள்ளிக்கு அனுமதி தருவதில்லை. வகுப்புப் பிரிவினைக்கு அனுமதி கொடுப்பதில்லையென்று பாவலாகப்பேசி வரக்கூடிய உண்மையான குறை இருந்து வருகிறது. அந்த டெபுடி இன்ஸ்பெக்டர் இருக்கிற பொழுது, பஞ்சாயத்து யூனியனில் எஸ்.இ.ஓ. பொறுப்பு இருக்கிறது. சரியாகப் பள்ளிக்கூடம் நடைபெறுகிறதா என்று பார்க்கக் கூடிய சிறிய பொறுப்பு தரப்படுகிறது. நம் நண்பர் திரு. சுந்தரேசத் தேவர் அவர்கள் குறிப்பிட்டப்படி, டெபுடி இன்ஸ்பெக்டர் பொறுப்பை பஞ்சாயத்து யூனியனிடம் சேர்த்தால்தான், பஞ்சாயத்து யூனியன் வளர்ச்சிக்குப் போதுமான துணையாக இருக்குமென்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அதைப் போலவே, விவசாயத் துறை இருக்கிறது. பஞ்சாயத்து யூனியனில் ஒரு விவசாய அதிகாரி இருக்கிறார். அவருக்கும் அந்த யூனியன் பி.டி.ஓவுக்கும் எந்தவிதமான தொடர்புமில்லை. பஞ்சாயத்து யூனியனில் இருக்கிற விவசாயத் துறை அதிகாரி தவறு செய்து ஒழுங்காகக் காரியம் செய்யவில்லையென்றால், அவரை மாற்ற வேண்டுமென்று பி.டி.ஓ. விரும்பினால் கலெக்டரால் அதைச் செய்ய முடியாது. சம்பந்தப்பட்ட அதிகாரிதான் அவரை மாற்ற முடியும். மாற்ற வேண்டுமென்று பி.டி.ஓ. எண்ணினாலும், சம்பந்தப்பட்ட அதிகாரி அவரை மாற்றுவதில்லை. அதைப் போல சுகாதாரத் துறையில் ஒரு அதிகாரி பஞ்சாயத்து யூனியனில் இருக்கிறார். அவரை மாற்ற வேண்டுமென்றே கண்டிக்க வேண்டுமென்றே விரும்பினாலும், பஞ்சாயத்து யூனியன் அலுவலருக்குப் போதிய அதிகாரமில்லை. அதற்கும் சுகாதாரத் துறையைச் சேர்ந்த மாவட்ட அதிகாரிதான் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்ற நிலைமை இருக்கிறது. இப்படிப்பட்ட அதிகாரிகளையெல்லாம் மாற்றுவதற்கு மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அதிகாரம் கொடுக்க வேண்டுமென்று பல நண்பர்கள் கருதுகிறார்கள். அதை நான் இங்கு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். அந்த அதிகாரம் மாவட்ட ஆட்சித் தலைவருக்குத் தரப்படுகிறபொழுது, மறுபடியும் செவிவழி இலாகா ஆதிக்கம் வருவதாகக் கருதக்கூடும். கோட்டாட்சித் தலைவருக்குப் பஞ்சாயத்து யூனியன்களை அடக்கி ஆளக்கூடிய சக்தி இருக்கக் கூடாது அல்லது அதிகாரம் இருக்கக்கூடாது என்ற முறையை மாற்றினால் செவினியூ துறை ஆதிக்கம் என்ற குறை நீங்கிவிடும். நான்கு பஞ்சாயத்து யூனியன்கள் சேர்ந்த ஒரு தாலுக்காவை நிர்வகிக்க ஒரு பெரிய அதிகாரி பொறுப்பை உருவாக்கினால், அந்தக் குறை நீங்கிவிடும். அந்த நிலைமையைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அதைப்போல, வட்டார வளர்ச்சி அலுவலகத்தில் பல துறையைச் சேர்ந்தவர்களை மாற்றுவதற்குரிய அதிகாரம் அல்லது அதிகாரத்தை மாவட்ட ஆட்சித் தலைவருக்குத் தரலாம். மாவட்ட



ஆட்சித் தலைவருக்கு ஒரு டி.ஆர்.ஓ. துணையாக இருப்பது போல், டெபுடி டைரக்டர், ஜாயிண்ட் டைரக்டர் போன்ற பதவி ஒன்றை ஒரு மாவட்டத்தில் உருவாக்கி, அவருக்குத் துணையாக பி.ஏ., பி.டி. இப்போது இருப்பதுபோல் இருந்தால், பி.டி.ஓ. முன்னேறுவதற்கு, உற்சாகமாக வேலை செய்வதற்கு, பதவி உயர்வைக் கருதி நாட்டுக்குப் பணிபுரிய நல்ல வாய்ப்பாக இருக்குமென்று கருதுகிறேன். அதைப்போல கிராம சேவக் பதவி இருக்கிறது. அவர்களுக்குப் பதவி என்கிறபொழுது, சாதாரண கிராம சேவக் பி.டி.ஓ. ஆக வரலாம். அப்படி வரும்பொழுது அலுவலகக் காரியங்கள் எந்த அளவுக்கு நடைபெறுகின்றன என்பதை எண்ணுமேலே ஒரு கிராம சேவக் பி.டி.ஓ. ஆக வர வாய்ப்பு இருக்கிறது. திடீரென்று பி.டி.ஓ. ஆக வருகிறார். படிப்படியாக ஆர்.ஐ., டி.டி. ஆகவந்து தாசில்தாராக வந்து, ஆர்.டி.ஓ. அப்புறம் டி.ஆர்.ஓ. ஆக வர முடியும் என்ற நிலைமை இருக்கிறது. படிப்படியாகப் பதவி உயர்வு பெறுவதற்கு, அப்படிப்பட்ட உத்தியோகத்திற்கு வாய்ப்புத் தர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இங்கே ஆரம்பக் கல்வி பற்றிக் குறிப்பிட்டார்கள். ஏற்கனவே பத்து ஆண்டுகளுக்கு முன்பு இந்த மன்றத்தில் ஒரு தலைவர் குறிப்பிட்டிருப்பதாக நினைவு—சாதாரணமாக ஐந்தாம் வகுப்பு வரை பள்ளி ஆசிரியர்களாக பெண்களைத்தான் நியமிக்க வேண்டும். ஐந்தாம் வகுப்புக்குப் பிறகுதான் ஆடவர்கள் ஆசிரியர்களாக இருந்தால், ஓளவு பள்ளிக்கூடப் பிள்ளைகளிடையே நல்ல ஒழுக்கம் ஏற்படும் என்று இந்த மாமன்றத்தில் கூறியதை ஒரு புத்தகக் குறிப்பில் பார்த்தேன். அது ஓளவுக்கு நியாயம்தான். சாதாரணமாகப் பெண்கள் உருவாக்குகிற சிறு பிள்ளைகள் ஒழுங்காக இருப்பதைப் பார்க்கிறோம். அந்தக் காலத்தில் குழந்தைகள் பள்ளிக்கூடம் வருகிறபொழுது, தலை சீவ வேண்டும், பொட்டு வைக்க வேண்டுமென்று விதியை உருவாக்கினோம். அதை நிறைவேற்றக்கூடிய ஆற்றல் தாய்மார்களுக்கு இருக்கிறது. பஞ்சாயத்து யூனியன் ஆரம்பப்பள்ளிகளில் ஐந்து வகுப்புகள் வரையில் ஆடவர்களுக்குப் பதிலாக பெண்களை ஆசிரியர்களாக நியமிக்க முயற்சி எடுத்துகொள்ளவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன். இன்னொன்று. சட்டமன்றத் தேர்தலையும் பஞ்சாயத்து யூனியன் தலைவர் தேர்தலையும் ஒரே தேர்தலாக வைப்பதை அரசாங்கம் பரிசிலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். ஒரு லட்சம் பேர் கொண்ட வாக்காளர்கள் உள்ள சட்டமன்றத் தொகுதியில் வெற்றி பெற்ற உறுப்பினருக்கு பஞ்சாயத்து யூனியன் தலைவருக்கு இருப்பது போல் ஜீப் கிடையாது, குமாஸ்தா கிடையாது, டைப்பிஸ்ட் கிடையாது.

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்:** ஊராட்சி ஒன்றியத் தலைவருக்குத் தனியாக வசதிகள் செய்து தரப்படுவதில்லை. ஊராட்சி ஒன்றியத்திற்குத்தான் செய்து தரப்படுகிறது.

27th July 1971]

**திரு. எஸ். எஸ். தென்னரசு :** சட்ட மன்ற உறுப்பினர்களுக்குக் கார் வசதியில்லை.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு சக அமைச்சர் கூறியது போல, ஊராட்சி ஒன்றியத் தலைவரிடத்திலே இந்த வசதிகள் இல்லை. அந்த அலுவலகத்திற்குத்தான் இருக்கின்றன.

**திரு. எஸ். எஸ். தென்னரசு :** சட்ட மனற உறுப்பினர்களுக்கு குமாஸ்தாக்கள் இல்லை. பஞ்சாயத்து யூனியனில் குமாஸ்தாக்கள் இருக்கிறார்கள். அவர்களை ஊராட்சி ஒன்றியத் தலைவர் பயன் படுத்திக்கொள்ளலாம். அங்கே இருக்கக்கூடிய டைப்ரைட்டரைப் பயன்படுத்திக்கொள்ளலாம். அவர்கள் சொல்லக் கூடிய வேலைகளைச் செய்வதற்கு ஆட்கள் இருக்கிறார்கள். சட்டமன்ற உருப்பினருக்கு இந்த வசதிகள் கிடையாது என்பதை ஒப்புக் கொண்டுதான் ஆக வேண்டும். ஆக சட்டமன்ற உறுப்பினர் தேர்தலையும், ஊராட்சி ஒன்றியத் தலைவர் தேர்தலையும் ஒன்றாகவே நடத்தவேண்டும். சட்ட மன்ற உறுப்பினரே ஊராட்சி ஒன்றியத் தலைவராக வருவதற்கு தமிழ் நாடு அரசு உருவாக்கித் தர வேண்டும்.

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** தலைவரவர்களே, ஊராட்சி ஒன்றியத் தலைவரே சட்ட மன்ற உறுப்பினராக வந்து விடுவதா அல்லது சட்ட மன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப் பட்ட பிறகு, ஊராட்சி ஒன்றியத் தலைவராக வருவதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**திரு. எஸ். எஸ். தென்னரசு :** சட்ட மன்ற உறுப்பினரை ஊராட்சி ஒன்றியத் தலைவராக மாற்றுவதற்கு தமிழ் நாடு அரசிற்கு அதிகாரம் இருக்கிறது. ஆனால் ஊராட்சி ஒன்றியத் தலைவரைச் சட்ட மன்ற உறுப்பினராக்கும் அதிகாரம் இன்று தமிழ் நாடு அரசிற்கில்லை. சட்ட மன்ற உறுப்பினர் தேர்தலையும், ஊராட்சி ஒன்றியத் தலைவர் தேர்தலையும் சேர்த்து ஒன்றாக நடத்த வேண்டும்.

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** தலைவரவர்களே, சட்ட மன்ற உறுப்பினராக இன்றைக்கு 234 பேர் இருக்கிறார்கள். ஊராட்சி ஒன்றியத் தலைவராக 374 பேர் இருக்கிறார்கள். ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள் 374 பேரையும் சட்ட மன்ற உறுப்பினர் களாகச் செய்துவிட வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விரும்புகிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன். இப்போதிருக்கிற சட்ட மன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டுமென்று உறுப்பினரவர்கள் விரும்புகிறார் களா?



27th July 1971]

**மிஸ்டர் சேர்மன் :** இது வரையிலே உறுப்பினர்கள் கேள்வி கேட்பார்கள், அமைச்சர்கள் பதிலளிப்பார்கள். இப்பொழுது அமைச்சரவர்கள் கேள்வி கேட்கிறார்கள், உறுப்பினர் பதிலளிக் கிறார். (பலத்த சிரிப்பு.)

**திரு. எஸ். எஸ். தென்னரசு :** ஆகவே நம்முடைய அமைச்ச ரவர்கள் இதை உரிய அளவிலே பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நடைமுறையில் சட்ட மன்ற உறுப்பினர் களுக்கும், மேலவை உறுப்பினர்களுக்கும் போதிய வசதிகள் செய்து கொடுப்பதற்கு அரசாங்கம் முயற்சிக்க வேண்டுமென்று நான் இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் நான் கவலைப்படுத்த விரும்புவது செவினியூ ஆதிக்கம் இருக்கிறது என்ற குறை ஊராட்சி ஒன்றியத் தலைவர்களிடம் பரவலாக இருக்கிறது. ஜி.ஓ.க்கள் மூலம் நிர்வாகம் நடைபெறு கிறது. எனவே இந்த ஜி.ஓ.க்களுக்குப் பதில் புதிய ஒரு சட்டத்தை இந்த இலாகாவிற்கு உருவாக்கி மக்களுக்கு வேண்டிய நல்ல பணி களைப் புரிவதற்கு அரசாங்கம் வழி வகைகள் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

**திரு. வி. வெங்கா :** மதிப்பிற்குரிய தலைவரவர்களே, உள்ளாட்சித் துறை மானியத்தின்மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்வதற்கு வாய்ப்புத் தந்தமைக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். உள்ளாட்சித் துறை வந்ததற்குப் பிறகுதான் இந்த நாட்டிலே போடப்பட்ட திட்டங்கள் முழுமை யாக வெற்றியடைந்திருக்கின்றன என்பதை நாம் மிக நன்றாகவே அறிவோம். இந்திய உப கண்டம் சுதந்திரம் அடைந்த பிறகு 4 ஐந்தாண்டுத் திட்டங்கள் தீட்டி, கிராம வளர்ச்சிக்குச் செலவிட்ட போதிலும், இப்படிப்பட்ட ஊராட்சி ஒன்றியங்கள் அமைவதற்கு முன்னாலே இவற்றின் பலனெல்லாம் நாட்டு மக்களுக்கு முழுமை யாகப் போய்ச் சேரவில்லை. நாட்டிலே போடப்பட்ட திட்டங்கள் கிராமப்புறங்களுக்குச் சென்று முழுமையாகப் பரவவில்லை. ஆனால் ஒன்றியங்கள் அமைந்ததற்குப் பிறகுதான் போடப்பட்ட திட்டங்கள் அனைத்தும் மக்களுடைய முழு ஆதரவும் பெற்று, மக்களுடைய பிரதிநிதிகளினால் செயல்படுத்தப்பட்டு, அவற்றின் குறிக்கோள்கள் நிறைவேறிக்கொண்டிருக்கின்றன என்பதை தாம் முழுமையாகப் பார்க்கிறோம். இந்த அரசும் இதை அறிந் திருக்கிறது. அடுத்தாற்போல் சான்றுகள் இங்கே இருக்கின்றன. குறிப்பாக சொல்லப்போனால், இந்த நாட்டிலே வறட்சி ஏற்பட்ட காலத்தில், அந்த வறட்சியைப் போக்குவதற்குச் செலவு செய்த தொகை அனைத்தும், அரசிடத்திலே பலதாப்பட்ட துறைகளி ருந்தபோதிலும், இந்தத் துறையின் மூலம்தான் செலவு செய்யப்பட்டது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அரசு எண்ணக்கூடிய நன்மைகள் கிராமப்புறங்களில் இருக்கக் கூடிய மக்களுக்குக் கிடைக்க வேண்டுமென்று கருதி நம்முடைய

5-00 p.m.

முதலமைச்சர் கலைஞரவர்கள் உள்ளாட்சித் துறையைத் தேர்ந்தெடுத்து அதன் மூலம் வறட்சி நிவாரணத்திற்கென ஒதுக்கப்பட்ட தொகையை முழுமையாகச் செலவு செய்ததால், கிராமப் புறங்களில் ஏற்படவிருந்த துன்பத்தை தவிர்க்க முடிந்தது. இதை நாம் உள்ளபடியே உணர்ந்திருக்கிறோம் அதற்காக இந்த அரசைப் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறேன். அதோடு ஊராட்சி ஒன்றியங்கள் பல துறைகளோடு இணைந்து செயல் பட்டுக்கொண்டு வருகின்றன. அரசு தீட்டக்கூடிய திட்டங்களை நிறைவேற்றக்கூடிய துறையாக அது இருக்கிற காரணத்தினால் தான், கிராமங்களில் அது அத்தியாவசியமான துறை என்று கருதி இன்றைய தினம் இருக்கக்கூடிய அரசு அதனுடைய வரவு செலவில் 25 சதவிகிதத்தை ஊராட்சி ஒன்றியத்தின் மூலம் செலவு செய்து கொண்டிருக்கிறது. அதற்காக இந்த அரசைப் பாராட்டுகிறேன். ஊராட்சித் தேர்தல்கள் கடந்த ஆண்டிலே மிக நல்ல முறையிலே நடைபெற்றிருக்கின்றன. இந்த ஊராட்சித் தேர்தல்கள் பற்றி நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. தென்னரசு அவர்கள் எடுத்துச் சொன்ன கருத்துக்களைத் தான் இந்த அரசு கொண்டிருக்கிறது என்பதை நான் எடுத்துச்சொல்ல விரும்புகிறேன்.

ஊராட்சித் தேர்தல்கள் அரசியல் சம்பந்தப்படாத தேர்தல்கள் என்பதை இந்த அரசு ஆணித்தரமாக வலியுறுத்திக் கூறி வருகிறது. அதன் அடிப்படையில் தான் சட்ட மன்றத்திற்கு நடைபெற்ற தேர்தலுக்கு இருந்த வாக்காளர் பட்டியல் இந்தத் தேர்தலுக்கு வைத்துக்கொள்ளப்படக் கூடாது என்று இந்த அரசு ஒரு புதிய வாக்காளர் பட்டியலைத் தயாரித்தது. அதன் மூலம் ஊராட்சித் தேர்தல்களை இந்த அரசு வெற்றிகரமாக நடத்தியிருக்கிறது. அதன்படி இந்தப் புதிய ஜாபிதாவில் பெயர் இருக்கிற கிராம மக்களில் 100-க்கு 95 பேர் வாக்களித்திருக் கிறார்கள். அது முழுமையான வெற்றி என்பதை இந்த அரசுக்கு எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஊராட்சித் தேர்தல்களில் பல சங்கடங்கள் இருக்கின்றன. ஊராட்சித் தலைவர் தேர்தலும், உறுப்பினர்கள் தேர்தலும் தனித் தனியாக நடைபெறுகின்றன. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால், ஒரு ஊராட்சியில் 9 அங்கத்தினர்கள் இருக்கிறார்கள் என்றால், அதற்குத் தனியாகத் தேர்தல்கள் நடைபெறுகின்றன. தலைவர் தேர்தல் தனியாக நடைபெறுகிறது. ஒரு குறிப்பிட்ட கட்சியைச் சேர்ந்த மூன்று பேர் வெற்றி பெறுகிறார்கள் என்று வைத்துக் கொண்டால் வேறு 6 பேர் வெற்றிபெறுகிறார்கள். அப்போது ஊராட்சி மன்றங்கள் நடைபெறுகிற நேரங்களில் மூன்று பேர் குறிப்பிட்ட கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்து தலைவரும் அதே கட்சியைச் சேர்ந்தவராக இருந்தால், அல்லது இந்த மூன்று பேரும் தலைவருக்கு



வேண்டியவர்களாக இருந்தால், தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர் அவருக்குச் சாதகமாக இருக்கிற மூன்று அங்கத்தினர்களைக் கொண்டு தன்னுடைய வீட்டிலே கூட்டத்தை நடத்தி தனக்குச் சாதகமாகத் தீர்மானங்களை நிறைவேற்றிக்கொள்கிறார். மற்ற ஆறு பேர்களுக்கு எந்த இடத்திற்கு வர வேண்டுமென்று தெரியப் படுத்தியிருந்த போதிலும், அவர்கள் வராத நேரத்திலேயே தன்னுடைய விருப்பத்திற்கிணங்க நடவடிக்கைகளை நடத்தி விடுகிறார். ஊராட்சி மன்றத்திற்கென்று கட்டிடம் இல்லாத காரணத்தினால். தலைவர் தன்னுடைய வீட்டிலே கூட்டத்தை நடத்தி தன்னுடைய விருப்பம்போல் தீர்மானங்களை நிறை வேற்றிக் கொள்கிறார். இதனால் பல புகார்கள் பஞ்சாயத்து வில்தரிப்பு அதிகாரிகளுக்கு வந்துகொண்டிருக்கின்றன. மூன்றில் ஒரு பங்கு உறுப்பினர்கள் கூட்டத்திற்கு வந்தால் போதும் என்று வைக்கப்பட்டிருப்பதால், இத்தகைய தொல்லைகள் ஏற்படுகின்றன. இந்தச் சட்டத்தைத் திருத்தி, குறைந்த பட்சம் 50 சதவிகித உறுப்பினர்களாவது கூட்டத்திற்கு ஆஜராக வேண்டுமென்று செய்ய வேண்டும். இது போன்ற குறைபாடுகள் அதிகமாக ஏற்படுவதற்குக் காரணம் ஊராட்சி மன்றத்திற்குக் கட்டடங்கள் இல்லாதது. ஆறு மாதங்களுக்கு முன்பு மாவட்ட ஆட்சித் தலைவர் கள் மூலம் எந்தெந்த ஊராட்சிகளிலே ஊராட்சிக்கு என்று சொந்தமான கட்டடங்கள் இல்லை என்பதைப்பற்றிய பட்டியலை இந்த அரசு எடுத்திருக்கிறது. எனவே நிச்சயமாக இந்த அரசு கூடிய விரைவில் ஊராட்சி மன்றங்களுக்கு உரிய அலுவலகக் கட்டடங்களைக் கட்டித் தருவார்கள் என்ற நம்பிக்கை எனக்கிருக் கிறது. ஊராட்சிக் கட்டடங்கள் கட்டுவதால் இந்த அரசிற்குப் பெருத்த செலவு ஏற்படலாம். இருந்த போதிலும் இதனால் ஒரு சமுதாயச் சீர்திருத்தம் இந்த நாட்டில் உருவாகும் என்பதை இந்த அரசிற்கு எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

என்ன தான் நாம் ஜாதி ஒழிந்து விட்டது என்று சொன்னாலும், நம்முடைய சமுதாயத்தில் இந்த வித்தியாசங்கள் இன்னும் முழுமையாக ஒழியவில்லை. நகரப்புறத்தில் ஜாதி வித்தியாசங்கள் ஒழிந்து விட்டது என்று சொன்னாலும், கிராமப்புறத்தில் இது இன்னும் ஒழியவில்லை. மேல் ஜாதிக்காரர்கள் ஊராட்சி மன்றத்தின் தலைவராக வந்து விட்டால் தாழ்ந்த ஜாதியைச் சேர்ந்த உறுப் பினர்களை மதிப்பதில்லை. உயர்ந்த ஜாதிக்காரர் தலைவராக உள்ள ஊராட்சி மன்றங்களில் கீழ்ஜாதிக்காரர்கள் ஊராட்சித் தலைவரின் வீட்டிற்குச் சென்று கையைக் கட்டிக் கொண்டு எந்த இடத்தில் கையெழுத்துப் போட வேண்டுமென்று கேட்கிற சூழ்நிலை இருந்துகொண்டிருக்கிறது.

அந்த நிலையை மாற்றி, தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் அனைவரும் சம அந்தஸ்து படைத்தவர்கள் என்பதை இந்த

நாட்டிலே நிலைநிறுத்த வேண்டுமென்றால், ஊராட்சி மன்ற கட்டிடங்கள் நிறுவ வேண்டுமென்று தெரிவித்துக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

ஊராட்சி ஒன்றியங்கள் உருவாக்கப்பட்ட நோத்தில், எந்த அடிப்படையில் உருவாக்கினார்கள் என்று சிந்தித்து பார்க்க முடியாத நிலையில் நான் இருக்கிறேன். ஒன்று ஜனத்தொகை அடிப்படையில் உருவாக்கியிருக்க வேண்டும் அல்லது ஏரியாவை வைத்து உருவாக்கியிருக்க வேண்டும்.

நான் அச்சரப்பாக்கம் ஊராட்சி ஒன்றியத்தின் தலைவனாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறேன். 14½ மைல் உள்ள தேம்பாக்கம் போன்றவைகள் சித்தாமூர் ஒன்றியத்தில் இருக்கின்றன. அந்தக் கிராம மக்கள் விதை, மருந்துகள் போன்றவற்றை வாங்க வேண்டுமானால், அவர்கள் அச்சரப்பாக்கத்தைத் தாண்டி தான் சித்தாமூர் ஒன்றியத்துக்குச் செல்ல வேண்டும். இருபத்தைந்து மைல் தொலைவில் உள்ள ஒரு கிராமம் அச்சரபாக்கத்தில் இருக்கிறது. அவர்கள் மதுராந்தகம் ஒன்றியத்தைக் கடந்து அச்சரப் பாக்கம் ஒன்றியத்துக்கு வர வேண்டியவர்களாக இருக்கிறார்கள். ஆகவே எந்த அடிப்படையில் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள் என்று புரியவில்லை. இந்த நிலையை இயற்கையமைப்புக்கு ஏற்றவாறு மாற்றியமைக்க வேண்டுமென்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

சிறு பாசனம் போன்ற சில திட்டங்களுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் ஒரு குறிப்பிட்ட தொகையை ஒன்றியங்களுக்குத் தருகிறார். மாவட்ட ஆட்சித் தலைவர் மாவட்டத்தில் எவ்வளவு ஒன்றியங்கள் இருக்கின்றன என்று கணக்கிட்டு அந்த ஒன்றியங் களின் எண்ணிக்கை அடிப்படையில் பணம் ஒதுக்கி வருகிறார். ஒவ்வொரு ஒன்றியமும் ஜனத்தொகை அளவிலும், பரப்பளவிலும் அதிகமாக வேறுபட்டிருக்கிறது. செங்கல்பட்டில் 20 ஒன்றியங் கள், உத்திரமேரூரில் 71. மாதவரம் போன்ற ஒன்றியங்கள் மிகச் சிறிய ஒன்றியங்கள். உத்திரமேரூருக்கும் மாதவரத்துக்கும் சமமான தொகை தான் மாவட்ட ஆட்சித் தலைவரால் ஒதுக்கப் படுகிறது. ஆகவே பரப்பளவையும், ஜனத்தொகையையும் கணக்கில் எடுத்துக்கொண்டு பண ஒதுக்கீடு செய்தால் மிகவும் நன்மை பயக்கும் என்று நான் நம்புகிறேன்.

அதே நோத்தில் இன்றைய தினம் மாண்புமிகு உறுப்பினர் திரு. சுந்தரேசத் தேவர் அவர்கள் ஊராட்சி ஒன்றியங்களில் நிதி நிலை மிகவும் மோசமாக இருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். இதை அரசும் உணர்ந்திருக்கிறது. ஒன்றியங்களின் வருவாயைப் பெருக்க வேண்டும் என்பதற்காக இ.ஓ. ரெவின்யூ அதிகாரிகள் 100 பேரை நியமித்திருக்கிறார்கள். இது நல்ல முயற்சி, பாராட்ட வேண்டிய முயற்சி. ஆனால் அரசு எந்த நோக்கத்தில் அவர்களை



நியமித்ததோ அந்த நோக்கம் முழுமையாகச் செயல் பட்டிருக்கிறதா என்று பார்த்தால், நிச்சயமாக இல்லை. நான்கு ஒன்றியங்களுக்கு ஒரு இ.ஓ. அதிகாரியை போட்டிருக்கிறார்கள். அவர் என்ன பண்ணுகிறார் என்று தெரியவில்லை. அவர்கள் யாரும் சம்பளத்துக்கு ஏற்ப வருவாய் பெருகியிருக்கிறதா என்று புள்ளி விவரங்களைப் பார்த்தால், வருந்தத்தக்க நிலையில் இருக்கிறது. ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்துக்கும் ஒரு இ.ஓ. ரெவின்யூ அதிகாரியை நியமித்தால், அரசு எந்த நோக்கத்திற்காக நியமித்ததோ, அந்த நோக்கம் முழுமையாக வெற்றி பெறும். இல்லையென்றால் வெற்றி பெறாது என்பதை இந்த சந்தர்ப்பத்தில் சுட்டிக்காட்ட நான் கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.

இன்றைய தினம் ஊராட்சி ஒன்றியங்களில் 10 கால்நடை விஸ்தரிப்பு அதிகாரிகளை அரசு நியமித்திருக்கிறது. அவர் களுடைய டெகனிகல் கண்ட்ரோல் பூராவும் இ.ஓ.வ.டி.எச். என்ற அதிகாரியின் கையில் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. இந்த அதிகாரிகள் என்ன பண்ணுகிறார்கள் என்று ஆணையாளர் களோ, தலைவர்களோ அறிந்துகொள்ள முடியவில்லை. இந்தத் திட்டம் நன்மை பயக்க வேண்டுமானால், ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்துக்கும் வி.ஏ.எஸ்., பி.வி.எஸ். சி. இ.ஓ.எ.எச். போன்ற அதிகாரிகளை நியமிக்க வேண்டுமென்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன். 5-10 p.m.

முன்பு ரெவின்யூ அதிகாரிகள் கிணறு வெட்ட, கடன்களைக் கொடுத்து வந்தார்கள். மறைந்த முதல்வர் அறிஞர் அண்ணா அவர்கள் இதில் உள்ள குறையை மிக அழகாகச் சுட்டிக்காட்டி யிருக்கிறார்கள். நாம் போடக் கூடிய திட்டங்கள் கிராமங்களில் உள்ள விவசாயிகளின் கைக்குப்போகும் நோத்தில் ஐஸ் கட்டியாக இருக்கக் கூடிய திட்டம் ஒரு சொட்டுத் தண்ணீராக விவசாயி களின் கைகளுக்குப் போகிறது என்று சுட்டிக் காட்டியிருக்கிறார் கள். ஆனால் ஒன்றியங்கள் ஏற்பட்ட பிறகு, அந்தத் திட்டங்கள் முழுமையாக நல்ல முறையில் செயல்பட்டு வருகின்றன. இன்றைய தினம் மின்சார விநியோகத்தையும் ஒன்றியங்களின் மூலமாகச் செய்தால், மின்சாரத்துறை மீது வரும் புகார்கள் இருக்காது என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அரசு விதிக்கக் கூடிய வரிகளையெல்லாம், செஸ் வரி போன்ற வைகளையெல்லாம் ரெவின்யூ இலாகா வசூல் செய்துகொண்டு வருகிறது. இது வரை எந்த ஒரு ஊராட்சிக்கும் ஒரு ரூபாய் கூட கொடுத்ததாகத் தெரியவில்லை. அந்தப் பணம் ஊராட்சி ஒன்றியங்களின் கையில் இருந்தால், நிச்சயமாக நல்ல முறையில் பயன் காண முடியும் என்ற நம்பிக்கை இருக்கிறது.

இன்றைய தினம் அரசு கொடுத்திருக்கும் புள்ளி விவரங்களைப் பார்த்தால், பள்ளிகளுக்குச் சொந்தக் கட்டடம் இல்லையென்று தெரிகிறது. பத்து ஆண்டுகளுக்குப் பிறகும் இந்த நிலை என்றால்,

அடுத்து, விவசாயத்தில் பசுமைப் புரட்சி ஏற்பட்டிருக்கிறது என்றால், அது முழுக்க முழுக்க ஊராட்சி ஒன்றியங்கள் மூலமாகத் தான் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இன்றைய தினம் ஊராட்சி ஒன்றியங்கள் சம்மதத்தைப் பெற்று விமானங்கள் மூலமாகப் பூச்சி மருந்துகளைத் தெளித்துக் கொண்டிருக்கிறார்கள். இது அமெரிக்க நாடு போன்ற பெரிய நாடுகளுக்குச் சிறந்த திட்டமாக அமைத்திருக்கலாமே தவிர, சாதாரண தண்டு நிலங்களை வைத்திருக்கின்ற இந்திய நாட்டுக்கு, தமிழகத்திற்குச் சிறந்த திட்டமா என்று புனர் பரிசீலனை செய்ய வேண்டிய சூழ்நிலையில் இருக்கின்றோம். ஒரு பக்கத்தில் ஒரு சின்னப் பயிரும், மறுபக்கத்தில் வேறொரு பயிரும் போடப்பட்டு, இப்படி பலதரப்பட்ட பயிர்கள் ஒரே குறிப்பிட்ட இடத்தில் இருப்பதால், முழுமையான பயனைப் பெற முடியவில்லை. அதற்கு மாறாக ஒவ்வொரு ஊராட்சிக்கும் ஒரு விசை தெளிப்பான் மூலமாகப் பூச்சி மருந்துகள் தெளிக்க ஒரு அரசு அதிகாரியை நியமித்தால், அவர்கள் எந்தப் பருவத்தில் எந்தப் பயிருக்குப் பூச்சி மருந்துகளைத் தெளிக்க வேண்டுமென்று கணக்கிட்டு அடிப்பார்கள். அதன் மூலமாக முழுப் பலனை ஒரு கிராமத்தில் இருக்கின்ற ஏழை விவசாயி பெறுவான். 12,000 படித்த இளைஞர்கள் வேலை வாய்ப்பு பெறமுடியும் என்பதையும் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

[The Deputy Chairman sounded the gong.]

Two minutes more, Sir.

இன்னுமொரு முக்கிய குறையைத் தெரிவிக்கக் கடமைப் பட்டிருக்கிறேன். செங்கற்பட்டு மாவட்டத்தில் இருக்கிற காட்டாங்குளத்தூர் ஊராட்சி ஒன்றியத்தில் இருக்கும் பல ஆசிரியர்கள் நகர ஈட்டுப்படி பெறுகிறார்கள். ஒரு பக்கத்தில் இருக்கின்ற ஆசிரியர்கள் நகர ஈட்டுப்படி பெற முடிந்திருக்கிறது. அதே நேரத்தில் மறுபக்கத்தில் இருப்பவர்கள் அந்த வசதியைப் பெற முடியவில்லை. குறிப்பிட்ட மைல் தூரம் வரையில்தான் நகர ஈட்டுப்படி என்றிருப்பதை கருணை கூர்ந்து முதலமைச்சர் அவர்களும், உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களும் பரிசீலித்து செங்கற்பட்டு, காஞ்சீபுரம் நகர ஆட்சி எல்லைகளுக்கும் விஸ்தரிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். அதே நேரத்தில் செங்கற்பட்டு நகரசபை 'டி' கிரேடாக இருப்பதை, 'பி' கிரேடாக உயர்த்தித்தர வேண்டும் என்ற வேண்டுகோளையும் விடுத்து, அந்த வேண்டுகோளை அனுதாபத்துடன் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டு அமைகிறேன். வணக்கம்.

திரு. எஸ். முத்துசாமி: மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, தமிழ் நாட்டில் ஊராட்சி ஒன்றியங்கள், கிராம வளர்ச்சி பற்றி பேசுவதற்கான வாய்ப்பு கிடைத்தது குறித்து நான் மகிழ்ச்சியடைகிறேன். கிராம ராஜ்யம் என்று இந்த நாட்டில் சொல்லப்பட்டு புகுத்தப்பட்ட நேரத்திலிருந்து, மாவட்டக் கழகங்கள் மாற்றப்பட்டு ஊராட்சி ஒன்றியங்கள் ஏற்படுத்தப்



இதற்குக் காரணமென்ன? இன்றைய தினம் ஊராட்சித்துவக்கப் பள்ளிகளுக்குச் சொந்தக் கட்டிடம் கட்ட வேண்டுமென்றால், ஊராட்சி ஒன்றியப் பணத்திலிருந்தும், பொதுமக்கள் பணத்திலிருந்தும் 4,000, 5,000 ரூபாய் அரசுக்குக் கட்ட வேண்டுமென்ற ஒரு நியதி இருக்கிறது. இன்றையதினம் பல ஊராட்சி ஒன்றியங்கள் மின்சாரக் கட்டணம் கூட கட்ட முடியாத நிலையில் இருக்கின்றன. அப்படிப்பட்ட நிலையில் இந்த 4,000, 5,000 ரூபாயைச் சாதாரண மக்களைக் கொண்ட, 500 பேர் ஜனத்தொகை உள்ள ஊராட்சிகளால் கட்ட முடியுமா? அப்பேர்ப்பட்ட கிராமங்களுக்கு அரசு மானியம் கொடுத்து நிரந்தரக் கட்டிடங்களை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

இன்றைய தினம் வரிகளை கிராம அதிகாரிகளைக் கொண்டு வசூலிக்கிறார்கள். கடந்த ஓராண்டு காலத்துக்கு முன்பு நாங்கள் ஊராட்சி வரியை வசூல் செய்ய மாட்டோம் என்று தைரியமாகத் தீர்மானம் போட்டுச் சொன்னார்கள். ஆனால் இன்றைய தினம் வசூலிக்க நாங்கள் தயாராக இருக்கிறோம் என்று சொல்லுகிறார்கள். உண்மையிலேயே வசூல் செய்கிறார்களா என்றால் இல்லை. நான் தேர்தலில் நிற்கும் போது வீட்டு வரி, வாகன வரி பாக்கி வைத்திருக்கக் கூடாது என்ற காரணத்தால், நானே செலுத்திய பணம் தான் அங்கே வரவு வைக்கப்பட்டிருக்கிறது. எந்த கிராம அதிகாரியும் வரி வசூலிப்பதில்லை. நான் இதைப்பற்றி மாவட்ட ஆட்சித் தலைவரிடமும், கோட்டாட்சித் தலைவரிடமும் கூறிய நேரத்தில் அவர்கள் நடவடிக்கை எடுக்கிறேன் என்று சொல்லுகிறார்களே தவிர, எந்த கிராம அதிகாரியாவது வரி வசூலிக்கிறார்களா என்றால் இல்லை.

இப்படியே போய்க்கொண்டிருந்தால், நிச்சயமாக ஒரு காலக் கட்டத்தில் கிராமங்கள் சாதாரண சிறு தேவைகளைக் கூட பூர்த்தி செய்துகொள்ள முடியாத சூழ்நிலை ஏற்பட்டுவிடும். அந்த நிலைமையிலிருந்து கிராமங்கள் மாற்றப்பட, ஊராட்சிகள் காப்பாற்றப்பட வேண்டுமென்றால், நிச்சயமாக வரிவசூலை கிராம அதிகாரிகளைக் கொண்டு வசூலிப்பதைக் காட்டிலும், நான்கைந்து பஞ்சாயத்துக்களுக்கு ஒரு பில் கலெக்டரை நியமித்து, அதன் மூலமாக வரி வசூலிப்பது சாலச் சிறந்தது என்று கருதுகிறேன். இன்னமும் சொல்லுவேன், பில் கலெக்டர்களுக்கு ஊராட்சி மன்றங்கள் ஒரு குறிப்பிட்ட தொகையைச் சம்பளமாகக் கொடுக்கத் தயாராக இருக்கிறார்கள் என்பதைச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அப்படி நியமிக்கின்ற நேரத்தில் பஞ்சாயத்துக்களுக்கு வரியும் வசூலாகி விடுகிறது. அதே நேரத்தில் ஓர் ஆயிரம் பேருக்கு வேலை கொடுத்தோம், புதிய வேலை வாய்ப்பினை உருவாக்கினோம் என்ற பெருமையும் அரசாங்கத்தினைச் சாரும் என்று சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பட்ட நேரத்தில், மாவட்டக் கழகங்களின் பொறுப்பிலிருந்த ஆரம்பக் கல்வி ஊராட்சி ஒன்றியங்களின் பொறுப்பிற்கு மாற்றப் பட்டது. ஊராட்சி ஒன்றியங்கள் பெரிய நிர்வாகப்பணி ஆரம்பக்
5-20 p.m. கல்வியை நிர்வகிக்கின்ற பணியாகக் கருதப்படுகின்றது. அதற்கான பட்ஜெட் தொகையும் அதிகமாகி யிருக்கிறது. பல்வேறு ஊராட்சி ஒன்றியங்களில் நாளாக ஆக பணியாட்களின் சம்பளத் தைக் கூட கொடுக்கமுடியாத நிலையும், ஆசிரியர்களின் ஊதியத் தைக் கொடுக்கமுடியாத சூழ்நிலையும் வளர்ந்து வருகிறது. இதற்கான அடிப்படைக் காரணங்கள், ஊராட்சி ஒன்றியங்கள் தன்னுடைய வருமானத்தில் 15 சதவீதத்தை ஆசிரியர்களின் சம்பளத்திற்குக் கொடுக்க வேண்டும் என்று ஏற்படுத்தப்பட்டு, ஊராட்சி ஒன்றிய வருமானத்தோடு ரெவின்யூ போர்டை இணைத்துவிட்டதால், தடுமாற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றன. ஊராட்சி ஒன்றியங்களில் வறட்சி நிலைமை காரணமாக நிலவரி வஜா செய்யப்படுகின்ற அதே நேரத்தில், ஆசிரியர் சம்பளத்தை ஊராட்சி ஒன்றியத்தின் வருமானத்தோடு ஒப்புவமை செய்யப் பட்டிருக்கின்ற காரணத்தால் வருமானத்தைப் பொறுத்து ஆசிரியர்களின் சம்பளம் கொடுக்கப்பட வேண்டிய அவசியம் இருப்பதால், பல்வேறு ஊராட்சி ஒன்றியங்களில், குறிப்பாக திருநெல்வேலி, ராமநாதபுரம் மாவட்டங்களில், ஆசிரியர்களுக்குச் சம்பளம் கொடுக்க முடியாத நிலைமை இருக்கிறது, ஆசிரியர்களுக்கு 2 ஆண்டு காலமாகச் சம்பளம் கொடுக்க முடியாத பஞ்சாயத்து யூனியன்கள் இருக்கின்றன. 1½ ஆண்டுகளுக்கு முன்னால் உள்ளாட்சித் துறையில் ஒரு குழு அமைக்கப்பட்டு, அது நாடு பூராவும் ஆராய்ந்து ஊராட்சி ஒன்றியங்களுக்கு வருமானத்தை எப்படித் தேடுவது என்று ஆராய்ச்சி செய்து, ஒரு அறிக்கையை அரசிடம் கொடுத்திருக்கிறது. இன்னமும் அந்த அறிக்கை அரசின் ஆய்வில் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. அந்த அறிக்கை நடைமுறைப்படுத்தப்படும் போது, ஆசிரியர் களின் சம்பள நிலைமை சீர்திருத்தப்பட வேண்டிய நிலைமையிருப்ப தால், உடனடியாக அரசு அந்தக் குழுவின் பரிந்துரைக்கு ஏற்ப ஆசிரியர்களுக்குச் சம்பளம் வழங்கத் தக்க ஏற்பாட்டை விரை வாகச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். ஆசிரியர் களின் ஊதியத்தை ஊராட்சி ஒன்றியங்களின் வருமானத்தோடு இணைக்காமல், மற்ற ஊழியர்களுக்கு எப்படி அரசு நிதியிலிருந்து ஊதியம் வழங்கப்படுகிறதோ, அதே போன்று ஊராட்சி ஒன்றியங் களில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு வழங்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

மாவட்டக் கழகத்திடம் இருந்த ஆரம்பக் கல்வியளிக்கும் பொறுப்பு இப்போது ஊராட்சி ஒன்றியங்களிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளது. பல்வேறு ஊராட்சி ஒன்றியங்களில் இந்த பொறுப்பை நிறைவேற்ற முடியாமல், பல குறைபாடுகள் ஏற்பட்டுக்கொண்டே செல்லுகின்ற காரணத்தால், ஊராட்சி



ஒன்றியங்களிடம் விடப்பட்டிருக்கும் அந்தப் பொறுப்பை அரசே ஏற்று நடத்த வேண்டும் அல்லது ஒரு கல்வி வாரியம் ஏற்படுத்தப் பட்டு, அதன் கீழ் ஊராட்சி ஒன்றியங்களால் நடத்தப்படும் எல்லா ஆரம்பப் பள்ளிகளும் கொண்டுவரப்பட வேண்டும். இந்தக் கோரிக்கையை நீண்ட காலமாகவே அவர்கள் சொல்லி வருகிறார்கள். ஆரம்பக் கல்வி ஊராட்சி ஒன்றியங்களின் பொறுப்பில் இருக்கின்றபடியால், உள்ளூரில் இருக்கின்ற பிரமுகர் களின் எண்ணத்திற்கும், மனவளத்திற்கும் தக்கபடி இந்தத் துறையில் ஈடுபாடுகளும், இடர்பாடுகளும் ஏற்பட்டுக்கொண் டிருக்கின்றன என்பதை நீண்டகாலமாகவே சொல்லிக்கொண்டு வருகிறோம். இப்படிப்பட்ட இடர்பாடுகளைச் சொல்லி வந்த பிறகுதான், ஆசிரியர்களின் மாற்றங்களுக்கு ஒரு அட்ஹாக் கமிட்டியை அப்போது டைரக்டராக இருந்தவர் அமைத்துக் கொடுத்தார். அந்தக் கமிட்டி வந்தபோது ஏராளமான எதிர்ப் புகள் இருந்தன. அதிகாரம் பிடுங்கப்பட்டுவிட்டதாக ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள் ஆர்ப்பரித்தார்கள். எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு அங்கத்தினர் திரு. சுந்தரேசத் தேவர் அவர்கள் ஊராட்சி ஒன்றியங்களின் அதிகாரங்கள் போய்விட்டன; ஒன்று அதிகாரங்கள் இருக்க வேண்டும்; இல்லாவிட்டல் ஆரம்பக் கல்வியளிக்கும் பொறுப்பை அரசாங்கமே எடுத்துக்கொள்ள வேண்டும் என்றார்கள். அரசாங்கமே எடுத்துக்கொள்ள வேண்டும் என்ற உயர்ந்த நோக்கத்தோடு சொல்லுவார்களேயானால், அதை வரவேற்கின்றேன். அதிகாரங்கள் இல்லாததால் எடுத்துக் கொள்ளுங்கள் என்று சொல்லுவதை விடுத்து, நீங்களே, எடுத்துக் கொள்ளுங்கள் என்று சொல்லுகின்ற கருத்துக்கு வரவேண்டும் என்று அவரைக் கேட்டுக்கொள்ளுகிறேன். ஊராட்சி ஒன்றியங் களிடம் ஆரம்பக் கல்விப் பொறுப்பைக் கொடுத்திருப்பதால், ஆங்காங்கு ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளில் அரசியல் வளர்க்கின்ற நிலைமை ஏற்பட்டிருக்கின்றது. ஆசிரியர்கள் மாற்றத் திலும், அவர்களை வேலைக்கு அமர்த்துவதிலும் நடைபெறுகின்ற ஊழல்களை இந்த சபையில் சொல்ல மிக வருத்தப்படுகிறேன். ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளில் ஆசிரியர்களை மாற்றுவதற்கும், வேலைக்கு அமர்த்துவதற்கும் பணம் கேட்கப்படுகிறது. யார் அதிகம் கொடுக்கிறார்களோ, அவர்களுக்கு உத்தியோகம் வழங்கு கின்ற நிலைமை இருந்து வருகிறது. ஜனநாயகம் இவ்வளவு கிரிகேடான நிலையில் வந்திருப்பதைப் பார்க்கிறோம். இன்னும் இந்த நிலை நீடித்தால், ஜனநாயகம் சீரழியக்கூடிய நிலை ஏற்படும் என்று வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன்.

அடுத்து, இரட்டை ஆட்சி முறை இருந்துவருவதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். மாண்புமிகு அங்கத்தினர் திரு. சுந்தரேசத் தேவர் அவர்கள் கல்வித் துறையில் இருக்கின்ற டிபுடி இன்ஸ்பெக்டர் போஸ்ட் எதற்கு என்று கேட்டார்கள். அவர்கள் ஒரு கோணத்திலிருந்து பார்த்து கேட்டார்கள். கல்வித் துறையில்

பயிற்சி பெற்றவர்கள், கல்வித் துறையை நிர்வகிக்க வேண்டும் என்பதற்காக, அதன் மேல் ஆதிக்கம் வைக்க வேண்டும் என்ற நிலையில் வைத்திருக்கிறார்கள். ஊராட்சி ஒன்றியங்களைப் பொறுத்த வரையில், இரட்டை ஆட்சி நடைபெறுகிறது என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன். வெள்ளையர்கள் வந்தபோது இரட்டை ஆட்சி நடைபெற்றதாகக் கேள்விப்பட்டிருக்கிறோம். ஊராட்சி ஒன்றியத்தில் கல்வித் துறை ஒரு புறமும், வளர்ச்சித் துறை ஒருபுறமும் என்று நிர்வாகத்தை வைத்திருக்கிறார்கள். பல்வேறு முறையில் ஊராட்சி ஒன்றிய அன்றாட நிர்வாகத்தில், நடைமுறையில் தலையிடுகிறார்கள். அதனால் யாருக்கு அதிகாரம் என்ற போராட்டம் ஏற்படுகிறது. நிர்வாகத்தில் யார் தண்டனை வழங்குவதற்கு அதிகாரம் பெற்றிருக்கிறார்களோ அவர்கள் பக்கமாக சாதகபாதகங்கள் அமைகின்றன.

கல்வித் துறையைச் சுதந்திரமாக வைக்க வேண்டும். போதிப்பவர்களுக்குச் சுதந்திரம் இருக்க வேண்டும் என்பதைப்பற்றிச் சுதந்திர நாட்டில் அதிகமாகச் சிந்திக்க வேண்டும். ஊராட்சி ஒன்றியத்தின் பொறுப்பிலிருந்த கல்வியைத் தனியாக எடுத்துவிட வேண்டும் என்று கல்வி அமைச்சர் அடிக்கடி எடுத்துச் சொல்லுவார்கள். அவர்களுடைய காலத்திலேயே ஊராட்சி ஒன்றியத்திலிருந்து கல்வியைத் தனியாக எடுத்து, கல்வி வாரியத்தை ஏற்படுத்த முயற்சி எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகின்றேன். முதலமைச்சர் அவர்கள் பல்வேறு துறைகளுக்கு முன்னேற்றமான வாரியங்களை அமைத்தது போல, இந்தத் துறைக்கும் ஏற்படுத்த வேண்டும். எல்லாப் பள்ளிகளிலும் ஊழல்கள் இருக்கின்றன. ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளில் இருக்கின்ற ஊழல்கள் ஓளவிற்கு சதவிகிதத்தில் கூடுதலாக இருக்கலாம், அவ்வளவு தான். ஆகவே தனியாகக் கல்வி வாரியத்தை அமைத்து, நல்ல முறையில் கல்வி வளர்ச்சியை ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

கல்வி அமைச்சர் அவர்கள் கூட சொன்னபொழுது ரூ. 80 கோடிக்கு மேல் மட்டுமல்ல, 100 கோடி கல்வித் துறையைப் பொறுத்த வரையில் செலவழிக்கப்படுகிறது என்று புள்ளி விவரம் சொன்னார்கள். மகிழ்ச்சியடைகிறோம். இவ்வளவு பெரிய தொகையைச் செலவழிக்கக்கூடிய துறை பல்வேறு இடர்ப்பாடுகளுடன் பல்வேறு இலாகாக்களின் கீழ் இருந்தால், அவ்வளவு ஜனநாயகத்துக்குப் பொருந்தாது என்று சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன். கல்வி வாரியம் ஒன்றை அமைக்கும்படி மீண்டும் வலியுறுத்திக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்து, கல்வி அமைச்சர் அவர்கள், தூணைக் கேள்வி கேட்ட போது சிகப்பு நாடா கட்டுவதற்கு தேவை என்றார்கள். போகட்டும், அவ்வாறு சப்பைக் கட்டு வேதனையைத் தருகிறது. ஒவ்வொரு ஒன்றியத்திலும் இருக்கக்கூடிய நடைமுறை என்ன



வென்றால், ஒரு ஆசிரியர் அப்பீல் போடுவதிலிருந்து அரசாங்கத்துக்கு அப்பீல் வரையில் பல ஆண்டுகள் எடுத்துக்கொள்ளப் படுகின்றன. அதற்கான குறிப்பிட்ட நடைமுறை அமுல்படுத்தப் படவில்லை. அதோடு சமீப காலத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர்களே ஊராட்சி ஒன்றியங்களுக்குள் மாற்றுதல் செய்யலாம் என்ற அதிகாரம் கொடுத்திருக்கிறார்கள். இதுவரையில் இது கிடையாது. சமீப காலத்தில் கொடுத்திருக்கிறார்கள். ஊராட்சி ஒன்றியத்தில் இருக்கிறவர்கள் இந்த ஆசிரியர் என்னுடைய காலத்தில் இருக்கக் கூடாது என்று கலெக்டரைப் பார்த்தால், அவர் வேறு வழியின்றி இன்னொரு ஊராட்சி ஒன்றியத்துக்கு மாற்றிவிடுகிறார்கள். தமிழ் நாட்டில் ஒவ்வொரு குடிமகனும் வேலை செய்து வாழ்வதற்கு உரிமை இருக்கிறது என்ற அடிப்படையில் அது மறுக்கப்படுகிறது என்பதை அரசாங்கத்தின் கவனத்துக்குக் கொண்டுவர விரும்புகிறேன். ஊராட்சி ஒன்றியம் தான் கவுன்சிலைத் தேர்ந்தெடுக்கிறது. ஒரு ஊராட்சி ஒன்றியத்திலிருந்து இன்னொன்றுக்கு மாற்றுவதற்கு கலெக்டருக்கு அதிகாரம் நல்ல நோக்கத்தோடு கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். கணவன் மனைவி வெவ்வேறு இடங்களில் இருந்தால், மாற்றிக்கொள்ளலாம். ஆனால் பிள்ளையார் பிடிக்கப் போய் குரங்காக முடிந்தது போல், இப்போது நடைமுறை வேறு விதமாக இருக்கிறது என்பதை வேதனையுடன் தெரிவித்துக்கொள்ளுகிறேன். அதற்கான வரையறைகளை, கட்டுப்பாடுகளை அரசு விதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இத்தகைய முறைகளில் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் ஒரு ஊராட்சி ஒன்றியத்திலிருந்து இன்னொரு ஊராட்சி ஒன்றியத்திற்கு ஆசிரியர்களை மாற்றும் அதிகாரத்தைத் திரும்பவும் அரசு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று வலியுறுத்திக் கேட்டுக்கொள்ளுகிறேன். அரசால் கொடுக்கப்பட்ட பல்வேறு நடைமுறைகள் ஆசிரியர்களுக்குக் கிடைப்பதில்லை. அவைகளைக் கேட்டு ஆசிரியர்கள் மதுரையில் ஒரு பெரும் மகாநாடு நடத்தினார்கள். அன்றிருந்த உள்ளாட்சித் துறை அமைச்சர் மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் மகாநாட்டில் எடுத்துச் சொன்னார்கள். தமிழ் நாட்டில் பணி புரியக்கூடிய பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்குப் படி தருகிறோம் என்று முதலமைச்சரைக் கேட்டுக்கொண்டு உறுதியளித்தார்கள். அதன்படி அரசு ஆணையிட்டது. அதனால் இதுவரை ஆசிரியர்களுக்கு எந்த விதமான பயனும் அளிக்கப்படவில்லை என்பது வேதனையைத் தருகிறது. அரசு அதற்கான நிதியை ஒதுக்கி அதற்கான உத்தரவுகளைக் கல்வித் துறையிலிருந்து போடுகிறார்கள். கீழ் மட்டத்தில் சாமி வரம் கொடுத்தாலும் பூசாரி கொடுக்காத கதையாக ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள ஆசிரியர்கள் அந்த தன்மையைப் பெற முடிவதில்லை. அதற்குக் காரணம் சில அதிகாரிகளிடமிருந்து உத்தரவு வரவில்லையென்கிறார்கள். நான்கு விதமான நடைமுறைகளில் ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள

தலைமை ஆசிரியர்களுக்கு தலைமை ஆசிரியர் படி அளிக்கப் படுகிறது. யார் யார் அந்த இடத்தில் வேலை செய்தார்களோ அங்கே தலைமை ஆசிரியர் படி கொடுத்தார்கள். சீனியாரிட்டி லிஸ்ட்டும் டிஸ்டிரிக்ட் போர்டு நடைமுறையை அனுஷ்டித்து யார் யார் வேண்டுமோ அந்த இடத்துக்கு மாற்றி அவர்கள் சலுகை அளித்திருக்கிறார்கள். சில இடங்களில் அந்த உத்தரவு ஸ்பெசிபிக்காக இல்லை, ஆகவே கொடுக்க முடியாது என்று கருதி, இப்படி ஆசிரியர்களுக்குக் கிடைக்காமல் இருப்பதை மிகுந்த வேதனையோடு நம் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கவனத்துக்குக் கொண்டுவர விரும்புகிறேன். இந்த நிலையில் அரசு உத்தரவிட்டும் கீழே இருக்கிற நடைமுறையினால் ஆசிரியர்களுக்குக் கிடைக்காமல், அரசு நல்ல நோக்கத்தோடு கொடுத்தும் ஆசிரியர்களுக்குச் செல்லாமல், இருக்கும் இந்த இடைவெளி நிச்சயமாக நீக்கப்படவேண்டும், அதற்கான முயற்சிகளில் உள்ளாட்சித் துறை ஈடுபட வேண்டுமென்று வலியுறுத்திக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்து, இந்த அரசு 1—1—1971 முதல் செகண்டரி கிரேட் ஆசிரியர் பயிற்சி பெற்று சான்றிதழ் வைத்திருக்கிறவர்கள் அத்தனை பேருக்கும் செகண்டரி கிரேட் ஊதியம் வழங்க உத்தரவிட்டது. ஊராட்சி ஒன்றியத்தில் மூன்று நான்கு மாதம் கழித்து அந்த உத்தரவைப் போட்டார்கள். இன்னும் பல இடங்களுக்கு அந்த உத்தரவு அனுப்பப்படவில்லை. சில இடங்களில் அனுப்பப்பட்டும், ஜனவரி முதல் தேதியிலிருந்து கொடுக்காமல் உத்தரவு எந்தத் தேதியில் கொடுக்கப்படுகிறதோ அந்தத் தேதியிலிருந்து தான் கொடுக்கப்படும் என்று உத்தரவிட்டிருக்கிறார்கள். அரசு, யார் 1—1—1971-ல் செகண்டரி கிரேட் சர்டிபிகேட் கையில் வைத்திருக்கிறார்களோ, அவர்களுக்கு செகண்டரி கிரேட் வழங்கியிருக்கிறது. நடைமுறைப்படுத்துகிற பொழுது, எந்த அடிப்படையை வைத்துச் செய்கிறார்கள் என்று நமக்குப் புரியவில்லை. ஆதலால் அரசு கொடுக்கிற சலுகைகளை குறுக்கே இருப்பவர்கள் தடுக்கக்கூடியவர்களாக இருக்கிறார்கள். அந்தத் தடைக்கற்கள்

3-30 p.m. நீக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்து, ஊராட்சி ஒன்றிய ஊழியர்களுக்குப் பென்ஷன் சலுகை அளிக்கப்பட வேண்டும். அலுவலகத்தில் உள்ள பணியாளர்களுக்கு இப்போது "பென்ஷன் பெனிபிட்" இல்லை. எல்லா ஊழியர்களுக்கும் பென்ஷன் "பெனிபிட்ஸ்" கொடுக்கப் பட்டாகிவிட்டது. அந்த ஊழியர்கள் கொஞ்ச எண்ணிக்கை உடையவர்கள். அவர்களும் சேர்க்கப்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நகராட்சிப் பகுதிகளில் வேலை செய்பவர்களுக்கு சேலம் மகாநாட்டில் அந்த "பென்ஷன் பெனிபிட்டை" அறிவித்தார்கள். இந்த நேரத்தில் கூட ஒரு வாய்ப்பு இருக்கிறது. இந்த நேரத்தில் அமைச்சர்



அவர்கள் அதற்கு உறுதிமொழி வழங்குவார்களேயானால், ஓய்வு பெறப்போகும் ஊழியர்கள் மகிழ்ச்சியோடும் நன்றியோடும் இருப்பார்கள் என்ற எண்ணத்தைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

வேளாண்மை புரிவோருக்கு அரசு அளிக்கும் சலுகைகள் இடைக்காமல் இடைத் தரகு இல்லாமல் கிடைக்கத்தக்க ஒரு புதிய திட்டத்தை உருவாக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன். சில சலுகைகளைப் பெறுவதற்கு விவசாயிகள் பல கையெழுத்துக்கள் வாங்க வேண்டியிருக்கிறது. அந்த அடிப்படையில் பல மானியங்கள் அரசாங்கம் கொடுத்தும் அவர்கள் கைக்கு முறையாக ஒழுங்காக உருப்படியாகப் போய்ச் சேருவதில்லை. ரூ. 100 என்றால் முழுவதும் போய்ச்சேருவதில்லை. எய்டட் பள்ளிகளில், தனியார் நடத்துகிற பள்ளிகளில் பணியாற்றுகிற ஆசிரியர்களைப் போல் கையெழுத்து ஒன்று போடுவதும் சம்பளம் இன்னென்று பெறுவதும் என்ற நிலை விவசாயிகளுக்கு இருக்கிறது என்று இந்த நேரத்தில் தெரிவித்துக்கொண்டு, ஆசிரியர்களுக்கு இருக்கக்கூடிய இன்னல்களைப் போக்க, எய்டட் பள்ளிகளுக்கு அரசு என்டயர் கிரான்ட் கொடுத்து வருவது போல, ஊராட்சி ஒன்றியங்களுக்கும் முழுவதும் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். எய்டட் பள்ளிகளுக்கு 100 சதவிகிதம் கிரான்ட் ஊராட்சி ஒன்றியங்களுக்குத் தருவது 15 சதவிகிதம். செலினியூ வருமானத்திலிருந்து 15 சதவிகிதம் கொடுக்கப்படுகிறது. இவற்றிற்கு செலினியூ வருமானம் போதாத காரணத்தால், சம்பளம் கொடுக்க முடியாத நிலை இருக்கிறது. எப்படி எய்டட் பள்ளிகளுக்கு 100 சதவிகிதம் கல்விக்காக ஒதுக்கப் படுகிறதோ, அது போல் பஞ்சாயத்து யூனியன்களுக்கும் 100 சதவிகிதம் மானியம் ஒதுக்கி ஆசிரியர்களுக்கு முதல் தேதி சம்பளம் கொடுக்க வழி செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, இவ்வளவு நேரம் கொடுத்தமைக்கு மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொண்டு, முடித்துக்கொள்ளுகிறேன்.

**திரு. வி. வெங்கா:** மாண்புமிகு உறுப்பினர் திரு. முத்துசாமி அவர்கள் பல ஊராட்சி ஒன்றியங்களில் ஆசிரியர்கள் நியமனத்துக்கும் மாறுதலுக்கும் பணம் வாங்குவதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். குறிப்பாக ஊராட்சி ஒன்றியங்களின் தலைவர்கள் ஆசிரியர்களை நியமிக்கவும், மாற்றவும் செய்கிறார்கள். ஆகவே அவர் குறிப்பிட்டது லஞ்சக் குற்றசாட்டு என்று கருதுகிறேன். எந்த ஊராட்சி ஒன்றியத்தில் இது போன்ற நடவடிக்கை இருக்கிறது என்பதை மாண்புமிகு அங்கத்தினர் சுட்டிக் காட்டுவாரா?

**திரு. எஸ். முத்துசாமி:** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் எந்த நிகழ்ச்சி என்று குறிப்பிட்டுச் சொல்ல முடியுமா என்று கேட்டார்கள். அப்படிச் சொல்ல வேண்டு

[திரு. எஸ். முத்துசாமி] [27th July 1971

மென்றால், அந்த நபர் இங்கு இல்லாது அவரை "டிஃபன்ட்" செய்து கொள்ள முடியாத நிலை ஏற்படும். அத்தகைய நிலைமைகள் தடுக்கப்பட வேண்டும் என்று அவ்வப்போது அமைச்சர்களுக்கு முறையீடுகள் அனுப்பப்படுகின்றன. அதைத் தடுக்க அமைச்சர் அவர்கள் தக்க நடவடிக்கை எடுக்க முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

திரு. கே. ராஜாராம்: மாண்புமிகு உறுப்பினர் சொல்லை சில குறைகள் இந்தச் சபையிலே சொல்லப்படக்கூடாத ஒன்றுதும். இப்படிப்பட்ட குறைகள் இருக்குமானால், அவற்றைத் தனிப்பட்ட முறையில் அமைச்சருக்கு எழுதி அனுப்ப வேண்டுமேயல்லாமல், இந்தச் சபையில் குறிப்பிடக்கூடியவையல்ல. பல பஞ்சாயத்து யூனியன் தலைவர்கள் அம்மாதிரிச் செயல்படுவதாகக் குற்றஞ் சாட்டினார்கள். இவைபற்றி அமைச்சருக்கு எழுதியனுப்ப வேண்டுமேயன்றி, இந்தச் சபையில் பகிரங்கமாகப் பேசாமலிருப்பது நல்லது என்பதை அவருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

* திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு: மதிப்பிற்குரிய தலைவரவர்களே, சமுதாய வளர்ச்சி கிராம வளர்ச்சி சம்பந்தமான இலாக்காக்களைப்பற்றிய விவாதத்திலே கலந்துகொண்டு ஒரு சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். 1958-ம் ஆண்டில் பஞ்சாயத்து யூனியன்கள், ஜில்லா பஞ்சாயத்து கௌன்சில்கள் ஆகியவைகளுக்கான சட்டத்தை வரையும்போது அந்தச் சட்டத்தின் முகப்புரையில் எந்த நோக்கத்தோடு எதற்காக இந்தச் சட்டம் அமைக்கப்படுகிறது என்பதையெல்லாம் கூறியிருக்கிறார்கள். பஞ்சாயத்துகள் கிராம வளர்ச்சிக்கு ஏற்ப செயல்பட வேண்டுமென்று விரும்பினோம் கிராமங்களில் ஜனநாயக ஆட்சியைப்பற்றி அனுபவம் ஏற்பட வேண்டுமென்று இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்தோம். அந்த நிலையில் பார்த்தோமானால், இப்போது நடைமுறையில் உள்ள அனுபவங்கள் நாம் மிகவும் வருந்தக் கூடிய நிலையை உண்டு பண்ணியிருக்கின்றன என்பதில் சந்தேகமில்லை. அடிப்படையில் ஒரு நல்ல சூழ்நிலை இன்னமும் உருவாகவில்லை என்று நாமெல்லாம் வருந்த வேண்டிய ஒரு நிலை இருக்கிறது. இந்தப் பஞ்சாயத்துச் சட்டங்கள் வந்ததற்குப் பின்னால், கிராமப் புற மக்கள் கூடி அவரவர்களுடைய பகுதிகளில் பல்வேறு பொதுப் பிரச்னைகளைப்பற்றி, வாழ்க்கைப் பிரச்னைகளைப்பற்றி நிர்வாகத்திலே அவர்களுடைய பிரதிநிதிகள் இருந்து அவர்களாகவே அவற்றைக் கவனித்து, அந்த நிர்வாகத்தை அவர்களாகவே செய்து கொள்ள வேண்டும். அதன்மூலம் அவர்களுக்கும் ஜனநாயகத்தைப் பற்றிய, ஆட்சியைப் பற்றிய அனுபவம் ஏற்பட வேண்டும். அவ்வாறு கிராம அளவிலிருந்து நிர்வாகப் பயிற்சியும், பொறுப்பு களும் அவர்களுக்கு ஏற்பட்டாலொழிய, ஜனநாயக அஸ்திவாரம் நிலைக்காது என்று எல்லோராலும் கருதப்பட்ட காலத்[illegible] இவ்வாறு பல சட்டங்கள் ஏற்படுத்தினோம். இன்றைய நிலவரத்தை



27th July 1971] [திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு]

நாம் பார்க்கும்போது, பஞ்சாயத்துகளும், பஞ்சாயத்து யூனியன்களும் இவற்றின் நடைமுறைகளில் ஒன்று, பதவி அதிகாரங்கள், இன்னொன்று உத்தியோகஸ்தர்களின் வேலை வாய்ப்புகள், வசதிகள் இந்த இரண்டுக்கும் பொருத்தமாக பலியாகக் கொண்டு கிராம மக்களைப் பற்றிய கவலையே இல்லாத அளவிற்குப் போய்க் கொண்டிருக்கின்றன. இந்தப் பஞ்சாயத்துக்கள் கிராம மக்களின் சௌகரியத்திற்காக இல்லை. இவை நிர்வாகத்தில் அதிகாரம் செலுத்துபவர்கள், அதில் பணியாற்றுகிற அலுவலர்கள், ஆகியவர்கள் வசதிக்காக ஏற்பட்ட அமைப்புகளாக, ஸ்தாபனங்களாக இருக்கின்றன என்று கருதக்கூடிய நிலைக்குப் போய்க் கொண்டிருக்கின்றன. இதைக் கண்டு நான் கவலைப்படுகிறேன். இதையெல்லாம் அரசு சிந்தித்துப் பார்த்து, இதை மாற்றி ஒரு நல்ல சூழ்நிலை ஏற்படவும் ஒரு நல்ல நிர்வாகம், நல்ல பலன் அளிக்கும் விதத்திலே அமைவதற்கு என்ன செய்யலாம் என்பதைப்பற்றி ஆழ்ந்து யோசித்துப் பார்க்க வேண்டும். அதற்காக ஒரு குழுவை அமைத்து, அவர்களுடைய கருத்துக்களைக் கேட்டு இதற்கு வேண்டிய பரிகாரத்தைக் காலாகாலத்திலே, சீக்கிரத்தில் காணுவது மிகவும் நலமாக இருக்கும் என்று நான் கருதுகிறேன். இந்த அமைப்புகளை ஆரம்பிக்கிற நேரத்தில், இந்தியாவிற்குச் சுதந்திரம் பெற்றுக் கொடுத்த பண்டித நேரு போன்றவர்களெல்லாம் என்ன கருதினார்கள் என்றால், இந்த கிராம வளர்ச்சித் திட்டங்கள், சமுதாய நலப் பணிகள் ஆகியவைகளெல்லாம் இந்த நாட்டுக்கு நல்ல பலனளிக்கும் வகையில் உதவியாக இருக்கும் என்று தான் கனவு கண்டார்கள். ஆனால் அவர்கள் நினைத்ததற்கு நேர் மாறான முறையிலே இவைகள் செயல்பட்டு வருகின்றன. இந்த நிலைமையைத்தான் நாம் இன்று காண முடிகிறது. நேருஜியவர்கள் இதைப்பற்றிக் கூறிய கருத்துகளடங்கிய இந்த நூல் குறளகத்திலே இருக்கிறது. சென்னை அரசாங்கத்தால் இந்தப் புத்தகம் அச்சிடப் பட்டிருக்கிறது. இந்தப் புத்தகத்திலே அவருடைய கருத்துக்களை யெல்லாம் நாம் காண முடிகிறது. ஒரு நாட்டின் ஒவ்வொரு துறையிலும் இருக்கிற முதல்தரமான மனிதர்களின் கையைப் பொருத்தே அந்த நாட்டு மக்களின் தன்மையைப் பலவகையாகப் பிரிக்கலாம். விஞ்ஞானம், இன்ஜினியரிங், மருத்துவம் அல்லது நிர்வாகம் இப்படி எந்தத் துறையானாலும் தலைமையான முதல்தர மான மக்கள்தான் ஒரு நாட்டுக்கு மதிப்பு உண்டாக்குகிறார்கள். ஆனால் மேலிடத்தில் மட்டும் முதல்தரமான மக்களைக் கொண்டிருந்தால், அந்த முதல்தரத் தலைவர்களுக்கு ஏற்றபடி சாதாரண பொதுமக்களிடையும் உயர்ந்த தரமுள்ளவர்கள் இருக்க வேண்டும். இந்தப் பொதுத்தர உயர்வுக்கு இடமில்லை என்றால், முதல்தரமான தலைவர்கள் கிடைக்க மாட்டார்கள். எனென்றால் மக்களிடையே இருக்கும் தரமானவர்களிலிருந்து தான் முதல் தரமான தலைவர்கள் உருவாகிறார்கள். நீங்கள் மகாபெரிய மேதைகளை உற்பத்தி செய்வதற்காக இங்கே பாடுபடவில்லை. முதல்

தரமான தலைவர்களைத் தருகின்ற பெருங்களஞ்சியமாக உள்ள தரம் வாய்ந்த மனிதத்திரளை உருவாக்குவதே உங்கள் வேலை. இப்படிப் பட்ட களஞ்சியங்களுக்கு வாய்ப்பு இருக்க வேண்டுமென்று நாம் விரும்புகிறோம் என்று தான் இந்தத் துறையிலே ஈடுபட்டிருந்து பயிற்சி அடைந்த அலுவலர்களிடையே பேசுகிறபோது நேருஜி அவர்கள் பேசியிருக்கிறார்கள்.

5-40 p.m. ஆனால் இன்று பஞ்சாயத்துகளுடைய தேர்தல், பஞ்சாயத்து யூனியன்களுடைய தேர்தல் இவைகளில் நடைபெறும் அலங்கோலங்களைக் கவனிக்கும்போது, அந்த உயர்ந்த எண்ணங்களுக்கும் நடைமுறையில் உள்ள செயல்களுக்கும் சம்பந்தம் இருக்கிறதா என்று கவலைப்பட வேண்டிய நிலையில் இருக்கிறோம். பொதுவாக பஞ்சாயத்து யூனியன் தேர்தல்கள் நடக்கும் காலத்திலே அவர்கள் நியாயமான எண்ணங்களைத் தங்களுடைய மனதிலே கொள்வதில்லை. அப்படி உருவான மனப்பான்மை இல்லை. வேறு மனப்பான்மை வந்து விடுகிறது. அங்கு வெறி தாண்டவமாடுகிறது என்றுதான் சொல்ல வேண்டும். இத்தகைய நிலையில் பஞ்சாயத்து யூனியன் தேர்தலில், நாம் செலவு செய்யும் பணத்தை எப்படியும் எடுத்து விடலாம் என்ற நம்பிக்கை இன்று ஏற்பட்டு விட்டது. நான் அறிந்த ஒரு சில அனுபவங்களைக் கொண்டு சொல்கிறேன். பஞ்சாயத்து யூனியன் சேர்மனை வருவதற்கு ஏற்படும் செலவினங்களை 4, 5 ஆண்டுகளில் நடைமுறையில் திரும்பப் பெற்றுவிடலாம் என்ற நம்பிக்கை ஏற்பட்டு விட்டது. இப்படி தேர்தல் நேரத்தில் செலவு செய்யப்பட்ட பணத்தை ஈடுகட்டிக் கொள்ளலாம் என்ற நம்பிக்கை ஏற்பட்டுள்ளது. தேர்தலில் ஜெயித்துத் தலைவராக வந்தவரும், தேர்தலில் தோற்றவரும் ஒன்றுசேர்ந்துகொண்டு தாங்கள் தேர்தலில் செலவு செய்த பணத்தை ஈடுகட்டிக்கொள்ளப் பார்க்கிறார்கள். இத்தகைய நிலைமைகளெல்லாம் பலப்பல இடங்களிலே இருக்கின்றன. நான் பொதுவாகச் சொல்கிறேன், யார் எந்தத் தரப்பு என்று அந்த மாதிரி பிரித்துப் பேசவில்லை. பொதுவாக உள்ள நிலவரம் கவலையளிப்பதாக இருந்துகொண்டிருக்கிறது. இதில் கவனிக்க வேண்டியது என்னவென்றால், கிராமப் புறங்களில் இது தான் பஞ்சாயத்து யூனியன், பஞ்சாயத்துகளுடைய நிர்வாகம், இதுதான் தேர்தல் முறை, இதற்குத்தான் பஞ்சாயத்துத் தலைவராக வருவது, இந்த நோக்கத்திற்குத்தான் பஞ்சாயத்து யூனியன் தலைவராக வருவது என்ற எண்ணத்தை இளைஞர்கள் உருவாக்கிக்கொண்டிருக்கிறார்கள். இது கேடு, அதர்மம், இது தீய முறை என்பதை அவர்கள் மனதிலே நாம் உணர்த்த வேண்டுமே என்று கவலைப்பட வேண்டியிருக்கிறது. இப்படிப்பட்ட நிலைமைகளை உருவாக்கிக்கொண்டு வருகிறார்கள். ஆகவே நான் கேட்டுக்கொள்வதெல்லாம் இந்தக் குறைபாடுகளைப் போக்கவேண்டும். இங்கே பல்வேறு அனுபவம் உள்ளவர்கள் இருக்கிறார்கள். நான் பஞ்சாயத்துத் தலைவராக, பஞ்சாயத்து யூனியன் தலைவராக இருந்ததில்லை. ஒரு காலத்திலே இருந்திருக்கி





றன். 36 ரூபாய் அரசாங்கம் உதவிப் பணம் கொடுத்தால் 72 பாய்க்குக் கிராமப் புறத்திலே பஞ்சாயத்திற்குப் புத்தகங்கள் ாங்கலாம் என்பதற்காக, பஞ்சாயத்துகளுக்கு உதவி சய்யப்பட்ட காலத்திலே ஒரு பஞ்சாயத்தை அமைத்து தற்காகப் பாடுபட்டேன், அதற்குப் பிறகு நான் பஞ்சாயத்துத் லைவராக இருந்ததில்லை. பஞ்சாயத்து யூனியன் தலைவராக ருந்ததில்லை. இதிலே என்னை விட மிகவும் அதிகமான ஈடுபாடு ாண்டவர்கள் பஞ்சாயத்து யூனியன் தலைவர்களாக உள்ளவர்கள் ல்ல அனுபவங்களை எடுத்துச் சொன்னார்கள். அவர்கள் பல்வேறு ஷ்டங்களை எடுத்துச் சொன்னார்கள். இவைகளெல்லாம் நான் ன்று பார்க்கக் கூடிய குறைபாடுகள். அவர்கள் தங்களுடைய னதிலே இருப்பதையெல்லாம் எடுத்துச் சொன்னார்கள். நான் ன்னுடைய கருத்துக்களைத் தெரிவிக்கிறேன்.

இப்போது நூற்றுக்கணக்கான பஞ்சாயத்துகள் 500 பேர்கூட னத்தொகை உள்ளதாக இல்லை. பள்ளிக்கூடம் வேண்டுமென்று, 0 ஜனத்தொகை இருக்கிறது என்று சர்ட்டிபிகேட் வாங்கி, ள்ளிகளை நிறுவியிருக்கிறார்கள். ஆகவே, 1,000 பேருக்குக் றைந்து உள்ள இடங்களில் பஞ்சாயத்துகள் தேவை இல்லை ன்று வகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னும் இங்கே 592 பேரூராட்சிகள் இருப்பதாக நாம் ார்க்கிறோம். நகர பஞ்சாயத்துக்கள் நிறைய இருக்கின்றன. ார்களில் மொத்தம் 6,000 ஜனத்தொகை இருந்தால் நகரப் ல ஊர்களுக்கு நகர் என்று போடுவதற்குத் தகுதி இல்லை. 10, 15 ஞ்சாயத்து என்று சொல்லுகிறார்கள். ஜனத்தொகை ருக்கிறது என்ற காரணத்துக்காக நகரப் பஞ்சாயத்தாக்கி ிட்டால், எப்படி பஞ்சாயத்தை நடத்துவது? அதிலே எந்த ருப்படியான வேலை செய்ய முடியும்? நகரப் பஞ்சாயத்தாக ருக்க முடியாத நிலையில் உள்ள கிராமங்களை நீக்கி மாற்றியமைக்க வண்டுமென்று இந்த சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்ளுறேன்.

இன்னும் 128 இரண்டாம் நிலை வட்டாரங்கள் இருக்கின்றன ன்று தெரிகிறது. இந்த 128 வட்டாரங்களும் எப்போது முதல் லையை எட்டும் என்பது தெரியவில்லை. இதை நான் தெரிந்து காள்ள அமைச்சர் அவர்கள் விவரித்துக் கூறுவார்கள் என்று ான் நம்புகிறேன்.

வாக்காளர்கள் பட்டியல் சம்பந்தப்பட்ட மட்டில், ஒரே ஒரு ாக்காளர் பட்டியல் இருக்க வேண்டும். இதையும் அரசு சிசிலித்துப் பார்க்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளுறேன்.

செங்கல்பட்டு பஞ்சாயத்து யூனியன் தலைவர் அவர்கள், ாண்புமிகு உறுப்பினர் திரு. வெங்கா அவர்கள் கூறியது போல, ரிகளை கடன்களை வசூலிப்பதற்கும், ஊராட்சி நிலங்களை

நிர்வகிப்பதற்கும், நில ஆக்கிரமிப்பு போன்றவைகளைத் தடுக்கவும் டெபுடி தாசில்தார்கள் 100 பேரை நியமித்திருப்பதாகத் தெரிகிறது. ரெவின்யூ இலாகாவைச் சேர்ந்த இந்த 100 பேரால் தான் நிர்வகிக்க முடியுமா? இந்த பஞ்சாயத்துகளில் பணி புரிகிற வர்களால் இந்தப் பணிகளைச் செய்ய முடியாதா, தகுதி உள்ளவர் களாக அவர்களை உருவாக்க முடியாதா என்பதை அரசு சிந்தித்துப் பார்க்க வேண்டும். அவர்களுக்கு அனுபவம் இல்லாத வேலை ஒன்று, சர்வே நில ஆக்கிரமிப்பை அகற்றுவதற்குச் சட்ட அறிவு வேண்டும். இந்த இரண்டு திறமை தவிர மற்ற திறமைகள் எல்லாம் இருக்கின்றன. இந்த இரண்டு அனுபவங் களையும் அவர்கள் பெறுவதற்கு பயிற்சி கொடுத்து விட்டால், 375 வட்டார வளர்ச்சிகளிலும் இவர்களுக்கு வேலை வாய்ப்புகள், பதவி உயர்வுகள் கிடைக்கும் என்று நான் கருதுகிறேன். இதை அரசு யோசித்துப் பார்த்து, அதற்கான வழி வகைகளைச் செய்ய வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

5-50 p.m. இப்போது தீவிரப் பயிற்சித் திட்டங்கள் என்று பல பயிற்சிகள் கொடுக்கப்படுகின்றன. இன்னமும் பயிற்சி கொடுத்த வண்ணம் இருக்கிறார்கள். இவ்வளவு பயிற்சிகளும் பெற்றவர்கள் ஒவ்வொரு வட்டாரத்திலும் மாதிரி முறைகளில் பயிர் செய்ய வேண்டும். விவசாயிகள் வந்து பார்க்கும் அளவில், மாதிரித் திட்டம் ஒரு ஏக்கர் அல்லது ½ ஏக்கர் நிலத்தில் இவர்கள் செய்து காட்ட வேண்டும். விவசாயிகள் பார்க்கும் அளவுக்கு, செயல் முறைத் திட்டமாகக் காட்ட வேண்டும். இப்போதெல்லாம் பேச்சு அளவில் தான் இருக்கிறதே தவிர, செயல் முறைத் திட்டமாக இல்லை. செயல் முறையில் இருந்தால் தான், விவசாயிகளுக்கு நம்பிக்கை பிறக்கும். அதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

ஒவ்வொரு ஆண்டில் கருத்தரைக் குழு மாநில அளவில் செயல்படுகிறது. அதில் கருத்துகளைத் தெரிவிக்க, அனுபவம் உள்ளவர்களைக் கூட்டத்துக்கு அழைத்து, அவர்களுடன் கலந்து பேசுவது நலம் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

நகரப் பஞ்சாயத்துகளில் ரோடு அபிவிருத்திக்காக 7 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று நான் பார்த்தேன். இது மிகவும் போதாது. இதன்படி ஒரு நகரப் பஞ்சாயத்துக்கு 1,182 ரூபாய்தான் கிடைக்கும். இதைக் கொண்டு எப்படி தூசி இல்லாத ரோடுகளைப் போட முடியும்? இதற்காக அதிக அளவில் நிதி ஒதுக்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று நான் அரசைக் கேட்டுக்கொண்டு என்னுடைய வார்த்தைகளை முடித்துக் கொள்ளுகிறேன்.





**திரு. வி. தங்கபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த உள்ளாட்சித் துறை விளக்கக் குறிப்பின் மீது நமது மாண்புமிகு உறுப்பினர்கள் நல்ல கருத்துக்களைத் தெரிவித் திருக்கிறார்கள். இந்த ஒரு விஷயத்தில் தான் கட்சி மாச்சரியம் இல்லாமலும். ஆளுங் கட்சி, எதிர் கட்சி என்ற வேறுபாடுகளுக்குக் கருத்துக் கொடுக்காமலும், ஜனநாயகத்தின் அச்சாணியாக இருக்கின்ற ஊராட்சி மன்றங்களும், ஊராட்சி ஒன்றியங்களும் நல்ல முறையில் செயல்பட வேண்டும் என்ற நோக்கத்தோடு பல கருத்துகளை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அப்ரஹாம் லிங்கன் சொன்ன ஜனநாயக தத்துவத்தின்படி

government of the people, by the people and for the people,

அரசு மக்களால், மக்களுக்கு, அமைக்கப்பட வேண்டும் என்ற நோக்கத்துடன் நம்முடைய உலக உத்தமர் மஹாத்மா காந்தி அவர்கள் மூலமாக கிராம ராஜ்யம் ஏற்பட்டது. அந்த முறையில் இன்றைய தினம் ஊராட்சி மன்றங்கள், ஊராட்சி ஒன்றியங்கள் ஜனநாயகத்திற்கு ஆணி வேராக அமைந்திருக்கின்றன. ஆனால் மேலெழுந்த வாரி யாகப் பார்த்தால், ஜனநாயகம் என்பது பகட்டாகச் சொல்லுகின்ற வார்த்தை; ஜாலத்திற்குப் பயன்படுகிறதே தவிர, உண்மையான நடைமுறையைப் பார்க்கின்றபோது, ஊராட்சி மன்றங்களும், ஒன்றியங்களும் ரெவின்யூ இலாக்காவின் பிடிப்பிற்கு உள்ளாகி யிருக்கின்றன என்பதைச் சுட்டிக் காட்டாமல் இருக்க முடியாது. எனக்கு முன்பு பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. தென்னரசு ஒரு கருத்தை வற்புறுத்திச் சொன்னார்கள். ஊராட்சி மன்றத் தலைவர்கள், ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள், நகர மன்றத் தலைவர்கள் அவ்வளவு பேரும் வேண்டாத பிடிப்பின் கீழ் வைக்கப்பட்டிருக்கிறார்கள் என்று சொன்னார்கள். அவர்கள் ரெவின்யூ இலாக்காவோடு கட்டாயக் கல்யாண முறையில் இணைக்கப்பட்டிருக்கிறார்களே தவிர, விரும்பி யாரும் இல்லை. உள்ளபடியே ஊராட்சி நிர்வாகம், ஒன்றிய நிர்வாகம், நகர மன்ற நிர்வாகம் ஆகியவை சுதந்திரமாகச் செயல்பட வேண்டுமென்றால், எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்த விருப்பத்தை நிறைவேற்றி, மாநில அரசு நியமித்திருக்கின்ற ஏ.ஆர்.சி. அறிக்கையின்படி இதைத் தனியாகப் பிரித்து தனி இலாக்காவாக ஆக்குகின்ற செயல்திட்டத்தை உருவாக்கினால்தான், நாம் ஜனநாயகத்தைக் காப்பாற்ற வழிகோல முடியும். நமது எண்ணங்களெல்லாம் மாநில சுயாட்சியை நோக்கிப் போய்க் கொண்டிருக்கிறது. "பெடரல் கவர்ண்மென்டு" உருவாக வேண்டுமென்று எண்ணிக்கொண்டிருக்கிறோம். மத்தியில் குவிந்திருக்கின்ற அதிகாரங்கள் மாநிலத்திற்கு வேண்டும் என்று தெரிவித்துக்கொண்டிருக்கிறோம். அதே சமயத்தில் ஊராட்சி மன்றத் தலைவர் என்ற முறையிலும், ஊராட்சி ஒன்றியத் தலைவர் என்ற முறையிலும் அதில் கிடைத்திருக்கின்ற அனுபவத்தை வைத்துச் சொல்லுகிறேன். ஊராட்சி மன்றங்கள், ஊரா[illegible]

ஒன்றியங்கள் சுயேச்சையாகச் செயல்பட்டால் தான், நாம் கோருகின்ற மாநில சுயாட்சிக்கு அது வலிவு அளிக்கும். மத்தியில் குவிந்திருக்கின்ற அதிகாரங்களை மாநிலங்கள் கேட்பது போல, உள்ளாட்சி நிர்வாகங்கள் நல்ல நிலையில் தங்களுக்கு கொடுக்கப் பட்டிருக்கின்ற வாய்ப்புக்களையும், வசதிகளையும் கொண்டு திறமையாக நடத்த அதிகாரங்கள் கொடுக்கப்பட வேண்டும் என்று இந்த நேரத்தில் அரசாங்கத்திற்குக் கவனப்படுத்தக் கடமைப்பட்டிருக்கின்றேன். அதிகாரங்களைப் பங்கிட்டுக் கொடுப் பதன் மூலம் தவறுகள் நடந்துவிடும், ஊழல்கள் மலிந்துவிடும் என்று சுலபமாகப் பேசிக் கொண்டிருக்கிறோம். எந்த ஊராட்சி ஒன்றியத் தலைவரும் தாங்களாக நிர்வாகம் செய்வதில்லை. ஊராட்சி மன்றக் கூட்டம் இருக்கிறது. கூட்டுமன்றக் கூட்டம் இருக்கிறது. அதில் தீர்மானம் நிறைவேற்றித் தான் செயல்படுத்த வேண்டும். செயல்படுத்த அதிகாரிகள் இருக்கிறார்கள். செயல்படுத்தும் போது அரசாங்கத்தின் கண்காணிப்பு இருக்கிறது. ஆடிட்டர்கள் இருக்கிறார்கள். இந்த முறைகளையெல்லாம் பின்பற்றித்தான் ஊராட்சி ஒன்றியத் தலைவரோ, ஊராட்சி தலைவரோ காரியங்களைச் செய்யவேண்டியிருக்கிறது. ஆகவே எந்தத் தவறும் நடந்து விடாது. எனக்கு முன்னால் பேசிய நமது அருமை ஆசிரியர் நண்பர் திரு. முத்துசாமி அவர்கள் பேசும்போது, ஊராட்சி ஒன்றியங்களில் பணியாற்றுகின்ற ஆசிரியர்களை ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள் கொடுமைப்படுத்துவதைப்போல பயங்கர மாகச் சித்தரித்துக் காட்டினார்கள். நான் ஒன்றியத் தலைவராக இருக்கிறேன். 10 ஆண்டுக்கு முன்னால் ஆசிரியராகப் பணியாற்றி யிருக்கிறேன். என்னுடைய மனைவி ஊராட்சி ஒன்றியப் பள்ளியில் ஆசிரியையாக இருக்கிறார்கள். ஆரம்ப ஆசிரியர்களை எவ்வளவு விதமாக அரசியலுக்குப் பயன்படுத்திக்கொள்ளுகிறார்கள், உள்ளூர் விவகாரங்களில் உபயோகப்படுத்திக் கொள்ளுகிறார்கள், கூட்டணி என்ற பெயரால் தங்களுக்குச் செல்வாக்கு வேண்டும் என்பதற்காக ஆசிரியர்களை அரசியலுக்குத் தூண்டிவிடுகிறார்கள் என்று தெரியும். ஆகையால் ஊராட்சி ஒன்றிய நிர்வாகம் இவைகளைக் கண்காணித்து வேலை செய்யவேண்டியிருக்கிறது. ஆகவே ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள் ஆசிரியர்கள் விவகாரங்களில் தலையிடுகிறார்களென்றால், நாங்கள் வேண்டுமென்றே தலையிடுவதில்லை தலையீடு என்பது வேறு : முறையீடு என்பது வேறு. முறையீடு வந்தால், நாங்கள் தலையிடவேண்டியிருக்கிறது. அந்த அதிகாரம் தான் ஊராட்சி ஒன்றியத் தலைவர்களுக்கு இருக்கிறது. ஊராட்சி ஒன்றியங்களில் பணியாற்றுகிற ஆசிரியர்களுக்கு மாற்றுதல் என்பது வருடத்துக்கு ஒரு முறை நடைபெற வேண்டியிருக்கிறது. சில ஆசிரியர்கள் விரும்பி மாற்றுதலைக் கோருகிறார்கள். சில மாற்றுதல்களை நிர்வாகக் காரணங்களுக்காகச் செய்ய வேண்டி யிருக்கிறது. அப்படிச் செய்ய அட்ஹாக் கமிட்டி போட்டிருக் கிறோம். நகரமன்றங்களுக்கு அப்படிப்பட்ட அட்ஹாக் கமிட்டி கிடையாது. அரசாங்கப் பள்ளிகளில் வேலை செய்கின்ற



ஆயிரத்துச் சில்லறை ஆசிரியர்களை மாற்றுவதற்கு மாவட்டத் தலைமைக் கல்வி அதிகாரிக்கு அதிகாரம் இருக்கிறது. அதற்கு எந்தக் கமிட்டியும் கிடையாது. ஆனால் 100 ஆரம்பப் பள்ளி ஆசிரியர்களை மாற்ற, கூட்டு மன்றங்களில் ஒரு பெரிய கமிட்டி கூடுகிறது. ரெவின்யூ டிவிஷனல் ஆபீசர் அதற்குத் தலைமை தாங்க வேண்டிய அவசியம் இல்லை. ஊராட்சி ஒன்றியத்திற்குத் தலைவராக இருப்பவர், ஆணையாளர், சட்ட மன்ற உறுப்பினர் அந்தக் காரியத்தைச் செய்யலாம். நிர்வாகத்தில் மிக அதிகமான சிக்கலை உருவாக்குவதைவிட எளிமையான முறையில் நிர்வாகம் செயல்பட மாறுதல் அமைந்திருக்க வேண்டு மென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்ததாக, ஊராட்சி ஒன்றிய அலுவலர்கள் இரண்டு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருக்கிறார்கள். அரசாங்க சார்பில் பணியாற்றுகின்ற அலுவலர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்குத் தனியாக சர்விஸ் கண்டிஷன்கள் இருக்கின்றன. விரும்பினால் அவர்களை மாவட்ட ஆட்சித் தலைவர் எங்கு வேண்டுமானாலும் மாற்றலாம். ஆனால் ஊராட்சி ஒன்றிய அலுவலர்களை எங்கும் மாற்ற முடியாது. அவர்களுக்கு சர்விஸ் கண்டிஷன் கிடையாது. ஆகவே அவர்கள் எந்தத் தவறு செய்தாலும், அவர்களைப் பதவியி லிருந்து நீக்குவதைத் தவிர, வேறு எந்தவிதமான மாற்றமும் செய்ய முடியாது. நகரமன்றப் பணியாளர்களுக்கு உள்ளதுபோல, ஊராட்சி ஒன்றிய அலுவலர்களுக்கும் சர்விஸ் கண்டிஷன் மிக இன்றியமையாதது ஆகும். அத்துடன் மாவட்ட அளவிலாவது மாற்ற அதிகாரங்கள் கொடுக்கப்பட வேண்டும். இந்த நிலையில் கூடும் கூட்டுமன்றக் கூட்டங்கள் வெறும் ஆலோசனைக் குழுக் கூட்டங்களாகக் கூடி, திருவிழாவில் கூடிக் கலைவது போல கூடிக் கலைகின்ற மன்றங்களாகவே இருக்கின்ற நிலைமை ஏற்பட்டிருக் கின்றது. மாவட்ட வளர்ச்சிக் குழுக் கூட்டங்களும் அந்த வித மாகவே இருக்கின்றன. இவற்றையெல்லாம் நிறைவு செய்ய அரசு முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். 6-00 p.m.

ஊராட்சி ஒன்றியங்களில் பணியாற்றுகின்ற விவசாய விஸ்தரிப்பு அதிகாரி பி.எஸ்ஸி. (அக்ரி.) பட்டப்படிப்பு படித்து வந்திருப்பவர், வட்டார விவசாய வளர்ச்சியில் முழு கவனம் செலுத்திப் பணிபுரிய வேண்டும். அவர்கள் உயர்ந்த பட்டம் பெற்றிருப்பவர்கள் தான். அவர்கள் பதவியை "கெஜடெட்" ஆக்க வேண்டியதுதான். ஆனால் ஊராட்சி ஒன்றிய ஆணையாளர் ஒரு நான்-கெஜடெட் அதிகாரி. அவருக்குக் கீழ் இருக்கிற அசிஸ்டெண்டு எக்ஸ்டென்ஷியர் கெஜடெட் பதவி பெற்றவர். வெடரினரி ஆபீசர் கெஜடெட் பதவி பெற்றவர். இவர்கள் எல்லாம் நாங்கள் எப்படி பி.டி. ஓவின் கீழ் வேலை பார்ப்பது என்றால், கூட்டு மன்றத்தையே கலைத்துவிடலாம். கூட்டுமன்றத் தில் பணியாற்றுகின்ற அதிகாரிகளுக்கு அப்படிப்பட்ட மனப் பான்மை வரக்கூடாது. விவசாய விஸ்தரிப்பு அதிகாரி வெறும்

எழுத்தாளரைப் போன்று, புள்ளி விவரங்களைத் தயாரிக்கவேண்டிய பணியில் இருக்கின்றாரே தவிர, வயலுக்குச் சென்று விவசாயிகளைச் சந்தித்து விவசாய வளர்ச்சியில் முழுக்க முழுக்கச் சிந்தனை செய்ய முடியாத நிலையில் இருக்கிறார்கள். ஆகவே விவசாய சம்பந்தமான புள்ளிவிவரங்களைத் தர ஒரு எழுத்தாளரைப் போட்டுவிட்டு, விவசாய விஸ்தரிப்பு அதிகாரியை விவசாயப் பணியை கவனிக்க விட்டுவிட வேண்டும்.

**ஊராட்சி ஒன்றியங்களில் பணியாற்றுகின்ற அதிகாரிகள்** தங்கள் தங்கள் மேலதிகாரிகளுக்குப் பயந்தவர்களாக நடக்கின்றார்களே தவிர, ஒன்றியத்தில் பணியாற்றுகிறோம், கூட்டு மன்றத்திற்கு நாம் **பொறுப்பானவர்கள் என்ற நினைவு அற்றவர்களாக இருக்கிற நிலைமையிருக்கின்றது.** இ. ஓ. (கோவாபரேஷன்) டி.ஆர்.-க்குத் தான் பயப்படுகிறார். இ.ஓ. (இண்டஸ்டிரீஸ்) அவருடைய மேலதிகாரி வந்தால் அவருடன் போய்விடுகிறார். இந்த நிலைமை மாறி, கூட்டு மன்றத்திற்கு அவர்கள் பணியாற்ற வந்துவிட்டால், அவர்கள் பணிக்காலம் வரையில் ஆணையரின் கீழ் பணிபுரிய வேண்டும் என்ற மனப்பான்மை ஏற்பட வேண்டும்.

**அடுத்து,** மாண்புமிகு அங்கத்தினர் திரு. வெங்கா அவர்கள் கூறியதுபோல், பஞ்சாயத்து நிதி எங்களுக்கு வந்து சேராமலிருக்கிறது. "லோகல் செஸ்" எங்கள் கைக்கு வருவதில்லை. ராமனுதபுரம் தொடர்ந்து பஞ்சப் பிரதேசமாக இருந்து வருவதால், லோகல் செஸ்ஸை வசூலிக்க மறுக்கிறார்கள். கிராம அதிகாரிகள் **பஞ்சாயத்து வரிகளை வசூலிக்க மறுக்கிறார்கள்.** ஆகவே 4, 5 பஞ்சாயத்துக்களுக்குச் சேர்த்து ஒரு வரி வசூலிக்க அலுவலரைப் போட்டு, வரி வசூலிக்க வழி செய்ய வேண்டும். அம்மாதிரிச் செய்தால், வேலையற்ற இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு அளித்தது போல் இருப்பதுடன், ஊராட்சி ஒன்றியத்திற்கு வருவாய் கிடைத்தது போல் இருக்கும் என்று சொல்லிக்கொள்ளுகிறேன்.

எனக்கு முன்னால் பேசியவர்கள், குறிப்பாக மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். எஸ். தென்னரசு அவர்கள் ஊராட்சி ஒன்றியத் தலைவர் ஜீப்களை அனுபவித்துக்கொண்டிருக்கிறார்கள் என்று குறிப்பிட்டார்கள். ஏறக்குறைய பஸ் போக்குவரத்து இல்லாத கிராமங்கள் எல்லாம் ஒன்றியங்களுடன் இணைக்கப்பட்டிருக்கின்றன. எங்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் ஜீப்கள் பத்து, பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பு கொடுக்கப்பட்டவை. அவை மூன்று மாதங்கள் ஓடும், ஒன்பது மாதங்கள் ஒர்க்ஷாப்பில் இருக்கும். முன்பு வாங்கிக் கொடுத்த ஜீப்களைத் தவிர, புதிதாக வாங்கவில்லை. பேருக்குத் தான் இருக்கின்றன. ஆர். டி. ஓ. போன்ற அதிகாரிகள் புதிதாகத் தேவைப்படுகிறபோது வாங்கிக் கொள்ளுகிறார்கள். இந்த ஒன்றியங்களின் விஷயத்தில் கலெக்டர்தான் எஜமானர் என்ற செவின்யூ மெண்டாலிட்டியை உண்டாக்கிக்கொண்டிருக்கிறார்கள். வளர்ச்சிப் பொறுப்புக்கு பி.டி.ஓ. தான் அதிகாரி. ஆனால், அவருக்கு "ஸ்டெப் மதர்லி டிரீட்



மெண்டு" அளிக்கப்படுகிறது. அவர் மாற்றாந்தாய் மனப் பான்மையுடன் நடத்தப்படுகிறார். தங்களுடைய ஒரு அங்கமாக அவர்கள் நினைப்பது இல்லை. செவின்யூ துறை பொறுப்பாக உள்ளதால், அது வட்டார வளர்ச்சிக்குப் பாதகமாக இருக்கிறது என்பதை வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன். விவசாயிகளுக்கு மின்சாரம் கொடுப்பதில் அவர்கள் ஏ.இ. (கன்ஸ்டிரக்ஷன்) ஏ.இ. (மெயின்டனன்ஸ்) போன்ற அதிகாரிகளை எல்லாம் போய்ப் பார்க்க வேண்டியிருக்கிறது. அதை, விவசாயிகளுக்கு மின்சாரம் கொடுப்பதைப் பொறுத்தவரை, 'அமால்கமேட்' செய்து விடலாம். ஒரு குறிப்பிட்ட ஏ.இ.-யிடம் அதற்கான காரியங்களையெல்லாம் ஒப்படைத்து மின்சார இணைப்பு கொடுப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். பல்வேறு என்ஜினியர்களைச் சந்தித்து மின்சாரம் வாங்கும் அந்த முறை மாற்றப்பட வேண்டும். இன்னொன்று எங்களுடைய ஊராட்சி ஒன்றியங்களின் தலைவர்களுடைய 'சேர்மென்' அசோசியேஷன் இருக்கிறது. அதற்கு ஒரு தலைவர் இருக்கிறார். அந்தச் சங்கம் ஒரு ஆண்டுக் காலமாக நடைபெறாமலிருக்கிறது. அது நடைபெறுவதற்கு விதிமுறை மாற்றியமைக்கப்படவில்லை. அரசாங்கம் தலையிட்டு புதிய ஒரு அசோசியேஷனை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். நகரப் பஞ்சாயத்துகளுக்கு வருமானம் இல்லை. அவைகள் சினிமா கொட்டகை நடத்துவதற்கு, வேறு பல தொழில்கள் நடத்துவதற்கு, அரசாங்கம் வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டு வாய்ப்பு அளித்த தலைவரவர்களுக்கு நன்றி கூறி முடித்துக் கொள்ளுகிறேன்.

* **திரு. எம். சங்கரலிங்கம் பிள்ளை :** தலைவர் அவர்களே, **ஊர் வளர்ச்சி உள்ளாட்சித் துறை கொள்கைக் குறிப்பில் ஊர் வளர்ச்சியே உள்ளாட்சியால்தான் அமைகிறது என்ற கொள்கையை நாம் பெற்றிருக்கிறோம்.** நமது நாடு வளர்ச்சி பெறுவதற்கு நாட்டில் அமைந்திருக்கிற எல்லா ஊர்களும் வளர்ச்சி பெற வேண்டும். ஊர் வளர்ச்சி பெற வேண்டுமானால், ஊர்தோறும் ஆட்சி நடைபெறவேண்டும். உள்ளாட்சி ஊராட்சியாக இருக்க வேண்டுமென்ற தத்துவத்தைக்கொண்டு இந்த ஊராட்சி, ஊராட்சி ஒன்றியம், நகர ஆட்சி, மாநகராட்சி இவைகள் அனைத்தின்று வளர்ச்சி பற்றி இன்று நாம் விவாதம் செய்கிறோம். இவைகள் ஆற்றிய பணிகளை அந்தந்த ஊரின் வளர்ச்சி எடுத்துக் காட்டிக் கொண்டிருக்கிறது. இன்று நாம் பெருமைப்படுகிற தமிழகத்தினுடைய வளர்ச்சி அத்தனையும் இந்த ஊராட்சியினுடைய எதிரொலிப்பு என்று சொன்னால், அது மிகையல்ல. அதில் பணிபுரிந்த "நான்-அபிஷல்ஸ்" அதிகாரப் பற்றற்ற தலைவர்களும், அதிகாரச் சார்புடைய அதிகாரிகளும் ஆற்றிய பணிகள் பாராட்டுக்குரியவைதான். அனுபவ ரீதியாக என்னென்ன செய்யவேண்டும் என்று ஆய்ந்து கொண்டிருக்கிறோம். அதில் பல மாண்புமிகு உறுப்பினர்கள், நெருங்கிய தொடர்புடையவர்கள் சில விளக்கங்களைக் கூறினார்கள். நான் ஊராட்சித் தொடர்புடையவன் அல்ல.

[திரு. எம். சங்கரலிங்கம் பிள்ளை] 27th July 1971]

ஊராட்சியில் உள்ள ஒரு பிரமுகர். அந்த ஆட்சியில் உள்ளவன் என்ற நிலையில் என்னுடைய அனுபவத்தைச் சொல்லலாம் என்று நினைக்கிறேன். அவர்கள் எல்லாம் செவின்யூ பிணைப்பு அதிகார மட்டத்தில் இருக்கிறது என்று சொன்னார்கள். என்னைப் பொறுத்தவரையில், நான் செவின்யூ தொடர்பு இருக்க வேண்டுமென்ற கருத்து உடையவன். காரணம் என்ன என்பதைச் சொல்லி விளக்குகிறேன். நாம சுதந்திரம் பெறுவதற்கு முன்னால் செவின்யூ அதிகாரிகள் எல்லாம் ஆங்கிலேயரின் ஏஜண்டுகள் என்ற முறையில் அவர்கள் ஏதோ நம்மை ஆட்சி பண்ணுகிறார்கள் என்று கருதினேம். இன்று இருக்கிற செவின்யூ அதிகாரிகள் நம்முடைய பணியாளர்கள், நம்முடைய தொண்டர்கள். மக்கள் ஆட்சியின்படி அரசின் ஏவலர்கள் நமக்காகப் பணியாற்றுகிறார்கள். ஊராட்சி நடைபெறுகிறபோது ஊரின் தலைவராக வருகிறவர்கள் நிர்வாக அனுபவமில்லாமல் செயல்படும்போது, நிர்வாக அனுபவ மூள்ள ஜனநாயக அரசினுடைய அங்கங்களாக இருக்கிற அதிகாரிகள் இவர்களுக்குத் துணை புரியவேண்டும். சிலர் துணை புரிவது தொல்லை தருவது போல் இருக்கலாம். சில நேரங்களில் தொல்லையாகவும் இருக்கலாம். ஆகவே ஆங்கிலத்தில் சொல்லுவது போல், ஒரு ஜுடிஷஸ் மிக்சர், கோரிலேஷன், நல்லிணைப்பு ஏற்படுத்திக்கொள்ள முயலவேண்டுமேயல்லாமல், அடியோடு

6-10 p.m.

எந்தத் தொடர்பும் இல்லையென்று இருக்கக்கூடாது; பல இடங்களில் பார்க்கிறோம், ஊராட்சி மன்ற உறுப்பினர்களுக்கும் தலைவர் களுக்கும் தகராறு வருகிறது. அந்த நேரத்தில் அதிகாரிகள் கலெக்டர், ஆர்.டி.ஓ. தலையிட்டு அதைச் செவ்வனே செயல்படுத்த வேண்டும் என்கிற நிலை ஏற்படுகிறது. சில நேரங்களில் ஊராட்சித் தலைவருக்கும் உறுப்பினர்களுக்கும் தகராறின் காரணமாக, செயலற்ற நிலை ஏற்படுகிறது. உதாரணத்திற்குச் சொல்லுகிறேன் தோவாளை பஞ்சாயத்து யூனியனில் இந் நிலை சிலகாலத்திற்கு மூன் நீடித்திருந்ததால் பலவிதமான ஒத்துழைப்பு அரசிடமிருந்து பெற முடியவில்லை. அதன் காரணமாக வளர்ச்சித் திட்டங்கள் தடைப்பட்டு சுமார் 1½ லட்சம் ரூபாய் ஊராட்சி ஒன்றியத்திற்கு நஷ்டமாயிற்று. அப்போதெல்லாம் கலெக்டரிடம், ஆர்.டி.ஓ.-விடம் சொல்லி; அந்த ஊர் வளர்ச்சிப் பணிகளைச் செய்ய முடிந்தது. இத்தகைய நிலைகள் பல நேரங்களில் நேர்வதுண்டு. அவ்வாறு ஒருங்கிணைக்கிற நிலையை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உருவாக்க வேண்டும்.

அடுத்து, ஊராட்சிகளின் நிதி வாயில்களைப் பெருக்க வேண்டும். கிராம ஆட்சி நடக்கிறது. கிராமப்பஞ்சாயத்து, நகரப் பஞ்சாயத்து என்று வைத்திருக்கிறோம். நகரப் பஞ்சாயத்து ஓரளவுக்கு "வயபிள் யூனிட்" ஆக அமைந்திருக்கிறது. எக்ஸிகியூடிவ் ஆபீசர் இருக்கிறார். ஒரு கிளார்க் இருக்கிறார். செயல் படுகிறது. ஆனால் அந்த நகரப் பஞ்சாயத்துக்கு "மேச்சிங் கிராண்டு" இல்லை. கிராமப் பஞ்சாயத்துக்கு 50 சதவிகிதம்



27th July 1971] [திரு. எம். சங்கரலிங்கம் பிள்ளை]

"மேச்சிங் கிராண்ட்" கொடுக்கிறோம். நான் சொல்லுவது என்ன வென்றால், நகரப் பஞ்சாயத்து அளவில் எல்லாப் பஞ்சாயத்து களையும் உருவாக்கி, ஒரு எக்சிகியூடிவ் ஆபீசரை வைத்து, 'மேச்சிங் கிராண்ட்' கொடுத்து, நிதி வாயில்களை ஏற்படுத்திக் கொடுத்தால்தான், வளர்ச்சியைக் காணமுடியும். ஒரு சிரிய திட்டம், தனித் திட்டம். ஸ்பெஷல் திட்டம் அமைத்து, எல்லா ஊராட்சிகளுக்கும், ஒரு அலுவலகம், அந்த அலுவலகத்தில் செயல் படுகிற ஒரு அலுவலர் என்ற முறையில் நிலைமையை ஏற்படுத்த வேண்டும். அதை வருஷந் தோறும் வருகிற நிதி வருவாயிலிருந்து அமைத்துக்கொள்ள வேண்டிய தில்லை. எப்படியாவது ஒரு தடவை செய்தால் நிலையாக இருக்கும். அதை வைத்துக் கொள்ள முயல வேண்டும். பல எக்ஸ்டென்ஷன் ஆபீசர்கள், வில்தரிப்பு அதிகாரிகள் இருக்கிறார் கள். அவர்களெல்லாம் மாநிலம் முழுவதும் விவசாயத் துறையில் முன்னேற்றம் காணத் திட்டமிடுகிறார்கள். மாவட்டம் முழுவதும் முன்னேறுவதற்குத் திட்டமிடுகிறோம். அதற்கு மாவட்ட விவசாய அதிகாரி இருக்கிறார். ஒரு யூனியனுக்கு ஒரு தனி வில்தரிப்பு அதிகாரி போடுகிறார்கள். அவரை முழுக்க முழுக்க ஆணையர் கீழ் வைப்பதும் தவறு. முழுக்க முழுக்க மாவட்ட விவசாய அதிகாரியின்கீழ் வைப்பதும் தவறு. ஒவ்வொரு வருக்குமிடையில் செயல்படுகிற நல்ல ஒரு முறையை உருவாக்க வேண்டும். அப்போதுதான் வெற்றி காண முடியும். பி.டி.ஓ.-க்கு கீழ் வைத்தாலும் வெற்றியில்லை. மாவட்ட விவசாய அதிகாரியிடம் விட்டுவிட்டாலும் வெற்றியில்லை என்பதுதான் என்னுடைய தனியான கருத்து. ஒவ்வொரு துறைக்கும் சிறந்த ஒரு நிபுணரை ஊராட்சி ஒன்றியத்திற்கு அனுப்புகிறோம். இவர்களை யெல்லாம் ஒருங்கிணைத்து வேலை செய்யும் ஆணையர் அந்தஸ்து வேண்டுமென்றால் உயர்த்தலாம். அதற்காக டிபுடி கலெக்டர் ராங்கில் தொடங்கள் என்று சொல்லவில்லை. எந்த அளவுக்குத் தகுதியை உயர்த்தி சிறப்பாக செயல்பட முடியுமோ, அந்த அளவுக்குத் தரத்தை நாம் உயர்த்த வேண்டும். அதில் சிரிய சிந்தனையைச் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். இன்னொன்று கல்வியை ஊராட்சி ஒன்றியத்திலிருந்து பிரிக்க வேண்டுமென்று தருதலைகிறவன் பஞ்சாயத்து யூனியன் என்பது ஓரளவு அரசு தான். ஒன்றியத்தைப் பொறுத்த வரையில், அரசு தான் நிர்வகித்துக்கொண்டிருக்கிறது என்று நினைக்க வேண்டும்.

. . . . . .

அதைவிட ஊராட்சி ஒன்றியத்தில் இருக்கிற தலைவர்கள் தொண்டையர்கள் வட்டாரத் தலைவர்களோடும், இந்த ஆசிரியர்களோடும் நெருங்கிய தொடர்பு கொள்ள வாய்ப்பிருக்கிறது. அவர்களைப் பிரித்துகொள்ள வாய்ப்பிருக்கிறது. தேர்தல் தோறும் இந்த ஆசிரியர்கள் தங்கள் நிலையை மாற்றிக் கொள்ள வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. பார் யூனியன் தலைவராக வருவார்

[திரு. எம். சங்காலிங்கம் பிள்ளை] [27th July 1971

என்று எதிர்பார்த்து, தேர்தலுக்கு முன்பிருந்தே அவர்கள் தயவை நாடுவதற்காக அவருக்குப் பக்கத்திலே சேர்ந்து நிற்க வேண்டிய நிலை உருவாகிறது.

கல்வி வளர்ச்சி தல்ல முன்னேற்றமடைந்திருக்கிறது. கல்வித் துறை அதற்காக தல்ல பணியாற்றியிருக்கிறது. தமிழ் நாட்டில் கல்வி வளர்ச்சியை ஆராய்ந்து பார்த்தால், மூவேந்தர் காலத்தில் ஆங்காங்கு இருந்த சிறந்த ஆசிரியர்களைத் தேடி, அவர்கள் தங்கியிருக்கிற இடத்திற்கு மாணவர்கள் சென்று கல்வி பயின்றார்கள். இப்படிக் குரு குலத்தில் தங்கி கல்வி கற்றார்கள். மூவேந்தர்கள் தங்களுக்குள் அடிக்கடி சண்டையிட்டுக்கொண்டிருந்த காரணத்தினால், பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளை ஊர் விட்டு ஊர் அனுப்பிக் குரு குலத்தில் தங்கித் தங்கள் குழந்தைகள் கல்வி பயில்கின்ற முறையை மாற்றி ஆசிரியர்களைத் தங்கள் ஊருக்கே வரவழைத்து பள்ளிக்கூடங்களை ஊர் திண்ணைகளிலே ஏற்படுத்திக் கொண்டார்கள். அப்படி ஏற்படுத்திய திண்ணைப் பள்ளிக்கூடங்களிலே இருந்த ஆசிரியர்கள் அந்த ஊர் பெரிய மனிதர்களுக்குப் பயப்படும்படியான நிலை இருந்து வந்தது. திண்ணைப் பள்ளிக்கூட காலத்திலே ஒரு ஊர் தலைவர் ஆசிரியர் பாடம் கற்பித்துக் கொண்டிருக்கிறபோது அந்தத் தெரு வழியாகப் போய்க் கொண்டிருந்தால், அது வரையிலே சும்மா இருந்த ஆசிரியர் உடனே கற்பிப்பது போல, மாணவர்களைக் கூப்பிட்டுப் போட்டுச் சொல்லுவார். ஒன்றும் ஒன்றும் இரண்டு என்று கத்திச் சொல்லிக் கொடுப்பார். அந்தக் காலத்தில் ஊர் பெரிய மனிதருக்குப் பயப்பட வேண்டிய நிலை இருந்தது. ஏழு மணிக்கு ஆரம்பித்து நடந்து கொண்டிருந்த பள்ளிகள் திடீரென்று அந்தப் பெரிய மனிதர் ஏன் ஏழு மணிக்கு ஆரம்பித்து நடக்கிறது என்று கேட்டால், காலை 6 மணிக்கே பிள்ளைகளை வரச் சொல்லி நடத்துகிற நிலை இருந்து வந்தது. சில சமயங்களில் இரவு 7 மணி வரையில் கூட இந்தப் பள்ளிக்கூடம் நடந்தது. அதனால்தான் அந்தக் காலத்திலே "நெடுமால் திருமருகா நித்த நித்தம் இந்த இழவா இந்த வாத்தியாரு சாவாரா என் வயிற்றெரிச்சல் தீராதோ" என்ற பாடலே வந்திருக்க வேண்டும் என்று நினைக்கிறேன். குருகுல காலத்திலே ஆசிரியர் சந்தர்ப்பம் கிடைக்கிறபோதெல்லாம் மாணவர்களுக்குப் பாடம் கற்பித்து வந்தார். காலையில் ஆற்றிற்குக் குளிக்கச் செல்கிற நேரத்திலும், குளித்துவிட்டு திரும்புகிற நேரத்திலும் வேலை செய்து கொண்டிருக்கிற நேரத்திலும், கல்வி கற்பித்துக்கொண்டு வந்தார். ஆகவே ஆசிரியர் பிறர் தலையீடின்றி கல்வி கற்பித்தார். இன்று இருக்கக்கூடிய நிலையில் கல்வித்துறை கல்வி இலாகாவின் கீழ் வந்து டி.இ.ஓ., டெபுடி இன்ஸ்பெக்டர் ஆகியவர்களின் நிர்வாகத்தின்கீழ் இயங்கி வந்து, இளம் உள்ளங்களில் நல்ல கல்வியைக் கற்றுத் தருகிற நிலை ஏற்பட்டிருக்கிறது. ஊராட்சித் தலைவர்கள், ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள் ஆகியவர்களுக்கும் கல்வியைப் பரப்புகிற பொறுப்பு ஏற்பட்டு பெரும் பங்கு அவர்களால் வகிக்கப்படுகிறது. நேரிடையாக ஆசிரியர்கள்



27th July 1971] [திரு. எம். சங்காலிங்கம் பிள்ளை]

ஊராட்சித் தலைவரின்கீழ் வந்துள்ள நிலை மாறவேண்டும். இன்று சாலையில் மாண்புமிகு உறுப்பினர் திரு. சுந்தரேசத் தேவருடன் பேசிக்கொண்டிருந்தபோது, இன்றைக்கு ஆசிரியர்கள் ஊராட்சித் தலைவர்களைக் கண்டு பயந்து கொண்டிருந்த நிலை மாறி, ஊராட்சித் தலைவர்கள் ஆசிரியர்களைக் கண்டு பயப்படுகிற நிலை ஏற்பட்டிருக்கிறது என்று அவர்கள் குறிப்பிட்டார்கள். காரணம் அவர்களுடைய தேர்தல் முடிவுகளை ஆசிரியர்கள் மாற்றி விடுவார்கள் என்று குறிப்பிட்டார்கள். எனவே கல்வித் துறை கல்வி இலாகாவின் கீழ் இருக்க வேண்டுமே தவிர, மற்றவர்களின் கீழ் இருக்கக் கூடாது. கல்வியமைச்சரவர்களே இந்தத் துறைக்கும் அமைச்சராக இருக்கிற காரணத்தினால் இவற்றையெல்லாம் ஆராய்ந்து இரண்டையும் மோதவிடாமல் பாதுகாத்துக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து ஊராட்சித் தலைவர்கள், ஊராட்சி உறுப்பினர்கள் ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள், ஊராட்சி ஒன்றிய உறுப்பினர்கள், நகராட்சித் தலைவர்கள், நகராட்சி உறுப்பினர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், சட்ட மன்ற உறுப்பினர்கள் ஆகியவர்களுக்கான இத்தனை தேர்தல்களும் ஒரே நாளில் நடைபெறுகிற ஒரு முறையைக் கொண்டுவர வேண்டும். நகராட்சித் தலைவரை நேரிடையாகத் தேர்ந்தெடுக்கவும் ஒரு நல்ல கொள்கையை நாம் உருவாக்கினால், ஒரு நல்ல பாரம்பரியத்தைத் தமிழகத்தில் நாம் உருவாக்க முடியுமென்று நான் கருதுகிறேன் என்ற என் கருத்துக்களை இந்த நேரத்திலே கூறி அமைகிறேன்.

* திரு. எம். ராஜா அய்யர்: தலைவரவர்களே, இன்று காலை ஒரு பஞ்சாயத்து யூனியன் ஆசிரியரிடமிருந்து எனக்கு ஒரு கடிதம் வந்தது. இதனால்தான் நான் இக்கோரிக்கையின்மீது, இத்துறையைப்பற்றிப் பேச வேண்டுமென்று கருதினேன். செகண்டரி கிரேட் ஆசிரியர்கள் 30 வயதிற்குள் பஞ்சாயத்து யூனியன் பள்ளிகளில் ஆசிரியர்களாக நுழையலாம் என்று விதிமுறைகள் இருக்கின்றன. பல பட்டங்கள் பெற்று அவர்கள் தகுதி பெற்று முதல் தரத் தமிழாசிரியர்களாக உரிய தகுதிகளைப் பெற்றுத் தங்களை உயர்த்திக் கொள்கிறார்கள் செங்கற்பட்டு மாவட்டத்தில் முதல் கிரேட் தமிழாசிரியர்கள் மாவட்ட உயர் நிலைப் பள்ளிக்குத் தேவை என்று விளம்பரம் செய்ததற்கிணங்க அவர் மனுச் செய்தார். அவர் இதற்கு மிகவும் தகுதி வாய்ந்தவராக இருக்கிறார் என்று மாவட்டக் கல்வித் துறையினரால் ஏற்றுக் கொள்ளப்பட்டது. ஆனால் அவரை எடுத்துக்கொள்ள மறுத்து விட்டார்கள். இதற்கு ஒரே காரணம் அவருக்கு வயது அதிகமாகி விட்டது என்பது தான். 30 வயதிற்குள்ளாகவே அவர் பஞ்சாயத்து யூனியன் பள்ளியில் நுழைந்து விட்டார். அவர் அங்கு பணிபுரிந்து கொண்டு வந்தார். பஞ்சாயத்து யூனியனில் ஆசிரியராக இருந்தும், உயர் தகுதிகளைப் பெற்றும் அவருக்கு வயதாகி விட்டது என்று சொல்லி மறுத்து விட்டார்கள். உயர் 6-20 p.m.

[திரு. எம். ராஜா அய்யர்] [27th July 1971

நிலைப் பள்ளி, மாவட்டப் பள்ளி ஆகியவற்றில் சேர்ந்து எல்லாத் தகுதிகளையும் பெற்று ஒருவர் தன்னுடைய நிலையை உயர்த்திக் கொள்ள விரும்புவாராஞல், அவருக்கு அதற்கு வாய்ப்பு இருக்க வேண்டும். சர்வீசில் நுழையும்போது வயதைப் பார்க்க வேண்டுமே தவிர. பின்னல் அவருக்கு வயதாகி விட்டது என்று சொல்லி, அவருக்கு வாய்ப்பு இல்லாமல் மறுத்து விடக் கூடாது. war service க்குக் சலுகை காண்பிப்பது போலவே பஞ்சாயத்து யூனியனின் சர்விசில் இருந்தால் அதை எற்றுக் கொள்ள வேண்டும். பஞ்சாயத்து யூனியனில் எஸ்.இ.ஓ. என்று சில அதிகாரிகள் இருக்கிறார்கள். இன்ஜினியர்கள் இருக்கிறார்கள், விவசாயத் துறையைச் சேர்ந்தவர்கள் இருக்கிறார்கள். விஸ்தரிப்பு அதிகாரிகள் இருக்கிறார்கள். அதே மாதிரி இண்டஸ்டிரீஸ் ஆசிரியர்கள் இருக்கிறார்கள். இவர்களுக்கெல்லாம் தகுதி பெற்றவர்கள் விவசாயத் துறைக்கு இருக்கிறார்கள். பட்டம் பெற்றவர்கள் இண்டஸ்டிரி துறைக்கு வேண்டிய பட்டத்தோடு இருக்கிறார்கள். ஆனால் எஸ்.எஸ்.எல்.சி. கூடத் தேறுதவர்கள் கல்வி விஸ்தரிப்பு அதிகாரிகளாக இருக்கிறார்கள். இது எப்படிப் பொருந்தும் என்று எனக்குப் புரியவில்லை. கல்வி விஸ்தரிப்பு அதிகாரியாக இருக்கிறவர்கள் குறைந்த பட்சம் பட்டம் பெற்றவராக இருக்கவேண்டும். கல்வி போதிப்பதில் பட்டம் பெற்றவராக, இப்படி இரண்டு பட்டம் பெற்றவராக இருக்க வேண்டும். பி.ஏ., பி.டி. பட்டம் பெற்ற ஒருவர்தான் கல்வி விஸ்தரிப்பு அதிகாரியாக இருக்க வேண்டுமேயொழிய, எஸ்.எல்.எல்.ஸி. கூடத் தேறுதவர் இப்படிப்பட்ட அதிகாரியாக இருக்க கூடாது. இப்படிப்பட்டவர்கள் இருந்தால், கல்வி விஸ்தரிப்பு எப்படி நிறைவேறும் என்று எனக்குப் புரியவில்லை.

அடுத்து, மாற்றங்களைப்பற்றிச் சொன்னார்கள். இது ஆண்டு தோறும் நடக்கக்கூடிய ஒரு பெரிய கஷ்டமான நிலை. கணவனையும், மனைவியையும் ஒரே இடத்தில் வைக்க வேண்டும். அவர்களைப் பிரிக்கக் கூடாது. இதில் சிலருக்கு (Malicious pleasure) எற்படுகிறது என்பதைச் சொல்ல விரும்புகிறேன். ஒரு பெரியவர் நின்று காலியில் என்னுடைய அறைக்கு வந்தார். அவர் ஒரு ஆசிரியர். யார் என்று நான் கேட்டேன். நான் ஒரு ஆசிரியர் என்று சொல்லி விட்டுக் கண்ணீர் விட்டார். நீங்கள் ஒரு ஆசிரியராக, அழுகை இருந்து கொண்டு இப்படிக் கண்ணீர் விடலாமா என்று கேட்டேன். அவரும், அவருடைய மனைவியும் ஒரே பள்ளியில் வேலை செய்துகொண்டிருக்கும்போது, அவரைப் பிரித்துப் பல மைல்களுக்கு அப்பால் உள்ள ஒரு பள்ளிக்கூடத்திற்கு மாற்றி யிருக்கிறார்கள். அப்படி அவரை மாற்ற வேண்டுமென்று சொன்னால், அவர் மீது ஏதாவது குற்றம் இருக்காலும், நடவடிக்கை எடுக்கலாம், சஸ்பெண்டு செய்யலாம். குற்றம் நிரூபிக்கப் பட்டால், வேலையை விட்டு நீக்கலாம். நீ ஆசிரியர் வேலைக்கு லாயக்கில்லை என்று சொல்லி, அவரை வீட்டுக்கு அனுப்பி விட்டு, உன்னுடைய மனைவியின் சம்பளத்தில் பிழைத்துக்கொள் என்று



27th July 1971] [திரு. எம். ராஜா அய்யர்]

வேலையை விட்டு நீக்கலாம். இப்படி அவரை மனைவியை விட்டுப் பிரித்துப் பல மைல்களுக்கு அப்பால் போடுவது ஒரு பெரிய பாவமாகும். ஆனல் ஒரு காரணமும் இல்லாதபடி, ஒரு குடும்பத்தைப் பிரிப்பது நல்லதல்ல.

பஞ்சாயத்து யூனியன்களில் நடைபெறுகிற சம்பவங்களைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. முத்துசாமியவர்கள் குறிப்பிட்டார்கள். இப்படிப்பட்ட சம்பவங்கள் ஒரு பஞ்சாயத்து யூனியனில் மட்டும் நடைபெறுவதில்லை.

**திரு. பி. நாராயணசாமி:** பஞ்சாயத்து யூனியன் தலைவர்கள் இப்படிப்பட்ட தவறுகளைச் செய்கிறார்கள் என்று உறுப்பினர் அவர்கள் சொல்கிறார்களா ?

**திரு. எம். ராஜா அய்யர்:** நண்பர் திரு. முத்துசாமி குறிப்பிட்ட அப்படிப்பட்ட சம்பவங்கள் பஞ்சாயத்து யூனியன்களிலே நடை பெறவில்லை என்று கூறுவதற்கில்லை. அதற்காகச் சொல்கிறேன். ஆண்டுதோறும் கணவன் மனைவியை ஒரே இடத்தில் வைக்கப் பாடுபடுகிறோம். இந்த Ad hoc Committee அந்தச் சமயத்திலே சிலரைப் பிரித்து வைக்க வேண்டியதாக இருக்கிறது. இதைச் செய்யாது ஒரே இடத்தில் அவர்களை வைத்திருப்பதற்கு வேண்டிய வழிமுறைகளைக் கட்டாயமாக வகுக்க வேண்டுமென்று நான் விரும்புகிறேன். டெபுடி இன்ஸ்பெக்டர்கள் நல்ல காரியம் செய்கிறார்கள். அவர்களுடைய தொண்டு, அவர்களுடைய சேவை கட்டாயம் தேவை என்பதை ஏற்றுக்கொள்ளவேண்டும். மூன்றாண்டுகளுக்கு குறைந்து ஒருவரை ஒரு இடத்திலிருந்து மாற்றக் கூடாது என்று விதியிருந்தால் நல்லது என்று நான் கருதுகிறேன். இந்த மாதிரி மாற்றப்படுகிறவர்கள் சிலர் மூன்று மாதங்களுக்குள் ளாகவே திரும்பவும் வந்துவிடுகிறார்கள். ஆகையால் ஒரு ஊரில் மூன்றாண்டாவது பணியாற்ற வேண்டுமென்ற விதியை ஏற்படுத்தி இந்தக் கமிட்டி சேவை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய வார்த்தையை முடித்துக் கொள்கிறேன்.

திரு. கே. ராசாராம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, சுதந்திரம் அடைந்த பிற்பாடு நமது நாட்டுக்கு நன்மை செய்ய வேண்டும். குறிப்பாக கிராம மக்களுக்கு உருப்படியான நன்மை ஏதேனும் செய்ய வேண்டுமென்று அன்றைக்கு இருந்த சுதந்திரம் வாங்கிய தலைவர்கள் எல்லாம் ஒன்று கூடி, என்ன திட்டம் வகுக்க லாம் என்று பேசிக்கொண்டிருக்கும்போது, தேசமே நம்மை எதிர் பார்க்கும்படியான ஒரு திட்டத்தை அன்றைக்கு இருந்த சென்னை மாகாணம் இந்தியாவுக்குக் கொடுத்தது. சிறிதாக ஆரம்பிக்கப் பட்ட அந்தத் திட்டத்திற்கு " பிர்க்கா டெவலப்மெண்ட் " என்று முதலில் பெயர் கொடுக்கப்பட்டிருந்தது. முதலில் பிர்க்கா டெவ லப்மெண்ட் என்ற திட்டம் அப்போது சட்டமன்ற அங்கத்தினராக இருந்த என்னுடைய தொகுதியில், திருமங்கலத்தில்தான் இந்த மாதாணத்திலேயே முதலில் ஆரம்பிக்கப்பட்டது. அது விரிவ

டைந்து தேசம்பூராவும் இந்தியா பூராவும் சமுதாய நலத் திட்டம் என்ற பெயரெடுத்து விளங்குகிறது. தமிழ்நாடு மற்ற மாநிலங்களுக்கு வழிகாட்டியாக நிற்கும்படியான நிலைமையில் அதை நாம் நடத்திச் செல்கிறோம் என்று சொல்வதில் நான் பெருமைப்படுகிறேன். பொதுவாக தேசம் பூராவுக்கும் சமுதாய நலத் திட்டத்தில் நாம்தான் வழிகாட்டிக்கொண்டிருக்கிறோம். அத் திட்டங்களை நிறைவேற்றுவதில் கிராமப் பஞ்சாயத்துக்களையும் சேர்த்து அவர்கள் மூலமாக இந்தத் திட்டம் நிறைவேற்றப்பட வேண்டுமென்ற எண்ணம் பின்னர்தான் புகுத்தப்பட்டது. அப்படிப் புகுத்தும்போதுதான் பஞ்சாயத்துக்களே இல்லாத கிராமம் இருக்கக்கூடாது என்று எல்லாக் கிராமங்களுக்கும் பஞ்சாயத்து வைக்கப்பட்டது. அந்தப் பஞ்சாயத்துக்களை ஒன்றுக இணைத்துச் செயல்படுவதற்கு பஞ்சாயத்து ஒன்றியங்களும் அமைக்கப்பட்டன. ராஜஸ்தான் போன்ற மற்ற மாநிலங்களில் மூன்று டையர் சிஸ்டம் என்று ஜில்லா அளவில் ஒரு பஞ்சாயத்து நிறுவனமும், வட்டார அளவில் ஒரு பஞ்சாயத்து நிறுவனமும், கிராம அளவில் ஒரு பஞ்சாயத்து நிறுவனமும் வைத்திருந்தார்கள். நமது மாநிலத்தில் அதைப்பற்றி அனுபவம் உள்ளவர்கள்கூட ஜில்லா அளவில் அம்மாநிரியான தனியாக இயங்க முழு அதிகாரத்துடன் இருக்கக்கூடிய ஒரு கட்டம் தேவையில்லை என்று கருதி, வட்டார அளவிலும் கிராம அளவிலும் இருந்தால் போதுமென்று 1958-ல் இப்போதுள்ள பஞ்சாயத்துச் சட்டத்தை வகுத்தோம். அந்தச் சட்டத்தின்படி கிராமப் பஞ்சாயத்துக்கும் ஒன்றியங்களுக்கும் கொடுத்த அதிகாரங்களைக்கூட அண்மையில் குறைக்க ஆரம்பித்திருப்பதைக் கண்டு நான் வருந்தாமல் இருக்க முடியாது. பொதுவாக பஞ்சாயத்து ஒன்றியத் தலைவர்கள் பஞ்சாயத்துத் தலைவர்கள் தவறுகள் செய்கிறார்கள் என்று குறிப்பிடப்படுவதைப்பற்றி நான் கவலைப்படவில்லை. தவறுகள் செய்யாமல் தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தினர்கள் இருக்கிறார்கள் என்றால், அவர்கள் செயலற்றவர்கள் என்றுதான் கூற வேண்டும். காரியங்களைச் செய்யும்போது தவறுகள் ஏற்படுவது இயற்கை. தவறுகள் செய்து செய்து தான் திருத்தவேண்டுமே தவிர, தவறுகளைச் செய்யாமல் இருந்துவிடுவார்கள் என்று சொல்வது நடக்கக்கூடிய காரியமல்ல. பொதுவாக, பஞ்சாயத்துக்கள், ஸ்தல ஸ்தாபனங்கள், நாட்டை ஆளக்கூடிய பாராளுமன்ற அங்கத்தினர்களையும், சட்டசபை அங்கத்தினர்களையும். அமைச்சர்களையும் உருவாக்கக்கூடிய ஒரு பட்டறை என்று சொல்ல வேண்டும். அது ஒரு பயிற்சிக்கூடம். அந்தப் பயிற்சிக் கூடத்தில் தவறுகள் செய்து செய்து அவர்கள் திருந்தி வரட்டும் என்றுதான் நாம் விடவேண்டுமே தவிர, குற்றம் சொல்வதற்கில்லை. அண்மையில் அதற்காக திருத்தச் சட்டம் செய்திருக்கிறோம். பஞ்சாயத்துத் தலைவர்களுக்கு நேரடித் தேர்தல் கொண்டுவரும் போது, நம்பிக்கையில்லாத் தீர்மானம் இருந்தால், அரசு அவர்களை





விலக்கிவிடும்படியான திருத்தத்தைச் செய்திருக்கிறோம். மிகவும் பந்தோபஸ்தான முறையில் தமிழ் நாடு இந்த வகையில் சென்று கொண்டிருக்கிறதே தவிர வேறு ஒன்றுமில்லை. 1970-ல் பஞ்சாயத்து, பஞ்சாயத்து ஒன்றியத் தேர்தல் நடைபெற்று முடிந்தது. ஆனால் இன்னும் ஒரு பஞ்சாயத்து யூனியனுக்குத் தேர்தல் நடக்காமல் எங்கள் மதுரை மாவட்டத்தில் வைத்துக்கொண்டிருப்பது வருந்தத்தக்கது. அது ஏனென்று என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. ஹைகோர்ட் தலையிட்டு ஒரு பஞ்சாயத்துக்குத் தேர்தல் நடக்காமல் இருக்கிறது. அதை முடித்துவிட்டு நடத்த வேண்டுமென்று சொன்னால், இப்போது ஒரு வருஷமாகிறது தேர்தல் நடத்தாமல். அதனால் யூனியன் தலைவர் தேர்தலும் நடக்காமல் இருக்கிறது. அலங்காநல்லூர் பஞ்சாயத்து யூனியன்தான் அது. இந்த அமைச்சர் பொறுபேற்றுக் கொள்வதற்கு முன்பு நடந்ததாகையால், அவருக்குத் தெரியாது என்று நினைக்கிறேன். சீக்கிரம் அந்தத் தேர்தலை நடத்த வேண்டும். ஹிமாச்சல் பிரதேசத்தில் பாராளுமன்றத் தேர்தல் நடத்தாமல் ராஷ்டிரபதி தேர்தலை நடத்தினார்கள். ஆகையால் பஞ்சாயத்துத் தேர்தல் நடக்கவில்லை என்பதற்காக யூனியன் தேர்தல் நடக்காமல் வைத்திருப்பது நல்லதல்ல. 6-30 p.m.

இப்போதிருக்கிற சட்டப்படி நகரப் பஞ்சாயத்துக்களாவதற்கு 5,000 ஜனத்தொகை இருந்தால் போதும். ரூ. 10,000 வருமானம் இருந்தால் நகர பஞ்சாயத்து அமைக்கலாம் என்று அப்போது இருந்த சட்டத்தில் சொல்லியிருந்தது. இப்போது ரூ. 20,000 அத்துடன் 10,000 ஜனத்தொகை என்று அதை மாற்றிக்கொள்வது நல்லது. எலக்ட்ரிசிடி சார்ஜும் சிப்பந்திகள் சம்பளமும் முன்னை விட இரண்டு பங்காக ஆகிவிட்டது. முன்பு 50 ரூபாய் வாங்கியவர் இப்போது ரூ 100 டி.ஏ. எல்லாவற்றையும் சேர்த்து வாங்குகிறார். ஆகையால் ரூ. 20,000-க்குக் குறையாத வருமானம் உள்ள பஞ்சாயத்தாக இருந்தால்தான், அதை நகரப் பஞ்சாயத்தாக ஆக்க வேண்டுமென்று அரசிற்குச் சிபாரிசு செய்ய விரும்புகிறேன். இப்போது கிட்டத்தட்ட ரூ. 72 கோடி ஊராட்சி ஒன்றியங்கள் மூலமாகச் செலவு செய்வதற்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஊராட்சி ஊராட்சி ஒன்றியங்கள் என்றால், தமிழக ஆட்சியின் அச்சு வேர், ஆணி வேர் அவைகள்தான் என்பதை மறந்துவிடக் கூடாது. எல்லாத் துறைகளிலும், General Administration Education, Medical, Public Works, Agriculture, Animal Husbandry, Industries, Community Development, National Extension Service, Local Development Works, Miscellaneous, Irrigation, Public Works, Miscellaneous, Capital Outlay on Loans and Advances." இவை அத்தனையும் பஞ்சாயத்து யூனியன் மூலமாகத்தான் செய்ய வேண்டியிருக்கிறது. அரசாங்கம் நேரடியாகச் செய்வதில்லை. மிகப் பெரிய பொறுப்பைப் பஞ்சாயத்து யூனியனிடம் ஒப்படைத்திருக்கிறோம். அதனால்தான் கிட்டத்தட்ட ரூ. 72 கோடி ஒதுக்கீட்டை நடப்பு வருஷத்தில் அதற்குச் செய்திருக்கிறோம். பஞ்சாயத்து யூனியன்கள் லோகல் செல்ஃ, சர்சார்ஜ், வீட்டு வரி போன்ற

வரிகளின் மூலமாக ரூ. 37 கோடியைக் கடந்த 10 வருஷங்களுக்குள் வசூலித்திருக்கிறார்கள் என்றால், அரசாங்கத்திற்கு எவ்வளவு பளுவை அவர்கள் குறைத்திருக்கிறார்கள் என்பதைப் பார்த்துக் கொள்ளவேண்டும். அவர்கள் அந்தத் தொகையை வசூல் செய்யாமலிருந்தால், அரசாங்கம் மற்ற நிதி வாயில்களிலிருந்து அதை ஈடு செய்ய வேண்டியிருக்கும். அவர்கள் அப்படி வசூலித்தால் அரசாங்கத்தின் நிதிப் பளுவை சுமார் ரூ. 40 கோடி வரையில் குறைத்திருக்கிறார்கள். உழைப்பின் மூலமாகவும் வேறு சாமான்களாக கிராமங்களுக்கு சப்ளை செய்வதன் மூலமாகவும், பஞ்சாயத்து, பஞ்சாயத்து யூனியன் ஒவ்வொரு வருஷமும் குறைந்தது 4, 5 கோடி ரூபாய் கொடுப்பதாக அரசாங்கக் கணக்கில் உள்ளது. நான் அடிக்கடி சொல்வது வழக்கம். மந்திரிகள் நிர்வாக உத்தரவுகளை இங்கே உட்கார்ந்துகொண்டு போட்டு விடுகிறார்கள். கிராமங்களில் உள்ளவர்களுக்கு இந்த உத்தரவு களின் பலன்களை உணர்ந்துகொள்வதற்கு வெகு நாட்களாகும். ஒரு பஞ்சாயத்துத் தலைவர் சாலையில் ஒரு தவறு செய்துவிட்டால், மாலையில் அவர் தெருவில் நடக்க முடியாது அவ்வளவு கஷ்டத்தில் இருந்து வருகிறார்கள். பஞ்சாயத்துத் தலைவர்கள் அவர்கள் மேல் கருணை கூர்ந்து அவர்கள் நன்கு செயல்பட வழிவகைகளைச் செய்து தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கிராமங்களில் பொதுவாக குடி தண்ணீர்க் கஷ்டம் மிக அதிக மாக இருக்கிறது. ட்யூப் வெல்ஸ்-குழாய்க் கிணறுகள் 200 அடி, 300 அடி ஆழத்துக்குப் போட்டு தண்ணீர் கிடைக்கும்படி செய்ய வேண்டும். அதற்குத் திட்டமும் ஏற்கனவே இருக்கிறது. அது போதாது என்பதுதான் என் குறை. நம்மைப் போன்றவர்கள் கிராமங்களுக்குச் சென்று தண்ணீர் கேட்டால், தண்ணீர் டம்ள ருடன் வெல்லத்தையும் கொடுப்பார்கள். வெல்லத்தை வாயில் போட்டுக்கொண்டு, அந்தத் தண்ணீரைக் குடித்தால்தான் நாம் குடிக்க முடியும். அவ்வளவு உப்பாக இருக்கும். இதெல்லாம் கிராமங்களில் இருக்கும் நிலைமை. அதனால்தான் மறைந்த முன்னாள் முதல்வர் அண்ணா அவர்கள் எப்படியாவது 2 ஆண்டுகளுக்குள் நல்ல குடிதண்ணீர் இல்லாத கிராமங்களே இல்லை என்று செய்ய வேண்டும் என்று சொன்னார். 1972-க்குள்ளாவது எல்லா கிராமங் களுக்கும், தண்ணீரும் மின்சார வசதியும் கிடைக்கும் என்று சொன்னார். அதை எப்படியாவது நிறைவேற்றவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, சாக்கடைகளைக் கட்டுவதற்கு வில்லேஜ் ஒர்க்ஸில் அனுமதி கொடுப்பதில்லை. கிராம சுகாதாரத்துக்குச் சாக்கடை கட்டுவது அவசியம். குடிதண்ணீர் போல்தான் சாக்கடைத் தண்ணீரை அப்புறப்படுத்துவதும். இதை வில்லேஜ் ஒர்க்ஸில் செய்ய அனுமதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளு கிறேன்.



ஏரி மராமத்துக்காக ஒரு பஞ்சாயத்து யூனியனுக்கு 10,000 ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இது மிகவும் குறைவு. மாண்பு மிகு உறுப்பினர் திரு. தங்கபாண்டியன் போன்றவர்கள் சொல்லு வார்கள் என்று எதிர்பார்த்தேன் ஏனோ அவர்கள் சொல்லவில்லை. 10,000 ரூபாயை வைத்துக்கொண்டு ஒரு ஏரியை மராமத்து செய்ய முடியாது. மைனர் இர்ரிகேஷன் குளங்கள் 10, 20 இருக்கின்றன. யூனியனுக்கு 10,000 ரூபாய் கொடுத்தால் என்ன செய்வார்கள்? எல்லா யூனியன்களுக்கும் சேர்ந்து இந்த நடப்பு வருஷத்துக்கு 57 லட்சம் ரூபாய்தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இது போதாது. இன்னும் கூடுதலாக ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளு கிறேன்.

பஞ்சாயத்து யூனியனைச் சேர்ந்த அல்லது அரசாங்கத்தைச் சேர்ந்த எல்லா குளங்களிலும் கருவேல மரத்தைப் பயிர் செய்ய வேண்டுமென்று அரசாங்கம் நன்றாக விளம்பரம் செய்ய வேண்டு மென்று கேட்டுக்கொள்ளுகிறேன். இப்படி மரங்களை வைப்பதால் வருமானம் பெருகும்.

இப்போது மத்திய மதிய உணவுத் திட்டம் வருஷத்திற்கு 30 வட்டாரங்களுக்குத்தான் விஸ்தரிக்கப்பட்டு வருகிறது. இந்தத் திட்டம் வெகு நல்ல திட்டம். இது மாநிலம் பூராவும் விஸ்தரிக்கப் படவேண்டும். வருஷத்துக்கு 30 வட்டாரங்கள் என்றால், மாநிலம் பூராவும் விஸ்தரிக்க 10, 15 வருஷம் ஆகும். இந்த விஸ்தரிப்பை இன்னும் அதிகமாக அதிக வேண்டும். "கேர்" ஸ்தாபனத்துடன் தொடர்பு கொண்டு இந்தத் திட்டத்தை ஒரு வருஷத்திற்கு 100 வட்டாரங்கள் என்ற முறையில் விஸ்தரிக்க ஏற்பாடு செய்யவேண்டு மென்று கேட்டுக்கொள்ளுகிறேன். இப்படிச் செய்தால், 3 ஆண்டு களுக்குள் எல்லா வட்டாரங்களிலும் அமுல்படுத்த முடியும். ஒரு வட்டாரத்துக்கு ஒரே இடத்தில் சமையல் செய்து வான்களின் மூலமாக குறித்த நேரத்தில் கொடுக்கும்படி செய்ய வேண்டும் என்றும் சேர்த்துக் கொள்ளுகிறேன்.

வாலைவிப் பெட்டிகளை ரிப்பேர் செய்ய வருகிற ஆள் வந்த பிறகுதான் பஞ்சாயத்துகளுக்குத் தெரிகிறது. இதை ஒரு வாரத் துக்கு முன்னால் தெரிவித்தால் நலமாக இருக்கும். சம்பந்தப்பட்ட இஞ்சினியர்கள் மூலமாக அந்த உத்தரவை அனுப்ப வேண்டு மென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

மகளிர் மன்றங்கள் கிராமம் தவறால் அமைக்கப்பட வேண்டும். படித்த சமுதாயத்தினர் இந்த மன்றத்தின் மூலமாக வளர்ச்சி யடைய வாய்ப்பு இருக்கிறது. ஆகவே இதற்கு இன்னும் தாராள மாக உதவி செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். பல இடங்களில் மகளிர் மன்றங்களுக்குக் கட்டிடங்கள் கட்டியிருக்கி றார்கள். கட்டிடங்கள் இல்லாத இடங்களில் கட்டிடங்கள் கட்டித் 6-40 p.m.

தர வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். பெண்களின் மூடப் பழக்க வழக்கங்களை ஒழிக்க இந்த மன்றங்கள் மிகவும் பயன்படு கின்றன.

நம் நாட்டில் ஆண், பெண் அனைவரும் உழைக்கவேண்டியிருக் கிறது. அவர்கள் தங்கள் குழந்தைகளைப் பயமில்லாமல் விட்டு விட்டுச் செல்வதற்கு குழந்தைகள் பாதுகாப்பு இல்லம் தேவைப் படுகிறது. இந்த இல்லத்தை ஒவ்வொரு ஊரிலும் ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். இப்போது இந்த வசதி நகரங்களில் மட்டும்தான் இருக்கிறது. கிராமங்களில் வேலைக்குச் செல்லும் பெண்கள் தங்கள் குழந்தைகளைக் கவனி யில்லாமல் விட்டுச் செல்ல ஒரு குழந்தை பாதுகாப்பு இல்லம் ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, தொழில் வளத்தைப் பெருக்க வேண்டும். பம்ப் செட் வைத்திருக்கும் இடங்களில் எல்லாம் ஒரு தொழில் ஆரம் பிக்க வேண்டும். கூட்டுறவு அமைச்சரும், தொழில் துறை அமைச் சரும் சேர்ந்து ஒரு திட்டத்தைத் தீட்டி கிராமப்புறங்களில் பம்ப் செட் உள்ள இடங்களில் ஒரு உப தொழில் செய்யும்படி செய்ய வேண்டும். இந்தக் காலத்தில் விவசாயம் கட்டுபடியாகவில்லை. விவசாயத்துடன் ஒரு உப தொழில் வேண்டும்.

எல்டிமேட் கமிட்டி பஞ்சாபுக்குச் சென்றபோது நாங்கள் பார்த்தோம். ஒரு சைகிளுக்கு வேண்டிய பாகங்களைத் தனித் தனியாக பலர் செய்கிறார்கள். மாலையில் ஒரு "வான்" வருகிறது. இந்த பாகங்களை எல்லாம் எடுத்துக்கொண்டு போய், அவை மறுநாள் சைக்கிளாக உருவாகின்றன. இந்த மாதிரி பம்ப்செட்டில் உள்ள மோட்டார்களின் உதவியோடு "லேத்" வைத்து சிறு பாகங் களைச் செய்யலாம். உதாரணத்துக்கு ஒரு வட்டாரத்தில் இந்த நடப்பு வருஷத்தில் செய்தால், பின்னால் விஸ்தரிக்க வசதியாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

ஒரு கிராமத்தில் 50 மின்சார தெரு விளக்குகள் இருந்தால், 10 லைட்டுகள்தான் எரிகின்றன. இருந்தாலும் ஃபிளாட் ரேட்டாக பணத்தை நிர்ணயித்து விடுகின்றார்கள். பஞ்சாயத்து நிதியி லிருந்து பஞ்சாயத்துத் தலைவரையும் கேட்காமல், பஞ்சாயத்தையும் கேட்காமல், பஞ்சாயத்து ஒன்றியத்திலிருக்கும் பணத்தை மின்சார இலாக்காவுக்கு எடுத்துக் கொடுத்து விடுகின்றார்கள். இந்த மாதிரிச் செய்வது தவறு. ஒவ்வொரு ஊருக்கும் மீட்டர் வைக்க வேண்டும். இதைப்பற்றி மின்சார அமைச்சர் அவர்கள் அவர் பட்ஜெட்டைப்பற்றிப் பேசும்போது சொல்லுவார்கள் என்று எதிர் பார்க்கிறேன்.

அடுத்ததாக, கதர்த் தொழில் வளர்ச்சியைப் பாராட்டாமல் இருக்க முடியாது. நல்ல வளர்ச்சியை ஏற்படுத்தியிருக்கிறோம். நல்ல காரியம் செய்யும்போது, அதைப் பாராட்டுவதில் நான்



தயக்கம் காட்டுவதில்லை. நமது மாநிலத்தில் 1966-67-ல் 147 லட்ச ரூபாயாக இருந்த கதர் விற்பனையை இன்று 325 லட்ச ரூபாய்க்குப் பெருக்கியிருக்கிறோம். இந்த வளர்ச்சி மிகவும் பாராட்டுக்குரியது. இலாக்காவை நிர்வகிக்கும் அதிகாரிகளை நான் பாராட்டுகிறேன். எதற்காகப் பாராட்டுகிறேன் என்றால், வருகிற லாபத்திற்காக அல்ல. இதில் லாபம் கிடைப்பது முக்கியமல்ல. எவ்வளவு பேருக்கு கிராமங்களில் வேலை கிடைக்கிறது என்பதுதான் முக்கியம். வேறு வேலையில்லாமல் தவிக்கின்ற விதவைகள், பிழைக்க வழியில்லாமல் இருப்பவர்களுக்கு மஹாத்மா காந்தி வகுத்துக் கொடுத்த இந்தத் திட்டத்தை இவ்வளவு விரிவாகச் செய்து, வருடா வருடம் அதை அபிவிருத்தி செய்து கொண்டிருக் கிறோம் என்பதற்காகத்தான் என்னுடைய மகிழ்ச்சியைத் தெரி வித்துக் கொள்ளுகிறேன்.

பஞ்சாயத்து யூனியன்களை 'எ', 'பி', 'சி', 'டி' என்று நான்கு பிரிவுகளாக வைத்திருக்கிறோம். 'சி' பிரிவு யூனியன் என்றால், எப்போதும் 'சி' பிரிவாகவே இருந்துகொண்டு, 'எ' பிரிவு என்றால் எப்போதும் 'எ' பிரிவாகவே இருந்துகொண்டு, அரசாங்க கிராண்டு களை அதிகமாகவோ, குறைவாகவோ வாங்கிக் கொண்டிருக்க வேண்டும் என்பது சரியல்ல. மூன்று வருடங்களுக்கு ஒரு முறை அவற்றைப் பரிசீலித்துத் திருத்தியமைக்க வேண்டும்.

பொதுவாக, கிராம அபிவிருத்தித் துறை நிர்வாகத்தை அடிப் படையிலேயே மாற்றியமைக்க வேண்டும் என்று சட்டம் வந்து விட்டது. முதலில் இதைத் தாற்காலிக இலாகாவாக வைத்துத் தான், மற்ற இலாகாக்களிலிருந்து ஆட்களை எடுத்து, தொழில் இலாகா, ரெவின்யூ இலாகா ஆகியவற்றிலிருந்து எல்லாம் அதிகாரிகளை எடுத்து, இந்த இலாகாவில் பி.டி.ஓ.க்களாகவும், மற்ற அதிகாரிகளாகவும் போட்டு வைத்தோம். திடீரென்று இந்த இலாகா கலைக்கப்பட்டு விட்டால், வெளியிலிருந்து ஆட்களை எடுத் தால் வேலையில்லாமல் அவர்களை வெளியே போகச் சொல்லவேண்டி வரும் என்பதற்காகத்தான் மற்ற இலாகாக்களிலிருந்து ஆட்களை எடுத்துப் போட்டு வைத்தோம். இப்போது இந்தத் துறை நிரந் தரத் துறையாகிவிட்டது. இது விலக்க முடியாத துறையாகி விட்டது. ஆகவே, இது தனித் துறையாக இயங்க வேண்டும். எந்தத் துறையின் ஆதரவிலும் இருக்கக்கூடாது. மாவட்டக் கலெக்டரை வேண்டுமானால் மாவட்ட அளவில் இந்தத் துறையின் தலைவராகப் போட்டுவிடலாம். மற்றபடி இந்தத் துறை நிர்வகிக்க தனியாக அதிகாரிகளைப் போட்டுவிடலாம். இனியும் மற்ற இலாகாக்களுடன் சேர்ந்திருப்பதை மாற்றி, தனி இலாகாவாக செயல்படச் செய்யவேண்டும். ஜூடிஷியல் டிபார்ட்மெண்டிலிருந்து சப்ஜட்ஜுகளையும் ஜட்ஜுகளையும் செகரெடேரியட்டில் எடுத்துக் கொள்ளுகிறோம் அசெம்பிளிக்கும், கவுன்சிலுக்கும் சென்ற வருடம் அவர்களிடம் கேட்டோம். நீங்கள் மீண்டும் ஜூடிஷியல்

டிபார்ட்டுமெண்டுக்குப் போக விரும்புகிறீர்களா, அல்லது இங்கேயே அசெம்பிளியிலும், கவுன்சிலிலும் நாங்கள் 'அப்சார்ப்' செய்து கொள்ளலாமா என்று கேட்டோம். அதேமாதிரி சமுதாய நல இலாகாவிலும் கேட்டுவிட வேண்டும். அப்படிக் கேட்டு அவர்கள் இந்த இலாகாவிலேயே இருக்க சம்மதித்தால், இங்கேயே அவர்களை நிரந்தரம் செய்துவிடுவது நலம் என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன். இன்னொரு இலாகாவுக்கு அவர்கள் நன்மைகள் போகும்படி வைத்து, அவர்கள் மங்கம்மா சத்திரத்தில் தங்கிவிட்டுப் போவது போல போவதாக இருக்கக்கூடாது என்று தெரிவித்து, இந்த வாய்ப்பினை அளித்ததற்கு நன்றி கூறி அமைகிறேன்.

MR. CHAIRMAN : The time is extended till the Hon. Minister finishes his reply.

6-50 p.m. மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, சமுதாய வளர்ச்சித் திட்டங்கள், தேசிய வளர்ச்சிப் பணித் திட்டங்கள், உள்ளூர் மேம்பாட்டுப் பணிகள், உதவி மான்யங்கள் ஆகியவைபற்றி நான் கொடுத்துள்ள விளக்கக் குறிப்பின் மீது மன்ற உறுப்பினர்கள் தங்களுடைய தெளிவான கருத்துக்களைச் சிறப்பாக எடுத்துச் சொல்லியிருப்பதற்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். இந்தத் துறை எவ்வளவு இன்றியமையாத ஒன்று என்பதையும் இந்தத் துறையை எப்படியெப்படி சீர்படுத்தலாம் என்பதனையும் பற்றி இங்கு உறுப்பினர்கள் பலரும் தங்கள் தங்கள் கருத்துக்களை எடுத்துத் தெரிவித்திருக்கிறார்கள். மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் எடுத்துத் தெரிவித்ததைப் போன்று, இந்தத் துறை தனித்து இயங்குகின்ற துறையா என்றால், தனித்து இயங்குகின்ற துறையல்ல. ஆகவே அந்தந்தத் துறையினர் தங்கள் தங்கள் பணிகளை தாங்கள் தாங்களே எடுத்துக் கொள்ளுவார்களேயானால், இத்துறை தனியாக நிற்குமா என்பது ஐயப்பாட்டிற்கு ஒன்றாகும். அவர்களே சுட்டிக்காட்டியது போல, எல்லாத் துறைகளையும் ஒருங்கிணைத்த வகையில் பொதுமக்களுக்கான பணிகளை அவர்களுடைய கடைசி கட்டத்தில் கொண்டுபோய்ச் சேர்க்கவேண்டிய முழு பொறுப்பினையும் உள்ளாட்சி மன்றங்கள் ஏற்றுக்கொண்டிருக்கின்றன. சாதாரணமாக ஒவ்வொரு துறையும் தனித்தனியாக இயங்கவேண்டிய இன்றியமையாமை ஏற்படுகிறது. ஆனால் கடைசி கட்டத்தில் அதன் பலன்களை மக்களிடத்தில் கொண்டு போய்ச் சேர்க்கின்ற இடத்தில், ஒருங்கிணைத்துக் கொண்டு போய்ச் சேர்க்கின்ற அமைப்பு, ஏற்பாடு தேவைப்படுகின்றது. அந்தத் தேவையை எண்ணித்தான் உள்ளாட்சி மன்றங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. கடைசி கட்டத்தில் பொதுமக்களுக்குக் கொண்டுபோய்ச் சேர்க்கின்ற பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கின்ற காரணத்தால், பல்வேறு துறைகள் எல்லாம் இதோடு இணைந்து நின்று, ஒருங்கிணைந்த பிறகு அதன் பலன்கள்



மக்களுக்குப் போய்ச் சேருகின்ற அளவிற்கு இருக்கின்றது. பல்வேறு துறைகள் மூலம் பணம ஒதுக்கப்பட்டாலும், உள்ளாட்சி மன்றங்களின் கரங்கள் பட்டுத்தான் மக்கள் கரத்துக்குப் போக வேண்டும் என்ற அளவில் தான் 72 கோடி ரூபாய் அளவிற்கான செலவு வகைகளை உள்ளாட்சி மன்றங்கள் ஏற்றுக் கொண்டிருக்கின்றன. இந்த உள்ளாட்சித் துறையை மட்டுமே கணக்கெடுத்துப் பார்ப்போமேயானால், மான்யக் கோரிக்கை தொகை, மக்கள் பங்குத் தொகை, மற்ற வேலைகள் எல்லாவற்றையும் சேர்த்து 11 கோடியே சில்லறை ரூபாய் ஆகிறது என்றாலும், உள்ளாட்சி மன்றங்கள் மூலம் ஆக்கப்படுகின்ற பணிகள் 72 கோடி ரூபாய் அளவுக்கு ஆகிறது என்பதை எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். அதன் பணிகள் மேன்மேலும் வளர்ந்து தோன்கி வருகின்ற பாங்கினை நண்பர்கள் சுட்டிக்காட்டினார்கள். 1970-71-ல் எல்லாத் துறையின் மூலம் இந்தத் துறைக்கு ஆகும் செலவு 64 கோடியே 44 லட்சம் ரூபாய் என்றால், இந்த ஆண்டு, அதாவது 1971-72-க்குப் போட்டிருக்கின்ற திட்ட அடிப்படையில் 71 கோடியே 97 லட்சம் ரூபாய், கிட்டத்தட்ட 72 கோடி ரூபாய் ஆகிறது. ஆக 7½ கோடி ரூபாய் அதிகமாகச் செலவழிக்கின்ற அளவுக்குப் பணிகளை ஏற்றுக்கொண்டிருக்கிறோம். அப்படியிருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் சுட்டிக் காட்டியது போன்று உள்ளாட்சி மன்றங்களிடத்தில் மக்கள் எதிர் பார்க்கின்ற பணிகள் அனைத்தையும் செய்து முடித்துவிடுகின்ற நிறைமையை மன்றங்கள் பெற்றிருக்கின்றனவா என்றால், நிதி வசதிப் பற்றாக்குறை காரணமாக பணிகளை செய்து முடிக்க இயலவில்லை என்று அறிந்துகொண்டிருக்கிறோம். மாநிலங்கள் எங்கும் கணக்கிட்டுப் பார்த்தால், 12,651 ஊராட்சி மன்றங்கள், 592 பேரூராட்சி மன்றங்கள், 374 ஊராட்சி ஒன்றியங்கள், 94 நகர மன்றங்கள், 12 நகரியங்கள், 2 மாநகராட்சிகள் இருக்கின்றன. இவற்றின் மூலமாகத் தான் இந்தப் பணிகளை ஆற்றித்தர வேண்டியிருக்கிறது. இந்தத் துறையைப்பற்றிப் பலரும் பலவகையான கருத்துக்களை எடுத்துத் தெரிவித்திருக்கிறார்கள். ஏற்கனவே இருந்த நிலைமையிலிருந்து 1958-லே ஒரு மாற்றம் கொண்டுவந்து, மாவட்ட அளவிலிருந்து டிஸ்டிரிக்டு போர்டு என்ற அமைப்பை மாற்றி ஊராட்சி ஒன்றியங்களாக அமைக்கப்பட்டதையும் சுட்டிக் காட்டினார்கள். மக்களுக்கு வாழ்க்கைக்கு இன்றியமையாத் தேவைகளை நிறைவேற்றுவதற்கு இப்படிப்பட்ட மன்றங்கள் அமைய வேண்டிய தன்மையினையும் அவர்கள் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். ஏற்கனவே ஒரு டிஸ்டிரிக்டு போர்டாக இருந்த காலத்தில் அதனுடைய கவனத்திற்கும் ஏற்று நடத்தவேண்டிய தன்மைக்கும் இருந்தவற்றை இன்றையதினம் உள்ளவற்றுடன் ஒப்பிட்டுப் பார்க்கின்ற போது, ஒரு மாவட்டத்தில் 40-க்கு மேற்பட்ட ஊராட்சி ஒன்றியங்களும், ஏற்கனவே ஒரே ஒருவர் கவனத்தில் இருந்தது, இப்போது 40 பேர் கவனத்தின்கீழ் வந்திருப்பதும், அதன் பணிகள் சிறப்பாக அமைந்திருக்கின்றன என்பதனை

குறிப்பதாகும். இதனை யாரும் மறுக்க இயலாது. சிற்றூர்கள், பேரூர்கள் பெற இயலாதிருந்த பல வசதிகளை இன்றையதினம் பெற்றிருக்கின்றன. பல சிற்றூர்களுக்குச் சாலை வசதி கிடையாது, குடிநீர் வசதி கிடையாது, பள்ளி வசதி கிடையாது என்று இருந்த நிலைமைகளை மாற்றி, இந்த வசதிகளையெல்லாம் செய்து தருகிறோம் என்றால், நூறாண்டுகளாக அல்ல, ஆயிரம் ஆயிரம் ஆண்டுக காலமாக தேவைப்பட்ட பணிகளையெல்லாம் இப்போது தான் மெல்ல மெல்ல நிறைவேற்றிக் கொண்டுவருகின்ற சிறப்பினைக் காண்கின்றோம்.

அந்த அளவில் செய்ய வேண்டிய பணிகள் ஏராளமாக இருக்கின்றன. அதற்காக மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் எடுத்துச் சொன்ன கருத்துக்களில் நியாயம் இல்லையென்று சொல்ல முடியாது. ஆனால் கருத்துக்களை நிறைவேற்ற நிதி வசதி வேண்டும் என்று கூறிக்கொள்ள வேண்டிய கட்டத்தில் இருக்கிறோம். இருக்கிற நிதி வசதியை வைத்து பல்வேறு பணிகளை நாம் ஆற்றவேண்டியவர்களாக இருக்கிறோம். அதற்கான வகையில் திட்டமிட்டு பல பணிகளையும் நாம் ஆற்றி அதற்கான முயற்சிகளைச் செய்து கொண்டு வருகிறோம். 10, 12 ஆண்டுக்காலமாக ஊராட்சி ஒன்றிய அமைப்புகள் இருக்கின்றன. அதில் பல குறைபாடுகள் இருக்கின்றன. ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு தடவை பொது மக்களோடு தொடர்புடைய, அதிகமான அளவு தொடர்புடைய, இப்படிப்பட்ட துறையில் ஓளவுக்குக் கண்காணிக்கப்பட்டுச் செய்யப்படவேண்டிய சீர்திருத்தங்கள் செய்யப்படத்தான் வேண்டும். ஆகவே 12 ஆண்டுக்கால அனுபவத்தின் அடிப்படையில் மாற்றங்கள் செய்யப்படவேண்டியவை இருக்கின்றன என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன். இதில் பல சீர்திருத்தங்கள் செய்து பணிகளைச் செம்மையாக ஆற்றவேண்டியவர்களாக இருக்கிறோம். அந்த அளவில் நிர்வாகச் சீர்திருத்தக் குழு ஒன்று அமைக்கப்படவிருக்கிறது. இந்த உள்ளாட்சி மன்றங்களைப்பொறுத்த வரையில், நிர்வாகத்தை எப்படிச் சீர்திருத்தம் செய்தால், இதன் பணிகள் செம்மையாக நடைபெற முடியும் என்ற வழிகளை ஆராய்ந்து கூறும்படியாக நிர்வாக சீர்திருத்தக் குழுவைக் கேட்டுக்கொண்டிருக்கிறேன். இதற்கு வேண்டிய புள்ளி விவரங்களையெல்லாம் தருவதாகக் கூறியிருக்கிறேன். அது தருவதற்கு அனுபவம் கொண்ட ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள், இதிலுள்ள அதிகாரிகள், மற்றவர்கள், சட்ட மன்ற உறுப்பினர்கள் பலரும் அனுபவத்தின் மூலமாகத் தருகிற கருத்துக்களை ஆராய்ந்து, அந்தச் சீர்திருத்தக் குழு தருகின்ற சிறந்த பரிந்துரைகள் பயன்படுகிற வகையில் அமையும் என்று கருதுகிறேன். இதன் நோக்கங்கள் பலவாறாக அமைந்தாலும் கூட, அவை நடைமுறையில் நடைபெறுவதில்லை. ஆக பல்வேறு துறைகளில் ஏற்படுத்தப்பட்ட பல்வேறு அதிகாரிகளின் திறமை நூற்றுக்கு நூறு பயன்பட்டிருக்கின்றதா என்று நாம் கவனிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். பயன்படுத்துகிற சூழ்நிலை



இருக்கிறதா என்று பார்க்க வேண்டும். இல்லையென்றால் எப்படிப் பயன்படுத்த வேண்டும், எப்படி வைத்துக்கொண்டால் பயன் படுத்தலாம் என்ற அளவுக்கு மறுபடியும் மறுபடியும் ஆலோசித்து ஒரு முடிவு காண வேண்டும். அதற்கு மன்ற உறுப்பினர்கள் பலரும் கூறிய கருத்துக்கள் நிர்வாகச் சீர்திருத்தக் குழு தன்னுடைய பரிந்துரைகளைச் செய்வதற்கு பெரிதும் பயன்படும் என்று கருதுகிறேன். மிக முக்கியமாக இந்தத் துறையைத் தனித் துறையாக ஆக்குவதா அல்லது வருவாய்த் துறையின் ஆக்கத்தின்கீழ் நீடிப்பதா என்பதுபற்றி உறுப்பினர்கள் பலரும் கருத்து தெரிவித்தார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. வெங்கா குறிப்பிட்டார்கள். திரு. தங்கபாண்டியன் குறிப்பிட்டார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்கரலிங்கம் அவர்கள் அதற்கு மாறுபட்ட கருத்தை எடுத்துச் சொன்னார்கள். இவர்கள் சொன்ன கருத்துக்களில் நியாயங்கள் இருக்கின்றன என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன். ஆகவே இந்த வருவாய்த் துறை நீடித்த காலமாக இருந்து, ஒரு மாவட்டத்தை எடுத்துக்கொண்டால், அதற்கு அடிமாறாக வேறுன்றி நின்று மற்றப் புதியவை எது வந்தாலும், அதைச் சேர்த்துக்கொண்டு பணிபுரிகிற நிர்வாக அமைப்பாக இருக்கிறது. ஆனால் அதன் நோக்கங்கள் எல்லாம் மாறிவிட்டன. ஆகவே கிழக்கு இந்தியக் கம்பெனி வந்த காலத்திலும் அதன் பின் வெள்ளைக்காரன் ஆட்சி ஏற்பட்ட போதும் வருவாய்த் துறைப் பணிகளும் நோக்கங்களும் வேறு வேறாக இருந்தன. இன்றைக்கு வருவாய்த் துறையின் பணிகளும் நோக்கங்களும் எவ்வளவோ மாறுதல்கள் அடைந்திருக்கின்றன. நிலவரியை மட்டும் ஈட்டுவது அதற்குப் பெரும் பொறுப்பாக இருந்தது. இப்போது மாவட்ட ஆட்சித் தலைவர் வருவாய்த் துறை அதிகாரிகளுடைய பணிகளைப் பார்த்தால், அந்த மாவட்ட வளர்ச்சிக்கு, அந்த மாவட்டத்தின் தேவைகளை நிறைவேற்றுகிற, குறைபாடுகளைப் போக்குகிற, எல்லா வகையான பணிகளையும் ஆற்றிவைக்கின்ற, ஒரு முக்கியமான துறையாக அமைந்துவிட்ட காரணத்தால், அந்தத் துறையின் தொடர்பு இந்தத்துறைக்கு இன்றியமையாத் தேவையாக இருக்கிறது. எந்த அளவில் எந்த கட்டத்தில் எந்த மட்டத்தில் வைப்பது என்பதில் தான் பிரச்னைகள் எழுகின்றன. தனித்து இயங்கக் கூடிய வலிமை பெற்றிருக்கிறது என்று உறுப்பினர்கள் தெரிவித்தார்கள். எதிர்க் கட்சித் தலைவர் அவர்களும் சுட்டிக்காட்டினார்கள். ஓளவுக்கு இதையும் ஆராய்ந்து எந்த அளவுக்கு வருவாய்த் துறைக்கும் இதற்கும் தொடர்பு இருக்கிறது, எந்த அளவுக்கு அந்தத் தொடர்பைக் குறைக்கலாம் என்று வழி வகை காணலாம். இந்தத் துறையில் ஊழியர்கள் தொடர்ந்து ஐந்து ஆண்டுகள் இருப்பது கிடையாது. அங்கு வருபவர்கள் இரண்டு ஆண்டு ஆவதற்குள் இருந்து பின் உத்தியோக உயர்வு பெற்றுப்போக வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. அந்தப் பதவி "ஜங்ஷன்" மாதிரி இருக்கிறது. இந்த நிலை மாற்றப்பட வேண்டும். இந்தத் துறைக்கு உரியவர்களே ஆண

7-00 p.m.

[மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்] [27th July 1971

யர்களாக நியமிக்கப்படவேண்டும். அதற்கு மேல் ஜூர். டி. ஓ. கன்டிரோல் இருக்கிறது. அதை எடுத்துவிட்டு அதற்கு மேல் மாவட்ட ஆட்சித் தலைவர் நிர்வாகத்தின் கீழ் கொண்டு வந்தால், இதன் பணிகளைச் சீர்க்க முடியும் என்று உறுப்பினர்கள் சொன்னார்கள். ஆகவே வருவாய்த் துறை ஆதிக்கம் கூடாது என்பதை ஒப்புக் கொள்ளுகிறேன். ஆனால் வருவாய்த் துறையின் முழு ஆதரவு இருக்க வேண்டும் என்பதை உணர்ந்து தீர வேண்டும். அதனுடைய அரவணைப்பு இல்லாமல், இந்த ஊராட்சி ஒன்றியங்கள் பொறுப்பேற்று பணிகளைச் செயல்படுத்துவது என்பது மிகக் கடினமான ஒன்றாக அமையும். அதன் அமைப்பு முறைகளைப் பற்றி உறுப்பினர்கள் சொன்னார்கள். அந்தக் கருத்துக்களை உள்ளடக்கி வைத்துக்கொண்டு, அந்தத் துறை அளவில் ஆராய்ந்து ஜூர். டி. ஓ. அளவுக்கு இல்லாமல் மாவட்ட ஆட்சித் தலைவர் அளவுக்கு இயலும், அதனால் நிர்வாகம் சிறப்பாக இயங்க முடியும் என்றால், பரிசீலித்து முடிவு செய்யலாம் என்று எண்ணுகிறேன். சில மாவட்ட ஆட்சித் தலைவர்களுடன் இது பற்றிப் பேசியிருக்கிறேன். அவர்கள் இதுபற்றி தங்கள் கருத்துக்களைச் சொன்னார்கள். மற்ற வகையிலும் ஓரளவுக்கு ஆராய்ந்து ஜில்லா மட்டத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர்தான் முழு பொறுப்புடையவர்கள் என்று ஆக்கித் தர வேண்டும். அதற்குக் கீழும் இருக்கிற பொறுப்புக்களை எப்படிப் பகிர்ந்தளிப்பது என்பதில் கவனம் செலுத்த வேண்டும். பல்வேறு துறைகள் இதோடு இணைந்திருக்கின்றன. பல்வேறு துறைகளைச் சேர்ந்த அலுவலர்கள், அதிகாரிகள் பணியாற்றி வருகிறார்கள் என்றால், நிர்வாகத்தைப் பொறுத்த வரையில் அடங்கி நடக்க வேண்டியது, ஏற்று நடத்தவேண்டிய நிலையில் நிர்வாகப் பொறுப்பு முழுவதும் இந்தத் துறைக்கு இருக்கிறது. ஆனால் தொழில் நுட்பத்தைப் பொறுத்த வரையில், அந்த அந்த இலாகா துறையோடு தொடர்பு கொள்ளத்தான் வேண்டும். இதில் உள்ள நிலைமைகளைப் பார்த்தால் தனித்து இயங்கக் கூடிய நிலையை இராது. அரசு என்றால் தனித்து இயங்குகிற நிலைமை இருக்கும். இணைந்து செயல்பட வேண்டிய தன்மையும் இருக்கும். சுற்றுப்படிகள், கோளாறுகள் என்றால், ஊரைப் பொறுத்து ஏற்பட்டால் தீர்ப்பதற்கு முயல வேண்டுமே தவிர தனித்து இயங்கினால் முடியும் என்ற முடிவுக்கு வரமுடியாது. ஊராட்சி ஒன்றியங்கள் ஊராட்சி மன்றங்கள் இணைந்து செயலாற்றுகிற நிலைமைகளை ஏற்படுத்த வேண்டும். நிர்வாகத்தைப் பொறுத்த வரையில், ஒருவர் வேலைக்கு வந்தால், அவர் பி.டி.ஓ.-வுக்கு அடங்கி நடக்க வேண்டும். எந்த நிர்வாகத்தின்கீழ் பணி புரிகிறார்களோ, அங்கு வேலையைப் பொறுத்த வரையில் அடங்கி நடக்க வேண்டும். தொழில் நுட்பக் கருத்துக்களைப் பொறுத்த வரையில் அந்தத் துறை வளர்ச்சிக்கான திட்டங்கள், ஏற்றிருக்கிற மாற்றங்கள் ஆகியவற்றை இவர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரவர்கள் எடுத்துக் காட்டிச் சொன்னார்கள். நீதித் துறையில் நெருக்கிறவர்கள் சட்டமன்றத் துறைக்கு வரவில்



27th July 1971]

[மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்]

ரூர்கள். வந்ததற்கு பிறகு அவர்களே கேட்கிறார்கள், இந்தத் துறையில் இருந்து விடுகிறீர்களா அல்லது பழையபடி சென்று விடுகிறீர்களா என்று. இந்தத் துறைக்கு இது ஓரளவுக்குப் பொருந்தும். ஆனால் உள்ளாட்சித் துறைக்குப் பொருந்தாது. வந்தவர்கள் இந்தத் துறையில் இருக்கிறார்களா என்றால், அந்தத் தொடர்பு அறவே போகவில்லை. நீதித் துறைக்கும் சட்டமன்றத்துக்கும் தொடர்பு இல்லை. ஆளைப்பொறுத்து இங்கே வருகிறார்கள், அங்கே போகிறார்கள். இந்தத் துறைக்கு வேளாண்மைத் துறையுடன் தொடர்பு இருக்கிறது. கல்வித் துறைத் தொடர்பு இருக்கிறது. மீன் துறைத் தொடர்பு இருக்கிறது. கூட்டுறவுத் துறைத் தொடர்பு இருக்கிறது. தொழில் நுட்ப முறையில் அந்தத் துறை அடங்கி அந்தத் துறையில் இன்ன மாற்றங்கள் செய்ய வேண்டும் என்ற முறையில் பல்வேறு வகையில் சிந்தித்துச் செயலாற்றுகிற அளவுக்கு மாநில அளவில் மாற்றங்கள் இருந்தால், அந்த மாற்றங்களைக் கடைப்பிடிக்க வேண்டிய பொறுப்பு அந்தத் துறையைச் சார்ந்தவர்களுக்கு ஏற்படுகிறது. தொழில் நுட்பத்தைப்பொறுத்த வரையில் அந்தந்தத் துறையோடு தொடர்பு வேண்டும். ஆனால் நிர்வாகத்தைப் பொறுத்த வரையில் அடங்கி நடக்கவேண்டிய வகையில் இருக்கவேண்டும். வேறுபல சிக்கல்கள் இருந்தால், அந்தச் சிக்கல்களைப்பற்றி நிர்வாகச் சீர்திருத்தக் குழுவிடம் சிக்கல்களைத் தீர்க்க அனுபவம் கொண்ட பலரும் தருகிற கருத்துக்கள் அடிப்படையில் மாற்றங்களைச் செய்துகொள்ளலாம் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

கல்வியைப் பொறுத்த வரையிலும், பலர் பலவாறு எடுத்துச் சொன்னார்கள். இவையெல்லாம் சிந்தித்துப் பார்க்க வேண்டிய ஒன்றுதான். "எஜுகேஷன் கன்சல்டேடிவ் கமிட்டி" கூடி இது பற்றித் தீர்மானிக்க வேண்டும். இன்று வைத்துள்ள முறைப்படி மாற்றங்களை ஒரு குழு செய்கிறது. தலைவருடைய கருத்துக்கள், அந்தத் துறையைச் சேர்ந்த அதிகாரிகள் ஆகியவர்களின் கருத்துக்களைக் கேட்டு அந்தக் குழு முடிவு செய்கிறது. ஜனநாயக நாட்டிலே, இந்த ஜனநாயக காலத்திலே இப்படி ஒரு மாற்றம் செய்வதற்காக ஒரு பட்டியலைத் தயாரிக்கும்போது, மிக நீண்ட பட்டியலாகிவிடுகிறது. மாற்றம் வேண்டுமென்று விண்ணப்பம் தந்தவர்கள் பட்டியலைத் தயாரிக்கிறோம். ஒருவரை மாற்றுகிறோம் என்றால், ஒருவரைத் தூக்குகிறோம் என்று பொருள். ஒருவரை மாற்றுகிறோம், ஒருவரை அகற்றுகிறோம் என்று பொருள். இப்படி மாற்றங்களைச் செய்வதற்காக குழு உட்காருகிறபோது, அத்தப் பட்டியல் நீளத்தான் செய்யும். ஊராட்சி ஒன்றியத் தலைவர் ஒரு நீண்ட பட்டியலைத் தருவார். அதில் வேண்டியவர்கள் பெயரும், வேண்டாதவர்கள் பெயரும் இருக்கும். அடுத்து, சட்ட மன்ற உறுப்பினர் ஒரு பட்டியலைத் தருவார். சட்ட மன்ற உறுப்பினர் பொதுமக்களோடு நெருங்கிய தொடர்பு உள்ளவர். அவர் மட்டுமல்ல, வாக்குகளும் வாங்க வேண்டியவர். வாக்குகளை

[27th July 1971

[மாண்புமிகு திரு. இரா· நெடுஞ்செழியன்]

வாங்கினவர் மட்டுமல்ல, வாக்குகள் வாங்கவும் வேண்டியவர். இவ்வளவு தொடர்பு இருக்கும்போது, அவர் தருகிற பட்டியல் நீளத்தான் செய்யும் என்பதை நாம் நன்றாகக் கவனிக்க வேண்டும்.

ஊராட்சி ஒன்றியங்களில் கல்விப் பிரச்சினையைக் கல்வித் துறையே ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று சொன்னார்கள். அந்த அதிகாரத்தை என்னிடம் ஒப்படைப்பதனால், எனக்கு ஆட்சேபணை யில்லை. நானே எடுத்துக்கொள்ளத் தயாராக இல்லை. நீங்களாகக் கொடுப்பதாக இருந்தால், கல்வித் துறை ஏற்றுக்கொள்ளத் தயா ராக இருக்கிறது என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். ஊராட்சி ஒன்றிய ஊழியர்களை மாற்றுவது அவ்வளவு எளிதானதல்ல. அப்படிச் செய்கிறபோது, இரு சாராருடைய கருத்தையும் ஆராய்ந்தபிறகுதான், மாற்ற முடியும். அதில் பல சங்கடங்கள் இருக்கின்றன. மாற்ற விரும்புகிறவர்களை மாற்றலாம் என்று முயற்சி எடுக்கிறபோது, அவர்கள் முன்னதாகவே தெரிந்து கொண்டு யார்யாரை எப்படிப் பிடிக்கலாம் என்பது மட்டுமல்ல, மிகத் திறமையாகப் பிடிக்க வேண்டியவர்களைப் பிடிக்க வேண்டிய வகையிலே பிடித்து நிறுத்தி விடுகிறார்கள். மாவட்ட ஆட்சித் தலைவர் அந்த மாவட்டத்திற்கு முழுவதும் பொறுப்பானவர். அந்த நிலைமையில் இதில் உள்ள சங்கடங்களை நீக்குவதற்கு அரசாங்கம் பரிசீலித்துக் கொண்டிருக்கிறது. அதைப்பற்றி ஒரு முடிவு எடுக்க வேண்டுமென்று நான் கருதிக் கொண்டிருக்கிறேன். திருச்சி தெற்கு வட்டார வளர்ச்சிக் குழு ஒரு கருத்தைத் தெரிவித்திருக்கிறது. ஊராட்சி ஒன்றியங்களிடம் இவற்றை ஒப்படைப்பதை விட மாவட்டத் தலைவரிடம் ஒப்புடைப்பது நலமாக இருக்கும் என்ற கருத்து தெரிவிக்கப் பட்டிருக்கிறது. இதைப்பற்றி அரசு தீவிரமாக யோசித்துக் கொண்டிருக்கிறது. அதைப்பற்றி முடிவுகள் எடுத்து அதிலுள்ள சங்கடங்களை எந்த அளவிற்கு நீக்கலாம் என்று அரசு எண்ணிக் கொண்டிருக்கிறது.

கல்வித்துறை முழுவதையும் எடுத்துக்கொள்ள வேண்டுமென்ற கருத்தும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அதே சமயத்தில் அதிகா ரங்களை ஒவ்வொன்றாக அரசு எடுத்துக்கொண்டு வருகிறது என்ற குற்றச்சாட்டை எதிர்க்கட்சித் தலைவர்கள் சொன்னார்கள். அடிப்படை நன்றாக இருந்தால்தான், மேலே நன்றாக இருக்கும். உயர் தொடக்கப்பள்ளி, உயர்நிலைப் பள்ளி, கல்லூரிகள் என்று வர வேண்டும். அப்படி வந்தால் தான், கல்வி இந்த நாட்டில் சிறப்பாக அமையும். இந்தத் துறையில் உள்ள சில சங்கடங்களை மாற்ற வேண்டுமென்று எண்ணிக்கொண்டிருக்கிறேன். மாண்புமிகு உறுப் பினர்கள் குறிப்பிட்டதுபோல, ஆசிரியர்களுக்குச் சம்பளம் கொடுக்காத சில ஊராட்சி மன்றங்கள் இருக்கின்றன. அப்படி ஏற்படாமலிருப்பதற்கு இந்த அரசு உரிய பொறுப்பு ஏற்றுக் கொண்டிருக்கிறது. நாம் கணக்கிட்டுப் பார்ப்போமானால், 87 சத வீதம் இந்த ஆசிரியர்களின் சம்பளம் மற்றவைகளுக்கு இந்த



27th July 1971]

[மாண்புமிகு திரு. இரா· நெடுஞ்செழியன்]

அரசு பொறுப்பு ஏற்றுக்கொண்டிருக்கிறது. 12 சதவீதம், 13 சத வீதம் ஊராட்சி மன்றங்கள் பொறுப்பு ஏற்றுக்கொண்டிருக் கின்றன. இந்த 13 சதவீதம் கொடுக்க முடியாத அளவிற்கு, சில ஊராட்சி மன்றங்கள் இருக்கின்றன. இரண்டு, மூன்று திங்கள் அளவிற்குக் கொடுக்காத குறை இருந்து வருகிறது. இவற்றையும் ஓரளவிற்குத் திருத்தி சீர்திருத்த வேண்டுமென்று இதற்கென்று ஒரு குழு அமைக்கப்பட்டு அவர்கள் அரசாங்கத்திற்கு சில யோசனைகளைச் சொல்லியிருக்கிறார்கள். இப்போது அவர்களைப் பொறுத்த மட்டில், கணக்குப் பார்ப்போமானால், ஒரு 6 வழிகளிலே அவர்களுக்கு மானியம் போய்ச் சேருகிறது. இந்த 6 வழிகளிலே போய்ச் சேருகிற மானியத்தை வைத்துக்கொண்டு தான் ஊராட்சி ஒன்றியங்கள் ஆசிரியர்களையும் மற்றவைகளையும் கவனிக்க வேண்டியிருக்கிறது. ஸ்பெஷல் கிராண்ட், எஜுகேஷன் கிராண்ட், லாண்ட் ரெவினியூ, தலைக்கு ஒரு ரூபாய் என்று ஒரு டாக்ஸ், லோகல் எஜுகேஷன் கிராண்ட் இது ஏ, பி, சி, டி ஸ்லாப் தலைப்பில் பர்சென்டேஜ் போடப்பட்டுக் கொடுக்கப்படு கிறது. லோகல் செஸ், சர்சார்ஜ் 150 சதவீதம், சர்சார்ஜ் மாட்சிங் கிராண்ட், இப்படி 6 வகைகளில் பிரித்துக் கொடுக்கப்படுகிறது. ஊராட்சி ஒன்றியங்கள் சம்பளம் கொடுக்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. தலைக்கு ஒரு ரூபாய் என்று இருப்பதை 6 ரூபாய் என்று மாற்றவேண்டும் என்று இந்தக்குழு சிபாரிசு செய்திருக்கிறது. மிக மிகப் பின் தங்கிய நிலையில் உள்ள ஊராட்சி மன்றங்களுக்கு 60 சதவீதம் என்று இருக்கும் மானியத்தை 95 சத வீதம் ஆக உயர்த்திக் கொடுக்க வேண்டும் என்று கூறியிருக்கிறது. அரசாங்கத்தின் வரவு-செலவு ஆகியவற்றை நிதித்துறை பரிசீலனை செய்து பார்த்த பிறகுதான் முடிவு எடுக்கப்படும். தலைக்கு ஆறு ரூபாய் அளவிற்கு வசூலிக்கலாம் என்ற கருத்தை அறிஞர் அண்ணா அவர்கள் ஏற்றுக்கொண்டார்கள்.

அடுத்து, குடி நீர்ப் பிரச்சினைபற்றிக் குறிப்பிட்டார்கள். 7-10 p.m. அறிஞர் அண்ணா அவர்கள் காலத்தில் வேறு எந்தப் பிரச்சினையை முடிவு செய்தாலும், செய்யாவிட்டாலும் இரண்டாண்டு காலத்திற் குள் எல்லா இடங்களுக்கும் குடி தண்ணீர் வசதி செய்து தர வேண்டுமென்று ஒருகொள்கையினை வைத்தார்கள். அதற்காகப் பல்வேறு வழிகளிலே திட்டமிட்டுக்கொண்டு வருகிறோம். மத்திய அரசாங்கத்தின் கடன் வசதிகள், யூனிசெப் மூலம் கிடைக்கும் கடன் வசதி ஆகியவைகளைக் கொண்டு இந்தத் திட்டத்தை நிறை வேற்றி வைக்க முயற்சி செய்யப்படுகிறது. 8,850 குழாய்க்கிணறுகள் போடுவதற்கு திட்டமிட்டிருக்கிறோம். 1971-72-ல் தொடங்கி வில்தரிக்கப்பட்டுக் கொண்டு வரப்படுகிறது. 1977-ம் ஆண்டுக்குள் குழாய் கிணறுகள் ஆண்டிற்கு 500, 600, 1,000 என்று உயர்த்திக் கொண்டு போக திட்டம் போடப்பட்டுள்ளது. எந்தெந்த இடங் களில் வறட்சியாக இருக்கிறதோ, எங்கெங்கு குடிநீர் இல்லையோ அந்த இடங்களைத் தேர்ந்தெடுத்து குழாய் கிணறுகள் தோண்டப்

[மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்]

படவிருக்கின்றன. அதற்காக "யூனிசெப்" மூலம் கருவிகளும், மற்றவைகளும் தருவதாக அவர்கள் கூறியிருக்கிறார்கள். எந்தெந்த வழிகளிலே வாகன வசதிகள் கொடுத்துதவ வேண்டுமோ அதற்கு அவர்கள் தயாராக இருக்கிறார்கள். இதைத் தவிர அரசுப் பொறுப்பில் குடி நீர்த் திட்டத்தை நிறைவேற்ற முயற்சி செய்து வருகிறோம். இந்தத் திட்டம் சிறப்பாக நடைபெற வேண்டும் என்பதற்காக "வாட்டர் போர்டு" அமைக்கப்பட்டிருக்கிறது. ஒரு குறிப்பிட்ட இடத்தில் குடிநீர் இல்லையென்றால் 20, 30, 40 மைல்களிலிருந்து குடிநீர் கொண்டு வருவதற்குத் திட்டம் வகுத்திருக்கிறோம். அதன் மூலம் 10, 15 ஊராட்சிகளுக்குக் குடிநீர் வழங்க முடியும். இப்படிப்பட்ட திட்டங்களுக்கு ஒரே ஒரு ஊராட்சி மன்றம் நிதி ஒதுக்குவது என்பது இயலாத காரியம். இப்படி ஒரு பெரிய திட்டத்தை வகுத்து 10, 15 ஊராட்சி மன்றங்களுக்குக் குடிநீர் வசதி செய்து கொடுத்தால், அதனால் பலன் பெறுகிற ஊராட்சி மன்றங்கள் அதற்காகும் செலவை ஓரளவிற்குப் பகிர்ந்துகொள்ள முடியும். இந்த முறையிலே குடிநீர் வாரியம் செயல்படுகிறது.

ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியமும் முப்பது மைலுக்கு அப்பாலிருந்து தண்ணீர் கொண்டுவருவது என்பது இயலாத ஒன்று. அதில் தண்ணீர் இடைக்காமலும் இருக்கலாம். அப்படிப்பட்ட இடங்களுக்கு குடிநீர் வழங்குவதை தீவிரமாக அரசு பரிசீலித்து வருகிறது. நல்ல நீர் வழங்கப்பட்டால் நாட்டில் பரவுகிற நோய்கள் குறையும். அதற்கான மருத்துவச் செலவுகளும் குறையும். மேல்நாடுகளில் நோய்கள் வந்து அதைப் போக்குவதற்குப் பதிலாக வராமலேயே தடுப்பு ஏற்பாடுகள் செய்வதில் முனைகிறார்கள். Prevention is better than cure. என்பதைப் போல வரு முன்னர் காக்கும் வேலையைச் செய்ய முடியும். குடிநீர்தான் முக்கியமானது. நாட்டில் உண்ணாவிரதம் இருப்பவர்களைக் கூடப் பார்க்கலாம். தோசை, இட்டலி பகலில் சாப்பிடாமல் இருந்தாலும் இருப்பார்களே தவிர, நீர் உண்ணாமல் இருக்கமாட்டார்கள். அவர்கள் பக்கத்தில் பார்த்தால் ஒரு பானையும் குவளையும் இருக்கும். அரை மணி நேரத்திற்கு ஒருமுறை ஒரு குவளைத் தண்ணீரைக் குடித்துக்கொண்டுதான் உண்ணாவிரதம் இருப்பார்கள். அப்படி குடிதண்ணீர் இல்லாமலே 48 மணி நேரத்திற்கு மேலாக யாரும் உட்கார்ந்திருக்க முடியாது.

அடுத்து, ஊருக்கு ஊர் கல்விச் சாலைகள் ஏற்படுத்தி அதற்கான போக்குவரத்து வசதிகளைப் பெருக்க வேண்டும். தொழில் துறை வளரவும், வேளாண்மை சிறக்கவும், வணிகத்துறை வளரவும் சாலை வசதிகள் அவசியமாகையால், அதில் முக்கியத்துவம் காட்ட வேண்டியிருக்கிறது. ஓராண்டு காலத்திற்குள்ளாக எல்லா கிராமங்களும் மின்சார வசதியைப் பெற வேண்டுமென்று திட்டமிட்டு அதில் ஓரளவு வெற்றி காண முடியும் என்ற நிலையிருக்கிறது. கூட்டுறவுத் துறை அமைச்சர் கொண்டுவருகிற பசுமைப்



[மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்]

புரட்சித் திட்டத்திற்கும் குழாய்க் கிணறுகளிலிருந்து தண்ணீர் கொண்டுவர மின்சாரம் அவசியமாகிறது. அந்த வகையில் மின்சார வசதியும் முக்கியமானதாகிறது. 300 பேர்களுள்ள இடங்களில் கல்விச் சாலைகள் நிறுவப்பட வேண்டும். மூன்று மைல்கள் உள்ள சுற்று வட்டாரத்திற்கு ஒரு உயர்நிலைப் பள்ளியும், 5 மைலுக்கு ஒரு உயர்நிலைப் பள்ளியும் 20, 25 உயர் நிலைப் பள்ளிகள் இருக்கிற இடங்களில் ஒரு கல்லூரியும் இருக்க வேண்டுமென்ற நோக்கத்தின் அடிப்படையில் திட்டங்கள் தீட்டப்படுகின்றன. 10 கிராமங்களுக்கு ஒன்றாவது மருத்துவ மனை இருக்க வேண்டுமென்று ஐந்தாண்டுத் திட்டத்தின் அடிப்படையில் பொறுப்புகள் பலவற்றை ஏற்றுக்கொண்டிருக்கிறோம். திரு. சுந்தரேசத் தேவர் அவர்கள் பேசும்போது, பாதைகளுக்குச் செலவாகிற தன்மையை எடுத்துச் சொன்னார்கள். ஏற்கனவே ஆள் ஒருவருக்கு 40 காசு ஊராட்சி ஒன்றியத்திற்கு பாதை வசதிக்காகக் கொடுக்கப்பட்டு வந்தது. பாதைக்கும் அங்குள்ள ஆட்களுக்கும் சம்பந்தமே இல்லை. சில இடங்களில் நல்ல பாதைகள் அமைகின்றன. பல ஒன்றியங்கள் தார் ரோடுகளையே பார்க்காமல் இருக்கின்றன. பல கப்பி ரோடே பார்க்காமல் இருக்கின்றன. ஆட்களைப் பொறுத்து நிலைமை அமையாது என்பதற்காகத்தான் அரசு இப்போது மாற்றம் செய்திருக்கிறது. ஆளைப் பொறுத்து 18 காசு தருவது என்றும் சாதாரண சாலைக்கு மைல் ஒன்றுக்கு 600 என்றும் கடற்கரைச் சாலைக்கு, கழிமுக சாலையாக இருக்குமானால் 800 ஒதுக்குவது என்றும் மலைப்பாங்கான சாலைக்கு மைலுக்கு ரூ. 1,500 ஒதுக்குவது என்றும் சாலைகளின் வகைகளைக் கணக்கிட்டு ஆளைப் பொறுத்து 18 காசு ஒதுக்குவது என்றும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

மதிய உணவுத் திட்டத்தைப்பற்றி எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்டார்கள். இப்போது கூட ஆசிரியர்களை அதற்காகக் கட்டாயப்படுத்துகிற நிலையில்லை. மதிய உணவுத் திட்டத்திற்காக ஆங்காங்கு சமையல்காரர்கள் வைத்துக்கொள்ளலாம் என்றிருக்கிறது. மேற்பார்வை செய்வதை சமூதாயத் தொண்டாகக் கருதித்தான் செய்ய வேண்டும். அதற்காக ஒரு ஆளை நியமிக்க முடியாது. அவர்களுக்குப் பணம் தருவதற்கும் இல்லை. 'கேர்' நிறுவனத்தினர் இந்தப் பிரச்னையைத் தீர்க்க முன் வந்ததன் காரணமாக, அவர்கள் 30 யூனியன்களை எடுத்துக் கொண்டு மதிய உணவுத் திட்டத்தை நடத்தி வருகிறார்கள். கூலியாட்கள் தருவது, இடம் தருவது, மதிய உணவிற்கான உணவுப் பொருள்களைத் தருவது ஆகியவற்றை நாம் ஏற்றுக் கொண்டிருக்கிறோம். அவர்களுடைய பணி வசதிக்கேற்ப 30, 30 ஆகத்தான் எடுத்துக்கொள்ள முடியும் என்று கூறுகிறார்கள். அவர்கள் தானம் கொடுக்கிறார்கள். அதை நாம் வற்புறுத்த முடியாது. நான் அமெரிக்கா சென்றிருந்தபோது, அந்த நிறுவனத்திற்குச் சென்று நிலைமையைப் பார்த்தேன். அந்த

[27th July 1971

[மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்]

'கோ' நிறுவனத்திடமிருந்து அதிகமான உதவியைப் பெறுகிற நாடு இந்தியாவாகத்தான் இருக்கிறது. உலகத்தில் பல்வேறு பகுதிகளிலிருந்து அந்த நிறுவனத்திற்கு நன்கொடை வழங்குகிறார்கள். அதை வைத்துக்கொண்டு இப்பணிகளை அவர்கள் செய்துவருகிறார்கள். நான் ஒரு கேள்வியைக் கேட்டேன். இந்தியாவிலிருந்து எவ்வளவு நன்கொடை வருகிறது என்று கேட்டேன். ஒருவர் கூட கொடுக்கவில்லை என்ற பதில் வந்தது. அதிகமான உதவியைப் பெறுவது நாம்தான். இங்கேயிருந்து ஒருவர் கூட நன்கொடை அளிக்காத நிலைமையில் இருக்கிறது. அவர்கள் எடுத்துக்கொள்கிற யூனியன் எண்ணிக்கையை 30 லிருந்து 60 ஆக்க இயலுமா என்பதைப் பற்றி அந்த நிறுவனத்தினர் டெல்லியிலிருந்து வரும்போது அவர்களுடன் பேசலாம் என்ற எண்ணம் இருக்கிறது.

7-20 p.m.

வேறு பல பிரச்னைகளை எடுத்துச் சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. ராஜா அய்யர் அவர்கள் வேலைக்கு வைத்துக் கொள்ளும்போது தகுதிகளைப் பெருக்கிக்கொள்வதைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். திரு. முத்துசாமி அவர்களும் குறிப்பிட்டார்கள். வயதின் அடிப்படையில் ஓரளவுக்கு விலக்கு அளிக்கலாம் என்று அரசு ஆலோசித்து வருகிறது. செகண்டரி ஆசிரியராக இருக்கிறவர்கள் பட்டம் பெற்று வேறு பல நிலைமைகளுக்கு வந்தால் அவர்களுக்கு வயது விலக்கு எந்த அளவுக்கு அளிக்கப்படலாம், எத்தனை ஆண்டு பயிற்சி பெற்றிருக்கவேண்டுமென்று வைக்கலாம், எட்டாண்டா பத்தாண்டா என்பதையும், 40 வயதிற்கும் வைக்கலாமா என்று தீர ஆராய்ந்து முடிவெடுக்க வேண்டும்.

உறுப்பினர்கள் நல்ல பல கருத்துக்களையும் சொன்னார்கள். அவைகளையெல்லாம் நிர்வாகச் சீர்திருத்தக் குழுவிற்கு யோசனை எடுத்துச்சொல்லப்படும்போது, சிறந்த முறையில் எடுத்துச் சொல்வார்கள் என்று கருதுகிறேன். நிர்வாகக் குழு பரிந்துரை செய்யலாம். அரசாங்கம் அதைக் கேட்டு சீர்திருத்த முறைகளைச் செயல்படுத்துவார்களானால், நோக்கம் சிறப்பாக நிறைவேறும். அதன் மூலம் நல்ல சூழ்நிலை ஏற்படும்.

ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள குடிசைத் தொழில்கள் மூன்று வகைகளாகப் பிரித்து வைக்கப்பட்டிருக்கின்றன. நானும் தொழிலமைச்சர் அவர்களும், கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களும் உட்கார்ந்து பேசிய வகையில் கதர் கைத்தொழில் போர்டின் கீழேயே இவற்றைச் சேர்த்துவிடுவது நல்லதென்றும் தொழில் துறையில் உள்ளவற்றை இதில் ஒரே நிர்வாக அமைப்பில் சேர்த்துக் கொண்டுவிடுவது நல்லது என்று கருத்தளவில் ஒப்புக் கொண்டிருக்கிறோம். அதுபற்றி நடைமுறையில் வரும்போது பிரச்னை தீரும் என்று நினைக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள்



27th July 1971]

[மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்]

கூறிய கருத்துக்கள் நினைவில் கொள்ளப்பட்டு நடைமுறைக்குக் கொண்டுவர முயற்சிகளை மேற்கொள்ளலாம் என்று கூறிக் கொள்கிறேன்.

திரு. கே. ராசாராம்: தலைவர் அவர்களே சிறிய விளக்கம் பெற விரும்புகிறேன். பொதுவாக பத்துப் பதினைந்து ஆண்டுகளாகிவிட்டதால் பஞ்சாயத்து, சமுதாய நலத்திட்ட விஷயத்தில் அடிப்படை மாறுதல் செய்யவேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அமைச்சர் அவர்கள் பேசும்போது குறிப்பிட்டதைப் போல, இதைப்பற்றியெல்லாம் நிர்வாகச் சீர்திருத்தக் குழுவிற்குத் தெரிவிக்கலாம் என்றும் அவர்கள் ஆராய்ச்சி செய்து ரிபோர்ட் சமர்ப்பிப்பார்கள் என்றும் சொன்னார்கள். அந்த ரிப்போர்ட் இந்த சபையில் வைக்கப்பட்டு விவாதம் நடத்த அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: நான் இன்னும் ஒரு படி முன்னரேயே போகிறேன். ரிபோர்ட் தயாரிப்பதற்கு முன்னால் கூட சீரிய கருத்துக்களை அவர்களிடத்தில் தெரிவித்தால் கன்சல்டேட்டிவ் கமிட்டி மற்றும் முக்கியமானவர்கள் கருத்துக்களைப் பரிந்துரை செய்ய வேண்டுமென்றால், அவற்றை விவாதித்து நல்ல முடிவுகளை எடுத்துக்கொள்ளலாம். அவற்றைப் பரிசீலிக்கிற கட்டம் வரும்போது அந்த முடிவை எடுக்கலாம். 7-25 p.m.

MR. CHAIRMAN : The House will now adjourn and meet again at 4 p.m. tomorrow.

The House then adjourned.

## APPENDIX I.

[*Vide* answer to starred Question No. 260 on page 533]

(அ) நிர்வாகக் குழு உறுப்பினர்களின் பட்டியல் :

நகரமண்டபக் குழு : திருச்சிராப்பள்ளி.

**தலைவர்**

(1) நடேச சாஸ்திரிகள் மகன் திரு. என். இராமசாமி ஐயர், பி.ஏ., பி.எல்., பட்டர்ஒர்த் சாலை, திருச்சிராப்பள்ளி.

**செயலாளர்**

(2) நாராயணசாமி பிள்ளை மகன் திரு. கே. கண்ணன், தலைவர் தேசிய தொழிலாளர் சங்கம், 45, சிந்தாமணி பஜார், திருச்சிராப் பள்ளி.

**உதவிச் செயலாளர்**

(3) கோபாலதேசிகன் மகன் திரு. ஜி. இரங்கசாமி ஐயங்கார், எம்.ஏ., எம்.எல்., எப் டி.எஸ்., சிங்காரத்தோப்பு, திருச்சிராப்பள்ளி.

**குழுவின் உறுப்பினர்கள்**

(4) மூக்கப் பிள்ளை மகன் திவான்பகதூர் திரு. டி. எம். நாராயணசாமி பிள்ளை, பி.ஏ., பி.எல்., முன்னாள் பல்கலைக் கழகத் துணை வேந்தர், அண்ணாமலைப் பல்கலைக் கழகம், கண்டோன் மெண்ட், திருச்சிராப்பள்ளி.

(5) ரங்கசாமி ஐயங்கார் மகன் திரு. கே. வாசுதேவன், முன்னாள் எம்.எல்.ஏ., ஸ்ரீரங்கம், திருச்சிராப்பள்ளி.

(6) முருகன் செட்டியார் மகன் திரு. எம். சுப்பையா செட்டியார், முன்னாள் எம்.எல்.ஏ., கண்ணன் தேவன் ஆலை, பிமா நகர், திருச்சிராப்பள்ளி.

(7) நம்பியப்ப செட்டியார் மகன் திரு. எம். சுப்பிரமணியன் செட்டியார், முன்னாள் எம்.எல்.ஏ., ஸ்ரீரங்கம், திருச்சிராப்பள்ளி.

(8) வீராசாமி பிள்ளை மகன் திரு. எம். கைலை அனந்தர், எம்.ஏ.பி.எல்., வழக்கறிஞர், தில்லை நகர், திருச்சிராப்பள்ளி

(9) எ. ஞானதிக்கம் மகன் டாக்டர் ஜோசப் ஞானதிக்கம், கண் மருத்துவர், கண்டோன்மெண்ட், திருச்சிராப்பள்ளி.

(10) இராமசாமி ஐயர் மகன் திரு. பி. ஆர். சீதாராமன், மொத்த சில்லரை வியாபாரி, பெரிய வீதி, பி. ஆர்.என். கடை, திருச்சிராப்பள்ளி.

(11) செங்கனுத தரத்தாச்சாரியார் மகன் திரு. எஸ். ஆர். வரதாராஜதாதம், தெற்கு சித்திரை வீதி, ஸ்ரீரங்கம், திருச்சிராப் பள்ளி.





(12) டி. வி. கோவிந்த பிள்ளை மகன் திரு. ஜி. விஸ்வநாதன், எம்.பி., பி.எஸ்., பெரிய கடைத் தெரு, திருச்சிராப்பள்ளி.

(13) பி. ஆர். தேவர் மகன் திரு. ஆ. பி. தியாகராஜ தேவர், தேவர் மிலாஸ், உறையூர், திருச்சிராப்பள்ளி.

(14) பி. எம். குலாம் மைதீன் மகன் திரு. சி. முகமது மக்தும், மொத்த வியாபாரி. கண்ணன் தேவன் ஆலை, பிமா நகர், திருச்சிராப்பள்ளி.

(15) சி. எ. இராசகோபால ஐயங்கார் மகன் டாக்டர் ஆர். காலமேகம், கண்டோன்மெண்ட், திருச்சிராப்பள்ளி.

(16) வைத்தியலிங்கம் பிள்ளை மகன் திரு. டி. வி. அரசசாமி பிள்ளை, ஆண்டார் வீதி, திருச்சிராப்பள்ளி.

(17) மாணிக்க தேவர் மகன் திரு. எம். எஸ். மணி, முன்னாள் எம்.எல்.ஏ., உரையூர், திருச்சிராப்பள்ளி.

(18) சுந்தரம் பிள்ளை மகன் ராவ் பகதூர் என். எஸ். குழந்தைசாமி பிள்ளை, ஓய்வு பெற்ற வேளாண்மை துறை துணை இயக்குநர், கிராப்பட்டி, திருச்சிராப்பள்ளி.

(19) திரு. கே. ஏ. நம்பியார், முன்னாள் எம்.பி., தொழிலாளர் சங்கத் தலைவர், பொன்மலை, திருச்சிராப்பள்ளி.

(இ) தொடர் எண் 1 முதல் 7 வரையிலும் மற்றும் 18-லும் குறிப்பிட்டுள்ள உறுப்பினர்கள், 1963-ம் ஆண்டுக்கு முன் பிலிருந்து நகரமண்டபக்குழு உறுப்பினர்களாகத் தொடர்ந்து இருந்து வருகிறார்கள். மேற்படி குழு 28—4—1963-ஆம் நாளன்று நிறைவேற்றிய தீர்மானத்திற்கிணங்க, தொடர் எண் 8 முதல் 16 வரை குறிப்பிட்டுள்ள உறுப்பினர்கள், உறுப்பினர்களாகச் சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள். மேற் குறிப்பிட்ட குழு 31—12—1963-ஆம் நாளன்று நிறைவேற்றிய தீர்மானத்திற்கிணங்க தொடர் எண் 17-லும் 19-லும் குறிப்பிட்டுள்ள உறுப்பினர்கள் இக்குழுவில் பணி புரிவதற்காக உறுப்பினர்களாகச் சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள்.

(உ) நகர மண்டபம், தற்பொழுது திருச்சிராப்பள்ளி நகரமண்டபக் குழுவின் பேணுதலின் கீழ் உள்ளது.

(எ) பொதுக்கூட்டங்கள், மாநாடுகள், பண்பாட்டு விழா நிகழ்ச்சி பொருட்காட்சிகள், விழாக்கள் அரசியல் கூட்டங்கள், ஜமாபந்தி, மற்றும் பிற காரியங்களுக்காக நகர் மண்டபம் பயன் படுத்தப்படுகிறது. சாதி சமய வேறுபாடின்றி அனைவரும் இதைப் பயன்படுத்தலாம். மேலும், நூல் நிலையம், பொழுது போக்குக் கழகம் முதலியவைகளும், நகர மண்டபத்தில் உள்ளன.

# APPENDIX II.

[*Vide* item IV on page 540]

## 1. முன்னுரை.

முதல் நிலை, இரண்டாம் நிலை எனை இரண்டு நிலைகளில் சமுதாய வளர்ச்சித் திட்டம் செயற்படுத்தப்படுகிறது. முதல் நிலை வட்டாரம் ஒவ்வொன்றும் ஐந்தாண்டுக் காலத்தில் ரூ. 12 இலட்சம் மைய உதவி பெறத் தகுதி பெற்றது. முதல் நிலையில் ஐந்தாண்டுகளை முடித்த வட்டாரம், இரண்டாம் நிலை வட்டாரமாக மாறுகிறது. அதற்கு 5 ஆண்டுக் காலத்திற்கு ரூ. 5 இலட்சம் நிதி ஒதுக்கப்படுகிறது. 10 ஆண்டுகள் முடிவுற்ற பின்னர், ஒவ்வொரு வட்டாரமும், இரண்டாம் நிலையைக் கடந்த வட்டாரமாகக் கருதப்படுகிறது. இரண்டாம் நிலையைக் கடந்த வட்டாரங்கள் சமுதாய வளர்ச்சித் திட்ட அமைப்பிலிருந்து உதவி பெறத் தகுதியுடையன வல்ல. முதல் நிலை வட்டாரங்கள் தமிழ்நாட்டில் ஒன்றும் இல்லை. இம் மாநிலத்தில் 1971-72-ஆம் ஆண்டில் இரண்டாம் நிலை வட்டாரங்கள் 128-ம், இரண்டாம் நிலையைக் கடந்த வட்டாரங்கள் 246-ம் செயல்படும்.

பல்வேறு திட்ட வேலைகளுக்குக் கிடைக்கும் நிதிகள் ஒருங்கு திரட்டப்பட்டு உருவாக்கப்படும் ஊராட்சி வளர்ச்சித் திட்டவாரியான வரவு-செலவுத்திட்ட வரம்பிற்குள், ஊராட்சி ஒன்றியப் பகுதிகளுக்குள்ள வேலைத் திட்டங்கள் அனைத்தும் இயன்ற இடங்களில் பொதுமக்களின் நல்கொடையும் பெற்று நிறைவேற்றப்படுகின்றன. மொத்தச் செலவுத் தொகையில் இரண்டாம் நிலை வட்டாரங்களுக்காகும் செலவினம் மட்டும் "சமுதாய வளர்ச்சி" என்ற தலைப்பிலும், இரண்டாம் நிலையைக் கடந்த வட்டாரங்களில் பல்வேறு வளர்ச்சி வேலைத் திட்டங்களுக்காகும் செலவினம் அதனதன் வளர்ச்சித் தலைப்பிலும் குறிப்பிட்டுக் காட்டப்படுகின்றன. ஒவ்வோராண்டும் பெருவாரியான வட்டாரங்கள் இரண்டாம் நிலையைக் கடந்தவைகளாக மாறுகின்றன. எனவே "சமுதாய வளர்ச்சித்" திட்டத்தில் பற்று வைக்கப்படும் செலவினம் சீராகக் குறைந்து அதற்குச் சரியான செலவினம் தொடர்புள்ள வளர்ச்சித் தலைப்புகளில் அதிகரிக்கும். ஊராட்சி ஒன்றியங்களின் ஓராண்டுப் பணிகளை இன்னோராண்டுப் பணிகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கையில், 374 வட்டாரங்கள் முழுவதிலும் எல்லா தலைப்புகளுக்கும் ஆன மொத்தச் செலவைப் பரிசீலனை செய்யவேண்டுமேயன்றி, "சமுதாய வளர்ச்சித்" திட்டத் தலைப்பிலுள்ள செலவை மட்டும் கருத்தில் கொள்ளக் கூடாது.





12,651 ஊராட்சிகள், 592 பேரூராட்சிகள், மற்றும் 374 ஊராட்சி ஒன்றியங்களுக்கென, 1971-72-ஆம் ஆண்டைய நிதி நிலையில் ஒதுக்கப்பட்டுள்ள ரூ. 71.93 கோடியிலிருந்து ஊராட்சி வளர்ச்சித் திட்டங்களுக்குரிய நிதி நிர்வாகம் எவ்வளவு பெரிய அளவில் செயற்படுகிறதென்பது தெளிவாகும். இப்பேரவையில் கோரியுள்ள ரூ. 763.15 இலட்சமானது, ஊராட்சிகளாலும், ஊராட்சி ஒன்றியங்களினாலும் செலவு செய்யப்படும் தொகையில் ஒரு சிறு பகுதியைத்தான் குறிக்கிறது. ஊராட்சிகளிலும், ஊராட்சி ஒன்றியங்களிலும் செயல்படும் ஊர் வளர்ச்சித் திட்டங்களுக்கான நிதி ஒதுக்கீடுகள் பற்றிய புள்ளி விவரங்கள், இக்குறிப்புரையுடன், பேரவை முன் வைக்கப்பட்டுள்ள நிதி நிலை அறிக்கை இணைப்பில் தொகுத்துத் தரப்பட்டுள்ளன. 1970-71-ஆம் ஆண்டில் நடைபெற்றுள்ள பணிகள் பற்றிய ஆய்வும், கிராம மக்களிடையே பெருகிவரும் தேவைகளை நிறைவேற்ற 1971-72-ஆம் ஆண்டில் இவ்வாசு மேற்கொள்ளவிருக்கும் சிறப்புத் திட்டங்கள் பற்றிய கோரிக்கைகளும் இக் குறிப்புரையில் சுருக்கமாகத் தரப்பட்டுள்ளன.

## 2. ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்களின் நிர்வாகம்

### (அ) அமைப்பு

தென் ஆர்க்காடு மாவட்டத்திலுள்ள கல்ராயன் குன்றுகள் வட்டாரம் நீங்கலாக மாநிலம் முழுவதிலும் உள்ள கிராமப் பகுதிகளில் 1958-ஆம் ஆண்டைய தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 35/1958) தற்போது நடைமுறையிலுள்ளது. ஜாகீர்தார்கள் செய்துகொண்ட முறையீட்டின் பேரில் உயர் நீதி மன்றம் பிறப்பித்த தடையாணையினால் ஜாகிர் பகுதிகளை ஜமீன்தார் ஒழிப்புச் சட்டத்தின்கீழ், அரசு இன்னும் எடுத்துக் கொள்ளவில்லையாதலால் கல்ராயன்குன்றுகள் பகுதியில் ஊராட்சி சட்டத்தை நடைமுறைப்படுத்த முடியவில்லை. ஜாகிர் பகுதிகள் எடுத்துக்கொள்ளப்பட்டவுடன் ஓர் ஊராட்சி ஒன்றியம் அமைக்கப்பட்டு, இப் பகுதிக்கும் இச் சட்டமானது விரிவுபடுத்தப்படும். தமிழ்நாடு முழுவதிலும் 12,651 ஊராட்சிகள், 592 பேரூராட்சிகள், 12 நகரியங்கள் உள்ளன. இவை அனைத்தும் 374 ஊராட்சி ஒன்றியங்களுக்குள் அடங்கியுள்ளன. நகராட்சிகள் சட்டத்தின்கீழ் நகரியங்களாக மாற்றுதற்குரிய முன்னேற்பாடாகச் செங்கற்பட்டு மாவட்டத்திலுள்ள கத்திவாக்கம், மாதவரம் என்ற இரண்டு பேரூராட்சிகள் 1970-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 20-ம் தேதி முதற்கொண்டு நகராட்சிகளாக மாற்றப்பட்டுள்ளன.

### (ஆ) ஊராட்சித் தேர்தல்கள்

1970-ஆம் ஆண்டு சூலைத் திங்களில் 12,651 ஊராட்சிகளுக்கும் 592 பேரூராட்சிகளுக்கும் சாதாரணத் தேர்தல்கள் நடைபெற்றன. சற்றேறத்தாழ 190 இலட்சம் வாக்காளர்கள் இத் தேர்தலில் வாக்களித்தனர். சட்டப் பேரவை வாக்காளர் பட்டியலைத் தவிர்த்து, இத் தேர்தல்களுக்கெனவே தனி வாக்காளர் பட்டியல் இல்லங்கள் தோறும் சென்று கணக்கெடுத்து, 1958-ஆம் ஆண்டைய தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் பிரிவு 20 (2) இன்கீழ் வெளியிடப்பட்டது. இப்படித் தனி வாக்காளர் பட்டியல் தயாரித்தது தமிழ்நாடு வரலாற்றிலேயே இதுதான் ஒரு முதல் நிகழ்ச்சியாகும். ஊர் அல்லது நகரிலுள்ள வாக்காளர்கள், முதன் முறையாக இரகசிய வாக்கெடுப்பு மூலம், ஊராட்சித் தலைவர்களைத் தேர்ந்தெடுத்தனர். ஊராட்சி மன்ற உறுப்பினர்களுக்கும், தலைவர்களுக்கும் தேர்தல்கள் ஒரே நேரத்தில் நடைபெற்றன. கன்னியாகுமரி மாவட்டத்தில் முன்பிருந்த ஊராட்சிகள், 64 பேரூராட்சிகள், 224 ஊராட்சிகளாகவும் திருநெல்வேலி மாவட்டம், செங்கோட்டை வட்டத்தில் முன்பிருந்த ஆறு ஊராட்சிகள் 4 பேரூராட்சிகள் 6 ஊராட்சிகளாகவும் திருத்தியமைக்கப்பட்டன. மாநிலத்தின் மற்றப் பகுதிகளில் உள்ள ஊராட்சி முறையைப் போலவே இங்கும் இருக்க வேண்டுமென்பதற்காக இந் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஊராட்சி உறுப்பினர்களும், ஊராட்சித் தலைவர்களும் 1970-ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 2-ஆம் நாளன்று பதவி ஏற்றுக் கொண்டனர்.

## 3. ஊராட்சி வளர்ச்சி நிர்வாகம்

### (அ) நிர்வாக அமைப்பு வளர்ச்சி

வட்டார நிர்வாக அமைப்பு முறையைச் சீர் செய்யும் எண்ணம் சிறிது காலமாக அரசின் ஆய்வில் இருந்து வருகிறது. ஊராட்சி வளர்ச்சி நிர்வாகத்தில் இதுவரை செய்யப்பட்டுள்ள நிர்வாகச் சீர்திருத்தங்கள் வருமாறு :—

(1) கால்நடை வளர்ச்சித் துறை திருத்தியமைக்கப் பட்டுள்ளது. ஒவ்வொரு வட்டாரத்திலும் துணை நிலையங்களின் எண்ணிக்கை உயர்த்தப்பட்டிருப்பதன் விளைவாக கால்நடை



வளர்ச்சி அலுவலர்களின் எண்ணிக்கையும் பெருமளவில் உயர்த்தப்பட்டுள்ளது. இது வட்டார நிர்வாகத்தில் ஒரு முக்கியப் பெரிய மாற்றமாகும். இந்தச் சீர்திருத்தத்தின் விளைவாக, ஒவ்வொரு வட்டாரத்திலும் எத்தனை துணை நிலையங்கள் உள்ளனவோ அத்தனை கால்நடை வளர்ச்சி அலுவலர்கள் இருப்பார்கள். இதனால் கால்நடை வளர்ச்சி அலுவலர் ஒரு கட்டுக்கோப்பான பகுதியைத் தம் பொறுப்பில் பெற்று, அங்கு எல்லா வகையான துறை அலுவலர்களையும், வளர்ச்சிப் பணிகளையும் செம்மையுற மேற்கொள்ள முடிகிறது.

(2) இதுவரை வட்டார வளர்ச்சி அலுவலர்கள், மாவட்ட ஆட்சித் தலைவர்களின் நேர் உதவியாளர் (ஊராட்சி வளர்ச்சி) பதவிக்கு மட்டுமே உயர்வு பெற முடிந்தது. வட்டார வளர்ச்சி அலுவலர்களின் பதவியுயர்வு வாய்ப்புகளைக் கூட்டுதற்கும், ஊராட்சி வளர்ச்சி நிர்வாகத்தைத் திறம்படச் செய்தற்கும் இடமளிக்கும் வகையில் ஊராட்சி வளர்ச்சித் துறையைத் திருத்தியமைக்கும் பணியின் முதற்செயலாக, 47 கோட்ட ஊராட்சி அலுவலர்கள் பதவிகளைச் சார்வு நிலை வட்டார வளர்ச்சி அலுவலர்கள் பதவிகளாக அரசு உயர்த்தியுள்ளது.

(3) வட்டாரப் பகுதிகளில் கடன்களை வசூலித்தல், ஊராட்சி வரிகளை வசூலித்தல், ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள நிலங்களை நிர்வகித்தல், நில ஆக்கிரமிப்புக்களை வெளியேற்றல் போன்ற பல்வேறு வேலைகள் அண்மைக் காலமாகப் பெருகிவிட்டன. இவ்வாறு அதிகரித்துள்ள வேலையைத் தற்போது வருவாய் பிரிவிலுள்ள அலுவலர்களால் சமாளிக்க இயலவில்லை. அதனால் இவ்வேலைகளை மட்டுமே கவனிக்கத் தனி அலுவலர்களை ஒன்றியங்களில் நியமித்தல், வேலையில் தரம் உயரும் என்பதற்காக 100 (நூறு) துணை வட்டாட்சியர் (Deputy Tahsildar) பதவிகளை அரசு ஏற்படுத்தியுள்ளது. அப்பதவியிலுள்ளோர் வளர்ச்சி அலுவலர் (வருவாய்) என அழைக்கப்படுவர். இதனால் ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்களின் நிதிநிலை போதுமான அளவிற்கு உயரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

(4) 1967-ஆம் ஆண்டு ஏப்ரலில் நீக்கப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவரின் இரண்டாம் நேர் உதவியாளர் (ஊராட்சி வளர்ச்சி) பதவியை அரசு, 1970-ம் ஆண்டு அக்டோபர் 1-ஆம் நாள் முதல்

மீண்டும் புதுப்பித்துள்ளது. அவருடைய பதவிப் பெயர் விளக்கு வது போன்று, இந்த நேர் உதவியாளர் (ஊராட்சி வளர்ச்சி), ஊராட்சி வளர்ச்சி தொடர்பான அன்றாட அலுவல்களைக் கவனிப் பதில் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு உதவி வருகிறார். மேலும் அவர்கள் வட்டார ஆய்வு அலுவலர்களாகவும், மாவட்ட வளர்ச்சி மன்றத்தின் செயலாளர்களாகவும் இருந்து வருகிறார்கள். எனவே மாவட்ட ஆட்சித் தலைவரின் நேர் உதவியாளர் (ஊராட்சி வளர்ச்சி) பதவியை மாவட்ட வளர்ச்சி அலுவலர் என்று பெயரிட்டழைக்க அரசு முடிவு செய்துள்ளது.

### (ஆ) பயிற்சித் திட்டம்

ஊர் வளர்ச்சி இயக்குநர் அலுவலகத்தில் பயிற்சிக் கிளை யொன்றை இத்துறை பெற்றுள்ளது. ஊராட்சி நிறுவனங்களுக் கெனத் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள், பல்வேறு வளர்ச்சித் துறையைச் சார்ந்த மாவட்ட அலுவலர்கள், ஊராட்சி நிறுவனங் களைச் சார்ந்த அலுவலர்கள் ஆகியோர் இந்நிறுவனங்களில் பயிற்சி பெறுகின்றனர்.

கீழ்க்கண்ட பயிற்சி நிலையங்கள் செயற்படுகின்றன :—

(1) சமுதாய வளர்ச்சி மாநில நிறுவனம்.

(2) தொழிற்கூடப் பிரிவு அமைந்த ஊர் வளர்ச்சிப் பயிற்சி நிலையங்கள்.

#### சமுதாய வளர்ச்சி மாநில நிறுவனம், பவானிசாகர்

இந்நிலையத்தில் கீழ்க்கண்ட பயிற்சி வகுப்புக்கள் நடத்தப்படு கின்றன :—

**(அ) ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவர்கள், துணைத் தலைவர்களுக்கான பயிற்சி.**—ஊராட்சி நிறுவனங்களின் பின்னணி, அவற்றின் செயல்முறை, தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள், அலுவலர்கள் ஆகியோரின் பங்கு ஆகியவை பற்றி விளக்கும் முறையில் 10 நாட்களுக்கு இப்பயிற்சி நடைபெறும்.

**(ஆ) பல்வேறு வளர்ச்சித் துறைகளைச் சார்ந்த மாவட்ட அலுவலர்கள், வளர்ச்சி அலுவலர்களுக்குரிய பயிற்சி.**—இஃது ஊராட்சிக் கொள்கையைப்பற்றி அரசு அலுவலர்களுக்குச் சிறந்த பயிற்சியளித்து, ஒருங்கிணைந்த முறையில் வளர்ச்சியைக் காணும் வழிவகைகளைக் கற்பிக்கும் 15 நாள் பயிற்சியாகும்.

**(இ) வட்டார வளர்ச்சி அலுவலர்களுக்குரிய வேலைப் பயிற்சி.**—தங்களுடைய பணிகளில் பயிற்சி பெற, வட்டார் வளர்ச்சி அலுவலர்களுக்கு இரண்டு இங்களுக்கு இப்பயிற்சி யளிக்கப்படுகிறது.



### குறிப்பிட்ட பணிக்குரிய பயிற்சிகள்

தேசிய சேவைப் படை அலுவலர்களுக்குக் குறிப்பிட்ட பணிக் களைப் பயிற்சியளித்தல், சமுதாய வளர்ச்சிப் பணிகளில் ஆசிரியர் களுக்குப் பயிற்சியளித்தல் போன்றவைகட்கு ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன.

### ஊர் விரிவாக்க நிலையம்

இம் மாநிலத்தில் ஐந்து ஊர் விரிவாக்கப் பயிற்சி நிலையங்கள் உள்ளன—

(1) டி. கல்லுப்பட்டி (மதுரை மாவட்டம்).

(2) பவானிசாகர் (கோயம்புத்தூர் மாவட்டம்).

(3) பட்டுக்கோட்டை (தஞ்சாவூர் மாவட்டம்).

(4) ச. வி. நகரம் (வட ஆர்க்காடு மாவட்டம்).

(5) கிருட்டிணகிரி அணை (தர்மபுரி மாவட்டம்).

இந்நிலையங்களில் கீழ்க்கண்ட பயிற்சி வகுப்புக்கள் நடைபெறு கின்றன :—

**முன் சேவைப் பயிற்சி.**—ஊர் நல உதவியாளர்களாக நியமிக்கப்படுதற்கு முன்னர், அப் பதவிகளுக்குத் தேர்ந்தெடுக்கப் பட்டவர்களுக்கு, இந்த ஊர் விரிவாக்கப் பயிற்சி நிலையங்களில் ஈராண்டுப் பயிற்சியளிக்கப்படுகிறது. இவர்கட்கு விஞ்ஞான முறையில் வேளாண்மை செய்வதைக் கற்றுத் தருதற்கு உதவும் வகையில், ஒவ்வொரு பயிற்சி நிலையத்துடனும் ஒரு பண்ணையும், பால் பண்ணை அலகும் இணைக்கப்பட்டுள்ளன.

**தேர்ந்தெடுக்கப்பட்ட ஊர் நல உதவியாளர்களுக்கு வேளாண் மையில் ஓராண்டுத் தீவிரப் பயிற்சி.**—ஊர் நல உதவியாளர்களின் திறமையை சிறப்பாக வேளாண்மைத் துறையில் மேம்படுத்துதற் கென, வேளாண்மை வளர்ச்சிப் பட்டச் சான்றிதழ்ப் பயிற்சி ஓராண்டுக்குத் தரப்படுகிறது. அனுபவம் பெற்ற ஊர் நல உதவி யாளர்கள் இப்பயிற்சிக்குத் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். இது வரை 291 பேர்களுக்குப் பயிற்சியளிக்கப்பட்டுள்ளது.

**தொழிற்கூடக் கிளைகள்.**—ஊர் விரிவாக்கப் பயிற்சி நிலையங்கள் அனைத்திலும் தற்போது தொழிற்கூடக் கிளைகள் இணைக்கப் பட்டுள்ளன. ஒவ்வொரு தொழிற்கூடக் கிளையிலும் 10 பேர் களுக்கு தச்சுத் தொழிலும் 10 பேர்களுக்குக் கருமார்த் தொழி லிலும் ஓராண்டுப் பயிற்சியளிக்கப்படுகிறது.

1970–71-ஆம் ஆண்டில் மூன்று தொழிற்கூடக் கிளைகள் "உற்பத்திப் பயிற்சி நிலையங்" களாக உயர்த்தப்பட்டுள்ளன. அண்மை வட்டாரங்களிலுள்ள உழுபடைக் கருவிகளைச் சீராக்கு தல், பேணுதல் போன்ற பணிகளை இந்நிலையங்கள் மேற்கொண் டுள்ளன.

[27th July 1971

## குறிப்பிட்ட பணிக்குரிய பயிற்சித் திட்டங்கள்.

(அ) வட்டார வளர்ச்சி அலுவலர்கள், வளர்ச்சி அலுவலர்கள் போன்றோர்க்குரிய அமோக விளைச்சல் முறைப் பயிற்சி, வட்டார வளர்ச்சி அலுவலர்களுக்குரிய ஆளுமைப் பயிற்சி போன்றவைகள் தேவைக்கும் அவசியத்திற்குமேற்ப நடத்தப்படுகின்றன.

(ஆ) மகளிர் நலத் துறையைச் சேர்ந்த பல்வேறு சேவிகைகளுக்கும் மகளிர் இணைப் பணியாளர்களுக்கும் ஊர் விரிவாக்கப் பயிற்சி நிலையங்களில் பயிற்சியளிக்கப்படுகிறது.

(இ) சீரணித் தொண்டர்கள் இந்நிலையங்களில் 11 நாட்களுக்குப் பயிற்சி பெறுகின்றனர்.

(ஈ) சமூக நலப் பணியாளர்களுக்கு வானொலிப் பெட்டிகளைச் செப்பனிட்டுச் சீராக்கும் பயிற்சியும், வானொலிப் பெட்டிகளைத் தயாரிக்கும் பயிற்சியும் சுவி. நகரத்திலுள்ள ஊர் விரிவாக்கப் பயிற்சி நிலையத்தில் அளிக்க ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. முதல் பயிற்சிக்கு 28 பேர்கள் தேர்ந்தெடுத்து அனுப்பப்பட்டுள்ளனர்.

பல்வேறு நிலைகளிலுள்ள வட்டார அலுவலர்களும், சமுதாய வளர்ச்சித் திட்டங்களுடன் தொடர்புகொண்டுள்ள அலுவல் சார்பற்றவர்களும், தங்களுடைய கடமைகளையும் பொறுப்புக்களையும் நன்கு நிறைவேற்ற இப் பயிற்சித் திட்டங்கள் பெருந்துணை புரிந்துள்ளன.

### (இ) கருத்துரைக் குழுக்கள்

நிர்வாகம்-பணிகள், உற்பத்தித் திட்டங்கள், நலப்பணித் திட்டங்கள் பற்றிய மாநில அளவிலான முன்று கருத்துரைக் குழுக்கள், ஊராட்சி நிர்வாகம் குறித்த பிரச்னைகளை ஆய்வு செய்கின்றனர். திட்டங்களைச் செயற் படுத்தும்போது அதன் செயல் வேகத்தைத் தடுக்கும் நடைமுறைப் பிரச்னைகளுக்குக் கருத்துரைக் குழுக்கள் தந்த ஆலோசனைகளின் அடிப்படையில் தீர்வுகள் காணப்படுகின்றன.

### (ஈ) பொருளாதார, உழைப்புச் சாதனைகள்

இத் தலைப்பின்கீழ்க் கோரியுள்ள தொகையின் அளவு, ஊராட்சி ஒன்றியக் குழுக்களிடம் ஒப்படைக்கப்பட்ட பல்வேறு வேலைத் திட்டங்கள் செயற்படுத்தப்படும் வேகத்தினைப் பிரதிபலிக்கிறது. இக் கோரிக்கையின்கீழ் 1969-70-இல் செலவுத் தொகை ரூ. 607.92 இலட்சமாகும். 1970-71-க்கான திருத்திய மதிப்பீடு ரூ. 682.34 இலட்சமாக நிர்ணயிக்கப்பட்டது. 1971-72-க்காகக் கோரப்படும் தொகை ரூ. 763.15 இலட்சமாகும். எல்லா ஊராட்சி ஒன்றியங்களும் உள்ளூர் "செஸ்" மேல் வரியை விதித்துள்ளன. இதினிருந்து 1970-71-இல் கிடைத்த வருவாய் ரூ. 355.44 இலட்சமாகும். உள்ளூர் செஸ் மேல் வரியை ஊராட்சி ஒன்றியங்கள் விதிப்பதனால், அதற்கான இணை மானியத்தை ஒன்றியம் அரசிடமிருந்து



27th July 1971]

பெற முடியும். 1969-70-இல் செஸ் மேல் வரி இணை மானியமாக ரூ. 334.40 இலட்சத்தை அரசு அளித்துள்ளது. 1970-71-க்குத் திருத்திய மதிப்பீடு ரூ. 355.44 இலட்சமாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. 1971-72-க்கான நிதி நிலை மதிப்பீடு ரூ. 401 இலட்சம். 365 ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் கேளிக்கை வரி, காட்சி வரி மீது, மேல் வரி விதித்துள்ளன. இந்த வகையில் 1970-71-க்கான வருவாய் ரூ. 104.80 இலட்சமாகும்.

1970-ம் ஆண்டு டிசம்பர் 31-ஆம் நாள் இருந்தவாறு சில வேலைத் திட்டங்கள் பற்றிச் சேகரிக்கப்பட்ட புள்ளி விவரங்கள் பின்வருமாறு :—

| | 1967 | 1968 | 1969 | 1970 |
|---|---|---|---|---|
| இணைப்புச் சாலைகள் (கிலோ மீட்டர்) .. .. | 17,136 | 20,224 | 20,736 | 22,506 |
| மேல்நிலை நீர்த்தொட்டிகள் (எண்ணிக்கை) .. | 2,240 | 2,506 | 2,817 | 4,090 |
| குடிநீர்க் கிணறுகள் (எண்ணிக்கை) .. .. | 47,900 | 52,100 | 54,768 | 62,300 |
| ஊராட்சி ஒன்றிய நிர்வாகத்தில் உள்ள தொடக்கப் பள்ளிகள் (எண்ணிக்கை) | 18,185 | 18,220 | 18,272 | 18,531 |
| ஊராட்சி ஒன்றிய நிர்வாகத்தில் உள்ள உயர் தொடக்கப் பள்ளிகள் (எண்ணிக்கை) | 3,275 | 3,252 | 3,246 | 3,207 |
| தொங்கு சட்டங்களிலிருள்ள பள்ளிகள் (எண்ணிக்கை) | 10,555 | 11,619 | 12,310 | 14,050 |

வளர்ச்சிப் பணிகளுக்காக ஊராட்சி ஒன்றியங்கள் மூலம் அரசு செலவழித்துள்ள தொகை பற்றிய விவரங்களைக் கீழ்கண்ட புள்ளிவிவர அறிக்கை காட்டுகிறது.—

| வேலைத் திட்டத்தின் பெயர். | 1967–68 (செலவுத் கணக்கு.) | 1968–69 (செலவுக் கணக்கு.) | 1969–70 (செலவுத் கணக்கு.) | 1970–71 (திருத்திய மதிப்பீடு.) | 1971–72 (நிதிநிலை மதிப்பீடு |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| | | | (ரூபாய் இலட்சங்களில்.) | | |
| வேளாண்மை .. | 81·14 | 83·75 | 74·93 | 85·00 | 85·00 |
| கால்நடை வளர்ச்சி | 26·48 | 21·90 | 23·35 | 23·25 | 23·25 |
| மீனவம் .. | 3·73 | 3·66 | 2·53 | 4·25 | 4·65 |
| இணைப்புச் சாலைகள் | 110·40 | 67·63 | 93·82 | 110·00 | 110·00 |
| குடிநீர் வழங்கல் | 118·49 | 146·01 | 142·83 | 145·80 | 163·70 |
| பள்ளிக் கட்டடங்கள் | 42·16 | 33·64 | 48·71 | 52 60 | 52·60 |
| சமூகக் கல்வி .. | 9·53 | 12·13 | 18·88 | 15·00 | 15·00 |
| மகளிர் குழந்தைகள் நலம். | 16·94 | 6·67 | 14·93 | 14·64 | 17·00 |
| கிராமக் கலை, கைத் தொழில் திட்டம். | 28·48 | 11·40 | 16·00 | 16·00 | 15·00 |

கிராமப் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கு இந்த அரசு மிகுந்த முக்கியத்துவம் அளிக்கிறது என்பதை மேலே காட்டியுள்ள புள்ளிவிவரங்கள் தெளிவுபடுத்துகின்றன. 1971-72-ம் ஆண்டிற்கு அநேகமாக எல்லாத் தலைப்பின் கீழும் கூடுதலான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 4. பணிகள்குறித்த வேலைத் திட்டங்கள்

### அ. ஊர்ப்பணிகளின் திட்டம்

ஊர்ப் பணிகள் மானியங்களில் கிடைக்கும் நிதிகளைக் குடிநீர் வழங்கல், இணைப்புச் சாலைகள் அமைத்தல், பள்ளிக் கட்டடங்கள் கட்டுதல் ஆகியவற்றில் ஊராட்சி ஒன்றியங்கள் செலவிட வேண்டும். 1970-ஆம் ஆண்டு டிசம்பர் 31-ஆம் நாளைய நிலவரப்படி, செய்து தரப்பட்டுள்ள வசதிகள் வருமாறு :—

| | |
|---|---|
| 1. மேல்நிலை நீர்த் தொட்டிகள் | 4,090 |
| 2. கிணறுகள் | 62,300 |
| 3. அமைக்கப்பட்ட இணைப்புச் சாலைகள். (கிலோ மீட்டர்) | 22,506 |
| 4. பள்ளிக் கட்டடங்கள். (கட்டப்பட்டவை) | 14,050 |

1971-72-க்கான நிதி நிலை மதிப்பீட்டில் ஊர்ப்பணிகள் வேலைத் திட்டத்திற்கென ரூ. 326.30 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

அரிசனங்கள், மீனவர்கள் மற்றும் இதர பின்தங்கிய வகுப்பினருக்கென்றே மேற்கொள்ளப்படும் ஊர்ப்பணிகளுக்கு மக்கள் தன்கொடைத்தொகை செலுத்தப்பட வேண்டுவதில்லை. இம் மாதிரியான நேர்வுகளில் குடிநீர் வழங்குவதற்கென 15 சத வீதமும், இணைப்புச் சாலைகளுக்கென 10 சத வீதமும் அரிசன நலத் துறை மானியத்திலிருந்து நன்கொடையாக அளிக்கப்படுகிறது. ஊர்ப்பணிகள் மானியத்தில் 20 சதவீதத் தொகை அரிசனங்கள் மற்றும் இதர பின்தங்கிய வகுப்பினர் நன்மைக்கெனச் செய்யப்படும் பணிகளுக்கென்றே ஒதுக்கப்படவேண்டும்.

### "யூனிசெஃப்" உதவியுடன் குழாய்க் கிணறுகள் அமைத்தல்"

குடிநீர் வழங்கும் திட்டத்திற்கு முக்கிய முதலிடம் அளித்திருந்தும்கூட, இப்பெரும் பிரச்னையின் ஒரு பகுதியைத்தான் இதுவரையில் நம்மால் தீர்க்க முடிந்துள்ளது. இப்பிரச்னையை விசாலமான எதிர்காலக் கண்ணோட்டத்துடனும் மிகப் பெரிய அளவிலும் சமாளிப்பதற்கான புதிய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. குடிநீருக்குத் தொல்லையும் பற்றாக்குறை இடங்களுக்கெனக் "குடிநீர் வழங்கல் சிறப்புத் திட்டம்" ஒன்றினை உருவாக்கி, நிறைவேற்ற வேண்டிய இன்றியமையாமையும் உள்ளது. குடிநீர்ப் பற்றாக்குறை ஊர்களையும், "காலரா" நோயினால் பாதிக்கப்படும் ஊர்களையும் கண்டறிந்து, அங்குள்ள மக்களுக்கு நிலையாகக் குடிநீர் வழங்குவதற்கு வசதிகளை ஏற்படுத்தித்தருவதற்குத் தலைமைப் பொறியாளர் (நெடுஞ்சாலை, ஊர்ப் பணிகள்) ஒரு வேலைத் திட்டத்தை உருவாக்கியுள்ளார். தலைமைப் பொறியாளர் (நெடுஞ்சாலை, ஊர்ப்பணிகள்) தொகுத்த இவ்வேலைத் திட்டத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இம் மாநிலத்திலுள்ள பாறை நிலப் பகுதிகளிலுள்ள குடிநீர்ப் பற்றாக்குறை ஊர்களிலும் "காலரா" நோயினால் பாதிக்கப்படும் ஊர்களிலும் "யூனிசெஃப்" உதவியைக்கொண்டு, ஐந்தாண்டுகளுக்குள்ளாக 8,850 குழாய்க் கிணறுகளை நிறுவுதற்கு இத்திட்டம் வகை செய்கிறது. துளையிடும் கருவிகள், மற்றும் இதர கருவிகளை "யூனிசெஃப்" அளித்து உதவும். 8,850 குழாய் கிணறுகளை நிறுவி அவற்றைப் பேணுதற்காகவும் செலவு ரூ. 2.71 கோடியாகுமென்று மதிப்பிடப்பட்டுள்ளது. அலுவலர்களுக்கும், கருவிகளை எடுத்துச் செல்வதற்கும் ஏற்படும் செலவு இதில் அடங்கவில்லை. இத்திட்டம் படிப்படியாக 1971-72-ஆம் ஆண்டு முதற்கொண்டு நிறைவேற்றப்படும். ஒவ்வோராண்டும் 1,770 குழாய்க் கிணறுகள் நிறுவப்படும். 1971-72-ஆம் ஆண்டு நிதி நிலை மதிப்பீட்டில் இதற்கென ரூ. 55 இலட்சம் ஒதுக்கப்படுகிறது.

### (ஆ) சாலைகள் பராமரிப்பு

ஊராட்சி ஒன்றியங்களின் பொறுப்பிலுள்ள சாலைகளைப் பராமரிப்பதற்கென "உள்ளூர் சாலைகள் மானியம்" என்றதொரு மானியம், ஒன்றியங்களுக்கு அளிக்கப்படுகிறது. இச்சாலைகள் மானியமானது ஆளொன்றிற்கு 18 காசுகள் என்ற வீதத்திலும், ஊராட்சி ஒன்றியங்களால் பராமரிக்கப்படும் சாலையானது சாதாரணமானதா, கடற்கரைப் பகுதிகளா, அல்லது கழிமுகப் பகுதிகளில் அமைந்தனவா அல்லது மலைப்பாதைகளா என்று வகைப்படுத்தப்பட்டு, அந்த அடிப்படையில் ஒவ்வொரு மைலுக்கும் முறையே ரூ. 600, ரூ. 870, ரூ. 1.500 என்ற வகையில் வழங்கப் படுகிறது. 1971-72-ஆம் ஆண்டில் ஊராட்சி ஒன்றியங்களுக்கு அளிக்கப்பட வேண்டிய மானியத் தொகை ரூ. 119.32 இலட்சமாக இருக்குமென்று மதிப்பிடப்பட்டுள்ளது.

பேரூராட்சிப் பகுதிகளில் முழுதியற்ற மேற்பரப்புடைய சாலைகளை அமைக்கப் பேரூராட்சிகளுக்கு உதவுவதற்காக, அரை மானியத் திட்டம் ஒன்றினை அரசு செயற்படுத்தி வருகிறது. 1971-72-ஆம் ஆண்டின் நிதி நிலை மதிப்பீட்டில் இதற்கென ரூ. 7 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

### (இ) சிறிய நீர்ப்பாசனம்

இம்மாநிலத்தில் சுமார் 36,000 சிறிய நீர்ப்பாசன வாயில்கள், உள்ளன. அவற்றுள் சுமார் 24,000 சிறிய நீர்ப்பாசன வாயில்கள், பராமரிப்புக்காக ஊராட்சி ஒன்றியங்கள் வசம் ஒப்படைக்கப் பட்டுள்ளன. நீர்ப்பாசன வாயில் ஒவ்வொன்றும் ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறையாவது கவனம் பெற வேண்டுமென்ற அடிப்படையில் பராமரிப்புத் திட்டம் ஒன்றை வகுத்துக்கொள்ளுமாறு ஊராட்சி ஒன்றியங்களுக்கு யோசனை கூறப்பட்டுள்ளது. சிறிய

நீர்ப்பாசனத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ள மொத்த நிதி ஒதுக்கீட்டிலிருந்து, ஒவ்வோராண்டும், அவ்வாண்டுத் தேவையினையொட்டி, ஒரு தொகை ஊராட்சி ஒன்றியங்களுக்கு ஒதுக்கப்படுகிறது. 1971–72-ஆம் ஆண்டிற்காக நிதி நிலை மதிப்பீட்டில் இதற்கென ரூ. 57.62 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

### (ச) கிராமக் கலைகள், கைவினைப் பொருள்கள், தொழில்திட்டம்

ஊர்ப்புறங்களில் வேலைவாய்ப்பு வசதிகளைப் பெருக்குதற்கென, கிராமக்கலைகள், கைவினைப்பொருள்கள், தொழில் திட்டத்தை ஊராட்சி ஒன்றியங்கள் நிறைவேற்றுதற்கு, தமிழ் நாடு கதர்-கிராமத் தொழில்கள் வாரியம் ஒன்றியங்களுக்கு உதவி செய்கிறது. கிராமக் கைவினைஞர்களுக்கும், வணிகம் செய்ய முனைபவர்களுக்கும் பணிமனை வசதிகள் செய்து தர வாரியம் யோசனை கூறியுள்ளது. கீழ்க்கண்ட தொழிற்பேட்டைகளுக்கு அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது.

| திட்டத்தின் பெயர். | நிலையம் உள்ள இடம். |
|---|---|
| 1. சூற்பு, நெசவிற்காக மூன்று கதர் தொழிற் பேட்டைகள் | திருப்பூர், பெருமாநல்லூர், காரமடை. |
| 2. கதர், தையல், பூப்பின்னல் தொழில் | திருப்பூர். |
| 3. கதர் தொழில் பேட்டை .. .. .. | இடையபாளையம் (ஒட்டன் சத்திரம் வட்டம், மதுரை மாவட்டம்) |

மேற்கண்ட பேட்டைகளோடுகூட, கிராமக்கலைகள், கைவினைப் பொருள்கள், தொழில்கள் திட்டத்தினுள்ள நிதிகளிலிருந்து, ஐந்து கிராமத் தொழில்பேட்டைகளை, மூன்று கிராமத் தொழில் திட்டப் பகுதிகளிலும் நிறுவுவதற்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இந்த ஐந்து கிராமத் தொழில் பேட்டைகளில் இரண்டு பேட்டைகள், ஸ்ரீபெரும்புதூர்த் திட்டப் பகுதிகளில் சிறு வணிகம் செய்பவர்களின் நன்மைக்கென நிறுவப்படும். விசைத்தறிக்கான இரண்டு கிராமத் தொழில்பேட்டைகளும் மானூர்த் திட்டப் பகுதியில் சலகண்டாபுரத்தில் ஒன்றும் தாமரைக்குளத்தில் ஒன்றுமாக நிறுவப்படும். பல்வேறு வகைப்பட்ட கிராமத் தொழில்களுக்கேற்ற கொட்டகைகளை அமைப்பதற்குரிய கிராமத் தொழில்பேட்டை யொன்றை நாங்குநேரித் திட்டப் பகுதியிலுள்ள வள்ளியூரில் நிறுவுவதற்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

### 5. உற்பத்தித் திட்டங்கள்

### (அ) வேளாண்மையும் கால்நடை வளர்ப்பும்

மாநிலம் முழுமைக்குமாக ஒரே மாதிரியான திட்டத்தின் அடிப்படையில் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் வேளாண்மை, கால்நடைவளர்ச்சி, மீன்வளத் திட்டங்கள் போன்றவற்றை நிறைவேற்றுவதற்கென எல்லா ஊராட்சி ஒன்றியங்



களுக்கும் ரூ. 2 இலட்சம் வேளாண்மை மானியமாகத் தரப்பட்டது. இதற்கு இணையாக ஊராட்சி ஒன்றியங்கள் ரூ. 50,000-ஐ தன் கொடையாக அளித்தன. வேளாண்மை, கால்நடை வளர்ச்சிப் பெருக்கத் திட்டங்கள் அப்போது "இன்றியமையாத் திட்டங்கள்," "விருப்பத் திட்டங்கள்" குறிப்பிட்ட பகுதிக்குரிய "சிறப்புத் திட்டங்கள்" என்று தொகுக்கப்பட்டிருந்தன. மூன்றாம் ஐந்தாண்டு திட்டம் 1967-ஆம் ஆண்டில் முடிவுற்றது. நான்காம் திட்டம் இன்னும் முழுமையான உருப்பெறுதலால் ஒவ்வோராண்டிற்கும் ஒதுக்கப்படும் தொகையைக் கொண்டு இத்திட்டங்கள் நிறைவேற்றப்படுகின்றன. முன்பெல்லாம் இம்மானியத்தில் "சிறப்புத் திட்டங்களுக்" கென ஒதுக்கப்பட்டுள்ள தொகையைப் பயன்படுத்தச் சில குறிப்பிட்ட திட்டங்கள் அறிவிக்கப்பட்டு வந்தன. குறிப்பிட்டத் திட்டங்களுக்குத்தான் இத்தொகையைச் செலவழிக்க வேண்டுமென்று கூறுவது, உள்ளூர் நிலைமைக்கு உகந்ததாயில்லையென்று அனுபவ வாயிலாகத் தெரிந்துள்ளது. மேற்கண்ட கூறுபாடுகளைக் கருத்திற் கொண்டு, வேளாண்மைத் துறை இயக்குநர், கால்நடை வளர்ச்சி இயக்குநர் மற்றும் மீன் வளர்ச்சி இயக்குநர் ஆகியோருடன் கலந்தாலோசித்து இம்மானியத்தை 1971-72-இல் செலவழிப்பதற்குரிய வழிமுறைகளை ஊர் வளர்ச்சி இயக்குநர் உருவாக்கியுள்ளார். சில கோட்பாடுகளுக் குட்பட்டு, மாவட்ட வேளாண்மை அலுவலருடனும் கால்நடை வளர்ச்சி உதவி இயக்குநருடனும் கலந்தாலோசித்து, "இதர திட்டங்கள்" என்ற தலைப்பில் ஒதுக்கப்பட்டுள்ள தொகைக்குரிய கோரிக்கைகளைத் தயாரித்துப் பொறுப்பை ஊராட்சி ஒன்றியங் களிடையே தந்துவிடுவது என்று முடிவு செய்யப்பட்டுள்ளது. 1971-72-ஆம் ஆண்டிற்கென்று ஆணையிட்டுள்ளபடி கீழ்க்கண்ட திட்டங்கள் ஊராட்சி ஒன்றியங்களால் நிறைவேற்றப்படும்.

#### வேளாண்மை

1. வேளாண்மைக் கிடங்குகளைக் கட்டுதல்.
2. ஊராட்சித் தோட்டங்களை உண்டாக்கிப் பராமரித்தல்.
3. மாவட்ட வேளாண்மை அலுவலருடன் கலந்தாலோசித்து, ஊராட்சி ஒன்றிய ஆணையரால் தேர்ந்தெடுக்கப்பட்டு, மாவட்ட வளர்ச்சி மன்றம், மாவட்ட ஆட்சித் தலைவரின் ஒப்புதலுடன் கூடிய இதர திட்டங்கள்.

#### கால்நடை வளர்ச்சி

1. கால்நடை மருந்தகங்களைக் கட்டல்.
2. கால்நடை அலுவலர் மருத்துவர்களுக்குக் குடியிருப்புகள் கட்டல்.
3. கால்நடை வளர்ச்சி உதவி இயக்குநருடன் கலந்தாலோசித்து, ஊராட்சி ஒன்றிய ஆணையரால் தேர்ந்தெடுக்கப்பட்டு, மாவட்ட வளர்ச்சி மன்றம், மாவட்ட ஆட்சித் தலைவரின் ஒப்புதலுடன் கூடிய இதர திட்டங்கள்

### ஆ. மீன்வளம்

மீன்வளத்தைப் பெருக்குவதற்கு வாய்ப்புகள் உள்ளன வென்று உறுதிப்படுத்தப்பட்டுள்ள வட்டாரங்களில் மட்டுமே இத் திட்டம் நிறைவேற்றப்படும். இவ்வகை வட்டாரங்களில் கீழ்க் காணும் திட்டங்கள் 1969-70-ஆம் ஆண்டு தொடக்கம் செயற் படுத்தப்படுகிறது:—

1. மீன் வளர்ப்புப் பண்ணைகளைப் பாதுகாத்தலும், செயற் படுத்தலும்.

2. மீன் முட்டைகளை வழங்குதல், பங்கிடுதல்.

3. ஏரிகளைப் புதுப்பித்தல்.

### 6. சமூக நலப்பணிகள்

#### (அ) தொடக்கக் கல்வி

ஊராட்சி ஒன்றியங்கள் மேற்கொண்டுள்ள பெரிய வளர்ச்சிப் பணிகளில் ஊர்ப்புறங்களில் தொடக்கக் கல்வியை மேற்கொண்டி ருப்பது ஒன்றாகும். 1958-ஆம் ஆண்டு தமிழ் நாடு ஊராட்சிகள் சட்டத்திலுள்ள 65 (e) பிரிவின்படி, ஊராட்சி ஒன்றியப் பகுதி களில் தொடக்கக் கல்வியை முழுமையாக நிர்வகிக்கும் பொறுப்பு சட்ட அடிப்படையில் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்ததாகும்.

ஒன்றியப் பகுதிகளில் 27,000-க்கும் மேற்பட்ட பள்ளிகள் (தொடக்க, உயர்தொடக்கப் பள்ளிகள்) உள்ளன. இவற்றில் சுமார் 21,700 பள்ளிகள் ஊராட்சி ஒன்றியங்களின் நோடிக் கட்டுப் பாட்டிலும் எஞ்சியவை உதவி பெறும் பள்ளிகளாகவும் உள்ளன. ஊராட்சி ஒன்றியத் தொடக்க, உயர் தொடக்கப் பள்ளிகளில் 1,16,500 ஆசிரியர்கள் பணியாற்றி, 40,60,000 மாணவர்களுக்குக் கல்வி கற்பிக்கின்றனர். இம்மாநிலத்திலுள்ள ஒவ்வொரு வருவாய் ஊரிலும் பள்ளி உள்ளது. 300 பேர்களுக்கு மேற்பட்ட மக்கள் தொகையைக் கொண்ட எல்லா ஊர்களுக்கும் கல்வி வசதிகள் அளிக்கப்பட்டுள்ளன என்று இங்குக் கூறுவது மிகையாகாது.

ஆண்டுக்காண்டு தொடக்கக் கல்விக்காகும் செலவு படிப்படியாக உயர்ந்து வருவதைக் கீழ்க்கண்ட வரவு செலவுத் திட்டத்திலிருந்து அறியலாம்:—

1970-71 ரூ. 27·42 கோடி

1971-72 ரூ. 32,53 கோடி.

தொடக்கக் கல்விக்காகும் செலவில் பெரும் பகுதி—அதாவது 87 சதவீதமான, ரூ. 28.39 கோடியை அரசு சட்டபூர்வமில்லா மானியங்களாக வழங்குவதன் மூலம் ஏற்றுக் கொள்ளுகிறது. எஞ்சியுள்ள ரூ. 4.14 கோடியை (சுமார் 13 சதவீதம்) ஊராட்சி





ஒன்றியங்கள் திரட்டிக்கொள்ள வேண்டும். ஊராட்சி ஒன்றியங் களால் தொடக்கக் கல்விக்கென உள்ளூரிலேயே திரட்டப் பெறும் நிதிகளும் கீழ்க்கண்டவாறு உயர்ந்து வந்துள்ளன:—

1969-70 ரூ. 373 இலட்சம்.

1970-71 ரூ. 392 இலட்சம்.

1971-72 ரூ. 414 இலட்சம்.

தொடக்க கல்வியில் ஊராட்சி நிறுவனங்கள், தங்களுக்குள்ள பொறுப்புக்களை முன்னேற்ற உணர்வுடன் அணுகி வருகின்றன வென்பதற்கு இது மிகப் பெரிய சான்றாகும். கூடுதலான செலவு க்குப் பொறுப்பேற்று, அண்மையில் ஆசிரியர்களின் ஊதிய விகிதங்களை அரசு உயர்த்தியுள்ளது.

தொடக்கக் கல்வியைப் பொறுத்துள்ள பல்வேறு தொகைகள், மானியங்களைக் கணக்கிடவேண்டிய அவசியத்தை முன்னிட்டு, கல்விக்கென ஒரு தனிக் கணக்கை (ஊராட்சி நிதி வைப்புக் கணக்கு III), ஊராட்சி ஒன்றியங்களில் 1962-ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 1-ஆம் நாள் முதல் துவக்கிக் கொள்ள அரசு ஆணையிட்டுள்ளது. தொடக்கக் கல்விக்குரிய தொகைகள் இத் தனிக் கணக்கில் கணக்கிடப்படுகின்றன.

பள்ளிகளில் அதிகமான மாணவர்களைச் சேர்த்தல், பள்ளி வசதி களை விருத்தி செய்தல், ஆசிரியர்களுக்கு வசதிகள் செய்து தருதல் ஆகியவற்றிற்கு ஒன்றியத் திட்டங்களாக அரசு மேற்கொண்டுள்ள பல்வேறு திட்டங்கள் கீழே குறிக்கப்பட்டுள்ளன. இத் திட்டங் களுக்கு 1970-71-இல் ஒதுக்கப்பட்டுள்ள தொகை வருமாறு:

(அ) கருவிகள்.—(1) ரூ. 7.36 இலட்சம். ரூ 1,000 வீதம் 736 உயர் தொடக்கப்பள்ளிகளுக்கு ரூ. 300 வீதம் 1,515 தொடக்கப் பள்ளிகளுக்கும்.

(2) 6—11 மற்றும் 11—14 வயது பிரிவிலுள்ளவர்களுக்கென்று கூடுதலாக ஆசிரியர்களை நியமிக்க முன்மானியமாக ரூ. 7.88 இலட்சம்.

(ஆ) துப்புரவு வசதிகள்.—ரூ. 4 இலட்சம் (ஒவ்வொரு மா வட்டத்திலும் 10 பள்ளிகளுக்கு ரூ. 3,330 வீதம்).

(இ) ஆசிரியர்களுக்காகக் குடியிருப்புகள் கட்டுதல்.—ரூ. 3 இலட்சம். இதுகாறும் 1,370 குடியிருப்புகள் கட்டப்பட்டுள்ளன.

(ஈ) பள்ளிக் கட்டடங்கள் கட்டுதல்—ரூ. 52.60 இலட்சம்.

21,700 ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளில் சுமார் 14,100 பள்ளிகள் சொந்தக் கட்டடங்களில் இயங்கி வருகின்றன. மொத்த ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளில் இது 67 சதவீதமாகும். கடந்த ஆண்டு களின் சாதனையைக் கொண்டு மதிப்பிடுகையில் ஆண்டொன்றிற்கு சுமார் 900 முதல் 1,000 வரை கட்டடங்கள் கட்டப்பட்டு வந்திருப்

பதை அறியமுடியும். பள்ளிகளுக்குக் கட்டடங்கள் கட்டித் தரவிரைவுத் திட்டமொன்றும் அரசின் பரிசீலனையில் உள்ளது. வருங்காலத்தில் பள்ளிகள் நிலையான கட்டடங்களில் இயங்குவதோடு காலப்போக்கில் மாநிலத்திலுள்ள எல்லா ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளும் சொந்தக் கட்டடங்களிலேயே செயற்படும்.

1958-ம் ஆண்டு ஊராட்சிகள் சட்டம் நிறைவேற்றப்பட்ட பின்னர், தொடக்கக் கல்விக்குக் கூடுதலான நிதியளிக்க வேண்டிய தேவை பெருகியுள்ளது. எனவே, ஊராட்சி ஒன்றியக் குழுக்களின் தற்போதைய நிதி நிலை, அதிகாரங்களைப்பற்றி முழுவதுமாக ஆராய வேண்டிய அவசியத்தை அரசு உணர்ந்தது. அதற்கேற்ப அலுவலர், அலுவலர் அல்லாதோரை உள்ளடக்கி, ஊர் வளர்ச்சி —உள்ளாட்சித் துறையின் அரசுச் செயலாளரைத் தலைவராகக் கொண்டு, ஊராட்சிக் கல்வி நிதி நிலை விசாரணைக் குழு ஒன்றை அரசு நியமித்தது. கல்வித் தொடர்புள்ள ஊராட்சி நிதியின் பல்வேறு கூறுகளைப்பற்றி இக்குழு ஆய்ந்தது. இக்குழுவின் அறிக்கை அரசின் தீவிர பரிசீலனையில் உள்ளது.

## மதிய உணவுத் திட்டம்

ஊராட்சிகளையும், ஊராட்சி ஒன்றியங்களையும் நிறுவியதனால், அவற்றின் துணைக்கொண்டு நாட்டை உருவாக்கும் நற்பணியான இம்மதிய உணவுத் திட்டத்தை அரசால் சீராகச் செயற்படுத்த முடிகிறது. 30,863 தொடக்கப் பள்ளிகளில் (தொடக்கப் பள்ளிகள், உயர்வு தொடக்கப் பள்ளிகள்) மதிய உணவு அளிக்கப்படுகிறது. அரிசன நலப்பள்ளிகளிலுள்ள மாணவர்களையும் சேர்த்து 18 இலட்சம் மாணவர்களுக்கு, ஆண்டில் 200 நாட்களுக்கு மதிய உணவு அளிக்கப்படுகிறது. 1971-72-ம் ஆண்டிற்கான நிதி நிலை மதிப்பீட்டில் ரூ. 198 இலட்சம் இதற்கென ஒதுக்கப்பட்டுள்ளது. மதிய உணவின் சத்தூட்டத் தன்மையைக் கூட்டுதற்குரிய பொருட்களையளிக்கக் "கேர்" நிறுவனம் முன் வந்துள்ளது. 1969-70-ம் ஆண்டில் "கேர்" நிறுவனம் ரூ. 6.02 கோடி மதிப்புள்ள பொருள்களை வழங்கியுள்ளது. 10 காசுகளுக்கு மேலும் செலவழித்துச் சத்துள்ள, சுவையான உணவை உள்ளூர் குழுக்கள் தயாரித்துக் கொள்ளலாம். நான்காம் ஐந்தாண்டுக் காலத்தில் முதல் வகுப்பு முதல் 8-ம் வகுப்புவரை தொடக்கப்பள்ளிகள், உயர் தொடக்கப்பள்ளிகளில் கூடுதலாகச் சேர்த்துக்கொள்ளப்படும் ஏழை மாணவர்கள் இத்திட்டத்தில் கொணரப்படுவார்கள். 1969-70-ம் ஆண்டில் சேர்க்கப்பட்ட மாணவர்களையும் சேர்த்து, 1970-71-ம் ஆண்டில் 1.34 இலட்சம் மாணவர்கள் இத்திட்டத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள். மதிய உணவுத் திட்டத்திற்கென 1970-71-ஆம் ஆண்டின் திருத்திய மதிப்பீடு ரூ. 20.66 இலட்சமாகும். (கூடுதலாகச் சேர்க்கப்பட்ட மாணவர்களுக்கான ரூ. 12.66 இலட்சமும் மைய சமையற்கூடத் திட்டத்திற்கான ரூ. 8 இலட்சமும் இதில் அடங்கும்).



பூலிருந்தவல்லி ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள சேக்காடு என்னும் ஊரில் "கேர்" நிறுவனத்தின் ஒத்துழைப்புடன் 1967-68-ல் ஒரு முன்னோடித்திட்டமாகத் தொடங்கப்பெற்ற மையச் சமையற்கூடத் திட்டம் மிகவும் பயனுள்ளதாகவும் வெற்றிகரமாகவும் அமைந்துள்ளது. சேக்காட்டில் அமைந்துள்ள மையச் சமையற்கூடத் திட்டம் வெற்றிகரமாக இயங்கியதைக் கண்ட "கேர்" நிறுவனம், மேலும் 30 நிலையங்கள் 1969-ஆம் ஆண்டில் துவங்க முன் வந்தது. அரசு இவ்வுதவியை ஏற்றுக்கொண்டு, 1969-70-இல் 30 நிலையங்களைத் தொடங்க ஆணை பிறப்பித்தது. 1970-71-ம் ஆண்டில் மேலும் 30 நிலையங்களை வட ஆர்க்காடு, தென் ஆர்க்காடு மாவட்டங்களில் துவங்க ஆணையிடப்பட்டுள்ளது. 1971-72-ம் ஆண்டில் மேலும் 30 மையச் சமையற்கூடங்களைத் திறக்கும் யோசனை அரசின் பரிசீலனையில் உள்ளது. "கேர்" நிறுவனத்தின் துணைகொண்டு மதிய உணவுப் பொருள்களைச் சேகரித்து வைப்பதற்கு 10 வட்டக் கிடங்குகளை அமைக்கும் யோசனை பரிசீலனையிலுள்ளது.

கல்வியில் ஒரு மறுமலர்ச்சியை ஏற்படுத்த வேண்டுமாயின், அது தொடக்கக் கல்வி நிலையிலிருந்துதான் துவக்கப்பட வேண்டுமென்பது அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்றாகும். இதைக் கருத்திற் கொண்டு, தொடக்கக் கல்வியைச் சிறக்கச் செய்யப் பல்வேறு திட்டங்கள் செயற்படுத்தப்படுகின்றன.

## (ஆ) சுகாதாரப் பணிகள்

**ஆரம்பச் சுகாதார நிலையங்கள்.**—ஆரம்பச் சுகாதார நிலையம் மேல் நிலையாக நிறுவப்பட்ட ஒரு பல நோக்கப் பிரிவாகும். சமுதாயத்திற்குத் தடுப்பு சிகிச்சையளிப்பதிலும் நோய்ச் சிகிச்சையளிப்பதிலும் அக்கறை கொண்டு மக்களின் உடல்நலனை நாளடைவில் ஊட்டம் பெறச் செய்வதே இந்நிலையங்களின் பணியாகும். ஒரு வட்டாரத்திற்கு ஓர் ஆரம்பச் சுகாதார நிலையம் வீதம் திறக்க அரசு ஒப்புதல் அளித்துள்ளது. முன்னும் ஐந்தாண்டுத் திட்ட இறுதியில் 188 நிலையங்கள் செயற்பட்டன. 1966-69-ல், 129 நிலையங்கள் கூடுதலாகத் திறக்கப்பட்டன. இன்றளவில் 375 ஆரம்பச் சுகாதார நிலையங்கள் 381 நிலையங்களில் இயங்கி வருகின்றன.

"யூனிசெஃப்"புடன் செய்து கொண்டுள்ள ஓர் ஒப்பந்தத்தின் விளைவாக, ஆரம்பச் சுகாதார நிலையங்கள் அனைத்தும் "யூனிசெஃப்" உதவியைப் பெறுதற்குத் தகுதி பெற்றுள்ளன. சில வரம்புகளுக்குட்பட்டு, ஆரம்பச் சுகாதார நிலையங்களுக்கு ஊர்திகள் வழங்குவதை "யூனிசெஃப்" மேற் கொண்டுள்ளது. இதுவரை 193 ஆரம்பச் சுகாதார நிலையங்கள் முழு உதவியையும், 21 ஆரம்பச் சுகாதார நிலையங்கள் ஒரு பகுதி உதவியையும் பெற்றுள்ளன. 102 ஆரம்பச் சுகாதார நிலையங்களுக்கு ஊர்திகள், "மைக்ரோஸ்கோப்", குளிர்ச்சாதனப் பெட்டி போன்றவற்றை அளிப்பதற்குரிய

கோரிக்கைகள், "யூனிசெஃப்"புக்கு அனுப்பப்பட்டுள்ளன. ஆரம்பச் சுகாதார நிலையங்கள் திறம்பட இயங்குவதற்குத் தேவையான எல்லா வசதிகளையும் அளிக்கத் தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

### தாய்-சேய் நல நிலையங்கள்

தாய்-சேய் நலப் பணிகளைத் தங்கள் தங்கள் பகுதிகளில் வளர்ப்பது ஊராட்சி ஒன்றியங்களின் பொறுப்பாகும். இத் திட்டத்திற்காகும் செலவை ஊராட்சி ஒன்றியம் சமாளிக்கும் வகையில், மொத்தச் செலவில் 2/3 பங்கை அரசு உதவி மானியமாகத் தருகிறது. இலட்சம் பேர்களுக்கு மேற்பட்ட மக்கள் தொகையுடைய ஊராட்சி ஒன்றியங்களின் 10-க்கும் மேற்பட்ட தாய்-சேய் நல நிலையங்களைப் படிப்படியாகத் தொடங்கும் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் செயற்படும் தாய்-சேய் நல நிலையங்களின் மொத்த எண்ணிக்கை 2,819 ஆகும்.

### ஊராட்சி ஒன்றிய மருந்தகங்கள்

மருந்தகங்களை நிறுவுவதும், நிர்வகிப்பதும் ஊராட்சி ஒன்றியக் குழுக்களின் பொறுப்பாகும். மருந்தகங்களை நிர்வகிப்பதற்காகும் செலவுகளுக்கு ஊராட்சி ஒன்றியக் குழு நிதி ஒதுக்கீடு செய்கிறது. ஊராட்சி ஒன்றிய மருந்தகங்களை நிர்வகிப்பதற்கு, ஒவ்வொரு மருந்தகத்திற்கும் ரூ. 5,400-ஐ அரசு அளிக்கிறது.

### குடும்ப நலத் திட்டம்

குடும்ப நலத் திட்டவேலைகளை வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்கு ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் பொறுப்பாக்கப்பட்டுள்ளன. திருத்தப்பட்ட குடும்ப நல வேலைத் திட்டத்தின்கீழ் இம் மாநிலத்திலுள்ள 37 வட்டாரங்களும் கொணரப்பட்டுள்ளன. இவ் வட்டாரங்கள் அனைத்திலும் மாவட்ட ஆட்சித் தலைவர்களால் பயிற்சி முகாம்கள் (குடும்ப நலத் திட்டம்) ஒவ்வோராண்டும் நடத்தப்படுகின்றன.

திட்டத்தின்படி, ஊராட்சி ஒன்றிய மருந்தகங்களில் செய்யப்படும் அறுவைச் சிகிச்சை ஒவ்வொன்றிற்கும் ரூ. 30 வீதம் மருந்தகம் அரசிடமிருந்து பெறலாம். ஒன்றியங்களால் ஊக்குவிக்கப்பட்டு, அதன் காரணமாக அனுமதிக்கப்பட்டுள்ள அறுவை சிகிச்சையாளரிடம் அனுப்பப்படும் ஒவ்வோர் அறுவை சிகிச்சைக்கும் ரூ. 10-ஐ ஈட்டு மானியமாக ஒன்றியக் குழுக்கள் பெறலாம். அறுவை சிகிச்சை செய்து கொள்ளச் செல்பவரின் போக்குவரத்துச் செலவிற்கும், ஒன்றியப் பகுதிகளில் குடும்ப நலத் திட்டத்தை விளம்பரப்படுத்துவதில் ஒன்றியத்திற்கு ஏற்படும் செலவிற்குமாகவே இத் தொகை அளிக்கப்படுகிறது. 1974-ம் ஆண்டில் பிறப்புத் தொகை ஆயிரம் பேர்களுக்கு 40 என்பதை 25 எனக் குறைப்பதே குறிக்கோளாகும். வெவ்வேறு பகுதிகளில்



உள்ள மக்கள் தொகை, பிறப்பு விகிதம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டே பல்வேறு நலத்திட்ட முறைகளிலும் திட்ட இலக்குகள் நிர்ணயிக்கப்படுகின்றன.

### மாநில அரசால் பின்பற்றப்படுவதற்குரிய திருத்தியமைக்கப்பட்ட திட்டம்.

கீழ்க்காணும் முறைகளைக் கையாண்டு குடும்ப நலத் திட்ட இலக்கைத் துரிதமாக அடைய வேண்டியுள்ளது :—

(அ) மாவட்டக் குடும்ப நலத் திட்டச் சுகாதார அலுவலர் ஒருவர், அறுவை மருத்துவர் இருவர், மாவட்ட விரிவுப் பணி அறிவு பரப்புநர் ஒருவர் (முன்பு மாவட்டக் குடும்ப நலத் திட்ட அலுவலராயிருந்தவர்), புள்ளி விவர உதவியாளர் போன்றவர்களைக் கொண்ட மாவட்டக் குடும்ப நலத் திட்டப் பிரிவு.

(ஆ) இயங்கும் அறுவைச் சிகிச்சைப் பிரிவும், இயங்கும் மருந்தகப் பிரிவும்.

(இ) ஒவ்வொரு 50,000 பேர்களுக்கு ஒரு நகரக் குடும்ப நலத் திட்டப் பிரிவு ஏற்படுத்த வேண்டுமென்று மைய அரசு யோசனை கூறியதற்கு மாறாக, ஒவ்வொரு மாவட்டத் தலைமை மருத்துவ மனையிலும் பிரிவுகள் துவக்கப்பட்டுள்ளன; மேலும் சென்னை மாநகரில் மூன்று மருத்துவ மனைகளிலும் இப்பிரிவுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

(ஈ) வட்டார நிலையில் கிராமக் குடும்ப நலத் திட்ட நிறுவனத்தை ஏற்படுத்த வேண்டுமென்று மைய அரசு யோசனை கூறியதற்கு மாறாக, வட்டாரத் தலைமையிடம், வட்டார தலைமையிடமில்லாத இடங்களில் 85 கிராமக் குடும்ப நலத் திட்ட நிறுவனங்களை அரசு திறந்துள்ளது. மேலும், 375 ஆரம்பச் சுகாதார நிலையங்களிலும் கிராமக் குடும்ப நலத் திட்டப் பிரிவைத் தொடங்க அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது.

### (இ) சமூகக் கல்வி

1969-70-ஆம் ஆண்டு முதல் சமூகக் கல்வி வேலைத் திட்டங்கள் திருத்தியமைக்கப்பட்டுள்ளன. அவை பின்வருமாறு :—

(1) சமூகக் கல்வி நிலையங்கள்.

(2) வானொலிப் பெட்டிகள்.

(3) தகவல் நிலையங்கள்.

(4) பள்ளி வேலைகள்.

(5) விளைச்சல் போட்டி, பொருட்காட்சி, விழாக் கூட்டங்கள்.

(6) தேசிய நாட்களைக் கொண்டாடுதல்.

(7) பலவன்க.

1971-72-ஆம் ஆண்டிற்குரிய வேலைத் திட்டங்கள் வருமாறு :—

(1) சமூகக் கல்வி நிலையங்கள்.

(2) கிராம நூலகங்கள்.

(3) விளையாட்டுகள்.

(4) தகவல் நிலையங்கள்.

(5) அருகிலுள்ள மாவட்டங்களுக்கு உழவர்கள் சுற்றுலாச் செல்லல்.

தற்போது 12,900 சமூகக் கல்வி நிலையங்கள் உள்ளன. கிராமங்களில் வயது வந்தோர், நடைமுறைத் தகவல்களின் மீது விருப்பப் படி விவாதிக்கும் ஒரு நிலையமாக இவை அமைக்கப்பட்டுள்ளன. ஊரிலேயுள்ள பள்ளி ஆசிரியர்கள் அல்லது இதர கல்வியறிவு பெற்றவர்கள் இதன் அமைப்பாளர்களாக நியமிக்கப்படுகிறார்கள். அவர்கள் செய்தித் தாள்கள், இதழ்கள் ஆகியவற்றைப் படித்து விவாதங்களைத் துவக்கி உதவுகின்றனர்.

ஊராட்சிகளில் வானொலிப் பெட்டிகளை நிறுவும் செய்ல் திறமிக்க திட்டமொன்று தொடர்ந்து செயற்படுத்தப்பட்டதனால், மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட இறுதியில். இம் மாநிலத்திலுள்ள எல்லா ஊராட்சிகளிலும் வானொலிப் பெட்டிகள் நிறுவப்பட்டு விட்டன. ஊராட்சித் தலைமையிடங்கள் அனைத்திலும் வானொலிப் பெட்டிகள் அமைக்கப்பட்டு விட்டதனால், இத்திட்ட வேலைகள் தற்போது ஊர்கள், சிற்றூர்களுக்குக்கூட விரிவாக்கப் படுகின்றன. இதற்கென ஊராட்சி ஒன்றியவாரியாக ஒதுக்கப்பட்டத் தொகையைத் தவிர்த்து 1969-70-ஆம் ஆண்டில் ஊர்கள், சிற்றூர்கள் அனைத்திலும் வானொலிப் பெட்டிகளை நிறுவுவதற்கு அரசு ரூ. 5,17,000 ஒதுக்கியுள்ளது. 1970-71-ஆம் ஆண்டிற்கென மேலும் ரூ. 2.90 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. இவ்வொதுக்கீட்டைப் பயன்படுத்தி சுமார் 2,943 வானொலிப் பெட்டிகள் கூடுதலாக நிறுவப்படும். 1971-72-ஆம் ஆண்டிற்கென மொத்த மானியமாக ரூ. 5·00,000 ஒதுக்கப்பட்டுள்ளது. ஊர்ப் புறங்களில் 5,000 வானொலிப் பெட்டிகளை அமைப்பதற்கு இவ்வொதுக்கீடு செய்யப் பட்டுள்ளது.

ஐந்தாண்டுத் திட்டங்களில் மக்களின் கவனத்தை ஊக்குவிப்பதற்கும், ஆக்கப் பணிகள், திட்டங்கள் ஆகியவற்றிற்கு மக்களின் ஆதரவைப் பெறுவதற்கும் கிராம வானொலி மன்றங்கள் அமைக்கப் பட்டுள்ளன. இந்த மன்றங்கள் நிகழ்ச்சிகளைக் கேட்டு, விவாதிக்கும் குழுக்களாகச் செயற்படுகின்றன. இதுவரை 5,000 கிராம வானொலி மன்றங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அவற்றை ஊக்குவிப்பதற்கென ஒவ்வொரு மாவட்டத்திலுமுள்ள சிறந்த கிராம வானொலி மன்றங்களுக்கு, "டிரான்சிஸ்டர்" வானொலிப் பெட்டிகள், சுழற்கேடயங்கள் ஆகியவை ஆண்டுதோறும் பரிசுகளாக அளிக்கப்படுகின்றன. மாநில அளவிலான சிறந்த கிராம வானொலி மன்றத்திற்கும் சுழற்கேடயம் அளிக்கப்படுகிறது. தவிர, கிராம வானொலி மன்ற



நிகழ்ச்சிகளில் ஒலிப்பரப்பாகும் செய்திகளை உள்ளடக்கும் சிற்றேடொன்று நிகழ்ச்சிகளைத்தாமும் வானொலி மன்ற உறுப்பினர்களின் நன்மைக்கென செய்தி நிலையங்களுக்கு அனுப்பப்படுகிறது.

அரசால் மேற்கொள்ளப்படும் ஆக்கபூர்வமான வளர்ச்சிப் பணிகள் பற்றிய அறிவும் செய்தியும் உட்புறங்களிலுள்ள ஊர்களில் வசிக்கும் மக்களுக்குக் கூட எட்டுதற்கு இச்செயல்கள் மிகவும் துணைசெய்து நாட்டை உருவாக்கும் நற்பணியில் மக்கள் பங்கு பெறவேண்டுமென்ற ஒரு நல்லுணர்வை ஏற்படுத்தியுள்ளது.

### (ஈ) மகளிர், குழந்தைகள் நலம்

ஊர்ப்புறங்கள் அனைத்திலும் மகளிர் மன்றங்கள் ஏற்படுத்தப் பட்டுள்ளன. ஓர் ஊராட்சிக்கு ஒரு மகளிர் மன்றம் வீதம் ஓர் ஊராட்சி ஒன்றியத்திற்குக் குறைந்த எண்ணிக்கையாக 30 மன்றங்கள், 1962-63-ஆம் ஆண்டு தொடக்கம் நிறுவப்பட்டுள்ளன. மனப் போக்கு மாறுதற்குரிய முக்கிய அங்கமாக இம் மன்றங்கள் செயற் படுகின்றன. இம் மன்றங்களில் குடும்ப வளர்ச்சியைக் கட்டுப் படுத்தக் கருத்தடைக் கருவிகளைக் கையாள வேண்டுமென்றும், சிரமமான காலங்களில் உதவுதற்கெனச் சேமிக்க வேண்டுமென்றும் மூட நம்பிக்கைகள், சாதி உணர்வுகள் ஒழிக்கப்பட வேண்டுமென்றும் மகளிர் அறிவுறுத்திப் பின்பற்றச் செய்யப்படுகின்றனர். 2—3 இலட்சம் கிராம மகளிர் பங்கு பெறும் 13,224 மகளிர் மன்றங்கள் உள்ளன. அங்கு மகளிர், முன்னேற்றமான வாழ்க்கை முறையைக் கற்றுப் பின்பற்றப் பழகுகின்றனர். இந்த 13,224 மகளிர் மன்றங்களில் 10,082 மன்றங்களுக்கு 50 சத வீதம் அரசு நன்கொடை மூலம் தையல் இயந்திரங்கள் அளிக்கப்பட்டுள்ளன. 300 மகளிர் மன்றங்களுக்குச் சொந்தக் கட்டடங்கள் உள்ளன. வட்டாரத்திற்கு ஒன்று வீதம் சுமார் 359 மகளிர் கேட்பு மன்றங்கள் நிறுவப்பட்டுள்ளன. ஒவ்வொரு வட்டாரத்திலும் 30 மகளிர் மன்றங்கள் உள்ளன. இம் மன்றங்கட்டு மகளிர், குழந்தைகள் நலத்தைப் பேணுதற்கென ரூ. 4.000 அளிக்கப் படுகிறது.

## 7. சிறப்புத் திட்ட வேலைகள்

### (அ) கிராம ஆள்வலத் திட்டம்

சமுதாயச் சொத்துக்களை உருவாக்கி, அதன்மூலம் வேளாண்மை உற்பத்தியைப் பெருக்குதற்கும், வேளாண்மை வேலையில்லாக் காலங்களில் வேலை வாய்ப்பு அளிப்பதற்கும் கிராமப் பகுதிகளில் கிராம ஆள்வலத் திட்டம் செயற்படுத்தப்படுகிறது. இத் திட்டங்களை நிறைவேற்றும் பொறுப்பு ஊராட்சி ஒன்றியக் குழுக்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. சிறிய நீர்ப்பாசன ஆதாரங்களை விரிவுத்தி செய்தல், சிறிய சாலைகள் அமைத்தல், ஊராட்சிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள நிலங்களைப் பண்படுத்தல், சமுதாயக்

இணறுகளைத் தோண்டுதல், விறகுகளுக்காகப் பயன்படும் மரங்களை வளர்த்தல், சிறிய கழிவு நீர்ப்பாதைகளை அமைத்தல், சிராக்குதல் போன்றவை இராம ஆள்வலத் திட்ட வேலைகளில் அடங்குவனவாகும். இம் மாநிலத்திலுள்ள 374 வட்டாரங்களில், 72 வட்டாரங்களில் இத் திட்டம் செயற்படுகிறது. சுமார் ரூ. 4 இலட்சம் வரை முதலீடு செய்து சுமார் 4 முதல் 5 ஆண்டுகளாக இத் திட்டத்தை மேற்கொண்டு நிறைவேற்றிய வட்டாரங்களை, இத் திட்டத்திலிருந்து நீக்கிவிட்டு, அவ்விடங்களில் பின்தங்கிய வட்டாரங்கள் சேர்க்கப்பட வேண்டுமென்பது தற்போதைய கொள்கையாகும். அதன்மூலம் நன்மைகள் பரவலாகக் கிடைக்க வழி ஏற்படுகிறது. அதற்கேற்ப, 1969-70-ஆம் ஆண்டில் 42 பழைய வட்டாரங்கள் நீக்கப்பட்டு, அவ்விடங்களில் வேறு 42 வட்டாரங்கள் சேர்க்கப்பட்டன. 1970-71-ஆம் ஆண்டில் மேலும் 24 வட்டாரங்கள் நீக்கப்பட்டு, அவ்விடங்களில் 24 புதிய வட்டாரங்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டன. நடப்பாண்டில் ஒரு வட்டாரத்தை நீக்கி, அதற்கு மாறாக இன்னொன்றைச் சேர்த்துக் கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இத் திட்டத்தில் நிதி, திட்டச் சாதனைகள் பற்றிய விவரங்கள் வருமாறு :—

| ஆண்டு. | செய்யப்பட்ட செலவு. (ரூ. இலட்சத்தில்.) | ஏற்படுத்தப்பட்ட வேலை வாய்ப்பு (வேலை நாட்கள் இலட்சத்தில்.) |
|---|---|---|
| 1966–67 .. .. .. .. | 52·43 | 17·26 |
| 1967–68 .. .. .. .. | 40·70 | 15·72 |
| 1968–69 .. .. .. .. | 50·89 | 18·49 |
| 1969–70 .. .. .. .. | 40·65 | 14·94 |
| 1970–71 .. .. .. .. | 50·00 | 16.54 |

1971-72-ஆம் ஆண்டு நிதி நிலை மதிப்பீட்டில் இத் திட்ட வேலைகளுக்கென ரூ. 32.11 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

### (ஆ) சத்துணவுத் திட்டம்

"யூனிசெஃப்" நிறுவனம், மாநில அரசு அதிகாரிகளின் உதவியுடன் 1962-63-ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் முதன்முறையாகச் சத்துணவுத் திட்டம் தொடங்கப்பட்டது நல்ல உடல் நலத்துடன் வாழ, உள்ளூரிலேயே சத்துணவுப் பொருட்களை உற்பத்தி செய்து, அவற்றை உட்கொள்ள வேண்டியதன் அவசியத்தை ஊர் மக்களுக்கு எடுத்துக் கூறுவதே இத் திட்டத்தின் பரந்த நோக்கமாகும். இம் மாநிலத்திலுள்ள 7 ஊர் விரிவாக்கப் பயிற்சி நிலையங்களுடன் இணைக்கப்பட்டுள்ள 7 வட்டாரங்களே இத் திட்டத்தை நிறைவேற்ற முதன் முறையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டன. இவ்



வட்டாரங்களில் இத் திட்டம் வெற்றிகரமாக நடைபெறுவதைக் கண்ணுற்ற பின்னர், சுயதேவைகளை, அவசியம் ஏழும் போதெல்லாம் வேளாண்மை மானியத்தை பயன்படுத்தி நிறைவேற்றிக்கொள்ளக்கூடிய அடிப்படையில் இத் திட்டம் 1968-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1-ஆம் நாள் முதல் இவ்வட்டாரங்களிடமே ஒப்படைக்கப்பட்டன. 1966-67-இல் இரண்டாவது கட்டமாகத் தொடங்கப்பட்ட இரண்டு வட்டாரங்கள் 1971-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31-ஆம் நாளில் ஐந்தாண்டுகளுக்குரிய செயல்களை முடித்துள்ளன. இவ்விரண்டு வட்டாரங்களிலும் புகுத்தப்பட்ட திட்ட வேலைகள், வருங்காலத்தில் நிறைவேற்றப்படுதற்கென ஊராட்சிகளிடமே ஒப்படைக்கப்படும். அவ்வாறே சாத்தூர், அகஸ்தீஸ்வரம், பெரியநாயக்கன்பாளையம் வட்டாரங்களும் அவற்றில் திட்ட வேலைகளை 31—3—1971-இல் முடித்துள்ளன. (இந்த வட்டாரங்களில் சத்துணவுத் திட்டம் தாமதமாகத் துவக்கப்பட்டதால், மேலும் இரண்டு ஆண்டுகளுக்கு நீடிக்குமாறு, இந்திய அரசிற்கு எழுதப் பட்டுள்ளது.)

கீழ்க்கண்ட வட்டாரங்களில் அவற்றிற்கு எதிரே குறித்துள்ள ஆண்டுகள் தொடக்கம். இத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு நிறைவேற்றப்பட்டு வருகிறது :—

| வட்டாரம். | தொடங்கப்பட்ட ஆண்டு. |
|---|---|
| 1 எருமைப்பட்டி (சேலம் மாவட்டம்) .. .. | 1969—70 |
| 2 திருவரங்குளம் (திருச்சிராப்பள்ளி மாவட்டம்) .. | |
| 3 ஆலங்காலயம் (வடஆர்க்காடு மாவட்டம்) .. .. | 1970—71 |
| 4 அறந்தாங்கி (தஞ்சாவூர் மாவட்டம்) .. .. | |
| 5 போகலூர் (இராமநாதபுரம் மாவட்டம்) .. | |
| 6 அரூர் (தர்மபுரி மாவட்டம்) .. .. | |
| 7 கொடைக்கானல் (மதுரை மாவட்டம்) .. | |
| 8 குறிஞ்சிப்பாடி (தென் ஆர்க்காடு மாவட்டம்) .. | |
| 9 மானூர்க் (திருநெல்வேலி மாவட்டம்) .. .. | |
| 10 மோகனூர் (சேலம் மாவட்டம்) .. .. .. | |

சத்துணவுத் திட்டத்தை 1971-72 இல் விரிவாக்க, 5 வட்டாரங்களை இந்திய அரசு, தமிழ்நாட்டிற்கு ஒதுக்கியுள்ளது. 1966-67-ஆம் ஆண்டு தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படும் நான்காம் திட்டச் சத்துணவுத் திட்ட வட்டாரங்கள், வட்டாரம் ஒன்றிற்கு ரூ. 34,000 வீதம் 5 ஆண்டுகளுக்கு அமைய அரசின் சிறப்பு உதவியைப் பெறும். இத்தோடு கூட மாநில அரசின் நன்கொடை ரூ. 51,000, யூனிசெஃப் உதவி ஆகியவையும் சேரும்.

நடப்பாண்டிற்கு (1971-72) சத்துணவுத் திட்டத்திற்கென வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்ட தொகை ரூ. 11.03 இலட்சமாகும்.

### (இ) கிராமத் தொழில்கள் திட்டம்

கிராமப் புறங்களில், கிராமத் தொழில்கள், சிறிய தொழில்கள் வளர்ச்சியடைதற்கு ஊக்கமளிப்பதற்கெனவே, ஸ்ரீபெரும்புதூர், ஓமலூர், நான்குனேரி ஆகிய இடங்களில் கிராமத் தொழில்கள் திட்டங்கள் நிறுவப்பட்டுள்ளன. வேலை வாய்ப்பின்மை அதிகமாக உள்ள பகுதிகளைத் தெரிந்தெடுத்து, அங்குக் கிராமத் தொழில்களையும் சிறுகத் தொழில்களையும் தீவிரப்படுத்துவதற்காக தொழில் நுணுக்கங்களையும் முறைகளையும் உருவாக்கி, அவற்றைக் கையாண்டு போதிய அனுபவம் அடைவதே கிராமத் தொழில்கள் திட்டங்களின் நோக்கமாகும். உள்ளூர் கைவினைஞர்களுக்கும், உழவர்களுக்கும் தொழில் செய்வதற்கான வசதிகளை அளிப்பதற்காகப் பொது வசதிப் பணி நிலையங்கள் நடத்துதல், உள்ளூர் மக்களின் தேவையை யொட்டிப் பொருள்களைத் தயாரிப்பதற்காக அரசுத் துறையினால் கண்காணிக்கப்படும் உற்பத்திப் பிரிவுகளை அமைத்தல் ஆகியன இவற்றின் தொடக்க காலப் பணிகளாம். எதற்காக இவை தோற்றுவிக்கப்பட்டனவோ, அப் பணிகளை இவை செய்து முடித்துவிட்டதனால், அரசுக் கண்காணிப்பிலுள்ள 16 பொது வசதிப் பணி நிலையங்களை வாடகை விற்பனை அடிப்படையில் தனியார்களுக்கு அளிப்பதென்று அரசு முடிவு செய்து, அதற்கென்று "டெண்டர்களை"க் கோரும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. கூடுதல் தொகை வந்து ஐந்து நிலையங்கள் விற்பனை செய்யப்படுகின்றன. பொது வசதிப் பொறியியல் பட்டறையில் அளிக்கப்பட்டு வரும் பயிற்சி தவிர, மாநிலத்திலுள்ள ஏனைய எல்லா பயிற்சிப் பிரிவுகளும் மூடப்பட்டு விட்டன. கிராமத் தொழில்கள் திட்ட "ஏஜென்சி"களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டு, சமுதாய வளர்ச்சித் திட்டத்திலுள்ள கிராமக் கலை, கைவினைப் பொருள்கள், தொழில் திட்டத்திலுள்ள நிதிகளைப் பயன்படுத்தி, ஸ்ரீபெரும்புதூர்த் திட்டப் பகுதியில் இரண்டும், ஓமலூர் பகுதியில் இரண்டும், நான்குனேரியில் ஒன்றுமாக ஐந்து கிராமத் தொழிற் பேட்டைகளைத் தொடங்க அரசு அனுமதி அளித்துள்ளது. தனியார்கள் தொழில்களைத் தொடங்குதற்குப் போதிய வசதிகளை அளிப்பதற்கே இவை நிறுவப்படுகின்றன. திட்ட அலுவலர்களின் நெருங்கிய ஒத்துழைப்புடன், திட்டப் பகுதியிலுள்ள ஒவ்வொரு சிறுகப் பிரிவிற்கும் கூடுதலாக ரூ. 5,000 தளர்த்தப்பட்ட விதிகளின் கீழ் "ஸ்டேட் பாங்க் ஆஃப் இந்தியா" வினால் இந்திய அரசு வாயிலாக நிதியுதவியளிக்கும் ஒரு திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. பிப்ரவரி 1970-இல் இத் திட்டம் தொடங்கப்பெற்றது. டிசம்பர் 1970 வரை 238 பிரிவுகளுக்கு ரூ. 7,13,565 வரை நிதியுதவியளிக்கப்பட்டுள்ளது. இத் திட்டத்தில் அளிக்கக்கூடிய உதவித் தொகையை ரூ. 5,000-லிருந்து ரூ.15,000-க்கு உயர்த்தும் ஒரு யோசனை இந்திய அரசின் பரிசீலனையிலுள்ளது. இத் திட்டங்களுக்குக் கூடுதலாக நிதி ஒதுக்க வேண்டுமென்று இந்திய அரசை அணுகப்பட்டுள்ளது. இப்போது செயற்படும் மூன்று திட்டங்களையும் மாவட்ட முழுவதற்கும்





விரிவாக்கி 1—4—1974 முதல் தொடங்கும் ஐந்தாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் மேலும் இரண்டு கிராமத் திட்டங்களுக்கு அனுமதி வழங்க இருப்பதாக இந்திய அரசு தெரிவித்துள்ளது.

### (ஈ) குழந்தைகள் நலன் ஒருங்கிணைப்புத் திட்டம்.

குழந்தைகள் நலனிலுள்ள எல்லா அம்சங்களையும் தழுவி, குழந்தைகள் அனைவருக்கும்—சிறப்பாக 0 முதல் 16 வயது வரையிலான குழந்தைகள் (மகப்பேறுக்கு முந்தைய காலம் உட்பட) நன்மை பயக்கும் ஒரு செயல் விளக்கத் திட்டம் இம் மாநிலத்திலுள்ள பூவிருந்தவல்லி வட்டாரத்தில் தொடங்கப்பட்டுள்ளது. முழு உதவி அடிப்படையில் இத் திட்டத்தை இந்திய அரசு ஊக்குவித்துள்ளது. தானே முன்வந்து பணியாற்றும் கிராம நிறுவனங்களும், உள்ளாட்சிகளும் நல்கும் மனமுவந்த ஒத்துழைப்பு, அயராத தொண்டுள்ளத்தின் கூட்டுறவுடன், குறைந்த செலவில் குழந்தைகளுக்கு நிறைந்த பயன் அளிக்க முடியும் என்பதே இத் திட்டத்தின் கருத்தாகும். இத் திட்டத்தில் 50 குழந்தைகள் காப்பகங்கள், 10 குழந்தைகள் ஓய்வு நிலையங்கள், மற்றும் 2 மகப்பேறு மருத்துவ நிலையங்கள் இருக்கும். இத் திட்டத்திற்கு 1968-இல் ஏற்பட்ட செலவுகள் அனைத்தும் மாநில அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. 1971-72-ஆம் ஆண்டு நிதி நிலை மதிப்பீட்டில் ரூ. 2.70 இலட்சம் இதற்கென ஒதுக்கப்பட்டுள்ளது.

### (உ) பழங்குடி மக்கள் வளர்ச்சி வட்டாரங்கள்

சேலம் மாவட்டத்தில் கொல்லிமலையில் ஒன்றும், ஏர்க்காட்டில் ஒன்றுமாக இரண்டு பழங்குடி மக்கள் வளர்ச்சி வட்டாரங்கள் செயற்படுகின்றன. இந்த வட்டாரங்களில் செயற்படுத்தப்படும் திட்டங்கள் அனைத்தும் பழங்குடி மக்களின் நல்வாழ்விற்காகவே நடத்தப்படுவனவாகும். "போக்குவரத்து", "குடி நீர் வழங்கல்" ஆகிய ஈரம்சங்களையொட்டி இப்பகுதித் தேவைகள் விரிவான முறையில் மதிப்பிடப்பட்டுள்ளன. பழங்குடி மக்களின் நல்வாழ்விற்காகச் செய்யப்படும் பணிகளுக்கு நன்கொடைகள் ஏதும் திரட்டப்படுவதில்லை. வேளாண்மை, கால்நடை வளர்ச்சி, கிராமக் கலை, கைவினைப் பொருள்கள், கல்வி ஆகிய பிரிவுகளின்கீழ்ச் செய்யப்படும் பணிகள் உள்ளூர் நிலைமைகளுக்கேற்ற வகையில் திருத்தியமைக்கப்பட்டுள்ளன. 1971-72-ஆம் ஆண்டு நிதி நிலை மதிப்பீட்டில் ரூ. 12.91 இலட்சம் இதற்கென ஒதுக்கப்பட்டுள்ளது.

### (ஊ) கிராமப் பணிகள் சிறப்பு வேலைத் திட்டம்

கிராமப் புறங்களில் வேலை வாய்ப்பின்மையை ஒழிப்பதற்காக, கிராமப் பணிகள் சிறப்பு வேலைத் திட்டம் என்ற ஒரு புதிய வேலைத் திட்டத்தை அரசு மேற்கொண்டுள்ளது. இணைப்புச் சாலைகள் அமைத்தல், மகப்பேறு நிலையங்கள், தொடக்கப்பள்ளி, உயர் தொடக்கப் பள்ளிகளுக்குக் கட்டடங்கள் கட்டுதல், குடிநீர் வழங்கும் பணிகளை நிறைவேற்றுதல் ஆகிய பணிகள் இதில் அடங்கும்.

இக் காரியங்களுக்காக, 1970-71-ஆம் ஆண்டு நிதி நிலை மதிப்பீட்டில் ரூ. 100 இலட்சம் ஒதுக்கப்பட்டது. இத் தொகையில் 25 சதவீதம் அரிசனக் குடியிருப்புகளில் உள்ள வேலைகளுக்கென நன்கொடைத் தொகை செலுத்தவேண்டிய அவசியமின்றி ஒதுக்கப்பட்டது. உள்ளூர்த் தேவைகளைக் கருத்திற்கொண்டு, பல்வேறு வட்டாரங் களிடையே பகிர்ந்தளிப்பதற்காக, 1970-71-இல் ஒதுக்கப்பட்ட நிதி, மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அளிக்கப்பட்டது. குடிநீர் வழங்கும் பணிகளுக்காக வசூலிக்கப்படும் நன்கொடைத் தொகை 25 சதவீதமாகும். எஞ்சியுள்ள 75 சத விதம் கிராமப் பணிகள் சிறப்பு வேலைத் திட்டத்திலுள்ள நிதிகளிலிருந்து செலவிடப்படும். இணைப்புச் சாலைகளுக்கென ஏ, பி, சி, டி ஆகிய வட்டாரங்களி லிருந்து முறையே 50 சதவிகிதம், 40 சதவிகிதம், 30 சதவிகிதம், 20 சதவிகிதம் நன்கொடைத் தொகை வசூலிக்கப்படுகிறது. பள்ளிக் கட்டடங்கள் கட்ட, தொடக்கப் பள்ளிக்கு ரூ. 4,000-உம் உயர் தொடக்கப் பள்ளிக்கு ரூ. 6,000-உம் குறைந்த அளவு நன்கொடைத் தொகையாக இருக்க வேண்டும். மகப்பேறு நிலையங்களுக்கு 33-1/3 சதவிகிதம் நன்கொடை விகிதமாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இத் திட்டத்திற்கு நடப்பாண்டு நிதி நிலை மதிப்பீட்டில் ரூ. 100 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

**8. "கேர்" நிறுவனத்தின் உதவியுடன் முந்நிலைப் பள்ளிக் குழந்தைகட்கு உணவளித்தலும் குழந்தைகள் காப்பகங்கள் கட்டுதலும்.**

### குழந்தைகள் காப்பகங்கள்

மாநிலத்திலுள்ள 47 வட்டாரங்களில், 1,000 குழந்தைகள் காப்ப கங்கள் உள்ளன. காப்பகம் ஒவ்வொன்றிலும் முந்நிலைப்பள்ளிக் குழந்தைகள் (3-5 வயதுள்ள), கருவுற்ற, பாலூட்டும் தாய்மார்கள் கொண்ட 120 பேர்களுக்கு நாள்தோறும் உணவளிக்கப்படுகிறது. இதனால் நாளொன்றுக்கு 1,20,000 பேர் பலன் பெறுகின்றனர். "கேர்" நிறுவன ஒத்துழைப்புடன் இத் திட்டம் செயற்படுத்தப் படுகிறது. புரதமும் இதர சத்துக்களும் அடங்கியுள்ள உணவுகள் போதிய அளவில் குழந்தைகட்குக் கிடைக்காததன் காரணமாக அவர்களுக்கு உடல் நலக் குறைவுடன் நரம்புத் தளர்ச்சியும் ஏற்பட்டு, பிற்காலத்தில் அவர்களின் அறிவு வளர்ச்சி பெரிதும் பாதிக்கப்படுகிறது. இதைத் தடுப்பதற்கெனவே ஆண்டில் 300 நாட் களுக்குக் குழந்தைகள் காப்பகங்களில் உணவளிக்கப்படுகிறது.

மொத்தமுள்ள 1,000 குழந்தைகள் காப்பகங்களில் 515 உண வளிக்கும் நிலையங்கள், நிலையம் ஒவ்வொன்றிலும் 40 பேர் பய னடையும் வகையில், 38 வட்டாரங்களில் 1971-ஆம் ஆண்டு சனவரி பொங்கல் நன்னாளில் திறக்கப்பட்டன. 1971-ஆம் ஆண்டு மார்ச் முதற்கொண்டு இவ்வெண்ணிக்கை 120 ஆக உயர்த்தப்பெற்றது. ஒவ்வொரு நிலையத்திலும் 40 பேர் பயன்பெறக்கூடிய முறையில் மேலும் 292 நிலையங்கள் 1971 ஏப்ரல் தமிழ்ப் புத்தாண்டு நாளன்று திறக்கப்பட்டன. இன்னும் இரண்டு திங்களில் இங்கும் 120 பேர்,



27th July 1971]

நிலையமொன்றுக்குப் பயனடைவரென்று எதிர்பார்க்கப்படுகிறது. ஏற்படுத்த எண்ணிய 1,000 நிலையங்களில் இன்னும் எஞ்சியுள்ள 193 நிலையங்களும் அண்ணல் காந்தியடிகள் பிறந்த நாளில் (1971-ஆம் ஆண்டு அக்டோபர் 2-ஆம் நாள்) துவக்கப்படும். சத்துள்ள உணவுப் பொருட்களை ஐந்தாண்டுக் காலத்திற்கு ரூ. 87.50 இலட்ச செலவில் தருவதற்குக் "கேர்" நிறுவனம் இசைந்துள்ளது. கட்டடத்திற்குரிய நிலங்கள் பெரும்பாலும், மக்களால் நனகொடையாகத் தரப்படுகின்றது.

Government of India have allotted 5 blocks to Tamil Nadu for extension of Applied Nutrition Programme during the year 1971–72. The Fourth Plan Applied Nutrition Programme Blocks, i.e., the blocks to which this programme was extended from the years 1966–67 were earning special central assistance every year for 5 years at the rate of Rs. 34,000 per block, in addition to State contribution of Rs. 51,000 and UNICEF assistance.

The Budget provision for the Applied Nutrition Programme Scheme for the current year (1971–72) is Rs. 11.03 lakhs.

(c) Rural Industries Projects.

The Rural Industries Projects which are designed to encourage the growth of village and small industries in the rural areas are located in Sriperumbudur, Omalur and Nanguneri. These projects aimed at evolving effective techniques and methods for the programme of intensive development of village and small industries in selected areas with high incidence of unemployment and also to gain experience in adopting these techniques and methods under different sets of conditions. During the early stages the three projects in Tamil Nadu took up intensive schemes like running training centres to train local people in various trades to enable them to be self employed or to equip themselves better for getting employment opening common facility service centres to provide service facilities to local artisans and agriculturists; and setting up departmental and production units to produce articles of local demand. As these centres have completed the purpose for which they were started the Government have decided that the 16 common facility centres now operated departmentally may be handed over to private entrepreneurs on lease-*cum*-sale basis and with this end in view action has been initiated calling for tenders. Five centres for which highest offers were received are being disposed of. All the training units in the State have been closed down except the inplant training given in the general purpose engineering workshops. The Government have sanctioned the starting of five rural industrial estates, two in the Sriperumbudur project area, two in Omalur project area and one in Nanguneri project area with the funds available under the Rural Arts Crafts and Industries Programme of the Community Development Programme in close liasion with the Rural Industries Projects agencies. This is intended to provide adequate facilities to private entrepreneurs to set up industries. Through the Government of India a scheme for grant of financial aid on liberalised terms up to a maximum of Rs. 5,000 to each small scale unit in the project area by the State Bank of India in close co-operation with the project officers has been evolved. The scheme was started during February 1970 and up to December 1970 financial aid to the tune of Rs. 7,13,565 has been given to 238 units. There is a proposal under the consideration of the Government of India to enhance the upper limit of loan under the scheme from Rs. 5,000 to Rs. 15,000. The Government of India have been approached for additional allotment of funds for the projects. The Government of India have since intimated their decision to extend the areas of operation of the existing three projects now in operation to the entire districts and also to allot two new Rural Industries Projects for implementation during the Fifth Five Year Plan commencing from 1st April 1974.



(d) Integrated Child Welfare Projects.

A Demonstration Project with the object of covering all aspects of child welfare for all the children with special emphasis on the age group 0 to 16 (including Antenatal care for children) has been launched in the Poonamallee block of this State. The Government of India has sponsored the scheme on the basis of full assistance. The idea behind this project is that with limited resources better results can be achieved in the field of child welfare with the willing co-operation and active participation of voluntary village agencies and local institutions. In this Project there are 50 Kuzhanthaigal Kappagams, 10 Creches and 2 Maternity Centres attached to this project. The entire expenditure on this project from the year 1968 is met by the State Government. A provision of Rs. 2.70 lakhs has been made in the Budget Estimate for 1971–72.

(e) Tribal Development Blocks.

Two Tribal Development Blocks are functioning in this State one at Kolli Hills and the other at Yercaud in Salem district. The schemes implemented in these areas are for the welfare of the tribals. The requirements of the areas have been assessed on a comprehensive scale with reference to "Communication" and "Drinking Water-supply". No contribution is collected from the tribals for the works executed for them. The Programmes under Agriculture, Animal Husbandry, Rural Arts and Crafts and Education have been modified to suit the local conditions. A sum of Rs. 12.91 lakhs has been provided in the Budget Estimate, 1971–72.

(f) Special Rural Works Programme.

The Government launched a new programme during 1970–71 for combating the lack of employment opportunities in the rural areas through a Special Rural Works Programme for the provision of link roads, construction of buildings to maternity centres, and Elementary and Higher Elementary schools and execution of water-supply works. In the Budget Estimate, 1970–71 a sum of Rs. 100 lakhs was provided for this purpose. Out of this allotment 25 per cent was earmarked for taking up works in Harijan habitations without collecting any contribution. The allotment made in 1970–71 was distributed to the Collectors for allocation among the various blocks according to local requirements. The contribution to be collected for water-supply works was fixed at 25 per cent. The balance of 75 per cent is to be made from the funds provided under Special Rural Works Programme. A contribution of 50 per cent, 40 per cent, 30 per cent and 20 per cent respectively is being collected from 'A', 'B', 'C' and 'D' classes of Blocks for link roads. The contribution for School Buildings should be a minimum of Rs. 4,000 and Rs. 6,000 in respect of elementary and higher elementary school buildings respecetively.

[27th July 1971

Madras City, intensive training for 985 volunteers has been conducted. The training for 50 Prosperity Brigade Volunteers at Block level for all the Blocks has also been conducted.

With the financial assistance from the Government of India, training camps were conducted in the Rural Extension Training Centres for 356 Prosperity Brigade Volunteers in 10 batches for a period of 12 days for each batch on the improved methods of Agriculture and Animal Husbandry and also in Village leadership.

The scheme of supplying nutritive food to all poor children in the slum areas of Madras City is being attended to by 400 Prosperity Brigade Volunteers. About 40,000 children are being benefited by this scheme.

## 10. CRASH SCHEME FOR RURAL EMPLOYMENT.

The Government of India have drawn up a Scheme entitled "Crash Scheme for Rural Employment" with a view to provide employment opportunities for at least 1,000 unemployed persons in each district of the State. The scheme has been designed to generate additional employment through a net-work of rural projects of various kinds which are both labour-intensive and productive. The illustrative list of works that can be taken up as indicated by Government of India is shown below :—

(*a*) Rural infrastructure including roads works on Master Plan basis;

(*b*) Land reclamation and development of Panchayat lands, etc.;

(*c*) Drainage, embankments, etc.;

(*d*) Water conservation-*cum*-ground-water recharging works, etc.;

(*e*) Minor irrigation works like construction and restoration of storage tanks, etc.;

(*f*) Soil conservation or afforestation schemes requiring manual labour.

The scheme itself aims at employment of personnel with a wage not exceeding Rs. 100 a month with a continuous employment to the extent possible, for at least 300 days in a year. This is a 100 per cent centrally assisted scheme and is expected to cover the three remaining years of the Fourth Plan period. The Government of India have taken the district as a unit for the operation of the scheme and have provided an outlay of Rs. 12.50 lakhs per year per district. Out of the sum of Rs. 12.50 lakhs provided, a sum of Rs. 10.00 lakhs has been proposed for the labour component and Rs. 2.50 lakhs for material and equipment. After completion of works, the projects are to be maintained by the State Government.



27th July 1971]

While this Government are pressing the Government of India to distribute the amounts based on the number of blocks rather than on the basis of number of districts, it has been decided to allocate Rs. 1 crore from State Funds so that 10 more Blocks may be taken up in each district under this Programme. Thus the Scheme will be extended to 10 more Blocks in each district except the districts of Kanyakumari and Nilgiris. In the Nilgiris and Kanyakumari districts the Programme is implemented in all the Blocks.

## 11. PROSPECTS FOR THE COMING YEARS.

Though some re-organisation of administrative machinery has been attempted, the need to strengthen the organisation of the Panchayat Development Administration has been felt necessary. The Government have therefore decided to refer the question of re-organisation of the Department to the State Administrative Reforms Commission.

A comprehensive examination of Tamil Nadu Panchayats Act, 1958 has been taken up with a view to remove the anomalies in the working of the Act. A finalised Bill will be prepared and introduced in the Legislature in due course.

The financial procedure now followed for the release of various grants to the Panchayat Unions for Elementary Education will be revised based on the recommendations of the Panchayat Education Finance Enquiry Committee.

The newly formulated "Crash Scheme for Rural Employment" is expected to relieve to some extent the unemployment problem in the State. The Scheme has been designed in such a way to generate additional employment through a net work of rural projects of various kinds which are both labour intensive and productive. It is hoped that this Scheme will create community assets for the welfare of the rural folk, and lay the foundations for greater efforts in this direction.

With the strengthening of the Prosperity Brigade Volunteer Service and the Special Rural Works Programme coupled with intensive rural electrification, it is expected that the coverage of all Panchayats with basic amenities paving the way for a faster rate of growth of the rural economy in Tamil Nadu, is well within sight.

The most enduring achievement of the Community Development Organisation is that it has thus brought Government and the people closer in a concentrated endeavour for integrated development of the rural areas, and has helped to evoke the enthusiasm and channelise the energies of the people that had not been hitherto fully tapped.

# THE TAMIL NADU LEGISLATIVE COUNCIL.

***Wednesday, the 28th July 1971.***

**The House met in the Council Chamber, Fort St. George, at four of the clock. Mr. Chairman (THE HON. THIRU C. P. CHITRARASU) in the Chair.**

## I. QUESTION AND ANSWERS—STARRED QUESTIONS.

### *Stadium*

@ *211 *Q.*—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether there is any proposal with the District Sports Council to construct a stadium at Thanjavur; and

**(*b*) if so, the stage at which the matter now stands ?**

### விளையாட்டு அரங்கம்

**திரு. ஜி. சுவாமிநாதன் :** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தஞ்சாவூரில் விளையாட்டு அரங்கம் ஒன்றைக் கட்டும் செயற்குறிப்பு ஏதேனும் மேற்படி மாவட்ட விளையாட்டுக் குழுவிடம் உள்ளதா ?

(இ) ஆமெனில், அது எந்நிலையில் உள்ளது ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** (அ) ஆம்.

(இ) வரைபடமும், மதிப்பீடும் தயாராகி உள்ளன. விளையாட்டு அரங்கம் அமைப்பதற்கு ஏற்ற நிலம் தேர்ந்தெடுக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** எந்தெந்த மாவட்டங்களிலே இந்த விளையாட்டு அரங்கம் இதுவரையில் கட்டப்பட்டிருக்கின்றது என்பதையும் தஞ்சையிலே பல ஆண்டுகளாக அது கட்டப்படாமல் இருப்பதற்கு என்ன காரணம் என்பதையும் அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, வேலூர், மதுரை, திருச்சி போன்ற மாவட்ட தலைநகரங்களிலே கட்டப்பட்டிருக்கின்றன. கோயமுத்தூர், காஞ்சிபுரம் ஆகிய இடங்களில் அமைக்கப்பட இருக்கின்றன. ஊட்டியிலும் கட்டப்பட இருக்கிறது. தஞ்சையில் கட்டுவதில் சில நிலைமைகள் இருக்கின்றன. ராஜா சரபோஜி கல்லூரிக்கு அருகில் 20 ஏக்கர் நிலம் தருவதென்று முதலில் சொல்லப்பட்டது. பிறகு அதற்கான குழுவினர் நகர்ப்புறத்திற்கு வெகு தொலைவில் அது இருப்பதால் நகரத்திற்குள் அதை அமைக்க வேண்டுமென்று முயற்சிகள் எடுத்து ஜூனியர் அப்ஸுவ்டு ஸ்கூலுக்குப் பின்புறம் இடத்தைப் பெறலாம்

@ Postponed from the list of questions for 24th July 1971.

என்று சொன்னார்கள். ஜூனியர் அப்ரூவ்டு ஸ்கூலுக்குப் பின் புறம் உள்ள நிலம், அங்குள்ள பணியாளர்களுக்கான இடம் ஆகிய வற்றில் மொத்தம் 16 ஏக்கர் 27,440 சதுர அடி நிலப்பரப்புதான் இருக்கிறது. மேற்கொண்டு தேவைபடுகிற அளவுக்கு கல்வித் துறைக்குச் சொந்தமான 4 ஏக்கர் 15,125 சதுர அடி பரப்பும், சிறைச்சாலைக்குச் சொந்தமாக இருக்கிற 2 ஏக்கர் 8,693 சதுர அடி பரப்புமுள்ள இடங்கள் கேட்கப்பட்டிருக்கின்றன. அவையிரண்டும் தங்களுக்கே வரவேண்டுமென்று அவர்கள் வலியுறுத்துகிறார்கள். இந்த நிலையில் மாவட்ட விளையாட்டுக் கழகம் அதுபற்றி ஆராய்ந்து வருகிறது. 16 ஏக்கர் போதுமா, மேலும் விரிவுபடுத்தும் முயற்சியை மேற்கொள்ளலாமா என்ற அளவில் இப்போது நிற்கிறது.

MR. CHAIRMAN : Questions 212 and 213 will be taken up together.

***Employees of the erstwhile District Board Schools***

@ *212 Q.—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(a) whether it is a fact that the South India Teachers' Union has urged the Government to take early steps to integrate employees of the erstwhile District Board Schools with the Government staff; and

(b) if so, the stage at which the matter now stands?

**முன்னாள் மாவட்ட வாரியப் பள்ளிகளின் பணியாளர்கள்**

**திரு. ஜி. சுவாமிநாதன் :** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) முன்னாள் மாவட்டவாரியப் பள்ளிகளின் பணியாளர்களை அரசுப் பணியாளர்களுடன் ஒருங்கிணைப்பதற்குரிய நடவடிக்கைகளை விரைந்து எடுக்குமாறு தென்னிந்திய ஆசிரியர்கள் கழகம் அரசை வற்புறுத்தியுள்ளது உண்மையா ?

(இ) ஆம் எனில், அது தற்பொழுது எந்த நிலையில் உள்ளது ?

**மாண்புமிகு திரு இரா. நெடுஞ்செழியன் :** (அ) ஆம்.

(இ) முன்னாள் மாவட்ட கழகப் பள்ளி அலுவலர்களை அரசுப் பணியில் 1-4-1970 முதல் சேர்த்துக் கொள்வதற்கான உத்தரவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

@ *213. Q.—THIRU R. KRISHNASWAMY NAIDU : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state with reference to the answer given to Legislative Council Question No. 100 on 23rd June 1967—

(a) whether any rules have been formulated for regulating the service conditions of teachers and others working in District Board High Schools after the Government of Tamil Nadu have taken over all these high schools from 1st April 1966 ; and

@ Postponed from the list of questions for 24th July 1971.



(b) whether the former District Board High School teachers and Government High School teachers are given identical scale of pay ?

**திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு :** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் 23-6-1967-ம் தேதியன்று 100-ம் எண் வினாவிற்கு அளித்த விடையைபோட்டி கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1-4-1966 முதல் மாவட்ட கழக உயர்நிலைப் பள்ளிகளை தமிழ்நாடு அரசு மேற்கொண்ட பிறகு அவற்றில் பணிபுரியும் ஆசிரியர்கள் மற்றும் ஏனையோர்களுடைய பணி நிபந்தனைகள் குறித்து விதிகள் வகுக்கப்பட்டு விட்டனவா ?

(இ) முன்னாள் கழக உயர்நிலைப்பள்ளி ஆசிரியர்களுக்கும் அரசாங்க உயர்நிலைப்பள்ளி ஆசிரியர்களுக்கும் ஒரே மாதிரியாக சம்பள விகிதங்கள் அளிக்கப்படுகின்றனவா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** (அ) முன்னாள் கழகப் பள்ளிகளில் பணி புரிந்தவர்களை அரசுப் பணியில் 1-4-1970 முதல் சேர்க்கவும், அவர்களுக்கென தனி பணிமுறை ஏற்படுத்தவும், 1970-ம் ஆண்டு மே திங்களில் அரசு ஆணை வெளியிடப்பட்டிருக்கிறது. அவர்களின் பணி நிபந்தனைகள் குறித்து விதிகள் வகுக்க பள்ளிக் கல்வி இயக்குநரின் பரிந்துரைகள் வந்ததும் விதிகள் வகுக்கப்படும்.

(இ) ஆம்.

**திரு. வி. சண்முகசுந்தரம் :** தலைவர் அவர்களே, இதிலே மாவட்டக் கல்வி அதிகாரிகளாக மாவட்டக் கழகப் பள்ளிகளில் பணி செய்தவர்களை நியமிப்பதில் சமவாய்ப்பு அளிக்கப்படவில்லை இதுவரையிலும். அதுபற்றி அரசு விசாரித்து மாவட்டக் கழகப் பள்ளிகளில் பணியாற்றியவர்களை மாவட்டக் கல்வி அதிகாரிகளாக நியமிப்பதில் சமவாய்ப்பு அளித்து அரசினர் உயர்நிலைப் பள்ளிகளில் பணி செய்கிற ஆசிரியர்களுக்கு அளிக்கப்படும் அளவுக்கு நிலைமையை ஏற்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** மாவட்டக் கல்வி அதிகாரியாக வருவதற்கு சில டெஸ்டுகள் பாஸ் செய்ய வேண்டியிருக்கிறது. அந்த வகையில் அக்கவுண்ட் டெஸ்ட் முதலானவை இருக்கின்றன. அதில் தேறியிருந்தால், அதைப்பற்றித் தனியாகக் கவனிக்க வேண்டும். அரசுத் துறையில்கூட எல்லோரையும் எடுத்துக்கொள்கிற நிலைமை இல்லை. யார் "பாஸ்" செய்கிறார்களோ அவர்களைத்தான் எடுக்கின்ற நிலைமை இருக்கிறது. அது தனியாக ஆராயப்படுகிறது. அவர்களும் கேட்கிறார்கள் இந்தத் துறைக்கு வந்துவிட வேண்டுமென்று. அதற்கான முறைகளை மேற் கொண்டால் அதற்கு முயற்சி செய்யலாம். அவை தனியாக பரிசீலிக்கப்படுகின்றன. சங்கடங்கள் ஏற்படாத நிலைமை வந்தால், அதைப்பற்றிக் கவனிக்கலாம்.

**திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு:** தம்முடைய மாநிலத்தில் [illegible]

[28th July 1971

ஏற்றுக்கொள்ளப்பட்டு 1,200 பள்ளிகள் இப்போது இருப்பதாக அறிகிறேன். அரசினர் உயர்நிலைப் பள்ளிகள் எனை 120 பள்ளிகள்தான் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. இத்தனை அதிக எண்ணிக்கையுள்ள உயர்நிலைப் பள்ளியில் பணிபுரிகிறவர்களுக்கு அரசினர் உயர் நிலைப் பள்ளியில் வேலை செய்கிறவர்களுக்குச் சமமாக எல்லாவிதமான வாய்ப்புகளும் கொடுக்கிற நிலைமையில் லாமல் இருக்கிறது. அதற்கான விதிகள் வகுக்கப்படவில்லை என்று நான் அமைச்சர் அவர்களின் பதிலிலிருந்து அறிகிறேன். அதற்கான ஏற்பாடுகளை இன்னும் காலம் தாழ்த்தாமல் செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, அரசுத் துறையில் பணியாற்றுகிற ஆசிரியர்களையும் கழக உயர் நிலைப்பள்ளி ஆசிரியர்களையும் ஒன்றாக இணைப்பதில் பல சங்கடங் கள் வந்தன. அரசினர் துறையில் பள்ளிகளின் எண்ணிக்கை குறைவாக இருந்ததால், அதில் பணியாற்றுகிறவர்களுக்கு "புரமோஷன்" மிகக் குறைவாக இருந்தது. பத்து, பதினைந்து ஆண்டுகள் அசிஸ்டெண்டாகவே இருந்தவர்களும் உண்டு. கழகப் பள்ளிகள் அதிகமாக ஏற்பட்டதன் காரணமாக, அதில் பணியாற்றியவர்கள் குறைந்த காலத்தில் தலைமையாசிரியர்களாக ஆனவர்களும் உண்டு. இரண்டு பேரையும் ஒன்றாக்குவதன் மூலம் அரசினர் பள்ளியில் பணி புரிகிறவர்கள் பலர் தலைமையாசிரியர் களாகவும் தலைமை ஆசிரியர்களாகப் பணியாற்றுகிறவர்களை இறக்க வேண்டிய நிலைமையும் ஏற்பட்டதால், பிறகு இரண்டையும் தனித்தனியாக வைத்து சலுகைகள் மற்றவைகள் பொதுவாகக் கொடுக்கப்பட்டன. ஏ பிரிவு, பி பிரிவு என்று பிரித்து வைத்து இதுவரையில் பி பிரிவுகளாகக் கொள்கிற கழக உயர்நிலைப் பள்ளியைச் சேர்ந்தவர்கள் பாதிக்கப்படாத அளவுக்கு தனியாகக் கொண்டுவந்து சலுகைகளை இருவருக்கும் ஒத்ததாக்கி வைக்கப் பட்டது. 1970-ம் வருஷம் ஏப்ரல் மாதம் 1-ந் தேதியிலிருந்து இரு சாராரையும் கூப்பிட்டுப் பேசி ஒரு முடிவு எடுக்கப்பட்டது. அதன்படி முன்னுள் மாவட்டக் கழகப் பள்ளி ஆசிரியர்கள் 1970-ம் வருஷம் ஏப்ரல் மாதம் 1-ம் தேதி முதல் அரசுப் பணியில் சேர்க்கப்படுவார்கள். இந்தத் தேதியில் ஒவ்வொரு அரசு (கழக) உயர்நிலைப் பள்ளியிலும் உள்ள பணி நிலைகளை அந்தந்தப் பள்ளிகளில் நிரந்தர ஊழியர் எண்ணிக்கையாகக் (Permanent strength) கருதி இதற்காக ஒவ்வொரு வருவாய் மாவட்டமும் (Revenue district) ஒரு அடிப்படையாக (யூனிட்) கணக்கிடப்படும். அரசுப் பணியில் சேர்த்துக் கொள்ளப்பட்ட வர்கள் கல்வித் துறையில் அந்தந்த வகையைச் சேர்ந்த அணிகளில் தற்போது உள்ள சம்பள விகிதத்திலேயே தனிப்பணி முறைமையைச் சார்ந்தவர்களாவார்கள். இந்த முறைமை (Tamil Nadu Educational Subordinate Service-B) என்று அழைக்கப்பட வேண்டும். தலைமையாசிரியர் பதவிக்கு உத்தியோக உயர்வு கொடுப் பதற்கு பணியில் சேர்த்துக்கொள்ளப்பட்ட தகுதியுள்ள ஆசிரியர் [illegible]



28th July 1971]

நிலைகளுக்கும் நியமனம் செய்வது தமிழ்நாடு அரசினர் பணியாளர் தேர்வுக் கழகம் மூலமாக அரசுப் பணியில் உள்ள அதே நிலைகளுக் கான விதிகளின் படியாகும். இந்தப் புது முறைமையிலிருந்து தற்பொழுதுள்ள முறைக்கோ அல்லது நேர்மாறுகவோ மாற்றம் அனுமதிக்கப்படமாட்டாது. ஆசிரியரல்லாத அலுவலர்களும் மேற்சொன்னபடி ஆசிரியர்களுக்குச் சொல்லப்பட்ட விதிகளின் படியே அரசுப் பணியில் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள். 1970-ம் வருஷம் 1-ம் தேதியிலிருந்து அரசினரால் திறக்கப்படும் புதுப் பள்ளிகள் சரியான முறையிலுள்ள அரசுப் பள்ளிகளாகவே கருதப்படும். தலைமையாசிரியர்களை அரசிதழ் பதிவாளர்களாக்கி ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. புதிதாக அரசுப் பணியில் சேர்த்துக்கொள்ளப்பட்டவர்களுக்கு ஓய்வு ஊதியம் வழங்குதல் முதலிய விஷயங்கள் குறித்து தனியாக ஆணைகள் பிறப்பிக்கப் படும்.

திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு: இது வரையிலும் பதவி உயர்வுக்கான சந்தர்ப்பங்கள் வரும்போது ஸ்பெஷல் டி.இ.ஓ.வாக ஆறு பேர்களை நியமிக்கும்போதும் அத்தகைய ஸ்தானங்களில் காலி ஏற்பட்டபோதும் ஜி.ஓ. 289/20–2–1971-ம் படி 80 பேர்கள் உயர்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்களாக நியமிக்கப்பட்ட போதும் 1,200 செலக்ஷன் கிரேடு என்று சொன்ன பிறகும் இந்த போர்டு ஆசிரியர்களுக்கு அதில் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை என்று சொல்வது உண்மையா? அதை மேற்கொண்டு அரசு பரிசீலனை செய்யுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: செலக்ஷன் கிரேடு என்று வருவது போர்டு ஆசிரியர்களுக்கும் சேர்ந்துதான் வரும். அதற்கான பள்ளி இயக்குநர் நடவடிக்கை எடுக்கும்போது, 1,200 என்று பிரித்து வைத்திருக்கிறார். தனியார் பள்ளிக்கும் அது உண்டு. அதை ஆராய்ந்து வெளியிடும்போது, முழு விவரம் தெரியும்.

திரு. ஜி. சுவாமிநாதன்: பதினைந்து பெர்சண்ட் பேருக்கு செலக்ஷன் கிரேடு கொடுக்க வேண்டுமென்று அரசு ஆணை பிறப்பிக் கப்பட்டதா, அந்த அரசு ஆணையின் மீது இதுவரை நடவடிக்கை எடுக்கப்படாமல் இருக்கிறதா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: "பர்சென்டேஜ்" என்று போடவில்லை. 1,200 பேர் வருகிற அளவுக்கு என்றுதான் சொல்லப்பட்டது. பர்சென்ட்டேஜ் என்பது எனக்கு நினைவில்லை. மொத்த ஆசிரியர்களில் 1,200 பேரை செலக்ஷன் கிரேடாக உயர்த்துகிற ஏற்பாடு விரைவில் அறிவிக்கப்பட இருக்கிறது.

திரு. கே. எஸ். அப்துல் வகாப்: பள்ளிகளில் ஆசிரியர்களுக்கு உள்ள சலுகைகளைப் போல "கிளரிக்கல் ஸ்டாப்" களுக்கும் கொடுக்க வேண்டுமென்ற கோரிக்கை நீண்டகாலமாகக் கேட்கப் பட்டு வருகிறது. அது குறித்து அரசு பரிசீலனை செய்ததா? அதைப்பற்றிய நிலை என்ன?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இந்தக் கேள்விக்கும் அதற்கும் தொடர்பில்லை. என்றாலும் ஆசிரியர்களுக்குத் தருகிற சலுகைகள் வேறு. அலுவலர்களுக்குத் தருவது வேறு. அரசாங்கப் பணிமனைகளில் உள்ள அலுவலர்களுக்கு என்னென்ன முறைகள் கையாளப்படுகின்றனவோ, அந்த முறையில் அந்த அலுவலர்களுக்கும் நடத்தப்படும். ஆசிரியர்களுக்குத் தரப்படுகிற முறையில் பள்ளிகளில் அவர்கள் பணியாற்றுகிற காரணத்தாலேயே, சலுகை தருவது என்பது முடியாது.

திரு. எம். ராஜா அய்யர் : பள்ளிகளில் ஆசிரியர் அல்லாத சிப்பந்திகள் போல "ஸ்பெஷல் டிஸ்ட்ரிக்ட் எஜுகேஷனல் ஆபீசர்" அலுவலகத்தில் இதே மாதிரி ஆசிரியர் அல்லாத பணியாளர்கள் சேவை செய்து வருகிறார்கள். அவர்களுக்கு சி.இ.ஓ. ஆபீசில் அதற்கான இடம் கொடுக்கப்பட்டதாகக் கூறுகிறார்கள். அவர்களுடைய "சர்வீஸ் கண்டிஷன்" என்ன என்று நிர்ணயிக்கப்பட்டதா? ஏனென்றால் முன்பு மாவட்டக் கழக உயர்நிலைப்பள்ளிகள் என்று இருந்தபோது டிஸ்ட்ரிக்ட் போர்டு ஹைஸ்கூலில் இருக்கிற ஆசிரியர் அல்லாத குமாஸ்தா ஸ்பெஷல் டி.இ.ஓ. ஆபீசில் குமாஸ்தாவாக இருப்பவர், அவர்களுடைய சர்வீஸ் ரெகுலரைசேஷன் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறதா? அவர்கள் பதவி உயர்வுக்கான அரசு உத்தரவு இருக்கிறதா?

மாண்புமிகு திரு இரா. நெடுஞ்செழியன் : அதுபற்றிய முழு விவரம் என்னிடத்தில் இல்லை. தனிக் கேள்வி போட்டால், விவரங்கள் திரட்டித் தரப்படும்.

திரு. கே. ராஜாராம்: தலைவர் அவர்களே, கழக உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்களின் தொகை அதிகம். கழக உயர்நிலைப் பள்ளிகள் என்பவை பெயர் மாற்றப்பட்டு பல ஆண்டுகள் ஆகின்றன. இன்னும் அந்தக் குறைகள் நீக்கப்படாமலிருப்பதால், நமது கல்வித் துறையில் உள்ள உயர்மட்ட அதிகாரிகளின் குழுவை பிரத்யேகமாக நியமித்து மூன்று மாதங்களுக்குள் இந்தக் குறைகளை நீக்குவதற்கு ஒரு அறிக்கையை அவர்களிடம் கோரி அதற்குப் பரிகாரம் தேட அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : 1966-ல் அவர்களை அரசு ஏற்றுக் கொள்வதாக முடிவு எடுக்கப்பட்டது. பிரச்னைகள் தீர்க்கப்படாமல் பல சிக்கல்கள் இருக்கின்றன. இப்போது அவை ஓரளவுக்குத் தீர்க்கப்பட்டதாகக் கூடச் சொல்வேன். அதனால்தான் இந்த முறைகள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. இன்னும் ஒன்றிரண்டு சிக்கல்கள் இருக்கக்கூடும். அதையும் விரைவில் தீர்க்கலாம்.

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி : தலைவர் அவர்களே, 15 சத வீதம் செலக்ஷன் கிரேடு என்று சொல்லப்பட்டது. 8,000 என்று கணக்குச் சொல்லி அதில் 1,200 பேர்கள் என்றார்கள். ஆனால் 8,500 ஆசிரியர்கள் இருப்பதாகத் தெரிகிறது. ஆகையால் சரியான புள்ளிவிவரம் டிபார்ட்மெண்டில் சேகரிக்கப்படவில்லை. ஆகையால்



தான் ஆசிரியர்களிடம் மன நிறைவு இல்லாமல் இருக்கிறது. சரியான புள்ளிவிவரத்தை எடுத்து 15 சதவீதம் என்று கணக்கிடும் போது, 1,200-க்கு மேல் வந்தால், அவர்களுக்கும் செலக்ஷன் கிரேடு கொடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: 15 சதவீதம் என்று சரியான கணக்கின்படிதான் முடிவெடுத்திருக்கிறார்கள். அதில் தகராறு இருக்காது.

புலவர் ஓ. அறிவுடை நம்பி: தலைவர் அவர்களே, பி-பிரிவில் ஊழியம் புரியும் ஆசிரியர் அல்லாத ஊழியர்கள் பதவிக் காலம் முடியும்போது அந்த இடத்தில் ஏ-பிரிவு ஊழியர்கள் நியமிக்கப்படுகிறார்களா? அதற்கு அரசு நல்ல முடிவெடுக்குமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: அதுபற்றிய விவரமில்லை. தனிக் கேள்வி போட வேண்டும்.

திரு. சி. வி. ராஜகோபால் : தலைவர் அவர்களே, இவர்கள்தான் ஆசிரியர்கள் என்று சொல்ல முடியாமல் அவர்கள் உடையணிவதால், அவர்களை ஆசிரியர்கள் என்று மக்கள் அடையாளம் தெரிந்து கொள்ளும் வகையில் அவர்களுக்கு முன்பு போல தலைப்பாகை வைத்தோ வேறு வகையிலோ உடை நிர்ணயிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இந்தக் கேள்விக்கும் அதற்கும் நேரடித் தொடர்பில்லை. ஆசிரியர்களுக்கும் சீருடை வழங்கும் முறையை ஆங்காங்கு மேற்கொள்கிறார்கள். சீருடை மூலமாக ஆசிரியர்களை அடையாளம் தெரிந்துகொள்ளலாம்.

### *District Educational Officers*

@ *214 Q.—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(a) the number of posts of District Educational Officers that are lying vacant as on date ;

(b) the period for which they have been kept unfilled; and

(c) the reasons therefor?

### மாவட்டக் கல்வி அதிகாரிகள்

திரு. ஜி. சுவாமிநாதன்: மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இன்றைய தேதிய நிலவரப்படி மாவட்டக் கல்வி அதிகாரிகள் பதவிகள் எத்தனை காலியாக உள்ளன?

(இ) அவை எத்தனை காலமாக நிரப்பப்படாமல் உள்ளன?

(உ) அதற்கான காரணங்கள் யாவை?

@ Postponed from the list of questions for 24th July 1971.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) ஒன்று.

(இ) 1-6-1971 முதல்.

(உ) வேலூர் மாவட்டக் கல்வி அலுவலர் செல்வி என். பர்வதவர்த்தினி 50 நாட்களுக்கு விடுப்பில் சென்றதால் இப்பதவி காலியாக உள்ளது. விரைவில் இப்பதவி நிறைவு செய்யப்படும்.

திரு. ஜி. சுவாமிநாதன் : இந்தக் கேள்வியை நான் சென்ற ஆண்டு எழுதி அனுப்பியபோது சேலம் நகரத்திலுள்ள அதிகாரி 6 மாதமும், சங்ககிரி கல்வி மாவட்டத்தில் 8 மாதமும் இல்லாமல் இருந்தார்கள் என்று சொல்லப்பட்டது. இப்படி மாவட்டக் கல்வி அதிகாரிகள் பதவி காலியாக இருப்பதால் அரசு மானியம் பெறும் தனியார் கல்லூரிகளில் இன்ஸ்பெக்ஷன் சரியாக நடைபெறவில்லை என்பது அரசிற்குத் தெரியுமா ? இருபது இடங்கள் நிரப்பப்படாமல் இருப்பதும் அரசிற்குத் தெரியுமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : உறுப்பினர் கூறுவதைப்போன்று அப்போது காலத்தாழ்வு மூன்று மாதம் நான்கு மாதம் என்று இருந்தது. இப்போது ஒரு இடம்தான் காலியாக இருக்கிறது. கூடுமானவரையில் அதிக நாள் காலியாக இல்லாத அளவுக்கு விரைவில் நிரப்பப்பட வேண்டுமென்ற ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. அதற்கான நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படும். புரமோஷன் கொடுத்து இப்படி வரவேண்டியிருக்கிறது.

திரு. எஸ். ஜெயராம செட்டியார் : ராமநாதபுரம் கல்வி அதிகாரியாக இருந்த திரு. தர்மராஜ் அவர்கள் தஞ்சைக்கு மாற்றப்பட்டிருப்பதால், அதற்குப் பதிலாகப் போட்டவர் வந்து சேராததால் மதுரையில் உள்ள திரு. பேரின்பமுத்து என்பவர் இரண்டையும் சேர்த்துப் பார்க்கும் நிலைமை இருக்கிறது. நான் புறப்பட்டு வரும் வரையில் அந்த நிலைமை இருந்தது. இரண்டு ஜில்லாக்களின் வேலையை ஒருவரே பார்ப்பது கஷ்டமாக இருக்கும். அந்த நிலைமை ஏற்படாதவாறு அரசு பார்த்துக்கொள்ளுமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : மாவட்டத் தலைமைக் கல்வி அதிகாரி இடம் ஒரு மாதமாக நிரப்பப்படாமல் இருக்கிறது. "பேனல் ஆஃப் நேம்ஸ்" வந்திருக்கின்றது. அண்மையில் 2, 3 நிங்களுக்குள் இன்னும் மூன்று தலைமை அதிகாரிகள் ஒப்பு பெறுகிறார்கள். அதற்கும் சேர்த்து "லிஸ்ட்" கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறேன். அதற்குக் கையெழுத்தாகியிருக்கிறது. சில நாட்களில் உத்தரவுகள் வரும்.

THIRU M. RAJAH IYER : Sir, the Hon. Minister was pleased to say that certain posts were vacant because officers could not be promoted. May I know what the policy of the Government in filling up these posts is? Whenever posts fall vacant, a particular percentage of posts should go to the candidates who come by direct recruitment and only a percentage is reserved for those coming by promotion. Is there any specific rule as to how many seats should go for direct recruitment and for teachers from aided schools, and District Board Schools ? May I know whether the Government have any definite policy about this and whether there was an understanding between the Director and other representatives as to how these posts should be filled up, because we are apprehensive that almost all the posts are being filled up by promotion instead of direct recruitment taking place ?



MR. CHAIRMAN : The hon. Members' supplementaries should be short so that we may save time. Otherwise, we will have to extend the time beyond 8 p.m. or 8.30 p.m., which will be inconvenient and difficult for all.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, முன்பு நேரிடையாக நியமிப்பதும் வேலை உயர்வு தருவதுமாக இருந்தது. இப்போது பெரும்பாலும் வேலை உயர்வின் மூலமாகத் தரப்படுகிறது. ஆகவே "டைரக்ட் ரெக்ரூட்மெண்ட்" இருக்க வேண்டுமென்ற கருத்தும் சொல்லப்படுகிறது. அதையெல்லாம் பரிசீலித்து தக்க முடிவை மேற்கொள்ளும்போது எது நலம் பயக்கும் என்பதைக் காண வேண்டும். இப்போது "புரமோஷன்" அளவில்தான் இந்த வேலைகள் நிரப்பப்படுகின்றன.

*Secondary Grade Trained Teachers*

@ *215 Q.—THIRU M. RAJAH IYER : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(a) whether permanent Secondary Grade Trained Teachers serving in Municipal High Schools are eligible for their salaries while undergoing the shortened B.T. Course ; and

(b) if so, the details thereof?

இடைநிலைத்தர பயிற்சி பெற்ற ஆசிரியர்கள்

திரு. எம். ராஜா அய்யர் : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) நகராட்சி உயர்நிலைப் பள்ளிகளில் பணியாற்றும் இடைநிலைத்தர பயிற்சி பெற்ற நிலையான ஆசிரியர்கள், சுருக்கப்பட்ட ஆசிரியர் பயிற்சி (B.T. Course) பெறும் காலத்தில், அவர்கள் தங்கள் சம்பளத்தைப் பெறத் தகுதியுள்ளவர்களா ?

(இ) ஆமெனில், அதன் விவரம் யாது?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

*Incentive payments*

*216. Q.—THIRU M. RAJAH IYER : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(a) whether holders of the M.A. Degree of the Banaras University are eligible for the incentive payments sanctioned by

@ Postponed from the list of questions for 24th July 1971.

the Government to teachers serving in schools with Post-Graduate qualifications ; and

(b) if not, the reasons therefor ?

### செயலூக்கச் சம்பளம்

திரு. எம். ராஜா அய்யர்: மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) பட்ட மேற்படிப்புத் தகுதியுடன் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு அரசு ஒப்பளித்துள்ள செயலூக்கச் சம்பளத்தைப் பெறுவதற்கு வாரணுசிப் பல்கலைக் கழகத்தில் பட்ட மேற்படிப்புப் பட்டம் பெற்றவர்கள் தகுதி பெறுவார்களா ?

(இ) இல்லையெனில், அதன் காரணங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: (அ) & (இ) இப்பொருள் ஆய்விலுள்ளது.

### *Panchayats and Panchayat Unions*

@ *217 Q.—THIRU V. THANGAPANDIAN : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(a) whether any representation has been received by the Government on behalf of the Panchayat Unions to the effect that the administrative control of the Panchayats and Panchayat Unions by the Revenue Department, should be withdrawn ; and

(b) if so, the decisions taken by the Government thereon ?

### ஊராட்சி மன்றங்கள், ஊராட்சி ஒன்றியங்கள்

திரு. வி. தங்கபாண்டியன் : மாண்புமிகு கல்வி—உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) ஊராட்சி மன்றங்கள், ஊராட்சி ஒன்றியங்கள் ஆகிய வற்றின் நிர்வாகப் பொறுப்பினை வருவாய்த் துறையிலிருந்து பிரிக்க வேண்டுமென்று அரசாங்கத்திற்கு பஞ்சாயத்து ஒன்றியங்கள் சார்பாக வேண்டுகோள் ஏதேனும் வந்துள்ளதா?

(இ) ஆம் எனில், அரசாங்கம் அதுபற்றி எடுத்த முடிவென்ன?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: (அ) ஆம்.

(இ) இப் பிரச்சினை நிர்வாக சீர்திருத்தக் கழகத்தின் கருத்திற்கு வைக்கப்படுகிறது.

@ Postponed from the list of questions for 24th July 1971.



28th July 1971]

### *Release of advertisements*

*271. Q.—THIRU V. ISVARMURTI : Will the Hon. the Chief Minister be pleased to state whether the release of advertisements to " The Hindu " had been stopped by the State Government ?

### பத்திரிகை விளம்பரங்கள்

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி: மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

"இந்து" நாளிதழுக்கு விளம்பரங்கள் கொடுப்பதை அரசு நிறுத்தியுள்ளதா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இல்லை.

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி: தலைவர் அவர்களே, இந்த ஆண்டு ஜனவரி மாதத்திலிருந்து இந்து பத்திரிகைக்கும், இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகைக்கும், மெயில் பத்திரிகைக்கும் அரசாங்கம் விளம்பரத்திற்காகக் கொடுத்த பணம் பற்றிய புள்ளி விவரம் வைத்திருக்கிறதா ? அதை அறிவிக்க முடியுமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அவர்கள் கேட்பதைப் போல் குறிப்பிட்ட விளம்பரத்தின் புள்ளிவிவரம் இல்லை. ஆனால் விளம்பரங்கள் ஒரு வேளை குறைந்திருக்கலாம். ஆனால் நிறுத்தப் படவில்லை.

திரு. ஜி. சுவாமிநாதன் : குடும்பக் கட்டுப்பாடுத் துறையைப் பற்றிய விளம்பரம் இந்து நாளிதழில் வருவதில்லை, மற்ற நாளிதழ் களில் வருகின்றன. மற்ற மாநிலங்களில் குடும்பக் கட்டுப்பாடு விளம்பரங்கள் 'இந்து' வில் வருகின்றன என்று பார்க்கும்போது, இந்த விளம்பரம் அந்தப் பத்திரிகைக்குக் கொடுக்கப்படாததின் காரணம் என்ன?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அவ்வப்போது இருக்கிற நிலைமைகளுக்கு ஏற்ப எந்தெந்த விளம்பரங்கள் எந்தெந்த ஏடுகளுக்குத் தரப்பட வேண்டுமென்று முறை வகுக்கப்பட்டு அவ்வாறு தரப்படுகின்றன. குறிப்பிட்ட எந்த எட்டிற்கும் தர வேண்டுமென்ற நிலைமையில்லை.

திரு. எஸ். எஸ். தென்னரசு : அரசு எந்தெந்தப் பத்திரிகைக்கு விளம்பரம் கொடுக்கிறது? விளம்பர விகிதங்கள் என்ன? ஆண்டு ஒன்றுக்கு அரசின் சார்பாக விளம்பரத்திற்காக மொத்தம் எவ்வளவு தரப்படுகிறது?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அரசு விளம்பரங்கள் தருவதில் இந்து பத்திரிகைக்கு "காலம்" ஒன்றுக்கு ரூ. 18.25 என்ற அளவிலும், எக்ஸ்பிரஸ் பத்திரிகைக்கு ரூ. 18.75 என்ற அளவிலும், மெயில் பத்திரிகைக்கு ரூபாய் 5.80, ஸ்டேட்ஸ்மேன் (கல்கத்தா) பத்திரிகைக்கு ரூ. 18, நம்முடைய தமிழ் நாட்டிலுள்ள வேறு பத்திரிகைகளான தினத்தந்திக்கு ரூ. 11, தினமணிக்கு

ரூ. 8.50, மாலை முரசுக்கு ரூ. 9, முரசொலிக்கு ரூ. 5, மித்திரனுக்கு ரூ. 4, நம்நாடுக்கு ரூ. 4, தென்னகம் ரூ. 5, விடுதலை ரூ. 3 என்ற அளவில் விளம்பரங்கள் தரப்படுகின்றன. மொத்தம் 1967–68 கணக்குப்படி ரூ. 4,67,291 ஆகியிருக்கிறது. 1968–69-ல் ரூ. 7,38,893 ஆகியுள்ளது. அதில் "இந்து" பத்திரிகைக்கு மட்டும் மொத்தம் 1967–68-ல் ரூ. 1,51.510-ம் 1968–69-ல் ரூ. 1,59,522ம் விளம் பரத்திற்காகத் தரப்பட்டிருக்கிறது. மெயில் பத்திரிகைக்கு 1967–68-ல் ரூ. 41,000, 1968–69-ல் ரூ. 71,000 கொடுக்கப்பட்டிருக்கிறது. எக்ஸ்பிரசுக்கு 1967–68-ல் ரூ. 1,35,000 சொச்சம் 1968–69-ல் ரூ. 2,79,000. தினமணிக்கு 1967–68-ல் ரூ. 40,000, 1968–69-ல் ரூபாய் 50,000 மாலைமுரசுக்கு 1967–68-ல் ரூ. 13,000, 1968–69-ல் ரூ. 33,000, தினத்தந்திக்கு 1967–68-ல் ரூ. 45,000-ம், 1968–69-ல் ரூ. 1,10,000-ம் தரப்பட்டிருக்கிறது.

திரு. ஆர். தர்மலிங்கம்: தலைவர் அவர்களே, குடும்பக் கட்டுப் பாடு திட்டத்திற்கு ஆங்கில பத்திரிகையில் விளம்பரம் கொடுக்க வில்லை என்று மாண்புமிகு உறுப்பினர் சொன்னார்கள். பல்வேறு ஆங்கிலப் பத்திரிகை படிக்கிறவர்கள் குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தில் மிகவும் கவனம் செலுத்திவருகிறார்கள். மத்திய தர வகுப்பினரும், கீழ்த்தர வகுப்பினரும் குடும்பக் கட்டுப்பாட்டில் சரியான விளம்பரம் செய்யாத காரணத்தால், கடைப்பிடிப்பதில் கவனம் செலுத்துவதில்லை. ஆகையால் தமிழ்ப் பத்திரிகைகளுக்கு விளம்பரம் கொடுப்பது சரியானதல்லவா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு உறுப்பினர் சொல்லியதைப் போல, ஆங்கில ஏடுகளைப் படிக்கிறவர்கள் விளம்பரம் இல்லாமலே அதில் அக்கரை உள்ளவர்களாக இருப்பது உண்மைதான்.

திரு. ஜி. சுவாமிநாதன்: அண்மையில் வந்த அரசாங்க அறிக் கையின்படி, அரசாங்கத்தின் விளம்பரங்கள் இனிமேல் (Director of Information) மூலமாகத் தான் போக வேண்டுமென்றும் தமிழரசு பத்திரிகையில்தான் வெளியிடப்படும் என்றும் அறிக்கை வந்திருக்கிறது. இப்படி ஒரு அரசாங்க அதிகாரி மூலம்தான் விளம்பரம் கொடுக்கப்பட வேண்டுமென்றால், பத்திரிகைகளின் சுதந்திரம் பறிக்கப்பட்டதாகாதா என்பதை அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இது பத்திரிகை சுதந்திரத்தைப் பறிப்பதாகாது. பல இலாகாக்கள் விளம்பரங்கள் தனித்தனியாகப் போகாமல் (Information and Publicity) இலாகா மூலமாகப் போக வேண்டுமென்பதால், மற்ற இலாகாக்கள் தங்கள் உரிமை பறிபோகிறது என்று சொன்னால், அது பொருத்தமாக இருக்கும். பத்திரிகை சுதந்திரம் பறிபோக இதில் என்ன இருக் கிறது என்று தெரியவில்லை. அரசுப் பணிகளுக்கான மனுக்களைக் கோருகிற விளம்பரங்கள் தமிழரசு ஆங்கிலத்திலும் தமிழிலும் வெளியிடப்பட்டால் போதும். பெருமளவில் உள்ள விளம்பரங்கள் முக்கியமாக மக்களோடு தொடர்பு கொண்டுள்ள குடும்பக் கட்டுப்



பாடு விளம்பரம், பரிசுச் சீட்டு விளம்பரம் போன்றவை எப்போதும் போல பெரிய பத்திரிகைகளில் நிச்சயமாகத் தரப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கே. ராஜாராம்: சர்குலேஷன் மனதில் கொண்டு எல்லாப் பத்திரிகைகளிலும் பாரபட்சமில்லாமல் அரசியல் கண்ணோட்டம் இல்லாமல் அரசு விளம்பரங்களைக் கொடுக்க முன்வருமா? குறிப் பாக காங்கிரஸ் மனப்பான்மையுடன் நடந்துவரும் நவசக்தி போன்ற இதழ்களில் விளம்பரங்கள் ஒன்றுமே கொடுக்கப்படு வதில்லை. அவைகட்கும் கொடுக்கப்படுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அரசியல் காழ்ப் புணர்ச்சி எதுவும் இல்லை. அரசாங்கத்தை எதிர்த்து எழுதுவதைப் பற்றிக் கவலையில்லை. ஆனால் கேவலமாக எழுதும் பத்திரிகைகள் பற்றி கவனமாக இருக்கவேண்டியிருக்கிறது. விளம்பரம் கொடுக்கப்படுவதில் கழகத்தின் அதிகார பூர்வமான ஏடாகிய நம் நாடு பத்திரிகைக்கு 1967-68, 1968-69-ல் மொத்தம் விளம்பரத்திற் காக வழங்கப்பட்ட பணம் ரூ. 2,099 ஆகும். நவசக்திக்கு ரூ. 2,039 ஆகிறது. அதிக வித்தியாசம் இல்லை.

திரு. கே. எஸ். அப்துல் வகாப்: தமிழக அரசால் விளம்பரம் கொடுக்கப்படாத தமிழ்நாட்டுப் பத்திரிகைகள் யாவை? தினசரிப் பத்திரிகைகளைக் கேட்கிறேன். எந்த அடிப்படையில் விளம்பரங் கள் கொடுக்கப்படுகின்றன?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: பத்திரிகை அச்சாவது, சர்குலேஷன் எண்ணிக்கை, பத்திரிகை பார்க்கும் வாசகர் களுடைய எண்ணங்கள், சிறிய பத்திரிகைகளுக்கு ஆதரவு தர வேண்டுமென்ற நோக்கம் எல்லாவற்றையும் பரிசீலித்து விளம்பரங் கள் தரப்படுகின்றன.

THIRU G. VASANTHA PAI: Will the Hon. Minister please take into consideration the fact that freedom of the Press is involved, and may I know whether the Government would frame rules under which these advertisements could be given, instead of leaving them to the arbitrary discretion of the individual officers of the Government?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: விளம்பரங்கள் கொடுப் பதில் வரையறை செய்வது பத்திரிகை சுதந்திரத்தைப் பாதிப்ப தாகாது.

MR. CHAIRMAN: Question 272 and 273 will be taken up together.

### *Standard Motors Limited*

* 272 Q.—THIRU V. ISVARMURTI: Will the Hon. the Chief Minister be pleased to state the amount paid to the workers of the Standard Motors Limited, Madras during its closure in 1970–71?

[28th July 1971

**ஸ்டாண்டர்டு மோட்டார் தொழிற்சாலை.**

**திரு. வி. சண்முகமூர்த்தி :** மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

**சென்னை, ஸ்டாண்டர்டு மோட்டார் நிறுவனம் 1970-71-ல் மூடப்பட்டிருந்தபோது தொழிலாளர்களுக்கு அளிக்கப்பட்ட தொகை எவ்வளவு ?**

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** ஸ்டாண்டர்டு மோட்டார் கம்பெனியைச் சேர்ந்த 1845 தொழிலாளர்கள் ஒவ்வொருவருக்கும் ரூ. 50 ஆக ரூ. 92,250 பிரித்துகொடுக்கப்பட்டது. இதில், கம்பெனி மூடப்பட்டிருந்த போது 1971 சனவரியில் ரூ. 85,000 கொடுக்கப் பட்டது. 1971 சூனில் ரூ. 7,250 கொடுக்கப்பட்டது.

* 273. Q.—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether it is a fact that the erstwhile workers of Standard Motors, Madras have been paid at the rate of Rs. 50 each from the Chief Minister's Fund ; and

(b) if so, whether the same benefit will be extended to other striking workers in major private concerns in the State such as Textools in Coimbatore ?

**திரு. ஜி. சுவாமிநாதன் :** மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழ் நாட்டிலுள்ள ஸ்டாண்டர்டு மோட்டார் தொழிற் சாலை முன்னாள் பணியாளர்களுக்கு முதலமைச்சர் நிதியிலிருந்து தலைக்கு ரூ. 50 வீதம் வழங்கப்பட்டுள்ளது உண்மையா ?

(இ) ஆமெனில், கோயம்புத்தூரிலுள்ள டெக்ஸ்டூல்ஸ் நிறுவனம் போன்ற இம்மாநிலத்திலுள்ள பெரிய தனியார் நிறுவனங்களில் வேலைநிறுத்தம் செய்கிற பிறபணியாளர்களுக்கும் இதே சலுகை நீட்டிக்கப்படுமா ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** (அ) ஆம்.

(இ) வேறு தனியார் நிறுவனங்களில் வேலைநிறுத்தம் செய்யும் பணியாளர்களுக்கு முதல் அமைச்சர் நிவாரண நிதியிலிருந்து தொகை வழங்கும் செயற்குறிப்பு ஏதுமில்லை. கோவை 'டெக்ஸ்டூல்ஸ்' நிறுவனத்தில் தற்பொழுது வேலை நிறுத்தம் ஏதுமில்லை.

*Death of one Jameela in Police Custody*

* 274 Q.—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether it is a fact that an enquiry was conducted by the Revenue Divisional Officer, Thanjavur on the death of one Jameela in Police Custody on 2nd August, 1970 at Thanjavur; and

(b) if so, the verdict of the enquiry ?



28th July 1971]

**காவலர் பாதுகாவலில் ஜமீலா இறந்த நிகழ்ச்சி**

**திரு. ஜி. சுவாமிநாதன் :** மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தஞ்சாவூரில் 2—8—1970 அன்று காவலர் பாதுகாவலில் ஜமீலா இறந்தது குறித்து தஞ்சை வருவாய்க் கோட்ட அதிகாரி விசாரணை ஏதேனும் நடத்தியது உண்மையா ?

(இ) விசாரணையில் கண்ட முடிவு என்ன ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: (அ)** ஆம்

(இ) ஜமீலா பீபி காவல் துறைப் பாதுகாப்பில் இருந்த போது, வாழ்க்கையில் ஏற்பட்ட வெறுப்பினால் தன்னிடம் ஒளித்து வைத்திருந்த நச்சுப் பொருளினைத் தானே உட்கொண்டதன் காரணமாக இறந்துவிட்டாளென தஞ்சாவூர் வருவாய்க் கோட்ட அதிகாரி முடிவு செய்துள்ளார்.

*Recreation Clubs*

* 275 Q.—THIRU R. KRISHNASWAMY NAIDU : Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether it has been brought to the notice of the Government that gambling and other activities which are contrary to the principles of human character are carried on in many clubs, which have secured licence under the name of Recreation Clubs; and

(b) if so, the action taken thereon?

**பொழுதுபோக்கு சங்கங்கள்**

**திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு :** மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) பொழுதுபோக்கு சங்கங்கள் (Recreation Clubs) என்ற பெயரால் உரிமம் பெற்று அதில் சூதாட்டங்களும் மனித இனத்தின் தல்இயல்புகளுக்குப் புறம்பான செயல்களும் நடைபெற்று வருகின்றன என்பது அரசின் கவனத்திற்கு வந்திருக்கின்றதா?

(இ) ஆமெனில், அதன் மேல் எடுத்த நடவடிக்கை என்ன?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** (அ) அத்தகைய முறைகேடுகள் எதுவும் அண்மையில் அரசின் நாட்டத்திற்குக் கொண்டு வரப்படவில்லை. எனினும், கடந்த காலத்தில் தமக்குப் புகார்கள் செய்து கொள்ளப்பட்டபோதெல்லாம் காவல்துறையினர் அவை குறித்து நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர்.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு. எஸ். ஜெயராம செட்டியார்:** இந்த மாதிரி 'காம்ப்ளிமெண்ட்' என்று கூறிச் சூதாட்டங்களில் கூட நடைபெறுகின்றன. அதைத் தடுக்க சர்க்கார் முயற்சிக்குமா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** இவற்றைத் தடுக்க அவ்வப்போது காவல் துறையினரே ஏற்ற நடவடிக்கை எடுக்கிறார்கள். அவர்களுக்கு உதவியாக ஆங்காங்குள்ள மக்கள் பிரதிநிதிகள் காவல் துறையினருக்கு இதுபற்றி அறிவிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

### *N.C.C. training*

* 276 Q.—THIRU V. ISVARMURTI: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state the number of students in High Schools and Colleges who underwent N.C.C. training in the State during the years 1967–68, 1968–69, 1969–70 and 1970–71?

### தேசிய மாணவர் படைப் பயிற்சி

**திரு. வி. ஈஸ்வரமூர்த்தி:** மாண்புமிகு கல்வி--உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

இம்மாநிலத்தில் 1967-68, 1968-69, 1969-70, 1970-71ஆம் இம்மாநிலத்தில் 1967-68, 1968-69 1969-70, 1970-71ஆம் மாணவர் படைப் பயிற்சி பெற்ற மாணவர்களின் எண்ணிக்கை எவ்வளவு?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** சட்டமன்றத்தின் மூன் ஒரு அறிக்கை@ வைக்கப்பட்டிருக்கிறது.

**திரு. வி. ஈஸ்வரமூர்த்தி:** தலைவரவர்களே, எல்லா உயர்நிலைப் பள்ளிகளிலும் கட்டாய என்.சி.சி. முறைக்கு கால கட்டத்திற்கு அரசு ஏதாவது திட்டம் வகுத்திருக்கிறதா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, முதலில் பாகிஸ்தான் போரின்போதும், சீனப் போரின் போதும் கட்டாயமாக அது வைக்கப்பட்டிருந்தது. அந்த அளவுக்கு மத்திய அரசும் நிதி உதவி தந்தது. வாலண்டரியாக அதாவது விருப்பமாக வைக்க வேண்டுமென்ற நிலைமை இருந்ததால், கொடுக்கிற நிதி அளவைப் பொறுத்து வைப்பதன் காரணமாக விருப்பத்தோடுதான் வைக்கப்பட்டிருக்கிறது. கட்டாயமாக வைக்கும் நிலைமையில்லை. விருப்பத்தின் காரணமாகத்தான் பள்ளிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு அவற்றிற்கு அளிக்கப்படுகிறது.

### *Thirumanur High School*

* 277 Q.—THIRU V. ISVARMURTI (on behalf of THIRU T. K. SUBBIAH): Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(a) the land belonging to Thirumanur High School in Tiruchirappalli District; and

(b) of this, (1) the extent of land belonging to the Hindu Religious Endowments Department and (2) the extent of Government Poramboke lands?

@ Printed as Appendix I on page 738.



### திருமானூர் உயர்நிலைப் பள்ளி

**திரு. வி. ஈஸ்வரமூர்த்தி (திரு. டி. கே. சுப்பையா சார்பில்):** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) திருச்சி மாவட்டம் திருமானூர் உயர்நிலைப் பள்ளிக்குள்ள இடம் எவ்வளவு?

(இ) அதில் (1) இந்து அறநிலையத்தின் நிலம் எவ்வளவு? (2) அரசாங்க புறம்போக்கு நிலம் எவ்வளவு?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** (அ) & (இ) திருமானூர் அரசினர் (கழக) உயர்நிலைப் பள்ளிக்கு சொந்தமான நிலமோ அல்லது கட்டிடமோ தற்போது இல்லை. மேற்படி பள்ளி தற்போது மூன்று இடங்களில் நடைபெற்று வருகிறது.

(1) பஞ்சாயத்து யூனியன் பழைய உயர்தர துவக்க பள்ளிக் கட்டிடத்தில்,

(2) திருமதி ராச்சியம்மாள் என்பவருக்குச் சொந்தமான கட்டிடத்தில்,

(3) கோவில் தேவஸ்தானத்திற்குச் சொந்தமான இடத்தில் கட்டப்பட்டுள்ள இரண்டு கூரைக் கட்டிடங்களில், இவ்விரு கட்டிடங்களில் 6 வகுப்புகள் நடைபெற்று வருகின்றன. இதன் விஸ்தீரணம் 2.57 ஏக்கர்.

### *Gramasevaks*

* 278 Q.—THIRU M. RAJAH IYER (on behalf of THIRU M. ARUMUGASWAMI): Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(a) whether the Government have received any representation from the Gramasevaks about the observance of their "Demands Day" during the month of February, 1971; and

(b) if so, the reasons therefor and the action taken thereon?

### ஊர் நல உதவியாளர்கள்

**திரு. எம். ராஜா அய்யர் (திரு. எம். ஆறுமுகசாமி சார்பில்):** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1971 பிப்ரவரித் திங்களில் ஊர் நல உதவியாளர்கள் "கோரிக்கைநாள்" கொண்டாடுவது பற்றி அவர்களிடமிருந்து முறையீடு ஏதேனும் அரசுக்கு வந்துள்ளதா?

(இ) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவை? அதன் மீது எடுத்த நடவடிக்கை யாது?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** (அ) ஆம்.

(இ) கால்நடை இன்ஸ்பெக்டர் சம்பள விதங்களுக்கு இணையாக தங்களது சம்பள விதங்களும் மாற்றியமைக்கப்பட வேண்டுமென்ற தங்களது கோரிக்கையை வலியுறுத்த வேண்டி கிராம சேவக்குகள் சங்கம் "கோரிக்கை நாள்" கொண்டாடுவ தெனத் தீர்மானித்தது. கிராம சேவக்குகளின் சம்பள விதங்கள் மேலும் திருத்தியமைக்கப்படவேண்டுமென தமிழ்நாடு கிராம சேவக்குகள் சங்கத்தின் கோரிக்கைகளை அரசு பரிசீலனை செய்தது. கிராம சேவக்குகளுக்கு இரண்டாவது சம்பள ஆணைக்குழு பரிவுரை செய்துள்ள சம்பள விதங்கள் நியாயமானவை என்றும், பொருத்தமானவையென்றும். இவர்களின் சம்பள விதங்களை மேற்கொண்டும் உயர்த்த அவசியமேதும் இல்லை என்றும் அரசு கருதுகிறது.

திரு. எஸ். ஜெயராம செட்டியார்: தலைவர் அவர்களே, கிராம சேவக்குகளுக்குச் சம்பள விதிதங்கள் அதிகப்படியாகக் கொடுப்பதில் ஆட்சேபணையில்லை. முன்பு பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் தாசில்தார்கள் கையெழுத்துப் போட்டுவிட்டு நிலங்களைப் பார்த்தோம் என்று சென்று விடுவார்கள். அதைப்போல, கிராம சேவக்குகளும் ஊரில் யாரிடமாவது வந்து கையெழுத்து வாங்கிச் கொண்டு போய்விடுகிறார்கள். அவர்கள் சேவை மனப்பான்மை புடன் பணியாற்றவில்லை என்ற கருத்து நிலவுகிறது. அதைப் போக்க சர்க்கார் நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: எந்தக் கடமைக்காக நியமிக்கப் பட்டிருக்கிறார்களோ அதை நிறைவேற்றவேண்டியது தான் முறை. அதில் குறைபாடிருந்தால், அதற்கு மேலுள்ள அதிகாரிகள் அதைப் பார்த்து தக்க முறையில் நடவடிக்கை எடுக்க வேண்டும். ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் நியமிக்கப்பட்டிருக்கிற அதிகாரிகளிடத்தில் நூற்றுக்கு நூறு பங்கு கடமையாற்றி வேலை வாங்குகிற அளவுக்கு வேலைமுறைகளைத் திருத்தியமைக்கும் முயற்சியில் நாம் கவனம் செலுத்த வேண்டியவர்களாக இருக்கிறோம். வேலைக்காக நியமிக்கிறோம். நியமித்ததும் அந்த வேலையை வாங்க வேண்டும். அவர்கள் தங்கள் கடமையைச் செய்யும்படி அவர்களுக்கு மேலே உள்ள அதிகாரிகள் பார்த்துக் கொள்ள வேண்டும். பார்த்துக்கொண்டு வருகிறார்கள்.

திரு. வி. வெங்கா: கிராம சேவக்குகளுக்கு என்னென்ன வேலைகளை அவர்கள் செய்ய வேண்டுமென்று அரசு நிர்ணயித்திருக் கிறதா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, கிராம சேவக்குகள் பணிகளைப்பற்றி விதிமுறைகள் இருக்கின்றன. அதுபற்றிய விவரக்குறிப்பு இப்போது என்னிடமில்லை. இன்னின்ன வேலைக்காக அவர்கள் நியமிக்கப்படுகிறார்கள் என்ற விதிமுறைகள் இருக்கின்றன.



28th July 1971]

*Senior Drugs Inspcetor, Thanjavur District*

* 279 Q.—THIRU N. SUNDARESA THEVAR: Will the Hon. the Minister for Public Health be pleased to state:

(a) where the Headquarters of the Senior Drugs Inspector, Thanjavur District is situated;

(b) whether he is residing there; and

(c) if not, the reasons therefor?

தஞ்சாவூர் மாவட்ட முதுநிலை மருந்துப்பொருள் இன்ஸ்பெக்டர்

திரு. என். சுந்தரேசதேவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) தஞ்சாவூர் மாவட்ட முதுநிலை மருந்துப்பொருள் இன்ஸ்பெக்டரின் (Senior Drugs Inspector) தலைமையிடம் எங்கு அமைந்துள்ளது?

(இ) அவர் அங்கே வசிக்கிறாரா?

(உ) இல்லையெனில், அதற்கான காரணங்கள் யாவை?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) தஞ்சை மாவட்டத்தில் முதுநிலை மருந்து ஆய்வாளரின் தலைமையிருப்பிடம் நாகப் பட்டிணம்.

(இ) ஆம்.

(உ) இக்கேள்விக்கு இடமில்லை.

*Government Hospital in Saidapet*

* 280 Q.—THIRU V. ISVARMURTI: Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(a) whether any Government Hospital has been opened in Saidapet, Madras City recently; and

(b) if so, the details thereof?

சைதாப்பேட்டைக்கு அரசு மருத்துவமனை

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சென்னை மாநகரில் சைதாப்பேட்டையில் அரசு மருத்துவமனை ஏதேனும் அண்மையில் திறக்கப்பட்டுள்ளதா?

(இ) ஆமெனில், அது குறித்த விவரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) ஆம்.

[28th July 1971

(இ) புறநோயினருக்கு சிகிச்சை அளித்து வந்த சைதாப் பேட்டை அரசு மருந்தகம் பிப்ரவரி 1970-லிருந்து 20 படுக்கைகள் கொண்ட அரசு மருத்துவமனையாக உயர்த்தப்பட்டு அதில் 12 ஆண்களுக்கும் 8 பெண்களுக்கும் உள்நோயினராக தங்கி சிகிச்சை பெறுமாறு வகைசெய்யப்பட்டுள்ளது. இந்த மருத்துவமனை 7-10-1970-ல் இருந்து வேலை செய்கிறது. இங்கு உள்நோயினர் வசதியோடு புறநோய் சிகிச்சையும் தொடர்ந்து அளிக்கப்படுகிறது.

*Additional Sales Tax.*

• 281 Q.—THIRU V. ISVARMURTI (on behalf of THIRU D. SANTOSHAM): Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state:

(a) whether any representations have been received from the Madurai-Ramanathapuram Chamber of Commerce and other Trade Organisations requesting the Government to withdraw the levy of Additional Sales Tax on the Sales Tax assessed in respect of turnovers exceeding Rs. 10 lakhs; and

(b) if so, the action taken thereon ?

கூடுதல் விற்பனை வரி

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி (திரு. டி. சந்தோஷம் சார்பில்): மாண்புமிகு உணவு-வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) ரூ. 10 லட்சத்துக்கு மேற்பட்ட வியாபாரத் தொகையின் மீது விதிக்கப்பட்ட விற்பனை வரி மீதான கூடுதல் விற்பனை வரியை ரத்து செய்யுமாறு அரசை வேண்டி மதுரை-ராமநாதபுரம் வர்த்தக மன்றத்திடமிருந்தும் பிற வணிகர் சங்கங்களிடமிருந்தும் முறையீடுகள் வந்துள்ளனவா?

(இ) ஆமெனில், அவற்றின்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) ஆம்.

(இ) வணிகர்கள் சிலரால் தாக்கல் செய்யப்பட்ட சிட் மனுக்கள் குறித்து உயர்நீதி மன்றத்தின் தீர்ப்பிற்குப் பின்னர், அரசு இது குறித்துப் பரிசீலிக்கும்.

*Special Deputy Collectors in Thanjavur district.*

• 282 Q.—THIRU G. SWAMINATHAN: Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state the number of cases pending before the Special Deputy Collectors in Thanjavur district under the Tamil Nadu Cultivating Tenants Protection Act, 1955 and Public Trusts Act, 1961 ?



28th July 1971]

தஞ்சாவூர் மாவட்ட சிறப்புத் துணை மாவட்ட ஆட்சித் தலைவர்கள்

திரு. ஜி. சுவாமிநாதன்: மாண்புமிகு உணவு—வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

தமிழ் நாடு 1955-ஆம் ஆண்டு பயிரிடும் குத்தகைக்காரர்கள் பாதுகாப்புச் சட்டம், 1961-ஆம் ஆண்டு பொதுப் பொறுப்பு நிறுவனங்கள் சட்டம் இவற்றின்கீழ் தஞ்சாவூர் மாவட்ட சிறப்புத் துணை மாவட்ட ஆட்சித் தலைவர்களின்முன் முடிவுபெறு நிலையிலுள்ள வழக்குகள் எத்தனை ?

THE HON. THIRU P. U. SHANMUGAM: 1,006 cases under the Tamil Nadu Cultivating Tenants Protection Act, 1955 and 773 cases under the Tamil Nadu Public Trusts Act, 1961 are reported to be pending with the Special Deputy Collector (Revenue Court), Kumbakonam as on 1st June 1971. 1,874 cases under the former Act and 1,012 cases under the latter Act are reported to be pending with the Special Deputy Collector (Revenue Court), Thanjavur, as on 1st June 1971.

*Drought relief works*

• 283 Q.—THIRU V. THANGAPANDIAN: Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state—

(a) the expenditure incurred in 1970-71 for every Panchayat Union in Ramanathapuram district out of the allotment of Rs. 1.07 crores provided for Dharmapuri-Ramanathapuram district drought relief works under the Centrally sponsored full grant scheme; and

(b) the amount earmarked for each Panchayat Union for 1971-72 ?

வறட்சி நிவாரண வேலைகள்

திரு. வி. தங்கபாண்டியன்: மாண்புமிகு உணவு-வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) மத்திய அரசாங்கத்தின் முழு மான்யத் திட்டத்தில் தர்மபுரி-ராமநாதபுரம் மாவட்ட வரட்சி நிவாரண வேலைகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ள 1.07 கோடி ரூபாய் திட்டத்தில், 1970-71-ஆம் ஆண்டில் ராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள ஒவ்வொரு பஞ்சாயத்து ஒன்றியத்திற்கும் எவ்வளவு செலவு செய்யப்பட்டுள்ளது?

(இ) 1971-72-ஆம் ஆண்டிற்கு ஒவ்வொரு பஞ்சாயத்து ஒன்றியத்திற்கும் ஒதுக்கப்பட்டுள்ள தொகை எவ்வளவு?

[28th July 1971

THE HON. THIRU P. U. SHANMUGAM:

(a) A statement @ is placed on the table of the House.

(b) The question of obtaining funds for 1971-72 is under correspondence with the Government of India.

திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு: தலைவர் அவர்களே, இதற்காக ஒதுக்கப்பட்ட தொகையில் இன்னும் ரூ. 60 லட்சம் செலவு செய்யப்படாமல் இருக்கிறதே, அந்தத் தொகை தொடர்ந்து ஆண்டில் செலவு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, இது நான்காண்டுத் திட்டம். நான்காண்டு செலவு செய்யப்பட்டது எவ்வளவு என்ற குறிப்பில்லை. இந்த ஆண்டுக்கு ரூ. 60.5 லட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று நினைக்கிறேன்.

*Collection of Taxes by Village Officers.*

*284 Q.—THIRU V. ISVARMURTI: Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state—

(a) whether the Village Officers have been directed to collect taxes for the Panchayats; and

(b) if so, the details thereof?

கிராம அதிகாரிகள் வரி வசூலித்தல்

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி: மாண்புமிகு உணவு-வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) ஊராட்சிகளுக்குச் சேர வேண்டிய வரிகளை வசூலிக்குமாறு கிராம அதிகாரிகளுக்குக் கட்டளையிடப்பட்டுள்ளதா?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை?

THE HON. THIRU P. U. SHANMUGAM: (a) Yes.

(b) The Village Headman should collect all taxes and fees which may fall due from time to time to the Panchayats and Panchayat Unions. The Village Karnam should maintain tax assessment Registers and such other records as may be prescribed from time to time for facilitating collection of taxes and fees due to Panchayats and Panchayat Unions.

*Jamabandi System.*

*285 Q.—THIRU M. RAJAH IYER on behalf of THIRU M. ARUMUGASWAMI): Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state—

(a) whether the Jamabandi system now in vogue is to be continued in the State; and

(b) if so, the reasons therefor?

@ Printed as Appendix II on pages 738-739.



28th July 1971]

ஜமாபந்தி முறை

திரு. எம். ராஜா அய்யர் (திரு. எம். ஆறுமுகசாமி சார்பில்): மாண்புமிகு உணவு-வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தற்போது செயலிலுள்ள ஜமாபந்தி முறை இம் மாநிலத்தில் தொடர்ந்து செயலிலிருக்குமா?

(இ) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவை?

THE HON. THIRU P. U. SHANMUGAM: The abolition of the system of Jamabandi is being reviewed by the Government.

MR. CHAIRMAN: Questions 286 and 287 are postponed.

*Bulgarian Trade Representation.*

*288 Q.—THIRU V. ISVARMURTI: Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(a) whether the Bulgarian Trade Representation has planned the demonstration of their tractors in various parts of this State; and

(b) if so, the details thereof?

பல்கேரிய வணிகக் குழு

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இம்மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் பல்கேரிய வணிகக் குழு தங்கள் நாட்டு டிராக்டர்கள் செயல்படுவதைக் குறித்து விளக்கும் வகையில் அவற்றை ஓட்டிக் காட்ட திட்டமிட்டுள்ளதா?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: (அ) ஆம்.

(இ) புதுடில்லியிலுள்ள பல்கேரிய மக்கள் குடியரசின் துணைத் தூதுவர் அலுவலகத்தைச் சேர்ந்த வாணிகப் பிரதிநிதி நமது மாநிலத்தில், தென்னற்காடு, சேலம், மதுரை, திருச்சிராப் பள்ளி, கோயம்புத்தூர், வட ஆற்காடு மாவட்டங்களில் T.L. 30-A போல்கார் எந்திரக்கலப்பையை (ஊர்ந்து செல்லும் அமைப்புடையது) T.L. 30-A Bolgar Tractor (Crawler type) கட்புல விளக்கம் செய்வதற்கு ஏற்பாடு செய்தனர்.

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி: தலைவர் அவர்களே, இந்த டிராக்டர்கள் வேலை செய்வதைக் குறித்து அதிருப்தி தெரிவித்து விவசாயிகள் ஏதாவது புகார் செய்தார்களா?

[28th July 1971

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்:** தலைவர் அவர்களே, அப்படி ஒன்றுமில்லை. ஆனால் எந்த விவசாயியும் இதுவரையில் அந்த இயந்திரக் கலப்பையை வாங்க முன்வரவில்லை.

**திரு. ஜி. சுவாமிநாதன்:** மேற்கு ஜெர்மனியிலிருந்து வாங்கப் பட்ட இது போன்ற டிராக்டர்களைப்பற்றிய புகார் வந்ததா?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்:** இங்கே பொதுவாக மேற்கு ஜெர்மனியிலிருந்து வரவழைக்கப்பட்டிருந்த இயந்திரக் கலப்பைகளைப்பற்றி இந்தியா பூராவிலும் ஏதோ ஒருவிதமான அதிருப்தியின் காரணமாக அவை எந்த நோக்கத்தோடோ வாங்கப் படவில்லை. ஆகவே அவை ஆங்காங்கு இல்லாமல் இருந்து கொண்டிருக்கின்றன.

*Taxi Drivers*

*289 Q.—THIRU G. SWAMINATHAN: Will the Hon. the Minister for Transport be pleased to state—

(a) whteher it is a fact that Taxi Drivers at Central Station, Madras club passengers whose destinations are the same and collect full meter charges from each of them; and

(b) if so, the action proposed to be taken by the Government in the matter?

**வாடகை வண்டி ஓட்டுநர்கள்**

**திரு. ஜி. சுவாமிநாதன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சென்னை, சென்ட்ரல் இரயில்வே நிலையத்தில் வாடகை வண்டி ஓட்டுநர்கள் ஒரே இடத்திற்குச் செல்லும் பயணிகளை ஒன்றுகச் சேர்த்து அவர்கள் ஒவ்வொருவரிடமிருந்தும் முழு மீட்டர் கட்டணத்தை வசூலிக்கின்றனர் என்பது உண்மையா?

(இ) ஆமெனில், இதுகுறித்து அரசு எடுக்கக் கருதியுள்ள நடவடிக்கை யாது?

**மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன்:** (அ) குறிப்பிட்ட புகார்கள் எவையும் பெறப்படவில்லை.

(இ) பயணிகளிடமிருந்து புகார்கள் வருமாயின் தக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

**திரு. எஸ். ஐயாமு செட்டியார்:** தலைவர் அவர்களே, என்னுடைய அனுபவத்தில் சொல்கிறேன். எக்மோர் ஸ்டேஷனில் இறங்கி எம்.எல்.ஏ. ஹாஸ்டலுக்கு டாக்சி கிடைப்பது கஷ்டமாக இருக்கிறது. டாக்சிகாரர்களைக் கூப்பிட்டால் எங்கே போகிறீர்கள் என்று கேட்கிறார்கள். ஆஸ்டலுக்கு என்றால் வருவதில்லை.



28th July 1971]

அல்லது வேறு இரண்டு பேர்களை ஏற்றிக்கொண்டு நம்மை ஆஸ்டலில் விட்டுவிட்டு அதற்கான சார்ஜையும் வாங்குகிறார்கள். நம் தரத்தைக் குறைத்துக்கொண்டு அவர்களோடு சண்டைபோட முடிவதில்லை. ஆகையால் மெம்பர்கள் வருவதற்கு அதுபோன்ற கஷ்டங்கள் இல்லாமல் செய்ய அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன்:** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தகுந்த விவரங்களோடு அங்கேயே புகார் கொடுத்திருந்தால், அவர்கள் மீது தக்க நடவடிக்கை எடுப்பதற்கு வாய்ப்பாக இருந்திருக்கும். எங்கே போகிறீர்கள் என்று டாக்சி டிரைவர்கள் கேட்டதை இங்கே வந்து சொல்கிறார்கள். உறுப்பினர்கள் அவ்வப்போது தெரிவித்தால், அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க முடியும்.

**திரு. வி. வெங்கா:** தலைவர் அவர்களே, சில நேரங்களில் டாக்சி கிடைப்பது கடினமாக இருப்பதால், பிரயாணிகள் சம்மதித்து இரண்டு, மூன்று பேர் போவதற்கு ஒத்துக்கொள்கிறார்கள் என்பதை இந்த அரசு அறியுமா?

**மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன்:** தலைவர் அவர்களே, கட்டணம் விதிப்பது காரணத்திற்கே தவிர பயணிகளின் எண்ணிக்கைக்கு அல்ல.

**திரு. ஜி. சுவாமிநாதன்:** பயணிகள் என்றால் மூன்று, நான்கு பேர்கள் என்று சம்பந்தப்படாதவர்களை ஏற்றிக்கொண்டு செல்வது சட்டப்படி சரியா?

**மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன்:** ஏற்கனவே தெரிவித்தது போல், பட்டணம் வரையிப்பது தூரத்திற்கே தவிர பயணிகள் எண்ணிக்கையைப் பொறுத்து அல்ல.

**திரு. எம். ராஜா அய்யர்:** சட்டசபை உறுப்பினர்கள் டாக்சி டிரைவர்களின் தயவில் வைக்கப்படாதபடி ஸ்பெஷல் பஸ் ஏற்பாடு செய்து செஷன் நடக்கும் காலங்களில் உறுப்பினர்கள் வருவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா? முன்பு அப்படி "பஸ்" ஏற்பாடு செய்ய உத்தேசம் இருந்ததாகத் தெரிகிறது. இப்போது அதுபற்றிய செயற்குறிப்பு ஏதாவது இருக்கிறதா?

**மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன்:** சட்டமன்ற கூட்டத் தொடர் ஆரம்ப காலத்திலும் முடிந்து செல்கிறபோதும் அந்த வசதி உறுப்பினர்களுக்குச் செய்துதரப்படும்.

*Coin shortage*

*290 Q.—THIRU V. ISVARMURTI: Will the Hon. the Minister for Transport be pleased to state—

(a) whether the Government are aware of the difficulties of the bus passengers due to coin shortage; and

(b) if so, the details thereof?

[28th July 1971

### சில்லறைத் தட்டுப்பாடு

**திரு. வி. ஈஸ்வரமூர்த்தி :** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சில்லறைத் தட்டுப்பாடு காரணமாக பேருந்துப் பயணிகளுக்கு ஏற்பட்டுள்ள இடர்ப்பாடுகள் பற்றி அரசு அறியுமா ?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை ?

**மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன் :** (அ) ஆம்.

(இ) சிறு நாணயங்கள் பற்றாக்குறை காரணமாக சில்லறை கொடுப்பதில் பயணிகளும் அரசுப் பேருந்து போக்குவரத்துப் பயணித்தூணைகளும் (Conductors) இடறுகின்றனர்.

MR. CHAIRMAN : Questions 291 to 295 are postponed.

### *Shift System in Colleges*

* 4 *S.N. Q.*—THIRU V. ISVARMURTI : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether the shift system will be introduced in the State during the academic year 1971-72 in view of the heavy rushes in the colleges; and

(*b*) if so, the details thereof ?

### கல்லூரிகளில் முறைமாற்று ஏற்பாடு

**திரு. வி. ஈஸ்வரமூர்த்தி :** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இம்மாநிலத்தில் 1971-72-ஆம் கல்வியாண்டில் கல்லூரிகளில் இட நெருக்கடி அதிகமாயிருப்பதைக் கருதி முறைமாற்று ஏற்பாடு (Shift system) செயற்படுத்தப்படுமா ?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

### *Dismissal from service*

* 5 *S.N. Q.*—THIRU S. S. THENNARASU : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether it is a fact that one Govindan, a Tamil Pandit in the S.H. N.V. High School at Sivakasi, Ramanathapuram district, has been dismissed from service; and

(*b*) if so, the reasons therefor ?



28th July 1971]

### வேலை நீக்கம் செய்யப்பட்ட நிகழ்ச்சி.

**திரு. எஸ். எஸ். தென்னரசு :** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இராமநாதபுரம் மாவட்டம் சிவகாசி (S.H. N.V.) உயர்நிலைப் பள்ளியில் கோவிந்தன் எனும் தமிழாசிரியர் வேலை நீக்கம் செய்யப்பட்டார் என்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், அதற்கான காரணமென்ன ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** (அ) ஆம்.

(இ) (1) சுற்றறிக்கையில் கையொப்பம் இடமறுத்தல். விசாரணை இடங்களை விட்டு வெளியேறுதல். (2) மாணவர்களை அடித்து தங்கள் பெயர்களை மாற்றிக் கொள்ள வற்புறுத்தியது. (3) தலைமையாசிரியரை மற்ற ஆசிரியர்களின் இடையில் தரக் குறைவு அவதூறான வார்த்தைகளைப் பேசியது ; மாணவர்களை ஆர்ப்பாட்ட ஊர்வலம் நடத்துவதற்காக வகுப்பறைகளை விட்டு வெளியேற தூண்டியது.

**திரு. எஸ். எஸ். தென்னரசு :** தலைவர் அவர்களே, சம்பந்தப்பட்ட ஆசிரியர் மீது தமிழ் வெறி என்ற காரணத்தைச் சொல்லி அவரை வேலையிலிருந்து நீக்கியதாக அவர் அரசாங்கத்திற்கு விண்ணப்பித்து அரசாங்கம் அவரைத் திரும்பவும் எடுத்துக் கொள்ள வேண்டுமென்று உத்தரவிட்டிருக்கிறது. அதன் பிறகு அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** நான் முதலிலேயே சொன்னேன். அந்தக் காரணங்களை வைத்து பள்ளி நிர்வாகத்தினர் அந்த ஆசிரியரை வெளியேற்றினார்கள். அவர் மாவட்டத் தலைமைக் கல்வி அதிகாரியிடம் முறையீடு செய்தார். மாவட்டக் கல்வி அதிகாரி விசாரணை செய்து ஆசிரியரை நீக்குவதற்கான காரணங்கள் இல்லை என்றும் மறுபடியும் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்றும் உத்தரவிட்டார். மறுபடியும் நிர்வாகத்தினர் பள்ளிக் கல்வி இயக்குநரிடத்தில் முறையீடு செய்து ஆசிரியரை நீக்கியது சரியானது என்று ஆணை பிறப்பிக்கும்படி கேட்டார்கள். பள்ளிக் கல்வி இயக்குநர் ஆராய்ந்து பார்த்து மாவட்டக் கல்வி அதிகாரி தீர்ப்பே சரியானதாக இருக்கிறது என்றும் மறுபடியும் அவரைப் பள்ளியில் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்றும் தீர்ப்பளித்தார். இப்போது நிர்வாகத்தினர் அரசிடம் முறையீடு செய்திருக்கிறார்கள். அரசின் பரிசீலனையில் அந்த முறையீடு இருந்து வருகிறது.

[28th July 1971

*Unstarred Questions.*

*Pensioners*

27 *Q.*—THIRU V. ISVARMURTI: Will the Hon. the Chief Minister be pleased to state the number of pensioners who are more than (1) sixty years, (2) seventy years and (3) eighty years as on date?

A.—The particulars are as follows:—

More than sixty—14,122.

More than seventy—7,641.

More than eighty—2,340.

*Restaurants.*

28 *Q.*—THIRU M. ARUMUGASWAMI: Will the Hon. the Chief Minister be pleased to state the names of the (i) Vegetarian, (ii) Non-Vegetarian Restaurants where "Dine and Dance" performances are permitted in Madras City?

*A.*—(i) Nil.

(ii) Hotel Arun.

Hotel Mayfair.

Hotel Imperial

Hotel Savera.

Pals Restaurant.

Hotel Gaylord.

*Teachers in Kanyakumari district*

29 *Q.*—THIRU G. SWAMINATHAN: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) the rules in force with regard to regularisation of the services of teachers in Kanyakumari district;

(*b*) whether any complaint has been received during the year 1969 from any Teachers' Union in that District regarding the non-observance of such rules in Thuckalay Educational District (Kanyakumari district); and

(*c*) if so, the action taken thereon?

*A.*—(*a*) No separate rules for regularisation of services of teachers in Kanyakumari district, were framed but special rules for Tamil Nadu Educational Subordinate Service were being followed in the case of Kanyakumari district also.



28th July 1971]

(*b*) Yes. Due to the bifurcation of the Kanyakumari District in August 1963, the services of the teachers in each of the two Educational Districts, viz., Nagercoil and Thuckalay were regularised by the respective District Educational Officers independently which resulted in certain anomalies.

(*c*) Suitable orders have been issued to the Chief Educational Officer, Tirunelveli, to recast the seniority of the affected teachers by regularising their services with reference to the date of their first appointment.

*Amount spent per head on Education.*

30 *Q.*—THIRU G. SWAMINATHAN: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) the amount spent per head of population of our State on Education; and

(*b*) how is the figure compared to the expenditure made by the Centre and the other States of India?

*A.*—(*a*) and (*b*): A statement @ is laid on the Table of the House.

*Nurses' Associations.*

31 *Q.*—THIRU V. ISVARMURTI: Will the Hon. the Minister for Public Health be pleased to state the number of Nurses' Associations to which recognition has been given during 1970-71?

*A.*—Nil.

*Professional Registrants in the Employment Exchanges.*

32 *Q.*—THIRU V. ISVARMURTI: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) the number of (i) professional and (ii) non-professional registrants in the Employment Exchanges during 1970-71; and

(*b*) among them the number of persons to whom placements were found during the period?

A.—

(*a*) (i) 11,401.

(ii) 4,79,285.

(*b*) (i) 2,567.

(ii) 51,459.

@ Printed as Appendix III on page 739.

[28th July 1971

*Courts functioning in rental buildings.*

33 Q.—THIRU D. SANTOSHAM: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) the number of Sub-Magistrate's Courts, Additional First Class Magistrate's Courts and other Courts that are functioning in rental buildings;

(*b*) the total annual rent paid for all these buildings;

(*c*) whether there is any proposal to construct Government building for these Courts; and

(*d*) if so, the details therefor ?

A.—

(*a*) 37 (thirty-seven).

(*b*) Rs. 1,09,584.

(*c*) Yes.

(*d*) The proposals for various places are being considered by the Government.

*Agricultural Pumpsets.*

34 Q.—THIRU G. SWAMINATHAN: Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(*a*) the number of applications Taluk-wise pending over a year with the State Electricity Board for energising agricultural pumpsets in Thanjavur district as on 1st June 1971; and

(*b*) the reason for the delay ?

A.—(*a*) The number of applications for agricultural services pending supply for over a year as on 1st June 1971 in Thanjavur district is as follows (Taluk-wise) :—

| Serial number and taluk. | Number of Agricultural applications pending. | Probable date of supply. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1 Sirkali .. .. | 61 | 31st March 1972. |
| 2 Mayuram .. .. | 176 | Do. |
| 3 Kumbakonam .. | (Mostly covered by licensee area and no applications are pending with the Tamil Nadu Electricity Board). | |
| 4 Nannilam .. .. | 167 | Do. |
| 5 Papanasam .. .. | 1 | Do. |
| 6 Thanjavur .. .. | 442 | Do. |
| 7 Orathanad .. .. | 498 | Do. |
| 8 Mannargudi .. .. | 284 | Do. |
| 9 Nagapattinam .. | 21 | Do. |
| 10 Thiruthuraipoondi .. | 354 | Do. |
| 11 Pattukottai .. .. | 213 | Do. |
| 12 Aranthangi .. .. | 399 | Do. |
| Total .. | 2,616 | |



28th July 1971]

(*b*) The applications are pending for the following reasons :—

(i) 30 per cent of the parties are not ready to avail supply.

(ii) The Thanjavur district applicants are interested in getting power supply only during canal irrigation closure season and that too for a short period before water is let down in the canal for raising the nurseries.

(iii) The works could be done only during non-irrigation season. During irrigation season, the fields being water-logged, no work could be done.

*Ghee Production.*

35 Q.—THIRU V. ISVARMURTI: Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(*a*) the steps taken by the Madhavaram Milk Project to dispose of the ghee produced there; and

(*b*) the total quantity produced and sold during 1969-70 and 1970-71 ?

A.—(*a*) The ghee is sold through the Zonal Offices and Milk Depots in Madras City.

(*b*)—

| (1) | 1969-70. (2) KGS. | 1970-71. (3) KGS. |
|---|---|---|
| Quantity of ghee produced .. | 23,238·240 | 24,525·685 |

Except for a closing balance for 1,987.50 Kgs. at the end of 1970-71, the stocks have been sold.

MR. CHAIRMAN: Questions are over.

(*Note.*—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member).

II. ANNOUNCEMENT *RE* DECISION OF THE BUSINESS ADVISORY COMMITTEE.

MR. CHAIRMAN: At a meeting of the Business Advisory Committee held at 3-30 p.m. to-day, the following programme of business has been decided :—

July 29th—Policy Note on 'Co-operation' (One hour). Consideration of Appropriation Bill.

July 30th and July 31st—Official Bills.

The Council will meet at 4 p.m. on the 29th and 30th July and at 9-30 a.m. on the 31st July 1971. The Council will adjourn on the 31st July 1971.

[28th July 1971

III. GOVERNMENT MOTIONS.

## (1) CONSTITUTION OF SELECT COMMITTEE FOR SUGGESTING AMENDMENTS TO THE TAMIL NADU LEGISLATIVE COUNCIL RULES.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: "தமிழக சட்ட மன்ற விதிகளில் திருத்தம் செய்வதற்கான திருத்தங்களைத் தெரிவிப்பதற்காக கீழ்க்கண்ட உறுப்பினர்களைக் கொண்ட குழு ஒன்று அமைக்கப்படவேண்டுமென்று" முன்மொழிகிறேன்.

1. மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர் (குழுவின் தலைவர்)
2. மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி (முதலமைச்சர்)
3. மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் (கல்வி, உள்ளாட்சித் துறை அமைச்சர்)
4. திரு. வி. தங்கபாண்டியன்
5. திரு. ஜி. பராங்குசம்
6. திரு. எஸ். டி. ஆதித்தன்
7. திரு. ஏ. ஆர். தாமோதரன்
8. திரு. ஜி. சுவாமிநாதன்
9. திரு. எம். ராஜா அய்யர்
10. திரு. கே. ராஜாராம் (எதிர்க்கட்சித் தலைவர்)
11. திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு
12. திருமதி எஸ். மஞ்சுபாஷினி

**Mr. CHAIRMAN**: The question is—

'That a Committee consisting of the following Members be appointed to make suggestions for the amendment of the Tamil Nadu Legislative Council Rules :—

1. The Hon. Chairman—Chairman.
2. The Hon. Chief Minister (Leader of the House).
3. The Hon. Thiru V. R. Nedunchezhiyan (Minister for Education and Local Administration).
4. Thiru V. Thangapandian.
5. Thiru G. Parangusam.
6. Thiru S. T. Adityan.
7. Thiru A. R. Damodaran.
8. Thiru G. Swaminathan.
9. Thiru M. Rajah Iyer.
10. Thiru K. Rajaram.
11. Thiru R. Krishnaswamy Naidu.
12. Thirumathi S. Manjubhashini.

**The motion was put and carried.**

**Mr. CHAIRMAN**: The Deputy Chairman will be the ex-officio member of the Committee.



28th July 1971]

## (2) DISCUSSION ON THE POLICY NOTE ON AGRICULTURE.

**Mr. CHAIRMAN: Now the Hon. the Minister for Agriculture will move the motion.**

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: தலைவர் அவர்களே, சட்ட மன்றத்தின் முன் வைக்கப்பட்ட 'வேளாண்மைக் கொள்கைக் குறிப்பு'@ பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டுமென்று முன்மொழிகிறேன்.

Mr. CHAIRMAN: Motion moved—

"That the Policy Note on 'Agriculture' placed on the table of the House be taken into consideration".

திரு. எஸ். ஜெயராம செட்டியார்: தலைவர் அவர்களே, நம் மூடைய மாநிலத்தில் வேளாண்மைத் துறையினர் தாங்கள் கொடுத்திருக்கும் அறிக்கைகளின் மூலம் எவ்வளவு சவிஸ்தார மாகக் காரியங்களை நடத்தி வந்திருக்கிறார்கள் என்று புள்ளி விவரத்தோடு எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். நான் மற்ற மாவட்டங்களைப்பற்றிப் பேசப் போவதில்லை. குறிப்பாக ராமநாத புரம் மாவட்டத்தில் இருக்கும் நாங்கள் படும் அல்லல்களைப் பற்றி இப்போது பேசவிருக்கிறேன். எங்கள் மாவட்டத்தில் சப்கலெக்டராக திரு. என். ஹரி பாஸ்கர் இருந்தார். இன்று அவர் தான் 'டைரக்டர் ஆப் அக்ரிகல்ச்சர்'. அவர்களுக்கு சிவகாசி டிவிஷனில் உள்ள கஷ்ட நஷ்டங்கள் நன்றாகத் தெரியும். அங்கே இப்போது எல்லாம் மானம் பார்த்த பூமியாக இருக்கிறது. ஏராள மான செலவு செய்து இருபது ஆயிரம், முப்பது ஆயிரம் ரூபாய் செலவு செய்து கிணறுகள் தோண்டுகிறார்கள். ஆனால் தண்ணீர் இல்லாமல் வறட்சியாக இருக்கிறது. குறிப்பாக என்னுடைய கிராமம் விருதுநகரிலிருந்து 2 மைல் தொலைவில் இருக்கிறது. காலையில் குளிப்பதற்கு எங்கள் கிணற்றுக்கு விருதுநகரிலிருந்து சுமார் 50 பேர்கள் சைக்கிளில் வருகிறார்கள். இப்போது கடன் கொடுத்தும் கூட விவசாயிகள் நல்ல நோக்கத்துடன் வாங்கி மறுபடியும் செலுத்த முடியாத நிலையில் இருக்கிறார்கள். அந்த நிலைமையைப் போக்குவதற்கு நன்றாக எந்த இடத்தில் தண்ணீர் இருக்கிறது என்று தெரிந்து அந்த இடத்தில் கிணறுகளைத் தோண்டிக் கொடுத்து கடன் விவசாயிகள் மீது சுமத்தி அவர்களிடமிருந்து தவணைகள் மூலம் வசூலிக்க ஏற்பாடு செய்தால், நலமாக இருக்கு மென்று கருதுகிறேன். என்னுடைய அனுபவத்தில் இரண்டு கிணறுகளைத் தோண்டி இரண்டையும் இணைத்துப் பார்த்தும் கூட சமீபத்தில் 100 அடி, 200 அடி போட்டும் தண்ணீர் வரவில்லை. அதற்குப் பக்கத்தில் ஒரு பையன் விவசாயி ரூ. 10,000 கடன் வாங்கி ஒரு கிணறு தோண்டியிருக்கிறான். அது காணவில்லை என்று என்னை அணுகி மேற்கொண்டு கொஞ்சம் ரூபாய் கேட்டான். "உன்னுடைய தகப்பன் நிலத்தை என்னுடைய மூதாதையர்கள் கடன் கொடுத்து அதற்காக எடுத்துக்கொண்டார்கள் என்று சொல்லுகிறார்கள்.

@ Printed as Appendix IV on pages 87-190.

இன்னும் கடன் உனக்குக் கொடுத்து நிலத்தை எடுத்துக் கொண்டான் என்ற கெட்ட பெயர் வரக்கூடாது என்று, கொடுக்கிற நிலைமை இருந்தாலும் கொடுக்க முடியாது" என்று சொல்ல வேண்டிய நிலைமை இருந்தது என்பதை சர்க்காருக்குச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். சமீபத்தில் முதலமைச்சர் பிளவைக்கல் திட்டத்தைப் பார்வையிட்டார். பல குளங்கள் புதிதாக வெட்டப் பட்டன. சின்னமூப்பன்பட்டி என்ற கிராமத்தில் கக்கன் கண்மாய் என்று இருக்கிறது. காங்கிரஸ் காலத்தில் கட்டப்பட்டது. 10, 12 வருஷங்கள் இருக்கும். வேடுவர்களுக்கு நிலம் கொடுப்பது என்று ஒதுக்கினார்கள். அதில் இன்றையதினம் யாரும் பயிர் செய்யவில்லை. கொடுக்கப்பட்ட முன் பணத்தை விரயம் செய்துவிட்டு மறு வேலை பார்க்கிறார்கள். அதனால் என்ன சொல்லுகிறேன் என்றால், குளங்கள் உற்பத்தி செய்தாலும் சரி, கிணறுகள் தோண்டுவதற்கு ஏற்பாடு செய்தாலும் சரி, இடத்தையும் பார்க்க வேண்டும்; அதே சமயத்தில் தண்ணீர் வளம் எப்படி இருக்கிறது என்று சார்க்கார் அறிந்து கடன் உதவி செய்தால், கடன்களைத் திருப்பிப் பெறுவதற்கு வசதியாக இருக்கும் என்று கருதுகிறேன் முன்பெல்லாம் ஒரு ஆசை அதாவது ஒரு கிணறு தோண்டி சம்பாதித்து விடலாம் என்று ஆசைப்பட்டுக் கொண்டிருந்தார்கள். போன வருஷம் ஒரு குழிண்டால் மிளகாய் ரூ. 700 முதல் ரூ. 1,000 வரை விற்றது. இந்த வருஷம் ரூ 300 ஆகக் குறைந்து விட்டது. ஆனால் மற்ற விலைகள் இருக்கின்றன. இருந்தாலும் நான் என்ன சொல்லுகிறேன் என்றால், ஒரு விவசாயி கிணறு தோண்டி எக்கர் நிலம் தண்ணீர் இல்லை என்ற எண்ணம் இல்லாமல் இந்த அரசு செய்யும் படியான ஒரு திட்டத்தைக் கொண்டுவர வேண்டுமென்று விரும்புகிறேன். இப்போது இருக்கிற நிலைமை உறுப்பினர் திரு. கிருஷ்ணசாமி நாயுடு அவர்களுக்குத் தெரியும். ஸ்ரீவில்லிபுத்தூர், சாத்தூர் தாலுக்காக்களில் எப்படி கிணறுகள் தோண்டி வருகிறார்கள் என்று. நிலவை வங்கியின் மூலம் ஏராளமாகக் கடன் கொடுக்கிறார்கள். அதுமாதிரி செய்தாலும் கூட தண்ணீர் இல்லாத காரணத்தால் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். கிழக்கு ராமநாதபுரமும் மேற்கு ராமநாதபுரமும் அப்படித்தான் இருக்கிறது. அதுமாதிரி நிலைமை இல்லாதபடி பார்த்துக்கொள்ள வேண்டும். எப்படிப் பார்த்தாலும் கடனைத் தீர்த்துக் கொடுக்க முடியவில்லை என்ற நிலைமையைவிட, முதலில் கிணறுகள் வெட்டிக்கொடுத்து, பணத்தைத் திரும்பக் கொடுக்கும்படியான நிலைமையை உண்டாக்கும்படியான ஒரு திட்டத்தை வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் ஏற்படுத்திக் கொடுப்பார்கள் என்று நம்புகிறேன். எங்கள் தாலுக்காவில் ஏழு கண்மாய்கள் வெட்டினார்கள். அதனால் எத்தனை எக்கர் நிலம் விவசாயத்திற்கு உட்பட்டது, என்ன பயன் இருக்கிறது என்று பார்க்க வேண்டும். நல்ல கண்மாய் வெட்டினாலும், நிலம் சரியாக இல்லாத காரணத்தால், உவர் நிலமானதால், ஒன்றும் பயிர் செய்ய முடிவதில்லை. 'டிஸ்டிரிக்ட் லெவல் மெண்டு கவுன்சில்' மீட்டிங்கில்

4-50 p.m.





விவசாய அதிகாரியைக் கேட்டால் நாங்குநேரி பகுதியிலிருந்து பணி ஓலையைக் கொண்டுவந்து ரூ. 1,000 செலவு செய்தால், நல்ல நிலமாக ஆக்கலாம் என்று சொன்னார்கள். அருப்புக்கோட்டை பக்கத்தில் செட்டிகுறிச்சி கிராமத்தில் ஒரு கண்மாய் தோண்ட திட்டமிட்டார்கள். இது எப்படிப்பட்ட இடம் என்பதைப் பார்த்துச் செய்ய வேண்டும். ஒரு தடவை எங்கள் ஊரில் டிராவலர்ஸ் பங்களாவில் ஒரு அதிகாரியைப் பார்க்கும்போது— அவர் கோவையிலிருந்து வந்த அக்ரானமிஸ்ட்—அவரை எங்கே வந்தீர்கள் என்று கேட்டதற்கு, அருப்புக்கோட்டை தாலுக்காவில் எங்கே குளங்கள் போடலாம் என்று பார்க்க வந்தேன் என்று சொன்னார். மண் சரியாக இருக்கிறதா என்று பார்த்துச் செய்ய வேண்டும். விவசாயிகளுக்குக் கடன் கொடுத்தால், அந்தக் கடனைத் திருப்பிக் கொடுக்கும்படியான நிலையை அந்த விவசாயிகளுக்கு உண்டாக்க வேண்டுமென்று அரசாங்கத்தைத் தாழ்மையுடன் கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்து மார்கட்டிங் கமிட்டியைப்பற்றி இரண்டொரு வார்த்தைகள் சொல்லுகிறேன். நான் ராமநாதபுரம் மார்க்கட் கமிட்டி மேலவன். அங்கே ராஜாகோயத்திலும் விருதுநகரிலும் அழகான கட்டிடங்கள் கட்டி அவைகள் திறந்து வைக்கப்பட்டிருக்கின்றன. அங்கே கமிஷன் வியாபாரிகள் இருக்கிறார்கள் எங்களுடைய அவர்கள் பரம்பரையாக கமிஷன் கடை நடத்தி வருகிறார்கள் மார்கட் கமிட்டியில் ஒரு வியாபாரமும் நடப்பதில்லை. குறிப்பாக ஒன்று சொல்லுகிறேன். அதிலுள்ள கஷ்டம் என்னவென்றால், பாருத்தி வாங்குகிறவனுக்குக் கமிஷன் கடைக்காரன் கடன் கொடுக்கிறான். அவன் மில்லில் அரைத்து பஞ்சு விற்ற பிறகு ரூபாயைக் கொண்டு வந்து கமிஷன் கடைக்காரனுக்குக் கொடுக்கிறான். இங்கே அப்படி அல்ல. விருத்தாசலம், விழுப்புரம் பண்ருட்டி போன்ற எல்லா இடங்களிலேயும் பார்த்திருக்கிறேன். பக்தி மணிக்கு ஆக்ஷன் நடந்து 12 மணிக்கு விவசாயிகளிடத்திலே ரூபாயைக் கொடுக்கின்ற முறை இயங்கி வருவதாலே நன்றாகச் செயல்படுகின்றன. ஆனால் எங்களிடத்திலே "ஆஃபிஸ் ஸ்டாப்" தைத் திருக்கிறோமே தவிர, வேறொன்றும் நன்றாகச் செயல்படவில்லையே என்று வருத்தத்துடன் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். மாண்புமிகு உறுப்பினர் நண்பர் திரு. தர்மலிங்கம் அவர்களுக்கும் தெரியும். அவர்கள் இந்த முறை நன்றாகச் செயல்படுகின்ற வட ஆற்காடு மாவட்டத்திலே இருக்கிறார்கள். எங்கள் மாவட்டத்திலே இது சரியாக நடைபெறவில்லை என்ற காரணத்தால் சொல்கிறேன். இந்த மாதிரியான காரியங்களை யெல்லாம் செய்து விவசாயிகள் வாழ்வித்து நன்மை பெறும்படி செய்யவேண்டும் என்று கேட்டுக் கொண்டு அமர்கிறேன்.

திரு. எஸ். எஸ். தென்னரசு : கூலிவர் அவர்களே, இன்றைய தினம் எடுத்துக்கொண்டிருக்கும் வேளாண்மைத் துறையைப் பற்றி எங்களுடைய மாவட்டத்தைக் தொடர்பாக்கொண்டு இரண்டொரு கருத்துக்களைச் சொல்லிவிட்டு விடை பெற்றுக்கொள்ள விரும்புகிறேன்.

[திரு. எஸ். எஸ். தென்னரசு] [28th July 1971

மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெயராம ரெட்டியார் அவர்கள் அவர்கள் சம்பந்தப்பட்ட இலாக்காக்களை எடுத்துச் சொல்லி அதற்கு வேண்டிய சீர்திருத்தங்களைச் செய்ய வேண்டுமென்று எடுத்துச் சொன்னார்கள். இராமநாதபுரம் மாவட்டத்தைப் பொறுத்த வரையில், வேளாண்மைத் துறையை எடுத்துக் கொண்டால், எல்லா வகையான வசதிகளையும் இந்த அரசு செய்து கொடுத்திருக்கின்றது. உர வகைகள் கிடைப்பதிலே தாமதம் இருந்ததை விரைவுபடுத்தி விவசாயிகள் தமக்குத் தேவைப்பட்ட காலத்தில் உரம் போடுவதற்கு இந்த அரசு சரியான முறைகளை வகுத்திருப்பது வரவேற்கத் தக்கதாகும். அதைப் போலவே டிராக்டர்கள் வழங்குவதில் கட்சி சார்பற்ற முறையில் யாருக்கு அவை தேவைப்படுகிறதோ அவர்களுக்கெல்லாம் வழங்கி விவசாயத்தை முன்னேற்றம் அடையச் செய்வதற்கு நல்ல ஏற்பாடுகளை இந்த அரசு செய்திருப்பது வரவேற்கத்தக்கது.

குறிப்பாக, எங்களுடைய மாவட்டத்தைப் பொறுத்த வரையில், நம்முடைய வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கடந்த மாதம் சுற்றுப்பிரயாணம் செய்திருக்கிறார்கள். அவர்களுக்கு முன்னால் இப்பொழுது வருவாய்த் துறை அமைச்சராக இருக்கக் கூடியவர்கள் முதுகுளத்தூர், அருப்புக்கோட்டை தாலுக்காக்களில் சுற்றுப் பிரயாணம் செய்தபோது, அவர்களுக்குக் கொடுத்த வரவேற்பு இதழ்களில் ஒரேயொரு சிறப்பை மட்டும் அந்த மக்கள் எதிர்பார்த்தார்கள். வைகை நதியில் இராமநாதபுரம் மாவட்டத்திற்குச் சரியான உரிமை இல்லை என்ற குற்றச்சாட்டு நீண்டகால மாக இருந்து வருகிறது. வைகை அணை கட்டுகிறபோது மதுரை மாவட்டத்திற்கிருந்த ஆயக்கட்டைவிட மிக அதிகமான ஆயக்கட்டுகள் சேர்த்திருப்பதால், அது மதுரையைக் கடந்து திருப்புவனம், மானாமதுரைப் பகுதிக்கு வருகிறபோது தண்ணீர் சரிவரக் கிடைக்கவில்லை என்று பெரும்பாலான மக்கள் குற்றஞ்சாட்டுகிறார்கள் என்பதை இந்த அரசின் கவனத்திற்குக் கொண்டுவர வேண்டுமென்று விரும்புகிறேன். வைகை அணையில் இராமநாதபுரம் மாவட்டத்திற்கு எவ்வளவு தண்ணீர் என்று திட்டவட்டமாக அரசாங்கம் தெரிவித்தால் தான் மக்களுக்கு இதிலே இருக்கக்கூடிய மனத் தகராறுகள் நீங்கும் என்பதை நான் வேளாண்மைத்துறை அமைச்சர் அவர்களுடைய மேலான கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். மதுரை மாவட்டத்தில் வைகையின் மூலமாக இருபோக சாகுபடி ஏற்பட்டு வருகிறது. ஆனால் அதே நேரத்தில் இராமநாதபுரம் மாவட்டத்தில் ஒருபோக சாகுபடிக்குக்கூட வைகையின் மூலம் தண்ணீர் கிடைக்கவில்லை என்ற குற்றச்சாட்டை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். வைகை நதியின் தண்ணீரை ஒதுக்க இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு உரிமை இல்லை. மதுரை மாவட்ட ஆட்சித் தலைவருக்குத்தான் இருக்கிறது. எனவே இராமநாதபுரம் மாவட்டத்திற்கு வேண்டிய தண்ணீரைத் திறந்து விடுவதற்கு இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு உரிமை தரும் இந்த அரசு சரியான சட்டத்தை உருவாக்க வேண்டும். இந்தச்



28th July 1971] [திரு. எஸ். எஸ். தென்னரசு]

சட்டத்தில் மதுரை மாவட்டத்திற்கு எவ்வளவு தண்ணீர் தரப்பட வேண்டும், இரு போக சாகுபடிக்கு எவ்வளவு தரப்பட வேண்டும், ஒரு போக சாகுபடிக்கு எவ்வளவு தரப்பட வேண்டும், ஒரு போக சாகுபடி மட்டுமே செய்துகொண்டிருக்கக்கூடிய முதுகுளத்தூர், பரமக்குடி தாலுக்காக்களுக்கு எவ்வளவு தரப்பட வேண்டும் என்பதைத் திட்டவட்டமாக அறிவித்தால், அங்கே எங்களுக்குள்ளே இருக்கக்கூடிய மனக் கசப்புகள் நீங்குவதற்கு வாய்ப்பாக இருக்கும் என்று நான் மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

(Deputy Chairman in the chair.)

இன்னுமொன்று, முதுகுளத்தூர் தாலுக்காவில் நமது அமைச்சர் அவர்கள் சுற்றுப்பிரயாணம் செய்தார்கள். ஏறத்தாழ 23 இடங்களில் வரவேற்புகளைப் பெற்றார்கள். அந்த 23 இடங்களிலேயும் அவர்களுக்குக் கண்ணீர் விட்டு ஒரு கருத்தை வெளியிட்டார்கள். நீண்டகாலமாக முதுகுளத்தூர் தாலுக்கா பின்தங்கியிருந்தது; அதற்குச் சரியான நீர்ப்பாசன வசதி கிடையாது, பழைய சர்க்காரும் எங்களைக் கவனிக்கவில்லை, எங்களைப் புறக்கணித்து விட்டது, இப்பொழுது இருக்கக்கூடிய சர்க்கார் காருண்ய மிக்க சர்க்கார், எங்களுக்கு உதவி செய்ய வேண்டும், பரிசீலனையிலே இருக்கக்கூடிய கிருதமால் திட்டத்தை அமலுக்குக் கொண்டுவந்து அதன் மூலம் அருப்புக்கோட்டை தாலுக்கா, திருச்சுழி தாலுக்கா, கமுதி தாலுக்கா, முதுகுளத்தூர் தாலுக்காக்களுக்கு உதவ வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். அதைப் பற்றிப் பொதுப்பணித் துறை குறிப்புகளை வைத்திருக்கிறது. இந்த நதி மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த ஒரு இடத்தில் உற்பத்தியாகி இராமநாதபுரத்தில் 27 மைல் கேச்மெண்ட் ஏரியாவைக் கொண்டு கமுதி வழியாக வந்து முதுகுளத்தூர் வரையில் வருகிறது. அப்படிப்பட்ட நதியில் விவசாயிகள் இன்று கழியணை கட்டி தண்ணீரைத் தடுத்து விவசாயத்திற்குப் பயன்படுத்துகிறார்கள். அது சிலவிடங்களிலே சட்டவிரோத மென்று தடுக்கப்படுகிறது. அப்படிப்பட்டவற்றை மாற்றி, நிரந்தரமாக எங்கெங்கே அணைகளைக் கட்ட வேண்டுமோ அவற்றையெல்லாம் கட்டித் தீர்த்து நீண்டகாலமாக மனம் வெதும்பிப் போயிருக்கக்கூடிய கமுதி, திருச்சுழி, முதுகுளத்தூர் தாலுக்கா மக்களும் நீர்ப்பாசன வசதி செய்து கொடுத்தால், நீண்டகாலமாக இருக்கக்கூடிய குறை நீங்கும் என்பதனால் இந்த நேரத்திலே இரண்டு குறைகளை மட்டும் எடுத்துக்கூறி, வேளாண்மைத் துறை அமைச்சர் வேளாண்மைக் குடும்பத்தைச் சேர்ந்தவர் என்பதாலே அதைப் பரிசீலனை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். "பார்க்கலாம் பார்க்கலாம்" என்று பழைய அரசாங்கத்தின் அரசியல் கொள்கைகளைக் வைத்திருந் தார்கள். ஆனால் புதிய கொள்கை, நமது முதல்வர் மாண்புமிகு கலைஞர் அவர்கள் கூறியதைப்போல், நான் பத்தாயக் குதிரை வேகத்

5-00 p.m.

[திரு. எஸ். எஸ். தென்னரசு] [28th July 1971

நில் வேகமாகப் போகிறேன், அதிகாரிகளும் என்னோடு வரவேண்டும், வரமுடியாதவர்கள் ஒதுங்கிக்கொள்ள வேண்டும் என்று தெரிவித்துக் கொண்டிருக்கிறபடி, வேகமாகப் பணியாற்றி நாங்களெல்லாம் வளம் பெற்றுக் கொண்டிருக்கிறோம். வேளாண்மைத் துறையைப் பொறுத்த வரையில், இன்னும் தரிதமான நடவடிக்கையை எடுக்க வேண்டும். விரைவிலே இந்த அரசு செய்யும் என்ற நம்பிக்கைக்கு ஏற்ப அரசு செய்ய வேண்டும் என்று கூறி விடைபெறுகிறேன். வணக்கம்.

திரு. வி. வெங்கா : துணைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் நம்முடைய அவையின் முன்பாக வைக்கப்பட்டுள்ள 4½ கோடி தமிழக மக்களின் அயிற்றை நிரப்பக்கூடிய வேளாண்மை கொள்கைக் குறிப்பின் மீது என்னுடைய சொந்தக் கருத்துக்களையும் சொல்ல ஆசைப்படுகிறேன்.

தமிழக அரசு 1967-ல் பொறுப்பேற்ற நேரத்தில் ஒரு சிலர் இந்த அரசு அரிசிப் பிரச்சினையை எடுத்துச் சொல்லி, மக்களே மயக்கி வாக்குகளைப் பெற்று ஆட்சியைக் கைப்பற்றி விட்டது என்று எடுத்துச் சொன்னார்கள். உள்ளபடியே அவர்களுடைய குற்றச்சாட்டு உண்மை என்பதை இன்றைய தினம் பொறுப்பேற்றிருக்கக்கூடிய அரசினர்—அமைச்சரவை—நிரூபித்துக்காட்டியிருக்கின்றனர். இந்த நாட்டிலே இருக்கக்கூடிய முக்கியமான பிரச்சினையை உணவுத் தட்டுப்பாட்டைப் போக வேண்டும் என்று கருதிய அரசினர் இந்த நான்காண்டுக் காலத்திலே நல்ல முறையிலே தங்களுடைய முழு கவனத்தையும் விவசாயத்திற்காகச் செலுத்தியிருக்கிறார்கள். முதலாவதாக விவசாயிகள் உபயோகித்துவந்த ரசாயன உரங்கள் விவசாயிகளுக்குக் கட்டுப்படியாகக்கூடிய விலையிலே கிடைக்காத சூழ்நிலை இருந்தது. யூரியா உரமோ அல்லது சிந்திரி அம்மோனியம் சல்ஃபேட்டோ நியாயமான விலையில் கிடைக்காது. ஒன்றுக்கு இரண்டுபடியாக, அதுவும் மாலை நேரங்களிலும் இரவு நேரங்களிலேயும் கள்ள மார்க்கெட்டிலே பெற வேண்டிய சூழ்நிலை இருந்தது. இந்த அரசு பொறுப்பேற்ற வுடனே விவசாயிகளுடைய தேவையாகிய ரசாயன உரத்தை நியாயமான விலையிலே அனைவர்க்கும் அமோகமாகக் கிடைக்கச் செய்ய வேண்டும் என்ற கொள்கையை வகுத்து மிக அதிக அளவிலே அரசு தன்னுடைய கிடங்குகளிலே ஸ்டாக்குகளை நிரப்பியது. மார்க்கெட்டுகளிலே நிறைய உரங்கள் கிடைக்க வழி செய்தார்கள். அதனுடைய விளைவுதான் நேற்றைய முன்தினம் கூட அரசுக் கிடங்குகளிலே இருக்கக்கூடிய உரங்கள் வாங்குவதற்கு ஆட்கள் இல்லாத காரணத்தால், கோணிகள் குறைந்துவிட்டன என்ற குறைபாடுகள்கூட இந்த மன்றத்திலே எடுத்துச் சொல்லப்பட்டன. அந்த அளவுக்கு உரத்தை இந்த நாட்டு ஏழை விவசாயிகளுக்கு விநியோகிக்க இந்த அரசு முயற்சி எடுத்துக்கொண்டது. அதுமட்டுமல்லாமல், இன்றையதினம் அமைந்திருக்கிற மத்திய அரசு உரத்திற்குக் கொடுத்துவந்த மானியத்தை நிறுத்துவது என்று முடிவு செய்தபோதிலும்கூட, இந்த உரத்தை ஏழை உழவர்களுடைய பிரச்சினையை, ஏழை விவசாயிகளுடைய



28th July 1971] [திரு. வி. வெங்கா]

பிரச்சினையை நன்கு உணர்ந்திருந்த காரணத்தால், மத்திய அரசு அப்படிச் செய்தாலும்கூட, மாநிலத்திலே பொறுப்பேற்றுக்கொண்டிருக்கக்கூடிய நாங்கள் அந்த விவசாயிகளுக்கு நியாயமான விலையிலே உரங்கள் கிடைப்பதற்கு வழிவகைகள் காண்போம் என்று உறுதி எடுத்துக்கொண்டு நம்முடைய அமைச்சர்கள் இன்றைய தினம் குறிப்பிட்டது போன்று ஏறக்குறைய இரண்டு கோடி ரூபாய் நட்டத்தைத் தாங்கிக்கொண்டு உரங்களை விநியோகித்துக்கொண்டு வருகிறார்கள்.

அதே நேரத்தில் இன்றைய தினம் நமது அரசு பொறுப்பேற்ற பிறகு, விஞ்ஞான முறையில் விவசாயம் நாட்டில் நடைபெற வேண்டும் என்ற பிரசாரத்தை பட்டிதொட்டிகள் பூராவும் கட்டுக்கோப்போடு செய்துகொண்டு வருகின்றார்கள். அதன் விளைவாக கிராமத்தில் இருக்கக்கூடிய படிப்பு அறிவு பெறுத பாமர விவசாயிகள் கூட இன்றையதினம் விஞ்ஞான ரீதியில் தனக்குச் சொந்தமான 30 சென்ட் அல்லது 60 சென்ட் நிலத்தை விளை நிலங்களாக மாற்ற முயற்சித்துக்கொண்டிருக்கிறார்கள். அந்த முயற்சி நல்ல முறையிலே வெற்றியடைந்திருக்கிறது. அதுமட்டுமல்லாமல், விவசாயிகளின் விஞ்ஞான அறிவை பெருக்குவதோடு மட்டுமின்றி அறிவு பெற்ற கிராம விவசாயிகளுக்குப் பொறுக்கு விதைகளைக் கொடுத்து, அமோக விளைச்சலைத் தரக்கூடிய பொறுக்கு விதைகளைக் கொடுத்து, பயிரிடச் செய்திருக்கிறார்கள். ஐ.ஆர். எட்டா, அது நாட்டுக்கு ஒத்துவராது என்று சொன்ன விவசாயிகள் எல்லாம், இன்றைய தினம் அவர்களாகவே முன்வந்து என்னுடைய நிலத்தில் காரோ, சம்பாவோ பயிரிடமாட்டேன், அரசாங்க விவசாய அதிகாரிகள், விவசாய விஸ்தரிப்பு அதிகாரிகள் எதைப் பயிரிடச் சொல்லுகிறார்களோ அந்தப் பொறுக்கு விதைகளைத்தான் பயிர் செய்வேன் என்று சொல்லக்கூடிய நிலைமைக்கு வந்திருக்கிறார்கள். அந்த அளவிற்குப் பாமர மக்களுக்கு விவசாய அறிவை இந்த அரசு ஊட்டியிருக்கிறது. அது மட்டுமல்லாமல், ஒருபோக நிலங்களை இருபோக நிலங்களாகவும், இருபோக நிலங்களை மூன்று போக நிலங்களாகவும் இன்றைய தினம் அரசு மாற்றியமைத்திருக்கின்றது. கூட்டுறவுத் துறையை நல்லமுறையில் பயன்படுத்தி, ஊராட்சி ஒன்றியத்திற்கு ஒன்று வீதம் நிலவள வங்கிகள் துவக்கப்பட்டு, அவற்றின் மூலம் இணுகல் தோண்ட நிறையக் கடன் வசதிகளைக் கொடுத்து, புஞ்செய் நிலங்களையெல்லாம் நஞ்செய் நிலங்களாக அரசு மாற்றியமைத்திருக்கிறது. காடுகளாகவும் கறம்புகளாகவும் இருந்த அரசு தரிசு நிலங்களை ஏழை எளிய விவசாயிகளுக்கு விவசாயம் தெரிந்த உழவர் பெருமக்களுக்குப் பட்டா செய்துகொடுத்து அதன் பயனை காடு கழனிகளை நல்ல பயிர்கள் பூத்துக் குலுங்கும் கழனிகளாக அரசு மாற்றியமைத்திருக்கிறது. இப்படி இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு, கடந்த நான்கு ஆண்டு காலமாக படிப்படியாக முக்கியமாக விவசாயத் துறையை கவனித்ததன் காரணமாகத் தான் எங்கோ இருந்தவர்கள் ஆட்சிப் பொறுப்பிற்கு வந்துவிட்டார்கள், இவர்கள் ஆட்சியில் விவசாயம்

[திரு. வி. வெங்கா]

சொல்லுகிறேன், விவசாயம்கூட இந்த அமைச்சர்களுக்குத் தெரியுமா என்று ஏளனம் பேசியவர்கள் எல்லாம் வெட்கப்படும் அளவிற்கு, இன்றைய தினம் வறட்சி நிலைமை நாட்டில் இருந்தபோதிலும், தொடர்ந்து பருவமழை நமக்கு இல்லை என்ற போதிலும், நாம் எதிர்பார்த்ததைவிட, திட்டமிட்டதைவிட அதிக உணவு உற்பத்தி பெருகியிருக்கின்றது. அதற்காக நான் இந்த அமைச்சரவையையும் விவசாயப் பெருமக்களையும் பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். அது மட்டுமல்லாமல், இன்னும் நாம் முன்னேற வேண்டும் என்பதற்காக, விவசாயப் பல்கலைக் கழகத்தை இந்த நாட்டில் உருவாக்கி, அதன் மூலம் சாதாரண விவசாயிகள் கூட நல்ல விஞ்ஞான ரீதியில் விவசாய அறிவைப் பெற வேண்டுமென்பதற்காக அரசு எடுத்துக் கொண்டிருக்கக்கூடிய முயற்சிகளையும் உள்ளபடியே நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

5-10 p.m. இன்றைய தினம் விவசாயிகளை இந்த அளவிற்கு அரசு ஊக்குவித்ததன் காரணமாக இரசாயன உரங்களை உபயோகப்படுத்த மாட்டோம் என்று சொல்லிக்கொண்டிருந்த விவசாயிகள் எல்லாம் இன்றைக்கு எதற்கெடுத்தாலும் இரசாயன உரங்களை உபயோகப்படுத்துகிறார்கள். தழை உரம், சாணி உரம், பிண்ணாக்கு உரம் போன்ற உரங்களை என்னுடைய பாட்டன் காலத்தில், தந்தை காலத்தில் பயன்படுத்திய அளவிற்கு, இன்றையதினம் உபயோகப்படுத்துகிறார்களா என்று ஒப்பிட்டுப் பார்க்கின்றபோது, இல்லை என்ற முடிவிற்குத் தான் வரவேண்டியிருக்கின்றோம். அதே நேரத்தில் விஞ்ஞான யுகத்தின் உச்சாணிக் கட்டத்தில் இருக்கின்ற அமெரிக்க நாட்டில் இருக்கின்ற ஆராய்ச்சியாளர்கள் சொல்லுகிறார்கள், தொடர்ந்து இரசாயன உரங்களை நம்முடைய கழனிகளுக்கு உபயோகித்துக்கொண்டுவந்தால், ஒரு காலகட்டத்தில் நிச்சயமாக அந்த நிலங்கள் தங்களுடைய சொந்த வளத்தை இழக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படும்; ஓளவிற்குத் தான் இரசாயன உரங்களைப் பயன்படுத்த வேண்டும்; அத்துடன் இயற்கை உரங்களையும், தாள் உரங்கள், கம்போஸ்டு உரங்கள், தழைச்சத்து உரங்கள் ஆகியவற்றையும் உபயோகப்படுத்த வேண்டும் என்று அமெரிக்க நாட்டு ஆராய்ச்சியாளர்கள் கூடச் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் இந்த முறையைக் கடைப்பிடிக்கின்றார்கள். நாம் அதற்கு மாறாக ஏற்கனவே உபயோகித்துக்கொண்டிருந்த கம்போஸ்ட் உரங்களை விட்டுவிட்டு இன்றைக்கு முழுக்க முழுக்க இரசாயன உரங்களை மட்டுமே நம்பிக்கொண்டிருக்கிறோம். அந்த நிலையிலிருந்து மாற வேண்டும் என்பதற்காக ஓளவிற்கு கம்போஸ்ட் உரங்களையும் நாம் உபயோகிக்க வேண்டும் என்று நினைக்கின்ற நேரத்தில், அரசு ஏற்கனவே கம்போஸ்ட் உரக்குழிகளுக்கு மான்யம் கொடுத்துவந்திருந்ததை, 2, 3 ஆண்டுகளாகக் குறைத்திருக்கிறார்கள் என்று உணர்கிறேன். அம்மானியக் குறைக்காமல், அந்த மான்யத்தைத் தொடர்வதற்கும், பசுந்தாள் உரத்தை ஊக்குவிக்கவும் முனைய வேண்டும் என்று விரும்பி வேண்டிக் கேட்டுக்கொள்ளுகிறேன்.



[திரு. வி. வெங்கா]

அதே நேரத்தில் கூட்டுறவுத் துறை எந்த அளவிற்கு விவசாயத்திற்குப் பயன்படுகிறதோ அதே அளவிற்கு உங்கள் தருவதற்கும் பயன்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். கூட்டுறவுத் துறை மூலமாக கிராம ஏழை விவசாயிகளுக்கு கோழிப்பண்ணை துவக்கவும், ஆட்டுப்பண்ணை துவக்கவும் கடன்களைக் கொடுத்து, பண்ணைகளைத் துவக்குகின்றனர். டீபிளீடர் சிஸ்டம் என்ற முறையில் கோழிகளை வளர்த்தால், அதன் மூலமாகக் கிடைக்கின்ற உரம் நைட்ரஜன் சத்துக் கொண்டதாக இருக்கும் என்கிறார்கள். கழனிகளிலே ஆட்டுக்கிடைகளை நடத்துவதை என்னுடைய மூதாதையர் காலத்தில் பார்த்திருக்கிறேன். அப்படிச் செய்வதன் மூலம் விளைச்சல் அதிகம் கிடைப்பதை என்னுடைய வயதில் பார்த்திருக்கிறேன். ஆகவே ஆட்டுக்கிடைகள் மூலமாகக் கிடைக்கின்ற உரத்தை இந்த அரசு பெருக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

இன்றைய தினம் அரசு ஐ.எம்.எஸ். உரக் கடன்களை கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். குறிப்பிட்ட இரசாயன உரத்தைப் பெற அந்த உரக் கடனைக் கொடுக்கின்றார்கள். அந்த முறையை மாற்றி, எள்ளுப் பிண்ணாக்கு, முத்துக்கொட்டைப் பிண்ணாக்கு போன்றவற்றை வாங்க உரக் கடன்களை அளிக்க வழிவகை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

இன்றைய தினம் நாட்டில் இருக்கக்கூடிய ஏழை எளிய விவசாயிகள் அரசு கொடுக்கின்ற நல்ல உதவிகள் மூலமாக முன்னேற்றம் அடைந்தபோதிலும், சில தவிர்க்க முடியாத சூழ்நிலை காரணமாக அவர்களுக்கு சிரமங்கள் தோன்றுகின்றன. மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெயராம ரெட்டியார் குறிப்பிட்டதுபோல், இணறுகள் தோண்டினாலும் தண்ணீர் கிடைக்காமல் போய்விடுகிறது. எங்கு தோண்டினால் தண்ணீர் கிடைக்கும் என்பதைச் சாதாரண கிராமத்தில் இருக்கின்ற ஏழை விவசாயிகள் கண்டு கொள்ள முடியவில்லை. அதற்காக அரசாங்கம் வாட்டர் டிவைனர்களை ஒன்றியத்திற்கு ஒருவராக நியமித்துக் கொடுத்து, எந்தெந்த பூமியில் எத்தனை அடி தோண்டினால் தண்ணீர் கிடைக்கும் என்று ஆலோசனை தெரிவிக்கின்ற நிலையை உருவாக்கிக் கொடுக்க வேண்டும்.

விவசாயிகள் இன்றைய தினம் இரசாயன உரத்தை உபயோகிக்கின்றார்கள் என்றால், நைட்ரஜன் எந்த அளவுக்கு குறிப்பிட்ட கழனியில் செலுத்த வேண்டும், பாஸ்பரஸ் சத்து, பொடாஷ் சத்து எந்த அளவுக்கு இருக்க வேண்டும் என்ற விஞ்ஞான அறிவு இல்லாத காரணத்தால், ஒவ்வொரு ஒன்றியத்திலும் மண் பரிசோதகர்களை நியமித்து, விவசாயிகள் கேட்கின்றபோது எந்த உரத்தை உபயோகப்படுத்த வேண்டும் என்ற ஆய்வுரையைச் சொல்லுகின்ற அளவில் அலுவலர்களை நியமிக்க வேண்டும். ஒருமுறை அறிஞர் அண்ணா அவர்கள் சொன்னார்கள். நாட்டில் இருக்கக்கூடிய விவசா

[28th July 1971

[திரு. வி. வெங்கா]

பும் எப்போது செழுமை அடையும் என்று அவரைக் கேட்டபோது, படித்த வாலிபர்கள் விவசாயத் தொழிலில் ஈடுபட்டால் தான் செழுமையடையும் என்றார்கள். அதை மனதில் வைத்துக்கொண்டு, இன்றைய தினம் விவசாயக் கல்லூரிகளுக்கு மாணவர்களைச் சேர்க்கின்றபோது, 'நீ விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்தவனு? நீ விவசாயப் பட்டப்படிப்பு படித்தால், உத்தியோகத்திற்குச் செல்லாமல் விவசாயம் செய்வாயா?' என்று கேட்டு, அதற்கு ஒப்புதல் அளிக்கின்றவர்களுக்கு முழு இடங்களையும் ஒதுக்கவில்லை என்றாலும், 10 சதவிகித, 15 சதவிகித இடங்களை ஒதுக்கினால், அவர்கள் பட்டம் பெற்ற பிறகு விவசாயத்தில் ஈடுபட்டு, விவசாய உற்பத்தியைப் பெருக்குவார்கள் என்ற நம்பிக்கை இருக்கிறது. அதற்கு ஏற்ற வகையில் செயல்பட வேண்டும்.

இன்றைய தினம் இந்த அரசு இவ்வளவு தீவிரமாகச் செயல் படுகின்றபோது, எங்கோ ஒரு மூலையில் விவசாயிகளிடையே யாரோ ஒரு பிரிவை உருவாக்கியிருக்கிறார்கள். விவசாய வருமான வரி வர இருக்கிறது. அது என்ன செய்யுமோ என்று நாட்டில் விவசாயிகள் மத்தியில் ஒரு பீதியை உருவாக்கியிருக்கிறார்கள். அது வெறும் பீதிதான் என்று நான் நிச்சயமாக நம்புகிறேன். வர இருக்கக்கூடிய விவசாய வருமான வரியை நல்ல முறையில் விவசாயிகள் பலனடையக்கூடிய அளவுக்கு, விவசாயிகளைப் பாதிக்காத அளவுக்கு பரிசீலித்து உருவாக்குவார்கள் என்று நம்புகிறேன்.

இவ்வளவுக்கும் பிறகு இன்றைய தினம் நமது தமிழக விவசாயிகள் எதிர்நோக்கியிருக்கின்ற பிரச்சினை காவேரி பிரச்சினை என்பதை இந்த மன்றம் மிக நன்றாக உணர்ந்திருக்கிறது. நம் முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தீவிரமான முற் போக்கு எண்ணங்களைக் கொண்டவர்களாக இருக்கின்றார்கள். அவர்கள் இதற்கு ஒரு முடிவு கட்டக்கூடிய அளவில் ஈடுபட வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

மொத்தத்தில் ஒப்பிட்டுப் பார்க்கின்றபோது, இந்த அரசு விவசாயிகளுக்குப் பாதுகாப்பாக இருக்கக்கூடிய அரசு. இந்த விவசாயிகளுக்குப் பாதுகாப்பாக இருக்கக்கூடிய அரசு காலத்தில் தான் இன்றைய தினம் விவசாயிகள் ஒன்றை எதிர்பார்க்கின்றார்கள். அவர்கள் ஈடுபட்டிருக்கின்ற தொழிலானது மிகப் பாதுகாப்பற்ற தொழிலாக இருக்கின்றது. இந்த வருடத்தில் ஆயிரம் ரூபாய், இரண்டாயிரம் ரூபாய் முதலீடு செய்தால், அதனால் வரக்கூடிய லாபம் என்னவாக இருக்கும் என்று கண்டுகொள்ள முடியவில்லை. அதற்காக விவசாயிகள், விவசாய இன்ஷூரான்ஸ் திட்டத்தை எதிர் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். நானே என்னுடைய விவசாய வருமானத்தை ஒப்பிட்டுப் பார்க்கின்றபோது, கரூருக்குச் செல் வதைவிட நிலத்தை விற்றுவிட்டு சென்னைக்கு வந்துவிட்டால்



28th July 1971]

[திரு. வி. வெங்கா]

நல்லது என்று எண்ணுகிறேன். எனக்கு 15 ஏக்கர் நிலம் இருக்கிறது. இப்போது அதன் மதிப்பு ஒரு ஏக்கருக்கு 5,000 ரூபாய் ஆக 75,000 ரூபாய் எனக்குக் கிடைக்கும். அதை ஒரு நாணயமான வங்கியில் போட்டு அதன் மூலமாகக் கிடைக்கக் கூடிய 6 சதவிகித வட்டியை வைத்துக்கொண்டு என்னால் நல்ல முறையில் வாழ்க்கையை நடத்த முடியும். ஆனால் 75,000 ரூபாய் பெறுமானமுள்ள நிலத்தை வைத்துக்கொண்டு ஆண்டுக்கு 5,000 ரூபாய் செலவு செய்து பயிர் செய்த பிறகு, அதில் கிடைக்கும் வருமானத்தைப் பார்க்கும்போது, 1,000; 2,000 ரூபாய் முதல் வைத்து நடத்தும் பெட்டிக் கடைக்காரனின் வாழ்க்கைத் தரம் எவ்வளவோ மேலாக இருக்கிறது. விவசாயிகளின் நிலையை உயர்த்த வேண்டுமென்றால், விவசாய விளைபொருள்களுக்குக் குறிப்பிட்ட விலை நிர்ணயத்தை இந்த அரசு உருவாக்க வேண்டும்.

இன்றைய தினம் அரசு 15 ஸ்டாண்டர்டு ஏக்கர் என்று உச்ச வரம்பு கொண்டுவந்த பிறகு, விவசாயிகள் பெரிய டிராக்டர்களை விரும்பவில்லை. பெரிய பிராசுதாரர்கள் வேண்டுமானால் விரும்பலாமே தவிர சாதாரண, சட்டத்துக்கு உட்பட்டு நிலங்களை வைத்திருக்கும் விவசாயிகள் அதை விரும்பவில்லை. ஜப்பான் டிராக்டர்களை, கையால் தள்ளக் கூடிய சிறு ரக டிராக்டர்களை தமிழக விவசாயிகள் விரும்புகிறார்கள். அந்த டிராக்டர்களை அரசு துறையிலோ அல்லது ஜாயிண்ட்டு செக்டார் முறையிலோ உற்பத்தி செய்வதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

பயிர் பாதுகாப்புத் திட்டம், கால்நடை பாதுகாப்புத் திட்டம், விளைபொருள்களுக்கு ஒரு குறிப்பிட்ட தொகை விவசாயிகளுக்குக் கிடைக்கும் திட்டத்தை இந்த அரசு காலத்தில் விவசாயிகளுக்குக் கிடைக்க ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். கிராமத்தில் உள்ளவர்கள் இந்த அரசைப் பாராட்டுகிறார்கள். சிறு விவசாயிகளுக்கும், விவசாயத் தொழிலாளர்களுக்கும் நன்மை கிடைக்கும் வகையில் இந்த அரசு திட்டம் தீட்டுவதைப் பாராட்டி விடைபெறுகிறேன். வணக்கம்.

• திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு: மதிப்பிற்குரிய மன்றத் தலைவர் அவர்களே, வேளாண்மைக் கொள்கைக் குறிப்பு விவாதத்தில் ஒரு சில கருத்துக்களை நான் சொல்ல விரும்புகிறேன். நம் நாட்டில் என்னுடைய அனுபவத்தில் மழை குறைந்துகொண்டே வருகிறது என்ற நிலைமை ஏற்படுகிறது. இப்போது கிராமப்புறங்களில் பள்ளியில் உள்ள ஒரு மாணவனைப்பார்த்து, வெள்ளம் ஓடுவதைப்பார்த்திருக்கின்றாயா என்று கேட்டால், அந்த மாணவன் பார்க்கவில்லை என்றுதான் கூறுவான். எங்கள் பகுதிகளில் ஓடைகளிலும் பார்த்திருக்க மாட்டார்கள் வெள்ளம் ஓடுவதை. அப்படி மழை குறைந்துகொண்டே வருகிறது. இதற்கு என்ன காரணம் என்பதை நாம் பார்க்கவேண்டும்.

[திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு]

அந்தக் காலத்தில் சொல்லியிருக்கிறார்கள் வேதம் ஓதும் வேளியருக்கு ஓர் மழை, நீதி வழுவாத வேந்தனுக்கு ஓர் மழை, கற்புடைய பெண்டிர்க்கு ஓர் மழை என்று மாதம் 3 மழை பெய்யும் என்று சொல்லியிருக்கிறார்கள். இப்போது வருஷத்தில் 3 மழை கூட இல்லை. 2 அங்குல மழை பெய்தால், எல்லா கண்மாய்களிலும் தண்ணீர் நிறைந்து விடும். பல வருஷங்களாகவே மழை குறைந்து வந்திருக்கிறது. எங்கள் பகுதிகளில் கிணறுகள் எல்லாம் நிரந்தரமாக வறண்டு விடுமோ என்ற நிலை உருவாகி வருகிறது. இதற்கு என்ன காரணம் என்று நாம் யோசிக்க வேண்டும்.

ஒரு காலத்தில் மழை பெய்து, சமீப காலத்தில் குறைந்து வருவதற்கு என்ன மாற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றன என்பதையும், பருவ காலங்கள் மாற்றம் அடைந்திருக்கின்றனவா அல்லது மழை பெய்வதைத் தடுக்க ஏதாவது சூழ்நிலைகள் ஏற்பட்டிருக்கின்றனவா என்பதை நாம் கவனிக்க வேண்டும். இதற்கு ஒரு விரிவான ஆராய்ச்சி மிக மிக அவசியம்.

அரசு எவ்வளவோ சௌகரியங்கள் செய்து கொடுத்தாலும்கூட, மழை குறைந்ததன் காரணமாக விவசாயிகளின் வாழ்க்கையில் நிறைவு இல்லை. அவர்கள் மிகவும் சோர்ந்து போயிருக்கிறார்கள். எங்கள் பகுதியில், கிராமங்களில் உள்ள விவசாயிகள் ஒரு மாதிரிப் போயிருக்கிறார்கள். இது 100-க்கு 100 உண்மை. மிகவும் பரிதாபமான நிலையில் இருக்கிறார்கள்.

மேற்குத் தொடர்ச்சி மலையிலிருந்து, ராமநாதபுரம், நெல்லை, மதுரை ஜில்லாக்களுக்குத் தண்ணீர் கொண்டு வருவதற்கு வசதிகள் இருக்கின்றன என்று முன்பு 1940, 1950-ம் வருஷங்களில் ஆராய்ச்சி நடைபெற்றிருக்கிறது. நம்முடைய பொறியியல் வல்லுனர்களும் வழி வகைகளையெல்லாம் சொல்லியிருக்கிறார்கள். நீர்த் தகராறு என்பது ஒரு பெரும் தகராறு. இந்தத் தகராறு இப்போது பல மாநிலங்களில் இருக்கிறது. இப்போது உள்ள நிலையில் மேற்கே அரபிக் கடலில் வீணைப் போகும் நீரை இந்நாட்டு நதிகளுக்குத் திருப்ப ஏதாவது வழி வகை உண்டா என்று நாம் பார்க்க வேண்டும்.

ஒரு குடும்பத்திலே அளவுக்கு அதிகமான கஷ்டங்கள் ஏற்பட்டால், ஒருவரை ஒருவர் எரிச்சல்படுவார்கள். அதுபோல தண்ணீர் குறைந்துகொண்டே வருவதால், இந்த ஜில்லா கலெக்டருக்கு அதிகாரம் இல்லை, அந்த ஜில்லா கலெக்டருக்கு அதிகாரம் இல்லை என்று சொல்லுவார்கள்.

5-20 p.m.

திரு. எஸ். ஜெயராம செட்டியார்: தலைவர் அவர்களே, எங்கள் பகுதியில், புரட்டாசி, ஐப்பசி மாதங்களில் நாகப்பட்டினத்திலிருந்து காற்று தென் மேற்கு திசைக்கு வருகிறது என்று எல்லோரும் மழையை எதிர்ப்பார்ப்பார்கள். சென்ற 10 வருஷங்களாக அந்தக் காற்று வட மேற்கு திசைக்கு போய்க்கொண்டிருக்கிறது. இதற்கான காரணங்களை ஆராய்ந்து மாண்புமிகு உறுப்பினர் திரு. கிருஷ்ணசாமி நாயுடு கூறியதுபோல், மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதிகளிலிருந்து தண்ணீர் கொண்டுவந்து இந்த வறட்சி நிலையை நீக்க முடியாதா என்பதை அறிய ஆசைப்படுகிறேன்.



திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெயராம செட்டியார் கூறியது முற்றிலும் உண்மை. மேற்குப் பகுதியிலும், கிழக்குப் பகுதியிலும், நாகப்பட்டினத்திலும் புயல் உருவாகிறது என்று சொன்னால், மழை பெய்யும் என்ற நம்பிக்கை ஏற்பட்டிருக்கிறது என்றாலும் கூட எங்கள் பகுதியில் உள்ளவர்கள் எதன் மூலமாவது மழை வராதா, புயல் ஏற்பட்டு மற்றவர்களுக்கு நஷ்டம் ஏற்பட்டாலும், அதன் மூலம் தம்முடைய பகுதி மலர்ந்து விடாதா என்ற சுபாவம் வந்திருக்கிறது. அப்படிப்பட்ட நிலைமை ஏற்படுகிறது. '20,000 ஹெக்டர் கொண்ட பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு பிரிவும் வருப்பு 1 அதிகாரியின்கீழ் கொண்டு வரப்படும்' என்று அறிக்கையில் சொல்லப்படுகிறது. உரத்திற்காகவும் நோய்த் தடுப்புக்காகவும் கொடுக்கப்படுகிற குறுகிய காலக் கடன்கள் அந்த உரத்தைப் பெறுகிற வகையில் அதைச் சரியான வகையில் உபயோகப்படுத்த முடியாத நிலை பல இடங்களில் இருக்கின்றன. வட்டாரங்களில் உரத்திற்கும் பூச்சி மருந்துகளுக்கும் கடன் வழங்கப்படுகிறது. அதன் மூலம் அவர்கள் கொடுக்கக்கூடிய உரத்தையும் பூச்சி மருந்துகளையும் வட்டார வளர்ச்சி அலுவலகத்தைச் சுற்றிக்கொண்டே சில வியாபாரிகள் குறைந்த விலைக்குப் பணம் கொடுத்து வாங்கிக்கொண்டு போகத் தயாராக காத்துக்கொண்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட நிலைமைகளைப் பல இடங்களில் காண்கிறோம். குறைந்த விலைக்கு வாங்கிக் கொண்டு போக வட்டார வளர்ச்சி அதிகாரிகள் சிலர் உடந்தையாக இருக்கிறார்கள் என்று பகிரங்கமாகக் கூறுகிறேன். அத்தகைய நிலைமைகள் பல இடங்களில் உருவாகின்றன. இதை மாற்றுவதற்கு விவசாய இலாகா அதிகாரிகளும் மற்றவர்களும் தீவிர கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். தவறான முறையினால் நாம் செய்யக்கூடிய நல்ல காரியங்களின் அனுகூலங்களைப் பெற முடியாத நிலை இருக்கிறது. அதைத் தடுக்க ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். எம்.யு.வி. 4, 5 என்ற இரண்டு விதமான பருத்தி ஸ்ரீவில்லிபுத்தூரிலும், மேற்கு ராமநாதபுரத்திலும் பல வருஷங்களாகச் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. நோய் வருகிற காலத்தில் நோய் கண்டபொழுதே கண்டுபிடித்து உடனே அதற்குப் பரிகாரம் காணுவதற்கேற்ற முறையில் நோய்த் தடுப்பு அதிகாரிகள் அந்தப் பகுதிகளில் இருப்பதில்லை. எதற்கெடுத்தாலும் வெளி ஜில்லாவுக்குத் தகவல் போய் நோய் முற்றிய பிறகு பரிகாரம் தேடுவது வழிவகைகள் காண வேண்டுமென்று யோசனை சொல்லுவதென்றால் அந்த நோய் தீராது. ஆகையால் நோய்த் தடுப்பு அதிகாரிகள் இப்போது ஏற்படுத்தியதுபோல் எந்த எந்தப் பகுதிகளில் எந்த எந்த பயிர் அதிகமாகப் பயிர் செய்யப்படுகிறதோ அந்த அந்தப் பருவ காலத்தில் எந்த நோய் தோன்றப்படுகிறதோ அல்லது தெரிகிறதோ

அதைத் தடுக்க உடனே அதற்கான பரிகாரத்தைத் தேடும்படியான வகையில் தெம்மாக இருக்க வேண்டும். அதற்கான ஏற்பாடுகளை அரசாங்கம் செய்யவேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்ளுகிறேன். டிராக்டர் வாடகைக்கு விடும் திட்டங்கள் பல இடங்களில் இருக்கின்றன. டிராக்டர்களை வெளியில் வாடகைக்கு வாங்கி அதைக் கொண்டு உழுதால் நல்ல பலனடையலாம். சர்க்கார் ட்ராக்டர் நமக்கு வந்தால். அதிலுள்ள டிரைவர்கள் மிக்க அனுகூலமாக இருப்பார்கள் என்று சால்ல முடியாத வகையில் அவர்கள் பலி புரிகிறார்கள் என்ற உணர்வு விவசாயிகளிடம் இருக்கிறது. அதைப் போக்க வேண்டும். வேலைக்கு வருகிறவர்கள் விவசாயிகளிடம் செல்லம் கொஞ்சுகிறார்கள். அந்த சௌகரியம் வேண்டும். இந்த சௌகரியம் வேண்டும் என்று சொல்லி, காலத்தைப் போக்குவதாகச் சொல்லுகிறார்கள். சொல்லக் கேட்டிருக்கிறேன். ஆகையால் அரசாங்க டிராக்டர்கள் வருகிற இடத்தில் முழுப் பலனையும் பெறுகிறோம், நல்ல அனுகூலங்கள் உண்டாகின்றன என்ற உணர்வை விவசாயிகளின் மத்தியில் உண்டுபண்ணும்படியான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். எங்கள் ஊரில் ஒரு பள்ளிக்குச் சொந்தமான நிலம் இருக்கிறது.அந்த நிலத்திலுள்ள மேடு பள்ளங்களை சரிப்படுத்தி கிணறு தோண்டி மதிய உணவுக்காக ஏற்பாடுகளைச் செய்துகொண்டு வருகிறேன். ஒரு ஆண்டுக் காலமாக காத்துக்கொண்டிருக்கிறேன். மழை பெய்யாத காரணத்தால், சரிப்படுத்த புல்டோசர் வேண்டியிருக்கிறது. அதற்கான பணத்தைக் கட்டியிருக்கிறது. அது சிவகங்கை ஏ.இ.இ. இடம்தான் இருக்கிறது. டி.டி.சி. மீட்டிங்குக்கு அவர் ஒரு தடவை வந்தார். அவர் வந்து பார்க்கிறேன் என்றார். 2, 3 தினங்களில் ஒரு கடிதம் எழுதினர். அந்தக் கடிதத்தில் நீங்கள், உங்களுடைய விண்ணப்பத்தில் பணம் கட்டியிருப்பதாகச் சொன்னீர்கள், அந்த அறிகுறி தென்படவில்லை என்று எழுதினர். ஆகவே ரசீதின் நகலை வைத்து அனுப்பினேன். அதற்குப் பணம் கட்டியிருக்கிறீர்கள் என்ற பதில்கூட வரவில்லை. இம்மாதிரியான நிலையில் அவர்கள் செயல்படுகிறார்கள். காலம் தாழ்த்திய வகையில் விவசாயிகளுக்கு உதவி பண்ணுவது பலன் அளிக்காது. இதில் மிகுந்த கவனம் செலுத்த வேண்டும், நாட்டம் செலுத்த வேண்டும் என்று இந்த சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்ளுகிறேன். விதைப் பண்ணைகளுக்காக மத்திய சர்க்கார் ஒரு சட்டம் செய்திருக்கிறது. இந்தச் சட்டத்தின் மூலம் நாளடைவில் சர்க்கார் நடத்துகிற சீட் பார்ம்ஸ் திட்டங்கள் பொறுக்கு விதைகள் தயாரிக்கும் திட்டங்களைப் பெரிய தனியார் கம்பெனிகள் எடுத்துக் கொண்டு நமக்கு விதைகள் கொடுக்கும் அளவில், பொறுக்கு விதைகளை கொடுக்கிற நிலைமை ஏற்பட்டால், தனியாரே பொறுக்கு விதைகளைத் தயாரித்துக் கொடுக்க சான்றிதழ் திட்டம் " சர்டிபிகேஷன் ஸ்கீம் " வகைசெய்கிறது. அவர்கள் அந்த முயற்சியில் அரசு விதைகளைத் தயாரிக்கும் திட்டத்தை, எதிர்காலத்தில் படிப்படியாக பல வருஷங்களுக்குப் பிறகு தங்கள் பொறுப்பில் இல்லாமல் அவர்கள் பொறுப்பில் விட்டுவிடக்கூடிய கொள்கையை அரசு வைத்திருக்





கிறது. அவ்வளவு சீக்கிரமாக அவர்களிடம் திட்டம் போய்விடும்படி விட்டுவிடக்கூடாது என்று இந்த சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்ளுகிறேன். " சீட் பார்ம்ஸ் " பல்லாண்டு காலமாக நடந்து வருகின்றன. இந்தத் திட்டத்தை ஸ்ரீவில்லிபுத்தூர் " கோவாப ரேடிவ் மார்கட்டிங் சொசயட்டி " 15 ஆண்டுகாலமாக நடத்திக் கொண்டு வருகிறது. நாங்கள் நடத்திக்கொண்டு வருகிறோம். அதைத் தொடர்ந்தே மாதிரி சீட் சர்டிபிகேஷன் ஸ்கீமிலும் நடத்தி வருகிறோம். அந்தத் திட்டங்களை தனியார் செயல்படுத்தும்படி முழுவதையும் விட்டுவிடக்கூடாது. அந்த சர்ட்டிபிகேஷன் நடத்தினால், அதில் சேரக்கூடிய விவசாயிகளிடத்தில் ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 10 கேட்கின்றனர். அறிஞ்ச தெய்வம் என்று கும்பிடப் போனால், உங்கள் அப்பன் பட்ட கடனைக் கொடு என்று கேட்பது போல் இருக்கிறதே என்று விவசாயிகள் பேசிக்கொள்ளுகின்றனர். ஆகையால் ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 10 கேட்காமல் குறைந்த அளவில் ஒரு அடையாள பூர்வமாக ரூ. 1 அல்லது ரூ. 2 கேட்டால், மிக நல்லது. அப்படிப்பட்ட கவர்ச்சிகரமான எண்ணத்தை உண்டாக்கவேண்டுமென்று இந்த சந்தர்ப்பத்தில் எடுத்துக்கூற விரும்புகிறேன். உங்கள் வைப்பதுபற்றி இங்கு பிரஸ்தாபிக்கப்பட்டது. அந்த உரங்கள் நல்ல போதுமான எடை உள்ள மூட்டைகளாக இருக்கிறதா கெட்டுப் போகாத வகையில் ஸ்டாக்கிஸ்ட் வைத்திருக்கிறார்களா என்று அடிக்கடி கண்காணிக்கப்படவேண்டும். பொதுவாக பல இடங்களில் சர்க்கார் ஸ்டாக் வைத்திருக்கும் மூட்டைகளுக்கும் தனி வியாபாரிகள் கொடுக்கும் உரங்களுக்கும் நிறைய வித்தியாசம் இருக்கிறது. வியாபாரிகளை அணுகக்கூடிய நாட்டம் விவசாயிகளுக்கு இருப்பதை மாற்றுவதற்கு உரத்தை நல்ல வகையிலும் போதிய எடை உள்ளவையாக வைப்பதில் அரசு கவனம் செலுத்துவது மிகவும் அனுகூலமாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன். பயிர் பாதுகாப்புத் திட்டம் " இன்சூரன்ஸ் ஸ்கீம் " இதைப் பரிசீலனை செய்து சீக்கிரமாக விவசாயிகளிடம் மனநிறைவையும் தன்னம்பிக்கையையும் உண்டுபண்ணுவது நலமாக இருக்குமென்று கருதுகிறேன். விவசாயிகளுக்குப் பயிற்சி அளிக்கும் வகையில் நண்பர் அவர்கள் கூறியது போன்று விவசாயிகளிடையே இருந்து வரக்கூடியவர்கள் அரசாங்கத்தில் உத்தியோகம் எதிர்பார்க்கவில்லை. கற்றுத் தெரிந்து கொள்ள விரும்புகிறார்கள். விவசாய முறைகளை விரும்பக்கூடிய மாணவர்களுக்கு, எத்தனை பேர்கள் என்றாலும், இடம் கொடுப்பது நல்லது. அதற்கான நிலைமைகளை உண்டுபண்ண வேண்டுமென்று இந்த சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்து, ரெகுலேடட் மார்க்கட் பணி செய்வதுபற்றிச் சொன்னார்கள், அழகான கட்டிடங்கள் இருக்கின்றன, ஆனால் வேலை நடைபெறவில்லையென்று. அவர்களால் செய்ய முடியாத பணிகளை, சிறு சிறு பணிகளை, கோவாப்பரேடிவ் மார்க்கட்டிங் சொசயட்டி ஏற்றுக்கொள்ளுகிறது. மார்க்கட் கமிட்டி செய்யும் பணிகளை ஏற்று நடத்த மார்க்கட்டிங் சொசயட்டி முன்வந்தால், அதைக் கொடுப்பதற்கு அரசாங்கம் சிந்திக்க வேண்டும் என்று 5-30 p.m.

[திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயடு] 28th July 1971]

தெரிவித்துக்கொள்ளுகிறேன். இந்த விவசாயிகள் படும் கஷ்டங்கள் கடன்கள் ரொம்ப அதிகமாகப் போய்விட்டன. சில பகுதிகளில் இனாம் வெட்டி விவசாயம் செய்து குடும்பம் நடத்தி வாங்கிய கடனைத் திருப்பிக்கொடுக்க முடியுமா என்று சிந்தித்தால், இன்று நிலத்தை விற்றால் கூட வாங்கிய கடனுக்குப் போதாது. பல வருஷங்களாக விவசாயம் செய்து இனாங்களை ஆழப்படுத்துவதற்கு கடன் தொகை உயர்ந்து விட்டது. இனாங்களை ஆழப்படுத்துவதற்காக, புதிய இனாங்களை வெட்டுவதற்காக கடன் வாங்கி அதனால் தண்ணீரும் கிடைக்காமல் அது கடனாக மாறிவிட்ட விவசாயிகளுக்கு அந்தத் தொகையைத் தள்ளுபடி செய்து ஒரு முழு நிவாரணம் செய்வது அரசாங்கத்தின் தார்மிகக் கடமை என்று நான் கருதுகிறேன். எந்த எந்தக் இனாங்கள் அம்மாதிரி வந்திருக்கின்றன, புதிய இனாங்கள் வெட்டியும் தண்ணீர் இல்லை, ஆழப்படுத்தியும் தண்ணீர் இல்லை, வாங்கிய கடனை விவசாயி அதற்காகத்தான் செலவிட்டிருக்கிறான் என்று அரசாங்கம் கணக்கெடுத்து, அம்மாதிரி விவசாயிகள் மீது சுமந்துள்ள கடன் தொகையைக் குறைப்பதற்கு முன்வர வேண்டும் என்று கேட்டுக் கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

திரு. சி. வி. ராஜகோபால் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்த அரசின் வேளாண்மைக் கொள்கையிலே என்னுடைய கருத்துக்களைத் தெரிவிப்பதற்கு ஒரு வாய்ப்பைத் தந்த உங்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

" உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம்
தொழுதுண்டு பின்செல்பவர் "

என்று பழைய காலத்திலே உள்ள பழக்க வழக்கங்களைக் கொண்டு உழவர்களையெல்லாம் மிகக் கௌரவமாகக் காப்பாற்றிவந்த காலத்திலே சொல்லப்பட்டதாகும் இந்தக் குறள். இந்தக் குறளின் அடிப்படைக் கருத்து உழவர்கள் தான் இந்த நாட்டைக் காப்பாற்றுபவர்கள், உழவர்கள்தான் பெருமைக்குரியவர்கள், உழவுத் தொழில்தான் பெருந்தன்மையான தொழில், இந்தத் தொழிலில்தான் மக்களின் வாழ்க்கைத் தரம் அடங்கியிருக்கிறது என்பது. அதனால்தான் இந்த இரண்டடி குறளை அந்தக் காலத்திலேயே சொல்லியிருக்கிறார்கள். கம்பனுக்கு ஆதரவாக இருந்த சடையப்ப வள்ளல் கூட அவரே ஏரைப்பிடித்து உழுது பயிரிட்டு அதனாலே கிடைக்கின்ற நெல்லை நாட்டு மக்களுக்கெல்லாம் ஈந்திருக்கிறார் என்ற வரலாற்றினை எல்லோரும் படித்திருக்கிறோம். ஆனால் உழுது பயிரிடுவது அல்லது விவசாயம் என்பது இடைக் காலத்திலே மங்கிவிட்டது. கொஞ்சம் கொஞ்சமாக அதற்குத் தரவேண்டிய மரியாதைகள் எல்லாம் குறைந்து, விவசாயி என்றால் மிக அலட்சியமாகக் காணும் போக்கு இருந்தது. விவசாயி வந்திருந்தால், அவனுக்குக் கௌரவம்கூடத் தருவதில்லை. விவசாயிகள் பள்ளிகளில் படிக்கவேண்டுமானால்கூட மிகச் சிரமப்பட்டிருக்கிறார்கள். ஆனால் 1967-68-க்குப் பிறகுதான் விவசாயிகள் குடும்பம் மிக லட்சணமாக இருக்கின்றது. எனக்கு முன்னால் பேசிய அருமை



[28th July 1971 [திரு. சி. வி. ராஜகோபால்]

தம்பர் திரு. வெங்கா அவர்கள் கூறினார், " எனக்கு 15 ஏக்கர் நிலம் இருக்கிறது, ஆனால் அதை விவசாயம் செய்து வரக்கூடியது மிகக் குறைவாக இருக்கிறது. அதை விற்று சுமார் 75,000 ரூபாய் பெற்று அதை 6 சதவிகிதத்திற்கு வட்டிக்கு வியாபாரம் வைத்துக் கொள்ளலாமா " என்று யோசிப்பதாகக் கூறினார். அப்படிக் கூறிய கருத்துக்களுக்கு நான் மூரண்பாடு உடையவனாக இருக்கிறேன். 10, 15 வருடங்களுக்கு முன்னாலே எனக்கு 6 கிராமங்களிலே நிலம் இருந்தது. அதிலே விவசாயம் செய்து வருகிற நெல் விவசாயம் செய்கிற செலவுக்குக்கூட கட்டுப்படி ஆகாத காரணத்தால், அந்த 6 கிராமத்திலே உள்ள நிலத்தையும் விற்றிருக்கிறேன். 40, 45 ஏக்கர் விற்றிருக்கிறேன். அதிலே சரியான வருவாய் வரவில்லை. ஏக்கர் 600 அல்லது 700 ரூபாய்க்குத்தான் விற்றேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : மனிதர்களுக்கு விற்றீர்களா அல்லது குதிரைகளுக்கு விற்றீர்களா?

திரு. சி. வி. ராஜகோபால் : முதலமைச்சர் அவர்கள் சொன்ன கருத்துகூட 30 சதவிகிதம் அல்லது 40 சதவிகிதம் அடங்கியுள்ளது. ஆனால் அவ்வளவு நிலம் வைத்துக்கொண்டிருந்த காலத்தில்கூட அந்த விவசாயத்தில் பெருங்குடிமகனாக நான் ஆகவில்லை.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : பெருங்குடி மகனாக ஆகவில்லை என்று சொல்கிறார். அதை நான் ஒத்துக்கொள்ளவில்லை.

திரு. சி. வி. ராஜகோபால் : 1967-க்குப் பின்னாலே விஞ்ஞான முறைகள் மக்களுக்குச் சொல்லிக் கொடுக்கப்பட்டதாலே விவசாயம் விருத்தியடைந்தது. அவர்கள் 75,000 ரூபாய்க்கு விற்று விட்டுப் போய்விடலாம் என்று சொன்ன காரணத்தாலே சொல்கிறேன், இன்றைக்கு 4 ஏக்கரா வைத்துக்கொண்டிருக்கிறவர் கூட நன்றாக வாழ்ந்துகொண்டிருக்கிற நிலைமை இருக்கிறது. இப்பொழுது நிலம் வாங்கலாமா என்று கூட எனக்கு ஆசை வருகிறது. எந்த வியாபாரத்தையும்விட நிலமே பரவாயில்லை, குடும்பத்தைக் காப்பாற்றிவிடலாம் என்ற எண்ணம் 7, 8 ஆண்டுகளாகவே, அதிலேயும் 1967-க்குப் பின்னாலே வந்திருக்கிற காரணத்தால், விலைக்கு நிலமே கிடைக்கவில்லை. அந்த அளவுக்கு நிலத்தைப் பண்படுத்தியிருக்கிறார்கள். அது மட்டுமல்ல, இன்னொன்று மிகப் பெருமையாக இந்த அவையிலே நான் கூறிக் கொள்ள விரும்புகிறேன். இதற்கு முன்னாலே விவசாயத்திற்கு அமைச்சர்கள் வருவார்கள். விவசாயத்திற்கு அமைச்சர் வருகிறார் என்றால், 4 ஏக்கர் நிலத்தை உழுது அதிலே பயிரிட்டு, அதிலே நல்லது கெட்டதைப் பார்த்து, பலாபலனை அனுபவித்து. இப்படித்தான் இந்த நிலத்தை உழ வேண்டும், இப்படித்தான் இதற்கு விதை போட வேண்டும், காலாகாலத்தில் உழவேண்டும் என்று அனுபவரீதியாக வந்திருக்கிறார்களா என்றால் இல்லவே இல்லை. இப்பொழுது உணவுக்கு ஒரு அமைச்சர் வந்திருக்கிறாரே (பல உறுப்பினர்கள் : விவசாயத்திற்கு என்று சொல்லுங்கள்), சரி விவசாயத்திற்கு வந்திருக்கிறாரே, அவர் நிலத்திலே தானே உழுதிருக்கிறார், அந்த மண்ணின் வளம் அறிந்தவர். அந்த

[திரு. சி. வி. ராஜகோபால்] 28th July 1971]

மண்ணுக்கு எந்த மாதிரியான விதை போடவேண்டும் என்று அனுபவரீதியாக அறிந்தவர். அதனால் சரியான முறையிலே விவசாயம் விருத்தி அடையும் என்ற முழு நம்பிக்கை எனக்கு உண்டு. இந்தத் துறையிலே சில குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால், என் ஊரிலே பொன்னேரி ஏரி என்று இருக்கிறது. அதற்குக் கீழே 2,000 ஏக்கர் நிலம் இருக்கிறது. அந்த நிலங்களே இந்த ஏரியிலிருந்து வருகிற தண்ணீரை வைத்துத்தான் பயிரிடுவது வழக்கம். ஏராளமான நெல் உற்பத்தியாகி வந்தது. அது என்ன ஆயிற்று? அந்தப் பொன்னேரி ஏரியின் மேல் சில இனம் பட்டாக்கள் இருந்தன. ஏழெட்டு வருடங்களுக்கு முன்னால், அப்போது இருந்த ஆட்சியாளர்கள் அந்த ஏரியைப் பார்க்காமல் அந்த 2,000 ஏக்கர் நிலத்திற்குத் தண்ணீர் பாயவேண்டும் என்று கூட இல்லாமல் இனம் பட்டா நிலத்தை யார் வேண்டுமானாலும் பட்டா வாங்கிக்கொள்ளலாம் என்று ஏரிக் கரையிலே நிலத்தைக் கொடுத்துவிட்டிருக்கிறார்கள். உடனே என்ன ஆயிற்று என்றால், காஞ்சிபுரத்திலே இருக்கிற மக்கள், கோனேரிக்குப்பத்திலே இருக்கிற மக்களெல்லாம் சொல்கிறார்களே என்று விதை தூவி பட்டாவும் வாங்கிவிட்டார்கள். ஏரி நிலத்தைப் பட்டாவாங்கி விட்டதால் ஏரி ஏரியாக இல்லை. அங்கே இரண்டாயிரம் ஏக்காக்கள் பாதிக்கப்பட்டன. கோனேரிக்குப்பத்தில் இதனால் தகராறு. எப்படிப்பட்ட தகராறு என்றால், கோனேரிக்குப்ப கிராம மக்கள் தண்ணீர் இல்லாமல் பட்டுப்போகிறது என்று சொல்கிறார்கள். 10, 12 ஆண்டுகளுக்கு முன்னால் அந்த ஆட்சியில் சில குறிப்பிட்ட செல்வாக்குள்ள நபர்கள் பட்டா வாங்கிக்கொண்டு அந்த ஏரியை தூற்று இருக்கிறார்கள். அதனால் தகராறு. அந்தப் பட்டா வைத்துக் கொண்டிருப்பவர்கள் 10 பேர்தான். ஆனால் அந்த 10 பேர், இன்னும் 50, 100 பேரை அழைத்துக்கொண்டுவந்து கோனேரிக்குப்பத்திலே பெரிய தகராறு செய்கிறார்கள். இதற்கு போலீஸ் நடவடிக்கை எடுக்கவேண்டியதாயிற்று. போலீசார் குறுக்கிட்டு சமாதானம் சொல்லி, தள்ள வேண்டிய அவசியம் ஆகிறது. ஆகவே இந்தப் பொன்னேரியை ஏரியாக ஆக்கி 2,000 ஏக்கர் நிலத்திற்கும் தண்ணீர் கிடைக்கும் வகையிலே அமைச்சர் அவர்கள் உடனடியாக ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்னுமொன்று, எங்கள் ஊரிலே பாலாறு இருக்கிறது. இப்பொழுது காவிரிப் பிரச்சினைக்கு நாம் எவ்வளவு வேதனைப் படுகிறோம். எவ்வளவு கூக்குரலிடுகிறோம். எவ்வளவு கூறினாலும் கேளாக்காதினராக இருக்கிறார்கள். அங்கே டெல்லியிலே அமர்ந்து கொண்டிருக்கிறவர்கள் காதை செவிடாக்கிக்கொண்டிருக்கிறார்கள். அதைப்போல முன்னாலே பாலாறுக்கு மைசூரிலேயிருந்து வரவேண்டிய தண்ணீரைத் தடுத்துவிட்ட காரணத்தால், வெறும் மண்ணாக இருக்கிறது. ஆனால் அந்த ஆற்றுக்கு அடியிலே ஏராளமான தண்ணீர் இருக்கிறது. 'ஸ்ட்ரீம்-சப் சாயில் வாட்டர்' இருக்கிறது. அதை வெளியே எடுக்க வேண்டும். அதற்குப் புது முறைகள்—"விஃப்ட் இரிகேஷன்" மூலம் தண்ணீர் எடுக்க வேண்டும்.



[28th July 1971

திரு. ஜி. சுவாமிநாதன்: பாலாறுக்கு அடியிலே 'ஸ்டீம்' என்று சொல்கிறார்கள். அந்த 'ஸ்டீமை' வெளியே எப்படி எடுப்பது?

திரு. சி. வி. ராஜகோபால்: நான் சொன்னது 'ஸ்ட்ரீம்'—எஸ்—டி—ஆர்—ஈ—ஏ—எம் (Stream) படித்தவர்களுக்கே சில நேரம் குழப்பம் வருவது வழக்கந்தான். அதிகமாகப் படித்துவிட்டால் குழப்பம் அதிகமாக வரும். அருமை நண்பர் திரு. சுவாமிநாதன் அவர்கள் அதிகம் படித்திருக்கிறார், குழப்பத்திற்கு ஆளாகவேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன். பாலாற்றின் அடியிலே இருக்கிற தண்ணீரை மேலே எடுத்து பல்லாயிரக்கணக்கான ஏக்கர்களுக்கு தண்ணீர் கிடைக்கின்ற அளவுக்கு புதிய முயற்சியை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நிச்சயமாகச் செய்வார். ஏனென்றால் வேறு எதுவும் இல்லாத காரணத்தால் அதில் ஈடுபட்டுக்கொண்டிருக்கிறார்.

இன்னொன்று, காஞ்சீபுரத்திற்குப் பக்கத்தில் மேட்டுப்பாக்கியம் என்ற சிறிய கிராமம் இருக்கிறது. அங்கே 3 ஏக்கர் நிலம் வைத்துக் கொண்டிருக்கிறான் ஒரு குடும்பத்தில் உள்ளவன். அவனுக்கு வேறு நிலம் இல்லை. அவன் நன்றாக விவசாயம் செய்து மூன்று போகம் பயிரிடுகிறான். நல்ல லாபமும் கிடைக்கின்றது. அப்படிப்பட்ட நிலத்தை காலனி மக்கள் தங்களுக்கு வீடுகட்டிக்கொள்ள கொடுக்க வேண்டும் என்று குறிப்பாகக் கேட்கிறார்கள். கிராம மக்கள் என்ன சொல்லுகிறார்கள் என்றால், பக்கத்தில் 30, 40 ஏக்கர் புறம்போக்கு நிலம் இருக்கிறது, அங்கே காலனி கட்டிக் கொள்ளுங்கள் என்று சொல்லுகிறார்கள். காலனி மக்களுக்கு வீடு கட்டிக் கொடுக்க வேண்டாம் என்று நான் சொல்லவில்லை. அவர்களுக்கு வீடுகள் தேவை தான். ஆனால் ஏற்கனவே ஒருவர் பயிரிட்டுக்கொண்டிருக்கின்ற அந்த நிலத்தில் தான் வீடுகள் கட்டிக் கொடுக்க வேண்டும் என்று காலனி மக்கள் நிர்ப்பந்த நிலையை உண்டாக்குகிறார்கள். பக்கத்தில் இருக்கின்ற 30 ஏக்கர் புறம்போக்கு நிலத்தில் அவர்களுக்கு வீடு கட்டிக்கொடுக்கலாம். ஆகவே இதை அருள்கூர்ந்து ஆராய்ந்து பார்த்து, எதில் நியாயம் இருக்கிறது என்று பார்த்துச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

விவசாயத்தை நாம் மேலும் பெருக்க வேண்டும். தமிழ் நாடு மட்டும் உணவில் தன்னிறைவு பெற்று உணவு அருந்தினால் போதாது. வெளிநாட்டுக்கெல்லாம் வாரி இறைக்க வேண்டும். இதற்கு முன்னால் பட்டினி கிடந்தோம். அமெரிக்காவிடம் போய் பிச்சை கேட்டோம். நமக்கு யார் கடன் கொடுத்தார்களோ அவர்களுக்கு எல்லாம் நாம் அள்ளிக் கொடுக்கும் விதத்தில் உணவு உற்பத்தி பெருகிவிட்டது என்று காட்ட வேண்டும் என்று தெரிவித்துக்கொண்டு வாய்ப்பினை அளித்த அவைத் தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து முடித்துக்கொள்ளுகிறேன்.

திரு. கே. ராமகிருஷ்ண ஆச்சாரி: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, வேளாண்மைக் கொள்கை விஷயமாக என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். நான்

[திரு. கே. ராமகிருஷ்ண ஆச்சாரி] [28th July 1971

வசிக்கின்ற கன்னியாகுமரி மாவட்டத்தில் இன்றைய நிலையைப் பார்த்தால், பேச்சிப்பாறையில் சுமார் 35 அடிக்கு மேலும், பெருஞ்சாணியில் 60 அடிக்கு மேலும், மின்சாரத்திற்காகப் போட்டிருக்கிற கோதையாறு அணையால் தண்ணீர் ஏராளமாக இருப்பதாக அரசுக் கணக்கு இருக்கிறது. ஆனால் நான் வசிக்கின்ற ஆரல்வாய்மொழி கிராமம், குமாரபுரம், செண்பகராமபுரம் ஆகிய கிராமங்கள் வறட்சிப் பிரதேசங்களாக இருக்கின்றன. சில சமயத்தில் மழை பெய்வதுண்டு. சில சமயங்களில் வறட்சி நீண்டு கொண்டிருக்கிறது. நான் பேசும்போதெல்லாம் பொய்கை அணைத் திட்டத்தைப் பற்றி நானும் நண்பர் திரு. சங்கரலிங்கமும் பலமுறை வலியுறுத்திக் கூறினேம். இப்போது நான் புதிதாக ஒன்றைக் கூற விரும்புகிறேன். ஜூன் 1-ஆம் தேதியிலிருந்து பெருஞ்சாணி, பேச்சிப்பாறையிலிருந்து ராதாபுரம் சப்-தாலுக்காவிற்கு பேச்சிப்பாறைத் தண்ணீர் விடப்பட்டிருக்கிறது. தண்ணீர் நூற்றுக்கணக்கான குளங்களில் பெருகி, கிராம விவசாயிகள் சந்தோஷமாக விவசாயம் செய்வதற்குத் தகுதியாகத் தண்ணீர் விடப்பட்டிருக்கிறது. ஆனால் என்னுடைய குறை என்ன வென்றால், எங்களுடைய கிராமத்திற்குப் பக்கத்தில் இரண்டாவது மைலில் கால்வாய் ஓடிக்கொண்டிருக்கிறது. சென்பகராம புரத்திற்குப் பக்கத்தில் போகிறது. வடபக்கம் அரை மைல் தூரத்தில் கால்வாய் (சானல்) பிரிந்து ஓடுகிறது. இதற்கு அருகே ஆச்சம்புதூர் குளம் 30 அடி தூரத்தில் இருக்கிறது. அது மாமாரி குளமாக இருக்கிறது. அந்தக் குளத்தில் லிப்டிமூலம் தண்ணீர் பெருக்கினால், ஆரல்வாய்மொழி பெரிய குளம், வைகைக் குளம், குமாரபுரம்குளம், தோவாளை பெரியகுளம் போன்ற குளங்களில், தண்ணீர்ப் பெருக்கினால் தட்டுப்பாடு வரும் சமயத்தில், "லிப்ட் இர்ரிகேஷன்" செய்வதன் மூலம் 5 ஆயிரம் ஏக்கர் நிலம் சாகுபடியாகும். இதற்கு முன்னாலேயே ஸ்கீம்கள் இருக்கின்றன. நமது மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கன்னியாகுமரி மாவட்டத்திற்கு விஜயம் செய்து, அந்தப் பக்கத்தை வந்து பார்த்தால், உண்மை விளங்கும். நமது உணவு நிலைமை வரவர மோசமாகிக் கொண்டிருக்கின்ற சந்தர்ப்பத்தில், இந்தத் திட்டத்திற்கு கோடிக்கணக்கான ரூபாய் செலவு செய்யத் தேவையில்லை. குறைந்த செலவில் நிறைவேற்றலாம் என்று அரசிற்கு ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

அடுத்து, ரசாயன உரம் சம்பந்தமாக விவசாயிகள் குறைப்படு கின்றார்கள். எனென்றால் கானடாவிலிருந்து வந்த உரங்கள் எல்லாம் சமுத்திரத் தண்ணீரில் நனைந்து கெட்டுப்போனதாகவும், சாக்குகள் சின்னைபின்னமானதாகவும், உரச்சத்து இல்லாமலிருப்ப தாகவும், விவசாயிகளைக் கட்டாயப்படுத்தி விவசாய வங்கி யிலிருந்து அதை வாங்கிக்கொள்ள வற்புறுத்துவதாகவும், சொல்லி அதனால் விவசாயிகள் மன வேதனைப்படுகின்றார்கள். அவர்கள் கூறுவது உண்மையாக இருந்தால், அந்த மாதிரிக் கெட்ட உரங்களை விவசாயிகளுக்குக் கொடுக்காமல் நல்ல ரசாயன உரங்களைக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.



28th July 1971] [திரு. கே. ராமகிருஷ்ண ஆச்சாரி]

எனக்கு முன்பு பேசிய நண்பர் திரு. வெங்கா அவர்கள் விவசாயத்தைப் பற்றி, இரசாயன உரத்தை மட்டும் போட்டால் விளைச்சல் சரியாக இருகாது என்று குறிப்பாக அவர்களுடைய அனுபவத்தைச் சொன்னார்கள். என்னுடைய அனுபவத்திலும் கூட, தழை உரங்கள், சாணி உரங்கள் இவற்றைப் போடாமல், வண்டல் மண் அடித்து பக்குவத்தைப் பாராமல் இரசாயன உரத்தை மட்டுமே போட்டால் பலன் கிடைப்பது அரிது என்று தான் கண்டிருக்கிறேன். தழை உரம் கிடைப்பது சுலபம். காடுகளில் தழைகள் வெட்டுவதற்கு அரசாங்கம் அனுமதித்து, தழை உரத்தை உபயோகப்படுத்துவதற்கு உத்திரவு பிறப்பித்தால் நன்மையாக இருக்கும் என்று எண்ணுகிறேன். 5-50 p.m.

(Mr. Chairman in the Chair.)

உழவன் கணக்குப் பார்த்தால் உழவுக் கம்புதான் மிச்சம் என்பார்கள். இங்கே உழக்கு தான் மிச்சம் என்பார்கள். எங்கள் பக்கத்தில் மாட்டை அடிக்கிற தார்கம்பு, உழவுக் கொம்பு தான் மிச்சம் என்று சொல்லுவார்கள். காலம் இருக்கின்ற நிலைமையில் எல்லா விவசாயிகளிடத்திலும் ஏர் மாடுகள் இருப்பதில்லை. ஆகவே அவர்கள் உழ வேண்டுமென்றால், மாடுகள் வைத்திருப்பவர்களை அழைத்து உழவேண்டியிருக்கிறது. உழவுக்கு ஆளும், வரப்பு வேலைக்கு ஆளும், தனி மனிதன் 1 ஏக்கர, 2 ஏக்கர வைத்திருப்பவன் சொந்த முயற்சியால் விவசாயம் செய்துகொள்ள முடியாது. விவசாயத்திற்கு ஆகின்ற செலவைப் பார்த்தால், நெல்லுக்குக் கொடுக்கப்படும் விலை போதாது என்று பல விவசாயிகள் சொல்லுகிறார்கள். ஆனால் அரசு விலையை உயர்த்தத் தயாரில்லை என்கிறார்கள். இப்போது நெல் விலை தானாகவே உயர்ந்து விட்டது. தஞ்சையில் கொள்முதல் செய்ய வேண்டுமானால், வியாபாரிகள் 50 சதவிகிதம் கொள்முதல் செய்து கொடுத்து விட்டுத் தான் நெல்லை எடுத்துக்கொண்டு போக வேண்டும் என்ற உள்ளது அரசாங்க உத்தரவு. வியாபாரிகள் இந்த நஷ்டத்தை ஈடுகட்டுவதற்காக இங்கே நெல்லைக் கொண்டுவந்து அபரிமிதமான லாபத்துக்கு விற்றால் தான் அவர்களுக்குக் கொஞ்சம் கட்டுப் படியாகும். அவர்களும் இனிமேல் தஞ்சைக்குப் போய் நெல் கொண்டுவர முடியாது. ஒரு மாத காலமாக நெல் விலை, அரிசி விலை எல்லாம் உயர்ந்திருக்கிறது. பட்டணம் பக்கா படி 2¼ ரூபாய்க்கு விற்கிறது. இந்த நிலையில் அரசு நெல்லின் விலையைக் கொஞ்சம் உயர்த்திக் கொடுத்தால், விவசாயிகளுக்கு நன்மை பயக்கும் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

விவசாயிகளுக்குக் காலா காலத்தில் விவசாயக் கடன்கள் தாமதமில்லாமல் கிடைக்கும்படி செய்ய வேண்டும். நல்ல உரங்களை விவசாயிகளுக்குக் கொடுக்க வேண்டும். கெட்ட உரங்களை அவர்கள் தலையில் கட்டக் கூடாது. கெட்ட உரங்களை அவர்கள் தலையில் கட்டினால், விவசாயம் செழிப்பாக இருக்காது, விவசாயிகளும் வாழ முடியாது என்பதை இந்த சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

[திரு. கே. சாமிருஷ்ண ஆச்சாரி] 28th July 1971]

விப்ட் இர்ரிகேஷன் திட்டம்பற்றி மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் எங்கள் பகுதிக்கு வந்தால், அந்த இடங்களை எல்லாம் காட்டுவதற்குத் தயாராக இருக்கிறேன் என்று கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் வந்த பிறகு, தனியாக வேளாண்மைத் துறைக்கு ஒரு சர்வகலாசாலை ஏற்பட்டுவிட்டது. சர்வகலாசாலை ஏற்படுவதற்கு முன்பே நமது மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்கரலிங்கம் அவர்கள் எங்களுடைய பகுதியில் வேளாண்மைக் கல்லூரி வேண்டுமென்று பல முறை காலம் சென்ற மாண்புமிகு அமைச்சர் திரு. கோவிந்தசாமி அவர்கள் இருக்கிற காலத்திலேயே வற்புறுத்தினர். அது எங்கள் பகுதிக்கு மாத்திரம் அல்ல, நெல்லை ஜில்லாவுக்கும் சேர்ந்தது. அதற்காக பத்மநாபபுரம் பக்கம் 50 ஏக்கருக்கு மேல் இருக்கிறது. அதற்காக நாங்கள் எங்கள் பங்குக்கு உண்டான பணத்தை வசூல் செய்து தரவும் தயாராக இருக்கிறோம். மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் எங்கள் பகுதிக்கு வந்தால், அந்த இடத்தையும் நன்றாகப் பார்க்கலாம். இதற்கு ஆவன செய்யும்படி கேட்டுக்கொண்டு இந்த சந்தர்ப்பத்தை அளித்த தலைவர் அவர்களுக்கு என் வணக்கத்தைத் தெரிவித்துக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்ளுகிறேன்.

*திரு. எஸ். லி. செங்கோட்டு வேலப்ப கவுண்டர்: தலைவர் அவர்களே, வேளாண்மைத் துறை அறிக்கைபற்றி ஒரு சில விஷயங்களைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். நாட்டில் நடைபெறுகின்ற தொழில்களில் எல்லாம் குறிப்பிடத்தக்க முதன்மையான தொழில் வேளாண்மை தான். இதற்கு அரசு என்னென்ன நன்மைகள் செய்ய முடியுமோ, அவைகளையெல்லாம் செய்ய வேண்டுமென்று நாம் அனைவரும் எதிர்பார்க்கிறோம்.

இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் பெருமையாகக் குறிப்பிட்டார்கள் உழவர்களைப்பற்றியும், வேளாண்மைத் துறையைப்பற்றியும். இதர தொழிலைச் செய்கிறவர்களின் நிலையை ஒப்பிட்டுப் பார்க்கும்போது, வேளாண்மைத் தொழிலில் ஈடுபட்டிருக்கிறவர்களின் நிலை உயர்ந்திருக்கிறதா என்றால், இல்லை.

மாண்புமிகு உறுப்பினர் திரு. வெங்கா அவர்கள் குறிப்பிட்ட மாதிரி, வேளாண்மைத் தொழிலில் ஈடுபட்டுள்ள எந்த ஒரு விவசாயியும் தன்னுடைய வாழ்க்கையைச் சுலபமாகவும், சௌகரியமாகவும் அமைத்துக்கொள்ள முடியாது என்பது நாடறிந்த உண்மை. ஆகவே வேளாண்மைத் துறையைப் பொறுத்த வரையில், அரசு இன்னும் அதிகத் தீவிரமாகக் கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.



[28th July 1971

[திரு. எஸ். லி. செங்கோட்டு வேலப்ப கவுண்டர்]

இன்று நாட்டில் உணவு உற்பத்தி பெருகியிருக்கிறது. வெளிநாடுகளிலிருந்து இப்போது உணவுப் பொருள்கள் வாங்குவதை நிறுத்தி விட்டோம் என்று சொன்னார்கள். அந்தப் பெருமைக்கு உரியவர்கள் இந்த விவசாயிகள் தான். நாம் அவர்களை மறந்துவிடக் கூடாது. அத்தகைய விவசாய மக்களுக்கு அரசு என்னென்ன செய்ய முடியுமோ அவைகளையெல்லாம் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

குறிப்பாக, கோவை மாவட்டத்திலுள்ள ஒரு சில குறைகளைப் பற்றி இங்கே சொல்ல நான் கடமைப்பட்டிருக்கிறேன். ஒவ்வொரு அணைக்கட்டிலும் எவ்வளவு நீர் இருக்கிறது. அதனுடைய நிலைமை என்ன என்பதைப்பற்றியெல்லாம் அறிக்கைகள் வெளியிடப்படுகின்றன. ஆனால் கீழ்பவானி அணைக்கட்டில் எவ்வளவு நீர் இருக்கிறது? அதனுடைய நிலைமை என்ன? அதனுடைய வரலாறு என்ன என்பதைப்பற்றியெல்லாம் அறிக்கை வெளியிடப் படுவதில்லை. அதற்குள்ள காரணம் என்ன என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன். இதர அணைக்கட்டுகளுக்கு அறிக்கைகள் தருவது போல், இதற்கும் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

இன்று நமது தமிழ் நாட்டில் பஞ்சாயத்து யூனியன்கள் எல்லாப் பகுதிகளிலும் செயல்பட்டு வருகின்றன. பஞ்சாயத்து யூனியன்களில் கிராம நல ஊழியர்கள் இருக்கிறார்கள். இவர்களுக்கு விவசாய வேலை தான் முக்கிய வேலை. அவர்கள் விவசாய வேலையைச் செய்கிறார்களா என்றால் இல்லை. சர்க்காரில் எவ்வளவு இலாக்காக்கள் இருக்கின்றனவோ அவ்வளவு இலாகா அலுவல்களையும் பஞ்சாயத்து யூனியனில் செயல்படுத்துகின்றார்கள். ஆகவே- இந்தக் கிராம நல ஊழியர்களை மற்ற வேலைகளுக்குப் பயன்படுத்துகிறார்கள். இந்த நிலை தவிர்க்கப்பட வேண்டும்.

கீழ்பவானியில் தண்ணீர் வந்த பிறகு, விதைகளையும், ரசாயன உரங்களையும் தேடிப் போனால் கிடைப்பதில்லை. தண்ணீர் விடுவதற்கு 15 நாட்களுக்கு முன்பே "ஸ்டாக்" வைத்துக்கொள்ள வேண்டும். வாய்க்காலில் தண்ணீர் விட்ட பிறகு, பொறுக்கு விதைகளை வாங்கிப் பயிர் செய்வது என்பது இயலாத காரியம். விவசாயத்தில் நேரடியாக ஈடுபட்டவர்களுக்குத் தான் இந்தக் கஷ்டங்கள் எல்லாம் தெரியும். இதில் அரசாங்கம் சரியான கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. கிருஷ்ணசாமி நாயுடு குறிப்பிட்டது போல், மழை இல்லாததால் சென்ற 2, 3 வருஷங்களாகக் கீழ்பவானியிலிருந்து ஒரு பகுதிக்கு மட்டும் ஒரு போகம் தான் தண்ணீர் விடப்பட்டு வருகிறது. இதிலே என்ன விசேஷம் என்றால் இதற்கு அபிவிருத்தி வரி போடப்பட்டுள்ளது. இந்த ஆண்டில் ஒரு பகுதிக்குத் தண்ணீர் போனால், அடுத்த ஆண்டு மற்ற பகுதிக்குப் போகும். ஆனால் அரசு தண்ணீர் பாயாத பகுதிக்கும்

முடியாத சூழ்நிலை இருப்பதை மாற்ற வேண்டும். விவசாயிகள் அபிவிருத்தி வரி வசூல் செய்கிறது. இந்த நிலையை மாற்றி, தண்ணீர் பாயும் பகுதிகளுக்கு மட்டும் வரி வசூலிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

விவசாயத்துக்கு மின்சாரம் மிகவும் முக்கியம். தடையில்லாமல் விவசாயிகளுக்கு மின்சாரம் கிடைக்கும்படி செய்ய வேண்டும். இப்போது கூட்டுறவுத் துறையில் விவசாயக் கடன்கள் கொடுக்கப் பட்டு வருகின்றன. பயிர் செய்யும்போது தான் கடன் மனு கொடுக்கப்படுகிறது. காலம் கடந்து தான், விவசாயிகளுக்கு விதை, உரம் போன்றவைகள் கொடுக்கப்படுகின்றன. இவைகளைக் காலா காலத்தில் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

விவசாயி கடன்கோரி மனு கொடுத்த பின்னர் மத்திய பாங்கு அனுமதி பெற்று தொகை வழங்கப்படுகிறது. ஒவ்வொரு தடவையும் அந்த விவசாயி பயிர் செய்யும்பொழுது, புதிதாக ஒவ்வொரு தடவையும் மனு செய்ய வேண்டும். விவசாயச் சங்கத்தில் அவர்கள் கூட்டத்தைக் கூட்டி, தீர்மானம் செய்ய வேண்டும். மத்திய பாங்கில் அவர்கள் கூட்டம் நடத்தும்பொழுது, தீர்மானம் செய்ய வேண்டும் என்று சொல்லும்பொழுது, நிச்சயமாக விவசாயி பயிர் செய்யச் செலவுக்குக் கடன் கிடைக்கப் போவதில்லையென்பதை எல்லோரும் ஒத்துக்கொள்ள வேண்டும். என்னுடைய வேண்டுகோள் இதை மாற்ற வேண்டும். விவசாயி அடமான கடன்கோரி கூட்டுறவு பாங்கு விவசாய சங்கங்களுக்கு கடன் மறுத்துவிடுகிறார்கள். அவர்களுடைய பூமியைப் பார்த்து ரூ. 5 ஆயிரம் கடன் வாங்கலாம் என்று சொன்னால், இதர சங்கங்களுக்கு காஸ்ட் கிரடிட் கடன் கொடுக்கிற மாதிரி உடனடியாக விவசாயிகளும் கடன் பெற்றுக் கொள்ள வசதி செய்து கொடுக்க வேண்டுமென்று இந்த சந்தர்ப் பத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, மின்சாரத்தைப் பொறுத்த வரையில் இப்போது கிராமங்களில் அதிக மின்சாரம் தேவைப்படுகிறது. கொடுக்கவும் படுகிறது. முழுமையாகக் கொடுக்கப்படவில்லையென்று சொல்லத் தான் வேண்டும். மின்சார சம்பந்தமான சூப்ரவைசர் அலுவலகம், உதவிப் பொறியாளர் அலுவலகம் இவைகள் எல்லாம் தாலுகா தலைநகரங்களிலே ஏற்படுத்தப்படுகிறது. நான் குறிப்பிடுவது என்னவென்றால், சூப்ரவைசர் அலுவலகங்கள் கிராமங்களில் இருக்க வேண்டும். அது போல் ஒன்றிரண்டு இடங்களில் ஏற்படுத்தப்பட வேண்டுமென்று ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. 1, 2 ஆண்டுகள் ஆகியும் அந்த அலுவலகங்கள் செயல்படவில்லை. உத்தரவு இருந்தும், அலுவலகத்தை நகரத்தில் வைத்துக் கொள்ளு கிறார்கள், கிராமங்களில் வைப்பதில்லை. இதனால் விவசாயிகள் ஒவ்வொரு காரியத்திற்கும் நகர்ப்புறத்திற்குப் போகவேண்டி யிருக்கிறது. மதிப்புக்குரிய நண்பர் குறிப்பிட்டது போல், விவசாயிகள் அதிகாரிகளிடம் செல்லுகிறபொழுது, சரியாகக் கவனிக்காத நிலை இருக்கிறது. இதில் அதிகாரிகள் முழு ஒத்துழைப்பு தரவேண்டியது முக்கியம். இன்னும் அந்த அளவுக்கு விவசாயிகள் தங்கள் காரியங்களை ஒரு அலுவலகத்தில் சரிக்க



சம்பந்தமான காரியங்களைத் துரிதமாகப் பைசல் செய்ய வேண்டு மென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

ரசாயன உரங்கள்பற்றி இரண்டொரு கருத்துக்களைக் கூறிக் கொள்ள விரும்புகிறேன். அரசாங்கத் துறையில் ரசாயன உரங்கள் கொடுக்கப்படுகின்றன. இல்லையென்று மறுக்கவில்லை. இருந்தாலும் கூட அரசு அனுமதியில்லாமல் கலப்பு உரத்தைத் தனியார் விற்று வருகிறார்கள். விவசாயிகள் அதை ஏன் வாங்குகிறார்கள் என்ற கேள்வி வரக்கூடும். ஒன்று சொல்லுகிறேன். விவசாயச் சங்கத்தில் உரம் பெறும்பொழுது, ஒன்று கடன் கொடுக்கப்படுகிறது. அல்லது சொக்கம் இருக்க வேண்டும். கிராமங்களில் உள்ள நிலை அரசு அனுமதி இல்லாமல் தனியார்கள் கலப்பு உரம் கொடுத்து 2, 3 மாதம் கழித்து நெல் அல்லது மற்ற தானியங்கள் வந்த பிறகு வாங்கிக்கொள்ளுகிறோம் என்று சொல்லுவதால், விவசாயிகள் பணமில்லாத கஷ்டத்தால் பெற்றுக்கொள்ளுகிறார்கள். அந்த நிலையை மாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். அது தரமான உரம் அல்ல. "மிக்சர்" என்ற பெயரால் விற்கிறார்கள். இது பஞ்சாயத்து யூனியன் அதிகாரிகளாலோ மாவட்ட விவசாய அதிகாரிகளாலோ கண்காணிக்கப்பட்டு, புதிய ஏற்பாடு செய்யப் பட வேண்டும்.

அடுத்து, ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனிலும் டிராக்டர் வைக்கப்பட்டிருக்கிறது. ஆனால் நடைமுறையில் காரியங்களுக்கு உபயோகப்படவில்லை. பஞ்சாயத்து யூனியனில் டிராக்டர்கள் வாங்கப்பட்டு 1, 2 வருஷங்களில் அவைகள் செயல்படமுடியாத நிலை இருக்கிறது. இதற்கு என்ன காரணம்? அதைப் பராமரிக்கும் முறை சரியாக இல்லையா? பஞ்சாயத்து யூனியன் வாங்குகிற டிராக்டருக்கு ஒரு வருஷத்தில் செலவு என்ன, வருமானம் என்ன என்பதை ஆராய வேண்டும். நான் பஞ்சாயத்து யூனியன் தலைவராக இருந்தபோது, ஆராய்ந்தேன். வரவு செலவுக் கணக்கு பார்த்தால், செலவு தான் அதிகம்; வரவு குறைவு. தனிப்பட்ட முறையில் டிராக்டர்கள் வைத்திருப்பவர்களுக்கு நஷ்டம் வருவதில்லை. சிறந்த முறையில் செயல்படுகிறது. பராமரிக்கும் முறை தான் மாறுபடுகிறது; வேறு ஒன்றுமில்லை. ஆகவே இதில் உடனடியாக சர்க்கார் பொதுப் பணம் விரயம் ஆகாமலிருக்க என்ன முயற்சிகளை எடுத்துக்கொள்ள வேண்டுமோ அவைகளை எடுத்துக்கொள்ள வேண்டும். கிணறுகளுக்கு "போரிங்" போடுகிற மெஷின்கள் எல்லாப் பஞ்சாயத்து யூனியன்களிலும் வைக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் விவசாயிகள் அவற்றை எடுத்துக் கொள்ளாமல் தனிப்பட்டவர்களிடம் அதிகமாகப் போகிறார்கள். காரணம் அரசுக்குத் தெரியும். சர்க்கார் துறை யில் செயல்படுகிற காரியங்கள் சிறப்பான முறையில் செயல்பட வேண்டும். அந்த இலாகாவிலிருந்து அந்த போரிங் மெஷின் வேண்டும். அந்த இலாகாவிலிருந்து அந்த போரிங் மெஷின், டிராக்டர்கள் இவைகளை எடுத்துவிடலாம் என்று சொல்லிக் கொள்ளுகிறேன். மக்களிடம் நல்ல பெயர் இல்லை, வருமானமும் இல்லை. ஆகவே இவைகளையெல்லாம் அரசு பரிசீலனை செய்ய வேண்டும்.

[திரு. எஸ். லி. செங்கோட்டு வேலப்ப கவுண்டர்]

10 a.m. அடுத்தபடியாக, கோவை மாவட்டத்தில் பல்லடம், அவினாசி பகுதிகள் வறண்ட பிரதேசங்களாக இருக்கின்றன. அவைகளுக்கும் பாசன முறை ஏற்படுத்துவதற்கு நீண்டகாலமாக கோரிக்கைகள் இருந்து வருகின்றன. அவற்றை அரசு பரிசீலனை செய்ய வேண்டும். அடுத்தபடியாக, கோயம்புத்தூரில் விவசாய சர்வகலாசாலை ஏற்பட்டிருக்கிறது. கோவை ஜில்லாவாசிகள் பெருமைப்படுகிறோம். டிராக்டர், புல்டோசர், கிணறு வெட்டும் கருவிகள் கோவை ஜில்லாவைப் பொறுத்த வரையில் ஒரே இடத்தில் வைக்கப்பட்டிருக்கின்றன. அது ஒரு பகுதிக்குத்தான் பிரயோஜனமாக இருக்கிறது. எல்லாப் பகுதிகளுக்கும் பிரயோஜனப்படுவதில்லை. கோவை மாவட்ட அபிவிருத்தி மன்றத்தில்கூட பல தடவை தீர்மானம் போட்டிருக்கிறோம். தலைமை இடமாக ஈரோட்டுக்கு ஒன்று கொடுக்கலாம் என்று. அது அரசுக்கு அனுப்பப் பட்டிருப்பதாக மாவட்ட ஆட்சித் தலைவர் சொல்லுகிறார். தயவு செய்து அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்து ஈரோட்டில் ஒரு தலைமை இடம் வைத்து செயல்பட புதிய ஏற்பாடுகள் செய்ய வேண்டும்.

இப்போது நிலச் சீர்திருத்தங்கள் கொண்டு வந்து 15 ஸ்டாண்டர்டு ஏக்கர் என்று உச்சவரம்பு விதிக்கப்பட்டிருக்கிறது. வரவேற்கத்தகுந்ததுதான். இருந்தும்கூட உச்சவரம்பிற்குப் பிறகு 15 ஏக்கர் நிலம் வைத்திருக்கும் விவசாயிக்குச் செலவு போக வருமானம் மிகக் குறைவாக இருக்கிறது. அதற்கு மேலும் விவசாய வருமான வரி என்றால், உண்மையிலேயே மதிப்புக்குரிய வேளாண்மை அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன்—அவர் விவசாயத்தில் ஈடுபட்டிருப்பவர்—15 ஏக்கர் நிலம் வைத்திருக்கிற ஒரு விவசாயிக்கு சாதாரண ஒரு கடை நகர்ப் புறத்தில் வைத்திருக்கும் ஒரு வியாபாரிக்குள்ள வாழ்க்கை வசதி இருக்கிறதா என்பதைத் தயவுசெய்து யோசித்துப் பார்க்க வேண்டும். அவர்கள் இந்த விவசாய வருமானத்தை வைத்து, தங்களுடைய வாழ்க்கையை மகிழத் தக்க வகையில் ஆக்கிக் கொள்ள முடியுமா என்பதை யோசிக்க வேண்டும்.

விவசாயத்தைப் பொறுத்த வரையில், லோயர் பவானி திட்டத்தில் சில குறைபாடுகள் இருக்கின்றன. சில மாதங்கள்தான் தண்ணீர் விடப்படுகிறது. இப்போதும் விடப்பட்டிருக்கிறது. அந்தத் தண்ணீர் வினியோகிக்கும் முறை ஒரு லஸ்கரிடம் விடப் பட்டிருக்கிறது. இது சரியான முறைதானா? இந்த வாய்க்கால்களில் தண்ணீர் விடுவது ஒரே நபரிடம் கொடுக்கப்படுவது சரியான முறைதானா என்பதை ஆராய வேண்டும். நாங்கள் பல தடவை சொல்லியிருக்கிறோம். பஞ்சாயத்து யூனியன் தலைவர்கள், சட்ட மன்ற உறுப்பினர்கள், தண்ணீர் பாசன முறை இருக்கிற காலத்தில் ஒரு குழுவை அமைத்து, சரியான முறையில் வினியோகிக்கப் படுகிறதா என்று கவனிக்க வேண்டும். மாதம் ஒரு முறை எந்தப் பகுதியில் கஷ்டங்கள் இருக்கின்றனவோ, அந்தப் பகுதிகளுக்குச் சென்று பார்த்து, அதற்குத் தகுந்தபடி தண்ணீரை வினியோகம்



[திரு. எஸ். லி. செங்கோட்டு வேலப்ப கவுண்டர்]

செய்யலாம். இன்னும் பல சிக்கல்கள் இருக்கின்றன. பல இடங்களில் தண்டத் தீர்வை போடுகிறார்கள். ஆகவே அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்ய வேண்டும். ஒரு வட்டாரத்துக்கு ஒரு குழுவை அமைத்து, நான்கு மாதகாலத் தண்ணீர் விடப்படுகிறது என்றால், தண்ணீர் விடுவதில் சிரமங்கள் இருக்கின்றன. அவைகளை எவ்வாறு போக்குவது என்று ஆராய்ந்து ஒரு முறையை ஏற்படுத்திக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு வாய்ப்புக் கொடுத்த தலைவருக்கு நன்றி கூறி முடித்துக்கொள்ளுகிறேன்.

*திரு. ஆர். தர்மலிங்கம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, இன்றைக்கு விவசாயத் துறையைப்பற்றி, என்னுடைய கருத்துக்களை இங்கே சொல்ல ஆசைப்படுகிறேன். சொல்லுவதற்கு முன்பாக வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களையும் தமிழ்நாட்டு அமைச்சரவையையும் நான் பாராட்டுகிறேன். பாராட்டுகிற நேரத்தில் நான் வேளாண்மைக் கொள்கைக் குறிப்பில் கொடுக்கப் பட்டிருக்கும் புள்ளிவிவரங்களைப் பார்த்தால், 1965–66-ல் பரப்பளவு எக்கர் 5.36 லட்சம், உற்பத்தி 9.70 லட்சம் டன்கள். இன்றைக்கு 1970-71-ல் பாப்பளவு 23,75 எக்கரில் உற்பத்தி 20.51 லட்சம் டன்களாக உயர்ந்திருக்கிறது. கடந்த நான்காண்டுக் காலத்திலே பெரிய மகத்தான சாதனையைச் சாதித்துள்ள இந்த அமைச்சரவையை நான் பாராட்டுகிறேன், போற்றுகிறேன். இதற்கு முன் பிருந்த சர்க்கார் செய்த சாதனையைவிட இந்த நான்காண்டு காலத்திலே நான்கு மடங்கு அளவு உற்பத்தியைப் பெருக்கி, ஒரு ஏக்காரிலே நான்கு மடங்கு உற்பத்தியைப் பெருக்க இந்த அரசு செய்துள்ள சாதனையை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அதிலும் குறிப்பாக இன்றைக்குப் பொறுப்பேற்றிருக்கிற மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விவசாயத்திலே மிக கண்ணும் கருத்துமாக இருந்து, இந்த நாட்டிலே உற்பத்தியை அதிகப்படுத்தி, தமிழ் நாட்டிலேயிருந்து மற்ற மாநிலங்களுக்கும் அனுப்ப வேண்டுமென்ற குறிக்கோளைக் கொண்டு விவசாயத்தைப் பெருக்க இந்த அரசு பாடுபட்டுக்கொண்டு வருகிறது. ஆகவே இந்த அரசைப் பாராட்ட நான் கடமைப்பட்டிருக்கிறேன். நான் வடாற்காடு மாவட்டத்தைச் சார்ந்தவன் என்ற முறையிலே நான் பெருமையோடு பேச ஆசைப்படுகிறேன். காரணம், தமிழ் நாட்டிலேயே தஞ்சைக்கு அடுத்தாற்போல உணவு உற்பத்தியை அதிகம் செய்வது வடாற்காடு மாவட்டந்தான். அதில் தஞ்சை மாவட்டத்திலே உள்ளவர்களுக்கு அணைக்கட்டு நீர்ப்பாசன வசதி இருக்கிறது. வடாற்காடு மாவட்டத்தில் அதைப் போன்ற பெரிய அணைப் பாசனம் இல்லை. நீர்ப்பாசனம் கிடையாது. ஆகவே கிணறுகளை ஆழமாகத் தோண்டி அதிலேயிருந்து தண்ணீரைக் கொண்டுவந்து விவசாயத்திற்குப் பயன்படுத்தி உணவு உற்பத்தியை அதிகம் செய்து சாட்டிய பெருமை வடாற்காடு மாவட்டத்தைச் சேரும் என்பதை இந்த நேரத்திலே நான் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். அது மட்டுமல்லாமல் இந்த அரசு வந்த பிறகு, வேளாண்

[திரு. ஆர். தர்மலிங்கம்] [28th July 1971

மைத் துறையிலே அதிகக் கவனம் செலுத்தி வேளாண்மைப் பெருங்குடி மக்களுக்கு எந்த நேரத்திலே அவர்களுக்கு உரம் வேண்டும், எந்த நேரத்திலே அவர்களுக்கு இயந்திரக் கலப்பை வேண்டும், எந்த நேரத்திலே அவர்களுக்கு விதைகள் வேண்டும் என்றெல்லாம் பார்த்து, அந்தந்த நேரத்திலே கொடுத்தால்தான், விவசாய உற்பத்தியை அதிகம் செய்ய முடியும் என்ற கருத்தைக் கொண்டு இன்றைக்குக் கொடுத்து வருகிறார்கள். அதற்கு முன்பெல்லாம் அப்படி இடைத்ததா என்றால், கிடைக்கவில்லை. அன்றைக்கு உரம் வேண்டும் என்று மாதக் கணக்கிலே காத்திருக்க வேண்டும், அல்லது கள்ள மார்க்கெட்டிலே வாங்க வேண்டும். அப்பொழுது நாற்றை விட்டுவிட்டால், நாற்றுக்கு உரம் கிடைப்பதில்லை. ஆனால் இன்றைக்கு நாற்று விடுவதற்கு முன்பே நாம் உரம் வேண்டும் என்றால், உரம் கிடைக்கிறது. ஆகையினால்தான் இந்த அரசைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். இன்றைக்கு வேளாண்மை குடியிலே பிறந்த அத்தனை பேரும் இந்த சர்க்காரைப் பாராட்டுகிறார்கள். அதற்கு உதாரணத்தை நான் சொல்வது சரி என்று கருதுகிறேன். சமீபத்திலே நடந்த இடைப் பொதுத் தேர்தலிலே கிராமத்திலே உள்ள விவசாயப் பெருங்குடி மக்கள் அதிக வாக்குகள் இந்த அரசுக் கட்சியைச் சார்ந்தவர்களுக்குத் தந்திருக்கிறார்கள் என்பதனையே இதற்குச் சான்றாகக் காட்ட முடியும். இதற்கு முன்பிருந்த அரசு கொள்முதல் என்று வைத்திருந்தார்கள். ஆனால் இந்த அரசு, நாம் விவசாயிகளிடமிருந்து வாங்கினால், விவசாயிகள் பாதிக்கப்படுவார்கள். விவசாயிகள் குறைந்த விலைக்கு விற்கக் கூடாது, அவர்கள் இரவு பகலாகப் பாடுபட்டு, வியர்வை சிந்தி அவர்கள் ஈட்டிய பொருளை அவர்கள் வேண்டிய விலைக்கு விற்கவேண்டும் என்று கருதி, இந்த அரசு விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்யக் கூடாது என்ற திட்டத்தையும் போட்டு, வாங்குகிற வியாபாரியே 15 சதவிகிதம் லெவி கொடுக்க வேண்டுமென்று சட்டத்தையும் போட்டிருக்கிறார்கள். அதற்காக விவசாயப் பெருங்குடிமக்கள் இந்த அரசைப் பாராட்டுகிறார்கள். அது மட்டுமல்லாமல் 20 ஆண்டுக் காலமாக தமிழ் நாட்டிலே வேளாண்மைப் பல்கலைக் கழகம் ஏற்படுத்தவில்லை. ஆனால் இந்த அரசு வந்து இதை ஏற்படுத்தியிருக்கிறது இந்த ஆண்டு என்றால், அதையும் பார்த்து விவசாயப் பெருங்குடி மக்கள் பூரிப்படைகிறார்கள். ஆனால் இந்த நேரத்திலே ஒன்று சொல்லிக்கொள்வேன், வடாற்காடு மாவட்டத்திற்கு இதற்கு முன்பிருந்த நம்முடைய மறைந்த வேளாண்மைத் துறை அமைச்சர் மாண்புமிகு கோவிந்த சாமி அவர்கள் திருவண்ணாமலைக்கு அருகாமையிலே ஆர்ப்பாக்கம் என்ற இடத்திலே இருக்கிற இடம் 300 ஏக்கர் தரிசாக இருக்கிறது—அந்த இடத்திலே ஒரு விவசாயக் கல்லூரியை அமைக்க வேண்டுமென்று நான் அழைத்துக் கொண்டுபோய் காட்டியபோது, அங்கே அமைக்கலாம் என்று கூறினார்கள். நான் வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வேன். வடாற்காடு மாவட்டம் உணவு உற்பத்தியிலே முன்னேறியிருக்கிற மாவட்டம். அந்த மாவட்டத்திலே ஒரு வேளாண்மைக் கல்லூரி அமைக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

6-30 p.m.



28th July 1971] [திரு. ஆர். தர்மலிங்கம்]

நாம் உணவு உற்பத்தியை மட்டும் பெருக்கிவிட்டால் போதாது என்று நான் சில கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன். எனக்கு முன் பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெயராம செட்டியார் அவர்கள் குறிப்பிட்டதைப் போல், விவசாயத்திலே உணவு உற்பத்தி செய்து விவசாயிகள் கஷ்டப்பட்டுச் சேகரித்த பொருளைக்கொண்டு போய் விற்பதற்கு விற்பனைக்கூடங்கள் வேண்டும். ஆனால் வியாபாரிகள் இருக்கிறார்களே என்று சொல்லலாம். அந்த வியாபாரிகள் இன்றைக்கு என்ன செய்கிறார்கள்? விவசாயி சரக்கை வியாபாரிகளிடம் கொண்டுபோனால், அவர்கள் இடைத் தரகர்களாக இருந்து விவசாயிகளிடமிருந்து ரூபாய்க்கு 3 பைசா கமிஷன், அதைப்போல் வாங்குகிற வியாபாரியிடமிருந்து ரூபாய்க்கு 3 பைசா கமிஷன் என்று இப்படி 6 பைசாவை வாங்கிக் கொள்கிறார்கள். குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால், ஒரு மூட்டை நெல் 50 ரூபாய் என்று வைத்துக்கொண்டால், ஒரு விவசாயி இடைத் தரகரிடம் கொண்டுபோய் விற்றால், அவர் ரூபாய்க்கு 3 பைசா என்று விவசாயியிடம் 150 பைசாவும், வியாபாரியிடம் 150 பைசாவும், ஆக மொத்தம் 3 ரூபாய் ஒரு டெலிஃபோன் வைத்துக்கொண்டிருக்கிற காரணத்தால், வாங்கிக் கொள்கிறார். ஆனால் இன்றைக்கு விவசாயிகள் வியாபாரிகளிடம் போவதற்கு இஷ்டப்படவில்லை. காரணம் குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால், திருவண்ணாமலையிலே இன்றைக்கு விற்பனைக்கூடம் இருக்கிறது. ஒழுங்குமுறை விற்பனைக்கூடம் என்று பெயர். ஒரு நாளைக்கு 200, 300 மூட்டைகள் அந்த விற்பனைக் கூடத்திற்கு வருகின்றன. தனிப்பட்ட கமிஷன் வியாபாரியிடம் போகவில்லை. ஆனால் இன்றைக்கு விற்பனைக் கூடங்களிலே விவசாயிகளிடமிருந்து ஒரு பைசாகூட வாங்குவது கிடையாது. அது மட்டுமல்லாமல், அவர்கள் சரக்கு கொண்டுவந்தவுடனே, அந்த மார்க்கெட் கமிட்டியே கோணிப் பைகளைக் கொடுத்து அந்தப் பையிலே மாற்றுகிறார்கள். அதை மாற்றிக்கொண்டு அந்த விவசாயிகளுக்கு ஒரு டோக்கன் கொடுத்து அவர்களை வைத்துக்கொள்ளச் செய்து, வரிசைக் கிரமமாக 1, 2, 3 என்று போட்டு லாட்டுகளாக வைத்து, அதை வியாபாரிகள் அத்தனை பேரும் வந்து மறைமுக ஏலத்திற்கு போட்டு, எந்த விலை யார் போடுகிறார்கள் என்று மற்ற வியாபாரிகளுக்குத் தெரியாமல் ஒரு பெட்டியிலே போட்டு, குறிப்பிட்ட நேரத்திலே காலை 10 அல்லது 10½ மணிக்குப் பெட்டியை திறந்து, அதிக பட்ச விலை கேட்கிற வியாபாரிகள் என்ன விலைக்குக் கேட்கிறார்களோ, அதைப் படித்து அந்த விவசாயி சரி விற்கலாம் என்று சொன்னால் விற்கிறார்கள். அவர்கள் விற்கக்கூடாது, விலை எனக்கு பிடிக்கவில்லை, விலை குறைவாக இருக்கிறது, இன்னும் கொஞ்ச நாள் பொறுத்து விற்றுக்கொள்கிறேன் என்றால், 10 தினங்கள் வைத்துக் கொள்வதற்கு அந்த விவசாயிக்கு வாடகை கிடையாது. அப்படி 10 தினங்களிலே அவர்கள் என்றைக்கு வேண்டுமானாலும் எடுத்து விற்றுக்கொள்ளலாம். அப்படி ஏற்பாடு செய்து, இன்றைக்கு ஒழுங்காக விற்பனைக்கூடங்கள் செயல்பட்டு வருகின்றன. ஆனால் அதிலே கட்டாயம் இருக்கிறதே, விவசாயி தான் விளைவித்த

[திரு. ஆர். தர்மலிங்கம்] 28th July 1971]

பொருளை அங்கேதான் கொண்டுவந்து விற்கவேண்டும் என்ற கட்டாயம் இருக்கிறதா என்றால், கட்டாய விற்பனை இல்லை. ஆனால் அண்டை மாநிலங்களிலெல்லாம் கட்டாய விற்பனை இருக்கும்பொழுது, ஆனால் நம் மாநிலத்திலே மட்டும் இல்லை. அதற்குக் காரணம் இதற்கு முன்பிருந்த சர்க்கார் 1958-லே ஒரு சட்டம் கொண்டு வந்தார்கள். வடாற்காடு மாவட்டத்திலேயுள்ள விளைபொருட்கள் அத்தனையையும் ஒழுங்குமுறை மார்க்கெட்டில்தான் விற்கவேண்டும் என்ற சட்டம். அப்பொழுது இருந்த அரசை வியாபாரிகளும் இடைத்தரகர்களும் வந்து அணுகி அந்தச் சட்டம் கூடாது, அந்தச் சட்டத்தை வைத்திருந்தால் உங்கள் கட்சியை நாங்கள் ஆதரிக்க மாட்டோம் என்று பயமுறுத்திய காரணத்தால், அதைக் கொஞ்ச நாளிலேயே ரத்து செய்துவிட்டார்கள். ஆனால் இன்றைக்கு நம் முடைய அரசு அதைச் செய்ய கொள்கை அளவிலே ஒப்புக்கொண் டிருக்கிறது. இருந்தாலும் அதைச் சட்டமாக்கவில்லை. ஆகவே அதைச் சட்டமாக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன். அதையும் இந்தக் கூட்டத் தொடரிலேயே சட்டமாக்க வேண்டும் என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். இந்தக் காருண்யமுள்ள அரசு இந்தச் சட்டம் ஒன்றை மாற்ற வேண்டும் என்று இதற்காக ஸ்பெஷலாக ஒரு கமிட் டியை நிறுவினார்கள். அந்தக் கமிட்டியும் ஆராய்ந்து பார்த்து, சட்டத்தைத் திருத்தி சர்க்காருக்குக் கொடுத்திருக்கிறார்கள். அதிலே அத்தனையையும் இந்தக் கூட்டத் தொடரிலே கொண்டுவர முடியாவிட்டாலும், முதல் விற்பனையாவது கட்டாயமாக விற்பனைக் கூடங்களிலே நடக்க வேண்டும் என்ற சட்டம் கொண்டுவரவேண்டு மென்று இந்த நேரத்திலே நான் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். ஏனென்றால் இடைத் தரகர்கள் கமிஷன் மட்டும் வாங்குவதில்லை, தர்மம் என்று எடுத்துக் கொள்கிறார்கள், மகமை என்று எடுத்துக் கொள்கிறார்கள். இவ்வளவும் விவசாயியின் தலையிலே விழுகிறது. ஆனால் விற்பனைக் கூடத்திற்கு வந்தால் ஒரு பைசாகூட செலவு இல்லை; ஒழுங்கான நேர்மையான எடை. அன்றைக்கே பணம் என்ற முறையிலே பட்டுவாடா செய்யப்பட்டு வருகிறது. ஆகையால் இந்த கட்டாய விற்பனைக்கான சட்டத்தை இந்தக் கூட்டத் தொடரி லேயே கொண்டுவர வேண்டுமென்று நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களை வேண்டிக் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

அது மட்டுமல்லாமல், இந்த விற்பனைக் கூடங்களுக்குத் தனியாக ஒரு வாரியத்தை இந்த அரசு ஏற்படுத்தியிருக்கிறது. இதற்கு முன்பு கிடையாது. இந்த அரசு ஏழை விவசாயிகளுக்கு நன்மை செய்ய வேண்டுமென்ற காரணத்தைக் கொண்டு, இந்த வாரியத்தை ஏற்படுத்தியிருக்கிறது. இந்த வாரியத்தில் இன்றைக்கு தமிழ் நாட் டிலுள்ள மார்க்கெட்டிங் கமிட்டித் தலைவர்களில் மூன்று பேரைத் தான் சேர்த்திருக்கிறார்கள். அதன் தலைவராக இன்றைக்கு வேளாண்மைத் துறை செயலாளரைப் போட்டிருக்கின்றார்கள். அதை எடுத்துவிட்டு தமிழ் நாட்டிலுள்ள எல்லா மார்க்கெட் கமிட்டி தலைவர்களையும் வாரியத்தில் சேர்த்து, ஒரு உத்தியோகப் பற்றற்ற வரை அதன் தலைவராக ஏற்படுத்தி, தனியாகப் பிரித்து ஏற்பாடு



28th July 1971] [திரு. ஆர். தர்மலிங்கம்]

களைச் செய்தால், நிச்சயமாக ஏழை எளிய மக்களுக்கு நன்மை செய்தவர்களாவோம். இன்றைக்கு விவசாயப் பெருங்குடி மக்கள் அத்தனை பேரும் விற்பனைக் கூடங்களை நாடி வருகின்றார்கள். அவர்கள் வந்தாலும் சரி, அவர்களுடைய மனைவிகள், குழந்தைகள் வந்தாலும் சரி, எந்தவிதத் தகராறும் கிடையாது. அங்கே விற்பனையில் ஏதும் சூழ்ச்சி கிடையாது. அங்கே சரண்டல் கிடையாது. அதை அமைச்சர் அவர்கள் பரிசீலித்து ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று நான் தாழ்மையுடன் கேட்டுக்கொள்ளு கிறேன்.

அடுத்து, இன்றைக்கு வேளாண்மைத் துறைக்கு ஒதுக்கியிருக் கின்ற தொகை 18.84 கோடி ரூபாய். ஆனால் அதில் மார்க்கெட்டிங் கமிட்டிக்காக ஒதுக்கியிருக்கின்ற தொகை 7.70 லட்சம் ரூபாய்தான். நாம் விவசாயத்தில் அதிகக் கவனம் செலுத்தி உற்பத்தியைப் பெருக்குகின்றோம். உற்பத்தி செய்த பொருட்களைக் கொண்டு வந்து விற்பதற்கு நாம் மார்க்கெட்டிங் கமிட்டிகளை ஏற்படுத்தித் தர வேண்டும். அதற்காக அதிக நிதியை ஒதுக்கித் தரவேண்டும். நான் வாரியத்தைப்பற்றிக் குறிப்பிட்ட நேரத்தில், ஒன்றைத் தெரிவிக்க மறந்துவிட்டேன். வாரியத்திற்காகத் தமிழ் நாட்டிலுள்ள எல்லா மார்க்கெட்டிங் கமிட்டிகளும் அதன் வருவாயில் 10 சத விகிதத்தை கொடுப்பதாகச் சொல்லியிருக்கிறோம். தமிழ் நாட்டில் மார்க்கெட்டிங் கமிட்டிகளுக்கு வருகின்ற வருமானம் 30 லட்ச ரூபாய். அதில் 10 சதவிகிதம் என்றால், 3 லட்ச ரூபாயை வாரியத் திற்காக மார்க்கெட்டிங் கமிட்டியிலிருந்து நாங்கள் கொடுக்க இருக்கிறோம். அந்த வாரியத்தை நல்ல முறையில் பயன்படுத்தி, விவசாயப் பெருமக்களுக்கு பாதுகாப்பாக இருப்பதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று நான் மீண்டும் வலியுறுத்திக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்து, வட ஆற்காடு மாவட்டத்தில் கிணறு வெட்டுவது அதிகக் கஷ்டமாக இருக்கிறது. எனக்கு முன்பு பேசிய எல்லா மாண்புமிகு உறுப்பினர்களும் குறிப்பிட்டதுபோல, எங்கள் மாவட் டத்திலும் கிணறு வெட்டினால், பல இடங்களில் தண்ணீர் இல்லாமல் இருந்து கொண்டிருக்கிறது. அதிகப் பாறைகள் நிறைந்த இட மாக இருக்கின்றது. ஏற்கனவே 10 ஆண்டுகளாக "பவர் டிரில்" அதிகமாகத் தேவை என்று வற்புறுத்தி வந்திருக்கிறோம். அதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவனத்தில் கொண்டு வடாற்காடு மாவட்டத்திற்கு அதிக "பவர் டிரில்" ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகின்றேன். இந்த வேளாண்மைத் துறையில் இவ்வளவு பெருமை தேடித் தந்திருக்கும் அமைச்சரவைக்கும் அலுவலர்களுக்கும் என்னுடைய நன்றியையும் பாராட்டுதலையும் தெரிவித்து என்னுடைய உரையை முடிக்கிறேன். வணக்கம்.

திரு. என். சுந்தரேசத் தேவர்: மாண்புமிகு தலைவர் அவர்களே, வேளாண்மைத்துறைபற்றிய விளக்கக் குறிப்பின் பேரில் நான் பேசும்போது, தஞ்சை ஜில்லாவின், விவசாயத்தைப் பெருக்கி தமிழ் நாட்டுக்கு உணவு அளித்த ஒரு மாவட்டத்தின், வருங்கால நிலைமை 6.30 p.m.

[திரு. என். சுந்தரேசத் தேவர்] [28th July 1971

எண்ணிப் பார்க்கின்றபோது, மிகுந்த வேதனையும் கஷ்டமும் அடையக் கூடியவர்களாக இருக்கின்றோம். காவிரி நீர் பற்றிய பிரச்சினையைப்பற்றி எண்ணும்போதெல்லாம், அதிகமான வேதனையை தஞ்சை மாவட்டத்தைச் சார்ந்தவர்கள் அடையக் கூடியவர்களாக இருக்கிறார்கள். நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 15 நாள் கால கெடு கொடுத்து மத்திய அரசாங்கத்திற்கு ஒரு தாக்கீது அனுப்பினார்கள். அதற்குள்ளாக இந்தக் காவேரி நீர்ப் பிரச்னை முடிவடைய வேண்டும், சரியான தீர்ப்பு அளிக்க வேண்டும் என்று கூறினார்கள். அந்த வேண்டுகோளுக்கு மத்திய அமைச்சர் தந்திருக்கின்ற பதிலானது மிகவும் ஏமாற்றம் அளிக்கக் கூடியதாகவும், நமது வேண்டுகோளைச் சட்டை செய்யாத ஒரு அறிவிப்பாகவும் இருப்பதைப் பார்க்கின்றபோது, மிகுந்த வேதனை அளிக்கக் கூடியதாக இருக்கிறது. நமது முதலமைசசர் அவர்கள் 15 நாள் கெடு கொடுத்தார். அந்த 15 நாட்கள் முடிந்து பல நாட்கள் ஆகிவிட்டன. ஆனாலும் முடிவு என்ன என்பதைப்பற்றி இதுவரையில் தெரிவிக்காதிருப்பது வேதனையை அளிக்கின்றது. இந்த அமைச்சரவையை, குறிப்பாக முதலமைச்சரைக் கேட்கிறேன். பதினைந்து நாள் காலகெடு 24-ம் தேதியோடு முடிவடைந்து விட்டது என்று எண்ணுகிறேன். கெடுவிற்கு மேல் பல நாட்கள் ஆகிவிட்டன. முடிவு என்ன? அதைப்பற்றி என்ன நிலைமை எடுத்துக்கொள்ளப் போகிறீர்கள்? அது ஒரு பெரிய பிரச்னையாக இருக்கிறது.

**மிஸ்டர் சேர்மன்:** 31-ம் தேதியன்று மாலையில் அனைத்து கட்சித் தலைவர்களையும் கொண்ட கூட்டத்தைக் கூட்டியிருக்கிறார்.

**திரு. என். சுந்தரேசத் தேவர்:** 31-ம் தேதி மாலையில் எல்லாக் கட்சித் தலைவர்களையும் சந்திப்பதாக முதலமைச்சர் அவர்கள் அறிவிப்புக் கொடுத்திருப்பதைப் பார்த்தேன். 31-ம் தேதி முடிவிலாவது காவிரி நீர்த் தகராறுக்கு இறுதி முடிவை அறிவிப்பார்கள் என்று எண்ணுகிறேன். இந்தப் பிரச்னை மாநிலத்தில் எல்லாக் கட்சிகளோச் சார்ந்த பிரச்சினையாக, பொது பிரச்சினையாக, பொது மக்களின் பிரச்சினையாக இருப்பதால், முதலமைச்சர் அவர்கள் பொறுப்பாக கவலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். மேலும் காலங்கடத்தாது முடிவான நிலையை நாம் ஏற்படுத்திக்கொள்ளும் போதெல்லாம், மத்திய அரசிடமிருந்து சால்சாப்பு வருகின்ற நிலைமையைக் காண்கின்றோம். கவனிக்கிறோம், பார்க்கிறோம் என்கிறார்கள். இவை யெல்லாம் நமது இறுதி முடிவிற்கு உகந்ததாக அமையவில்லை ஆகவே 31-ம் தேதி கூட்டத்திலாவது முடிவான ஒரு நிலையை எடுக்க வேண்டுமென்று முதலமைச்சர் அவர்களை மீண்டும் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

அடுத்ததாக, விவசாயத் துறையில் பூச்சி மருந்து தெளிப்பதற்காக ஹெலிகாப்டர் விமானம் வாங்க வசதி செய்திருப்பதாக விளக்கக் குறிப்பிலிருந்து அறிகிறேன். ஹெலிகாப்டர் விமானம் வாங்கத்தான் வேண்டுமா என்று சிந்திக்க வேண்டியிருக்கிறது. ஏனென்றால் சென்ற ஆண்டில் ஹெலிகாப்டர் மூலம் மருந்து



28th July 1971] [திரு. என். சுந்தரேசத் தேவர்]

தெளிப்பது தனிப்பட்ட ஒரு கம்பெனிக்கு அளிக்கப்பட்டது. அவ்வாறு அளிக்கவேண்டிய அவசியம் என்ன என்பது எனக்குப் புரியவில்லை. மத்திய அரசு உணவுத் துறைக்காக பூச்சி மருந்து தெளிப்பதற்காக ஹெலிகாப்டர் விமானங்களை வைத்திருக்கிறது. அதை ஏன் மாநில அரசு உபயோகப்படுத்தவில்லை, அதை ஏன் கேட்கவில்லை என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன். ஹெலிகாப்டர் வாங்குவது என்றால், அதன் விலை 10 லட்ச ரூபாய்க்கு மேல் இருக்கலாம். அதை ஓட்ட விமானி ஒருவர் நியமிக்கப்பட்டு, அவருக்கு மாதம் 4 ஆயிரம் அல்லது 5 ஆயிரம் ரூபாய் சம்பளம் கொடுக்க வேண்டியிருக்கும். அது பழுதடைந்து விட்டால், பழுது பார்க்கவேண்டிய செலவு வேறு இருக்கின்றது. இந்த நிலையில் மத்திய அரசு வாங்கி வைத்திருக்கின்ற ஹெலிகாப்டர் விமானங்களை உபயோகப்படுத்திக்கொள்ள முடியாதா என்று சிந்திக்க வேண்டும்.

மருந்து தெளிக்கின்ற முறையைப் பொறுத்தமட்டில், 4 கிராமங்கள், 10 கிராமங்கள் என்று ஒன்றுகச் சேர்த்து, 5,000 ஏக்கர், 10,000 ஏக்கர் என்று வைத்து, மோட்டார் பம்பு மூலமாக பூச்சி மருந்து தெளிக்க குத்தகை மூலமாகவோ, டெண்டர் மூலமாகவோ தனியார் ஏஜென்சிக்கு அளித்தால், அவர்கள் திறமையாக அதைச் செய்வார்கள். இந்த விஷயத்தை நல்ல விதமாக அரசாங்கம் பரிசிலனை செய்ய வேண்டும். நான் விமானம் வாங்க வேண்டாமென்று விவசாயத்திற்கு விரோதமாகச் சொல்லுவதாக எண்ணக் கூடாது. விமானம் விவசாய விஸ்தரிப்புக்கு மிகவும் அவசியம் என்று கருதப் பட்டால், வாங்குவதில் எனக்கு ஆட்சேபணையில்லை. விமானம் மத்திய அரசிடமிருந்து மாநிலங்களுக்குக் கிடைக்கக்கூடிய நிலைமை யிருப்பின், அதைப் பயன்படுத்திக் கொள்ளலாமே என்ற கருத்தில் தான் சொல்லுகின்றேன். ஒவ்வொரு வட்டாரமாகப் பிரித்து, மோட்டார் பம்பு மூலம் பூச்சி மருந்து தெளிப்பதைத் தனியாரிடம் காண்டிராக்டாகவோ, அல்லது நான் முதலில் தெரிவித்த முறைகளிலோ அளித்தால் வெற்றிகரமாக நடத்த முடியாதா என்பதையும் கருத்தில் கொள்ளவேண்டும். இந்த நிலைகளை எல்லாம் ஆராய வேண்டுமென்று அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்ளுகிறேன். கிராமிய விஸ்தரிப்பு நிலையம் என்று ஆரம்பித்து கிராம சேவக்குகளுக்கெல்லாம் பயிற்சி அளிக்கப்பட்டது. விவசாயக் கல்லூரிகள் எங்கே பார்த்தாலும் ஏற்படுத்த வேண்டுமென்று சொல்லுகிறோம். எங்கள் மாவட்டத்தில் விவசாயம் சிறப்பாக அமையவில்லை. ஆகவே எங்கள் மாவட்டத்தில் தான் விவசாயக் கல்லூரி வேண்டுமென்று சொல்லுகிறார்கள். எங்கள் மாவட்டத்திலே தண்ணீர் இல்லை. ஆனால் நாங்கள் அதிகமான அளவுக்கு விவசாயம் செய்கிறோம். ஆகவே அந்தக் கல்லூரி எங்களுக்கு வேண்டும் என்று சொல்லுகிறார்கள். இப்படிக் கல்லூரி கேட்பதைவிட, எஸ்.எஸ்.எல்.சி. படித்த மாணவர்களுக்குக் குறுகிய கால பட்டப் படிப்புக்கு இந்த விஸ்தரிப்பு நிலையங்களில் ஏற்பாடு செய்யலாம். அந்த நிலையங் களில் விவசாயிகளின் விளக்கத்துக்கு வேண்டிய வசதிகள் இருக் கின்றன.

[திரு. என். சுந்தரேசத் தேவர்] [28th July 1971

இப்படிப்பட்ட கிராமிய விஸ்தரிப்பு நிலையங்களில், 300, 400 பேர் பயிற்சி பெற முடியும். எஸ்.எஸ்.எல்.சி. படித்தவர்கள் பயிற்சி பெற்றால், அவர்களை நாம் நல்லபடியாகப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

விவசாய ஆராய்ச்சிப் பண்ணைகளை மென்மேலும் விஸ்தரிப்பதில் பயனில்லை. ஒரு மட்டத்தில் இருந்தால் போதும். ஒவ்வொரு மாவட்டத்திலும் விவசாய ஆராய்ச்சிப் பண்ணைகள் வேண்டுமென்று சொல்லுகிறார்கள். இப்போது பலதரப்பட்ட ஆராய்ச்சிப் பண்ணைகள் இருக்கின்றன. இவ்வளவு அதிகமாக ஆராய்ச்சிப் பண்ணைகள் வேண்டுமா என்று கேட்க ஆசைப்படுகிறேன்.

ஒவ்வொரு வட்டாரத்திலும் குறிப்பாக 10, 15 ஏக்கர் எடுத்துக் கொண்டு அந்த வட்டாரத்தில் என்ன பொருள் விளைகிறதோ அந்தப் பொருளைக் கொண்டு ஒரு மாடல் பண்ணை ஏற்படுத்த வேண்டும். அதிலே விவசாய இலாகாவைச் சேர்ந்த அதிகாரிகள் பணி புரிய வேண்டும். இப்படிச் செய்தால் அந்தப் பகுதி மக்கள் எந்தெந்த மாதங்களில் மருந்தடிக்கிறார்கள், எப்படி விவசாயம் செய்கிறார்கள், எப்படிச் செய்தால் அதிகமாக விளைச்சல் இருக்கும் என்று அறிந்துகொள்ள வாய்ப்பாக இருக்கும்.

அதேபோல, பழ ஆராய்ச்சியையும் திறம்படச் செய்யவேண்டும். இந்த ஆராய்ச்சியில் நாம் ஓரளவுக்கு முன்னேறியிருக்கிறோம். இருந்தாலும் இன்னும் முன்னேற வேண்டும். சில இடங்களில் ஆராய்ச்சிப் பண்ணைகள் கேலி செய்யும் அளவில் இருக்கின்றன. அவசியமானதை வைத்துக்கொண்டு, பாக்கிப் பண்ணைகளை நிறுத்தி விடலாம் என்று கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

பலர் அரசாங்கம் நெல் விதைப் பண்ணை வைக்க வேண்டுமென்று சொன்னார்கள். ஏற்கனவே இருக்கின்ற பண்ணைகளிலேயே இன்னமும் விதை உற்பத்தி செய்யவில்லை. மக்கள் தங்களுக்குத் தேவையான விதைகளை வெளியேதான் வாங்குகிறார்கள். இதையெல்லாம் மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

எதைச் செய்தாலும் மக்கள் ஒப்புக்கொள்ளக் கூடியதாக இருக்க வேண்டும். விவசாயத்தில் அரசு பரிசீலனை செய்ய வேண்டிய காரியங்கள் நிறைய இருக்கின்றன. இப்படிப்பட்ட நிலைகளையெல்லாம் போக்கவேண்டும் என்பதற்காகத்தான் நான் குறிப்பிடுகிறேன்.

தமிழ் நாட்டிலேயே கேளாவை விட்டால், தஞ்சையில்தான் தென்னை அதிகமாக இருக்கிறது. அப்படி உள்ள இடத்தில் இன்று தென்னைக்குப் பல நோய்கள் வருகின்றன. அவைகளைப் போக்க முடியவில்லை. வேர்க்கறையான் நோய் வந்தால், மரம் பட்டுப் போய் விடுகிறது. இதுவரை அதற்கு மருந்தே இல்லை. ஒரு மட்டும் இல்லை. சில சமயங்களில் இலைகள் எல்லாம் கருகி விடுகிறது. இப்படிப்பட்ட நோய்கள் எல்லாம் தஞ்சை மாவட்டத்தில் தென்னை மரங்களுக்குப் பாவுகிறது. தென்னை ஒரு பணப் பயிர். நல்ல



28th July 1971] [திரு. என். சுந்தரேசத் தேவர்]

முறையில் உற்பத்தி செய்தால், மாநிலத்துக்குப் பணம் கிடைக்கும். அப்படிப்பட்ட நிலையில் நம் ஆராய்ச்சி நிலையங்கள் நல்ல முறையில் செயல்பட்டால், மக்களுக்கு நல்ல பலன் கிடைக்கும். இதற்கு ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

விவசாயத்தைப் பொறுத்தவரையில், வருமான வரி பயம் இப்போது எல்லோருக்கும் வந்துவிட்டது. இதை எல்லா அமைச்சர்களும் பார்க்கவேண்டும். குறிப்பாக முதலமைச்சர் அவர்கள் சிந்தனை செய்து பார்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். நாம் நிலச் சீர்திருத்தச் சட்டங்கள் கொண்டுவந்து நிலத்திற்கு உச்சவரம்பு கட்டி விட்டோம். இந்த நிலையில் வருமான வரியைப் போட்டு, அதை அதிகப்படுத்திக்கொண்டு போவதில் என்ன பயன்? உழக்கூடிய நிலம் இருந்தால் போதும் என்று சொல்லும்போது, அதற்கு ஏன் புதிய வரிகளைப் போடுகிறீர்கள்? இதை அமைச்சரவை பரிசீலனை செய்து நில வருமான வரியை நீக்க வேண்டும் அல்லது அதிகப்படுத்தாமலாவது இருக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

தஞ்சை ஜில்லாவில் 2,616 பம்ப்செட்டுகளுக்கு இன்னும் மின்சார இணைப்பு கிடைக்கவில்லை. நான் மின்சார அமைச்சரையும், விவசாய அமைச்சரையும் கேட்டுக்கொள்ளுகிறேன், இந்த இணைப்புகள் அவசியமானவை. மின்சாரம் இல்லையென்றால், விவசாயம் தழைக்காது. ஆகவே மின் இணைப்புகளை உடனடியாகக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

விவசாய அமைச்சர் விவசாயக் குடியிலிருந்து வந்தவர். விவசாயம் செய்தவர் அமைச்சராக இருக்கிறார். அப்படிப்பட்டவர் இந்தக் குறைகளையெல்லாம் போக்கி நல்ல நிலையில் அபிவிருத்தி செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் உரையை முடிக்கிறேன்.

*திரு. எம். சங்கரலிங்கம் பிள்ளை: தலைவரவர்களே, விவசாய மானியக் கோரிக்கையில் விவசாயி என்ற நிலையில் என்னுடைய அனுபவம் ஒன்றிரண்டைச் சொல்லி அமைகிறேன். உண்மையில் நமது அரசு பொறுப்பேற்ற பிறகு விவசாயிகள் அனுபவித்த தொல்லையாகிய, அவர்களிடத்தில் அரசு கொள்முதல் செய்து அவர்களை ஓரளவுக்குப் பதுக்கி வைத்திருக்கிற கொள்ளைக் காரர்களைப்போல் நடத்திவந்த நிலையை மாற்றியது, உணவுக் கட்டுப்பாட்டை நீக்கியதுதான் விவசாயிகளுக்குச் செய்த பேருதவி. அதற்காக முதலில் அரசைப் பாராட்டுகிறேன். எல்லா உற்பத்தியாளர்களும் அவரவர்கள் உற்பத்தி செய்கிற பொருள்களுக்கு அவரவர்கள் விலை நிர்ணயம் செய்கிறார்கள். விவசாயிகள் மாத்திரம், தாங்கள் உற்பத்தி செய்கிற நெல்லுக்கோ மற்ற தானியங்களுக்கோ, விலை நிர்ணயம் செய்வதில்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி. சுவாமிநாதன் மருந்து உற்பத்தி செய்தால், அதற்கு எவ்வளவு செலவு, எவ்வளவு லாபம் என்று கணக்குப் போட்டு விலை நிர்ணயம் செய்து கொள்ளுகிறார்கள். கார்களுக்கு உற்பத்தியாளர்களே விலை நிர்ணயம் செய்துகொள்ளுகிறார்கள்.

**திரு. ஜி. சுவாமிநாதன்:** காருக்கும், மருந்துக்கும் மத்திய சர்க்கார்தான் விலை நிர்ணயம் செய்கிறது.

**திரு. எம். சங்கரலிங்கம் பிள்ளை:** எனவே நான் வற்புறுத்த விரும்புவதெல்லாம் உற்பத்தியாளர்கள் அவரவர்களுடைய உற்பத்திப் பொருள்களுக்கு தாங்களே விலை நிர்ணயம் செய்யும் பொழுது, விவசாயிகள் மட்டும் தாங்கள் உற்பத்தி செய்கிற தானியங்களுக்கு தாங்களே விலை நிர்ணயம் செய்துகொள்ளாமல், நாட்டினுடைய பொருளாதார சூழ்நிலைக்கு இரையாக்கப்படுகிறார்கள். டிமாண்டு அண்டு வேல்யு தியேரி அடிப்படையில் இந்த சந்தைச் சூழலில் சிக்குண்டிருக்கிறார்கள். இதை மாற்றுவதற்கு மார்க்கட்டிங் சொசைட்டி, மார்க்கட்டிங் கமிட்டி மூலம் நாம் முறைப்படுத்துகிறோம். உண்மையில் அந்த நிலையில் நாம் வெற்றி காணவில்லை என்பது என் கருத்து. இன்று விவசாயிகள் உழவுக்கு மாடு வாங்கச் சென்றால், கலப்பை ஏந்திச் செல்லுகிற மாடாக இருந்தால், கன்னியாகுமரி மாவட்டத்தில் இருக்கும் நாங்கள் ரூ. 500-க்கு மேல் கொடுத்து வாங்குகிறோம். எங்கள் பகுதியில் உழவு மாடுகள் எல்லாம் கொல்லம், கோட்டயம் போன்ற இடங்களுக்கு இறைச்சிக்காக வாங்கிச் செல்லப்படுகிறது. இந்தப் பகுதிகளில் செல்லவில்லை யென்று நினைக்கிறேன்.

**திரு. ஜி. சுவாமிநாதன்:** ஒருவேளை சுவையான இறைச்சி உள்ள மாடுகளாக இருக்கலாம் என்று நினைக்கிறேன்.

**திரு. எம். சங்கரலிங்கம் பிள்ளை:** உழவு காலத்தில் மாடு பிடிக்கச் செல்வது உண்டு. மாடு வாங்கும்பொழுது, கால் குறையின்றி நடக்கிறதா, கண் பார்வை இருக்கிறதா, கொம்பு ஆடாமல் இருக்கிறதா என்று பார்த்து சுளியும் பார்க்க வேண்டும். நாங்கள் பார்ப்பதில்லை. சுளி சுத்தத்தைச் சொல்லி விலையைக் குறைத்து வாங்குவது பழக்கம். மாடு வாங்க வந்தவன் ரூ. 500 வைத்திருப்பான். மாட்டுக்காரன் ரூ. 850 சொல்லுவான். கேரளாவிலிருந்து வரும் இறைச்சி வியாபாரி அதிகம் கொடுத்து வாங்கிச் செல்லுவான். பின்னர் மாட்டு வியாபாரி விவசாயியைப் பார்த்துப் பரிகாசம் பண்ணுவான். விவசாயிகளுக்கு வேண்டிய பொருள்களை மட்டுப்படுத்திய விலையில் கொடுக்க நம்முடைய அரசு நல்ல நடவடிக்கை எடுக்க வேண்டும். மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் ஏர் ஏந்திய சடையப்ப வள்ளல் வாரிசாகும். சிலர் வள்ளல் தஞ்சையைச் சேர்ந்தவர் எனலாம். தஞ்சையும் திருச்சியும் இரண்டும் ஒன்றாக உள்ள சோழ மண்டலத்தில் வருகிறது. அங்கிருந்து வந்தவர் அமைச்சர் அவர்கள். விவசாயிகளுடைய குறைகள் நீக்கப்பட வேண்டும். அதற்கு முதலில் விவசாயிகள் உற்பத்தி செய்கிற தானியங்களுக்குக் கட்டுபடியான விலை கிடைக்கச் செய்ய வேண்டும். அதை நான் மேலும் வற்புறுத்த விரும்பவில்லை. காரணம் நாங்கள் உற்பத்தி செய்கிற நெல் போன்றவைகள் மக்கள் உணவாக அருந்துகிற பொருள்கள். அதை குறைந்த விலையில் எல்லோருக்கும் கிடைக்க வேண்டுமென்ற உயரிய நோக்கத்திற்காகத்தான் வேளாண்மை என்று பெயர் கொடுத்திருக்



கிறோம். பரோபகாரமான தொழில். நாங்கள் செய்கிற தொழிலுக்கு எங்களுக்கு வேண்டிய கலப்பை முதலிய கருவிகளை முன்னால் காடுகளுக்குச் சென்று வெட்டிக்கொண்டு வரலாம். வன இலாகா அமைச்சரா அவர்கள் அனுமதி அளிப்பதில்லை. அதாவது வன இலாகா அதிகாரிகள் அனுமதிப்பதில்லை. ஒரு விவசாயி காடுகளுக்குச் சென்று விவசாயக் கருவிக்கு வேண்டிய மரம் வெட்டி எடுத்துக் கொள்ளலாம் என்று திருவாங்கூர்-கொச்சி சமஸ்தானத்தில் விதி இருந்தது. அதையெல்லாம் செய்துதர வேண்டும். விவசாயிகளுக்குத் தேவையான விவசாயக் கருவிகள் மற்றும் மாட்டுத் தீவனம், மாட்டின் விலையை மட்டுப்படுத்திய விலையில் கொடுப்பதற்கும் அரசு தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அடுத்து, கடந்த நிதிநிலை அறிக்கை விவாதத்தின்போது, விவசாய சர்வே செய்ய வேண்டுமென்று சொல்லியிருக்கிறேன். அதை மீண்டும் வற்புறுத்த விரும்புகிறேன். ஒரு பகுதியில் அதன் தட்ப வெப்ப நிலைக்கேற்ப, நீர் வளத்திற்கேற்ப, எந்த எந்தப் பயிர் செய்ய வேண்டுமென்று நிபுணர்களைக் கொண்டு தமிழ் நாடு முழுவதும் ஆராய்ந்து, வரையறை செய்து, அந்தப் பயிரைச் செய்கிறவர்களுக்கு (இன்சன்டிவ்), ஊக்க ஆதரவு கொடுக்க வேண்டும். ராமநாதபுரத்தில் போய் தெங்கு வளர்த்தால் . . . .

**திரு. வி. தங்கபாண்டியன்:** ராமநாதபுரம், ராமேஸ்வரம் போன்ற கடற்கரைப் பகுதிகளில் தெங்கு வளர்க்கிறார்கள்.

**திரு. எம். சங்கரலிங்கம் பிள்ளை:** ராமநாதபுர வறண்ட பிரதேசத்தில் தெங்கு வளர்ப்பது பயனுடையதாக இருக்காது. எந்தெந்த இடத்தில் எந்தப் பயிரைச் செய்ய வேண்டுமென்று வரையறை செய்து அதற்கு ஊக்கம் கொடுக்க வேண்டுமென்று முதலில் சொன்னதை மீண்டும் வற்புறுத்திக்கொண்டு, கன்னியாகுமரி மாவட்டத்தின் விவசாயிகள் பிரச்னை ஒரு சிலவற்றைச் சொல்லுகிறேன். கனனியாகுமரி மாவட்டத்தில் மிகுந்த பகுதி மலைச்சாரல் பகுதி. மலைப் பகுதி விவசாயிகளுக்கு வேண்டிய ஊக்கம் தர வேண்டும். இப்போது பேச்சிப்பாறையில் கொகோ பயிர் செய்வதற்குக் குறைந்த விலைக்கு விவசாயிகளுக்கு நாற்று தருகிறார்கள். நாறறு நடுவதற்குரிய காலம் தென்மேற்குப் பருவக்காற்று மழை பெய்யும் இந்தக் காலம்தான். நான் வருவதற்கு முன்னர் 3,000 கொகோ கன்றுகள் நட்டுவிட்டு வந்திருக்கிறேன். இன்னும் பல விதமான ஊக்கங்கள் தர வேண்டும். பெப்பர், மிகக் குறிப்பாக குட்டநாடு கன்றுகளைக் கொண்டுவந்து, இந்தப் பகுதியில் நடுவதற்கு ஊக்கம் அளிக்கலாம். ரப்பர் பயிருக்கு அதிக ஊக்கம் தர வேண்டும். ரப்பர் பயிருக்கு ஏற்ற இடம் ரப்பர் போர்டு நிர்மாணப்படி, முதல்தரமான பகுதி கன்னியாகுமரியில் கணியல் என்ற பகுதி. ரப்பர் போர்டு நமக்கு சில உதவி தருவதாக இருந்தாலும் கூட மத்திய அரசு அதிக ஊக்கம் தர வேண்டும். ரப்பர் விவசாயிகளுக்கு நெருக்கடியான நிலை என்னவென்றால், நாங்கள் உற்பத்தி செய்யும் "லேட்டக்ஸ்" விலை குறைந்திருக்கிறது. ஒரு கிலோ ரூ. 5-லிருந்து ரூ. 4-15-க்கு குறைந்திருக்கிறது. இந்த

6-50 p.m.

[திரு. எம். சங்கரலிங்கம் பிள்ளை] [28th July 1971

விலைக்கு விற்றால் ரப்பர் விவசாயிகளுக்குக் கட்டாது. அதை "ஸ்டாக்" வைத்து பிறகு விற்கலாம் என்று சொன்னால், பாங்குகள் விவசாயப் பொருள்களுக்கு ஈடு வைத்துப் பணம் கொடுப்பதில்லை. உணவு தானியங்கள் ஏழை மக்களுக்குக் குறைந்த விலையில் கிடைப் பதற்காக உணவுப் பொருள்களின் மீது கடன் தரலாகாது என்று போட்ட உத்தரவு, நமது அரசு அல்ல, மத்திய சர்க்காரும் ரிசர்வ் பாங்கும் போட்ட உத்தரவு. இன்று எந்த விவசாயப் பொருள் களுக்கும் ஈடாகக் கடன் கொடுப்பதை பாங்கு மறுக்கிறது. ஆகவே விவசாயிகள் ஊக்கம் பெறுகின்ற நிலையில் அதைச் செய்து தர வேண்டும். மலைப் பகுதியில் மண் வளப் பாதுகாப்புத் திட்டம், மண் அரிப்புத் தடுப்புத் திட்டம் ஆகியவற்றையும் நாம் வகுத்திருக்கிறோம். "சாயில் கன்சர்வேஷன் ஸ்கீம்" இருக்கிறது. அதற்கு மத்திய சர்க்கார் 25 சதவிகிதமும் மாநில சர்க்கார் 25 சதவிகிதமும் மானிய மாக அளித்தது. மிகுதிப் பகுதியை விவசாயிகள் ஏற்றுக்கொள்ள வேண்டும். பகுதி மத்திய அரசு, இன்னொரு பகுதி மாநில சர்க்கார். 1968-லிருந்து மத்திய சர்க்கார் அதை 15 சதவீதமாகக் குறைத்து விட்டது. அதை நாம் ஏற்றுக்கொள்ளக் கூடாது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் டில்லி சென்று போராடி அந்த 25 சத வீதத்தை விவசாயிகளுக்குப் பெற்றுத் தர வேண்டும். 1967-68 வரை இந்த மண்வளத் திட்டப்படி, தடுப்புகளை எல்லாம் எடுத்து, அதற்குப் பிறகு விவசாயம் செய்ய ஆரம்பித்திருக்கிறோம். அந்தப் பகுதியில் விவசாயம் செய்வது மிக அதிகமான செலவை உண்டாக்கு கிறது. மலை விவசாயிகளுக்கு ஏற்படுகிற தொல்லை என்னவென்றால், ஒரு எக்கர் விவசாயம் செய்வதற்கு ரூ. 2,000, 3,000 ஆண்டுதோறும் செலவு செய்யவேண்டும், பலன் பெறுகிற வரையில். ரப்பர் கன்று, கொகோ கன்று நட்டுக்கொண்டு வர வேண்டும். ஆறு மாதம் கழித்த பிறகு புதரால் மூடிவிடும். களை எடுப்பது பெரிய வேலை. பயிர் வளர்ந்து நிழலாகி பலன் தரும்பொழுது, களை முளைப்பதில்லை. பலன் தரும்பொழுது செலவே இல்லை. ஆகவே பயிர் வளர்ந்து பலன் தரும்வரை மிகக் கடினமான காலம். இக் கடின காலத்தில் மண் வளத் திட்டத்தை நாங்கள் ஏற்படுத்தியிருக்கிறோம். இன்னும் ஏழாண்டாகும் பலன் தருவதற்கு. அதுவரை இந்தக் கடனை வசூலிக்காமல் காலத்தை ஓட்டி செய்து தர வேண்டும்.

இதைப் போலவே கிராம்புத் திட்டம். கன்னியாகுமரி மாவட் டத்திலே கரும்பாறை என்ற பகுதியில் அங்கே இருந்த ஆங்கிலேயர் ஒருவர் கிராம்பு போட்டிருக்கிறார். ஒரு எக்கர் கிராம்பு பயிர் செய்து பலனுக்கு வந்துவிட்டதென்றால், ஒரு ஆண்டுக்கு 12,000 ரூபாய் லாபம் கிடைக்கும். எந்த வியாபாரத்திலும் இதுமாதிரி கிடைத்துவிடப் போவதில்லை. ஒரு எக்கர் கிராம்பை நீங்கள் வந்து பார்த்தால், இந்த மண்டபத்தைப்போல் பாதி அளவு ஓரே மரமாக "கோனிஃபெரஸ் ஃபாரஸ்ட் ட்ரீஸ்" மாதிரி இருக்கக்கூடிய காட்சி பார்ப்பதற்கு அழகாக இருக்கும். இதையெல்லாம் பயிரிடுவதற்கு அதிக அளவு பணம் தேவை. அதற்குரிய சூழ்நிலை, மண்வளம், மழைவளம் எல்லாம் கன்னியாகுமரி மலைப் பகுதியில் இருக்கிறது. விவசாயிகளுக்கு அதிக ஊக்கம் தரும் அளவில்



28th July 1971] [திரு. எம். சங்கரலிங்கம் பிள்ளை]

அங்கே மலைப் பகுதியில் பாதுகாப்புத் திட்டம் ஏற்படுத்த வேண்டும். நமது மாண்புமிகு மின்சார அமைச்சர் அவர்கள் பொறுப்பிலுள்ள வனத் துறையிலிருந்து கன்னியாகுமரிப் பகுதியில் ஆயிரக்கணக் கான ஏக்கர்கள் ரப்பர் பயிர் செய்து அரசுக்குப் பெரும் லாபம் வருகிற துறையாக மாற்றிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் அதே நேரத்தில் ஒரு ஆபத்து இருக்கிறது. பெருங்காடுகளை அழித்து ரப்பர் மரங்களை வைக்கிறபோது, 70 அடி, 50 அடி உயரம் வளரக் கூடிய மரத்தை உற்பத்தி செய்கிறோம். ஆனால் 150 அடி, 200 அடி உயரம் வளரக்கூடிய தேக்கு, ஈட்டி மரத்தையெல்லாம் அகற்றிக் கொண்டிருக்கிறோம். அதன் மூலம் அந்தப் பகுதியில் மழை குறைந்துகொண்டிருக்கிறது என்ற அச்சம் விவசாயிகளாகிய எங்க ளுக்கு இருக்கிறது. ஆகவே தமிழ் நாடு முழுதும் மழை வளத்தைக் கூட்ட வேண்டுமென்றால், எல்லாப் பகுதியிலேயும் ஏதாவதொரு மரம், செடி, கொடி இருக்க வேண்டும். ஒரு இடம்கூட தரிசு இடமே இல்லாமல் காணும் இடமெல்லாம் மரமே, எங்கே பார்த்தாலும் பச்சை பசேல் என்ற நிலை உருவாக்கினால், மழை அளவு கூடும் என்று விவசாயிகளும் நம்புகிறார்கள், விஞ்ஞானிகளும் ஒத்துக்கொள்கிறார்கள் என்று நினைக்கிறேன். அந்தச் சூழ்நிலையை நமது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தக்க திட்டம் வகுத்து மிகத் தீவிரமாகச் செய்து வளப்படுத்தி உணவு உற்பத்தியை ஏற்படுத்துவதோடு, காசுப் பயிர்களை அதிகமாகக் கொண்டு வருவதற்கும் பல திட்டங்களைத் தீட்ட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். கடந்த மூன்று நான்கு நாட்களாகப் பார்க்கிறேன். கடைசியிலே கொஞ்ச நேரம் குறைவாக ஆகிவிடுகிறது. இருந் தாலும் முன்கூறிய கருத்துக்களை நமது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்று நடத்தித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கி றேன்.

அடுத்த மாதம் அமைச்சர் அவர்கள் அங்கே வருகிறபோது நாங்கள் முன்னால் கூறிய விவசாயப் பள்ளி அல்லது விவசாயக் கல்லூரி எல்லாம் அமைப்பதற்குரிய இடத்தையெல்லாம் பார்வை யிடுவதாகவே அவர்கள் ஒப்புக்கொண்டு நிகழ்ச்சியிலே சேர்த்துக் கொள்வதற்கு ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். அதையும் அவர்கள் நிகழ்ச்சியிலே சேர்த்து இந்த விவசாயிகள் நிலைமையில் அக்கறை காட்ட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

MR. CHAIRMAN : The Hon. Minister will now reply to the debate.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தகுதிமிக்க மேலவைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் இந்த வேளாண்மைக் குறிப்பின்பேரில் அனுபவமிக்க பலர் தங்களுடைய கருத்துக்களை யெல்லாம் எடுத்துச் சொல்லியிருக்கின்றார்கள். இன்னும் அனுபவமும் ஆற்றலும் மிக்க பல அங்கத்தினர்கள் நாங்கள் ஏற்கனவே அளித்திருக்கின்ற குறிப்புகளையெல்லாம் பார்த்ததற்குப் பிறகு அதை நன்றாகப் படித்து, அதற்குப் பிறகு அதிலே உள்ள குறைபாடுகளையெல்லாம் சொல்லலாம் என்ற நோக்கத்தோடு இருந்திருக்கக்கூடும். ஆனால் இந்த வேளாண்மைத் துறையைப்

[திரு. அ. பெ. தர்மலிங்கம்] [28th July 1971

பொறுத்தவரையில், இங்கே இருக்கின்ற அனைவரும் வேளாண்மை பெருமக்கள் என்ற காரணத்தால்தான் தங்கள் தங்களுக்கிருக்கின்ற கஷ்ட நஷ்டங்களையெல்லாம் எடுத்துச் சொல்லி, அவை எப்படித் தீர்க்கப்பட வேண்டும் என்ற நல்ல யோசனைகளையும் இங்கே சொல்லியிருக்கின்றார்கள். அவர்களுக்கெல்லாம் நான் முதலிலே என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைய தினம் இந்த வேளாண்மைத் துறையைப்பற்றி நாம் எவ்வளவு அக்கறை எடுத்துக்கொண்டிருக்கிறோம் என்பது அரசாங்கத்திற்கு மாத்திரமல்ல, மக்களுக்கும் நன்றாகப் புரிந்திருக்கிறது. ஒரு காலத்தில் வேளாண்மைப் பெருமக்களுடைய கஷ்டங்கள் எப்படி இருந்தன என்பது எனக்கு நன்றாகத் தெரியும். இங்கே இருக்கிற அங்கத்தினர்கள் அனைவர்க்கும் நன்றாகத் தெரியும்.

" சுழன்றும் ஏர்ப்பின்னதுலகம் அதனால்
உழன்றும் உழவே தலை "

என்றார் வள்ளுவர். அதைப்போலவே,

" உழுதுண்டு வாழ்வார்க்கொப்பில்லை கண்டீர்
பழுதுண்டு வேறோர்ப்பணிக்கு "

என்று அவ்வையாரும் காட்டியிருக்கிறார்கள். ஆனால் கிராமப் புறத்திலே இருக்கிற மக்களிடத்திலே சென்றால்,

" உழுதவன் கணக்குப் பார்த்தால் உழக்குக்கூட மிஞ்சவில்லை"

என்ற பழமொழியும் தமிழகத்திலே இருந்தது. அப்படிப்பட்ட நிலைமைகளையெல்லாம் மாற்ற வேண்டுமென்ற நோக்கத்தோடு தமிழக அரசின் பொறுப்பை மறைந்த மாமேதை பேரறிஞர் அண்ணா அவர்கள் ஏற்றுக்கொண்டதற்குப் பிறகு, " பார் முழுதும் ஏர் முனையிலே " என்று அவர்கள் எடுத்துக்கொண்டு, இந்த நாட்டிலே நிலவளமும், நீர்வளமும், நல்ல மண்வளமும் உழவரிடத்திலே மனவளமும் இருந்தால்கூட ஏன் உற்பத்தியைப் பெருக்க முடியவில்லை என்பதை உணர்ந்து, அவர்கள் தமிழகத்திலே இருக்கின்ற பல்வேறு துறைகளைச் சேர்ந்த அரசு அலுவலர்களையெல்லாம் அழைத்துப் பேசி, இவ்வளவு நிலங்கள் இருக்கின்றன என்று அறிந்து,

" இலமென் றசைஇ இருப்பாரைக் காணின்
நிலமென்னும் நல்லாள் நகும் "

என்ற வள்ளுவரின் குறளை நன்றாக உணர்ந்திருந்த காரணத்தால், அதைச் செயல்படுத்தி " ஓதுவார் எல்லாம் உழுபவன் தலைக் கடைக்கே " என்ற நிலைமையை உருவாக்கி, வேளாண்மைத் தொழிலிலே ஈடுபட்டிருக்கிற உழவர் பெருமக்களையும் அது சம்பந்தப்பட்ட பல்வேறு துறை அதிகாரிகளையும் அழைத்துப் பேசி, ஒரு முடிவெடுத்து, " நீங்களெல்லாம் கோட்டையிலே இருப்பதைவிட அங்காங்கே கிராமங்களுக்குச் சென்று பணியாற்றுங்கள் " என்று அவர்களிடத்திலே சொல்லி, இன்றைய முதலமைச்சர் நமது மதிப்பிற்குரிய அவர்கள் அன்றைய தினம் பொதுப்பணித்துறை அமைச்சராக



28th July 1971] [திரு. அ. பெ. தர்மலிங்கம்]

பொறுப்பேற்றிருந்த காலத்தில் அவர்களிடத்திலே அந்தப் பொறுப்பை ஒப்படைத்தார்கள். எனக்கு நன்றாக நினைவு இருக்கிறது, நம்முடைய முதல்வர் கலைஞர் அவர்கள் மன்னர்குடியிலே நடைபெற்ற வேளாண்மைக் கருத்தரங்கில் அதிகாரிகளுடன் கலந்து பேசி, விவசாயப் பெருமக்களுக்கிருக்கின்ற கஷ்ட நஷ்டங்களையெல்லாம் எடுத்துச் சொன்னதையும் ஆராய்ந்திருப்பதையும் ஒன்றாக இணைத்து இந்தத் திட்டங்கள் செயல்படுவதற்கு வேண்டிய சாத்தியக்கூறுகளையெல்லாம் எடுத்துச் சொன்னார்கள். அதன் பயனாகத் தமிழகத்தில் இன்றைய தினம் ஒருபோகம் விளைந்த நிலங்களெல்லாம் இருபோகம், இருபோகம் விளைந்த நிலங்களெல்லாம் மூன்று போகம் பயிரிடப்படுகிறது. நமது மாண்புமிகு பெரியவர் திரு. கிருஷ்ணசாமி நாயுடு அவர்கள் மழை ஆண்டுக்காண்டு குறைவதைப்பற்றி எடுத்துச் சொன்னார்கள். மழை மாத்திரம் குறையவில்லை. தமிழகத்திலே ஆண்டுதோறும் நிலங்களின் அளவும் குறைந்துகொண்டே வருகிறது என்பது உங்களுக்கு நன்றாகத் தெரியும். தொழிற்சாலைகள் அமைக்கப்பட வேண்டுமென்றால், நிலம் எடுத்துக்கொள்ளப்படுகிறது. வீடுகள் கட்டப்பட வேண்டுமென்றால், நிலங்களைத்தான் எடுத்துக்கொள்கிறார்கள். சென்ற ஆண்டு நிலத்தின் பரப்பளவைவிட இந்த ஆண்டு நிலத்தின் பரப்பளவு குறைந்ததான் இருக்கும். இதை உணர்ந்த காரணத்தால்தான், தீவிரச் சாகுபடித் திட்டத்தை உருவாக்க வேண்டும், இருக்கின்ற நிலங்களிலே தான் அதிக விளைச்சலைக் கொண்டுவரவேண்டும் என்ற நோக்கத்தோடு. இன்றைய தினம் மும்முனைப் பயிர்த் திட்டத்தைச் செயல்படுத்தி தமிழகத்திலே உணவுக்கு கட்டுப்பாடில்லை, தட்டுப்பாடில்லை என்ற நிலைமையை உருவாக்கி,

" இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து
கெடுக உலகியற்றி யான் "

என்று உலகத்தையே அழிக்கட்டும் என்று வள்ளுவர் சொன்னமாதிரி, தமிழக அரசு முதல்வர் கலைஞர் அவர்கள் அப்படிப்பட்ட நல்ல நிலையை உருவாக்கியிருக்கிறார்கள். அதனாலே உண்மையிலேயே அந்த உற்பத்தியைப் பெருக்க விவசாயப் பெருங்குடி மக்கள் பட்டபாடு வீண்போகாது. தமிழகத்திலே இருப்பவர்கள் எல்லாம் " உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே " என்று சொல்லத்தக்க அளவுக்கு இன்றைய தினம் செய்த பெருமை தமிழக உழவர் பெருமக்களைச் சாரும். இந்த நேரத்தில் நானும் பல அங்கத்தினர்கள் குறிப்பிட்டதுபோல், விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்தவன் மட்டுமல்ல, ஒரு விவசாயியாகவும் இருக்கிற காரணத்தால்—தமிழகத்திலே உற்பத்தியைப் பெருக்கி உணவுக்குத் தட்டுப்பாடு இல்லை என்ற நிலையை உண்டாக்கியதற்காக உழவர் பெருமக்களுக்குப் பாராட்டுதலையும் நன்றியையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அது மாத்திரமல்லாது, சென்ற 22-ம் தேதி கலைஞர் அவர்களுக்கு அண்ணாமலைப் பல்கலைக்கழகம் டாக்டர் பட்டத்தை வழங்கினார்கள். உண்மையிலேயே அவர்கள் சாதாரணத்திலே புறையோடிக்கொண்டிருக்கிற புண்களையெல்லாம் ஆற்றுவதற்காக ஏறத்தாழ 30 ஆண்டுக் 7.00 p.m.

[திரு. அ. பெ. தர்மலிங்கம்] [28th July 1971

காலம் சமுதாயச் சீர்திருத்தத்திலே ஈடுபட்டு, அதற்காக அவர்கள் புத்தகங்களே எழுதி மாற்றார்கள்கூட போற்றத்தக்க அளவிலே, பல காரியங்கள் செய்த காரணத்தால், அவர்களைப் பாராட்டி அவர்களுக்கு அந்தப் பட்டத்தை வழங்கினார்கள். வேளாண்மைப் பெருமக்களாகிய நாம் அதை முதலிலே செய்வதற்குத் தவறி விட்டோம் என்று நான் கருதுகின்றேன். காரணம் அவர்கள் அமைச்சர் பொறுப்பை ஏற்பதற்கு முன்பே அவர்கள் கழகத்திலே ஒரு தொண்டனாக இருந்த நேரத்தில், கையேர் வாரம், மாட்டேர் வாரம் என்றால் என்னவென்றே கழிமுகத்தில் உள்ள படித்தவர்களுக்கெல்லாம் தெரியாத நிலைமையில், நமது முதல்வர் அவர்கள் என்னுடைய மாவட்டத்தில் நங்கவரம் என்ற ஊரில் நடந்த மிகப் பயங்கரமான போராட்டத்திற்குத் தானே தலைமை ஏற்று ஒரு போராட்டத்தை நடத்தி, சட்டத்தைத் திருத்த முடியாது என்ற சூழ்நிலை ஏற்பட்டிருக்கிற நேரத்தில், தானாக அந்த வயலிலே இறங்கி போராட்டத்திலே ஈடுபட்டு கைதாகியிருக்கிற நேரத்தில், அவர்கள் அன்றைய தினம் துப்பாக்கி முனைக்கு முன்னாலே இருந்தார்கள் என்பதைத் தமிழகம் நன்றாக உணரும்.

அந்த நேரத்தில் அவர்கள் உழவர் பெருமக்களுக்காகப் பாடு பட்டார்கள். அது மாத்திரமல்லாமல், அவர் பொதுப்பணித்துறை பொறுப்பேற்ற பிறகு எங்கெங்கே கண்ணீர் வருவதற்கு வசதிகள், வாய்ப்புக்கள் இருக்கின்றன என்ற சாத்தியக்கூறுகளை அறிந்து, எந்தெந்தக் காலத்தில் வாய்க்கால்களைத் தூர் எடுக்க வேண்டும், குளங்களைத் தூர் எடுக்க வேண்டும் என்பதை நன்குணர்ந்து அதில் தீவிரத் திட்டத்தைப் புகுத்தியவர்கள் நமது தலைவர் அவர்கள் என்றால் மிகையாகாது. உழவர் பெருமக்கள் படுகின்ற கஷ்டங்களை எல்லாம் நேரில் கண்டறிந்தவர்கள் அவர்கள். இந்த 30 ஆண்டுக் காலத்தில் மிகச் சாதாரண ஏழை எளிய மக்களிடத்தில் எல்லாம், கிராம மக்களிடத்தில் எல்லாம் பழகிய காரணத்தால், கிராம மக்களுடைய கஷ்ட நஷ்டங்களை நன்கு உணர்ந்திருந்தார்கள். தமிழகத்தில் பேரறிஞர் அண்ணா அவர்கள் இருந்த காலத்தில் புன்செய் நிலத்திற்கு வரி நீக்கம் செய்யப்பட்டது. நமது முதலமைச்சர் அவர்களுக்கு உழவர் பெருமக்கள் பேரில் இருக்கின்ற பாசத்தின் காரணமாக, 5 ஏக்கருக்கு உள்பட்ட நன்செய் நிலங்களுக்கு வரி விலக்கு அளிக்கின்ற திட்டத்தை அவர்கள் உருவாக்கினார்கள். அது மாத்திரமல்லாமல், உணவு உற்பத்தியைப் பெருக்க உழைத்த பெருமக்களுக்கு நன்றி செலுத்தத் தக்க வகையில் நீர் வரியைத் தள்ளிக் கொடுக்க முன்வந்தார்கள். நீண்ட நெடுங்காலமாக விவசாயப் பெருங்குடி மக்கள் சொந்த வீடு இல்லாமல் வாழ்ந்து வந்ததை நேரில் கண்ட காரணத்தால், அவர்கள் திடீர் திடீரென்று வெளியேற்றப்படுவதைக் கண்ணால் கண்ட காரணத்தால், அவ்வாறு வெளியேற்றப்படுவது தடுக்கப்பட வேண்டும் என்ற நோக்கத்தோடு இன்றைய தினம் அவர்கள் ஆங்காங்கே பரம் பரையாக, ஆண்டாண்டு காலமாக விவசாயப் பெருங்குடி மக்கள் குடியிருந்து வந்த வீடுகளையெல்லாம் அவர்களுக்கே பட்டா செய்யப்பட்டு பட்டாக்கள் வழங்கப்பட வேண்டும்; தனியார்



28th July 1971] [திரு. அ. பெ. தர்மலிங்கம்]

நிடத்தில் இருக்கின்ற விவசாயப் பெருங்குடி மக்களுக்கெல்லாம் கூட பட்டா கொடுக்கப்பட வேண்டும்; அதற்கான வழிவகைகளைச் செய்ய வேண்டும் என்ற நல்ல நோக்கத்தோடு கிராமத்தில் குடியிருப்புகளைத் தேடித் தந்திருக்கின்றார்கள். நீண்ட நெடுங்கால மாக உழவுத் தொழில் செய்துவந்த நிலங்களுக்கு, ஏழை எளிய மக்களுக்கு பட்டா வழங்கப்படாமல் இருந்தது. அதனால் அவர்கள் திடீர் திடீரென்று அந்நிலங்களிலிருந்து வெளியேற்றப்படுவது மட்டுமல்ல. அரசாங்கம் அளிக்கின்ற கடன் வசதிகளைக் கூட அந்த ஏழை எளிய விவசாயிகள் பெற முடியாது இருந்தது. அதைப் போக்க, பல ஆண்டுக் காலமாக பட்டா வழங்கப்படாமலிருந்த விவசாயிகளுக்கு பட்டா வழங்கப்பட்டு, கூட்டுறவுத் துறை மூலம் வழங்கப்படுகிற கடன் தொகைகளைப் பெற வழிவகைகளைச் செய்து கொடுத்தார்கள் நமது முதலமைச்சர் அவர்கள் என்றால், அது மிகை யாகாது. அது மாத்திரமல்ல, நமது மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் அவர்களிடம் அருமையான காட்டிலாக்காவைப்பற்றிக் கேட்டால், நமது மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்கரலிங்கம் அவர்கள் குறிப்பிட்டதுபோல், அவர்கள் ஏதாவது காரணத்தைச் சொல்லி, இது "ரிசர்வ் பாரஸ்ட்" அது "அன்ரிசர்வ்ட் பாரஸ்ட்" என்றெல்லாம் கலெக்டரிடத்தில் சொல்லுவார்கள். எனக்கு நன்றாக நினைவிருக்கிறது. நாங்கள் எல்லாம் மேட்டூருக்குச் சென்றிருந்த போது, அங்கேயிருக்கிற பல விவசாயிகள், நமது அருமை நண்பர் சட்டமன்ற உறுப்பினர் கட்சியைச் சார்ந்தவர்கள், அவர்களின் தலைமையில் நமது முதல்வரிடம் முறையிட வந்தார்கள். நீண்ட நெடுங்காலமாக அந்தப் பகுதிகளில் விவசாயம் செய்து வந்திருக் கின்ற விவசாயிகள் அவர்கள். அவ்வாறு அவர்கள் விவசாயம் செய்து வந்திருந்தாலும், அந்த நிலங்கள் காட்டிலாக்காவுக்குச் சொந்தமாக இருந்த காரணத்தால், பல இன்னல்களை அடைந்து வந்தார்கள். அதை முதல்வரிடம் அன்றைய தினம் வந்து முறை யிட்டார்கள். உடனே நமது முதலமைச்சர் அவர்கள் சம்பந்தப் பட்ட அதிகாரிகளை அழைத்துப் பேசி அன்றைய தினமே, அங்கேயே, அது எப்படியிருந்தாலும் சரி, 25 ஆண்டுக் காலம், 30 ஆண்டு காலம் விவசாயிகள் அதில் பயிரிட்டுக்கொண்டிருக்கிறார்கள். அது நிரந்தரமாக்கப்பட வேண்டும்; வேண்டுமானால் சட்டத்தைத் திருத்துவோம் என்று சொல்லி, அன்றைக்கே அனுமதி அளித்தார் கள். அது மாத்திரமல்ல, நமது தமிழகத்தில் இருக்கின்ற காட்டி லாக்காவுக்குச் சொந்தமான ஏறத்தாழ 50 ஆயிரம் ஏக்கர் நிலங்களை எடுத்து, இன்றைய தினம் வேளாண்மைத் தொழிலில் ஈடுபட் டிருக்கிற விவசாயிகளுக்கு, உழவர் பெருமக்களுக்குக் கொடுக்கத் திட்டம் தயாரித்துக்கொண்டிருக்கிறார்கள். தமிழகத்தில் உணவுக்கு தட்டுப்பாடு இல்லை என்ற நிலைமையிருந்தாலும், வெளி மாநிலங் களுக்கு அரிசி அனுப்ப முடியும் என்ற நிலைமையிருந்தாலும், பாரம்பரிய வகைகளுக்குத் தட்டுப்பாடு இருக்கிறது. தமிழகத்திற்கு ஆண்டுக்கு சுமார் 7 லட்சம் டன் வரையில் பருப்பு வகை தேவைப் படுகிறது. இதை உணர்ந்த நம்முடைய முதல்வர் அவர்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளை எல்லாம் அழைத்துப் பேசி, என் உற்பத்தியைப் பெருக்கக் கூடாது என்று கேட்டு, வேளாண்மைத்

துறை அதிகாரிகளுடன் கலந்து பேசி, இன்றைய தினம் பருப்பு வகைகளைத் தீவிர சாகுபடித் திட்டத்தின் கீழ் கொண்டு வந்து, இந்த ஆண்டு பருப்பு வகைகள் உற்பத்தியை எவ்வளவு பெருக்க முடியும் என்பதற்குத் திட்டம் தயாரித்து, அது ஏட்டளவில் இல்லாது, வேளாண்மைத் துறை அதிகாரிகள், சம்பந்தப்பட்ட இலாக்கா அதிகாரிகள் அவ்வளவு பேரும் அங்கங்கே சென்று, எந்தெந்த இடத்தில் என்ன பயிரை விளைவிக்க வேண்டும்; தாளடியில் எதைத் தெளிக்க வேண்டும், அதற்குப் பிறகு எதைத் தெளிக்க வேண்டும்; ஊடுருவி எதைத் தெளிக்க வேண்டும் என்று ஆராய்ச்சி செய்து அங்காங்கு சொல்லி வருகிறார்கள். நமது மாண்புமிகு அங்கத்தினர் சுந்தரேசத் தேவர் அவர்கள் சொன்னதுபோல், பல வகையில் ஆராய்ச்சி இன்னும் செய்து முடிக்கப்படவில்லை. பருப்பு வகையை ஆராயும் அரசாங்கத் திட்டம் இப்போதுதான் உருவாக்கப்பட்டு வருகிறது. அவர்கள் வாழை மாங்கள், தென்னை மரங்களைப்பற்றிச் சொன்னார்கள். நீண்ட நெடுங்காலமாக விவசாயி பூச்சி மருந்து தெளிக்க மாட்டோம், இந்தப் பயிரை பயிர் செய்யமாட்டோம் என்ற இருந்த நிலைமை மாறி, இன்றைய தினம் அரசு சொல்லி வருவதையெல்லாம் பயிரிட முன்வந்திருக்கிறார்கள். ஆகவே மாண்புமிகு அங்கத்தினர் திரு. சுந்தரேசத் தேவர் இன்னும் இந்த ஆராய்ச்சிகளை தீவிரப் படுத்த வேண்டும் என்பதற்காகச் சொன்னார்களே தவிர, செய்யப் பட்டிருப்பதைக் குறை சொன்னார்கள் என்று நான் எடுத்துக் கொள்ளவில்லை. ஏனென்றால் இன்றைய தினம் தென்னை மரத்தில் இருக்கிற பூச்சிகளைக் கொல்ல பாரகுட் என்ற பூச்சியை உற்பத்தி செய்து அதைவிட்டுக் கொல்ல வேண்டியிருக்கிறது. இன்னும் எத்தனையோ பூச்சி மருந்து வகைகள் இருக்கின்றன. விவசாயி களிடம் சென்று இந்த நெல்லை நீங்கள் பயிரிடுங்கள் என்றால், ஏற்றுக்கொள்ளாத காலம் இருந்தது. இப்போதுகூட இருக்கிறது. ஐ.ஆர். 8-ஐ தஞ்சை, திருச்சி மாவட்டங்களில் ஏற்றுக்கொள்ளு கிறார்கள். செங்கற்பட்டில் இருப்பவர்கள் ஐ. ஆர். 8 கொஞ்சம் மொத்தமாக இருக்கிறது, சன்னமாக அமையவேண்டும் என்று சொன்னதற்குப் பிறகு நமது கோவை ஆராய்ச்சி நிலையத்தில் ஐ. ஆர். 20-ஐக் கண்டுபிடித்தார்கள். அது பயிரிடப்பட்டு வருகிறது. சமீபத்தில் ஒரு இடத்தில் ஐ. ஆர். 20-ஐ விட இன்னும் சன்னமாக இருந்தால், நல்லது என்றார்கள். ஐ. ஆர். 22 பயிரிட ஆராய்ச்சி செய்து, அதுவும் உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது. அதுபோல தஞ்சையில் கருணை, பொன்னி போன்ற நெல் வகைகள் பயிரிடப் பட்டு வருகின்றன. அது மாத்திரமல்லாமல் 115, 120, 110, 135 என்ற குறுகிய காலப் பயிர்களை விளைவிக்க ஆராய்ச்சி நடை பெற்றுக்கொண்டு வருகிறது.

எனவே இந்த வகையில் எல்லாம் உறுதுணையாக இருக்கின்ற நமது டாக்டர் கலைஞர் அவர்களுக்கு வேளாண் பெருமக்கள் சார்பில் நான் இந்த நேரத்தில் பாராட்டுதலையும், நன்றியையும் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். தமிழகத்தில் ஆண்டாண்டு காலமாக இல்லாத, வேளாண்மைக்கு என்று தனிப் பல்கலைக் கழகம் துவக்கப்பட்டிருப்பது அவர்களுடைய காலத்தில் தான். பேரறிஞர் அண்ணா அவர்கள் பெயரால் இருக்கின்ற குடுமியான்மலை அண்ணா பண்ணையில் கருணாநிதி மண்வகை ஆராய்ச்சி நிலையம் என்று ஏற்படுத்தியிருக்கிறோம். நமது ஆராய்ச்சிப் பண்ணைகளைப்பற்றி, மாண்புமிகு உறுப்பினர் திரு. சுந்தரேசத் தேவர் அவர்கள் குறிப்பிட்டார்கள். இன்றைய தினம் தமிழகத்தில் நம்முடைய வேளாண்மைக் கழகங்களைச் சார்ந்த ஆராய்ச்சி நிலையங்களில் ஆராய்ச்சிப் பணி புரிபவர்கள், பிறநாட்டார் போற்றும் அளவிற்குப் பணி புரிந்து வருகிறார்கள். எனவே இந்த ஆராய்ச்சிகள் எல்லாம் நல்ல முறையில் நமக்குப் பயன்படும் என்று நிச்சயமாக நம்புகிறேன். அது மாத்திரமல்ல, மண்வளப் பரிசோதனையைப்பற்றிச் சொன்னார்கள். 11 இடங்களில் இந்த மண்வள ஆராய்ச்சி நிலையங்கள் இருக்கின்றன. சமீபத்தில் நம்முடைய முதல்வர் அவர்கள் திருவாரூரில் நடைபெற்ற கருத்தரங்கில் கூட இதைத் தெரிவித்து, பட்டுக்கோட்டை பகுதியில் ஒரு ஆராய்ச்சி நிலையத்தைத் துவக்க அனுமதி வழங்கி யிருக்கிறார்கள்.





நமது மாண்புமிகு அங்கத்தினர் தேவர் அவர்கள் பேசும்போது, காவேரித் தண்ணீரை நினைத்தால், நமது கண்களில் எல்லாம் கண்ணீர் வருகிறது என்று குறிப்பிட்டார்கள். உண்மைதான். ஆனால் இதற்காக நாம் சும்மா இருந்து விடக்கூடாது என்ற நோக்கத்துடன் இன்றைய தினம் வாட்டர் மானேஜ்மெண்ட், தண்ணீர் ஆராய்ச்சி நிலையத்தை ஏற்படுத்தி, தண்ணீர் வீணாகாமல் அதிக உற்பத்தி செய்வதற்கு என்னென்ன முறைகளைக் கையாள வேண்டும் என்ற ஆராய்ச்சி இன்றைய தினம் ஆடுதுறை பண்ணையில் புதிதாக அமைக்கப்பட்டிருக்கிறது. அதே போல குடுமியான்மலை அண்ணா பண்ணையிலுள்ள ஆராய்ச்சி நிலையத்தில் குறைந்த தண்ணீரைக் கொண்டு நிறைந்த உற்பத்தியைப் பெறுவதற்கு இன்றைய தினம் ஆராய்ச்சி துவக்கப்பட்டிருக்கிறது. உங்களுக்கு எல்லாம் தெரியும், தஞ்சை, திருச்சி மாவட்டங்களைச் சேர்ந்த விவசாயிகள் காலையில் போய் மடைவாயைத் திறந்துவிட்டு, மாலையில் சென்று அதை அடைக்க மறந்துவிடுவார்கள். தண்ணீர் வீணாகப் போய்கொண்டிருக்கும். அப்படித் தண்ணீர் வீணாகப் போகாமல், இருக்கின்ற தண்ணீரைக் காத்து எப்படி உற்பத்தியைப் பெருக்க முடியும் என்பதற்காக ஆராய்ச்சி இன்றைய தினம் குடுமியான்மலை அண்ணா ஆராய்ச்சிப் பண்ணையில் துவக்கப் பட்டிருக்கிறது. எல்லாத் துறைகளிலும் இன்றைய தினம் தமிழகத்தில் வேளாண்மைக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வருகிறது. இந்த வேளாண்மைத் துறையைப் பற்றி எல்லா கட்சியைச் சேர்ந்தவர்களும், அவர்களும் வேளாண் பெருமக்களாக இருப்பதால், பாராட்டினார்கள். இந்தத் துறையில் எல்லாத் துறையைச் சேர்ந்த அதிகாரிகளுக்கும் பங்கு உண்டு. உள்ளாட்சித் துறையைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும், பொதுப்பணித் துறையைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும், கூட்டுறவுத் துறையைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும், மின்சாரத் துறையைச்

சேர்ந்தவர்களாக இருந்தாலும், எல்லோருக்கும் இத்துறையில் பங்குண்டு. உணவு உற்பத்தியைப் பெருக்க வேண்டுமென்பதில் அதிக அக்கறை அவர்களுக்கு இருக்கிறது. காரணம் எதை நாம் செய்தாலும், நாம் பசியோடு இருக்க முடியாது. ஆகவே உணவு உற்பத்தியைப் பெருக்க முக்கியத்துவம் அளித்து வருகிறார்கள். அவர்களுக்கெல்லாம் என்னுடைய பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்ளுவதோடு, வேளாண்மைத் துறையில் பணியாற்றுகின்ற எல்லா அலுவலர்களையும் இந்த நேரத்தில் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறேன். வேளாண்மைத் துறையில் பணியாற்றும் எல்லா அலுவலர்களும், இயக்குநர்களும், செயலாளர்களும் இதில் எவ்வளவு அக்கறை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் நேரில் பார்த்திருக்கிறேன். அவர்களுக்கு உள்ள குறைகளையெல்லாம் தீர்க்க முடியாவிட்டாலும், எனது மன நிறைவு உள்ள பாராட்டுதலைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. ராமகிருஷ்ண ஆச்சாரி அவர்கள் குறிப்பிட்டார்கள் கோளத்தில் இருந்து வந்த உரங்களெல்லாம்
.20 p.m. வீணைப் போய் விட்டன என்று. கேரளத்துக்கு நாம் உரம் கொடுக்க முடியாது என்று சொல்லியிருக்கிறோம். குஜராத்திலிருந் தெல்லாம் நம்முடைய உரங்களைக் கேட்டார்கள். ஆனால் மாண்புமிகு உறுப்பினர் திரு. மன்னை நாராயணசாமி அவர்கள் நீங்கள் உரங்களைப் பிறருக்குக் கொடுக்கக் கூடாது, இந்த மாநிலத்து விவசாயிகளுக்கே கொடுக்க வேண்டுமென்று சண்டை போட்டு குறைந்த விலைக்கு வாங்கி விட்டார்கள்.

தேவைக்கு மேல் இருந்த அந்த உரங்களை விற்றிருந்தால், ஒரு கோடி ரூபாய் லாபம் கிடைத்திருக்கும். நீங்கள் எல்லாம் வாணிபமா நடத்துகிறீர்கள் என்று அவர் உரிமையோடு கேட்டார். அதனால் பிற மாநிலத்தோடு செய்த ஒப்பந்தங்களை ரத்து செய்து விட்டோம். அதனால் நமது மாநிலத்தில் உரத் தட்டுப்பாடு இல்லை.

திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு : இனிமேல் நீண்ட காலமாக ஸ்டாக்கில் இருந்த உரங்கள் விவசாயிகளுக்குக் குறைந்த விலையில் கிடைக்கும் என்று நம்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : மாண்புமிகு உறுப்பினர் திரு. செங்கோட்டு வேலப்பன் அவர்கள் நல்ல உரங்களைத் தர வேண்டும் என்று சொன்னார்கள். நிச்சயமாகச் சொல்லுகிறேன், இதைப்பற்றி ஒரு திட்டத்தை முதல்வரிடம் வற்புறுத்தி வருகிறேன். ஊராட்சி ஒன்றியங்களின் மூலமாக சாதாரண விவசாயிகளுக்குக் கிடைக்க வழி வகை செய்ய வேண்டுமென்று சொல்லி வருகிறேன். அனுமதி கொடுத்தால், நல்ல முறையில் கிடைக்கும்படி செய்வதற்கு, மூட்டைக்கு ஒரு அணா அல்லது 10 பைசா செலவாகும்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. கிருஷ்ணசாமி நாயுடு அவர்கள் எல்லா இடங்களிலும் உரங்கள் தேங்கியிருப்பதாக நேற்றைய தினம் சொன்னார்கள். டை அமோனியம் பாஸ்பேட் ஸ்டாண்டர்டு





செய்யப்பட்டது. ஸ்டாண்டர்டு செய்யப்படாமல் 1½ ஆண்டு காலத்துக்கு மேல் இருந்தால், அவைகளை விற்கக் கூடாது, அதனுடைய சத்து எப்படி இருக்கிறது என்று பார்த்துக் கொடுக்க வேண்டுமென்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. நான் நிச்சயமாகச் சொல்லுகிறேன் சென்ற ஆண்டு உர விற்பனையில் ரூபாய் 1,69,00,000 நஷ்டம். இந்த ஆண்டு 32 லட்சம் ரூபாய் நஷ்டம். 2 கோடி ஒரு லட்சம் ரூபாய் நஷ்டத்தில் குறைந்த விலையில் நாம் இப்போது கொடுத்துக்கொண்டு வருகிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். அது மாத்திரமல்ல. விவசாயி களுக்குத் தேவையான உரங்களைக் கொடுக்க வேண்டுமென்றும் சொல்லுகிறோம்.

தமிழகத்தைப் பொறுத்த வரையில், 11 ஆராய்ச்சிக் கூடங்கள் இருக்கின்றன. ஆடுதுறை மிகவும் சிறப்பானது. அங்கு மண்வளப் பாதுகாப்பு செய்யப்பட்டு வருகிறது. அது மாத்திரமில்லாமல், நீலகிரியில் இன்டோ-ஜெர்மன் மண் பரிசோதனைக் கூடம் பணியாற்றி வருகிறது. இதுவும் போதாது என்று இன்றைய தினம் மொபைல் யூனிட் ஆரம்பித்திருக்கிறோம். இந்த யூனிட் காலையி லிருந்து மாலை வரை வயல்களுக்குச் சென்று அங்கிருந்து மண் எடுத்து நாளும் 50 விவசாயிகளுக்கு என்ன உரமிட வேண்டும், இதில் என்ன சத்து கம்மி, இதற்கு என்னென்ன உரங்களைப் போட்டால் விளைச்சல் நன்றாக இருக்கும் என்று எழுதிக் கொடுத்து வருகிறது. இது தஞ்சை மாவட்டத்தில் நடைபெறுகிறது. இந்த மாதிரியான யூனிட்டு ஒன்று போதாது என்று இன்னும் இரண்டுக்கு அனுமதி கிடைத்திருக்கிறது.

எல்லா மாவட்டங்களிலும் எல்லா வயல்களிலும் சர்வே நம்பர், மண் நிலைமை, அதில் என்ன செய்ய வேண்டும் என்பதை எல்லாம் ஆராய்ச்சி செய்து கொடுக்க வேண்டும் என்ற திட்டமும் செயல் படுத்தப்பட்டு வருகிறது.

மாண்புமிகு உறுப்பினர் திரு. சுந்தரேசத் தேவர் ஹெலிகாப்டர் வைத்திருப்பதில் உள்ள கஷ்டங்களையெல்லாம் சொன்னார். வாடகைக்கு ஹெலிகாப்டர்களை மருந்து தெளிப்பதற்கு பயன் படுத்தினால் செலவு அதிகமாகிறது. அதைக் குறைக்க வேண்டும் என்ற காரணத்தால், 4 ஹெலிகாப்டர்களை டெல்லியில் வைத்திருப்பதை அவர்கள் செலவிலேயே இங்கே வைத்து உரிய காலத்தில் பயன்படுத்துகிறோம் என்று கேட்டிருக்கிறோம். அதற்கு அனுமதி எதிர்பார்க்கப்படுகிறது. அதற்கிடையில் எப்படியாவது இரண்டு ஹெலிகாப்டர்களை வாங்கவேண்டுமென்று நினைத்தார்கள். அனுமதியும் கிடைத்தது. ஆனால், விமான ஓட்டிகள் கூட்டுறவு மூலமாக இதை நடத்துவதாகக் கூறியிருக்கிறார்கள். நம் முதல்வரும் இதற்கு அனுமதி அளித்திருக்கிறார். அவர்கள் 5 ஹெலிகாப்டர்கள் வாங்குவதாக இருக்கிறார்கள். அதை நாம் பயன்படுத்திக்கொள்ளலாம். அக்கிரோ-இன்டஸ்ட்ரீஸ் கார்ப்ப ரேஷனும் வாங்குவதாகச் சொல்லுகிறார்கள். பிற மாநிலங்களை விட சிறந்த முறையில் விமானம் மூலம் மருந்துகளைத் தெளித்து பயன் அடைந்திருக்கிறார்கள்.

[திரு. அ. பெ. தர்மலிங்கம்] 28th July 1971]

மாண்புமிகு உறுப்பினர் திரு. சுந்தரேசத் தேவர் அவர்கள் தல்ல யோசனைகளையெல்லாம் கூறியிருக்கிறார்கள். இந்தப் பூச்சி மருந்துகளையெல்லாம் தெளிப்பான்கள் மூலமாகவும் தெளிக்கலாம் என்று சொன்னார்கள். இதுவும் நல்ல திட்டம்தான். ஊராட்சி ஒன்றியங்களிலே தெளிப்பான்கள் எல்லாம் முறையாகப் பராமரிக்கப் படாமல் பழுதடைந்து கிடக்கின்றன. அப்படிப் பழுதடைந்திருக்கின்ற தெளிப்பான்களை எல்லாம் சரி செய்வதற்கு ஒரு மொபைல் யூனிட்டு ஏற்படுத்தியிருக்கிறோம்.

ஒவ்வொரு ஒன்றியத்திலும் 10, 15 விவசாயிகளுக்கு மருந்துகளை எப்படித் தெளிப்பது, மிஷின் எப்படி பொருத்த வேண்டும் என்பதைப்பற்றியெல்லாம் பயிற்சி அளிக்கத் திட்டமிட்டிருக்கிறோம். அவர்கள் ஆங்காங்கே சென்று விவசாயிகளுக்கு உதவி செய்வார்கள். அதைப் போலவே நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. செங்கோட்டு வேலப்பன் அவர்கள் டிராக்டர்களைப் பற்றிச் சொன்னார்கள். நான் ஒன்றியத் தலைவனாக இருந்தவன். நான் இருந்த அந்த ஒரு ஆண்டுக் காலத்தில் மானாமாகத்தான் அந்தக் காரியத்தைச் செய்து வந்திருக்கிறேன். அதைப் போலவே தண்ணீர்த் தட்டுப்பாடு உள்ள இடங்களில் மழை விவசாயிகளால் பம்புசெட்டு வாங்க முடியாது என்பதை உணர்ந்து அரசாங்க அனுமதி பெற்று அப்போதே நூற்றுக்கணக்கில் மழை விவசாயிகளுக்குக் கொடுத்துவந்தேன். யூனியன் மூலமாகச் செய்வதற்கு இந்த அரசு அனுமதி அளித்திருக்கிறது. கலைஞர் அவர்கள் வறட்சி நிவாரண நிதியைப் பயன்படுத்தி . . .

**திரு. என். சுந்தரேசத் தேவர்:** யூனியனில் ஒன்றியத்தில் இருக்கிற டிராக்டர்களுக்கெல்லாம் ரூ. 20 வாங்கப்படுகிறது. ஐ.ஏ.டி.பி.-யில் வாங்கி முழுதற்கு ரூ. 10 அரசாங்கமே மானியமாக வழங்குகிறது. அதே போல பஞ்சாயத்து ஒன்றியத்து டிராக்டர்களுக்கு வாங்கப்படுகிற ரூ. 20-ல் ரூ. 10-ஐ மானியமாகக் கொடுத்தால் நன்றாக இருக்கும்.

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்:** அவர்களுக்கே தெரியும், ஒன்றியத்தில் எவ்வளவு கஷ்டம் இருக்கிறது என்பது புரியும். ஒன்றியத்தில் அப்படிக் கொடுத்தால் நஷ்டம்தான் ஏற்படும்.

**திரு. என். சுந்தரேசத் தேவர்:** அரசாங்கம் ஐ.ஏ.டி.பி. திட்டத்தின் கீழ் ரூ. 10 கொடுக்கிறது.

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்:** தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்து அந்தத் திட்டம் இருக்கிறது. திருச்சி, திருநெல்வேலி, ராமநாதபுரம், மதுரை பகுதிகளுக்கு வழங்கப்படவில்லை. அவற்றையும் திட்டத்தில் சேர்க்கும்போது, இதைக் கவனிக்கலாம்.

**திரு. ஜி. சுவாமிநாதன்:** பஞ்சாயத்து யூனியன் டிராக்டர்கள் யாராலும் வாங்கப்படாமல் இருப்பதற்குக் காரணம் அந்தக் கட்டணம் ரூ. 20 ஆக இருப்பதுதான் ஐ.ஏ.டி.பி.யில் டிராக்டர்கள் வாங்கினால் ரூ. 10 தான் ஆகிறது



[28th July 1971

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்:** உறுப்பினர் சொல்கிற குறையும் இருக்கிறது. வடஆற்காடு சென்றபோது நான் ஒன்றைப் பார்த்தேன். அங்கே தனியார் துறையில் டிராக்டர்கள் குறைவான கட்டணத்தில் கொடுப்பதைப் பார்த்தேன். பொதுத்துறையில் கூடுதலாக இருப்பதாகவும் சொன்னார்கள். அக்ரோ-இண்டஸ்ட்ரீஸ் கார்ப்பரேஷனிடம் இதைக் குறைத்துக் கொடுக்கும்படி பாருங்கள் என்று சொன்னேன். அவர்கள் முடியாது என்று சொன்னார்கள். கொஞ்சம் அதிகமாக இருந்தாலும் கூட, விவசாயிகள் அவ்வப் போது பணம் கொடுக்க முடியாத காரணத்தால், தனிப்பட்டவர் களிடத்தில் வாங்கிக்கொண்டு பிறகு வட்டிபோட்டுக் கொடுக் கிறார்கள் என்ற நிலைமையும் இருக்கிறது. இதை நேரில் பார்த்தேன். இயந்திர முறையைப் பின்பற்ற ஆரம்பித்திருப்பதால், விரைவில் அது வளர்ச்சியடைந்து குறைந்த செலவில் பின்பற்றுவதற்கு முயற்சி எடுத்துக் கொள்ளலாம் என்பதைத்தான் இந்த நேரத்தில் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பூச்சி மருந்துகளைப்பற்றிச் சொன்னார்கள். தமிழகத்தைப் பொறுத்தவரையில் பிற மாநிலங்களில் மத்திய சர்க்கார் கொடுத்து வந்த 'சப்சிடி' நிறுத்தப்பட்டது. மத்திய அரசு 15 சதவிகிதம் பூச்சி மருந்துக்குக் கொடுக்கிறார்கள்.

உறுப்பினர் திரு. சங்கரலிங்கம் அவர்கள் மலைப் பகுதிகளைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். மலை மேம்பாட்டுப் பிரச்னை கவனிக்கப் பட்டு வருகிறது. நாம் மாநிலத்தைப் பொறுத்தவரையில் நீலகிரிக்குத்தான் மலை என்ற அளவில் "சப்சிடி" வழங்கி வந்தோம். இன்னொரு இடமும் நீலகிரி மாவட்டமல்ல. ஏற்காடு மலை, கொச்சி மலை, பச்சை மலை, கொல்லி மலை ஆகிய 4 மலைகளை அத்துடன் சேர்த்து அத்திட்டத்தில் கொண்டுவர வேண்டுமென்று சிபாரிசு செய்யப் பட்டிருக்கிறது. அதைப்பற்றி இப்போதுதான் எழுதி அனுமதி பெற்றிருக்கிறோம்.

**திரு. ஜி. சுவாமிநாதன்:** மலைகளை எந்த அடிப்படையில் பிரிக்கிறார்கள் ?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்:** அங்குள்ள மலைவளம், என்னென்ன பயிர் செய்வது என்பனவற்றை ஆராய்ச்சி செய்த தற்குப் பிறகு வகுக்கப்படுகின்றன. உறுப்பினர் 15 சதவிகிதம் கொடுப்பதாகச் சொன்னார்கள். மலைப் பகுதி "ஹில் ஏரியா" என்று பிரிக்கப்பட்டு 10 சதவிகிதம் சப்சிடி கொடுக்கப்படுகிறது. "பிளைன்ஸ்" என்கிற கீழ்ப்பகுதிக்கு வந்தபிறகு 25, 15 சதவிகிதம் கொடுக்கப்படுகிறது. மலை மேம்பாட்டிற்காக அனுப்புகிற சிபாரிசு மத்திய அரசு ஏற்றுக்கொண்ட பிறகுதான் நடைமுறைப்படுத்தப் படுகின்றன. இதுவரையில் மலைப் பகுதிகள் சேராமல் இருந்தன. இப்போது அவை சேர்க்கப்பட்டிருக்கின்றன.

சிறு உழவர்கள் மேம்பாட்டு நிறுவனம் நிறுவப்பட்டிருக்கிறது. உறுப்பினர்கள் விவரமான குறிப்பைப் படித்தால், நிச்சயமாக நன்றாக அது விளங்கும். காலம் அதிகமாகிவிட்டதால், இன்னும்

*[திரு. அ. பெ. தர்மலிங்கம்]* [28th July 1971

மற்றவைபற்றிச் சொல்ல நேரமில்லை. இன்றைய தினம் குடியானவர்கள் பயிற்சித் திட்டம்பற்றிச் சொன்னார்கள். பயிற்சி அளிப்பதற்கு ஒரு திட்டத்தையும் நடைமுறைக்குக் கொண்டு வந்திருக்கிறோம். அதைப் போலவே வேறு பல திட்டங்களும் இப்போது செயல்படுத்தப்பட்டு வருகின்றன. நேற்றைய தினம் கூட வேளாண்மைக் குறிப்புப் புத்தகம் உறுப்பினர்களுக்குக் கொடுக்கப்பட்டது. அப்புத்தகம் படித்து விட்டு தூக்கி எறிகிற புத்தகமல்ல. சட்டம் படித்தவர்கள் தேவைப்படுகிற நேரத்தில் புரட்டிப் பார்க்கிற சட்டப் புத்தகத்தைப் போல, இந்த வேளாண்மைக் குறிப்புப் புத்தகம் இருக்கிறது. பல பயன்படும் விவரங்கள் அதில் அடங்கியுள்ளன. எந்தெந்த மாவட்டங்களில் எந்தெந்த உரங்கள் போட வேண்டும், தலைமை நிலையங்கள் எங்கே யிருக்கின்றன, யாரைச் சந்திக்க வேண்டும் என்பதெல்லாம் அதில் இருக்கிறது.

7-30 p.m.

இங்கே அங்கத்தினர்கள் அதிகாரிகளைச் சந்திப்பதற்கு கஷ்டமாக இருப்பதாகச் சொன்னார்கள். இன்றைய தினம் அந்த நிலைமையைச் சரிசெய்ய வேண்டுமென்று சொல்லி "ரீ-ஆர்கனைசேஷன்"-க்கு முதல்வர் அனுமதி அளித்திருக்கிறார்கள். விரைவில் அது உருவாக்கப்படலாம் என்று கருதுகிறேன். இப்போது மாவட்டங்களில் தனித்தனியாக மாவட்ட அலுவலர்கள் இருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் ஒரேயிடத்தில் இருக்கிறார்கள். ஒரு விவசாயி இங்கேயிருந்து தோகைமலைக்குப் போய் பருத்தியைப் பற்றிக் கேட்டால், பருத்தி சம்பந்தப்பட்ட அதிகாரி வேறு இடத்தில் இருக்கிறார் என்று சொல்லப்படுகிறது. நான் இதற்குச் சம்பந்தப்பட்டவர் அல்ல என்கிறார்கள். இன்னொரு இடத்தில் சென்று தென்னையைப் பற்றிக் கேட்டால், அதற்கும் எனக்கும் சம்பந்தமில்லை, அவர் வேறிடத்தில் இருக்கிறார் என்கிறார்கள். இதை நானே அனுபவித்தவன். ஆகையால் ஒரு விவசாயி மாவட்டத் தலைநகரத்திற்குச் சென்று தோட்டையிலிருந்து கஷ்டப்பட்டு யாரையும் பார்க்க முடியாமல் மிகுந்த பரிதாபகரமான நிலைமையை நான் பார்த்த காரணத்தால், இதைப் பற்றி முதல்வரிடம் சொன்னேன். மாவட்டக் கலெக்டரில் இப்போது 10, 14 பேர்கள் இருக்கிறார்கள். அவர்கள் நாலைந்து அளவில் இருக்க வேண்டும். அவர்களுக்குக் கீழே ஆங்காங்கு என்னியத்தில் கூட ஒன்று இரண்டு, மூன்று விவசாய விஸ்தரிப்பு அதிகாரிகள் இருக்கிறார்கள். அவர்களை எல்லாம் நேரடியாக அவர்களுக்குக் கீழே கொண்டுவந்து தலியாக ஒரு அலுவலகமாக வைத்து நிர்வகிக்க வேண்டுமென்ற கருத்து இருக்கிறது. இப்போது விவசாய விஸ்தரிப்பு அதிகாரிகள் பூச்சி மருந்து அடிக்கவும், பில் புத்தகத்தை வைத்துக்கொண்டு வசூலிக்கவும் தான் இருக்கிறார்கள். அவர்கள் விவசாயிகளுக்கு நல்ல யோசனை சொல்கிற நிலையில் அவர்களை வேண்டுமென்றிருக்கிறோம். வருங்காலங்களில் திட்டமாக அவர்களை அப்படி ஆக்க இருக்கிறோம். அதற்கு முதல்வரும் சம்மதம் தெரிவித்திருக்கிறார்கள். காவிரி நாட்டைப் பொறுத்தவரையில் பருத்திக்குப் பிற மாநிலங்களைத்தான் நாடவேண்டியிருக்கிறது. நான் அந்தக்



28th July 1971] *[திரு. அ. பெ. தர்மலிங்கம்]*

கஷ்டத்தை அனுபவித்தவன். திருச்சி மாவட்ட மத்திய நூற்பாளர் சங்கத் தலைவனாக இருந்த காரணத்தால், எப்படியெப்படி எப்போது பஞ்சு விலை ஏறுகிறது என்பதைக் கண்டவன். இன்றைய தினம் தமிழ் நாட்டில் தீவிரப் பருத்தி சாகுபடித் திட்டத்தை உருவாக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு, தமிழக அரசு மத்திய அரசோடு வாதிட்டு வருகிறது. பிற மாநிலங்களுக்கு அளிப்பதற்கு முன்னால், நம்முடைய வேளாண்மைத் துறையில் உள்ளவர்கள் சென்று இரண்டு நாட்களுக்கு முன்பாக நம்முடைய மாநிலத்திற்கு ரூ. 67 லட்சம் செலவில் ஒரு ஆண்டுக்கு என்று கணக்கிட்டு நான்காண்டுகளுக்கு செய்யத் தக்க வகையில் மத்திய அரசு உதவியோடு செய்யப்படும் ஒரு திட்டத்திற்கு அனுமதி வழங்கச் செய்திருக்கிறார்கள். அது செயல்படுவதற்கு நேற்றைய தினத்திலிருந்து ஆரம்பித்துவிட்டது. அதைத்தான் மாண்புமிகு பெரியவர் திரு. கிருஷ்ணசாமி நாயுடு அவர்கள் சொன்னார்கள். சுஜாதா, எம்.சி.ஒ.4, 5 இப்படியெல்லாம் நல்ல இழைகளைத் தருகின்ற பருத்திகள் இருக்கின்றன. அப்படிப்பட்ட பருத்தியை உற்பத்தி செய்யவேண்டுமென்று அவர்கள் விரும்புகிற காரணத்தால் இதைச் செய்கிறோம். சுஜாதா, பாரதி போன்ற பயிர் வகைகள் உற்பத்தித் திட்டம் நல்ல முறையில் இருக்கிறது. அதுவும் சிறந்த முறையில் வளரும் என்று நம்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் பல நல்ல கருத்துக்களை இங்கே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அவற்றையெல்லாம் நன்றாக யோசனை செய்து செயல்படுத்தும் நேரத்தில் நிச்சயமாகக் கருத்தில் கொள்வேன் என்ற உறுதியை அளிப்பதோடு மாண்புமிகு உறுப்பினர் திரு. தர்மலிங்கம் அவர்கள் சில சந்தேகத்தைச் சொன்னார்கள். மார்க்கெட்டுகள் சம்பந்தப்பட்ட வகையில் சொன்னார்கள். இந்த அரசு அவருக்கு எவ்வளவு சலுகைகள் வழங்கியிருந்திருந்தது என்பது அவருக்கு நன்றாகத் தெரியும். எத்தனை விற்பனைக் கூடங்கள் எவ்வளவு மோசமான நிலையில் இருந்தன என்பதும், தமிழக அரசு பொறுப்பேற்ற பிறகு எந்த அளவுக்கு லாபகரமாக நடைபெறுகின்றன என்பதும் அவருக்குத் தெரியும். விவசாயிகள் உற்பத்தியைப் பெருக்குவதற்குச் சலுகைகள் அளிக்கப்படுவதோடு மட்டுமல்லாமல், விவசாயிகள் நல்ல பலன் அடையவேண்டுமென்ற நோக்கத்தோடு சட்டங்களை எல்லாம் மாற்றிக்கொண்டு வந்திருக்கிறோம். நிலவற்றை உடனடியாகத் திருத்த வேண்டுமென்று அவர்கள் சொன்னார்கள். அதற்கு எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டிருக்கிறோம். இந்த ஒழுங்கு முறை விற்பனைக் கூடங்கள் மூலமாக வேளாண்மை விளைபொருள்களை வாங்கு வதையும் விற்பதையும் கட்டாயமாக்குகிற சட்டம் இப்போது சிபாரிசு செய்யப்பட்டிருக்கிறது. அதில் இருக்கிற ஒரு கஷ்டம், நாம் இந்தச் சட்டத்தைச் செய்தால், ஒரு சிலர் எதோ அவர் களுடைய உரிமையைப் பறிக்கிறோம். சுதந்திரம் பறி போகிறது என்று வாதாடுவதற்கும் அதற்காக வழக்காடுவதற்கும் சிலர் தயாராக இருப்பார்கள். வேளாண்மை விளை பொருள்களை ஒழுங்கு முறை விற்பனை அங்காடி மூலமாக கட்டாயம் வாங்கவோ விற்கவோ வேண்டும் என்கிற சட்டத்தைத் திருத்த அரசு முடிவு

[திரு. அ. பெ. தர்மலிங்கம்] [28th July 1971

செய்துள்ளது. இத்தகைய திருத்தம் வாங்குபவரை அல்லது விற்பனை செய்பவரை, அங்காடிக் குழுவினால் அறிவிக்கப்பட்ட அங்காடி எல்லைக்குள் நிறுவப்பட்ட அங்காடி மூலம் தான் அறிவிக்கப்பட்ட வேளாண்மை விளைபொருள்களை வாங்கவோ அல்லது விற்கவோ, செய்யக்கூடாதென்று கட்டாயப்படுத்தி வதால், அத்தகைய கட்டாயம் சுதந்திர வாணிபம், வியாபாரம் அல்லது கலந்து உறவாடுதல் முதலிய உரிமைகளை பாதிப்பதால், இந்திய அரசியல் சட்ட விதி 304 உட்பிரிவு (பி)-ன் படி ஜனாதிபதியின் ஒப்புதலைப் பெற்றுத்தான் சட்டமன்றத்தில் திருத்த மசோதாவைத் தாக்கல் செய்ய வேண்டும். இது சம்பந்தமாக இந்திய அரசுக்கு 16-7-71-ல் நினைவூட்டுக் கடிதம் அனுப்பப் பட்டிருக்கிறது. இந்தக் கூட்டத் தொடருக்குள் பதில் எதிர் பார்த்தோம். இன்றைக்குக் கூட சுதந்தியின் மூலம் நினைவூட்டி யிருக்கிறோம். விரைவில் அந்தத்தைப் போக்க அரசு நடவடிக்கை எடுத்துக்கொள்ளும். உறுப்பினர்கள் பல வேறு கஷ்டங்களை எடுத்துச் சொன்னார்கள். உரிய நேரத்தில் உரிய முறையில் செய்ய வேண்டிய காரியங்களை அரசாங்கம் செய்யும் என்ற உறுதியை இந்த நேரத்தில் அளிக்கிறேன். இந்த மானியத்தின் மீது உறுப்பினர்கள்
7-40 p.m. ஆதரவு தெரிவித்ததற்கு நன்றியையும் பாராட்டுதலையும் தெரிவித்து முடித்துக் கொள்ளுகிறேன்.

MR. CHAIRMAN: The House will now adjourn and meet again at 4.00 p.m. tomorrow.

The House then adjourned.

## IV. PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE

### A. *Statutory Rules and Orders*

*** 175. Notificaton issued with G.O. Ms. No. 1227, Home, dated the 4th May 1971 in regard to an amendment to the Tamil Nadu Children Rules, 1940 [Laid on the table of the House under section 44(4) of the Tamil Nadu Children Act, 1920 (Tamil Nadu Act IV of 1920].**

*** 176. Notification issued with G.O. Ms. No. 1299, Agriculture, dated the 23rd April 1971 in regard to an amendment to the Tamil Nadu Agricultural Produce Markets Rules, 1962. [Laid on the table of the House under section 29(4) of the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959 (Tamil Nadu Act 23 of 1959].**

*** 177. Notification issued with G.O. Ms. No. 443, Agriculture, dated the 9th February 1971, in regard to an amendment to the Tamil Nadu Agricultural Produce Markets Rules, 1962.**



28th July 1971]

[Laid on the tableof the House under section 29(4) of the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959 (Tamil Nadu Act 23 of 1959].

### B. *Reports, Notifications and other papers.*

* 134. Notification issued with G.O Ms. No. 161, Labour, dated the 10th February 1971, in regard to certain amendments to the Tamil Nadu Factories Rules, 1950, as subsequently amended.

* 135. Performance Budget 1971–72 relating to Transport July 1971.

* 136. Report of the Committee on Public Accounts on the Accounts of the State of Tamil Nadu for the year 1967–68 which was presented to the Assembly on 26th July 1971.

* 137. Report and Proceedings of the Joint Select Committee on the Tamil Nadu Town and Country Planning Bill, 1971 (L.A. Bill No. 1 of 1971).

& 138. Note on Agriculture Demands 1971–72.

& 139. Policy Note on Agriculture 1971–72 (English and Tamil).

& 140. Statistical Agenda (Roto Type Print).

& 141. Leaflet "அண்ணா கனவு நிறைவேறியது".
& வேளாண்மைக் குறிப்புகள்.

142. Returns of Assets of the following Members of the Tamil Nadu Legislaive Council as on the 31st March 1971 placed on the table in pursuance of the Resolution passed by the Tamil Nadu Legislature on the 28th August 1969:—

1. Thiru A. Ponnappa Naidu.
2. Thiru G. Krishnamurthy, Deputy Chairman.

143. Answers to Unstarred Questions Nos. 27 to 35.

* Laid on the table of the House on 27th July 1971.
& Circulated to all M.L.Cs. on 26th July 1971.

## APPENDIX I.

[*Vide* answer to Starred Question No. 276 on page 668]

*Number of students in High Schools and Colleges who underwent National Cadet Corps Training during* 1967–71.

| Serial number and Type Wing. | 1967–68. Officers. | 1967–68. Cadets. | 1968–69. * Officers. | 1968–69. * Cadets. | 1969–70. Officers. | 1969–70. Cadets. | 1970–71. Officers. | 1970–71. Cadets. |
|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) |
| Senior Division— | | | | | | | | |
| 1 Army Wing .. | 195 | 26,426 | — | — | 161 | 23,935 | 161 | 22,440 |
| Naval Wing .. | 14 | 799 | — | .. | 12 | 786 | 13 | 746 |
| Air Wing .. | 5 | 600 | .. | .. | 2 | 540 | 5 | 495 |
| Girls Wing .. | 8 | 1,831 | .. | .. | 9 | 2,340 | 17 | 2,307 |
| Total .. | 222 | 29,656 | .. | .. | 184 | 27,601 | 196 | 25,988 |
| Central Government Institution. | 3 | 429 | — | .. | 4 | 419 | 5 | 700 |
| Junior Division— | | | | | | | | |
| 2 Army Wing .. | 397 | 39,263 | .. | .. | 343 | 33,944 | 385 | 43,305 |
| Naval Wing .. | 50 | 4,972 | .. | .. | 42 | 3,940 | 49 | 4,233 |
| Air Wing .. | 63 | 6,322 | .. | .. | 67 | 6,307 | 67 | 6,195 |
| Girls Wing .. | 48 | 4,810 | .. | .. | 51 | 4,371 | 42 | 4,685 |
| Total .. | 558 | 55,367 | .. | .. | 503 | 48,562 | 543 | 58,418 |
| Sainik School.. | 9 | 521 | .. | .. | 9 | 460 | 7 | 426 |
| Public School. | 3 | 150 | — | .. | 3 | 142 | † | .. |
| Central Government Schools. | .. | .. | .. | .. | 1 | 100 | 2 | 179 |

* Due to suspension of National Cadet Corps activities in Tamil Nadu State there was no training during 1968–69.

† Due to withdrawal of JD troops there was no training during 1970–71.

## APPENDIX II.

[*Vide* answer to Starred Question No. 283 on page 674].

### விவர அறிக்கை

[இராமநாதபுரம் மாவட்டத்தில் நெடுங்காலமாக வறட்சியால் பாதிக்கப் பட்டுள்ள பகுதிகளுக்கு மத்திய அரசின் சிறப்பு இராமப்புறப் பணித் திட்டத்தின்கீழ் 1970–71-ம் ஆண்டில் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் செலவிடப்பட்டுள்ள தொகையைக் காட்டும் விவர அறிக்கை.]

| வரிசை எண். | ஊராட்சி ஒன்றியத்தின் பெயர். | 1970–71-இல் செலவிடப்பட்ட தொகை. ஊராட்சி ஒன்றியச் சாலைகளுக்கு. | | சிறு பாசனத் திட்டங்களுக்கு. | | 1970–71-இல் செலவிடப்பட்ட தொகை. | |
|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | | (4) | | (5) | |
| | | ரூ. | கா. | ரூ. | கா. | ரூ. | கா. |
| 1 | ஸ்ரீவில்லிபுத்தூர் .. | 1,56,563 | 00 | 12,046 | 00 | 1,68,549 | 00 |
| 2 | ராஜபாளையம் .. | 1,31,209 | 00 | 27,587 | 00 | 1,58,796 | 00 |
| 3 | வத்திராயிருப்பு .. | 95,402 | 00 | 12,926 | 00 | 1,08,328 | 00 |
| 4 | சாத்தூர் .. | 92,836 | 00 | 10,018 | 00 | 1,02,854 | 00 |



| வரிசை எண். | ஊராட்சி ஒன்றியத்தின் பெயர். | 1970–71-இல் செலவிடப்பட்ட தொகை. ஊராட்சி ஒன்றியச் சாலைகளுக்கு. | | சிறு பாசனத் திட்டங்களுக்கு. | | 1970–71-இல் செலவிடப்பட்ட தொகை. | |
|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | | (4) | | (5) | |
| | | ரூ. | கா. | ரூ. | கா. | ரூ. | கா. |
| 5. | சிவகாசி .. | 81,430 | 50 | 15,321 | 00 | 96,751 | 50 |
| 6. | விருதுநகர் .. | 93,880 | 25 | 21,348 | 00 | 1,15,228 | 25 |
| 7. | வெம்பக்கோட்டை .. | 75,538 | 50 | .. | | 75,538 | 50 |
| 8. | அருப்புக்கோட்டை .. | 32 755 | 00 | .. | | 32,755 | 00 |
| 9 | திருச்சுழி .. | 36,817 | 00 | .. | | 36,817 | 00 |
| 10. | கமுதியாபட்டி .. | 44,756 | 00 | .. | | 44,756 | 00 |
| 11. | நரிக்குடி .. | 97,822 | 00 | 26,969 | 00 | 1,24,791 | 00 |
| 12. | ராமநாதபுரம் .. | 1 41,273 | 00 | 7,101 | 00 | 1,48,374 | 00 |
| 13. | திருப்புல்லாணி .. | 1 57,318 | 00 | 12,558 | 00 | 1,69,876 | 00 |
| 14. | மண்டபம் .. | 26,428 | 00 | 6,704 | 00 | 33,132 | 00 |
| 15. | முதுகுளத்தூர் .. | 1,09,530 | 00 | 60,928 | 00 | 1,70,458 | 00 |
| 16. | கடலாடி .. | 60,395 | 00 | 88,069 | 00 | 1,48,464 | 00 |
| 17. | கமுதி .. | 33,654 | 00 | 68 796 | 00 | 1,02,450 | 00 |
| 18. | சிவகங்கை .. | 99,379 | 00 | 80,621 | 00 | 1,80,000 | 00 |
| 19. | மானமதுரை .. | 1,24,275 | 00 | 28 899 | 00 | 1,50,174 | 00 |
| 20. | திருப்புவனம் .. | 82,362 | 00 | 38,189 | 00 | 1,20,551 | 00 |
| 21. | காளையார்கோயில் .. | 40,757 | 00 | 49,664 | 00 | 90,421 | 00 |
| 22. | பரமக்குடி .. | 1,53,721 | 00 | 37,491 | 00 | 1,91,212 | 00 |
| 23. | இளையான்குடி .. | 1,24 847 | 00 | 70,370 | 00 | 1,95,217 | 00 |
| 24. | போகலூர் .. | 1,14,374 | 00 | 67,110 | 00 | 1,81,484 | 00 |
| 25. | திருவாடானை .. | 1,95,887 | 00 | 58,782 | 00 | 2,54,669 | 00 |
| 26. | ஆர்.எஸ். மங்கலம் .. | 1 15,706 | 00 | .. | | 1,15 706 | 00 |
| 27. | கண்ணன்குடி .. | 97,927 | 00 | 19,101 | 00 | 1,17,028 | 00 |
| 28. | தேவிகோட்டை .. | 1 07,992 | 80 | 12,962 | 00 | 1,20,954 | 00 |
| 29. | திருப்பத்தூர் .. | 1,19,986 | 00 | 30,214 | 00 | 1,50,200 | 00 |
| 30. | கல்லல் .. | 84,598 | 30 | 16,766 | 00 | 1,04,364 | 30 |
| 31. | சாக்கோட்டை .. | 61,004 | 00 | .. | | 61 004 | 00 |
| 32. | சிங்கம்புனரி .. | 1,39,179 | 30 | 61,646 | 00 | 2,00,825 | 30 |
| | மொத்தம் .. | 31,26,542 | 65 | 9,42,186 | 00 | 40,68,728 | 65 |

## APPENDIX III.

[*Vide* answer to Unstarred Question No. 30 on page 681 ..]

1965–66-ம் ஆண்டில் நபர் ஒன்றுக்கு ஆன கல்விச் செலவு—

| மாநிலம். | ரூபாய். |
|---|---|
| ஆந்திர பிரதேசம் .. | 10·0 |
| அசாம் .. | 12·3 |
| பீஹார் .. | 6·2 |
| குஜராத் .. | 14·8 |
| ஜம்மு & காஷ்மீர் .. | 16·2 |

| மாநிலம். | | ரூபாய். |
|---|---|---|
| கேரளா | .. | 19·3 |
| மத்திய பிரதேசம் | .. | 11·3 |
| மகாராஷ்ட்ரா | .. | 17·3 |
| மைசூர் | .. | 12·8 |
| நாகலாந்து | .. | 32·4 |
| ஒரிசா | .. | 8·4 |
| அரியானா | .. | 14·6 |
| ராஜஸ்தான் | .. | 10·1 |
| தமிழ்நாடு | .. | 16·4 |
| உத்தரப்பிரதேசம் | .. | 8·8 |
| மேற்கு வங்காளம் | .. | 15·0 |
| அந்தமான் & நிக்கோபார் தீவுகள் | .. | 32·0 |
| தாத்ரா & நாகர் ஹவேலி | .. | 9·9 |
| டில்லி | .. | 61·0 |
| கோவா, டாமன் & டையு | .. | 37·8 |
| இமாசல பிரதேசம் | .. | 16·6 |
| லட்சத் தீவுகள் & மினிகாய் தீவு | .. | 52·1 |
| மணிபுரி | .. | 23·4 |
| வடகிழக்கு எல்லை பிரதேசம் | .. | 17·3 |
| பாண்டிச்சேரி | .. | 44·8 |
| திரிபுரா | .. | 18·9 |
| இந்தியா முழுவதற்கும் | .. | 12·6 |

1. மேற்கண்ட புள்ளி விவரங்கள் இறுதியானவை அல்ல. அவற்றில் திருத்தங்கள் செய்யப்படவேண்டி இருக்கலாம்.

2. அவை 27—3—1971 அன்று மைய அரசுக் கல்வித் துறை யிடமிருந்து பெறப்பட்டன. 1965-66-க்குப் பின் உள்ள ஆண்டு களுக்கான விவரங்கள் அவ்வமைச்சகத்திடம் இல்லை.

3. மைய அரசு, மாநில அரசுகள், உள்ளாட்சி மன்றங்கள் ஆகியவை செலவிடும் தொகைகள், மாணவர்களிடம் வசூலிக்கும் கட்டணம், கட்டணங்கள், பிற வசூல்களுக்கான வகைகளிலிருந்தும் கல்விக்காகச் செலவிடப்பட்ட தொகைகளைக் கணக்கில் கொண்டு மேற்கண்ட புள்ளிவிவரங்கள் தயாரிக்கப் பட்டுள்ளன. பொதுக் கல்வி, தொழில் கல்வி, பொறியியல் கல்வி, பிற வகைக் கல்விகள் ஆகிய அனைத்துவகைக் கல்விகளுக்கான செலவுகளும் கணக்கில் கொள்ளப்பட்டுள்ளன.

## APPENDIX IV

[*Vide* item III (2) on page 32].

### வேளாண்மை—கொள்கைக் குறிப்பு

### 1971-72

முக்கியமான வேளாண்மைப் பணித் திட்டங்களில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் பற்றிய ஓர் விளக்கமும், இனி வரும் ஆண்டில் அரசு எடுக்கும் நடவடிக்கை பற்றியும் பின்வரும் குறிப்பில் குறிப்பிட்டுள்ளேன்.



### பருவ மழை நிலைமைகள்.

1970—71-ஆம் ஆண்டில், தென் மேற்குப் பருவ மழை, சென்னை யிலும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளிலும், செங்கற்பட்டு, தென் ஆர்க்காடு, வட ஆர்க்காடு மாவட்டங்களிலும் இயல்பான அளவுக்கு மேல் பெய்தது; இவ்வாறே, தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி மாவட்டங் களிலும் இயல்பான அளவிற்கு மேலாகப் பெய்தது. மதுரை மாவட்டத்தில் பெரும்பாலும் வழக்கமான அளவில் ஏனைய மாவட்டங்களில் மழை அளவு வழக்கத்தை விடக் குறைந்திருந்தது. திருநெல்வேலி, கன்னியாகுமரி, நீலகிரி ஆகிய மாவட்டங்களில் மழையளவு பெரிதும் குறைந்தது. இக்கால அளவில் மாநிலத்தின் சராசரி மழை அளவு 307.3 மி.மீ.யாக இருப்ப மாநில முழுமைக்கும் பதிவான சராசரி மழை அளவு 318 மி.மீ.யாகும், இவ்வாறு சராசரி மழையளவு சற்றே உயர்ந்துள்ளதைக் காணலாம். வடகிழக்குப் பருவ காலத்தின் போதும் கூட. இராமநாதபுரம், திருநெல்வேலி, நீலகிரி ஆகிய மாவட்டங்களில், தொடர்ந்து போதுமான அளவிற்கும் குறைந்தே மழை பெய்தது. இக்கால அளவில் மாநிலத்தின் சராசரி மழையளவு 449.7 மி.மீ.யாக இருப்ப மாநில முழுமைக்கும் பதிவான மழையளவு 416.1 மி.மீ. (தற்காலிக புள்ளி விவரம்) ஆகும் இவ்வாறு சுமார் 7 சதவீதம் மட்டுமே மழையளவு குறைந்தது.

### உணவு தானிய உற்பத்தியினவு.

தமிழ் நாட்டில், வேளாண்மைத் துறையில் கடந்த மூன்றாண்டு களில் மாபெரும் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. "பசுமைப் புரட்சி"-க்குக் கட்டியங் கூறும் வகையில் யுகத்தில் அடியெடுத்து வைத்துள்ளோம் என்றும் வேளாண்மைத் துறையில் பெருமுன் னேற்றங் கண்டுள்ளோமென்றும் கூறினால் அது மிகையாகாது. 1968—69-ல் உணவு தானிய உற்பத்தியில் நாம் எய்திய சாதனை 51.05 லட்சம் டன்னாகும். 1969—70-ல் உணவு தானிய உற்பத்தி 62.61 லட்சம் டன் அளவை எட்டிற்று. 1970—71-ஆம் ஆண்டில் நம் மாநிலத்தில் 67 லட்சம் டன்கள் உணவுதானிய உற்பத்தி செய் யுமென்று குறிக்கோள் ஒன்று வரையறுக்கப்பட்டது; அதன் விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

| | உற்பத்தி (லட்சம் டன்களில்) |
|---|---|
| அரிசி .. .. .. .. .. | 49·00 |
| சிறிய தானியங்களும் பெரு தானியங்களும் .. | 16·50 |
| பருப்பு வகைகள் .. .. .. .. | 1·50 |
| | 67·00 |

1970–71-ல் உணவு தானிய உற்பத்தியளவு 70.71 லட்சம் டன் ஆகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது விவரம் கீழே கொடுக்கப் பட்டுள்ளது :—

| | (லட்சம் டன்களில்). |
|---|---|
| அரிசி .. .. .. .. .. | 53·03 |
| சிறுதானியங்கள் .. .. .. .. | 16·03 |
| பருப்புவகைகள் .. .. .. .. | 1·65 |
| மொத்தம் .. | 70·71 |

1971–72 ஆண்டுக்கு வரையறுக்கப்பட்ட திட்ட இலக்குகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| | (லட்சம் டன்களில்.) |
|---|---|
| அரிசி .. .. .. .. .. | 54·00 |
| சிறு தானியங்கள் .. .. .. | 17·00 |
| பருப்பு வகைகள் .. .. .. .. | 2·00 |
| மொத்தம் .. | 73·00 |

## அரிசி உற்பத்தி.

தமிழ் நாட்டில் 1970–71-ஆம் ஆண்டில் நெல் பயிரிடப்பட்ட பரப்பு 66.38 லட்சம் ஏக்கர் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. முந்திய ஆண்டில் நெல் பயிரிடப்பட்டதாக மதிப்பிடப்பட்ட 66.60 லட்சம் ஏக்கர் பரப்புடன் ஒப்பிடுகையில், நடப்பாண்டின் மதிப்பீட்டில் ஒரு சிறு அளவு, அதாவது, 0.3 சதவீதம் குறைவு காணப்படுகிறது. 1969–70 உடன் முடிவடைந்த முந்திய ஐந்தாண்டுகளில் இதற்கு நிகரான கால அளவுக்குக் கணக்கிடப்பட்ட சராசரிப் பரப்பள வான 63.89 லட்சம் ஏக்கருடன் ஒப்பிட்டால், 1970–71-ஆம் ஆண்டுக் கான தற்போதைய மதிப்பீட்டில் பரப்பளவு 3.9 சதவீதம் அதி கரித்துள்ளதைக் காணலாம். 1970-71-இல். பரப்பளவு சிறிது குறைந்திருந்தாலும், அரிசி உற்பத்தியளவு இது வரை எய்திய சாதனைகளிலே மிக உயர்ந்த அளவாகும். அதாவது, 53.03 லட்சம் டன்களாகும். முந்திய ஆண்டுக்கு மதிப்பிடப்பட்ட உற்பத்தி யளவான 45.32 லட்சம் டன்களுடன் ஒப்பிட்டால், 1970–71-ஆம் ஆண்டுக்குரிய தற்போதைய மதிப்பீட்டில் 17 சத வீத உயர்வைக் காணலாம். மேலும், 1969–70-உடன் முடிவடைந்த முந்திய ஐந்தாண்டுகளுக்கு கணக்கிடப்பட்ட சராசரி உற்பத்தியளவான 39.24 லட்சம் டன்களுடன் ஒப்பிட்டால், 1970–71-க்குத் தற்போது மதிப்பிடப்பட்டுள்ள அளவில் 35.1 சதவீதம் உயர்வு ஏற்பட்டுள் ளதைக் காணலாம்.

ஆய்விற்குரிய இவ்வாண்டில் பொதுவாக, உணவு தானிய உற்பத்தி உயர்ந்ததற்கு முக்கியக் காரணங்கள் பின் வருவனவாகு மெனலாம். அவையாவன: புதிய பகுதிகளில் நெற்பயிர்



விளைவிக்கப்பெற்றது; மிகு விளைச்சல் தரும் நெல் வித்துக்கள் பயிரிடப்படுகிற பரப்பளவு விரைந்து விரிவுபடுத்தப் பெற்றது; இரசாயன உரங்கள், பூச்சிக்கொல்லி மருந்துகள்; மேம்படுத்தப் பட்ட விதைகள் ஆகியவற்றைச் சரிவிகித அளவில் பயன் படுத்துதல் போன்ற அறிவியல், பயிர் வளர்ப்பு முறைகளைப் பின்பற்றியது—ஆகிய இந்த வேளாண்மை முறைகளை மேற்கொண்டு கையாளுமாறு உழவர் பெருங்குடி மக்களைத் தூண்டுவதில் வேளாண்மைத் துறையினைச் சேர்ந்த வளர்ச்சிப் பணியாளர்கள் எடுத்துக்கொண்ட மாபெரும் முயற்சிகள் ஆகியன.

## மிகுபயன் தரும் தானிய வகைகள்.

மிகுபயன் தரும் தானிய வகைகள் திட்டம் இணைக்கப்பட்ட நடவடிக்கைக்கு வழி செய்கிறது; அதாவது இதன் கீழ் உரிய அளவுக்கு, வேளாண்மைக்குத் தேவைப்படும் பொருள்களைப் பயன் படுத்துதல் மூலமாக, புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட மிகு விளைச் சல் தரும் நெல், சிறு தானிய வகைகள் பயிரிட அறிமுகப்படுத்தப் படும். அத்துடன். அதே சமயம் கடன் வசதிகளும் செய்து தரப் படும்.

1970–71-இல் மிகு விளைச்சல் தரும் நெல் வகைத் திட்டத்தின் கீழ் கொண்டு வரக் கருதப்பட்ட பரப்பு 37.50 லட்சம் ஏக்கர் ஆகும். இப்பரப்பு இம்மாநிலத்தில் நெல் பயிரிடப்படும் மொத்தப் பரப் பளவில் சரிபாதியாகும். இஃதிவ்வாறிருப்ப, இத்திட்டத்தின்கீழ்க் கொண்டுவரப்பட்ட பரப்பு 44.93 லட்சம் ஏக்கர்களாகும். அதாவது இது நெல் பயிரிடப்படும் மொத்தப்பரப்பில் 2/3 பங்கினை விட அதிகமாகும். உயர் விளைச்சல் தரும் சிறு தானிய வகைகள் திட்டத்தின்கீழ், 2.50 லட்சம் ஏக்கர்கள் இலக்கு வரையறுத்திருப்ப 2.85 லட்சம் ஏக்கர்கள் இதன்கீழ் கொண்டுவரப்பட்டுள்ளன.

1971-72-இல் இத்திட்டத்தின்கீழ் கொண்டுவரத் திட்டமிடப் பட்டுள்ள பரப்புகள் விவரம் வருமாறு: நெல் 50.00 லட்சம் ஏக்கர் கள்; கலப்பினச் சிறுதானியங்கள். 4.00 லட்சம் ஏக்கர்கள்; H.B. 3 கம்பு 5.00 லட்சம் ஏக்கர்கள் ஆகும். மிகுபயன் தரும் தானிய ரக திட்டத்தின்கீழ் அடைந்த அமோக வெற்றிக்கு வேளாண்மைத்துறை எடுத்துக்கொண்ட அயரா முயற்சி போற்றத் தக்கது

## பலபோகப் பயிர் (Multiple Cropping)

தமிழ்நாட்டில் வேளாண்மை செய்யப்படும் நிகர பரப்பளவை உயர்த்துவதற்கு வாய்ப்பு அரிதாகவுள்ளது; இவ்வுண்மையைக் கருத்திற்கொண்டு, பலபோகப்பயிர் திட்டத்தில் அதிக நாட்டம் செலுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் முக்கியக் குறிக் கோள் யாதெனில் வழக்கமாகப் பயிரிடப்பட்டு வரும் வகைகளை விடுத்து குறுகிய காலப்பயிர் வகைகளைப் பயிரிடுமாறு அறிமுகப் படுத்துவதேயாகும்; அதன் மூலம் உறுதிப் பாசனப் பகுதிகளில் ஒரு போகத்துக்குப் பதிலாக இரண்டு போகம் விளைவிக்கலாம்;

இரண்டு போகம் விளைவிக்கப்பட்டு வந்த பகுதிகளில் மூன்று போகம் விளைவிக்கலாம். இத்திட்டத்தின்கீழ் பருப்பு வகைகள் பயிரிடும் திட்டத்தைச் செயல்படுத்தியுள்ளது மற்றொரு முக்கிய மாறுதலாகும். புதிய வேளாண்மைத் திட்டத்திலொரு பகுதியாக 1967-68-இல் பலபோகப் பயிர் திட்டம் தொடங்கி வைக்கப்பட்டது. தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில் நான்காவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தின் இறுதி ஆண்டில் இத்திட்டத்தின்கீழ் 15.00 லட்சம் ஏக்கர் பரப்பினைக் கொண்டுவரக் கருதப்பட்டிருக்கிறது. பலபோகப் பயிர் திட்டத்தின்கீழ் வரும் பரப்பிற் பெரும்பகுதி தஞ்சாவூர் மாவட்டத்தில் மேற்கொள்ளப்படுகிறது. இங்கு, ஒரு போகம் விளையும் நிலங்கள் இருபோக நிலங்களாக மாற்றப்படுகின்றன. முதற் போகத்தில் குறுகிய காலத்தில் விளையும் குறுவை பயிரிடப்படுகிறது; இரண்டாவது போகத்தில் நெல் அல்லது வேர்க்கடலை அல்லது வேறு சிறு தானியம் பயிரிடப்படுகிறது.

இத்திட்டத்தின்கீழ் 1967–68-ல் 2.15 லட்சம் ஏக்கரும், 1968–69-இல் 5.53 லட்சம் ஏக்கரும் சாதனை எய்தியிருப்ப, 1969-70-இல் 9.95 லட்சம் ஏக்கர் பரப்பு சாதனை எய்தியுள்ளோம். 1970–71-ஆம் ஆண்டுக்கான திட்ட இலக்கு (கொருத்து வரும் அளவு) 12.00 லட்சம் ஏக்கர்களாக இருப்ப, இவ்வாண்டில் எய்திய சாதனை 12.98 லட்சம் ஏக்கர்களாகும். பலபோகப் பயிர் திட்டத்தில் விளைவு மேற்பட்ட உற்பத்தி கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

| | டன்கள். |
|---|---|
| 1968–69 .. .. .. .. | 472,820 |
| 1969–70 .. .. .. .. | 895,780 |
| 1970–71 .. .. .. .. | 1,066,560 |

1971-72-க்கான திட்ட இலக்கு 13.00 லட்சம் ஏக்கர்களாகும்.

### பலபோகப் பயிர் குறித்த முன்னோடித் திட்டங்கள்.

இதுவரை ஏற்பட்டுள்ள அனுபவத்திலிருந்து பலபோகப் பயிர்த் திட்டத்தின்கீழ் திட்ட இலக்குகளை வரையறுப்பது மட்டும் போதாதென்று தெரிய வந்துள்ளது. எது தேவையென்றால், வலுவானதும் உண்மையாய்ச் செயற்படுத்த முடிவதுமான பல போகப் பயிர்த் திட்டமொன்றின் பல்வேறு கூறுகளும் பற்றித் தட்புல விளக்கம் செய்யப்பட வேண்டும். அதாவது, திட்டத்தின் அமைப்பு, பயிரிடுவதற்கு இன்றியமையாத பொருள்கள், நிதி வாயில்கள், தொழில் நுட்ப உதவி இவற்றின் அவசியமும், விற்பனை வசதி, செய்யும் முறை, சேமிப்புக் கிடங்கு வசதி, சாலை வசதி, ஏனைய போக்குவரத்து வசதிகள் ஆகிய ஆயத்த முன் பணிகளின் அவசியமும் பற்றித் தெளிவாக உணர்த்தப்படவேண்டும். தெரிந்தெடுத்த வட்டாரங்களில் பலபோகப் பயிர் முறை முன்னோடித் திட்டத்தைச் செயற்படுத்துதல் மூலம் இதனை எய்தலாம். இத் திட்டத்தைப் பெரிய பகுதிகளுக்கு விரிவுபடுத்துதலுக்குரிய பொருத்தப் பாட்டினை முன்னோடி வட்டாரம் கட்புல விளக்கம் செய்யும்.





மும்முரு வேளாண்மை மாவட்டத் திட்டம், மும்முரு வேளாண்மைப் பகுதித் திட்டம், சிறு உழவர்கள் திட்டம் ஆகியவை செயற்படுத்தப்படும் பகுதிகளான கீழ்க்கண்ட மூன்று வேளாண்மைக் கோட்டங்களில் இந்த முன்னோடித் திட்டத்தைச் செயற்படுத்துவதற்காக இந்திய அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது :—

பட்டுக்கோட்டை—தஞ்சாவூர் மாவட்டம்.
முசிறி—திருச்சிராப்பள்ளி மாவட்டம்.
கடலூர்—தென்னார்க்காடு மாவட்டம்.

இத்தத் திட்டம் மத்திய அரசு ஆதரவு பெறுகிற திட்டமாக ஏற்பளிக்கப்பட்டுள்ளது; நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தின் ஏஞ்சியுள்ள காலப்பகுதிக்கு மதிப்பிடப்பட்ட செலவு தொகை ரூ 12 லட்சம் முழுவதும் இந்திய அரசால் வழங்கப்படும்.

### 1970–71 கோடைப் பின் பருவ காலத்தில் 1.50 லட்சம் ஏக்கரில் எச்.பி. 3 கம்பு விரைவுத் திட்டம்.

திருநெல்வேலி, ராமநாதபுரம் மாவட்டங்களில் கரிசல் மண் பகுதிகளில் நடப்பாண்டுக் கோடைப் பின் பருவ காலத்தில் எச்.பி. 3 கம்பு பயிரிடுவதற்கான விரைவுத் திட்டமொன்றை துறை ஏற்கனவே தொடங்கியுள்ளது. இந்த மாவட்டப் பகுதிகளில் மானுவாரி கம்பு விதைப்பதற்கான காலம் அக்டோபர், நவம்பர் மாதங்களாகும். எனவே, அந்தந்த மாவட்ட வேளாண்மை அதிகாரிகள் வேண்டிய அளவு எச்.பி. 3 கம்பு விதைகளை சேமித்து வைத்து, உரிய நேரத்தில் தேவைப்பட்ட உழவர்களுக்கு அவற்றைப் பகிர்த்தளித்தனர். இந்த ஆண்டுக்கென இலக்கு குறிப்பிடப்பட்ட 1.50 லட்சம் ஏக்கர்களில் எய்திய சாதனை 1.38 லட்சம் ஏக்கர்கள் மட்டுமே. இந்த ஆண்டில் இந்த வட்டாரங்களிற் சில பகுதிகளில் வட கிழக்குப் பருவ மழை தவறியதால் எஞ்சிய 12,000 ஏக்கர் இலையும் இத்திட்டத்தின் கீழ்க் கொண்டுவர முடியவில்லை.

### 1971-72-இல் 5.00 லட்சம் ஏக்கர்களில் எச்.பி. 3 கம்பு பயிரிடுவதற்கான திட்டம்.

1970-71-இல் எச்.பி. 3 கம்பு பயிரிட்டதில் ஏற்பட்ட அனுபவத்தின் அடிப்படையில், 1971–72-ல் இத்திட்டத்தின்கீழ் 5.00 லட்சம் ஏக்கர் பரப்பளவைக்கொண்டு வரத் திட்டமிடப்பட்டுள்ளது; அதன் விவரம் வருமாறு :—

| | பரப்பளவு (லட்சம் ஏக்கரில்.) |
|---|---|
| கோயம்புத்தூர் வட்டாரம் .. .. | 1·00 |
| திருநெல்வேலி வட்டாரம் .. .. | 1·25 |
| மதுரை வட்டாரம் .. .. .. | 1·00 |
| திருச்சிராப்பள்ளி வட்டாரம் .. .. | 1·65 |
| சேலம் வட்டாரம் .. .. | 0·10 |
| | 5·00 |

மேற்குறிப்பிட்டுள்ள திட்டத்தைச் செயற்படுத்துவதற்கான தொகுதிட்டம் அரசின் ஆழ்ந்த பரிசிலனையில் உள்ளது. இந்தக் கம்பு பயிர்த் திட்டத்தின் விளைவாக 1971-72-இல் கம்பு உற்பத்தி 1 லட்சம் மெட்ரிக் டன்னுக உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## மும்முர வேளாண்மை மாவட்டத் திட்டம்.

"முனைப்புத் திட்டம்" என மக்கள் பாவலாக அறிந்துள்ள மும்முர வேளாண்மை மாவட்டத் திட்டம் 1960-ம் ஆண்டு முதற் கொண்டே தஞ்சாவூர் மாவட்டத்தில் செயற்பட்டு வருகிறது.

பின் வரும் வழிகளில் உணவு உற்பத்தியை உயர்த்துவதே மும்முர வேளாண்மை மாவட்டத் திட்டத்தின் நோக்கமாகும்: (1) அத்தந்த மண்ணிற்கு மிகவும் பொருத்தமான வேளாண்மை முனைப்பு நடைமுறைகளைத் தோற்றுவித்து அவற்றைப் பல்வேறு வளர்ச்சிக் கல்வி உத்திகள் மூலமாக உழவர்களிடையே விரைந்து பரப்புதல்; (2) உழவர்கள் மேம்படுத்திய நடைமுறைகளைப் பின் பற்றுவதற்குத் தேவையான பயிரிடு தேவைப்பொருள்களில் அவர் தம் ஆற்றலுக்குட்பட்டனவற்றை உரிய நேரத்தில் அவர்கட்குக் கிடைக்கச் செய்தல்.

தஞ்சாவூர் மாவட்டம் முழுவதும் ஆறு வேளாண்மைக் கோட்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன; ஒவ்வொரு கோட்டமும் ஒரு மாவட்ட வேளாண்மை அதிகாரியின் பொறுப்பில் விடப் பட்டுள்ளது. ஏனைய மாவட்டங்களில், சமுதாய நல வளர்ச்சி வட்டாரங்கள் ஒவ்வொன்றிலும், சாதாரணமாக ஒரு வேளாண்மை வளர்ச்சி அதிகாரியும், 10 ஊர் நல உதவியாளர்களும் நியமிக்கப் பட்டிருப்பதற்கு மாறுக, இம் மாவட்டத்தில் உள்ள சமுதாய வளர்ச்சி வட்டாரங்கள் ஒவ்வொன்றிலும் நான்கு வேளாண்மை வளர்ச்சி அதிகாரிகளும், 20 ஊர் நல உதவியாளர்களும் நியமிக்கப் பட்டதன் மூலம் நேரிடப் பணியாளர்களின் எண்ணிக்கை அதிகரிக் கப்பட்டுள்ளது.

கூட்டுறவுத் துறையிலும் கூட, இம் மாவட்டத்தில் பணியாளர் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டுள்ளது; இந்த மாவட்டத்துக் கென்றே தனியாக கூட்டுறவுச் சங்கங்கள் இணைப் பதிவாளர் ஒரு வரும், ஆறு துணைப் பதிவாளரும் நியமிக்கப்பட்டுள்ளனர்; ஒவ் வொரு சமுதாய வளர்ச்சி வட்டாரத்துக்கும் ஒரு கூடுதல் வளர்ச்சி அதிகாரியும் (கூட்டுறவு) நியமிக்கப்பட்டுள்ளார்.

இத் திட்டத்தின் முன்னேற்றம் குறித்து மதிப்பீடு செய்பவும், நிறைவுத் திட்டங்களை ஆய்ந்து காணவும், இத்திட்டத்துடன் புள்ளி விவரப்பிரிவு ஒன்றும் இணைக்கப்பட்டுள்ளது. மேலும் இத்திட்டத் தின் ஒரு பகுதியாக டிராக்டர் பணிக்களரி ஒன்றும் இம்மா வட்டத்தில் திருவாரூரில் அமைக்கப்பட்டுள்ளது. இப்பணிக்களரி இயந்திர முறை பயிர்த்தொழிலை மேம்படுத்த உதவும்; மேலும், சொந்தமாக டிராக்டர்களை வைத்துள்ள தனியார்க்கு செப்பனிடு பணி வசதிகள் அளிக்கும்; தஞ்சாவூர் மண் வளத்திற்குப்



தமான புதிய கருவிகள், இயந்திரங்களை வடிவமைத்துத் தரும். இப் பணிக்களரியில் நிறுத்திவைக்கப்பட்டுள்ள 53 டிராக்டர்கள் சமுதாய வளர்ச்சி வட்டாரங்கள் மூலமாக உழவர்களுக்கு வாடகைக்குக் கொடுக்கப்படுகின்றன. இதற்கு மேலும், சமுதாய வளர்ச்சி வட்டாரங்கட்குச் சொந்தமான 24 டிராக்டர்களும் கூட்டுறவுகட்கு சொந்தமான 47 டிராக்டர்களும் தனிப்பட்ட உழவர்களுக்குச் சொந்தமான 540 டிராக்டர்களும் ஒவ்வோராண்டும் கணிசமான பகுதியிற் பணி புரிகின்றன.

ஓராண்டில் 48,000 மாதிரிகளைப் பகுப்பாய்வு செய்யும் திற னுடைய மண்வளப் பரிசோதனை ஆய்வுக்கூடம் ஒன்று இம் மாவட்டத்தில் செயற்பட்டு வருகின்றது. கிராம மண்வள வரை படங்களும், மண் வளச் சோதனை முடிவுகளின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

பண்ணைத் திட்டங்களின்கீழ், 1968-69-ல் 13.14 லட்சம் ஏக்கரும், 1969-70-இல் 14.06 லட்சம் ஏக்கரும் கொண்டு வரப் பட்டுள்ளன. 1968-69-ஆம் ஆண்டில் தயாரிக்கப்பட்ட பண்ணைத் திட்டங்களின் எண்ணிக்கை 2.34 லட்சமாக இருக்க, 1969-70-இல் தயாரிக்கப்பட்ட பண்ணைத் திட்டங்களின் எண்ணிக்கை 2.39 லட்சமாகும். 1970-71-இல் பண்ணைத் திட்டங்கள் தயாரித்தல் நிறுத்தப்பட்டுள்ளது. அதற்குப் பதிலாக, தெரிந்தெடுக்கப்பட்ட உழவர்கட்குப் பண்ணைப் பதிவுப் புத்தகங்கள் பேணி வருதல் அறி முகப்படுத்தப்பட்டுள்ளது.

தஞ்சாவூர் மாவட்டத்தில் குறுவைப் பருவகாலத்திற்குப் பொருத்தமான உயர்விளைச்சல் தரும் நெல்வகையான ஆடுதுறை 27 ரக நெல் கண்டுபிடிக்கப்பட்டபின்னர், மும்முர வேளாண்மை மாவட்டத் திட்டத்தின் ஒரு பகுதியாக, ஒரு போகச் சம்பா பயிர் விளைவிக்கும் நிலங்களை இருபோகம் விளைவிக்கும் நிலங்களாக மாற்றுவதற்கான பெருந்திட்டமொன்று 1967-68-இல் மேற் கொள்ளப்பட்டது.

1967-68 முதல் 1970-71 வரையிலான காலத்தில் திட்டத்தினைத் தொடர்ந்து கொண்டு வரப்பட்ட பரப்பளவு அரிசி அளவின்னை உற்பத்தி ஆகியவற்றின் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன—

| ஆண்டு. | குறுவை. | | சம்பா. | | தாளடி. | |
|---|---|---|---|---|---|---|
| | பரப்பளவு. (ஏக்கர்) | உற்பத்தி. (மெட்ரிக் டன்.) | பரப்பளவு. (ஏக்கர்) | உற்பத்தி. (மெட்ரிக் டன்.) | பரப்பளவு. (ஏக்கர்) | உற்பத்தி. (மெட்ரிக் டன்.) |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| 1967-68 .. .. | 5,18,978 | 3,59,290 | 7,47,996 | 5,67,452 | 3,19,812 | 1,72,210 |
| 1968-69 .. .. | 5,03,576 | 3,48,630 | 7,92,482 | 6,83,265 | 2,96,668 | 1,59,740 |
| 1969-70 .. .. | 4,96,149 | 3,43,490 | 7,86,242 | 5,92,925 | 3,63,149 | 1,95,540 |
| 1970-71 .. .. | 5,13,000 | புள்ளி விவரம் சேகரிக்கப்படவில்லை. | 7,83,000 | புள்ளி விவரம் சேகரிக்கப்படவில்லை. | 3,79,000 | புள்ளி விவரம் சேகரிக்கப்படவில்லை. |



மாவட்ட மும்முர வேளாண்மைத் திட்டப் பணிகளை மேற்கொண்டதன் பலனாக, கயவாய்ப் பகுதியில் 75 சதவீதத்திற்கு மேற்பட்ட பரப்பளவில், மிகு விளைச்சல் தரும் பயிர் வகைகள் பயிரிடப்பட்டுள்ளன. நைட்ரஜன் உரங்கள் பயன்படுத்தப்படுவது 6 மடங்காக அதிகரித்துள்ளது. பூச்சிக் கொல்லிகளைப் பயன்படுத்துவதும் கணிசமான அளவிற்குக் கூடியுள்ளது. இந்த முயற்சிகள் அனைத்தின் பலனாக, இந்தக் கயவாய்ப் பகுதியில் நெல்லின் மொத்த உற்பத்தி கணிசமான அளவிற்குப் பெருகியுள்ளது. அரிசி உற்பத்தி கீழ்க்கண்டவாறு பெருகியுள்ளது :—

| ஆண்டு. | | | | | லட்சம் டன்கள். |
|---|---|---|---|---|---|
| 1965-66 | .. | .. | .. | .. | 9·11 |
| 1966-67 | .. | .. | .. | | 8·77 |
| 1967-68 | .. | .. | .. | | 9·20 |
| 1968-69 | .. | .. | .. | .. | 11·67 |
| 1969-70 | .. | .. | .. | .. | 12·04 |
| 1970-71 | .. | .. | .. | .. | 13·01 |

தஞ்சாவூர் மாவட்டத்தில் ஐ.ஆர். 8, ஏ.டி.டி. 27 பயிர்கள் பயிரிடப்படும் பகுதியின் பரப்பளவு கீழே கொடுக்கப் பட்டுள்ளது :—

| | | | | ஏ. டி. டி. 27. (ஏக்கர்). | ஐ.ஆர். 8. (ஏக்கர்). |
|---|---|---|---|---|---|
| 1967-68 | .. | .. | .. | 4,80,000 | 215 |
| 1968-69 | .. | .. | .. | 3,91,358 | .. |
| 1969-70 | .. | .. | .. | 4,24,646 | 18,037 |
| 1970-71 | .. | .. | .. | 4,27,802 | 1,15,395 |

*1971-72-ஆம் ஆண்டிற்கான வேலைத் திட்டம்.*

(a) மும்முர வேளாண்மை மாவட்ட வேலைத் திட்டப் பகுதியில் பண்ணைச் சாதனங்களைத் தொடர்ந்து பேணி வருவதும் முறையான பிற நடவடிக்கைகளும்.

(b) ஐந்து லட்சம் ஏக்கரில் குறுவை பயிரிடுவதற்காக இரு போகப் பயிர்த் திட்டத்தைத் தொடர்ந்து செயல்படுத்துதல்.

(c) தஞ்சாவூர் மாவட்டத்தின் தாளடி பருவத்திற்குப் பொருந்தக்கூடிய புதிய நடுத்தரக் காலப் பயிர் வகையை முடிவு செய்தல்.

(d) தனியார் நிலங்களில் 2,000 வடிமுனைக் குழாய்களையும், 500 குழாய்க் கிணறுகளையும் அமைப்பதற்கான விரைவுத் திட்டத்தைத்தொடர்ந்து மேற்கொள்ளுதல்.

(e) மேம்படுத்தப்பட்ட வேளாண்மை நடைமுறைகளைப் பரவலாக்குவதற்காக கட்புல விளக்கங்கள் நடத்துதல்.

[28th July 1971

### பல போகப் பயிர் கட்புல விளக்கம்.

ஏற்றவாறு பயிர் வகைகளை மாற்றிப் பயிரிடுதல், முனைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் ஆகியவற்றின் மூலம் பயிர் விளைச்சலை எவ்வாறு பெருமளவிற்கு உயர்த்துவது என்பதையும் ஆதாயமளிக்கத் தக்க விளைச்சலை எவ்வாறு பெறுவது என்பதையும் உழவர்களுக்கு மனத்தில் பதியும் வண்ணம் விளக்கிக் காட்டுவதே இத் திட்டத்தின் நோக்கமாகும்.

1971-72-ல், ரூ. 1.42 லட்சம் செலவில் 100 கட்புல விளக்கங்களை நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

### மும்முரை வேளாண்மைப் பகுதித் திட்டம்.

மும்முரை வேளாண்மைப் பகுதித் திட்டம், செங்கற்பட்டு, மதுரை, கோயம்புத்தூர், திருநெல்வேலி ஆகிய நான்கு மாவட்டங்களிலும் அந்தந்தப் பகுதியின் வேளாண்மைத் துணை இயக்குநர்களைத் திட்ட அதிகாரிகளாகக் கொண்டு செயல்பட்டது. 1970-71-ஆம் ஆண்டில் இத் திட்டம் திருச்சிராப்பள்ளி மாவட்டத்திற்கும் நீட்டிக்கப்பட்டது. இத் திட்டத்தின்கீழ், குறைந்த அளவு 10,000 ஏக்கர் பாசன நிலங்களைக் கொண்டுள்ள ஒவ்வொரு வளர்ச்சி வட்டாரத்திற்கும் அறிவியல் முறையில் பயிரிடுவதன் நலன்களைப் பயிரிடுவோருக்கு நன்கு உணர்த்துவதற்காக ஏற்ற முறையில் விளம்பரம் செய்வதை வசதிப்படுத்துவதன் பொருட்டு, வேளாண்மைதல வளர்ச்சி அதிகாரி ஒருவரும் ஊர்நலப் பணியாளர்கள் ஐவரும் நியமிக்கப்பட்டுள்ளனர். வட்டாரம் ஒவ்வொன்றிலும் மாவட்ட வேளாண்மை அதிகாரியின் தரத்தில் தகவல் அதிகாரி ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். இதைத் தவிர, பல்வேறு ஆராய்ச்சி நிலையங்களில் அறிவியல் புலன் விசாரணை தேவைப்படுகிற உள்ளூர் வேளாண்மை பொருளாதாரப் பிரச்சினைகளைக் கண்டறிவதற்காகவும், ஏற்புடைத்த கட்புல விளக்கங்களில் ஏனைய வேளாண்மைப் பொருளாதாரக் கட்டுப்பாடுகள், சோதனைகள் இவற்றைத் திட்டமிட்ட முறையில் வகுப்பதற்காகவும், இந்த மாவட்டங்கள் ஒவ்வொன்றிற்கும் மாவட்ட வேளாண்மை சிறப்பு அதிகாரி ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். வேளாண்மை மேம்பாடுகளுக்காக முனைப்புத் திட்ட அடிப்படையில் நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன; இதன்கீழ் தனித் தனி உழவர்களுடன் அடிக்கடி தொடர்பு வைத்துக்கொள்ளப்படுகிறது.

இத் திட்டம் தொடங்கப்பட்டதிலிருந்து இத் திட்டத்தின் கீழ் வந்துள்ள பரப்பளவு பின்வருமாறு :—

| | பரப்பளவு (லட்சம் எக்கரில்). | உற்பத்தி (லட்சம் டன்னில்). |
|---|---|---|
| 1965–66 .. .. .. | 5·36 | 9·76 |
| 1966–67 .. .. .. | 12·06 | 10·29 |
| 1967–68 .. .. .. | 18·72 | 11·08 |
| 1968–69 .. .. .. | 20·68 | 9·49 |
| 1969–70 .. .. .. | 20·12 | 12·77 |
| 1970–71 .. .. .. | 23·75 | 20·54 |

1971–72-ஆம் ஆண்டிற்கான திட்ட இலக்கு 26.72 லட்சம் எக்கர் ஆகும்.



28th July 1971]

### பயிர் விளைச்சல் போட்டி.

மேம்படுத்தப்பட்ட பயிரிடு உத்திகளைப் பயன்படுத்துதல், பொறுக்கு விதைகளைப் பயன்படுத்துதல், ஆகியவற்றின் மூலம் உணவுப் பயிர்கள், ஏனைய பயிர்களின் விளைச்சலைப் பெருக்குவதற்கான சாத்தியக் கூறுகளை உறுதிப்படுத்துவதே இத் திட்டத்தின் நோக்கமாகும். நெல், கேழ்வரகு, கம்பு, சோளம் ஆகிய பயிர்கள் ஒவ்வொன்றுக்கும் 1960–61-லிருந்து கிராம வளர்ச்சி வட்டார, மாவட்ட, மாநில அளவுகளில் போட்டிகள் நடத்தப்படுகின்றன. கிராம, வளர்ச்சி வட்டார, மாவட்ட, மாநில அளவுகளில், போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்படும்.

1969–70-ஆம் ஆண்டில் எல்லா மட்டங்களிலும் திட்டக் குறிக்கோள் அளவு 50,000-க்கு மாறாக, பதிவு செய்யப்பட்ட போட்டியாளர்களின் மொத்த எண்ணிக்கை 32,789 ஆகும். 1970-71-ஆம் ஆண்டு திட்டக் குறிக்கோள் அளவு எல்லா மட்டங்களிலும் 50,000-ஆக இருக்க, அந்த ஆண்டில் பதிவு செய்யப்பட்ட போட்டியாளர்களின் மொத்த எண்ணிக்கை 55,456 ஆகும்.

### இந்திய-ஜெர்மனி, நீலகிரி மேம்பாட்டுத் திட்டம் (மலைப் பகுதிகள் மேம்பாடு).

உழவர்களுக்குப் பயிரிடு பொருள்களை வழங்குதல், கடன் கொடுத்தல் ஆகிய உற்பத்திக்குத் தேவையான எல்லாப் பொருள்களுக்கும் ஒரே நேரத்தில் வகை செய்வதன் மூலமும் மேம்படுத்தப்பட்ட நடைமுறைகளைச் செயல்படுத்துவதில் உழவர்களுக்கு உதவுவதன் மூலமும், நீலகிரி மாவட்டத்தில் வேளாண்மை உற்பத்தியை விரைந்து பெருக்குவதே இத் திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். இத் திட்டத்தில் அடங்கிய முக்கியப் பணிகள் பின்வருமாறு :—

(1) தொழில் நுட்ப ஆலோசனையை உரிய நேரத்தில் போதிய அளவில் அளித்தல்.

(2) பண்ணைத் திட்டங்களின் அடிப்படையில் உரிய காலத்திலும், போதுமான அளவிலும், கடன் அளித்தல்.

(3) பொறுக்கு விதைகள், உரங்கள், பயிர்ப் பாதுகாப்புச் சாதனங்கள், கருவிகள் ஆகியவற்றை உற்பத்தி செய்து போதுமான அளவிற்கு வழங்குதல்.

(4) உற்பத்தியாளர்களுக்கும், நுய்ப்போர்களுக்கும் நியாய விலை கிடைப்பதற்கேற்ற வகையில், உபரி வேளாண்மைப் பொருள்களின் விற்பனை வசதியை மேம்படுத்துதல்.

(5) மேம்படுத்தப்பட்ட, பயன் தருமான மெய்ப்பிக்கப்பட்ட வேளாண்மை நடைமுறைகளை உழவர்களுக்கு கட்புல விளக்கத் திட்டம் ஒன்றின்மூலம் எடுத்துச் சொல்லுதல்.

கடந்த மூன்றாண்டுகளில், உழவர்களுடன் வெற்றிகரமான விரிவாக்கத் திட்டம் ஒன்றை மேற்கொள்ளுவதற்கு உறுதியான அடிப்படையை ஏற்படுத்துவதிலும் தேவையான வசதிகளைச்

செய்வதிலும் முக்கியமாக நாட்டம் செலுத்தப்பட்டது. எனவே, இத் திட்டத்திற்கு குறிக்கோள் அளவு ஏதும் வரையறுக்கப்பட வில்லை. தற்போது நடந்தேறிவரும் சோதனைகளின் திட்ட வட்டமான முடிவுகள் பெறப்பட்ட பின்னரே இது மேற்கொள்ளப்பட வேண்டும்.

1970-71-ஆம் ஆண்டில் மொத்தம் ரூ. 50.50 லட்சம் செலவழிக்கப் பட்டது. 1971-72-ஆம் ஆண்டில் செலவழிக்கத் திட்டமிட்டுள்ள குறிக்கோள் அளவு ரூ. 45.58 லட்சமாகும். 1971-72-ஆம் ஆண்டிற் கான வேலைத் திட்டங்கள் பின்வருமாறு :—

(1) உழவர்களுக்குச் செய்தியைப் பரப்புவதற்கு முன்னர், திட்டவட்டமாக முடிவுகளைப் பெறுவதற்குத் தேவையான சோதனைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படும்.

(2) பொன் நிறப் புழுக்களால் ஏற்படும் நோய் (Golden Nematode) ஒழிப்புத் திட்டத்தை 1970-71-ஆம் ஆண்டு ஏற்பட்ட விளைவுகளின் அடிப்படையில் தொடர்ந்து மேற்கொள்ளுதல்.

(3) நல வளர்ச்சித் திட்டத்தில் 400 உழவர்களுக்கு பயிற்சி யளித்தல்.

(4) திட்டத்தின் சாதனைகளை உழவர்களுக்கு எடுத்துக் கூறவும், வேளாண்மை குறித்த கருத்துக்களையும், பிரச்சினை களையும் பரிமாறிக்கொள்வதற்காகவும், 500 உழவர்களைக் கொண்டு வளர்ச்சி வட்டார அளவிலான கருத்தரங்கு நடத்துதல்.

(5) தாமஸ் பாஸ்பேட் கலவையுடன் (Thomas Phosphate Mixture) கட்புல விளக்கங்களை நடத்துதல்.

(6) இயக்க வகையில் செய்து காட்டுவதற்காக விசைத் தெளிப்பான்களை வாங்குதல், இந்த விசைத் தெளிப்பான்களைக் கையாளுவதில் 400 தேர்ச்சியுள்ள தொழிலாளர்களுக்கு பயிற்சி யளித்தல்.

(7) நீலகிரி உழவர்களின் உற்பத்திப் பொருள்களைச் சேமித்து வைப்பதற்கும், விற்பனை செய்வதற்கும் தகுந்த இடங்களில் இரண்டு குளிர் அறைகளை நிறுவுதல்.

(8) திட்டத்தின் செயல் நடவடிக்கைகளில் கால்நடை வளர்ப்பு மேம்பாட்டுத் திட்டங்களைக் கொண்டுவருதல்.

(9) திட்டத்தின் செயல் நடவடிக்கைகளில் கூட்டுறவு வளர்ச் சித்திட்டங்களைக் கொண்டுவருதல்.

### மலைப் பகுதிகளில் தோட்டங்கள் வளர்த்தல்.

இம் மாநிலத்தில் மலைப் பகுதிகளின் மேம்பாட்டிற்குரிய திட்ட மொன்றை மேற்கொள்ள அரசு கருதியுள்ளது. மலைப் பகுதிகளில் வசிப்பவர்களின் நலன்களையும், மலைவாழ் மக்களின் நிலைமைகளைச் சீர்படுத்துவதற்கும் தோட்டப் பயிர்களைப் பயிரிடுவதன் மூலம் மலைப் பகுதிகளின் ஒருங்கிணைந்த மேம்பாட்டை எய்துவதே இத் திட்டத்தின் குறிக்கோளாகும். முதலில் கீழ் பழனி, கொல்லி



மலைகள், ஜவ்வாது மலைகள், நீலகிரி ஆகிய தெரிந்தெடுக்கப்பட்ட நான்கு பகுதிகளில் 1971-72-ஆம் ஆண்டில் இத் திட்டப் பணியை மேற்கொள்ளக் கருதப்பட்டுள்ளது.

### சிறு உழவர்கள் மேம்பாட்டு நிறுவனம்.

வேளாண்மை சமுதாயத்தினரிடையே உள்ள சிறு உழவர் களுக்கு உதவி செய்வதற்காக இந்திய அரசின் கருத்தையொட்டி தென் ஆர்க்காடு, மதுரை, திருநெல்வேலி, ஆகிய மாவட்டங்களில் உள்ள சிறு குடியானவர்களின் மேம்பாட்டிற்காக தமிழ்நாடு அரசு சிறப்புத் திட்டங்களை வகுத்துள்ளது. இந்த மாவட்டங்களின் சில வளர்ச்சி வட்டாரங்களில் இத் திட்டம் 1970–71-ல் செயல்படுத்தப் பட்டது. இத் திட்டம் 1971-72-ல் கீழே கொடுக்கப்பட்டுள்ள வளர்ச்சி வட்டாரங்களுக்கும் நீடிக்கப்படும்.

| | | 1970-71 வளர்ச்சி வட்டாரங்கள். | 1971-72 வளர்ச்சி வட்டாரங்கள். |
|---|---|---|---|
| (1) | தென்ஆர்க்காடு .. .. | 6 | 6 |
| (2) | மதுரை .. .. | 9 | 9 |
| (3) | திருநெல்வேலி .. .. | 5 | 6 |

இத் திட்டத்தின் கீழ் உதவி பெறுவதற்குத் தகுதியுடையவராக சிறு உழவர் ஒருவர் 2 அல்லது 3 ஏக்கர் நன்செய் நிலம் அல்லது 5 ஏக்கர் புன்செய் நிலம் வைத்திருக்கவேண்டும்.

சிறு உழவர்கள் மேம்பாட்டு நிறுவனம் என்பது, சங்கங்கள் பதிவு சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட ஒரு சங்கமாயிருக்கும். மாவட்ட ஆட்சித் தலைவர் இந்த சிறு உழவர்கள் மேம்பாட்டு நிறு வனத்தின் தலைவராயிருப்பார். சிறு உழவர்கள் மேம்பாட்டு நிறு வனம் ஒவ்வொன்றும் இந்த மாவட்டங்கள் ஒவ்வொன்றிலும் சுமார் 50,000 உழவர்கள் அடங்கும் வரையில் 1970-71-ஆம் ஆண்டி லிருந்து 1973–74-ஆம் ஆண்டுவரை நான்கு ஆண்டு கால அளவிற்கு ரூ. 1.6 கோடி மத்திய உதவியைப் பெறும். இத்தத் திட்டங்கள், சமுதாயக் கிணறுகள், பாசனக் கிணறுகள், கிணறுகளை ஆழப் படுத்துதல், விசையேற்றங்கள் அமைத்தல், நிலத்தைப் பண் படுத்துதல், கோழிப் பண்ணை மேம்பாடு, பால் பண்ணை மேம்பாடு ஆகியவற்றிற்காக உதவித் தொகைகளுக்கு வகை செய்வதன் மூலம், வேளாண்மைச் சமுதாயத்தில் எளிய பிரிவினர்களுக்கு இத் திட்டம் உதவி செய்யும். குறுகிய காலக் கடன் வழங்கும் அளவை அதிகரிக்க, வேளாண்மைக் கடனுதவிச் சங்கங்களின் உறுப்பினர் களாயிருக்கப் பங்கு மூலதனம் அளிக்கவேண்டுமென திட்டமிடப் பட்டுள்ளது. போக்கு வரத்துக்களை மேம்பாடு செய்வதற்காக ரோமச் சாலைகள் அமைத்தல், இரண்டு விற்பனைச் சங்கங்களின் வரம்பிற்குட்பட்ட இடங்களில் கிடங்குகளைக் கட்டி விற்பனை வசதியை மேம்படுத்தல், வேளாண்மைக் கடனுதவிச் சங்கங்கள் உழவர்கள் ஒத்துழைப்பை நல்கச் செய்வதற்காக உறுப்பினர்

கல்வித் திட்டம், சிறு கைவினைஞர் திட்டங்கள், வேளாண்மை இயந்திரங்களை வாடகைக்குக் கொடுத்தல், குடிமராமத்துப் பணிகள், ஆகியவை இத் திட்டத்தில் அடங்கும். மூலதன இனங்கள், நில மேம்பாட்டுப் பணிகள் தொடர்பாக சிறு உழவர்கள் மேம்பாட்டு நிறுவன நிதியிலிருந்து 25 சத வித மூலதன உதவித் தொகை வழங்கப்படுகிறது. எதிர்பாராச் செலவுகளைச் சமாளிப்பதற்காக, தொடக்க வங்கிகளுக்கு 6 சத வீதமும், மத்திய வங்கிக்கு 3 சத வீதமும் இழப்புப் பொறுப்பு நிதி பங்குத் தொகை அளிக்க இந்த நிறுவனத்தால் வகை செய்யப்பட்டுள்ளது. ரூ. 1.6 கோடி என்ற வரையறுக்கப்பட்ட மூலதனத்துடன் இந்தச் சிறு உழவர்கள் மேம்பாட்டு நிறுவனம் ரூ. 20 கோடி கடனுதவியை அதன் தொடர் விளைவுகளுடன் அளிக்கும்.

**குறைந்த அளவில் நிலம் வைத்துள்ள சிறு உழவர்களுக்கும் வேளாண்மைத் தொழிலாளர்களுக்கும் உரிய மேம்பாட்டுத் திட்டம்.**

சிறு நிலமுள்ள உழவர்களுக்கு நல்ல வருமானத்தையும் கிராம வேலை வாய்ப்பையும் அளிக்கும் இரண்டு நோக்கங்களுடன் சிறு நிலமுள்ள உழவர்களுக்குச் சொல்லப்பட்டுள்ள செயல்நோக்க மூன்று, உற்பத்தித் திறன் வாய்ந்த, வருவாய் கிடைக்கச் செய்யும் திட்டங்களின் மூலம் மிகக் குறைந்த அளவு நிலங்களைக் கொண்டுள்ள குடியானவர்கள், குறைந்த நிலமுள்ள குடியானவர்கள், வேளாண்மைத் தொழிலாளர்கள் ஆகியோருக்கு உதவி செய்வதற்காக வகுக்கப்பட்டுள்ள இரண்டு திட்டங்களைச் சேலம் மாவட்டத்தில் ஒன்றும் வட ஆர்க்காடு மாவட்டத்தில் ஒன்றும், ஆகச் செயல்படுத்திப் பார்க்க இந்திய அரசு முன்வந்துள்ளது. இந்த சிறப்புத் திட்டங்கள் மத்திய அரசிடமிருந்து முழு நிதி யுதவியுடன் கூடிய மத்தியத் திட்டமாக இருக்கும். குறைந்த நில முள்ள உழவர்களின் தங்களிடமுள்ள குறைந்த நிலங்களில் மும்முரப் பயிர் விளைவு, கால்நடை வளர்ப்பு முதலியவை மூலம் பெருமளவிற்கு உற்பத்தியைப் பெருக்க உதவி செய்வதும், அவர் களுக்குத் தேவைப்படும் பயிரிடு பொருள்கள் அனைத்தையும் கிடைக்க வகை செய்து மேம்படுத்தப்பட்ட முறைகளைப் பின்பற்று வதன் மூலம் உற்பத்தியைப் பெருக்க உதவி செய்வதும், வேலை வாய்ப்பைப் பெருமளவிற்கு ஏற்படுத்துவதும் இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். மிகக் குறைந்த நிலமுள்ள குடியானவர் கள் இந்த உதவி பெறத் தகுதி பெறுவதற்கு, ஒரு ஏக்கருக்கும் மேற்படாத நன்செய் நிலம் அல்லது இரண்டு ஏக்கருக்கும் மேற் படாத புன்செய் நிலம் வைத்திருப்பவர்களாய் இருக்க வேண்டும். இதைப் போலவே, குறைந்த நிலமுள்ள உழவரும் 1 முதல் 2.5 ஏக்கர் நன்செய் நிலம் அல்லது 2 முதல் 5 ஏக்கர் வரை புன்செய் நிலம் வைத்திருக்க வேண்டும். இத்திட்டத்தைச் செயல்படுத்துவது மாவட்ட ஆட்சித் தலைவரைத் தலைவராகக் கொண்டு அமைக்கப் பட்ட சிறு நிலமுள்ள உழவர்கள்—பண்ணைத் தொழிலாளர்கள் மேம்பாட்டு நிறுவனத்தின் பொறுப்பாகும்.



தொடக்கத்தில், இத் திட்டம் சேலம் மாவட்டத்தில் வல்லப் பாடி, பெத்தநாயக்கன்பாளையம் ஆகிய இரண்டு வளர்ச்சி வட்டா ரங்களிலும், வட ஆர்க்காடு மாவட்டத்தில் செங்கம், புதுப் பாளையம் ஆகிய 2 வளர்ச்சி வட்டாரங்களிலும் மட்டுமே செயற் படுத்தப்படும். திட்டக் காலத்தில் ஒவ்வொரு மாவட்டத்திலும், சுமார் 20,000 குடும்பம் இதன்கீழ் வரும். ஒவ்வொரு திட்டத்திற்கும் ரூ. 1.00 கோடி நிதி ஒதுக்கீடு இருக்கும்.

சிறு நிலமுள்ள குடியானவர்கள் மேம்பாட்டு நிறுவனம், குறைந்த நிலமுள்ள உழவர்கள்--பண்ணைத் தொழிலாளர்கள் மேம்பாட்டு நிறுவனம் ஆகிய சிறப்புத் திட்டங்களைச் சீர்தூக்கிப் பார்க்கவும், ஒருங்கிணைக்கவும் முதலமைச்சரைத் தலைவராகவும், வேளாண்மை அமைச்சரை துணைத் தலைவராகவும் கொண்ட உயர் நிலைக்குழு ஒன்று மாநில நிலையில் அமைக்கப்பட்டுள்ளது.

**ஒருங்கிணைந்த புன்செய் நில மேம்பாட்டுத் திட்டம்.**

புன்செய் நிலம் பயிரிடுபவர்களால் மேம்படுத்தப்பட்ட வேளாண்மை நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் போதுமான பயிர்ப் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் அவர் களுக்கு உதவி செய்யும் நோக்கத்துடனும் இந்திய அரசின், மத்திய அரசு ஆதரவு பெறும் திட்டங்களின்கீழ் புன்செய் நிலம் மும்முரப் பயிரிடு திட்டம் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. முதலாவது ஆண்டிற்கு ரூ. 14.05 லட்சம் நிதி ஒதுக்கீட்டுடனும் 1971-72-ல் ரூ. 22.30 லட்சத்துடனும் நான்காவது ஐந்தாண்டுத் திட்டக் காலத் தில் இத்திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக திருநெல்வேலி மாவட்டத்தில் கோயில்பட்டி வட்டம் தெரிந்தெடுக்கப்பட்டுள்ளது. கோயில்பட்டி வட்டத்தில் 4 கிராமங்களில் அதாவது திட்டகுளம், சிதம்பரபுரம், இல்லம்புவனம், விஜயாபுரி கிராமங்களில் 2,000 ஏக்கர் களில் இத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 1973–74-ஆம் ஆண்டிற்குள் அதாவது நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தின் இறுதிக்குள் படிப்படியாக நிறைவேற்றும் திட்டத்தின்கீழ் 8,000 ஏக்கர் பரப்பளவில் இத் திட்டம் நீட்டிக்கப்படும். இத் திட்டத்தின் முக்கிய நோக்கங்கள் பின்வருமாறு :—

(a) சிறப்பாகத் தெரிந்தெடுக்கப்பட்ட இடங்களில் புன்செய் பயிர் விளைவித்தல் பற்றிய ஆராய்ச்சியை மேற்கொள்ளுதல்.

(b) மண் வளம் குறித்தும், ஈரம் குறித்தும் செய்த ஆராய்ச்சியின் முடிவுகளை நடைமுறையில் பயன்படுத்தல்.

(c) வறட்சியை எதிர்த்து நிற்கும் பயிர்களையும் குறுகிய காலப் பயிர்களையும் பயிரிடுதல்.

(d) யூரியாவைப் பரவலாகத் தெளித்தல் போன்ற உரமிடும் புதிய தொழில் நுட்ப உத்திகளைப் பயன்படுத்துதல்.

(e) பயிர் பாதுகாப்பு நடவடிக்கைகளை உரிய நேரத்தில் பயன்படுத்துதல்.

[28th July 1971

தொழில் நுட்ப உத்திகளும், பயிரிடு தேவைப் பொருள்களும் குறைந்த செலவில் கிடைக்க வகை செய்யப்படும். விசைத் தெளிப்பான் போன்ற விலையுயர்ந்த இயந்திரங்களை மத்தியக் கிடங்குகளில் வைத்துக்கொண்டு உழவர்களுக்குக் குறைந்த கட்டணத்துக்கு வாடகைக்கு விடப்படும். இதில் பங்கு கொள்பவர்களின் நிலங்களைக் குறிப்பிட்ட காலத்திற்கு ஒரு முறை ஆய்வு செய்யப்படும். கணிசமான அளவிற்கு உற்பத்தித் திறனை மேம்படுத்தும் நோக்கத்துடன் பயிர்ப் பாதுகாப்பு நடவடிக்கைகள் நிலம் பண்படுத்துதல், நீர்வளத்தைச் சிக்கனமாகப் பயன்படுத்தல் ஆகியவை மும்முரமாக மேற்கொள்ளப்படும்.

இத் திட்டம் திட்ட அதிகாரி என்னும் முறையில் வேளாண்மைத் துறைத் துணை இயக்குநரால் செயல்படுத்தப்படுகிறது.

மாவட்ட ஆட்சித் தலைவரைத் தலைவராகக் கொண்டு மாவட்ட அளவில் ஓர் இணக்கக் குழுவும், வேளாண்மைத் துறை அரசுச் செயலாளரைத் தலைவராகக் கொண்டு மாநில அளவில் ஓர் இணக்கக் குழுவும், இத் திட்டம், செயல்படுவதை ஆய்வு செய்வதற்காக அமைக்கப்பட்டுள்ளது.

செம்மண் நிலப்பகுதியின் பயனுக்காக, திருச்சிராப்பள்ளி மாவட்டம் புதுக்கோட்டை வட்டத்தில் நடப்பாண்டில் புன்செய் நில ஒருங்கிணைந்த மேம்பாட்டுத் திட்டம், ஒன்றை மேற்கொண்டு எடுத்துக் கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது. ரூ. 19.89 லட்சம் மொத்தச் செலவில் 1971-72-ல் 2.000 ஏக்கர் நிலத்தில் இத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக இந்திய அரசு நிர்வாக ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. நீண்டகாலக் கடன் குறித்து ரூ. 11.57 லட்சமும், உதவித் தொகை குறித்து ரூ. 3.32 லட்சமும், இதில் சேர்ந்ததாகும். இத்திட்டத்தை உடனடியாகச் செயல்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

**வணிகப் பயிர்கள் மூன்றாம் திட்டம் உட்பட பருத்தி வளர்ச்சி.**

பருத்தி ஒரு முக்கியமான வணிகப் பயிராகும். இது, தமிழ் நாட்டில் சுமார் 10.00 லட்சம் ஏக்கரில் பயிர் செய்யப்படுகிறது. வறட்சி நிலைமைகள் காரணமாக, 1968-69-ல் இந்தப் பரப்பளவு 7.00 லட்சம் ஏக்கர்களாகவும், 1969-70-ல் 8.63 லட்சம் ஏக்கர்களாகவும் குறைந்தது. (i) தரமான விதைகளைப் பெருக்குதல், பங்கிட்டளித்தல், (ii) மூன்றாம் திட்டங்களை மேற்கொள்ளுதல், (iii) மும்முரப் பயிர்ப்பாதுகாப்பு நடவடிக்கைகள் ஆகியவை மூலம் மூன்றாம் திட்டம் உட்பட பருத்தி உற்பத்தியை அதிகரிப்பதே ஒருங்கிணைக்கப்பட்ட பருத்தி வளர்ச்சித் திட்டத்தின் நோக்கமாகும்.

1971-72-ஆம் ஆண்டில், மேலும் 30,000 ஏக்கர் பரப்பளவு இத் திட்டத்தின்கீழ் கொண்டுவரப்படும். 1969-70-ல் 180 கிலோகிராம் கொண்ட 3.97 லட்சம் பருத்தி பேல்கள் உற்பத்தி செய்யப்பட்டதாக மதிப்பிடப்பட்டது. 1970-71-ஆம் ஆண்டில் 4.90 லட்சம்



28th July 1971]

பேல்கள் உற்பத்தி செய்ய வேண்டும் என்று குறிக்கோள் அளவு நிச்சயிக்கப்பட்டுள்ளது. 1971-72-ஆம் ஆண்டில் 5.10 லட்சம் பேல்கள் உற்பத்தி செய்யப்பட வேண்டும் என்று திட்டமிடப்பட்டிருக்கிறது.

திட்டத்துறையின்கீழ் 1969-70-ல் ஏற்பட்ட நிகரச் செலவு ரூ. 6.03 லட்சமாகும். 1970-71-ஆம் ஆண்டிற்காக எதிர்பார்க்கப்பட்ட செலவு ரூ. 9.85 லட்சம் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. 1971-72-ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் மொத்தச் செலவாக ரூ. 23.87 லட்சமும் நிகரச் செலவாக ரூ. 8.47 லட்சமும் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

நவீன சாகுபடி முறைகளை உழவர்களுக்குத் தெள்ளென விளக்குவதற்காக, உழவர்களுடைய நிலங்களில் கட்புல விளக்க நிலத் துண்டுகள் அமைக்கப்பட்டன. விதைகள், இரசாயன உரங்கள், பயிர்ப்பாதுகாப்பு இரசாயனங்கள், தொழிலாளர்களுக்கான செலவு, காட்சிப் பலகைகள் ஆகியவை குறித்து, 5 ஏக்கர் கொண்ட ஒவ்வொரு நிலத் துண்டுக்கும் ரூ. 560 கொண்ட ஒரு தொகையை அரசு கொடுக்கிறது. மாநிலவாரிப் பயிர்களுக்கு நைட்ரஜன் உரங்களைப் பயன்படுத்துவதை விளம்பரப்படுத்துவதற்கு, உழவர்களுடைய நிலங்களில் ஒவ்வொரு நிலத்துண்டுகளும் 3 ஏக்கர் கொண்டதாகவுள்ள கட்புல விளக்க நிலத்துண்டுகள் அமைக்கப்பட்டன. இரசாயன உரங்கள், காட்சிப் பலகைகள் ஆகியவை குறித்து ஒவ்வொரு நிலத் துண்டுக்கும் ஆகும் செலவில் ரூ. 50-ஐ அரசு கொடுக்கிறது.

மூன்றாம் திட்டப் பகுதிகளில், பருத்தி விளைவிப்போர் கூட்டுறவுக் கடன் வசதியைப் பெறுகின்றனர். 1969-70-ல் பெற்ற கடன் ரூ. 59.47 லட்சம் ஆகும். 1971-72-ஆம் ஆண்டுக்கான குறிக்கோள் அளவு ரூ. 100.00 லட்சமாகும்.

**மும்முர வேளாண்மை மாவட்டத் திட்டம் (பருத்தி).**

ஆண்டு ஒன்றுக்கு 11.00 லட்சம் பேல்கள் தேவையாயிருக்க, தற்பொழுது தமிழ்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் பருத்தியின் அளவு சுமார் 4.00 லட்சம் பேல்களேயாகும். இதனால் ஆண்டு தோறும் 7.00 லட்சம் பேல்கள் இறக்குமதி செய்யப்படத் தேவையாக இருக்கிறது. பருத்தி உற்பத்தியில் விரைவான, குறிப்பிடத்தக்க மாற்றம் ஏற்பட வேண்டியது கட்டாயமாகும்.

உழவர்கள் வயல்களில் செய்யப்பட்ட பெருவாரியான சோதனைகளும், கட்புல விளக்கங்களும், தற்பொழுது கிடைப்பதைவிட அதிகப் பருத்தியை விளைவிக்க முடியும் என்பதை மெய்ப்பித்துள்ளன. கோயம்புத்தூர் மாவட்டத்தில் MCU. 5, சுஜாதா பருத்தி ரகங்களைக் கொண்டு ஹெக்டேர் ஒன்றிற்கு 30 முதல் 35 குவிண்டால்கள் வரை கப்பாஸ் பருத்தி விளைந்துள்ளதாகக் கட்புல விளக்கம் மூலம் தெரிய வந்துள்ளது.

[28th July 1971

இருக்கின்ற வளத்தை முழுவதும் பயன்படுத்திக் கொள்வதற்காக, பருத்தி உற்பத்தி குறித்த முயற்சிகளை மும்முரப் படுத்துவதற்குப் புதிய முறை ஒன்று மும்முர வேளாண்மை மாவட்டத் திட்ட முறைப்படி தற்போது மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. பாசன வசதியுள்ள பகுதிகளிலும், உறுதியாக மழை வளம் பெறும் பகுதிகளிலும் இப்பணி மேற்கொள்ளப்படும். கோயம்புத்தூர் மாவட்டத்தில், பருத்தி விளைச்சலின்கீழ் வரும் பரப்பளவு முழுவதும் இந்தத் திட்டத்தின் கீழ்ப் படிப்படியாகக் கொண்டு வரப்படும். தவிர, 3,00,000 ஏக்கரில் இராமநாதபுரம், திருநெல்வேலி, திருச்சி, ஆகிய மாவட்டங்களில் பருத்தி முனைப்புத் திட்டத்தைச் செயல்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

இத்திட்டத்தைத் திறம்படச் செயல்படுத்துவதற்கு, தெரிந் தெடுக்கப்பட்ட மாவட்டம், 20,000 ஹெக்டர் கொண்ட பிரிவுகளாகப் பிரிக்கப்படும். ஒவ்வொரு பிரிவும் வகுப்பு I அதிகாரியின் பொறுப்பில் கொண்டுவரப்படும். விளைச்சலைப் பெருக்குவதற்காக யூரியா உரத்தை விரிவாகப் பயன்படுத்துதல், பூச்சிக்கொல்லி மருந்துகளை விரிவாகத் தெளித்தல் போன்ற நவீன முறைகள் உள்ளிட்ட முனைப்பு முறைகளைப் பின்பற்றி பருத்தி விளைச்சல் பெருக்கப்படும்.

பருத்தி பயிரிடுவதற்குக் குறிப்பிட்ட ஊக்கம் அளிப்பதற்கு, பயிர்ப் பாதுகாப்பு, யூரியா தெளிப்பு ஆகியவற்றுக்கென, பாசனப் பருத்திக்கு 25 சதவீத உதவித் தொகையும், மானாவாரிப் பருத்திக்கு 50 சதவீத உதவித் தொகையும் வழங்கப்படுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

திறமையான பயிர்ப் பாதுகாப்புப் பணியைச் செயல்படுத்துவதற்கு, ஒவ்வொரு 10,000 ஹெக்டர்களுக்கும் ஒரு பயிர்ப்பாதுகாப்புப் பிரிவு வீதம் பயிர்ப் பாதுகாப்புப் பிரிவுகளை ஏற்படுத்துவதற்கும் திட்டமிடப்பட்டிருக்கிறது. பருத்திப் பயிர்களில் விரிவாக விமானத்தின் மூலம் மருந்து தெளிப்பது, பருத்தி விளைச்சல் குறித்த செலவைச் சிக்கனப்படுத்துவதற்கு களைக்கொல்லிகளைப் பயன்படுத்துவது ஆகியவை இத் திட்டத்தின் புதிய கூறுகளாகும்.

### எண்ணெய் வித்துக்கள் மேம்பாடு.

எண்ணெய் வித்துக்கள் குறித்த ஒருங்கிணைக்கப்பட்ட மேம்பாட்டுத் திட்டம் 1961–62-ம் ஆண்டிலிருந்து செயல்படுத்தப் பட்டு வருகிறது. அரசு நிலங்கள் அல்லது குத்தகைக்கு எடுத்த நிலங்கள் ஆகியவற்றில் 700 ஏக்கர் கொண்ட பகுதிகளில் 14 நிலையங்களில் மண்டலப் பண்ணைகளை அமைப்பதன் மூலம், ஒவ்வொரு ஆண்டும் பத்தில் ஒரு பகுதிகளுக்கு (சுமார் 2.00 லட்சம் ஏக்கர்) தரப்படுத்தப்பட்ட வேர்க்கடலை விதைகளை வழங்குவதன் மூலம் வேர்க்கடலை பயிரிடுவது இத்திட்டத்தின் முக்கியக் கூறுகும். முதல்நிலை விதைப்பண்ணை 2,500 ஏக்கரிலும், இரண்டாவது நிலை விதைப்பண்ணை 4,500 ஏக்கரிலும், மூன்றாவது நிலை விதைப்



28th July 1971]

பண்ணை 10,000 ஏக்கரிலும் நிறுவப்பட்டன. விதைப் பெருக்கத்தின் கடைசி மூன்று நிலைகள் உழவர்களுடைய நிலங்களில் நிறைவேற்றப்பட்டன.

மூன்றாம் நிலை விதைகளைப் பல்மடங்காக்கும் பணி முடிவில் 40 கூட்டுறவுச் சங்கங்களிடம் ஒப்படைக்கப்படும். படிப்படியான திட்டத்தை பின்பற்றி ஒவ்வொரு சங்கமும் 1,000 ஏக்கரில் மூன்றாம் நிலை விதைகளைப் பெருக்குவர். இதுவரையில் 19 கூட்டுறவுச் சங்கங்கள் இப்பணியை மேற்கொண்டுள்ளன.

**வேர்க்கடலை :** 1969–70-ம் ஆண்டில் தமிழ்நாட்டில், வேர்க்கடலை பயிரிடப்படும் பரப்பளவு 24,37,560 ஏக்கர் என்று மதிப்பிடப் படுகிறது. அதன் மூலம் கிடைக்கப்பெறும் தோல் நீக்கப் பெறுத கடலை 9,10,210 டன்களாக இருக்கும் என்று மதிப்பிடப் பட்டுள்ளது.

**எள் :** 1969–70-ல், தமிழ்நாட்டில், 3,91,830 ஏக்கரில் எள் விதைக்கப்பட்டது. மொத்த விளைச்சல் 97,170 டன் என்று மதிப்பிடப்படுகிறது.

**ஆமணக்கு :** 1969–70-ல், தமிழ்நாட்டில், ஆமணக்கு விதைக்கப் பட்ட பரப்பளவு 21,320 ஏக்கர் என்று மதிப்பிடப்படுகிறது. மொத்த உற்பத்தி 3,700 டன் என்று மதிப்பிடப்படுகிறது.

1968–69-ம் ஆண்டுக்கான இலக்கு 10.00 லட்சம் டன் எண்ணெய் வித்துக்கள் என்று வரையறுக்கப்பட்டுள்ளது. 1970–71-ல் மேலும் 1.25 லட்சம் டன் எண்ணெய் வித்துக்களைப் பெற முடியும் என்றும், 1971–72-ல் 1.98 லட்சம் டன் எண்ணெய் வித்துக்களைப் பெற முடியும் என்றும் மதிப்பிடப்பட்டிருக்கிறது. நான்காவது திட்டக் காலத்தின் இறுதியில் 13.00 லட்சம் டன் எண்ணெய் வித்துக்களை உற்பத்தி செய்யத் திட்டமிடப்பட்டிருக்கிறது. 1970-71-ல் 26.79 லட்சம் ஏக்கரிலும், 1971-72-ல் 26.96 லட்சம் ஏக்கரிலும் பயிரிடத் திட்டமிடப்பட்டுள்ளது.

1970-71-ல் கோபிசெட்டிப்பாளையம், பொள்ளாச்சி, கோயம்புத்தூர், திருமங்கலம், அருப்புக்கோட்டை, பட்டுக்கோட்டை, முசிறி, கும்பம் ஆகிய ஊர்களில். வேர்க்கடலை முனைப்புத் திட்டத்தின் கீழ் 8 பிரிவுகள் இப்போது செயல்பட்டு வருகின்றன. 1970-71-ல் 3.05 லட்சம் ஏக்கர் பரப்பளவில் இது பயிரிடப்படும். 50 சென்ட் கொண்ட ஒவ்வொரு தொண்டு நிலத்திற்கும் ரூ. 50 என்ற விதத்தில் 240 கட்புல விளக்கங்களுக்கு ஏற்பாடு செய்யப்படும்.

**முந்திரி பயிரிடுவதற்கான முனைப்புத் திட்டம் :** இருவகைப் பணிகளுடன் கூடிய முந்திரி முனைப்புத் திட்டம் ஒன்று நிதிய அரசால் வகுக்கப்பட்டது. அவையாவன : (i) முந்திரி பயிர்ப் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கான திட்டம், (ii) முந்திரி முளைக் கட்புல விளக்க நிலத்தொண்டுகளை அமைத்தல், ஆகியனவாகும்

இத் திட்டங்களுக்கு, அரசு 1970-ம் ஆண்டு ஜூலை, ஆகஸ்ட் திங்களில் ஒப்பளிப்பு வழங்கப்பட்டது. 100 சதவித மத்திய உதவியோடு 1—9—1970-லிருந்து இத் திட்டம் செயல்படுத்தப்பட்டது.

பயிர்ப் பாதுகாப்பு நடவடிக்கைகளின்கீழ், 1970-71-ல், தென் ஆர்க்காடு மாவட்டத்தில் 3,000 ஏக்கரிலும், திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் 2,916 ஏக்கரிலும் பயிரிடுவதே இத் திட்டத்தின் நோக்கமாகும். வேளாண்மைத் துறையின் தொழில் நுட்ப உதவியோடு, இரசாயன மருந்துகளைத் தெளிப்பது நடைபெறுகிறது. இரண்டு முறை இரசாயன மருந்துகளைத் தெளிப்பதற்கான செலவு ரூ. 25 ஆகும். இதனை இந்திய அரசு உதவித் தொகையாக வழங்கிவருகிறது.

கட்புல விளக்க நிலங்களை அமைப்பதைப் பொறுத்த வரையில், தென் ஆர்க்காடு, திருச்சி, செங்கல்பட்டு, தஞ்சாவூர், இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் 310 கட்புல விளக்க நிலங்களை அமைப்பது என்று திட்டமிடப்பட்டிருக்கிறது. பயிர் விளைவிப்பவர் பயிர்ப் பாதுகாப்பு முறையை செயல்படுத்தும் திறனை கட்புல விளக்க நிலங்கள் (2 ஏக்கர்) விளக்கும். ஒவ்வொரு நிலத் துண்டுக்கும், உரமிடுவது, பயிர்ப் பாதுகாப்பு ஆகியவற்றிற்கு ரூ. 300 உதவித் தொகை இந்திய அரசால் வழங்கப்பட்டுவருகிறது.

பம்பாய், வேளாண்மை மறுநிதிக் கழகத்திலிருந்து உதவித் தொகை பெறுவதன் மூலம் நிறைவேற்றப்படும் முந்திரி வளர்ப்புத் திட்டம்.—ஒவ்வொரு ஏக்கருக்கும், பம்பாய் வேளாண்மை மறுநிதிக் கழகத்திடமிருந்து ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 400 கடன் உதவி பெறுவதோடு, முந்திரி வளர்ப்பு குறித்த செயற் குறிப்புகள் அரசின் பரிசீலனையில் உள்ளன. ஒவ்வொரு ஆண்டிலும் 14,000 ஏக்கர் வீதம், 5 ஆண்டுக் கால அளவில் தென்னாற்காடு, திருச்சி, இராமநாதபுரம், திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் 70,000 ஏக்கர் பரப்பளவில் முந்திரி பயிரிடுவதே இத் திட்டத்தின் நோக்கமாகும்.

### திருநெல்வேலி மாவட்டத்தில் முந்திரி, தென்னை வளர்ப்பு.

1966-ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 24-ம் நாளிலிருந்து முந்திரி, தென்னை ஆகியவற்றை வளர்ப்பதற்கான ஒருங்கிணைத்த திட்டம் ஒன்று திருநெல்வேலி மாவட்டத்தில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத் திட்டத்தின் கீழ், தனிப்பட்ட ஒவ்வொருவருக்கும் அதிக அளவு ரூ. 3,500 கடன் வழங்கப்படும் என்கிற வரம்பிற்குட்பட்டு தென்னைக்காக, ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 370-ம், முந்திரிக்கு, ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 150-ம் நீண்டகாலக் கடன்கள் வழங்குவதன் மூலம் கூடுதலான பரப்பளவில் இவற்றைப் பயிரிடத் திட்டமிடப்பட்டிருக்கிறது. 1969-70-ல் 807 ஏக்கரில் தென்னையும், 1,003 ஏக்கரில் முந்திரியும் பயிர் செய்யப்பட்டன. 1970—71-ல் 1,000 ஏக்கரில் முந்திரியும். 750 ஏக்கரில் தென்னையும் பயிரிடத் திட்டமிடப்பட்டிருக்கிறது. இதே போன்று 1971-72-லும் பயிரிடத் திட்டமிடப்பட்டிருக்கிறது. தென்னை வளர்ப்பு தனிப்பட்ட நபர்கள்,





விவசாயிகள் ஆகியோருக்குத் தேவைப்படும் தரமான தென்னம் பிள்ளைகளை வழங்குவதற்காக, ஒவ்வொரு ஆண்டும் 7.00 லட்சம் தென்னம்பிள்ளைகளை உற்பத்தி செய்யும் திறனளவுடன் கூடிய 19 தென்னம்பிள்ளை வளர்ப்புப் பண்ணைகள் தற்பொழுது இம்மாநிலத்தில் உள்ளன. உள்ளூர் அங்காடிவிலை வீதத்திற்குமேல் 20 சதவீதத் தொகையை கொடுப்பதன் மூலம் அடையாளம் இடப்பட்ட தாய் மரங்களிலிருந்து நெற்றுகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. ஒவ்வொரு தென்னம்பிள்ளையும் ரூ. 1.50 என்ற சலுகைக் கட்டணத்தில் வழங்கப்படுகின்றது.

1969-70-ல், 6.03 லட்சம் தென்னம் பிள்ளைகள் வழங்கப்பட்டன. 1970—71, 1971—72 ஆகிய ஆண்டுகளில் முறையே 7.47 லட்சம், 7.80 லட்சம் தென்னம் பிள்ளைகளை வழங்குவதே, 1970—71, 1971—72 ஆகிய ஆண்டுகளுக்கான திட்டமாகும். மேம்படுத்தப்பட்ட கிராமப்புற பொருளாதார நடவடிக்கைகள், பயிர் வளர்ப்பு நடவடிக்கைகள், உற்பத்தியைப் பெருக்குவதற்கு உரங்களைப் பயன்படுத்துவது ஆகியவற்றைக் கடைப்பிடிக்க மும்முரப் பிரச்சாரம் இம்மாநிலத்தில் நடைபெற்று வருகிறது. மேம்படுத்தப்பட்ட முறைகளைக் கையாளுவதற்கு, உரமிடுதல், நாற்றுவிடுதல் ஆகியவை குறித்த ஒவ்வொரு கட்புல விளக்கங்களுக்கும் முறையே ரூ. 50, ரூ. 100 உதவித் தொகை வழங்குவதன் மூலம், உழவர்களின் நிலங்களில் இந்தக் கட்புல விளக்கங்கள் நடத்தப்படுகின்றன. உதவித் தொகை வழங்கும் அடிப்படையில் பயிர்ப் பாதுகாப்பு இரசாயனங்கள் வழங்கப்படுகின்றன. ஒவ்வொரு தெளிப்பானுக்கும் ரூ. 100 என்ற பேரளவு உதவித் தொகைக்கு உட்பட்டு, தென்னம் பிள்ளைகளுக்கு மருந்து தெளிப்பதற்குத் தகுந்த தெளிப்பான்களுக்கு 50 சதவீத உதவித் தொகை வழங்கப்படுகிறது.

1970-71-ல் 100 தெளிப்பான்கள் வழங்குவதற்கும், 1971-72-ல் மற்றும் 100 தெளிப்பான்கள் வழங்குவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது. உழவர்கள் நிலங்களில் 1970-71-ல் 500 கட்புல விளக்க நிலங்கள் அமைக்கப்படும். அதே எண்ணிக்கை 1971-72-லும் மேற்கொள்ளப்படும்.

விளைச்சலை 25 சதவிகிதம் அதிகரிக்க தென்னை வளர்ப்பு முனைப்பு நடவடிக்கைகளைக் கடைப்பிடிப்பதற்காக முனைப்புத் திட்டம் ஒன்று, 1963-64-ல், தஞ்சாவூர் மாவட்டம், அதிராம்பட்டினம் பகுதியில் உள்ள 1,000 ஏக்கர் கொண்ட அடக்கப் பகுதியில் கொண்டுவரப்பட்டது. தஞ்சாவூர், வட ஆர்க்காடு, கன்னியாகுமரி ஆகிய இம்மூன்று மாவட்டங்களிலும், மேலும் மூன்று பிரிவுகள் 1966-67-ல் தொடங்கப்பட்டன. 1967-68-ல் மேலும் ஒரு பிரிவு மன்னார்குடியில் தொடங்கப்பட்டது. 1969—70-ல் பொள்ளாச்சியில் ஒன்றும், மதுரை மாவட்டம் கொட்டம்பட்டியில் மற்றொன்றுமாக மேலும் இரு பிரிவுகள் தொடங்கப்பட்டன. இவ்வாறாக, 1969—70-ல் ஆறு பிரிவுகள் செயல்பட்டு வந்தன.

உரங்கள், இரசாயனங்கள் ஆகியவற்றை வாங்குவதற்காகக் கடன்—உதவித் தொகை வழங்கப்பட்டுவருகிறது. கடனும், உதவித் தொகையும் முதல் மூன்று ஆண்டுகளுக்கு வழங்கப்படுகின்றன. 1970–71-ல், கோயம்புத்தூர் மாவட்டம் பொள்ளாச்சியில் ஒன்றும், தஞ்சாவூர் மாவட்டம் முத்துப்பேட்டையில் ஒன்றும், மதுரை மாவட்டம் கொட்டம்பட்டியில் ஒன்றும் ஆக மூன்று பிரிவுகள் செயல்பட்டு வருகின்றன. 1971-72-ல் இரண்டு பிரிவுகளைத் தொடர்ந்து நடத்தத் திட்டமிடப்பட்டிருக்கிறது.

தென்னை வளர்ப்பதற்குத் தகுதியான ஏராளமான நிலப் பகுதிகள் உள்ளன. தென்னை வளர்ப்புத் திட்டத்தின் கீழ் நிலங்களைக் கொண்டுவர இயலாததற்கு முக்கிய காரணம் நில உரிமையாளர்களிடம் நிலவும் நிதிப்பற்றாக் குறையேயாகும். தென்னை வளர்ப்பை அதிகரிக்க ஊக்கமளிக்கும் பொருட்டு நீண்டகாலக் கடன்கள் வழங்குவதற்கான திட்டம் ஒன்று 1966–67-ல் செயல் படுத்தப்பட்டது. ஒவ்வொரு நபருக்கும் ரூ. 3,000 என்ற போர வுக்கு உட்பட்டு ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 300 வீதம் நீண்ட காலக் கடன்கள் வழங்கப்படுகின்றன. பதினோராவது ஆண்டு முதல் கொண்டு, இந்த கடன்கள் 5 சம ஆண்டுத் தவணைகளில் திரும்ப வசூலிக்கப்படத்தக்கவையாகும். நீலகிரி, இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்கள் நீங்கலாக இம்மாநிலம் முழுவதிலும் இது செயல் படுத்தப்படுகிறது.

1971-72-ல், 2,000 ஏக்கர் கொண்ட ஒரு பகுதியில் இத் திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. நான்காவது திட்டத்தில், நீண்டகாலக் கடன்கள் வழங்குவதன் மூலம், 10,000 ஏக்கர் கொண்ட நிலம் தென்னை பயிரிடுவதன் கீழ் புதிதாகக் கொண்டு வரப்படும்.

## தோட்டக் கலை.

### பழஉற்பத்தி திட்டம்.

பழத்தோட்டங்களை வளர்ப்பவர்களுக்கு நீண்டகாலக் கடன்கள் வழங்குவதன் மூலமும், பழ உற்பத்தி குறித்து இலவசமாகத் தொழில் நுட்ப ஆலோசனை வழங்குவதன் மூலமும் பழத் தோட்டங்கள் உள்ள பகுதியை அதிகப்படுத்த இத் திட்டம் வகை செய்கிறது. ஒவ்வொரு தனியாருக்கும் நிராட்சை பயிரிடுவதற்காக நபர் ஒருவருக்கு ரூ. 6,000 என்ற அதிக அளவுத் தொகைக்கு உட் பட்டு, ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 1,500 வீதமும், ஏனைய பழமரங்களை வளர்ப்பதற்கும் நபர் ஒருவருக்கு ரூ. 2,000 என்ற அதிக அளவுக்கு உட்பட்டு, ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 300 வீதம் நீண்ட காலக் கடன்கள் வழங்க இத் திட்டத்தின் கீழ் ஒப்பளிப்பு வழங்கப்பட்டிருக் கின்றன.

ரூ. 6.00 லட்சம் நீண்ட் காலக் கடன்கள் வழங்குவதன் மூலம், 1970-71-ல் இத் திட்டத்தின் கீழ் 1,670 ஏக்கர் பரப்பளவில் பழமரங் கள் வளர்க்கத் திட்டமிட்டிருக்க, 1,670 ஏக்கர் இத் திட்டத்தின்



கீழ் கொண்டுவரப்பட்டது. ரூ. 7.12 லட்சம் நீண்டகாலக் கடன்கள் வழங்கப்பட்டன. 1971–72-ல் 1,500 ஏக்கர் இத் திட்டத்தின் கீழ்க் கொண்டு வரப்படும். ரூ. 6.00 லட்சம் நீண்ட காலக் கடன்கள் வழங்கப்படும்.

### அரசுப் பழத்தோட்டம்—பழ நாற்றுப் பண்ணைகள் நிறுவுதல்.

பழத் தோட்டங்களை அறிவியல் முறையில் வளர்ப்பதற்கும் பழத் தோட்டக்காரர்கள், பழ உற்பத்தியாளர், பொது மக்கள் ஆகியோருக்குத் தரமான பயிரிடு பொருட்களை வழங்குவதற்கும் கட்புல விளக்க நிலையங்களாகப் பணிபுரியும் பழத் தோட்டங்களை நிறுவுவதே இத் திட்டத்தின் நோக்கமாகும். இம் மாநிலத்தில் ஒன்பது பழத் தோட்ட நாற்றுப் பண்ணைகள் இருக்கின்றன.

1969-70-ல் ஒட்டுமா, நாரத்தை, எலுமிச்சை—இச்சில மரங்கள், நறுமணச் செடிகள், ஆப்பிள், ஒட்டுப் பேரிக்காய் முதலிய பல் வேறு வகையைச் சேர்ந்த 1,47,000 மரங்கள் மேற்கூறிய பழத் தோட்டங்களில் பயிரிடப்பட்டன. 1970-71-ல் பல மரங்கள் வளர்ப் போருக்கு வழங்குவதற்காக 97,325 செடிகள் பயிரிடப்பட்டன.

### வாழை பயிரிடுவது குறித்து முனைப்புத் திட்டம்.

முனைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம் தற்போ துள்ள பகுதிகளில் வாழை உற்பத்தியைத் தீவிரப்படுத்துவதே இத் திட்டத்தின் நோக்கமாகும். இத் திட்டத்தின் கீழ், இதற்காக நியமிக்கப்பட்ட சிறப்புப் பணியாளர்கள் மூலம், வாழை பயிரிடு வோருக்கு இலவசமாகத் தொழில் நுட்ப ஆலோசனைகள் வழங்கப் படுகின்றன. வாழை பயிரிடுவோரின் நிலங்களில் கட்புல விளக்க நிலங்கள் அமைக்கப்படுகின்றன. கூட்டுறவுச் சங்கங்கள், வணிக வங்கிகள் ஆகியவை மூலமாக, ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 1,000 முதல் ரூ. 1,500 வரை வீதம் குறைந்த காலக் கடன் வழங்கப்படுகிறது. வட ஆற்காடு மாவட்டத்தில், இணறு ஒன்றுக்கு ரூ. 2,000 என்ற வீதத்தில் 500 இணறுகளை ஆழப்படுத்துவதற்குக் கடன் வழங்க யூனியன் வங்கி சம்மதம் தெரிவித்துள்ளது.

1970-71, 1971-72 ஆகிய ஆண்டுகளில் தற்போதுள்ள 20,000 ஏக்கரிலும் வாழை பயிரிடவேண்டும் என்று திட்டமிடப் பட்டுள்ளது.

பாக்கு உற்பத்தி.—நீலகிரி மாவட்டத்தில் கூடலூர், கல்லாறு, மதுரை மாவட்டத்தில் பெரியகுளம், கன்னியாகுமரி மாவட்டத்தில் குமரி முனை, திருநெல்வேலி மாவட்டத்தில் குற்றாலம் ஆகிய இடங்களில் நாற்றுப் பண்ணைகளை அமைப்பதன் மூலம் தரமான கமுகு கன்றுகளை வழங்குவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். மூன்றாவது திட்டத்தில், 5.00 லட்சம் கமுகுக் கன்றுகள் வழங்கப் பட வேண்டுமென்ற குறிக்கோள் அளவு வரையறுக்கப்பட்டது. ஆனால் 2.84 லட்சம் கன்றுகள்தான் வழங்கப்பட்டன. நோய் களுக்கெதிராக உரியகாலத்தில் கட்டுப்பாடு நடவடிக்கைகளை

எடுப்பதற்கும், உரங்களைப் பயன் படுத்துவதற்கும் தீவிரப் பிரச்சாரம் செய்யப்பட்டுவருகிறது. உதவித் தொகை அதிக அளவு ரூ. 100 என்பதற்கு உட்பட்டு, 50 சதவீத விலையில் தெளிப்பான்கள் 1970–71-ல் வழங்கப்படுகின்றன. 1971–72-லும் இதேபோன்று வழங்கப்படும். 20 தெளிப்பான்களையும், 1.00 லட்சம் கன்றுகளையும் வழங்குவது என்று இலக்கு வரையறுக்கப் பட்டிருக்கிறது. நான்காவது திட்டக் கால இறுதியில் 5.00 லட்சம் கழுகுக் கன்றுகளையும், 100 தெளிப்பான்களையும் வழங்குவதற்குத் திட்டமிடப்பட்டிருக்கிறது.

**முனைப்புத் திட்டம் உட்பட புகையிலை உற்பத்தி.**—புகைக்கும் புகையிலை, தாம்பூலப் புகையிலை ஆகியவற்றின் தரத்தை மேம் படுத்தும் பொருட்டு, புகையிலை வளர்ச்சித் திட்டம் ஒன்று 1960-ம் ஆண்டிலிருந்து செயல் படுத்தப்பட்டுவருகிறது. ஏக்கர் ஒன்றின் புகையிலை விளைச்சலை அதிகரிக்கச் செய்ய, 1954-ஆம் ஆண்டி லிருந்து, கோயம்புத்தூர் மாவட்டத்தில் புகையிலை முனைப்புத் திட்டம் ஒன்றும் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

புகையிலை உற்பத்தியை அதிகரிக்கச் செய்யும் நோக்கத்திற் காக, நான்கு வளர்ச்சித் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. அவையாவன : (1) புகையிலை மேம்பாட்டு அடங்கல் திட்டம், (2) புகையிலை முனைப்புத் திட்டம், (3) எப்.சி.வி. புகை யிலை வளர்ச்சி திட்டம், (4) சுருட்டுப் புகையிலைச் சோதனைத் திட்டம் ஆகியவையாகும். இந்த விரிவாக்கத் திட்டம் இம்மாநிலம் முழுதும் செயல்படுத்தப்படுகிறது. புகையிலை முனைப்புத்திட்டம் கோயம்புத்தூர் மாவட்டத்திலும், எப்.சி.வி. புகையிலை மேம் பாட்டுத் திட்டம் தருமபுரி மாவட்டத்திலும் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

**அடங்கல் திட்டம்.**—1969-70-ல் 40 கட்புல விளக்க நிலத் துண்டுகள் அமைக்கப்பட வேண்டும் என்ற குறிக்கோள் அளவு நிச்சயிக்கப்பட்டிருக்க 100 கட்புல விளக்கங்கள் மேற்கொள்ளப் பட்டன. 1970-71-க்கு 100 கட்புல விளக்க நிலத்துண்டுகளை அமைக்கவேண்டும் என்று குறிக்கோள் அளவு வரையறுக்கப் பட்டுள்ளது. இதில் 40 நிலத்துண்டுகள் அடங்கல் திட்டத்தின் கீழும், 60 நிலத்துண்டுகள் முனைப்புத் திட்டத்தின் கீழும் கொண்டு வரப்படும்.

### புகையிலை முனைப்புத் திட்டம்.

| (1) | 1969-70 சாதனை. (2) | 1970–71-ல் குறிக்கோள் அளவு. (3) | 1971–72-ல் குறிக்கோள் அளவு. (4) |
|---|---|---|---|
| பணினைத் திட்டங்களின் கீழ் கொண்டு வந்த பகுதி (எக்கர்). | 15,637 | 12,000 | 14,000 |



**இத்திட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட்ட பகுதி.—**

| (1) | 1969–70 சாதனை. (2) | 1970–71-ல் இலக்கு. (3) | 1971–72-ல் இலக்கு. (4) |
|---|---|---|---|
| உரம் பயன்படுத்தல் .. | 9,407 | 12,000 | 14,000 |
| பயிர்ப்பாதுகாப்பு .. | 9,390 | 12,000 | 14,000 |
| மேம்படுத்தப்பட்ட பயிர் விளைச் சல் நடவடிக்கைகள். | 9,407 | 12,000 | 14,000 |
| தரமான விதைகள் .. | 8,939 | 12,000 | 14,000 |

### நகரப் பகுதித் திட்டம்.

வேளாண்மை மாவியத் திட்டத்தின் கீழ், ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள ஆகிய பகுதிகளிலுள்ள உழவர்களுக்கு வழங்கப்படுவது போலவே நகராட்சிப் பகுதிகளிலுள்ள குடியா னவர்களுக்கும் சலுகைகள் வழங்க வகை செய்வதே இத்திட்டத் தின் நோக்கமாகும்.

இத்திட்டத்தின் கீழ் பின்வரும் சலுகைகள் வழங்கப்படு கின்றன :—

(1) 50 சதவித விலையில் காய்கறி விதைகளையும், பழச் செடி, தென்னங்கன்று 75 சதவித விலையிலும் வழங்குதல்.

(2) கீழ் குறிப்பட்ட கருவிகளை 50 சத வித விலையில் வழங்குதல் :—

(a) மண்வெட்டிகள்
(b) களைக் கொட்டுகள்.
(c) பரம்புகள்.
(d) வெட்டுக் கத்திகள்.
(e) பூவாளிகள்.

இத்திட்டம் 84 நகராட்சிகளில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. நகராட்சிப் பகுதிகளிலுள்ள உழவர்களுக்கு காய்கறி விதைகள், பழச் செடி நாற்றுக்களை வழங்குதல் கருவிகள் வழங்குதல் ஆகியவை உழவர்களுடைய தேவைகளுக்கேற்ப ஏற்பாடு செய்ய வேண்டியிருப்பதால், இத்திட்டத்திற்கான திட்ட இலக்கு எதுவும் வரையறுக்கப்படவில்லை.

### மலர்ச் செடி வளர்ப்பு.

விற்பனை செய்வதற்கேற்ற முதன்மையான இரண்டு வகைப் பூக் களாகிய ரோஜா, மல்லிகை ஆகிய மலர்ச் செடிகளை வளர்ப்பதில் தமிழ்நாடு தனிச்சிறப்பு; வாய்ந்தது. அதாவது தரத்தைக் இந்தப் பூச்செடிகள் பெரும்பாலும் நகர்ப் பகுதிகளிலுள்ள சமவெளிப் பகுதியில் ஏற்ற செறிவான இடங்களில் வளர்க்கப்படுகின்றன. தமிழ்நாட்டில் விற்பனை செய்வதற்காக பயிரிடப்படும் இந்தப் பூக்கள் ஒரு மிகு ஆதாயம் தரக்கூடிய தொழிலாக வளர்ந்து வரு

வதால், கோயம்புத்தூர், மதுரை, செங்கற்பட்டு மாவட்டங்களின் பல பகுதிகள் இத்தொழிலில் முனைந்துள்ளன. மலர்களை விற்பதற்காக மாநில முழுவதும் கிட்டமிட்ட அங்காடிகள் ஏராளமாக அமைக்கப்பட்டுள்ளன. தமிழ்நாட்டில் 3,000 ஏக்கர் பரப்பளவில் பகுதியில் மல்லிகைப் பூச்செடிகளும், 5,000 ஏக்கர் பகுதியில் சாமந்திப் பூச்செடிகளும், 1,000 ஏக்கர் பகுதியில் ரோஜாப்பூச் செடிகளும், 2,000 ஏக்கர் பகுதியில் துலுக்கச் சாமந்தி செடிகளும் பயிரிடப்பட்டு வருகின்றன என்றும், ஆண்டொன்றுக்கு ரூ. 8 கோடி முதல் 10 கோடி அளவிற்கு விற்பனை செய்வதற்கான மலர்கள் கிடைக்கின்றன என்றும் மதிப்பிடப்பட்டுள்ளது. பூச்செடிகள் பயிரிடும் பகுதியை அதிகரிப்பதற்கும் உற்பத்தியை மேம்படுத்துவதற்கும் வாய்ப்பு அதிகமாயுள்ளது. பூக்களின் உற்பத்தி முழுமையாக அளவில் எடுத்துக் கொள்ளப்படவில்லையெனினும், இப்பூக்கள் குறித்த ஆராய்ச்சிப் பணி 1969-ஆம் ஆண்டுக்குள் முழுமையாக மேற் கொள்ளப்பட்டது. கோயம்புத்தூர் வேளாண்மைக் கல்லூரி—ஆராய்ச்சி நிறுவனத்தில் மல்லிகைப்பூ, ரோஜா, களகாம்பரம், சாமந்தி ஆகிய பூச்செடிகள் வளர்க்கப்படும் பாத்திகள் அமைக்கப்பட்டு, மேம்படுத்தப்பட்ட பலவகைப் பூச்செடிகள் வளர்க்கப் பட்டன. உதகை தாவர இயல் தோட்டம், கூனூர் சிம்ஸ் பூங்கா, கோடைக்கானல் பிரையன்ட் பூங்கா ஆகியவை பலவகைப் பூக்களை உற்பத்தி செய்யும் மாநில நிலையங்களாகச் செயல் புரிகின்றன. இந்த நிலையங்கள் பூக்களை எற்றுமதி செய்வதற்கு நிலையான அளவு பூக்களை வழங்குகின்றன. சிறந்த பூச்செடிகளைப் பயிரிடுவதற்குக் கலப்பின மான பயிர் உத்தியும் சிறந்த பயிர் முறைகளும் உருவாக்கப்பட்டுள்ளன என்பது புலனாகிறது. பல வகைப் பூக்களில் மலர்கள் குறித்து போதுமான இருப்பை மேம்படுத்த, அரசு பழத் தோட்டங்கள்—நாற்றுப் பண்ணைகள் உற்பத்தி நிலையங்களாக மேற்கொள்ளப்பட்டன. அயல்நாட்டு வாணிபத்திற்கென பலவகையான மலர் களுக்குத் தேவை ஏற்பட்டதால், ஏற்றுமதி செய்வதற்கு பல வகைப் பூக்களின் உற்பத்தியைப் பெருக்க இந்த நிலையங்களில் பொருமளவு முயற்சிகள் எடுக்கப்பட்டுக்கொள்ளப்படுகின்றன. இவ்வாறாக, ஏற்றுமதி செய்யத்தக்க பூச்செடிகளைப் பயிரிடுதல் பூக்களின் உற்பத்தி ஆகியவற்றில் சிறந்த பயிர் உத்திகளை மேற்கொள்வது நாட்டின் அந்நியச் செலாவணி இடைப்பாட்டிற்கு வழிகோலும்.

*சோற்றுக் காளான்கள்.*—காளான்கள் சிறந்த வீட்டு உணவாகும். காளான் வகையை நிரந்தரமாக உற்பத்தி செய்து வருவதற்காக உயர்தரக் காளான் விதைகளைத் தொடர்ந்து வழங்கி வருவது அவசியமாகும். உயர்வகைக் காளான்களைத் தனியே வைத்து ஆராய்ச்சி செய்யத்திட்டமிடப்பட்டுள்ளது. கோயம் புத்தூர் வேளாண்மைக் கல்லூரி—ஆராய்ச்சி நிலையத்தில் உண்ணத் தக்க காளான்கள் குறித்து ஆராய்ச்சி செய்வதற்கான திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. ரூ. 3.37 லட்ச மதிப்பீட்டுச் செலவில், இத்திட்டத்தை நிறைவேற்றுவது இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகத்தின் ஆழ்ந்த பரிசீலனையிலுள்ளது.





*பருப்பு பயிறு வகைச் செடிகளின் வளர்ச்சிக்கென தூண் கிருமிகளை உட்செலுத்தல்.*—இம்மாநிலத்திலும் பிற இடங்களிலும் மிகு பயன்தரும் பல்வகைப் பருப்பு வகைச் செடிகள் பயறு வகை செடிகள் மேம்பாட்டில் பல பிரச்சினைகள் எழுந்துள்ளன. அவற்றுள் உரமிடுவது ஒன்றாகும். எனவே, இந்த பயறு இனங்களின் விளைச்சலைப் பெருக்குவதற்காக தூண் கிருமிகளைப் போதிய அளவுக்கு வழங்குவதில் நாட்டம் செலுத்தப்படுகிறது. அத்தகைய தூண் கிருமிகள் பயறுகளின் விளைச்சலை 25 சதவிகிதம் முதல் 30 சத விகிதம் வரை அதிகரிக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது. அத்து டன் மண்ணிலுள்ள நைட்ரஜன் சக்தியும் நிலைப்படுத்தப்படும். ஆய்ந்த ஆய்விற்குப் பிறகு பட்டு இவ் பயிர்களுக்கு ஏற்புமுலம் உட்செலுத்துவதற்கான தூண் கிருமி வகைகளை உற்பத்தி செய்து வழங்குவதற்காக வணிகப் பிரிவு ஒன்றை நிறுவும் செயற் குறிப்புகள் வகுக்கப்பட்டுள்ளன. தட்பவெப்ப நிலைக்கு ஏற்றவகையில் பயன்படுத்திக்கொண்டு, நீலகிரியில் அதற்கென தொழிற்சாலை ஒன்றை அமைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. இது குறித்த செயற்குறிப்பு 1971-72-ல் நிறைவேற்றப்படுவதற்காக இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகத்தின் ஆலோசனையில் உள்ளது.

### மலைத் தோட்டச் சிறு பயிர்கள்

*கோக்கோ வளர்ச்சி.*—கோக்கோ பயிர், அதிகம் தேவைப்படுகிற அந்நியச் செலாவணியை ஈட்டித் தரும் திறனுடைய ஒரு முக்கியமான விற்பனைப் பயிராகும். தமிழ்நாட்டில் கோக்கோ பயிர் வளர்ச்சிக்கு அதிக வாய்ப்பு உள்ளது. நீண்டகாலமாக இம்மாநிலத்தில் "கிரியோலா" என்னும் வகையைச் சேர்ந்த கோக்கோ பயிர் வளர்க்கப்பட்டுள்ளது. அண்மையில் "பாண்டிகோ" வகையைச் சேர்ந்த கோக்கோ பயிரை பயிரிடவும் இந்திய அரசு அனுமதித்துள்ளது. எனவே தமிழ்நாட்டில் 'கிரியோலா', 'பாண்டிகோ' என்ற இரண்டு வகைகள் மேம்படுத்தப்படும்.

1962-ஆம் ஆண்டிலிருந்து கொண்டுவரப்பட்ட கோக்கோ மேம் பாட்டுத் திட்டத்தின்கீழ், (1) கன்னியாகுமரி மாவட்டத்தில் பேச்சிப்பாறை, (2) திருநெல்வேலி மாவட்டத்தில் பாபநாசம், (3) மதுரை மாவட்டத்தில் மங்களங்கொம்பு ஆகிய இடங்களில் மூன்று கோக்கோ முன்னோடி நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

*ஏலக்காய் வளர்ச்சி.*—உள் நாட்டிலும் வெளி நாட்டிலும் உடனடியாக விற்பனையாகும் முக்கிய நறுமணப் பயிர்களுள் இது ஒன்றாகும். இந்தப் பயிர் அதிகம் தேவைப்படுகிற அன்னியச் செலாவணியை ஈட்டிக்கொடுக்கும் திறனுடையதாகும். ஏலக்காய் பயிரிடுவதற்கு ஏற்ற பெரும் பகுதிகளைக் கொண்டுவரும் நோக்கத்துடன் ஏலக்காய் நாற்றுகளை உற்பத்தி செய்வதற்கும், அவற்றை வழங்குவதற்கும் சில நாற்றங்கால்கள் வளர்ப்பிடங்கள் ஏற்படுத்தப்படுகின்றன.

ஏலக்காய்ப் பயிர்த் திட்டத்தின் கீழ், ஏலக்காய் பயிரிடுவதற்கு தரமான ஏலக்காய் நாற்றுகளை உற்பத்தி செய்து வழங்குவதற்கும், நோயில்லாத நாற்றுக்களை வழங்குவதற்கும் இரண்டு நாற்றங்கால்

**வளர்ப்பிடங்கள் ஆரம்பிக்கப்பட்டன.** ஒரு நாற்றங்கால் வளர்ப்பிடம் மதுரை மாவட்டத்திலுள்ள மங்கலங்கொம்பு என்ற இடத்திலும், மற்றொன்று திருநெல்வேலி மாவட்டம் குற்றாலத்திலும் ஆரம்பிக்கப்பட்டன. எனினும், மங்கலங்கொம்பிலுள்ள நாற்றங்கால் வளர்ப்பிடம் 31—3—1970 அன்று மூடப்பட்டு, சேலம் மாவட்டம், கொல்லி மலைக்கு மாற்றப்பட்டுள்ளது.

**மிளகுக் கொடி வளர்ப்புத் திட்டம்.**—மிளகுக்கொடிப் பதியங்களைப்போட்டு அவற்றை மிளகு பயிரிடுபவர்களுக்கு சலுகை விதத்தில் வழங்குவதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். அறிவியல் முறையில் மிளகு பயிரிடுவதன் பலன்களை மிளகு விவசாயிப்போருக்குக் கட்புல விளக்கம் அளிப்பதற்கு உதவித் தொகை பெறும் கட்புல விளக்க நிலப்பகுதிகளை அமைக்கவும் திட்டமிடப்பட்டிருக்கிறது. தெளிப்பான்களும் தூவுக் கருவிகளும் சலுகை விதத்தில் வழங்கப்படும்.

மிளகுப் பயிரிடும் பரப்பையும், மிளகு உற்பத்தியையும் பெருக்குவதற்காக மிளகுக் கொடி பதியம்போடும் பண்ணைகளைச் சிறு அளவில் அமைக்கவும் தரமுள்ள நோயற்ற நாற்றுக்களை வளர்க்கவும், பயிரிடுவோருக்கு அவற்றைச் சலுகை விதத்தில் வழங்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ், முக்கியமான மிளகு வகையைச் சேர்ந்த கரிமுண்டி, பண்ணையூர் I கலப்பு மிளகு வகைகள் இம் மாநிலத்தில் பயிரிடப்படும். இத்திட்டத்தின் கீழ், (1) கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த பேச்சிப்பாறையிலும், (2) நீலகிரி மாவட்டத்தைச் சேர்ந்த கூடலூரிலும் இரண்டு சிறு நாற்றங்கால் வளர்ப்பிடங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

**சென்னை மாநகரத்தில் அதைச் சுற்றிலும், செங்கற்பட்டு மாவட்டத்திலும் காய்கறிகள் உற்பத்தியைப் பெருக்குதல்.**—சந்தைகளுக்குக் காய்கறிகளை வழங்குவதற்காக, தரிசு நிலங்களைப் பயன்படுத்தி சென்னை மாநகரத்திலும், அதைச் சுற்றிலும், செங்கற்பட்டு மாவட்டத்திலும் காய்கறி உற்பத்தியைப் பெருக்குவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டம், செங்கற்பட்டு மாவட்டம், மண்ணூர் கிராமத்தில் 25 எக்கர் நிலப்பகுதியில் 1970-71-ஆம் ஆண்டு முதற்கொண்டு நிறைவேற்றப்பட்டு வருகிறது. சென்னை, மவுண்ட் சாலை, அரசாங்க மாளிகையிலுள்ள பண்ணை 30—6—1970 முதற்கொண்டு மூடப்பட்டுள்ளது.

**காய்கறிப் பயிர் மேம்பாட்டுத் திட்டம்.**—முக்கிய மாநகரங்களிலும், நகரங்களிலும் அவற்றைச் சுற்றி 30 மைல் நிலப்பரப்புக்குள் காய்கறி உற்பத்தியைப் பெருக்குவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டம், நீலகிரி மாவட்டத்திலும், தருமபுரி மாவட்டத்தின் ஓசூர் பகுதியிலும் மலைகாய்கறி உற்பத்தியைப் பெருக்குவதற்கு வகை செய்கிறது. காய்கறி விதைகள் பாதிவிலையில் விற்கப்படுகின்றன. ஒவ்வொருவருக்கும் பருவம் ஒன்றுக்கு சொந்த நிலையத்தின் மேல் ரூ. 240 என்ற உயர்ந்த அளவுக்குட்பட்டு, எக்கர் ஒன்றுக்கு ரூ. 120 குறுகிய கால கடன் வழங்கப்படுகிறது. முன்பு நடவடிக்கைகளைக் கற்றுக் கொடுப்பதற்காக



கட்புல விளக்க நிலப் பகுதிகள் அமைக்கப்படுகின்றன. தமிழ் நாட்டில் இத்திட்டம் 25 வேளாண்மைக் கோட்டங்களில் செயல் படுத்தப்பட்டு வருகிறது.

**உருளைக் கிழங்கு பயிர் மேம்பாட்டுத் திட்டம்.**—இத்திட்டம், கோடைக்கானல் மலையிலும், தருமபுரி மாவட்டம், ஓசூர் வட்டத்திலும், உருளைக்கிழங்கு உற்பத்தியைப் பெருக்கக் கருதுகிறது. ஓசூர் பகுதியில் துறை மூலமாக உருளைக் கிழங்கு பயிரிடுவோருக்கு எக்கர் ஒன்றுக்கு ரூ. 750 விதமும் கோடைக்கானல் மலைப் பகுதியில் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் எக்கர் ஒன்றுக்கு ரூ. 900 விதமும் கடன் வசதிகள் அளிக்கப்படுகின்றன. விதை, உரங்கள், பயிர்ப் பாதுகாப்பு, இரசாயனப் பொருட்களின் தேவை துறையால் ஏற்பாடு செய்யப்படுகிறது. பயிரிடுதலிலும், பயிர்ப் பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்வது ஆகியவை குறித்தும் இத்தத்துறையின் பணியாளர்கள் தொழில் நுட்ப உதவிகளை அளிக்கின்றனர்.

இது தவிர, மத்திய உருளைக்கிழங்கு ஆராய்ச்சி நிலையத்திலிருந்து பெறப்பட்ட மூல விதைகளை ஐந்து மடிப்பு அடிப்படையில் பெருக்குவதற்கும் கோடைக்கானல் மலையில் ஆண்டு ஒன்றுக்கு 1,000 எக்கர் பரப்பளவில் விதைகளை ஒரு சேர்த்தமாக வழங்குவதற்கும், இயல்பான உற்பத்தி பரப்பளவில் 1/3 பகுதியில் அவ்விதைகளை நடுவதற்கும் இத்திட்டம் வகை செய்கிறது.

தற்போது, ஒன்று "சைபிள் ரேஞ்ச்" என்னுமிடத்திலும் மற்றொன்று வில்பட்டியிலுமாக அரசு விதைப் பண்ணைகள் இரண்டு உருளைக்கிழங்கு விதைகளைப் பெருக்குவதற்காக உள்ளன.

**மஞ்சள் செடி மேம்பாட்டுத் திட்டம்.**—தமிழ்நாடு, சிறப்பாக ஈரோடு கோட்டம் அதிக அளவு மஞ்சள் உற்பத்திக்கு நல்ல வாய்ப்புள்ள இடமாக உள்ளது. எக்கர் ஒன்றுக்குக் கிடைக்கும் விளைச்சலை அதிகரித்தல், உற்பத்தியைப் பெருக்குதல் ஆகிய நோக்கத்துடன், முன்பு அடிப்படையில் மஞ்சள் பயிர் மேம்பாட்டிற்கான ஒரு திட்டம் 1—7—1970 முதற்கொண்டு நிறைவேற்றப்பட்டு வருகிறது.

முதலில், கோயம்புத்தூர் மாவட்டம், கோபி, ஈரோடு, ஆகிய கோட்டங்களில் 2,500 எக்கர் பரப்பளவில் இத்திட்டத்தைச் செயற்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. ஈரோடு, கோபி கோட்டங்களில் முன்பு அடிப்படையில் மஞ்சள் பயிரிடுவதற்கு 2,500 எக்கர் பரப்பளவுப் பகுதியைக் கொண்டுவருவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. கட்புல விளக்க நிலப் பகுதிகளும் அமைக்கப்படும். மஞ்சள் பயிரிடுவோருக்கு கூட்டுறவு முறையில் காலமாகக் கடன்கள் வழங்கப்படவும் ஏற்பாடுகள் செய்யப்படும்.

**பயறுவகைகள் பயிரிடுவதற்கான திட்டம், விதைப் பெருக்கத் திட்டம்.**—பயறுவகை உற்பத்தியைப் பெருக்குவதில், பயறுவகை விதைகளை உற்பத்தி செய்து வழங்குதல் முக்கியமான பணிகளில் ஒன்றாகும். அரசுக்குச் சொந்தமான விதைப் பண்ணைகளில்

இதுவரை போதுமான அளவு விதைகளை உற்பத்தி செய்ய முடியாதிருப்பதால், தனியார் நிலங்களில் விதைப் பெருக்கத் திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. பயிர் வல்லுநர்களிடமிருந்து (பயறு வகைகள்) வரப் பெற்ற மூல விதைகளைக் கொண்டு தொடக்க நிலை விதைப் பண்ணைகள் அமைக்கப்படுகின்றன. தொடக்க நிலை விதைப் பண்ணைகளில் உற்பத்தி செய்யப்படும் விதைகளை வாங்கி, இரண்டாவது நிலை விதைப் பண்ணைகள் அமைப்பதற்கு வழங்கப்படுகின்றன. இரண்டாவது நிலை விதைப் பண்ணைகளில் உற்பத்தி செய்யப்படும் விதைகள் உழவர்களுக்கு பரிமாற்ற முறை மூலம் இயல்பான முறையிலும் வழங்கப்படுகின்றன. விதைப் பெருக்கத்தைத்தவிர, துறையால் பரிந்துரைக்கப்பட்ட எல்லா முனைப்பு நடைமுறைகளைக் கொண்டு ஒரு எக்கர் நிலப்பகுதிகளில் முன்னோடி கட்புல விளக்கங்கள் மேற்கொள்ளப் படுகின்றன. இத்திட்டம் 1971–72-ஆம் ஆண்டிலும் தொடர்ந்து இருக்கும்.

**விரைவுத் திட்டம்**—பருப்பு உற்பத்தியில் தமிழ்நாட்டில் பற்றாக்குறை உள்ளது. ஏழு லட்சம் டன் பருப்புத் தேவைக்கு 1 லட்சம் டன்தான் உற்பத்தி செய்யப்படுகிறது. உணவில் புரதச் சத்தை அதிகரிக்கும் நோக்கத்துடன், 1970–71-ஆம் ஆண்டில் பருப்பு உற்பத்தியைப் பெருக்குவதற்காக, விரைவுத் திட்டம் ஒன்றுக்கு அரசு ஒப்பளிப்பு வழங்கியது. திட்ட இலக்கு 5.35 லட்சம் என்றிருக்க, 8.30 லட்சம் எக்கர் பரப்பளவில் பருப்பு பயிரிடப்பட்டு 1.65 லட்சம் டன் பருப்பு உற்பத்தி அளவு பெருக்கப் பட்டுள்ளது. 203 மெட்ரிக் டன் அளவு பருப்பு மூல விதைகள் வாங்கப்பட்டு, உழவர்களுக்கு வழங்கப்பட்டன. 1971–72-ஆம் ஆண்டில், மொத்த உற்பத்தியைப் 2.50 லட்சம் டன்களை உயர்த்துவதற்காக, பருப்பு வகைகளைக் கலப்புப் பயிராகவும் வரப்புப் பயிராகவும் 23.4 லட்சம் எக்கர் கூடுதல் நிலப்பரப்பில் பயிரிடத் திட்டமிடப்பட்டுள்ளது. இந்த ஆண்டில் 500 மெட்ரிக் டன் விதைகள் வாங்கப்பட்டு வழங்கப்படும்.

**பயறு வகைகள் பற்றிய ஆராய்ச்சித் திட்டங்கள்.**

இம்மாநிலத்தில் பருப்பு வகைகளின் தேவையை நிறைவு செய்யும் நோக்கத்துடன் மூன்றாண்டுக்கால அளவிற்கு ரூ. 6.35 லட்சம் செலவில், அடிப்படை பயறுவினைகளை உற்பத்தி செய்வதற்கான வசதியுடன் கீழ்க்காணும் இரண்டு ஆராய்ச்சித் திட்டங்கள் அரசின் பரிசீலனையில் உள்ளன :—

(1) ஆடுதுறையில் உள்ள வட்டார வேளாண்மை ஆராய்ச்சி நிலையத்தில் நன்செய் நிலப் பயறு வகைகளை மேம்படுத்துவதற்கான முன்னோடித் திட்டம் செலவு (2.35 லட்சம்).

(2) பவானிசாகரில் உள்ள அரசு விதைப் பண்ணையில் பயறு வகைகளின் உற்பத்தியைப் பெருக்கும் திட்டமும், ஆராய்ச்சித் திட்டமும் (செலவு ரூ 4.00 லட்சம்).



ஆடுதுறை ஆராய்ச்சி நிலையத்தில் செயற்படுத்தக் கருதும் திட்டத்தின் நோக்கங்கள் வருமாறு—

(a) நன்செய் நிலங்களில் நெல்விளைந்த பிறகு சோயாபீன்ஸ், துவரை போன்ற புதிய பருப்பு வகைகளைப் பயிரிவது பற்றிய சாத்தியக்கூறுகளை ஆராய்தல்.

(b) நன்செய் நிலங்களில் நெல்விளைந்தபிறகு பயிரிடுவதற்கென்றே விரைந்து பலன் கொடுக்கக் கூடிய மிதுபான் தரும் புது வகை உளுந்து, பாசிப்பயிறு வகைகளைக் கண்டுபிடித்தல்.

(c) அவற்றைப் பயிரிடுவதில் மேம்பட்ட முறைகளை வரையறுத்தல்.

(d) மேம்படுத்தப்பட்ட நன்செய்ப் பருப்பு வகைகளை தமிழ் நாட்டின் கயவாய்ப் பகுதிகளில் விரைவாகப் பரப்பும் வண்ணம் அவற்றை பெருக்குதல்.

**சிறுபாசனம், வேளாண்மைப் பொறியியல் நடவடிக்கைகள்.**

தண்ணீரை ஏற்றவாறு பயன்படுத்துவதன் மூலமும் இறவைப் பாசன வசதிகளை விரிவுபடுத்துவதன் மூலமுமே மிகு பயன் தரும் பயிர்வகைத் திட்டம் போன்ற வேளாண்மை உற்பத்திப் பெருக்கத் திட்டங்களை வெற்றிகரமாக நிறைவேற்ற முடியும். எனவே தனியார் குழாய்க் கிணறுகள், வடிமுனைக் குழாய்க் கிணறுகள் இறக்குவதற்கும், கிணறுகளை ஆழப்படுத்துவதற்கும், அரசு குழாய்க் கிணறுகள் அல்லது ஊருணிகளை அமைப்பதற்கும் தான்காவது திட்டம் வகை செய்கிறது. இத் திட்டங்களுக்குக் கடன் வழங்கும் பொறுப்பு நிலவள வங்கிகள், கூட்டுறவு வங்கிகள் முதலியன கடன் வழங்கு நிறுவனங்களிடம் மாற்றப்பட்டுள்ள போதிலும், தேவையான இயந்திரங்களையும் உதவித் தொகைகளையும் அரசு தொடர்ந்து அளித்துவருகிறது.

இம்மாநிலம் முழுவதிலும் சிறுபாசனத் திட்டங்கள் செயற்படுத்தப்பட்ட போதிலும், சில மாவட்டங்களில் மட்டும் இத்திட்டம் மும்முரமாகச் செயற்படுத்தப்படுகிறது. ஏனெனில், இம்மாவட்டங்களில் குழாய்க் கிணறுகள், வடிமுனைக் குழாய்க் கிணறுகள் அமைப்பதற்கான வாய்ப்பு நிறைய உள்ளது. இத்திட்டங்கள் "சிறப்பு மேம்பாட்டுத் திட்டங்கள்" எனப் பெயர் பெறும்; அவைகளாவன :—

(i) தஞ்சாவூர் மாவட்டத்தில் தனியார் குழாய் கிணறுகள், வடிமுனைக் குழாயக் கிணறுகள் இறக்குவதற்கான சிறப்பு மேம்பாட்டுத் திட்டம்.

(ii) திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் வடிமுனைக் குழாய்க் கிணறுகள் இறக்குவதற்கான சிறப்பு மேம்பாட்டுத் திட்டம்.

(iii) தென் ஆர்க்காடு மாவட்டத்தில் தனியார் குழாய் கிணறுகள், வடிமுனைக் குழாய்க் கிணறுகள் இறக்குவதற்கான சிறப்பு மேம்பாட்டுத் திட்டம்.

(iv) செங்கற்பட்டு மாவட்டத்தில் தனியார் குழாய்க் கிணறுகள் அமைப்பதற்கான சிறப்பு மேம்பாட்டுத் திட்டம்.

1968–69–ம் ஆண்டிலிருந்த 1971–72–க்கான திட்டக் குறிக்கோள்

| திட்டத்தின் பெயர். | பல்வேறு அளவுகள் ஆகியவை | சிறுபாசனத் திட்டங்களின்கீழ் கொடுக்கப்பட்டுள்ளன:— | | | | குறிக்கோள் அளவுகள், | | | | சாதனைகள், | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | 1968–69. | | 1969–70. | | 1970–71. | | 1971–72. | | | |
| | | மொத்த மதிப்பீடு | ஜூலை | மொத்த மதிப்பீடு | ஜூலை | மொத்த மதிப்பீடு | ஜூலை | மொத்த மதிப்பீடு | ஜூலை | மொத்த மதிப்பீடு | ஜூலை |
| (1) | | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | | | |
| சிறியபார் திட்டம். | குழாய்க் கிணறுகள் | 1,600 | 2,088 | 2,000 | 2,205 | 2,300 | 2,237 | 2,300 | 700 | | |
| தனிக் கிணறுகள் திட்டம் | .. | 500 | 639 | 600 | 668 | 700 | 699 | 700 | 2,500 | | |
| வடிமுனைக் குழாய்க் திட்டம். | கிணறுகள் | 2,000 | 2,678 | 2,000 | 2,055 | 2,000 | 1,559 | 2,500 | 1,050 | | |
| கிணறுகளை ஆழப்படுத்தும் திட்டம். | | 400 | 859 | 850 | 1,248 | 810 | 1,220 | 1,050 | 10 | | |
| ஊருணி நீரேற்றுத் திட்டம் | .. | 10 | .. | 10 | 10 | 10 | 7 | 10 | | | |



28th July 1971]

**பாசன நீரைக் கையாளல் ஆராய்ச்சி நிலையம் ஒன்றை அமைத்தல்.**

தமிழ்நாட்டில் ஆற்றுப் பாசன வளம் முழுவதையும் பயன் படுத்தி விட்டதால் நலநீரை வளர்ச்சிக்கு ஆக்கம்தரும் வகையில் சிக்கனமாகப் பயன்படுத்தவேண்டியுள்ளது. கிடைக்கும் நீரினை பயன்படுத்துகின்ற அளவைப் பெருக்குவதற்கான பாசன முறை களின் வகைகளை நிலத்தின் தன்மைக்கேற்ப அறிவியல் முறையில் ஆய்வு செய்ய வேண்டும். இதனால் பயிர்களின் பிதை முறைகளைப் பொறுத்து, வடிகால், வரவுகால் முறைகளைப்பற்றி ஆய்ந்து ஆராய வேண்டியிருக்கும். நீரை வடியச்செய்தல், அதாவது மேல் நிலை யில் உபரியாக உள்ள நீரை சுரங்கக் கால்வாய்கள் மூலம்வடியச் செய்யும் முறைகளைப் பற்றி ஆராய வேண்டும். குறிப்பிட்ட ஒரு பருதியின் தட்பவெப்ப நிலை, மண்வளம், மழை அளவு ஆகியவற்றை குடியானவர்களுக்குக் கீழ்க்கண்டவை உறுதியாகக் கிடைக்கும் வண்ணம் ஒன்றுக்கொன்று தொடர்புள்ளவையாக ஆக்க வேண்டும் :—

(a) போதுமான ஆனால் கட்டுப்படுத்தப்பட்ட நீர் வழங்கல்.

(b) நீர் கிடைக்கும் அளவுகளுக்கு ஏற்ப, திட்டமிட்ட பயிர் உற்பத்தி முறை.

(c) அதிகப்படியான நீரைச் செவ்விதின் வடித்தல்.

மழைக் காலத்தில் கட்டுப்பாடற்ற பாசனங்களின் காரணமாக தாழ்ந்த கயவாய்ப் பகுதிகளில் ஏற்பட்டுள்ள சேதங்கள் ஏராள மானவை. இது வேளாண்மைப் பொருளாதார, வேளாண்மைப் பொறியியல் ஆய்வு ஆகும். பல ஆண்டுகளுக்கு நீடிக்கக் கூடிய விரி வான வேலைத் திட்டம் இவ்வையென்றால், இந்த ஆய்வினால் எவ்விதப் பயனும் ஏற்படாது. இந்த ஆய்வின் பயனாக, குடியானவர்கள் தங் களது விளைச்சலைப் பெருக்க முடிவதோடு மட்டுமல்லாது, உணவு உற்பத்தி, நீரை வீணாக்காமல் பயன்படுத்தல் ஆகியவற்றில் மாநிலம் முழுவதற்கும் நல்ல பலன் கிடைக்கிறது. எனவே, நடப்பாண்டில், ரூ. 3.30 லட்சம் செலவில் ஆடுதுறையில் நீர்ப் பயன் நிர்வாக ஆராய்ச்சி நிலையம் ஒன்றை அமைக்க அரசு திட்டமிட்டுள்ளது.

**தமிழ் நாட்டில் வேளாண்மைப் பணிக்களரிகளை அதிக எண்ணிக்கையில் சீர்படுத்துவது உட்பட டிராக்டர்களை வாடகைக்கு விடும் திட்டம்.**

வேளாண்மைத் துறையின் பொறியியல் நடவடிக்கைகளில் டிராக்டர்கள் வாடகைக்கு விடும் திட்டம் முக்கியமான ஒன்றாகும். இம் மாநிலத்தில் பயிரிடு நிலங்களின் பரப்பை அதிகரிக்கவேண்டி, நிலத்தைச் சமப்படுத்துவதன்மூலம் அதிகப்படியான நிலங்களைச் சீர்ப்படுத்துதலும், உணவு உற்பத்தியைப் பெருக்க இயந்திரங்களைப் பயன்படுத்தி பயிர் விளைவித்தலும் இத்திட்டத்தின் நோக்கமாகும். இந்த நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக, இந்தத் துறை டிராக்டர் கள், பரம்புப் பொறிகள் ஆகியவற்றை உழவர்களுக்கு வாடகைக்கு விடுகிறது. இதற்காக வசூலிக்கப்படும் வாடகை போதுமானதல்ல; ஆனால், குடியானவர்களுக்கு இது மிகக் குறைவாகும்.

அரசு ஆணையின்பேரில் வேளாண்மை சாராத காரியங்களுக்காகவும் டிராக்டர்கள் வாடகைக்கு விடப்படுகின்றன. இதற்காக, சாதாரணமாக வசூலிக்கப்படும் தொகைகளைப் போல் இருமடங்குத் தொகை வசூலிக்கப்படுகின்றது. எனினும், அரசுத் துறைகள், உள்ளாட்சி மன்றங்கள், கல்வி நிறுவனங்கள் ஆகியவற்றைப் பொறுத்தவரையில், அவற்றின் வேலை எத்தன்மையதாயினும், சாதாரணமாக வசூலிக்கப்படும் வாடகையே வசூலிக்கப்படுகிறது.

இத்திட்டம் தமிழ்நாட்டின் எல்லா மாவட்டங்களிலும் செயலில் இருக்கிறது. இத்துறையில் 188 சங்கிலிச் சக்கர டிராக்டர்களும், 78 சக்கரவகை டிராக்டர்களும் உள்ளன. இவற்றில் 149 சங்கிலிச் சக்கர டிராக்டர்களும், 46 சக்கரவகை டிராக்டர்களும், பயன்படு நிலையில் உள்ளன. (எஞ்சியவற்றைப் பழுதடைந்தவை எனப் புறக்கணித்துவிடக் கருதப்பட்டுள்ளது.) சங்கிலிச் சக்கர டிராக்டர்களும், சக்கரவகை டிராக்டர்களும் எல்லா மாவட்டங்களிலும் இருக்கின்றன.

வரையறுக்கப்பட்ட திட்டக்குறிக்கோள் அளவுகளும், எய்திய சாதனைகளும் வருமாறு :—

| | குறிக்கோள் அளவு. (எக்களில்.) | | சாதனை (எக்களில்). | |
|---|---|---|---|---|
| | சமப்படுத்துதல். | டிராக்டர் கொண்டு உழுதல். | சமப்படுத்துதல் | டிராக்டர் கொண்டு உழுதல். |
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1966-67 .. | 7,400 | 8,000 | 8,795 | 11,505 |
| 1967-68 . | 8 360 | 16,300 | 9 438 | 17,483 |
| 1968-69 .. | 7,610 | 20,300 | 9 617 | 21 520 |
| 1969-70 .. | 7 348 | 24,400 | 9,145·45 | 24,552 35 |
| 1970-71 .. | 9,733 | 20,000 | 11,681·08 | 35,051·06 |

ஆந்திரா பிரிவதற்கு முன்னிருந்த சென்னை மாநிலத்தில் பாபட்லாவில் ஒன்றும், கோயம்புத்தூரில் ஒன்றுமாக மொத்தத்தில் டிராக்டர் பணிக்களரிகள் இரண்டு இருந்தன. 1962-ல் தஞ்சாவூர், மும்மூர் வேளாண்மை மாவட்டத்தின்கீழ் உள்ள ஃபோர்டு அறக்கட்டளை (Food Foundation) உதவியுடன் திருவாரூரில் டிராக்டர் பணிக்களரி தொடங்கப்பட்டது. மதுரையில் பணிக்களரி ஒன்றை ஏற்படுத்துவதற்கு 1967-68-ல் அனுமதி வழங்கப்பட்டது. திருச்சிராப்பள்ளியில் ஒன்றும், வேலூரில் மற்றொன்றுமாக மேலும் இரண்டு பணிக்களரிகள் நிறுவ அரசு அனுமதி வழங்கியது. திருச்சிராப்பள்ளி, மதுரை ஆகிய இடங்களில் உள்ள பணிக்களரிகள் 1969-70-ல் செயல்படத் தொடங்கின. வேலூரில் உள்ள பணிக்களரி 3—5—1971-லிருந்து செயல்படத் தொடங்கியது.

பழுதுபடாமல் பேணி வருவதற்கும் சோதனை நடவடிக்கையாகவும், செப்பனிடு கருவிகளுடன் கூடிய இரண்டு இயல் செப்பனிடு பணி ஊர்திகளை இத்துறை வாங்கியுள்ளது. கோயம்புத்தூர், திருவாரூர் ஆகிய இடங்களில் இவை பயன்படுத்தப்படுகின்றன. படிப்படியாக மற்ற மாவட்டங்களுக்கும் இவை நீட்டிக்கப்படும்.



*1971-72-க்கான திட்டம்.*

**திட்டக் குறிக்கோள் அளவு—**

| | ஏக்கர். |
|---|---|
| சமப்படுத்துதல் | 12,025 |
| உழுதல் | 36,000 |

**கோயம்புத்தூரில் விதைகளைச் சீர்படுத்தும் பொருத்தமான கருவிகள் (தானியம் உலர்த்தும் கருவி) வடிவமைத்து உருவாக்கும் திட்டம்.**

நெல், சிறு தானியங்கள், மிளகாய், வேர்க்கடலை போன்ற சில வாணிப பயிர்கள் ஆகியவற்றிற்கான கதிரடி களங்களில் அல்லது லயல்களில் பயன்படுத்துவதற்கான, மின்சாரம் மூலம் இயங்கும் அல்லது எண்ணெயைக் கொண்டு இயங்கும் பொருத்தமான தானிய உலர்த்திகளை உருவாக்குவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இது ஒரு ஆராய்ச்சித் திட்டமாகும். எனவே, திட்டக் குறிக்கோள் அளவு எதையும் முடிவு செய்வதற்கில்லை. இத்திட்டம் 1969 ஆகஸ்ட்டில் செயற்படுத்தப்பட்டது.

**தமிழ்நாடு வேளாண் தொழில் கழகம்.**

தமிழ்நாடு வேளாண் தொழில் கழகம் 1—4—1969-லிருந்து செயல்படத் தொடங்கியது. இக்கழகத்தின் முக்கியமான நோக்கங்களாவன :—

(i) வேளாண்மை, கால்நடை வளர்ப்பு, மீன் வளர்ப்பு, கோழிப் பண்ணை ஆகியவற்றின் வளர்ச்சிக்கும் புதுமைப்படுத்துவதற்கும் பயன்படும் பொருள்களைத் தயாரிப்பதற்கான தொழிற் சாலைகளை ஏற்படுத்த வகைசெய்தல், அவற்றை நிறுவுதல், நிர்வகித்தல், சொந்தமாகத் தொடங்கி நடத்துதல் ;

(ii) உள்நாட்டுக்குத் தேவையான ஏற்றுமதிக்கு வேண்டிய உணவுப் பொருள்களும் துணை உணவுப் பொருள்களும் அதிக அளவில் கிடைக்கச் செய்வதற்காக, வேளாண்மை விளைபொருள்கள், மீன் உணவுப் பொருள்கள், விலங்கின உணவுப் பொருள்கள் இவற்றைப் பக்குவப்படுத்துவதற்காக தொழில்களையும் வசதிகளையும் ஏற்படுத்த வகை செய்தல், அவற்றை நிறுவுதல், நிர்வகித்தல், சொந்தமாகத் தொடங்கி நடத்துதல்.

டிராக்டர்கள், எண்ணெய் இயந்திரங்கள், மின்சார மோட்டார்கள், விசையேற்றங்கள், முதலிய பண்ணை இயந்திரங்களைத் தமிழ்நாடு வேளாண் தொழில் கழகம் கவனிக்கொள்முதல் திட்டத்தின்கீழ் வழங்குகின்றது.

இதுவரை, இக்கழகம், உழவர்களுக்கு ரூ. 316.61 லட்சம் மதிப்புள்ள வேளாண்மை இயந்திரங்களை வழங்கியுள்ளது. இதன்மூலம் இக்கழகத்திற்கு 1968-69-ல் ரூ. 5,54,572-ம், 1969-70-ல் ரூ. 15,56,066-ம் ஆதாயம் கிடைத்துள்ளது.

[28th July 1971]

இந்தக் கழகம் ரஷ்யா, ஜெர்மனி, ருமேனியா முதலிய வெளி நாடுகளிலிருந்து இந்திய அரசுத் தொழில் கழகத்தின் மூலமாக டிராக்டர்களை இறக்குமதி செய்து சொக்கத் தொகை செலுத்தும் அடிப்படையில் தேவையுள்ள உழவர்களுக்கு வழங்குகிறது. டிராக்டர்களுக்குத் தேவையான உதிரிப் பாகங்கள், துணைக் கருவிகள் ஆகியவற்றையும், வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்து விவசாயிகளுக்கு வழங்குகிறது.

வேளாண்மை இயந்திரங்களை விற்ற பிறகு, பழுது பார்ப்பது முதலான பணிகளைச் செய்வதற்காக, அண்மையில் கீழ்க்கண்ட ஐந்து இடங்களில் வேளாண்மை இயந்திரங்கள் வாடகைக்கு விடும் நிலையங்களை இக்கழகம் நிறுவியுள்ளது :—

(1) செங்கற்பட்டு மாவட்டம், காஞ்சிபுரத்தில் சிறு காவேரிப் பாக்கம்.

(2) மதுரை.

(3) திருச்சிராப்பள்ளி.

(4) தென் ஆர்க்காடு மாவட்டத்தில் விழுப்புரம்.

(5) சேலம்.

மேற்சொன்ன ஐந்து வட்டார நிலையங்கள் ஒவ்வொன்றிலும் மூன்று துணை நிலையங்கள் ஏற்படுத்தப்படும். இங்கு வாடகைக்கு விடுவதற்காக வேளாண்மை இயந்திரங்கள் சேமித்து வைக்கப்பட்டு தேவையான பொழுதெல்லாம் உழவர்களுக்கு வாடகைக்கு விடப் படும்.

இணை தோண்டுதல் போன்ற பிறவற்றையும் இக்கழகம் மேற் கொள்கிறது. தற்பொழுது இக்கழகத்திடம் தென் ஆற்காட்டில் சுழல் முறையில் துளையிடும் கருவிகள் மூன்றும், மதுரையில் சம்மட்டி முறையில் துளையிடும் கருவி ஒன்றும் உள்ளன. கீழ்க்காணும் செயற்குறிப்புகள் அதன் பரிசீலனையில் உள்ளன :—

(1) சம்மட்டி முறையில் துளையிடும் கருவிகள் மேலும் இரண்டு வாங்குதல்.

(2) நைலான் வலை தயாரிக்கும் இயந்திரம் நிறுவுதல்.

(3) ஆழ்கடல் மீன் பிடிப்புக்கு உதவி செய்தல்.

(4) மத்திய தோல் ஆராய்ச்சி நிறுவனத்தின் உடனுழைப் புடன் மூந்திரிக் கொட்டையின் ஓட்டிலிருந்து தோல் பதனிடுவதற் காக டானின் திரவத்தை வடித்தெடுத்தல்.

இதுவரை, வெவ்வேறு வகையான 1,889 டிராக்டர்கள் இறக்குமதி செய்யப்பட்டு உழவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. இங்கிலாந்து, யுகோஸ்லாவியா முதலிய நாடுகளிலிருந்து சுமார் 1,000 டிராக்டர்கள் இறக்குமதி செய்யப்படும் என்று எதிர்ப் பார்க்கப்படுகிறது.



8th July 1971]

**வேளாண்மைப் பணி மனைகள்—வேலை வாய்ப்பற்ற பொறியாளர் களுக்கு உதவி.**

தொழில் முனைவோர் திட்டத்தின் கீழ் வேலை வாய்ப்பற்ற பொறியாளர்களுக்கு உதவி செய்யும் திட்டம் ஒன்றை மேற் கொள்ளலாமென இந்திய அரசு கருத்தறிவித்துள்ளது. இதனால் தொழில் முனைவோருக்குக் கீழ்க்கண்ட பயன்கள் கிடைக்கும் :—

(1) பயிற்சிக்காக இந்திய அரசு ரூ. 1,500 வழங்கும்.

(2) நாட்டுடமையாக்கப்பட்ட வங்கிகளிலிருந்து கடன் உதவி.

(3) வட்டி கொடுப்பதற்கான உதவித் தொகை. இந்திய அரசு வழங்கும் நிதி உதவியைக் கொண்டு இம் மாநிலத்தில் 100 பணிமனைகளை நிறுவத் திட்டமிடப்பட்டுள்ளது. அவற்றில் 30 பணிமனைகள் உடனடியாகத் தொடங்கப்படும்.

இந்த வேளாண்மைப் பணிமனைகள் வளர்ச்சி வட்டாரங்களில் அமைக்கப்படும். இந்த பணிமனைகளில் பட்டறை வசதிகளும் இருக்கும். இணை தோண்டுதல் வேளாண்மை மேம்பாட்டிற்கான ஏனைய மூலப் பணிகளும் இந்தப் பணிமனைகளால் மேற்கொள்ளப் படும். வேளாண்மைப் பணிக் கூட்டுறவு நிலையங்கள் அமைக்கும் செயற்குறிப்பு, அரசின் நாட்டத்தில் இருந்து வருகிறது.

**விதைகள்.**

அடிப்படை விதைகளை உற்பத்தி செய்வதற்காக மாநில விதைப் பண்ணைகள் தொடங்கப்படுகின்றன. தனியார்களுக்குச் சொந்தமான இவ்விதைகள், மேலும் பெருக்கப்படுவதற்காகவும் உழவர்களுக்கு வழங்குவதற்கும் உள்ள இரண்டாம் நிலை விதைப் பண்ணைகளுக்கு வழங்கப்படுகின்றன.

நான்காவது திட்டக்காலத்தின் இறுதியில் 25 ஏக்கர்கள் கொண்ட 230 விதைப் பண்ணைகளை ஏற்படுத்த வேண்டும் என்பது குறிக்கோள் அளவு. குடுமியான் மலையில் உள்ள பெரிய அளவிலான பண்ணையைக் கருத்தில் கொண்டால், இந்தக் குறிக்கோள் அளவு மூன்றரை எய்தப்பட்டுவிட்டது. 1970–71 இறுதியில் 232 பிரிவுகள் செயல்பட்டு வந்தன. திட்டத்தின் எஞ்சிய கால அளவில், இந்தப் பண்ணைகளில் தொடக்க நிலை விதைகளின் உற்பத்தியை உறுதிப் படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

தற்போது, வட ஆர்க்காடு மாவட்டம், நவ்லாக் அரசு விதைப் பண்ணையில் விதைச் செய்முறை பிரிவு ஒன்று செயல்பட்டு வருகின்றது. குடுமியான்மலை அண்ணா பண்ணையில் விதைச் செய்முறைப் பிரிவு ஒன்றை நிறுவுவதற்கும், தஞ்சாவூர் மாவட்டம், சாக்கோட்டையில் மற்றொன்றை நிறுவவும் [illegible] பட்டுள்ளது. இந்தப் பிரிவுகளுக்கான கட்டிடங்கள் [illegible] கட்டப்படும்.

### விதைப் பெருக்கத் திட்டம்.

தனியார் பண்ணையில் உள்ள அரசு விதைப் பண்ணைகளில் உற்பத்தியாகும் அடிப்படை விதைகளை, இரண்டாம் நிலை விதைகளாகப் பெருக்குவது, நெல், சிறு தானியங்கள், ஆகியவற்றின் கீழ் உள்ள மொத்தம் நிலப்பகுதியில் மூன்றில் ஒரு பாகத்தில் பயிரிடுவதற்கு விதைகளை வழங்குவது ஆகியவை இத்திட்டத்தின் நோக்கமாகும். நான்காவது திட்டக் கால அளவில் ஒவ்வோர் ஆண்டும் கீழ்க்காணும் விதைகளை வழங்கக் கருதப்பட்டுள்ளது.—

நெல்—

| | மெ.ட. |
|---|---|
| தொடக்க நிலை | 2,780 |
| இரண்டாம் நிலை | 41,700 |
| சிறு தானியங்கள்— | |
| தொடக்க நிலை | 506 |
| இரண்டாம் நிலை | 6,160 |

வழங்கப்படவிருக்கும் இரண்டாம் நிலை விதைகளின் மொத்த அளவில் 14,000 மெ.ட. நெல்லும், 2,000 மெ.ட கம்பும் துறை அதிகாரிகளின் நேரடி மேற்பார்வையின் கீழ் விதைப் பண்ணைகளில் உற்பத்தி செய்யப்பட்டு, அவைகள் வேளாண்மை விற்பனை நிலையங்கள் மூலமாக வழங்கப்படும். மாவட்ட வேளாண்மைச் சிறப்பு அதிகாரியின்கீழ் (விதைகள்) ஐந்து விதைப் பண்ணைகள் அதாவது, போளூர், விழுப்புரம், தஞ்சாவூர், மதுரை, திருநெல்வேலி ஆகிய இடங்களில் இருக்கின்றன. விதைப் பண்ணைகளின் ஒவ்வொரு 1,000 ஏக்கருக்கும் வேளாண்மை சிறப்புக் கட்புல விளக்குநர் ஒருவரும், இரண்டு வேளாண்மை மேஸ்திரிகளும் சிறப்புப் பணியாளர்களாகப் பணிபுரிய அனுமதிக்கப் பட்டுள்ளனர். இத்திட்டம் ஆதாய-விரையமற்ற அடிப்படையில் செயல்பட்டு வருகின்றது. இத்திட்டம் 1971-72-விருந்து தொடர்ந்து செயல் படுத்தப்படும்.

### விதைகளின் தரம் பற்றி சான்றளிக்கும் திட்டம்.

சீரான நல்ல தரமுள்ள விதைகளை வழங்குவதன் பொருட்டு விதைகளின் தரம்பற்றிச் சான்றளிப்பதற்கு துறை சார்ந்த நிறுவனம் ஒன்றை ஏற்படுத்துவதும் நல்ல தரமான விதைகளை உற்பத்தி செய்து, விற்பனை செய்வதற்கு தனியார் துறைக்கு ஊக்க மளிப்பதும் இத்திட்டத்தின் நோக்கமாகும். 1—10—1969-விருந்து செயலுக்குக் கொண்டு வரப்பட்ட விதைகள் சட்டத்தின் கீழ், ஒவ்வொரு பயிர், விதைகளின் வகை, விதைகளின் சாதி ஆகிய வற்றிற்கு சில குறைந்த அளவு தரங்கள் முடிவு செய்யப்படுகின்றன. மேற்சொன்னபடி வரையறுக்கப்பட்ட தரங்களை உடைய விதைகள் மட்டும்தான் உழவர்களுக்கு விதைகள் சட்டத்தின் கீழ் வழங்கப்



28th July 1971]

படவேண்டும். அத்தகைய தரங்கள் பேணி பாதுகாக்கப்படவில்லை யானால், தரமற்ற விதைகளை வழங்கும் நபர்கள் தண்டனைக்குட்படு வார்கள். இத் திட்டம் 1—4—1970 அன்று தொடங்கப்பட்டது.

விதைகள் வாணிகத்தை மேற்கொள்வதற்குப் பல நபர்களும் நிறுவனங்களும் முன் வரலாம். விதைகளைப் பெருக்குதல், வழங்குதல் ஆகிய பணிகளைப் பிரித்து கொடுத்தால், பலமுகவரப்பு களினால் வழங்கப்பட்ட விதிகளின் தரத்தைப் பேணி வருதல் அவசியமாகிறது. எனவே விதைகள் குறித்த சான்றளிக்கும் முறைக்கு அவசியமேற்படுகிறது. விதைகள் குறித்துச் சான்றளிக்கும் இத்திட்டத்தின்கீழ் பணியாற்றும் பணியாளர்கள், விதை உற்பத்தியாளர்களின் பயிர்களை அதை அவர்கள் நட்ட நாளிலிருந்து அறுவடை வரை முன்றிலிருந்து 4 முறை பார்வையிடு வார்கள். விதைகளை போரடித்தல், உலரவைத்தல், சேமித்து வைத்தல் முதலிய காலங்களிலும் அவர்கள் அவ்விடத்தில் இருப்பார்கள். விதைகளின் மாதிரிகள் பிரித்தெடுக்கப்பட்டு விதை பரிசோதனை ஆய்வகத்திற்கு அனுப்பப்படும். பரிசோதிக்கப்பட்ட அந்த விதைகள் வரையறுக்கப்பட்ட தரத்தைப் பெற்றிருந்தால் அந்த விதைகளுக்குச் சான்றளிக்கப்படும்.

1971-72-ல் 12,000 ஏக்கர்கள் இந்த விதைச் சான்றளிக்கும் திட்டத்தின்கீழ் வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

### உரமிடும் திட்டம்.

உள்ளூர் எரு வளங்களை மேம்படுத்தல்.—கிராமப்புறங்களில் கிடைக்கக்கூடிய கழிவுப் பொருள்கள் அனைத்தையும் பயன் படுத்துவது, அவைகளை நல்ல தரமுள்ள கலப்பு உரமாக மாற்றுவது ஆகியவையே இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டத்தைச் செயல் படுத்துவதற்காக, கலப்பு உரமிடும் இடத்தை பராமரிக்கவும், நல்ல தரமுள்ள கலப்பு உரத்தைத் தயாரிப்பதில் தேவையான தொழில் நுட்ப ஆலோசனையை வழங்கவும் வேண்டி, உழவர்களுக்கும், ஊராட்சிகளுக்கும் உதவுவதற்கு கலப்பு உர வளர்ச்சி இன்ஸ்பெக்டர் ஒருவர் ஒவ்வொரு வட்டாரத்திலும் நியமிக்கப்பட்டார். வட்டார அளவில், மாவட்ட வேளாண்மை அதிகாரி (கலப்பு உரம்) ஒருவர் கலப்பு உர வளர்ச்சித் திட்டங்களுக்குப் பொறுப்பாக இருக்கிறார். இத் திட்டத்தின்கீழ் நிதி உதவி எதுவும் வகை செய்யப்படவில்லை. இந்தப் பணியாளர்களுக்கு ஆகும் செலவு, திட்டத்தின் கீழ் வராத செலவுகளில் சேர் செய்யப்படுகிறது.

இத் திட்டத்தின்கீழ் 1971-72-ஆம் ஆண்டில் 72 லட்சம் மெட்ரிக் டன்கள் கலப்பு எரு தயாரிக்கத் திட்டமிட்டுள்ளது.

கழிப்பு எருத் திட்டம்.—பெரிய ஊராட்சிகளிலும், சிறிய ஊராட்சிகளிலும் கிடைக்கக் கூடிய குப்பைகள் அனைத்தையும், மலக்கலவையும் தரமுள்ள எருவாக மாற்றுவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். மலக்கலவை எருப் பணியினை மேற்கொள்

வதற்காக, இடம். கருவிகள். முதலானவைகளை வாங்கவேண்டி, ஊராட்சிகளுக்கு ஊராட்சி ஒன்றிற்கு ரூ. 3,600 என்ற அதிக அளவுக்குட்பட்ட கடன்கள் வழங்கப்படுகின்றன. கடன்கள் கொடுப்பது தற்போது தள்ளிப்போடப்பட்டுள்ளது. எனினும், பெரிய ஊராட்சிகளுக்கு கொடுக்கப்படும் உதவித் தொகை தொடர்ந்து கொடுக்கப்பட்டு வருகிறது. உரத்தினை உற்பத்தி செய்யும் தொடர் இனச் செலவில் 25 சதவீதத்தை நேர் செய்வதற்கு ஊராட்சி ஒன்றிற்கு ரூ. 150 என்ற வரம்புக்குட்பட்டு உதவித் தொகை வழங்கப்படுகிறது. உதவித்தொகை கொடுப்பதற்காக ஒவ்வொரு ஆண்டும் திட்டத்தில் ரூ. 1 லட்சம் நிதி ஒதுக்கம் செய்யப்படுகிறது. நான்காவது திட்டக்கால அளவின் ஒவ்வொரு ஆண்டிற்குமான திட்டக் குறிக்கோள் அளவு 3 லட்சம் மெட்ரிக் டன்னாக செய்யப்பட்டுள்ளது.

மலக்கலவை எருத் திட்டத்தின்கீழ், ஒவ்வொரு நேர்விலும் ரூ. 150 என்ற அதிக அளவுக்கு உட்பட்டு, எருத் தயாரிப்புச் செலவின் மொத்தத்தில் 25 சதவீதம் உதவித் தொகையாக ஊராட்சிகளுக்கு வழங்கப்படுகிறது. நகர்ப்புற கலப்பு உரத் திட்டத்தின் கீழ் கலப்பு உரத்தை உற்பத்தி செய்வதற்காக இடங்கள், லாரிகள் ஆகியவைகளை வாங்குவதற்காக பேரூராட்சிகள், நகரியக் குழுக்கள் ஆகியவற்றிற்குக் கடனுதவி வழங்கப்படுகிறது. உற்பத்தி செலவில் 25 சதவீதம் அல்லது உண்மையான விரயம் ஆகிய இந்த இரண்டில் எது குறைவோ அது அவர்களுக்கு உதவித்தொகையாக வழங்கப்படுகின்றது.

**நுண்ணுயிர்களை உற்பத்தி செய்து அவற்றைக் குப்பிகளில் அடைத்து வழங்குதல்.**—பயிர்களின் வளர்ச்சிக்கும் மண் வளத்திற்கும் வகை செய்வதற்காக அதிக அளவில் உழவர்களுக்கு இந்த பயிற்றின் நெற்று நுண்ணுயிர்களை வழங்குவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். கோயம்புத்தூர், ஆடுதுறை, மதுரை, கோயில்பட்டி, காஞ்சிபுரம் ஆகிய 5 இடங்களில் உள்ள பிரிவுகள் நுண்ணுயிர்களை வளர்த்துக் குப்பிகளில் அடைத்து வழங்குவதில் ஈடுபட்டு வருகின்றன. ஒவ்வொரு பிரிவும் ஓர் ஆண்டுக்கு 10,000 குப்பிகள் உற்பத்தி செய்யும் என எதிர்ப்பார்க்கப்படுகிறது. குப்பி ஒவ்வொன்றும் ரூ. 2 வீதம் விற்கப்படுகின்றது. நான்காவது திட்டக் காலத்தின் இறுதியில் 50,000 குப்பிகள் உற்பத்தி செய்யப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

### நகர்ப்புற கலப்பு உரம்.

நகராட்சிகள், பேரூராட்சிகள் ஆகியவற்றில் கிடைக்கப்பெறும் குப்பைகள் அனைத்தையும், மலக் கலவையையும் மதிப்புள்ள கலவை உரமாக மாற்றுவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இப் பணியை மேற்கொள்வதற்காக, கலப்பு உரத்திற்கான இடத்தை அமைப்பதற்கேற்ற இடத்தை வாங்கவும், கலப்பு உர இடத்திற்கு பொதுவான சீரமைப்புக்களைச் செய்யவும், குப்பைகளை கலவை



உரத் தயாரிப்பு இடத்திற்கு அனுப்ப டிராக்டர்களும், தொடர் வண்டிகளும் வாங்கவும் உள்ளாட்சி மன்றங்களுக்குக் கடன்கள் வழங்கப்படுகின்றன.

கலப்பு உரத்தை உற்பத்தி செய்வதில் உள்ளாட்சி அதிகாரி மன்றங்களுக்கு ஊக்கமளிக்கும் பொருட்டு, கலப்பு உர உற்பத்தியின் செலவில் 25 சதவீதம் அல்லது உண்மையான விரயம் இதில் எது குறைவோ அது உதவித் தொகையாகக் கொடுக்கப்படுகின்றது. உதவித் தொகையைக் கொடுப்பதற்காக, நான்காவது திட்டக் காலத்தில் ஒவ்வொரு ஆண்டிற்கும் ரூ. 1 லட்சம் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. 1971-72-ல் கடன் வழங்குவது குறித்து ரூ. 6 லட்சமும், உதவித் தொகை வழங்குவது தொடர்பாக ரூ. 1 லட்சமும் செலவிடக் கருதப்பட்டுள்ளது. இந்த ஆண்டிற்கான திட்டக் குறிக்கோள் அளவு 8.50 மெட்ரிக் டன் கலப்பு உரமாகும்.

### தழை உரத் திட்டம்.

உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்காக தாள் உரங்களையும், தழை உரங்களையும் பயன்படுத்துவதனால் கரிம உரத்தைக் கொண்ட மண் வளத்தினை கூடுதலாக்குவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். தன்னிடத்தே அதிக உர வளத்தைக் கொண்டுள்ளதால், தாள் உரம் மண் வளப் பெருக்கத்தைத் திறம்படப் பேணிவருகிறது. தாள் உரவிதைகளைக் கொள்முதல் செய்யவும், விற்கவும் இத்திட்டம் வகை செய்கிறது. இந்த விதைகள் அங்காடிகளில் நிலவி வரும் விலைகளில் கொள்முதல் செய்யப்படுகின்றன. இந்த விதைகளை விற்பனை செய்வதில் அனுமதிக்கப்பட்டுவந்த உதவித் தொகை இப்போது நிறுத்தப்பட்டுள்ளது.

நான்காவது திட்டக் காலத்தில் முதல் ஆண்டில் அதாவது 1969-70-ல் 3,500 டன்கள் தாள் உரவிதைகள் வழங்கப்படவேண்டுமென்று குறிக்கோள் அளவு நிச்சயிக்கப்பட்டிருக்க 2,342 மெ. டன்கள் பசுந்தாள் உர விதைகள் வழங்கப்பட்டன. தாள் உர விதைகள் விதைக்கப்பட்ட பகுதிகள் 14.20 லட்சம் ஹெக்டேர்கள். இதில், வணிகர்களால் வழங்கப்பட்ட விதைகள் தானே உரமாக ஆன தாள் உரங்கள், உழவர்கள் விதைத்த விதைகள் ஆகியவை அடங்கும். 1970-71-ல் 2,000 மெ. டன்கள் குறிக்கோள் அளவுக்கு மேல் 2,045 மெ. டன்கள் தாள் உர விதைகள் வழங்கப்பட்டன. விதைகள் வழங்கப்பட்டதின்கீழ் 1971-72-க்கான குறிக்கோள் அளவு 2,100 மெ. டன்களாகும். விதைகள் நடப்பட்ட பகுதி 23.72 லட்சம் ஹெக்டேர்களாகும்.

### இரசாயன உரங்கள்.

ஆதாயமளிக்கத் தக்க வகையில் பயிர்கள் விளைவிப்பதற்கு இரசாயன உரங்கள் இன்றியமையாதனவாகும். மிகுபயன்தரும் தானிய ரகங்கள் பயிரிடும் திட்டத்தைச் செயலுக்குக் கொண்டு வந்த பிறகு, இரசாயன உரங்களைப் பயன்படுத்துவதில் அதிகக் கவனம் செலுத்தப்பட்டது. உள்நாட்டு உர உற்பத்தியாளர்கள் உற்பத்தி செய்த இரசாயன உரத்தின் மீதானக் கட்டுப்பாட்டை

தளர்த்தியதன் காரணமாக மத்திய உரத் தொகுப்பு இறக்கு மதியாகும் உரங்களே மட்டும் விற்பனை செய்துவருகிறது. உள்நாட்டு உர உற்பத்தியாளர்களிடமிருந்து கிடைக்கக் கூடிய உர அளவினை வழங்குவதற்கு இந்த அரசு உறுதியளிக்கிறது. எஞ்சிய தேவை களை மத்திய உரத் தொகுப்பிடமிருந்து பெற்று நேர் செய்யுமாறு இந்திய அரசு கேட்கப்பட்டுள்ளது. இதனால், வேளாண்மை உற்பத்தித் திட்டங்களின் உரத் தேவைகள் அனைத்தும் முழுமை யாக நிறைவு செய்யப்படுகிறது.

முன்னர், இம்மாநிலத்தில் பல்வேறு கூட்டுறவுச் சங்கங்கள் உரம் வழங்கும் பணியில் ஈடுபட்டிருந்தன. மாவட்டங்கள் அனைத் திலும் உர விற்பனையை சோதனை அடிப்படையில் தனியார் வணி கர்களையும் ஊராட்சி ஒன்றியங்களையும் ஈடுபடுத்த அரசு முடிவு எடுத்ததன் விளைவாக தற்போது உரம் வழங்குவதில் கூட்டுறவுச் சங்கங்கள், தனி வணிகர்கள் ஊராட்சி ஒன்றியங்கள் ஆகியவை ஈடுபட்டுள்ளன. 140 உரக் கலவை நிறுவனங்கள் உள்ளன. 11,000 உர விற்பனையாளர்களும் இருக்கின்றனர். உரம் விற்க உரிமம் வழங்கும் ஏற்பாட்டிற்குப் பதிலாக, தாராளமாகப் பதிவு செய்து கொள்ளும் ஏற்பாடு ஒன்று செயல்படுத்தப்பட்டுள்ளது. இதன் விளைவாக, இம் மாநிலத்தின்கீழ் மூலைமுடுக்குகளிலெல்லாம் எண்ணிறந்த உர விற்பனை நிலையங்களை ஏற்படுத்த வழிகோலப் பட்டுள்ளது. இதனால் உழவர்களுக்கு எளிதில் உரங்கள் கிடைக் கின்றன. தஞ்சாவூர் நீங்கலாக, எல்லா மாவட்டங்களிலும் அரசு விற்பனையாளராக தமிழ் நாடு கூட்டுறவு விற்பனை கூட்டமைப்பை அரசு நியமித்திருக்கிறது. தஞ்சாவூரில் தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனைக் கூட்டமைப்பு அரசு விற்பனையாளராகத் தொடர்ந்து செயல்பட்டு வருகிறது.

மாநிலத்தில் உரங்களின் உபயோகம் ஒவ்வொரு ஆண்டும் பெருகிவருகிறது. கடந்த ஆண்டுடன் இக்கூடுதலை ஒப்பிடும்போது உர உபயோகம் 1966–67-ல் 21 சதவீதமும், 1967–68-ல் 13 சதவீதமும் 1968-69-ல் 17 சதவீதமும், 1969-70 ல் 31 சதவீதமும் அதிகமாயி ருப்பது தெரியவரும், நைட்ரஜன் உரவகைகளின் கணக்கில் சொன்னால், 1966-67-ல் உர உபயோகம் 85,000 டன்களாக இருந்தது. 1969–70-ல் 1,48,000 டன்களாக உயர்ந்தது. மாநிலம் முழுவதும் அரசு வாணிபத் திட்டங்களின்கீழ் போதிய இருப்பு இருந்ததனால் 1970-71-ல் உரம் வழங்கும் நிலை மனநிறைவளிக்கும்படி இருந்தது. 1970-71-க்கான உரம் பயன்படுத்தும் குறிக்கோள் அளவு 1.80 லட்சம் டன் நைட்ரஜன் உரங்களும், 0.60 லட்சம் டன் பாஸ்வர உரங்களும், 0.50 லட்சம் டன் பொட்டாஷ் உரங்களும் ஆக இருந்தது. குறிக்கோளளவு இப்படி இருக்க, 1970-71-ல் உர உப யோகம் உச்ச நிலையை அடைந்தது. இந்த ஆண்டில் 1.73 லட்சம் டன் நைட்ரஜன் உரங்களும், 0.72 லட்சம் டன் பாஸ்பர உரங் களும், 0.51 லட்சம் டன் பொட்டாஷ் உரங்களும் பயன் படுத்தப் பட்டுள்ளன. முந்திய ஆண்டை விட 1970-71-ல் நைட்ரஜன் உரங் கள் 16.8 சத வீதமும், பாஸ்வரஸ் உரங்கள் 71.4 சத வீதமும், பொட்டாஷ் உரங்கள் 54.5 சதவீதமும் அதிகமாய்ப் பயன்படுத்தப் பட்டன. தொகுப்பு, தொகுப்பில்லாத நிறுவனங்களிடமிருந்து உரங்கள் வழங்குவது மேம்பாடடைந்ததன் காரணமாக, நல்ல கோணிகளில் உரங்களே வழங்கச் செய்வதற்கு அரசு சிறப்பான முயற்சிகளே எடுத்து வருகிறது. உழவர்கள் ஒரு மூட்டைக்குக் குறைவாக சிறுசிறு அளவுகளில் உரம் வேண்டுமென்று கேட்டாலும் அவர்களுக்கு அதை வழங்குமாறு மாவட்ட ஆட்சியாளர்கள் கட்டளையிடப்பட்டுள்ளனர். உழவர்கள் மேலும் மேலும் உரங்களைப் பயன்படுத்த ஊக்குவிக்கவும், வரையறுக்கப்பட்ட அளவுகளில் சரி சமமான அளவில் உரங்களைப் பயன்படுத்த உழவர்களுக்குப் பயிற்றுவிக்கவும் சிறப்பான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.



### கடன் வசதிகள்.

மும்முர உரத் திட்டத்தின் கீழ், கூட்டுறவு வங்கிகள் மூலமும், வணிக வங்கிகள் மூலமும் கிடைக்கும் நிறுவன நிதியைத்தவிர, உரங்கள் வகையிலும் உழவர்களுக்குக் கடன்கள் வழங்கப்படு கின்றன. கூட்டுறவுச் சங்கங்களில் அவர்கள் உறுப்பினர்களா யிருந்தாலும் இல்லாவிட்டாலும் மிகுபயன் தரும் தானியத் திட்டத்தில் கலந்துகொள்ளும் உழவர்கள் உட்பட எல்லோருக்கும் கடன்கள் கொடுக்கப்படுகின்றன. மாநிலத்தில் உள்ள மூழு நிதித் திட்டத்தின் கீழ் வரும் உழவர்களும் இதன் பயனைப் பெறுவர். உழவர்களுக்குக் கடனைக் கொடுப்பதற்காக தக்காவிக் கடன் குறித்து அரசு வாணிகத் திட்டத்தின் கீழ் மாநில அரசு வழங்கும் உரங்களின் விலையில் ஆறில் ஒரு பகுதியை கடனுதவியாக இந்திய அரசு கொடுக்கிறது. இந்திய அரசிடமிருந்து பெற்ற உதவியைப் பயன்படுத்தி மும்முர உரமிடுதல் திட்டத்தின் கீழ் உழவர்களுக்குக் கடன் தொகையைக் கொடுக்க மாநில அரசு நிதி ஒதுக்கீடுகளைச் செய்துள்ளது. ஏக்கர்கள் அடிப்படையிலும், தனிப்பட்டவர்கள் அடிப்படையிலும் அவ்வப்போது அரசினால் முடிவு செய்யப்படுகிற மேல்வரம்புக்குட்பட்டு பல்வேறு பயிர்களுக்கான கடன்கள் கொடுக்கப்பட்டு வருகின்றன. 1970–71-ஆம் ஆண்டில் இத் திட்டத்தின் கீழ் உணவுப் பயிர்களுக்கு மட்டும், அதாவது நெல் சிறுதானியங்கள் ஆகிய பயிர்களுக்கு மட்டும் கடன்கள் வழங்கப் பட்டன. இத்திட்டத்தின் கீழ் 1970–71-ல் ரூ. 625 லட்சம் ஒப்பளிக்கப்பட்டு பின் வழங்கப்பட்டது.

1971–72-ஆம் ஆண்டுக்கான இரசாயன உரங்களின் தேவைகள், அவைகளைப் பயன்படுத்தல் ஆகியவற்றின் குறிக்கோள் அளவு மதிப்பீடுகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

| பயன்படுத்தல். | நைட்ரஜன் உரம். | பாஸ்பரம் உரம். | பொட்டாஷ் உரம். |
|---|---|---|---|
| | (மெட்ரிக் டன்களில்.) | | |
| முன்பருவப் பயிர் (Kharif) 1971, | 85,000 | 28,000 | 24,000 |
| பின்பருவப் பயிர்கள் (Rabi), 1971–72. | 1,05,000 | 32,000 | 26,000 |
| மொத்தம், 1971–72 .. | 1,90,000 | 60,000 | 50,000 |

| உரத் தேவைகள். | நைட்ரஜன் உரம். | பாஸ்பரம் உரம். | பொட்டாஷ் உரம். |
|---|---|---|---|
| | (மெட்ரிக் டன்களில்.) | | |
| முன்பருவப்பயிர், 1970-71 .. | 55,600 | 8,200 | 22,250 |
| 1971 .. | .. | .. | .. |
| பின்பருவப் பயிர், 1971-72 .. | 1,05,000 | 32,000 | 26,000 |
| மொத்தம், 1971-72 .. | 1,60,600 | 40,200 | 48,250 |

1971-72 முதல் காலாண்டுக்காக 20,000 டன்கள் யூரியாவை இந்திய அரசு ஒதுக்கியுள்ளது.

உழவர்களின் துயர் தணிப்பு துலிப்பதைக் கருத்தில் கொண்டு, 1—3—1969-க்கு முன்னால் வாங்கிய அம்மோனியம் சல்பேட், அம்மோனியம் சல்பேட் நைட்ரேட், யூரியா ஆகியவை தவிர பிற இரசாயன உரங்களின் பழைய இருப்பை தீர்வை விதிக்கப்படு வதற்குமுன் உள்ள விலையில் அதாவது 1—3—1969-க்கு முன்னால் விற்ற விலையில் விற்க அரசு அனுமதித்துள்ளது. இந்த சலுகை விற்பனை 1970-71 ஆண்டு முழுவதும் செயலில் இருந்தது. இந்த சலுகை விற்பனையை 1971-72-லும் தொடர்ந்து நடத்த முடிவு செய்து உள்ளது. யூரியா, பொட்டஸ் ம்யூரியேட் ஆகியவற்றின் தொகுப்பு விலையில் முறையே மெட்ரிக் டன் ஒன்றுக்கு ரூ. 20-ம், ரூ. 10-ம் குறைந்திருப்பதாக இந்திய அரசு தற்போது அறிவித்துள்ளது.

உரம் வாங்குவோருக்கு நம்பிக்கை அளிக்கும் வகையில் பழைய இருப்பு டை-அம்மோனியம் பாஸ்பேட், ம்யூரியேட் ஆப் பொட் டாஷ், நான்கு வகை என். பி. கே. காம்ப்ளக்ஸ் அம்மோனியம் சல்பேட் யூரியா ஆகிய உரங்களை மீண்டும் புதிய பைகளில் நிறைத்து சரியான எடையுடன் கிடைப்பதற்காக அரசு ஆணை பிறப்பித்துள்ளது. மேற்சொன்ன முறையில் விற்பனை செய்ய 50 கிலோ கொண்ட மூட்டை ஒன்றுக்கு செலவு ரூபாய் 2 (இரண்டு) ஆகும். இதில் புதிய சாக்குகளின் விலையை மட்டும் வாங்குவோரிட மிருந்து வசூலிக்கப்படும். எடை குறைவான மூட்டைகளை சரியான எடையுள்ளதாக மாற்ற ஆகும் செலவை அரசு ஏற்றுக் கொள்ளும். பல்வேறு மாவட்டங்களில் உள்ள பழைய உர இருப் புகள் மேற்சொன்ன முறையில் நிறைந்த புதிய மூட்டைகளாக மாற்றப்பட்டுள்ளன. ஒரு மூட்டைக்கும் குறைவாக உரங்கள் தேவையுள்ள விவசாயிகட்கும் அவர்கள் தேவைக்கேற்ப கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதற்காக கூடுதலாக சில்லரை விற்பனை விலைக்குமேல், ஓர் சிறு தொகையை பெயரளவில் வசூலிக்கவும் மாவட்ட ஆட்சியாளர்களுக்கு அனுமதி வழங்கப் பட்டுள்ளது.





தமிழ் நாட்டில் உரங்களின் இருப்பு நிலைமை மனநிறைவளிப்ப தாக இருக்கிறது. 15—6—1971 அன்றுள்ளபடி தொகுப்பு உரங் களின் இருப்பு நிலைமை பின்வருமாறு உள்ளது:—

| | உரம். | மெட்ரிக் டன்களில். |
|---|---|---|
| 1. | அம்மோனியம் சல்பேட் .. .. .. | 24,129 |
| 2. | யூரியா .. .. .. .. .. | 31,825 |
| 3. | அம்மோனியம் சல்பேட்-நைட்ரேட் .. .. | 47 |
| 4. | கால்சியம அம்மோனியம் நைட்ரேட்— | |
| | 20·5 சதவீதம் .. .. .. | 112 |
| | 26 சதவீதம் .. .. .. .. | 1,011 |
| 5. | டை-அம்மோனியம் பாஸ்பேட் .. .. .. | 31,871 |
| 6. | அம்மோனியம் பாஸ்பேட் .. .. .. | 10,993 |
| 7. | அம்மோனியம் குளோரைட் .. .. .. | 1,555 |
| 8. | பொட்டாசியம் மியூரெட் .. .. .. | 367 |
| 9. | பொட்டாஷ் ஸல்பேட் .. .. .. | 180 |
| 10. | என்.பி.கே. கலவை— | |
| | 14: 14: 14 .. .. .. .. | 5,867 |
| | 15: 15: 15 .. .. .. .. | 1,925 |
| | 12: 24: 12 .. .. .. .. | 2,427 |
| | 14: 28: 14 .. .. .. .. | 929 |

### வேளாண்மை மறுகடனுதவிக் கழகத் திட்டம்.

வேளாண்மை மேம்பாட்டை அடிப்படையாகக் கொண்ட வளர்ச்சித் திட்டங்களுக்கு வேளாண்மை மறுகடனுதவிக் கழகம் கடன் வசதிகளை வழங்கி வருகிறது. கூட்டுறவு நிறுவனங்கள் மூலமாக வேளாண்மைத் துறைக்கு கடன் வசதிகள் அனைத்தையும் அளிக்கவும் அரசு கொள்கையளவில் முடிவு செய்து உள்ளது. எனவே, வேளாண்மை மறுகடனுதவிக் கழகம் உதவி செய்யும் திட்டங்களைப் பொறுத்தவரையில் கிணறு வெட்டுதல், கிணறுகளை ஆழப்படுத்துதல், விசையேற்றங்களை நிறுவுதல், கால்நடை, கோழி வளர்ச்சி முதலிய வேளாண்மை வளர்ச்சித் திட்டங்களுக்கு நிலவளவங்கிகள் நீண்ட காலக் கடன்களையும் கூட்டுறவுக் கடன் வழங்கு வங்கிகள் மாநிலக் கூட்டுறவு வங்கி ஆகியவை நடுத் தரக்கால கடன்களையும் வழங்கி வருகின்றன.

மதுரை மாவட்டத்தில் திராட்சை வளர்ச்சித் திட்டம், தென் ஆர்க்காடு மாவட்டத்தில் முந்திரி வளர்ச்சித் திட்டம், கன்னியா குமரி மாவட்டத்தில் தென்னை வளர்ச்சித் திட்டம், பழனி மலையில் காப்பி பயிர் வளர்ச்சித் திட்டம், நீலகிரியில் தேயிலை வளர்ச்சித் திட்டம் முதலிய 11 திட்டங்கள் அரசினால் பரிசீலிக்கப்பட்டு வருகின்றன.

செம்மறியாடு வளர்ப்பினை மேம்படுத்துவதற்காக 39 திட்டங்களை கால் நடை வளர்ச்சி இயக்குநர் வகுத்துள்ளார். இவை வேளாண்மை மறுகடனுதவிக் கழகத்திடமிருந்து உதவி

பெறுவதன் மூலம் செயல்படுத்தப்பட வேண்டும். ஆகவே இத்திட்டங்கள் மேற்படிக் கழகத்திற்கு அனுப்பி வைக்கப் பட்டுள்ளன. இத்திட்டங்களுக்கான உதவி பற்றி மேற்படிக் கழகம் ஒப்புவிப்பு வழங்குவது எதிர்பார்க்கப்படுகிறது.

வேளாண்மை மறுகடனுதவிக் கழகத்திடமிருந்து உதவி பெற்று புதுக்கோட்டை கோட்டத்தில் கலப்புப் பண்ணைப் பிரிவுகளை ஏற் படுத்துவதற்கான திட்டம் ஒன்றை கால்நடை வளர்ச்சி இயக்குநர் வகுத்துள்ளார். இத்திட்டத்திற்கு ஏற்படும் செலவு ரூ. 144 லட்சமாகும். இத்திட்டம் குறித்து கால்நடை வளர்ச்சி இயக்கு நருடனும் கூட்டுறவுச் சங்கப் பதிவாளருடனும் கலந்தாலோசித்து அரசு பரிசீலித்து வருகிறது.

வேளாண்மை மறுகடனுதவிக் கழகத்திடமிருந்து உதவி பெற்று திருநெல்வேலி மாவட்டத்தில் படகு கட்டும் தொழிலை ஏற்படுத்துவதற்கான திட்டம் ஒன்றை மீனவத்துறை இயக்குநர் வகுத்துள்ளார். இத் திட்டத்திற்கு ஏற்படும் செலவு ரூ. 78.70 லட்சமாகும்.

### மண்வளப் பரிசோதனை ஆய்வுக்கூடங்கள்.

தமிழ்நாட்டில் உழவர்களின் தேவைகளை நிறைவு செய்யும் பொருட்டு தற்போது 10 மண்வளப் பரிசோதனை ஆய்வுக்கூடங்கள் செயல்பட்டு வருகின்றன. அவை பின்வருமாறு :—

| | இடம். | ஒதுக்கப்பட்ட மாவட்டங்கள். |
|---|---|---|
| 1 | கோயம்புத்தூர் .. | .. கோயம்புத்தூர், நீலகிரி. |
| 2 | ஆடுதுறை .. | .. தஞ்சாவூர். |
| 3 | கோயில்பட்டி .. | .. திருநெல்வேலி, கன்னியாகுமரி. |
| 4 | கடலூர் .. .. | .. தென் ஆர்க்காடு. |
| 5 | குடியாத்தம் .. .. | .. வட ஆர்க்காடு. |
| 6 | மதுரை .. .. | .. மதுரை. |
| 7 | காஞ்சீபுரம் .. | .. செங்கற்பட்டு. |
| 8 | சேலம் .. .. | .. சேலம், தருமபுரி. |
| 9 | பரமக்குடி .. .. | .. இராமநாதபுரம். |
| 10 | திருச்சிராப்பள்ளி .. | .. திருச்சிராப்பள்ளி. |

மண்வளப் பரிசோதனை இயல் ஊர்திப் பிரிவு ஒன்றை இந்திய அரசு தமிழ்நாடு அரசுக்கு ஒதுக்கியுள்ளது. இது ஆடுதுறையில் செயல்பட்டு வருகிறது.

வளர்ச்சி வட்டார அளவில் செழிப்புத் தன்மை பற்றிய ஆய்வு ஏற்கெனவே முடிக்கப்பட்டுவிட்டது. கிராம அளவில் செழிப்புத் தன்மைப்பற்றிய ஆய்வு தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ளது. இத்திட்டமும் முடிவடையும் தறுவாயில் இருக்கிறது.

கிராம அளவில் செழிப்புத்தன்மை பற்றிய ஆய்வின் கீழ், தஞ்சாவூர் மாவட்டம் நீங்கலாக (மாவட்ட மும்முரை வேளாண்மை நிலையங்கள்) ஏனைய எல்லா மாவட்டங்களிலும் பாசனமளிக்கப் படும் பகுதியில் ஒவ்வொரு 25 ஏக்கருக்கும் மண் மாதிரி—ஒன்று



பெறப்படுகிறது. தஞ்சாவூர் மாவட்டத்தில், பாசனம் பெறும் பகுதி யில் ஒவ்வொரு ஐந்து ஏக்கருக்கும் மண் மாதிரிகள் பெறப்படு கின்றன. செழிப்புத்தன்மைப்பற்றிய வரைபடங்கள் தயாரிக்கப் படுகையில், பயிர்களுக்கு ஏற்ற உரங்களின் அளவு குறித்து அந்தந்த இடத்திலேயே பரிவுரை செய்வது எளிதாகும்.

ஆடுதுறையிலுள்ள மண்வளப் பரிசோதனை ஆய்வுக்கூடம் நீங் கலாக 1969-70-ல் ஒவ்வொரு ஆய்வுக்கூடத்திலும் ஆண்டொன்றுக்கு 15,000 மண் மாதிரிகள் பகுப்பாய்வு செய்யப்படவேண்டும் என்ற திட்ட இலக்கு முடிவு செய்யப்பட்டுள்ளது. இவற்றில் நீர் குறித்த மாதிரிகள் அடங்காது. ஆடுதுறையிலுள்ள ஆய்வுக்கூடம் ஆண் டொன்றுக்கு 48,000 மண் மாதிரிகளை பகுப்பாய்வு செய்ய வேண்டும். 1970–71-ல், ஆடுதுறை நீங்கலாக ஒவ்வொரு ஆய்வுக் கூடத்திற்கும் இலக்குகள் திருத்தியமைக்கப்பட்டு நிச்சயிக்கப் பட்டுள்ளன. ஆடுதுறை தவிர ஏனைய மண் வளப் பரிசோதனை ஆய்வுக்கூடங்கள் ஆண்டொன்றுக்கு 30,000 மண் மாதிரிகளை ஆய்வு செய்யவேண்டும் என்னும் குறிக்கோள் அளவு நிச்சயிக்கப் பட்டுள்ளது. நீர் குறித்த மாதிரிகள் இவற்றில் அடங்கா. ஆடுதுறையிலுள்ள ஆய்வுக்கூடம் ஆண்டொன்றுக்கு 1,00,800 மண் மாதிரிகளைப் பகுப்பாய்வு செய்யவேண்டியுள்ளது.

### பயிர்ப் பாதுகாப்புத் திட்டம்.

உணவுப் பயிர்களும் ஏனைய பயிர்களும் பூச்சிகளினாலும் நோய் களினாலும் பாதிக்கப்படுதனின்றும் பாதுகாக்க உழவர்களுக்குத் தமிழ்நாடு வேளாண்மைத் துறை பூச்சிக்கொல்லி மருந்துகளை வழங்கி வருகின்றது. பயிர்ப் பாதுகாப்பு முறைகளைப் பின்பற்றவும் பயிர்கள் பூச்சிகளினால் பாதிக்கப்படுவதினின்றும் பாதுகாக்கவும் வேண்டி ஊக்கமளிக்க சலுகை விதங்களில் பூச்சிக் கொல்லி மருந்துகளை வாங்க உழவர்கள் அனுமதிக்கப்படுகின்றனர். 1967 (1967 ஆகஸ்டு)-ஆம் ஆண்டு வரை, உணவுப் பயிர்கள் குறித்து செலவில் 75 சதவீத விலையிலும், பருத்தி, கரும்பு, வேர்கடலை, எள், தென்னை, காய்கறிகள் முதலிய உணவுப் பயிரில்லாத பயிர்கள் குறித்து பாதிவிலையிலும், கிருமிநாசினிகளும் காளான் ஒழிப்பு மருந்துகளும் வழங்கப்பட்டன. 1965-66-ல் மூன்றாம் பகுதிகளில் உள்ள புகையிலைப் பயிர்களும் இந்த 50 சதவீத உதவிச் சலுகை நீட்டிக்கப்பட்டது.

திட்ட ஆணைக்குழுவின் ஆலோசனையின்படி, உதவித் தொகை வழங்கும் திட்டம் படிப்படியாக கைவிடப்பட வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது. அதன்படி, 1969–70-ல் உதவித் தொகை வழங்குவது 35 சதவீதத்திலிருந்து 30 சதவீதமாகவும் 1970–71-ல் 15 சதவீதமாகவும் குறைக்கப்பட்டது. இதனால் உழவர்கள் அடைந்துவரும் இடர்பாட்டினைத் தமிழ்நாடு அரசு அறிந்து கொண்டது. அதனால் 1971–72-ஆம் ஆண்டிலும் இந்த 15 சதவீத சலுகையைத் தொடர்ந்து நீடித்துவர முடிவு செய்தது.

1970–71-ல் விமான மூலம் பூச்சிகொல்லி மருந்து தெளிக்கும் பணியில் ஒன்பது நிறுவனங்கள் ஈடுபட்டன. ஹெலிகாப்டர்கள்

இடைக்காத பகுதிகளில் விமானங்கள் மூலம் மருந்து தெளிப்பது தொடங்கப்பட்டது. இது குறித்து உழவர்களிடமிருந்து ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 5 கட்டணமாக வசூலிக்கப்படுகிறது. இக்கட்டணம் எல்லாப் பயிர்களுக்கும் உட்பட்டதாகும். பூச்சிக்கொல்லி மருந்துகள் ஒப்பந்த நிறுவனங்களிடமிருந்து வாங்கப்பட்டு வேளாண்மை விற்பனை நிலையங்கள் மூலமாக சலுகை விலையில் உழவர்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன. நச்சுத்திறன் குறைவாக உள்ள இரசாயன உரங்களை விற்க கூட்டுறவு நிறுவனங்களும் அனுமதிக்கப்படுகின்றன. இவை உழவர்களுக்குச் சலுகை விலையில் இரசாயன உரங்களை வழங்கி வருகின்றன.

பல்வேறு வேளாண்மைக் கோட்டங்களிலிருந்து பூச்சி இயல் வல்லுநராலும், பூச்சி இயல் இணை பேராசிரியராலும் பெறப்படும் விவரங்கள் மூலம், பூச்சி நோய்த்தாக்குதல் பற்றிய விவரங்கள் ஒவ்வொரு வாரமும் வானொலியில் ஒலிபரப்பப்பட்டு வருகின்றன. ஒலிபரப்பு அறிக்கைகள் எல்லா மாவட்ட வேளாண்மை அதிகாரிகளுக்கும் ஊராட்சி ஒன்றியங்களுக்கும் அனுப்பப்பட்டு வருகின்றன. இதனால் ஊராட்சி ஒன்றியங்கள் தங்கள் கோட்டங்களில் பூச்சி, நோய் தாக்குவதைக் கட்டுப்படுத்த முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள இயலுகிறது.

1970–71-ல் (1971 ஜனவரி முடிய) திட்ட இலக்குகள், எய்திய சாதனைகள் பற்றிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| | 1970–71 திட்ட இலக்கு. | 1971 ஜனவரி முடிய எய்திய சாதனை. |
|---|---|---|
| உணவுப் பயிர்கள் (லட்சம் ஏக்கரில்) .. .. | 66·00 | 57·146 |
| தெளிப்பான்கள் (தடவைகள்) .. .. | 5,560 | 5,446 |
| தூவு கருவிகள் (தடவைகள்) .. .. .. | 500 | 683 |

**பயிர்ப் பாதுகாப்புச் சாதனம்.**—பயிர்ப் பாதுகாப்புச் சாதனங்களை அதிக அளவில் பயன்படுத்தி பயிர்ப் பாதுகாப்பு முறைகளைப் பின்பற்ற உழவர்களுக்கு ஊக்கமளிக்கும் நோக்கத்துடன், கையினால் இயக்கப்படும் தெளிப்பான்களை ஒப்பந்த அடிப்படையில் வழங்க 25 சதவித உதவித் தொகையை அரசு அனுமதித்துள்ளது. ஊராட்சி ஒன்றியங்கள் உழவர்களுக்கு இக்கருவிகளை வழங்குகின்றன. ஒவ்வோர் ஆண்டும் முறையே 5,000, 400 தெளிப்பான்கள், தூவு கருவிகள் (கையினால் இயக்கப்படுபவையும், மின்சக்தியினால் இயக்கப்படுபவையும்) வழங்கப்பட்ட வேண்டும் என்ற திட்ட இலக்கு நிச்சயிக்கப்பட்டுள்ளது.

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி : மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

தமிழ் நாட்டு ஆளுநரது இல்லத்தை மாற்றுவது குறித்து மாண்புமிகு முதலமைச்சர் விடுத்த வேண்டுகோளை மாண்புமிகு பிரதம அமைச்சர் நிராகரித்து விட்டாரா ?

[29th July 1971

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, இந்தியத் தகவல் அமைச்சர் இவ்வரசு இயம்பிய யோசனையைப் புறக்கணிக்கவில்லை. ஆளுநர் மாளிகைகளுக்கான செலவில் சிக்கனத்தை ஏற்படுத்தவேண்டியது தேவையினை அவர் வலியுறுத்தி யுள்ளார். அவரிடமிருந்து அடிப்படையில் உள்துறை அமைச்சகம் இச்செயல் பற்றிய சாத்தியக் கூறுகளை ஆராய்ந்து வருவதாகவும் அவர் கூறியுள்ளார்.

**திரு. வி. ஈஸ்வரமூர்த்தி :** தலைவர் அவர்களே, ஆளுநர் மாளிகையை மாற்றுவதன் மூலம் ஆண்டுதோறும் மாநில அரசிற்கு எவ்வளவு ரூபாய் மிச்சமாகும் என்ற கணக்கு மத்திய அரசிற்கு அனுப்பப்பட்டதா ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** எவ்வளவு ரூபாய் மிச்சமாகிறது என்ற கணக்கு இல்லை. கவர்னர் பெரிய மாளிகையிலிருந்து சிறிய இடங்களுக்கு வந்து அதை அவர்கள் வாழ்வதற்காக எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கூறுவது நாட்டில் நாம் உருவாக்க நினைக்கிற சமதர்ம சமுதாயத்திற்கு அடிப்படையாக அமையும் என்பதுதான் இந்த அரசின் கொள்கையாகும்.

**திரு. கே. எஸ். அப்துல் வகாப் :** ஆளுநர் மாளிகை மாற்றுவது பொறுத்து அரசு மத்திய அரசிற்கு எழுதிய காலத்தில் இப்போதுள்ள ராஜபவனத்திலிருந்து எந்த இடத்திற்கு ஆளுநர் செல்ல வேண்டுமென்று ஒதுக்க உத்தேசமிருந்தது ? இப்போது ராஜபவனத்திற்கு ஆகும் செலவு என்ன ? புது இடத்திற்கு மாற்றப் பட்டால், எவ்வளவு செலவு குறைக்கப்படும் என்ற உத்தேச மிருந்தது?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** பொதுவாக ராஜ பவனத்திற்கு ஆகிற செலவு குறைக்கப்பட வேண்டுமென்று மத்திய அரசும் இப்போது கருதத் தொடங்கியிருக்கிறது. அதற்கான அறிக்கைகள் எல்லாம் மத்திய அரசு பிறப்பித்திருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவார்கள். கவர்னர் மாளிகையை மாற்றுவது என்று எண்ணியிருந்த இடம் 'காஞ்சி' என்று அழைக்கப்படுகிற பழைய ஜி.ஜி. அவர்கள் இருந்த இடமாகும். அங்கேதான் மாற்றுவதாக இருந்தோம். ஆனால் இந்தியப் பிரதமர் அவர்கள் இது தமிழ்நாட்டு கவர்னரைப் பொறுத்து மாத்திரம் முடிவெடுக்க வேண்டிய பிரச்னையில்லை, இந்தியாவிலுள்ள எல்லா மாநில கவர்னர்களையும் அலுசரித்து அகில இந்திய நீதியில் இதைப்பற்றி முடிவெடுக்கவேண்டுமென்று எடுத்துச்சொன்னார்கள். இப்போது கவர்னருக்கு ஆகிற செலவைப் பொறுத்து, அவர் சம்பளமாக 1971-72-ல் ரூ. 52,800-ம் கவர்னர் செயலகத்திற்கும், செயலாளர் அலுவலர் சம்பளமாக ரூ. 1,19,500-ம், கவர்னர் மாளிகையில் வேலை செய்யும் பணியாளர்கள் சம்பள மாகவும், தோட்டப் பணிகளுக்கும் பாதுகாப்பிற்கும் ரூ. 3,59,000-ம்



29th July 1971]

கவர்னர் மாளிகை அலுவலர்கள் விட்டுப் பராமரிப்புக்காக ரூ 50,0 0-ம் ஆக ரூ. 5.81,300 இப்போது ஆகிறது. நான் ஏற்கனவே சொல்லியதைப் போல, மாளிகையை மாற்றுவதால் செலவு சிக்கனம் என்பதைவிட சமதர்ம சமுதாயத்தை உருவாக்க வேண்டு மென்ற அடிப்படையில் பெரிய மாளிகையிலிருந்து அவர்களுக்குத் தேவையான வசதி வாய்ப்புகள் கொண்ட சிறிய இடங்களுக்கு கவர்னர் மாறவேண்டுமென்பதுதான் தமிழக அரசின் கொள்கை யாகும். அது அகில இந்திய நீதியில் ஆராயப்பட வேண்டுமென்று சொன்ன காரணத்தால், இப்போது அதற்கான உத்தரவு வரும் வரையில் அந்த யோசனையை ஒத்தி வைத்திருக்கிறோம்.

*American Peace Corps Volunteers*

* 300 Q.—THIRU V. ISVARMURTI : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(a) the number of American Peace Corps Volunteers working in the State as on date; and

(b) the areas of their work?

**அமெரிக்க அமைதி படைத் தொண்டர்கள்**

**திரு. வி. ஈஸ்வரமூர்த்தி :** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இம்மாநிலத்தில் இன்றளவு பணி புரிந்து வரும் அமெரிக்க அமைதி படைத் தொண்டர்களின் எண்ணிக்கை என்ன?

(இ) அவர்கள் பணிபுரியும் பகுதிகள் யாவை ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** (அ) 43.

(இ) மாவட்டம் வாரியாக பணிபுரியும் தொண்டர்களின் எண்ணிக்கை அம்மாவட்டங்களுக்கு நேர்கீழே கொடுக்கப் பட்டுள்ளது.

| மாவட்டத்தின் பெயர் | தொண்டர்களின் எண்ணிக்கை. |
|---|---|
| சென்னை | 1 |
| செங்கல்பட்டு | 1 |
| தென்னற்காடு | 2 |
| வட ஆற்காடு | 1 |
| தஞ்சாவூர் | 19 |
| திருச்சிராப்பள்ளி | 3 |
| சேலம் | 3 |
| தர்மபுரி | இல்லை |
| கோயம்புத்தூர் | 1 |

[29th July 1971

| மாவட்டத்தின் பெயர். | தேர்வாளர் பணிபுரிந்த பள்ளிகளின் எண்ணிக்கை. |
|---|---|
| நீலகிரி | 3 |
| மதுரை | 7 |
| இராமநாதபுரம் | இல்லை |
| திருநெல்வேலி | 2 |
| கன்னியாகுமரி | 2 |
| | 45 |

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி: இப்போது கல்வி நிலையங்களைப் பொறுத்த வரையில் ஆசிரியர் பயிற்சிப் பள்ளியில்தான் அவர்கள் வேலை செய்கிறார்கள் என்று தெரிகிறது. வேறு பள்ளிகளுக்கும் வேண்டப்பட்டால், அவர்கள் வேலை செய்வதற்கு அரசாங்கம் அனுமதி தருமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட தொண்டர்கள் பல்வேறு பிரிவினராக, தொழில் துறையில் உதவி செய்கிறவர்களாக, ஆங்கிலம் போதிப்பதில் உதவி செய்கிறவர்களாக வருகிறார்கள். ஆங்கிலம் போதிப்பதில் உதவி செய்ய வருகிறவர்கள்தான் பயிற்சிக் கல்லூரியில் வைக்கப் பட்டிருக்கிறார்கள். ஆகவே ஆங்காங்கு இருக்கிற கல்லூரிகளில் மற்ற இடங்களில் எந்த வகையில் தேவைப்படுகிறார்கள் என்று இங்கேயுள்ள கிராம வளர்ச்சி ஆராய்ச்சித்துறை செயலாளர் மூலமாக இந்திய அரசுக்கு எழுதி, அப்படிப்பட்டவர்களை வரவழைத்து அவர்களுக்குத் தருகிறார்கள். இப்போது ஆங்கிலப் பயிற்சிக்கு வந்திருக்கிற காரணத்தால், ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் அவர்கள் வைக்கப்பட்டிருக்கிறார்கள்.

### *Remuneration to Examiners*

* 301 Q.—THIRU M. RAJAH IYER: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state with reference to the answer given to Legislative Council Question No. 4 on 21st January 1970—

(a) whether the Government have any proposal to raise the rates of remuneration payable to the Examiners valuing the scripts at the Secondary School-Leaving Certificate Public Examination: and

(b) if so, the details thereof?

### விடைத் தாள்களைத் திருத்த ஊதியம்

திரு. எம். ராஜா அய்யர்: மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் 21—1—1970 அன்று சட்டமன்ற



29th July 1971]

மேலவையில் 4-ஆம் எண் வினாவிற்கு அளித்த விடையைபொட்டி கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) எஸ்.எஸ்.எல்.சி. பொதுத் தேர்வில் விடைத் தாள்களைத் திருத்தும் ஆசிரியர்களுக்கு அளிக்கப்படத்தக்க ஊதிய விதங்களை உயர்த்தும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: 1971-ம் ஆம் ஆண்டு ஏப்ரலில் நடந்த தேர்வு முதல், தேர்வுத்தாள்களைத் திருத்துவோர் ஊதியங்கள் உயர்த்தப்பட்டன. உயர்த்தப்பட்ட விதங்கள் பின்வருமாறு :—

| | |
|---|---|
| ஒருமணி நேரத்துக்கு மேற்படாத தேர்வுத் தாள்களைத் திருத்த | 0.75 பைசா |
| ஒருமணி நேரத்துக்கு மேற்பட்டு, ஒன்றரை மணிக்கு மேற்படாவிடில் | 0.80 பைசா |
| ஒன்றரை மணிக்கு மேற்பட்டு, இரண்டு மணிக்கு மேற்படாவிடில் | 0.90 பைசா |
| இரண்டு மணிக்கு மேற்பட்டால் | ரூ. 1.00 |

### *Best drafts and office notes*

* 302 Q.—THIRU V. ISVARMURTI: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(a) the details of the award for the best drafts and office notes made during 1970; and

(b) the grounds on which they were made?

### மிகச் சிறந்த அலுவலகக் குறிப்புகள்

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி: மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மிகச் சிறந்த அலுவலகக் குறிப்புகள் வரைவதற்காக 1970-ஆம் ஆண்டில் அளிக்கப்பட்ட பரிசின் விவரங்கள் யாவை ?

(இ) எந்த அடிப்படையில் அவை வழங்கப்பட்டன ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: (அ) 1970-இல் சிறந்த வரைவுகள், குறிப்புகள், எழுதியவர் ஒன்பது பேர், சென்னை உள்பட எட்டு மாவட்டங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு, ரூ. 500 பரிசு அளிக்கப்பட்டனர். இன்னும் சில மாவட்டங்களில் தேர்வு முடியவில்லை.

(இ) மாவட்ட ஆட்சியாளரும், தமிழ் வளர்ச்சி இயக்குநரும் இப்பரிசுக்குரியவர்களைத் தேர்ந்தெடுக்கின்றனர்.

[29th July 1971

**திரு. வி. ஈஸ்வரமூர்த்தி :** இப்பரிசுக்கு நகல்களைத் தயாரிப்பவர்கள் அரசாங்கத்திற்கு அவற்றை அனுப்புகிறார்களா அல்லது எந்த அடிப்படையில் இந்தப் பரிசுக்குப் போட்டியிடுகிறார்கள் அல்லது எப்படிக் கணக்கிடுகிறார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** ஆங்காங்கு ஆய்வுக்கு வருகிற அதிகாரிகள் பார்த்து அலுவலகங்களுக்குச் செல்கிறார்கள். அங்கே கோப்புகளில் முன்னுரையில் தமிழ் பயன்படுத்தப்பட்டிருக்கிற தன்மை, அலுவலகத்திலிருக்கின்ற நிலைமை ஆகியவற்றை ஆராய்ந்து தேர்ந்தெடுத்து அனுப்புகிறார்கள். அவர்களிலிருந்து மூன்று பேர் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். அந்த வகையில் மூன்று பேர்களுக்குப் பரிசு அளிக்கப்பட்டிருக்கிறது.

*Panchayat taxes*

* 303 Q.—THIRU V. THANGAPANDIAN : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state whether the Government have decided to relieve the Village Munsiffs from the responsibility of collecting Panchayat taxes?

*பஞ்சாயத்து வரிகள்*

**திரு. வி. தங்கபாண்டியன் :** மாண்புமிகு கல்வி மற்றும் உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

பஞ்சாயத்து வரிகளை வசூலித்துப் பொறுப்பினை கிராம முன்சீப்களிடமிருந்து எடுக்கவேண்டுமென்று அரசாங்கம் தீர்மானித்துள்ளதா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** இல்லை.

*Dentistry*

* 304 Q.—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Public Health be pleased to state the action taken by the Government to prevent unregistered and unqualified persons from practising Dentistry in the State?

*பல் மருத்துவம்*

**திரு. ஜி. சுவாமிநாதன் :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

இம்மாநிலத்தில் பதிவு பெறுதவர்கள் மற்றும் தகுதி பெறுதவர்கள் பல் மருத்துவத் தொழில் புரியாமல் தடுக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை யாது ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தமிழ்நாடு பல் மருத்துவ மன்றத்தில் தருகியற்ற, பதிவுசெய்யப்படாத நபர்கள் பல் வைத்தியம் செய்வது பற்றிய செய்தி கிடைத்தவுடன் தகுந்த



29th July 1971]

விசாரணை நடத்தியபின் அந்த நபர்களை அப்படி வைத்தியம் செய்வதை நிறுத்தச் சொல்லி ஒரு எச்சரிக்கை விடப்படுகிறது. அந்த அளவுக்குத்தான் இப்போது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** தலைவர் அவர்களே, அது மாதிரி எத்தனை பேர்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டது ? எச்சரிக்கை செய்தபின்பும் அதுமாதிரி நடந்துகொள்பவர்கள் மீது நடவடிக்கை இதுவரையில் எடுக்கப்பட்டதா ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவர் அவர்களே, என்னிடத்திலுள்ள குறிப்பிலிருந்து எத்தனை பேர் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்ற விவரம் இல்லை. ஆனால் இப்போது அதற்காக நியமிக்கப்பட்டவரோ அல்லது சான்றிதழோ பெறுதவர்கள் பற்கள் மருத்துவத்தில் ஈடுபட நேருமானால், அவர்கள் அப்படி ஈடுபடுவதற்கு வேண்டிய கவன்சிலுக்குப் புகார் வரும்போது, அவர்கள் மூலமாக நோட்டீஸ் அனுப்பப்படுகிறது. அப்படிப்பட்ட பற்கள் மருத்துவ காரியத்தில் அவர்கள் ஈடுபடக் கூடாது என்று "வார்ன்" செய்யப்படுகிறார்கள். அதற்குப் பிறகும் ஈடுபட்டால், அதற்கான நடவடிக்கை எடுப்பதற்கு அதிகச் செலவாகிற காரணத்தால், டென்டல் கவன்சில் அதில் ஈடுபடவில்லை. ஈடுபடுவதன் மூலம் அதற்கான செலவிற்கும் மற்ற உதவிகளுக்கும் அரசாங்கம் போதுமான ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அதுபற்றி மருத்துவக் கல்வித் துறை இயக்குனர் கேட்கப்பட்டிருக்கிறார். அது வழங்கப்படவில்லை.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** தலைவர் அவர்களே, இந்தப் பல் மருத்துவம் சம்பந்தமாக மேல் படிப்புக்கு அரசாங்கம் ஏதாவது ஏற்பாடு செய்ய உத்தேசம் உண்டா ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** அதில் நடக்கிற விவரங்கள் பற்றிச் சொன்னேன். மேல் படிப்பைப்பற்றிக் தனியாகக் கேட்க வேண்டும்.

*Retired Medical Officers*

* 305 Q.—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether it is a fact that pensionary benefits are being denied to Retired Medical Officers who have served less than ten years under the Government by not taking into consideration their previous temporary service under the erstwhile District Board :

(*b*) if so, the number of Doctors thus affected; and

(*c*) the action proposed to be taken by the Government in this matter?

[29th July 1971

**ஓய்வு பெற்ற மருத்துவ அதிகாரிகள்**

**திரு. ஜி. சுவாமிநாதன்** : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) அரசுப் பணியில் 10 ஆண்டுகளுக்குக் குறைவாகப் பணி புரிந்து ஓய்வு பெற்ற மருத்துவ அதிகாரிகளைப் பொறுத்தவரையில், மூன்னுள் மாவட்ட சபையத்தின் கீழ் அவர்களது முந்திய நற்காலப் பணி கணக்கில் எடுத்துக் கொள்ளப்படாமல் அவர்களுக்கு ஓய்வு ஊதியப் பயன்கள் மறுக்கப்படுகின்றன என்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், அதனால் பாதிக்கப்பட்ட மருத்துவர்களின் எண்ணிக்கை யாது ?

(உ) இதுகுறித்து, அரசு எடுக்கக் கருதியுள்ள நடவடிக்கைகள் யாவை ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்** : (அ) "மாவட்டக் கழகங்கள்" நீக்கப்பட்டதைத் தொடர்ந்து அரசுப் பணியில் எடுத்துக் கொள்ளப்பட்ட முன்னுள் மாவட்ட கழகங்களின் பணியாளர்கள் அனைவருக்கும் அரசின் கீழ் அவர்கள் எத்துணைக் காலம் பணி செய்திருப்பினும் அக்கால அளவைக் கருதாமல் தமிழ் நாடு காராள ஓய்வூதிய விதிகளின் பயனிலை நிபந்தனைகளுக்குட்பட்டு அரசு தனது முந்தைய ஆணைகளை மாற்றியமைத்ததன் மூலம் நீடித்துள்ளது.

(இ) & (உ) இக் கேள்விகளுக்கு இடமில்லை.

THIRU. G. SWAMINATHAN : Sir, some of these Medical Officers who had been working in the erstwhile District Boards were not made permanent even after eight or nine years of service and consequently they could not also contribute to the Provident Fund. Since they have not contributed to the Provident Fund, even though they have worked for nearly nine years in the District Board and also later for about ten years in the Government service, they have not been given pension benefits. Are the Government aware that these Doctors are suffering because even though they have worked for numerous years as Medical Officers, for some time in the District Boards and for some time in Government service, they have not been given the pensionary benefits?

THE HON. THIRU K. ANBAZHAGAN : There is no reference in the notes about the permanancy of such employees. Anyhow in G.O. No. 2599, Health, dated 4th November 1970, it has been ordered that the Tamil Nadu Liberalised Pension Rules, 1960, be extended to all the Medical Officers and other Medical personnel absorbed from the Local Fund institutions, Government Service and Medical Institutions taken over by the Government consequent on the abolition of District Board irrespective of the period of service yet to be rendered by them subject to the following conditions :—

"This statement is found in the Government Order. Therefore, there are only two conditions stated. One of them is that their Provident Fund amounts with interest thereon up to 30th



29th July 1971]

June 1960 should be surrendered to Government. Under such conditions they are eligible for the Tamil Nadu Liberalized Pension Scheme."

THIRU G. SWAMINATHAN : Sir, my question was that those who retired before 4th November 1970, have not been given pensionary benefits because their service under the Government was within ten years. Will they also be provided with these pensionary benefits?

THE HON. THIRU K. ANBAZHAGAN : Sir, if they retired after 4th November 1970, it will be considered. If they retired before that date, I have to consult the Department.

*Nurses*

* 306 Q.—THIRU V. THANGAPANDIAN : Will the Hon. the Minister for Labour be pleased to state—

(a) whether the same leave concessions extended to the Nurses working in the Government Hospitals are given to the nurses working in the E.S.I. hospitals run by the Government; and

(b) if not, the reasons therefor?

**செவிலியர்கள்**

**திரு. வி. தங்கபாண்டியன்** : மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) அரசாங்க மருத்துவ மனைகளில் பணிபுரியும் செவிலியர்களுக்குக் (Nurses) கொடுக்கப்பட்டுள்ள விடுமுறைச் சலுகைகள் அரசாங்கத்தால் நடத்தப்படும் E.S.I. மருத்துவமனையில் பணி புரியும் செவிலியர்களுக்கும் வழங்கப்படுகிறதா?

(இ) இல்லையெனில், காரணம் என்ன ?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன்** : (அ) அரசாங்க மருத்துவ மனைகளில் பணிபுரியும் செவிலியர்களுக்கு (Nurses) கொடுக்கப்பட்டுள்ள விடுமுறைச் சலுகைகள் அரசாங்கத்தால் நடத்தப்படும் E S I. மருத்துவமனையில் பணிபுரியும் செவிலியர்களுக்கும் வழங்கப்படுகிறது.

(இ) இவ்வினாவிற்கு இடமில்லை.

*Bureau of Psychological Research*

* 307 Q.—THIRU V. ISVARMURTI : Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state—

(a) whether any grant is being made to the Bureau of Psychological Research attached to the Juvenile Guidance Bureau: and

(b) if so, the details thereof?

### உளவியல் ஆராய்ச்சிக் கழகம்

**திரு. வி. ஈஸ்வரமூர்த்தி :** மாண்புமிகு அரிசன நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) இளங் குற்றவாளிகள் ஆலோசனைக் கழகத்துடன் இணைக்கப்பட்டுள்ள உளவியல் ஆராய்ச்சிக் கழகத்திற்கு ஏதாவது மானியம் வழங்கப்பட்டு வருகிறதா ?

(இ) ஆமெனில், அதுபற்றிய விவரங்கள் யாவை ?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி : தமிழ்நாட்டில் இப்போது அந்த Bureau of Psychological Research இருக்கிறதா ?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** இது 1965-ம் ஆண்டில் துவங்கப்பட்டது. அதற்கு ரூ. 16 ஆயிரம் ஒதுக்கப் பட்டது. 1965-ல் தற்காலிகமாகத் தொடங்கி இந்தக் கழகம் பணி யாற்றியது. அதற்குப் பிறகு இந்தக் கழகம் தேவையில்லை என்று முடிவெடுத்த பிறகு, அந்தக் குழுவின் ஆய்வறிக்கை இப்போது வெளியிடப்பட இருக்கிறது. வெளியிடுவதற்கான செலவுத் தொகையாக ரூ. 348 ஒதுக்கியிருக்கிறது. இன்னும் அந்த அறிக்கை வெளிவரவில்லை.

**திரு. வி. ஈஸ்வரமூர்த்தி :** குற்றவியல் பாடத்தில் எம்.ஏ. பட்டம் பெற்றவர்கள் சுமார் 50 பேர்கள் இருக்கிறார்கள். ஒவ்வொரு ஆண்டும் 10, 15 பேர்கள் வரை படித்துப் பட்டம் பெறுகிறார்கள். அவர்களில் ஒருவருக்காவது வேலை கிடைக்கவில்லை. அத்தகைய பிரிவு இருப்பது நல்லது என்று கருதினால், அவர்களுக்கு வேலை வாய்ப்புக் கொடுக்க உதவியாக இருக்கும். குற்றவியல் விஞ்ஞான முறையில் ஆராய்ச்சி செய்ய அது பயன்படும் என்பதால், அதை அரசாங்கம் மறுபரிசீலனை செய்ய முன்வருமா ?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** ஓராண்டுக் காலம் இந்த இளம் குற்றவாளிகளின் நன்னெறிக் கழகம் சிறப்பாகப் பணியாற்றியிருக்கிறது. மீண்டும் அவர்களே இப்படிப்பட்ட ஆராய்ச்சி தேவையில்லை என்று முடிவெடுத்திருக்கிறார்கள். அவர்கள் கொடுத்திருக்கிற ஆராய்ச்சி அறிக்கையைப் பரிசீலனை செய்துவிட்டு, அதற்குப் பிறகும் அதையே மீண்டும் ஆய்வு செய்வது அவசியமா என்று பார்க்க வேண்டும். பிறகுதான் அது பற்றிய முடிவுக்கு அரசாங்கம் வர முடியும்.

### *Bridge across Mudikondan odai*

* 308 Q.—THIRU T. K. SUBBIAH : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(a) whether there is any proposal to construct a bridge across Mudikondan odai near Thirumanur on the Perambalur-Manamadurai Road;

(b) if so, the estimated cost of construction; and

(c) the details thereof?



### முடிகொண்டான் ஓடைக்கு பாலம்

**திரு. டி. கே. சுப்பையா :** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) பெரம்பலூர்-மானமதுரை சாலையில் திருமானூருக்கு அருகிலுள்ள முடிகொண்டான் ஓடைக்கு பாலம் கட்டும் செயற் குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் மதிப்பீடு என்ன ?

(உ) அவற்றின் விவரங்கள் யாவை ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** (அ), (இ) & (உ) பெரம்பலூர்-மானமதுரை சாலையில் திருமானூர் அருகே முடி கொண்டான் ஓடையின் குறுக்கே ரூ. 50,000 செலவில் பாலம் கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையிலிருக்கிறது.

### *"Kanni" running in Kullichapattu village.*

* 309 Q.—THIRU V. THANGAPANDIAN : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(a) whether any representation has been received during October 1967, requesting the Government to restore the detailed "Kanni" (Irrigation Channel) which was originally having its course through R.S. Nos. 175/5 and 175/9 of Kullichapattu village, Thanjavur taluk to its original place;

(b) if so, whether the detailed "Kanni" (Irrigation Channel) was restored to its original course; and

(c) if not, the reasons therefor?

### குளிச்சப்பட்டு கிராமம் வாய்க்கால்

**திரு. வி. தங்கபாண்டியன் :** மாண்புமிகு பொதுப் பணி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தஞ்சாவூர் வட்டம், குளிச்சப்பட்டு கிராமம், 175/5, 175/9 மறுநில அளவை எண்கள் வழியாக இதற்கு முன் பாய்ந்து வந்த கண்ணி (பாசன) வாய்க்காலை, அதே இடங்கள் வழியாகத் திருப்பி விடுமாறு கேட்டு, 1967 அக்டோபரில் முறையீடு ஏதேனும் பெறப்பட்டுள்ளதா ?

(இ) ஆம் எனில், கண்ணி (பாசன) வாய்க்கால் அதனுடைய பழைய இடத்திற்குத் திருப்பிவிடப்பட்டதா ?

(உ) இல்லையெனில், அதற்கான காரணங்கள் யாவை ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** (அ) ஆம். குளிச்சப்பட்டு கிராமத்தில் 176/1-ம் நில அளவை எண்ணுக்கு அருகில் ஓடும் கண்ணி வாய்க்காலை அதன் பழைய போக்கிற்குத் திருப்பிவிட வேண்டும் என்று திரு. தர்மராஜ முதலியாரிடமிருந்து முறையீடு ஒன்று பெறப்பட்டது.

(இ) இம் முறையீடு ஏற்கப்படவில்லை.

(உ) 6-ம் எண் மதகின் கீழ்ச் சேர்க்கப்பட்டுள்ள நிலங்களுக்குத் தற்போதுள்ள நீர் வழங்கி வருகிற பாசன வாயில் குறித்து 6-ம் எண் மதகு ஆயக்கட்டுதாரர்கள் எவருக்கும் மறுப்பேதுமில்லை. எனவே, 176/2-ம் என் நிலத்திற்குச் சொந்தக்காரரான திரு. தர்மராஜ முதலியார் பட்டாக்கன்னியை அதன் பழைய போக்கிற்குத் திருப்பிவிடக் கோருவது பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளத் தகுதியற்றதாகும்.

### *Youth Hostel*

* 310 Q.—THIRU V. ISVARMURTI: Will the Hon. the Minister for Backward Classes be pleased to state the details of the Youth Hostel to be built at Madras City?

### இளைஞர் விடுதி

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி: மாண்புமிகு பிற்பட்ட வகுப்பினர் நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

சென்னை மாநகரில் கட்டப்படவிருக்கும் இளைஞர் விடுதி குறித்த விவரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. க. ராசாராம்: இளைஞர் விடுதி கட்டிடம் ரூ. 2.5 லட்சத்தில் கட்டப்படவிருக்கிறது. தலைமைப் பொறியாளர் கட்டிடங்கள் தேவையான திட்டங்களும் மதிப்பீடுகளும் தயாரித்துக் கொடுத்தார். எனவேவில் இவ்வேலை மாநில பொதுப் பணித்துறையினரால் மேற்கொள்ளப்படவிருக்கிறது. அத் திட்டங்களும் மதிப்பீடுகளும் இந்திய அரசின் இசைவுக்கும் ஒப்பளிப்புக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. நிதி ஒப்பளிப்பும் இந்திய அரசின் ஆணையும் எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. கே. எஸ். அப்துல் வகாப்: சார், இளைஞர் விடுதிக்கு விளக்கம் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. ராசாராம்: தலைவர் அவர்களே, இளைஞர் விடுதி என்பது, டென்மார்க் தலைநகரமான கோபன்ஹேகனில் இருப்பதைப் போல இளைஞர்கள் சார்பான நிலையமாகும். இதன் மூலமாக உள்நாட்டிலுள்ள சுற்றுலா இளைஞர்கள் ஒருவருக்கொருவர் சந்தித்துக்கொள்ளவும் அதைப் போலவே வெளி நாட்டிலுள்ள சுற்றுலா இளைஞர்கள் ஒருவருக்கொருவர் கலந்து கருத்துக்களைப் பரிமாறிக் கொள்ளவும் மைய இடமாக வைக்கப்பட்டிருக்கிறது. இளைஞர்களின் நடவடிக்கைகளை ஒருமுகப்படுத்த இப்படிப்பட்ட விடுதிகள் இந்தியாவில் பல இடங்களில் உருவாகி வருகின்றன. அதன் விளைவாக சென்னையில் சட்டுவதற்கும் ஏற்பாடுகள் நடைபெறுகின்றன.

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி: இது மத்திய அரசின் திட்டமா? இத்தகைய இளைஞர் விடுதிகள் சென்னையில் மட்டும் கட்டுவதற்கு ஏற்பாடாகியிருக்கிறதா? வேறு இடத்திற்கும் ஏற்பாடாகியிருக்கிறதா?



மாண்புமிகு திரு. க. ராசாராம்: தலைவர் அவர்களே, மத்திய அரசின் திட்டம் என்றாலும், அவர்கள் ஓரளவுக்குத்தான் தொகை தருகிறார்கள். ரூ. 1,50,000 வரையில் நாம் செலவழிக்கிறோம் என்பதை இந்த மன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறேன். இது வேறிடங்களில் இப்போது கட்டப்படவில்லை. முதலிலே சென்னையில்தான் ஆரம்பிக்கப்படுகிறது.

திரு. ஜி. சுவாமிநாதன்: எத்தனை வயது வரையில் இளைஞர்கள் என்று கருதப்பட்டு இந்த விடுதியில் தங்க அனுமதிக்கப்படுவார்கள்?

மாண்புமிகு திரு. க. ராசாராம்: தலைவர் அவர்களே, இந்த விடுதியின் நோக்கத்தைப் பொறுத்த வரையில் உள்ளத்தால் இளைஞர்கள் என்றுதான் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

திரு. எஸ். ஜெயராம செட்டியார்: டாக்டர் ஏ. எல். முதலியார் அவர்கள் இந்தச் சட்டமன்றத்தில் அங்கத்தினராக இருந்தபோது, இதேமாதிரி ஒரு ஆஸ்டல் கட்டுவதைப் பொறுத்து அது ஐலண்ட் கிரவுண்டில் கட்டக் கூடாது என்றும் அது ஓப்பனை வைக்கப்பட வேண்டுமென்றும் அபிப்பிராயம் சொன்னார்கள். இப்போது அந்த இடத்தில் கட்டப்படும் யோசனை எதுமிருக்கிறதா?

மாண்புமிகு திரு. க. ராசாராம்: தலைவர் அவர்களே, தற்போது இந்த விடுதியை நாம் இந்திரா நகரில் கட்டுவதற்கு இடம் ஒதுக்கியிருக்கிறோம் என்பதையும் அதற்கான இடம் விலைக்கு வாங்கப்பட்டிருக்கிறது என்பதையும் ஐலண்டு மைதானத்தில் கட்டப்படவில்லை என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

### *Dhobikanas*

* 311 Q.—THIRU M. ARUMUGASWAMI: Will the Hon. the Minister for Backward Classes be pleased to state—

(*a*) whether large amount of expenditure is being incurred for the construction of Dhobikanas in Madras City now;

(*b*) if so, the details thereof?

(*c*) the basis on which the places are selected; and

(*d*) the expenditure incurred during 1970-71?

### வண்ணார் துறைகள்

திரு. எம். ஆறுமுகசாமி: மாண்புமிகு பிற்பட்ட வகுப்பினர் நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சென்னை மாநகரில் வண்ணார் துறைகளை அமைப்பதற்காக ஏராளமாக செலவு செய்யப்பட்டு வருகிறதா?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை?

(உ) அந்த இடங்கள் எந்த அடிப்படையில் தெரிந்தெடுக்கப்படுகின்றன?

(எ) 1970-71-ம் ஆண்டில் எவ்வளவு செலவு செய்யப்பட்டது?

[29th July 1971

**மாண்புமிகு திரு. க. ராசாராம்** : (அ) இல்லை.

(இ) to (எ) கேள்விக்கு இடமில்லை.

### *Confidential file system*

* 312 Q.—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(a) whether it is a fact that the Confidential file system regarding the employees of the Tamil Nadu Electricity Board is still in vogue; and

(b) if so, whether there is any proposal with the Government to bring in the open file system in its place?

### இரகசிய குறிப்புமுறை

**திரு. ஜி. சுவாமிநாதன்** : மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழக மின்சார வாரியத்தில் ஊழியர்களைப் பற்றிய இரகசிய குறிப்புமுறை அமுலிலிருப்பது உண்மையா ?

(இ) அப்படியானால், அதை மாற்றி வெளிப்படையான குறிப்பு முறையைக் கொண்டுவரும் உத்தேசம் அரசுக்கு உண்டா ?

**மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன்** : (அ) ஆம்.

(இ) இல்லை.

**மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன்** : அது மின்சார வாரியத்தின் பரிசீலனையில் இருக்கிறது.

**திரு. ஜி. சுவாமிநாதன்** : தலைவர் அவர்களே, நம்முடைய மாநில அரசில் ரகசியக் குறிப்பு முறை இப்போதில்லை என்ற நிலைமையில் அதை இன்னும் மின்சார வாரியத்தில் கடைப்பிடிப்பதற்கான காரணம் என்ன?

**மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன்** : தலைவர் அவர்களே, பரிசீலனையில் இருக்கிறது என்றுதான் சொன்னேன். பரிசீலனை என்பது நிராகரித்தது ஆகாது.

### *Kalpakkam Atomic Plant*

* 313 Q.—THIRU V. ISVARMURTI : Will the Hon. the Minister for Electricity be pleased to state whether Government have undertaken any survey into the employment potentialities arising out of the use of power from the Kalpakkam Atomic Plant?



29th July 1971]

### கல்பாக்கம் அணு உலை

**திரு. வி. ஈஸ்வரமூர்த்தி** : மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

கல்பாக்கம் அணு உலையிலிருந்து வரும் மின் விசையினைப் பயன்படுத்துவது காரணமாக எழும் வேலை வாய்ப்புபற்றி அரசு ஏதாகிலும் ஆய்வு செய்துள்ளதா ?

**மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன்** : இல்லை.

**திரு. வி. ஈஸ்வரமூர்த்தி** : கல்பாக்கம் அணு உலை எப்போது செயல்படத் தொடங்கும்?

**மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன்** : தலைவர் அவர்களே, முதல் பிரிவு 1975-ம் ஆண்டு இப்போதுள்ள குறிப்பின்படி துவங்க வேண்டும். சமீபத்தில் பத்திரிகையில் பார்த்தேன். மத்திய அமைச்சர் அவர்கள் சற்றுக் காலதாமதம் ஆகுமென்று சொல்லியிருக்கிறார்கள். அரசின் மூலமாகவும் வாரியத்தின் மூலமாகவும் இதுபற்றிக் கடிதத் தொடர்பு கொள்ள இருக்கிறோம்.

### *Idols*

* 314 Q.—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(a) whether it is a fact that idols were stolen from Viratteswararswami temple, Korukkai, Thanjavur district during October 1970; and

(b) if so, the details of the loss and the action taken thereon?

### சாமி சிலைகள்

**திரு. ஜி. சுவாமிநாதன்** : மாண்புமிகு அறநிலைய அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) 1970-ம் ஆண்டு அக்டோபரில் தஞ்சாவூர் மாவட்டம் கொற்கையிலுள்ள வீரட்டீஸ்வரர் சுவாமி கோயிலிலிருந்து சாமி சிலைகள் திருடப்பட்டனவென்பது உண்மையா ?

(இ) ஆமெனில், விரயம் பற்றிய விவரங்கள் யாவை ? அதன் பேரில் எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்** : (அ) ஆம்.

(இ) கீழ்க்கண்ட ஆறு விக்கிரகங்கள் திருட்டுப் போய்விட்டன—

1. ஸ்ரீ மாணிக்க வாசகர்.
2. ஸ்ரீ தெய்வயானை.
3. ஸ்ரீ சந்திர சேகர்.

[29th July 1971

4. ஸ்ரீ சந்திர சேகரர் அம்பாள்.

5. ஸ்ரீ கல்யாண சுந்தரர்.

6. ஸ்ரீ கல்யாண சுந்தரர் அம்பாள்.

ஸ்ரீ தெய்வயானை, ஸ்ரீ சந்திரசேகரர் அம்பாள், ஸ்ரீ கல்யாண சுந்தரர் அம்பாள் விக்ரகங்களும், உருக்கப்பட்டு கட்டியாக உள்ள மற்ற மூன்று விக்ரகங்களும் திரும்ப கிடைக்கப் பெற்று தற்போது நீதி மன்ற பொறுப்பில் உள்ளன. குற்றவாளிகள் கோர்ட்டால் தண்டிக்கப்பட்டுள்ளனர்.

**திரு. ஜி. சுவாமிநாதன்** : தலைவர் அவர்களே, இதுபோன்ற விக்ரக திருட்டுகள் அடிக்கடி தஞ்சை மாவட்டத்தில் நடைபெற்ற வண்ணமாக உள்ளன. இதை மனதில் கொண்டு கோயிலிலுள்ள விக்ரகங்கள் திருடப்படுவதைத் தவிர்க்க உடனடியாக அரசு என்ன நடவடிக்கை மேற்கொண்டிருக்கிறது ? திருடப்பட்ட விக்ரகங்கள் எந்த நூற்றாண்டைச் சேர்ந்தவை, எவ்வளவு பெறுமான முள்ளவை என்பதை அரசு தெரிவிக்குமா ?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்** : கோயிலில் உள்ள விக்ரகங்களை "போட்டோ" படம் எடுத்து நாம் ஒரு பிரதியும் ஆலய நிர்வாகிகளிடத்தில் ஒரு பிரதியும் வைத்திருக்கிறோம். கோயிலில் இருக்கிற காவலர்கள் கண்ணும் கருத்துமாக இருக்க வேண்டுமென்று, இப்படிப்பட்ட திருட்டுகள் நடைபெற்றதற்குப் பிறகு, எச்சரித்திருக்கிறோம். அத்தோடு காவல் துறையின் மூலமாக இப்படி விக்ரகங்கள் திருட்டுப் போகிற நேரங்களில் அவற்றைப் புலனுய்வு செய்வதற்காகவும் கண்டுபிடிக்கவும் தனியாக ஒரு அமைப்பை அமைத்திருக்கிறோம். இரண்டு இன்ஸ்பெக்டர்கள், இரண்டு சப்-இன்ஸ்பெக்டர்கள், ஒரு டெபுட்டி கான்ஸ்டபிள்கள் அதற்காக அமர்த்தப்பட்டிருக்கிறார்கள். இந்த விக்ரகத்தைப் பொறுத்தவரையில் எந்த நூற்றாண்டைச் சேர்ந்தது என்ற என்னிடம் இல்லை. அதனுடைய மதிப்பு சுமார் ரூ. 10,000 இருக்குமென்று மதிப்பிடப்பட்டிருக்கிறது.

**திரு. ஜி. சுவாமிநாதன்** : தலைவர் அவர்களே, ஒவ்வொரு கோயிலிலும் பல லட்சக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள விக்ரகங்கள் இருக்கின்றன. அதற்கு நிழற்படம் பிடித்து வைத்திருக்கிறார்கள். கும்பகோணத்திற்குப் பக்கத்தில் உள்ள 5 அல்லது 10 கோயிலில் லட்சம் ரூபாய் விலையுள்ள ஒரு விக்ரகம் இருப்பதாக நாம் நினைத்துக் கொண்டிருக்கும்போது, அதே விக்ரகம் வெளி நாட்டில் தற்போது விற்பனைக்கு வந்திருப்பதாகச் சொல்கிறார்கள். அசல் விக்ரகத்தைப் போலவே செய்து அங்கே வைத்து விடுகிறார்கள். விக்ரகங்களை மதிப்பிடும்போது அறநிலைய இலாகாவில் செம்பு விலையை மட்டும் கருத்தில் கொண்டு ரூ. 10, ரூ. 15 என்று எழுதி வைத்திருக்கிறார்கள். கோயில்களிலுள்ள லட்சக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள விக்ரகங்களைப் பாதுகாப்பதற்கு எந்தவிதமான ஏற்பாடும் அரசு செய்யவில்லை என்பதையும் அரசு அறியுமா ?



29th July 1971]

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி** : தலைவர் அவர்களே, இந்த விக்ரகங்களைப் போலவே வேறு விக்ரகங்களை வைத்துவிட்டு பழங்கால விக்ரகங்களை பல லட்சக்கணக்கான ரூபாய் பெறுமான முள்ள விக்ரகங்களை கள்வர் கவர்ந்து போவதற்கு, கூடுமான வரையில் பெரும்பாலும் அங்குள்ள அர்ச்சகர்களே உடந்தையாக இருக்கிறார்கள். ஆகவே என்னதான் நாம் காவலைக் கட்டிப்படுத்தினாலும் கூட, ஆண்டவனையே ஏமாற்றி அர்ச்சகர்கள் ஏற்றுமதி செய்து அயல்நாட்டிற்கு அனுப்பிவிடுகிற காரணத்தால், இதில் நாம் வெற்றிகரமாக முன்னேற முடியவில்லை.

**திரு. ஜி. சுவாமிநாதன்** : அர்ச்சகர்களே உளவாளியாக இருந்து விக்ரகங்கள் திருட்டுப் போயிருக்கின்றனவா ? அதுமாதிரி வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளனவா ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி** : எந்த அர்ச்சகர் மீதும் வழக்குப் பதிவு செய்யும் அளவிற்கு அவர்கள் அவ்வளவு வெளிப்படையாக இந்தக் காரியத்தைச் செய்வதில்லை. ஆனால் வழக்குகள் பதிவு செய்யப்பட்டு பல திருட்டுக் குற்றங்களில் சிலைகள் மீட்கப்பட்டிருக்கின்றன. பெரும்பாலும் இந்த விக்ரகங்கள் வெளிநாடுகளுக்குத்தான் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. அதற்குக் காரணம் வெளிநாட்டவர்கள் அந்த விக்ரகங்களில் உள்ள கலை நுணுக்கத்தைப் பெரிதும் விரும்புகிறார்கள். அதனால் பழங்கால சரித்திரத்தில் இடம் பெறக் கூடிய விக்ரகங்கள், கலை உணர்வு மிக்க விக்ரகங்கள், அதிலும் மாண்புமிகு உறுப்பினர் கூறியதைப்போல தஞ்சை மாவட்டத்தில் அப்படிப்பட்ட தன்மையுள்ள விக்ரகங்கள் இருப்பதால், அவை களவாடப்படுகின்றன. அமைச்சர் அவர்கள் இங்கே எடுத்துச் சொல்லியதைப் போல, தகுந்த பாதுகாப்பும் தனியாகக் காவல்துறைப் பிரிவும் அமைக்கப்பட்டிருக்கின்றன.

**திரு. க. அறிவழகன்** : தலைவர் அவர்களே, இந்த விக்ரகங்கள் களவாடப்பட்டு வெளிநாடுகளுக்குக் கொண்டு செல்லப்படுவதால், அந்நியச் செலாவணி வருவது தடுக்கப்படுகிறது. ஆதலால் கோயிலில் மிகுந்த அக்கறையுள்ள அர்ச்சகர்களையும் அறக்காவலர்களையும் கொண்டு இப்படிப்பட்ட விக்ரகங்களை வெளிநாட்டிற்கு விற்பனை செய்து அதன் மூலம் அந்நியச் செலாவணி பெறலாம் என்பதை அரசு ஆராயுமா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி** : அந்நிய நாட்டுச் செலாவணி பெறுவதற்காக நம்முடைய நாட்டுக் கலைச் செல்வங்களை இழக்க விரும்புவது நல்லதல்ல.

**திரு. சா. கணேசன்** : இந்த மாதிரி அரிய விக்ரகங்களைக் கவர்ந்து கொண்டு போவதற்கு என்றே அமெரிக்காவிலிருந்து ஒரு கூட்டம் இங்கே வந்திருக்கிறது என்று மத்திய புலனுய்வுத் துறை மூலமாக மாநில போலீசுக்குத் தகவல் கொடுத்து அவர்களும் அதன்மீது சிறிது நல்ல அக்கறை காட்டி, அதன் காரணமாக இன்னும் இந்த இடங்களைக் கூடியவரையில் பந்தோபஸ்தாகவும்

பாதுகாப்பாகவும் வைப்பதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறது? இந்த விவரங்கள் வந்தது அரசிற்குத் தெரியுமா? அதன்மீது என்ன நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** மத்திய அரசு எடுத்துள்ள நடவடிக்கைபற்றிய விவரங்கள் ஏதுமில்லை. ஆனால் வெளி நாட்டினர் நம் நாட்டு விக்ரகங்களைப் பெரிதும் விரும்புகிறார்கள் என்பது மாத்திரம் நன்றாகத் தெரியும். கோயில் விக்ரகங்கள் மாத்திரமல்ல. முன்பெல்லாம் பழைய தேர்களில் உள்ள சிற்பங்களைக்கூட வெளி நாட்டினர் விரும்பிப் பெறுகிறார்கள் என்பதற்காக அந்தத் தேர்கள் ஏலம் போடப்பட்டன. தமிழ் நாட்டிலுள்ள சிலர் கூட்டு சேர்ந்து ஒரு தேரை ரூ. 10 ஆயிரத்திற்கு ஏலம் எடுத்து, பம்பாயிலுள்ளவர்களுக்கு அதை ரூ. 40 ஆயிரத்திற்கு விற்று, அவர்கள் அத் தேரிலுள்ள சிற்பங்களைத் தனித் தனியாகப் பிரித்தெடுத்து, ரூ. 4 லட்சம், ரூ. 10 லட்சம் என்று வெளிநாட்டிற்கு விற்பனை செய்தார்கள். நாங்கள் வெளிநாட்டிற்குச் சென்ற நேரத்தில், நம் தமிழ் நாட்டுத் தேரிலிருந்து எடுக்கப்பட்ட சிற்பங்கள் பலவற்றை அங்கெல்லாம் காண்கிற துர்ப்பாக்கிய நிலைமை ஏற்பட்டது.

**திரு. டி. கே. ஷண்முகம் :** விலை உயர்ந்த விக்ரகங்கள் திருட்டுப் போவதற்கு அர்ச்சகர்கள் துணையாக இருக்கிறார்கள் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூறினார்கள். அர்ச்சகர் யார் மீதாவது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** அப்படிப்பட்ட சம்பவங்களில் அர்ச்சகர் மீது நடவடிக்கை எடுக்கப்படுகிறது. நான் எல்லா அர்ச்சகர்களையும் சொல்லவில்லை. சிலர்தான் அப்படிச் செய்கிறார்கள். சில இடங்களில் ஆண்டவனின் நகைகள் கூட மாற்றப்பட்ட சம்பவங்கள் வழக்குகளாக வந்திருப்பதை நாம் நன்றாக அறிவோம்.

### *Tiruvarur Temple Car*

* 315 Q.—THIRU V. ISVARMURTI : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(a) whether there was any attempt to set fire to the Tiruvarur Temple car by about 5th June 1971; and

(b) if so, the action taken thereon?

### திருவாரூர் கோயில் தேர்

**திரு. வி. ஈஸ்வரமூர்த்தி :** மாண்புமிகு அறநிலைய அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

*(அ) 1971 ஜூன் 5-ம் நாள் அளவில் திருவாரூர் கோவில் தேருக்குத் தீ வைக்க முயற்சி செய்யப்பட்டதா ?*

*(இ) ஆம் எனில், அதன் மீது எடுத்த நடவடிக்கை யாது?*



**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** *(அ) ஆம்.*

*(இ) ஆலய நிர்வாக அதிகாரி, காவல் துறையினரிடம் புகார் செய்திருக்கிறார். காவல் துறையினர் புலன் விசாரணை செய்கின்றனர். ஆலயத் தேரினைச் சுற்றிலும் தகர அடைப்பு அமைத்திடுவதற்கு அறநிலைய ஆணையர் நடவடிக்கை எடுத்திருக்கிறார்.*

MR. CHAIRMAN : Questions are over.

[*Note.*—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the member.]

## III. ANNOUNCEMENTS.

### (1) MESSAGE FROM THE GOVERNOR.

MR. CHAIRMAN : I have received a message from the Governor of Tamil Nadu, recommending to the Legislative Council, the consideration of the Tamil Nadu Appropriation (No. 2) Bill, 1971.

### (2) MESSAGES FROM THE ASSEMBLY.

MR. CHAIRMAN : I have also received a message from the Hon. Speaker of the Legislative Assembly, transmitting a copy of the Tamil Nadu Appropriation (No. 2) Bill, 1971 (L.A. Bill No. 32 of 1971) as passed by the Assembly and signed by him for the recommendation of the Council and certifying that it is a Money Bill within the meaning of Article 199 of the Constitution of India.

I have further received a message from the Hon. Speaker, Legislative Assembly, transmitting a copy of the Motion passed on the 26th July 1971, by the Tamil Nadu Legislative Assembly, desiring to obtain the concurrence of the Council in setting up a Joint Committee of both the Houses consisting of 24 Members (16 Members from the Legislative Assembly and 8 Members from the Legislative Council) to advise the Minister in charge of Revenue in examining the nature and scope of deletion or modification of exemptions contained in the Tamil Nadu Land Reforms (Fixation of Ceiling on Land) Act, 1961 and that the following Members of that House be selected to serve on such a Joint Committee :—

1. Thiru R. Ponnappa Nadar.
2. Thiru S. Alagarsamy.
3. Thiru A. R. Perumal.
4. Thiru M. A. Latheef.
5. Thiru D. S. A. Sivaprakasam.
6. Thiru A. R. Marimuthu.
7. Thiru E. S. Thyagaraian.
8. Thiru Durai Govindarajan.
9. Thiru P. S. Manian.

[Mr. Chairman]

10. Thiru P. Soundarapandian.
11. Thiru P. Ponchokkalingam.
12. Thiru V. Palanivel.
13. Thiru A. P. Shanmugasundaram.
14. Thiru A. Parandhaman.
15. Thiru A. Velladurai.
16. Thiru K. Kalimuthu

Under rule 139 (1) of the Assembly Rules, the Hon. Speaker has nominated the Hon. Minister in charge of Revenue as a member of the Joint Committee.

## IV. CALLING ATTENTION TO THE HARDSHIP CAUSED TO GRADUATE TEACHERS DUE TO POSTPONEMENT OF RE-FIXATION OF THEIR PAY

THIRU V. ISVARMURTI : Sir, I wish to call the attention of the Hon. the Minister for Education and Local Administration to a matter of urgent public importance, namely, the hardship caused to the 17,000 Graduate teachers in the State due to the indefinite postponement of the decision about the re-fixation of their pay.

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இரண்டாவது ஊதியக் குழு பரிந்துரைத்த சம்பள விகிதத்தை உயர்த்தவேண்டுமென பி.டி. ஆசிரியர்களிடமிருந்து நிறைய கோரிக்கைகள் வந்துள்ளன. ஊதியக் குழுவின் பரிந்துரைகளைக் கொண்டு இவர்களின் சம்பள விகிதம் இப்பொழுது ரூ. 275–10–375–15–450 என்று நிர்ணயிக்கப்பட்டுள்ளது. கல்லூரி நெறிமுறை ஆசிரியர்கள், விளக்குநர்கள் ஆகியோரில் இரண்டாம் பிரிவினருக்கு ரூ. 325–15–550 என்ற சம்பள விகிதம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மேற்கூறிய கல்லூரி ஆசிரியர்களுக்குத் தரப்படும் சம்பளத்துக்கு அதிகமாகப் பட்டதாரி ஆசிரியர்களுக்குச் சம்பளத்தை நிர்ணயிக்க வேண்டுமென்று பட்டதாரி ஆசிரியர்கள் வேண்டுகின்றனர். 1966-க்குப் பின் பல்கலைக் கழக மான்யக் குழுவின் பரிந்துரையை ஏற்றுக் கொண்டு கல்லூரி நெறிமுறை ஆசிரியர்களின் சம்பள விகிதம் ரூ. 140–5–180–10–250-லிருந்து ரூ. 200–10–300 என்று மாற்றப்பட்டது. 1966 முதல் இந்த உயர்ந்த சம்பளத்தை இவர்கள் பெற்று வருகிறார்கள் என்பதை மனதிற் கொண்டுதான் இரண்டாவது ஊதியக் குழு இவர்களுக்கான சம்பளத்தை ரூ. 325–15–550 என்று நிர்ணயித்துள்ளது. கீழ்க்கண்ட விவரங்களிலிருந்து, புதிய சம்பள விகித நிர்ணயத்தின் கீழ் கல்லூரி நெறி முறை ஆசிரியர்களுக்கும் பி.டி. பள்ளி ஆசிரியர்களுக்கும் இடையே இருந்த சம்பளத்தில் உள்ள வேறுபாடு வெகுவாகக் குறைக்கப்பட்டுள்ளதை அறியலாம் :

4-40 p.m.

| | 1966-ல் இருந்த சம்பள விகிதம். | 1970-ல் நிர்ணயிக்கப் பட்ட சம்பள விகிதம். |
|---|---|---|
| கல்லூரி நெறி முறை ஆசிரியர்கள், விளக்குநர்கள். | ரூ. 200–10–300 | ரூ. 325–15–550 (இரண்டாம் பிரிவினர்) |
| பட்டதாரி பள்ளி ஆசிரியர்கள். | ரூ. 140–5–180–250 | ரூ. 275–10–375–15–450 |



29th July 1971] [திரு. வி. ஆர். நெடுஞ்செழியன்]

கல்லூரிகளில் கல்லூரி நெறிமுறை ஆசிரியர்களுக்குப் பயிற்சிப் பொறுப்புகள் அதிகம். மேலும் இப்பொழுதுள்ள கல்லூரி நெறி முறை ஆசிரியர்களில் பலர் பி.எ. வகுப்பில் முதல் பிரிவில் தேறிய வர்கள். இவ்வருடத்திலிருந்து இப்பதவிகளுக்கு அமர்த்தப்படு வோர் எம்.எ., எம்.எஸ்ஸி. போன்ற பட்ட மேற்படிப்பு நிலையில் முதல் அல்லது இரண்டாம் பிரிவில் தேறியிருக்க வேண்டுமென்று நிர்ணயிக்கப்பட்டுள்ளது. பி.டி. ஆசிரியர் பதவிகளுக்கு அமர்த்தப் படுவோர் பி.எ., பி.டி. படிப்பு நிலையில் எந்தப் பிரிவிலும் தேறி யிருக்கலாம். மேலும் பி.டி. ஆசிரியர்களுக்குத் தேர்வு நிலைப் பதவிகளும் புதிதாக ஏற்படுத்தப்பட்டுள்ளன. ஒரு பதவியின் ஊதியம், அதற்குண்டான பணிமுறைகள் பொறுப்புகளை ஒட்டி நிர்ணயிக்கப்படுகிறது. இரண்டாவது ஊதியக் குழு பொதுவான சில நெறி நியதிகளை வகுத்துக்கொண்டு பல்வேறு துறைகளில் உள்ள பதவிகளை ஒரு பொது அடிப்படையில் இணைத்துள்ளது. பி.டி. ஆசிரியர்களுக்கு இப்பொழுது நிர்ணயிக்கப்பட்டுள்ள சம்பள விகிதம்தான் தலைமைச் செயலகத்தில் பணியாற்றும் உதவியாளர் களுக்கும், ஊராட்சிப் பிரிவு அலுவலர்களுக்கும், கூட்டுறவுத் துறை முழு நிலை ஆய்வாளர்களுக்கும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. பி.டி. ஆசிரியர்களின் சம்பளத்தை மட்டும் உயர்த்தினால், அதே இனத்தி லுள்ள மற்ற பிரிவினரின் சம்பளவிகிதங்களையும் உயர்த்த வேண்டு மென்று கோரிக்கை எழும். இந்தச் சிக்கல்களையும் மனதில் கொண்டு இந்தக் கோரிக்கை பரிசீலனை செய்யப்பட வேண்டியிருக்கிறது.

## V. GOVERNMENT MOTION.

## DISCUSSION ON THE POLICY NOTE ON CO-OPERATION.

MR. CHAIRMAN : The Hon. the Minister for Co-operation will move the motion.

இதற்காகச் சரியாக ஒரு மணி நேரம்தான் ஒதுக்கப்பட்டிருக் கிறது. ஐந்து உறுப்பினர்கள் பேச வேண்டுமென்று தெரிவித்திருக் கிறார்கள். ஒவ்வொருவரும் ஐந்து நிமிடங்கள் மட்டும் எடுத்துக் கொண்டு பேசினால் நல்லது. இதற்குப் பிறகு அப்பிரோப்பிரேயஷன் பில் இருக்கிறது என்பதைக் தெரிவித்துக்கொண்டு மாண்புமிகு அமைச்சர் அவர்களைப் பேச அழைக்கிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவர் அவர்களே, கூட்டுறவுத் துறையைப் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பை @ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ள வேண்டுமென்ற தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன்.

கூட்டுறவுத் துறை பற்றிய விவாதம் இன்று இந்த மன்றத்தில் நடத்துவது குறித்து நான் மகிழ்ச்சியடைகிறேன். ஏற்கனவே மூன்று புத்தகங்கள் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட் டிருக்கின்றன. (1) கொள்கைக் குறிப்பைப் பற்றிய புத்தகம், (2) கூட்டுறவுத் துறையைப் பற்றிய ஆய்வுரை, (3) போவையில் கூட்

@ Printed as Appendix I on pages 80–93.

[திரு. சி. பா. ஆதித்தனார்] [29th July 1971

துறவுத் துறை அமைச்சர் உரை. (புத்தக வடிவத்தில் தயாரிக்கப் பட்டது). எனவே அதைப்பற்றி விரிவான விளக்கம் ஏதும் என் னுடைய முன்னுரையில் நான் சொல்லாவிட்டாலும் நான் தெரி வித்துக் கொள்ள விரும்புவதெல்லாம், தமிழ்நாட்டில் ஏறத்தாழ 25,000 கூட்டுறவுக் கழகங்கள் இருக்கின்றன. அவற்றில் சிறப்பான நல்ல அம்சங்களும் நல்ல நிறைமையும் உள்ளனை இருக்கின்றன. இன்னும் சிலவற்றில் குற்றம் குறைபாடுகள் இருக்கின்றன. அவற்றையெல்லாம்பற்றி இப்பொழுது பேச நினைத்தால், நேரம் போதாது. இந்தக் கூட்டுறவு இயக்கத்தின் இலட்சியம், அந்த இலட்சியத்தை நோக்கி எவ்வளவு தூரம் பயணம் செய்திருக் கிறோம், இன்னும் எவ்வளவு தூரம் பயணமிருக்கிறது என்பதைப் பற்றிப் பேசினால் மிகுந்த பயனுள்ளதாக இருக்கும் என்பதோடு நேரத்தில் முடித்துக்கொள்ள வாய்ப்பு இருக்கும் என்று கூறி மாண்புமிகு உறுப்பினர்கள் அவர்களுடைய கருத்துக்களைத் தெரி விக்கக் கேட்டுக் கொள்கிறேன்.

MR. CHAIRMAN: Motion moved—

"That the Policy Note on Co-operation be taken into consideration."

MR. CHAIRMAN: Thiru Rajah Iyer.

THIRU M. RAJAH IYER: Sir, I am speaking on the Appropriaiton Bill.

திரு. க. அறிவழகன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்தக் கூட்டுறவுத் துறையினுடைய அருமையான சிறப்பியல்புகள் இங்கே தரப்பட்டிருக்கின்ற அறிக்கையில் பரவலாக எடுத்துச் சொல்லப்பட்டிருக்கின்றன. கூட்டுறவுத் துறையை அறிஞர் அண்ணா அவர்கள் மிக நெடுங்காலமாக விரும்பியதுபோல், இந்தச் சமுதாயத்தில் மிக உயர்ந்த மட்டத்திலிருப்பவர்களிடம் சிக்கிக் கிடந்திருந்து, விடுதலை பெற்று இன்றைய தினம் ஒரு விடுதலை இயக்கமாகவிருக்கின்ற இன்றைய கூட்டுறவு இயக்கம் தாழ்த்தப் பட்ட மக்களுக்காகவும், சமுதாயத்தில் பின் தங்கிய நிலையிலுள்ள மக்களுக்காகவும், கல்வி அறிவு அதிகமாகப் பெற முடியாத மக்க ளுக்காகவும், விவசாய மக்களுக்காகவும் பயன்படுகின்ற ஒரு மாபெரும் இயக்கமாக மாறியிருப்பது முதற்கண் பாராட்டத்தக்க தாகும்.

இரண்டாவதாக, ஆரம்பக் கல்வி, தொடக்கக் கல்வி எப்படி சமுதாயத்தில் இன்றைய தினம் மிக வேகமாகப் பரவியிருக் கிறதோ, அதைப் போல் கூட்டுறவு இயக்கம் இன்றைய தினம் பரந்து, விரிந்து வளர்ந்திருக்கிறது. கூட்டுறவு இயக்கத்தின்மீது பழங்காலத்தில், ஒரு ஏழு, எட்டு ஆண்டுகளுக்கு முன்னால் சாட்டப் பட்ட குற்றச்சாட்டுகள் மிக வேகமாக நீக்கப்பட்டிருப்பது நிச்ச யமான மன நிறைவை அளிக்கிறது. கூட்டுறவு இயக்கம் உயிரற்ற இயக்கமாக, மக்களோடு தொடர்பில்லாத இயக்கமாக, நிலச்சுவான் தார்களின் இயக்கமாக, முதலாளிகள் வீட்டு இயக்கமாக இருந்து வந்த நிலைமை மாறி, இன்றைய தினம் ஏழை எளிய மக்கள் கூட்டுறவு இயக்கத்தினுடைய நெறியாளர்களாகவும், கூட்டுறவு



29th July 1971] [திரு. க. அறிவழகன்]

இயக்கத்தினுடைய தந்தையர்களாகவும், அதை நடத்திச் செல் கின்ற தந்தையர்களாகவும் இருக்கிறார்கள் என்பதை எண்ணுகின்ற நேரத்தில், உண்மையில் இந்தக் கூட்டுறவுத் துறையை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். 'ஆக்கல், காப்பாற்றுதல், அழித்தல்' என்று மூன்று முறைகளைச் செய்வதில் கூட்டுறவுச் சங்கப் பதிவாளர்கள் மிகச் சிறப்போடு விளங்குகிறார்கள் என்று கூட்டுறவு இயக்கத்தைப்பற்றி ஒரு அறிக்கையில் ஒரு ஆங்கிலேயர் குறிப்பிட்டிருந்தார். அவர்கள் அன்றையதினம் குறிப்பிட்டது இதுதான். சாதாரண மக்கள் கடன் வாங்குகின்ற நேரத்தில், அதுவும் நம்முடைய விவசாய மக்கள்—இந்தியா ஒரு விவசாய நாடு—கடன் வாங்குகின்ற நேரத்தில், அந்தக் கடனைத் திரும்பக் கொடுக்க முடியாத நிலைமை ஏற்படுகிறது. அதன் மூலமாகத் திரும்பத் திரும்பக் கடன் வாங்கி, அந்தக் குடும்பம் கடைசியில் சீரழிந்து போகும் நிலைமையைத் தடுக்கிறது இந்தக் கூட்டுறவுச் சங்கங்கள். அதற்குப் பிறகு கூட்டுறவு இயக்கத்தில் ஈடுபட்டிருக் கின்ற காரணத்தால், மிக எளிய முறையில் கடன் வாங்கி தங்க ளுடைய நிலங்களை வளமாக்கிக் கொள்ள ஏழை விவசாயிகள் நல்ல வாய்ப்பைப் பெறுகிறார்கள். சமுதாயத்தில் இந்தத் தேவைகளைப் பெறுவதற்கு, தனிப்பட்ட முறையில் சக்தியற்ற மனிதன், கூட் டுறவுத் துறையை ஒரு மிகுந்த பலமான மனிதனை நம்பும் அள வுக்கு கிராமப்புறங்களிலுள்ள சாதாரண மக்கள் ஆசை ஊட்டும் வகையில் ஜனநாயக வளர்ச்சியில் இவ்வியக்கம் மிக முக்கிய பங்கு வகிக்கின்றது. ஆனால் ஒரு ஏழு, எட்டு ஆண்டுகளுக்கு முன்னால், இந்தக் கூட்டுறவு இயக்கத்தை நடத்தி வந்த பெரும் நிலச்சுவான் தார்கள் தங்கள் கைப்பிடியிலேயே வைத்திருந்த நிலைமை முற்றிலும் மாற்றப்பட்டிருக்கிறது என்பதை யாரும் மறுக்க முடியாது. அதே நேரத்தில் நம்முடைய கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் 15,000 கூட்டுறவுச் சங்கங்கள் பரவலான விதத்தில் அமைந்திருக்கின்றன என்று சொல்வதன் மூலம் அவற்றில் பரவலாக சாதாரண மக்கள் பலர் பங்கு கொண்டிருக்கி றார்கள் என்ற செய்தியை நமக்கு அறிவிக்கிறார்.

கூட்டுறவுத் துறையைப்பற்றிப் பரவலாகக் குறைகளைச் சொல்லும்போது, சந்தானம் குழுவினுடைய அறிக்கை முழுவது மாக நிறைவேற்றப்படவில்லை என்று கூறப்பட்டது. அதை நிறை வேற்றவில்லை என்றால், எதை நிறைவேற்றினால் கூட்டுறவு இயக் கத்தில் இன்று ஏற்பட்டு வரும் வளர்ச்சி தடைப்படுமோ, எதை நீதிமன்றத்திற்கு எடுத்துச் செல்வதால், அதன் மூலமாக கூட்டுறவு துறையில் காண்கின்ற வளம் தடைப்படுமோ, அவற்றைத்தான் நிறைவேற்றவில்லையே தவிர, சந்தானம் குழுவினுடைய மூலா தாரக் கருத்துகள் மிக நல்ல முறையில் ஏற்றுக் கொள்ளப்பட்டு நிறைவேற்றப்படுகின்றன என்பதற்காக நான் பாராட்டுவதோடு அதற்கான ஆதாரங்களையும் எடுத்துச் சொல்ல முடியும். இன்றைய தினம் இந்தக் கூட்டுறவுத் துறையில் எதிர்க் கட்சிக்காரர்கள் உறுப் பினர்களாக இல்லை, நெறியாளர்களாக இல்லை என்று குறிப்பிட் டார்கள். நான் செங்கல்பட்டு-சென்னை மாவட்டங்களினுடைய

4.50 p.m.

ஆசிரியர்கள் பிரதிநிதியாக இருக்கிறேன் என்ற முறையில், அந்த மாவட்டங்களினுடைய கூட்டுறவுத் துறை நிலைமைகளைப்பற்றி நன்கு அறிந்திருக்கிறேன் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன். அங்கே "லேண்ட் டெவலப்மெண்ட் பேங்க்" என்ற நிலவள வங்கிக்கு, கடம்பத்தூரில் சிண்டிகேட் காங்கிரசைச் சேர்ந்த திரு. கே. சுப்பராய முதலியார் நெறியாளராக இருக்கிறார். செங்கல்பட்டு மாவட்டத்தைச் சேர்ந்த பள்ளிப்பட்டில் காங்கிரஸ் சார்பில் உறுப்பினராக வந்த திரு. எகாம்பர ரெட்டியார் நெறியாளராக இருக்கிறார். காரைக்குடியில், சுதந்திரா கட்சியினுடைய மூன்னாள் சட்டப் பேரவையினுடைய உறுப்பினராகவிருந்த திரு. மெய்யப்ப செட்டியார் நெறியாளராக இருக்கிறார். இன்னும் சொல்லப் போனால் எனது சொந்த ஊராகிய சிதம்பரத்தில் ஸ்டேட் கோவாப் ரேடிவ் பாங்க் தலைவராக திரு. கனகசபை பிள்ளையிருக்கிறார். இன்னும் எத்தனையோ பேர் எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்கள் இந்தக் கூட்டுறவுத் துறையில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்பது யாரும் மறுக்க முடியாத உண்மையாகும்.

நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. கிருஷ்ணசாமி நாயுடு அவர்கள் 21 ஆண்டுகள் இந்தக் கூட்டுறவுத் துறையில் தொடர்ந்து, யாரும் தோற்கடிக்காமல் இருந்திருக்கக் கூடும், பணியாற்றியிருக்கிறார்கள். நெல்லையில் 27 ஆண்டுகள் ஒரு தலைப் பட்ட குடும்பம் இதில் ஆதிக்கம் செலுத்திருக்கிறது. ஆதிக்கத்தை ஒழிக்கும் இந்த நூற்றாண்டில், ஆதிக்கக்காரர்கள் கூட்டுறவுத் துறையில் மிக நீண்ட காலமாக ஈடுபட்டிருப்பது ஒழிக்கப்பட்டு, அதே நேரத்தில் சாதாரண மக்கள் எவ்வளவு ஆண்டுகள் வேண்டு மானாலும் இருக்கலாம் என்று கொண்டு வந்திருப்பது மிக மிகப் பாராட்டத் தக்க முறையாகும்.

நம்முடைய கூட்டுறவுத் துறையில்

"Reservation of seats for small farmers and members of the weaker sections"

என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. சாதாரண மக்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டும் என்று இந்திய அரசியல் சட்டத்தைத் திருத்த வேண்டுமென்று இருக்கும் இந்த நேரத்தில் மிகவும் சாதாரண மனிதனுக்கு வேலை வாய்ப்புகளைத் தரவேண்டும், அவன் முன்னேற்றத்துக்கு வாய்ப்புத் தர வேண்டும், 14, 15 வயது வரை கல்வி தர வேண்டும் என்று பல்வேறு நிலைகளை இந்தக் கூட்டுறவு வங்கிகள் ஆதரிக்கின்றன. தமிழ் நாட்டில் 106 நில வங்கிகள், 16 சென்ட்ரல் பாங்குகள், ஒரு மாநில நில வங்கி, ஒரு மாநில கூட்டுறவு வங்கி இவைகளில் கடந்த ஆண்டுகளில், இந்தக் கழக ஆட்சிக்கு முன்னால் ஒரு மகளிர், அல்லது ஒரு தாழ்த்தப் பட்ட மகன் இடம் பெற்றிருக்கிறார்களா என்று பார்த்தால், இல்லை.

சில நிலச்சுவான்தார்கள் தங்கள் பண்ணையாட்களில் ஒரு சிலரை நெறியாளராக வைத்துக்கொண்டிருந்திருக்கிறார்கள். நல்ல உரிமை உணர்ச்சி உள்ளவர்களுக்கு மிகச் சிறப்பான இடம் தர வில்லை. இன்றைய தினம் அந்த நிலை மாற்றப்பட்டிருக்கிறது. இன்றைய தினம் கூட்டுறவுத் துறையின் தரம் உயர்த்தப்பட்டிருக்





கிறது. நெல்லையில் இருந்த கூட்டுறவுத் துறையைச் சேர்ந்த 'பி' கிரேட் சங்கம் 'ஏ' கிரேடாக ஆக்கப்பட்டிருக்கிறது. புதுக் கோட்டை 'சி' கிரேடாக இருந்தது. இப்போது அது 'ஏ' கிரேடாக உயர்த்தப்பட்டிருக்கிறது. இதற்கு என் பாராட்டைத் தெரிவித்து நான் அமருகிறேன்.

*திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு: மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, கூட்டுறவுக் கொள்கைப்பற்றிய விவாதத்துக்கு அடிப் படையாக நமது கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்கள் கொடுத் திருக்கின்ற கூட்டுறவுக் கொள்கைபற்றிய நிர்வாகக் குறிப்பும் இன்னும் இரண்டு பிரசுரங்களும் நமக்கு இங்கே வழங்கப்பட்டிருக் கின்றன. இங்கே விவாதத்துக்கு வந்த மற்றத் துறைகளின் பிரசுரங்களை விட ஒன்றில் குறிப்பிட்ட விஷயங்கள் மற்றொன்றில் 5.00 p.m இல்லாமல் நல்ல முறையில் தயாரிக்கப்பட்டிருக்கின்றன. அதற்காக என் பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். அதிலுள்ள கொள்கைகளில் சில கருத்து வேறுபாடுகள் இருந்தாலும், மற்றத் துறையினரின் விளக்கக் குறிப்புகள், கொள்கைக் குறிப்புகளைவிட மிகவும் சிறந்ததாக அமைந்திருக் கின்றன என்பதில் சந்தேகமில்லை. அதற்காக எனது பாராட்டு தலைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

இந்தக் கூட்டுறவு இயக்கம் 66 ஆண்டுகளாக நம்முடைய தமிழ் நாட்டில் வளர்ச்சி பெற்றிருக்கிறது. 1919-ம் ஆண்டு வரை கூட்டுறவுத் துறை இந்திய மந்திரியின்கீழ் இருந்தது. இந்தியாவில் பொருளாதார வளர்ச்சி காணும் வகையில் 1904-ம் ஆண்டு கூட்டுறவு துவக்கப்பட்டிருந்தாலும் கூட, மாண்டேகு செம்ஸ் போர்டு சீர்திருத்தக் காலத்தில்தான் இந்தியா மந்திரியின் கீழ் இருந்து மைசூரின் ஆளுகைக்கு மாறியிருக்கிறது. இப்படிப் பல ஆண்டுகளாக இந்த நாட்டில் கூட்டுறவுத் துறை நல்ல வகையில் வளர்ந்து வந்திருக்கிறது.

இந்தத் துறை முற்றிலுமே அரசு அல்லது கூட்டுறவு அரசாங்க அலுவலர்களின் ஈடுபாடு இல்லாமல் சுயபலத்தில் கூட்டுறவுத்துறை நடந்துகொண்டு வரும் வகையில், அதன் பொருளாதார பலம், நிர்வாகத்திறன் ஆகியவை வளரவேண்டும் என்று பல பெரிய வர்கள் எல்லாம் கூட்டுறவுக்காகப் பல ஆண்டுகள் உழைத்தார்கள். அந்த மாதிரி அரசாங்கத்தின் தலையீடோ அல்லது அதிகாரிகளின் தலையீடோ இல்லாமல் அது தன்நிறைவு பெறக்கூடிய நிலையில், டென்மார்க்கில், கனடாவில் உள்ளது போல் எல்லாப் பிரச்னை களையும் சமாளிக்கும் வகையில் இருக்கவேண்டும் என்றுதான் எல்லோரும் பாடுபட்டுக்கொண்டிருந்தார்கள். இந்தக் கூட்டுறவு இயக்கமானது இங்கே வளர்ச்சியடைந்திருக்கிற விஷயங்களைப் பற்றி பல்வேறு குறிப்புகள் தரப்பட்டிருக்கின்றன. அதன்படி 1969-70-ம் ஆண்டில் 488 லட்சம் ரூபாய் கூட்டுறவுச் சங்கங்களில் நம் அரசு முதலீடு செய்திருக்கிறது. இந்த முதலீட்டுக்கு ஆதாயம் கிடைத்திருக்கிறதா என்றால், இல்லை. கடந்த ஆண்டுகூட இந்தக் குறையை எடுத்துக் காட்டியிருக்கிறேன். அரசு முதலீடு செய்த தொகைக்கு 100 ரூபாய்க்கு 91 பைசா தான் கிடைக்கிறது.

[திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு]

1970-71-ம் ஆண்டு ரூபாய் 7,75,36,000 முதலீடு செய்யப்பட்டிருக்கிறது. இதன் வருமானம் என்ன என்பதைப்பற்றிக் குறிப்பிடவில்லை. அந்தச் சங்கங்களின் வளர்ச்சி இன்னும் நல்லவிதமாக இருக்கவேண்டும் என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன். 100 ரூபாய்க்கு 91 பைசாதான் அந்த முதலீட்டுக்கு வட்டியாக வருகிறது. இது மிகவும் குறைவாகும்.

தமிழ் நாட்டில் உள்ள பல்வேறு சங்கங்களிலும் முதலீட்டுக்குத் தகுந்த மாதிரி வட்டி அல்லது டிவிடண்டு வருகிறதா என்று பார்க்க வேண்டும். ஸ்ரீவில்லிபுத்தூர் கூட்டுறவு மார்க்கெட்டிங் சொசைடி 6 % வட்டி அரசாங்கத்திற்குக் கொடுத்து வருகிறது. வட்டி விகிதங்கள் ஏறிக்கொண்டே போகின்றன. இந்த நிலையில் அரசாங்கம் முதலீடு செய்துள்ள சங்கங்களில் குறைந்தபட்சம் 5% அல்லது 4% வட்டி செலுத்தும் வகையிலாவது சங்கங்களை நடத்த வேண்டும். அடுத்த ஆண்டிலாவது இந்தக் குறை நீங்க வேண்டும். அதற்கான முயற்சிகளைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இப்போது ஆதாயமற்ற கூட்டுறவுச் சங்கங்களை பலமுள்ள சங்கத்துடன் இணைக்கும் முயற்சி நடைபெறுகிறது. இப்படிச் செய்வதால், இந்தச் சங்கங்கள் பலமுள்ள சங்கங்களாக இயங்க முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். அதை நான் வரவேற்கிறேன். எல்லாச் சங்கங்களுக்கும், மார்க்கெட்டிங் சொசைட்டிகளுக்கும் இத்தகைய சரியான கோடவுன்கள் கட்டுவதற்கும், அலுவலகங்கள் கட்டுவதற்கும் அரசாங்கம் 50 சதவிகித மானியத்தையும், கடனையும் தொடர்ந்து கொடுத்து வரவேண்டும் என்ற அந்தக் கொள்கையை நீடித்ததற்கு என்னுடைய மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். இந்தக் கூட்டுறவுத் துறையில் இப்போது கடந்த இரண்டொரு வருஷங்களாக அரசாங்கத்தினுடைய அதிகாரிகளுடைய தலையீடு அதிகமாக இருந்துகொண்டிருக்கிறது என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். சில கசப்பான உண்மைகளை இந்தச் சந்தர்ப்பத்தில் இங்கு கூறியாக வேண்டும். நம் சகோதர அங்கத்தினர் இப்போது பேசும் பொழுது "சண்டை இல்லாத வீட்டுக்குச் சண்டைக்குப் போறேன். அயல் வீட்டு மூளி வீட்டைக் காத்துக்கோ" என்று சொன்னாளாம் ஒருத்தி. அதைப் போல அவர்கள் எதையோ மனதில் வைத்துக்கொண்டு பேசியதாக அவர் பேசிய தோரணை இருந்தது. அதை நான் பாராட்டவில்லை. 1927 முதல் நான் இந்தக் கூட்டுறவுத் துறையில் சம்பந்தம் கொண்டிருக்கிறவன். எனக்குக் கூட்டுறவுத் துறையிலே எந்தச் சங்கத்திலும் பதிவேடுகளையும், மற்ற ஸ்டேட்மெண்டுகளையும் எழுதத் தெரியும். பேருக்குத் தெரிந்தவன் அல்ல. சிறு சங்கம் முதல் பெரிய சங்கம் வரை தொடர்பு உண்டு. 21 ஆண்டுகள் என்று உறுப்பினர் சொன்னார். அதிக ஆண்டுகளாக 44 ஆண்டுகளாக இருக்கிறேன். அந்த வகையில் எந்தப் பகுதியில் வளர்ச்சி கண்ட சங்கங்கள் அதாவது ரூ. 8 ஆயிரம் லேவாதேவி செய்து வந்தவை தற்போது



29th July 1971] [திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு]

ரூ. 10 லட்சம் லேவாதேவி செய்கின்றன என்பதை என்னால் எடுத்துக்காட்ட முடியும். கடந்த ஆண்டுகளில் அதில் ஆதிக்கம் வகித்தவர்கள் என்ற பேச்சு வந்தது. காங்கிரஸ் ஆட்சி இருந்த காலத்தில், மத்திய வங்கிகளிலே காங்கிரஸ்காரர்கள் மட்டும்தான் இருந்தார்கள் என்பது சரியல்ல என்பதை ஞாபகத்தில் கொள்ள வேண்டும். அவர்கள் பேசும்பொழுதும்கூட புதிதாக இங்கு பேசுவதற்கென சில கருத்துக்களைப் பெற்று சில பேச்சுக்களை, சில விவரங்களைத் தெரிந்துகொண்டு அவர்கள் பேச முற்பட்டார்கள் என்பது பேச்சுக்களிலிருந்து தொனிக்கிறது. இதைப் பற்றிக் கவலையில்லை. ஆகையால் அவசரமாகத் தயாரித்த விஷயங்களைக்கொண்டு பேசியிருக்கிறார்கள். எல்லா மத்திய வங்கியிலும் காங்கிரஸ்காரர்கள் தலைவராக இருக்கவில்லை என்பதை ஞாபகத்தில் வைக்கவேண்டும். நான் எந்த மத்திய வங்கியிலும் தலைவராக இருந்ததுமில்லை என்பதையும் தெரிவித்துக் கொள்ளுகிறேன். அது ஒரு பக்கம் இருக்கட்டும். அதைப் பெரிதாக்குவதாக எடுத்துக் கொள்ளவேண்டாம். கசப்பான உண்மைகள் என்று சொன்னேன். இப்போது பலம் பொருந்தியதாக உள்ள திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சி புரிகிறது. நீங்கள் அதிகாரத்திலிருந்த காலத்தில் பலம் வாய்ந்த, விஷயம் அறிந்த, மனதில் பட்டதைத் தைரியமாக எடுத்துச் சொல்லக் கூடியவர்கள் எதிர்க்கட்சிக்காரர்களாக அமைத்திருந்தார்கள் என்ற பெருமை உங்களுக்கு வேண்டும். எதிர்க்கட்சியில் உள்ளவர்கள் அத்தகைய உண்மைகளை, எண்ணங்களை ஒளிக்காமல் எடுத்துச் சொல்லக்கூடிய ஆற்றல் உள்ளவர்களாக இருந்தார்கள் என்ற பெயரும் வேண்டும். இரண்டு கரப்பினருக்கும் புகழ் இருக்க வேண்டும். அந்த வகையில் எடுத்துக் கொள்ள வேண்டும். இந்தக் கட்சியைச் சேர்ந்தவர்கள் என்ற பாகுபாடு எண்ணத்தை நாம் இங்கே விட்டுவிட வேண்டும். கூட்டுறவில் 60 ஆண்டுக் காலமாக இருந்த நடைமுறைகள் மங்கி மறைந்து வருகின்றன. அரசு அலுவலர்கள் இயந்திரங்களாகி விட்டனர். திகைப்பும் பயமும் அவர்களிடம் ஏற்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சந்தர்ப்பம் அளித்தால், அதற்கான அவகாசம் அளித்தால், இவைகளை அவர்கள் மறுக்காமல் ஒப்புக் கொள்ளும் படியாகச் செய்ய முடியும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது என்பதைத் தலைவர் மூலமாகத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். அத்தகைய நிலை நாட்டில் உருவாகிக் கொண்டிருக்கிறது என்பதை இப்போது தெரிவித்துக் கொள்ளுகிறேன். முதலமைச்சர் அவர்கள் விரும்பினார்களோ, மற்ற மந்திரிகளே விரும்பினார்களோ இல்லையோ, கட்சிக் கண்ணோட்டத்துடனேயே எல்லாம் நடந்து வருகின்றன என்பது எல்லா சட்டதிட்டங்கள் இயற்றப்படுவதிலும், அமல் நடத்தப்படுவதிலும் நன்றாகத் தெளிவாகின்றன, பிரதிபலிக்கின்றன. ஜனநாயகத்தின் பெயரால், ஜனநாயக முறைகள் மறைந்து வருகின்றன. இதைப்பற்றி நான் வெகுவாகக் கவலைப்படுகிறேன். கூட்டுறவு நிலவள வங்கிகளில் அரசினர் நியமனங்கள் இருக்கின்றன. 1961-ம் வருஷத்திய கூட்டுறவுச்

[திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு] [29th July 1971

சட்டம் பிரிவு 27, உட்பிரிவு (2) கூட்டுறவு சங்கங்களில் அரசு பங்குகள் வைத்திருந்தாலும், பிற வகையில் அவர்கள் உதவி புரிந்திருந்தாலும், நிர்வாகக் குழுக்களில் அரசின் பிரதிநிதிகளை நியமிக்கலாம் என்று வகை செய்யப்பட்டிருக்கிறது. அவ்வாறு 3 பேர் மத்திய வங்கியில் இருக்கலாம் என்று முந்திய சட்டம் கூறுகிறது. ஆனால் மூன்று பேரையும் அப்போதுள்ள நியமிப்பதே இல்லை. இது காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில். ஒன்று ஒருநாள் கூட அமைச்சர் அவர்கள் இதே மன்றத்துக்கு முன்னால் முன்பு உள்ள எண்ணிக்கையையும், இப்போது அது எவ்வளவு உயர்ந்திருக்கிறது என்பதையும் எடுத்துச் சொன்னார்கள். அதில் நிர்வாகத்திலிருந்தவர்கள் 16 பேர். ஒவ்வொரு வங்கியிலிருந்தும் ஒருவர் போவது வழக்கம். மற்ற பேர்களை அரசு நியமிப்பது இல்லையென்று தெரிவித்துக்கொள்கிறேன். அப்படி நியமிக்கப் பட்டவர்கள் அரசாங்க அலுவலர்கள், பெரும்பாலும் ரிஜிஸ்ட்ரார், ஜாயின்ட் ரிஜிஸ்ட்ரார் இவர்களில் ஒருவர்தான். உத்தியோகப் பற்றற்றவர்கள் யாரும் இல்லை. இப்போது பெரிய மாறுதல்கள் ஏற்பட்டிருக்கின்றன. அரசு நியமனம் குறித்து சந்தானம் கமிட்டி அறிக்கையைப் பரிசீலனை செய்து வருவதாகச் சொன்னார்கள். அதைப் பரிசீலனை செய்ய வேண்டும். இதைப் பற்றி விரிவாக இப்போது பேசுவதற்கு நேரம் இல்லை. நம்முடைய கூட்டுறவு அமைச்சர் அவர்கள் மூன்றில் ஒரு பங்கு நியமனம் செய்யலாம் என்று முன்பு இருந்தது. நாங்கள் ஐந்தில் ஒரு பங்கு தான் நியமனம் செய்யலாம் என்று வைத்திருக்கிறோம் என்று வாதரீதியாகவும், சாதுரியமாகவும் சொன்னார்கள். "பாப்பு பயிற்றியக் காரி, பதைக்கப் போட்டுவிட்டு முக்குறுணி" என்று சொன்னோமாம். குறுணி என்று சொன்னால் பயிற்றியக்காரி. முக்குறுணியென்றால்! அதைப்போல ஐந்தில் ஒன்று என்று சொல்லிவிட்டு, இப்போது மத்திய மாநில நிலவள வங்கியில் 5-ல் ஒன்றுதான் என்று சொன்னால் முன்பு இருந்ததுகூட இல்லை என்று பொருள். ஆனால் மத்திய வங்கிகளிலும் நியமனம் செய்யப்பட்டோர் தொகை அதிகரிக்கப் பட்டிருக்கின்றது. யார் ஆதிக்கம் இருக்க வேண்டுமென்று விரும்புகிறார்களோ அவர்களுடைய ஆதிக்கத்தின் பலத்தை அங்கே பெருக்கியிருக்கிறார்கள் செயற்கை முறையில். அரசாங்க நியமனத்தை மேலும் பெருக்கியிருக்கிறார்கள். புதிய சங்கங்கள் என்ற பெயரால் புதிய சங்கங்களுக்கு அரசு நாமினேஷன் செய்து அவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளை அங்கு கொண்டு போயிருக்கிறார்கள். அந்த பலத்தைப் பெற்று செயற்கை பலத்தை உண்டுபண்ணிக்கொண்டார்கள் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்ளுகிறேன். மாநில நிலவள வங்கிக்கு 11 பேர்கள் எதற்காக இப்போது நியமனம் செய்திருக்கிறார்கள்? மொத்தம் 56 பேர்கள். மாநில நிலவள வங்கி மாதந்தோறும் ஒரு கூட்டம் கூட்டுகிறது. எப்படி விவாதம் செய்வார்கள் என்று நினைத்துப் பார்க்கிறேன். புரிந்துகொள்ள முடியவில்லை. மாதந்தோறும் ரூ. 10 ஆயிரம் செலவாகுமோ என்று அஞ்சுகிறேன். அதைப் பற்றிக் கவனிக்க வேண்டும். இப்போது அரசு செய்த விதிகளிலே சிறு



29th July 1971] [திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு]

சிறு விவசாயிகள் தாழ்த்தப்பட்டுள்ளோர் என்ற முறையில் மூன்று பிரதிநிதிகள் கொடுக்க வேண்டிய அவசியம் எங்கிருக்கிறதோ அங்கு கொடுக்கவில்லை. எங்கே சிறிய நிலச்சுவான்தார்களிடம் விண்ணப்பம் வருகிறது என்று பரிசீலனை செய்யப்பட வேண்டும்? அந்த இடத்தில் பிரதிநிதிகள் இருந்தால், அன்றாடப் பரிசீலனைக்கு வந்த மனுக்களைப் பரிசீலனை செய்ய உதவிகரமாக இருக்குமென்று நினைக்கிறேன். மாநில நிலவள வங்கியில் அவர்கள் பிரதிநிதிகள், அப்படி நியமிக்கப்பட்டவர்கள் சட்டசபை உறுப்பினர்கள், செல்வாக்குப் பெற்றவர்கள். இவர்கள் அவர்கள் கொடுத்த விண்ணப்பங்களைப் பரிசீலனை செய்து மாநில நிலவள வங்கியிலிருந்து சரியாகக் கடன் வசதிகள் கொடுக்கப்படுகின்றனவா என்பதை எப்படிப் பரிசீலனை செய்வது என்பதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. அவ்வாறு நியமன ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. மாநில நிலவள வங்கியை அவர்களுடைய ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வருவதற்கு நிலவள வங்கிகள் பல இடங்களில் ஏற்பாடு செய்யப்பட்டன. அவைகளுக்கு எல்லோரையும் அரசே நியமனம் செய்தது. அவர்களிலிருந்து பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். அவர்களைக் கொண்டு மாநில நிலவள வங்கி அதிகாரத்தைக் கைப்பற்றினார்கள். அதே போன்று மத்தியக் கூட்டுறவு வங்கிகளுக்கும் இதே முறையில் ஏற்பாடு செய்தார்கள். அதைப்பற்றியும் சந்தானம் கமிட்டி எப்படி இருக்கலாம் என்பதைப் பொதுவாகச் சிபாரிசு செய்தது. ஜில்லா சென்ட்ரல் பாங்க் என்று சொல்லக்கூடிய மத்திய வங்கியிலே எப்படி பிரதிநிதி அதிகப் படுத்தியிருக்கிறார்கள்? மத்தியக் கூட்டுறவு பாங்குகளின் நிர்வாக சபையில் மொத்தம் இத்தனை ஸ்தானங்கள் தான் என்பதை அந்த அரசு சட்டமூலம் கலையிட்டு நிர்ணயித்தது போல், வேறு எந்த அரசும் செய்ததில்லை. இது முன்பிருந்த அரசு கையாண்ட மரபுகளுக்கெல்லாம் மாறுக எப்படி திணிக்கப் பட்டது? அதிகாரம் அங்கே எப்படி வருகிறது என்பதைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும். சேலம் மத்திய கூட்டுறவு பாங்குக்கு மொத்த ஸ்தானங்கள் 26 பேர்கள். அதிலே புதிய நியமன பிரதிநிதித்துவ பிரதிநிதிகள் 10 பேர். அரசு நியமனம் செய்வதன் மூலம் வந்தவர்கள் 5 பேர். ஆக 26 பேரிலே 15 பேர் நியமனம். இப்படியே, தர்மபுரியில் 16-ல் 8 நியமனம். வேலூரில் 31-க்கு 15. தென்னாற்காடு 23-ல் 13. குடும்பகோணத்தில் 20-க்கு 10. தஞ்சாவூர் 33-ல் 16. திருச்சியில் 32-க்கு 14. புதுக்கோட்டையில் 22-க்கு 14. மதுரையில் 29-ல் 15. இராமநாதபுரத்தில் 29-க்கு 13. திருநெல்வேலியில் 28-ல் 14. கன்யாகுமரி 21-ல் 11. நீலகிரி 17-ல் 8. சென்னை நகரத்தில் 10-க்கு 2. காஞ்சிபுரம் 45-ல் 21. கோயம்பத்தூரில் 51-க்கு 23. இவ்வாறாக நியமனங்கள் செய்யப்பட்டிருக்கின்றன. இந்த முறையைப்பற்றி சிந்தித்துப் பார்க்க வேண்டும். பெருவாரியான மெஜாரிட்டியை வைத்துக்கொண்டு சட்டத்தைச் செய்துகொள்ள முடியும். விதிகளைத் தயாரித்துக்கொள்ள முடியும். ஆனால் இது நியாயமான முறையிலே, ஜனநாயக முறையிலே, கடந்தகால மரபுகளையொட்டி இருக்கிறதா என்பதையெல்லாம்தான் நான் கேட்கிறேன். சந்தானம் கமிட்டி

[திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு] [29th July 1971

கிராம விவசாய சங்கங்களின் பங்குத் தொகை லேவாதேவிகளில் 80 சதவிகிதத்துக்கு மேல் இருப்பதால், இந்தச் சங்கங்களின் 75 சதவிகிதம் ஸ்தானங்களுக்கும் இதர சங்கங்களில் 25 ஸ்தானங்களுக்கும் பங்குகளில் பிரதிநிதிகள் இருக்கவேண்டியது நியாயம் என்று சொல்லியிருக்கிறது. இங்கே பார்த்தால் மாநிலத்தில் உள்ள 16 பாங்குகளில் நிர்வாக சபைகளில் உள்ள 428 ஸ்தானங்களில் விவசாயக் கடன் சங்கங்களுக்கு 128 ஸ்தானங்கள்தான் கிடைத்திருக்கின்றன. அதை அவ்வளவுதான் கிடைக்க வகை செய்திருக்கிறது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். விவசாயிகள்தான் அதிலே பங்குதாரர்களாக அதிகம் சேர்ந்திருக்கிறார்கள். இராமநாதபுரம் ஜில்லாவில் ஒரு கோடி பங்குத் தொகை இருந்தால், 85 லட்சத்திற்கு விவசாயக் கடன் சங்கங்கள் மூலம், கிராமவாசிகளின் பணம் அங்கே இருக்கிறது என்று இந்த சந்தர்ப்பத்திலே தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால் விவசாயிகளுக்குக் கொடுக்கிற பிரதிநிதித்துவம் எப்படி இருக்கிறது என்றால், கோயம்புத்தூரிலே . . . .

(Deputy Chairman in the Chair.)

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்** : முன்பு இருந்ததைவிட இப்பொழுது குறைந்திருக்கிறது என்று சொல்லுங்கள். குறைந்திருக்கிறது என்று சொல்கிறீர்களா ?

**திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு** : அமைச்சர் அவர்கள் ரொம்ப சாதுர்யமாகச் சொல்கிறார். முன்பு இருந்த ஸ்தானங்கள் குறைந்திருக்கின்றன என்று அல்ல. இப்பொழுது இருப்பது அவர்களின் பெரும்பான்மைக்குப் போதாது என்று சொல்கிறேன். சேலத்தில் 26 இடங்களிலே விவசாயச் சங்கங்களுக்கு 8 இடங்கள்தான். தர்மபுரிக்கு 16-ல் 4 தான். கும்பகோணத்தில் 27-ல் 7. திருச்சியில் 32-ல் 11. புதுக்கோட்டையில் 27-ல் 9. மதுரையில் 29-க்கு 10. திருநெல்வேலியில் 28-லே 7 . கன்னியாகுமரியில் 21-லே 4. தஞ்சாவூரில் 45-க்கு 18. இராமநாதபுரத்தில் 29-க்கு 10. இந்தமாதிரி அங்கங்கே ஸ்தானங்கள் அளிக்கப்படுகின்றன. இந்த ஸ்தான நிர்ணயம் ஒரு கொள்கை அடிப்படையில் முறைப்படுத்தி, ஒரு சீரான விகிதாசாரத்தில் செய்யப்படுகிறதா என்றால் இல்லை. ஆட்டைத் தூக்கி குட்டியிலே போட்டு, குட்டியைத் தூக்கி ஆட்டிலே போட்டு நிறைவுபடுத்தி எப்படி பாங்குகளின் நிர்வாகத்தைக் கைப்பற்ற வேண்டுமோ அதற்கொத்தபடி இந்த ஸ்தானங்கள் நிர்ணயிக்கப்படுகின்றன. நான்கு நாட்களுக்கு முன்னாலே அரசுக் காகிதத்திலே ஒரு நிருத்தம் பார்த்தேன். நீலகிரி பத்தியை எங்கையைப் பிடிக்க வகையில்லைபோல் இருக்கிறது. 17-ல் நிர்வாகத் தேர்தல் காரியங்கள் நடக்கின்றன. இன்னும் பல ஜில்லா பாங்குகளில் இந்தத் தேர்தல்களை நடத்துவதற்கான ஏற்பாடுகள் நடந்துகொண்டிருக்கின்றன. இன்னும் "லிஃப்ட் ஓர்கேஷன்" சொசைடிகளையெல்லாம் அமைக்கிறார்கள். அதன் பைலா காப்பிகள் எங்களைப் போன்றவர்களுக்குக் கிடைக்கவில்லை. தந்தி ஆபீசிலே பிரிண்ட் பண்ணி அவர்கள் நிறையக் கொடுக்கின்றார்கள். எங்களுக்குக் கிடைக்கவில்லை.



29th July 1971]

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்** : தந்தி அச்சகத்தில் எதுவும் அச்சிடப்படுவதில்லை.

**திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு** : வேறு எங்கேயாவது பண்ணுகிறார்கள் போலும். சந்தோஷம். அது சம்பந்தமாக பைலா காப்பிகள்கூட கிடைக்கவில்லை. டெபுடி. ரெஜிஸ்டிராரிடம் கேட்டால்கூட கிடைப்பதில்லை. இந்த இந்த சொசைடியைத்தான் டெபுடி ரிஜிஸ்டிரார் ரெஜிஸ்டர் செய்ய வேண்டும் என்று கட்டளையிடப்படுகிறது. மற்ற இடங்களிலே "ஆர்கேனல்" செய்துகொண்டு போனால்கூட பதிவு செய்வதற்கும் அவர்கள் தயாராக இல்லை. பிற்தமாக இல்லை என்பதை இந்த சந்தர்ப்பத்திலே தெரிவித்துக் கொள்கிறேன். இராமநாதபுரத்திற்காக . . .

**டெபுடி சேர்மன்** : வேறு "பாயிண்ட்" இருந்தால் அப்ரோபிரியேஷன் பில்லில் சொல்லிக்கொள்ள வேண்டும். 5-20 p.m.

**திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு** : தயவுசெய்து அனுமதியுங்கள். ஐந்து நிமிஷத்திற்குள்ளாக முடித்துக் கொள்கிறேன்.

இராமநாதபுரம் ஸ்ரீவில்லிப்புத்தூர் ஏரியாவிலே தவணை கடந்த சங்கங்கள் 11. அந்தத் தலைவர்களுக்குள்ளே கடன் தவணையைக் கட்டிவிட்டவர்கள் 3. எப்படித் தான் தவணை தவறாத சங்கங்களின் தலைவர்கள். இந்த 8 சங்கங்களிலே அவர்களுக்கு அனுகூலமான ஒரு டைரக்டர் வர முடியாது. இதற்காக தவணை கடந்த சங்கங்களின் தலைவர்கள் எல்லோருமே வாக்கு செய்யலாம், என்ற நம்பிக்கையை உண்டுபண்ணி அவர்களையும் அழைத்துவந்து அத்தனை பேரும் வாக்களித்தார்கள் அங்கே. சட்டத்திலே இருக்கிறது என்று சொல்கிறார்கள். சட்டத்திலே 3 மாதத்திற்கு மேல் தவணை கடந்த சங்கங்களின் பிரதிநிதிகள் வாக்களிக்கவே முடியாது. எப்படி இவர்கள் வாக்களித்தார்கள் ? இந்த மாதிரி இருந்தால், என் கடை செய்யவில்லை ? இந்தச் சங்கங்களிலே தவணை கடந்துவிட்டது, ஆகவே பிரதிநிதிகள் இல்லை என்று எந்த டெபுடி ரெஜிஸ்டிராரும் சொல்லவில்லை. அப்படி ஓட்டளிக்க அனுமதிக்கும்போது, அவர்கள் டெபுடி ரெஜிஸ்டிராரிடம் நியாயத்திற்காகக் கையேந்தி நிற்க எங்கே இடமிருக்கிறது ? இந்த நிலைமையிலே தவணை கடந்த சங்கங்களின் மெம்பர்கள் எல்லோருமே வாக்களிப்பதற்கான ஏற்பாடுகள் எல்லாம் செய்யப்பட்டன. பாங்க் சேர்மன் தேர்தலுக்குப் பின்னாலே மல்லாங்கிணறு என்ற ஊரில், 18,000 ரூபாய் கையாடல் செய்து நடவடிக்கை எடுக்கப்பட்டு சங்கத் தலைவர் ஒருவரை மீண்டும் அதன் தலைவராகக் கொண்டு வந்துவிட்டார்கள். இது பாங்க் சேர்மன் தேர்தலுக்குப் பின்னாலே நடைபெற்றது என்று தெரிவித்துக் கொள்கிறேன். ஸ்ரீவில்லிப்புத்தூர் கோவாப் ரேடில் சூப்பர்வைசிங் யூனியனுக்கு ஒருவர் தலைவர் இருக்கிறார். பேங்க் டைரக்டருக்கு சம்பந்தமில்லை. அவர்தான் இருக்கிறார். பேங்க் டைரக்டராக வேறொருவர் வந்திருக்கிறார். அவருக்கும் சம்பந்தமில்லை. அவர்தான் தலைவர் என்று உட்கார்ந்திருக்கிறார். அங்கே இருக்கிற சிப்பந்திகள் நடுங்குகிறார்கள். வேலை போய்விடுமே என்று அஞ்சுகிறார்கள்.

[திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு] [29th July 1971

மேனேஜரைத் தலைவர் கூப்பிட்டால் என்ன பண்ணுவது என்று பயம். ஆள் அனுப்பினால், கூப்பிடுகிற ஆளுக்கு நேரில் வர பயந்து கொண்டு தெருவிலே வந்தால்கூட ஒளித்துகொள்கிறார்கள். இராம நாதபுரம் கோவாபரேடிவ் சென்ட்ரல் பேங்கிலே, ஸ்ரீவில்லிபுத்தூர் கோவாபரேடிவ் சூப்பர்வைசரி யூனியனைச் சார்ந்த சங்கங்களின் பட்டியல் எனக்கு வேண்டும் என்று நான் கேட்கிறேன். அந்த ஈ.ஓ. பயப்படுகிறார். செக்ரட்டரி பயப்படுகிறார். ஒரு லிஸ்ட் கொடுத்தால் என்ன? இப்படி ஒரு ஸ்ட்ரைக் கூடக் கொடுப்பதில்லை. மோசமான பயமுறுத்தல்கள் நடைபெறுகின்றன. ராமநாதபுரம் டிஸ்டிரிக்ட் சப்ளை அண்ட் மார்க்கெட்டிங் சொசைட்டியில் இரண்டு ஸ்தானங்களுக்குத் தேர்தல் நடைபெற வேண்டும். 18-ம் தேதி 2 மனுக்கள்தான் கொடுக்கப்பட்டன. வேட்பு மனுக்கள் பரிசீலனைக்காக உட்கார்ந்திருக்கின்றபோது, 19-ம் தேதி முன் இருந்த 2 பேருக்கும் 2 மாத காலம் பதவி நீடிக்கப்பட்டுள்ளது. அரசு உத்திரவு வந்துவிட்டது. இப்பொழுது தேர்தல் இல்லை, எல்லோரும் எழுந்து போங்கள் என்று சொல்லிவிட்டார்கள். இது ஜூன் 19-ம் தேதி. ஜூன் 28-ம் தேதி போட்டி கிடையாது என்று அறிவிக்க வேண்டும் அவ்வளவுதான். 'யாரோ வரும் பின்னே, மணி ஓசை வருர் முன்னே' என்று சொல்லும் பழமொழிக்கேற்ப மத்திய மாநில பார்ட்டிகளுக்கு கூட்டுறவுச் சட்டத் திருத்தத்தின் பிரகாரம் எது வந்ததோ, அதே ஆபத்து இவைகளுக்கும் வரும் என்பதற்கு அடையாளம்தான். ஆகவே இந்த வகையில் அங்கே காரியங்கள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

இந்தக் கடன் வசூல் விஷயத்தில், ஜூன் மாதத்தில் பொம்ப கெடுபிடி செய்கின்றார்கள். 'எ' கிளாஸ், 'பி' கிளாஸ், 'சி' கிளாஸ் என்று பாங்கின் தரம் கீழே போய்விடக் கூடாது, கெட்ட பெயர் வந்து விடக்கூடாதென்று கடன் வசூலில் பெரிய நிர்பந்தம் செய்கின்றார்கள். அமைச்சர் அவர்களும், முதலமைச்சர் அவர்களும் கொடுத்த வாக்குறுதியை மீறுகின்ற அளவுக்கு பல சங்கங்களில் கெடுபிடிகள் நடந்திருக்கின்றன. பல சங்கங்களினுடைய கோடவுன்களில் ஸ்டாக் செய்த பொருட்களை வைத்துக்கொள்ள இடம்கூட இல்லை. 31—6—1971 வரையில் தவணை கடந்திருக்கிற சங்கங்களிலிருந்து வந்த தலைவர்கள் மூத்த டைரக்டர் முன்னால் 20—5—1971-ல் டைரக்டர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள். அந்த டைரக்டர் தலைவராக உள்ள சங்கம் தவணை கடந்த சங்கம் என்று பெயர் வரக்கூடாதென்று அச் சங்கத்திற்காக பாங்கியிலிருந்த பங்குத் தொகையில் ரூபாய் 6,500 அட்ஜஸ்ட் செய்தும், அதுவும் போதாமல் ரூபாய் 1,500 ஈட்டுக் கடன் என்று போட்டுக் கொடுத்து தவணை கிடைக்காத சங்கங்கள் என்ற நிலைமையை உருவாக்கியிருக்கிறார்கள். ஒரு ஈ.ஓ போலீஸ் ஸ்டேஷனில் வைக்கப்பட்டிருந்த பொருட்கள் ஒன்றுமே சங்கத்தில் இல்லை. அந்த ஈ.ஓ.-க்கு எழுத்து மூலமாக பாங்குக்கு ரிப்போர்ட் அனுப்ப பயம். இம் மாதிரியாகத் தொடர்ந்து காரியங்கள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. இவைகளையெல்லாம் பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இங்கே வந்த பிறகு கேள்விப்பட்டேன்.



29th July 1971] [திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு]

மேல்மலையனூர் என்ற இடத்தில் ஒரு நிலவள வங்கி இருக்கிறது. ஒரு சி.எஸ்.ஆர். செக்ரட்டரி. அவர்தான் செக்கில் கையெழுத்து போட வேண்டியவர். தான்தான் செக்கில் கையெழுத்துப் போட்டுக் கொடுப்பேன். நான்தான் அதிகாரி; நான்தான் போடுவேன் என்று சொல்லிக்கொண்டு அதன் தலைவர் தகராறு செய்கிறாராம். பேங்கே தடைபெறுமல் மூடியிருக்கிறது. இப்படிப் பட்ட தொல்லைகள் பலவிடங்களில் இருந்து வருகின்றன. இது ஒரு நல்ல இயக்கம். எல்லோரும் வரவேற்கத்தக்க இயக்கம். காங்கிரஸ் ஒரு காலத்தில் கூட்டுறவு காமன்வெல்த் லட்சியம் என்று திட்டமிட்டிருந்த இயக்கம். பொருளாதாரச் சிக்கலைச் சமப் படுத்துவதற்காகவும் சோஷலிசப் பாதைக்கும் தோதான இயக்க மாக இது அமைந்திருக்கிறது. அப்படிப்பட்ட இயக்கங்கள் நேர்மையான வகையில், நல்ல முறையில் நடைபெற மந்திரிசபை, முக்கியமாக நம்முடைய முதலமைச்சர் அவர்கள் நன்கு கவனிப்பார் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. இதிலே உள்ள குறைகளைக் களைவதற்கு எற்பாடுகள் செய்யவேண்டு மென்று அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்கள் பாரத ரத்னர் உடையவர். நல்ல குடும்பத் தைச் சேர்ந்தவர். அந்த வகையில் எனக்குத் தெரியும். சில பேருக்குப் பிள்ளைகளை பெல்ட்டோடு அடித்துக் கொடுத்து கொஞ்சம் பழக்கம். சிலருக்கு கன்னிவிட்டு விட்டுக் கொஞ்சமாவது பழக்கம். சிலர் பிறரைக் கஷ்டப்படச் செய்துவிட்டு அதைக் கண்டு அதிலே சுகம் அனுபவிக்கும் சுபாவமுண்டு. ராமன் காட்டுக்குப் போனபிறகு பரதன் அயோத்தி நாட்டுக்கு வந்தான். பாதரட்சையைத் தூக்கிக் கொண்டே வந்தான். கௌசல்யைப் பார்க்கப் போனான். ராமனுக்குத் துரோகம் செய்து விட்டான் என்று தன்னை கோசலை நினைக்க இடமிருக்குமோவென்று பரதன் தவிக்கிறான், அஞ்சுகிறான், அழுகிறான். அருணாசலக் கவிராயர், இதை எடுத்துக் கூறியுள்ளார் ஒரு பாடலில் ராம நாடகம் என்னும் நூலில்.

சேரும் கதியில் சேருவேனம்மா, அந்த
ராமத்துரோகம் தெரிந்தால் அனுபவிக்கிறேனம்மா

என்னும் பாட்டில்

தீர்த்தக்கரைப் பாவியும், கடுங்கோபியும் ஜனத்துரோகியும்
வார்த்தையால் பிறட்டும் படுகோளனும்
வழக்கழிவு சொல்லும் அசட்டாளனும் சேரும் கதியில்
சேருவேனம்மா

என்று பரதன் கோசலையிடம் முறையிடுவதாக வருகிறது.

நம்முடைய கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்களை அத்தகைய பாவங்கள் எல்லாம் சார்ந்துவிடக்கூடாது என்பதற்காக, அதற்குப் பாதுகாப்பாக தற்கர்த்து நல்ல வகையில் காரியங்கள் நடத்தித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். சமீபத்தில் இந்த

[திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு] [29th July 1971

இலாகாவில் பெரிய பெரிய அதிகாரிகள் அடிக்கடி மாற்றப்பட்டிருக்கிறார்கள். காரணம் இந்தமாதியான காரியங்கள் நடைபெற்றதால்தான் இருக்க வேண்டுமென்று கருதுகிறேன். மேலும் பேச நேரமில்லை. கூட்டுறவு இயக்கம் பரந்து விரிந்து நல்ல முறையில் இயங்க வழி செய்ய வேண்டுமென்று தெரிவித்துக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

**திரு. பி. நாராயணசாமி :** மேலவைத் துணைத் தலைவரவர்களே, இப்பொழுது கொடுக்கப்பட்டிருக்கின்ற நேரம் ஐந்து நிமிடங்கள். ஆனாலும் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. கிருஷ்ணசாமி நாயுடு அவர்கள் 21 நிமிடங்கள் அதிகமாக எடுத்துக் கொண்டுவிட்டார். ஆகையினால் நான் இந்தக் குறிப்பிட்ட நேரத்திற்குள் எதைப் பேசுவது என்று உணர்ந்துகொள்ள முடியவில்லை. இருந்தாலும் குறுகிய அளவில் தலைவரவர்கள் மணி அடிப்பதற்குள் முடித்துக்கொள்கிறேன். கூட்டுறவு இயக்கத்தைப்பற்றி மிக விரிவாக இங்கே சொல்லியிருக்கிறார்கள். கூட்டுறவு நம்முடைய சோஷலிசப் பாதைக்கு இவ்வளவு வழியிட்டுத் தருகிறதென்பதை அறிந்து முன்கூட்டியே செய்தார்களோ என்னமோ இன்றைய சோசலிச முறைக்கு இந்தக் கூட்டுறவுத் துறை நல்லதொரு வழி காட்டியாக அமைய முடியும் என்பதில் யாரும் சந்தேகப்பட முடியாது. அந்த ஒரு நல்ல நிலைமை ஏற்பட்டிருக்கிறது. நம்மூடைய முதலமைச்சர் அவர்களும் மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களும் தங்களுடைய முழுத் திறமையையும் காட்டி இந்தத் துறையை வளர்ச்சியுறச் செய்து வருகிறார்கள் என்பதில் சந்தேகமில்லை. காங்கிரஸ் கட்சித் தலைவர் தனது பேச்சின் முற்பாகத்தில் மிக அதிகமாகப் பாராட்டினார். எனக்குச் சந்தேகமாக இருந்தது. கடைசி வரையில் அந்தப் பாராட்டுதல்களோடு முடிப்பாரா அல்லது வழக்கமான குற்றச்சாட்டுகள் வருமா என்று. நான் எதிர்பார்த்தபடியே சொன்னார். அவர் திரும்பத் திரும்பச் சொன்ன குற்றச்சாட்டு, அதிகாரிகள் பயப்படுகிறார்கள், அதிகாரிகள் பயப்படுகிறார்கள் என்பதுதான். எனக்குத் தெரியும். முன்பு ஒரு காலமிருந்தது. ஜாயிண்ட் ரிஜிஸ்ட்ராராகவிருந்தாலும், டிபுடி ரிஜிஸ்ட்ராராகவிருந்தாலும், மந்திரிகளைப் பார்த்துவிட முடியும்—இந்தக் கூட்டுறவுத்துறை நிர்வாகிகளைப் பார்த்துவிட முடியாது. மணிக்கணக்கில் காத்துக் கிடக்கும் நிலைமையிருந்தது. இது சென்றகால நிலைமை, 1967-க்கு முன்னால் இருந்தது. இதை யாரும் மறுக்க முடியாது. வேண்டுமானால் இங்கேயிருக்கின்ற தலைவர் அந்த மாதிரிச் செய்திருக்க மாட்டார். நான் பார்த்திருக்கிறேன். பெரிய, பெரிய அதிகாரிகளெல்லாம் கூட்டுறவுத் தலைவர்களுக்கு அஞ்சினார்கள். மணிக்கணக்கில் காத்துக்கிடந்ததை நான் பார்த்திருக்கிறேன். அதோடு மட்டுமல்ல, காலில் போட்டுக்கொண்டிருக்கும் பூட்ஸுகளைக் கூட கழட்டிவிட்டு நின்று கொண்டிருப்பார்கள்.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** பூட்சைக் கழட்டிக்கொண்டு காத்திருப்பார்கள் என்று சொல்வது சரியா ?

5.30 p.m.



29th July 1971]

**திரு. பி. நாராயணசாமி :** நம்முடைய கூட்டுறவுத் துறை அமைச்சர் மீது என்ன தவறு என்றால், நேரடியாகவே எல்லாவற்றையும் கவனிக்கிறார். நேரடியாகவே தலையிடுகிறார், நேரடியாகவே தலையிடுகிறார் என்று திரும்பத் திரும்பச் சொல்லப்படுகிறது. முதலமைச்சர் அவர்கள் நேற்றையதினம் சொன்னதுபோல், இந்த நாலாந்தர, பிற்பட்டோர் ஆட்சியில் கூட்டுறவுத்துறை அமைச்சர் இருக்கின்ற காரணத்தால், நேரடியாகத் தொடர்பு கொண்டிருக்கிறார். அந்தக் காலத்தில் மன்னர்கள் அரச சபையில் உட்கார்ந்துகொண்டு, மந்திரிகளைக் கூப்பிட்டு, நாட்டில் மாதம் மும்மாரி பொழிந்ததா என்று விசாரிப்பார்கள் என்று கூறுவது வழக்கம். அதுபோல் இந்த ஆட்சிக்கு முந்தைய ஆட்சிக்கால மந்திரிகள் இருந்திருக்கலாம். ஆனால் இந்த ஆட்சியின் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் அதற்கு மாறுக கீழேயிருக்கிற சாதாரண ஒரு கூட்டுறவுத்துறையிலிருக்கும் செயலாளர்வரைக்கும் தொடர்பு வைத்துக்கொண்டிருக்கிறார் என்றால், அந்த நிலைமையைப் பார்க்கப் பெருமையல்லவா ? எந்த சொசைட்டியில் எங்கே என்ன நடக்கிறதென்று இப்பொழுது போய் நமது கூட்டுறவுத் துறை அமைச்சரிடம் கேட்டால், அவர் சாதாரணமாகப் பதில் தந்து விடுவார்கள். அந்த அளவுக்குத் திறமையோடு செய்திருக்கிறார். நம்முடைய தமிழ் நாட்டைப் பொறுத்த வரையில், கூட்டுறவுத்துறை மூலமாக எவ்வளவோ நல்ல காரியங்கள் நடைபெற்று வருகின்றன என்பதை யாரும் உளமார மறுக்க முடியாது. நெல்லைக் கொள்முதல் செய்கிறோமே, அதுபோல நெல்லை விற்கும் உரிமையும் வேண்டும். நாங்கள் தஞ்சை மாவட்டத்தில் பல தாலுகாக்களிலிருந்து நெல்லை வாங்குகிறோம். வாங்கிய அந்த நெல்லைத்தான் அரைக்கிறோம். அந்த அரிசிக்கு 'க்வாலிட்டி கட்' போடுகிறார்கள். அதுவும் 6 மாதத்துக்குப் பிறகு 20,000, 30,000 ரூபாய் என்று 'க்வாலிட்டி கட்' போடுகிறார்கள். இதனால் கூட்டுறவு ஸ்தாபனங்கள் எல்லாம் நஷ்டப்படுகின்றன.

மாண்புமிகு உறுப்பினர் திரு. கிருஷ்ணசாமி நாயுடு அவர்கள் குறிப்பிட்டார்கள் கூட்டுறவு ஸ்தாபனங்களின் மூலம் வரும் உரங்களின் விலைகள் அதிகமாக இருக்கின்றன என்று. ஒரு டன்னுக்கு இவ்வளவு என்று வாங்கி, அதை நெல்லை ஜில்லாவுக்கு அனுப்புகிறோம். போக்குவரத்துச் செலவு எல்லாம் இத்துடன் சேராது. இதே உர கம்பெனிக்காரன் நெல்லைக்குச் சென்று இந்த விலைக்கே அங்கே ஒருவருக்கு சப்ளை செய்கிறான். இப்படி தனியார் தலையீடு இருப்பதால், கூட்டுறவு ஸ்தாபனங்களில் நஷ்டம் ஏற்படுகிறது.

கூட்டுறவு ஸ்தாபனங்களின் மூலமாகத்தான் நிச்சயமாக விவசாயிகளுக்கு எல்லாக் காரியங்களையும் செய்ய வேண்டும் என்று விரும்புகிறேன். இதைத் தமிழக அரசு முழுமையாக ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

பஞ்சாப் மாநிலத்தில் விவசாயிகள் உற்பத்தி செய்யும் பொருள்களைக் கொள்முதல் செய்வது எல்லாம் கூட்டுறவுத் துறைதான். அங்கு லாபம் வரும்போது ஒரு ஸ்தாபனமும், நஷ்டம் வரும்போது இன்னொன்றும் என்று இல்லை.

[திரு. பி. நாராயணசாமி] [29th July 1971

ஐ.எம்.எஸ். கடன்கள் பஞ்சாயத்து யூனியன்களில் பெற்று வருகிறார்கள். சாதாரணமாக இந்தக் கடன்கள் எல்லாம் கால கால கட்டத்தில் கிடைக்கிறதா என்பதையெல்லாம் அரசாங்கம் பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். ஐ.எம்.எஸ். கடன்களைக் கூட்டுறவு ஸ்தாபனங்களுக்குக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

புழுங்கல் அரிசியைச் சாதாரண மில்லில் செய்தால் செலவு 8 ரூபாய் ஆகும். ஆனால் இன்றைக்கு மாடர்ன் அரிசி மில்லை நமது அரசு உருவாக்கியிருக்கிறது. இதற்கு 20 ரூபாய் செலவாகிறது. அதற்குப் பிறகு புரொடக்ஷன் இஞ்சினியர், ஷிப்டு இஞ்சினியர், அவர்களுக்குப் பின்னாலே 2 அதிகாரிகள். இவ்வளவுக்கும் 30 ரூபாய் செலவாகிறது. இதற்கும் அறவை கூலி 2 ரூபாய்தான். அதற்கும் அறவைக் கூலி 2 ரூபாய்தான். இதனால் மில்லில் நஷ்டம் ஏற்படுகிறது. இதில் அரசு தலையிட்டு இதைச் சிறப்பாகச் செய்து தர வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

உரவிநியோகத்தில் நான் மீண்டும் மீண்டும் கேட்டுக் கொள்வதெல்லாம் இந்த மாநிலம் பூராவும் தமிழ் நாடு கூட்டுறவுச் சங்கத்தின் மூலமாக விநியோகம் செய்ய வேண்டும் என்பது. இப்போது தஞ்சை மாவட்டத்தில் தமிழ்நாடு கூட்டுறவு ஸ்தாபனம் செயல்படவில்லை. அங்கே டி.சி.எஸ். தான் பணியாற்றி வருகிறது. மற்ற மாவட்டங்களில் தமிழ்நாடு கூட்டுறவு ஸ்தாபனம் பணியாற்றி வருகிறது. இந்த ஸ்தாபனம் ஒரே ஸ்தாபனமாக தமிழ் நாடு பூராவும் விவசாயிகளுக்கு நன்மைகள் செய்வதற்கான ஏற்பாடு களைச் செய்ய வேண்டும்.

இப்போது கூட்டுறவு ஸ்தாபனங்கள் நல்ல முறையில் கொள்முதல் செய்து வருகின்றன. இதேபோல் விற்பனையிலும் விநியோகத்திலும் நிச்சயமாக நல்ல பெயர் எடுக்கும். அங்கே அமைச்சர் நேராகத் தலையிடுகிறார். சிலர் இதில் ஆபத்து இருக்கிறது என்று கருதுகிறார்கள். அந்தக் காலத்தில் தான் இந்த ஆபத்துக்கள் எல்லாம் இருந்தன. பல தலைவர்கள் உயிர் நீத்தார்கள். அமைச்சர் நேரடியாகத் தொடர்பு கொண்டிருப்பதால் கூட்டுறவுத் துறை நல்ல நிலைமையில் இருக்கிறது. இதில் மேலும் கவனம் செலுத்தவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்ளுகிறேன்.

(Mr. Chairman in the Chair.)

5-40 p.m.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** தலைவர் அவர்களே, நான் குறிப்பாக குழந்தை உள்ளத்தோடு திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு அவர்கள் பேசிய பல கருத்துக்களுக்குப் பதில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அவர்கள் இந்தக் கூட்டுறவுத் துறையில் சிறந்த அனுபவம் உள்ளவர்கள். அவர்களே சொன்னார்கள், 1927-ம் ஆண்டிலிருந்து தனக்குக் கூட்டுறவுத் துறையோடு தொடர்பு உண்டு என்று. எடுத்துக் காட்டாக, மத்திய வங்கியில் 1950-லிருந்து



29th July 1971] [திரு. சி. பா. ஆதித்தனார்]

21 வருஷம் இயக்குநராக இருந்து வருகிறார்கள். இப்போதும் சில கூட்டுறவு சங்கங்களில் தலைவராகவும் இருக்கிறார்கள். முதலில் சொன்னார்கள், கூட்டுறவுத் துறையில் அரசாங்கத் தலையீடு இருக்கிறது என்று. ஸ்விட்சன் நாட்டைப் போல், அரசு தலையீடு கூடாது என்று சொன்னார்கள். அதை முற்றிலும் நான் வரவேற்கிறேன். அப்படியானால் நமது ரா. கிருஷ்ணசாமி நாயுடு அவர்கள், அவர்கள் நடத்துகிற கூட்டுறவுத் துறையில் எந்த விற்பனை சங்கங்களுக்குப் பணம் ஒன்றும் கேட்டிருக்கக்கூடாது. மற்ற நாடுகளில் அரசு தலையிடுவது இல்லை என்பது உண்மை. அதற்குக் காரணம் இருக்கிறது. அரசாங்கம் கூட்டுறவுத் துறைக்கு எந்த விதமான பணமும் கடனுகவோ அல்லது மானியமாகவோ பங்குத் தொகையாகவோ கொடுப்பதில்லை. நமது ரா. கிருஷ்ணசாமி நாயுடு அவர்கள் ஸ்ரீவில்லிபுத்தூர் விற்பனை சங்கத்திற்குத் தலைவராக இருக்கிறார். அரசு எந்தவிதமான பாரபட்சமும் இல்லாமல் நடந்துகொண்டிருக்கிறது என்பதற்கு எடுத்துக் காட்டாகச் சொல்லுகிறேன். அந்த சங்கத்திற்கு ரூ. 1,16,000 கடனுகவும் மேலும் முற்றிலும் இனமாக ரூ. 60,700 அளவுக்குக் கிடங்குகளுக்காகவும் ஜின்னிங் பாக்டரிக்காகவும் கொடுத்திருக்கிறோம். இதில் எந்தவிதமான கட்சிக் கண்ணோட்டமும் கிடையாது. அரசு தலையிடுகிறது என்றால், பின் தங்கிய நாடுகளில் அரசு தலையிட வேண்டியிருக்கிறது. முற்போக்கான நாடுகளில், ஸ்வீடன், டென்மார்க், இங்கிலாந்து, போன்ற நாடுகளில் கூட்டுறவுத் துறைச் சங்கங்கள் அரசிடமிருந்து கால் காசு கூடக் கடனுக வாங்குவதில்லை. அரசு கண்காணிக்க வேண்டுமே தவிர, தலையிடவில்லை. இங்கு எப்படியென்றால், ஏறத்தாழ ரூ. 7 கோடிக்கு மேல் பங்குத் தொகையாகவும் அதைப் போலவே கடனுகவும் கொடுத்து உதவ வேண்டிய நிலைமை நமது நாட்டிலுள்ள கூட்டுறவுக் கழகங்களுக்கு இருப்பதால், அரசு ஓளவு கண்காணிக்கவும் தலையிடவும் நேரிடுகிறது. அவ்வளவு பெரிய மூதலீடு செய்கிற காரணத்தால், அது அவசியமாகத் தெரிகிறது. இன்னும் சொன்னார்கள். வங்கிகளின் நிர்வாகம் சீர்குலைந்து விட்டதென்று. அவர்கள் சீர்குலைந்து விட்டது என்கிறார்கள். நான் சொல்லுவேன் சீர்குலையவில்லை யென்று. யார் முடிவு கட்டுவது? வங்கிகள் நல்லபடி நடக்கின்றனவா, சீர்குலைவாக நடக்கின்றனவா என்று பார்த்து முடிவு செய்ய ரிசர்வ் பாங்க் இருக்கிறது. பொதுவாக வங்கிகளுக்குக் கொடுக்கிற பணத்தையெல்லாம் பெருவாரியாக ரிசர்வ் பாங்கிலிருந்து கடனுகப் பெற்று, அதற்கு அரசு உத்தரவாதம் கொடுத்துப் பெற்று கொடுக்கிறோம். ஆண்டுதோறும் ரிசர்வ் பாங்க் இந்த பாங்குகள் எப்படி நடக்கின்றன என்ற குறிப்புகளை எழுதுகிறார்கள். தாம் பாகுபாடு செய்கிறார்கள். நன்முகச் செயல்படுகிற வங்கியை 'ஏ' கிளாஸ் என்றும் இரண்டாம் தர வங்கியை 'பி' கிளாஸ் என்றும் அதற்குப் பிறகு 'சி' கிளாஸ், 'டி' கிளாஸ் என்றும் பிரிக்கிறார்கள். திரு. கிருஷ்ணசாமி நாயுடு ஒன்று சொன்னார்கள். சில மாறுதல்கள் ஏற்பட்ட பிறகு, புதிய தேர்தல் நடந்த பிறகு, அதிக அனுபவம் இல்லாதவர்கள் இப்போது வங்கிகளை நிர்வாகம் செய்கிறார்கள் என்ற காரணத்தையொட்டிச்

சொல்லியிருப்பார்கள் என்று நினைக்கிறேன். அவர்கள் அப்படிச் சொல்லுகிறார்கள், நான் இல்லையென்று சொல்லுகிறேன். ஆனால் ரிசர்வ் பாங்க் என்ன சொல்லுகிறது என்று கவனிக்கப்பட வேண்டும். ஆகார பூர்வமாக இன்ன ஒரு பாங்க் தரத்திலே முன்னால் இருந்ததைவிட இப்போது குறைக்கப்பட்டுவிட்டது, அதாவது 'ஏ' கிளாஸ் வங்கி 'பி' கிளாஸ் வங்கியாக மாற்றப்பட்டுவிட்டது என்ற நிலைமை இல்லை. அதற்கு மாறாக எல்லாம் சிறப்பாக நடைபெறுகிறது என்பதற்கு அடையாளமாக பல வங்கிகளைச் சொல்ல முடியும். குறிப்பாக, நெல்லை மாவட்டம் முன்னால் 'பி' கிளாஸ். ரிசர்வ் பாங்க், மிகத் திறமையோடு இந்த பாங்க் நடக்கிறது, புதிதாக வந்தவர்கள் ஆர்வத்தோடு உணர்ச்சியோடு நடத்திக் கொண்டு வருகிறார்கள் என்று எல்லாம் தெரிந்து இப்போது அதை 'ஏ' கிளாஸ் ஆக மாற்றியிருக்கிறார்கள். அது போல் திருச்சி மாவட்டத்தில் புதுக்கோட்டையில் வங்கியிருக்கிறது. 1967-க்கு முன்னால் 1968 வரையில் கூட 'ஏ' கிளாஸ் இல்லை, 'பி' கிளாஸ் இல்லை, 'சி' கிளாஸாகக் கருதப்பட்டு வந்தது. இப்போது அதற்குத் தனியாகத் தேர்தல் நடந்து புத்துயிர் ஊட்டக் கூடியவர்கள் உணர்ச்சி உள்ளவர்கள் செயல்பட்டு ஏழை எளியவர்கள்—சொல்லப் போனால் நாலாந்தரத்தில் உள்ளவர்கள் நடத்தத் தொடங்கிய பிறகு 'சி' கிளாஸிலிருந்து 'பி' கிளாஸாகி, அது மட்டுமல்ல 'ஏ' கிளாஸ் என்று ரிசர்வ் பாங்க் சொல்லுகிறது.

திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு : புதுக்கோட்டை வங்கிக்கு விசேஷமாக அரசு செய்த அனுகூலங்களையும் சொல்ல வேண்டும்.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்** : அரசு மட்டத்தில் பொதுவாக எல்லா வங்கிகளுக்கும் எந்த அளவு அனுகூலங்கள் செய்கிறோமோ அந்த அளவுக்குத் தான் புதுக்கோட்டை வங்கிக்கும் அனுகூலங்கள் செய்தோம். தனியாக ஒன்றும் செய்யவில்லை. ஆனால் நிர்வாகம் செய்கிறவர்களுக்குப் புத்துணர்ச்சி இருக்கிறது, புதிய வேகம் இருக்கிறது. தமிழ் நாட்டில் மறுமலர்ச்சி காண வேண்டுமென்ற முறையில் செயல்படுகிறார்கள். ஆகையால் தான் வளர்ச்சி இருக்கிறது.

அடுத்தபடியாக, நியமனத்தைப்பற்றிச் சொன்னார்கள். நியமனம் சம்பந்தமாகச் சொன்ன புள்ளி விவரம் சரியானதல்ல. நியமனம் யாரைச் செய்கிறோம் என்று பார்க்க வேண்டும். சிறு சிறு விவசாயிகள், 5 ஏக்கருக்குக் குறைவாக உள்ளவர்கள், அல்லது 2½ ஏக்கருக்குக் குறைவாக உள்ள சில விவசாயிகள். வேளாண்மையில் ஈடுபட்டிருக்கிற குடிமக்கள் அல்லது தாழ்த்தப்பட்ட மக்கள், ஷெட்யூல் காஸ்ட்ஸ். பெண்கள் இவர்களை நியமனம் செய்கிறோம். 1968-ம் ஆண்டில் கூட்டுறவுத் துறை அமைச்சர்களும் முதலமைச்சர்களும் அண்ணா அவர்கள் உள்பட ஒரு மகாநாடு கூட்டினார்கள். அதற்கு மக்கிய





அரசாங்க அமைச்சர்கள் வந்திருந்தார்கள். அப்போது ஜகஜீவன் ராம் அவர்கள் காங்கிரஸ் உடையாமல் ஒன்றாக இருந்த காலத்தில் வந்திருந்தார்கள். தற்போது 'ஓ' காங்கிரசின் தலைவராக டில்லி மேல் சபையில் இருக்கிற திரு. எம். எஸ். குருபாதசாமி வந்திருந்தார். அந்த மகாநாட்டில் கூடி எல்லோரும் ஒரு தீர்மானம் எடுத்தார்கள். அந்தத் தீர்மானம்.

'A number of measures may be adopted for curbing the growth of vested interests. Reservation of seats on the Board of Management to small farmers and members of weaker sections'.

வாழ்க்கையில் தாழ்த்தப்பட்டுக் கிடக்கிறவர்கள், அடித்தளத்தில் இருப்பவர்கள், சின்னஞ்சிறு விவசாயிகள் அவர்களுக்கு நிர்வாகத்தில் இடம் கொடுக்க வேண்டுமென்று தீர்மானம் செய்தார்கள். ரா. கிருஷ்ணசாமி நாயுடு அவர்களும், எதிர்க்கட்சித் தலைவர்களும் அவர்களுடைய கட்சியைச் சேர்ந்த தலைவர்களும் இருந்து எடுத்த முடிவு. அதை நாம் எப்படிப் புறக்கணிக்க முடியும் ?

திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு : பிரதிநிதித்வம் கொடுப்பது பற்றிச் சொல்லவில்லை. அமைக்கப்பட்ட நிலையில் அத்தனைபேரும் நியமனம் செய்யப்பட்டிருக்கிறார்களா ? அதைத் தான் சொல்லுகிறேன். நேரடியாக விளக்கம் சொன்னால், நன்றாக இருக்கும். புரியும்படி சொல்ல வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்** : சற்று இதை ஆராய்ந்து பார்ப்போம். இந்தத் தீர்மானமானது கழகத்தவர் மட்டும் செய்த தீர்மானம் அல்ல. ரா. கிருஷ்ணசாமி நாயுடு அவர்கள் கட்சி பழைய காங்கிரஸ் கட்சியில் உள்ளவர்கள் எல்லோரும் சேர்ந்து எடுத்த தீர்மானம் அது. அப்போது திரு. ஜகஜீவன்ராமும், திரு. எம். எஸ். குருபாதசாமி அவர்களும் வந்திருந்தார்கள். ஆகவே தான் நிர்வாகத்தில் இடம் கொடுத்திருக்கிறோம். நான் ஒன்று கேட்கிறேன். இப்போது நியமனமானதன் காரணமாக, தாழ்த்தப் பட்ட மக்களும் பெண்களும் சிறு விவசாயிகளும் இடம் பெற்றிருக்கிறார்கள் நிர்வாகத்தில். இதற்கு முன்னால் அல்லது 1967-க்கு முன்னால் என்ன நடந்தது ? திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு அவர்களுக்கு 40 வருட அனுபவம் இருக்கிறது. இந்த 40 ஆண்டு அனுபவத்தில் எந்த ஒரு வங்கியிலாவது எந்த ஒரு தாழ்த்தப் பட்டவன் இயக்குநராக இருந்தான் என்று சொல்ல முடியுமா ? தேர்ந்தெடுக்கப்படுவதாயில்லை, நியமனம் செய்யப்படுவதுமில்லை.

திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு : தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள். நிரூபிக்க முடியும்.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்** : ஒன்றிரண்டு இருக்க முடியும். நினைவு இருந்தால் சொல்லுங்கள். எனக்குத் தெரிந்த வரையில், எந்த ஒரு பெண்மணியும் இருந்ததாகத் தெரியவில்லை. அது கூட ஒருவேளை இருந்திருக்கும். வங்கிகளில் பெண்கள் ஒருங்கால் நிச்சயமாக நியமனம் செய்யப்படுவதில்லை.

[திரு. சி. பா. ஆதித்தனார்] [29th July 1971

ஆகையால் தாழ்த்தப்பட்டவர்களும் இருந்ததாகத் தெரியவில்லை. கூட்டுறவு சங்கங்களைப்பற்றிச் சொல்லவில்லை. பணம் கொடுத்து விவசாயிகளை உள்ளுக்குள்ளிக்கின்ற வங்கியில் . . . .

**மிஸ்டர் சேர்மன்** : இந்த விவாதத்திற்கு ஒரு மணி நேரம் ஒதுக்கினோம். அந்த நேரம் முடிந்து விடுகிறது. இன்னும் எவ்வளவு நேரம் வேண்டும் ? அதுவரை நீடிக்கலாம்.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்** : சரியாக 6 மணிக்கு முடிக்கலாமா ?

**மிஸ்டர் சேர்மன்** : சரி.

5·50 p.m.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்** : இதுவரையில் அப்படிப் பட்ட தாழ்த்தப்பட்டவர்கள் இடம்பெறவில்லை. ஒருவேளை அவர்கள் சொல்லலாம், அவர்களுக்கு உதவி செய்யலாமே தவிர, இயக்குநராக ஏன் இருக்க வேண்டும் என்று நான் சொல்கிறேன், சமூகத்தின் அடிப்படையில் அவர்கள் இயக்குனராகவே இருக்க வேண்டும் என்று கருதி, அந்த இடம் ரிசர்வ் செய்து சரியாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட தாழ்த்தப்பட்ட மக்கள் எங்களோடு அந்த வங்கிகளிலே செயல்படுகிறார்கள் என்பதை நான் பெருமையோடு சொல்லிக் கொள்ள முடியும். மேலும், 25,000 கூட்டுறவுச் சங்கங்களிலே தேர்தல்கள் நடைபெறுகின்றன, அங்கே தவறுகள் நடக்கின்றன என்றும் சொன்னார்கள். தவறுகள் நடந்ததாகச் சொல்வது உண்மையல்ல என்பதை எடுத்துச் சொல்ல முடியும். அவர்கள் தவறுகள் நடந்தனாக ஏன் சொல்கிறார்கள் என்றால், அவர்கள் எதிர்பார்க்காதவர்கள் தேர்தலிலே வெற்றி பெற்று வந்திருக்கிறார்கள்.

**திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு** : தேர்தல் நடந்த முறைகள், கையாளப்பட்ட முறைகள், யார் வாக்களிக்கவேண்டுமோ அவர்கள் வாக்களிக்கவில்லை என்ற விவரத்தைச் சொல்கிறேன். சாபர்த்திய மாக அமைச்சர் அவர்கள் பேசுகிறார்கள்.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்** : தேர்தலிலே ரசாயன மைகூட போட்டதாகச் சொல்வீர்கள். உண்மை என்னவென்றால் இப்பொழுது மக்களிடையே உள்ள புதிய உணர்ச்சியின் காரணமாக, தாழ்ந்த நிலையிலே உள்ளவர்கள்கூட தேர்தலிலே வெற்றிபெறுகிறார்கள். ரசாயன மை என்றெல்லாம் சொல்வது உண்மையல்ல என்பதை மட்டும் சுருக்கமாகக் கூறிக்கொள் கிறேன்.

அவர்களுக்குக் குழந்தையுள்ளம் என்று சொன்னேன். அவர் களுடைய மழலைச் சொல்லால் சொன்னார்கள். கிள்ளிவிட்டுக் கொஞ்சுவதாக இருக்கிறது என்று சொன்னார்கள். ரா. கி. அவர்கள் சம்பந்தப்பட்ட வரையில், அவர்கள் மத்திய வங்கியில் 21 ஆண்டுகள் இருந்தாலுங்கூட, இப்பொழுதும் தொடர்ந்து வந்திருப் பார்களானால், பெரிதும் வரவேற்பேன். அவர்களுக்கு நல்ல உள்ளம் இருக்கிறது. அவர்கள் சொன்னார்கள், குழந்தையைக் கிள்ளிவிட்டு



29th July 1971] [திரு. சி. பா. ஆதித்தனார்]

கொஞ்சுகிறார்கள் என்று. நாங்கள் கொஞ்சுவது என்னவோ உண்மை. ஆனால் யாரையும் கிள்ளிவிட்டதாகத் தெரியவில்லை. (மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : கன்னத்தை லேசாகக் கிள்ளிவிட்டதாகச் சொன்னார்கள்). அவர்களுக்கு கடன் 1,16,000 ரூபாய் என்றால் 67,000 ரூபாய் சப்சிடியாகவே கொடுத்திருப்பதை, கன்னத்தை லேசாகக் கிள்ளிவிட்டதாகச் சொல்ல முடியும். அன்றைக்கு விவாதம் நடந்தபோது, இந்த மாமன்றத்தில் நியமனத்தைப்பற்றிச் சொன்னார்கள். ஆளுகின்ற கட்சியிலே இல்லாதவர்கள் யாராவது எந்த பேங்கிலாவது நியமிக்கப் பட்டிருக்கிறார்களா என்று கேட்டார்கள். அப்படிக் கேட்டதாக எனக்கு நினைவு இருக்கிறது. முன்னால் ஆண்டவர்கள் ஆளுகின்ற கட்சியிலே உள்ளவர்களைத்தான் நியமித்தார்கள் என்று சொன்னால், நண்பர் திரு. ராஜாராம் அவர்கள் உடனே சொல்வார்கள், முன்னால் நாங்கள் செய்த தவறை நீங்களும் செய்ய வேண்டுமா என்று. ஆகவே சொல்கிறேன், நாங்கள் நியமனம் செய்கின்றபோது, எந்தக் கட்சியைச் சேர்ந்தவர் என்று கேட்ப தில்லை, பார்ப்பதில்லை. ஆனால் இந்தக் குறிப்பை எழுப்பிய காரணத்தினால், நான் திரும்பிப் போய்ப் பார்த்து யார் யார் நியமிக்கப்பட்டவர்கள், எந்த எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்கள் என்று பார்க்கிறபோது, திடீரென்று எந்தக் கட்சிக்காரர்கள் என்று கண்டுபிடிக்க முடியவில்லை என்றாலும், குறிப்பாக இரண்டொன்றைச் சொல்ல முடியும். காரைக்குடி நிலவள வங்கியில் நமது சுதந்திராக் கட்சியைச் சேர்ந்த திரு. மெய்யப்பன், பழைய எம்.எல்.ஏ. அவர்கள், இப்பொழுது தேர்தலுக்குப் பிறகு நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். சுதந்திராக் கட்சிக்கும் எங்க ளுக்கும் எண்ணிக்கைத்தானும் எட்டாத நிலைமை வளர்ந்து கொண்டிருக்கிற இந்த நேரத்தில் திரு. மெய்யப்பன் அவர்களை நியமித்திருக்கிறோம்.

அடுத்தாற்போல், திருச்சியிலே மத்திய வங்கியில் (சென்ட்ரல் பாங்க்) திரு. சிதம்பர செட்டியார் அவர்களை நியமித்திருக்கிறோம். அவர்கள் ஆளுகின்ற கட்சியைச் சேர்ந்தவர்கள் அல்ல.

அடுத்தாற்போல, கடம்பத்தூர் நில வள வங்கியில் இப்பொழுது நியமிக்கப்பட்டிருப்பவர் பழைய காங்கிரசைச் சேர்ந்த திரு. சுப்பையா முதலியார் அவர்கள். நீங்கள் சொல்லலாம், இவர்களை யெல்லாம் இயக்குநராகத்தானே நியமித்திருக்கிறீர்கள், தலைவராக நியமித்திருக்கிறீர்களா என்று. தலைவர்களாக, எங்களை நேர்முக மாகத் தேர்தலிலே எதிர்த்தவர்களையெல்லாம், நியமித்திருக்கிறோம். திருத்தணியிலே 1971-ஆம் வருடம் பிப்ரவரி மார்ச் மாதம் நடந்த தேர்தலிலே திரு. ஏகாம்பர செட்டியார் அவர்கள் எதிர்த்து நின்றார்கள். எதிர்த்து நின்று தோல்வியடைந்துவிட்டார்கள். நானும் பரிதாபப்பட்டேன். ஆனால் அவர்களைக்கூட பள்ளிப்பட்டு நில வள வங்கியில் இயக்குநராக நியமித்திருக்கிறோம். நீங்கள் சொன்னதற்காகத்தான் இவற்றையெல்லாம் சொல்கிறேன். ஏதோ பல குறைகளைச் சொல்லி, காலத்தை வீணாக்கிவிடக்கூடாது. தமிழகம் இப்பொழுது தாழ்ந்த நிலையிலே இருக்கிறது. அதை

[திரு. சி. பா. ஆதித்தனார்] [29th July 1971

விரைவிலே முன்னேற்றம் அடையச் செய்யவேண்டிய பொறுப்பு நமக்கு இருக்கிறது. அதற்குக் கூட்டுறவுத் துறையும் பல காரியங்களைச் செய்ய முடியுமென்பதையெல்லாம் அச்சிடப்பட்ட உரையில் சொல்லியிருக்கிறேன். இறுதியாக, அறிஞர் அண்ணாவும் தற்போதுள்ள மாண்புமிகு முதலமைச்சரும் வகுத்துள்ள பொருளாதார நோக்கங்களை நிறைவேற்றுவதில் கவனம் செலுத்தி மாறு இந்த அவையின் மதிப்பிற்குரிய உறுப்பினர்களையும் இந்த அவையின் மூலமாக இம்மாநில மக்களையும் நான் கேட்டுக் கொள்கிறேன். அவ்வாறு செலுத்துவதனால் இரண்டு அல்லது மூன்று ஆண்டுகளுக்குள் உயர்ந்த வாழ்க்கைத் தரத்தினை நாம் அடைய இயலும்; அன்றியும் நமது நாட்டு நபர்வாரி வருமானம், (பர் கேபிடா இன்கம்) தென் அமெரிக்கா, ஆப்பிரிக்கா, ஆசியா கண்டங்களில் உள்ள பிற நாடுகளைக் காட்டிலும் (ஜப்பான், இஸ்ரேல், குவைட் நாடுகள் நீங்கலாக) உயர்ந்ததாக இருக்கும். இம்மாநில மக்களாகிய நாம், அடையவேண்டிய லட்சியங்களை மீண்டும் தெளிவுபடுத்தியுள்ளோம்; நமக்கென ஒரு புதிய பாதையையும் வகுத்துக்கொண்டுள்ளோம்; அப்பாதையில் நாம் தயங்காமல், தளராமல் நடந்து, குறித்த லட்சியத்தை அடைவதன் மூலம் தமிழகத்தின் மறு மலர்ச்சியைக் காண்போமாக என்று சொல்லி நான் அமர்கிறேன்.

## VI. GOVERNMENT BILL.

### THE TAMIL NADU APPROPRIATION (No. 2) BILL, 1971.

(L.A. BILL No. 32 OF 1971.)

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** மாண்புமிகு போலைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1971-ஆம் ஆண்டு நிதி ஒதுக்கீடு (எண் 2) சட்டமுன்வடிவு @ (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 32/1971) பரிந்துரைகள் செய்யப்படுவதற்காக ஆலோசனைக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

MR. CHAIRMAN: Motion moved—

"That the Tamil Nadu Appropriation (No. 2) Bill, 1971 (L.A. Bill No. 32 of 1971), as passed by the Assembly, be taken into consideration for making recommendations".

* THIRU M. RAJAH IYER: Mr. Chairman, Sir, I rise to thank the Government for the substantial grant to Education and out of that Rs. 8.0 crores about 10 per cent of the total allotment is allotted to University Education. I generally wish to draw the attention of the Government to one or two handicaps that our Tamil Nadu in general and the salaried class in particular may be subjected to. Sir, I am afraid that after the generous revision of the salaries, unless the ceiling limit for eligibility for concessions

@ Printed as Appendix II on pages 94-97.



29th July 1971] [Thiru M. Rajah Iyer]

is substantially raised, the salaried class would be at a disadvantage. We get the National Scholarships from the Government of India. Last year we had 2,065 scholarships sanctioned to this State out of which 577 were Merit Scholarships and 49 6-00 scholarships were granted to teachers' children of merit. But, p.m. unfortunately, there is a 'means test'. If the total annual income of the parents exceeds Rs. 6,000, that is, Rs. 500 per month, the children are not eligible for this scholarship. We have generously revised the salaries and consequent on that, there is this unfortunate adverse effect. The salaried class are at a disadvantage. While the others could state their income slightly lower than the limit imposed, the teachers cannot say that their annual income is less than Rs. 6,000. There were 49 scholarships to teachers' children last year. A child who got 480 marks in the aggregate out of 600 could not get the scholarship. There are two handicaps. One is the ceiling on the salary limit and the other is the very fine performance of these candidates at the top level. We can be very proud of the performance of our children judged by the marks scored by them. When they applied for this National Scholarship, last year a child who got 480 marks out of 600, that is, 80 per cent on the average could not qualify for this National Scholarship because forty-nine others were there who got more than 480 marks in the aggregate and this child was left behind. These people could not get the National Loan Scholarship also, though 1,439 scholarships were awarded last year. Even in the National Loan Scholarship, we could not come below 450 marks. That means unless you secure 75 per cent in the aggregate, you could not even get the Loan Scholarship from the Government of India. I, therefore, wish to make a suggestion. Certain children of teachers may qualify themselves for the Loan Scholarship, if they get between 450 and 480 marks and certain other children may get the very generous Backward Class Scholarships and Harijan Welfare Scholarships that are given by this Government. But still a few children of merit would be left out. So, may I appeal to the Government, Sir, to think of advancing loans from the Teachers' Welfare Fund that is locked up with us? We have got nearly Rs. 35 lakhs in the Teachers' Welfare Fund and every year Rs. 5 lakhs are collected by teachers. Why should not the teachers' children be made eligible for loans from the Teachers' Welfare Fund which would be repayable on the same terms as National Loan Scholarship? Otherwise, I am afraid that very many teachers' children would go without any help whatsoever from Government funds or from the Teachers' Welfare Fund that we have got here.

Another point I wish to emphasise is about the qualifications laid down for tutors and demonstrators in Colleges. I welcome the higher qualifications the Hon. Minister was pleased to prescribe for tutors and demonstrators, namely, Graduates of the First and Second Class with post-graduate qualifications. I do welcome it, Sir. The higher the qualification the better will be the quality of education. But, unfortunately, while the Government have

[Thiru M. Rajah Iyer] 29th July 1971

laid down that this principle would apply only in future and it is followed in our 43 Government colleges, I am sorry to state that in the 118 aided colleges—not in all the colleges, but in many of them—the tutors and the demonstrators with mere graduate qualifications, who are First Class Graduates and who have served in private aided colleges have been served with notices dispensing with their services due to a misapprehension and misunderstanding of the orders of the Government. While this restriction could very well apply to future entrants, it must not have an adverse effect on the existing incumbents. There are brilliant graduates, First Class Graduates, who have been serving as tutors and demonstrators in aided colleges. Whereas in future we can recruit persons with post-graduate qualifications to the posts of tutors and demonstrators, the interests of the existing tutors and demonstrators must not be affected. Many of them have been served with notices of retrenchment in aided colleges and I appeal to the Government to see that those notices of retrenchment are got back. Some of them have not been paid their vacation salaries too and they must be paid to them in full. Unless something is done for these graduate tutors and demonstrators, I am afraid, their future would be very bleak. They cannot go to the Training Colleges; and without getting B.T. qualification, however brilliant they may be, they cannot be appointed in High Schools. I want the Government to send round a circular, sympathetically viewing the plight of Graduate tutors and demonstrators who have been serving in aided colleges all along.

I am sorry to say that even now telegrams are pouring in about the graduate teachers and the salary scales to which they have been looking forward. I am pained to find that every telegram begins with the statement that the Chief Minister's gracious assurance in this matter has not yet been implemented. I am only anxious that they must not make this allegation against our kind and sympathetic Chief Minister who has done his best and the present Government that have been extremely gracious to these graduate teachers. I do not wish to rake up this issue. The Hon. the Minister for Education was just now pleased to state that it would have other repercussions. I wish to point out to him the policy laid down by the Pay Commission in its report. While the Junior Assistants began at a particular salary in their salary scale, the secondary grade Assistants were given two advance increments. It was underscored that due recognition was accorded to the training qualifications. I want the same recognition to be given to the B.T. qualification also. There will be Senior Inspectors of Co-operative Societies, Sub-Inspectors of Police and Assistants in the Secretariat Service who are mere graduates. The Graduate Teachers have not only the B.A. degree but also possess an additional Training degree which has been recognised by the Pay Commission in its report quite implicitly.

THIRU G. SWAMINATHAN: On a point of order, Sir. Is there quorum in the House?



29th July 1971]

THIRU K. RAJARAM: There is quorum, because it is only ten.

THIRU M. RAJAH IYER: Whereas the salary scale of Graduate Teachers is Rs. 275 to 450 and whereas the scale of Tutors is from Rs. 325 to Rs. 550, may I submit, Sir, for the consideration of the Government that there is an intermediate scale in the various scales recommended by the Pay Commission? The Pay Commission recommended one scale Rs. 275 to Rs. 450 for Graduates and another scale Rs. 325 to Rs. 550 for Tutors and Demonstrators. In between the two, there is a recognised scale—Rs. 300 to Rs. 500. If the Graduate trained teachers are put on this scale, they will get Rs. 300 and Rs. 30 a total of Rs. 330 to start with instead of Rs. 275 plus Rs. 15, that is Rs. 290. They will get a difference of Rs. 40 and they will be satisfied with that. All of them will not get the same difference, because while being fitted up in the new scale, they may only get Rs. 20 or Rs. 25. It is a very reasonable, just and fair demand and as the gracious name of the Hon. the Chief Minister and the assurance he was pleased to give are linked with this, I am extremely anxious that an assurance should be forthcoming, particularly quite early, before September 5th, so that the teachers may collect donation for the Teachers' Welfare Fund not in lakhs but in crores.

Then, I want to make a small reference about State Transport. It is odd that the Express Bus running all the way from Madras to Ramanathapuram, the longest route next only to Nagercoil, takes the most circuitous route to go to Ramanathapuram and it never reaches the destination on time as the previous Minister for Transport was pleased to state, because it goes all over Tamil Nadu, and after passing through South Arcot district, it visits every place in Thanjavur district like Mannargudi, Pattukottai, Arantangi and other places and from the national highway, it detours and reaches Ramanathapuram in the small hours of the morning, namely, 1'O clock.

(The Chairman sounded the gong)

THIRU M. RAJAH IYER: I want just a minute more, Sir.

I feel that the bus going the longest distance should take the shortest route. Secondly, Sir, the other day the Hon. Minister was pleased to state that facilities for advance reservation had been dispensed with, because they required at least 50 reservations to justify the continuance of the facilities. This facility of advance reservation is very essential and in a public utility concern, we should not reckon the cost and expect such a condition to be fulfilled. Reservation is a necessity and now that we have given free passes to legislators, they may at least pay this 25 paise to reserve their seats in advance and therefore in all the starting points, reservation facilities should be made available. If only 25 seats are reserved, as against 50 and it may not be possible to have a clerk on full time salary basis, may I suggest the appointment of a person on commission basis and he may take 50 per cent

29th July 1971] [Thiru M. Rajah Iyer]

of the reservation fee as his commission, so that the Government may get at least 50 per cent of the reservation fees? If Rs. 12-50 is collected, he may take Rs. 6-25. This may also serve as an incentive and he may act as a canvassing agent for getting more reservations in the State Transport Express buses and the Government will also be benefited by the collection of more reservation fees. I would like these facilities of reservation to be revived in every terminus of State Transport express buses, whatever may be the slight monetary loss that the Government may be put to. Thank you.

6-10 p.m. *திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவரவர்களே, நம்முடைய தொழில் அமைச்சர் அவர்கள் வெளிநாடுகளில் சுற்றுப்பயணம் செய்யச் சென்றிருக்கிறார்கள். அவர் திரும்பி வந்த பிறகு, நம்முடைய மாநிலத்தில் தொழிற்துறையில் இன்னும் அதிக அளவில் வளர்ச்சியடைய வேண்டிய நடவடிக்கைகள் எடுப்பாரென்று நம்புகிறேன். அவர் வெளிநாடுகளில் இங்கு "ஹைட்ரோ சல்பைட்" தொழிற்சாலை ஒன்றை ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கச் சென்றிருக்கிறார் என்பதை அறிகிறேன். அந்தத் தொழிலைச் செய்யக்கூடிய தொழில் அதிபர் ஒருவரும், குறிப்பாக அமைச்சருடன் அமெரிக்க நாட்டுக்குச் செல்ல உடன் சென்றிருக்கிறார் என்பதாக அறிகிறேன். அந்த ஹைட்ரோ சல்பைட் தொழிற்சாலை பல இலட்சக்கணக்கான ரூபாய்களை மூலதனமாகப் போட்டு, தமிழக அரசின் உதவியோடு ஆரம்பிக்கப்படப் போவதாகச் சொல்லப்படுகிறது. நம்முடைய நாட்டில் ஹைட்ரோ சல்பைட்டுக்காக இப்பொழுதே மூன்று பெரிய தொழிற்சாலைகள் இருக்கின்றன. கேரளத்தில் ஒன்று, குஜராத்தில் ஒன்று, இன்னொன்று பம்பாயிலுமிருக்கிறது. இந்தப் பொருள் பெரும்பாலும் டெக்ஸ்டைல்ஸுக்கு உபயோகப்படும் ஒரு உபபொருளாகும்.

திரு. எஸ். டி. ஆதித்தன் : தலைவரவர்களே, அது சோடியம் சல்பேட் அல்ல. அது நாற்றமுள்ள பொருள். இது சோடியம் ஹைட்ரோ சல்பேட்.

திரு. ஜி. சுவாமிநாதன் : டெக்ஸ்டைல்ஸுக்கு உபயோகப்படக் கூடிய ஒன்றைத் தயாரிப்பதற்காகச் சென்றிருக்கிறார்கள் என்று அறிகிறேன். சோடியம் ஹைட்ரோ சல்பைட் என்ற பொருள் டெக்ஸ்டைல் தொழிலுக்கு மட்டும் தான் உபயோகப்படுமென்று சொல்லப்படுகிறது. இன்றைய தினம் கிலோ ரூபாய் 40 விலையாக இருந்தது. மேலே போய் பத்து ரூபாய் அளவுக்கு வந்து தொழில் நஷ்டமேற்படுகின்ற நிலையிலுள்ளது. மற்றும் ஒரு தொழிற்சாலையை நிறுவினால், அது நல்ல முறையில் நடைபெறுமா என்று அரசு ஆலோசனை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இந்த ஹைட்ரோ சல்பைட் தொழிற்சாலை அமெரிக்கர் தொடர்போடு, கொலாபரேஷனோடு செய்யவிருப்பதாகச் சொல்லப்படுகிறது. அந்த நாட்டு தொடர்போடு செய்வதானால், மற்ற நாடுகளை விட அமெரிக்க நாட்டில் அதிகப் பணம் எதிர்பார்க்கின்றார்கள்



29th July 1971] [திரு. ஜி. சுவாமிநாதன்]

என்பதாலும், அதனால் நம்முடைய நாட்டில் அந்தப் பொருளை அதிக விலைக்கு விற்க நேரிடுமென்பதாலும், பல இலட்ச ரூபாய் களைப்போட்டு, இந்தத் தொழிற்சாலையை ஆரம்பிப்பது பற்றி அரசு நல்ல முறையில் ஆராய வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன்.

இரண்டாவதாக, நான் குறிப்பிட விரும்புவது நம்முடைய மன்றத்தில், மேலவையிலும், பேரவையிலும் (போலீஸ்) காவல் துறையைச் சேர்ந்தவர்கள் இங்கே வந்து குறிப்பு எழுதுகிறார்கள். அதிலே இரண்டு பேர், மூன்று பேர் என்ற அளவுக்கு பல மாதங்களாகக் குறிப்புகள் எழுதிக்கொண்டிருக்கிறார்கள். இந்த மன்றத்திலானாலும் சட்டமன்றத்திலானாலும் காவல்துறையைச் சேர்ந்தவர்கள் இதுபோன்ற குறிப்புகள் எடுக்கக் கூடாதென்று மரபு இருப்பதாக எனக்குத் தெரியவருகிறது. அதுமட்டுமல்ல, சென்ற ஆண்டு, 1970-ம் ஆண்டு, ஆகஸ்டு திங்கள் 11-ம் நாள் இதுபோன்று காவல் துறையைச் சேர்ந்தவர்கள் எழுதுகிறார்கள் என்று, மகாராஷ்டிர மாநில போலையிலிருந்த எதிர்க் கட்சி உறுப்பினர்கள் அவ்வளவு பேரும் வெளிநடப்புச் செய்தார்கள் என்று நான் அப்பொழுது, 'இந்து' பத்திரிகையில் ஒரு செய்தி படித்தேன். அந்த நியதி இருக்கிறபோது, ஏதாவது ஒருநாள், இரண்டு நாட்கள் வேண்டுமானால், அவர்கள் வந்து குறிப்பு எடுக்கலாமே தவிர, எப்பொழுதுமே காவல் துறையைச் சேர்ந்த சில பேரை வைத்துக் கொண்டு குறிப்பெடுப்பது சரியானதல்ல என்பதை அரசு கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அது மட்டுமல்ல. இப்படிப்பட்ட நடவடிக்கைகளை அவர்கள் வந்து எழுதுவது மரபுக்கே உகந்ததல்ல.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : ஏதோ காவல் துறையிலுள்ளவர்கள் குறிப்பெடுப்பதை வேண்டுமென்று செய்யவில்லை. இங்கு தேவைப்படுகின்ற நேரங்களில் வரவழைக்கப்படுகின்றார்கள். இது இப்பொழுது புதியதாக நடைபெறுவதில்லை. முன்பிருந்தே, இங்கு குறிப்பெடுப்போர் சபை நடைபெறும் காலங்களில் தேவைப்படுவதால் வரவழைக்கப்படுகிறார்கள். இந்த முறை தொடர்ந்து இருக்கும்.

திரு. ஜி. சுவாமிநாதன் : ஏதோ ஒரு சந்தர்ப்பத்தில் குறிப்பு எடுத்துக் கொள்வதற்காக வேண்டுமானால் வரவழைக்கலாம். எப்பொழுதுமே, பல காலமாக இது நடைபெற்றுக்கொண்டிருக்கிறது என்று சொன்னார்கள். முதலமைச்சர் அவர்களுக்குத் தெரியாமல், இருக்கலாம். எனக்குத் தெரிந்த ஆறு, ஏழு மாதங்களாகவே நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இது பல ஆண்டுகளாகவே நடைமுறையிலிருந்து வந்தால், அதிகப்படி குறிப்பெடுப்பவர்கள் தேவைப்படுவதால், காவல்துறையைச் சேர்ந்தவர்களில் தகுந்தவர்களாகப் பொறுக்கி இங்கு நிரந்தரமாக அமர்த்திக்கொள்ள ஏற்பாடு செய்யவேண்டும்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, மேலவையும் பேரவையும் ஆண்டு முழுவதும் நடைபெற்றுக்கொண்டு இருப்பதல்ல. ஓராண்டில் சில நாட்கள்தான் நடைபெறுகின்றன.

[திரு. மு. கருணாநிதி] [29th July 1971

ஆகையினால் தொடர்ச்சியாக நிரந்தர அடிப்படையில் அமர்த்திக் கொள்வதில் சில சங்கடங்கள் இருக்கின்றன. தேவைக்கேற்ப அவ்வப்போது பயன்படுத்திக் கொள்ளப்படுகிறார்கள். அதில் ஏந்தத் தவறும் நான் காணவில்லை.

திரு. ஜி. சுவாமிநாதன்: சில நேரங்களில், இரண்டு, மூன்று நாட்கள் வேண்டுமானால் வைத்துக்கொள்ளலாம். தொடர்ந்து வைத்துக்கொண்டால் நல்லதல்ல. பல மாதங்களாக வைத்துக் கொண்டிருப்பதாகத் தெரிய வருகிறது. இந்த முறை உகந்ததல்ல என்பதை எடுத்துக் காட்டும் முறையில் வேறொரு இடத்தில் எதிர்க் கட்சி உறுப்பினர்கள் வெளி நடப்புச் செய்திருக்கிறார்கள் என்பதை அரசு உணர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மூன்றாவதாக நான் குறிப்பிட விரும்பும் விஷயம் இன்றைய தினம் பத்திரிகையில் வந்துள்ள செய்தியைப் பொறுத்ததாகும். நம்முடைய பாராளுமன்றத்தில் நம்முடைய அடிப்படை உரிமைகளை நீக்குவதற்காக அரசியல் சட்டத்திற்குத் திருத்தங்கள் கொண்டுவரப்பட்டுள்ளன. அரசியல் சட்டத்தின் 31-வது பிரிவு திருத்தப்படப் போவதாகவும் அதேபோல் 368-வது பிரிவும் திருத்தப்படுமென்றும் தெரிய வருகிறது. பிரிவு 31 அடிப்படை உரிமையான சொத்துரிமையைப் பொருத்ததாகும். 368-வது பிரிவின் திருத்தம் மத்திய மாநில உறவுகளைப் பாதிக்கும் என்பதை இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். இதிலே நான் குறிப்பிட விரும்புவது என்னவென்றால், அரசியல் சட்டத்திற்கு ஒரு திருத்தம் செய்ய வேண்டுமானால். அதிலே என்னென்ன காரணங்களுக்காக அரசியல் சட்டம் திருத்தப்படவிருக்கிறது என்று மாநில அரசாங்கங்களைக் கலந்துகொண்டு, அதன்பிறகு ஜனாதிபதியின் கையெழுத்திற்குப் போவதற்கு முன்னால், நம்முடைய மாநிலங்களுக்கு அனுப்பப்பட்டு, பாதி மாநில பேரவைகளின் அபிப்பிராயங்களைப் பெற்று, ஜனாதிபதி கையெழுத்து வாங்கிய பிறகுதான் சட்டமாக வேண்டுமென்று டேக்சன்ஸ் கமிட்டியும் ராஜமன்னர் கமிட்டியும் இதைப்பற்றி அபிப்பிராயங்கள் கூறியிருக்கின்றன. இன்றைய தினம் பிரிவு 368-ஐ வேறு ஒரு முறையில் அமைக்க வேண்டுமென்று திருத்தம் கொண்டுவருகிறார்கள். எப்படிச் செய்கின்றார்கள் என்றால் பாராளுமன்றத்தில் உள்ளவர்களில் மூன்றில் இரண்டு பகுதி அல்லது பாராளுமன்றத்தில் மொத்தம் எவ்வளவு உறுப்பினர்கள் இருக்கிறார்களோ, அவர்களில் பாதிப் பேர் அதை நிறைவேற்றி பாதி மாநில பேரவைகளின் ஒப்புதல் பெற்று ஜனாதிபதி கையெழுத்துடன் சட்டமாக்கப்படுவதென்பது இப்பொழுதிருக்கின்ற நிலை. ராஜமன்னர் அறிக்கையில் கூறப்படுவது, எந்தப் பிரிவிற்குத் திருத்தம் பாராளுமன்றத்தில் கொண்டுவந்தாலும், இதற்கு மாநில அரசுகளுடைய ஒப்புதல் வேண்டும் என்று சிபார்சு செய்திருக்கிறது. இந்த 368 பிரிவுப்படி மாநில அரசுகளில் பாதி ஆதரித்தால் போதுமென்ற விதி முறை இப்பொழுது வருக்கப்பட்டிருக்கிறது. மாநில அரசுகளின்



29th July 1971] [திரு. ஜி. சுவாமிநாதன்]

இப்பொழுதுள்ள அரசுகளை எடுத்துக் கொண்டால் சிறு, சிறு அரசுகளாகப் பல உள்ளன. பெரிய அளவில் ஜனத்தொகை உள்ள மாநில அரசுகள், தமிழகம், ஆந்திரம், மகாராஷ்டிரம், யு.பி. போன்றவைதான் இருக்கின்றன. பெரிய மாநிலங்கள் ஒத்துக் கொள்ளாமல் சிறு, சிறு மாநிலங்கள் ஒப்புக்கொண்டால் ஜனத் தொகையில் மூன்றில் இரண்டு பங்குள்ளவர்கள் எதிர்த்து மூன்றில் ஒரு பங்குள்ளவர்கள் ஆதரித்து ஒரு சட்டம் உருவாகும் நிலைமை இருக்கிறது. இதை மாற்ற வேண்டுமென்று ராஜமன்னர் கமிட்டி அறிக்கை கூறுகிறது. மூன்றில் இரண்டு பங்கு ஜனத்தொகையுள்ள மாநிலங்கள் அதை ஒத்துக்கொண்ட பிறகுதான், அரசியல் சட்டத்தை மாறுதல் செய்ய வேண்டுமென்று கூறப்பட்டுள்ளது. மத்திய-மாநில அரசுகளுடைய உறவுகளைப்பற்றி முக்கியமாகக் குறிப்பிடுவது இந்த 368 என்ற பிரிவு. இதைப்பற்றி நாம் ஆலோசனை செய்யவேண்டும். வேறு முறையில் மாறுதல்கள் செய்யலாமா வென்று மாநில அரசுகளைக் கலந்து ஆலோசிக்க வேண்டும். மாநில அரசுகளின் மூன்றில் இரண்டு பேரவைகள் ஒத்துக்கொண்ட பிறகுதான் அரசியல் சட்டம் திருத்தப்பட வேண்டும். நம்முடைய மேலவையிலும், பேரவையிலும் இதுபற்றி ஒரு தீர்மானம் போட்டு அதன் அடிப்படையில் நமது அரசு அரசியல் சட்டத் திருத்தத்தைப் பற்றி ஆலோசனை கூற வேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

6-20 p.m.

* திரு. டி. கே. சண்முகம்: மாண்புமிகு தலைவரவர்களே, இந்த நிதி ஒதுக்கீட்டு மசோதாவின் மீது எனக்குப் பேச வாய்ப்பளித்தமைக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

முன்பு கல்விக் கொள்கை மீது பேச வேண்டுமென்று விரும்பினேன். அப்போது பேசத் தவறிவிட்டேன். வாய்ப்புக் கிட்டவில்லை. அந்தக் கருத்தையே இன்று நான் சொல்ல விரும்புகிறேன்.

மிஸ்டர் சேர்மன்: தாராளமாகப் பேசலாம்.

திரு. டி. கே. சண்முகம்: மிக்க நன்றி. அரசின் கல்விக் கொள்கையிலே எனக்கும் நான் சார்ந்திருக்கும் தமிழரசுக் கழகத்திற்கும் மிகுந்த அக்கறையுண்டு. கல்வி கற்பிக்கப்படும் முறையிலேயும் மாறுதல் வேண்டும்; கற்பிக்கும் மொழியும் மாற வேண்டும் என்பது தமிழரசுக் கழகத்தின் உறுதியான கொள்கை.

இந்தக் கொள்கைக்கு வெற்றி தேட சென்ற 25 ஆண்டுக் காலமாக எங்கள் கழகம் போராடி வருகிறது. தமிழரசுக் கழகம் காங்கிரசிலிருந்து பிரிந்ததென்றாலும் பயிற்றுமொழிப் பிரச்சினையில் முன்பிருந்த காங்கிரஸ் ஆட்சியாளரின் தமிழ் விரோதப் போக்கினை தாய் மொழிக்கு மாறான கொள்கையினை எதிர்த்துப் போராடக் கழகம் தயங்கியதேயில்லை.

நல்ல காலமாகக் கல்விமுறை மாறவேண்டும். கல்வி போதிக்கும் மொழி மாற வேண்டும் என்ற கருத்துக்களிலே ஆளும் கட்சியான திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும், தமிழ் அரசு கழகத்திற்கும்

[திரு. டி. கே. சண்முகம்] [29th July 1971

நீண்ட காலமாகவே கருத்தொற்றுமை இருந்து வருகிறது. எங்கள் கழகம் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமையில் உள்ள கூட்டணியில் நம்பிக்கை வைத்து இணைந்திருப்பதற்கே இந்தக் கருத்தொற்றுமை தான் காரணம் என்பதை உறுதியாகச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

ஆனால் நடைமுறையிலே திராவிட முன்னேற்றக் கழக அரசு, கருத்தொற்றுமை கொண்ட அந்தப் பழைய நிலையிலிருந்து இப்போது பின் வாங்கியிருப்பதை என்னால் குறிப்பிடாமல் இருக்க முடியவில்லை. இதையெடுத்துச் சொல்லாவிட்டால், நான் என் கடமையிலிருந்து தவறியவனாவேன் என்பதை மிகத் தாழ்மையோடு தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

அரசாங்கக் கல்லூரிகளில் புகுமுக வகுப்பில் தாய்மொழியாகிய தமிழ் மட்டுமே சென்ற கல்வியாண்டில் பயிற்றுமொழியாக இருந்தது. தனியார் கல்லூரிகளும் அரசாங்கக் கல்லூரிகளும் விரைவில் அதைப் பின்பற்றக்கூடும். அவ்வாறு பின்பற்றும்படி அரசு வற்புறுத்தும் என்றே நம்பியிருந்தது தமிழரசுக் கழகம்.

ஆனால், அரசியல் உள்நோக்கத்தோடு, ஆளுங் கட்சியினை அதிகாரத்திலிருந்து வெளியேற்ற வேண்டுமென்பதற்காக இரண்டொரு அரசியல் கட்சிகள், தமிழ்ப் பயிற்சி மொழித் திட்டத்திற்கு எதிராக கல்லூரி மாணவர்களிடையே ஒரு சாராரைத் தூண்டிவிட்டன. அந்தச் சிறு கூட்டத்தார் செய்த குழப்பத்தின் காரணமாக, தமிழ் மட்டுமே பயிற்சிமொழி என்ற சீரிய சிறந்த கொள்கையிலிருந்து பின்வாங்கி, கைவிடப்பட்ட ஆங்கிலத்தைத் திரும்பவும் பயிற்று மொழியாகத் திணித்திருக்கிறது நம் அரசு. இந்த அவல நிலையினைக் கண்டு உண்மையிலேயே தமிழரசுக் கழகம் அதிர்ச்சியடைந்திருக்கிறது என்பதை இங்கு குறிப்பிட வேண்டியது என் கடமையாகும்.

முன்பு மதிப்பிற்குரிய திரு. டி.எஸ். அவினாசிலிங்கம் செட்டியார் அவர்களும், அவருக்குப் பின்னர் இன்று மத்தியத் திட்ட அமைச்சராக இருக்கும் பெருமதிப்பிற்குரிய மாண்புமிகு திரு. சி. சுப்பிரமணியம் அவர்களும் தாய்மொழியாகிய தமிழைப் பயிற்சி மொழியாக்க உண்மையிலேயே பெரு முயற்சி எடுத்தார்கள் என்பதை நாம் அனைவரும் அறிவோம். அந்த முயற்சிகளெல்லாம் ஆங்கில மோகம் பிடித்த ஆதிக்கச் சக்திகளால் அவ்வப்போது முறியடிக்கப் பட்டன என்பதையும் நான் மறந்துவிடவில்லை. அந்தத் தோல்வி யாளர்களின் பட்டியலிலே, பெருமைமிக்க—வலிமைமிக்க—உறுதி மிக்க—கொள்கைப் பிடிப்புடைய ஒரு மாபெரும் எழுச்சிமிக்க படைப்பினைப் பின்பலமாகக் கொண்ட நம் இன்றைய கல்வி யமைச்சர் அவர்களும் சேர்ந்துவிட்டது ஏன் என்பதுதான் எனக்குப் புரியவில்லை.

காங்கிரஸ் ஆட்சியிலே கல்வியமைச்சர்களாகப் பணியாற்றிய வர்கள் இந்தப் பயிற்றுமொழிப் பிரச்சினையிலே உறுதியுடன் நடந்துகொள்ளாததை என்னால் புரிந்துகொள்ள முடிகிறது. காரி



29th July 1971] [திரு. கே. ராஜாராம்]

மொழியின் மீது பற்றுக் கொள்வதையே மொழி வெறியென்று கருதும் போக்குடைய அதிமேதாவிகள் தமிழ் நாட்டுக் காங்கிரசிலே தலைமையாளர்களாகச் செயல்படுகிறார்கள். ஆனால், திராவிட முன்னேற்றக் கழகத்தின் நிலை இதற்கு முற்றிலும் மாறுபட்ட தல்லவா?

தி.மு. கழகம் தமிழ் உணர்விலேயே பிறந்த கழகம். அதையே ஊனாகக் கொண்டு வளர்ந்த கழகம். தி.மு. கழகத்தை ஒரு மாபெரும் தமிழியக்கம் என்றுகூடச் சொல்ல நான் தயங்க மாட்டேன். நாமெல்லாம் போற்றும் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்கள் இந்த அடிப்படையிலே 'தமிழியக்கம்' என்ற பெயரால் தாய்மொழியாகிய தமிழ் எங்கெல்லாம் எப்படியெல்லாம் இடம்பெற வேண்டும் என்பதைத் தெள்ளத் தெளிவாகத் தொகுத்துக் கொடுத்திருப்பதனை தி.மு. கழகம் அப்படியே ஏற்றுக் கொண்டுள்ளதை நான் நன்கு அறிவேன். அப்படிப்பட்ட செயல் வீரர்களின் ஆட்சியிலேயே தமிழைப் பயிற்சி மொழியாக்கும் திட்டம் முழு அளவில் வெற்றிபெற இயலவில்லையென்றால், வேறு எப்போதுதான் வெற்றி பெறும் என்பது எனக்கு விளங்கவில்லை.

நான் இதைக் கண்டனக் குரலாக எழுப்பவில்லை. மிக மிகக் கவலையோடு—வேதனையோடுதான் சொல்லுகிறேன். என் அவலக் குரலை ஆளுங் கட்சியினர்—என் அருமைத் தோழர்கள்—அன்பு உள்ளம் கொண்ட நண்பர்கள் சிந்தித்துப் பார்க்குமாறு பணிவோடு வேண்டுகிறேன்.

பயிற்று மொழியினைத் தேர்ந்தெடுக்கும் உரிமையினை மாணவர் களின் விருப்பத்திற்கே விட்டுவிட அரசு ஒப்புக்கொண்டிருக்கிறது. இன்றைய நிலை இது. ஆதிக்க வாதிகளின் தூண்டுதலால், ஆங்கில மோகம் பிடித்த பத்திரிகைகள் கட்டுப்பாடான—திட்டமிட்ட—உண்மைக்கு மாறான பொய்ப் பிரச்சாரத்தால் மாணவர்களிலே ஒரு பிரிவினர்—பெரும்பாலும் சுகமாக வாழ்பவர்கள்—சுகஜீவன குடும்பங்களிலே பிறந்தவர்கள் இன்று ஆங்கிலத்தையே பயிற்று மொழியாக எடுத்துக்கொள்ள விரும்புகிறார்கள். இதன் விளைவு என்ன? தாழ்த்தப்பட்ட—பிற்பட்ட—மிகவும் பிற்பட்ட ஜாதிகளைச் சேர்ந்த பரிதாபத்திற்குரிய மாணவர்களும், அவர்களுக்குத் தாய்மொழியில் நீங்காத பற்று இருந்தும், ஆங்கிலத்தைப் பயிற்று மொழியாகக் கொண்டு படிப்பவர்களோடிடத் தாங்கள்—தமிழில் படிக்கும் தாங்கள் தரத்தில் தாழ்ந்தவர்களாகக் கருதப்படக் கூடுமோ என்று அஞ்சுகின்றார்கள். அந்த அச்சத்தால் அவர்களி லேயும் பெரும்பாலோர் ஆங்கிலத்தையே பயிற்றுமொழியாக ஏற்க விரும்புகின்றார்கள். இந்த மோசமான—கொடுமையான நிலையினை காலவரம்பு ஏதுமில்லாமல் நீடிக்கவிடுவதால் நாங்கள் காணும் உண்மை நிலை என்ன? எல்லாக் கல்லூரிகளிலும் தாய்மொழியாகிய தமிழையே பயிற்று மொழியாக்கத் தமிழக அரசுக்குத் துணிவு இருந்தாலொழிய, ஆங்கில ஆதிக்கம் அகலக்கூடிய நாள் அண்மை யில் இல்லையென்று உறுதியாகக் கூறிவிடலாம்.

[திரு. டி. கே. சண்முகம்] [29th July 1971

பட்ஜெட்டின் மேல் பேசியபோது நான் அன்று கூறிய பாரதிதாசன் பாடலைத்தான் மீண்டும் நினைவுபடுத்த விரும்புகிறேன்.

விழுங்குணவை விழுங்குதற்கோ
தமிழருக்கு ஊக்கமில்லை—கட்டாயத்தால்
வழங்குதற்கோ ஆட்சியில்லை . . . .

என்றார் அவர். கவிஞர் குறைகூறிய காங்கிரஸ் ஆட்சி மாறி—தமிழ் உணர்வு நிறைந்த வீர மறவர் ஆட்சி வந்தும் நிலைமை மாறவில்லை என்பதைத்தான் காண்கிறோம்.

தமிழ் ஆட்சிமொழிச் சட்டம் நிறைவேற்றப்பட்டு 16 ஆண்டுகள் ஓடிவிட்டன. அந்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டபொழுது, பத்தாண்டு காலத்திற்குள் ஆங்கிலத்திற்குப் பதிலாக தமிழ் மட்டுமே ஆட்சி மொழியாக்கப்படும் பணி நிறைவுபெறும் என்று உறுதி கூறினார் அன்றைய கல்வியமைச்சரும் சட்ட அமைச்சருமாக இருந்த சி. சுப்பிரமணியம் அவர்கள். ஆனால் இன்றைய நிலையில் நாம் காண்பது என்ன ? ஆண்டுகள் 16 ஆகியும் இன்னமும், அரசு அலுவலகங்களில் கீழ்மட்டத்திலோ மேல்மட்டத்திலோ தமிழ் மட்டுமே ஆட்சி மொழியாகச் செயல்படாத நிலையைத்தான் காணுகிறோம். ஏனிந்த நிலை ? இங்குதான் நன்கு சிந்திக்க வேண்டும். தமிழ் மொழியிலே படித்துப் பட்டம் பெற்றவர்கள் அரசாங்க அலுவலகங்களிலே உத்தியோகங்களுக்கு வரக்கூடிய நிலை நிறைவு பெற்றாலொழிய, தமிழை ஆட்சிமொழியாக்குவது எவ்வாறு இயலும் என்பதைச் சிந்திக்க வேண்டுகிறேன்.

நீதி மன்றங்களிலே தமிழை நிர்வாக மொழியாக்குவது அரசின் கொள்கை என்பதனை நான் அறிவேன். மாண்புமிகு அமைச்சர் திரு. மாதவன் அவர்கள் இதுபற்றி விரிவாகச் சட்டப் பேரவையில் பேசியிருப்பதை மிகவும் கவனத்தோடு படித்தேன். தமிழிலே சிறந்த தீர்ப்பு எழுதும் நீதிபதிகளுக்குப் பரிசு வழங்கும் திட்டத்தை அரசு செயற்படுத்தி வருவதும் போற்றத்தக்கதுதான். ஆனால் அந்தத் துறையிலே வேகமில்லை.

இந்தச் சட்ட மன்றத்தில் சட்டமாக்கப்படும் மசோதாக்கள் எல்லாம் ஆங்கிலத்தில்தான் உருவாக்கப்படுகின்றன. நீதி மன்றங்களை அரசு தமிழிலே நடத்த முடிவு செய்துவிட்ட பிறகு, இங்கு நிறைவேற்றப்படும் சட்டங்களைத் தமிழிலே கொண்டுவரத் தயங்குவானேன் ? சட்டக் கல்லூரியிலே தமிழைப் பயிற்று மொழியாக்காத வரை நீதி மன்றங்களைத் தமிழிலே நடத்துவதென்பது எப்படி முடியும் ?

கல்வித் துறை என்பது மொழியைப் பொறுத்தவரை தனியாக இல்லை. நீதித் துறையோடும் நிர்வாகத் துறையோடும் கல்வித் துறைக்கு நெருங்கிய தொடர்பு இருந்து வருகிறது. ஆங்கில மொழி பயில்வதை நான் மகிழ்வோடு வரவேற்கிறேன். அம்மொழியின் மீது எனக்கு வெறுப்பு ஏதுமில்லை. நம் மாணவர்கள் அதனை



29th July 1971] [திரு. டி. கே. சண்முகம்]

ஒரு மொழிப் பாடமாக மட்டும் தாராளமாகப் பயிலட்டும் மற்றபடி கல்வித்துறை முழுவதிலும் தமிழ் முதலிடம் பெற்றால் தானே, நிர்வாகத் துறையிலும் நீதித் துறையிலும் தாய்மொழியாகிய தமிழுக்கு முதலிடம் தேட முடியும் ?

அரசு நியமித்த கல்வி நிபுணர் குழு அரசாங்கக் கல்லூரிகளில் ஆங்கிலப் பயிற்றுமொழி வகுப்பும் இருக்க வேண்டும் என்று கூறியதுபோல, ஆங்கிலமே பயிற்று மொழியாக இருக்கும் தனியார் கல்லூரிகளில் தமிழ் பயிற்று மொழி வகுப்பும் இருக்க வேண்டுமென்று பரிந்துரைத்திருக்கிறது. ஆனால், தனியார் கல்லூரிகள் கல்வி நிபுணர் குழுவின் இந்தப் பரிந்துரையினை அமுல் நடத்துவதில் கொஞ்சங்கூட உற்சாகம் காட்டவில்லையே !

தமிழைப் பயிற்சிமொழியாக ஏற்க மாணவர்கள் முன்வரவில்லையென்று சாக்குப் போக்குச் சொல்லுகிறார்கள். இவர்கள் கூற்று உண்மையல்ல என்பதனைச் சட்டப் பேரவையில் மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் புள்ளி விவரங்களோடு எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். பல மாணவர்கள், தாங்கள் தமிழைப் பயிற்று மொழியாக எடுக்க விருப்பம் தெரிவித்தாலும் தனியார் கல்லூரி முதல்வர்கள் இடமில்லையென்று சொல்லி விரட்டிவிடுகிறார்கள் என்று என்னிடம் வந்து கூறினார்கள். தனியார் கல்லூரிகளைத் தமிழ் விரோதப் பாசறைகளாக நம் அரசு இன்னும் எத்தனை காலம் விட்டுவைக்கப் போகிறது என்று கேட்கிறேன்.

கல்வி நிபுணர் குழுவின் குறைந்த அளவு—நியாயமான பரிந்துரைப்படி தமிழைப் பயிற்று மொழியாக ஏற்று அமையாத தனியார் கல்லூரிகளுக்கு அரசு மானியம் வழங்கக்கூடாதென்பது என் பணிவான—நீதியான வேண்டுகோள். வேறு எதை எதையோ வெல்லாம் தேசிய மயமாக்கும் தீவிரக் கொள்கைகளைக் கொண்ட அரசு கல்விக்கூடங்கள் அனைத்தையும் தேசிய உடமையாக்குவதில் சிறிதும் தவறில்லையெனக் கருதுகிறேன். அதனை விரைவில் செய்ய வேண்டுமென்றும் கோருகிறேன்.

ஆங்கிலக் காண்வெண்டுகள் தெருவுக்குத் தெரு—வீதிக்கு வீதி தோன்றி வருவதைக் கல்வித்துறையினர் கவனிக்க வேண்டுகிறேன். காண்வெண்டுகளிலுள்ள நடைமுறை விதிகளைப் பயிற்று முறைகளை நான் மகிழ்வோடு வரவேற்கிறேன். தாய்மொழியாகிய நம் அருந் தமிழைப் பயிற்று மொழியாகக் கொண்டால் இந்தக் காண்வெண்டுகள் அனுமதிக்கப்படலாம். இல்லையானால், நாட்டின் தாய் மொழிக்கு துரோகம் செய்யும் இந்தக் காண்வெண்டுகளைத் தடை செய்ய அரசு முன்வர வேண்டுமென்பது என் வேண்டுகோள்.

பாலொழுகும் உருவமுடைய பச்சிளம் குழந்தைகளுக்கு அன்னிய மொழியிலே பற்றும் பயிற்சியும் ஏற்படச் செய்வது தமிழ் இனத்தவரையே ஆங்கில இனத்தவராக மாற்றுவதாகும் என்பதை மிகப் பணிவோடு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

[திரு. டி. கே. சண்முகம்] [29th July 1971

இந்தி எதிர்ப்புப் போரிலே மரியாதைக்குரிய தாளமுத்து நடராசன்களும் தமிழினத்தின் வணக்கத்திற்குரிய சின்னச்சாமிகளும் உயிர்த் தியாகம் புரிந்தார்கள் என்றால், அது ஆங்கில ஆதிக்கத்தை நீடிக்கச் செய்வதற்காக அல்ல என்பதைத் தெளிவாக எடுத்துச் சொல்வது என் கடமையாகும். தமிழ் மொழியின் உரிமையைக் காப்பதற்காகத்தான் அந்த வீரத் தமிழர்கள் உயிர் நீத்தார்கள். தமிழர் மீது ஆதிக்கம் செலுத்துவது ஆங்கிலமாக இருந்தாலென்ன? இந்தியாக இருந்தாலென்ன? எண்ணிப் பார்க்க வேண்டுகிறேன். இந்தி ஆதிக்கம், ஆங்கில ஆதிக்கம் இரு ஆதிக்கங்களையுமே முறியடிப்பதுதான் மொழிப் போரில் உயிர்விட்ட அந்த மாவீரர்களுக்கு நாம் செலுத்தும் மரியாதையும் வணக்கமும் ஆகும்.

இறுதியாக என் பெரு மதிப்புக்குரிய மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கட்கும் கல்வியமைச்சர் மாண்புமிகு நாவலர் அவர்களுக்கும் ஒன்றை உறுதியாகத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். தமிழ்மொழி வளர்ச்சிக்கு அவர்கள் செய்துவரும் பணிகள் அனைத்தையும் நான் மிக நுணுக்கமாகக் கவனித்து வருகிறேன். அவர்களிடத்திலே எனக்கு ஆழ்ந்த நம்பிக்கை இருக்கிறது. என்றாலும், தமிழர்களாகப் பிறந்தும் தமிழ்த் துரோகிகளாக வாழ்ந்துகொண்டிருக்கும் ஒரு சிறு கூட்டத்தார் செய்யும் சூழ்ச்சிகள், கட்டுப்பாடான எதிர்ப்புகள் நாட்டுக்கு நன்மையைச் செய்யும் இவர்களையும் செயலாற்றவிடாமல் தடுத்து நிறுத்துவதாக உணர்கிறேன்.

கல்வி நிபுணர் குழுவின் அறிக்கையின்மேல் பழி போட்டுவிட்டு, சட்டப் பேரவையில் 23—1—1968-ல் நிறைவேற்றப்பட்ட மொழித் தீர்மானத்தின் கருத்துக்கும்—அதே நாளில் அந்தப் பேரவையில் பேரறிஞர் அண்ணா அவர்கள் கொடுத்த உறுதி மொழிக்கும் எதிராக—முரணாகக் கல்விக் கொள்கையில் பின்வாங்கியிருப்பது தமிழரசுக்கழகத்திற்கும் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் இடை வெளியை ஏற்படுத்தி விட்டது. இந்த வருந்தத்தக்க நிலை நீடிப்பதனைத் தமிழரசுக் கழகம் விரும்பவில்லை.

நீங்கள் காலமெல்லாம் வற்புறுத்திவரும் சுயமரியாதை சமுதாயத்தையோ, காந்தியடிகள் விரும்பிய இராம ராஜ்யத்தையோ, இன்றையப் பிரதமர் திருமதி இந்திரா அம்மையார் விரும்புவதாகச் சொல்லப்படும் சோசலிச சமுதாயத்தையோ உருவாக்க வேண்டுமானால், முதலில் அரசின் கல்விக் கொள்கையில் புரட்சிகரமான மாற்றங்கள் ஏற்பட்டாக வேண்டும். குறிப்பாக கல்வி முறையும், கல்வி போதிக்கும் மொழியும் மாறியாக வேண்டும். இதனால் அரசுக்கு எந்தவிதமான இடுக்கண் நேர்ந்தாலும், எத்தகைய தீய சக்திகளை—நாச சக்திகளை எதிர்த்துப் போராட வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டாலும், அதற்காகத் தியாகம் செய்ய—சத்தம் சித்த கோடிக்கணக்கான தமிழ் மக்கள் தயாராக இருக்கிறார்கள் என்பதைத் தமிழரசுக் கழகத்தின் சார்பில் தெரிவித்துக்கொண்டு,



29th July 1971] [திரு. டி. கே. சண்முகம்]

கல்விக் கொள்கையிலே அந்தப் புரட்சிகரமான பாதையிலே துணிவோடு முன்னேறுங்கள்—முன்னேறுங்கள் என முழக்கம் செய்து முடிக்கிறேன். 6-30 p.m

திரு. ஆர். தர்மலிங்கம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, 1971-72-ம் ஆண்டு நிதி ஒதுக்கீடு மீது நான் என்னுடைய கருத்துக்களைச் சொல்லவிருக்கிறேன். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த நிதிநிலை அறிக்கையை இந்த அவைக்குக் கொடுத்தபோது இதுவரையில் கடந்த 25 ஆண்டுக்காலமாக எந்த நிதி அமைச்சரும் கொடுக்காத நிதிநிலை அறிக்கையை நமக்கெல்லாம் இன்றைக்குக் கொடுத்திருப்பது வரவேற்கத்தக்கதாகும். அதிலே அவர் குறிப்பிட்டிருக்கும் சோசலிச சமுதாய சமதர்மத்தை நாம் இன்று வரவேற்கிறோம். அவர் கொண்டு வந்திருக்கும் எல்லாக் கொள்கைகளையும் வரவேற்று நான் சில கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன். அவர்கள் ஆரம்பித்திருக்கிற பிச்சைக்காரர்கள் மறுவாழ்வு நிதி இதுவரையில் எந்த மாநில முதலமைச்சரும்—அது மட்டுமல்ல அகில உலகத்திலேயே இதுபோன்ற திட்டத்தை எந்த முதலமைச்சரும் கொண்டு வந்ததில்லை. காரணம், இந்த நாட்டிலுள்ள பிச்சைக்காரர்கள் சாலை ஓரங்களில் இருப்பவர்கள், அவர்களும் நல்வாழ்வு வாழ வேண்டுமென்ற காரணத்திற்காக பிச்சைக்காரர்கள் மறுவாழ்வு நிதியை ஏற்படுத்தி அதற்காகச் செயல்பட்டு வருகிறார்கள். அது மட்டுமல்லாமல், இந்தப் பேரவையிலும் சரி, சட்டப் பேரவையிலும் சரி, அவர் கொடுத்திருக்கிற நிதி நிலை அறிக்கை இந்த தமிழில் அவருக்கு நிகர் வேறு யாருமே இல்லை என்பதை மெய்ப்பித்துக் காண்பித்திருக்கிறது. இந்த நிதிநிலை அறிக்கைக்குப் பிறகுதான் அண்ணாமலைப் பல்கலைக் கழகம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு டாக்டர் பட்டம் வழங்குவதற்கு ஏற்பாடு செய்து கொடுத்திருக்கிறார்கள். சில பொறுமைக்காரர்கள் சில மனம் தாங்காதவர்கள் அவருக்கு அந்தப் பட்டத்தைக் கொடுக்கலாமா என்று அங்கே கலவரம் செய்திருக்கிறார்கள். நான் இந்த நேரத்தில் அவர்களுக்குச் சொல்லிக் கொள்ளுகிறேன். இந்த மாமன்றத்தில் உள்ள மாண்புமிகு உறுப்பினர்களுக்கும் சொல்லுகிறேன். மறைந்த மாமேதை பேரறிஞர் அண்ணா அவர்கள் எங்களையெல்லாம் ஆளாக்கியபோது சொல்லிவந்த பாடத்தை அவர்களுக்கு இந்த நேரத்தில் நினைவூட்ட ஆசைப்படுகிறேன். மாற்றான் தோட்டத்து மல்லிகையானாலும் மணம் வீசும் என்று பேரறிஞர் அண்ணா எங்களுக்கெல்லாம் கற்றுத் தந்தார்கள். அதை நாங்கள் கடைப்பிடித்ததால்தான் இன்றைக்கு எங்களுடைய கலைஞர் முதலமைச்சராகவும், எங்களுடைய மாண்புமிகு அமைச்சர்கள் அமைச்சர்களாகவும் இருக்கிறார்கள். ஆனால் பொறுமைக் குணம் படைத்தவர்கள், பொச்சரிப்பாளர்கள் இவர் டாக்டர் பட்டம் வாங்கலாமா என்று கருதி, அங்கே குழப்பத்தை விளைவித்து அங்கே அவருக்கு இடுக்கண்களை ஏற்படுத்தினார்கள். ஆனால் நான் ஒன்று சொல்லுகிறேன். மாற்றுக்கட்சி நண்பர்கள் எங்கள் மறைந்த மாமேதை பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னதைக் கடைப்பிடிக்கவேண்டு

[திரு. ஆர். தர்மலிங்கம்] 29th July 1971]

மென்று வேண்டிக் கேட்டுக்கொள்ளுகிறேன். மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கு மணம் இல்லையென்றால், நாட்டு மக்கள் நம்ப மாட்டார்கள். ஆனால் இன்றைக்கு எங்களுடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சமதர்ம சமுதாயத்தை இங்கே கொண்டு வந்து நாட்டு மக்களுக்கு குறிப்பாக தமிழ் நாட்டு மக்களுக்கு நல்லது செய்யவேண்டுமென்று கருதிக் கொண்டிருக்கிறார்கள். அவர் சொல்லியிருக்கும் ஒன்றிரண்டு மட்டும் கூறிவிட்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்ளலாம் என்று கருதுகிறேன். "இன்றைய அரும்புகள் நாளைய மலர்கள். இன்றைய மழலைகள் நாளைய நமது மாபு காக்கும் மாண்புறு செல்வங்கள், அவைகளை அளவோடு பெறுவதும் வளமோடு வாழவைப்பதும் அரசு, ஆடவர், பெண்டிர், இம்மூவரின் ஒத்துழைப்பின்பாற்பட்டதாகும்" என்று ஒரு இடத்தில் குறிப்பிட்டிருக்கிறார். "ஒளிமயமான எதிர் காலத்தை உருவாக்கும் பணிக்கு மாநிலத் திட்டக் குழுவை ஏற்படுத்தியுள்ள அதே நேரத்தில் நிகழ்கால ஆக்கப் பணிகளை மேலும் செவ்விய முறையில் செயல்படுத்துவது இன்றியமையாததாகும். வெற்றி முகட்டிற்கு விரைந்தோடிட பந்தயக் குதிரை வேகத்தில் போய்க் கொண்டிருக்கும் இந்த அரசு காலதாமதம், விண்விரயம் ஆகியவற்றைத் தவிர்க்க, செய்தக்க அல்ல செயக்கெடும் எனும் குறள் மொழிவழி நின்று, செய்தக்க செய்யாமை யானும் கெடும் என்னும் சீரிய கொள்கையைப் போற்றி தங்கு தடையின்றி எல்லா மக்களுக்கும் பணியாற்றும் பணியைத் தொடர்ந்திட நிர்வாக சீரமைப்புக் குழு ஒன்றினை நியமித்துள்ளது" என்று இன்னொரு இடத்தில் குறிப்பிடுகிறார். இதுபோன்ற முற்போக்குக் கொள்கைகளை நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்குகொண்டுவந்து நிதிநிலை அறிக்கையில் தந்திருக்கிறார்கள். இப்பேர்பட்ட நிதிநிலை அறிக்கையை நான் பாராட்டிப் புகழ்ந்து என்னுடைய உரையை முடிக்கிறேன்.

6·40 p.m.

*திரு. கே. ராஜாராம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, நமது மாநிலத்தில் மிகவும் பெரிய ஒரு கைத்தொழில், நூற்பு ஆலைகள் இருப்பதுதான். அந்த நூற்பு ஆலைகள் மூலமாக வளர்ச்சி பெறுவது நமது கைத்தறிகள். நமது கைத்தறிகளின் தொழில் இப்போது மிகவும் பாதிக்கும்படியான நிலைமை ஏற்பட்டிருப்பதை அரசாங்கத்தின் கவனத்திற்கு இந்தச் சமயத்தில் கொண்டுவர விரும்புகிறேன். மொத்தம் மில்களிலிருந்து 14 கோடி 21 லட்சம் கிலோகிராம் நூல் உற்பத்தியாகிறது என்று சென்ற வருஷம் கணக்குக் கொடுத்திருக்கிறார்கள். இதில் 9 கோடி 15 லட்சம் கிலோகிராம் நமது கைத்தறிக்குக் கொடுக்கப்படுகிறது—விற்கப் படுகிறது, ஹாங்க் ரூபத்தில். இந்த நூல்களுக்கெல்லாம் 2% விற்பனை வரி நாம் போடுகிறோம். ஆந்திராவில் மில் நூல்களுக்கு விற்பனை வரி கிடையாது. கேரளத்தில் 1% விற்பனை வரி போடப் படுகிறது. ஆகவே அறிந்தோ அறியாமலோ தமிழ் நாட்டில் உற்பத்தியாகும் கைத்தறித் துணி மார்க்கெட் கிடைப்பது மிகவும் கஷ்டமாகி நாளுக்கு நாள் நமது சரக்கின் அடக்க விலை ஏறிக் கொண்டே போகிறது. அது மட்டுமல்லாமல் சில பெரிய மில்



29th July 1971] [திரு. கே. ராஜாராம்]

காரர்கள் ஒரு காரியம் செய்ய ஆரம்பித்திருக்கிறார்கள். விற்பனை வரியிலிருந்து தப்பிப்பதற்காகவோ என்னவோ பெரிய மில் காரர்கள் வெளி மாநிலங்களில் டெப்போ வைத்துக்கொண்டு இங்கே உற்பத்தியாகிற நூல்களின் ஒரு பகுதியைக் கொண்டு போகிறார்கள். அங்கே விற்பனை வரியில்லை. ஆந்திராவில் விற்பனை வரியில்லாததால் அங்கே போய் விற்கிறார்கள். ஆகவே அந்தக் கைத்தறித் துணியுடன் தமிழ் நாட்டுக் கைத்தறி போட்டி போடுவதில் மிகவும் கஷ்டம் ஏற்படுகிறது. இதற்கு வழி செய்ய வேண்டும். உடனடியாக ஆந்திராவைப் போல ஹாங்க் ரூப நூல்களுக்கு போடப்படும் விற்பனை வரி ரத்து செய்யப்பட வேண்டும். அல்லது வேறு வழி ஏதேனும் கண்டுபிடிக்க வேண்டும். இல்லாவிட்டால் நாளடைவில் நமது கைத்தறிக்குக் கஷ்டம் ஏற்படும் என்பதை இப்போதே எச்சரிக்க விரும்பு கிறேன்.

அடுத்தபடியாக, மின்சாரத்தைப்பற்றி வரவு செலவுத் திட்டத்தில் பேசும் போதே சொன்னேன். மின்சார அமைச்சர் அவர்கள் அப்போது இதற்கு வழி தேடுவதாகச் சொல்லியிருந் தார்கள். இதுவரையில் செய்ததாகத் தெரியவில்லை. சென்னையைச் சுற்றி கைத் தொழில்கள் நிறையப் பெருகிவருகின்றன. இங்கே மட்டும் பூயல் சர்சார்ஜ் என்று யூனிட்டுக்கு 8½ பைசா போடு கிறார்கள். எப்போது மாநிலம் பூராவும் ஒரே gird ஆக ஆக்கி விட்டோமோ அப்போது இங்கே சென்னையைச் சுற்றி மட்டும் "தர்மல் பவர்" உபயோகிக்கும் இடங்களில் பார்த்து 8½ பைசா ப்யூவல் சர்சார்ஜ் கட்டவேண்டியிருக்கிறது. மின்சார சக்தியை மட்டும் உபயோகித்து அதை மட்டுமே மூலப்பொருளாக வைத்து, சில தொழில்கள் நடக்கின்றன. ஃபவுண்டரிகள் நடத்த மின்சாரம் தான் மூலப்பொருள். அதை வைத்துக்கொண்டுதான் இரும்பை உருக்கி மற்றக் காரியங்கள் செய்யவேண்டியிருக்கிறது. அந்தத் தொழில் பாதிக்கப்படுகிறது. மின்சாரத்திற்குக் கட்டணமாக யூனிட்டுக்கு 6 பைசாதான் வசூலிக்கப்படுகிறது. ஆனால் இந்த சர்சார்ஜ் 8½ பைசா வாங்கப்படுகிறது. சென்னைக்குப் பக்கத்தில் பழைய "தர்மல் பவர்" மட்டும் இருந்த காலத்தில் வசூலித்துக் கொண்டிருந்த மாதிரி அதையே தொடர்ந்து வசூலிக்கிறார்கள். இதனால் அந்த பவுண்டரி தொழில் பாதிப்பதாக அதை நடத்து கிறவர்கள் கவலையோடு முறையிட்டார்கள். முதலமைச்சர் அவர்கள் கவனத்திற்கு அதைக் கொண்டு வருகிறேன். இப்போது தொழில் துறையையும் அவர்கள்தான் கவனித்து வருகிறார்கள் என்று நினைக்கிறேன். மில் நூல்களுக்கு 2 காக விற்பனை வரி போடுவதையும் ஃபூயல் சர்சார்ஜையும் கவனித்து ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, கான்ஸ்டிடியூஷன் அமெண்ட்மெண்டைப்பற்றி நண்பர் திரு. சுவாமிநாதன் அவர்கள் பேசினார்கள். இது ஏனோ தானோ என்று விட்டுவிடக் கூடிய விஷயமல்ல. மாநிலங்களுக்கு உள்ள உரிமைகளைத் திடீரென்று இன்னும் 24 மணி நேரத்திற்

[திரு. டி. கே. சண்முகம்] [29th July 1971

குள்ளாக பறிக்க முயற்சிக்கப்படுகிறது என்று நான் பயப்படுகிறேன். இன்று பிரதம அமைச்சராக உள்ள அவர்களுடைய கட்சி தேர்தலுக்கு முன்பு ஒரு முடிவை எடுத்தார்கள். காலம் சென்ற நாத்பாய் என்ற அங்கத்தினர் கோலக்நாத் கேஸ் முடிவை வைத்து தருநபர் மசோதா ஒன்றை கொண்டுவந்தார். அந்த தனி நபர் மசோதாவில் இம்மாதிரி கான்ஸ்டிடியூஷனுக்குத் திருத்தங்கள் கொண்டுவரும்போது, மாநிலங்களைக் கலந்துகொண்டுதான் நிறைவேற்றவேண்டுமென்று கன்சல்டேட்டிவ் கமிட்டியில் கொண்டு போய் அங்கு அமைச்சரவையின் அங்கீகாரம் பெற்றுத் திருத்தி விட்டார்கள். ஆனால் திடீரென்று மசோதா தயாராகி பாராளுமன்றத்திற்கு வருவதற்கு முன்பாக அப்போது பார்லிமெண்ட் கலைந்துவிட்டது. மசோதா அதனால் நிறைவேறவில்லை. பாராளுமன்றம், மற்ற அமைச்சரவை யாவும் சம்மதித்த திருத்தத்தை இன்று மூன்றில் இரண்டு பங்கு மெஜாரிட்டி தங்களுக்கு வந்துவிட்டது என்ற தெம்பில் திருத்தத்தோடு கூடிய நாத்பாயின் மசோதாவில் கண்ட அடிப்படைக் கொள்கையைக் கைவிட்டுவிட்டு நேற்றைய தினம் பாராளுமன்றத்தில் ஒரு மசோதாவைக் கொண்டு வந்திருக்கிறார்கள். இது மாநிலங்களின் உரிமைகளைப் பாதிக்கிறது. இங்கே ராஜமன்னார் குழு அறிக்கையைப்பற்றி விவரமாக அவர்கள் பேசிவிட்டதால், அதிகமாகப் பேசத் தேவையில்லை. புதிதாக அதிக அதிகாரங்கள் நமக்கு வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கும்போது, இருக்கிற அதிகாரத்தைப் பறி கொடுத்து விட்டு இருப்பது நம் அனைவருக்கும் சரியல்ல. அவசியமானால் மற்ற மாநிலங்களோடு கலந்து இது சட்டமாகும் முன்பாக நிறைவேற்றுவதற்கு முன்பு இதைத் தடுக்க வேண்டும். மாநிலங்களைக் கலந்துகொண்டுதான் அது நிறைவேற்றப்பட வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தமிழக அரசின் சார்பாக பொதுவாக இதற்கான முயற்சியை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, பி.டி. அசிஸ்டெண்ட்பற்றிப் பலமுறை பேசப்பட்டு விட்டது. எனக்கு இரண்டு தினங்களாக வந்திருக்கிற தந்திகள் குறைந்தது 100 இருக்கும். பல ஸ்தாபனங்களிலிருந்து வந்திருக்கின்றன. கல்வி மானியம்பற்றி விவாதிக்கும்போது, சொல்லியிருக்கிறேன். அதனால் அமைச்சர் அவர்கள் அப்போது கொடுத்த வாக்கின் நம்பிக்கையின் மூலமாக அதிகமாக இதைச் சொல்லாமல் விடுகிறேன். வந்திருக்கிற எல்லாத் தந்திகளிலும் முதலமைச்சர் பெயரை உபயோகித்து, அவர் சொன்னார், அதன்படி இடைக்கவில்லை என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதைக் கவனித்து ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, நமக்குக் கொடுக்கப்படும் மசோதா திருத்தங்களைப் பற்றிக் குறிப்பு வரும்போது, அந்தத் திருத்தங்கள் மட்டும் வருகின்றன. முன்பெல்லாம் சென்ற வருஷம்கூட புழைய செக்ஷன் என்ன என்பதையும் போட்டு அதற்கு வந்துள்ள திருத்தத்தையும்



29th July 1971] [திரு. கே. ராஜாராம்]

சேர்த்து அனுப்புவார்கள். இப்போது அப்படி வராததால் நாங்கள் அந்தச் சட்டத்தைத் தேடிப் பிடித்துத் திருத்தங்களைப் பரிசீலிக்க வேண்டியிருக்கிறது. கஷ்டமாக இருக்கிறது. இதற்காக கவுன்சில் செக்கரட்டேரியேட்டுக்கு வந்து சம்பந்தப்பட்ட காரியதரிசியிடம் சொல்லி பழைய சட்டத்தை வாங்கிப் பார்த்து கவனிக்க வேண்டியிருக்கிறது. ஸ்டேட்மெண்ட் வைக்கிறார்கள். பழைய சட்டத்தையும் போட்டு புதிய அமெண்ட்மெண்ட் சேர்ப்பதையும் போட்டால் வசதியாக இருக்கும்.

அடுத்தப்படியாக, தஞ்சையில் விவசாயிகளின் குறைகளைப்பற்றி ஆராய்ச்சி செய்து, பத்ரிநாத் அவர்கள் அறிக்கை தந்திருக்கிறார்கள். இவ்வளவு காலமாகியும் அந்த அறிக்கை எங்களுக்குக் கொடுக்கப்படவில்லை. அதைக் கொடுக்க அரசாங்கம் ஏற்பாடு செய்யவேண்டும்.

மதுரை மாவட்டத்திலுள்ள முடுவார்பட்டி என்ற கிராமத்தில் தேர்தலுக்குப் பின்னால் கலவரம் ஏற்பட்டது. அது தேர்தலுடன் முடிந்துவிடும் என்று எண்ணினேன். சென்ற வாரம் கவுன்சில் கூடியபோதும் சொன்னேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கவனிப்பதாகச் சொன்னார்கள். சோழவந்தான் தொகுதியில் கடந்த பத்து தினங்களுக்கு முன்னால் பஸ்ஸில் இருந்தவர் பாரிடமோ ஏதோ சொன்னார் என்பதற்காகக் கலகம் வந்திருக்கிறது. ஊரில் உள்ள முக்கியஸ்தர்கள் முன்னாள் பஞ்சாயத்துத் தலைவர் உட்பட பல இனத்தைச் சேர்ந்தவர்கள் இதனால் பிடிக்கப்பட்டிருக்கிறார்கள். அந்த ஊரிலேயே முன்பு ஹெட் கான்ஸ்டபிளாக இருந்தவரை புரமோஷன் செய்து அங்கேயே சப்-இன்ஸ்பெக்டராகப் போட்டவுடன் அவருக்கு வேண்டாதவர்களின் மீது இப்படித் தகாத நடவடிக்கைகளை எடுத்து வருகிறார். யாரைத் தனக்குப் பிடிக்காதோ அவர்களைப் பிடித்து கைகளில் விலங்கு மாட்டி—பெரிய மனிதர்களைக் கூட—காவலில் வைத்திருக்கிறார். அதைப்பற்றி மகஜர் வந்திருக்கிறது. முதலமைச்சர் அவர்களுக்கும் தெரிந்திருக்குமென்று நம்புகிறேன். கேஸ் போட்டும் கூட அது கவனிக்கப்படவில்லை என்று தகவல் வந்திருக்கிறது. முதலமைச்சர் விரும்பினால், அந்த மகஜரை அவரிடமே கொடுக்கிறேன். அதைப் பார்த்து விசாரிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, காரைக்குடியில் கழனிவாசல் என்ற கிராமம் நகரசபை எல்லைக்குள்ளே இருக்கிறது. அந்தப் பகுதியில் தலைமுறை தலைமுறையாகப் பல பேர் வீடு கட்டிக்கொண்டு, சிறு தோட்டங்கள் அமைத்துக்கொண்டு, பிணறுகள் வெட்டிக்கொண்டு குடியிருந்துகொண்டு வருகிறார்கள். திடீரென்று 17-7-71 அன்று 100 போர்கள் ஆக்கிரமித்து, அவர்கள் ஏற்கெனவே வீடு கட்டிக் கொண்டிருந்த இடத்தில் இவர்கள் போய் குடிசைகளைப் போட்டு பெரும் குழப்பத்தை உண்டு பண்ணியிருக்கிறார்கள். போலீசுக்கு [6-50 p.m.

[திரு. கே. ராஜாராம்] [29th July 1971

சிப்போர்ட் செய்யப்பட்டும் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. அப்படி எடுக்காததற்குக் காரணம் ஆளுங்கட்சியைச் சேர்ந்த சில செல்வாக்குள்ளவர்கள் அவர்களுக்குப் பரிந்துரைத்து கொண்டு நடவடிக்கை எடுக்கவிடாமல் போலீசாரைத் தடுத்துக் கொண்டிருப்பதாக எங்களுக்குத் தகவல் வந்திருக்கிறது. அதையும் முதலமைச்சர் அவர்களுக்குக் கொடுக்கின்றேன். அதையும் பார்த்து அவர்கள் ஆனை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, கடந்த இரண்டு தினங்களுக்கு முன்பு சிதம்பரம் சர்வகலாசாலையில் ஏற்பட்டது விரும்பத்தகாத செயல் என்று அன்றைக்கே சொன்னேன். யாரும் இந்தமாதிரி நிலைமை ஏற்படவேண்டும் என்று விரும்பமாட்டார்கள். நாம் ஒவ்வொரு வரும் விரும்பாத அந்தக் காரியம் நடந்ததற்காக அனைவரும் வருத்தப்பட்டுக் கொண்டிருக்கக்கூடிய இந்த நேரத்தில், ஒரு பையன் தண்ணீரில் விழுந்து இறந்துவிட்டான். அவன் யார் என்றே அடையாளம் தெரியாத நிலைமை இருந்துவந்தது. நெல்லிக்குப்பத்தைச் சேர்ந்த ஒரு மனிதர், ஆசிரியர், ரிட்டயர் ஆனவர். அவர் பெயர் கே. பெருமாள்சாமி. அவருடைய முகவரி, 23, ரெட்டித் தெரு, நெல்லிக்குப்பம். 23-ந் தேதிக்கு முன்பு இரண்டு தினங்களுக்கு முன்பு அவருக்கு ஒரு கடிதம் வந்திருக்கிறது. அந்த மாணவர் இரண்டாவது பி.எஸ்.சி.யில் படிப்பவர். ஃபர்ஸ்ட் குரூப் எடுப்பதற்கு இரண்டு மார்க் குறைவாக இருந்தது. அதைத் தன் தகப்பனுக்கு எழுதிவிட்டு, இப்படி இரண்டு மார்க் குறைந்து விட்டது, இல்லாவிட்டால் ஃபர்ஸ்ட் குரூப் கிடைத்திருக்கும் என்று எழுதிவிட்டு, 24 தேதி முதல் 27 தேதி வரைக்கும், பட்டமளிப்பு விழாவிற்குப் பின்னால் எங்களுக்கு லீவு இருக்கிறது. ஆகவே 26-ந் தேதிக்குள் வீட்டிற்கு வந்து விடுவேன் என்று கடிதம் எழுதி அனுப்பியுள்ளான். அந்தக் கடிதம் என்னிடத்திலே இருக்கிறது. அந்தக் கடிதம் சென்னையிலேதான் இருக்கிறது. இந்தக் கடிதத்திற்குப் பின்னால் அவன் தகப்பனார் 26-ம் தேதிவரைக்கும் பார்த்திருக்கிறார். பையன் வரவில்லை என்று தெரிந்தவுடனே, இறந்த பையன் தன் பையனுகத்தான் இருக்க வேண்டும் என்று எண்ணி, பத்திரிகையிலும் 27-ந் தேதி காலையில் தான் அந்தப் படம் வந்தது. உடனே போய்ப் பார்த்திருக்கிறார். ஆர்.டி.ஓ.விடம் சொல்லியிருக்கிறார். அந்த ஆர்.டி.ஓ. மிக உற்சாகம் மேலிட்டவராகத் தெரிகிறது. அவர்கள் அங்கே இருந்தால் விசாரணைக்கே கூட குந்தகம் நேரிடும் போல் இருக்கிறது. அரசாங்கம் நல்லெண்ணத்துடன் அமைக்கப்படும் நீதிவிசாரணையைக்கூட தோற்கடித்து விடுவார் போல் இருக்கிறது என்று அன்றைக்கே சொன்னேன். இந்த ஆர்.டி.ஓ. அவரைக் கூப்பிட்டு, மகனே இழந்து அழுதுகொண்டு அலங்கோலமாக வந்திருக்கும் மனிதருக்கு ஆறுதல் வார்த்தை சொல்ல வேண்டியிருக்க, அவரை மிரட்டி, நீ அரசாங்கத்தை ஏமாற்றிப் பணம் வாங்க வந்திருக்கிறாயா என்று சொல்லி 4 மணி நேரம் உட்கார வைத்திருக்கிறார். சிதம்பரத்திலே உள்ள முக்கியஸ்தர்கள் எல்லாம் பிறகு தலையிட்டு அவரை விடுவித்திருக்கி



29th July 1971] [திரு. கே. ராஜாராம்]

றார்கள். இவர் 23-ம் தேதி அன்று 2½ மணிக்கு முதலமைச்சர் அவர்கள் இல்லாத நேரத்தில், முதல் ஃபங்க்ஷனே முடித்து விட்டு வந்த பிற்பாடு, ஒருவிதமான காரணமும் இல்லாமல் விடுதிகளுக்குள்ளே சென்று தாக்கும்படியாக உத்தரவு கொடுத்து, கூட இருந்து, ஒவ்வொரு ப்ளாக்குக்கும் ஒரு சப்-இன்ஸ்பெக்டர், 10, 20 எஸ்.ஏ.பி. கான்ஸ்டபிள்களைப் போட்டு, அடிக்கச் செய்துள்ளார். அவர் அந்த சர்வகலாசாலையில் ஏற்கனவே மாணவராக இருந்தவர். இவ்வளவு தூரம் செய்திருப்பவர் மகனே இழந்து வந்தவரை இப்படி நடத்தியிருக்கிறார். அவர், உன்னைப் பிடித்து அடைத்துவிடுவேன் என்று மிரட்டியிருக்கிறார். இதை நான் ஏதோ கேள்விப்பட்டுச் சொல்கிறேன் என்று நினைக்க வேண்டாம். பொறுப்புள்ள ஆட்கள், எடுத்துச் சொல்லி ஆர்.டி.ஓ.விடமிருந்து மீட்டுக் கொண்டுவந்த முக்கியஸ்தர்கள் சொல்லித்தான் நான் இதைச் சொல்கிறேன். இப்படிப்பட்டவர் ஒரு டெர்ரரிசத்தையே (பயங்கரம்) ஏற்படுத்தியிருக்கிறார். அந்தத் தகப்பனார் வாங்கிப் போட்ட மோதிரம் பையனின் கையிலே இருந்திருக்கிறது. இவருடைய பெயர் கே. பெருமாள்சாமி. இந்த விவரம் அந்த மோதிரத்தில் இருக்கிறது. இவர் அடையாளம் சொல்லும்போது சின் மகன் 'கேபி' கெடிகாரத்தைக் கட்டியிருந்தான் என்று சொல்லியிருக்கிறார். போலீசார் அந்தப் பிரேதத்தினிடமிருந்து எடுத்து வைத்திருந்த கெடிகாரமும் கேபிதான். இம்மாதிரி யெல்லாம் அடையாளம் சொல்லிவிட்டு வந்திருக்கிறார். தகப்பனார் அவர்தானு இல்லையா என்பதை அரசு முடிவு செய்யட்டும். ஆனால் அந்த ஆர்.டி.ஓ. இந்தமாதிரி மகனைப் பறிகொடுத்து வந்தவர் என்று சொன்னவுடன் கொஞ்சங்கூட பச்சாதாபம் இல்லாமல், இருந்திருக்கிறார். அப்படிப்பட்டவரை அங்கே வைத்துக்கொண்டு நீதி விசாரணை நடத்தினால், என்ன நியாயம் நமக்குக் கிடைக்கும் என்று கேட்கிறேன். ஆகவே முதல்வர் அவர்களுடைய நல்ல பெயருக்கும், அரசாங்கத்தின் நல்ல பெயருக்கும் அவரை மாறுதல் செய்து நீதி விசாரணை நடத்தினால்தான் சரியாக நடக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். இது மிக முக்கியமான விஷயம். அவரோடுகூட இருந்த போலீஸ்காரர்களையும் இந்த விசாரணை முடிகிற வரைக்கும் கொஞ்ச காலத்திற்கு மாற்றி வைப்பது நல்லது என்று நான் நினைக்கிறேன். நடந்திருப்பதைப் பார்த்தால், பஞ்சாபில் ஜாலியன்வாலாபாக்கில் நடந்ததைப்போல் இருக்கிறது. அங்கே துப்பாக்கி உபயோகப்படுத்தப்பட்டது. இங்கே தடியடிகளும் பிரம்புகளும் உபயோகப்படுத்தப்பட்டன. அந்த ஜாலியன் வாலாபாக்கில் நடந்த மாதிரி நடந்திருக்கிறது. அவர்களாவது வீட்டை விட்டு வெளியேறி ஒரு அரசியல் கூட்டத்தைப் பார்க்கப் போனவர்கள். இவர்கள் தங்களுடைய இடத்திலேயே உட்கார்ந்திருந்தவர்கள். இவர்களை விரட்டிச் சென்று தாக்கியிருக்கிறார்கள். இந்த ஆர்.டி.ஓ.வும் கூட இருந்து தாக்கியிருக்கிறார். அங்கே துப்பாக்கி, இங்கே கம்பு. இவ்வளவுதான் வித்தியாசமே தவிர வேறொன்றும் இல்லை.

[29th July 1971

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: தலைவர் அவர்களே, இந்த சாதாரண ஒரு பிரச்சினையை ஜாலியன்வாலாபாக் என்று எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொல்கிறார்கள் என்றால், 1965-ம் ஆண்டு நடைபெற்ற அதிதியை எந்த ஜாலியன்வாலாபாக்குக்கு ஒப்பிடுவது?

திரு. கே. ராஜாராம்: அதை என்ன என்று சொல்லவேண்டியது அப்பொழுது எதிர்க் கட்சித் தலைவர்களாகவும் எதிர்க் கட்சிக் காரர்களாகவும் இருந்தவர்கள் இன்றைக்கு டிரஷரி பெஞ்சிலே இருக்கிறவர்கள் சொல்ல வேண்டுமே தவிர, நாங்கள் சொல்லிப் பிரயோஜனம் இல்லை. ஆகவே நீதி விசாரணை வெற்றிகரமாக நடை பெறுவதற்கு உதவிபுரியவேண்டும். ஜனங்களுடைய நன்மையைக் கோரி, இந்த மாநிலத்தினுடைய நன்மையைக் கோரி, இந்த அரசின் நன்மையைக் கோரியாவது அவர்களை வேறு இடத்திற்கு மாற்ற வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, அமைகிறேன். வணக்கம்.

* மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்தில் வைக்கப்பட்ட நிதி ஒதுக் கீட்டின்மீது எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், மாண்புமிகு உறுப் பினர்களும் ஆற்றியுள்ள கருத்துக்களுக்கு நான் என்னுடைய பணி வன்பான நன்றியைத் தெரிவித்துக் கொள்ளப் பெரிதும் கடமைப் பட்டிருக்கிறேன். இந்த மன்றத்திலே நிதிநிலை அறிக்கை வைக்கப் பட்டு இந்த மன்றத்திலேயுள்ள பெரும்பான்மையான உறுப்பினர் களாலும் தமிழ் நாட்டுப் பெருமக்களாலும் சமதர்ம சமுதாயம் மூத்துக் குலுங்குவதற்கு ஏற்ற ஒரு நிதிநிலை அறிக்கையை திராவிட முன்னேற்றக் கழக அரசு உருவாக்கியிருக்கிறது என்று போற்றத் தகுந்த அளவுக்கு அந்த நிதிநிலை அறிக்கை பாராட்டப்பெற்ற தாகும். அந்த அறிக்கையினுடைய அடிப்படையில் தமிழ் நாட்டிலே பல்வேறு நல்ல காரியங்களைச் செய்வதற்காக முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. நிதிநிலை அறிக்கையிலே கல்வித் துறைக்காக 81 கோடி ரூபாயும், மருத்துவம் நலத்துறை ஆகிய வற்றுக்காக 33 கோடி ரூபாயும், வேளாண்மைத் துறைக்காக 18 கோடி ரூபாயும், தொழில் துறைக்காக ஏறத்தாழ 5 கோடி ரூபாயும், கிராம வளர்ச்சிப் பணிகளுக்காக 7 கோடி ரூபாயும், பின்தங்கியோர் நலத்திற்காக 4½ கோடி ரூபாயும், அரிஜன நலத்திற்காக 7 கோடி ரூபாயும் ஒதுக்கப்பட்டது மாத்திரமல்லாமல், வேலை வாய்ப்புகளை அதிகப்படுத்துவதற்கும், படித்த இளைஞர்களிடையே புதிய வேலை வாய்ப்புகளைப் பெருக்குவதற்கும், மருத்துவத் துறையிலும், ஆசிரி யர்களாக இருப்பவர்களுக்கும் வேலை வாய்ப்புகளை அளிப்பதற்கும் பல்வேறு திட்டங்கள் தீட்டப்பட்டு இந்த மாமன்றத்திலே அவைக ளெல்லாம் விவாதிக்கப்பட்டிருக்கின்றன. சமதர்ம நோக்கோடு பேருந்துகளுக்கான உச்ச வரம்பினையும் நாம் இந்த நிதிநிலை அறிக்கையொட்டி விவாதித்து, அதற்கான சட்டத்தையெல்லாம் உருவாக்கியிருக்கின்றோம். பேருந்துகளை நாட்டுடைமையாக்குகின்ற புரட்சிகரமான திட்டத்தையும் இந்த மாமன்றத்திலே நாம்



29th July 1971] [டாக்டர் மு. கருணாநிதி]

அறிவித்து சமதர்மப் பாதையிலே இந்த அரசு மேன்மேலும் தீவிர மாக முன்னேறுகிறது என்பதற்கான அறிவிப்பைத் தமிழகத்திலே செய்திருக்கின்றோம். இவைகளையெல்லாம் நாம் சட்டப் பேரவை யிலும் இந்த மேலவையிலும் நல்ல முறையிலே விவாதித்து அரிய முடிவுகளையெல்லாம் எடுத்திருக்கின்றோம். இன்றைக்கு நிதிநிலை ஒதுக்கீடு என்கின்ற அடிப்படையிலே பேசிய மாண்புமிகு உறுப் பினர்கள் பெரும்பாலும் கல்வித் துறையிலேதான் அதிக நாட்டம் செலுத்தினர்கள். இப்பொழுதுகூட இந்த மாமன்றத்தில் அதிக வேலை நம்முடைய கல்வித்துறை அமைச்சர் அவர்களுக்குத்தான் இருக்கிறது. நான்கூட அவர்களிடம் வேடிக்கையாகச் சொல்லித் கொண்டிருந்தேன். எனக்கு ஏழு மணிக்கு ஒரு முக்கியமான வேலையிருக்கிறது. இந்த நிதி நிலை ஒதுக்கீடு விவாதத்திற்கான பதிலைக்கூட நீங்களே சொல்லிவிடலாம். ஏனென்றால் இங்கு பேசிய உறுப்பினர்கள் எல்லாம் கல்விக்குத்தான் முக்கியத்துவம் கொடுத்திருக்கிறார்களென்று சொன்னேன். ஏற்கனவே அதற்கான பதிலைச் சொல்லியிருப்பதாகக் குறிப்பிட்டார்கள். அவர் என்ன பதில் சொல்லியிருந்தாலும், மீண்டும் மீண்டும் அவர் பதில் சொன்னபிறகும், அதே பிரச்சினைகளை எதிர்க் கட்சித் தலைவரவர் களும், மாண்புமிகு உறுப்பினர்களில் குறிப்பாக நம்முடைய திரு. ராஜா அய்யர் அவர்களும் இங்கே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். நான் புதியதாக எந்தப் பதிலையும் சொல்வதற்கில்லை. மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் அளித்திருக்கின்ற அதே பதிலைத்தான் நான் மறுபடியும் இங்கே எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக் கிறேன். ஆகவே அவர் சொன்ன பதிலையே நான் சொன்ன பதிலாக நீங்கள் இப்போதைக்குக் கருதலாமென்பதையும் நான் எடுத்துக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நம்முடைய நண்பர் திரு. சுவாமிநாதன் அவர்கள் பேசும் போது, மாண்புமிகு தொழிலமைச்சர் அவர்கள் மேலைநாடுகளுக்கு பயணம் தொடங்கி, அதிலும் குறிப்பாக ஒரு தொழிற்சாலைக்கு அமெரிக்க நாட்டில், அங்கேயிருக்கின்ற தொழிலதிபர்களோடும், நிறுவனங்களோடும் தொடர்பு கொள்வதுபற்றி இங்கே எடுத்துச் சொன்னார்கள். அதற்காக அமெரிக்க நாட்டிற்குச் செல்ல வேண்டுமா என்று அவர் கேட்ட நேரத்தில் சுதந்திராக் கட்சியி னுடைய உறுப்பினர்களில் ஒருவர் அமெரிக்க நாட்டிற்குச் செல்வதை இவ்வளவு ஆத்திரத்தோடு கண்டித்தாரே என்பதை எண்ணுகின்ற நேரத்தில் நான் உள்ளபடியே வியப்படைகிறேன். அதே நேரத்தில் இப்பொழுது சுதந்திரா கட்சியில் அவரவர்களுக்கு இப்படிப்பட்ட கருத்துக்களைச் சொல்வதற்கு நல்ல சந்தர்ப்பம் ஏற்பட்டிருக்கிறதென்பதையும் நான் உணருகிறேன். அந்தக் காரணத்தாலேதான் அவர்கள் மாநிலங்களுடைய உரிமைகள் பறிக்கப்படக்கூடாதென்பதை இங்கே எடுத்துக்காட்டி, ராஜ மன்னார் குழுவினுடைய அறிக்கையை வலியுறுத்தி அதிலே நம்மு டைய மாநிலம் ஏமாந்துவிடக் கூடாது, நம்முடைய அதிகாரங்கள் பறிக்கப்பட்டு விடக்கூடாதென்று எடுத்துச் சொன்னார்கள். திராவிட முன்னேற்றக் கழகம் இங்கே ஆளுகின்றது. திராவிட

7-00 p.m.

[டாக்டர் மு. கருணாநிதி] [29th July 1971

முன்னேற்றக் கழகத்தின் சார்பில் மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் வேண்டுமென்ற கோரிக்கை மத்திய அரசிடம் வலியுறுத்தப்படுகிறது, மக்களிடம் பரப்பப்படுகிறது என்கின்ற ஒரு காரணத்தால், இன்றைய தினம் அவர்களுடைய தலைவராக இருக்கிற மூதறிஞர் ராஜாஜி அவர்கள் கிழக்கு வங்காளத்திற்குச் சுதந்திரம் கொடுத்தாலும் கொடுங்கள், இந்த மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் கொடுக்க வேண்டாமென்று சொல்கின்ற அளவுக்கிருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் திரு. சுவாமிநாதன் அவர்கள் ஒரு வேளை முதலமைச்சர் அவர்களும் மற்ற சில அமைச்சர்களும் தஞ்சை ஜில்லாவைச் சேர்ந்தவர்களாக இருக்கிறார்கள், தானும் தஞ்சாவூரைச் சேர்ந்தவராக இந்த அவையில் இருக்கிறோம் என்ற காரணத்தால், அவர்களுக்கு இந்த வகையில் உதவி செய்வோம் என்ற அளவில், இந்த விஷயத்தில் அவருடைய தலைவருடைய கருத்திலிருந்து வேறுபட்டு இன்று மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் வேண்டுமென்று குரல் கொடுப்பதற்கு நான் உள்ளபடியே பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தொழிலமைச்சர் திரு. மாதவன் அவர்கள் அமெரிக்காவில் மாத்திரம் தொடர்பு கொண்டு இங்கே ஆரம்பிக்கவிருக்கின்ற சோடியம் ஹைட்ரோ சல்பேட் உற்பத்தித் தொழிற்சாலைக்கு ஆதரவையும் தொடர்பையும் பெறுவதற்காகச் செல்லவில்லை. அவர்கள் அந்த நாட்டிலும் மற்றும் பெல்ஜியம், ஹங்கேரி போன்ற நாடுகளிலும் இருக்கின்ற தொழில் நிறுவனங்களோடு தொடர்பு கொண்டு எது இங்கே தொழில் ஆரம்பிப்பதற்கு சாதகமாகவிருக்கிறதோ, எது பொருத்தமாகவிருக்கிறதோ, அவைகளில் ஒன்றைத் தேர்ந்தெடுக்கத்தான், இந்தச் சுற்றுப் பயணம் அதற்காக மேற்கொள்ளப்படாவிட்டாலும், சுற்றுப்பயண நிகழ்ச்சிகளில் ஒன்றாக இதைப் போட்டிருக்கிறார்.

இப்பொழுது சோடியம் ஹைட்ரோ சல்பேட்டுக்குக் கொஞ்சம் மந்த நிலை இருக்கிறது. கேரளத்திலும், குஜராத்திலும் பம்பாயிலும் இருக்கிறபோது, இங்கே அந்தத் தொழிற்சாலை தேவையா என்று கேட்டார். அதிலே நிபுணர்களாகவிருக்கின்றவர்கள் இப்போதைக்கு அந்த மந்த நிலையிருந்தாலும், விரைவில் அந்த மந்த நிலை போக்கப்பட்டு, டெக்ஸ்டைல் தொழில் வளர்ந்து வருகிற வகையில் இந்தப் பொருளுக்கான தேவை உயருமென்று சொல்லியிருக்கிறார்கள். இவைகளை உத்தேசித்துத்தான் அந்தத் தொழிற் சாலையைத் தமிழ் நாட்டில் நிறுவ வேண்டுமென்ற எண்ணத்தோடு தொழிலமைச்சர் அவர்கள் அமெரிக்காவிலும் வேறு பல நாடுகளிலும் அதைப்பற்றிய ஆய்வுகளை நடத்தவிருக்கிறார் என்பதை நான் இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நம்முடைய மாண்புமிகு உறுப்பினர், தமிழரசுக் கழக சார்பில் பேசிய ஒளவை சண்முகம் அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். 'கல்வித்துறையைப்பற்றி நான் அன்றைய தினம் பேசவிருந்தேன், ஆனால் தவிர்க்க முடியாத காரணத்தால் தவறிவிட்டது' என்று குறிப்பிட்டுவிட்டு, கல்வித் துறையில் பேசவேண்டியதெல்லாம்



29th July 1971] [டாக்டர் மு. கருணாநிதி]

இன்றைய தினம் பேசி, குறிப்பாக, 'தமிழுக்காகப் பாடுபடுகின்ற முதலமைச்சரும், கல்வி அமைச்சரும் மற்ற அமைச்சர்களும் இருக்கின்ற இந்தக் காலத்தில் தமிழ் அரியாசனம் ஏறாமல் இருக்கலாமா. திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலேயே தமிழுக்கு அரியாசனம் கிடைக்காவிட்டால் பிறகு எப்போதுதான் கிடைக்கும்' என்று கேட்டார். அவர் ஏன் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி ஏதோ இரண்டொரு ஆண்டுகள்தான் இருக்கும் என்று கற்பனை செய்து கொள்ள வேண்டும்? திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி நீண்ட காலமிருக்கும், நெடிய ஆண்டுகளிருக்கும் என்ற உறுதியோடு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி தமிழை அரியாசனத்தில் அமர்த்தாமல் முடிவடையாது என்கிற உறுதியை அவரும் பெற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். நான் அவரிடம் ஒரு அவசரத்தையும் எதிர்பார்க்கவில்லை. நான் உள்ளபடியே ஆச்சரியப்பட்டேன். இப்பொழுது தமிழ்ப் பயிற்சி மொழிக் கொள்கையில் திராவிட முன்னேற்றக் கழக அரசு கொண்டிருக்கின்ற இலட்சியத்தைப் பார்க்கின்ற நேரத்தில், தமிழரசுக் கழகத்திற்கும் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் இடையிலே இடைவெளி வளர்ந்துவிடுமோ என்று அஞ்சுகிறேன் என்று அவர் குறிப்பிட்டார். இடைவெளி திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் தமிழரசுக் கழகத்திற்கும் நிச்சயமாக ஏற்படாது. அப்படி ஒரு இடைவெளி ஏற்படுமென்று அவர் அஞ்சுவதாகச் சொல்வது நாங்கள் இந்தக் காரியத்தில் மேலும், மேலும் வேகமாகச் செல்ல வேண்டும் என்பதற்காக உற்சாகப்படுத்த, ஊக்கப்படுத்த அவர் சொல்கிறார் என்று கருதிக் கொள்ளலாமே அல்லாமல், எங்கே இடைவெளி ஏற்பட்டுவிடுமோ என்ற அச்சம் நிச்சயமாக எனக்கு இல்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

நம்முடைய எதிர்க்கட்சியினுடைய தலைவர் அவர்கள் இங்கே பேசும்போது, சென்னையைச் சுற்றியிருக்கின்ற கைத்தொழில்களுக்கு இப்பொழுது பூனிட்டுக்கு எட்டரைப் பைசாவாகவிருப்பதை மாற்ற வேண்டுமென்று முன்பே வைத்த கோரிக்கையை மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கவனிப்பதாகச் சொன்னார்கள், ஆனால் இன்னும் மாற்றப்படவில்லை என்று சொன்னார்கள். அதைத் திடீரென்று மாற்றினால், அரசுக்கு எறத்தாழ மூன்று கோடி ரூபாய் அளவுக்கு வருமான இழப்பு ஏற்படுகிறது. அதை நாம் ஈடு கட்டுமளவுக்கு வேறு இடங்களில் அந்தக் கட்டணத்தை உயர்த்தவேண்டிய சூழ்நிலை எல்லாம் ஏற்படும். ஆகவே தான் அதைப்பற்றிப் பரிசீலித்து விரைவில் ஒரு நல்ல மாற்றத்தை நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர்கள் எடுத்துச் சொன்னதற்கேற்ற வகையில் செய்வதற்கு அரசு முனைந்து பாடுபடுமென்று நான் இங்கே எடுத்துக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

டெல்லி பட்டணத்தில் பாராளுமன்றத்தில் இப்பொழுது திருத்தப்படுகின்ற அரசியல் சட்டம், திருத்தப்படுகின்ற நிலைமையில் மாநில—மத்திய உறவுகளெல்லாம் பாதிக்கப்பட்டு மாநிலங்களுடைய உரிமைகள் 24 மணி நேரத்திற்குள்ளாகப் பறிக்கப்பட

[டாக்டர் மு. கருணாநிதி] [29th July 1971

விருக்கிறதென்பதை எடுத்துச் சொன்னார்கள். மாநில உரிமைகள் பறிக்கப்படக் கூடாது, மாநில உரிமைகள் காப்பாற்றப்பட வேண்டும். இன்னும் சொல்லப்போனால் மாநிலங்கள் தன்னுட்சி பெற்றாக வேண்டும், மாநில சுயாட்சி ஏற்பட்டாக வேண்டும், மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்படவேண்டுமென்று குரல் கொடுத்துக் கொண்டிருக்கின்ற கட்சி திராவிட முன்னேற்றக் கழகமாகும். இந்தக் கட்சி இங்கே ஆளும் கட்சியாக விருக்கிறது. இன்றைய அரசு திராவிட முன்னேற்றக் கழக அரசாகும். ஆகவே இதைப்பற்றி முழு விவரங்களையும் இன்னும் அறியவில்லை. அந்த வாய்ப்பைப் பெறவில்லை. டெல்லியிலேயிருக்கின்ற நாடாளுமன்றத்தினுடைய உறுப்பினர்கள், குறிப்பாக மாநிலங்களுடைய உரிமைகள் பறிக்கப்படக் கூடாதென்பதில் மிகுந்த திட உள்ளத்தோடும், திண்மையோடும், மன உறுதியோடும் இருக்கின்ற திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் இதைப் பற்றி நிச்சயமாக அங்கே குரல் எழுப்புவார்கள். இந்த மாநிலங்களுடைய உரிமைகள் பறிக்கப்படுகின்ற நிலைமை வந்தால், நிச்சயமாக நம்முடைய அரசுச் சார்பாக நம்முடைய குரலை அதற்கு எதிராக எழுப்பத் தயாராகவிருப்போம். முழு விவரங்களையும் அறிந்துகொள்ளாமல் நான் விரிவாகப் பேசுவதற்கு விரும்பவில்லை என்பதனையும் இங்கே குறிப்பிட்டுக்கொள்ளக் கடமைபட்டிருக்கிறேன்.

குறிப்பாக, எதிர்க் கட்சித் தலைவரவர்கள் சிற்சில சம்பவங்கள், வன்முறைச் சம்பவங்கள் நடைபெறுவதையெல்லாம் எடுத்துக் காட்டி, அவைகளை அரசின் சார்பில் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டார். அவைகள் உரிய நேரத்தில், உரிய முறையில் கவனிக்கப்படும் என்கின்ற உறுதியை நான் அவருக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தினுடைய சம்பவங்களை அவர் அன்றைய தினம் பேசிய தோடு விட்டுவிடுவாரென்று கருதினேன். அவரைச் சில பேர் விடமாட்டார்கள் என்று எனக்குத் தெரியும். ஆகவேதான் இங்கே பேசவேண்டிய கட்டத்தில் இருக்கிறார் என்பதை அறிவேன். அவர் பேசுகிறபோது மாண்புமிகு அமைச்சர் திரு. என். வி. நடராசன் அவர்களுக்குக் கோபம் வந்தது. எனக்குக் கோபம் வரவில்லை. அவர் பேசித் தீர வேண்டும். அவருக்கு நிலைமைகள் உண்மையிலேயே நன்கு தெரிந்தாலும்கூட, அவர் பேசியாக வேண்டும். அந்த நிலைமையில்தான் அவர் பேசின்ற பெரியவர்களெல்லாம் இன்றைய தினம் இருக்கிறார்கள். நான் அவர்களையெல்லாம் மிகுந்த பணிவன் போடுகேட்டுக்கொள்கிறேன். நியாயத்திற்காக வாதிட நீங்கள் துணிந்து வெளியே வந்து தீர வேண்டிய கட்டம் இப்பொழுது ஏற்பட்டிருக்கிறதென்பதை நான் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் நடைபெற்ற அந்தச் சோகச் சம்பவங்களையெல்லாம், வெளியிலே சொல்ல நா கூசுகின்ற சம்பவங்களைக்கூட நான் இந்த மன்றத்தில் எடுத்துச் சொன்னேன். நான் அந்த மன்றத்தில்கூட சொல்லாத பல விஷயங்களை இந்த மன்றத்தில் எடுத்துச் சொன்



29th July 1971] [டாக்டர் மு. கருணாநிதி]

னேன். காரணம், இங்கே இருக்கின்ற காங்கிரஸ் கட்சியினுடைய பெரியவர்கள், காங்கிரஸ் கட்சியை நீண்டகாலமாக வளர்த்து, காங்கிரஸ் கட்சியோடு சேர்ந்து வாழ்ந்து, காங்கிரஸ் கட்சியினுடைய வாழ்விலும் தாழ்விலும் தங்களை ஒப்படைத்துக்கொண்டவர்களாகவிருக்கின்ற காரணத்தால், அவர்கள் நியாயம் எது, அநியாயம் எது என்பதை எடுத்துச் சொல்லவும், தெரிந்துகொள்ளவும், மற்றவர்களுக்கு விளக்கவும் கடமைப்பட்டிருக்கிறார்கள் என்ற அளவிலேதான் நான் அன்றைய தினம் அவ்வளவு விரிவாக விளக்கங்களை எடுத்துச் சொன்னேன். இவ்வளவுக்கும் பிறகும் அங்கேயிருக்கின்ற அதிகாரிகள் வேண்டுமென்றே சென்று மாணவர்களுடைய அறைகளில் புகுந்தார்கள், மாணவர்களை அடித்தார்கள், மிரட்டினார்கள் என்றெல்லாம் எடுத்துச் சொல்வது உள்ளபடியே இட்டுக்கட்டிச் சொல்லப்பட்ட விஷயங்களை நம்முடைய எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் நம்பிக்கொண்டு இங்கே பேசுவதற்கு நான் பெரிதும் வருந்துகிறேன்.

அதற்காக ஒரு நீதி விசாரணை இன்றைக்கு அமைக்கப்பட்டிருக்கிறது. உயர்நீதிமன்ற நீதிபதி ஒருவர் தன்னுடைய வேலைகளைக் கவனிக்க இருக்கிறார். அதற்கிடையிலே நான் இங்கே அதிகமாக நுழைந்து விளக்கங்களைச் சொல்ல விரும்பவில்லை என்றாலும், இறந்து போன ஒருவருடைய தந்தை எப்படி நடத்தப்பட்டார் சிதம்பரத்தில் என்று சட்டமன்றத்தில் குறிப்பிட்டார்கள். பெருமாள்சாமி என்கிற ஆசிரியரின் பெயரையும் அவர்கள் சொன்னார்கள். 7·10 p.m.

பெருமாள்சாமி அவர்களுக்கு மகன் எழுதிய கடிதமும் தங்களிடத்தில் இருப்பதாகச் சொன்னார்கள். இந்த விஷயத்தில் அரசியல் கட்சி ரீதியாக எந்த அளவுக்கு அவர்கள் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்பதை அன்றைக்குச் சொல்லும்போது மறுத்தவர்கள் கூட இன்றைக்கு ஏற்றுக்கொள்ளுவார்கள் என்று கருதுகிறேன்.

இந்தச் சம்பவம் நடந்த மறுநாளே பழைய எதிர்க் கட்சித் தலைவர் திரு. கருத்திருமன் அவர்கள் தன்னுடைய முதல் வேலையாக நீண்ட காலத்துக்குப் பிறகு சிதம்பரத்துக்குச் சென்று ஊர்வலம் நடத்தி, பொதுக் கூட்டத்தில் பேசுகின்ற நேரத்தில்கூட கவர்னரும், முதலமைச்சரும் மன்னிப்புக் கேட்க வேண்டுமென்று குறிப்பிட்டு, அது மாத்திரமல்லாமல், இந்த மாநிலத்தில் உள்ள நீதிபதி விசாரிக்கக் கூடாது, அடுத்த மாநிலத்தில் உள்ள நீதிபதி வர வேண்டுமென்று சொன்னார்.

இங்கே எதிர்க்கட்சித் தலைவராக இருந்த காலத்தில்கூட அவர் எதற்கெடுத்தாலும் நீதி விசாரணை கேட்பார். தமிழ் நாட்டில் தி.மு.க. அரசு உருவானதற்குப் பிறகு சிறிய, சிறிய சம்பவங்களுக்குக்கூட நாம் நீதி விசாரணைகளை ஏற்பாடு செய்திருக்கிறோம்.

ஜாலியன்வாலாபாக் என்றெல்லாம் கூட சொன்னார்கள். பஞ்சாப் மாநிலத்தில் உள்ள அந்த ஜாலியன்வாலாபாக் என்ற தோட்டத்தை நானும் பார்த்துவிட்டு வந்திருக்கிறேன். அங்கே

அந்தச் சுவர்களிலெல்லாம் துப்பாக்கி துளைத்த வடுக்கள் இருக்கின்றன. அங்கெல்லாம் அந்த இடத்துக்குக் கீழே குண்டு துளைக்கப்பட்டது என்று எழுதப்பட்டிருக்கிறது. உயிரிழந்த வீரர்களின் பெயர்கள் எல்லாம் பெரிய பட்டியலாக எழுதி வைக்கப்பட்டிருக்கிறது.

அந்த ஜாலியன்வாலாபாக்கை, அண்ணுமலைப் பல்கலைக் கழகத்திலே நடைபெற்ற இந்தப் பிரம்படி சம்பவத்தோடு தம்முடைய எதிர்க் கட்சித் தலைவர் ஒப்பிட்டார் என்றால், அவருக்குச் சம்பவங்களை ஒப்பிடுவதற்குக்கூட அவ்வளவு பஞ்சம் ஏற்பட்டிருக்கிறது என்பதைத் தான் நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். எதிர்க் கட்சி தலைவரைப் புண்படுத்துவதற்காக நான் இதைச் சொல்லவில்லை. என்னை, என் ஆட்சியைப் புண்படுத்திக்கொள்ளுகிறேன். அவர்களுக்கு நல்ல சம்பவங்களைக் கொடுக்காமலிருக்கிறோம் என்பதற்காக நாங்கள் உள்ளபடியே வருந்துகிறோம்.

பெரிய சம்பவங்களைக் கொடுத்து, ஒரு முதுகுளத்தூரைப் போல், 1965-ஆம் ஆண்டு இந்தி எதிர்ப்புப் போராட்டத்தைப் போல பெரிய சம்பவங்களைக் கொடுத்தால், இதையே ஜாலியன் வாலா பாக்குக்கு ஒப்பிடுகிறார்களே, அதை என்ன சொல்வார்களோ எனக்குத் தெரியவில்லை. 1½ மணி 1மணி நேரம் வர்ணித்து நீங்களெல்லாம் அழக் கூடிய அளவிலேகூட பேச முடியும். ஏனென்றால் முதுகுளத்தூர் சம்பவம் போல ஒரு நாளா, இரண்டு நாளா, 40 நாட்கள் வயல்வெளிகளில் பிணங்கள் கிடந்தன. வாய்க்கால்களிலே குழந்தைகளின் தலைகள் மிதந்தன. ஆதித்திராவிட மக்களும், நாடார் குல மக்களும், தேவர் குல மக்களும், போராடிக் கொண்டு வைக்கோல் போரோடு சேர்ந்து இறந்தார்கள்.

அத்தகைய கோரக் காட்சிகளெல்லாம் முதுகுளத்தூர் சமையில் 1958-ம் ஆண்டு நடைபெற்றது. அப்போது தமிழகச் சட்ட மன்றத்திலே திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவராக வீற்றிருந்த அறிஞர் அண்ணு அவர்களும், கம்யூனிஸ்டுக் கட்சித் தலைவர் திரு. எம். கல்யாணசுந்தரம் அவர்களும், திரு. வி. கே. ராமசாமி முதலியார் அவர்களும், அத்துணை பேரும் சேர்ந்து கெஞ்சிக் கெஞ்சிக் கேட்டார்கள் ஒரு நீதி விசாரணைக்கு ஏற்பாடு செய்யுங்கள் என்று. 40 நாட்கள் நடைபெற்ற அமளி, பல தாய்மார்கள் கற்பழிக்கப்பட்டார்கள், பல பிணங்கள் கிடந்தன, பல குழந்தைகளின் குடல்கள் அறுத்து வெளியே எறியப்பட்டன. இப்படிப்பட்ட 40 நாள் அமளிக்கு ஒரு நீதி விசாரணை நடத்தவில்லை.

1965-ம் ஆண்டில் 46 இடங்களில் துப்பாக்கிச் சூடுகள் நடைபெற்றன. ஒரு நீதி விசாரணை கிடையாது. ஆனால் இன்றைக்கு ஒரு பிரம்படி சம்பவம், விழுந்த பிணம் தற்கொலையா அல்லது வேறு யாராலாவது தூக்கியெறியப்பட்டு கொலை செய்யப்பட்டதா, அல்லது பத்திரிகைகளிலே வருகின்ற செய்திகளைப்போல, போலீசார் விரட்டுகிற நேரத்திலே போய் விழுந்தவரா என்ற இந்த விளக்கம் வராத நிலையிலேயே இந்த அரசு நீதி விசாரணைக்கு ஏற்பாடு செய்து ஒரு உயர்நீதிமன்ற நீதிபதியையும் அதற்காக நியமிக்கக் கூடிய அளவுக்குச் சென்றிருக்கிறது. ஆனால் இதில்



கூட திருப்தியடைய முடியாதவர்கள்—நாங்கள் இதை முதலிலே அறிவிக்காமல் இருந்திருந்தால் நீதி விசாரணை வேண்டுமென்று கேட்டிருப்பார்கள்—நாங்கள் செய்த குற்றம் முதலிலேயே நீதி விசாரணை என்று சொல்லி விட்ட காரணத்தால், அடுத்து என்ன கேட்பது என்றளவிலே, வேறு நாட்டிலேயிருந்து கொண்டு வாருங்கள், அடுத்த மாநிலத்திலிருந்து கொண்டு வாருங்கள் என்கிறார்கள். இந்த மாநிலத்து நீதிபதியையே நம்பா விட்டால், அடுத்த மாநிலத்து நீதிபதியை எப்படி நம்புவது?

இப்போது அநேகமாக எல்லா மாநிலங்களிலும் இந்திரா காங்கிரஸ் நீதிபதிதான் இருக்கிறார்கள். இங்கே இருக்கிற அரசாங்கத்தின் பேச்சை அவர்கள் கேட்டு விடுவார்கள் என்று சந்தேகம் ஏற்படுமானால், பிறகு ஆந்திரத்திலிருந்து வருகின்ற நீதிபதிக்கு திரு. பிரம்மானந்த ரெட்டியிடத்தில் கொஞ்சம் சொல்லி அனுப்புங்கள் என்று சொல்ல முடியாதா? மைசூரிலிருந்து நீதிபதி வந்தால், அங்கே இருக்கிற திரு. தர்ம வீராவைப் பார்த்து, கொஞ்சம் காவேரிப் பிரச்சனையைக்கூட தள்ளிப் போட்டு விடுகிறோம், நீதிபதியிடம் சொல்லி அனுப்புங்கள் என்று சொல்லக் கூடாதா? ஆகவே இங்கே இருக்கிற நீதிபதியை நம்பாத அளவுக்கு, நீதியையே அலட்சியப்படுத்துகிற அளவுக்கு, நீதியையே சந்தேகப்படுகிற அளவுக்கு இன்றைய தினம் எதிர்க் கட்சியிலே உள்ளவர்களின் குரல் ஓங்கியிருப்பதைப் பார்க்கிற போது, நான் மிகுந்த வருத்தமடைகிறேன்.

பெருமாள்சாமி அவர்கள் எழுதிய கடிதத்தை எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் பார்த்ததாகச் சொன்னார்கள். அவர் கோட்டாட்சித் தலைவரிடத்திலே எழுதிக் கொடுத்த கடிதத்தை நான் பார்த்தேன். பெருமாள்சாமி மாத்திரம் அல்ல, மதிவாணன் என்ற மாணவர், உதயகுமார் என்ற மாணவரோடு நெருங்கிப் பழகியவர். அந்த மதிவாணன் எழுதிக் கொடுத்த கடிதத்தையும் பார்த்தேன். உதயகுமாரின் மாமனார் எழுதிய கடிதத்தையும் பார்த்தேன். அது மட்டுமல்ல. மிதந்த பிணத்தினுடைய குளோஸ்-அப் படத்தையும் பார்த்தேன். உதயகுமார் படத்தையும் பார்த்தேன். எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் பார்க்க வேண்டும் என்பதற்காக அதைக் காட்ட விரும்புகிறேன். (இரண்டு புகைப்படங்களை திரு. கே ராஜாராம் அவர்களிடம் மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி அவர்கள் காட்டினார்கள்).

இது தண்ணீரிலிருந்து எடுக்கப்பட்ட சவத்தின் புகைப்படம். இது பெருமாள்சாமி அவர்கள் கொடுத்த உதயகுமார் படம். உதயகுமாரின் கண் புருவங்கள் இதில் ஒன்றோடு ஒன்று ஒட்டவில்லை. ஆனால் இந்தப் படத்திலே இருக்கின்ற இந்தக் கண் புருவங்கள் ஒன்றோடு ஒன்று ஒட்டியிருக்கின்றன.

பெருமாள்சாமி அவர்கள் என்ன எழுதிக்கொடுத்திருக்கிறார்கள் என்றால், அந்த மோதிரம் என் மகன் போட்டிருந்த மோதிரம்

போல் தெரிகிறது. இதே போல்தான் ஒரு வாட்ச் என் மகன் கட்டியிருந்தான். ஆனால் இவன்தான் என் மகன் என்று சொல்ல இயலாது என்று எழுதிக் கொடுத்திருக்கிறார்.

அந்த மதிவாணன் என்ற மாணவரும் இதே போலத்தான் நான் என்னுடைய நண்பர் உதயகுமார் என்று சொல்வதற்கில்லை, என்று கோட்டாட்சித் தலைவரிடத்திலே எழுதிக் கொடுத்திருக்கிறார். அது மாத்திரமல்ல. உதயகுமாரின் மாமனார், உதயகுமார் சிவந்த நிறம் உள்ளவர், இந்தப் பிணம் கருத்த நிறமாக இருக்கிறது, ஆகவே இதுவாக இருக்க முடியாது என்று எழுதிக்கொடுத்திருக்கிறார்.

நான் இவைகளையெல்லாம் அப்படியே நம்பி, ஆகவே இவர் உதயகுமார் அல்ல என்று வாதிக்கத் தயாராக இல்லை. அவசரப் பட்டு அதற்குள்ளே இறந்து போனது மாண்வன்தான் என்று சொல்லி, நாட்டிலே ஒரு கிளர்ச்சியைத் தூண்டுவதற்கு, எங்கே சனிக்கிழமை வந்து விடுமோ, சனி ஞாயிறு விடுமுறை ஆயிற்றே, ஆகவே, வெள்ளிக்கிழமைக்குள்ளாக ஏதாவது கிளர்ச்சியை நடத்த வேண்டுமென்று திட்டமிட்டு, பத்திரிகைகளிலே செய்திகளைப் போடுவதும் நல்ல விஷயங்களை உணர்ந்த தலைவர்கள் எல்லாம் அதற்காளாவதும், உள்ளபடியே நாட்டில் அமைதியை, சட்டத்தை, ஒழுங்கைப் பாதுகாப்பதற்கு முடியாத நிலைமையை உண்டாக்கிவிடும் என்று தான் நான் அஞ்சுகிறேன்.

இது மாணவராக இருந்தால், அதற்காக உள்ளபடியே வருந்துகிறேன். அதற்கு நான் என்னுடைய வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இதை மறைக்க வேண்டுமென்று அரசோ, காவல் துறையினரோ, அதிகாரிகளோ முயன்றிருந்தால், இந்தப் படத்தைக் கூட தாய்மையாகத் தெரியக் கூடிய அளவுக்கு எடுக்காமல் வெளியிட்டிருக்கலாம். அல்லது வெளியிடாமல் கூட இருந்திருக்கலாம். படம் எல்லாப் பத்திரிகைகளிலும் வெளியிடப்பட்டு, அடையாளம் கண்டுபிடிப்பவர்களையெல்லாம் வரவேற்று, அவர்களை வைத்து, பிணத்தையும் படத்தையும் நன்றாகப் பார்க்கச் சொல்லி, இவ்வளவு முயற்சிகளுக்குப் பிறகும் அடையாளம் கண்டுபிடிக்க முடியவில்லை.

உதயகுமார் அங்கே இருக்கின்ற நக்சலைட் மாணவரோடு தொடர்பு இருந்தது என்று கூறுகிறார்கள். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலே நக்சலைட் மாணவர்கள் 2, 3 பேர், 5, 6 மாதங்களுக்கு முன்பு பயங்கரக் கொலை வழக்கிலே சம்பந்தப்பட்டு, வழக்குப் பதிவு செய்யப்பட்டிருக்கிற அளவுக்கு அந்த மாணவர்கள் மீதெல்லாம் காவல் துறையின் கண் இருந்துகொண்டிருக்கிறது. அப்படிப்பட்ட மாணவர்கள் வாழ்கின்ற இடம் அண்ணாமலைப் பல்கலைக் கழகம்.

அங்கே 10 பேர் கையில் கத்திகளோடு, மாணவர்களோடு இருந்தவர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். அந்த 10 பேரும் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் அல்ல. வெளி ஆட்கள். மாணவர்களும் அல்ல. பண்ருட்டி, பாண்டிச்சேரி, தஞ்சை, இப்படி பல ஊர்களிலிருந்தும் அங்கே வந்திருக்கிறார்கள். அவர்களுடைய கைகளிலே இருந்தெல்லாம் கத்தி கைப்பற்றப் பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட பயங்கரமான சூழ்நிலையைத் திட்டமிட்டு நிறைவேற்றியுள்ளவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கிறது. இதை அரசியல் காரணங்களுக்காக யாரும் பயன்படுத்த வேண்டாம் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். ஆகவே, இடந்த பிணம் யாருடைய பிணம் என்கின்ற ஆராய்ச்சி முற்றுப் பெற்று, அதுபற்றி அறிக்கை வருகிற வரையில், நான் பத்திரிகைக் காரர்களையும் கேட்டுக்கொள்ளுகிறேன். இது மாணவரின் பிணம் தான் என்றால், அதை அறிவிக்க அரசோ, அதிகாரிகளோ நிச்சயமாகத் தயங்க மாட்டார்கள்.

ஆனால் உதயகுமார் காணவில்லை என்றால், இந்தப் பல்கலைக் கழகத்திலே நடைபெற்ற அமளியின் காரணமாக வெளியூர் சென்ற மாணவரோடு சென்றிருக்கலாம் அல்லது இவராகக் கூட இருக்கலாம். ஆகவே, ஒரு முடிவுக்கு வருவதற்கு முன்பு, அவசரப் பட்டு எதையும் செய்ய வேண்டாம். பெருமாள்சாமி அவர்கள் அதிகாரிகளால் கொடுமையாக நடத்தப்பட்டார் என்று சொல்லுகிறார்கள். இப்படியெல்லாம் செய்திகள் ஜோடிக்கப்படுகின்றன.

கோட்டாட்சித் தலைவர் அப்படிக் கொடுமையாக நடத்தி இருந்தால், பெருமாள்சாமி கடிதம் எழுதிக் கொடுத்துவிட்டுப் போயிருக்க மாட்டார். இரண்டு பக்கத்துக்கு மேலுள்ள வாசகங்களைப் படித்துவிட்டு, அதற்குப் பிறகு ஆங்கிலத்தில் கையெழுத்துப் போட்டு கொடுத்துவிட்டுப் போயிருக்கின்றார்.

அந்த மோதிரத்தில் கே. பி. எஸ். என்று போடப்பட்டிருந்தாலும், எழுத்து எனக்குச் சரியாகத் தெரியவில்லை என்று குறிப்பிட்டிருக்கின்றார். ஆகவே, இந்த சந்தேகமான நிலைமையில் தான் அந்தப் படங்களை முழுமையாக வெளியிடத் தயங்குகிறோமே யல்லாமல் வேறு அல்ல என்பதைச் சுட்டிக்காட்டி இப்படிப்பட்ட வன்முறை எங்கு வளர்ந்தாலும் அது எந்தக் கட்சிக் கண் கொண்டும் பார்க்காமல் நாட்டில் சட்டம், ஒழுங்கு, அமைதி நிலை பெறுவதற்கு நாம் ஆவன செய்ய வேண்டுமென்கிற அளவில் எல்லா எதிர்க் கட்சித் தலைவர்களையும் கேட்டுக் கொள்ளுகிறேன். இந்தி எதிர்ப்புப் போராட்ட காலத்தில் மாணவர்கள் வன்முறையில் ஈடுபட்ட நேரத்தில் பேரறிஞர் அண்ணா கழகத்தின் தலைவர் என்ற முறையில், மாணவர்கள் வன்முறைகளைக் கண்டித்து அறிக்கைகள் விட்டது போல், மாணவர்கள் வன்முறைகளைக் கண்டித்து அறிக்கை விடவேண்டுமென்ற பெரும் பண்பாடு தமிழ்நாட்டில் உள்ள பெரும் தலைவர்களுக்கு ஏற்பட வேண்டுமென்று எதிர் பார்க்கிறேன். நானே கொலை செய்யப்படுகிற சூழ்நிலை என்றால், நல்ல உள்ளம் கொண்ட திரு. கக்கன் அவர்கள் கருணாநிதி உண்மைக்கு மாறான விஷயங்களைச் சொல்லி தப்பிக்கப் பார்க்கிறான் என்று (கக்கனைப் போன்ற பெரியவர்கள்) சொல்லுகிறார்கள் என்றால், உள்ளபடியே வருத்தமாக இருக்கிறது. நான் ஆத்திரப்





1·20 p.m.

[டாக்டர் மு. கருணாநிதி] [29th July 1971

படவில்லை. அதே நேரத்தில் திரு. காமராஜர் கோயம்புத்தூருக்குச் சென்றபொழுது, இரண்டு போலீஸ்காரர்கள் சண்டை போட்டுக் கொண்டு வீசிய கல் திரு. காமராஜர் காரில் பட்டதற்கு எவ்வளவு பெரிதுபடுத்தி திரு. காமராஜரைக் கொல்ல முயற்சி என்று எடுத்துச் சொல்லப்பட்டது? உடனடியாக அதற்கு ஆய்வு நடத்தப்பட்டு உண்மை வெளியிடப்பட்டது. ஆனால் இப்போது திட்டமிட்டு நக்சலைட்டுகள் சில காரியங்களைச் செய்தார்கள். அதற்குத் தெரிந்தோ தெரியாமலோ எப்படியாவது திராவிட முன்னேற்றக் கழக அரசுக்குக் கெட்ட பெயர் வருவதற்கு சிண்டிகேட் காங்கிரஸ்காரர்கள், மன்னிக்கவும், பழைய காங்கிரஸ் காரர்கள் ஒத்துழைப்புத் தருகிறார்கள் என்றால், இந்த நிலைமை நீடித்தால் நான் மனப்பூர்வமாக நம்புகிறேன், தமிழ்நாட்டில் எதிர் காலம் ஒளிமயமாக இருக்க முடியாது; இங்கேயும் ஒரு வங்கத்தை நம்மை அறியாமல் சிருஷ்டிப்பதற்கு ஆளாகிவிடுவோம் என்று எடுத்துச் சொல்லி இந்த நிதிநிலை ஒதுக்கீட்டின் மீது நல்ல பல கருத்துக்களை எடுத்துச் சொன்ன மாண்புமிகு உறுப்பினர் களுக்கும் எதிர்க் கட்சித் தலைவருக்கும் நன்றி கூறி இந்த அளவில் அமைகிறேன்.

திரு. கே. ராஜாராம்: முதலமைச்சர் விளக்கங்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்ளுகிறேன். பொதுவாக அவர் தவறாக எண்ண வேண்டாம். அரசு நல்ல ஒரு முடிவுக்கு வந்து ஒரு உயர் நீதிமன்ற நீதிபதியை நீதி விசாரணை நடத்துவதற்கு நியமித்தது. அந்த நீதி விசாரணை நம்பிக்கைக்கு உகந்ததாக நல்ல நிலைமையில் நடைபெற வேண்டுமென்ற எண்ணத்துடன் தான் சொன்னேன். யாரோ சொன்னதற்காக நான் இங்கு வந்து பேசுகிறேன் என்று எண்ணினால், அது தவறு. பொதுவாக நம் அரசு எடுத்திருக்கிற முடிவாகிய உயர் நீதி மன்ற நீதிபதி விசாரணை, நல்ல முறையில் நடைபெறவேண்டுமென்ற எண்ணத்துடன் தான் சொன்னேன் என்று முதலமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

MR. CHAIRMAN: The question is—

"That the Tamil Nadu Appropriation (No. 2) Bill, 1971 (L.A. Bill No. 32 of 1971), as passed by the Assembly, be taken into consideration for making recommendations".

The motion was put and carried and the Bill was taken up for making recommendations.

MR. CHAIRMAN: As there are no recommendations to Clauses 2 and 1, the Long Tile and the Enacting Formula, the Bill will be returned to the Assembly without any recommendations.

7-25 p.m.

The House will now adjourn and meet again at 4 p.m. tomorrow.

The House then adjourned.



29th July 1971]

## VII. PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

### *A. Statutory Rules and Orders.*

178. Notification issued with G.O. Ms. No. 1221, Revenue, dated the 24th April 1971 in regard to certain amendments to the Tamil Nadu Agricultural Lands Record of Tenancy Rights Rules, 1969. [Laid on the table of the House under section 18 (4) of the Tamil Nadu Agricultural Lands Record of Tenancy Rights Act, 1969 (Tamil Nadu Act 10 of 1969).]

179. Appropriation Accounts of the Government of Tamil Nadu for the year 1969–70, and Report of the Comptroller and Auditor-General of India for the year 1969–70. [Laid on the table of the House under Article 151 (2) of the Constitution of India).]

180. Finance Accounts of the Government of Tamil Nadu for the year 1969–70. [Laid on the table of the House under Article 151 (2) of the Constitution of India).]

### *B. Reports, Notifications and Other Papers.*

**Nil.**

# APPENDIX I.

(*Vide* item *V* on page 27.)

## கூட்டுறவு பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு.

இம் மாநிலத்தில் கூட்டுறவு இயக்கம், கடன் வழங்குதுறை, விற்பனை, செய்முறை, பயன்துய்ப்போர் கூட்டுறவுகள், ஏனைய பொது நடவடிக்கைகள் ஆகியவற்றில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் காட்டியுள்ளது. கூட்டுறவு இயக்கம் மேலும் முன்னேற்றம் காணும் என்றும், இனிவரும் ஆண்டுகளில் மாநிலத்தின் எதிர்கால வளர்ச்சி வரலாற்றில் தனக்கெனத் தனிச் சிறப்பு மிக்க இடத்தை வகுத்துக்கொள்ளும் என்றும் எதிர் பார்க்கப்படுகிறது. கடந்த ஆண்டுகளில் குறிப்பாக 1970-71 ஆம் ஆண்டில், கூட்டுறவுத் துறையில் அடைந்த சாதனைகள், "1970-71 ஆம் ஆண்டில் கூட்டுறவு வளர்ச்சிப் பணிகளில் முன்னேற்றம் பற்றிய ஆய்வறிக்கை"-யில் விரிவாகக் கொடுக்கப் பட்டுள்ளன. பொதுவாக வருங்காலத்துக்கும் குறிப்பாக 1971-72 ஆம் ஆண்டையொட்டியும் கூட்டுறவுப் பணிகள், கொள்கைகள் பற்றி இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பு முக்கியமாய் எடுத்துக் கூறுகிறது.

**கடன் வசதி.**—வேளாண்மை மேம்பாட்டுக்குக் கடன் வசதியைக் கூட்டுறவு நிறுவனத்தின் மூலம் கொடுக்கும் கொள்கைக்கிணங்க, வேளாண்மைக் கடன் வசதித் திட்டத்தில் ஏற்பட்டுள்ள மிகவும் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் என்னவெனில் தொடக்க நிலவள வங்கிகள் மூலமாகக் கிடைக்கும் நீண்டகாலக் கடன் வசதியாகும். இதில் பெற்ற சாதனைகள் கடந்த சில ஆண்டுகளிலே இரு மடங்காகவும் நான்கு மடங்காகவும் பல்கிப் பெருகின. சாதாரண திட்டத்தில் நீண்டகாலக் கடனுக 1971-72-ல் தொடக்க நிலவள வங்கிகள் ரூ. 21 கோடி வழங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. நீண்டகாலக் கடன் தொகையில் 90 சத வீதத்திற்கு மேல், உணவு உற்பத்திப் பெருக்கத்தை அடைவதற்கு உதவக்கூடிய, அதாவது கிணறுகள் தோண்டுதல், விசையேற்றங்கள் நிறுவுதல், இப்போதுள்ள கிணறுகளை ஆழப்படுத்துதல், நிலங்களைப் பண்படுத்துதல், டிராக்டர்கள் வாங்குதல் முதலிய பணிகளுக்குப் பயன்படுத்தவே கொடுக்கப்படுகின்றது. நான்காவது ஐந்தாண்டுத் திட்டக் காலம் முழுவதிலும் சாதாரண திட்டத்தின்கீழ் நீண்ட காலக் கடனுக ஏறத்தாழ ரூ. 103 கோடி வழங்கப்படுமென்று எதிர் பார்க்கப்படுகிறது. தமிழ் நாடு கூட்டுறவு நிலவள வங்கி வெளியிடும் கடனீட்டுறுதி ஆவணங்களுக்கு 1971-72 ஆம் ஆண்டிலும் மாநில அரசு தொடர்ந்து தொகை வழங்கும். 1971-72-ல் அவ்வாறு தொகை வழங்குவதற்கு ரூ. 200 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

நீண்டகாலக் கடன் வசதித் திட்டத்தின் மிக முக்கியமான கூறு, வேளாண்மை மறுநிதிக் கழக உதவியுடன் இம் மாநிலத்தில் மேற் கொள்ளப்பட்டுள்ள பெருவாரியான சிறப்புப் பருதி வளர்ச்சிப்



பணிகள் ஆகும். இவற்றில் சிறு பாசனப் பணித் திட்டங்களும் ஏனைய பணித் திட்டங்களும் அடங்கும். இந்தப் பாசனப் பணித் திட்டங்களின் தொழில் நுட்பச் சாத்தியக் கூறுகளும், பொருளாதார வகையில் தனித்தியங்கக் கூடிய கூறுகளும் ஆய்ந்து மதிப்பிடப்பட்டுள்ளன. மாநில நிலவள வங்கி வெளியிடும் சிறப்பு வளர்ச்சி கடனீட்டுறுதி ஆவணங்களுக்குத் தொகை கொடுப்பதன் மூலம் வேளாண்மை மறுநிதிக் கழகம் உதவுகிறது. மாநில அரசும், வேளாண்மை மறுநிதிக் கழகமும், சிறு பாசனப் பணிகளுக்கு 1:9 என்ற விகிதாச்சாரத்திலும், சிறு பாசனமற்ற ஏனைய பாசனப் பணிகளுக்கு 1 : 3 என்னும் விகிதாச்சாரத்திலும் கடனீட்டுறுதி ஆவணங்களுக்குத் தொகை வழங்குகின்றன. இந்தச் சிறப்புப் பணிகளுக்கு 1970-71-ல் நீண்டகாலக் கடனுக ரூ. 3.29 கோடி வழங்கியதற்கு மாறுக, 1971-72-ல் ரூ. 8 கோடி வழங்கத் திட்டமிடப் பட்டுள்ளது. இதில், 1971-72-ல், ஏறத்தாழ சிறுபாசனப் பணி களுக்கு ரூ. 7 கோடி கொடுக்கப்படுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. 1970-71-ல் 2,937 புதிய கிணறுகள் தோண்டியும், 1,176 கிணறுகள் ஆழப்படுத்தியும், 1,657 விசையேற்றங்கள் அமைத்தும் இருந்ததற்கு மாறுக, 1971-72-ல் இவற்றில் முறையே ஏறத்தாழ 7,800 புதிய கிணறுகள் தோண்டியும், 2,300 கிணறுகள் ஆழப் படுத்தியும், 9,800 விசையேற்றங்கள் அமைத்தும் போற்றத்தக்க வகையில் சாதனைகள் பெற எதிர்பார்க்கிறோம். இத்தகைய சிறப்புப் பணிகளில் ஏற்றமிகு சாதனையை நாம் அண்மையில் அடைந்துள்ளோம். வரிசை எண்ணில் அடைந்த தாண்டி வளர்ச்சி நிறுவனத்துடன் நமது மாநில அரசு பேச்சுவார்த்தை நடத்தி வளர்ச்சிக் கடன் ஒப்பந்தம் ஒன்றைச் செய்து முடித்துள்ளோம். இதுவே பெரும் சாதனையாகும். இந்தப் பணித் திட்டத்தின்கீழ் சிறு பாசனத்திற்கான மொத்தத் திட்ட இலக்கு, 7,000 வடிமூனைக் கிணறுகள், 3,800 ஆழமற்ற குழாய்கள், 700 நடுத்தரக் குழாய்க் கிணறுகள், 10,000 பாசனக் கிணறுகள் இருக்குமென்று எடுத்துச் சொல்லப்படுகிறது. இவற்றில் சிறு பாசனமற்ற சாதாரண பாசனப் பணிகளும் உள்ளன. அதாவது டிராக்டர்கள், யந்திரங்கள் ஆகியவை ஏற்பாடு செய்தல். இத் திட்டத்திற்கு உலக வங்கி உதவி 350 லட்சம் டாலராகும். இது ரூ. 26.25 கோடிக்குச் சமமாகும். இத் தொகை இந்திய அரசுக்கு வந்து சேர்ந்து அதன் மூலமாக வேளாண்மை மறுநிதிக் கழகத்திற்குக் கிடைக்கும். இத் திட்டத்திற்காக வேளாண்மை மறுநிதிக் கழகத்திடமிருந்து இம் மாநில அரசு எதிர்பார்க்கக்கூடிய மொத்த மறு நிதி உதவி சுமார் ரூ. 40 கோடியிருக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது. இத் திட்டம் 1971-72 கூட்டுறவு ஆண்டில் செயல்பட்டத் தொடங்கலாமென்று எதிர் பார்க்கப்படுகிறது.

நிலவள வங்கிகள், தங்களது பொறுப்புக்களைத் தொடர்ந்து செவ்வனே நிறைவேற்றி வருவதுடன், தங்களிடம் வைக்கப்பட்ட நம்பிக்கை வீண்போகாத வகையில் செயல்படுவது, அவை

இதுவரை சாதித்துள்ள சாதனைகளிலிருந்தும், வருங்காலப் பணிகளிலிருந்தும் தெள்ளிதின் விளங்கும். வேளாண்மைப் பணிகளுக்கான கடன் வசதிகள், குடியானவர்களுக்கு எளிதில் கிடைக்கச் செய்யவேண்டும் என்னும் அரசுக் கொள்கைக்கிணங்க, வளர்ச்சி வட்டார நிலையில் 117 தொடக்க நிலவள வங்கிகள் தொடங்கப் பட்டுள்ளன. வேளாண்மை மறுநிதிக் கழகத்துடனும், இந்திய ரிசர்வ் வங்கியுடனும் நடத்திய விவாதங்களின் அடிப்படையில், வங்கி ஏற்படுத்தப்படாத வளர்ச்சி வட்டாரங்களில், இனி ஏற்பட விருக்கும் பற்று வரவுகளினுல் கிளை வங்கியின் தேவை ஏற்படும் போதெல்லாம் 134 தொடக்க நிலவளக் கிளை வங்கிகளைத் தொடங்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. தொடக்க நிலவள வங்கிகளின் பற்று வரவுகளின் அடிப்படையில், தகுதித் தேர்வு முறைகள் முடிவு செய்யப்பட்டுள்ளன. கிளை வங்கிகளைத் திறக்கத் தகுதி பெற்ற தொடக்க நிலவள வங்கிகள் உதவித்தொகை பெறும். இதில் மாநில அரசின் பங்கு 3 ஆண்டுகளில் ரூ. 6,000 ஆகும். இந்த உதவித்தொகைக்காக, 1971-72-ல் ரூ. 1.5 லட்சம் ஒதுக்கப் பட்டுள்ளது.

கடன் வசதியைச் சிறு குடியானவர்களும் பெறவும், பசுமைப் புரட்சியில் அவர்கள் பங்கு கொள்ளவும், சிறு குடியானவர் களுக்காக இறைவைப் பாசனக் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப் பட்டுள்ளன. 1970-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1-ஆம் நாள் முதல் 1971-ஆம் ஆண்டு மார்ச்சு திங்கள் 31-ஆம் நாள் வரை 1,899 இறைவைப் பாசனக் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப் பட்டுள்ளன. இனி வரும் ஆண்டுகளில், இத்தகைய இறைவைப் பாசனக் கூட்டுறவுச் சங்கங்களை மேலும் முனைப்பாக்கவும் திட்ட மிடப்பட்டுள்ளது. இதற்காக, நிலவள அமைப்பாளர்களை நியமிக்கும் திட்டத்துக்கு ஏற்பளிக்கப்பட்டுள்ளது. வேளாண்மை-பணி நிலையங்கள் ஏற்படுத்துவது குறித்து திட்டமும் பரிசீலனையில் உள்ளது. வாஷிங்டனில் நடைபெற்ற விவாதத்தின்போது, உதவித் தொகை வழங்குவதை அடியோடு நிறுத்திவிட வேண்டுமென்று உலக வங்கி வற்புறுத்திய போதிலும், சிறு குடியானவர்களுக்குக் கிணறு கட்டுவதற்கான உதவித் தொகை தொடர்ந்து கொடுக்கப் பட வேண்டுமென்று நாம் வலியுறுத்தியது, சிறு குடியானவர்கள், சிறு குடியானவர்கள் சங்கங்கள் இவர்களின் நலன்களைக் கட்டிக் காப்பதில் நமது அரசுக்குள்ள அக்கறையைத் தெற்றெனப் புலப்படுத்துகிறது. முடிவாக, சிறு குடியானவர்களின் நலன்கள் நன்கு பாதுகாக்கப்பட்டு, சிறு உழவர்களுக்காக கிணறுகள் உதவிப்பணம் தொடர்ந்து கொடுக்கப்படவேண்டும் என்று ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

பசுமைப் புரட்சிக்கு முக்கிய ஆதாரமாக உள்ளது பயிர்க் கடன் திட்டமாகும். 1971-72-ல், குறுகிய, நடுத்தரக் காலக் கடனுக்குத் தற்காலிகமாக ரூ. 61.50 கோடி பகிர்ந்தளிக்கத் திட்டமிடப் பட்டுள்ளது.





இரண்டாவது திட்ட முடிவிற்குள், வேளாண்மைக் கடன் திட்டத்தின்கீழ் இம் மாநிலத்தின் எல்லாக் கிராமங்களும் கொண்டு வரப்பட்டன. நான்காவது திட்டமுடிவுக்குள் கடன் கூட்டுறவு உறுப்பினர்களின் எண்ணிக்கையை 39 லட்சத்திற்குப் பெருக்கவும், நான்காம் திட்ட இறுதி ஆண்டில் குறுகிய, நடுத்தரக் காலக் கடனுக ரூ. 75 கோடி வழங்கப்படும் வகையில், வேளாண்மைக் கடன் வசதியை ஆண்டுக்காண்டு அதிகப்படுத்தவும் திட்டமிடப் பட்டுள்ளது. நான்காவது திட்டக் காலத்தில் கடன் கூட்டுறவுகளின் பங்கு மூலதனத்தை ரூ. 21.31 கோடியிலிருந்து ரூ. 30.5 கோடியாக உயர்த்துதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. நான்காவது திட்ட முடிவுக்குள், கையடைத் தொகையை ரூ. 37.61 கோடியிலிருந்து ரூ. 51.69 கோடியாக உயர்த்தவும் திட்டமுள்ளது.

[illegible] பங்குகளைச் செலுத்திய வகையில் செயற் படுத்தும் திட்டத்தின்கீழ், 1971-72-ல் நிர்வாக உதவித் தொகை யுடன் (நான்காவது திட்டத்தில் திட்டமிட்ட 2,000 கடன் சங்கங்களுள்) 200 கிராமக் கடன் வழங்குச் சங்கங்களுக்குக் கடனுதவி அளிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இவ்வகையில், 1971-72-ல் சங்கங்களுக்குப் புதிதாக உதவியளிப்பதற்காக, ரூ. 1.80 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. எஞ்சிய பணித் திட்டங்கள் உட்பட, 1971-72 திட்ட மதிப்பீட்டில் மொத்தம் ரூ. 4.40 லட்சம் ஒதுக்கப் பட்டுள்ளது.

1971-72-ல் நிலங்கு-அலுவலர்-பணிகோட்டத்தை ஆகியவை ஒருங்கே அமையப்பெற்ற கட்டடம் அமைப்பதற்கு 40 தொடக்க நிலைச் சங்கங்கள் ஒவ்வொன்றுக்கும் கடனுக ரூ. 12,500-ம், உதவித் தொகையாக ரூ. 12,500-ம் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இதற்காக 1971-72 வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் (ரூ. 5 லட்சம் கடனுகவும், ரூ. 5 லட்சம் உதவித் தொகையாகவும்) ரூ. 10 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. இத்துடன், 1970-71-ல் கடன் பகுதியாக மொத்தம் ரூ. 10 லட்சம் மட்டுமே அனுமதிக்கப்பட்டுள்ள மேற்சொல்லை 80 சங்கங்களுக்கு, 1971-72-ல் இத் திட்டத்தின் கீழ் உதவித்தொகையாக ரூ. 10 லட்சம் கொடுக்கப்படும். நான்காவது திட்ட இலக்கு 240 சங்கங்களுக்கு நிலங்கு-அலுவலகம்-பணி-கோட்டகைகள் ஏற்படுத்திக் கொடுப்பதாகும்.

கிராமப் பகுதிகளில் மேலும் பல கிளைகள் திறப்பதற்கு, மத்தியக் கூட்டுறவு வங்கிகளை ஊக்குவிக்கும் ஓர் ஏற்பாடாக, திறக்கப்பட்ட ஒவ்வொரு கிளைக்கும் ஆன பணியாளர் செலவு முதலியவற்றை நடுசெய்ய இயலுவதற்காக, மூன்று ஆண்டுக் காலத்தில் ரூ. 5,000 வீதம் மத்திய கூட்டுறவு வங்கிகளுக்கு அரசு உதவித்தொகை அளித்து வருகிறது. 1971-72-ல் மேலும் 50 கிளைகளைத் திறக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. புதிய கிளை களுக்காக உதவித்தொகையும் ஏற்கெனவே திறக்கப்பட்ட கிளைகளுக்காக இரண்டாவது, மூன்றாவது ஆண்டு உதவித் தொகையும் கொடுப்பதற்காக, 1971-72-ல் ரூ. 2.89 லட்சம் ஒதுக்கப் பட்டுள்ளது.

வேளாண்மைத் தொழில் செய்யும் சமூகத்தினரிடையே எளிய பிரிவினருக்கும் கடன் எளிதில் கிடைக்கச் செய்வதன் பொருட்டு, தொடக்க நிலை கடன் சங்கங்கள், மத்தியக் கூட்டுறவு வங்கிகள் ஆகியவற்றின் மீளாக் கடன் சிறப்பு சேம நிதிக்கு அரசு தொகை கொடுத்து வருகிறது. இந்தப் பணிக்காக, 1971-72-ல் ரூ. 5.33 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

பெறுமானமில்லாதவர்களுக்கு வழங்கும் கடன்களினால் எழும் சிரமங்களை ஈடு செய்யும் பொருட்டு, இவ்வாண்டும் வேளாண்மைக் கடன் (துயர் தணிப்பு-உத்தரவாத) நிதிக்குத் தொடர்ந்து தொகை வழங்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. இந்தப் பணித் திட்டத்திற்காக 1971-72-ல் ரூ. 12 லட்சம் ஒதுக்கப் பட்டுள்ளது.

இந்திய ரிசர்வ் வங்கியின் நீண்டகாலக் கடன் நிதியிலிருந்து கடன் பெற்று பல்வேறு கூட்டுறவுக் கடன் நிறுவனங்களின் பங்கு மூலதனத்தைப் பெருக்கவும் அரசு திட்டமிட்டுள்ளது. தமிழ் நாடு கூட்டுறவு நிலவள வங்கி, தொடக்க நிலவள வங்கிகள், மத்தியக் கூட்டுறவு வங்கிகள், தொடக்க நிலை கடன் வழங்கு சங்கங்கள் ஆகியவற்றின் பங்கு மூலதனத்தில் மாநில அரசு முதலீடு செய்வதற்கு 1971-72-ல் வரவு-செலவுத் திட்டத்தில் தற்காலிகமாக ரூ. 550 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

விற்பனையும், செய்முறையும்.—வேளாண்மை விளைபொருள் விற்பனை நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் மிக முக்கிய பணியாகும். திட்டத்தின் கடைசி ஆண்டில் ரூ. 35 கோடி மதிப்புடைய வேளாண்மை விளை பொருள் விற்பனைச் சங்கங்களால் விற்பனை செய்யப்படவும் திட்டமிடப்பட்டுள்ளது. 1971-72-ஆம் ஆண்டுக்காக, ரூ. 29 கோடி மதிப்புடைய வேளாண்மை விளை பொருள் விற்பனைத் திட்டம் உள்ளது. கூட்டுறவு விற்பனைச் சங்கங்களின் நடைமுறை மூலதனத்தைப் பெருக்குவதற்காக, 1971-72-ல் அச்சகங்களுக்குப் பங்கு மூலதன உதவித் தொகையாக ரூ. 10 லட்சம் ஒதுக்கீடு செய்யவும் திட்டமிடப்பட்டுள்ளது. வேளாண்மை விளை பொருள்கள், பயிரிடு பொருள்கள் ஆகியவற்றின் விற்பனைக்கு வசதி செய்யும் பொருட்டு, மோட்டார் லாரிகள் வாங்க, 1971-72-ல் விற்பனைச் சங்கங்களுக்குக் கடனாக ரூ. 2 லட்சம் ஒதுக்கீடு செய்யவும் திட்டமிடப்பட்டுள்ளது.

வேளாண்மை விளை பொருள்களை உடனடியாகக் கொள்முதல் செய்வதில் விற்பனைச் சங்கங்களை ஊக்குவிக்கும் பொருட்டு, 1971-72-லும் விற்பனைச் சங்கங்களின் விளை ஏற்றத் தாழ்வுச் சமனீட்டுச் சிறப்பு நிதிக்கு அரசு உதவித்தொகை அளிக்கும் திட்டத்தைத் தொடர்ந்து வைத்து வரவும் திட்டமிடப்பட்டுள்ளது.

விற்பனைச் சங்கங்களில் பணியாளர்களைத் தரம் பிரித்தல், சாதனங்களைத் தரம் பிரித்தல் ஆகியவற்றிலும், தமிழ் நாடு கூட்டுறவு விற்பனைக் கூட்டமைப்பு தனது தொழில் நுட்ப, தொழில்



வளர்ச்சி உட் குழுவுக்கும், பொதுப் பணி வகையிலும் பணியாளர்களை நியமிப்பதற்கான செலவுக்கும் தொடர்ந்து உதவித் தொகை அளிக்கப்படும்.

தமிழ் நாடு கூட்டுறவு விற்பனைக் கூட்டமைப்பும், தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனைக் கூட்டமைப்பும் 1971-72-ல் ஏறத்தாழ ரூ. 20 கோடி மதிப்புள்ள ரசாயன உரங்களைப் பங்கீடு செய்யும். இவை தங்களுக்கு வேண்டிய நிதி வசதியைத் திரட்டிக் கொள்ள இயலும் பொருட்டு, தேசிய கூட்டுறவுத் தொழில் வளர்ச்சிக் கழகத்தைச் சேர்ந்த மத்திய அரசு பொறுப்பேற்கும் நிதித்தின் கீழ் இவ்வாசு அவற்றின் பங்கு மூலதனத்திற்கு இருப்பு உதவிப்பணம் வழங்கி வருகிறது. கடந்த ஈராண்டுகளில் இதுவரை கொடுக்கப்பட்ட ரூ. 59 லட்சம் மட்டுமல்லாமல், 1971-72-ல் ரூ. 38.50 லட்சம் கொடுக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

நான்காவது திட்டத்தில், பல்வேறு செய்முறைத் தொழிற் சாலைகளை (Processing Units) நிறுவுவதற்குத் திட்டமிடப் பட்டுள்ளது. தேசியக் கூட்டுறவு வளர்ச்சிக் கழக உதவியுடன் கீழ்க்காணும் செய்முறைத் தொழிற்சாலைகளை 1971-72-ல் தொடங்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படும் :—

| தொடர் எண்ணும், பணித் திட்டமும். | மொத்தச் செலவு (ரூபாய் லட்சத்தில்.) |
|---|---|
| 1. தேர்க்கடலை எண்ணெய் செய்முறை ஆலை .. .. | 25·00 |
| 2. கரையத்தக்க எண்ணெய்த் தவிடு, பருத்தி விதை, கடலைப் புண்ணாக்கு இவற்றை எடுத்தல். | 17·00 |
| 3. தானியப் பொருள் தொழிற்சாலை .. .. .. | 20·00 |
| 4. முந்திரிச் செய்முறைத் தொழில் .. .. .. | 11·00 |
| 5. டிகாரி செய்முறை .. .. .. .. | 0·50 |
| மொத்தம் .. | 73·50 |

1971-72-ல் மேற்சொன்ன செய்முறைத் தொழிற்சாலைகளை ஏற்படுத்துவதை முன்னிட்டு ரூ. 20 லட்சம் வரை நிதியுதவியளிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

சூரியகாந்தி செடி பயிரிடுவது மிகவும் பரவலாகி வருவதாலும் ஹெக்டேருக்குக் கொடுக்கும் எண்ணெய், வேர்க்கடலையிலிருந்து எடுக்கும் எண்ணெயைக் காட்டிலும் இரு மடங்காக இருப்பதாலும், பொருத்தமான எண்ணெய் எடுக்கும் ஆலைகளை நிறுவவும் நிதி ஒதுக்கப்படும்.

விற்பனைச் சங்கங்கள் நிறுவும் அன்னாசி, முந்திரி செய்முறைத் தொழிற்சாலைகளைக் கட்டி முடிப்பதற்காக ரூ. 2.10 லட்சம் வரை 1971-72-ல் கடன் வழங்கப்படும். இத்தகைய செய்முறை ஆலைகளை நிறுவியுள்ள விற்பனைச் சங்கங்களுக்கு நிர்வாக உதவித்தொகையாக ரூ. 3.21 லட்சம் கொடுக்கப்படும்.

தேசிய கூட்டுறவுத் தொழில் வளர்ச்சிக் கழக உதவியுடன் 12 நவீன அரிசி ஆலைகள் ஏற்படுத்துவதற்காக, நவின அரிசி ஆலைகளின் மூலதனச் செலவில் விற்பனைச் சங்கங்களின் பங்கு மூலதனத்திற்கு அரசு ரூ. 135.73 லட்சம் தொகை வழங்கியுள்ளது. 1970-71-ல், கொள்முதல் பணிகளுக்கு இருப்பு உதவிப் பணமாக (Margin Money) இருக்கும் பொருட்டு நவீன அரிசி ஆலைகளுக்கு பங்கு மூலதனமாக ரூ. 23.01 லட்சம் உதவி செய்யப்பட்டுள்ளது.

விசையேற்றங்களை இயக்குவதற்கு வேண்டிய மின்சார வசதி யைச்செய்து கொடுப்பதைக் கருத்தில் கொண்டு, உமியை எரி பொருளாகக் கொண்டு மின் உற்பத்தி இயந்திரங்களை ஏற்படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது. ஒவ்வொரு பாசனச் சங்கமும் 200 முதல் 300 ஏக்கர் பரப்பளவுக்குப் பாசனவசதிக்கும் 3 இறவைப் பாசனச் சங்கங்களிலுள், இத்தகைய 3 இயந்திரங்கள் அமைக்கப்பட்டிருக் கின்றன. திருவாரூரில் உள்ள அரிசி ஆலையில் மின்சக்தி செய்வதற்கு எரிபொருளாக ஏற்கெனவே உமி பயன்படுத்தப்பட்டு வருகிறது.

பயன் துய்ப்போர் கூட்டுறவு.—தொடக்கநிலைக் கூட்டுறவுப் பண்டகசாலைகள் தங்கள் வர்த்தகத்தை மேம்படுத்துவதன் நிமித்த மாக, அவற்றிற்குப் பங்கு மூலதன உதவி, நிர்வாக உதவித் தொகை யளிக்கும் திட்டம், 1971-72-லும் தொடரும். பயன் துய்ப்போர் கூட்டுறவுகள் பயன் துய்ப்போர் தொழில்களை ஏற்படுத்துவதற்காக 1971-72-ல் ரூ. 9.26 லட்சம் வரை உதவி அளிக்கவும் திட்டமிடப்பட் டுள்ளது. சிறு சிறப்பங்காடிகள் எனப்படும் புதிய சில்லறைப் பண் டகசாலைகள் ஏற்படுத்துவதில் பயன் துய்ப்போர் கூட்டுறவுகளுக்கு அரசு உதவி செய்து வருகிறது. இதுவரை அரசு உதவி அளித் துள்ள 28 சிறு சிறப்பங்காடிகளைத் தவிர, ரூ. 9 லட்சம் வரை கடனுதவியும், பங்கு மூலதனமாகவும் அளிப்பதன் மூலம் 1971-72-ல் மேலும் சில சிறு சிறப்பங்காடிகளை நிறுவுவதற்கு உதவி செய்ய தென்றும் திட்டமிடப்பட்டுள்ளது.

பொது.— சமூக பொருளாதார முன்னேற்றத் திட்டங்களுள், கூட்டுறவுத் தொழிலாளர் ஒப்பந்தச் சங்கங்களின் பங்கு மூலதனம் நடைமுறை மூலதனச் சேமநிதி, தொழில் கருவிகள் வாங்குதல் ஆகியவை குறித்துக் கடன் வடிவில் தொடர்ந்து உதவி அளிப்பது பற்றிக் குறிப்பிடலாம். இதற்காக, 1971-72-ல் ரூபாய் 50,000 ஒதுக்கப்பட்டுள்ளது.

கூட்டுறவுக் கல்வி, பயிற்சிக்கான பணித் திட்டங்களைத் தொடர்ந்து செயற்படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது. கூட்டுறவுக் கொள்கைகள் பற்றிய பொருவாரியான மக்கள் அறிந்துகொள்ள விளம்பரம், பிரச்சாரப் பணிகள், கூட்டுற வு பற்றிய முக்கியமான கூறுபாடுகளில் பயிற்சி அளிக்கும்பணி ஆகியவை இதிலடங்கும்.

கூட்டுறவு பற்றிய குழுவின் பரிந்துரைகள் பரிசீலனையில் உள்ளன. அடங்கல் சட்டம் கொண்டுவருவதற்கான வரைவு மசோதா இயற்றும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது.



கூட்டுறவு நடவடிக்கைகளின் வளர்ச்சிக்கும் மேம்பாட்டுக்கும் வகை செய்ய, "கூட்டுறவு வளர்ச்சி நிதி" யை அமைத்திருப்பது முக்கியமான புதிய வளர்ச்சிப் பணியாகும். இதற்காக தமிழ்நாடு 1963-ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் விதிகளைச் சேர்ந்த 46-வது விதி பொருத்தமான வகையில் திருத்தப்பட்டுள்ளது. இந்த நிதிக்குத் தொகை வழங்க, ஒவ்வொரு கூட்டுறவுச் சங்கமும் அதன் நிகர ஆதாயத்தில் 5 சத வீதம் ஒதுக்கும் என்று எதிர்பார்க்கப் படுகிறது. இந்த நிதி தமிழ் நாடு கூட்டுறவு ஒன்றியத்தால் வைத்து வரப்பட்டு, ஒரு குழுவினால் நிர்வகிக்கப்படும். இக் குழுவில் அரசு அதிகாரிகளும், அரசுச் சார்பற்ற அலுவலர்களும் அங்கம் வகிப்பர்.

முடிவாக, விரைவான பொருளாதார வளர்ச்சி வேகம் குறை யாமல் தொடர்ந்து நீடிக்கும் வகையில் கூட்டுறவுக் கொள்கை நன்கு வகுக்கப் பட்டிருப்பதைக் காணலாம். கூட்டுறவுத் திட்டப் பணி களுக்கு அன செலவு. வாரி-செலவுத் திட்டத்தில் ஒதுக்கீடு பற்றிய புள்ளி விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

இதற்கு இது ஒரு சமுத்துக்காட்டாக அமையும்.

| கலைக்குகள். 1969–70. | திருத்த மதிப்பீடு. 1970–71. | திட்ட மதிப்பீடு 1971–72 |
|---|---|---|
| | (ரூபாய் லட்சத்தில்.) | |
| 263·19 | 344·58 | 599·66 |

பொதுத் துறைக்கும், தனியார் துறைக்கும் இடையே கூட்டுறவுத் துறை சமன்படுத்தும் சக்தியாக பசுமைப் புரட்சியிலும், மக்களது பொருளாதார முன்னேற்றத்திலும் தனது முழுப் பொறுப்பையும் செவ்வனே நிறைவேற்றி வருவதோடு, இனியும் அவ்வாறே தொடர்ந்து நிறைவேற்றி வரும்.

## POLICY NOTE ON CO-OPERATION.

The co-operative movement in the State has shown significant progress in the fields of credit, marketing, processing, consumer co-operatives and general activities. It is anticipated that the co-operative movement will show further progress and will carve for itself a place in the history of the future development of the State in the forthcoming years. The achievements in the Co-operative field during the past years with special reference to 1970–71 have been given in detail in the "Review" of progress made in co-operative development schemes during the year 1970–71". This policy note highlights the programmes and policies for the future, with special reference to the year 1971–72.

### *Credit.*

In keeping with the policy of institutionalising credit for agricultural development, the most significant progress in the agricultural credit programme is in the provision of long-term credit through the Primary Land Development Banks, where the

achievements have doubled and redoubled in the last few years. It is expected that the Primary Land Development Banks will supply by way of long-term credit, in the ordinary programme, Rs. 21 crores during the year 1971–72. Over 90 per cent of these long-term loans are intended to be utilised for purposes which will help to achieve increased food production, viz., sinking of wells, installation of pumpsets, deepening of existing wells, reclamation of lands, purchase of tractors, etc. It is hoped to provide about Rs. 103 crores by way of long-term loans under the ordinary programme during the entire Fourth Plan period. The State Government will continue to contribute during 1971–72 also to the debentures floated by the Tamil Nadu Co-operative State Land Development Bank. A provision of Rs. 200 lakhs has been made for such contribution during 1971–72.

An important feature of the long-term credit programme is the large number of special area development programmes assisted by the A.R.C. that have been undertaken in the State. These include schemes for minor and non-minor irrigation whose technical feasibility and economic viability have been studied and assessed. The A.R.C. assists by way of contributions to the special development debentures floated by the State Land Development Bank. The State Government and the A.R.C. subscribe to these debentures in the ratio of 1 :9 for M.I. schemes and 1 :3 for non-M.I. schemes. As against Rs. 3.29 crores of long-term loans under the special schemes issued during 1970–71, it is programmed to issue Rs. 8 crores during 1971–72. Of this, about Rs. 7 crores during 1971–72 is expected to be for M.I. schemes. As against 2,937 new wells, 1,176 deepening of wells and 1,657 pumpsets for 1970–71, the achievements in 1971–72 are expected to be about 7,800 new wells, 2,300 wells deepened and 9,800 pumpsets. The climatic achievement in such special schemes has been recently reached by the negotiations of the Development Credit Agreement for the State with the International Development Agency at Washington. The total target for minor irrigation under this programme is indicated to be 7,000 filter-points, 3,800 shallow tube wells, 700 medium tube-wells and 10,000 open dug wells. There are also non minor irrigation components, such as the provision of tractors and machinery. For this project, the World Bank's assistance will be to the tune of 35 million dollars which is equivalent to Rs. 26.25 crores. While this will flow to Government of India and through them to the A.R.C. the total refinance which this State may expect from the A.R.C. as the result of the project is expected to be of the order of Rs. 40 crores. This project is expected to commence during the co-operative year 1971–72.

The Land Development Banks continue to discharge their responsibilities and justify the confidence imposed in them, as is evident from their achievement and future programmes. In pursuance of the policy of the Government to bring the facilities of agricultural credit nearer to the farmers, 117 block level Primary Land Development Banks have been opened. In keeping with the



discussions with A.R.C. and Reserve Bank of India, it is proposed to open 134 branches of Primary Land Development Banks in unbanked blocks, as and when the anticipated future transactions require the opening of a branch. Eligibility criteria have been decided based on transactions of the Primary Land Development Banks and eligible Primary Land Development Banks which open branches will get subsidy of which the State Government component amounts to Rs. 6,000 in three years. A sum of Rs. 1.5 lakhs has been provided for this subsidy in 1971–72.

To enable small farmers also to avail of the flow of credit and to participate in the green revolution, they have been organised into lift irrigation co-operative societies. There were 1,899 lift irrigation co-operative societies organised from 1st April 1970 to 31st March 1971. These lift irrigation co-operative societies are proposed to be further activised during the forthcoming years. For this purpose a scheme of appointment of organisers has been approved. The question of establishing agro-service centres is also under consideration. An example of the way Government have the interest of small farmers and such small farmers' societies at heart can be seen from the fact that we insisted on the continuance of well subsidy for such small farmers' groups, though the World Bank were insistent on the removal of all subsidies, during the discussion at Washington. Ultimately the interests of the small farmers have been safeguarded and it has been agreed that well subsidy will be retained for small farmers.

The main-stay of the green revolution is the crop loan programme. During the year 1971–72 it is tentatively proposed to disburse Rs. 61.50 crores by way of short-term and medium-term loans.

All the villages in the State were covered by agricultural credit co-operatives by the end of the Second Plan. The programme is to have the membership of the credit co-operatives increased to 39 lakhs by the end of the Fourth Plan and to increase the provision of agricultural credit from year to year so as to issue Rs. 75 crores by way of short-term and medium-term credit in the last year of the Fourth Plan. It has also been programmed to raise the share capital of the credit Co-operatives from Rs. 21.31 crores to Rs. 30.45 crores over the Fourth Plan period. Their deposits are proposed to be increased from Rs. 37.61 crores to Rs. 51.69 crores by the end of the Fourth Plan

Under the Scheme of revitalisation of primary credit societies, it is proposed to assist 200 village credit societies (out of 2,000 programmed for the Fourth Plan period) with managerial subsidy during 1971–72. A sum of Rs. 1.80 lakhs has been provided for societies to be newly assisted for the purpose in 1971–72. Including spill over a total provision of Rs. 4.40 lakhs has been made in the Budget Estimate for 1971–72.

[29th July 1971

During the year 1971–72, it is proposed to sanction loan of Rs. 12,500 and subsidy of Rs. 12,500 to each of 40 primary agricultural credit societies for putting up a composite building of godown-*cum*-office-*cum*-service shed. A sum of Rs. 10 lakhs (Rs. 5 lakhs loan and Rs. 5 lakhs subsidy) has been provided for the purpose in the Budget Estimate 1971–72. In addition to the above 80 societies which were sanctioned only the loan portion to a total extent of Rs. 10 lakhs in 1970–71, will be given the subsidy portion of Rs. 10 lakhs under the scheme during 1971–72. The target for the Fourth Plan period is to provide godown-*cum*-office-*cum*-service sheds to 240 societies.

As a measure of encouraging the Central Co-operative Banks to open more branches in rural areas, the Government have been subsidising the Central Co-operative banks at the rate of Rs. 5,000 over a period of 3 years for each branch opened to enable them to meet the cost of establishment, etc., incurred in opening the branches. During 1971–72 it is proposed to open 50 more branches. A provision of Rs. 2.89 lakhs has been made in the year 1971–72 towards sanction of subsidy to the new branches and also for second and third year's subsidy to the branches already opened.

In order to ensure the flow of credit to the weaker sections also of the agricultural community, the Government have been contributing to the special bad debts reserves of the Primary credit societies and Central Co-operative Banks. During 1971–72 a sum of Rs. 5.33 lakhs has been provided for this scheme.

In order to reimburse unforeseen losses arising out of risky lendings it has been proposed to continue to contribute this year also to the Agricultural Credit (Relief and Guarantee) Fund. A sum of Rs. 12 lakhs has been provided for this scheme during 1971–72.

The Government have proposed to continue strengthening of the share capital structure of the various Co-operative Credit institutions by obtaining loans from the Long Term Operation Fund of the Reserve Bank of India. During 1971–72 a sum of Rs. 550 lakhs had been tentatively provided in the Budget for state investment in the share capial of the Tamil Nadu Co-operative State Land Development Bank, Primary Land Development Banks, Central Co-operative Banks and Primary Credit Societies.

*Marketing and processing.*

Marketing of agricultural produce is an important programme in the Fourth Five-Year Plan. In the last year of the plan, agricultural produce to the value of Rs. 35 crores is proposed to be marketed by the marketing societies. For the year 1971–72 the programme is for Rs. 29 crores. It is proposed to sanction share capital assistance of Rs. 10 lakhs to the Co-operative Marketing



29th July 1971]

Societies during 1971–72 to augment their working capital. In order to facilitate marketing of agricultural produce and agricultural inputs, it is proposed to sanction Rs. 2 lakhs as loans to the marketing societies in 1971–72, for purchase of motor lorries.

With a view to encouraging the marketing societies to undertake out-right purchase of agricultural produce, it is proposed to continue the scheme of Government contribution to the special price fluctuation fund of the marketing societies during the year 1971–72 also.

Subsidy towards the cost of grading staff and grading equipment in the marketing societies and towards the cost of staff appointed by the Tamil Nadu Co-operative Marketing Federation in its technical and promotional cell as well as the common cadre will also be continued.

The Tamil Nadu Co-operative Marketing Federation and the Thanjavur Marketing Federation would be distributing fertilisers to the value of about Rs. 20 crores during the year 1971–72. In order to enable them to raise the required credit, the Government have been contributing towards their share capital as margin money under the centrally sponsored scheme of the N.C.D.C. Besides Rs. 59 lakhs so far contributed during the last two years, it is proposed to contribute Rs. 38.50 lakhs during 1971–72.

During the Fourth Plan, it has been programmed to instal various processing units. For the establishment of the following processing units, with the assistance of the National Co-operative Development Corporation, steps will be taken during the year 1971–72 :

| *Serial number.* | *Scheme.* | *Total outlay.* (RUPEES IN LAKHS.) |
|---|---|---|
| 1. | Groundnut Oil Processing Industry .. | 25 |
| 2. | Solvent extraction of oil bran, cotton seed and groundnut cake. | 17 |
| 3. | Corn products industry .. .. .. | 20 |
| 4. | Cashew processing industry .. .. | 11 |
| 5. | Chicory processing .. .. .. .. | 0·50 |
| | Total .. | 73·50 |

It is proposed to sanction assistance to the extent of Rs. 20 lakhs towards the establishment of the above processing units in 1971–72.

As the cultivation of sun-flower is becoming popular and the yield of oil per hectare from this plant is double that of groundnut provision will be made to set up suitable oil-extraction units.

For the completion of Pine-apple and Cashew Processing Units set up by the marketing societies, loans to the extent of Rs. 2.10 lakhs will be granted in 1971–72. Managerial subsidy of Rs. 3.21 lakhs will be given to the marketing societies which have installed processing plants.

For the establishment of 12 Modern Rice Mills, with assistance from the N.C.D.C. the Government have contributed Rs. 135.73 lakhs to the share capital of the marketing societies towards the capital cost of the Modern Rice Mills. During the year 1970–71, the Modern Rice Mills were assisted with share capital of Rupees 23.01 lakhs to serve as margin money for their procurement operations.

With a view to supplement electrical energy available to farmers for operating pump sets it is proposed to set up power generating plants with paddy husk as fuel. On a pilot basis three such plants are proposed to be set up by three lift irrigation societies, each serving 200 to 300 acres. Husk is already being used as fuel to generate electricity in the rice mills at Tiruvarur.

*Consumer Co-operation.*

The scheme of share capital assistance and managerial subsidy to primary co-operative stores for strengthening their business will be continued in 1971–72 also. It is also proposed to give assistance to the extent of Rs. 9.26 lakhs during 1971–72 for the setting up of consumer industries by the consumer co-operatives. The Government have been assisting the consumer co-operatives in setting up modern retail units which are also known as Mini Super Markets. Besides the 28 Mini Super Markets for the establishment of which Government have extended assistance so far it is proposed to assist the setting up of a few more Mini Super Markets in 1971–72 by providing loan and share capital assistance to the tune of Rs. 9 lakhs.

*General.*

Among the schemes for socio-economic uplift mention may be made of the continuance of assistance to co-operative labour contract societies in the form of loans towards share capital, working capital, reserve fund and purchase of implements. A sum of Rs. 50,000 has been provided for this purpose during 1971–72.

The schemes for Co-operative Education and Training are also proposed to be continued. These comprise publicity and propaganda to bring about increased awareness of the co-operative principles and also impart training in all essential aspects of co-operation.

The recommendations of the Committee on Co-operation are under examination and the preparation of a draft bill for comprehensive legislation is being taken up.





An important new development is the constitution of a "Co-operative Development Fund" to facilitate development and promotion of co-operative activities. Rule 46 of the Madras Co-operative Societies Rules, 1963 has been suitably amended. Every co-operative society is expected to set apart 5 per cent of the net profits for contribuion to this fund. This fund will be maintained by the Tamil Nadu Co-operative Union and administered by a Committee which includes officials and non-officials.

In conclusion it may be seen that co-operative policy is well oriented towards maintenance of a rapid pace of development. An example of this is also available from the figures of actual expenditure and budgeted amounts for plan schemes for co-operation given below :

| Actuals 1969-70. | Revised Estimate. 1970-71. | Budget Estimate. 1971-72. |
|---|---|---|
| | (RUPEES IN LAKHS.) | |
| 263·19 | 344·58 | 599·66. |

As a balancing force between the public and private sectors the Co-operative sector is playing and will continue to play, its full role in the green revolution and in the economic uplift of the people.

[29th July 1971

## APPENDIX II.

[*Vide* item VI on page 48.]

(L.A. BILL NO. 32 OF 1971)

(As passed by the Assembly.)

*A Bill to provide for the appropriation of moneys out of the Consolidated Fund of the State for the service of the financial year commenced on the 1st April 1971.*

BE it enacted by the Legislature of the State of Tamil Nadu in the Twenty-second Year of the Republic of India as follows :—

1. *Short title.*—This Act may be called the Tamil Nadu Appropriation (No. 2) Act, 1971.

2. *Appropriation out of the Consolidated Fund for the financial year commenced on the 1st April 1971.*—The State Government may appropriate out of the Consolidated Fund of the State for the financial year commenced on the 1st April 1971, a sum not exceeding seven hundred and twenty-eight crores, ninety-nine lakhs, ninety-seven thousand and one hundred rupees, [which shall be inclusive of the sum of two hundred and twenty seven crores, sixteen lakhs, sixty-four thousand and four hundred rupees, specified in Section 2 of the Tamil Nadu Appropriation (Vote on Account) Act, 1971 (Tamil Nadu Act 5 of 1971)] being moneys required to meet—

(*a*) the grants made by the Tamil Nadu Legislative Assembly for that year, as set forth in column (3) of the Schedule; and

(*b*) the expenditure charged on the Consolidated Fund of the State for that year, as set forth in column (4) of the Schedule.

THE SCHEDULE.

(*See* sections 2 and 3.)

| Demand number. | Services and purpose. | Sums not exceeding. Voted by the Legislative Assembly. | Charged on the Consolidated Fund of the State. | Total. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | | Rs. | Rs. | Rs. |
| 1 | Land Revenue Department. | 2,79,37,700 | 200 | 2,79,37,900 |
| 2 | Motor Vehicles Acts—Administration. | 52,12,900 | .. | 52,12,900 |
| 3 | General Sales Tax and Other Taxes and Duties—Administration. | 2,64,42,200 | 7,500 | 2,64,49,700 |
| 4 | Stamps Administration. | 31,86,900 | .. | 31,86,900 |
| 5 | Registration Department. | 1,24,90,300 | 100 | 1,24,90,400 |
| | *Debt Charges.* | .. | 44,07,78,500 | 44,07,78,500 |



29th July 1971]

| Demand number. | Services and purposes. | Sums not exceeding. Voted by the Legislative Assembly. | Charged on the Consolidated Fund of the State. | Total. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | | Rs. | Rs. | Rs. |
| 6 | State Legislature .. | 29,32,700 | 62,400 | 29,95,100 |
| 7 | Elections .. .. | 36,70,200 | .. | 36,70,200 |
| 8 | Head of State, Ministers and Headquarters Staff. | 5,82,07,400 | 24,58,300 | 6,06,60,700 |
| 8A | Milk Supply Schemes .. | 4,07,86,800 | . | 4,07,86,800 |
| 9 | District Administration and Miscellaneous. | 18,37,72,200 | 40,600 | 18,38,12,800 |
| 9A | Administration of the Tamil Nadu Hindu Religious and Charitable Endoments Act, 1959. | 52,72,400 | 400 | 52,72,800 |
| 10 | Administration of Justice. | 3,06,35,600 | 45,42,400 | 3,51,78,000 |
| 11 | Jails .. .. .. | 2,55,48,900 | .. | 2,55,48,900 |
| 12 | Police .. .. .. | 18,91,04,300 | 300 | 18,91,04,600 |
| 13 | Education .. .. | 83,12,49,200 | .. | 83,12,49,200 |
| 14 | Medical .. .. .. | 21,04,70,800 | .. | 21,04,70,800 |
| 15 | Public Health .. .. | 18,12,07,600 | 100 | 18,12,07,700 |
| 16 | Agriculture .. .. | 18,87,83,100 | 2,800 | 18,87,85,900 |
| 17 | Fisheries .. .. .. | 2,35,15,700 | . | 2,35,15,700 |
| 18 | Animal Husbandry .. | 3,66,37,600 | 100 | 3,66,37,700 |
| 19 | Co-operation .. .. | 5,88,01,700 | .. | 5,88,01,700 |
| 20 | Industries .. .. | 4,39,88,300 | 100 | 4,39,88,400 |
| 21 | Cinchona .. .. .. | 59,37,700 | .. | 59,37,700 |
| 22 | Khadi .. .. .. | 33,50,400 | .. | 33,50,400 |
| 23 | Community Development Projects, etc. | 7,68,15,300 | .. | 7,68,15,300 |
| 24 | Labour including Factories. | 99,66,500 | 100 | 99,66,600 |
| 25 | Welfare of the Scheduled Tribes and Castes, etc. | 7,00,42,200 | 100 | 7,00,42,300 |
| 25A | Welfare of the Backward Classes, etc. | 4,41,84,100 | 100 | 4,41,84,200 |
| 26 | Irrigation .. .. | 10,96,10,900 | .. | 10,96,10,900 |
| 27 | Public Works—Works .. | 13,32,30,600 | 2,31,200 | 13,34,61,800 |
| 28 | Public Works—Establishment and Tools and Plant. | 5,68,49,600 | .. | 5,68,49,600 |
| 29 | Public Works—Grants-in-Aid. | 4,27,21,200 | .. | 4,27,21,200 |
| 30 | Road Transport Schemes. | 21,56,95,300 | 2,00,000 | 21,58,95,300 |
| 31 | Famine Relief .. .. | 16,48,400 | 50,00,000 | 66,48,400 |
| 32 | Pensions .. .. | 4,78,73,300 | 12,88,700 | 4,91,62,000 |
| 33 | Miscellaneous .. .. | 12,63,14,900 | 15,64,700 | 12,78,79,600 |
| 34 | Stationery and Printing.. | 4,45,27,100 | 48,100 | 4,45,75,200 |
| 35 | Forest Department .. | 2,20,90,900 | 300 | 2,20,91,200 |
| 36 | Other Miscellaneous Compensations and Assignments. | 7,76,26,500 | 22,53,300 | 7,98,79,800 |

| Demand number. | Services and purposes. | Sums not exceeding. Voted by the Legislative Assembly. | Charged in the Consolidated Fund of the State. | Total |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | | Rs. | Rs. | Rs. |
| 37 | Compensation to Zamindars. | 77,15,000 | .. | 77,15,00 |
| 38 | Capital Outlay on Public Health. | 26,52,000 | .. | 26,52,000 |
| 39 | Capital Outlay on Agriculture. | 21,55,100 | 100 | 21,55,200 |
| 40 | Capital Outlay on Industrial Development. | 15,82,73,900 | 300 | 15,82,74,200 |
| 41 | Capital Outlay on Irrigation. | 9,83,81,800 | .. | 9,83,81,800 |
| 42 | Capital Outlay on Public Works. | 11,92,93,600 | .. | 11,92,93,600 |
| 43 | Capital Outlay on Road Transport Schemes. | 3,52,21,000 | 100 | 3,52,21,100 |
| 44 | Capital Outlay on Forests. | 1,41,74,800 | .. | 1,41,74,800 |
| 45 | Commuted value of Pensions. | 9,05,000 | 1,10,100 | 10,15,000 |
| 46 | Capital Outlay on Schemes of Government Trading. | 20,96,29,000 | 100 | 20,96,29,100 |
| 47 | Loans and Advances by the State Government. | 43,10,01,500 | .. | 43,10,01,500 |
| | *Public Debt—Re-payment.* | | 2,52,41,69,000 | 2,52,41,69,000 |
| | Grand total .. | 4,30,72,42,100 | 2,98,27,55,000 | 7,28,99,97,100 |

**I certify that this is a Money Bill.**

K. A. MATHIALAGAN,
*Speaker, Tamil Nadu Legislative Assembly.*

FORT ST. GEORGE,
Madras-9,
28th July 1971.

# THE TAMIL NADU LEGISLATIVE COUNCIL.

**Friday, the 30th July 1971.**

The House met in the Council Chamber, Fort St. George, at four of the clock, MR. CHAIRMAN (THE HON. THIRU C. P CHITTARASU) in the Chair.

## I.—QUESTIONS AND ANSWERS.

### STARRED QUESTIONS

*Madurai Medical College.*

*255 Q.—THIRU M. RAJAH IYER (on behalf of Thiru D. SANTOSHAM) : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) the post-graduate courses now available in the Madurai Medical College;

(*b*) whether there is any proposal to start any Post-Graduate course in Psychological medicine;

(*c*) if so, the details and the stage thereof; and

(*d*) the reasons therefor?

மதுரை மருத்துவக் கல்லூரி

திரு. டி. சந்தோஷம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மதுரை மருத்துவக் கல்லூரியில் பட்ட மேற்படிப்பு வகுப்புகள் உள்ளனவா ?

(இ) உளவியல் மருத்துவப் படிப்பிற்கான பட்டமேற்படிப்பு வகுப்புகள் துவக்கும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

(உ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை ? அது எந்த நிலையில் உள்ளது ?

(எ) அதற்கான காரணங்களென்ன ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) மதுரை மருத்துவக் கல்லூரியில், கீழ்க்காணும் பட்ட மேற்படிப்புப் பாட முறைகள் நடத்தப்படுகின்றன : —

| பட்ட மேற்படிப்பு பட்டயப் பாடமுறைகள். | பட்ட மேற்படிப்புப் பாடமுறைகள். |
|---|---|
| மனப்பிறழ்வு மக்களின் நோய் இயல் துறைப் பட்டயம். | எம்.டி. (M.D) (பொது மருத்துவம்). எம்.டி. (M.D.) (பொது அறுவை மருத்துவம்). |

[30th July 1971

| பட்ட மேற்படிப்பு பட்டயம் பாடமுறைகள். | பட்ட மேற்படிப்புப் பாடமுறைகள். |
|---|---|
| சிசு நலத் தகுதிப் பட்டயம் (டிப்ளமா) | எம்.டி. (M.D.) (சிசு நோய் மருத்துவம). |
| கதிரவிச்சு மருத்துவத் தகுதிப் பட்டயம். | எம்.டி. (M.D.) (மகப்பேறு, மகளிர் நோய் இயல்). |
| | எம்.டி. (M.D.) (உடலமைப்பியல்). |
| காது, மூக்கு, தொண்டை நோய் இயல் தகுதிப் பட்டயம். | எம்.டி. (M.D.) (மருந்துப் பொருளியல்). |
| | எம்.டி. (M.D.) (மயக்க மருந்தியல்). |
| கண்நோய் மருத்துவத்தில் தகுதிப் பட்டயம். | எம்.டி. (M.D) (காது, மூக்கு, தொண்டை நோய் மருந்துவம்). |
| மயக்க மருந்து இயல் தகுதிப் பட்டயம். | எம்.டி. (M.D.) (கண்நோய் மருத்துவம்). |
| | எம்.எஸ். (M.S.) (உடற்கூற்று இயல்). |
| முடநீக்கு இயல் தகுதிப் பட்டயம். | பி.எச்.டி. (Ph.D.) (உடற்கூற்று இயல்). |
| | எம்.சி.எச். M.Ch.) (மூளை நம்பு அறுவை மருத்துவம்). |
| | எம்.சி.எச். (M.Ch.) (சிசு நோய் மருத்துவம்). |

(இ) ஆம்.

(உ) அடுத்த கல்வி ஆண்டிலிருந்து இப்பாட முறைகள் தொடங்க, மதுரைப் பல்கலைக் கழகம் தற்காலிக இணைப்பு வழங்கியுள்ளது.

(எ) மதுரை மருத்துவக் கல்லூரியின் உளநோய்த் துறையில், உளநூல் சார்ந்த மருத்துவத்தில் மேற்படிப்புப் பட்டய வகுப்பு தொடங்க எல்லா சாதனங்களும் இருக்கின்றன. இவ்வகை மருத்துவம் கற்பிப்பதற்கு அங்கு போதுமான மருத்துவச் சாதனங்கள் உள்ளன.

*Thanjavur Medical College*

* 256 Q.—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(a) the names of the departments of the Thanjavur Medical College which are being manned by paid Professors; and

(b) the number of years the present incumbents are in office?

தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரியில் எந்தெந்தத் துறைகளுக்காக சம்பளம் பெறும் பேராசிரியர்கள் உள்ளனர்?

(இ) தற்போது பதவியிலுள்ளவர்கள் எத்தனை ஆண்டுகளாகப் பணியாற்றி வருகின்றனர்?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) & (இ) விவர அறிக்கை@ ஒன்று சட்டமன்ற மேலவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

@ Printed as Appendix I on pages 1023-1025.



30th July 1971]

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, இரண்டு மூன்று நாட்களுக்கு முன்பு தஞ்சை மருத்துவக் கல்லூரிபற்றி நான் கேள்வி கேட்டபோது, ஜெனரல் சைடில் இருக்கிறவர்கள் மூன்றாண்டுகளுக்கு ஒரு முறை மாற்றப்படுவது அரசால் ஒப்புக் கொள்ளப்பட்ட விதி என்று அமைச்சர் தெரிவித்தார்கள். இந்தக் கல்லூரியில் ஏழெட்டு ஆண்டுகளாகச் சிலர் மாற்றப்படாமல் இருப்பதற்குக் காரணம் என்ன?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, "ஜெனரல் சைடு" என்று சொல்கிறபோது, எந்தவிதமான தனிச் சிறப்புக்கும் உரிமை இல்லாதவர்கள் என்ற பொருளில் சொன்னேன். "ஜெனரல் சைடு" என்றால் "ஜெனரல் சர்ஜரி" மட்டும் என்று எடுத்துக்கொள்வது பொருத்தமாகாது. மருத்துவக் கல்வித் துறையைப் பொறுத்தவரையில், ஜெனரல் சர்ஜரி சிறப்பு பொருந்தியதாகும். போஸ்ட் கிராஜுவேட் கல்லூரியாக இருக்கிற சென்னை பொது மருத்துவக் கல்லூரி, ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி, மதுரை மருத்துவக் கல்லூரி மூன்றிலும் நீண்ட காலம் பயிற்சி பெற்ற பேராசிரியர்கள் அங்கேயே இருந்து வேறிடங்களுக்கு மாற்றுவதற்கு அவசியமில்லாத வகையில் பணியாற்ற வேண்டியிருப்பதால் அதையொட்டியிருக்கிற மருத்துவக் கல்வித் துறையில் இயல்பாகவே நீண்டகாலப் பயிற்சியுள்ளவர்கள் நீடிக்கப்பட வேண்டியிருக்கிறது. மூன்றாண்டுகளுக்கு ஒருமுறை சாதாரணமான மருத்துவர்களை மாற்றலாம் என்பதுதான் கொள்கையே தவிர, மாற்ற வேண்டுமென்ற கட்டாயம் இல்லை.

திரு. ஜி. சுவாமிநாதன் : சில மருத்துவர்கள் மூன்று ஆண்டுகள், நான்காண்டுகளுக்கு ஒருமுறை மாற்றப்பட்டு, சிலபேர் அது மாதிரி இல்லாமல் ஆறு, ஏழு ஆண்டுகள் ஒரேயிடத்தில் இருக்கிற காரணத்தால், பலருக்கு வருத்தம் இயற்கையாகவே ஏற்படுகிறது என்பதையும் அரசு அறியுமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : வருத்தம் ஏற்படுகிறது என்பது நன்றாகத் தெரியும். சிலருக்கு மகிழ்ச்சி ஏற்படுகிறது. அந்த மகிழ்ச்சியையும் வருத்தத்தையும் சம எடைப்படுத்தி எடுத்துக்கொள்ளலாம். அந்த அவசியம் அரசிற்கில்லை.

திரு. சி. வி. ராஜகோபால் : தலைவரவர்களே, இப்படிப்பட்ட திறமை வாய்ந்தவர்கள் தங்கள் ஆஸ்பத்திரியில் இல்லையே என்று காஞ்சியில் உள்ள ஒன்றரை லட்சம் பேர் வருத்தப்படுகிறார்கள். அதைத் தீர்க்க அரசு முயற்சி எடுக்குமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : காஞ்சிபுரத்தில் உள்ள ஒன்றரை லட்சம் மக்களையும் நண்பர் திரு. ராஜகோபால் தெரிந்து கொண்டு வர இன்னும் பதினைந்து ஆண்டுகளாகும்.

*Medical Graduates*

* 257 Q.—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(a) the number of Medical Graduates and Post-Graduates whose applications for appointment are pending as on date with the Director of Health Services and Family Planning for want of vacancy; and

(b) the number of such applications pending for more than a year?

மருத்துவப் பட்டதாரிகள்

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) நாளது தேதி வரை மருத்துவப் பட்டதாரிகள், பட்ட மேற்படிப்புப் பட்டதாரிகள் எத்தனை பேர்களது விண்ணப்பங்கள் மருத்துவப் பணிகள் குடும்ப நலத் திட்ட இயக்குநரிடம் பதவிகள் காலியாக இராமையால் முடிவு பெறுமல் உள்ளன ?

(இ) ஓராண்டுக்கு மேலாக முடிவு பெறுமல் உள்ள விண்ணப்பங்கள் எத்தனை ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) 324.

(இ) 7.

*Municipal Dispensaries*

* 258 Q.—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(a) whether there is any proposal with the Government to take over the Municipal Dispensaries;

(b) if so, the reasons therefor;

(c) the number of such dispensaries in the State; and

(d) the expenditure likely to be incurred by this Scheme ?

நகராட்சி மருந்தகங்கள்

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) நகராட்சி மருந்தகங்களை அரசு மேற்கொள்ளும் செயற் குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

(இ) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவை ?

(உ) இம்மாநிலத்திலுள்ள அத்தகைய மருந்தகங்களின் எண்ணிக்கை யாது ?

(எ) இத்திட்டத்தால் ஏற்படக்கூடிய செலவு எவ்வளவு ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) ஆம்.

(இ) மருந்தகங்களை நடத்த நகராட்சியிடம் போதிய நிதி வசதி இல்லாதபோது நவீன சாதனங்களை உபயோகித்து தேவைக் கேற்ப மக்களுக்கு நல்லமுறையில் மருத்துவ உதவியை வழங்குவதற்காக நிதி வசதி இல்லாதபோதும் ;

(உ) நான்கு நகராட்சி மருந்தகங்கள்—நகராட்சி மருந்தகம், மணப்பாரை ; நகராட்சி மருந்துவமனை, வாணியம்பாடி ; நகராட்சி மருந்தகம், ஆற்காடு ; நகராட்சி மருந்தகம், கடலூர் ஒ.டி.

(எ) மொத்தமாக ஆண்டொன்றுக்கு மீளும் தொகை ரூ. 3,26,700-யும், மீளாத்தொகை ரூ. 17,000-யும் செலவாகும்.



30th July 1971]

*Srirangam Municipality*

* 259 Q.—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(a) whether it is a fact that there is no Health Officer during the last three years for the Srirangam Municipality ;

(b) if so, the reason therefor; and

(c) whether anybody has been posted by now?

திருவரங்கம் நகராட்சி

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) திருவரங்கம் நகராட்சிக்குக் கடந்த மூன்று ஆண்டுகளாக சுகாதார அதிகாரி எவரும் இல்லையென்பது உண்மையா?

(இ) ஆமெனில், ஒருவரை நியமிப்பதில் ஏற்பட்ட நீண்ட கால தாமதத்திற்குக் காரணம் என்ன?

(உ) தற்பொழுது யாரேனும் நியமிக்கப்பட்டுள்ளாரா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) ஆம்.

(இ) & (உ) தமிழ்நாடு மக்கள் நல்வாழ்வுப் பணியில் மக்கள் நல்வாழ்வு அலுவலர்கள் மிக்க குறைவாக உள்ளனர். மேலும் திருவரங்கம் நகரசபைக்கு மக்கள் நல்வாழ்வு அலுவலர்களாக மும்முறை தற்காலிகமாக நியமிக்கப்பட்டவர்கள் வேலையில் சேரவில்லை.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, இப்படி ஆண்டுக் கணக்காக சுகாதார அதிகாரிகள் நியமிக்கப்படாமலிருப்பதால், அந்த நகராட்சியில் வேலை சரிவர நடைபெறுவதில்லை என்று அங்கத்தினர்கள் புகார் செய்வது மட்டுமல்லாமல், மக்களுக்கும் கஷ்டம் ஏற்படுகிறது என்பதை மனதில் கொண்டு சுகாதார அதிகாரிகள் குறைவாக இருந்தால், அதிக அதிகாரிகளை நியமித்தேனும் இதுபோன்று ஆண்டுக்கணக்காக அதிகாரிகள் இல்லாத நிலைமையைத் தவிர்க்க அரசு ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, கடந்த மூன்று ஆண்டுகளாகவே திருவரங்கம் நகராட்சியில் பணியாற்றுவதற்கு என்று இப்படிப்பட்ட சுகாதாரத் துறையில் ஈடுபாடுடைய மருத்துவர்களாகப் பார்த்து நியமிக்க முன்வந்தும் மூன்று முறை நியமிக்கப்பட்டவர்கள் வந்து சேராத காரணத்தால் பின்னரும் நடவடிக்கை எடுத்து 3, 4 மாதங்கள் கடந்திருக்கின்றன. பொதுவாகவே கடந்த முறையில் மருத்துவத் துறையில் பட்டம் பெற்றவர்கள் தமிழ்நாடு பொதுப் பணிக் குழுவினரால் தேர்ந்தெடுக்கப்படும்போது, அவர்கள் பொதுச் சுகாதாரத் துறையில் ஹெல்த், பப்ளிக் ஹெல்த் சைடுகளில் பணியாற்ற இசைவு தெரிவிக்கக் கேட்டு பலர் அப்படித் தெரிவித்திருக்கிறார்கள். அவர்களை இத்துறைக்கு வைக்கலாம் என்று அரசாங்கம் எண்ணிக் கொண்டிருக்கிறது. அதற்கான வழிவகைகளைப் பெற்று இத்துறையில் வேலைக்குச் சேராத நெருக்கடியைத் தவிர்க்கலாம் என்று இப்போது ஆலோசிக்கப்பட்டு வருகிறது.

### *All India Veterinary Association*

* 261 Q.—THIRU V. THANGAPANDIAN: Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(a) whether any representation has been sent by the All India Veterinary Association to the Government in July 1970 for allotment of land to construct a building for the society in Madras City; and

(b) if so, the action taken by the Government thereon?

### அகில இந்திய கால்நடை மருத்துவ சங்கம்

திரு. வி. தங்கபாண்டியன்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) அகில இந்திய கால்நடை மருத்துவ சங்கம், தனது சங்கக் கட்டிடத்தை சென்னை நகரில் கட்டுவதற்கு இடம் கேட்டு அரசாங்கத்திற்கு ஜூலை 1970-ஆம் ஆண்டில் வேண்டுகோள் அனுப்பியுள்ளதா?

(இ) ஆம் எனில், அதன்மீது அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) & (இ) ஜூலை 1970-ல் இது பற்றி வேண்டுகோள் வரவில்லை. ஆனால் ஏற்கனவே இந்திய கால்நடை மருத்துவ சங்கத் தலைவரிடமிருந்து மயிலாப்பூரிலுள்ள ஆர். எஸ். 3871/2-வில் சிறு இடம் கேட்டு ஓர் கோரிக்கை வந்துள்ளது. இக் கோரிக்கை பரிசீலனையில் இருக்கிறது.

திரு. வி. தங்கபாண்டியன்: தலைவர் அவர்களே, ஒரு அகில இந்திய கால்நடை சங்கமே தமிழ் நாட்டிலுள்ள சென்னையில் அதனுடைய கட்டிடத்தைக் கட்டுவதற்கு விரும்பி வருகிற பொழுது, நம்முடைய அரசாங்கம் அதை அனுதாபத்துடன் கவனிக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: அகில இந்திய சங்கம் முன் வந்தாலும் கூட, இடம் இருக்கவேண்டுமே அதற்கு? இட நெருக்கடியைப் பொறுத்துத்தான் முடிவு செய்ய வேண்டும்.

### *Kodaikanal*

* 264. Q.—THIRU G. SWAMINATHAN: Will the Hon. the Minister for Backward Classes be pleased to state:

(a) whether the State Government have requested the Government of India to include Kodaikanal as place of Tourism; and

(b) if so, the stage at which the matter stands as present?

### கோடைக்கானல்

திரு. ஜி. சுவாமிநாதன்: மாண்புமிகு பிற்பட்ட வகுப்பினர் நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கோடைக்கானல் சிறுலா இடமாகச் சேர்க்கப்பட வேண்டுமென்று இம்மாநில அரசு இந்திய அரசைக் கேட்டுக் கொண்டுள்ளதா?

(இ) ஆமெனில், அது தற்போது எந்நிலையில் உள்ளது?



மாண்புமிகு திரு. க. ராசாராம்: (அ) இந்திய அரசு முன்னமேயே கோடைக்கானலை ஒரு சுற்றுலா சிறப்புள்ள இடமாகவும், ஒரு மலைவாசஸ்தலமாகவும், அவர்களுடைய வழிகாட்டி நூல்களிலும் தகவல் வெளியீடுகளிலும் சேர்த்திருக்கிறார்கள்.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

THIRU G. SWAMINATHAN: May I know, Sir, whether there is any proposal to improve Kodaikanal as a tourist resort?

THE HON. THIRU K. RAJARAM: Mr. Chairman, Sir, it is already a tourist resort. The Government have also sanctioned a children's boat club, provision of bath room, cement benches and de-silting of Kodaikanal lake, and a sum of Rs. 21,940 has been sanctioned for provision of lights around the lake to attract tourists.

THIRU A. R. DAMODARAN: May I know whether there is any proposal to have house-boats in the Kodaikanal Lake?

THE HON. THIRU K. RAJARAM: Now, there is no such proposal. Only at Ooty, we are thinking of developing some house-boats in the lake.

திரு. எஸ். ஜெயராம செட்டியார்: தலைவர் அவர்களே, தற்போது அதிகமான வாடகை கொடுத்து ஓட்டல்களில் தங்க வசதி உள்ளவர்கள்தான் போய்த் தங்க முடிகிறது. ஆகையால் பள்ளி போகிற சாதாரண மக்கள் தங்குவதற்கு வசதியாக இரண்டு மூன்று நாட்கள் இருப்பதற்காக கோடைக்கானலில் வசதி செய்து தரப்படுமா?

மாண்புமிகு திரு. க. ராசாராம்: தலைவர் அவர்களே, கோடைக்கானலில் இப்போது ஒரு சுற்றுலா விடுதி கட்டுவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்றுவருகின்றன. சர்க்கார் ஏற்கனவே ஒரு லட்சம் ஒதுக்கியிருக்கிறது. ஏறக்குறைய 50 பேர்கள்—சாதாரண மக்கள், பள்ளி வருகிறவர்கள் அதில் தங்குவதற்கு இட வசதி செய்து கொடுப்பதற்கான திட்டங்களை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் செய்துகொண்டிருக்கிறார்கள்.

THIRU A. R. DAMODARAN: Sir, may I bring to the attention of the Government that allowing of house-boats in small lakes is likely to cause a terrible sanitation and drainage problem and may I, therefore, request the Government to let me know whether it will not be hopelessly insanitary to allow such house-boats in such lakes?

மாண்புமிகு திரு. க. ராசாராம்: தலைவர் அவர்களே, காஷ்மீரத்தைப்போல படகு வீடுகளை இங்கே வைத்தால் சுகாதாரத் தொல்லைகள் தோன்றும் என்பதை அரசு அறிந்திருக்கிறது.

[திரு. க. ராசாராம்] [30th July 1971

ஆகையால்தான் இங்கே அதிகமான படகு வீடுகளைக் கட்டாமல் தொடலாக மட்டும் இரண்டொரு வீடுகளை ஊட்டியில் கட்டலாமா என்று யோசித்து வருகிறது.

திரு. எம். ராஜா அய்யர்: தலைவர் அவர்களே, நமது மாநிலத்தில் எந்தெந்த ஊர்கள் இந்த மாதிரி டூரிஸ்ட் சென்டர் என்று அங்கீகரிக்கப்பட்டிருக்கின்றன? கோடைக்கானல் தவிர வேறு எந்த இடங்கள் "Places of Tourist importance" என்று மத்திய அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கின்றன?

மாண்புமிகு திரு. க. ராசாராம்: தலைவர் அவர்களே, தனிக் கேள்விதான் போட வேண்டும். பெரிய பட்டியலே இருக்கிறது. ஆனால் மலைவாசஸ்தலத்தைப் பொறுத்த வரையில் ஊட்டி, கோடைக்கானல் இரண்டும், அத்துடன் மத்திய அரசால் அங்கீகரிக்கப்படாத இடமாக உள்ள வாசஸ்தலம் ஏற்காடு என்றும் சொல்லலாம்.

### *Sale of trees by action.*

*267. Q.—THIRU V. ISVARMURTI (on behalf of THIRU T. K. SUBBIAH): Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state:

(a) the quantity of timber from felled trees auctioned by the executive officer of Sri Kailasanathaswami Devasthanam, Thirumanur, Tiruchirappalli district, during June, July and August 1970;

(b) the amount realised therefrom; and

(c) to whom the trees belonged?

மரங்கள் ஏலத்தில் விற்பனை.

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி (திரு. டி. கே. சுப்பையா சார்பில்): மாண்புமிகு அறநிலைய அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) திருச்சி மாவட்டம், திருமானூர் ஸ்ரீகைலாச நாதசுவாமி தேவஸ்தான நிர்வாக அலுவலர் (Executive Officer) அவர்கள் 1970 ஜூன், ஜூலை ஆகஸ்டு மாதங்களில் எவ்வளவு மரங்களை வெட்டி ஏலம் விட்டார்கள்?

(இ) இதன் மூலமாகக் கிடைத்த தொகை எவ்வளவு?

(உ) மரங்கள் யாருக்குச் சொந்தமானது?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: (அ) நிர்வாக அதிகாரி 1970 ஜூன், ஜூலை, ஆகஸ்டு மாதங்களில் மரங்களை லாட் ஒன்று ஒரு கைவண்டி சுமையுள்ளபடி 40 லாட்டுகளாக பிரித்து ஏலத்தில் விற்பனை செய்துள்ளார்.

(இ) ஆலயத்திற்கு ரூ. 963 வருமானமாக வந்துள்ளது.

(உ) மரங்கள் தேவஸ்தானத்திற்கு சொந்தமானது.



30th July 1971]

### *Trustees*

*268 Q.—THIRU V. ISVARMURTI (on behalf of THIRU T. K. SUBBIAH): Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state:

(a) the names of the trustees appointed for the Choultry (the place in which the College of Tamil Music is functioning) in Thiruvaiyaru, Thanjavur district;

(b) the property attached to the Choultry; and

(c) the works undertaken by them utilising this property?

தர்மகர்த்தாக்கள்

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி (திரு. டி. கே. சுப்பையா சார்பில்): மாண்புமிகு அறநிலைய அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தஞ்சை மாவட்டம், திருவையாறு நகரத்திலுள்ள சத்திரத்திற்கு (தமிழ்க் கல்லூரி இசைக் கல்லூரி நடக்குமிடம்) தர்மகர்த்தாக்கள் (Trustees) யார்?

(இ) அதற்குரிய சொத்துக்கள் என்ன?

(உ) அந்த சொத்தின் வருவாயைக் கொண்டு என்ன பணிகள் செய்கின்றனர்?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: (அ) கல்யாணமால் சாத்திரம் என்று அழைக்கப்படும் திருவையாற்றிலுள்ள சத்திரத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ளது. தஞ்சாவூர் சத்திரத் துறையை நிர்வகிக்கும் தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியாளரே திருவையாறு சத்திரத்தையும் நிர்வகிக்கிறார்.

(இ) & (உ) திருவையாற்றிலுள்ள கல்யாணமால் சாத்திரத்திற்குச் சொந்தமாகவுள்ள சுமார் 123.64 ஏக்கர் நிலம் திருவையாறு பெரும்புலியூர், பெரமூர், சிறுபுலியூர் திங்களூர், உப்புக் காச்சிப் பேட்டை, கல்யாண புரம் முதல் சேத்தி ஆகிய கிராமங்களில் உள்ளது. இந்தச் சொத்துக்களிலிருந்து கிடைக்கும் ஆண்டு வருமானம் சுமார் ரூ. 36,000 ஆகும். ஆனால் கல்யாணமால் சத்திரத்தைப் பேணுவதற்கு ரூ. 1,18,923 செலவிடப்படுகிறது. இந்தத் தொகை சிறுவர் சிறுமியர் உணவு விடுதிகளை நடத்துவதற்கும், கல்யாணமால் சத்திரம் குறித்த பணியாளர் செலவிற்கும் செலவிடப்படுகிறது. கூடுதல் செலவு தஞ்சாவூர் சத்திரம் பொது வருவாயிலிருந்து செய்யப்படுகிறது.

திரு. ஜி. சுவாமிநாதன்: தலைவர் அவர்களே, இந்தச் சத்திரத்தினுடைய வருவாயிலிருந்து நடத்தப்படுவதாகச் சொல்லப்படுகிற தமிழ்க் கல்லூரியின் மாணவர்களுக்கான உணவு விடுதியில்

[திரு. ஜி. சுவாநாதன்] [30th July 1971

மாணவர்கள் ஒவ்வொரு ஆண்டிலும் குறைத்துச் சேர்க்கப்படுவதாகச் சொல்கிறார்கள். இது உண்மையா? அதனுடைய வருமானம் ஆண்டுக்கு ஆண்டு குறைந்துகொண்டே வருவதாகவும் சொல்கிறார்கள். அது அரசிற்குத் தெரியுமா? அதைச் சீர் செய்வதற்கான ஏற்பாடுகளை அரசு செய்யுமா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவர் அவர்களே, தற்போதுள்ள விவரப்படி, தமிழ்க் கல்லூரியில் 315 மாணவர்கள், சமஸ்கிருத கல்லூரியில் 18 மாணவர்கள் பயின்று வருகிறார்கள், எட்டு ஆசிரியர்கள் இருக்கிறார்கள். இதற்குச் செலவிடப்படுகிற தொகை ரூ. 42,014. வருமானம் குறைந்துவருவதாகச் சொன்னார்கள். அதனுடைய விவரக் குறிப்பு என்னிடம் இல்லை. தனிக் கேள்வி போட்டால் சொல்ல முடியும்.

### *Contributory Provident Fund Scheme*

*269. Q.—THIRU A. R. DAMODARAN (on behalf of THAVATHIRU DEIVASIGAMANI ARUNACHALA DESIKAR—Kunrakkudi Adigalar): Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state whether the Contributory Provident Fund Scheme is in force for all permanent employees of temples?

### பிற்கால சேமிப்பு ஈட்டு வைப்புத் தொகை திட்டம்

திரு. ஏ. ஆர். தாமோதரன் (தவத்திரு தெய்வசிகாமணி அருணாசல தேசிகர், தவத்திரு குன்றக்குடிகளார் சார்பில்): மாண்புமிகு அறநிலைய அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

திருக்கோயில்களில் எல்லா நிரந்தர சிப்பந்திகளுக்குப் பிற்கால சேமிப்பு ஈட்டு வைப்புத் தொகை திட்டம் (Contributory Provident Fund) அமுலில் இருக்கிறதா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: ஆண்டு வருமானம் ரூ. 1 லட்சத்திற்கும் அதிகமாகவுள்ள கோயில்களில் பணிபுரியும் பரம் பரையல்லாத அதிகாரிகள், ஊழியர்கள் ஆகியோரின் நலனுக்காக உதவித் தொகை வருங்கால வைப்பு நிதித் திட்டம் ஒன்றைக் கொண்டுவருவதற்கு தமிழ் நாடு 1959-ஆம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் சட்டத்தின் கீழ் செய்யப்பட்ட விதிகள் வகை செய்கின்றன. தற்காலிக ஊழியராயினும் நிலையான ஊழியராயினும், அவர்களில் எவ்வகையினருக்கு இத் திட்டத்தின் கீழ் தன்மை அளிக்க வேண்டுமென்பதை இவ்விதிகளிலேயே குறிப்பிட்டுக் கூற வேண்டும். சில கோயில்களில் இத்திட்டம் செயலில் உள்ளது.



30th July 1971]

### *Surplus fund of temples.*

*270 Q.—THIRU A. R. DAMODARAN (on behalf of THAVATHIRU DEIVASIGAMANI ARUNACHALA DESIKAR—Kunrakkudi Adigalar): Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state:

(a) the amount transferred from the surplus fund of temples for Community Works in the financial years of 1967-68, 1968-69 and 1969-70; and

(b) the class of works for which they have been transferred?

### தேவாலயங்களின் உபரி நிதி

திரு. ஏ. ஆர். தாமோதரன் (தவத்திரு தெய்வசிகாமணி அருணாசல தேசிகர், தவத்திரு குன்றக்குடி அடிகளார் சார்பில்): மாண்புமிகு அறநிலைய அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1967-68, 1968-69, 1969-70-ம் நிதி ஆண்டுகளில் தேவாலயங்களின் உபரி நிதியிலிருந்து சமுதாயப் பணிக்கென மாற்றப் பட்டுள்ள நிதி எவ்வளவு?

(இ) இதனை எந்தெந்த வகைப் பணிக்காக மாற்றப்பட்டிருக்கிறது?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்:

பகுதி (அ)

| நாட்குறிப்பு ஆண்டு. | தேவாலயங்களின் உபரி நிதியிலிருந்து சமுதாயப் பணிக்கென மாற்றப்பட்ட நிதி. |
|---|---|
| | ரூ. |
| 1967 | 6,66,064·88 |
| 1968 | 12,31,301·79 |
| 1969 | 7,66,040·00 |
| 1970 | 30,51,503·82 |

பகுதி (இ)

| நாட்குறிப்பு ஆண்டு. | கல்வி. | மருத்துவசாலை. | அனைத்தும் நிறுவி காப்பகம். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1967 | 5,61,551·80 | .. | 1,04,512·28 |
| 1968 | 12,13,301·79 | .. | 18,000·00 |
| 1969 | 7,39,200·00 | 6,500·00 | 20,340·00 |
| 1970 | 28,39,635·35 | 1,02,000·00 | 1,09,868·47 |

திரு. கே. ராஜாராம்: தலைவர் அவர்களே, கல்விக்காக என்று வருடா வருடம் நிதி ஒதுக்கிச் செலவழிக்கப்பட்டிருக்கிறது. அதே மாதிரி தனியே காப்பகத்திற்கும் செலவழிக்கப்பட்டிருக்கிறது.

[திரு. கே. ராசாராம்] [30th July 1971

எந்தெந்த ஊர்களில் இந்தத் தொகை செலவழிக்கப்பட்டிருக்கிறது? மானியமாகக் கொடுக்கப்பட்டிருக்கிறதா? அரசாங்கத்திற்குக் கொடுத்து அரசாங்கம் மூலமாகப் பணம் விரயமாகாமல் செலவழிக்கப்பட்டிருக்கிறதா? எந்த ஸ்தாபனத்தின் மூலமாகச் செலவழிக்கப்பட்டிருக்கிறது?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவர் அவர்களே, முழு விவரக்குறிப்பும் சொல்ல வேண்டுமென்றால், சுமார் 150-க்கு மேற்பட்ட நிறுவனங்கள் இருக்கின்றன. தனியாகப் பட்டியல் தயாரித்து வைக்க வேண்டும். கோயில் உபரி நிதியிலிருந்து எந்தெந்தக் கல்வி ஸ்தாபனங்கள் வேண்டுமென்று கேட்கிறார்களோ, அவர்களுக்கு இருக்கிற உபரி நிதியின் நிலையை அனுசரித்து, ஆணையாளரின் அனுமதியோடு கல்வி ஸ்தாபனமாக இருந்தாலும், வேறு அறநிலையங்களாக இருந்தாலும், அவைகளுக்கு ஒதுக்கப்படும்.

திரு. ஜி. சுவாமிநாதன்: தலைவர் அவர்களே, இந்த சமயப் பணிகளுக்காகச் செய்யப்படுகிற ஒதுக்கீடுகள் பல லட்சக் கணக்கான ரூபாய் அளவில் வளர்ந்துகொண்டே வருகின்றன என்பதைப் பார்க்கும்போது, இந்த உபரி நிதியை எந்த அடிப்படையில் வழங்குகிறார்கள் என்பதையும் பல கோயில்கள் பழுதுபட்ட நிலைமையில், செலவிட முடியாத நிலையில் இருக்கும்போது, அவற்றைக் கவனிக்கவேண்டி ஒரு அளவுக்கு மேல் உபரி நிதியை சமுதாயப் பணிக்கு வழங்கக் கூடாது என்ற செயல் முறையை அரசு கொண்டு வருமா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: கோயில் திருப்பணிகளுக்கு ஆண்டுதோறும் ஏராளமான அளவில் உபரிநிதியிலிருந்து செலவழிக்கிறார்கள். குறிப்பாக பொதுக் காரியங்களுக்கு ஒதுக்குகிற நிதியில், முதலாவது நிதியில்லாத கோயில்களுக்கு நிதி வருவாய் உள்ள கோயில்களிலிருந்து அளிப்பது, அடுத்தபடியாக கல்வி ஸ்தாபனங்களாக இருந்தாலும், மருத்துவ வசதிக்காக என்றாலும், அன்னதானம் காப்பகமாக இருந்தாலும், முறையாகச் செலவு செய்கிறோம். சென்ற இரண்டு மூன்று ஆண்டுகளுக்கு முன்னால் இருந்ததை விட திருப்பணிகளுக்கு இப்போது அதிகமாக உபரிநிதியைச் செலவழிக்கிறோம். அதுபற்றிய விவரக் குறிப்பு என்னிடம் தற்போதில்லை.

திரு. சி. வி. ராஜகோபால்: தலைவர் அவர்களே, எங்கள் ஊர் பக்கத்தில் புண்ணியகோடீஸ்வரர் கோயில் என்று ஒன்று இருக்கிறது. இங்கே முதலமைச்சராக இருந்த மாண்புமிகு போறிஞர் அண்ணா அவர்கள் சின்னஞ்சிறு வயதில் அந்தக் கோயிலில் சுற்றி வந்திருக்கிறார். அந்தக் கோயிலுக்கு அப்போது சொத்துக்கள் ஏராளமாக இருந்து இப்போது ஏழையாகிவிட்டது. அப்போது புண்ணியகோடீஸ்வரருக்கு ஏராளமான பிரும்மாண்டமான உற்சவங்கள் எல்லாம் நடந்தன. இப்போது பணமில்லாத காரணத்தால் ஏழையாகிவிட்டது அந்தக் கோயில். ***

*** "Expunged as ordered by the Chair".



30th July 1971]

**English Medium in schools.**

*316 Q.—THIRU V. ISVARMURTI: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state the steps taken by the Government to meet the demand for admission into English Medium in schools and colleges for the next academic year 1971-72?

ஆங்கில பயிற்சி முறை வகுப்புகள்

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி: மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

ஆங்கிலத்தை பயிற்சி மொழியாகக் கொண்டுள்ள பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் சேர்வதில் உள்ள நெருக்கடியை, 1971-72-ம் கல்வி ஆண்டிலிருந்து நீர்ப்பதற்கு அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: பள்ளிகளில் ஆங்கிலப் பயிற்று முறை வகுப்புகளில் அனுமதிக்க, பள்ளிக் கல்வி இயக்குனர், சில விதிகளை வகுத்துள்ளார். இவ்விதிகளுக்கு உட்பட்டவர்கள், தகுதியின் அடிப்படையில், அவற்றில் அனுமதிக்கப்படுவர்.

கல்லூரிகளைப் பொறுத்தவரை, டாக்டர் ஏ. எல். முதலியார் தலைமையில் அமைக்கப்பட்ட வல்லுநர் குழுவின் பரிந்துரைகளை அரசு ஏற்றது. அதன்படி, தமிழ் பயிற்று மொழியாக உள்ள அரசாங்கக் கல்லூரிகளிலும் ஆங்கிலப் பயிற்று மொழி வகுப்புகளை அரசு திறந்துள்ளது.

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி: தலைவர் அவர்களே, உயர்நிலைப் பள்ளிகளிலே ஆங்கில வகுப்புகள் தொடங்க வேண்டுமென்று விண்ணப்பித்து சில ஆண்டுகளாகியும் கூட அவற்றிற்கு பதில் வருவதில்லை. அதன்பேரில் மேலே முறையிட்டால், தெளிவான விடை கிடைப்பதில்லை. எந்த அடிப்படையில் உயர்நிலைப் பள்ளிகளில் ஆங்கில வகுப்புகள் தொடங்குவதற்கு அரசு அனுமதிக்கிறது?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, குறிப்பாக மாவட்டத்தின் தலைநகரமாக இருக்கிற பல்வேறு மொழிகளைப் பேசுகிற மக்கள் வாழ்கிற, தமிழைத் தாய்மொழியாகக் கொள்ளாத வேற்று மொழி அறிந்த மக்கள் அதிகமாக வாழ்கிற பகுதிகளில் அந்த அனுமதி வழங்கப்படுகிறது. அத்தத்த ஊர்களின் நிலைமை, அங்குள்ளவர்களின் தேவை ஆகியவற்றை அடிப்படையாக வைத்து வகுப்புகள், பிரிவுகள் திறக்கிற அனுமதி அளிக்கப்படுகிறது. வகுப்புகளில் எப்படி மாணவர்கள் சேர்க்கப்படுகிறார்கள் என்பதற்குத் தனியாக விதிகள் இருக்கின்றன.

THIRU A. R. DAMODARAN: Sir, may I know whether the Government's proposal to have shift system in certain Colleges where accommodation is not available is being resisted by the Universities of Madras and Madurai?

[30th July 1971

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அப்படி ஏற்றுஷிப்டு முறைகளை மேற்கொண்டாவது நெருக்கடியைத் தவிர்க்கலாமா என்று பல்கலைக் கழகத்திற்குத் தெரிவிக்கப்பட்டதற்கு, இரண்டு பல்கலைக் கழகங்களும் இப்போது ஷிப்டு முறை தேவையில்லை என்றும், இப்போதுள்ள சூழ்நிலையில் நிலைமையைச் சமாளித்துக்கொள்ளலாம் என்றும் சொல்லியிருக்கிறார்கள். சென்னைப் பல்கலைக் கழகம் தேவையில்லை என்று சொன்னது. மதுரைப் பல்கலைக் கழகம் சிறிது காலம் கழித்து அதைப் பார்க்கலாம் என்று கூறியிருக்கிறது.

THIRU A. R. DAMODARAN : Sir, may I bring to the attention of the Hon. Minister that 640 boys are being admitted into the Pre-University course in the Government Arts College, Cuddalore and these 640 boys are divided into seven sections, seven for Tamil and seven for English, and in view of the physical impossibility of even providing temporary accommodation for these various sections, the College authorities will not be able to run these classes till the middle of November and until the temporary sheds are constructed? In view of this fact, Sir, as a purely temporary measure, will the Government again take up the matter with the University of Madras and try to obtain the shift system at least for this year until the accommodation problem is solved?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, நான் இந்த ஷிப்டு முறையைக் கொண்டுவர வேண்டுமென்று பல்கலைக் கழகத்திடம் தெரிவித்தபோது, அவர்கள் அதற்கு இசைவு தரவில்லை. இப்போது புதிதாக வகுப்புகள் தொடங்க இருப்பதால், அதற்காகத் தேவைப்படுகிற இடங்கள் அமைகிற காலம்வரை ஓளவுக்குச் சரிப்படுத்தித் தரவேண்டுமென்று கேட்கப்பட்டிருக்கிறது. நேரங்களை ஓளவுக்குப் பகிர்ந்து தந்தால் ஷிப்டு முறையில்லாவிட்டாலும் உறுப்பினர் கூறியதைப் போல, நேரத்தை முன்னும் பின்னும் மாற்றித் தந்தால், அதன் மூலம் சிறிது காலம் நடத்தலாம் என்று கல்லூரிக் கல்வி இயக்குனர் பல்கலைக் கழகத்திற்குச் சொன்னார். அப்படிச் செய்தால்தான், ஓளவுக்குச் சமாளிக்க முடியும். அதுதான் வற்புறுத்தப்படுகிறது.

THIRU A. R. DAMODARAN : Sir, there are 201 S.S.L.C. Schools where English medium has been allowed for the past five years and certain schools have made applications but they have been refused by the Government. May I know whether in view of the fact that Members of this House as well as of the other House are seriously concerned about the problems that arise because of the extortion of donation from children who want to joint such schools, the Government will consider the possibility of allowing a few more schools to start such sections, so that such black-marketing in education may be considerably



30th July 1971]

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அந்தந்த நகரங்கள், இடங்களின் சூழ்நிலையைப் பொறுத்துதான் வகுப்புகள் அனுமதிக்கப்படுகின்றன. உறுப்பினர் கூறியதைப் போன்று நிலைமை ஏற்படாமலிருக்க, அதிக வகுப்புகளை அனுமதிப்பதன் மூலம் தடுக்க இயலுமா என்றால், அது தனியாகப் பரிசீலிக்கப்பட வேண்டும்.

திரு. எம். அய்யாசாமி : தலைவர் அவர்களே, ஷிப்டு முறை வைப்பதுபற்றி சென்னை, மதுரை பல்கலைக் கழகங்கள் இசைவு தரவில்லை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அப்படியானால், இப்போதும் கல்லூரிகளுக்கு விண்ணப்பித்து இடம் கிடைக்காமல் போனவர்களுக்கு இந்த ஏற்பாட்டைச் செய்ய அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, பல்கலைக் கழகம் சொல்வது, குறிப்பிட்ட கல்லூரிகளுக்கு குறிப்பிட்ட இடத்திற்கு எல்லா மாணவர்களும் செல்கிற காரணத்தாலும், ஒவ்வொரு மாணவரும் பல கல்லூரிகளுக்கு விண்ணப்பம் செய்திருப்பதாலும், விண்ணப்பத்தின் அளவு அதிகமாகத் தெரிகிறது. ஆண்டுதோறும் கணக்கிடும்போது, நகர்ப்புறம் அல்லாத பகுதிகளில் அமைக்கப்பட்டிருக்கிற கல்லூரிகளில் இடங்கள் காலியாக இருக்கின்றன. பொதுவாக சில இடங்களில் காலியாகத்தான் இருக்கின்றன. அதனால் ஷிப்டு முறையை அதற்காகப் புகுத்தவேண்டிய அவசியமில்லை. கல்வி அமைச்சர் என்ற முறையில் நான் விரும்புவது, கட்டிடங்கள், விளையாட்டு இடங்கள், மர சாமான்கள் இவைகளையெல்லாம் ஒரே இடத்தில் வைத்துக்கொண்டு, தனியாகக் கட்டிடம் மற்றவை இல்லாமல் செலவைச் சிக்கனப்படுத்திச் செய்வதற்கு இந்த ஷிப்டு முறை வரலாம் என்று நினைக்கிறேன். பல்கலைக்கழகம் இதற்கு இசைவு தரவில்லை. மேலும் மேலும் எண்ணிக்கை பெருகிவரும் போது வற்புறுத்தவேண்டிய அவசியமும் ஏற்படும். வேறு பல மாநிலங்களில் ஷிப்டு முறை கையாளப்பட்டு வருகிறது. சென்னையில் கூட சில பல்வி கல்வியில் ஷிப்டு முறையைப் புகுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது.

புலவர் ஓ. அறிவுடை நம்பி : தலைவர் அவர்களே, தனியார் கல்லூரியில் தமிழைப் பயிற்சி மொழியாக ஏற்றுக்கொண்டிருக்கிற கல்லூரிகள் எத்தனை ? ஏற்காத கல்லூரிகளை ஏற்கச் சொல்லி அரசு வற்புறுத்துமா ? இல்லாவிட்டால் மானியத்தை நிறுத்துமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போட வேண்டும்.

திரு. எம். சங்கரலிங்கம் பிள்ளை : தற்போது நமது மாநிலத்தில் சில நகரங்களைத் தவிர மற்றப் பகுதிகளில் பல கல்லூரிகளில் புகுமுக வகுப்புகளிலும் மற்ற வகுப்புகளிலும் இடங்கள் காலியாக இருக்கின்றன என்பது அரசிற்குத் தெரியுமா ? அது ஒவ்வொரு

[30th July 1971

வாரமும் வானெலியில் அறிவிக்கப்படுகிறது. இப்போது எவ்வளவு இடங்கள் காலியாக உள்ளன என்று வானெலியில் அறிவிக்கப் படுமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : ஏற்கனவே குறிப்பிட்டேன். திட்டவட்டமான கணக்கு தெரியவில்லை. இப்போது மாவட்ட ரீதியில்கூட கூடுமானவரை வானெலியின் மூலமாக அறிவிப்பதன் மூலமாக தங்களுக்கு எங்கேயாவது இடம் கிடைக்க வேண்டுமென்று விரும்புகிறவர்கள் அறிந்துகொள்ளலாம். அதற்குத்தான் வானெலி மூலமாகத் தெரிவிக்க ஏற்பாடு செய்யப் பட்டிருக்கிறது. இப்போது காலியாக உள்ள இடங்களைப்பற்றி அறிய தனிக் கேள்வி போட வேண்டும்.

THIRU M. RAJAH IYER : Mr. Chairman, Sir, are the Government aware that in these 201 High Schools where English medium sections have been granted, there has to be just one section in each School? In each section, there are about 70 or 80 boys and have the Government received any representation that these sections should be bifurcated at least into two sections in the interests of the health of the students and have the Government received any representation from the City Headmasters' Association that these English medium sections are unwieldy and that they should be bifurcated, because there are 70 or 80 boys in these sections?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, புகுமுக வகுப்பில் கிட்டத்தட்ட 80 அல்லது 90 மாணவர்கள் வைக்கலாம் என்றிருக்கிறது. பி.எஸ்ஸி.-யில் தான் 40 மாணவர்கள். உயர்நிலைப் பள்ளிகளைப் பொறுத்த வரையில், குறிப்பிட்ட அளவுக்கு மேல் போனால், இரண்டு செக்ஷன்களாகப் பிரிக்கலாம் என்று இருக்கிறது. அறுபது மாணவர்கள் 65 மாணவர்கள் இருந்தால், இரண்டாகப் பிரிக்கலாம் என்ற விதியிருக்கிறது.

THIRU M. RAJAH IYER : Excuse me, Sir. Because these Schools are sanctioned one section in English medium whatever the strength may be, they are not allowed to bifurcate the sections. Will the Government kindly consider the matter and allow two sections to be opened in each School so that these English medium sections could be bifurcated?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அதைத் தனியாகப் பரிசீலிக்கவேண்டும்.

THIRU A. R. DAMODARAN : The St. Joseph's High School at Tirupapuliyur, Cuddalore has been making applications for opening an English medium section for the past five years. May I know from the Government why such applications are refused and whether it is as a matter of policy or whether there is some other thing behind such refusal ?



30th July 1971]

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அனுமதி அளிக்காமல் இருப்பதற்குக் காரணம் கொள்கையாகத் தான் இருக்கும். தமிழைத்தான் கட்டாயமாக எல்லா இடங்களிலும் வைக்க வேண்டுமென்று இருக்கிறது. ஆங்கிலத்தைப் பொறுத்த வரையில், முதலில் குறிப்பிடப்பட்டபடி உள்ள நகரங்களுக்குத் தந்தால் போதுமென்று கட்டுப்படுத்தப்பட்டிருக்கிறது. அந்த அடிப்படையில் இருக்கக்கூடும். அந்தக் குறிப்பிட்ட பள்ளியைப் பொறுத்த வரையில், என்ன சூழ்நிலை என்று தெரிய, தனிக் கேள்வி போட்டால், அறிந்து சொல்லலாம்.

*Dr. A. Lakshmanaswamy Mudaliar Committee.*

* 317. Q.—THIRU M. RAJAH IYER (on behalf of THIRU M. ARUMUGASWAMI) : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state :

(*a*) the terms of reference of Dr. A. Lakshmanaswamy Mudaliar Committee on the choice of the medium of instruction in Educational institutions in this State from the year 1971-72;

(*b*) whether the Committee has submitted any interim report to the Government;

(*c*) if so, the details thereof; and

(*d*) the number of sittings the committee had so far held and the date?

டாக்டர் ஏ. லட்சுமணசாமி முதலியார் குழு

திரு. எம். ராஜா அய்யர் (திரு. எம். ஆறுமுகசாமி சார்பில்) : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க் கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1971-72-ஆம் ஆண்டிலிருந்து இம்மாநிலத்தில் கல்வி நிறுவனங்களில் பயிற்று மொழியைத் தேர்ந்தெடுத்துக்கொள்வது பற்றிய டாக்டர் ஏ. லட்சுமணசாமி முதலியார் குழுவின் ஆய்வு வரம்பு என்ன ?

(இ) இக்குழு ஏதேனும் இடைக்கால அறிக்கையை அரசுக்குப் பணிந்தனுப்பியுள்ளதா ?

(உ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை ?

(எ) இந்நாள் வரை எத்தனைக் கூட்டங்களை, எந்தெந்த நாட்களில் இக்குழு கூட்டியது ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) கல்லூரிகளில், அரசின் பயிற்று மொழிக் கொள்கையை எவ்வகையில் செயல்படுத்தலாம் என்பது பற்றியும், பொது மக்கள் மாணவர்கள் ஒரு சாராரிடையே இது பற்றி உள்ளான ஐயப்பாடுகளை நீக்கும் வழிவகைகள் பற்றியும், பரிசீலிக்கும்படி அக்குழு கேட்டுக் கொள்ளப்பட்டது.

(இ) ஆம்.

(உ) அதனுடையப் பரிந்துரைகள் கீழ் வருமாறு :—

(1) பயிற்று மொழியை தேர்ந்தெடுக்கும் வாய்ப்பு மாணவர்களுக்கு இருக்க வேண்டும்.

(2) அரசினர் கல்லூரிகளில் தமிழ் மட்டும் பயிற்று மொழியாய் இருக்கும் கல்லூரிகளில், மாணவர்கள் ஆங்கிலப் பயிற்று மொழியை விரும்பினால், அதற்கான வசதிகள் செய்யப்பட வேண்டும்.

(3) தனியார் கல்லூரிகளில், தமிழ் பயிற்று மொழி இல்லாத இடங்களில் மாணவர்கள் விரும்பினால், தமிழைப் பயிற்று மொழியாகப் புகுத்துவதுபற்றி அக்கல்லூரிகள் ஆலோசிக்குமாறு கேட்டுக் கொள்ளலாம்.

(எ) அரசிடம் தகவல் இல்லை

THIRU K. S. ABDUL WAHAB : May I know the basic features of Lakshmanaswamy Mudaliar Committee's report, Sir ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, ஏற்கனவே மூன்று கருத்துக்களைச் சொன்னேன். மாணவர்களைப் பொறுத்து இரண்டு மொழிகளில் எதுவென்று தேர்ந்தெடுக்கும் வாய்ப்பு அவர்களுக்கு அளிக்க வேண்டுமென்பது ஒன்று. தமிழைப் பின்பற்றுகிற அரசாங்கக் கல்லூரியில் ஆங்கிலம் பயிற்றுகின்ற வாய்ப்புகள் ஏற்படுத்தப்பட வேண்டும். தனியார் கல்லூரிகளில் தமிழில் பாடம் கற்றுக்கொள்ள மாணவர்கள் முன் வந்தால், அதற்கான வசதிகளைச் செய்து தரவேண்டும் என்பதாகும்.

THIRU A. R. DAMODARAN : I think the recommendation of the Committee was that in private colleges, where there was demand for Tamil medium sections, the college authorities should open Tamil medium sections. Since the public seem to think that the private colleges are not following this, may I know from the Government whether they will make a study and find out whether private colleges have received applications for admission to Tamil medium sections so that at least from the next year, certain corrective measures may be taken if there is demand in the particular area?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, தனியார் கல்லூரியில் தமிழ் பயிற்சிமொழிப் பாடமே இல்லை என்று சொல்வதற்கில்லை. பல தனியார் கல்லூரியில் தமிழ் பயிற்சி மொழியாக புகுமுக வகுப்புகள், பி.ஏ., பி.எஸ்ஸி. வகுப்புகளிலும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. தென் மாவட்டங்களில் இருக்கிற கல்லூரிகளில் அதிகமான அளவுக்கு தமிழ் பயிற்சி மொழியாக வைக்கப்பட்டிருக்கிறது. கந்தசாமி கல்லூரியில் அதற்கான வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. வேறு பல இடங்களில்



உறுப்பினர் கூறியதைப்போல, எந்தெந்த கல்லூரிகள் என்று கணக்கெடுத்து போதுமான அளவு வாய்ப்புகள் இருந்தால் அதற்கான வழியை ஆங்காங்கு செய்ய முடியும். அறவே இல்லை என்று சொல்வதற்கில்லை. மேலும்மேலும் அதனுடைய எண்ணிக்கை பெருகிவருகின்றது. பல தனியார் கல்லூரிகளில் அதற்கான வசதி வாய்ப்புகளைச் செய்து வருகிறார்கள். சென்னையிலும் முக்கியமான சில கல்லூரிகளில் மாணவர்கள் இருக்கிறார்கள் என்று செக்ஷன்களை ஏற்படுத்தி பிறகு விட்டு விட்டார்கள்.

THIRU A. R. DAMODARAN : May I know, Sir, how many applications have been received regarding the opening of these sections and whether the general public are perfectly satisfied with the existing arrangements that are made by them in private colleges as well as in Government Colleges?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, பொதுமக்கள் கருதுவதற்குக் காரணம் என்னவென்றால், ஆங்கிலம் தமிழ் மட்டுமே இருக்கிற இடங்களில் ஆங்கிலம் கட்டாயம் ஏற்படுத்த வேண்டுமென்று வற்புறுத்துவதைப் போன்று ஆங்கிலம் இருக்கிற இடங்களில் தமிழிலும் இருக்க வேண்டு மென்று வற்புறுத்த வேண்டுமென்று ஒவ்வொரு பகுதியினர் சொல்கிறார்கள். அதை வற்புறுத்த வேண்டாம், மாணவர்கள் விரும்பினால் வைக்கலாம் என்று இப்போதிருக்கிறது. அரசாங்கக் கல்லூரியைப் பொறுத்த வரையில், ஒரு வகுப்பு கட்டாயம் ஏற்படுத்த வேண்டுமென்று விதிமுறைகளில் சொல்லப்பட்டிருக்கின்றது. அதுபற்றிய கருத்துரைகள்தான் இப்போது பரிமாறப்பட்டு வருகின்றன.

### *Aided Secondary schools*

* 318 பு.—THIRU M. RAJAH IYER : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(a) the age limit for appointment of Non-teaching staff in aided secondary schools; and

(b) whether there is any provision for relaxation of the rules?

### அரசு மானியம் பெறும் உயர்நிலைப் பள்ளிகள்

திரு. எம். ராஜா அய்யர் : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) அரசு மானியம் பெறும் உயர்நிலைப் பள்ளிகளில் ஆசிரியரல்லாத பிற பணியாளர்களின் நியமனத்திற்கான வயது வரம்பு யாது?

(இ) மேற்கூறிய வயது வரம்பைத் தளர்த்துவதற்கு விதிமுறை ஏதேனும் உள்ளதா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) வயது வரம்பு எதும் குறிப்பிடப்படவில்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

THIRU M. RAJAH IYER : தலைவரவர்களே, It is stated that non-teaching staff in aided schools must possess the same qualifications as those in Government schools. Are we to understand that the qualifications relate only to educational qualifications and not to age restrictions ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இதில் சேருவதைப்பற்றி ஒன்றுமில்லை. அரசாங்கத்தினுடைய கல்வித் துறையில் பணியாற்றி அல்லது அரசாங்கக் கல்லூரிகளில் பணியாற்றி ஓய்வு பெற்றவர்கள் 55-ல் ஓய்வு பெறுகிறார்கள். தனியார் கல்லூரிகளில் அப்படிப்பட்டவர்களை வேலைக்கு எடுத்துக் கொண்டால், அவர்களை 60 வயது வரையில் வைத்துக்கொள்ளலாம் என்றிருக்கிறது. அரசுத் துறையில் அல்லாத பல துறைகளில் பணியாற்றி ஓய்வு பெறுகிறவர்களை எடுத்துக்கொண்டால், 60 வயது வரையில் வைப்பதற்கில்லை என்ற கட்டுப்பாடு இருக்கிறது. கல்வித் துறையில் பணியாற்றினால், அவர்களை 60 வயது வரையில் எடுத்துக் கொள்ளலாம் என்ற நிலைமையிருக்கிறது. தகுதி பெறுதவர்கள் கூட மற்ற "குவாலிபிகேஷன்" போன்றவைக்கு விதிவிலக்கு அளிப்பதைப் போல வயதிற்கும் விதி விலக்கு அளிக்க விண்ணப்பிக்கிறார்கள். பள்ளிச் சீரமைப்புக் குழுவினர் இதுபற்றி ஆராய்ந்து அறிக்கை தந்திருக்கிறார்கள். அதில் அவர்கள் 55 வயதோடு தனியார் பள்ளியிலும் நிறுத்திவைக்கலாம் என்று யோசனை சொல்லியிருக்கிறார்கள். அது தனியாகப் பரிசீலிக்கப் படுகிறது.

திரு. எம். ராஜா அய்யர் : முதலாவது இவர்கள் சேர்த்துக் கொள்ளப்படும்போது, வயது வரம்பு இருக்கிறதா என்று பார்க்க வேண்டும். 30 வயதிற்கு மேற்பட்டவர்களைத் தனியார் பள்ளியில் ஆசிரியரல்லாத பிற பணியாளர்களாகச் சேர்க்கக் கூடாது என்று அரசாங்க உத்தியோகத்தில் வயது நிர்ணயம் இருப்பதைப் போல ஆசிரியர் அல்லாத பணிகளில் சேர்வதற்கு வயது வரம்பு இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : முதலில் சேர்த்துக் கொள்ளும்போது வயது வரம்பு எதுவுமில்லை.

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி : 25 வயதிற்குக் குறைவாக இருக்க வேண்டுமென்று தனியார் பள்ளிகளில் விதியிருக்கிறதா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அரசாங்கப் பள்ளி, மற்ற கழகச் சார்புடைய பள்ளிகளுக்கு அப்படிப்பட்ட விதிமுறைகள் உண்டு. தனியார் பள்ளிக்கு அப்படிப்பட்ட விதிமுறை இல்லை.



### *House Rent Allowance*

*319. Q.—THIRU M. RAJAH IYER : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(a) whether the House Rent Allowance sanctioned by the Government to the non-teaching staff in aided secondary schools is denied to full time employees paid from contingencies; and

(b) if so, the reasons therefor?

### வீட்டு வாடகைப்படி

திரு. எம். ராஜா அய்யர் : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மானிய உதவிப்பெறும் இடைநிலைப் பள்ளிகளில் பணி புரியும் ஆசிரியரல்லாத பணியாளர்களுக்கு வழங்கப்படும் வீட்டு வாடகைப்படி, சில்லறை நிதியிலிருந்து சமபளம் பெறும் முழு நேரப் பணியாளர்களுக்கு மறுக்கப்படுகிறதா ?

(இ) ஆம் எனில், அதற்கான காரணங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : சில்லறை செலவினத்திலிருந்து சம்பளம் பெறும் முழு நேர பணியாளர்கள் வீட்டு வாடகை படி பெற தகுதியுடையவர்களல்லர். ஏனெனில் அவர்கள் மாவட்ட கலெக்டரால் நிர்ணயிக்கப்படும் நடப்பு வீதங்களின் படி ( Market Rates ) நிர்ணயிக்கப்பட்ட சம்பள விதப்படி சம்பளம் பெறுகின்றனர். மான்யம் பெறும் இடைநிலைப் பள்ளிகளில் பணிபுரியும் அம்மாதிரி பணியாளர்களுக்கு வீட்டு வாடகைப் படி அளிக்க மறுக்கப்படுகிறது என்ற கேள்விக்கு இடமில்லை.

### *Library Authority of Ramanathapuram*

*320. Q.—THIRU V. THANGAPANDIAN : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(a) whether the Library Authority of Ramanathapuram has sent any representation to Government, requesting financial assistance; and

(b) if so, the action taken thereon by the Government?

### இராமநாதபுரம் நூலக ஆணைக்குழு

திரு. வி. தங்கபாண்டியன் : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இராமநாதபுரம் நூலக ஆணைக்குழு அரசாங்கத்திடம் நிதி உதவி கோரி மனு ஏதேனும் அனுப்பியுள்ளதா ?

(இ) ஆம் எனில், அது பற்றி அரசாங்கம் எடுத்த முடிவென்ன?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: (அ) ஆம்.

(இ) இராமநாதபுரம் மாவட்ட நூலக ஆணைக்குழுவிலிருந்து 14—11—1968-ல் நூலக இயக்குநருக்கு ஒரு மனு அனுப்பப்பட்டது. அம் மனுவில் நூலகக் குழு ஊழியர்களுக்குப் பஞ்சப்படி விகிதம் அதிகப்படுத்தப்பட்டு உள்ளதால் குழுவின் நிதி நிலையைச் சரிகட்ட வருடம் ரூபாய் இரண்டு லட்சம் வீதம் விசேஷ மான்யம் கொடுக்கும்படியும், நூலக வரியை மூன்று பைசாவிலிருந்து உயர்த்தி ஆறு பைசா வீதம் வசூலிக்க அரசு ஆவன செய்ய வேண்டும் என்றும், நூலக ஆணைக்குழு கோரியிருந்தது. இது அரசின் பரிசீலனையில் உள்ளது.

### *Teachers' Welfare Fund*

*321 Q.—PULAVAR O. ARIVUDAI NAMBI: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(a) the number of teachers working at present who have obtained loans from the Teachers' Welfare Fund, for the welfare of their families and for their children's education till this date;

(b) the number of applications sent by the school teachers requesting grant of loans till this date; and

(c) the procedure followed by the Government to sanction loans to them without any delay?

### ஆசிரியர் சேமநல நிதி

புலவர் ஓ. அறிவுடை நம்பி: மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) ஆசிரியர் சேமநல நிதியிலிருந்து தற்போது பணிபுரியும் ஆசிரியர்கள் தம் குடும்ப நலத்திற்காகவும் தம் குழந்தைகளின் வளர்ச்சிக்காகவும் கடன் பெற்றவர்கள் இன்றைய தேதி வரை எத்தனை பேர்?

(இ) இன்றைய தேதி வரை பள்ளிகளில் இருந்து நிதி கோரி ஆசிரியர்கள் அனுப்பிய விண்ணப்பங்கள் எத்தனை?

(உ) தாமதமின்றி கடனுதவி அளிக்க அரசு மேற்கொண்டுள்ள விதிமுறைகள் என்ன?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: (அ) தமிழ் நாடு ஆசிரியர் நலத் தேசிய நிதி நிறுவனத்திலிருந்து ஆசிரியர்களுக்கு கடன் அளிக்கப்படுவதற்கு விதி முறைகளில் இடமில்லை. உதவித் தொகையாகத்தான் கொடுக்கப்படுகிறது. 31—5—71 வரை 379 பணிபுரியும் ஆசிரியர்களுக்கு உதவித் தொகை அளிக்கப்பட்டுள்ளது.



(இ) 31—5—71 வரை பள்ளிகளிலிருந்து நிதி கோரி 2027 பணிபுரியும் ஆசிரியர்கள் விண்ணப்பங்களை அனுப்பியுள்ளனர்.

(உ) விண்ணப்பங்கள் அந்தந்த மாவட்டக் கல்வி அலுவலர்களுக்கு அதில் கொடுத்துள்ள விவரங்களை சரி பார்ப்பதற்காக அவ்வப்போது அனுப்பி வைக்கப்படுகின்றன. அவர்களிடமிருந்து சரிபார்க்கப்பட்டு திரும்பப் பெறப்பட்ட விண்ணப்பங்கள் ஆய்வுக்குழுவினால் துரிதமாக பரிசீலனை செய்யப்பட்டு, உதவி பெறத் தகுதியுள்ள ஆசிரியர்களுக்கு வழங்கப்பட வேண்டிய உதவித் தொகைகளை அனுமதித்து வருகிறது. சில ஆசிரியர்கள் அவர்கள் கொடுத்த மூலவரிகளில் இல்லாததாலும், சிலர், தேவைப்படும் சான்றுகளை விரைவில் கொடுக்க இயலாமையினாலும் சில தவிர்க்க முடியாத தாமதங்கள் ஏற்படுகின்றன. மேலும், துரிதமாக பரிசீலிப்பதற்காக, ஒவ்வொரு ஆண்டும், செப்டம்பர் 5-ம் தேதி முதல் டிசம்பர் 31-ம் தேதி வரையில் மட்டுமே விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளலாமென இவ்வருடம் முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

THIRU M. RAJAH IYER: May I know, Sir, whether the Government have any proposal to revise the rules of the Teachers' Welfare Fund, so that loans are also advanced to, and recovered from the teachers particularly to the teachers who miss the National Loan Scholarship and the Merit Scholarship due to income limit or various other factors and are not able to get scholarship from the Government of India, as pointed out by me in my speech yesterday? Will the Government kindly consider my suggestion to revise the Rules so that interest-free loans could be advanced to teachers and recovered?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, அதற்காக வகுக்கப்பட்டிருக்கிற விதிமுறைகள் அதற்கு இடம் தரவில்லை. ஓளவுக்குக் கஷ்டப்படுகிற, கண்ணிழந்த, பார்சவாயுவினால் பாதிக்கப்பட்டு வேலை செய்ய முடியாமல் இருக்கிற ஆசிரியர்களுக்கும், திடீரென்று இறந்துவிட்டால் சில குடும்பங்களை தவிக்கவிட்டுப் போகிற ஆசிரியர்கள் குடும்பத்திற்கும் பயன்படுகிற வகையில் இந்த நிதி பயன்படுத்தப்பட வேண்டுமென்று குறிப்பாகச் சொல்லப்படுகிறது. ஆசிரியர்கள் கடன் வாங்குவதற்கு வேறு பல துறைகளில் வேறு பல வழிகள் ஏராளமாக இருக்கின்றன. அரசாங்க கடன் வாங்குவதற்கும் விசேஷ கடன்களைப் பெறுவதற்கும் வழியிருக்கிறது. இந்த நிதியைக் கடன் கொடுக்கப் பயன்படுத்தினால், ஏராளமான விண்ணப்பங்கள் வரும். மீதியிருக்காது. இப்போது கூட திருமணம் போன்ற வற்றிற்குக் கூட கொடுக்கக் கூடாது என்று நிறுத்திவைத்திருக்கிறேன். காசநோய், வேறுபல வியாதிகள் வந்து அபரிமிதமான செலவிற்காளாகும் ஆசிரியர்களுக்கு ரூ. 1,000 அல்லது ரூ. 1,500 கொடுக்கலாம் என்றிருக்கிறது. அதற்கும் ஏராளமான விண்ணப்பங்கள் வருகின்றன. அதை விரைவில் பரிசீலிக்கச்

சொல்லியிருக்கிறேன். ஆசிரியர்கள் இருக்கிற காலம் வரையில், அவர்களுக்குப் பிறகு அவர்களை நம்பி வாழ்கிறவர்கள் வாழ்கிற காலம் வரையில், இந்தத் தொகை கொடுக்கப்படும்போது இதை வேறு இடத்திற்கு ஈடுகட்ட முடியாத நிலைமை வரலாம். ஆண்டாண்டுக்கு இது உயர்ந்து கொண்டே போகிறது. ஆகவே கடன் கொடுக்கும் நிலைமை இருக்காது. இதற்கென்று இந்திய அரசு வகுத்திருக்கிற சட்டதிட்டங்களும் கோரப்பட்டிருக்கின்றன.

*Technical university*

*322. *Q.*—THIRUMATHI S. MANJUBHASHINI: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether there is any proposal with the Government to establish a Technical University in Tamil Nadu; and

(*b*) if so, the details thereof?

*தொழில் நுட்பக் கல்விப் பல்கலைக் கழகம்*

திருமதி எஸ். மஞ்சுபாஷினி: மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழ் நாட்டில் தொழில்நுட்பக் கல்விப் பல்கலைக் கழகம் ஒன்றை ஏற்படுத்தும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: (அ) ஆம்.

(இ) மாநிலத்தில் உள்ள தொழில் நுட்பக் கல்வி நிலையங்களை இணைத்தும், பட்டப்படிப்பிற்கு மேல் படிப்பில் நேர்முகப் பயிற்சி தர அளிக்கவும் மற்றும் ஆராய்ச்சிகள் நடத்தவும் தொழில்நுட்பப் பல்கலைக் கழகம் ஒன்றைத் தொடங்குவது பற்றி, மைய அரசுடன் தொடர்பு கொள்ளப்பட்டிருக்கிறது.

THIRUMATHI S. MANJUBHASHINI: Sir, would you kindly indicate the place where the University is likely to be located if it is accepted by the Government?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, அப்படி தொழில் நுட்பப் பல்கலைக் கழகம் அனுமதிக்கப்பட்டு வருமானால், சென்னையில்தான் அமைக்கப்படும். அதற்கேற்ற வாய்ப்பு வசதிகள் உள்ள, பாலிடெக்னிக் காம்பஸ் ஆக அமைக்கப்படுகிற இடம்தான் பொருத்தமாக இருக்கும். அதிக மாகச் செலவு ஏற்படாத வகையில், கட்டிடம் மற்றவற்றைப் பொறுத்து, பல்கலைக் கழகம் ஏற்பட்டால் அதிகச் செலவு ஏற்படாது என்ற காரணத்தைச் சொல்லி அவர்களிடம் அனுமதி



பெற்றிருக்கிறோம். மத்திய அரசும் யுனிவர்சிடி கிராண்ட் கமிஷனும் அனுமதி அளிக்க வேண்டும். யுனிவர்சிடி கிராண்ட் கமிஷன் அப்படி அமைக்க வழியில்லை என்று கருத்து தெரிவித்தது. அதனுடன் வாதிட்டு அதைப் பெறுவதில் அரசு ஈடுபட்டிருக்கிறது.

*Blue films*

*246. *Q.*—THIRU V. ISVARMURTI: Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether a number of persons have been arrested in connection with the exhibition of blue films and for the possession of obscene pictures and books in Madras City about 9th June, 1970; and

(*b*) if so, the details thereof?

*ஆபாசத் திரைப்படம்*

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி: மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1970 ஜூன் 9-ம் நாளன்று சென்னை மாநகரில் ஆபாசத் திரைப்படம் (Blue film) காண்பித்ததற்காகவும், ஆபாசமான படங்களையும் புத்தகங்களையும் வைத்திருந்ததற்காகவும் பலர் கைது செய்யப்பட்டனரா?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: (அ) ஆம்.

(இ) (i) "உடலுறவு" பற்றிய ஆபாசத்திரைப்படம் காண்பித்ததாக ஐந்து பேர் கைது செய்யப்பட்டனர். அவர்கள் மீது இ.பி.கோ. 109-வது பிரிவின்கீழும் 292 (a) பிரிவின்கீழும் வழக்கு ஒன்று மாநகர 4-வது மாஜிஸ்ட்ரேட் முன்னிலையில் ஆ.வ. 26702/70-ம் எண் வழக்கு பதிவு செய்யப்பட்டது. அது விசாரணையில் உள்ளது.

(ii) ஆபாசப் புத்தகங்கள், புகைப்படங்கள் முதலியவை வைத்திருந்ததாக மூவர் கைது செய்யப்பட்டனர். அவர்கள் மீது இ.பி.கோ. 292-வது பிரிவின் கீழ் எழும்பூரிலுள்ள மாநகர் 9-வது மாஜிஸ்ட்ரேட் முன்னிலையில் ஆ.வ. 22838/70, 22840/70 எண் வழக்குகள் பதிவு செய்யப்பட்டு குற்றவாளிகளெனத் தீர்ப்பளித்து அக்குற்றத்திற்கான தண்டனையும் வழங்கப்பட்டது.

(iii) ஆபாசப் புகைப்படங்கள் வைத்திருந்ததற்காக இருவர் கைது செய்யப்பட்டனர். அவர்கள் மீது இ.பி.கோ. பிரிவின் கீழ், ஆ.வ. 22735/70 எண்ணில் ஜார்ஜ் டவுன், மாநகர் 2-வது மாஜிஸ்ட்ரேட் முன்னிலையில் வழக்குப் பதிவு செய்யப்பட்டு குற்றவாளிகளென தீர்ப்பளித்து அக்குற்றத்திற்கான தண்டனை வழங்கப்பட்டது.

[30th July 1971

*Use of amplifiers*

*247. Q.—THIRU V. ISVARMURTI: Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether any police warning was issued in Madras City against the use of amplifiers in mobile cars during February 1971;

(b) if so, the number of cases detected; and

(c) the action taken in these cases?

ஒலிபெருக்கிகள் பயன்படுத்தல்

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி: மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1971 பிப்ரவரி திங்களில், வலம் வரும் கார்களில் ஒலி பெருக்கிகள் பயன்படுத்துவது கூடாது என்று சென்னை மாநகரில் காவல்துறையினர் எச்சரிக்கை விடுத்தனரா?

(இ) ஆமெனில், அந்த எச்சரிக்கையை மீறியதாகக் கண்டு பிடிக்கப்பட்ட நேர்வுகளின் எண்ணிக்கை என்ன?

(உ) இவை குறித்து எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: (அ) இல்லை.

(இ) & (உ) இவ்வினாவிற்கு இடமில்லை.

*Island Grounds*

*248. Q.—THIRUVALARGAL V. ISVARMURTI and V. THANGAPANDIAN: Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether the Hon. the Chief Minister had written to the Union Government about the construction of the Defence Complex Buildings in the Island grounds in Madras City in April 1971; and

(b) if so, the details thereof?

தீவுத் திடல்

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி, திரு. வி. தங்கபாண்டியன்: மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சென்னை மாநகரிலுள்ள தீவுத் திடலில் பாதுகாப்புப் படைத் தொகுதிக் கட்டிடங்கள் கட்டுவது குறித்து 1971 ஏப்ரலில் மத்திய அரசுக்கு முதலமைச்சர் எழுதிக் கேட்டுள்ளாரா?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை?



30th July 1971]

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: (அ) ஆம்.

(ஆ) தீவுத் திடலை வெற்றிடமாக வைத்திருக்க வேண்டியது இன்றியமையாததாயிருப்பதால், அங்கு பாதுகாப்புத் துறையின் பயனுக்காகக் கட்டிடங்கள் கட்டும் எந்தச் செயற்குறிப்பையும் கைவிடுமாறு, மத்தியப் பாதுகாப்பு அமைச்சருக்கும், தலைமை அமைச்சருக்கும் 14—4—1971-ல் எழுதப்பட்டுள்ளது. அவர்களது பதில்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.

*Firing at Silvarpatti.*

*249. Q.—THIRU M. RAJAH IYER (on behalf of Thiru M.Arumugaswami): Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether there was any police firing at Silvarpatti near Madurai district about 13th July 1970; and

(b) if so, the details thereof?

சில்வார்பட்டியில் துப்பாக்கிச் சூடு.

திரு. எம். ஆறுமுகசாமி: மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1970, ஜூலைத் திங்கள் 13-ஆம் நாளன்று மதுரை மாவட்டம், சில்வார்பட்டியில் துப்பாக்கிச்சூடு ஏதேனும் நடைபெற்றதா?

(இ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: (அ) ஆம்.

(ஆ) 1970-ஜூலை 13-ம் நாள் அங்கு இடுகாட்டுக்குச் செல்லும் நடைபாதை உரிமை குறித்து எழுந்த தகராறைத் தீர்த்து வைப்பதற்காக சில்வார் பட்டிக்குச் சென்ற 1 காவல் துறை இன்ஸ்பெக்டர், 2 சப்-இன்ஸ்பெக்டர்கள், 1 தலைமைக் காவலர், 6 காவலர்கள் அடங்கிய காவலர்படை ஒன்று அங்குக் குழுமியிருந்த மக்கள் கூட்டத்தால் சூழ்ந்து கொள்ளப்பட்டது. கூட்டத்தினர் காவலர் படையின் மீது கற்களை வீசித் தாக்கினர். மிகப் பதட்டமான நிலைமை உருவாகி கட்டுக்கு மீறும் நிலையை எட்டியபோது தேவையான எச்சரிக்கை கொடுத்த பின்னர் காவலர் படை துப்பாக்கியால் சுட்டது. துப்பாக்கிச் சூட்டினால் 4 பேர் இறந்தனர். இருவர் அதே இடத்திலும் இருவர் மருத்துவ மனையிலும் மடிந்தனர். 9 பேருக்குக் காயம் ஏற்பட்டது.

திரு. கே. ராஜாராம்: நிலைமை தற்போது எப்படியிருக்கிறது?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இப்போது அதைத் தொடர்ந்து நிலைமை எதுவும் உருவாகவில்லை. அமைதியாக இருக்கிறது.

[30th July 1971

*Thanjavur Medical College.*

• 323. Q.—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Public Health be pleased to state the recommendations made by the Indian Medical Council Inspection Committee in December 1969 regarding the required strength of the various departments attached to the Thanjavur Medical College?

*தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி.*

*திரு. ஜி. சுவாமிநாதன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—*

*தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரியுடன் இணைக்கப்பட்டுள்ள பல்வேறு துறைகளில் இருக்க வேண்டிய மாணவர்களின் எண்ணிக்கை குறித்து 1969 டிசம்பரில் இந்திய மருத்துவக் கழகத்தின் ஆய்வுக் குழு அளித்த பரிந்துரைகள் யாவை?*

*மாண்புமிகு திரு. க. அன்பழகன்: சட்டமன்ற மேலவை முன் விவர அறிக்கை@ ஒன்று வைக்கப்பட்டுள்ளது.*

THIRU G. SWAMINAHAN : Mr. Chairman, Sir, I wish to know what was the follow-up action taken on the recommendation of the Indian Medical Council, as I understand that some of the posts in some Departments are yet to be filled up. For instance, in the Department of Bacteriology, the post of Serologist which I mentioned even the other day is vacant and unfilled for the last ten years and even after the recommendation of the Indian Medical Council, it has not been filled up. In another department—Maternity Department—the same conditions continue I want to know the follow-up action that has been taken or that would be taken in future.

THE HON. THIRU K. ANBAZHAGAN : Sir, as far as information is available here, there are not so many Professors' posts or Additional Professors' posts vacant. Most of the posts that are vacant are Tutors' posts and it is because only the students who are coming out of Medical Colleges and who are keen to take to the teaching side could be posted. As it is, there are not so many vacancies; and even if there are one or two vacancies, they have to be adjusted by transfer from one Medical College to another, because we are not able to get trained and experienced Professors.

THIRU G. SWAMINATHAN : As I learn from the answer to the previous question, there are about 324 applicants who are waiting for posts, with the Director of Health Services and Family Planning. May I know whether these applicants could not be diverted to these posts of Tutors in Medical Colleges?

@ Printed as Appendix II on page 1026-1027.



30th July 1971]

THE HON. THIRU K. ANBAZHAGAN : Sir, though these Tutors' posts are more or less equal to Assistant Surgeon's posts, these Tutors' posts should be filled up by persons who are very keenly interested in taking to the teaching profession and only then they will be useful. The people who are merely seeking some jobs will not be useful, because they would not feel happy when they find that they have to teach the students.

*Brahmana Vaideekha Sabha in Mylapore.*

• 324. Q.—THIRU V. ISVARMURTI : Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state—

(a) whether exemption has been granted to the premises of the Brahmana Vaideekha Sabha in Mylapore, Madras, from the levy of urban land tax; and

(b) if so, the details thereof?

*மயிலாப்பூரில் உள்ள பிராமண வைதிக சபை.*

*திரு. வி. ஈஸ்வரமூர்த்தி: மாண்புமிகு உணவு-வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—*

*(அ) சென்னை, மயிலாப்பூரில் உள்ள பிராமண வைதிக சபையின் வளாகம் நகர்ப்புற நிலவரி விதிக்கப்படுவதினின்றும் விலக்களிக்கப்பட்டுள்ளதா?*

*(இ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை?*

*மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) ஆம்.*

*(இ) சென்னை மைலாப்பூர் பிராமண வைதிக சபைக்குச் சொந்தமான மறுநில அளவை எண் 2697/17ல் உள்ள சுமார் 2 மனை அளவுள்ள சொத்தானது பொது மக்கள் வந்து வழிபடுமிடமாக பயன் படுத்தப்படுகிறது. ஆகையால், இப்பாக தமிழ் நாடு நகர்புற நிலவரிச் சட்டம் 1966-ல் உள்ள 29 (சி) பிரிவின்படி நகர்புற வரி விதிப்பிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது.*

THIRU V. ISVARMURTI : May I know whether the Government have received any complaint alleging that there is practice of untouchability in this institution, and if so, will the Government examine the complaint and issue necessary warning?

THE HON. THIRU P. U. SHANMUGAM : We have received any complaint of that sort.

திரு. வி. ஜெயராம ரெட்டியார் : தலைவர் அவர்களே, இன்று காலையில் முன்னாள் சட்டசபை காரியதரிசியாக இருந்த திரு. ஆர்.வி. கிருஷ்ணய்யர் மகன் வந்து என்னிடத்தில் ஒரு 'பாம்ப்லெட்' கொடுத்தார். அதில் ஜாதி அடிப்படையில் அங்கே நடப்பதாகவும் பிராமணர்களைத் தவிர மற்றவர்களை அனுமதிப்பதில்லை என்றும் அவர் ஒரு பிராமணராக இருந்தும் சொல்கிற நிலைமை இருப்பதைச் சொன்னர். ஆகவே அதை மறுபடியும் புனராலோசனை செய்து விசாரிக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட ஜாதி மனப்பான்மையோடு நடத்திக்கொண்டு வேறு ஜாதியினர் வரக்கூடாது என்ற வகையில் நடத்துவார்களானால், அதைப்பற்றிய புகார் வந்தால் அல்லது அங்கத்தினருக்கு வந்த துண்டு விளம்பரத்தைக் கொடுத்தால் கூட போதும், விசாரித்து உண்மையாயிருந்தால் கொடுக்கப்பட்டிருக்கிற வரி விலக்கு ரத்து செய்யப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

### *Meenakshi Amman Temple, Madurai.*

• 325 Q.—THIRU V. ISVARMURTI : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(a) whether it is a fact that a number of marriages have not been performed at Meenakshi Amman Temple at Madurai on 1st June 1971 in view of the V.I.P's. visit; and

(b) if so, the details thereof ?

### மதுரை, மீனாட்சி அம்மன் கோவில்.

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி : மாண்புமிகு அறநிலைய அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சீர்மக்கள் (V.I.P's.) வருகையை முன்னிட்டு 1—6—1971 அன்று மதுரை, மீனாட்சி அம்மன் கோவிலில் திருமணங்கள் பல நடத்தப்படவில்லை என்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : (அ) எந்த முக்கியமான நாளும் 1—6—1971 அன்று ஆலயத்துக்கு வருகை தரவில்லை.

(இ) இவ்வினாவிற்கு இடமில்லை.

### *Madras Veterinary College.*

• 326 Q.—THIRU V. ISVARMURTI : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(a) the number of days the Madras Veterinary College was closed during the academic year 1970-71; and

(b) the reasons for the same ?



### கால்நடை மருத்துவக் கல்லூரி

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1970-71 கல்வி ஆண்டில் சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரி எத்தனை நாட்கள் மூடப்பட்டிருந்தது ?

(இ) அவ்வாறு மூடப்பட்டதற்குரிய காரணங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) 1970-71-ஆம் கல்வி ஆண்டில் இக்கல்லூரி ஒரே ஒரு முறை 8—3—1971-லிருந்து 25—3—1971 வரை 17 நாட்களுக்கு மூடப்பட்டது.

(இ) விடுதி மாணவர்களுக்கும், விடுதி ஊழியர்களுக்கும் இடையே எழுந்த மனத்தாங்கலே கல்லூரி மூடப்பட்டதற்குக் காரணமாகும். விடுதி ஊழியர்கள் சிலரை உடனடியாகப் பணியிலிருந்து நீக்கி விடுமாறு மாணவர்கள் அவர்களுக்கு ஏற்பட்ட ஐயம் காரணமாக கேட்டுக் கொண்டனர். ஆனால், விதிகளையும், ஒழுங்கு முறைகளையும் கடைப்பிடிக்காமல் நிர்வாகத்தினர் அம்மாதிரி செய்வதற்கு மறுத்து விட்டனர். இதனால் மாணவர்களிடையே அமைதியின்மை ஏற்பட்டது. விடுதியில் அமைதியை நிலைநாட்டும் பொருட்டுக் கல்லூரி மூடப்பட்டது.

Mr. CHAIRMAN : Questions 327 and 328 may be taken up together.

### *Former District Board Pharmacists and Maternity Assistants.*

• 327 Q.—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(a) whether it is a fact that some of the Pharmacists and Maternity Assistants, originally belonging to the District Board and whose services were absorbed by the Government with effect from 13th April 1961 as per G.O. Ms. No. 1481, Health, dated 30th June 1964 are yet to be paid their pension as per the Madras Liberalised Pension Rules, 1960;

(b) if so, the reasons therefor; and

(c) the number of persons to whom the pension is yet to be paid ?

### முன்னாள் மாவட்ட வாரிய மருத்து கலப்பவர்கள், மகப்பேறு உதவியாளர்கள்

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

[30th July 1971

(அ) முதலில் மாவட்ட வாரியத்தில் பணியாற்றி வந்தவர்களும், சுகாதாரத் துறையின் 30—6—1964-ம் நாளிட்ட 1481-ம் எண் அரசு ஆணைக்கிணங்க 13—4—1961 முதல் அரசுப் பணியில் எடுத்துக் கொள்ளப்பட்டவர்களுமான மருந்து கலப்பவர்கள், மகப்பேறு உதவியாளர்கள் சிலருக்கு, தமிழ்நாடு 1960-ம் ஆண்டு தாராள ஓய்வூதிய விதிகளுக்கிணங்க இன்னமும் ஓய்வூதியம் அளிக்கப்படவில்லை என்பது உண்மையா?

(இ) ஆம் எனில், அதற்கான காரணங்கள் யாவை?

(உ) எத்தனை பேருக்கு இன்னமும் ஓய்வூதியம் கொடுக்கப்பட வேண்டியுள்ளது?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) & (இ) தொடக்கத்தில், மாவட்டக் கழகங்கள் ஒழிக்கப் பட்டதன் விளைவாக அரசுப் பணியில் சேர்த்துக்கொள்ளப்பட்ட., முன்னாள் மாவட்டக் கழகப் பணியாளர்கள், அரசுப்பணியில் 15 ஆண்டுகட்குக் குறைவாகப் பணியாற்றியிருந்தார்களெனில் அவர்கள் தமிழ்நாடு 1960-ஆம் ஆண்டு தாராள ஓய்வூதிய விதிகளின்கீழ் ஓய்வூதிய நலன் பெறுவதற்குத் தகுதியற்றவர்களாக இருந்தனர். சில நிபந்தனைகட்கு உட்பட்டு, தமிழ்நாடு தாராள ஓய்வூதிய விதிகளை இந்தப் பணியாளர்களுக்கும் பொருந்தச் செய்து சுகாதாரத்துறை 4—11—1970-ஆம் நாளிட்ட அ.ஆ.எண். 2599-இல் அரசு ஆணைகள் பிறப்பித்துள்ளது. கடந்த காலத்தில் ஓய்வுபெற்றவர்கள் நேர்வுகள் அனைத்தையும் இந்த ஆணைகளோடு மறு ஆய்வு செய்து அனுமதிக்கத்தக்க நேர்வுகளில் ஓய்வூதியங்களை ஒப்பளிப்புச் செய்ய நடவடிக்கை எடுக்குமாறு, சுகாதாரப் பணிகள்—குடும்ப நலத்திட்ட இயக்குநர் மாவட்ட மருத்துவ அதிகாரிகட்கு உத்தரவுகள் பிறப்பித்துள்ளார்.

(உ) இதுவரை ஓய்வு பெற்றுள்ளவர்களான, நான்கு மருந்தாளுநர்கட்கும், ஒரு பேறுகால உதவியாளர்க்கும் ஓய்வூதியம் இனிமேல் தான் ஒப்பளிக்கப்படவேண்டும்.

• 328 Q.—THIRU G. SWAMINATHAN: Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(a) whether it is a fact that some of the Pharmacists and Maternity Assistants who originally worked in the Thanjavur District Board and whose services were absorbed by the Government with effect from 13th June 1964 as per G.O. Ms. No. 1481, dated 30th June 1964 have not yet been paid their Gratuity for their period of service in the District Board;

(b) if so, the reasons therefor; and

(c) the number of persons to whom this privilege has been denied?



30th July 1971]

திரு. ஜி. சுவாமிநாதன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) முதலில் தஞ்சாவூர் மாவட்ட வாரியத்தில் பணியாற்றியவர்களும், 36-6-1964-ம் நாளிட்ட 1481-ம் எண் அரசு ஆணையின்படி 13—6—1964 முதல் அரசுப் பணியில் எடுத்துக் கொள்ளப்பட்டவர்களுமான மருந்து கலப்பவர்களுக்கும், மகப்பேறு உதவியாளர்களுக்கும் அவர்கள் மாவட்ட வாரியத்தில் பணியாற்றிய கால அளவுக்கான பணிக்கொடை இன்னமும் கொடுக்கப்படவில்லை என்பது உண்மையா?

(இ) ஆம் எனில், அதற்கான காரணங்கள் யாவை?

(உ) எத்தனை பேருக்கு இச்சிறப்புரிமை மறுக்கப்பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தஞ்சாவூர் மாவட்ட வாரியத்தின் கீழ் உயர்நிலைப்பணியிலும் தாழ்நிலைப்பணியிலும் பணியாற்றிய பணியாளர்கள் மாவட்ட வாரியத்தின்கீழ் வருங்கால வைப்பு நிதி நலன்களுக்கு அவர்கள் அனுமதிக்கப்பட்டதன் முன்னர் உள்ள காலப்பகுதிக்கு பணிக்கொடை அனுமதிக்கப் படுவதற்கு உரியவர்களாயிருந்தனர். ஆனால் கழகத்தின் கீழ் அவர்கள் ஐந்தாண்டுக்குக் குறையாத கால அளவுக்குப் பணியாற்றியிருக்கவேண்டும் என்ற நிபந்தனை இருந்தது. அப்பணிக் கொடை அவர்கள் ஓய்வுபெறும் காலத்துக்கு கொடுக்கப்படத் தக்கதாயிருந்தது. இத்தகைய பணிக்கொடை அளிக்கப் படுவதற்குத் தகுதி உடைய ஆனால், இன்னும் தொகை வழங்கப் படாத மருந்தாளுநர்கள், பேறுகால உதவியாளர்களின் எண்ணிக்கை விவரங்களைத் தருமாறு தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு எழுதிக் கேட்கப்பட்டுள்ளது. அவரிடமிருந்து விவரங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.

### Civil Surgeons.

• 329 Q.—THIRU G. SWAMINATHAN: Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(a) the number of Civil Surgeons who continue to serve in the Medical Colleges in Madras City for more than 10 years; and

(b) whether there is any proposal to post them to mofussil Medical Colleges in the State?

### சிவில் மருத்துவர்கள்

திரு. ஜி. சுவாமிநாதன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சென்னை மாநகரில் உள்ள மருத்துவக் கல்லூரிகளில் பத்து ஆண்டுகளுக்கு மேற்பட்டுப் பணியாற்றும் சிவில் மருத்துவர்கள் எத்தனை பேர்?

(இ) இம்மாநிலத்தில் வெளியூர்களிலுள்ள மருத்துவக் கல்லூரிகளுக்கு அவர்களை அனுப்பும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) 24.

(இ) தற்போதைக்கு இல்லை.

திரு. எஸ். ஜெயராம செட்டியார் : தலைவர் அவர்களே, மிகவும் கெட்டிக்காரர்களாக இருக்கிறவர்கள் தலைநகரத்தில் சொம்ப நாட்கள் இருப்பதால், மொஃபசில் பகுதிகளில் உள்ளவர்கள் தலைநகரிலுள்ள ஜெனரல் ஆஸ்பத்திரிக்குப் போனால்தான் வியாதி நிச்சயமாகக் குணமாகும் என்ற அபிப்ராயத்தில் இருக்கிறார்கள். ஆகையால் கெட்டிக்காரர்களாக இருப்பவர்களை மதுரை, திருச்சி, கோவை போன்ற இடங்களுக்கு மாற்றினால், அங்குள்ளவர் களுக்கும் வசதி கிடைக்கும். அதை அரசு யோசிக்குமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, மருத்துவத்தில் அனுபவம் உள்ளவர்கள் பல்வேறு பகுதிகளில் இருக்கவேண்டுமென்ற பொதுவான கருத்தை அரசு ஏற்றுக்கொண் டிருக்கிறது. ஆனால் மருத்துவத் துறையில் ஆசிரியர்களாக பல ஆண்டுகளாக இருந்தவர்களை மாற்றினால், மாணவர்களுக்குத் தருகிற பயிற்சியின் தரம் குறையும் என்ற காரணத்தால், மாணவர் களும் அவர்களை விரும்புகிறபடியால், அவர்களை போஸ்ட்-கிராஜுவேட் கல்லூரிகளிலிருந்து வேறு இடத்திற்கு எளிதில் மாற்ற முடியாது. இரண்டாவதாக, அவர்களுக்குள்ள சீனியாரிடி படி அந்தத் துறையில் உள்ள முதல் நிலை, இரண்டாம் நிலை என்ற தகுதிப்படி போஸ்ட்-கிராஜுவேட் கல்லூரியில் இடம் பெறுகிற காரணத்தால், முதுநிலையில் உள்ளவர்கள் ரிடையராவதன் மூல மாகத்தான் மாற்றம் ஏற்படுகிறது. அந்த வகையில் மாற்ற முடியாவிட்டாலும், உயர்மட்டப் படிப்பாகிய எம்.டி., எம்.எஸ். பட்டம் பெறுகிறவர்கள் ஆண்டுதோறும் வந்துகொண்டிருப்பதால், பல மாவட்ட மருந்தகங்களில் அவர்கள் இடம்பெறச் செய்யும் முயற்சி அரசாங்கத்தால் மேற்கொள்ளப்படும்.

### L.I.M Doctors.

*330 Q.—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(a) whether it is a fact that representations have been received by the Government from the L.I.M. Doctors to give them an opportunity to qualify for D.M. & S.; and

(b) if so, the action taken by the Government in the matter?





### எல்.ஐ.எம். மருத்துவர்கள்

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) பொது மருத்துவத்திலும் அறுவை மருத்துவத்திலும் டாக்டர் பட்டத்திற்குத் தகுதி பெற தமக்கு வாய்ப்பளிக்க வேண்டுமென்று கோரி, எல்.ஐ.எம். மருத்துவர்களிடமிருந்து முறையீடுகள் அரசுக்கு வந்துள்ளனவா என்பது உண்மையா ?

(ஆ) ஆமெனில், இது குறித்து அரசு மேற்கொண்ட நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) ஆம்.

(ஆ) மருத்துவக் கல்வி இயக்குநரிடம் சில விவரங்கள் கேட் கப்பட்டுள்ளது.

திரு. ஜி. சுவாமிநாதன் : எந்தவிதமான விவரங்கள் கேட்கப் பட்டன ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, எல்.ஐ.எம். படித்தவர்கள் ஒரு காலத்தில் டிப்ளமோ தேர்ச்சி பெற்று, அதற்குப் பிறகு கன்டென்ஸ்டு எம்.பி.பி.எஸ் படித்துத் தேர்வு பெற வாய்ப்பு இருந்தது. இடைக்காலத்தில் அப்படிப் படிக்க இருந்த வாய்ப்பும் வசதியும் குறைந்து அந்த வகுப்பை நடத்தும் நிலைமை இல்லாமல் போனது. கன்டென்ஸ்டு எம்.பி.பி.எஸ். கோர்ஸ் நடத்துவதற்கு இந்திய மெடிகல் கவுன்சில் அனுமதி அளிக்க மறுத்துவிட்டது. "The course will not be permitted beyond 1970". இதை 1970-ல் மாறுபடியும் டி.எம்.எஸ். தோற்றுவிக்க வேண்டுமென்றால் மூன்று கீழ்ப் பாக்கத்தில் இந்திய மருத்துவக் கல்லூரியாக இருந்தது இப்போது மாடர்ன் அலோபதி மெடிகல் கல்லூரியாக மாற்றப் பட்டுவிட்டதால், அங்கேயும் அதைத் தொடர்ந்து வாய்ப்பு குறைவாக இருக்கிறது. எல்.ஐ.எம். பெற்றவர்கள் எவ்வளவு பேர் இதைப் படிக்க முன்வருவார்கள் என்ற விவரம் கேட்கப் பட்டது. வருகின்ற விண்ணப்பத்தையும் இருக்கின்ற வாய்ப்பையும் கருதி அதைப்பற்றி அரசு முடிவெடுக்கும்.

### Taxi Strike.

*7 S. N. Q.—THIRU V. ISVARMURTI : Will the Hon. the Minister for Transport be pleased to state—

(a) whether the Government are aware of the strike move of the Taximen on the 19th July 1971 in Madras City;

(b) if so, the reasons therefor; and

(c) the action taken thereon ?

### டாக்ஸி வேலை நிறுத்தம்.

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சென்னை மாநகரில் 1971 ஜூலை 19-ஆம் நாளன்று வாடகை மோட்டார் வண்டி வலவர்கள் வேலை நிறுத்தம் செய்யக் கருதியிருந்தது பற்றி அரசு அறியுமா?

(இ) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவை?

(உ) அதன் மீது எடுத்த நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன்: 19-7-1971 அன்று டாக்ஸி வேலை நிறுத்தம் இல்லை.

## UNSTARRED QUESTIONS.

### *Counterfeit Currency Notes*

36 Q.—THIRU G. SWAMINATHAN: Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) the number of cases of counterfeiting of currency notes detected in the State during the years 1968, 1969 and 1970; and

(b) the action taken by the Government to wipe out such criminal activities?

A.—

(a)

| Year. | Number of cases detected. |
|---|---|
| 1968 ... ... ... ... ... ... | 91 |
| 1969 ... ... ... ... ... ... | 30 |
| 1970 ... ... ... ... ... ... | 86 |

(b) A separate cell consisting of three Inspectors, six Sub-Inspectors, four Head Constables and six Police Constables in the Crime Branch, Criminal Investigation Department has been formed to effectively tackle this problem.

### நக்ஸலைட் இயக்கம்.

37 வினா—திரு. வி. தங்கபாண்டியன்: மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் 1970-ம் ஆண்டு நவம்பர் மாதத்தில் நக்சலைட் இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் கைது செய்யப் பட்டார்களா?

(இ) கைது செய்யப்பட்டவர்கள் நாட்டு வெடி குண்டுகள் வைத்திருந்தார்கள் என்பது உண்மையா?

(உ) இவர்களுக்கும், சோன [illegible] தொடர்பு இருப்பதாக விசாரணையில் தெரிய வருகிறதா?





A.—

(a) Yes. One person was arrested on 27th November 1970.

(b) No.

(c) Yes.

### *Coin Shortage*

38 Q.—THIRU V. ISVARMURTI: Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether the Government are aware of coin shortage affecting the Hotel industry in Madras City about May 1971; and

(b) if so, the details thereof?

A.—

(a) No, Sir.

(b) Does not arise.

### *Graduate Teachers*

39 Q.—THIRU D. SANTOSHAM: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(a) whether any assurances have been given to the graduate teachers in the State that their scales of pay as recommended by the Second Pay Commission will be revised; and

(b) if so, the details thereof?

A.—

(a) No.

(b) Does not arise.

### *Rajah Serfoji (Government) College*

40 Q.—THIRU G. SWAMINATHAN: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(a) whether it is a fact that the accounts of Rajah Serfoji (Government) College were not audited for the period of four years; and

(b) if so, the reasons therefor?

A.—

(a) Yes.

(b) Consequent on the opening of new courses every year and due to enrolment of more and more students, the audit of accounts in Rajah Serfoji Government College could not be done. When departmental audit of Government College accounts was instituted in 1948, there was only 10 Government Colleges. Now there are 48 Government Colleges and the work has increased correspondingly. However, the Director of Collegiate Education has taken steps to clear all the arrears.

[30th July 1971

*Survey on exports of select commodities*

41 Q.—THIRU V. ISVARMURTI: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether the services of the Indian Institute of Foreign Trade were commissioned by the State Govrenment for conducting a survey for boosting up the exports of select commodties from this State; and

(b) if so, the details thereof ?

A.—

(a) Yes.

(b) A statement@ is placed on the table of the House.

*Scooter Plant.*

42 Q.—THIRU V. ISVARMURTI: Will the Hon. the Minister for Industries be pleased to state:

(a) whether any licence to set up a Scooter Plant at Ambattur has been issued in Private Sector; and

(b) if so, the details thereof ?

A.—

(a) & (b) The Government of India have issued a letter of 'intent' to Thiru Ramanlal N. Trived, Madras, valid up to 6th October 1971, to set up a new industrial undertaking at Ambattur, for the manufacture of 24,000 Scooters per annum subject to the following conditions:—

(i) No foreign collaboration will be allowed;

(ii) Phased manufacturing programme and arrangements for import of capital goods are settled to the satisfaction of Government of India;

(iii) 40 per cent of the ancillary items will be procured from Small Scale Sector; and

(iv) Prototype should be developed, tested and approved for road worthiness by an inspection agency nominated by Government of India.

The implementation of the letter of intent by the Company and the issue of a licence by the Government of India are watched.

*Arasu Cements.*

43 Q.—THIRU M. ARUMUGASWAMI: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) the number of persons appointed as stockists, district-wise, for the sale of "Arasu Cements" during the years 1969-70 and 1970-71; and

(b) the basis on which these agents were selected ?

A.—

(a) and (b) A statement@ is placed on the table of the House.

@ Printed as Appendix III on page 1029-1030.



30th July 1971]

*II Grade Assistant Public Prosecutors.*

44 Q.—THIRU D. SANTOSHAM: Will the Hon. the Minister for Industries be pleased to state:

(a) whether seniority list has been prepared for II Grade Assistant Public Prosecutors after making the whole State as the Unit for the cadre of Assistant Public Prosecutors; and

(b) if not, the reasons therefor ?

A.—

(a) It is under preparation.

(b) Does not arise.

*Master Plan for Kodaikanal.*

45 Q.—THIRU G. SWAMINATHAN: Will the Hon. the Minister for Backward Classes be pleased to state:

(a) whether there is any proposal to formulate a master plan to develop Kodaikanal as a summer resort ; and

(b) if so, the details thereof ?

A.—

(a) and (b) There is no proposal for a master plan but the question of developing Kodaikanal is under preliminary examination.

*Awards by Mylapore Academy.*

46 Q.—THIRU V. ISVARMURTI: Will the Hon. the Minister for Transport be pleased to state:

(a) whether the Mylapore Academy gave awards for the best conductors and drivers in State Transport Services for the year 1970-71; and

(b) if so, the details thereof ?

A.—

(a) Yes.

(b) Thiruvalargal N. M. Munuswamy, Driver, and E. Balakurup, Conductor, were presented with medallions by the Mylapore Academy.

@ Printed as Appendix IV on page 1029-1030.

30th July 1971

MR. CHAIRMAN : Questions are over.

[*Note.*—Asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

## II. ANNOUNCEMENTS.

### (1) MESSAGE FROM THE GOVERNOR.

MR. CHAIRMAN : I have received messages from the Governor of Tamil Nadu recommending to the Legislative Council the consideration of the following Bills :—

(1) The Tamil Nadu Town and Country Planning Bill, 1971.

(2) The Tamil Nadu Buildings (Lease and Rent Control) Second Amendment Bill, 1971.

(3) The Tamil Nadu Practitioners of Homeopathy Bill, 1971.

(4) The Tamil Nadu Registration of Practitioners of Integrated Medicine (Amendment) Bill, 1971.

### (2) MESSAGE FROM THE ASSEMBLY.

MR. CHAIRMAN : I have also received messages from the Hon. Speaker, Legislative Assembly, transmitting copies of the following Bills, as passed by the Assembly and signed by him for the concurrence of the Council :—

(1) The Madras City Municipal Corporation and Tamil Nadu District Municipalities (Amendment and Extension of term of Office) Bill, 1971 (L.A. Bill No. 27 of 1971).

(2) The Tamil Nadu Panchayats (Amendment) Bill, 1971 (L.A. Bill No. 28 of 1971).

(3) The Tamil Nadu Town and Country Planning Bill, 1971 (L.A. Bill No. 1 of 1971).

(4) The Tamil Nadu Registration of Practitioners of Integrated Medicine (Amendment) Bill, 1971 (L.A. Bill No. 26 of 1971).

(5) The Tamil Nadu Buildings (Lease and Rent Control) Validation of Proceedings Bill, 1971 (L.A. Bill No. 17 of 1971).

(6) The Tamil Nadu Buildings (Lease and Rent Control) Second Amendment Bill, 1971 (L.A. Bill No. 24 of 1971).

I have further received a message from the Hon. Speaker, Legislative Assembly, transmitting a copy of the Motion passed on the 29th July 1971, by the Tamil Nadu Legislative Assembly, desiring to obtain the concurrence of the Council in setting up a Joint Committee of both the Houses consisting of 18 members (12 Members from the Legislative Assembly and 6 Members from the Legislative Council) to consider the Tamil Nadu Practitioners



30th July 1971] [Mr. Chairman]

of Homeopathy Bill, 1971 (L.A. Bill No. 25 of 1971) and selecting the following members of the Legislative Assembly to serve on such a Joint Select Committee :—

1. The Hon. Thirumathi Sathiavani Muthu.
2. Thirumathi Jothi Venkatachellum.
3. Thiru Manali C. Kandasamy.
4. Thiru A. M. Mohideen.
5. Thiru A. Subramaniam.
6. Dr. H. V. Hande.
7. Thiru A. Swamidhas.
8. Thiru N. Veerasamy.
9. Thiru P. Malaichamy.
10. Thiru S. Murugaiyan.
11. Thiru G. R. Edmund.
12. Thiru P. Muthuswamy.

Under rule 139 (1) of the Assembly Rules, the Hon. Speaker has nominated the Hon. Thiru K. Anbazhagan, Minister for Public Health, as a Member of the Joint Select Committee.

## III. CALLING ATTENTION TO SHORTAGE OF SMALL COINS IN THE STATE.

**திரு. ஜி. கவாமிநாதன்:** நம்முடைய மாநிலத்தில் சிறு நாணயங்கள் பற்றாக்குறை இருப்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

(DEPUTY CHAIRMAN IN THE CHAIR.)

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** கலிவாவர்களே, சென்னையிலுள்ள இந்திய ரிசர்வ் வங்கி, தனது பணப் புழக்க அறைகளிலும் (கவுண்டர்ஸ்) வெளியூர்களில் உள்ள தனது சில்லரை நாணய நிலையங்களிலும் ஏற்பட்ட சில்லறை நாணயங்களின் தேவையை, தன்னிடமிருந்து சில்லரை நாணய இருப்பு நிலையை யொட்டியும், நாணயச்சாலைகளிலிருந்து அவ்வப்போது சிறு சிறு அளவுகளில் கிடைக்கின்ற சில்லறை நாணயங்களின் அளவை யொட்டியும், இயன்ற மட்டில் நிறைவு செய்துள்ளதாக அறிவித் துள்ளது. ரயில்வேக்கள், அஞ்சல் தந்திக் துறை, தொலைபேசித் துறை போக்குவரத்துத் துறை போன்ற அதிகத் தொகை கட்டு பவர்களிடமிருந்து இந்திய ரிசர்வ் வங்கிக்குச் சில்லறை நாணயங்கள் கணிசமான அளவுக்குத் திரும்பாத காரணத்தால் தற்காலிகமாக இந்த நாணய மூடை ஏற்பட்டது.

[மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி] [30th July 1971

நாணயச் சாலைகளிலிருந்து எல்லா மதிப்புகளிலும் நாணயங்கள் பெருவாரியாக வரத் தலைப்பட்டவுடன், ரிசர்வ் வங்கி தனது அதிகார வரம்பின்கீழ் வரும் சில்லறை நாணய நிலையங்களுக்குச் சென்று சில்லறை நாணயங்களை இப்போது படிப்படியாக வழங்குவதுடன், தனது பலரப் புழக்க அறைகளில் பொது மக்கள், உள்ளூர் வங்கிகள் கேட்கின்றபோது நாணயங்களையும் கொடுத்து வருகிறது. இப்போது நிலைமை கணிசமான அளவுக்குச் சீராகிவிட்டதாகவும், இன்னும் ஓரிரு மாதங்களில் மேலும் சீரடையக்கூடும் என்றும் ரிசர்வ் வங்கி அறிவித்துள்ளது.

## IV. GOVERNMENT MOTIONS.

(1) SELECTION OF MEMBERS TO JOINT COMMITTEE TO ADVISE THE MINISTER *re* THE TAMIL NADU LAND REFORMS (FIXATION OF CEILING ON LAND) ACT, 1961.

மாண்புமிகு திரு. பா. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, " தமிழ்நாடு 1961-ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்ச வரம்பு கட்டுதல்) சட்டத்தில் கண்டுள்ள விலக்குகளை நீக்குதல் அல்லது திருத்தம் செய்தல் பற்றிய தன்மை, நோக்கம் ஆகியவற்றைப் பரிசீலிப்பதில் வருவாய்த் துறை பொறுப்பேற்றுள்ள அமைச்சருக்கு ஆலோசனை வழங்க இரு அவைகளின் 24 உறுப்பினர்கள் அடங்கிய (16 சட்டப் பேரவை உறுப்பினர்களும் 8 சட்ட மன்ற மேலவை உறுப்பினர்களும்) கூட்டுக்குழு ஒன்றை அமைக்கச் சட்டப் பேரவை தெரிவித்துள்ள கருத்துரைக்குச் சட்ட மன்ற மேலவை இசைவதுடன் இக் கூட்டுக் குழுவில் கீழ்க்கண்ட மேலவை உறுப்பினர்களைப் பணியாற்றத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் " என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன் :—

" 1. திரு. பி. நாராயணசாமி
2. திரு. டி. கே. பொன்னுவேலு
3. திரு. எம். சங்கரலிங்கம்
4. திரு. எம். ஆறுமுகசாமி
5. திரு. சா. கணேசன்
6. திரு. எஸ். ஜெயராம செட்டியார்
7. திரு. கே. ராஜாராம்
8. திரு. என். சுந்தரேசத் தேவர்."

DEPUTY CHAIRMAN : The question is—

"That this House concurs with the Assembly in setting up a Joint Committee of both the Houses consisting of 24 Members (16 Members from the Legislative Assembly and 8 Members from the Legislative Council) to advise the Minister-in-charge of Revenue in examining the nature and scope of deletion or modifications of



30th July 1971] [Deputy Chairman]

exemptions contained in the Tamil Nadu Land Reforms (Fixation of Ceiling on Land) Act, 1961 and that the following Members of this House be selected to serve on such a Joint Committee :—

1. Thiru P. Narayanaswamy.
2. Thiru T. K. Ponnuvelu.
3. Thiru M. Sankaralingam.
4. Thiru M. Arumugaswamy.
5. Thiru Saw Ganesan.
6. Thiru S. Jayarama Reddiar.
7. Thiru K. Rajaram.
8. Thiru N. Sundaresa Thevar.

The motion was put and carried.

(2) APPROVAL OF AMENDMENTS TO THE MADRAS LAND REFORMS (DISPOSAL OF SURPLUS LAND) RULES, 1965.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : " வருவாய்த் துறையில் 25-11-1965 நாளிட்ட எஸ். ஆர். ஓ. எ-1240/1965-ஆம் எண் அறிவிப்புடன் 1-12-1965 நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் ஐந்தாம் பாகத்தில் 1284—1296 பக்கங்களில் (ஆங்கிலத்தில்) வெளியிடப்பட்டு பின்னர் திருத்தப்பட்டுள்ள தமிழ்நாடு 1965-ஆம் ஆண்டு நிலச்சீர்திருத்தங்கள் (உபரி நிலங்களை ஒரு வகை செய்தல்) விதிகளில், தமிழ்நாடு 1961-ஆம் ஆண்டு நிலச்சீர்திருத்தங்கள் (நில உச்ச வரம்பு கட்டுதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 58/1961) 24-வது பிரிவின் (1) உட்பிரிவின்கீழ் செய்யக் கருதியுள்ள கீழ்க்காணும் திருத்தத்திற்கு மேற்சொன்ன உட்பிரிவின் வரம்பு நிபந்தனையில் சொல்லியுள்ளவாறு ஏற்பளிக்கும்படி முன்மொழிகிறேன்.

**வரைவு திருத்தங்கள்**

**மேற்படி விதிகளில் :—**

(1) 1-வது விதியில், " சென்னை 1965-ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (உபரி நிலங்களை ஒரு வகை செய்தல்) விதிகள் " என்ற சொற்றொடருக்குப் பதிலாக, " தமிழ்நாடு 1965-ஆம் ஆண்டு நிலச்சீர்திருத்தங்கள் (உபரி நிலங்களை ஒரு வகை செய்தல்) விதிகள் " என்ற சொற்றொடர் அமைத்துக்கொள்ளப்பட வேண்டும்.

(2) 2-வது விதியில் (எ) துணைவிதியில், " சென்னை 1961-ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்ச வரம்பு கட்டுதல்) சட்டம் (சென்னை சட்டம் 58/1961) " என்ற சொற்றொடருக்குப்

[மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்] [30th July 1971

பதிலாக "தமிழ்நாடு 1961-ஆம் ஆண்டு நிலச்சீர்திருத்தங்கள் (நில உச்ச வரம்பு கட்டுதல்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 58/1961)" என்ற சொற்றொடர் அமைத்துக் கொள்ளப்பட வேண்டும்.

(3) 5-வது துணை விதியில் (1) துணைவிதியில் (iii) பகுதிக்குப் பதிலாக பின்வரும் பகுதி அமைத்துக்கொள்ளப்பட வேண்டும், அதாவது :

"இந்திய தேசிய ராணுவத்தில் பணியாற்றியவர்களும் 1950 சனவரி 26-ஆம் நாளுக்கு முன்னர் ஓய்வு பெற்ற அல்லது படைக்கலைப்புக் காரணமாக அனுப்பிவிடப்பட்ட ராணுவப் படைஞர்களும் உட்பட ராணுவப் படைகளைச் சேர்ந்துள்ள அல்லது சேர்ந்திருந்த ஒருவர்."

(4) 9-வது விதியில் (iv) துணைவிதியில், "சென்னை, 1864-ஆம் ஆண்டு வரி வருவாய் வசூல் சட்டம்" என்ற சொற்றொடருக்குப் பதிலாக "தமிழ்நாடு 1864-ஆம் ஆண்டு வரி வருவாய் வசூல் சட்டம்" என்ற சொற்றொடர் அமைத்துக் கொள்ளப்பட வேண்டும்.

(5) நிலச் சீர்திருத்த (உபரி நிலத்தை ஒரு வகை செய்தல்) விதிகளைச் சேர்ந்த ஏ, பி, சி, டி படிவங்களில் "சென்னை 1965-ஆம் ஆண்டு நிலச்சீர்திருத்தங்கள் (உபரி நிலங்களை ஒரு வகை செய்தல்) விதிகள்" என்ற சொற்றொடருக்குப் பதிலாக, "தமிழ்நாடு 1965-ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (உபரி நிலங்களை ஒரு வகை செய்தல்) விதிகள்" என்ற சொற்றொடர் அமைத்துக் கொள்ளப்பட வேண்டும்.

(6) மேற்சொன்ன விதிகளைச் சேர்ந்த இ. எப். படிவங்களில் "சென்னை 1965-ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (உபரி நிலங்களை ஒரு வகை செய்தல்) விதிகள்" என்ற சொற்றொடருக்கும் "ஸ்ரீ" என்ற சொல்லுக்கும் பதிலாக "தமிழ்நாடு 1965-ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (உபரி நிலங்களை ஒரு வகை செய்தல்) விதிகள்" என்ற சொற்றொடரையும் "திரு" என்ற சொல்லையும் முறையே அமைத்துக்கொள்ள வேண்டும்".

DEPUTY CHAIRMAN : Does any hon. Member want to speak on this motion ?

(No hon. Member rose.)

DEPUTY CHAIRMAN : The question is—

5-30 p.m.

"That the following amendments to the Madras Land Reforms (Disposal of Surplus Land) Rules, 1965, published with Revenue Department Notification S.R.O. No. A-1240 of 1965, dated 25th November 1965, at pages 1284—1296 of Part V of the *Fort St. George Gazette*, dated the 1st December 1965, as subsequently amended, which it is proposed to issue under sub-section



30th July 1971] [Deputy Chairman]

(1) of Section 94 of the Tamil Nadu Land Reforms (Fixation of Ceiling on Land) Act, 1961 (Tamil Nadu Act 58 of 1961), be approved as required by the proviso to the said sub-section :

## DRAFT AMENDMENTS.

In the said rules—

(i) in rule 1, for the expression "Madras Land Reforms (Disposal of Surplus Land) Rules, 1965" the expression "Tamil Nadu Land Reforms (Disposal of Surplus Land) Rules, 1965" shall be substituted ;

(2) in sub-rule (*a*) of rule 2, for the expression "Madras Land Reforms (Fixation of Ceiling on Land) Act, 1961 (Madras Act 58 of 1961)", the expression "Tamil Nadu Land Reforms (Fixation of Ceiling on Land) Act, 1961 (Tamil Nadu Act 58 of 1961)" shall be substituted;

(3) for clause (iii) of sub-rule (1) of rule 5, the following shall be substituted, namely :—

"A person who is or who has been a member of the Armed Forces, including persons who have served in the Indian National Army and members of the Armed Forces who retired or were disbanded before the 26th January 1950".

(4) in sub-rule (vi) of rule 9, for the expression "Madras Revenue Recovery Act, 1864", the expression "Tamil Nadu Revenue Recovery Act, 1864", shall be substituted;

(5) in Forms A, B, C and D for the expression "Madras Land Reforms (Disposal of Surplus Land) Rules, 1965", the expression "Tamil Nadu Reforms (Disposal of Surplus Land) Rules, 1965" shall be substituted;

(6) in Forms E and F for the expressions "Madras Land Reforms (Disposal of Surplus Land) Rules, 1965, and 'Sri' the expressions "Tamil Nadu Reforms (Disposal of Surplus Land Rules, 1965" and "Thiru" respectively shall be substituted.

The motion was put and carried.

## V. GOVERNMENT BILLS.

(1) THE MADRAS CITY MUNICIPAL CORPORATION AND TAMIL NADU DISTRICT MUNICIPALITIES (AMENDMENT AND EXTENSION OF TERM OF OFFICE) BILL, 1971 (L.A. BILL NO. 27 OF 1971).

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, சட்டப் பேரவையால் நிறை வேற்றப்பட்ட தமிழ்நாடு 1971-ஆம் ஆண்டு சென்னை நகராட்சி,

[30th July 1971

தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (திருத்தப் பதவிக்கால நீடிப்பு) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 27/1971) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டுமென்று முன் மொழிகிறேன்.

நகராட்சி மன்றங்கள், மாநகராட்சி மன்றங்களின் பதவிக் காலம் மூன்றாண்டுக்குள்ளேயாகுமென்பதை மாண்புமிகு உறுப் பினர்கள் அறிவர். ஊராட்சி, ஊராட்சி ஒன்றியங்களின் பதவிக் காலத்தைப் போன்றே, இம் மன்றங்களின் பதவிக் காலத்தையும் மூன்றாண்டுகளிலிருந்து ஐந்தாண்டுகளுக்கு உயர்த்தும் யோசனை அரசின் ஆய்வில் நெடுங்காலமாக இருந்து வந்தது. பதவிக் காலத்தை மூன்றாண்டிலிருந்து ஐந்தாண்டுகளுக்கு உயர்த்த வேண்டுமென்று பற்பல நகராட்சி மன்றங்களும், நகராட்சித் தலைவர்கள் கழகமும் கடந்த காலத்தில் வேண்டுகோள் விடுத் திருந்தனர். பதவிக் காலத்தை மூன்றாண்டிலிருந்து ஐந்தாண்டு களுக்கு உயர்த்த வேண்டுமென்ற வேண்டுதலை அரசு நன்றாக ஆய்வு செய்த பின்னர், அதனை ஏற்றுக்கொள்வதென முடிவு செய்துள்ளது. நகராட்சி மன்றங்கள் அனைத்திற்கும் ஒரே ஆண்டிலேயே, அதாவது 1974-ஆம் ஆண்டிலேயே தேர்தல்களை நடத்துவதென்றும் அரசு முடிவு செய்துள்ளது. அரசின் இந்த முடிவுகள் காரணமாக, தற்போதுள்ள எல்லா நகராட்சி மன்றங் கள், மற்றும் இனி அமைக்கப்படவிருக்கும் நகராட்சி மன்றங் களின் பதவிக்காலம் 1—5—1974 அன்றுவரை நீடிக்கப்படும். சென்னை மாநகராட்சியின் பதவிக்காலம் 1—11—1973 அன்று வரை நீடிக்கப்படும். மாநகராட்சி மன்றங்கள், ஊராட்சி மன்றங்களின் ஐந்தாண்டுப் பதவிக் காலமானது, 1973-ஆம் ஆண்டு நவம்பர் திங்களிலும், 1974-ஆம் ஆண்டு, மே திங்களிலும் நடைபெறும் சாதாரணத் தேர்தல்களுக்குப் பின்பு முறையே சென்னை மாநகராட்சி மன்றத்திற்கும் இதர நகராட்சி மன்றங்களுக்கும் பொருந்தும்.

மாநகராட்சியாக அமைக்கப்பட்டுள்ள மதுரை நகராட்சி மன்றமானது 1971-ம் ஆண்டு மதுரை மாநகர் மாநகராட்சி அவசரச் சட்டம் மூலம் செயற்படுத்தப்படுகிறது. இவ்வசரச் சட்டம் இந்தச் சட்டப் பேரவை, சட்ட மேலவைக் கூட்டத் தொடரில் ஒப்புதலைப் பெற வேண்டியுள்ளதால், அது இன்னும் சட்டமாகவில்லை. எனவேதான் மதுரை மாநகராட்சியின் பதவிக் காலத்தை மூன்றாண்டிலிருந்து ஐந்தாண்டுகளுக்கு உயர்த்தும் ஒரு திருத்தத்தை இம் மசோதாவிலேயே சேர்க்க முடியவில்லை. தற்போதுள்ள மதுரை மாநகராட்சி மன்றத்தின் பதவிக் காலம் 28—4—1972 அன்றுடன் முடிவுறும். எனவே, அதன் பதவிக்

தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (திருத்த பதவிக்கால நீட்டிப்பு)

@ Printed as Appendix V on pages 1039-1052.



30th July 1971] [திரு. இரா. நெடுஞ்செழியன்]

மூன்றாண்டிலிருந்து ஐந்தாண்டுகளுக்கு உயர்த்துவதற்கு வகை யளிக்கக் கூடிய ஒரு தனிச் சட்டத்தை உருவாக்கும் பணி விரைவி லேயே மேற்கொள்ளப்படும்.

1919-ஆம் ஆண்டுச் சென்னை மாநகர், மாநகராட்சிச் சட்டத் திற்கு விரிவான திருத்தங்களை மேற்கொள்ளும் யோசனை அரசின் கவனத்தில் கடந்த சில ஆண்டுகளாக இருந்து வந்துள்ளது. 1919-ஆம் ஆண்டுச் சட்டத்தை மேலும் பயனுள்ள முறையில் செயற்படுத்துவதற்கு ஏற்ற வகையில் சட்டத்திருத்தங்களைக் கூறுவதுடன், சட்டத்தைச் செயற்படுத்துவதிலுள்ள சிரமங்களைக் களைதற்குரிய யோசனைகளைத் தருதற்குமென மாநகராட்சி மன்றம் அமைத்த ஒரு தனிக்குழு பரிந்துரைகள் செய்துள்ளது. மாநகராட்சி மன்றத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பரிந்துரைகளை அரசு ஆய்வு செய்கிறது. 1961-ஆம் ஆண்டில் கொணரப்பட்ட மாநகராட்சி மன்ற நிர்வாக முறையை மாற்ற வேண்டுமென்பது இத் தனிக்குழுவின் தலையாய பரிந்துரைகளில் ஒன்றாகும். வட்டக் குழுக்கள், மையக் குழுக்கள் மற்றும் ஒப்பந்த உரிமை மேல் முறையீட்டுக் குழுக்களால் மாநகராட்சி தற்போது நிர்வகிக் கப்படுகிறது.

நகரில் அங்கங்கு செய்யப்பட வேண்டியவற்றை வட்டக் குழுக் களும், பொதுவானவற்றை மையக் குழுவும் கவனிக்கின்றன. நிதியொதுக்கீடுகள் பற்றியோ, மற்ற வட்டங்களின் தேவைகளுக் குரிய விளைவுகளையோ முன் அல்லது பின் ஆற்றவேண்டிய காரியங்கள் பற்றியோ ஆராயாமல் பரந்த அதிகாரங்கள் கொண்ட ஒவ்வொரு வட்டக் குழுவும், வேலைத் திட்டங்களுக்கு ஒப்புதல் வழங்கிவிட முடிகிறது. ஒருங்கிணைந்த, கூட்டு முயற்சியின் அடிப் படையில் மாநகரை வளர்ச்சி பெறச் செய்வது மேற்கண்ட நிலை காரணமாகச் சிரமமாகிவிடுகிறது. உயர் நிர்வாக அங்கமாக விளங்கும் மன்றத்திற்கு, வட்டங்களில் நிகழ்வது சரியாகத் தெரிவ தில்லை. எதற்காக இக்குழுக்கள் உண்டாக்கப்பட்டனவோ, அதனை அவை நிறைவு செய்யவில்லை. இதனைக் களைவதற்கென, மாநகராட்சி மன்றம் ஒருமனதாக ஒரு நிர்மானம் நிறைவேற்றி யுள்ளது. தற்போதுள்ள மைய, வட்டக் குழுக்களுக்கு மாறாக, செயற்படும் நிலைக் குழுக்களை உண்டாக்கி, அவற்றிடம் ஒப்பந்தம் மற்றும் உரிமை முறையீடுகளுக்குரிய அதிகாரங்களை ஒப்படைக் கும் பழைய முறையைக் கொணர வேண்டுமென்பதே அத்தீர் மானம். கூடிய விரைவில் கொணரப்படவிருக்கும் விரிவான திருத்தங்களுக்குக் காத்திராமல், மாநகராட்சி மன்றத்தின் இதர பரிந்துரைகளை விரைவாக நிறைவேற்ற வேண்டியிருப்பதால், சட்டத்திலுள்ள மாதிரிப் பட்டியலில் வரும் விதித் துறைகளை மட்டும் திருத்துவதற்குத் தற்போது ஆவன செய்யப்படுகிறது. எனவே, 1961-க்கு முன்னிருந்த செயற்படும் குழுக்களை மீண்டும் கொணரவும், மற்றும் அதன் விளைவாக மற்ற விதித் துறைகளையும் திருத்த முறையில் மாற்றவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

[திரு. இரா. நெடுஞ்செழியன்] [30th July 1971

தற்போதுள்ள மன்றத்தில் ஒரு பெண் கூட அங்கம் வகிக்கவில்லையென்பதைக் குறிப்பிட்டுக் கூறலாம். மன்றத்தில் போதுமான பெண்கள் அங்கம் வகிக்க வேண்டியது நலமெனக் கருதப்படுவதால், தேவையான எண்ணிக்கைக்குப் பெண் உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப் படவில்லையாயின், ஆறு பெண்கள் வரை மன்றத்தில் சேர்த்துக் கொள்ள வகை செய்யும் விதித்துறையும் மசோதாவில் சேர்க்கப்பட்டுள்ளது. மதிப்பீடுகளுக்கு ஒப்பளித்தல், ஒப்பந்தங்களை ஏற்றுக்கொள்ளல், 'டெண்டர்' களுக்கு முடிவு கூறல், அசையும் அசையாச் சொத்துக்களின் பேரில் முடிவான யிடல் ஆகியவற்றில் இந்த செயற்படும் நிலைக் குழுக்கள் ஓளவு நிதியதிகாரம் பெறும்.

சில நேர்வுகளிலும், நிதியொதுக்கங்களைக் கட்டுப்படுத்துவதிலும் ஏற்படும் செயல்முறையான சிரமங்களைக் களைவதற்கெனவும், மன்றம் நிலைக்குழுக்கள் போன்றவை நிறைவேற்றும் தீர்மானங்களின் சட்ட நீதியை முடிவாகத் தீர்மானிப்பதிலும், அரசிற்கு அதிகாரம் அளிப்பதற்கு வகை செய்யும் முறையில் தற்போதுள்ள விதித்துறைகளை விரிவாக்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. மேற்காணும் குறிக்கோள்களை இம் மசோதா அடைய விழைகிறது.

சென்னை மாநகராட்சி தற்போது விதித்துவரும் சொத்து வரியின் உச்ச வரம்பினை உயர்த்துவதற்கான திருத்தம் இம் மசோதாவில் சேர்க்கப்படவில்லை. இத்திருத்தத்தை மத்திய அரசுடன் கலந்துகொண்டு செய்யவேண்டியிருப்பதால், கூடிய விரைவில் கொணரப்படவிருக்கும் விரிவான திருத்தங்களில் இது சேர்த்துக் கொள்ளப்படும்.

இச் சொற்களோடு இம்மசோதாவின் இவ்வவையின் ஆய்விற்கு வைக்கிறேன்.

DEPUTY CHAIRMAN : Motion moved—

"That the Madras City Municipal Corporation and Tamil Nadu District Municipalities (Amendment and Extension of Term of Office) Bill, 1971 (L.A. Bill No. 27 of 1971), as passed by the Assembly, be taken into consideration."

திரு. கே. எஸ். அப்துல் வகாப் : மாண்புமிகு துணைத் தலைவர்களே, முனிசிபாலிடி திருத்த மசோதாவின் பேரில் பேச வாய்ப்பு கிடைத்தமைக்காக என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். முனிசிபாலிடிகளுக்கு அதிக அதிகாரம் கொடுக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை நீண்ட காலமாகப் பூர்த்தி செய்யப்படாமல் இருந்து வருகின்றது. தற்பொழுது கொண்டுவரப்படும் திருத்தத்தில் அதிக அதிகாரங்கள் கொடுக்கக் கூடிய வகையிலே இருக்கலாம் என்று எதிர்பார்த்தேன். ஆனால், அமைச்சர் அவர்கள் பேசிய சமயத்தில் அது தங்கள் கவனத்தில் இருப்பதாகவும் [illegible]



30th July 1971] [திரு. கே. எஸ். அப்துல் வகாப்]

விரைவில் விரிவான திருத்த மசோதா கொண்டு வரவிருக்கின்றோம் என்றும் சொன்னார்கள். முனிசிபாலிடிகளுக்கு அதிக அதிகாரங்கள் கொடுக்கப்பட வேண்டும் என்பது மிக அவசியமானது என்பதை நான் இங்கு வலியுறுத்திச் சொல்லிக்கொள்கிறேன். அதை ஆராய்வதற்காக ஒரு குழு நியமித்து எந்தெந்த வகையான அதிகாரங்கள் கூடுதலாகக் கொடுக்கலாம் என்பதற்கு அந்தக் குழுவின் சிபாரிசுகளின் அடிப்படையில் அரசு விரைவில் ஒரு முடிவு எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

எந்த வேலையை எடுத்தாலும், முனிசிபாலிடி சம்பந்தமாக முக்கியமான வேலைகள் இருந்தால், மெட்ராசுக்கு வந்துதான் வேலை நடக்க வேண்டிய நிலை தற்பொழுது இருந்துகொண்டிருக்கிறது. இதனால், தெற்கத்திய மாவட்டங்களிலே இருக்கின்ற மக்களுக்கு மிகவும் சிரமம் ஏற்படுகிறது. அதற்காக தெற்கத்திய மாவட்டங்களிலே இருக்கின்ற ஒரு தலைநகரத்திலே துணை ஆபீஸ், அதாவது "பிராஞ்சு ஹெட் ஆபீஸ்" என்று நிர்ணயித்து தெற்கத்திய மாவட்டங்களிலே உள்ள மக்களுடைய பிரச்னைகள் அங்கேயே தீர்க்கப்படுவதற்கு இந்த அரசு ஒரு வகை செய்தால், அது பெரிதும் உதவியாக இருக்கும் என்ற கருத்தினை நான் இங்கே சொல்லிக்கொள்கிறேன். அடுத்து, முனிசிபல் கவுன்சிலர்களுக்கு 5 ஆண்டு பதவிக் காலம் நீடித்திருப்பதாக மசோதாவில் சொல்லப்பட்டிருக்கிறது. அப்படியென்றால், சேர்மன்களுக்கும் 5 ஆண்டு காலம் நீடிக்கப் பட்டிருக்கிறது என்று பொருள்படுகிறது. அது தெளிவாக மசோதாவில் காணக்கிடைக்கவில்லை. முன்பு 3 ஆண்டுகள் என்றிருந்தது. இப்பொழுது அவர்களுக்கும் 5 ஆண்டுகள் என்று அர்த்தம் தொனிக்கும் விதத்திலே தான் இந்தத் திருத்தம் வந்திருக்கிறது. இது அவ்வளவாக விரும்பத்தக்கதல்ல என்று சொல்லிக்கொள்கிறேன். சேர்மன்களுடைய பதவிக் காலம் ஒரு ஆண்டு காலத்திற்கு மேல் இருக்கக்கூடாது என்பது என்னுடைய கருத்து. ஒரு ஆண்டு என்று நிர்ணயித்துவிட்டு மெட்ராஸ் கார்ப்பரேஷனிலே உள்ளது போல "கன்வென்ஷன்" அடிப்படையிலே ஆண்டுக்கு ஒரு சேர்மன் என்ற அடிப்படையிலே எல்லா முனிசிபாலிடிகளிலேயும் மாற வேண்டும். ஆங்காங்குள்ள பல்வேறு வகுப்பினர்களுக்கும், வெவ்வேறு மதத்தினருக்கும், வாய்ப்புகள் கிடைக்கும் வகையிலே ஆண்டொன்றுக்கு ஒரு 'சேர்மன்' என்ற முறை கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். உதாரணத்திற்காக நான் சொல்ல வேண்டுமென்றால், திருச்சி நகரத்திலே முஸ்லீம்கள் கிட்டத்தட்ட நான்கில் ஒரு பகுதி என்ற அளவிலே வாழ்கிறார்கள். ஆனால் ஒரு முஸ்லீம் சேர்மன் அங்கே வந்து 40 ஆண்டுகளுக்கு மேல் ஆகின்றன. எனவே, "ரொடேஷன்" அல்லது "கன்வென்ஷன்" என்ற முறை இருந்தால், ஒரு 10 ஆண்டுக்கு ஒரு முறையாவது ஒரு முஸ்லீம் சேர்மனை வர வாய்ப்பிருக்கும். ஆண்டொன்றுக்கு ஒரு சேர்மன் [illegible]

நான் அறிவேன். ஆயினும், அதைச் சட்டப்படி கொண்டு வருவதற்கு அரசு ஏதாவது ஒரு வகை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

மற்றும் கார்ப்பரேஷனிலே உள்ள கவுன்சிலர்களுக்கு 100 ரூபாய் போக்குவரத்துச் செலவுக்காக மாதம் ஒன்றுக்கு கொடுப்பதாக அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். அதை நான் வாவேற்கிறேன். இதே சலுகையை மதுரை கார்ப்பரேஷனிலே உள்ள கவுன்சிலர்களுக்கும் நீடிக்க அரசு முடிவு எடுக்க வேண்டும். அத்துடன் எல்லா முனிசிபாலிடிகளிலேயும் உள்ள கவுன்சிலர்களுக்கும் மாதம் ஒன்றுக்கு 50 ரூபாயாவது டி.ஏ. அலவன்ஸ் என்று கொடுப்பது அவசியமாகும். இந்த யோசனையின் பேரில் அரசு தன் கவனத்தைச் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மற்றொன்று, பஞ்சாயத்து யூனியன்களிலே அந்தந்தத் தொகுதியிலே உள்ள எம்.எல்.ஏ. க்கள் எம்.பி. க்கள் அதனுடைய நடவடிக்கைகளிலே பங்கு கொள்வதற்கு வாய்ப்பிருக்கிறது. முனிசிபாலிடியிலே மட்டும் எம்.எல்.ஏ. க்கள், எம்.பி. க்கள் எம்.எல்.சி. க்கள் அதனுடைய நிகழ்ச்சிகளிலே பங்குகொள்ள வாய்ப்பில்லை. எனவே, அப்படி பங்கு பெறும் வகையிலே வழி வகைகள் இந்த அரசு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். அவர்களுக்கு "ஓட்டிங் பவர்" தேவையில்லை. ஆனால் அங்கு நடக்கக் கூடிய நிகழ்ச்சிகளிலே தங்களுடைய கருத்துக்களைச் சொல்ல வாய்ப்பு கொடுப்பதன் மூலம், அவர்கள் தங்களுடைய தொகுதி மக்களுக்கு நல்ல முறையிலே சேவைகளைச் செய்யமுடியும் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். அடுத்து, திருச்சி நகரத்திலே முனிசிபல் தேர்தல் முடிந்து, 8, 10 மாதங்கள் ஆகின்றன. ஒரு பகுதியில் தேர்தல் நடந்தது. மற்றொரு பகுதியிலே தேர்தல் நடத்தப்படாமல் அப்படியே இருந்துகொண்டிருக்கிறது. தேர்தலிலே வெற்றி பெற்றவர்கள் பதவிப் பிரமாணம் கூட எடுக்க முடியாத நிலைமை இருக்கிறது. இதற்குக் காரணம், ஹைகோர்ட்டிலே ரிட் போட்டு அதன் காரணமாக இப்படி இருப்பதாகத் தெரிகிறது. ரிட் போட்டதே இந்த அரசு தான். அரசு விரும்பினால், அதை வாபஸ் வாங்கிக்கொண்டு, அங்கே தடைபெறுமல் இருக்கும் தேர்தலைத் தாமதப்படுத்தாமல் நடத்த வாய்ப்பு அளிக்கும் விதத்திலே காரியங்களை இந்த அரசு எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

THIRU M. RAJAH IYER: Mr. Deputy Chairman, Sir, I welcome this Bill. I am interested in the elections being put off till the first day of May 1974. Perhaps, it is being done for sound reasons. Mine is a selfish reason. The farther the elections are held, the lesser their impact on educational institutions. On election eve, the teachers are drafted for election duties, and it has made such an encroachment into the legitimate work of the schools that in February 1971, no school could function nor-



mally. A number of days of legitimate educational work were eaten up by the mere formality of these polling officers having to attend the classes to get themselves educated and then having to conduct elections. On this occassion, I would like to plead that as far as possible, the teachers should be exempted from election duties, particularly the College teachers and High School teachers. I know the Hon. Minister would say that College teachers and teachers perform their duties excellently. We are no doubt gratified by this tribute, Sir. Practically, out of 200 days in an educational institution, 45 days are taken away in the conduct of tests and examinations. Some teachers apply for casual leave for 12 days and religious holidays for 3 days amounting to 15 days and thus 60 days are accounted for this way. Only 140 days are left behind and another 10 or 20 days are accounted for, other duties. Thus the work of very many educational institutions would suffer to plead that so, I would like teachers should be exemptel from this sort of election duty. I find the term of office of the Councillors is extended up to the 1st of May 1974. May I plead that their term be extended up to the 31st day of May 1974 and that the elections be conducted in the month of May? The teachers would then be free during their summer vacation and no work would suffer. The summer vacation would be an ideal period from the point of view of voters going to the polling booth and the teachers being free to discharge such public work as they are called upon to do. If the Government agree that summer is the best time for the conduct of elections, when we go up to the 1st day of May 1974, why should we not extend it till the 31st day of May, 1974 and conduct these elections in the month of May—during summer vacations—when all Institutions in Tamil Nadu will remain closed and which will be an ideal period for the conduct of any election, I would like to go a step further and I would say that all these elections—Panchayat, Municipal elections—may be simultaneous with the elections to the Legislature and Parliament, Sir. There may be an election fortnight when all elections take place in Tamil Nadu and when all walls would be defaced and all the din and bustle would be confined to one particular part of the year, and you would have done with the election business in one part of the year, Sir. All elections starting from Panchayat Unions right up to the Parliament can take place simultaneously. If the plea is accepted, the term of office of the Municipal Councillors and the Corporation Councillors could very well be extended up to 1976, when I hope normally the next election to the Legislature is to take place.

With these words, I commend it, Sir.

• THIRU A. R. DAMODARAN: It gives me very great pleasure to support the measure that has been brought forth before this House in which the life of our Councillors and the Corporation Councillors has been extended from three to five years.

[Thiru A. R. Damodaran] [30th July 1971

Perhaps Members may forget that even in 1959, Sir, the life of the Municipal Council, although it was legally three years, was continuously extended by the previous Government and in fact, the last two Councils had a life period of five years and, therefore, I do not think the accusation need be made against this Government that they have been partial in any sense extending the life of the Municipal Councils at the present time. This has been a longstanding demand of Municipal Chairman and of Councillors and to provide a certain amount of stability in local administration, I think it is essential that the life of the Council should be for five years and I am very glad that this Government have at long last heeded the demand of various bodies which have asked for this measure and seek to implement it by means of the measure brought forth before this House. I find, Sir, from this Bill that the amendments that were made to the Madras City Municipal Act, 1961 have in the light of experience, been found unworkable. We have gone back to the position that prevailed prior to 1961, I think that this is a very welcome measure because the Circle Committees were not at all working satisfactorily in Madras and there was a great deal of criticism about the efficiency of these Committees and, in response to the resolution of the Madras Corporation, the Standing Committees have been revived and this is a very welcome feature of this Bill. At the same time, I would like to mention, Sir, that in so far as the Municipal Councils are concerned, we have got only two Statutory Committees, namely, the Contract Committee and the Appointment Committee and I would have thought that the Hon. Minister would have taken this opportunity of providing our Municipalities also with some of these Standing Committees which would be much more useful than the general discussions that take place in the Councils. In 1959, when I was associated with the Cuddalore Municipality, I found even the subjects 'Taxation' and 'Appeals' came before us in the Council and it was extremely difficult for us to increase the property tax on any property because a particular Councillor would be interested and he would create a lot of trouble in the Council if anything was done. Realising this, Sir, under Rule 3 of the Tamil Nadu District Municipalities Act, we resolved to have certain Standing Committees. One of the Committees was 'Taxation and Appeals Committee' which was not statutorily provided under the Tmil Nadu District Municipalties Act, 1961 and I am glad to say that that Committee was able to render useful service to the Municipalities in that property tax was not needlessly reduced because of the Councillor's pressure. I hope when the Hon. Minister brings in a comprehensive legislation on local administration which has been promised to us for so many years, he will bear in mind that some of the provisions similar to the provisions in the Madras City Municipal Corporation Act may also be made at least in the case of First Grade Municipalities as a beginning so that these Statutory Committees could deal with these problems and unnecessary heat and argument would not be generated in



30th July 1971] [Thiru A. R. Damodaran]

the open Council. Sir, a far more important thing than the extension of life of the Councillors here and of the Corporation is to improve the quality of administration in the local bodies. At present, there is a feeling in the public mind that local bodies are more interested in quarrelling about to whom they should give a civic address, or about some resolution over which they have no jurisdiction at all, or over the passage of some other resolution and, as a result of this, there have been numerous walk-outs and our local bodies have been plunged into a certain political instability with the result that the administration in these Municipalities has suffered. For example, Sir, one of these measures, which all Municipalities should be interested in, is promotion of new industries. But we find that the Health Department in these Municipalities, when it receives applications for licences, is more interested in finding out what objections it can raise to prevent the grant of these licence rather than to help the applicants to start an industry with the licence that would be granted by the Municipality. This approach has got to change. I find that in the starting of a new industry, the first approach of the Health Officer is what objections can be raised to see that these industries are not started. I do not say that it is a deliberate attitude, but it is something that has come up from the past and it is this attitude that should change. Every application made before our Municipalities and local bodies should receive due attention in the sense that active steps are taken to see that industries are promoted instead of raising all sorts of objections to the grant of such licences.

Sir, may I also plead, in this connection, that many of our playgrounds which have been notified as public playgrounds are often misused by the local bodies? In this connection, I would like to mention with a great deal of regret what is happening in my Municipaliy at Cuddalore. We have an excellent maidan which is profided as a playground for school children and in fact, for the entire school population of Cuddalore New Town or Manjakuppam, the maidan was a playground for playing Cricket, Football, Hockey or whatever games they were interested in. When I went back to Cuddalore a couple of days ago, I found that five or ten acres of the maidan had been blocked with zinc sheets. When I enquired why the playground was blocked in this manner, I was told that a private exhibition had been permitted by the Cuddalore Municipality for which a revenue of Rs. 25,000 at a profit was expected as a result of which the public playground will not be available for school children for a period of forty days from the date of the exhibition. I think it is because our local bodies are so starved of resources that they have to resort to any measure to get aditional funds. I am sorry that the Municipality of Cuddalore has given up this playground for an exhibition. I was jealous for protecting these playgrounds when I was associated with the Municipal Council. But these are some of the difficulties that the local bodies face. This is because of lack of resources.

[Thiru A. R. Damodaran] [30th July 1971

As I mentioned when the Madurai Corporation Act was passed, I hope the Hon. Minister will come forward with a comprehensive legislation so that the quality of life in our local bodies may be improved, the quality of administration may be improved and people may genuinely feel that although the lives of our Councillors and those of the Councillors of the Corporation have been extended to five years, they will also stand to benefit by such extension of time.

There is the very important matter of resources and I think that numerous Committees have gone into this question. The State Government are doing a lot. In fact, in the Economic Survey that is given to us in connection with the local administration, I am surprised to see that 60 to 70 crores of rupees is being given to local bodies in some form or other. Sir, my only point is that we should see that the local bodies get these resources and that they are able to plan their activities according to the resources available to them so that they need not run up to the Government and put up extravagant schemes for which the Government would not be able to give any sort of help because of financial stringency.

One more point, Sir, has been made in the Lower House, i.e., grant of honorarium to the Corporation Councillors. I would make a plea that Councillors now-a-days come from extremely poor families. They cannot afford to come and attend to Council work in decent dress. Although one would not plead for a salary for such jobs, I think that there is every justification—in the modern countries, this is being done — for the payment of an honorarium even for the performance of civic duty. I would endorse the plea that has been made that not only an honorarium be granted to the Members of the Madras Corporation, but it should also be extended to the Municipal Councillors, Panchayat Union Chairmen and Panchayat Union Presidents so that they may be able to perfom their duties properly, because in many places they have not even been able to buy a shirt to wear when they come to Panchayat Union meetings. I have seen many of them who come from very poor families and who cannot afford to dress even and unless some of the generous Panchayat Union Chairmen come forward to outfit them with dress, it is impossible for them to rely on their own resources. I do not think that we need be ashamed because anybody might consider an honorarium of Rs. 50 or Rs. 100 or Rs. 150 as degrading salary for performing civic responsibility. When we as Members of the Legislature and as Members of the Lok Sabha realise the difficulties and raise our emoluments and daily allowances, I do not think that the general public will ever mistake us if these persons are also given what I consider to be very essential for the performance of public duty.

With these words, Sir, I thank you.



30th July 1971]

திரு. எஸ். ஜெயராம செட்டியார்: தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கும் இந்தச் சட்டத்தை நான் ஆதரித்தபோதிலும்கூட, அந்த எக்ஸ்டென்ஷன் என்று கொடுப்பது ஒரு தேர்தலுக்கு முன்பாக வாக்காளர்களுக்குக் கொடுத்த வாக்குறுதியை மாற்றி, இரண்டு வருஷம் கூட கொடுப்பது என்பது ஒரு மாதிரியான தப்பபிப்பிராயத்தை உண்டுபண்ணும் என்று நான் நினைக்கிறேன். ஆனால் ஐந்து வருடங்கள் பஞ்சாயத்து யூனியன்களுக்கு இருக்கிறது. நமது சட்ட சபைக்கு இருக்கிறது. அதேமாதிரி முனிசிபல் கவுன்சிலுக்கும் கார்ப்பரேஷனுக்கும் கொடுப்பது தப்பல்ல. ஆனால் அப்படிச் செய்வதை எலெக்ஷனுக்கு முன்பு செய்துவிட்டால், அது அரசை நடத்துபவர்கள் பேரில் ஒரு தப்பபிப்பிராயத்தை உண்டாக்காமலிருக்கும் என்று நான் நினைக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. அப்துல் வகாப் அவர்கள் சொன்னார்கள், ஒவ்வொரு வருடமும் சேர்மனை மாற்ற வேண்டுமென்று. ஆனால் மதுரைக் கார்ப்பரேஷன் மேயராக இருக்கிற திரு. முத்து அவர்கள் சொல்லியிருக்கிறார்கள், ஒரு வருடம் மாலை வாங்குவதற்கும் பாராட்டுதலைத் தெரிவித்துக்கொள்வதற்குமே சரியாகப் போய்விடும், மறுபடி என்ன வேலை செய்வது, வேலை செய்வதற்குக்கூட நேரமில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். அம்மாதிரி நிலைமை ஏற்படாதபடி நாம் முதலிலேயே தேர்ந்தெடுக்கப்பட்டால், பல நாட்கள் இருந்து வேலை செய்வதில் தப்பில்லை. ஆகவே அப்படிப் பட்டவர்களுக்கு அந்த வாய்ப்பை அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இப்பொழுது மதுரைக் கார்ப்பரேஷனைப் பற்றி என்ன செய்யப் போகிறார்கள் என்று தெரியவில்லை. நண்பர் திரு. தாமோதரன் அவர்கள் ஊதியம், ஆனரேரியம் கொடுக்க வேண்டும் என்று சொன்னார்கள். நமக்குக்கூட 100 ரூபாய் அதிகப்படுத்தியிருக்கிறார்கள். கார்ப்பரேஷனுக்கு 100 ரூபாய் ஆனரேரியம் கொடுக்க வகைசெய்திருக்கிறார்கள். அதேமாதிரியாகக் கீழ்நிலையிலே உள்ள முனிசிபாலிடிகளிலே இருக்கிறவர்களுக்கும் கொடுக்க வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கப்பாண்டியன் சொல்கிறார்கள், பஞ்சாயத்து யூனியனிலே இருக்கிற எங்களுக்கும் அதிகமாகக் கொடுக்க வேண்டும் என்று. அதிலே தப்பில்லை. எனென்றால் இப்பொழுது இருக்கிற விலைவாசி உயர்விலே, வாழ்க்கைச் செலவுகள் இருக்கின்ற நிலையிலே அப்படி ஒவ்வொருவருக்கும் கொடுத்து, வாழ்க்கை நடத்த அவர்கள் மற்றவர்களை எதிர்பார்க்காதபடி சாதாரண குடும்பத்திலே பிறந்து வருகிறவர்கள் வாழ வேண்டும் என்ற ஏற்பாட்டைச் செய்வதிலே தப்பில்லை என்று நினைக்கிறேன்.

நான் சொல்ல வேண்டிய கருத்துக்களையெல்லாம் நண்பர் திரு. தாமோதரன் அவர்கள் விரிவாகச் சொல்லிவிட்டார்கள். நண்பர் திரு. ராஜா அய்யர் அவர்கள் சொன்ன மாதிரி, எதைச் செய்தாலும், எல்லா எலக்ஷனும் ஒரே சமயத்திலேயே நடத்தி விடவேண்டும். பல வகையிலே எலக்ஷன் நடத்த கூடாதாக

[திரு. எஸ். ஜெயராம் செட்டியார்] [30th July 1971

இருப்பதைவிட ஒரே சமயத்தில் எலக்ஷனை வைத்து நடத்தி அந்த வேலையைத் தீர்த்துவைக்க இந்த அரசு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் வார்த்தையை முடித்துக் கொள்கிறேன்.

*திரு. கே. ராஜாராம்: தலைவர் அவர்களே, தற்போது சபையின் முன் வைக்கப்பட்டிருக்கும் இந்தத் திருத்த மசோதாவில் முக்கியமான விஷயங்கள் இரண்டு. ஒன்று நகர சபைகளின் ஆயுட் காலத்தை மூன்றிலிருந்து 5 வருடம் என்று ஆக்குவது. மற்றொன்று கார்ப்பரேஷனைப் பொறுத்த வரையில் சர்க்கில் கமிட்டிகளுக்குப் பதிலாக ஸ்டேன்டிங் கமிட்டிகளை நிறுவுவது. இப்பொழுது பொருளாதாரத் துறையில் கமிஷனருக்கு இருந்து வந்த அதிகாரத்தை, நிதிவரம்பை அதிகமாக்கவும், அதே நிலைமையில் கமிட்டிகளுக்கு இருக்கும் நிதி வரம்பை அதிகமாக்கு வதற்கும் இந்த மசோதாவில் இடம் செய்யப்பட்டிருக்கின்றது.

முதலில் ஆயுட் காலத்தை 5 வருடம் என்று நீடிப்பது பொதுவாக வரவேற்கத்தக்க விஷயமாகும். ஏனென்றால் சட்ட சபைக்கு 5 ஆண்டுகள் ஆயுட்காலம் என்று நிர்ணயித்து அமைச்சரவையும் ஏற்பட்ட பிற்பாடு, ஒரு அமைச்சரவை 5 ஆண்டுகள் நடந்துகொண்டிருக்கும் காலத்தில் முனிசிபாலிடிகளுக்கு இரண்டு தேர்தல் வைப்பது என்பது நல்லதல்ல. தேர்தல்களாகவே வருடமெல்லாம் தோற்றமளிக்கும் பஞ்சாயத்துகளுக்குத் தேர்தல் வேறு. பஞ்சாயத்து யூனியன் தேர்தல் வேறு. முனிசிபல் தேர்தல் வேறு. இவைகள் எல்லாம் வரும்போது வருஷமெல்லாம் தேர்தல் நடத்துகொண்டிருக்கும்படியான நிலைமை வருகிறது. ஆகவே பஞ்சாயத்து யூனியனுக்கான மசோதா விவாதத்தில் இருக்கும்போது 5 ஆண்டுகள் என்று ஆயுட்காலத்தை நீடிப்பது மிகவும் நல்ல என்று சொன்னேன். அதே வாதந்தான் இதற்கும் சொல்லவேண்டியிருக்கிறது. ஆகவே 5 ஆண்டுகள் என்று நிர்ணயித்ததைப் பொதுவாக வரவேற்க வேண்டியதுதான். ஆனால் இன்று 3 வருஷந்தான் முனிசிபாலிடிக்கு என்று நிர்ணயித்து, இந்த வருஷம் தேர்தல் நடக்கும் என்று 1972-லும் 1973-லும் முனிசிபாலிடிகளிலும், கார்ப்பரேஷன்களிலும் தேர்தல் நடக்க வேண்டிய கட்டம் தேர்தலுக்காக எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறபோது, இப்போது இருக்கக் கூடிய கவுன்சிலர்களுக்கும் அதிகமாக இரண்டு ஆண்டுகள் நீட்டிக்கொடுப்பது என்பதை நான் ஒத்துக்கொள்ள முடியாது. இந்தத் தேர்தலை நடத்திவிட்டு இனி வருகிறவர்களுக்கு 5 ஆண்டுகள் என்று சொல்லலாம். இப்பொழுது இருக்கிறவர்களுக்கு திடீரென்று தேர்தல் இல்லாமல், இன்னும் இரண்டு வருஷம் அதிகமாக ஆயுட்காலத்தை நீடிப்பது அவ்வளவு விரும்பத்தக்கதல்ல. ஏற்கனவே நிர்ணயிக்கப்பட்டபடி மூன்று ஆண்டுகளாகத் தான் இருக்க வேண்டும் என்பதை, என்னுடைய கட்சியின் அபிப்பிராயத்தை நான் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.



30th July 1971] [திரு. கே. ராஜாராம்]

அடுத்தபடியாக, ஸ்டாண்டிங் கமிட்டிகள் ஏற்படுத்துவது மிகவும் நல்ல முறை. அதை நான் வரவேற்கிறேன். அதுவும் குறிப்பாக சென்னைநகரில் கார்ப்பரேஷனில் மொத்த நிதிநிலைமை என்ன என்பது கூட தெரிந்துகொள்ளாது ஒவ்வொரு சர்க்கிள் கமிட்டியிலும் போட்டிருக்கக்கூடிய தேவைகளை அதற்கு என்ன என்ன வேலைகள் வேண்டும், எவ்வளவு நிதி வேண்டும் என்று தீர்மானம் செய்கிறார்களோ அதையெல்லாம் கூட்டிப்பார்த்தால் 5 வருஷ கார்ப்பரேஷன் வருமானம் வருடத்திற்குப் போதாது. ஒரு வருஷத்திற்கு ஒவ்வொரு சர்க்கில் கமிட்டியிலும் அதிகமான தேவைகளைச் சொல்கிறார்கள். பொது நிதி நிலைமையை அறிந்து கொள்ளாமல் சொல்கிறார்கள். அப்படியில்லாமல் ஒரு சென்ட்ரல் கமிட்டியை நியமித்தது சரிதான். ஆனால் இது 1961-க்கு முன்பே இருந்ததுதான். புதியது அல்ல. ஏற்கனவே 1961-க்கு முன்னால் ஸ்டாண்டிங் கமிட்டிகள்தான் இருந்தன. 1961-ல் கார்ப்பரேஷன் சட்டத்தையே திருத்தும்போது, இந்த சர்க்கில் கமிட்டிகளைக் கொண்டுவந்தார்கள். டிசென்ட்ரலைசேஷன் செய்து, நகரத்திலே ஒரு பக்கத்திலே இருப்பது இன்னொரு பக்கத்திற்குத் தெரியவில்லை, தனித்தனியாக ஆங்காங்கே ஒவ்வொரு சர்க்கிலுக்கும் திட்டங்கள் தயாரித்து வேலை செய்தால் நலமாக இருக்கும் என்ற ஒரு எண்ணத்தால் அது கொண்டுவரப்பட்டது. அது நடைமுறையில் சரியாக நடக்கவில்லை. அதனால் இந்தத் திருத்தம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. பொதுவாக இந்த ஸ்டாண்டிங் கமிட்டிகள் போடுவதாக உள்ள இந்த கருத்தை நான் வரவேற்கின்றேன். இவைகளுக்குத் தேர்தல் நடத்துவதாக, மெஜாரிட்டி அங்கத்தினர்களை வைத்துத் தேர்தல் மூடிவு செய்ய வேண்டும் என்று முதல் மசோதாவில் இருந்ததை அசெம்பிளியில் அமைச்சர் அவர்கள் மாற்றி, இப்பொழுது பிரப்போஷனல் ரெப்பரசென்டேஷன்—விகிதாச்சார ஓட்டுமுறைக்கு ஒத்துக்கொண்டது மிகவும் நல்லதொரு ஜனநாயக நீதியிலான நல்ல திருத்தம் என்று நான் நினைக்கிறேன். அதற்காக அரசாங்கத்தையும் நான் பாராட்டுகின்றேன். அந்தப் ப்ரப்போர்ஷனல் ரெப்ரசென்ட்டேஷன் என்று பலவித்தங்களில் தேர்தல் நடத்துவது உண்டு. இதில் சிங்கில் டிரான்ஸ்ஃபரபிள் வோட்டிங் சிஸ்டம் என்று சொல்லக்கூடிய முறையில் இந்த ப்ரப்போர்ஷனல் ரெப்ரசென்ட்டேஷனை வைக்க வேண்டும். அதுதான் நல்ல முறையில் ஜனநாயகத்தை நிலைநிறுத்துவதாகும். ப்ரப்போர்ஷனல் ரெப்ரசென்ட்டேஷன் பை சிங்கில் ட்ரான்ஸ்ஃபரபில் வோட் சிஸ்டம் என்ற முறையில் இந்த வோட்டு முறை இருக்க வேண்டும். விதிகளில் இம்மாதிரிச் செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக 6-வது திருத்தத்தில் ஸ்டாண்டிங் கமிட்டியின் சேர்மன் விலகியவர் மீண்டும் தேர்தலில் நிற்கக்கூடாது என்று இருக்கிறது. பொதுவாக இந்தக் கருத்து நல்லதுதான். ஆனால் விலகியவர் எப்பொழுதுமே நிற்கக்கூடாது என்று இருக்கக்

[திரு. கே. ராஜாராம்] [30th July 1971

கூடாது. விலகியவர் அடுத்த டெர்முக்குத்தான் நிற்கக்கூடாது என்று இருக்க வேண்டுமே தவிர, எப்பொழுதுமே நிற்கக்கூடாது என்று இருக்கக்கூடாது. இரண்டாவது மூன்றாவது டெர்முக்குக் கூட நிற்கக்கூடாது என்று இருக்கக்கூடாது. விலகியவர் உடனே அந்தத் தேர்தலிலேயே நிற்கக்கூடாது என்பதற்குத் தகுந்த வார்த்தைகளைப் போட்டு எப்படித் திருத்திக்கொள்ள வேண்டுமோ அப்படித் திருத்திக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இது நல்ல முறையில் நடக்க வேண்டும், சிக்கல் உண்டுபண்ணக்கூடாது என்பதற்காகச் சொல்கிறேன். இப்போது லோகல் அண்டு அப்பீல் கமிட்டி என்பதை ரத்து செய்து விட்டு வரி விதிப்புக் கமிட்டிக்கு அந்த அதிகாரங்களைக் கொடுத்திருக்கிறார்கள். பெயர் தான் மாற்றப்பட்டிருக்கிறது. ஸ்டாண்டிங் கமிட்டிக்கு ஏற்கனவே இருந்த அதிகாரங்கள் தான் இப்போது கொடுக்கப்பட்டிருக்கின்றன.

கமிஷனருக்கு, கவுன்சில் முதலில் தன் இஷ்டம் போல எந்த எஸ்டிமேட்டையும் சாங்ஷன் செய்ய அல்லது வேலை செய்ய விட்டு விட்டு, வேண்டுமானால் ஸ்டாண்டிங் கமிட்டியின் அங்கீகாரத்துக்கு அனுப்பலாம் என்று இருப்பது கமிஷனருக்குச் சற்று அதிகமாக அதிகாரம் கொடுப்பதாகத் தெரிகிறது. நடைமுறையில் சிறிது காலத்துக்கு இரண்டாவது, மூன்றாவது கிரேடு முனிசிபாலிட்டி கமிஷனர்கள் இந்த அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்யாமல் ரூபாய் 2,500 வரை அவர்கள் இஷ்டம் போல் எஸ்டிமேட் சாங்ஷன் செய்வது, டெண்டர் விடுவது என்பது இருக்கக்கூடாது. செய்து விட்டு ஒரு மாதத்தில் கவுன்சிலில் வைக்க வேண்டும் என்று இருக்கிறது. முடிந்த பிறகு என்ன செய்வது? இவைகளில் கொஞ்சம் கண்காணிப்பு இருக்க வேண்டும். முதல் தரம், இரண்டாம் தரம் முனிசிபாலிட்டிகள் சரியாக இருக்கும். மூன்றும் தர முனிசிபாலிட்டிகளில் புதிதாக வருகிறவர்கள் தவறு செய்யாமல் இருக்க விதிகள் ஏதாவது செய்ய வேண்டும்.

திருச்சியில் 2½ ஆண்டு காலமாக தேர்தல் நடத்தாமல் இருப்பது வருந்தத் தக்கது. அந்த 14 டிவிஷன்களிலும் 3 மாதத்துக்கு முன்பு தேர்தல் என்று அறிவிக்கப்பட்டது. திடீரென்று நிறுத்தி விட்டார்கள். சீக்கிரம் தேர்தல் நடத்த ஏற்பாடு செய்ய வேண்டும் என்று அரசை கேட்டுக்கொள்ளுகிறேன்.

பஞ்சாயத்துத் தலைவர் தேர்தல்களை நடத்துகிற மாதிரி சேர்மன் தேர்தல்களையும் நேரடித் தேர்தல் முறையில் நடத்த வேண்டும். சிறிய ஊர்களாக இருக்கும் முனிசிபாலிட்டிகள், நகர முனிசிபாலிட்டிகள் சேர்மன்களைத் தேர்ந்தெடுக்க நேரடித் தேர்தல் நடத்தலாம். இந்தத் திட்டத்தை யோசித்துப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். இந்த மாதிரி நேரடித் தேர்தல் நடத்துவதன் மூலம் பஞ்சாயத்தின் நடை



30th July 1971] [திரு. கே. ராஜாராம்]

முறைகள் நன்றாக நடைபெறுகின்றன என்று பொதுவாக ஒரு அபிப்பிராயம் இருக்கிறது. இதே மாதிரி சேலம், கோவை போன்ற பெரிய நகரங்களில் இல்லை என்றாலும், சிறிய முனிசிபாலிட்டிகளில், அதாவது ஆலந்தூர், அருப்புக்கோட்டை போன்ற சிறிய முனிசிபாலிடிகளில் சேர்மன் பதவிகளுக்கு நேரடித் தேர்தல் நடத்தினால் என்ன என்பதையும் அரசாங்கம் கவனிக்க வேண்டும். இந்த மசோதாவில் இதைச் சேர்க்க முடியாது போயினும் அடுத்த திருத்தங்களிலாவது இதைக் கொண்டுவர முடியுமா என்று கேட்க விரும்புகிறேன்.

மதுரையைப்பற்றி இந்த மசோதாவில் எதையும் சொல்லக் காணோம். சென்னை மாநகராட்சியைப்பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள், ஆனால் மதுரையைப்பற்றிக் குறிப்பிடவில்லை. மதுரை திரிசங்கு சொர்க்கத்தில் இருப்பது போல் இருக்கிறது. மதுரை என்ன ஆகிறது என்று தெரியவில்லை. மற்றவைகளுக்கு ஆகிற மாதிரி அதற்கும் ஆக வேண்டும்.

என்னுடைய சொந்த அபிப்பிராயம் என்னவென்றால், தேர்தல் இப்போது நடத்திவிட்டு, இனிமேல் வருகிறவர்களுக்கு எல்லாம் பதவிக்காலம் 5 வருஷம் என்று சொன்னால் நன்றாக இருக்கும்.

திரு. ஆர். தர்மலிங்கம்: 5 ஆண்டுகளாகப் பதவிக் காலத்தை நீடிக்க இருப்பதை எதிர்க்கின்ற எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் 1961-ல் நடத்த வேண்டிய தேர்தல் 3 ஆண்டுகள் கழித்து 1964-ல் நடத்தினார்களே, அப்போது ஒன்றும் சொல்லவில்லையே. அப்போது உள்ள சர்க்கார் அங்கத்தினர் அவர்களுக்குத் தொடர்பு உள்ள அரசு தானே. இதில் அவர்கள் கொள்கை என்ன என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

திரு. கே. ராஜாராம்: பாகிஸ்தான் சண்டை நடந்து கொண்டிருந்தது அப்போது. அதனால் தான் தேர்தல் ஒத்திப் போடப்பட்டது. அப்படி ஒத்திப் போடப்பட்டது நல்லது என்று சொல்லவில்லை. அந்தத் தவறை நீங்களும் செய்ய வேண்டாம் என்பதற்காகத் தான் இதை நான் சொல்கிறேன். நாங்களும் அப்படியே செய்கிறோம் என்று சொல்லுவது சரியில்லை. எது நல்லதோ அதைச் சொல்லுகிறேன். ஒரு அமைச்சரவை தவறு செய்தால் அந்தத் தவறை மற்றவர்களும் செய்ய வேண்டும் என்று சொன்னால், அதற்கு முடிவே இல்லாமல் போய் விடும் என்று கூறி பொதுவாக இந்த மசோதாவை வரவேற்கிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, இங்கே கொண்டுவரப்பட்டிருக்கின்ற மாநகராட்சித் திருத்தம், பதவி கால நீட்டிப்பு மசோதாவைப் பொதுவாக ஆதரித்து சில பல யோசனைகளை மாண்புமிகு உறுப்பினர்கள் கூறியதற்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்தத் திருத்த மசோதாவைக் கொண்டுவரும்போது என்னுடைய முன்னுரையில் தெளிவாக எடுத்துக் கூறியிருக்கிறேன். 5 ஆண்டு 5.50 p.m.

[மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்] [30th July 1971

காலமாக பதவிக் காலத்தை உயர்த்தியிருக்கிறேன் என்று. நகராட்சி, மாநகராட்சி ஆகியவற்றின் பதவிக் காலம் 5 ஆண்டு காலமாக நீட்டிக்கப்பட்டதை எல்லா உறுப்பினர்களும் வரவேற்றதற்கு என் மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

அது மட்டுமல்லாமல், எல்லா நகராட்சிகளுக்கும் பல்வேறு கட்டங்களில் தேர்தல் நடைபெற இருக்கிறது. அவைகளை ஒரு முகப்படுத்தும் நோக்கத்தில் பதவிக் காலத்தை 1—5—1974 என்ற நீட்டி, அதற்குப் பிறகு ஒவ்வொன்றின் பதவிக் காலம் 5 ஆண்டு காலமாக தொடர்ந்து நடைபெறும். 1 ஆண்டு, 8 மாதம் என்று பல தேர்தல்கள் நடைபெற இருக்கின்றன.

திருச்சி நகரத்தைப் பொறுத்த வரையில். இன்னும் 14 வார்டுகளில் தேர்தல்கள் நடைபெற இருக்கின்றன. அவற்றை வரும் செப்டம்பர் திங்களில் நடத்த முடிவெடுத்து, காலம் குறிப்பிடப் பட்டிருக்கிறது. வேட்பு மனுக்களைப் பரிசீலனை செய்வது 1—9—1971-ல். திரும்பப் பெறுவதற்குக் கடைசி நாள் 10—9—1971. வாக்குப் பதிவு 24—9—1971. வாக்கு எண்ணப்படுவது 25—9—1971. இப்படி திருச்சி நகரத்தைப் பொறுத்த வரையில். நடக்க இருக்கிறது.

வேறு பல நகராட்சிகளுக்கும் தேர்தல்கள் நடைபெறுவதற்கு மேற்கொண்டு ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. புதிதாக ஏற்பட்ட நகராட்சி மன்றங்களும் இருக்கின்றன. அவற்றின் தேர்தலும் விரைவில் நடைபெறும் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

மாநகராட்சியில் ஒவ்வொரு ஆண்டும் மேயர் தேர்ந்தெடுக்கப் பட வேண்டுமென்று இருக்கிறது. அந்த மேயரே மறுபடியும் தேர்ந்தெடுக்கப்படலாம் என்று விதி இருக்கிறது. தேர்தல் ஒவ்வொரு ஆண்டும் நடைபெற வேண்டும். சென்னையில் வருப்பு வாரித் தன்மை அடிப்படையில் மேயர் தேர்தல் நடைபெறுகிறது. ஒரு முறை தேர்ந்தெடுக்கப்பட்ட வரை மறு முறை கொண்டு வருவது இல்லை என்ற மரபு சென்னையில் காப்பாற்றப்பட்டு வருகிறது. இந்த நிலை மற்ற இடங்களில் இல்லை. 5 ஆண்டு காலம் ஒருவர் தலைவராக இருந்தால், அந்த நகரத்தின் தன்மைகளை, தேவைகளையெல்லாம் அறிந்து அவற்றைச் சிந்தித்து ஆவன செய்வதில் தங்கள் முழு கவனத்தையும் செலுத்த முடியும்.

உறுப்பினர்களுக்குப் போக்குவரத்துக் கட்டணம் அளிக்க வேண்டுமென்று சொன்னார்கள். சென்னை பெரிய நகரமாக இருக்கின்ற காரணத்தால், உறுப்பினர்கள் குறிப்பிட்டது போல், சாதாரணமானவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு வருவதால், அரசு இதற்கு ஒரு நல்ல முடிவு எடுத்திருக்கிறது. மூன்று பணக்காரர்கள் வந்தார்கள். இப்போது சாதாரணமானவர்கள் வருகிறார்கள்.



[30th July 1971 [மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்]

சென்னை என்றால், பல இடங்களை இணைக்கும் மையமாக விருக்கிறது. அன்றாடம் வந்து போகிறவர்கள் மிக அதிகம். ஒவ்வொரு வட்டத்திலும் ஏதாவது பிரச்சினைகள் ஏற்பட்டால், அதைத் தீர்க்க வேண்டிய முழுப் பொறுப்பு அந்தந்த வட்டத்தினுடைய மாநகராட்சி மன்ற உறுப்பினரைச் சார்ந்ததாகவிருக்கிறது. ஆகவே அம்மாதிரிப் பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டிய பொறுப்பும் இருக்கின்ற காரணத்தால், அவர்களுடைய மாநகராட்சி அலுவலகத்திற்கு வந்து போகவேண்டிய நிலைமை ஏற்படுகிறது. அதற்குச் செலவு ஏற்படுமென்பது உண்மை. ஆகையினால் கன்வேயன்ஸ் அலவன்ஸ், போக்குவரத்துப் படி என்ற அளவில் மாதம் ரூபாய் 100 தருவதென்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது. மதுரை மாநகராட்சி மன்ற உறுப்பினர்களைப்பற்றி ஏதும் குறிப்பிடவில்லையே என்று எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்டார்கள். மதுரையை மாநகராட்சி மன்றமாக்கும் மசோதா இன்னும் சட்டமாக்கப்படவில்லை. இப்பொழுது அந்த மசோதா குடியரசுத் தலைவர் அவர்களுடைய கையெழுத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கிறது. அது திரும்ப வந்து சட்டமான பின்பு, அதற்காகத் தனிச்சட்டம் கொண்டுவந்து இதைப் பற்றியும் உறுப்பினர்களின் பதவிக்காலத்தை ஐந்து ஆண்டுகளுக்கு நீடிப்பது பற்றியும் தனியாகத் தீர்மானிக்கப்படும். நான் முன்னுரையில் எடுத்துச் சொன்னதுபோல, சென்னை மாநகராட்சி மன்றத்தினுடைய நிர்வாகப் பொறுப்புகளைப் பரவலாக்க பல சீர்திருத்தங்களை உண்டாக்கும் திருத்தம் பின்னால் வரும். இந்திய அரசாங்கத்தினுடைய ஒப்புதலையும் நாம் பெறவேண்டியதாக இருக்கிறது. விரிவான முறையில் திருத்த மசோதா கொண்டு வரப்பட இருக்கிறது. அதையொட்டி மதுரை மாநகராட்சி மன்றத்தினுடைய திருத்த மசோதாவும் தனியாக வரும். அங்கேயிருக்கின்ற உறுப்பினர்களுக்கும் போக்குவரத்து அலவன்ஸ் தர வேண்டுமென்று சொன்னார்கள். சென்னையைப் போன்று மதுரையும் விரிந்திருக்கின்ற காரணத்தால், அங்கும் போக்குவரத்துப் படியாக மாதம் ரூபாய் 75 கொடுக்கலாம் என்று கொள்கை அளவில் அரசு ஏற்றுக்கொண்டிருக்கிறது.

அடுத்து, நிலைக்குழு உறுப்பினர்கள் பெரும்பான்மை அளவில் தேர்ந்தெடுக்கப்பட்டு வருவார்கள். 1961-ஆம் ஆண்டு திருத்தச் சட்டத்திற்குப் பிறகு ஒற்றை மாற்று ஓட்டு முறைப்படி அப்பீல்ஸ் கமிட்டி மற்ற இரண்டு கமிட்டிகளுக்கு மட்டும் மெஜாரிட்டி அளவில் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்று இருந்தது. அதை மாற்றி, அதாவது தற்போதுள்ள மைய, வட்டக் குழுக்களுக்கு மாறாக, செயற்படும் நிலைக் குழுக்களை அமைத்து ஒற்றை மாற்று விகிதாசாரத் தேர்வு முறையில் பல உறுப்பினர்கள் ஒவ்வொரு நிலைக் குழுவிலும் இடம் பெறச் செய்வதுதான் நோக்கம். இந்த மாதிரி ஜனநாயக முறையில் மாற்றியமைத்தால், ஒவ்வொரு வட்டத்திலும் நடைபெறும் வேலைகளை நன்கு கவனிக்க இயலும். இந்தத்

[மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்] [30th July 1971

திருத்தம் நிறைவேற்றப்பட்ட பிறகு ஒற்றை மாற்று ஓட்டு முறை வகுதாசார அடிப்படையில்தான் அமுதத தேர்தல் நடைபெற விருக்கிற தெனபதையும் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

6.00 p.m. நேரடித் தேர்தல் கொண்டு வருவதுபற்றிக் குறிப்பிட்டார்கள். இது ஊராட்சி மன்றங்கள் அளவில இபபொழுது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஊராட்சி ஒன்றியங்களுக்கும் கொண்டுவர வேண்டுமென்று சொன்னார்கள். இதிலே ஏறபடட அனுபவங்களை ஆராய்ந்த பிறகு மெல்ல மெல்ல முனனேறலாம் என்பது அரசின் கருத்து. ஆகவே இந்த 5 ஆண்டுகள் நீடிப்பின் அடிப்படையில் தான் இநதத் திருத்தம் கொண்டுவரப்பட்டுள்ளது. சென்னை மாநகராட்சி மன்றததைப் பொறுத்து, சில முக்கியமான மாறுதல களையும் மேற்கொள்ள இந்தத் திருத்தம் கொண்டுவரப்பட்டிருக கிறது என்று கூறி இந்த மசோதாவை நிறைவேற்றித் தர வேணடு மென்று இந்த அவையினைக் கேட்டுக்கொள்கிறேன்.

THIRU A. R. DAMODARAN : Sir, I want to mention one thing. It is in connection with the Standing Committees. It is stated clearly that the Chairman shall remain in office only for one year. I have no quarrel with that, Sir. As far as Councillors are concerned, they are elected to be Members of the Standing Committee. It relates to clause 6-A. Clause 6-B (2) reads as follows :—

"A councillor elected to be a member of a Standing Committee shall hold office as such, unless he sooner resigns the same, till his term of office as Councillors is in any manner determined."—This would imply, Sir, that one of the eleven Councillors who is elected to any Standing Committee would continue for five years and since there are 120 Corporation Councillors and as there are only six Standing Committees, only 66 persons would have the opportunity of working on these Committees. It is an essential feature of local administration that they should be trained in the art of administration. I have, therefore, only one suggestion to make, Sir. Although I realise that it cannot be incorporated in the present Bill, I would suggest that the pattern that exists in the Legislative Council may be followed in the Standing Committee. Even in the Madras City Municipal Corporation the Hon. Minister insisted that 1/3 of the Councillors should retire after a period of two or three years. I, therefore, suggest that the tenure of membership of the Standing Committee for the ordinary Councillors be limited to a period of two years and by a process of rotation, 1/3rd should automatically retire and new members should go into the Standing Committee. This would provide an excellent training ground for 120 Councillors to serve on as many Committees as possible. It would be helpful also in preventing certain vested interests controlling these Committees because many of these Standing Committees are very influential Committees. We must not allow any particular vested interest to develop in these Committees and since the Chairman is to be one of the eleven members, there will be a tendency for certain abuses to creep in. This is my suggestion, Sir.



30th July 1971]

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இதைப்பற்றி மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவரவர்கள்கூட ஒரு ஐயத்தை எழுப்பினர். நிலைக் குழுவிற்கு ஒரு முறை ஒரு உறுப் பினரைத் தேர்ந்தெடுத்துவிட்டால், அடுத்த "டேர்ம்" அவர் வர முடியாமல் போய்விடுமோ என்று கேட்டார். நிலைக் குழு உறுப்பினர்களுக்கு ரி எலக்ஷன் இருக்கின்ற காரணத்தால், அவர் கள் மறுமுறையும் நிற்கலாம். எத்தனை உறுப்பினர்கள் நிலைக் குழுவில் இடம் பெறுவார்கள் என்று எதிர்பார்க்க முடியாது. நிலைக் குழுக்களுடைய பணிகள் செம்மையாக நடைபெற வேண்டும். பணிகள் செம்மையாக நடைபெற வேண்டும் என்பதற் காக நிலைக் குழுக்களே தவிர, உறுப்பினர்களுக்காக என்ற அடிப் படையில் அமைக்கப்படுவதல்ல. இந்த நிலைக் குழுக்களில் இப்பொழுது 11 உறுப்பினர்கள் ஏற்கெனவே ஆறு பேர் இருந் தார்கள். இப்பொழுது மாநகராட்சி மன்றத்தினுடைய உறுப் பினர்கள் எண்ணிக்கை உயர்ந்திருக்கின்ற காரணத்தால், இப்பொழுது 11 என்று வைத்திருக்கின்றோம். அத்தனை உறுப் பினர்களும் நிலைக் குழுவில் இடம் பெற முடியாதுதான். இந்தக் குழுக்களுடைய நோக்கமே பணிகள் நிறைவேற்றப்பட வேண்டும் என்பதுதான்.

சட்ட மன்றம் கலைக்கப்பட்டாலும், மேலவை தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டேயிருக்கிறது. மூன்றில் ஒரு பங்கு உறுப்பினர்கள் மாறி மாறி வருகிறார்கள். மூன்றில் ஒரு பங்கினர் வெளியேறினால், ஒரு பகுதியினர் உள்ளே வருகிறார்கள். இரண்டு பகுதியினர் எப்பொழுதும் இருந்து கொண்டேயிருக்கின்றனர். இங்கே அப்படியல்ல. ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை கலைக்கப் படுகிறது. புதியதாக வர வேண்டியவர்கள் வருகிறார்கள். ஐந்து ஆண்டுகாலத்திற்குத் தொடர்ந்து நிலைக் குழுக்களில் இருந்தால் தான் தங்களுடைய வட்டங்களின் தேவைகளை முற்றிலும் அறிந்து காரியங்கள் பலவற்றைச் செய்ய இயலும். பணிகள் நிறைவேற்றப் பட வேண்டும் என்பது தான் இந்த நிலைக் குழுக்கள் ஏற்படுத்து வதன் நோக்கமாகும். ஆகவே கூடுமானவரையில் பல உறுப்பினர் கள் இடம் பெறுவார்கள் என்ற நம்பிக்கை இருக்கின்ற காரணத் தால், அவர்கள் அந்த முறையில் செய்கின்ற பணிகளில் நம்பிக்கை ஏற்படும்படி செய்வார்கள். மக்களுக்கு நம்பிக்கை ஏற்படுகிற சூழ்நிலையை அவர்கள் உருவாக்க வேண்டிய பொறுப்பில் இருக் கிறார்கள். ஆகையினால் இதிலே மாற்றம் ஏற்படுத்த வேண்டிய அவசியமிருக்காது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

MR. CHAIRMAN : The question is—

"That the Madras City Municipal Corporation and Tamil Nadu District Municipalities (Amendment and Extension of Term of Office) Bill, 1971 (L.A. Bill No. 27 of 1971), as passed by the Assembly, be taken into consideration".

[30th July 1971

[Mr. Chairman]

The motion was put and carried and the Bill was taken into consideration.

Clauses 2 to 41, Schedules I and II, clause 1, the Long Title and the Enacting Formula were put and carried.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :. மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே—

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட 1971-ம் ஆண்டு சென்னை நகராட்சி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (திருத்தம், பதவிக்கால நீட்டிப்பு சட்டமுன் வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 27/1971) நிறைவேற்றப்பட வேண்டும்" என்று முன்மொழிகிறேன்.

MR. CHAIRMAN : The question is—

"That the Madras City Municipal Corporation and Tamil Nadu District Municipalities (Amendment and Extension of Term of Office) Bill, 1971 (L.A. Bill No. 27 of 1971), as passed by the Assembly, be passed".

The motion was put and carried and the Bill was passed.

(2) THE TAMIL NADU PANCHAYATS (AMENDMENT) BILL, 1971 (L.A. BILL NO. 28 OF 1971).

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே, சட்டப் பேரவையால் நிறைவேற்றப் பட்ட தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (திருத்த) சட்டமுன் வடிவு @ (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 28/1971) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டுமென்று தான் முன்மொழிகிறேன்.

2—10—1960, 13—4—1961, 1—10—1961 ஆகிய மூன்று வெவ் வேறு தேதிகளில் ஊராட்சி ஒன்றிய மன்றங்கள் அமைக்கப் பட்டன. தொடர்புள்ள ஊராட்சி ஒன்றிய மன்றங்களில் எழுத் தர்கள், மேற்கண்ட ஒவ்வொரு தேதியிலும் அவ்வொன்றிய மன்றங் களின் அலுவலக உறுப்பினர்களானார்கள். ஊராட்சி ஒன்றிய மன்றங்களிலுள்ள தலைமை எழுத்தர்கள் கீழ்க்கண்ட ஏதாவது ஒரு பிரிவிலிருந்து அமர்த்தப்பட்டவர்களாவார்கள் :—

(அ) முன்னுள் மாவட்ட வாரியங்களின் அலுவலர்கள்.

(ஆ) ஊராட்சி ஒன்றியங்களிலுள்ள கீழ்நிலை எழுத்தர் களிலிருந்து பதவி உயர்வு செய்யப்பட்டவர்கள்;

(இ) மற்ற அலுவலகங்களிலிருந்து கொணரப்பட்டவர்கள்.

@ Printed as Appendix VI on page 1053.



30th July 1971]

[மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்]

1958-ஆம் ஆண்டு ஊராட்சிகள் சட்டத்திலுள்ள (தமிழ்நாடு சட்ட 35/1958) 58 ஆம் பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைப் பயன்படுத்தி, அரசால் இயற்றப்பட்ட ஒரு விதியின்படி, மேற் கண்ட முதல் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள முன்னுள் மாவட்ட வாரிய அலுவலர்களின் பணி வரம்புகள் முறைப்படுத்தப் பட்டுள்ளன. இவ்விதியின் பயனாக, 1920 தமிழ் நாடு மாவட்ட வாரியச் சட்டத்தில், 1958 தமிழ்நாடு சட்டம் XXXV உருவாக்கப்பட்ட விதிகளினால் தள்ளுபடியாக்கப்பட்டவை தவிர மற்ற விதிகளில் உள்ள முன்னுள் மாவட்ட வாரியப் பணி வரம்பு கள் அப்படியே பின்பற்றப்படுகின்றன. இவ்விதியின் விளைவாகத் தங்களுடைய பணிக்குரிய உரிமைகளையும், ஆண்டு ஊதிய உயர்வு களையும் அவர்கள் தொடர்ந்து பெற்று வருகின்றனர். மற்ற இரு பிரிவுத் தலைமை எழுத்தர்களும் 1958 ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டம் 35-ல் உள்ள 58 ஆம் பிரிவின் கீழ் உருவாக்கப்பட்ட ஊராட்சி ஒன்றிய மன்றங்களின் பணித்துறை விதிகளின் கீழ்க் கொணரப்பட்டுள்ளனர். இவ்விதிகள் 10—11—1964 அன்று செய லிற்கு வந்தன. ஆனால், இத்தேதிக்கு முன்பே இவ்வலுவலர்கள் எல்லோரும் ஊராட்சி ஒன்றிய மன்றங்களில வெவ்வேறு தேதி களில் சேர்ந்திருந்திருப்பர். ஏனெனில் 2—10—1960, 13—4—1961, 2—10—1961 ஆகிய தேதிகளிலேயே ஊராட்சி ஒன்றிய மன்றங்கள் அமைக்கப்பட்டுவிட்டன. இரண்டாவது, மூன்றாவது பிரிவிலுள்ள தலைமை எழுத்தர்களையும், மேற் கூறப்பட்ட 10—11—1964-க்கு முன்னராக நியமிக்கப்பட்டோரையும், இதில் கொணர, ஊராட்சி ஒன்றிய மன்றங்கள் முதற்படியாகத் தொடங்கப்பட்ட 2—10—1960 லிருந்து இவ்விதிகளுக்குப் பின் நாளிட்டுச் செயலாக்கம் தர வேண்டியுள்ளது. இந்த அலுவலர்களின் பணி வரைமுறைப்படுத் தப்படாதிருப்பதால் அவர்கட்கான பணி நலன்கள் அளிக்கப்பட வில்லை. இவ்வின்னல்களைக் களைய, முன் நாளிட்டு விதிகளைச் செயலாக்கம் செய்யும் வகையில் 1958 ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டம் 35-இல் உள்ள 58 ஆம் பிரிவு திருத்தப்படவேண்டியது அவசியமாகிறது.

1958 ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டம் 35-இல் உள்ள, 58 ஆவது பிரிவு, தகுந்த முறையில் திருத்தப்படுகிறபோது, 2—10—1960-க்கு முற்படாத ஒரு தேதியிலிருந்து இவ் விதிகளைப் பின் நாளிட்டுச் செயலாக்க அரசிற்கு அதிகாரம் அளிக்க இம் மசோதா வகை செய்கிறது.

சில பல எழுத்தர்கள் சில பலன்களைப் பெறவில்லை. 2—10—1960-க்கு முற்படாத ஒரு தேதியிலிருந்து இவ் விதிகளைப் பின் நாளிட்டுச் செயலாக்கினால். அந்த எழுத்தர்கள் பலன் பெறுகிறார்கள். அதற்குத்தான் இந்த மசோதாவைத் திருத்தம் செய்ய வேண்டிய அவசியமிருக்கிறது. எனவே, இம் மசோதாவை, இப் போவையின் ஆய்வுக்கு வைக்கிறேன்.

[30th July 1971

MR. CHAIRMAN : Motion moved—

"That the Tamil Nadu Panchayats (Amendment) Bill, 1971 (L.A. Bill No. 28 of 1971), as passed by the Assembly, be taken into consideration."

திரு. கே. ராஜாராம் : தலைவரவர்களே, இது சாதாரண ஒரு விஷயம். நமது பஞ்சாயத்து ஒன்றியங்களிலே பணிபுரியும் ஊழியர்களின் கஷ்டத்தைப் போக்க, அதிலே இருக்கும் நிர்வாகச் சிக்கலைத் தீர்த்துக் கொள்ள இந்தத் திருத்த மசோதா கொண்டுவரப்படுகிறது. வேறு ஒன்றுமில்லை. எனவே, இதை நான் மனப்பூர்வமாக ஆதரிக்கின்றேன். வரவேற்கின்றேன். இதிலே அதிகமாகப் பேச ஒன்றுமில்லை. இதை நிறைவேற்றித் தர வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன்.

MR. CHAIRMAN : The question is—

" That the Tamil Nadu Panchayats (Amendment) Bill, 1971. (L.A. Bill No. 28 of 1971) as passed by the Asembly, be taken into consideration."

The motion was put and carried and the Bill was taken into consideration.

Clauses 2 and 1, the Long Title and the Enacting Formula were put and carried.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, சட்டப்பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1971-ஆம் ஆண்டு ஊராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 28/1971) நிறைவேற்றப்பட வேண்டுமென்று முன்மொழிகிறேன்.

MR. CHAIRMAN : The question is—

" That the Tamil Nadu Panchayats (Amendment) Bill, 1971 (L.A. Bill No. 28 of 1971) as passed by the Assembly, be passed."

The motion was put and carried and the Bill was passed.

(3) THE TAMIL NADU TOWN AND COUNTRY PLANNING BILL, 1971
(L.A. BILL NO. 1 OF 1971.)

THE HON. THIRU K. ANBAZHAGAN : Sir, I move—

"That the Tamil Nadu Town and Country Planning Bill@; 1971 (L.A. Bill No. 1 of 1971) as passed by the Assembly be taken into consideration ".

Hon. Members may be aware that the Tamil Nadu Town and Country Planning Bill, 1971, which was taken up during the last session of the Legislature was referred to a Joint Select Committee, consisting of 20 Members from the Legislative Assembly and 10 Members from the Legislative Council for consideration.

@ Printed as Appendix VII on pages 1053—1115



30th July 1971

[The Hon. Thiru K. Anbazhagan]

At the instance of the Joint Select Committee, a Press Note on the Bill was issued, inviting Memoranda on the provisions of the Bill from persons and institutions interested in the legislation. The Local Bodies were also requested to offer their suggestions on the Bill. Most of the local bodies have passed resolutions welcoming the enactment of this Bill. The other suggestions and comments received have also been examined by the Joint Select Committee. The Committee held six sittings on the whole and considered the Bill clause by clause. The report of the Committee and the Bill as amended by the Joint Select Committee has been circulated to Members already. Some of th echanges incorporated by the Committee in the Bill are as follows :— 6-10 p.m.

(i) To include the following Members in the State Town and Country Planning Board (Clause 5)

(*a*) Chairman of the Tamil Nadu Slum Clearance Board.

(*b*) the president of the Panchayat Union Association;

(*c*) four members (instead of three in the Bill) nominated by the Government, two members from the Legislative Assembly, one member from the Legislative Council and one member from the Parliament;

(ii) to allow compensation in respect of refusal of permission or grant of permission subject to conditions for construction of buildings upto 10 per cent of the *plinth area* instead of the cubical contents laid down in clause 53;

(iii) to delete the provisions exempting the Tamil Nadu Housing Board and other statutory undertakings from the operation of the provisions of the Bill (Clauses 58 to 127).

(iv) to reduce the maximum fee for appeal to the Tribunal from Rs. 500 to Rs. 250 (Clause 78); and

(v) to fix a uniform time limit of two months in all cases throughout the Bill for submission of objections to Notifications etc. except in respect of complicated issues of a judicial nature.

I may say, in this connection, that the scope and salient features of the Bill have already been explained to the hon. Members at the time of referring the Bill to the Joint Select Committee. This Bill is mainly based on the Model Town and Country Planning Legislation commended by the Government of India for adoption by the States with changes to suit local conditions. This Model Bill itself is an outcome of elaborate research and study of the various planning legislation in the western countries. The Bill, therefore, seeks to achieve more or less a uniform legislation governing Town and Country Planning in this country. This Bill also provides for two new concepts in the field of Town Planning, viz., Regional plans and New Town Plans which is presently

30th July 1971]

[The Hon. Thiru K. Anbazhagan]

operative in Maharashtra. I would like to point out that the preparation of Master Plans and Metropolitan Development Plans cannot be taken up, unless this Bill is enacted as law, as the preparation and execution of such plans have no statutory backing at present. This Bill paves the way for building up a firm and strong legal foundation on the basis of which Town and Country Planning Programme can be undertaken expeditiously at all levels and also to plug loopholes and shortcomings in the existing Act.

With these words, Sir, I commend the Bill, as passed by the Legislative Assembly, for consideration of the House.

Mr. CHAIRMAN: Motion moved—

"That the Tamil Nadu Town and Country Planning Bill, 1971 (L.A. Bill No. 1 of 1971), as passed by the Assembly, be taken into consideration".

*திரு. சா. கணேசன்: மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே, இந்த நகர-நாட்டுப்புற அமைப்புச் சட்டத்தை நான் மனமார வரவேற்கிறேன். அதே காலத்திலே இந்த நகர-நாட்டுப்புற அமைப்பு முறையிலே சில அடிப்படைகளை நாம் மனதிலே கொண்டு செயல்பட வேண்டும் பெரிய நகரங்களிலேயும், சிறிய நகரங்களிலேயும் கூட எலக்ட்ரிசிடி சம்பந்தமான கம்பிகள், தண்ட வாளங்கள் வருகின்ற இடங்களிலே, ஊன்றப்படுகின்ற இடங்களிலே, அந்த நகரத்திலே அல்லது அந்தச் சிறிய நகரத்திலே வீதிகளிலே சாலை மரங்கள் வளர்ப்பதற்கு வாய்ப்பில்லாமல், உள்ள மரங்கள் வெட்டப்பட்டுப் போகக் கூடிய நிலை ஏற்படுவதையும் நாம் மனத்திலே கொண்டு, அதற்குத் தகுந்த முறையிலே அமைப்பு களை நாம் செயல்படுத்த வேண்டும். வெளிநாட்டில் பெரிய நகரங் களிலே சாலைக்கும், வீட்டுக்கும் மத்தியிலே ஒரு சிறுபாதை மாதிரிப் போட்டு அந்தப் பாதைக்கு வெளியே கம்பிகள் வரும்படியும், மரங்கள் சாலைக்கும் கம்பிக்கும் மத்தியிலே அமையும்படியும் இருக் கின்றன. அந்த மாதிரியான முறைகளை நாம் கையாளுவதற்கு வழி வகைகளைச் செய்ய வேண்டுமென்ற இந்த அரசைக் கேட்டுக் கொள்ளுகிறேன். அதே காலத்திலே, இப்பொழுது நம்முடைய நாடு போய்க்கொண்டிருக்கிற நிலையிலே, உலகம் போய்க் கொண்டிருக்கிற நிலையிலே, நாட்டின் தேவை அதிகப்படும் நிலை யிலே, வாகனங்களுடைய போக்குவரத்தும், வாகனங்களின் எண்ணிக்கையும் அகலமும் அதிகமாகப் பெருகிக்கொண்டு போகின்ற காரணத்தினாலே, உள் விட்டம் அதாவது அதிகமான அகலம் உள்ள தெருக்கள் அமைவதற்கு நிர்ப்பந்தமான வகை செய்ய வேண்டும். எந்தப் பகுதியிலேயும் பெரிய ஒரு பஸ்ஸோ போகலாம், வரவும்—எதிர் எதிரே செல்லுவதற்கு வாய்ப்பில்லாத வகையிலே 25 அடி, 30 அடி கூட இல்லாத தெருக்கள்—சென்னை நகரத்திலே கூட சில பகுதிகளிலே குட்டிட்டங்கள் அமைத்து, தனி காலனிகள் மாதிரி இருக்கின்ற இடங்களிலே காணப்படுவதை



30th July 1971]

[திரு. சா கணேசன்]

அகற்றுவதற்கு வழி வகை செய்ய வேண்டும். இப்படிச் செய்வ தால், நாட்டுப்புறம் கூட நாளடைவிலே நகரத்திலே கிடைக்கும் வசதியும், வாய்ப்பும் உடையதாக ஆகிவிடும் என்று சொல்லிக் கொள்வேன். ஆகவே, அதற்குத் தகுந்த முறையிலே குறைந்த பட்சம் ஒரு தெருவின் அகலம் 40 அடிக்குக் குறையக் கூடாது என்று வைத்தால தான், இனியாவது செம்மையான சூழ்நிலை அமையும். சுகாதார நெறிகளின்படி கூட, காற்றுப் போக்குவரத்து போன்றவற்றிற்கு, நல்லதொரு வாய்ப்பாக இது இருக்கும். அத்தோடில்லாமல், கிராமப்புறங்களிலே அமைக்கப்படுகின்ற இந்தமாதிரியான நகர-கிராம நிர்மாணத் திட்டங்களுக்கும் நாம் சில வரம்புகளைக் கட்டிவிட வேண்டும். வீட்டுக்கு முன்னே நிச்சய மாக 10 அடி குறைந்த அளவு காலி இடம் விடவேண்டுமென்று எல்லா இடங்களிலேயும் வற்புறுத்தப்பட வேண்டும். சிறு மார்க்கட் போன்ற சந்தைக் கடையுள்ள தெருக்கள் போன்ற இடங்களுக்கு வேண்டுமானால் இதிலிருந்து விதிவிலக்கு அளிக்கலாம். அதே மாதிரி, வீட்டிற்கு இரு புறமும் நிச்சயமாகக் காலி இடம் விடு வதற்கும் வகை செய்ய வேண்டும். இப்படியெல்லாம் செய்யக்கூடிய நிலையிலே அதற்கு வேண்டிய முழு அதிகாரத்தையும்—அதைக் கடுமையாக என்றால், முறையிலே அல்ல உறுதிப்பாடாக நிறை வேற்ற வேண்டியதன் முழு அதிகாரத்தையும் ஆங்காங்குள்ள அந்தந்த நிர்மாணத் துறை இயக்குநர் ஆயினும் சரி, அல்லது உதவி இயக்குநர் ஆயினும் சரி, அவர்களுக்குக் கொடுக்கக் கூடிய நிலை யிலே, அது செயல்படும் முறையை இப்பொழுதே நாம் வகுத்து விடுவது பயனுடையதாகவும், பின்னர் குழப்பங்கள் ஏற்படாமல் இருப்பதற்கு வாய்ப்பாகவும் அமையும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அதற்கு என்று அமைக்கப்படுகிற போர்டிலே மிகக் கவனமாக எல்லாத் துறை பற்றிய பொறுப்புள்ளவர்களையும் இதற்குள்ளே கொண்டுவந்திருப்பது பாராட்டத்தக்கது. எலக்ட்ரி சிடி போர்டு மட்டுமில்லாமல், அதுபோன்ற பல்வேறு துறைகளையும் கொண்டுவந்திருக்கின்றார்கள். அந்த போர்டிலே உறுப்பினர் களாக இருப்பதற்கு மேலவையிலிருந்து இரண்டு பிரதிநிதிகளும் மேலவையிலிருந்து ஒரு பிரதிநிதியும் அங்ஙனமே தமிழ்நாட்டிலே யிருந்து தேந்தெடுக்கப்பெற்ற பாராளுமன்ற உறுப்பினர்களிலே ஒருவரும், ஆக நால்வர்கள் நியமனம் பெறுவதற்கும் வாய்ப்புகள் இருக்கின்றன. அதோடு கூட, இந்த சிறு கிராம நிர்மாணத் துறை களை அமைப்பதற்கு பல வகையிலும் உதவியாக இருக்கிற, கடன் களைக் கொடுத்து உதவுகிற கோவாபரேடிவுக்கு இதிலே எந்த இடமும் இல்லாமலிருப்பதை ஒரு குறை என்று நான் கருது கிறேன். கோவாபரேடிவ் மூவ்மென்ட் மூலமாகத்தான் பலர் கடன்களை வாங்கியோ வேறு வகையான உதவியைப் பெற்றோ கட்டடங்களோ வீடுகளோ கட்டக்கூடிய நிலையிலே நாட்டிலே இருப்பார்கள், இருக்கிறார்கள். ஆகவே அந்தத் துறையிலே இருக் கின்றவர்களும் இதிலே பங்கு பெற அல்லது வேறு வகையான தங்களுடைய கருத்துக்களைத் தெரிவிக்க வல்லது [illegible]

[30th July 1971

[திரு. சா கணேசன்]

கூறைத் தெரிந்துகொள்வதற்கு வாய்ப்பை கூட்டுறவுத் துறைக்கும் இதிலே ஒரு உறுப்பினர், எக்ஸ் அஃபிஷியோவாக இருந்தாலும் சரி, இடைப்பதற்கு ஏற்பாடு செய்வது பொருத்தமாக இருக்கும். அங்ஙனமே நகர அவைகளின் சங்கத்திற்கு ஒரு பிரதிநிதியும், பஞ்சாயத்து யூனியன்களின் சங்கத்திற்கு ஒரு பிரதிநிதியும் கொடுத்திருப்பதுபோல், தமிழ் நாடு கோவாபரேஷன் சம்பந்தப்பட்ட அந்த பெருங்குழு இருக்கிறதே, அந்த சங்கத்திற்கும் ஒரு பிரதிநிதி இருப்பது பொருத்தமாக இருக்கும் என்பதையும் இந்த சம்தர்ப்பத்திலே நான் உங்கள் மூலமாக அரசினரின் கவனத்திற்குக் கொண்டுவர முன்வருகிறேன். ஆகவே இவற்றையெல்லாம் கவனித்து இந்த அமைப்பு முறை, இந்த நகர நாட்டு நிர்மாண வரைவு முறை, செம்மையாக இயங்கவும், இதன் மூலமாகக் கூடிய வரையிலே பின்னே குழப்பங்கள் ஏற்படாமல் அமையவும் வேண்டிய ஏற்பாட்டைச் செய்ய வேண்டுமென்று கேட்டு அமைகின்றேன். வணக்கம்.

திரு. சி. வி. ராஜகோபால்: தலைவர் அவர்களே, இந்த நகர நாட்டுப்புற அமைப்புச் சட்டத்தை நான் பாராட்டுவதோடுகூட, இந்தக் குழுவிலே நான் ஒரு உறுப்பினராக இருந்தேன் என்பதற்காகவும் தங்களைப் பணிவோடு கேட்டுக்கொண்டேன். எனக்கு இரண்டு நிமிஷம் அவகாசம் கொடுங்கள் என்று. இந்தச் சட்டம் இதற்கு முன்னாலே வந்ததில்லை. பார்க்கிறோம், கிராமங்களிலே எப்படி வேண்டுமானாலும் வீடுகள் கட்டுகிறார்களே, வீடுகள் அமைப்பு சரியில்லாமல் இருக்கிறதே, சுகாதார உடன்பாடு உடையதாக இல்லையே என்ற எண்ணம் எல்லாம் தோன்றுகிறபோதுதான், நமது ஆட்சிக்காலத்திலேதான் முதன்முதலாக இந்த அமைப்பை நிர்ணயித்திருக்கிறார்கள். இதற்கு முன்னாலே உள்ளவர்கள் கொஞ்சம் கவனம் வைத்திருக்கலாம் ஆனால் சட்டம் செய்யவே இல்லை. கவனம் வராத காரணத்தால் செய்யவில்லையோ என்னவோ, அது எனக்குத் தெரியாது.

6-20 p.m.

திரு. கே. ராஜாராம்: டவுன் பிளானிங் இருக்கிறது.

THIRU C. V. RAJAGOPAL : These rules and regulations for the planning are not given correctly. Because I was a Municipal Councillor for the last twenty years, I know something about it.

எதிர்காலத்திலே கட்டவிருக்கின்ற கட்டடங்கள் இருக்கின்றனவே, அவை பல அயல் நாடுகளிலே கட்டுகிறார்களே அந்த மாதிரி அமைப்பை உண்டாக்கும் என நான் எண்ணுகிறேன். மக்கள் நாகரிகமாக இருக்க வேண்டும் என்று எண்ணுகிறவர்கள், நல்ல வீடுகளிலே வாழ வேண்டும் என்று எண்ணுகிறவர்கள், நல்ல முறையோடுகூடிய வீடுகளாக, வெளிச்சம் உள்ள வீடுகளாக, ஜன்னல்கள் உள்ள வீடுகளாக, ஜன்னல்கள் பல பொருத்தப்பட்ட வீடுகளாக இருக்கவேண்டும் என்ற எண்ணம் உடையவர்கள் மேன்மேலும் அதிகரித்து வருகின்ற காரணத்தால்தான், இந்தச் சட்டம் மிகமிகத்


சம்பளவீதம், பஞ்சப்படியை மாற்றக்கோரும் கோரிக்கையை சட்டத் தீர்ப்புக்கு விட்டு தமிழ்நாடு அரசு 5—7—1971 அன்று தொடர்ந்து வேலை நிறுத்தம் செய்வதைத் தடைசெய்து உத்திரவிட்டதன் பேரில் சுமார் 3 மாத காலத்திற்குத் தொடர்ந்து நீடித்த வேலை நிறுத்தம், 21—7—1971 அன்று கைவிடப்பட்டது.

## (3) Hardship caused to teachers of panchayat unions in Tirunelveli and Ramanathapuram districts due to non-disbursement of salary for two months.

திரு. எஸ். முத்துசாமி: தலைவரவர்களே, திருநெல்வேலி-இராமநாதபுரம் மாவட்டங்களிலுள்ள ஊராட்சி ஒன்றியங்களின் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரி
9-50 a.m. யர்களுக்கு கடந்த இரண்டு திங்கட்களாக ஊதியம் அளிக்கப்படாததால், அவர்களுக்கு ஏற்பட்டுள்ள இடர்ப்பாடு குறித்த அவசரப் பொது முக்கியத் துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சரவர் களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, இம்மாநிலத் தில் சில ஊராட்சி ஒன்றியங்கள் தம் பணியாளர்களுக்குரிய சம்பளங்களை, உரிய காலத்தில் கொடுக்கயியலாத வகையில் நிதி இடர்ப்பாடு உடையனவாக உள்ளன. ஊராட்சி ஒன்றியம் ஆசிரியர்களின் சம்பளங்களையும் அந்த ஊராட்சி ஒன்றியப் பகுதிகளிலுள்ள மாணியம் பெறும் பள்ளிகளின் ஆசிரியர் களின் சம்பளங்களையும் கொடுக்க இயலும் வண்ணம், ஊராட்சி ஒன்றியங்களுக் குரிய மானியங்களை உரிய காலத்துக்கு மிக முன்னதாகவே வழங்க பள்ளிக் கல்வி இயக்குநருக்கு அணுமதி வழங்கப்பட்டுள்ளது. ஊராட்சி ஒன்றியங் களின் மொத்த வருவாயில் சுமார் 86 சதவீதம் கல்வித்துறை அளிக்கும் மானி யங்களிலிருந்து கிடைக்கிறது. எஞ்சிய 14 சதவீதத்தை மட்டுமே ஊராட்சி ஒன்றியங்கள் பிற வாயில்களிலிருந்து பெற வேண்டியுள்ளது.

திருநெல்வேலியில் உள்ள அனைத்து ஊராட்சி ஒன்றிய ஆசிரியர்களுக்கு 1971 மே மாதச் சம்பளம் ஜூன் மாதம் கொடுக்கப்பட்டுவிட்டது என மாண்பு மிகு அமைச்சர் இயக்குநர் தெரிவித்துள்ளார்.



31 ஜூலை 1971] [திரு. இரா. நெடுஞ்செழியன்]

திருநெல்வேலி, இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள எல்லா ஊராட்சி ஒன்றி யங்களுக்கும் 1971-72 முதல் அரை ஆண்டிற்கான அரசு மானியங்கள், குறித்த காலத்திற்கு மிக முன்னதாகவே கீழே குறிப்பிட்டவாறு வழங்கப்பட்டுள்ளன.

| | மானியம் கொடுக்கப்பட வேண்டிய காலம். | மானியம் கொடுக்கப்பட்ட மாதம். |
|---|---|---|
| 1. துணைக் கல்வி உதவி மானியம் 1971-72 .. | ஏப்ரல் 1971 | பிப்ரவரி 1971 |
| 2. நில வருவாய் ஒப்படைப்பு 1971-72 .. | ,, | ,, |
| 3. உள்ளூர் கல்வி மானியம் .. | ஜூலை 1971 | ஏப்ரல் 1971 முதல் மே 1971 வரை. |
| 4. பிரத்தியேக பஞ்சப்படி ஈட்டு மானியம் (முதல் அரை ஆண்டிற்கானது) .. | ஆகஸ்ட்டு 1971 | ஜூன் 1971, ஜூலை 1971. |

தற்பொழுது திருநெல்வேலி, இராமநாதபுரம் மாவட்டங்களில் இருக்கின்ற ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளிலே பணிபுரியும் ஆசிரியர்களுக்கு பாக்கி எதுவு மில்லை.

## (4) Rise in Price of Paddy in Ramanathapuram District.

திரு. பி. திருஞானசம்பந்தம்: தலைவரவர்களே, இராமநாதபுரம் மாவட் டத்தில் நெல்லின் விலை திடீரென உயர்ந்தது குறித்த அவசரப் பொது முக்கி யத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு உணவு-வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

The Hon. Thiru P. U. Shanmugam: Mr. Chirman, Sir, an increase in the prices of paddy and rice during the period from July to September is an annual feature. During the period immediately following the harvest, the prices are lower and as the arrivals in the market get reduced the prices are bound to increase to an extent, only on account of the additional cost involved in carrying the stocks procured during the harvest period for sale at a later period. Generally, during this season, the flow of paddy and rice into Ramanathapuram district from the neighbouring surplus districts decreases as the agricultural operations commence during this season in those districts. The ryots conserve their stocks for pavments of wages in kind. This is also a cause for the upward trend of prices in the open market in this district. This trend in open market price will continue until the commencement of the harvest of kuruvai and other short term paddy in Thanjavur district in late September.

The Government are keeping a careful watch on the situation to see if there is any large-scale hoarding by producers or traders. The Government have adequate stocks to be released for the benefit of the most valnerable sections to counter any sustained

[Thiru P. U. Shanmugam] [31 ஜூலை 1971

attempt by trade to create and exploit a situation of apparent scarcity. The Food Corporation of India which had procured about 15,000 tonnes of rice during Samba harvest has also come forward to distribute the stocks at their economic rate. While there has been a measure of increase as compared with last year, it cannot be said to be abnormal in this part of the year.

திரு. எஸ். முத்துசாமி: தலைவரவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்பொழுது, அறிக்கை தயாரித்து இந்த சபையின் முன் கொடுக்கும் பொழுதும், தமிழிலேயே கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

மிஸ்டர் சேர்மன்: ஆங்கிலத்திலேயும் கொடுக்கலாம்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: ஆங்கிலத்திலே படிப்பதற்குக் காரணம், தமிழிலே டைப் அடிக்கப்பட்ட எழுத்துக்கள் சரியாக இல்லை. படிக்க முடியாத நிலையிலே எழுத்துக்கள் மோசமாக இருக்கின்றன. அதனால் தான் ஆங்கிலத்திலே படித்தேன்.

திரு. ஜி. சுவாமிநாதன்: தனிப்பட்ட கடிதங்களுக்கு அரசாங்கத்திலிருந்து பதில் கொடுக்கின்ற காரியங்களில் தான் தமிழ் முழுமையாக அமுல்படுத்தப்பட்டிருக்காது என்றாலும், இப்படிப்பட்ட அறிக்கைகளை அமைச்சர்களிடம் சமர்ப்பிக்கும் பொழுதாவது ஒழுங்கான முறையிலே தமிழிலே டைப் அடிக்கப்பட்டதாக இருப்பதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: சோதியோ எடுத்தது சரியாக இல்லை. தல்ல சோனியோ மெஷின் வாங்கி இந்த குறையை நீக்க ஏற்பாடு செய்யப் படும்.

திரு. கே. ராமகிருஷ்ண ஆச்சாரி: எப்பொழுதும் அமைச்சர் அவர்கள் தமிழிலே கொடுத்தால் நன்றாக இருக்கும்.

V. PRESENTATION OF THE TWENTIETH REPORT OF THE COMMITTEE ON GOVERNMENT ASSURANCES.

திரு. கே. ராஜாராம்: தலைவரவர்களே, அரசாங்க உறுதிமொழிகள் பற்றிய இருபதாவது அறிக்கையைச் சமர்ப்பிக்கின்றேன்.

VI. GOVERNMENT BILLS.

## (1) THE TAMIL NADU LAND REFORMS (FIXATION OF CEILING ON LAND AMENDMENT BILL, 1971.

(L.A. Bill No. 16 of 1971).

THE HON. THIRU P. U. SHANMUGHAM: Mr. Chairman, Sir, I beg to move—

"That the Tamil Nadu Land Reforms (Fixation of Ceiling on Land) Amendment Bill@, 1971 (L.A. Bill No. 16 of 1971), as passed by the Assembly, be taken into consideration."

Printed as Appendix I on pages 1191–1196.



31 ஜூலை 1971] [Thiru P. U. Shanmugam]

Hon. Members are aware that as a further step towards agrarian reform and for the effective implementation of the Tamil Nadu Land Reforms (Fixation of Ceiling on Land) Act, 1961, Government decided to review the exemptions contained in that Act. Accordingly, a Joint Committee consisting of forty six members of both the Houses of the Legislature was constituted to recommend on the continuance of or otherwise, of the various exemptions contained in the Tamil Nadu Land Reforms (Fixation of Ceiling on Land) Act, 1961. In its interim report, the Joint Committee has recommended, among other things, that the exemption in respect of lands used exclusively for grazing and assessed to land revenue at Rs. 1.25 and below per acre and lands used for cultivation of sugarcane and in respect of which the Sugar Factory Board has granted permission under section 40 or 43 of the Act, may be withdrawn. Accordingly, the Government have decided to withdraw the exemption in regard to the above two items. I shall now refer to some of the special features of the Bill.

The expressions "date of commencement of this Act" and "notified date" will have different meanings in respect of the proposed Bill. The "notified date" for the purposes of the Tamil Nadu Land Reforms (Reduction of Ceiling on Land) Act, 1970 has been fixed as the 2nd October 1970, but for the purposes of the Tamil Nadu Land Reforms (Fixation of Ceiling on Land) Amendment Act, 1971 a separate date will have to be fixed by Government as "notified date".

The sugar factory will have to file a return under section 8 of the principal Act after the commencement of this Act. As regards persons who held grazing land in excess of the ceiling area by reason of the exemption given under section 74 of the principal Act, they also will have to file returns after the commencement of this Act. Even if they have filed a return under the Tamil Nadu Land Reforms (Reduction of Ceiling on Land) Act, 1970, they will have to submit another return if, after taking into account the grazing lands held by them, the total extent of lands held by them exceeds the ceiling area.

The new provision made in section 94-A empowers the Government to make arrangement for the cultivation of the surplus lands acquired from the sugar factory, with sugarcane for supply to the factory concerned. It also empowers the Government to make rules in respect of such surplus lands for the cultivation of sugarcane through a corporation (including a company) owned or controlled by the State. Sub-section (4) of section 94-A makes it clear that the surplus land acquired from the sugar factory may also be disposed of in accordance with the rules made under section 94.

Now section 94-B provides that the land held on a tenancy basis which is within the ceiling area of the landowner should be deemed to be held on a tenancy basis by the corporation (including

[Thiru P. U. Shanmugam] [31 ஜூலை 1971

a company) to ensure continued supply of sugar-cane to the factory. Such land will be held by the factory only till the expiry of the period of contract of tenancy. Secion 94-C exempts an extent of land not exceeding 100 standard acres held by the sugar factory solely for research seed farm from the operation of the Act.

Provision has also been made for the abolition of the Sugar Factory Board and the Sugar Factory Tribunal with the incidental provision that the members thereof shall cease to hold office.

Sir, I commend the motion for the acceptance of the House.

தலைவர்களே, இதனுடைய சாராம்சத்தை அங்கத்தினர்கள் அவர்களுடைய கவனத்திற்காக தமிழில் சொல்கிறேன். ஏற்கனவே நிலச் சீர்திருத்தச் சட்டத்தின் கீழ் சர்க்கரை ஆலைகளுக்கும் மேச்சல் காடுகளுக்கும் விதி விலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. சென்ற பொதுத் தேர்தலுக்கு முன்பு இந்த அவையில் ஒரு குழு அமைத்து, அந்தக் குழு எந்தெந்த விதி விலக்கு களை ரத்து செய்யலாமென்று யோசனை சொல்லியிருந்தது. அது இப்பொழுது கரும்புக்காகவும் மேய்ச்சல் காட்டுக்காகவும் ஒதுக்கப்பட்டிருப்பதை ரத்து செய்து விடவேண்டுமென்று சிபார்சு செய்துள்ளது. அந்த இரண்டு சிபார்சுகளும் அப்படியே ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கின்றன. இப்பொழுது கொடுக்கப்பட்டிருக்கின்ற பூமியை அரசாங்கம் எடுத்துக்கொள்ளும். அந்த விதி விலக்கை ரத்து செய்து விடுகிறது. திரு. ஆரூரான் சர்க்கரை ஆலைக்கு ஒதுக்கப்பட்டிருக்கின்ற நிலத்தை அரசாங்கம் எடுத்து கார்ப்பரேஷனை வைத்து அரசாங்கமே நடத்துவதா அல்லது அரசாங்கம் வைத்துக்கொண்டு கண்ட்ரோல் பண்ணி நடத்துவதா என்று இனிமேல் தீர்மானிக்க அரசாங்கம் சட்டம் போடுவதற்கு அதிகாரம் இந்தச் சட்டத்தின் மூலம் எடுத்துக் கொள்ளப்படுகிறது.

அதேபடியாக மேய்ச்சல் காட்டுக்காகக் கொடுக்கப்பட்டிருக்கின்ற விதி விலக்கை ரத்து செய்கின்ற நேரத்தில் கால் நடைகள் உள்ளபடியே வைத்திருந்தால், ஒவ்வொரு கால்நடைக்கும் எவ்வளவு பூமி என்று ஒதுக்கச் சொல்லியிருக்கிறோம். ஆனால் மேய்ச்சல் காட்டுக்காகவென்று ஆயிரக்கணக்கான எக்கர் பூமி வைத்திருப்பதை ரத்து செய்வது இந்தச் சட்டத்தின் நோக்கமாகும். இந்தச் சட்டத்தின் மூலமாக சர்க்கரை ஆலைகளுக்காகவுள்ள எல்லா நிலங்களையும் எடுத்துவிடாமல் ஆராய்ச்சிக்காகவும், விதை வளர்த்துக் கொடுப்பதற்காகவும் 100 ஏக்கர் என்று ஒவ்வொரு சர்க்கரை ஆலைக்கும் கொடுக்கலாமென்று இந்தச் சட்டத்தில் பாதுகாப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. இது ஒரு சலுகையில்லை என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். எனவே இந்தச் சட்டம் நிலச் சீர்த்திருத்தத்தில் அடுத்த கட்டமாக அமைந்திருக்கின்ற காரணத்தால், இதை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று இந்த அவையை கேட்டுக்கொள்கிறேன்.

MR. CHAIRMAN : Motion moved—

"That the Tamil Nadu Land Reforms (Fixation of Ceiling on Land) Amendment Bill, 1971 (L.A. Bill No. 16 of 1971), as passed by the Assembly, be taken into consideration."



31 ஜூலை 1971]

திரு. எஸ். ஜெயராம செட்டியார் : தலைவரவர்களே, இந்தச் சட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட குழுவில் நானும் ஒரு அங்கத்தினராகவிருந்த முறையில், நான் இதை ஒத்துக் கொள்கிறேன். எங்கள் பக்கத்தில் காங்கேயத்திலிருந்து மாடுகள் வாங்கி வந்து வளர்க்கப்படுகின்றன. ஆகவே உண்மையாக மாடு வைத்து வளர்ப்பவர்களுக்கு விதி விலக்கு அளிக்க வேண்டும். திரு. ஆரூரான் சர்க்கரை ஆலை சம்பந்தமாக, அவர்களிடம் 12,000 ஏக்கர் இருப்பதாக அப்பொழுது தகவல் வந்தது. அந்த 12,000 ஏக்கரில் விவசாயத்திற்கு வைத்துக் கொண்டு மற்றதை இப்பொழுது கார்ப்பரேஷன் வைத்து நடத்துவதாகச் சொல்வதை விட்டுவிட்டு, சிறு சிறு விவசாயிகளுக்குக் கொடுத்து உதவினால் நன்றாகவிருக்குமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

* திரு. ஜி. கவாமிநாதன் : தலைவரவர்களே, இந்த மசோதா மீது நான் ஒரு விஷயத்தைக் குறிப்பிட விரும்புகிறேன். இந்த சர்க்கரை ஆலைகளுக்கு 100 ஏக்கர் போக மீதியை அரசாங்கம் எடுத்துக்கொண்டு ஒரு கார்ப்பரேஷனுகவோ அல்லது ஒரு கம்பெனி மூலமாகவோ கரும்பு சாகுபடி செய்து சர்க்கரை ஆலைகளுக்குக் கொடுப்பதாகவிருக்கிறது. தமிழ்நாட்டில், தஞ்சாவூர் மாவட்டத்தில் தொழில்துறை வளராத இந்தச் சமயத்தில் அங்கு இந்த ஒரு சர்க்கரை ஆலைதான் இருப்பது தெரிந்த விஷயம். இப்படிப்பட்ட ஒரு மசோதாவை இங்கே கொண்டு வந்து இந்த சர்க்கரை ஆலைகளுக்குக் கரும்பு இல்லாமல் ஒரு ஆபத்தான நிலைமை வரக்கூடாதென்பதற்காகத்தான் அரசாங்கம் எடுத்து நடத்தலாம் என்ற தன்மையில் அபிப்ராயம் சொல்லப்பட்டது. ஆனால் 94 (ஏ) பிரிவில் என்ன இருக்கிறதென்று பார்க்க வேண்டும். அரசாங்கம் கார்ப்பரேஷனுகவோ கம்பெனியாகவோ நடத்தலாம் என்று சொல்லப்படுகின்ற அதே நேரத்தில், மூன்று, நான்கு என்ற இரண்டு உட்பிரிவுகளைப் பார்க்கின்றபோது இந்த சர்க்கரைத் தொழிற்சாலையை நடத்துகிறவர்கள் எப்பொழுதும் அரசாங்கத்தினுடைய ஆணைக்குட்பட்டு நடக்கும்படியான ஒரு சூழ்நிலையை உண்டாக்குகிறதென்று சொல்லிக் கொள்கிறேன். செக்ஷன் 94 (3) பிரகாரம் அரசாங்கத்தில் உள்ளவர்கள் கார்ப்பரேஷனுகவோ, கம்பெனியாகவோ நடத்தினாலும் கரும்பு சாகுபடி செய்ய வேண்டாம், வேறு ஏதாவது செய்யலாம் என்று அரசு அவர்களுக்கு உத்திரவு போடலாமென்று சப்-செக்ஷன் கூறுகிறது.

"Notwithstanding anything contained in sub-section (1) or sub-section (2), the Government may by notification direct that it is not compulsory to cultivate sugarcane in any such land.....".

ஒரு சர்க்கரை ஆலை இருக்கின்றபோது அந்த சர்க்கரை ஆலைக்கு வேண்டிய கரும்பு உற்பத்தி செய்தால்தான் அந்த ஆலையை நடத்த முடியுமென்ற நிலைமையில் கரும்பு அல்லாத வேறு எந்தப் பயிரையும் சாகுபடி செய்ய அரசாங்கம், எந்த சமயத்திலும் உத்தரவிட்டு ஆலைக்கு கரும்பு இல்லாமல் செய்துவிட்டு அந்தத் தொழிற்சாலையே நடக்க முடியாத ஒரு நிலையை உருவாக்க முடியுமென்றிருக்கிறது.

நான்காவது பிரிவின்படி உபரி நிலங்களைத் தனிப்பட்டவர்களுக்குப் பிரித்துக்கொடுத்து விடலாமென்று சொல்லியிருக்கிறார்கள்.

"Nothing in this section shall be construed as preventing the Government from making rules under section 94 providing for

the manner of disposal of any surplus land acquired under this Act and held by any sugar factory immediately before the date of acquisition.....".

அப்படி பிரித்துக் கொடுத்துவிட்டபிறகு அவர்கள் கரும்பு சாகுபடி செய்ய வேண்டுமா அல்லது வேறு ஏதாவது செய்ய வேண்டுமா என்று சொல்கின்ற அதிகாரம் அரசாங்கத்திற்கு இருக்கிறது என்று சொல்லப்பட்டுள்ளது. தனிப் பட்டவர்களுக்குக் கொடுத்து கரும்பு சாகுபடி செய்யச்சொல்லலாம் என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெயராம செட்டியார் அவர்களும் சொன்னார். ஒருவருக்குப் பிரித்து கொடுத்துவிட்ட பிறகு அவன் கரும்புதான் சாகுபடி செய்யவேண்டும், அல்லது கடலை தான் சாகுபடி செய்ய வேண்டுமென்று சொல் வதற்கு அரசாங்கத்திற்கு அதிகாரமிருக்கிறதா என்று தெரியவில்லை. இந்த இரண்டு அதிகாரங்களையும் வைத்திருப்பது கரும்பாலைகளை நடத்துபவர் களுக்கு மனக்கிலேசத்தை உண்டாக்கும் விதத்தில் அமைந்திருக்கிறது. அந்த இரண்டையும் நீக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

*திரு. கே. ராஜாராம் : தலைவரவர்களே, கரும்பாலைகள் சம்பந்தமாக எந்த விதமான வரையறையும் இல்லாமல் எவ்வளவு நிலம் வேண்டு மானாலும் வைத்துக்கொள்ளலாமென்றிருந்த விதி விலக்கை ரத்து செய்ய வேண்டுமென்று அந்தக் குழு சிபார்சு செய்தது. ஆனால் அதற்காகக் கொண்டு வந்திருக்கும் மசோதாவில் நண்பர் திரு. சுவாமிநாதன் அவர்கள் சொன்னது ஒரு விஷயம். அதே விதி 94 (ஏ)-ல் சப்-செக்ஷனில்

" Where any surplus land acquired by the Government under this Act was held by any sugar factory immediately before the date of acquisition, the Government shall make arrangement for the cultivation of such land with sugarcane for supply to the sugar factory concerned".

என்று கண்டிப்பாக அப்படி எடுத்துக்கொள்ளும் உபரி நிலங்களை கரும்புச் சாகு படிக்கு விட்டு சர்க்கரை ஆலைக்கு சப்ளை செய்ய வேண்டுமா என்ற சந்தேகக் குறியிருக்கிறது. ஆனால் இப்பொழுது புதியதாகப் போடப்பட்டிருக்கின்ற மூன்றாவது சப்-செக்ஷன்

" Notwithstanding anything contained in sub-section (1) or sub-section (2), the Government may, by notification, direct that it is not compulsory to cultivate sugarcane in any such land as is referred to in sub-section (1) and on the issue of such notification, the land concerned may be cultivated either with sugarcane or with any other crop ".

கண்டிப்பாக கரும்பு போட்டு சப்ளை செய்ய வேண்டு மென்று ஒன்றாவது இளாகிலும், எந்தப் பயிர் வேண்டுமானாலும் விளைவிக்கலாம் அரசாங்கம் கட்டளையிடுகின்றபடி கரும்போ அல்லது வேறு ஏதோ என்று மூன்றாவது இளாகிலும் ஒன்றுக்கொன்று "காண்ட்ராடிக்டரி" ஆக இருக்கிறது. இதை அரசாங்கம் கவனித்துச் செய்தார்களா என்று புரியவில்லை. இதை அமைச்சர் அவர்கள் விளக்க வேண்டுகிறேன்.



மேச்சல் தரை விஷயமாக நாங்கள் ஒரு சிபார்சு செய்திருந்தோம். தமிழ் நாட்டில் காங்கேயம் போன்ற சில முக்கியமான இன மாடுகள் வளர்ப்பு தமிழ் நாட்டுக்குப் பெருமை அளிக்கக் கூடியது. அவைகளின் மேய்ச்சலுக்கு வசதி இல்லை என்று அடியோடு சொல்லாமல் 25 எக்கருக்குக் குறையாமல் கொடுக்க வேண்டுமென்று சொல்லுகிறோம். இதை நாங்கள் அந்த அட்வைசரி கமிட்டியிலும் சொல்லியிருக்கிறோம். ஒரு மாட்டுக்கு இவ்வளவு என்று கணக் குப்பார்த்து அனுமதிக்கலாம். இது சம்பந்தப்பட்ட இரேசிங் லாண்ட் செக்ஷன் 74-ம், 75-ம் தான். அந்த 2 செக்ஷன்களையும் விலக்கிவிடுவதற்கு ஏற்பாடு செய்யப்படுகிறது. ஒரு மாட்டுக்கு ½ ஏக்கர் நிலமாவது கொடுப்ப தற்கு, அரசாங்கத்துக்கு அதிகாரம் இருக்கவேண்டும். இதை அமைச்சர் அவர்கள் விளக்கும்படி கேட்டுக் கொள்ளுகிறேன். மற்றபடி வேறு எதையும் கூற விரும்பவில்லை. 10-10

திரு. எஸ். ஜெயராம செட்டியார் : இப்போது ஆறான் சர்க்கரை ஆலை யில் செகவரி 9 சத வீதம், 10 சத வீதத்திற்கு மேலே இருந்தால் தான் . . . . (மணி அடிக்கப்பட்டது).

மிண்டர் சேர்மன் : ஒரு உறுப்பினர் ஒரு முறை தான் பேசலாம். இரண் டாவது முறை பேசக் கூடாது.

மாண்புமிகு திரு. ப.உ. சண்முகம் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப் பினர்கள் எழுப்பின நியாயமான சந்தேகங்களுக்கெல்லாம் தான் பதில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பார் மீதோ கோபம் கொண்டு, இந்த விதி விலக்கை ரத்து செய்வதாகக் கருதக் கூடாது. அந்த சர்க்கரைத் தொழில் நடக்க வேண்டுமென்று தான் அரசு விரும்புகிறது. அந்த சர்க்கரை ஆலையை நடத்தும் அதிபர்களுக்கும் கரும்பு வைத்திருக்கும் கார்ப்பொரேஷனுக்கும் ஒரு உடன்பாடு வேண்டும். நாம் கரும்பு பயிரிட்டு அவர்கள் எடுத்துக் கொள்ளத் தவறி விட்டால் அல்லது நாம் கரும்பு கொடுக்கத் தவறிவிட்டால் என்ன செய்வது? இதற்காக ஒரு நல்ல உடன்பாடு ஏற்பட வேண்டுமென்று விரும்பித்தான் இந்த ஏற்பாட்டை அரசு செய்கிறது. அந்த ஆலையை மூடி விட வேண்டுமென்று அரசு விரும்ப வில்லை.

இன்று காலை கூட ஆறான் சர்க்கரை ஆலை அதிபர் உயர்திரு வி. எஸ் நியாகாராஜ முதலியார் அவர்களிடம் பேசினேன். கார்ப்பொரேஷன் அமைக் கும் போது, இதுபற்றிக் கலந்து பேசுவதாக முதலமைச்சரும் சொல்லியிருக்கி றார். பேசி முடித்த பிறகு தான் இது அமலுக்கு வரும் என்று சொன்னார்கள். அவரும் அதை ஏற்றுக்கொண்டு சென்றிருக்கிறார். இதில் எந்தவித சந்தேக மும் இல்லை.

இதைப் பிரித்துக் கொடுத்து விட வேண்டுமென்று சொன்னார்கள். இதில் இரண்டு சிக்கல்கள் இருக்கின்றன. சில நிலங்கள் கரும்பாலைக்குச் சொந்தமாக இருக்கின்றன, சில வேறு சில பெயரால் குத்தகைக்கு வைத்திருக்கிறார்கள்,

[திரு. ப. உ. சண்முகம்] [31 ஜூலை 1971

மேலும் கரும்பு பயிரிட்டு அந்த ஆலைக்குக் கொடுக்கிறேன் என்றால், கார்ப் பொரேஷன் மூலமாகக் கொடுக்க ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அரசாங்கம் நிலம் வைத்து கார்ப்பொரேஷன் நடத்த வேண்டும் என்ற நோக்கத்தோடுதான் இந்த விதிகளைச் செய்திருக்கிறார்கள்.

மேச்சல் நில விதி விலக்கை ரத்து செய்வதுபற்றி இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் சிலர் குறிப்பிட்டார்கள். மேய்ச்சல் காடு என்று சொல்லி 50 ஸ்டாண்டர்டு ஏக்கரா வரையில் ஒருவர் நிலத்தை சும்மா வைத்துக்கொள்ளலாம் என்று விதி இருக்கிறது. அந்த விதியைத் தான் ரத்து செய்கிறோம். அந்த விதியை ரத்து செய்வதன் மூலம் உள்ளபடியே கால்நடைகள் வைத்திருக்கிறவர்கள் பாதிக்கப்படமாட்டார்கள். ஒரு கால்நடைக்கு இவ்வளவு நிலம் என்று கணக்கு இருக்கிறது. எல்லா நிலத்தையும் எத்துவிட்டால் கால்நடைகள் எங்கே போகும்? இது பிரின்சிபல் சட்டத்திலேயே இருக்கிறது. கால்நடை இருந்தாலும், இல்லாவிட்டாலும் மேய்ச்சல் நிலம் வைத்திருக்கலாம் என்று இருப்பதைத் தான் ரத்து செய்கிறோம். டெய்ரி பார்ம் என்று இருப்பதை ரத்து செய்யவில்லை. கரம்பாக வைத்திருக்கலாம் என்று ஏற்கனவே ஒரு விதி இருக்கிறது. அதைத் தான் ரத்து செய்கிறோம்.

MR. CHAIRMAN : The question is—

" That the Tamil Nadu Land Reforms (Fixation of Ceiling on Land) Amendment Bill, 1971, (L.A. Bill No. 16 of 1971), as passed by the Assembly, be taken into consideration ".

The motion was put and carried and the Bill was taken into consideration.

Clauses 2 to 4, clause 1, the Long Title and the Enacting Formula were put and carried.

THE HON. THIRU P. U. SHANMUGAM : Sir, I move—

" That the Tamil Nadu Land Reforms (Fixation of Ceiling on Land) Amendment Bill, 1971 (L. A. Bill No. 16 of 1971), as passed by the Assembly, be passed".

MR. CHAIRMAN : The question is—

" That the Tamil Nadu Land Reforms (Fixation of Ceiling on Land) Amendment Bill, 1971 (L.A. Bill No. 16 of 1971), as passed by the Assembly, be passed".

The motion was put and carried and the Bill was passed.

## (2) THE TAMIL NADU AGRICULTURAL INCOME-TAX (AMENDMENT) BILL, 1971 (L.A. BILL No. 19 OF 1971).

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, "சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ் நாடு 1971-ம் ஆண்டு வேளாண்மை வருமான வரி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 19/1971) பரிசீலனைக்காக ஆலோசனைக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்" என்று கோருகிறேன்.



31 ஜூலை 1971]

இந்த மசோதாவைக் கொண்டு வருவதன் நோக்கம் இதுவரையில் இருந்தன்ற சட்டத்தின்படி நிலப் பரப்பளவின் மீது தான் நாம் வரி விதித்துக் கொண்டு வந்தோம். ஆனால் இன்று நாம் கொண்டு வருகிற புதிய சட்டத்தின் படி நிலத்தில் விளையும் விளைபொருள்கள் மீது வரி போடுவதற்குச் சட்டத்தைத் திருத்துகிறோம்.

நான் இந்த மசோதாவைப் பிரேரேபிக்கும்போது, மிளகாய், மாங்காய், வெற்றிலை, மஞ்சள் இவைகளுக்கு எல்லாம் வரி போடுவதாகத் தான் இருந்தோம். இவைகளுக்கு வரி தேவையில்லை என்று முதலமைச்சர் தெரிவித்தார்.

முதலில் கம்பவுண்டிங்குக்கு 20 ஸ்டாண்டர்டு ஏக்கர் என்று வைத்திருந்தோம். சட்டப் பேரவையில் அங்கத்தினர்கள் இதை உயர்த்த வேண்டுமென்று சொன்னார்கள். அதனால் 20 ஸ்டாண்டர்டு ஏக்கரை 30 ஸ்டாண்டர்டு ஏக்கராக உயர்த்தியிருக்கிறோம்.

இப்படிச் சில மாற்றங்களுக்குப் பிறகு இந்த மசோதா வந்திருக்கிறது. இது கொண்டுவரப்பட்டதின் நோக்கம் நிலப் பரப்பைக் கணக்கில் எடுத்துக் கொண்டு வரி விதிக்காமல், நிலத்தில் விளையும் பொருள்களைக் கணக்கில் எடுத்துக்கொண்டு வரி விதிக்க வேண்டும் என்பது தான். சில பணப் பயிர்களுக்குத் தான் வரி போட வேண்டுமென்று பேசியிருக்கிறோம். ஆகவே இந்த மசோதாவை ஆய்வுக்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

MR. CHAIRMAN : Motion moved—

" That the Tamil Nadu Agricultural Income Tax (Amendment) Bill, 1971 (L.A. Bill No. 19 of 1971), as passed by the Assembly, be taken into consideration for making recommendations ".

திரு. எஸ். ஜெயராம செட்டியார் : தலைவர் அவர்களே, இந்த விவசாய வருமான வரிச் சட்டத்தைக் கொண்டுவருவதால் அதிக வருமானம் வருமென்று சொல்லப்படுகிறது. நல்ல வருமானம் வரக் கூடிய நிலங்களுக்கு வரி போடுவதில் தப்பில்லை என்று சொன்னார்கள். லாண்ட் ரெவின்யூவை நாம் எடுத்துவிட்டோம். நிலப்பரப்பில் என்ன விளைகிறது என்பதைப் பார்க்காமல் நாம் மொத்தத்தில் அதை எடுத்துவிட்டோம். அதற்குப் பதிலாக இந்தச் சட்டத்தைக் கொண்டுவந்திருக்கிறோம் என்று சொன்னார்கள். ஆரம்பத்தில் லாண்ட் சீலிங் வந்தவுடனே இந்த அக்ரிகல்சரல் இன்கம் டாக்சை எடுத்து விட்டால் நல்லது, அதற்காக ஏற்பட்டிருக்கும் இலாகாவினால் ஏற்படும் செலவினால் அதிக லாபம் வருவதில்லை. விவசாயிகளுக்கு இந்தச் சலுகையைக் கொடுக்க வேண்டும் என்றெல்லாம் நான் கீழ்சபையில் இருக்கும்போதே குறிப்பிட்டிருக்கிறேன். இப்போதும் வரி விலக்கை விவசாயிகளுக்குக் கொடுக்க இந்த அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன். இதனால் ஏற்படும் லாபம் சுமார் 2 கோடி ரூபாய் இருக்குமென்று சொல்லியிருக்கிறார்கள். இப்போது புதிதாக ஏற்படுத்தப்படும் விதிகளினால் இன்னும் 4 கோடி ரூபாய் கிடைக்கும் என்கிறார்கள். அப்படி மொத்தமாக 6 கோடி ரூபாய் கிடைத்தாலும் அதைத் தனர்த்தி விவசாயிகளுக்கு விலக்கு அளிக்கப்பட்டு அவர்களுக்கு உற்சாகம் கொடுக்க ஏதாவது செய்யப்படுமா என்பதைக் கேட்டுக்கொள்கிறேன்.

10-20 a.m.

@ Printed as Appendix II on pages 1195–1198.

[31st July 1971

* THIRU A. R. DAMODARAN : Mr. Chairman, Sir, before I refer to the changes made by the Hon. Minister when he moved certain amendments to the Bill yesterday, I should like to state that this is such an important measure where radical changes are sought to be made not only in regard to the rates of agricultural income-tax but also in regard to the composition formula in that it is sought to be restricted to 30 standard acres at the present moment and so many important changes are considered that I think, Sir, in all sincerity, that it would have been better to have referred this to a Select Committee for its study. I am not against the agricultural income-tax in principle. It is a well-known principle that income whether it is from business of from agriculture must be taxed on a certain graded scale and in fact, in 1967, when the late Chief Minister brought forth a similar Bill, we pleaded with him that the composition formula should not be changed, because, after all, the farmer's great privilege and pleasure in this is not merely that he can grow crops in liberty but that he should also be free from the various bureaucratic controls and administrative procedures that an income-tax Bill of this nature envisages. Sir, I have been an income-tax assessee for the past 20 years ever since I attained 21 years of age and the administration of the Income-tax Act has become so much complicated that an ordinary assessee will never be able to fill up a return to the Income-tax Officer without seeking expert advice from auditors who are specially qualified for this purpose. In the case of agricultural income-tax, many of us have been paying on the basis of the composition formula not because we want to pay less tax to the Government but because a farmer ordinarily does not have the expert advice to prepare the Agricultural Income-tax return. Apart from that, Sir, under the Income-tax Law, over the past 40 or 50 years, there has been a huge accumulation of case-law and it is well-known that under the Income-tax Act, we have appeals and we may go to Tribunals where a lot of years are wasted and in fact, no big assessee really has his assessment paid without going on appeal and following all the formalities of the appellate procedure. In the case of agricultural income-tax, Sir, in the Bill that has been envisaged by the Hon. Minister, apart from altering the nature of the definition of 'Standard acres', he has also left it to the village karnam really who will be noting in his Adangal or Chittah the type of crops that are being cultivated by a particular ryot. As I have already mentioned in my speech during the Budget discussion, our village economy is not yet so well-developed and our karnams and the hierarchy of the Revenue department are not so well-versed in the agricultural income-tax laws, and I think we are introducing unnecessary bureaucratic controls in a field which should be left free of all bureaucratic controls. As I said, Sir, I have no objection to the rates being put on a slab basis though they may be raised at a later date. But I would like to make my first plea and that is about because we want to pay less tax to the Government but because 40 or 50 standard acres—and for the information of the hon. Members, I wish to point out that this standard acre has



31st July 1971] [Thiru A. R. Damodaran]

nothing to do with the standard acre ' in the Land Ceiling Act and the classification here is entirely different. I would wish to avoid the bringing of Agricultural Income-tax Auditors into the field, because, by using the advice of these persons, I can tell the Hon. Minister, as a matter of fact, which he can verify, next year I will not pay the agricultural income-tax that I am paying this year, if I choose to submit accounts to the Agricultural Income-tax Officer, But I am an exception in the sense that I have experience in filling up income-tax returns. With 20 years of experience, I can claim depreciation on the motors and pumpsets that have been installed and I can claim depreciation on land also. But the point is that an ordinary farmer rarely preserves the bills in respect of fertilisers, in respect of pest control, and in respect of various implements which he may buy. It is, therefore, from this aspect, Sir, that I request the Hon. Minister to consider whether the fixation of the limit for composition should not be on the old basis and why it should be restricted to 30 standard acres.

Sir, another plea which I wanted to make was with regard to the classification of standard acres and the new formula that has been enunciated by the Government. In the original Bill, Sir, the Hon. Minister had enunciated a certain ratio. He had stated that one-tenth of an acre of arecanut, to take one example, would constitute one standard acre. Yesterday, Sir, he has altered it as one-sixth of an acre used for growing arecanut constituting one standard acre. I welcome this change. But I want to stress that the very fact that the Hon. Minister has had to bring forth about 10 or 15 amendments to the original Bill that has been circulated to us shows that sufficient study has not been made of the problem and opportunities have not been given to the agricultural community, to the farmers to represent to the Hon. Minister the genuine difficulties that they are likely to experience if this Bill is promulgated into law. This Bill will take effect from 1st April 1972 and therefore nothing would be lost to the Government and no revenue would be lost to the Government if they referred this matter to a Select Committee which could invite memoranda from various farmers' associations, for example, so that they could go into this aspect more fully and render justice to a community which is afraid of the bureaucratic control that may render its life miserable. Yesterday, Sir, from the amendments that have been made, he has been good enough to alter the concept of 'standard acre'. According to the original Act, only arecanut, coffee, cardamom, and tea and not even tobacco, were included in the formula of classification of a standard acre; and now the Hon. Minister has enlarged it to include grapes, banana, sugarcane, groundnut (irrigated), cotton (irrigated), coconut and tobacco. We must be thankful to him that he has not also included various fruit orchards like oranges, sappotta, melons, pumpkins, vegetables and tapioca also, because these are also fairly profitable, Sir. We must be thankful to him for not having included these also. But the only point that I wish

to make is that sufficient study is necessary and in this connection, I would again stress that a Select Committee could have gone into this matter and we could have discussed this and expert opinion could have been invited, so that this somewhat arbitrary classification, in my opinion, could have been avoided. Only the wearer of the shoe knows where it pinches. Only the man growing coconut or mangoes knows the difficulty, because even last year in an orchard of mangoes where there were about 40 or 50 mango trees, I did not get even 40 mangoes, probably due to some strange weather conditions or due to the failure of monsoon during the previous year. Orchards do not give a steady income as in the case of other commercial crops and, therefore, I believe, Sir, that this classification which has been adopted is somewhat arbitrary. Although I am not against the graded system of agricultural income-tax, in principle, I believe that this classification should be looked into and studied so that the farming community may not be put to unnecessary loss.

10-30 a.m. The other point, which I wish to mention, is that not only has the Hon. Minister changed the classification of standard acres on a somewhat arbitrary basis but in Part II of the rates, he has also altered radically the rates in terms of standard acres. Formerly it was more liberal but now for the first 7½ standard acres, exemption is granted and for every additional 2½ acres, the rate has been increased and on a slab basis, so that the composition formula extends only up to 30 standard acres. Sir, under Part I also, under which the farmer has to file his return of income, the rates have been radically revised and at present, Sir, if I may read out the amount that a farmer would have to pay on the basis of his income of Rs. 10,000, it would be Rs. 800, on a total income of Rs. 15,000, it would be Rs. 1,800, on a total income of Rs. 20,000, it would be Rs. 3,300, on a total income of Rs. 25,000, it would be Rs. 5,050, on a total income of Rs. 35,000, it would be Rs. 9,550, and on a total agricultural income of Rs. 50,000, it would be Rs. 17,500. Sir, the rigour of the slab in the higher grades almost equals the rigour of the Indian Income-tax Act. I realise in principle that the farming class is in for a stiff dose of taxation because various higher authorities like the Planning Commission and the Central Government are insisting that a larger proportion of State revenues should be derived from agriculture. But the main difficulty in regard to farming is that the income is uncertain and to explain all these matters to a Tahsildar or an Agricultural Income-tax Officer is going to be the biggest head-ache for any farmer. That is the only reason why we decided to pay on the basis of composition formula and thereby save our expenditure on clerical staff and auditors. But, now instead of the Government getting the revenue, I am afraid, a major portion of the revenue will be spent by the farmer in employing clerks, in going to Agricultural Income-tax lawyers and experts who will advise how to avoid the tax—if not to evade it—and also in going on appeal to the Agricultural Income-tax





Tribunals and perhaps even to the High Court on certain important points of law. I would, therefore, plead with the Hon. Minister, in the interests of tax collection itself, to study the problem carefully, because at present the Government of Tamil Nadu derive an income of two crores of rupees from agricultural income-tax but no estimate has been mentioned by the Hon. Minister, of the amount he is likely to get from this source on account of the changed rates. I have no objection to his getting more revenue out of this. Where it is reasonable, the farmer should pay. But the important point is that all these arbitrary classifications, in my opinion, would work great hardship on the farming community and I would, therefore, plead with him that there is still time, and nothing will be lost and that it should be referred to a Committee for proper study because the revenue is not going to be lost by the Government. Thank you, Sir.

*திரு. ஜி. சுவாமிநாதன்: தலைவர் அவர்களே, எனது நண்பர் திரு. தாமோதரன் அவர்கள் சொன்ன கருத்துக்களை நானும் ஆமோதித்து சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். அவர்கள் குறிப்பாக ஒரு கருத்தைச் சொன்னார்கள். வள்ளிக்கிழங்கு போன்றவை நல்ல லாபம் கொடுக்கக் கூடியவை. அவைகளுக்கும் இதுமாதிரி வருமான வரி போட்டிருக்கலாம் என்றார்கள். எதற்காகக் குறிப்பிட்டார்கள் என்றால், எந்தெந்தப் பயிர்களுக்கு வருமானத்திற்கு வரி போடுவது என்பது தோராயமாகக் கணிக்கப்பட்டிருக்கிறதே தவிர, எந்த அடிப்படையிலும் எந்த வரியையும் நிர்ணயிக்கவில்லை என்பதற்காகத்தான் அப்படிச் சொன்னார்கள் என்று நினைக்கிறேன். குறிப்பாக நேற்றைய தினம் மாங்காய், மஞ்சள், மிளகாய் முதலியவற்றிற்கு இதிலிருந்து விலக்கு அளித்திருக்கிறார்கள். மாங்காய், மிளகாய், மஞ்சள் ஆகியவற்றிற்கு முதலில் வரி போட்டார்கள். பிறகு எதற்காக விலக்கு அளித்தார்கள் என்று அறிய விரும்புகிறேன். எதிர்க் கட்சியில் இருக்கிறவர்கள் விலக்கு அளிக்க வேண்டுமென்று சொன்னார்கள்; அதற்காக எடுத்தோம் என்று சொன்னார்கள். அப்படியென்றால் அது எதற்காகப் போடப்பட்டது என்பது ஒன்று. எந்த அடிப்படையும் இல்லாமல் தோராயமாக சில பயிர்களைப் பொறுக்கி சிலவற்றிற்கு வரி போட வேண்டுமென்று நிர்ணயம் செய்வதும், பிறகு வேண்டாமென்று ஓட்டகத்தின் மேலிருந்து ஓரிரண்டு வைக்கோலை எடுப்பதுபோல எடுத்துவிடுவதும் என்றால் 'ரீசனபிள்' என்று சொல்கிற நியாயமான அடிப்படையில் இந்தச் சட்டம் அமைக்கப்படவில்லை என்பதைத்தான் முதலில் நான் சொல்ல ஆசைப்படுகிறேன். விவசாய வருமானவரி என்பதைப் போடுவதில் திரு. தாமோதரன் அவர்கள் சொல்லியதைப் போல யாருக்கும் ஆட்சேபணையில்லை. அந்தக் காலத்தில் பி. வி. நாராயணசாமி நாயுடு போன்றவர்கள் கிராமத்தில் ஏராளமான பணம் தேங்கிக் கிடக்கிறது என்று கணக்குப்போட்டு இனிமேல் விவசாயத் துறையிலிருந்துதான் வரி வர வேண்டுமென்று சொல்லியிருப்பதில் ஓரளவு உண்மையிருக்கலாம். விவசாயிகளுக்கு முன்பு நிலவரி கொண்டு வந்தோம். ஒரு எக்கர், பத்து எக்கர் எது இருந்தாலும், அதில் வருமானம் வந்தாலும் வராவிட்டாலும் நிலத்தின்மேல் வரி போடக்கூடாது என்ற அடிப்படையில் இப்போது வருமானத்தைக் கொண்டு வரி போடலாமென்று சொன்னார்கள். நாம் கொண்டுவந்திருக்கும் இந்தச் சட்டம் அடிப்படையில் சரியானதா என்று பார்க்கவேண்டும். வருமான அடிப்படையில் போவதாக இருந்தால், 30

[திரு. ஜி. சுவாமிநாதன்] [31 ஜூலை 1971

ஏக்கர் உள்ள விவசாயிக்கு அதில் வருமானம் இல்லையென்றால், வரிபோட்டாலும், அதில்லேய பதினாயிரம் ரூபாய வருமானம் வருவதாக அதற்கும் தகுந்த வரியைப் போடுவது என்பதுதான் நியாயமாக இருக்க முடியும். கம்பவுண்டிங் என்று ஒட்டுமொத்தமான கணக்கை இங்கே கொண்டு வந்திருக்கவும்ரும். நிலத்தின் அடிப்படையில் வரிபோடக் கூடாது, வருகிற வருமானத்தின அடிப்படையில் வரி போடவேண்டுமென்ற சட்டத்தைக் கொணடுவந்த பிறகு, தோராயமாக ஒட்டு மொத்தமாக நிலத்தின் அடிப்படையில வரி போடுகிறேன் என்று சொலவது 'சுக்குவிட்டி' என்ற நிலையில் இல்லை என்று சொல்கிறேன். விவசாய வருமான வரியைப்பற்றி "அடமினிஸ்ட்ரேட்டிவ் ரிபோர்ட்" கொடுத்தார்கள். அதன்படி எவ்வளவு ஆணடொன்றுக்கு வருகிறது என்று பார்த்தால், கிட்டத்தட்ட 1¼ கோடி ரூபாய் என்று இருந்தது 1968-ல் திருத்தப்பட்ட பிறகு சென்ற ஆண்டு ரூ. 1.65 கோடிதான் இதில் வருமானம் வந்திருக்கிறது. ஆக எவ்வளவு பேர் அசெஸ்யிராக இருக்கிறார்கள் என்று பார்த்தால், அவர்கள் குறிப்புப்படி 35 ஆயிரம் பேர்தான் என்று தெரிவித்திருக்கிறார்கள். இதில் எவ்வளவு பேர் கம்பவுண்ட் செய்கிறார்கள் என்றால், 9% என்று குறிப்பிடுகிறார்கள். ரூ. 1.65 கோடியில் கம்பவுண்டிங் அடிப்படையில் எவ்வளவு பணம் கட்டியிருக்கிறார்கள் என்று பார்த்தால் ரூ. 70 லட்சம்தான் அவர்களுடைய பணம். பாக்கியிருப்பது கணக்குக் கொடுக்கக்கூடிய திறமை உள்ளவர்கள் கொடுத்திருக்கிறார்கள். இதிலிருந்து விவசாயிகளுக்குக் கணக்குக் கொடுக்க முடியவில்லை என்பது ஒன்று. வருமானம் வந்தாலும் வராவிட்டாலும் நான் கம்பவுண்டிங்குப் போகிறேன் என்றால் 80 சதவிகிதத்தினர் அல்லது 70 லட்சம் கொடுத்திருக்கிறார்கள் என்றால், சிறிய நிலச் சுவான்தார்கள் கம்பவுண்டிங்குப் போவதற்குக் காரணம் தங்களால் கணக்கெழுத முடியாது என்பதுதான் காரணம்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவர் அவர்களே, முதலிலே மாண்புமிகு உறுப்பினர் பேசும்போது கம்பவுண்டிங் எதற்காக என்று பேசினார்கள். இப்போது கணக்கு வைப்பது சிரமமாக இருக்கிறது என்று சொல்கிறார்கள். நான் அவர்களைக் கேட்டுக்கொள்வது, 30 ஸ்டாண்டர்ட் ஏக்கர் என்ற கணக்கில் இப்போது கம்பவுண்டிங் வைத்திருக்கிறோம். கம்பவுண்டிங் கட்டாயமில்லை. கணக்குக் கொடுத்தால் ஏற்றுக்கொள்கிறோம். கணக்கு இல்லை, கம்பவுண்டிங்கு வருகிறோம் என்றால், ஒத்துக்கொள்கிறோம். சிறு நிலச் சுவான்தார்கள் பாதிக்கப்படக் கூடாது என்றுதான் கம்பவுண்டிங் முறை வைத்திருக்கிறோமே தவிர, உறுப்பினர் கேட்பதைப்போல, எல்லோருமே கணக்கு வைக்க வேண்டுமென்றால், சிறு நிலச் சுவான்தார்கள் விவசாயிகள் பாதிக்கப்படுவார்கள். எல்லோரும் வைக்கமுடியாது. இந்தக் கணக்குப்படி 30 ஸ்டாண்டர்டு ஏக்கர் வரையில் கணக்கு வைக்கத் தேவையில்லை. கம்பவுண்டிங்கு வர வேண்டுமென்ற கட்டாயமும் இல்லை. 30 ஸ்டாண்டர்டு ஏக்கருக்கு மேல் போகிறவர்கள் பண்ணை வைத்திருப்பவர்களுக்குக் கணக்கு வைப்பதில் சிரமம் இருக்காது. அரசாங்கம் இப்போது திருத்தியபடி மேற்கொண்டு இரண்டு கோடி வருமானத்தைப் பெறலாம்என்று எதிர்பார்க்கிறோம்.

**திரு. ஜி. சுவாமிநாதன்:** இப்போது வருகிற ஒன்றே முக்கால் கோடிக்கும் அதிகமாக வருமென்று சொன்னார்கள், கம்பவுண்டிங் பற்றி அமைச்சர் சொன்னார்கள். விவசாய வருமான வரி சாபத்திற்காகப் போடப்படும் வரி நிலத்தின்



21st July 1971] [திரு. ஜி. சுவாமிநாதன்]

அடிப்படையில் போடும்படியாக அது இருக்கக்கூடாது என்றுதான் இந்தச் சட்டத்தைக் கொண்டுவந்திருக்கிறோம். விவசாயிகள் கணக்குக் கொடுக்க முடியாத நிலைமையில் தங்களுக்குப் பாதகமாக இருந்தாலும், கம்பவுண்டிங்குப் போகிறேன் என்று சொல்கிறார்கள் என்பதைத்தான் சட்டத்தின் அடிப்படைக்குப் புறம்பாக இருப்பதாகச் சொன்னேன். அப்படிப் போகிறவர்கள் சிறு நிலச்சுவான்தார்கள் என்பதையும் குறிப்பிட்டேன். இப்படி அதிகப்படியான வரி அம்சங்களைச் சேர்த்துக் கொண்டே போகும்போது, 35 ஆயிரம் அசெஸ்ஸிகளுக்கும் அதிகமாகலாம். எவ்வளவு அசெஸ்ஸிகள் வருகிறார்கள் என்ற கணக்கு அமைச்சரிடம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன். ஒவ்வொரு பயிருக்கும் ஒரு எக்கரை எடுத்துப் பார்த்து, அதில் இவ்வளவு வருமானம் வரும் என்பதற்கான ஏதாவதொரு மாநில அளவான கணக்கு அரசாங்கத்தினுடைய ஸ்டாட்டிஸ்டிகல் டிபார்ட்மெண்டில் இருக்கிறதா என்று தெரியவில்லை. இல்லையென்றே நினைக்கிறேன். அதனால்தான் முன்பு 1/3 அரிகாதட் என்றிருந்ததை இப்போது யாரோ சொல்கிறார்கள் என்பதற்காக 1/6 என்று மாற்றியிருக்கிறார்கள். குறிப்பிட்ட விவசாயப் பொருளிலிருந்து இவ்வளவுதான் வரும், அதற்கு இவ்வளவுதான் செலவாகும், என்பதைப்போன்ற எந்த விதமான புள்ளிவிவரம் ஸ்டாடிஸ்டிகல் டிபார்ட்மெண்டிலிருந்து இதுவரையில் வந்ததில்லை. எந்த விதமான அடிப்படையில் சட்டத்தைப் போடுகிறார்கள்?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** அங்கத்தினருடைய கவனத்திற்கு ஒன்றைக் கொண்டுவர விரும்புகிறேன். அரசாங்கம் எந்த அடிப்படையும் வைக்காமல் போடவில்லை. ஆண்டு ஒன்றுக்கு ஸ்டாண்டர்டு ஏக்கரில் தோராயமாக ரூ. 500 வரும் என்ற கணக்கின் அடிப்படையில் போட்டிருக்கிறோம்.

**திரு. ஜி. சுவாமிநாதன்:** தோராயமான அடிப்படையில் என்றுதான் குறிப்பிட்டேன். நம்முடைய மாநிலத்தில் 5-லிருந்து பத்து ஏக்கர் பதினைந்து ஏக்கர், பதினைந்திலிருந்து 20 ஏக்கர் எவ்வளவு பேர் வைத்திருக்கிறார்கள், ஐந்து ஏக்கர் வரை எவ்வளவு பேர் வைத்திருக்கிறார்கள், அதில் ஒன்றிலிருந்து ஐந்து வரையில் எவ்வளவு பேர் என்ன விவசாயம் செய்கிறார்கள் என்ற இப்படிப்பட்ட தனிப்பட்ட கணக்குகள் மாநில ஸ்டாடிஸ்டிகல் டிபார்ட்மெண்டில் இதுவரையில் வைக்கப்படவில்லை. எதையும் அடிப்படையாக வைத்துக்கொண்டுதான் வரிபோட வேண்டும். அது மட்டுமல்ல. பாக்கு என்றால், அதில் எவ்வளவு வருமானம் வரும் என்ற கணக்கு எங்காவது இருக்கிறதா டிபார்ட்மெண்டில்? விவசாயிகளைக் கேட்டு அவர்கள் இவ்வளவு வருமென்று சொல்லி அவர்களுடைய வார்த்தையின் அடிப்படையில் ஒரு சட்டம் வந்திருக்கிறதேதவிர, அரசாங்கத்தினுடைய புள்ளி விவரக் கணக்கு அடிப்படையில் இந்தச் சட்டம் வரவில்லை என்பதைத்தான் சொல்ல விரும்புகிறேன். திரு. தாமோதரன் அவர்கள் சொன்னதைப் போல, செலக்ட் கமிட்டிக்கு விட்டு சரியான புள்ளி விவரத்தை எடுத்துச் செய்வதில் தவறில்லை. அதனால் எந்த ஆபத்தும் ஏற்படாது என்பதைச் சொல்லிக் கொள்கிறேன். மற்றொன்றைக் குறிப்பாகச் சொல்ல விரும்புகிறேன். செக்ஷன் 5-ல் என்ன வகைகளில் நிலத்தில் வருகின்ற வருமானத்தில் தள்ளுபடி செய்து கொள்ளலாம் என்றிருக்கிறது. அதில் ஒன்று, விவசாயத்தில் இருப்பவர்களை தாங்களும் தங்களுடைய குடும்பமும் சேர்ந்து விவசாயப் பண்ணைகளில் வேலை

10.40 a.m.

செய்தால், அவர்களுடைய சொந்த உழைப்புக்கும் ஏதாவது பணத்தை ஒதுக்கிக் கொள்ள சட்டத்தில் இடமிருக்கவேண்டும். எனக்குத் தெரிந்த வரையில், கணபதியா பிள்ளை கமிஷனின் அறிக்கையில் தஞ்சையில் இருக்கின்ற ஒரு நிலத்தில் எவ்வளவு வருமானம் வருகிறது என்று பார்க்கின்றபோது, விவசாயம் செய்கின்றவர்களின் உழைப்பிற்கும் ஊதியம் போட்டு பாக்கி வருவதைத்தான் வருமானம் என்று போட்டிருக்கின்றார்கள். சொந்த உழைப்பிற்கான ஊதியத்தைக் குறைக்காமல் போடுவது தவறு.

மாண்புமிகு அங்கத்தினர் திரு. தாமோதரன் அவர்கள், படிவங்கள் (பாரம்கள்) கொடுக்கப்பட்டு பூர்த்தி செய்யவேண்டியதைப் பற்றியும், அதற்காக உள்ள தண்டனைப் பிரிவைப் பற்றியும் குறிப்பிட்டார்கள். விவசாயிகள் படிவங்களைப் பூர்த்தி செய்ய வேண்டுமென்றால், அதற்காக அலுவலகங்களில் அக்ரிகல்சுரல் இன்பர்மேஷன் ஆபீசர் அல்லது பப்ளிக் ரிலேஷன்ஸ் ஆபீசர் மாதிரி ஒருவரை நியமித்து, விவசாயிகளுக்கு வேண்டிய ஆலோசனைகளைச் சொல்ல அரசாங்கம் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு அமைகிறேன். வணக்கம்.

*திரு. சா. கணேசன்: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்களும், திரு. சுவாமிநாதன் அவர்களும் விளக்கமாகக் கூறினார்கள். அவர்கள் கூறியவற்றையே நான் மீண்டும் கூறாமல் வேறு சில வற்றை மட்டும் அரசின் கவனத்திற்கு உங்கள் மூலமாகக் கொண்டுவர விரும்புகிறேன். இன்கம்டாக்ஸிலுடைய நிலை வேறு. அக்ரிகல்சுரல் இன்கம் டாக்ஸ் என்ற இந்த விவசாய வருமானத்தின்மீது விதிக்கப்படுகின்ற வரி வேறு என்பதை மனத்தில் நாம் முதலில் கொள்ள வேண்டும். இல்லை, அதுமாதிரி தான் இதுவும் என்று கொண்டால், இன்கம்டாக்ஸ் முறை முழுவதையும் நாம் இதற்குக் கைக்கொள்ள முன்வர வேண்டும். ஒரு தொழிலிலே அல்லது ஒரு உற்பத்தியிலே லாபம் கிடைப்பதற்குத்தான் அங்கே வரி உண்டு. அத்தத் தொழிலைச் செய்வதற்கு, தொழிலுக்கு வரி கிடையாது. இங்கே விவசாயப் பண்டங்களுக்கு அதன் மூலமாகக் கிடைக்கின்ற லாபத்திற்கு வரி என்று வந்துவிடுமானால், இந்த வரியை விதிக்கின்றபோது அரசு தார்மீக உணர்ச்சியின் அடிப்படையிலே நிலவரியை முழுக்க முழுக்க ரத்து செய்ய வேண்டிய கடமை உண்டு என்பதை நான் புலப்படுத்திக்கொள்ள விரும்பு கிறேன். எப்படி தொழிலுக்கு என்று வரி இல்லாமல், தொழிலில் வரும் வருமானத்திற்குத்தான் வரி என்று இருக்கிறதோ, அங்ஙனம் நிலத்திற்கு என்று வரி வசூலிக்காமல், நிலத்திலிருந்து வருகிற வருமானத்திற்கே வரி விதிக்க வேண்டும் என்ற அடிப்படையை அரசு ஏற்றுக்கொண்டுவிட வேண்டும். அதன்படி சிறு விவசாயிகளாக இருக்கின்றவர்கள் கொஞ்ச நிலம் கூட இருந்தாலும் சரி, கல்வி, உலக விவகார அறிவு நிரம்பாத விவசாயி களுக்கு கணக்கு வைத்துக் கொள்ளுவதில், கணக்கு வைத்துக்கொள்ளுவதை விட அந்தப் படிவங்களை பூர்த்தி செய்து வரி அதிகாரிகளுக்கு அனுப்புவதிலே ஏற்படுகின்ற சிரமம் எவ்வளவு என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. சாதாரணமாகச் சொல்வோம், கணக்கு வழக்கு என்று. இனி இந்த விவசாயி களுக்குக் கணக்கும் வழக்கும் இன்றியமையாத நிலையாக வந்துவிடும். அவர்கள் படிக்காதவர்களாக இருந்தால், கணக்கர் வேறு வேண்டும், வழக்கர் வேறு வேண்டும் என்ற நிலை ஏற்படக்கூடும். இதை மனத்தில் கொண்டு கம்பவுண்டிங் முறையில் வரி விதிக்கப்படுமானால், அது [illegible]



என்று சொல்கிறபோது, முழுக்க முழுக்க அது 30 ஸ்டாண்டர்டு ஏக்காராவுக்கு உட்பட்டவர்களுக்கு கம்பவுண்டிங் எடுத்துக்கொள்ளுவதற்கு உரிமையிருக்கிறது என்பதை, கம்பவுண்டிங் அல்லது கணக்கு என்று தேர்ந்தெடுத்துக் கொள்ளும் உரிமை விவசாயிக்கு இருக்கிறது என்பதை வரையறுத்துவிட வேண்டும். அதோடுகூட இன்னொன்றையும் நாம் மனத்தில் கொள்ளவேண்டு மென்று புலப்படுத்திக் கொள்ள விரும்புகிறேன். எப்படி இன்கம்டாக்ஸ் துறையில் முந்திய ஆண்டுகளில் ஏற்பட்ட இழப்புகள், நஷ்டம் ஆகியவற்றைப் பிந்திய ஆண்டுகளுக்கு கொண்டுவந்து ஈடுசெய்துகொள்ளுகின்ற முறை, 'காரி பார்வேர்டு சிஸ்டம்' இருப்பதைப்போல். விவசாயத் துறையில் ஏதாவது விபத்துக்களாலே, எதிர்பாராத நிகழ்ச்சிகளாலே ஏற்படும் நஷ்டங்களைப் பிந்திய ஆண்டுகளுக்கு, 5 ஆண்டுகள், 7 ஆண்டுகள் வரையில் கொண்டுவந்து அதற்கு ஈடுசெய்துகொள்ளலாம் என்ற விதியை நிச்சயம் சேர்க்க வேண்டும். அத்தகைய விதி இப்போது இல்லை. ஆதலினாலே அதைச் சேர்க்க வேண்டும் என்றும், இவை இன்னும் இன்றியமையாத அல்லது பாதிக்கப்படுகின்ற விஷயங்களைப் புரிந்து, அதன் பிறகு செம்மையாக இந்தச் சட்டத்தை வருத்துச் செயல்படுவதற்கு அனுகூலமாக இருக்கும்படி, இந்த மசோதாவை ஒரு கூட்டுப் பொறுக்குக் கமிட்டிக்கு அனுப்ப வேண்டுமென்பதை நான் மனப்பூர்வமாக அமைச்சர் அவர்களுக்குப் பணிவோடு தெரிவித்துக்கொள்ளுகிறேன். நண்பர் திரு. சுவாமிநாதன் அவர்கள் கூறியபடி 1972 எப்ரலிலிருந்து தான் இந்தச் சட்டம் அமுலுக்கு வரப்போகிறது. அதற்குள்ளாக, கூட்டுப் பொறுக்குக் கமிட்டி கூடி அதன் தீர்ப்பு ஏற்படுகின்ற காலத்திற்குள், இந்தச் சட்டத்தால் அரசாங்கத்திற்கு வரக்கூடிய, அல்லது அரசாங்கம் எதிர்பார்க்கக் கூடிய வருமானம் எவ்வகையிலும், எவ்வளவிலும் பாதிக்கப்படாது என்பதை மனத்தில் கொள்ளவேண்டும். காரணம் ஏதேதோ காட்டி சாதாரணப் பொருட் களை எல்லாம்கூட ஸ்டாண்டர்டு ஏக்கர் கணிக்க எடுத்துக் கொண்டிருக்கிறோம். நிலக்கடலை போன்றவற்றை வைத்து அதற்கு ஸ்டாண்டர்டு ஏக்கர் நிர்ணயிக்கின்றபோது புகையிலை போன்ற நிரம்ப வருமானம் வரத்தக்க பொருட்களும்— அது அதிகமாக இல்லை என்று வாதாடலாம்—டாபியோகா, ஸ்வீட் பொடாடோ சர்க்கரை வள்ளிக்கிழங்கு போன்றவற்றையும் ஏக்கருக்கு 3,000, 4,000 ரூபாய் லாபம் தரும் பொருட்களும் ஆகிய இவற்றையெல்லாம் மனத்தில் கொண்டு எவ்வப்போது எப்படியெப்படி வருக்கப்பட வேண்டும் என்பதை அறிந்து செம்மையாகச் சட்டம் அமைக்கப் படுவதற்கு அனுகூலமான நெறியில் இதை நிச்சயமாக ஒரு செலக்ட் கமிட்டிக்கு அனுப்பவேண்டும் என்று உங்கள் மூலமாக அரசை நான் வேண்டிக் கொண்டு அமைகின்றேன். வணக்கம்.

10-50 a.m.

(Deputy Chairman in the Chair)

*திரு. கே. ராஜாராம்: மாண்புமிக்க தலைவரவர்களே, பொதுவாக அரசாங்கத்தின் செலவினங்கள் நாளுக்கு நாள் அதிகமாகிக்கொண்டிருக்கும் பொழுது, வரி போடுவதன் மூலம் மக்களிடமிருந்து பணத்தை வசூலித்துத் தான் அதை ஈடுகட்ட வேண்டிய அவசியம் அரசாங்கத்திற்கு ஏற்படுகிறது. ஆனால் பொதுவாக ஒரு விதி என்னவென்றால்—வரி என்பது பூமியிலே இருந்து தேனீ எப்படி தேனை உறிஞ்சுகின்றதோ அந்த மாதிரி தொந்தரவில்லாமல் மக்களிடமிருந்து வசூலிக்கவேண்டிய முறையில் அமையவேண்டும் என்பது. அதுதான் அர்த்த சாஸ்திரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால், இந்த வரியானது விவசாயிகளை மிகவும் கஷ்டத்திற்கும், தொந்தரவுக்கும்

உட்படுத்தும் என்று நான் அச்சம் அடைகிறேன். ஏராளமான பணத்தை நிலவள வங்கிகளின் மூலம் கோடி, கோடியாக விவசாயிகளுக்கு விநியோகிக்க நாம் ஆரம்பித்திருக்கிறோம். கரம்பாகக் கிடந்த பொட்டல் நிலங்களைக் கூட, இணறுகளை வெட்டி, வளப்படுத்த முற்பட்டிருக்கிறோம். அதிலே வேர்க் கடலையையோ அல்லது வேறு பயிர்களையோ பயிர் செய்ய ஆரம்பித்தால், உடனே இந்தச் சட்டம் வரி போட ஆரம்பிக்கின்றது. இப்படிப் புதிதாக வளப்படுத்தக் கூடிய நிலங்கள் பயன்தர குறைந்தது 6 வருஷ காலமாவது பிடிக்கிறது. ஒரு விவசாயி அந்தப் பொட்டல் நிலத்தை வளப்படுத்த, நல்ல நிலமாக விவசாயத்திற்குக் கொண்டு வருவதற்கு 6 வருஷமாவது பிடிக்கிறது. லகுவான பயிரான வேர்க்கடலையைப் போட்டால், அது சரியாக விளையவில்லை என்றால், அமைச்சர் உடனே சொல்லுவார் இப்படி விளையவில்லை என்று அந்த விவசாயி கணக்கு கொடுத்துவிடலாமே என்று. ஆனால், விவசாயிகளைப் பொறுத்தவரை இந்த "கம்பவுண்டிங்" வேண்டுமென்று மேலும், மேலும் சொல்வதற்குக் காரணமே, கணக்கு வைத்துக்கொள்ள அவர்களால் முடியவில்லை என்பது தான். அவர்கள் கணக்கு வைத்துக்கொள்வது என்பது மிகவும் கஷ்டம். இதற்கு 10 ரூபாய்கூட ஆனாலும் பரவாயில்லை, இந்த கம்பவுண்டிங் முறைக்கு மாற்றிக் கொடுத்துவிடுங்கள் என்கிறார்கள் எனவே, புதிதாக இணறு வெட்ட நில வள வங்கி மூலமாக பணம் வாங்கி "லிப்ட் இர்ரிகேடட்பார்மிங்" என்று சொல்லக் கூடிய நிலங்களுக்கு ஒரு ஐந்து வருஷத்திற்காவது வரி விலக்கு அளிக்கப்பட வேண்டுமென்ற யோசனையை இந்த அரசாங்கத்திற்குச் சொல்லுகிறேன். இல்லையென்றால் அவர்கள் மிகவும் கஷ்டப்படுவார்கள். புதிதாக "லிப்ட்டு இர்ரிகேஷன்" கொண்டுவந்து, நிலத்தைப் பண்படுத்த ஆரம்பிப்பவர்களுக்கு விதி விலக்கு அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, அப்படிப்பட்ட விவசாயிகளின் மாடுகள் நோயினால் திடீரென்று இறந்து விடுகின்றன. அப்பொழுது இன்னொரு மாடு வாங்கு வதற்கு அவர்களுக்கு வழியே இருப்பதில்லை. இப்படி விவசாயிகளின் கஷ்டம் சொல்லத் தரமற்றது. அதைப் போல பயிர்களிலே பூச்சி விழுந்தால், பயிர்கள் நாசம் அடைந்து விடுகின்றன. எனவே, இதற்கெல்லாம் பயிர் இன்ஷூரன்ஸ் கிடையாது. "கால்நடை இன்ஷூரன்ஸ்" கிடையாது. இந்த நிலையில் ஏதோ கொஞ்சம் கட்டியிருந்த விவசாய வருமான வரியை திடீரென்று இவ்வளவு அதிகமாக ஆக்கும்பொழுது, அவர்களுடைய நன்மைகளையெல்லாம் பாதிக்கும், அவர்களுக்கு இதனால் கஷ்டங்கள் அதிகமாகும் என்பதை இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். அத்தோடு, தென்னை, வாழை போன்ற பயிர்கள் அந்தந்த வருஷத்தில் பலன் கொடுக்கக்கூடிய பயிர்கள் அல்ல. வாழை 18 மாதப் பயிர். நமது சட்டத்தில் வாழை போட்டிருக்கும் நிலத்தை, ஒரு லடேண்டர்டு ஏக்கர் என்பதை மூன்றில் ஒரு பங்காக வைத்துக் கணக் கெடுத்து, வரி விதிக்கப்படும் என்று சொல்லுகிறார்கள். வாழை 18 மாதப் பயிர் என்று சொல்லும்பொழுது, அது எப்பொழுது பலன் கொடுக்கிறதோ அந்த வருஷத்திலிருந்து தான் வரி போடுவதற்குக் கணக்கு எடுத்துக்கொள்ள வேண்டும். முதல் 12 மாதத்திற்கு வாழை பலன் கொடுக்காது. அதே மாதிரி தென்னை, அதை நட்டுப் பயிரிட ஆரம்பித்ததிலிருந்து 7, 8 வருஷங்கள் கழித்துத்தான் அது காய்க்க ஆரம்பிக்கிறது. அதுவும், முதலிலே ஒரு சில வருஷங்களுக்கு அதிகமாகக் காய் இருக்காது. தென்னை வைத்து ஆரம்பித்தில் [illegible]





இருந்து 10 வருஷத்திற்கு அந்த நிலங்களுக்கு வரி இருக்கக் கூடாது. இதை அமைச்சர் அவர்கள் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். 11.00 a.m.

சட்டத்திலே இதற்கு விதி விலக்கு அளிக்க வேண்டும் என்ற அளவிலே நான் எண்ணவில்லை. நிர்வாகத்தினாலே வழிகள் மூலம் இதையெல்லாம் செய்யலாம். பொதுவாக "கம்பவுண்டிங்" செய்வதிலே அரசாங்கத்திற்குக் குறை ஒன்று மில்லை. அந்த விவசாயிகள் எழுதப் படிக்க முடியவில்லை, எனவே, அவர்களால் சரியாகக் கணக்கு வைக்க முடியவில்லை என்பதற்காகத்தான் "கம்பவுண்டிங்" கேட்கிறார்கள். எனவே, நில உச்சவரம்பு சட்டத்திலே 15 ஏக்கர் என்றும் நாம் நிர்ணயம் செய்திருக்கிறோம். அந்த 15 ஏக்காவுக்கு "கம்பவுண்டிங்" செய்தால், இந்த அரசாங்கத்திற்கு அதனால் என்ன குறை ஏற்பட்டுவிடும் என்று கேட்கிறேன். நில உச்ச வரம்புச் சட்டத்திலே சொல்லப்பட்டிருக்கின்ற 15 ஏக்கர்—பாக்கு மரம் நட்டால்—அது 90 ஏக்கர் ஆகிறது, அதிலே 30 ஏக்காவுக்கு விதி விலக்கு என்று சொல்லப் பட்டிருக்கிறது. அசெம்பிளியிலே நிறைவேறறப்பட்ட மசோதாபடி, 15 ஏக்கர் உச்ச வரம்புச்சட்டபடி இருந்தால், அது 90 ஏக்கர் ஆக ஆகிறது. 15 x 6 = 90 என்று ஆகிறது. நாம் உச்ச வரம்புச் சட்டத்திலே சொல்லப்பட்டிருக்கின்ற 15 ஏக்காவுக்கு "கம்பவுண் டிங்" அனுமதிப்பதால், அரசாங்கத்திற்கு என்ன நஷ்டம் வரும் என்று கேட்கிறேன். இதனால் விவசாயிகளுக்குத் தொந்தரவு கொடுப்பதைத் தவிர வேறு ஒன்றும் அதற்கு இலாபம் இருப்பதாகத் தெரியவில்லை. அரசாங்கத் திற்கு "கம்பவுண்டிங்" செய்வதால், வருமானம் குறைந்துவிடுமா? 15 ஏக்கர பூராவுக்கும் கம்பவுண்டிங் செய்துகொள்ளட்டுமே என்று அனுமதிக்கலாம். இந்த விவசாயி "கம்பவுண்டிங்" செய்து அதிகமாக அரசாங்கத்திற்கு வரி கொடுக்கிறேன் என்றால், சரியாக கணக்கு வைத்துக் கொள்ளட்டுமே. அந்த வாதம் அப்பொழுது ஏற்றுக்கொள்ளக் கூடிய வாதமாக இருக்கும். எனவே, சாதாரண விவசாயி நிலத்தைப் பெருக்கிப்பார்த்து, தனக்கு வரி வருமா, வராதா என்று கணக்கு காண்பிப்பதிலே பெரிய கஷ்டம் இருக்கிறது. படித்த வர்களுக்கே கஷ்டமாக இருக்கிறது இந்த வருமான வரியைக் கண்டுபிடிக்க. அதற்காகப் பெரிய, பெரிய ஆடிட்டர்களைப் போய்ப் பார்க்க வேண்டியிருக் கிறது. சார்ட்டேர்டு அகவுன்டன்டு யோசனை இல்லாமல், அனுமதி இல்லாமல் தங்களுடைய வருமான வரி ரிட்டர்னை அனுப்ப முடியவில்லை. கிராமத்திலே இருக்கின்ற விவசாயிகள்—கிராமத்திலே ஒருவர் கூட சரியாக ரிட்டர்னை அனுப்புவது கஷ்டமாக இருக்கும். எனவே, தாராளமாக "கம்பவுண்டிங்" செய்துகொள்ளட்டும், அரசாங்கத்திற்கு "கம்பவுண்டிங் ரேட்" படி கொடுக் கட்டும். உச்ச வரம்பிற்குக் கட்டுப்படாத டீ, காபி போன்ற எஸ்டேட்டுகள் வேண்டுமானால் கணக்கு கொடுக்கலாம். அவர்கள் அகவுன்டென்டு, ஆடிட்டர் போன்றவர்களை வைத்திருக்கிறார்கள். அவர்கள் அதைச் செய்யலாம்.

அடுத்தபடியாக, ரிட்டர்ன் கொடுப்பவர்கள் 4,000 ரூபாய் வருமானம் உள்ளவர்களுக்கு வரி விலக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. அப்பொழுது பொது வருமான வரிச் சட்டத்திலே என்ன விலக்கு இருக்கிறதோ, அதைக் கொடுக்க வேண்டுமென்று இந்த சபையிலேயும், அடுத்த சட்ட சபையிலேயும் வாதிக்கப் பட்டது. மூலச் சட்டத்தின் மசோதாவிலே அது இல்லை. சட்ட சபை உறுப்பினர்களின் அதிகமான விவாதத்திற்கு பிற்பாடுதான், 1960-61 என்று நினைக்கிறேன், அந்தச் சபையிலேயும், இந்தச் சபையிலேயும் புதிதாக ஒரு திருத்தத்தைக் கொண்டு வந்து, அந்த விலக்கைக் கொடுத்தார்கள். அப் [illegible]

விலக்கு இருந்தது. அதை எற்றுக்கொள்ள வேண்டுமென்று எல்லா உறுப்பினர்களும் வற்புறுத்தி, அரசாங்கத்தை ஒப்புக்கொள்ள வைத்து, 4,000 ரூபாய் வரை வரி விலக்கை ஒத்துக்கொண்டார்கள். இப்பொழுது பொது வருமான வரிச் சட்டத்திலே 5,000 ரூபாய் வரை விலக்கு அளித்திருக்கிறார்கள். இதற்குக் காரணம் என்ன? அக விலைகள் ஏறிவிட்டன. ஆகவே, முன்பு ஒரு ரூபாய்க்கு வாங்கிய பொருள் இன்றைக்கு 2, 3 ரூபாய்க்கு வாங்க வேண்டியிருக்கிறது. ஆகவே, ரூபாயின் மதிப்பு மிகவும் குறைந்துவிட்டது. 5,000 ரூபாய் என்பதே மிகவும் குறைவு, 5,000 ரூபாய் வருமானம் வரை விலக்கு பொது வருமான வரிச் சட்டத்திலே உள்ளது போல் விலக்கு அளிப்பது ஒன்றும் மிகையாகாது. அதையும் அமைச்சர் அவர்கள் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். உடனே, இன்றே அதை நிறைவேற்ற வேண்டும் என்ற அவசியமில்லை. ஏனென்றால், இந்த பல்லாக்காகக் கொண்டு வரப்படுகின்ற மசோதாவை இப்பொழுதே கொண்டுவர வேண்டும் அல்லது விற்பனை வரிச் சட்டத்தை உடனே நிறைவேற்றிவிட்டால், வசூலிப்பதிலே அரசாங்கத்திற்கு நஷ்டம் ஏற்பட்டுவிடும் என்று சொல்லக்கூடிய நிலைமை இருக்கிறது. அதைப் போலச் சொல்லக் கூடிய சட்டம் இல்லை இது. இதை அடுத்த வருஷம் 1972-க்குப் பிறகுதான் வசூலிக்கப் போகிறார்கள். ஆகவே, இதில் அவசரம் இல்லை. இம்மாதிரி பல தொந்தரவுகளை மக்களுக்குக் கொடுத்து இந்தத் தொகையை வசூலிப்பதைவிட, இன்னும்கூட அதிகமாக நோகாமல் வசூலிக்கக் கூடிய நிலைமையை உண்டுபண்ணலாம். இந்தச் சபையிலேயிருந்து அந்தச் சபைக்குப் போகக் கூடிய நிலைமை ஏற்படும். இந்தச் சபையிலேயே 10 பேர்களைக் கொண்ட பொறுக்குக் குழு ஒன்றை அமைத்து இதை அவசியம் என்று அமைச்சர் நினைத்தால், அவர் அந்தத் திருத்தங்களை ஏற்றுக்கொண்டு அடுத்த கூட்டத்திலே அசெம்பிளியிலே அதை நிறைவேற்றிவிடலாம். இதிலே அவசரம் ஒன்றுமில்லை. 1973 மார்ச்சுக்குப் பிறகு தான் இதை நாம் வசூலிக்கப் போகிறோம். அப்பொழுது கொண்டு வரலாம் என்று சொல்லிக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக ஏற்கெனவே உள்ள சட்டத்தில் 65-ஆவது செக்ஷன், 6 ஆவது கொசில்

"Subject to the provisions of sub-section (8), permission granted under sub-section (5) shall be in force for a period of 3 years commencing from the financial year for which permission is granted" என்றிருக்கிறது. ஒருவர் என்னால் கணக்கு கொடுக்க முடியாது;; 'கம்பவுண்டிங்' செய்து கொள்கிறேன் என்று அனுமதி பெற்றால், அந்த அனுமதி மூன்று வருஷத்திற்குச் செல்லும் என்ற நிலைமை இருந்தது. இப்படி வாங்கிவிட்டால், அந்த அப்பாவி விவசாயி 3 வருஷத்திற்கு நிம்மதியாக இருக்கலாம். விவசாய வருமானவரி அதிகாரி நீ இத்தனை ஏக்கரில் இவ்வளவு போட்டிருக்கிறாய், எனவே "கம்பவுண்டிங்" கணக்குப்படி இவ்வளவு கட்டு என்று சொல்லுவார்; உடனே அவனும் பணத்தை கட்டிவிட்டு வருவான். அதைக்கூட 3 வருஷத்திற்கு ஒரு முறை என்றிருந்ததை ஒரு வருஷத்திற்கு என்று மாற்றியதற்குக் காரணம் என்ன?

"Any permission granted under sub-section (5) immediately before the commencement of the Tamil Nadu Agricultural Income-tax (Amendment) Act, 1971, shall cease to have any effect" என்று. இப்போது கொள் (6-ஏ) சேர்க்கப்படுகிறது.



அதைக்கூட மூன்று வருஷமாகவிருந்ததை இப்பொழுது ஒரு வருஷமாக மாற்ற வேண்டிய அவசியமென்ன? அவர்கள் எழுதி அனுமதி வாங்கியிருக்கிறார்கள். என்னால் கணக்கு எழுத முடியவில்லை, ஆகவே கம்பவுண்டிங் முறையில் வரி போடுங்கள், நான் செலுத்தி விடுகிறேன் என்று சொல்கின்றபோது, ஏன் வருஷா வருஷம் அனுமதி வாங்க வேண்டுமென்று சொல்ல வேண்டும்? பூமியிருந்து தேனை எப்பது போலிருக்க வேண்டும், கசக்கிப் பிழியக் கூடாது. வருஷா வருஷம் அனுமதி வாங்க வேண்டும் என்பதை அரசாங்கம் யோசிக்க வேண்டும். இத்தப் புதிய திருத்தத்தில்

"The permission granted under sub-section (5) shall be in force for a period of one year commencing from the financial year for which such permission is granted."

என்று சொல்லிவிட்டார்கள். இதற்கு முன்னால் மூன்று வருஷத்திற்கு அனுமதி கொடுக்கப்பட்டிருந்தால் அது கேன்சல் செய்யப்படுமென்று சொல்லிவிட்டு 'unless such permission is granted', என்று போட்டிருக்கிறார்கள் இதிலே எல்லாம் கொஞ்சம் அரசியல் கண்ணோட்டத்தோடு நடந்து கொள்ளும்படி அமைச்சர் அவர்களை கேட்டுக்கொள்கிறேன். அதிகமாக மக்களை மிரட்டி, துன்புறுத்தும் நிலை உண்டாகும். அவர்கள் அதிகாரிகளின் துன்புறுத்தல்களுக்கு உட்படுத்தப்படுவார்கள். இப்படிப்பட்ட சங்கடமான, சிக்கல் மிகுந்த சட்டங்கள் நிறைவேற்றப்படுவதால் பல விதமான தொல்லைகள் சிறிய அதிகாரிகளிடை ஏற்பட்டுவிடுகிறது. அதன் பிறகு விவசாயிகள் ஏதாவது கொடுத்துவிட்டுத் தப்பித்துக்கொள்வார்கள். அதனால் அரசாங்கத்திற்கு வரும் வருமானம் பாதி அளவுக்குக் குறைந்து போகும். அந்த அளவுக்கு லஞ்சம் ஏற்பட்டுவிடும். சர்க்காருக்கு நியாயமாக ரூபாய் 50 வரியாக வருமானால், அதிகாரிகள் 15 ரூபாய் வாங்கிக்கொண்டு சர்க்காருக்கு வர வேண்டிய ரூபாய் 50 வராமல் செய்து விடுகிறார்கள். கூடுமான வரையில் விவசாயிகளுக்குத் தொந்தரவில்லாமல் செய்ய வேண்டுமென்று அமைச்சர் அவர்களைப் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

(Chairman in the Chair.)

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, பொதுவாக இந்த மசோதாவின் மீது பேசியவர்கள் இதை ஒரு பொறுக்குக் குழுவிற்கு விட வேண்டுமென்ற கருத்தை வலியுறுத்திப் பேசினார்கள். போவையிலும் அதே கருத்துதான் வலியுறுத்தப்பட்டது. 1972-க்குப் பின்னாலேதான் இந்தச் சட்டம் அமுலாக்கப்படவிருக்கிறது, இப்பொழுது என்ன அவசரம்? ஆகையினாலே பொறுக்குக் குழுவிற்கு விடலாமென்று சொன்னார்கள். 1972-விருந்து வரி வசூல் செய்ய வேண்டுமானால், இப்பொழுதிலிருந்து நடவடிக்கை எடுக்க வேண்டும். 1971–72 வரியை 1972-க்குப் பின்னால் வசூல் செய்யப்போகிறோம், கணக்கு வைப்பவர்களுக்கு இப்பொழுதே சொன்னால்தான் கணக்கு வைக்க முடியும். பின்னால் கணக்கு இல்லை என்று சொல்லிவிடுவார்கள். எனவே 1972-ல் வரி வசூல் செய்யப்போகிறோம் என்றால், அது 1971–72 ஆண்டுக்கான வரியை அப்பொழுது வசூல் செய்கின்றோம். எனவே 1972 வரையில் பொறுப்பதென்று சொல்வது விவசாயிகளுக்குப் பாதகமாக அமையுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மூன்று ஏக்டேர்ட்ட் ஏக்காவுக்கு மேற்பட்டவர்கள் கணக்கு வைக்க வேண்டுமென்று சொல்கிறோம். இப்பொழுது இருக்கின்ற நிலைமையில் 50 ஏக்டேர்ட்ட் ஏக்கர் வரையில் கணக்கு இல்லை. குறைத்திருப்பதால்தான்

கணக்கு எவ்வளவு வேண்டியது அவசியம், நிரப்பத்தம் ஏற்படுகிறது. எதிர்க் கட்சித் தலைவர்கள் பேசுகிறபோது பூவிலிருந்து தேனை எடுப்பதுபோல் மக்களிடமிருந்து வரியை வசூலிக்க வேண்டுமென்று சொன்னார். சுதந்திரா கட்சித் தலைவர்கள் அதற்குத் துணையாக அப்பொழுதுதான் தேன் இனிக்கு மென்று சொன்னார். அப்படித்தான் அரசாங்கம் எடுக்கிறதே தவிர, யாரையும் கசக்கிப் பிழியவில்லை. கசக்கினால் தேன் வராது, வகையில் நாற்றம்தான் வரும். கசக்கி எடுக்க நாங்கள் விரும்பவில்லை. சிறு விவசாயிகளைப் பாதிக்கக் கூடாதென்பதற்காகத்தான் இந்தச் சட்டத்தை லகுவாகச் செய்திருக்கிறோம்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெயராம செட்டியார் அவர்கள் பேசுகிற போது, பதினைந்து ஸ்டேண்டர்ட் ஏக்கர் என்று வைத்திருக்கின்றபோது, எதற்காக வரி போட வேண்டுமென்று கேட்டார். ஆனால் உச்ச வரம்பிற்கு வைத்திருக்கின்ற ஸ்டேண்டர்ட் ஏக்கர் வேறு, இந்த விவசாய வரிக்காகப் போடப்படுகின்ற ஸ்டேண்டர்ட் ஏக்கர் கணக்கு வேறு. இந்த இரண்டையும் ஒன்றென்று வைத்துக் கொள்ளக்கூடாது என்று தெரிவித்துக்கொள்கிறேன். 15 ஸ்டேண்டர்ட் ஏக்கர் என்பது ஒரு தனி நபருக்கு வைத்திருக்கிறோம். ஒரு குடும்பத்திற்கு 60 ஸ்டேண்டர்ட் ஏக்கர்கூட இருக்கலாம். அப்படி சட்டத்தில் இடமிருக்கிறது. அந்த உச்ச வரம்பு வரையில் இந்தச் சட்டத்தில் விலக்கு அளிப்பதென்பது இயலாத காரியமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்கள் பேசுகிறபோது, வரு மானவரிக்கேற்றவாறு அமைத்திருக்க வேண்டாமா என்று கேட்டார். வரு மான வரி கட்டுவது ரூபாய் 4,000, ரூ. 5,000, ரூ. 6,000 என்று மாறும். மத்திய அரசாங்கத்தினுடைய பட்டம் வர வர மாறிக்கொண்டே போகும். விவசாய வருமான வரியை அப்படி மாற்ற முடியாது. ரூபாய் 4,000-க்கு இப்பொழுது வரி விலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. அதற்குப் பிறகு ஆயிரம் என்று போட்டு 'ஸ்லேப்' இருக்கிறது. வருமான வரி, விவசாய வருமான வரி இரண்டையும் இணைத்துப் பேசுவது சரியல்ல என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

கணக்குப்பிள்ளை வைத்திருக்கின்ற சிட்டா, அடங்கல்தானே ஆதாரமென்று கேட்டார்கள். ஒரு அரசாங்கம் என்று நடத்துகிறபோது, அந்த அரசாங் கத்தை யார் நடத்தினாலும், கீழ்மட்டத்திலுள்ள அதிகாரிகளை நம்பித்தான் அரசாங்கம் நடத்த வேண்டும். இப்பொழுதிருக்கின்ற நிலச்சட்டத்தின்படி சொச உத்தியோகஸ்தர்கள்தான் கணக்கு வைத்திருக்கிறார்கள். கணக்குப் பிள்ளை வைத்திருக்கின்ற சிட்டா அடங்கல்தான் கணக்கு. அதை நம்பித்தான் அரசாங்கம் நடத்த வேண்டும். கணக்குப் பிள்ளை இல்லாவிட்டால், வேறு பாரையாவது வைத்தால், அப்பொழுதும் இதே நிலைமையைத்தான் எடுத்துச் சொல்வார்கள்.

அலெல்லிங் ஆபீசர் தாசில்தாராகத்தான் இருப்பார். தாசில்தாருக்கும் விவசாயிகளுக்கும்தான் தொடர்பு மிக அதிகம். கணக்குப்பிள்ளைகளுக்கும் விவசாயிகளுக்கும் அவ்வளவு தொடர்பில்லை என்றுதான் சொல்லிக்கொள் வேன். ஆழ்ந்த சிந்தனையில்லாமல் அவசரத்தில் கொண்டுவந்துவிட்டார்களோ என்று சந்தேகப்படுகிறேன் என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்கள் சொன்னார். சிந்தித்து, ஆலோசனை செய்துதான் கொண்டு வந்தோம் என்று தெரிவித்துக்கொள்கிறேன். [illegible]



என்று மாண்புமிகு திரு. சுவாமிநாதன் அவர்கள் கேட்டார். மாற்றம் ஏற்பட்ட தற்குக் காரணம் அரசாங்கம் திடீரென்று மாற்றியது என்று கருதினார் போலும். அரசாங்கம் அப்படி நடந்துவிடவில்லை. முதலமைச்சர் அவர்களையும் என்னை யும் விவசாய சங்கத்தின் சார்பில், குறிப்பாகச் செங்கல்பட்டு மாவட்டத்தி லிருந்து வந்திருக்கும் போவை உறுப்பினர் திரு. சுப்பய்யா முதலியார் அவர் கள் மற்ற விவசாயிகளோடு வந்து சந்தித்தார்கள். இருக்கின்ற சிரமங்களை எடுத்துச் சொன்னார்கள். அவர்கள் சொன்ன சிரமங்களைச் சிந்தித்து ஆலோ சனை செய்த பிறகு, இரண்டு மூன்று நாட்கள் தொடர்ந்து விவாதித்த பிறகு தான் அரசாங்கம் ஓர் முடிவுக்கு வந்து இந்த மசோதா எற்பாடு செய்யப்பட்டது. ஒரு ஸ்டேண்டர்ட் ஏக்கருக்கு ரூபாய் 500 வருமானம் கிடைக்கும் என்று கணக்கு வைத்துப் போட்டிருக்கிறோமே தவிர, எந்த ஆதாரமுமில்லாமல் போட்டுவிட வில்லை. அரசாங்கத்தினுடைய ஸ்டேடிஸ்டிகல் டிபார்ட்மெண்டிலிருந்தும் விவசாயிகளுடைய கணக்கை வாங்கிப்பார்த்து ரூபாய் 500 வருமானம் வரும் என்று கணக்குப் போட்டு, ஒரு ஸ்டேண்டர்ட் ஏக்கருக்கு ரூபாய் 500 என்றால், பாக்குத் தோட்டத்திற்கு எவ்வளவு வருமானம் வரும், அதே போல் புகை யிலைக்கு, கரும்பு, இன்னும் பல பயிர்களுக்கு என்ன வருமானம் வருமென்று கணக்கெடுத்துத்தான் ஸ்டேண்டர்ட் ஏக்கர் என்று மாற்றம் செய்யப்பட்டது. இதிலே ஏதோ பேனை ஓடுகின்ற பக்கம் கையை ஓட்டி இரண்டும் மூன்றும் ஐந்து, ஐந்தும் மூன்றும் எட்டு என்று போட்டுவிடவில்லை என்று தெரிவித்துக்கொள் கிறேன். எனவே 'பேஸிஸ்' இல்லாமல் எதுவும் செய்துவிடவில்லை. காலணி அணிந்துகொள்கிறவனுக்குத்தான் எங்கே கடிக்கிறதென்று தெரியுமென்று மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்கள் சொன்னார்கள். அரசாங் கத்திற்குத் தெரியும் எங்கே போனால் பணம் கிடைக்குமென்றும் எங்கே பணம் வாங்க வேண்டும் என்றும். விவசாயிகளுக்கு எந்த சிரமங்களும் இருக்கக் கூடாது என்பதற்காக அந்த அளவுக்கு விலக்கு அளித்துள்ளது. மாண்புமிகு உறுப்பினர் திரு. சுவாமிநாதன் அவர்கள் பேசுகிறபோது வள்ளிக்கிழங்கிற்குக்கூட வரி போடலாமே என்று சொன்னார். திரு. சுவாமிநாதன் அவர்கள் கேலியாகச் சொன்னதை உண்மையென நம்பி வள்ளிக்கிழங்கிற்கு வரி போட்டால் ரூபாய் 50,000 வருமானம் வருமென்று சொன்னார். சிறந்த யோசனைதான். இந்த ஆண்டு வேண்டாம். அதைப்பற்றி வேண்டுமானால் அடுத்த ஆண்டு யோசித்துப் பார்க்கலாம் என்று அவர்களுக்குச் சொல்லிக்கொள்கிறேன்.

**திரு. ஜி. சுவாமிநாதன்:** தலைவர் அவர்களே, ஏதோ காரணமாகச் சொல் லப்பட்டதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உண்மையாக எடுத்துக்கொண் டால், மக்கள் எங்களைப் பற்றி வேறு விதமாக நினைப்பார்கள். நாங்கள் மக்க ளிடம் செல்ல முடியாத நிலை ஏற்படும்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** நான் பேசும் போது மாண்புமிகு உறுப்பினர் திரு. சுவாமிநாதன் அவர்கள் கேலியாகச் சொன்னார்கள் என்று நான் குறிப்பிட்டேன்.

மாங்காய், பிளகாய், வெற்றிலை போன்றவைகளுக்கு முதலில் வரி போட் டார்களே, பிறகு ஏன் எடுத்தீர்கள் என்று கேட்கிறார்கள். போட்டது உண்மை தான். ஒட்டகத்தின் மீது இருந்து கீழ் கல்லில் எடுப்பது போல் வரி விலக்கு அளிக்கலாம். மாங்காய் சில ஆண்டுகளுக்குக் காய்க்காமலும், சில ஆண்டு களுக்குக் காய்க்காமலும் இருக்கலாம். மஞ்சளுக்கு மார்க்கெட் நன்றாக இருந்

11-10 a.m.

[திரு. ப. உ. சண்முகம்] [31 ஜூலை 1971

தாலும் இருக்கலாம் அல்லது சரித்து போகலாம். அதனால்தான் இந்தப் பொருள்களுக்கு வரியிலிருந்து விலக்கு அளிக்கிறோம் என்று முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள்.

கம்பௌண்டிங் முறை சிறு விவசாயிகளுக்கு நல்லது, லாபம் தரக் கூடியது. இதனால் கஷ்டம் ஏற்படாது என்று உறுதி தெரிவிக்கிறேன். மக்கள் தொடர்பு அதிகாரிகளை ஏற்படுத்தி, அவர்கள் விவசாயிகளுக்கு எப்படி கணக்குகளை வைத்துக்கொள்ளுவது என்று சொல்லித் தரும்படி ஏற்பாடு செய்கிறோம். புதிய ஒரு "பாரம்" தயாரித்து விவசாயிகளுக்குக் கொடுக்க இருக்கிறது அரசு. அந்த பாரத்தை பூர்த்தி செய்து கொடுத்தால் போதும். அதை எப்படித் தயாரிப்பது என்று சொல்லியிருக்கிறோம். இன்னும் அந்த "பாரம்" தயாராகவில்லை. விவசாயிகள் அந்த பாரத்தை எளிதில் பூர்த்தி செய்வதற்காக அந்த "பாரம்" தமிழில்தான் இருக்கும். யாரேனும் விரும்பினால், ஆங்கிலத்தில் மாற்றிக் கொடுக்கப்படும்.

கம்பௌண்டிங் செய்வதின் மூலம் அரசாங்கத்துக்கு நஷ்டம் வரும் என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. சுவாமிநாதன் குறிப்பிட்டார். விவசாயிகளைத் தன்புறுத்த இந்த அரசு தயாராக இல்லை. தமிழ்நாட்டில் 79,185 பேர் கம்பௌண்டிங்கின் கீழ் வருகிறார்கள்.

THIRU G. SWAMINATHAN: I wish to have a clarification. According to the Agricultural Income Tax Administration Report for 1968–69, it has been reported that the total number of cases borne on the General Index Register at the beginning of the year was 37,585, and that has been reduced to 3,793 later on. Such cases cannot be taken as assessees, because one assessee may have two or three cases.

THE HON. THIRU P. U. SHANMUGAM: I am giving figures for 1969–70.

1969-70-ம் ஆண்டுக்கான புள்ளி விவரங்களைத் தருகிறேன். 1969-70-ம் ஆண்டுக்குக் கணக்கு கொடுத்திருக்கிறது 13,200 பேர். கம்பௌண்டிங் மூலம் அரசாங்கத்துக்கு வந்துள்ள டிமாண்ட் மட்டும் ரூபாய் 88,73,435. கணக்கு கொடுத்ததின் மூலம் ரூபாய் 1,73,71,924. ஆக மொத்தம் அரசாங்கத்துக்கு 1969-70-ம் ஆண்டுக்கு, ஏற்கனவே இருந்த இந்த வேளாண்மை வருமான வரியின் கீழ் எழுதியிருக்கின்ற டிமாண்ட் ரூபாய் 2,12,45,359.

புயல் ஏற்பட்டால், பூச்சியால் பயிர் பாதிக்கப்பட்டால் வரி போடுவீர்களா என்று பலர் கேட்டார்கள். அதற்கெல்லாம் இந்த மசோதாவில் வழி இருக்கிறது. ஒரு முறை கம்பௌண்டிங் செய்தால், முன்பு 3 ஆண்டுகள் இருக்க வேண்டும். இப்போது அதை ஓராண்டாக மாற்றியிருக்கிறீர்களே என்று கேட்டார்கள். 3 ஆண்டுகளாக இருப்பதை ஓராண்டாக மாற்றியிருப்பது விவசாயிகளின் நன்மையைக்கருதிதான்.

புகையிலைக்கு ஏன் சலுகை அளித்திருக்கிறீர்கள் என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. சா. கணேசன் அவர்கள் கேட்டார்கள். புகையிலைக்கு ஏற்கனவே 'எக்சைஸ்' வரி இருக்கிறது. கடலைக்கு வரி இல்லை. புகையிலைக்கு வரி போட்டிருக்கிறோம், புகையிலைக்கு வரி போடவில்லை.



31 ஜூலை 1971]

திரு. கே. ராஜாராம்: தலைவர் அவர்களே, அந்த வரி மாநில சர்க்கார் போட்ட வரி.

திரு. கே. எஸ். அப்துல் வகாப்: வரியாக 100 ரூபாய் கொடுத்தால், நமக்கு 10 ரூபாய் கூட வரவில்லை.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் சொன்னதை ஒப்புக்கொள்ளுகிறேன். அரசாங்க நிதி நிலையை உத்தேசித்தும், தமிழ் நாட்டின் நிலையை உத்தேசித்தும் அரசாங்கத்துக்குப் பணம் வருகிறது என்பதை ஒப்புக்கொள்ளுகிறேன். புகையிலைக்கு எக்சைஸ் வரி இருப்பதால், அதற்கு விலக்கு அளித்திருக்கிறோம். வெற்றிலைக்கும் விலக்களித்திருக்கிறோம்.

இந்தப் புதிய முறையால் அதிகாரிகள் மட்டத்தில் ஊழல் ஏற்படும். 50 ரூபாய் வர வேண்டுமென்றால், 15 ரூபாயைக் கொடுத்து விடுவார்கள் என்று சொன்னார்கள். அப்படி ஊழல்கள் நடக்காமல் அரசாங்கம் பார்த்துக்கொள்ளும். அப்படி ஏதாவது புகார்கள் வந்தால், அரசாங்கத்தின் கவனத்துக்கு அங்கத்தினர்கள் கொண்டுவரவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். 11.20 a.m.

இந்த வேளாண்மை வருமான வரி போடுவதன் மூலம் விவசாயிகளைக் கசக்க வேண்டுமென்று இந்த அரசு நினைக்கவில்லை. அரசாங்கத்தின் வருமானம் குறைந்தாலும் பரவாயில்லை, விவசாயிகளைக் கசக்கிப் பிழியாத வகையில் இருக்க வேண்டும் என்றுதான் இந்த மசோதாவைக் கொண்டு வந்திருக்கிறோம்.

இந்த சட்டத்தால் சிறு விவசாயிகள் பாதிக்கப்பட மாட்டார்கள் என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன். அங்கத்தினர்கள் அவ்வளவு பேரும் பேசையில் கொடுத்த திருத்தங்கள் முழுவதும் சுற்றறிக்கை மூலம் தரப்பட்டிருக்கின்றன. கொடுக்கப்பட்டிருக்கின்ற சலுகைகளை எல்லாம் அவர்கள் வரவேற்பார்கள் என்றெண்ணி இதை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று இந்த மன்றத்தைக் கேட்டுக்கொண்டு நான் அமைகிறேன்.

THIRU A. R. DAMODARAN: This is only to correct the impression that might have been given to the Hon. Minister that some of us who spoke on this Bill have accused the Government of suddenly reducing the rates, because of some representation made by the farmers of Chingleput. It is not our intention to accuse the Hon. Minister of any partiality shown to the Chingleput ryots. One point I wish to stress is this. It is easy for the adjoining farmers of Chingleput to represent to the Hon. Minister that certain hardship would be caused if betel leaves, turmeric, chillies and mangoes were included. The Hon. Minister has very correctly appreciated the facts made by the farmers and decided to remove those commodities in terms of composition formula. My only point is this. Farmers from Salem may very well have something to represent in respect of groundnut, cotton and arecanut also which is grown in other parts. In the case of Tea, for example, it was originally envisaged that 3/5th of an acre grown with tea would be considered as one Standard Acre. Now the Hon. Minister says that 4/5th of an acre would be considered as one Standard Acre. This is probably the only

[Thiru A. R. Damodaran] [31st July 1971

commodity where he has been very kind enough to relax and raise the limit for the composition formula. I do not accuse the Government of any partiality. My only point was that they had very carefully taken into account the representation made probably from the Tea Plantation Owners. I only want the same facility that has been afforded to Tea Planters should be afforded to the Cardamom Planters, Coffee Planters and Rubber Planters and to those cultivating Bananas. Only with this intention, we brought it to the notice of the Hon. Minister and it is not that they had succumbed to unnatural pressures from the farmers of Chingleput.

Thank you, Sir.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, செங்கற்பட்டு மாவட்டத்திலிருந்து விவசாயிகள் வந்து சந்தித்தார்கள் என்று சொன்னார்கள். ஏற்கனவே கொடுத்த திருத்தங்களின் காரணமாக இப்போது திருத்தங்கள் வந்தன என்று குறிப்பிட்டேன். மஞ்சள், செங்கற்பட்டு மாவட்டத்தில் விளைவதில்லை. கோயமுத்தூரில்தான் மஞ்சள் அதிகமாக விளைகிறது. கோயமுத்தூரிலிருந்து வந்து சந்தித்தார்கள் என்றுதான் போட்டோமே தவிர, செங்கற்பட்டு மாவட்டத்தில் மட்டுமல்ல. வெற்றிலை சேலம் மாவட்டத்தில் வேலூர் பகுதியில் அதிகமாக விளைகிறது. சில மாவட்டங்களிலிருந்து வந்தவர்கள் சந்தித்ததால் மாற்றினேம் என்று கருதிவிட வேண்டாம். பாக்குத் தோட்டம் அதிகமாக இருப்பது கோயமுத்தூர் மாவட்டத்திலும் நீலகிரி பகுதியிலும்தான் என்பதை ஒத்துக்கொள்கிறேன். பாக்குக்கு 1/3 என்பதை 1/10 என்று போட்டு, பிறகு 1/16 என்று மாற்றினீர்களே என்று கேட்டார்கள். 1/16 என்று போட்டபோது வருமானம் வருமென்று கணக்கிட்டு எடுத்தோம். பிறகு இலாகாவினர் பாக்கு வியாபாரிகளைக் கலந்து கேட்டதில் குறைவாக இருக்குமென்று கருதி, 1/16 என்று மாற்றினேம். வேறு காரணம் எதுவுமில்லை. மயிற்குச் சலுகை காட்டியதைக் குற்றமாகத் தெரிவிக்கவில்லை. சந்தேகத்தோடு கிளப்பினார்கள். நாங்கள் ஸ்டாண்டர்டு எக்ருக்கு ரூ. 500 வருமானம் வரும் என்று கணக்குப்போட்டு வருமானத்திற்கு ஏற்றவாறு ஸ்டாண்டர்டு ஏக்கர் என்று மாற்றியமைத்தோம். சிறு டீ எஸ்டேட் கிடையாது. பெரிய டீ கம்பெனிகள்தான் இருக்கின்றன. அது காம்பவுண்டிங்கில் வராது. மொத்தமாகக் கணக்குக் கொடுக்கும்போது கன்வர்ஷன் ஃபேக்டரில் வராது என்று தெரிவித்துக்கொண்டு இச்சட்டத்தை அப்படியே ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

MR. CHAIRMAN : The question is—

"That the Tamil Nadu Agricultural Income-tax (Amendment) Bill, 1971 (L.A. Bill No. 19 of 1971), as passed by the Assembly, be taken into consideration for making recommendations."

The motion was put and carried and the Bill was taken into consideration for making recommendations.

MR. CHAIRMAN : As there are no recommendations, the Bill will be returned to the Assembly without any recommendations.



31st July 1971]

## (3) THE TAMIL NADU SALES TAX (SURCHARGE) BILL, 1971 (L.A. BILL NO. 22 OF 1971).

THE HON. THIRU P. U. SHANMUGAM : Mr. Chairman, Sir, I beg to move—

"That the Tamil Nadu Sales Tax (Surcharge) Bill,@ 1971 (L.A. Bill No. 22 of 1971), as passed by the Assembly, be taken into consideration for making recommendations."

On 19th June 1971, the Chief Minister announced in his Budget speech the proposal of the Government to levy a surcharge of 10 per cent on the tax payable by dealers in respect of the sale or purchase of goods in the City of Madras. However, during general discussion on the Budget, some Members in the Legislative Assembly and this House pleaded that the rate was very stiff and it might be reduced and some Members said that there was need to extend the levy to the belt area around the City of Madras and also to other areas to avoid discrimination. Our Chief Minister, as gesture, announced in his reply on the 29th June 1971, the decision of the Government to reduce the rate of surcharge to 5 per cent and also to extend the levy to the suburban areas of the City of Madras, to the City of Madurai and also to the municipal towns of Salem, Coimbatore and Tiruchirappalli. As the hon. Members are aware, the revenue realised on account of this levy will be utilised by the Government for the improvement of the above Cities and municipal towns through measures like slum improvement and for providing necessary infrastructure such as roads water-supply, etc.

In clause 3 of the Bill, provision has been made for the levy of the surcharge on the tax payable under the Tamil Nadu General Sales Tax Act, 1959, on the sale or purchase of goods within the limits of the area in which the levy will be in force. Clause 4 of the Bill provides for the levy of similar surcharge on the tax payable under the Tamil Nadu Sales of Motor Spirit Taxation Act, 1939.

The Bill also provides for the levy of the surcharge in the City of Madras, from the 19th June 1971. In respect of other areas, viz., the City of Madurai and the Municipal town of Salem, Coimbatore and Tiruchirappalli the levy of surcharge will take effect from the 29th June 1971. In the suburban area of the City of Madras, namely, an area within 32 kilometres of the City, the levy will take effect from the 12th July 1971, the date of the publication of the Tamil Nadu Sales Tax (Surcharge) Bill, 1971, in the *Tamil Nadu Government Gazette*. The rate of surcharge will be five per cent from the 29th June 1971, but in respect of the City of Madras for the period from the 19th June 1971 to the 28th June 1971, the tax of surcharge will be ten per cent.

@ Printed as Appendix III on pages 1198-1201.

[Thiru P. U. Shanmugam] 31st July 1971]

Provision is also made in the Bill to extend the levy of surcharge to any other municipal town or township or their suburban areas and also the suburban areas of the City of Madurai and of the municipal towns of Salem, Coimbatore and Tiruchirappalli. Such extension has to be done by notification issued by Government with the approval of the Legislative Assembly.

Sir, I commend the motion for the acceptance of the House.

தலைவர் அவர்களே, அங்கத்தினர்களுடைய நன்மையைக் கருதி இதனுடைய கருக்கத்தைத் தமிழில் தெரிவிக்கிறேன். நிதிநிலை அறிக்கையைத் தாக்கல் செய்தபோது, முதலமைச்சர் அவர்கள் சென்னையில் வருமான வரி மீது 10 சத வீதம் சர்சார்ஜ் விதிக்கப்படுமென்று அறிவித்தார்கள். ஆனால் அங்கத்தினர்கள் இங்கே பேசும்போது, 10 சத வீதம் என்பது அதிகமாக இருப்பதாகத் தெரிவித்த யோசனையின்பேரில், முதலமைச்சர் அவர்கள் 29-ம் தேதி மீண்டும் 5 சத வீதம் ஆக அதைக் குறைத்தார்கள். பதிலுரை சொல்லும்போது, அதைக் குறைத்து வெளியிட்டார்கள். குறைத்தது மட்டுமல்ல, சுற்றியிருந்த மதுரை, திருச்சி, கோயமுத்தூர், சேலம் ஆகிய பகுதிகளுக்கு இது விரிவாக்கப்படுமென்றும் சொன்னார்கள். சென்னைக்கு வரி போடும்போது, சென்னை நகரில் வியாபாரம் செய்தால் என்ன செய்வீர்கள் என்று அங்கத்தினர்கள் கேட்டார்கள். அங்கத்தினர்களுடைய அந்தக் கவலையைப் போக்குவதற்காக முதலமைச்சர் அவர்கள் சென்னையைச் சுற்றியிருக்கிற 32 மைலோ மீட்டருக்குள் யார் வியாபாரம் செய்தாலும், அதன் மீது சர்சார்ஜ் விதிக்கப்படும் என்று அங்கத்தினர்கள் சொன்ன வார்த்தையின் பேரில்தான் விரிவாக்கப்பட்டதே தவிர வேறில்லை. சென்னையைச் சுற்றியிருக்கிற பகுதிகளுக்கும் விரிவு படுத்துவதற்கு இதன் மூலம் அதிகாரம் அளித்திருக்கிறோம். மற்றும் தமிழ் நாடு முழுவதும் இதை விரிவாக்கலாம் என்றாலும், அப்படி விரிவாக்குவதாக இருந்தால், சட்டமன்றப் போவையின் அங்கீகாரத்தைப் பெற்றதற்குப் பின்னால்தான் விரிவாக்கப்படும் என்பதை இச்சட்டத்தில் குறிப்பிட்டிருக்கிறோம். வரவு-செலவுத் திட்டம் 19-ம் தேதி தாக்கல் செய்யப்பட்டது. 29-ம் தேதி போவையில் முதலமைச்சர் அவர்கள் பதில் அளித்தார்கள். வரவு-செலவுத் திட்டத்தில் இதுபற்றிச் சொல்லும்போது 10 சத வீதம் என்று குறிப்பிடப்பட்டது. சென்னையில் 10 சத வீதம் அந்த 19-ம் தேதியிலிருந்து வசூல் செய்ய ஆரம்பித்துவிட்டார்கள். பில்லும் போட்டுவிட்டார்கள். ஆதாரம் அதற்கு இருக்கிறது. இடைப்பட்ட நாட்களில் 10 சத வீதம் வசூலித்த காரணத்தால், அதைத் திருப்பிக் கொடுக்க வேண்டுமென்ற சந்தர்ப்பம் வியாபாரிகளுக்கு கொடுக்கப்படாமல் போகும். அதனால் இடைப்பட்ட 10 நாட்களுக்கு சென்னையைப் பொருத்த வரையில், 10 சத வீதம் சர்சார்ஜ் உண்டு என்று போட்டுவிட்டு, அதற்குப் பிறகு 5 சத வீதம் சென்னையிலும் சுற்றியுள்ள 32 மைலோ மீட்டர் பகுதிக்கும் உண்டு என்றும் சட்டத்தில் போட்டிருக்கிறோம். பாக்கியுள்ள திருச்சி, மதுரை, சேலம், கோவை பகுதிகளுக்குத் தனியாக "நோட்டிபிகேஷன்" வருகிறது. பின்னால் வரும்போது அதைப்பற்றிச் சொல்லுகிறோம். ஆகையால் இப்போது இந்த சர்சார்ஜ் சட்டத்தை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று அவையைக் கேட்டுக்கொள்கிறேன்.



31 ஜூலை 1971]

MR. CHAIRMAN : Motion moved—

"That the Tamil Nadu Sales Tax (Surcharge) Bill, 1971 (L.A. Bill No. 22 of 1971), as passed by the Assembly, be taken into consideration for making recommendations."

THIRU A. R. DAMODARAN : Sir, the Hon. the Minister for Revenue is responsible for two very orginal Bills in so far as sales tax is concerned. One of them was introduce by him last year, namely, the Additional Sales Tax Bill. Of course, that is now a matter pending in the Courts. Therefore, I shall no refer to it. I criticized that measure on the ground that it was a tax really on income or wealth. It was not a sales tax measure. As the matter is *sub judice*, I shall not refer to it. In regard to this measure, this is perfectly legal and valid according to my opinion and the Hon. Minister would also have got the legal opinion on his side. The only point I would like to mention, Sir, is that this is not really a surcharge that is confined to the Cities which have been enumerated in the Bill. The Hon. the Finance Minister and the Chief Minister while mentioning this in the Budget document remarked :—" Next in our effects to improve our resources, is the revision of the rate of multi-point tax levied under the Tamil Nadu General Sales Tax Act from three per cent to 3½ per cent. This measure will fetch Rs. 3.8 crores per annum. My next proposal is to levy a ten per cent surcharge on sales tax collected in Madras City. This will bring in Rs. 3 crores of additional revenue in one year ". The point I would like to mention is that this is really a disguised increase in the multi-point rate of tax. The Hon. Minister is certainly going to get more than Rs. 3 crores or approximately Rs. 3.5 crores because unfortunately, the operation of this surcharge on sales tax is not confined to the City of Madras and the four Municipal Towns which he has mentioned. I would like to mention a very interesting point that arises. There is a cement factory in Sankari in Salem district. On the 20th June or 21st June, the tax was intended only for Madras City and that too at 10 per cent. But the cement factory which is 15 to 20 miles away from Salem, when it despatched a consignment of cement to their dealers levied a 10 per cent surcharge on the sales tax. The reason why it levied the sales tax was that although this cement factory is located at Sankari in Salem district, the accounts are centralized in Madras and all the sales tax collection made by the factory units outside the City of Madras is remitted to the Head Office in Madras City. It is this Head office which remits the money to the Sales Tax authorities. Therefore, legally these firms did not know whether the surcharge was applicable only to the goods sold in Madras City, or whether it was applicable also to the sales tax collected in the City and remitted to Sales Tax authoriies. Numerous other instances are also available, Sir, For example, in the case of petroleum goods, it was intended that only petrol, H.S.D. oil, etc., sold in Madras City should be liable to this additional sales tax. But right from 20th onwards, we

11-30 a.m.

have been receiving in South Arcot, Tiruchirappalli, Thanjavur and other places, goods despatched from Madras City for which sales tax was collected by the companies in the Madras City and remitted to the Sales Tax authorities. For every kilo litre of petrol, lubricating oil, diesel oil and the whole range of petroleum products was charged with this surcharge of 10 per cent up till the 29th. Therefore, I wish to point out on this occasion that this is not surcharge in the Madras City or confined to Coimbatore, Salem, Tiruchirappalli and other places that he mentioned for the reason that this is almost applicable to 60 per cent of the sales in our State. In fact, the very figure given by the Hon. the Chief Minister in his Budget document goes to prove that nearly 60 per cent of sales tax collections of the State, or possibly anywhere between 55 per cent and 60 per cent—I speak only on an estimate basis—are made in Madras City. From the Budget document I understand that over 30 to 34 crores of rupees out of Rs. 62 crores is collected as tax and remitted in the Madras City. Therefore, this surcharge is going to be applicable to almost 55 per cent of the total sales in Tamil Nadu. I wish to make it clear on this occasion that although the Bill very piously expresses the hope that it is confined to the four Municipal towns, in actual fact, it is extended almost throughout the State and will cover 60 per cent of the sales in Tamil Nadu.

The other point which I would refer to is the fact which the Hon. Minister himself has mentioned, namely, that this Bill provides for the collection of 10 per cent surcharge in Madras City between the 19th and 29th and 5 per cent thereafter. There is one difficulty in this regard and it is a genuine difficulty and I am only mentioning this because the Government should not run into legal difficulties at a later stage. The Hon. the Chief Minister read out Part A of the Budget speech at 11 a.m. When he came to Part B, it was already 11-55 a.m. A number of sales had already taken place by that time in Madras City because half the day was over and if you take the quantum of sales that take place in Madras City, during that half day, right from 8 o'clock till 12 noon, a number of goods had been sold on the old sales-tax basis. Surcharge was not collected up to 12 noon. After 12 noon, after the Chief Minister's speech, we heard the news only on the radio at 1-15 p.m. It was filtered through and some people started collecting surcharge from 3 p.m. or 4 p.m. Some did not know what this new Bill was because it was a new measure. They made references to the various Secretaries of Departments, obtained no clarification excepting the statement that the Chief Minister's statement in the Budget was their guideline, and, therefore, this difficulty arose that when the Government envisaged the collection of sales-tax from the 19th, they were including the sales effected from 8 a.m. to 12 noon. Constitutionally speaking, any person who is affected is likely to go to the High Court in this matter and, therefore, Sir, I would





request the Government to consider whether the date should not be changed from the 19th to the 20th morning at least. Then you will be able to prove to the High Court that the intention of the Government in levying this surcharge would have been known to all the assessees by the evening of the 19th and it would, therefore, be a reasonable restriction to collect it from the 20th. Similarly, the Minister mentioned that it would take effect in the City of Madurai, Salem, Coimbatore and Tiruchirappalli on the 29th. Even we, in the Council, did not know on that day until 4-30 p.m. or 5 p.m. that the Chief Minister had announced certain relaxations in the Lower House. Here again, the same difficulty is likely to crop up so far as any tax collection on the 29th is concerned. Of course, it is a question of 5 per cent as far as these four towns are concerned. Here again, there may be certain difficulties. I would request the Hon. Minister to kindly consider that aspect also.

Sir, I would have liked the Hon. Minister to come forward with a straightforward measure, raising the multi-point tax, if necessary, from 3½ per cent to 4 per cent. The reason why I mention this is that the Hon. Minister has made the statement that because of our representations even the suburban areas of Madras City are going to be included in this measure. In the definition of suburban area, for urban land tax, the Hon. Minister has stated that 16 K.M. will be the area, for sales-tax measure it has been stated to be 32 K.M. and next year when he brings in a measure, he may extend it to 64 K.M. I do not know how it multiplies in geometrical proportion. I am not able to understand how he is able to fix so exactly 32 K.M. for sales-tax and 16 K.M. for urban land tax. It is very unfortunate that this is being extended to the so-called suburban area, although, in actual fact, it is already there. Whether the Government want it or not, it is already in existence there. Sales-tax is being collected even on goods sold outside the City of Madras. Because I wanted to avoid unnecessary harassment of dealers, I wanted a precise definition of this surcharge. I hope, Sir, that next year the Hon. Minister will remove both these bills from the Statute-Book of Tamil Nadu and levy a straightforward additional tax of ½ per cent. Let the people know what tax they have to pay to the Government. In this particular measure rounding off that takes place in the collection of sales-tax really implies that we are paying Rs. 5 to Government and probably annexing another Rs. 10 to our own private coffers. This is what is happening in actual practice because, for example, if a particular article is sold for Rs. 4.72, the sales-tax is 3½ per cent on that, the merchant estimates its value at Rs. 5 and levies 3½ per cent tax on Rs. 5. After he levies this sales-tax, he again has to levy a 5 per cent surcharge on that 3-1/2 per cent sales-tax. Again, there is a rounding off of half or one paise. All these measures result not only in increase in prices and cost of living of the people, but also the revenue which should legally accrue to the Government does not go to the

11-40 a.m.

[Thiru A. R. Damodaran] [31 July 1971

Government but goes into private pockets. It is from this aspect also that I would like to welcome a straightforward ½ per cent increase in the rate of sales-tax. I think the Hon. Minister himself has been a merchant at sometime or other in his life. He should have experience, although he might not have prepared the Bill himself, of the difficulty in preparing the Bill—sales-tax, then 5 per cent surcharge, then rounding off. For this purpose, we have to employ so many clerks. I realise that it is too late in the day and we are on the last lap of our journey as far as Bills are concerned. But I hope the Hon. Minister will consider the matter in consultation with his departmental officials and remove next year both these Bills from the Statute-Book. If he raises the tax from 3 to 3½ per cent, the people will support it if it is proved that the resources are used for various developmental activities of the State. I hope some review will be made of these two taxes which are likely to cause some amount of difficulty not only to the merchants but also to the consuming public.

*திரு. கே. ராஜாராம்: தலைவர் அவர்களே, பொதுவாக இந்த சர்சார்ஜ் மசோதாவை வரவேற்பதற்கில்லை. அமைச்சர் அவர்கள் சொல்லியது போல, அவ்வளவு லேசான விஷயமல்ல இது. சென்ற வருட பட்ஜெட்டில், இன்று சட்ட மன்றப் போவையின் தலைவராக இருக்கின்ற மாண்புமிகு திரு. மதியழகன் அவர்கள் செவின்யூ அமைச்சராக இருக்கிறபோது, சென்னை நகருக்கு மட்டும் 5 சதவிகிதம் என்று முதலில் கொண்டுவந்து, பின்னால் கைவிட்டார்கள். இப்போது மீண்டும் என்ன காரணத்தாலோ கொண்டுவரப்பட்டு, 10 சதவிகிதம் என்று முதலில் போடப்பட்டதை இப்போது சிறிது தயவு வைத்து 5 சதவிகிதம் என்று குறைத்திருக்கிறார்கள். காரியாம்சத்தில், உண்மையை அலசிப் பார்த்தால் முதல் புரொபோசல்படி 10 சதவிகிதமாக இருந்துவிட்டால் கூட மக்களுக்குத் தொல்லையிராது. 5 சதவிகிதம் என்று ஆக்கியதன் பலன் என்ன வென்றால், தமிழ்நாடு முழுவதற்கும் இந்தச் சட்டம் வந்துவிட்டது. தமிழ்நாடு முழுவதும் 5 சதவிகித சர்சார்ஜ் செலுத்துகிறார்கள் 10 சதவிகிதம் விதம் சென்னை நகரில் எவ்வளவு வருமானம் என்று எதிர்பார்க்கப்பட்டதோ அதைக் காட்டிலும் இரட்டிப்பு மடங்கு அதிகமாக வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த சர்சார்ஜைப்பற்றி வரவு-செலவுத் திட்டத்தின் மீது பேசும் போது மிக அதிகமாக, விரிவாகப் பேசியிருக்கிறேன். இப்போதும் அதையே மீண்டும் பேசவேண்டிய அவசியமில்லை என்று கருதுகிறேன். ஒரே ஒரு விஷயத்தை மட்டும் செவின்யூ அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கும்—அதிர்ஷ்டவசமாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் வந்துவிட்டார்கள், ஆகவே அவர்களுடைய கவனத்திற்கும்—கொண்டுவந்து, அதைச் சிந்திக்கும் படி அவர்களை கேட்டுக் கொள்ளுகிறேன். சிறு விஷயம் தான் என்றாலும், மக்களுடைய கஷ்டத்தைச் சொல்லி விடுகிறேன். மருந்துக் கடையில் மருந்து வாங்கப் போனால், அங்கு தான் இதை அதிகமாகப் போடுகிறார்கள். விற்பனை வரி வேறு, சர்சார்ஜ் வேறு போடுகிறார்கள். அத்துடன் 'டி.எஸ்.' என்று புதிதாக ஒன்று போடுகிறார்கள். இது அரசாங்கத்திற்குத் தெரியுமா; அல்லது மருந்து வியாபாரிகள் அரசாங்கத்தின் அனுமதியைப் பெற்றிருக்கிறார்களா என்ற அறிந்துகொள்ள விரும்புகிறேன். 'டி.எஸ்' என்றால் 'டாக்ஸ் சபர்டி' Tax suffered) என்று சொல்லுகிறார்கள். அதாவது சில்லரை வியாபாரி



31 July 1971] [திரு. கே. ராஜாராம்]

கள் ஹோல்சேலர்களுக்குச் செலுத்துகின்ற வரியாம். அதை நம்மிடம் வசூலிக்கின்றார்கள். இதற்கு அரசாங்கம் அனுமதி கொடுத்திருப்பதாக எனக்குத் தெரியவில்லை. எல்லா மருந்துக் கடைகளிலும் வசூலிக்கிறார்கள். சீடல் மருந்து வியாபாரிகள் மொத்த வியாபாரிகளிடமிருந்து கொள்முதல் செய்யும்போது, ஒரு குறிப்பிட்ட மருந்தை 6 ரூபாய்க்கு மேல் விற்கக்கூடாது என்று அட்டையில் எழுதி, அதற்காக மொத்த வியாபாரிகள் சில்லரை வியாபாரிகளுக்குத் தனியாகக் கமிஷன் கொடுக்கிறார்கள். அதில் வேறு சில்லரை வியாபாரிகளுக்கு லாபம். அப்படியெல்லாம் இருக்கின்றபோது, விற்பனை வரி, சர்சார்ஜ் ஆகியவற்றோடு, 'டி.எஸ்.' என்று போட்டு, இவர்கள் மொத்த வியாபாரிகளுக்குச் செலுத்துகிற விற்பனை வரியை நம்மிடம் சேர்த்து வசூலிக்கிறார்கள். இது சட்ட விரோதமானது என்று அறிகிறேன். இதை அமைச்சர் அவர்கள் தலையிட்டு நிறுத்த வேண்டும். ஒவ்வொரு தாளும் இம்மாதிரி ஆயிரக்கணக்கான ரூபாய்கள் எல்லா மருந்துக் கடைகளிலும் வசூலிக்கப்படுகிறது. ஆகையால் இதை உடனடியாகக் கவனித்து ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டு அமைகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, இந்த சர்சார்ஜைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்கள் பேசும் போது, சென்னையில் இதைத் தவிர்க்கிலீர்கள்; சென்னையிலேயே 55 சதவிகிதத்திற்கு மேல் விற்பனை வரி செலுத்தும் காரணத்தால், தமிழ்நாடு முழுவதும் இந்த வரி போடப்பட்டுவிட்டதாகக் கருதப்படும் என்று சொன்னார்கள். சென்னையில் தான் அதிகம் வியாபாரம் நடக்கின்றது. சென்னையிலிருந்து அதிக விற்பனை வரி வருகிறது என்பதை ஒத்துக்கொள்ளுகிறேன். சர்சார்ஜ் போடும்போது சென்னையிலிருந்து பொருள் எங்கே போனாலும், அந்தப் பொருள்மீது சர்சார்ஜ் போய்க்கொண்டிருக்கும் என்பதையும் ஏற்றுக்கொள்ளுகிறேன். சங்கரி சிமென்ட் தொழிற்சாலை சென்னையில் வந்து "மில்" போடுகிறார்கள். அதில் சர்சார்ஜ் போடுகிறார்கள் என்று சொல்லுகிறார்கள். தொழிற்சாலை எங்கே யிருந்தாலும், விற்பனை செய்கின்ற இடம் சென்னையில் இருப்பதால், சென்னையில் விற்பனை வரி சர்சார்ஜ் போடவேண்டியிருக்கிறது. இனி மேல் அவர்கள் சென்னையில் இருக்கின்ற விற்பனைக் கூடத்தை சங்கரிக்கு மாற்றிக்கொண்டுபோய் அங்கே விற்றால், அவர்களுக்கு சர்சார்ஜ் வராது. சென்னையில் விற்பனைக்கூடம் இருக்கின்ற வரைக்கும் சர்சார்ஜ் இருக்கும். மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்கள் அரசாங்க நிதி மீது அதிக அக்கறை கொண்டவர் என்று கருதுகிறேன். இந்த மாதிரி யோசனைகளைச் சொல்லி, விற்பனைக் கூடங்களைச் சென்னையிலிருந்து வேறு இடங்களுக்கு மாற்றிக் கொள்ளத் தூண்ட வேண்டாமென்று அவர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன். 11-50 a.m.

இந்த சர்சார்ஜ் தமிழ் நாடு பூராவும் வந்ததாகக் கருதப்படும் என்று சொன்னார்கள். சர்சார்ஜ் முதலில் 10 சதவிகிதம் என்று போடப்பட்டு, பிறகு 5 சதவிகிதம் என்று முதலமைச்சர் அவர்கள் குறைத்தார்கள். குறைந்தபிறகு 5 சதவிகித சர்சார்ஜை மதுரை, திருச்சி, சேலம், கோயம்புத்தூர் ஆகிய நான்கு நகரங்களுக்கும் விஸ்தரிக்க, சட்டம் போட்டிருக்கின்றோம். மற்ற இடங்களுக்குத் தேவைப்பட்டால், சட்டப் போவையின் அனுமதியைப் பெற்று விஸ்தரிக்கப்படும் என்று சொல்லியிருக்கிறோம். இந்த நான்கு நகரங்களும் பெரிய வியாபார இடங்கள் என்று கருதி, சர்சார்ஜ் விதிக்கப்பட்டிருக்கிறதே தவிர, வேறில்லை. இந்த சர்சார்ஜ் போடுவதை விட்டுவிட்டு, அடிஷனல் சேல்ஸ் டாக்ஸ்

போட்டதையும் சத்து செய்துவிட்டு, அரை சதவிகிதம் விற்பனை வரியில் அதிகமாக சேர்த்துக்கொள்ளக்கூடாதா என்ற புது யோசனையை மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்கள் தெரிவித்தார்கள். இந்த ஆண்டு சர்சார்ஜ் போட்டுப் பார்த்த பிறகு, இது முடியவில்லை என்றால், அடுத்த ஆண்டு இவை இரண்டையும் விட்டுவிட்டு திரு. தாமோதரன் அவர்கள் சொன்ன யோசனைக்குப் போகலாமா என்று யோசிக்கலாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன். ஏற்கனவே போட்ட அடிஷனல் சேல்ஸ் டாக்ஸ் வாங்குவோர் தலைக்குப் போகாது. வியாபாரிகள் கொடுக்க வேண்டுமென்று போட்டோம். அது நீதி மன்றத்தில் இருக்கிறது. இப்போது போட்டிருக்கிற சர்சார்ஜ் வாங்குகின்றவர்களுக்குப் போகும். இருப்பினும் விலைகள் அதிகமாக ஏற்ற நியாயமில்லை என்று தெரிவித்துக்கொளுகிறேன். 1.0 ரூபாய்க்கு பொருள் வாங்குபவனிடத்தில் 3½ சத வீதத்தில் வரி என்றால், 35 பைசா வரியாகக் கட்ட வேண்டும். இந்த 35 பைசா மீது 5 சதவிகிதம் சர்சார்ஜ் என்றால், 2 பைசா தான் மேற்கொண்டு கட்ட வேண்டி வரும். ஆக மொத்தம் 37 பைசா அவன் கொடுப்பான். எனவே, இந்த 5 சதவிகிதம் சர்சார்ஜ் என்று சொல்வது பெரிய பாரம் என்று சொல்லுவதற்கில்லை. இந்த சர்சார்ஜைப்பற்றி யாராவது வழக்கு மன்றத்திற்குப் போய் விடக் கூடாது என்பதற்காகத் தான் மிகுந்த அக்கரை எடுத்துக் கொண்டு அரசாங்கத்திற்குச் சில யோசனைகளைச் சொன்னார்கள். அவைகளை எல்லாம் ஆராய்ந்ததற்குப் பிறகு தான் சர்சார்ஜ் கொண்டுவரப்பட்டது. எனவே, இந்த சர்சார்ஜ் வந்திருப்பதில் எந்தவிதமான தவறுதலும் இல்லை. இந்த சர்சார்ஜ் போடுவதாலே பெரிய பாதகம் மக்களுக்கு ஏற்பட்டுவிடும் என்று நாங்கள் கருதவில்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன். எனவே, இந்த சர்சார்ஜை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று இந்த அவையைக் கேட்டுக் கொள்ளுகிறேன். இந்த சர்சார்ஜ் தேதியைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். 19-ஆம் தேதியன்று முதலமைச்சர் அவர்கள் நிதி நிலை அறிக்கையை வாசித்தார். சிலர் 10 சத விகிதம் சர்சார்ஜ் மாலை 4 மணியிலிருந்து வசூலித்தார்கள். இன்னும் சிலர் 20-ஆம் தேதியிலிருந்துதான் வசூலித்தார்கள். 5 சத விகிதம் வந்தவிலிருந்து, கோவை, திருச்சி, மதுரை, சேலம் போன்ற இடங்களுக்கும் இதை விஸ்தரித்திருக்கிறார்கள் என்றதும், இந்தச் செய்தி அங்கெல்லாம் போயிருக்காது; காரணம் இதை மாலை நேரத்திலே சொன்னதால். எனவே அந்தத் தேதியிலே வசூலிக்காதவர்களிடம் இதைக் கொடுக்க வேண்டும் என்று சொல்வது நியாயமில்லை என்று சொன்னார்கள். அதை இந்த அவையிலே உள்ள எல்லா உறுப்பினர்களுமே குறிப்பிட்டுப்பேசினார்கள். 19-ஆம் தேதி யார், யார் 10 சதவிகிதம் வசூலித்தார்களோ, அவர்களிடம் மட்டும்தான் சர்சார்ஜ் வசூலிக்கப் படும். 29-ம் தேதி 5 சத வீதம் சர்சார்ஜைக்குறைத்து, கோவை, திருச்சி, மதுரை, சேலம் போன்ற இடங்களுக்கு விஸ்தரித்திருந்து, அந்தத் தேதியில் யார் 5 சதவிகிதம் வசூலித்திருக்கிறார்களோ, அவர்களிடம் மட்டும்தான் சர்சார்ஜ் வசூலிக்கப்படும். அவையெல்லாம் டிபார்ட்மென்ட் இன்ஸ்ட்ரக்ஷன்படி. எனவே அவை அந்தமுறையிலே வசூலிக்கப்படும் என்று சொல்லி இதிலே எந்த சிக்கலும் வராமல் பார்த்துக்கொள்கிறேன். அடுத்து, "டாக்ஸ் சபர்டு" என்று சொன்னார்கள். இதிலே இருக்கின்ற சிக்கல் என்னவென்றால், அரசாங்கம் சில வரிகளை விதிக்கிறது. "டாக்ஸ் சபர்டு" என்று சிலர் போட்டு வாங்குகிறார்கள். இன்னும் சில வியாபாரிகள் "ஹேண்டிலிங் சார்ஜ்" என்று போடுகிறார்கள். அவைகளை எல்லாம் தடுக்க அரசாங்கத்திற்கு எந்தவிதமான சட்டமும் இல்லை. அவர்களைக் கட்டுப்படுத்த வழியில்லை. ஒரு பொருளுக்கு விலை நிர்ணயம் செய்தி





